ஸ்ரீ

பகவத் விஷயம்

ஒன்பதாம் பத்து

திருவாய்மொழி மூலமும்

ஆருயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி,
இருபத்தினாலாயிரப்படி, ஈடு முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யாநங்களும்,
சீயர் அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு, த்ரவிடோபநிஷத்ஸங்கதி,
த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி, திருவாய்மொழி
நூற்றந்தாதி இவைகளுடன்.

சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்பு

வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யராலும்,
சே. பார்த்தஸாரதி ஐயங்காராலும்,
பரிசோதிக்கப்பெற்றது.

திருவல்லிக்கேணி,
நோபில் அச்சுக்கூடம்.

சுக்கில௵] [1929.

ஸ்ரீ:

திருவாய்மொழி.

ஒன்பதாம்பத்து.

முதல் திருவாய்மொழி—கொண்டபெண்டிர் - ப்ரவேசங்கள்.

ஒன்பதினாயிரப்படி.

ஒன்பதாம்பத்தில் முதற்றிருவாய்மொழியில், எம்பெருமான் ஸாமவத மோக்ஷத்வபர்யந்தமான நிரதிசயபுருஷார்த்தமானத்தைக் காட்டிக்கொடுத்த மஹோபகாரத்தை யநுஸந்தித்து, மிகவும்ப்ரீதரான ஆழ்வார், "இப்படி உபகாரகனானவனே ஆத்மாவுக்கு நிருபாதிகபந்துவும், ப்ராப்யப்ராபகங்களெல்லாம்; மற்றொருவருமில்லை" என்று தமக்குப் பிறந்த ப்ரீத்யதிசயத்தாலே "ஸமஸ்தசேதநரையும் குறித்து ஔபாதிகபந்துக்களான புத்ரமித்ராதிகளை விட்டு, நிருபாதிகபந்துவான எம்பெருமானையே பற்றுங்கோள்" என்கிறார்.

பன்னீராயிரப்படி.

ஒன்பதாம்பத்தில், கீழ் ஏழாம்பத்திலும் எட்டாம்பத்திலும் விரோதிஸ்வரூபத்தையும் தந்நிவ்ருத்தி ப்ரகாரத்தையும் அருளிச்செய்து, மேலிரண்டுபத்தாலும் ப்ராப்திபலாவாப்தியையருளிச் செய்வதாக, இப்பத்திலே பலஸ்வரூபத்தை நிரூபிப்பதாகக்கொண்டு ஸஹேதுகனான ஈச்வரனுடைய நிருபாதிகதையையும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாய நித்ய ப்ரார்த்யத்வத்தையும், நிரதிசய போக்ய ஶீலாதிகுணயோகத்தையும், நித்ய அபூர்வ போக்யதையையும், ஸ்மரணாதிமாத்ரத்திலே ஸாந்நித்யஜநகமான போக்யகுணவத்தையையும், ஸ்வஸ்ருதிஸாந்நித்யமுடையாரை புஜிப்பிக்கையில் உண்டான ப்ரமோதோதயத்தையையும், அத்யர்த்தாதரணீய படகஶம்யத்வத்தையும், பக்தபரிஜநாதிபூர்த்தியையும், அல்பகால விளம்பத்திலும் அதிக்லேசாவஹத்வத்தையும், ஸாந்நிதிகமான கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையும் அருளிச்செய்து அவனுடைய பலரூபத்வத்தை யருளிச்செய்தருளுகிறார். முதலிரண்டுபத்தாலே நிரூபித்த ப்ராப்ய ஸ்வரூபத்தினுடைய ப்ரயோஜநரூபத்வம் இங்கே நிரூபிக்கப்படுகிறது.

முதற்றிருவாய்மொழியிலே, தத்பரமோக்ஷத்வ போக்யதா ப்ரதிபத்தி பிறக்கும்படி ஸ்வாஸ்தவிரோதி நிவ்ருத்தி பிறந்தபின்பு, அந்த தத்பரமோக்ஷத்வ போக்யதா மூலமான தத்போக்யதையை அநுஸந்தித்து, அவனுடைய ஸர்வப்ரகாரபலத்வத்துக்கு உபபாதகமான ஸர்வவிதபந்துத்வத்துக்கு ப்ரகாசகமான ஆபத்ஸகத்வத்தையும், அவிஸ்வாஸநிராஸகத்வத்தையும், அநிஷ்ட நிராஸக க்ருபாயோகத்தையும், அவதாரப்ரயுக்த குணோத்தாரதையையும், அநிஷ்டப்ரத்வம்ஸகத்வம் அடியான அபிகமநீயதையையும், கீர்த்தநீயகுணவத்த்வத்தையும், சிந்தாமாத்ரஸுலபத்வத்தையும், உஜ்ஜீவந

ஹேதுத்வத்தையும், போக்யவிக்ரஹவிஶிஷ்டதையையும், ஸம்ஹார நிராஸகத்வத்தையும் அநுஸந்தித்து, "ஏவம்பூதனான ஸர்வேஶ்வரனே நிருபாதிக பந்துவானவன்; அல்லாதார் உபாதிநிபந்தந பந்துக்கள். ஆதலால் அவர்களைவிட்டு, நிருபாதிகபந்துவான இவனையேபற்றி உஜ்ஜீவியுங்கோள்" என்று தாம் அறுதியிட்ட அர்த்தத்தை தம்மைப் பற்றினார்க்குத் தஞ்சமாக உபதேசித்தருளுகிறார்.

இருபத்துநாலாயிரப்படி.

ஒன்பதாம்பத்தில், முதற்றிருவாய்மொழியில், எம்பெருமான், பாகவத ஶேஷத்வபர்யந்தமான நிரதிஶய புருஷார்த்தத்தைக் காட்டிக்கொடுத்த மஹோபகாரத்தை அநுஸந்தித்து மிகவும் ப்ரீதரானவர், இப்படி உபகாரகனான இவனே ஆத்மாவுக்கு நிருபாதிகபந்துவென்றும், அல்லாதாரடங்க ஸோபாதிகபந்துக்களென்றும், அவனே ப்ராப்யமும் ப்ராபகமுமென்றும் அநுஸந்தித்து, அத்தால் வந்த ப்ரீத்யதிஶயத்தாலே ஸமஸ்தசேதநரையுங் குறித்து "ஸோபாதிகபந்துக்களைவிட்டு நிருபாதிகபந்துவான ஸர்வேஶ்வரனைப் பற்றுங்கோள்" என்று உபதேசிக்கிறார். "ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ:" "பூதாநாம் யோऽவ்யய: பிதா" என்று இத்தாலே நிருபாதிகபந்து அவனேயிறே; மாதாபிதாக்கள் கைவிட்ட ஜயந்தனுக்கு ப்ரஹ்மாஸ்த்ரம் தொடுத்துக்கொடுநிற்கிற தாமேயிறே புகலானார். "ஸபித்ரா பரித்யக்த:"—பிதா எதிரியாக அவனிலும் அண்ணியவுறவாய் உதவினானிறே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு. "ஸாநுஜாயிக்ஷவாம்ஸந:" என்று ஹிதஞ்சொன்ன ஸ்ரீவிபீஷணாழ்வானைத் தள்ளிவிட்டான் ராவணன்; "ந த்யஜேயம்" என்று அவனையொழியச்செல்லாதாயிற்றுப் பெருமாளுக்கு. மஹாராஜர் ஜ்யேஷ்டனாலே நோவுபட நிருபாதிக பந்துவாய்ச் சென்று உதவினார். த்ரௌபதியை பரர் பரிபவிக்க, பர்த்தாக்கள் தர்மபராநராய்க் கவிழ்ந்திருந்து தரையைக்கீற, அவ்வளவிலே உதவினபின்பும் "கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்" என்று புண்பட்டது அவன் திருவுள்ளமிறே. உபாயாந்தரங்களைக் குறித்து ஶோகித்த அர்ஜுநனைக்குறித்து, "அவற்றைபடங்க விட்டு என்னையே பற்று; உன்னை நான் ரக்ஷிக்கிறேன்; ஶோகியாதே கொள்" என்றானிறே. இப்படி "நிருபாதிகபந்து அவனே: புறம்புள்ளாரடங்க ஸோபாதிக பந்துக்கள்" என்று அநுஸந்தித்து, அத்தால்வந்த ப்ரீதியாலே "எல்லாரும் ஸோபாதிக பந்துக்களைவிட்டு அவனையே பற்றுங்கோள்" என்று பரோபதேஶ பரவ்ருத்தராகிறார்.

ஈடு.—ஒன்பதாம்பத்தில் முதல்திருவாய்மொழி. கீழ்த்திருவாய்மொழியிலே, பாகவதஶேஷத்வபர்யந்தமாக நிரதிஶய புருஷார்த்தத்தை நிகிலவிரோதிநிவ்ருத்திபூர்வகமாக அவன் காட்டிக்கொடுக்க, அதிப்ரீதியோடே அந்த மஹோபகாரத்தை அநுஸந்தித்து "சயமேயடிமைதலைநின்றார்" என்றும், "நீக்கமில்லாவடியார்" என்றும், "கோதிலடியார்" என்றும் பாகவதரை விரும்பினாராய் நின்றார். ஆப்பான்திருவழுந்தூரரையர் ஆஶ்ரயித்ததும், திருவாய்மொழி கேட்டதும், ஆழ்வானோடேயிறே. "'சயமேயடிமைதலைநின்றார்' என்றது, ஸ்ரீஹரதாழ்வான்போல்வாரை; 'நீக்கமில்லவடியார்' என்றது,

---

கொண்டபெண்டிர் ப்ரவேஶம்; ஸங்கதி க்ரநார்த்தம் வ்ருத்தத்தை அநுவதிக்கிறார் - கீழ்த்திருவாய்மொழியிலே இத்யாதி, கீழ்த்திருவாய்மொழியில் பத்தாம்பாட்டில் சொன்ன

இளையபெருமாள் போல்வாரை; ‘கோதிலடியார்’ என்றது, ஸ்ரீஶத்ருக்நாழ்வான் போல்வாரைக்காணும்’’ என்று ஆழ்வான் பணித்தானாகப் பணிப்பர். ‘‘இப்படிப்பட்ட ஶாஶ்வதஶேஷத்வமாகிற புருஷார்த்தத்தில்எல்லையைநமக்குத்தந்த ஸர்வேஶ்வரனே நிருபாதிக பந்து. அல்லாதாரடங்க ஸோபாதிகபந்துக்கள். அவனே நிருபாதிக ஸுஹ்ருத்து, அல்லாதார்பக்கல் தோற்றுகிற ஸௌஹார்த்தம் ஸோபாதிகம்’’ என்று ப்ராப்யாபாஸங்களைத் தவிர்த்து அவனே ப்ராப்யமென்றும் ப்ராபகாபாஸங்களைக் கழித்து அவனேப்ராபகனென்றும் அறுதியிட்டுப் பிறந்த லாபத்தாலுண்டான ஹர்ஷத்தாலே சேதநரைக்குறித்து, ‘‘நீங்கள் ஸோபாதிகபந்துக்களான அல்லாதாரைவிட்டு நிருபாதிகபந்துவான அவனையேபற்றி உஜ்ஜீவிக்கப்பாருங்கோள்’’ என்று பரோபதேசே ப்ரவருத்தராகிறார். ‘‘ஸர்வேஷாமேவ லோகாநாம்’’ (ஸர்வேஷாமேவ லோகாநாம்) இத்யாதி; ‘‘அவ்யய: பிதா’’(அவ்யய பிதா) ;அல்லாதார் தாய் தமப்பனென்று பேராய் நாலுநாளிருந்து மணற்கோட்டகம்போலே கழிந்துபோவர்கள்; அங்ஙனன்றிக்கே, அழியாதே என்றும் மோக்ஷ ரக்ஷகனும் பிதா அவனேயாயிற்று. தனக்குஹிதஞ்சொன்ன விபீஷணனை ‘த்வாந்துதிக்’’(த்வாந்துதிக்) என்று புறப்படவிட்டானிறே ராவணன்; அவன்தம்பியையொழியச் செல்லாதென்றாரிறே பெருமாள். மஹாராஜர் [illegible]ணாலே நோவுபட, தனிமையிலேவந்து உதவினாரிறே பெருமாள். பெற்ற தமப்பன்[illegible]கையாக, அவனிலும் அண்ணியனாய்வந்து உதவினாரிறே, ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு. மாதாபிதாக்கள் கைவிட்டஜயந்தனுக்கு, ப்ரஹ்மாஸ்த்ரந்தொடுத்துக் கொடுநிற்கிறவர் தாமேயிறே புகலானார், ‘‘ஸபித்ராச’’ (ஸபித்ராச) இத்யாதி. ‘‘ஸ:’’ (ஸ:) -நீரிலேபுக்கழுந்துவாரைப்போலே தாரகரானவரே பாதகராய்அம்புதொடுக்கும்படி சூழ்த்துக்கொடுநின்ற அவன். ஶேஷம் பூர்வவத். த்ரௌபதி,தர்மப்ரதாநரான ஭ர்த்தாக்கள்ஐவரும் வெறுந்தரையைக்கீறியிருக்க அவர்களையொழிய தூரஸ்த்தனான க்ருஷ்ணனையே நினைக்க,‘‘அவள் ஆபந்நையாய் நம்மை நினைக்க, நாம் உதவப்பெற்றிலோம்’’ என்று ‘‘க்ருஷ்ணாமாம்தூரவாஸிநம்’’ (க்ருஷ்ணாமாம்தூரவாஸிநம்)என்று புண்பட்டானவனிறே. அர்ஜுநன் ‘‘என்னபிமதம் என்னால் தலைக்கட்டிக்கொள்ளவரிது’’ என்று ஶோகிக்க, ‘‘உன்னைத்தோற்றி வருவதொன்று பேற்றுக்கு உடலாமன்றிறே, உனக்கு ஶோகிக்கவேண்டுவது ? உன்னுடைய ஸர்வபாரங்களையும் நம்தலையிலேபோகட்டு,நாமே கடவோமென்றிரு; உன்னுடைய விரோதிவர்க்

அர்த்தத்தை அநுவதித்ததுக்கு ஆப்தவாதம் - ஆழ்வான் இத்யாதி. ஸங்கதி - இப்படிப்பட்ட இத்யாதி. ஶேஷத்வம் ஸ்ருதயம் யஸ்ய, ஸ: - ஸுஹ்ருத். ஸோபாதிகபந்துக்களென்றதால் ஸூசிதம் - ப்ராப்யாபாஸங்களைத்தவிர்த்து என்றது. நிருபாதிகபந்து என்றதால்ஸூசிதம் - அவனேப்ராப்யன் என்றது. ஸௌஹார்த்தம் நிருபாதிகமென்றதால் ஸூசிதம் - ப்ராபகாபாஸங்களைக்கழித்து என்றது. அவனே நிருபாதிக ஸுஹ்ருத்து என்றதால் ஸூசிதம் - அவனே ப்ராபகன் என்றது. அல்லாதாரடங்க ஸோபாதிகபந்துக்கள், அவனே நிருபாதிகபந்து வென்றதுக்கு வசநத்வயமும், அநுஷ்டாநங்களும் காட்டுகிறார் - ஸர்வேஷாம் இத்யாதி அர்ஜுநனென்கிற வாக்யத்தளவும். அவ்யய: பிதா என்றதுக்கர்த்தம் - அல்லாதார் இத்யாதி. ‘ஶேஷம் பூர்வவத்’ என்றது - பயிலும் சுடரொளியிலே ‘‘நம்பனை ஞாலம்படைத்தவனை’’ என்கிற பாட்டில் வ்யாக்யாதமானாற்போலே யென்றபடி. இதரர் ரக்ஷகரல்ல, அவனே ரக்ஷ[illegible]மில்லை றார் கீழ்; உபாயாந்தரங்களும் உபாயமன்று, அவனே உபாயமென்கிறார் மேல் [illegible]வாக்யத்வயம். இத்யாதி. உபாயாபாஸங்களைக்கழித்து அவனே உபாயமென்றது[illegible] - இல்லைகண்டீரித்யந்வய:.

த்தை யுடைய நாமே போக்கித்தருகிறோம்'' என்றானிறே. இப்படிகளாலே "அவனே நிருபாதிகபந்து. அவனையே பற்றப்பாருங்கோள்'' என்று தாம் அறுதியிட்ட அர்த்தத்தைத் தம்மைப்பற்றினார்க்குத் தஞ்சமாக உபதேசித்தருளுவதாகப்பரோபதேசப்ரவ்ருத்தராகிறார்.

முதற்பாட்டு.

கொண்டபெண்டிர்மக்களுற்றார் சுற்றத்தவர்பிறரும்
கண்டதோடேபட்டதல்லால்காதல்மற்றுயாதுமில்லை
எண்டிசையுங்கீழும்மேலும்முற்றவும்உண்டபிரான்
தொண்டரோமாய்உய்யலல்லால்இல்லைகண்டீர்துணையே.

ஆ.—(கொண்டபெண்டிர்.) - இந்த பாகவதகைங்கர்யரூப ஸம்பத்தை பாகவதகைங்கர்யாதிகளாயிருப்பாரோடே புஜிக்கையிலே அபேக்ஷையுடையரான ஆழ்வார், தயாவிதரை இந்தக்ஷேத்திலே காணாமையாலே இந்தலோகத்திலுள்ளாரையே பாகவதஶேஷதைக ரதிகளாக்கிக்கொண்டாகிலும்அவர்களோடே இப்போகத்தை புஜிக்கைக்காக, பாகவதஶேஷதைகரதித்வத்துக்கு உபாயமாக, அவர்களைப்பார்த்து உங்களுக்கு ஸோபாதிகஸ்நேஹரான களத்ராதிகளோடுள்ள உறவைவிட்டு, அகாரணஸுஹ்ருத்தாய் ப்ரளயகாலத்திலெல்லாரையும் தன்திருவயிற்றிலேவைத்து பரிஹரித்தருளின மஹோபகாரகனான எம்பெருமானுக்கு அடியோமாயுய்கையொழியவேறு ரக்ஷகரில்லையென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், எல்லாருடைய பந்துத்வமும் ஸோபாதிகமாகையால், நிருபாதிகபந்துவான எம்பெருமானையே பற்றி யுஜ்ஜீவிக்கவேணுமென்கிறார்.

[கொண்ட பெண்டிரென்று தொடங்கி] - தான் தன்ஹ்ருதயத்திலே மிகவும் பந்துக்களாக நினைத்திருக்கும் பார்யாதிகள் கையில்அர்த்தங்கண்டபோது ஸ்நேஹித்தாராயிருக்குமித்தனைபோக்கி மெய்யானஸ்நேஹம் ஒன்றுமில்லை. 'கொண்டபெண்டிர்' என்கிறது - அர்த்தாதயுபாதியாலே ஸம்பாதித்த பார்யை என்றுஞ்சொல்லுவர். [எண்டிசையுமென்று தொடங்கி] - ப்ரளயாபத்தில் தன்னையொருவரும் அர்த்தியாதிருக்கச்செய்தே, எல்லாரையும் தன்திருவயிற்றிலே வைத்து பரிஹரித்தருளின மஹோபகாரகனானவனுக்கு அடியோமாய் உய்கையொழிய வேறு ஆத்மாவுக்கு ரக்ஷகரில்லை.

ப.—முதற்பாட்டில், ஔபாதிகபந்துக்களான தாரபுத்ராதிகளாலொரு ப்ரயோஜநமில்லை: அஶேஷஜகத்தையும் வயிற்றிலேவைத்து நோக்கின ஆபத்ஸகனானவனுக்கு அடியராமதொழிய வேறுதுணையில்லையென்கிறார்.

கொண்ட - நாம் பந்துக்களாக நெஞ்சிலேகொள்ளப்பட்ட, பெண்டிர் - தாரம், மக்கள் - புத்ராதி, உற்றார் - ஸம்பந்தி, சுற்றத்தவர் - பாந்தவர்களும், பிறரும் - மற்

சீழ்ற்திருவாய்மொழிய... மையும்'' என்றது. "சுற்றத்தவர்'' என்றது - அவனே நிருபாதிகபந்து வென்ற அநுஷ்டானங்காட்டினவைகளிலே ஆகிஞ்சந்யஅநந்யகதித்வங்களும் அர்த்

றும் மித்ரப்ருத்யப்ரப்ருதிகளும், கண்டதோடு - நம்கையிலே ப்ரயோஜநங்கண்டபோது, பட்டதல்லால் - உடன்படுமதொழிய, மற்று - ப்ரகாராந்தரத்திலே, யாதும் - ஏகதேசமும், காதல் இல்லை - ஸ்நேஹமுடையாரல்லர்; (ஆதலால்), எண்திசையும் - ஸமஸ்த திக்குக்களோடுகூடின, கீழும் - பூமியையும் பாதாளங்களையும், மேலும் - ஊர்த்வ லோகங்களையும், முற்றவும் - எல்லாவற்றையும், உண்ட - ப்ரளயங்கொள்ளாதபடி யமுது செய்துநோக்கின, பிரான் - மஹோபகாரகனுக்கு, தொண்டரோமாய் - அடியோமாய், உய்யலல்லால் - உஜ்ஜீவித்தலல்லது, (வேறுபத்துக்கு), இல்லைதுணை - துணையில்லை.

இ.—முதற்பாட்டில், நிருபாதிகபந்துவானவன், ஆபத்ஸகன்; அவனையேபற்றி உஜ்ஜீவியுங்கோள் என்கிறார்.

[கொண்டபெண்டிர் இத்யாதி] - தான் தன்ஹ்ருதயத்திலே பந்துக்களாக நினைத்திருக்கும் ஔபாதிகரென்னுதல், ஔபாதிக்கே விசேஷணமாய் அர்த்தாத்யுபாதி [illegible] மாதாபித்ரு ப்ராத்ருதிகளைக் காற்கடைக் விசேஷத்தாலேகொண்ட ஸ்த்ரீ என்னுதல், [illegible] கொண்டு எல்லாருமாக நினைத்திருக்கும் ஸ்த்ரீ என்னுதல். [மக்கள்] - அப்படிப்பட்ட அவளுடைய யௌவநத்தை யழியமாறிப்பெறும் ப்ரஜைகள். [உற்றார்] - தனக்கு ஸத்ருஶ விஷயமென்று ஆதரித்த ஸம்பந்திகள். [சுற்றத்தவர்] - அவர்கள் மதிக்குப்படியான இத்தலையில் ஜ்ஞாதிகள். [பிறரும்] - அந்யரும்: முன்பு சொன்னவர்களும், இவர்களிற்காட்டில் வாசிபெரிதன்றென்கை. [கண்டதோடு பட்டதல்லால்] - ஸந்நிதியிலே ஸ்நேஹிக்குமதொழிய வென்னுதல், கையிலே த்ரவ்யங்கண்டபோது அத்தைப்பற்ற ஸ்நேஹிக்குமதொழிய வென்னுதல். [காதல்மற்றி யாதுமில்லை] - காணாதபோது மெய்யான ஸ்நேஹமொன்றுமில்லையென்னுதல். ஸ்நேஹமும் அதற்கெதிர்த்தலையான த்வேஷமுமில்லையென்னுதல், ஸ்நேஹமும் அதுக்கடியான பந்தமும் இல்லையென்னுதல். [எண்திசையும் இத்யாதி] - பத்துத்திக்கிலுமுண்டான ஸகலசேதநரையும் பிரிகதிர்ப்படாமல் திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்தவன்: இவற்றின் பக்கலொன்றுமில்லாதஅன்று ரக்ஷிக்குமவன். ப்ரளயாபத்தில் ரக்ஷிக்கைக்குக் கைமுதலுமில்லை; அர்த்தித்வமும் இல்லையிறே; ரக்ஷிக்கைக்குத்தான் அறிந்த ஆபத்தும் ஸம்பந்தமுமிறே வேண்டுவது? அப்போது விலக்குகைக்குப் பரிகரமில்லையே. [பிரான்]-உபகாரஶீலனானவன். [தொண்டரோமா யுய்யலல்லால்] - அடியோமாய் உஜ்ஜீவிக்கையொழிய நம்மதாய் அவனுக்குக் கொடுக்க வேண்டுவதொன்றில்லை. சேஷத்வத்தை இசையுமித்தனை. சேஷத்வம் ஸ்வரூபமாகையாலே அத்தையறிகை உஜ்ஜீவநம்; சேஷத்வத்தை இழக்கையிறே நாஶமும். [இல்லைகண்டீர் துணையே] - "வேறே துணையுண்டாயிருக்க இவனைப் பற்றச் சொல்லுகிறேனல்லேன்; இவனைப்பற்றி ஸ்வரூபம்பெறுதல் இல்லையாகில் இல்லையாமித்தனை". அந்வயத்தாலே ஸாதித்து வ்யதிரேகத்தாலே த்ருடீகரிக்கிறார்.

ஈடு.—முதற்பாட்டில். "ஔபாதிகபந்துக்களான தாரபுத்ராதிகளால் ஒரு ப்ரயோஜநமில்லை; நிருபாதிகபந்துவானவனே ஆபத்ஸகன்; அவனையே பற்றியுஜ்ஜீவியுங்கோள்; வேறுதுணையில்லை" என்கிறார்.

முதற்பாட்டு - கொண்டபெண்டிர் இத்யாதி. உத்தரார்த்தத்தைக்கடா[illegible]ரித்யந்வய:. நிருபாதிகபந்துவான இத்யாதி.

[கொண்டபெண்டிரித்யாதி] - தான் தன் ஹ்ருதயத்திலே பந்தக்களாக நினைத்திருக்கும் தார்யாதிகளென்னுதல். [கொண்டபெண்டிர்] - நிருபாதிகமாகவந்த தன்றிக்கே த்ரவ்யாத்யுபாதிகளாலே பரிக்ரஹித்த ஸ்த்ரீகள். அன்றிக்கே, மாதாபிதாக்களைச் செங்கற்சீரை கட்டவிட்டு, தான் ஆர்ஜித்த தநத்தையடையக் கொடுக்கும்படி தஞ்சமாக நெஞ்சிலேகொண்ட பெண்டிரென்றுமாம். ஆசார்யனும், பரதேவதையும் ஐப்வர்யாதிகளும் எல்லாம் இவளேயாகக் கொண்ட பெண்டிரென்றுமாம். இவளுண்டாகையிறே எல்லாமென்றிருக்கை அன்றியே, இது ஸர்வவிசேஷணமாய், பந்துக்களாகத் தான் நினைத்திருக்கும் தார்யாதிகளென்னுதல். [மக்கள்] - அப்படிப்பட்ட அவளுடைய யௌவநத்தையழிய மாறிப்பெறும் ப்ரஜைகள். [உற்றார்] - தனக்கும் ஸத்ருமித்ரவிஷயமென்று ஆதரித்த ஸம்பந்திகள். [சுற்றத்தவர்] - அவர்கள் மதிக்கும்படியான ஜ்ஞாதிகள். [பிறரும்] - அந்யரும்: முன்புசொன்னவர்களும், இவர்களிற் காட்டில் வாசி பெரிதன்றென்கை. [பிறரும்] - மித்ரப்ருத்யாதிகளென்றுமாம். [கண்டதோடுபட்டதல்லால்] - ஸந்நிதியிலே [illegible] போது உடன்படுமதொழிய, ப்ரகாராந்தரத்தில் ஏகதேசமும் ஸ்நேஹமுடையவ ரல்லரென்னுதல், காணாதபோது மெய்யானஸ்நேஹ மொன்றுமில்லையென்னுதல், கண்டதுக்குமற்று - காணாதபோதிறே. [காதல்மற்று] - ஸ்நேஹமும், அதுக்கெதிர்த்தலையான த்வேஷமுமில்லையென்னுதல், ஸ்நேஹமும் அதுக்கடியான பந்தமுமில்லையென்னுதல். [எண்திசையுமித்யாதி] - பத்துத்திக்கிலுமுண்டான ஸகல சேதநரையும் பிரிகதிர்ப்படாமே திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்தவன்: இவற்றின்பக்கலொன்று மில்லாதவன்று ரக்ஷிக்குமவன். ப்ரளயாவஸ்த்தையில் ரக்ஷிக்கைக்கு ஸாதநமுமில்லை, அர்த்தித்வமுமில்லையிறே: ரக்ஷிக்கைக்குத் தான்அறிந்தஆபத்தும் ஸம்

'தான் தன் ஹ்ருதயத்திலே' இத்யாதி வாக்யத்வயம் சில ஸ்ரீ கோசங்களிலில்லை. "கொண்ட" என்றதுக்கு மூன்றர்த்தம் - க்ரீதத்வமும், வால்லப்யமும், உத்தேஸ்யதையும். த்ரவ்யாத்யுபாதிகளாலே என்கிறவிடத்தில் ஆதிசப்தத்தாலே, வீர்யசுல்கத்தாலும், பூத்தருபுணர்ச்சியென்றுதொடங்கி மூன்று புணர்ச்சியாலும், பரிக்ரஹித்தவர்களைச்சொல்லுகிறது. செங்கற்சீரைகட்டவிட்டென்றது - பிச்சைபுகுரவிட்டென்றபடி. நெஞ்சிலேகொண்ட என்றது - ப்ரீதிவிஷயமாகக்கொண்டவென்றபடி. தார்யையைப்பற்ற புத்ரன் அபிமதனென்னுமிடம், ஸ்த்ரீயையுபேக்ஷித்து அஷ்டம புத்ரனை வீக்ஷிக்கும் நோக்கிக்கொண்ட சந்தநுவின்பக்கலிலே கண்டு கொள்வது. கீழ்ச்சொன்னவர்களோடே பிறரையுமொக்க எடுப்பானென்? என்ன - முன்பு சொன்னவர்களும் இத்யாதி. சொன்னவர்களுக்குமென்றபடி. 'கண்டதோடு' - இவனைக் கண்டபோதென்று முந்தினவர்த்தம். 'பட்டதல்லால்', படுகை - நெஞ்சிலேபடுகையாய், ஸ்நேஹிக்குமதொழியவென்றபடி. இது இரண்டாமர்த்தத்துக்குமொக்கும். மற்று - காதல் - யாதுமில்லையென்றந்வயித்தர்த்தம் - காணாதபோது இத்யாதி. மற்றென்றால் காணாதபோதைச் சொல்லுமோவென்ன - கண்டதுக்கு இத்யாதி. மற்றையர்த்தத்துக்கும், "காதல்மற்று" என்று அடைவேகண்டுகொள்வது. எதிர்த்தலை - ப்ரதிகோடி. த்வேஷமுமென்றது - த்ருஷ்டாந்தார்த்தம். அதுக்கடியான - ஸ்நேஹத்துக்கடியான. மற்று - சம்பந்தமும். முற்றவுமென்றதுக்கர்த்தம் - பிரிகதிர்ப்படாமேயென்றது; தப்பாதபடியென்றபடி. இத்தால்ஸாவம் - இவற்றின்பக்கல் [illegible] இத்யாதி. அப்போதொன்றுமில்லையோவென்ன - ப்ரளயாவஸ்த்தையில் இத்யாதி. ஸாதநமு [illegible] மில்லை யென்றபடி. அர்த்தித்வமும் - ப்ரபத்தியும். ஒன்றுமில்லாவிட்டால் [illegible] - ரக்ஷிக்கைக்கு இத்யாதி. சம்பந்தம் நித்யமாயிருக்க ஸம்ஸாரப்ரள

வைந்யமுமிறே வேண்டுவது. அப்போது விலக்குகைக்குப் பரிகரமில்லையே. [பிரான்]- உபகாரசீலனானவன். [தொண்டரோமாயுய்யலல்லால்] - அவனுக்கு நம்மதாயிருப்பதொன்று கொடுக்கவேண்டுவதில்லை, அடியோமாய் உஜ்ஜீவிக்குமதொழிய. ஶேஷத்வம் ஸ்வரூபமானபின்பு அத்தையிழக்கையாவது - விநாஶமிறே. அந்வயத்தாலே அன்றிக்கே வ்யதிரேகத்தாலும் இவ்வர்த்தத்தை த்ருடீகரிக்கிறார். [இல்லைகண்டீர்துணையே] - ஆபத்துக்கு வேறோரபாஶ்ரயமுண்டாயிருக்க, இவனைப்பற்றச்சொல்லுகிறதல்ல இது; அவனைப்பற்றி ஸ்வரூபம்பெறுதல், இல்லையாகில் இல்லையாமித்தனை. (க)

இரண்டாம் பாட்டு.

துணையுஞ்சார்வுமாகுவார்போல்சுற்றத்தவர்பிறரும்
அணையவந்தவாக்கமுண்டேல்அட்டைகள்போல்சுவைப்பர்
கணையொன்றாலேயேழ்மராமுமெய்த எம்பார்முகிலை
புணையென்றுய்யப்போகலல்லால்இல்லைகண்டீர்பொருளே.

ஆ.—(துணையும்) - பரப்ரயோஜநபரரைப்போலே வர்த்தியாநின்ற ஸ்வப்ரயோஜநபரராயிருக்கிறவர்களை விட்டு, கேவலம் பரப்ரயோஜநபரனான தசரதாத்மஜனையே ரக்ஷகனாகப் பற்றப்பாருங்கோள்; வேறொருவரைப்பற்றி ஒருப்ரயோஜநமில்லை. யென்கிறார்.

ஓ.—இரண்டாம் பாட்டில், பரோபகாரபரரைப்போலே யிருந்து, தந்தாமுடைய ப்ரயோஜநங்களையே தலைக்கட்டப் பார்க்கும் ஹேயரையொழிய, நிர்ஹேதுகமாக பரஸம்ருத்த்யேகப்ரயோஜநனான தாஶரதாத்மஜனைப் பற்றுங்கோள் என்கிறார்.

[துணையென்று தொடங்கி] - ஸாஹாய்யங்களையொக்க அநுஷ்டிப்பாரைப் போலேயும், தங்களை புகலானாரைப்போலேயும் அநபாயி வந்யங்களோடு வாசியின்றிக்கே தங்களுக்குக் கைக்கெட்டின ஸம்பத்து உண்டாகில், அவன்பக்கல் உபகாரங்கொண்டாராய்க் கொள்ளாதே அவனுக்கு ஹிதம்பண்ணினாராய் உபஜீவிப்பர். [கணையொன்றாலே என்று மேலுக்கு]-தம்மால் சோதிக்கலாவதொன்றில்லாதபடி வெறுவியருமாயிருக்கிற ஸ்ரீஸுக்ரீவ மஹாராஜர், "தான் மிடுக்குடையர்" என்று தேறி வாலியைக் கொல்ல விஶ்வாஸத்துக்காக உதவிற்றொரு ஶரத்தாலே மராமரங்களேழையும் எய்த என்னுடைய பரமோதாரனை. 'எம்' என்று ஆத்மநி பஹுவசநம். ப்ரீத்யர்த்தம் பேறுகச்

யத்தில் நின்றும் ரக்ஷியாதிருப்பானென்? என்ன - அப்போது இத்யாதி. அப்ரதிஷேதம் காணுமையாலே ரக்ஷித்திலனென்றபடி. அப்போது-ப்ரளயாவஸ்தையிலே. அவன்உபகாரசீலனானால் நாமும் சில பச்சையிடவேணுமோவென்ன - அவனுக்கு இத்யாதி. "தொண்டரோமாயுய்யலல்லால்" என்கிறதென்? ஶேஷத்வஜ்ஞாநமில்லாதபோது உஜ்ஜீவநமில்லையோவென்ன - ஶேஷத்வம் இத்யாதி. வ்யதிரேகத்தாலும் இவ்வர்த்தத்தை த்ருடீகரிக்கையாவது - அவனைத் துணையாகப்பற்றினால் உஜ்ஜீவிக்கலாம், அல்லாதாரைத் துணையாகப்பற்றினால் உஜ்ஜீவநமில்லையென்றபடி. துணையேயென்ற அவதாரணார்த்தம் - வேறோர் இத்யாதிவாக்யத்வயம். இது - ஆத்மவஸ்து, கொண்டபெண்டிர்தொடங்கி, உய்யலல்லால் - துணை - இல்லைகண்டீரித்யந்வயஃ.

சொல்லுகிறார். தந்தாமுடைய ஸர்வஸ்வ நிர்வாஹகனைக்கொண்டு உஜ்ஜீவிக்க நினைக்கி லல்லது வேறொருவரைப்பற்றி ஒருப்ரயோஜநமில்லை.

ப.—அநந்தரம், அவிஸ்வஸநீயரான அநுபகாரகரை பந்துபுத்தி பண்ணாதே, விஸ்வாஸஜநகனுமா யுபகரிக்குமவனை பாஸ்ரயித்தாலல்லது ப்ரயோஜநமில்லையென்கிறார்.

(ஸாவசேஷ வ்யக்தநாக்ஞு) துணையும்-ஸஹாயபூதருமாய், (ஆபத்துவந்தால்), சார்வும் - அபாஸ்ரயமும், ஆகுவார்போல் - ஆவாரைப்போலே, சுற்றத்தவர் - பந் துக்களும், பிறரும் - மற்றுமுள்ளாரும், அணைய - தங்களுக்குக்கிட்ட, வந்த - வரும், ஆக்கம் - ப்ரயோஜநம், உண்டேல் - உண்டாகில், அட்டைகள்போல் - அட்டை கள் போலே, சுவைப்பர் - இவன்றனக்கு உபகாரமென்று நினைக்கும்படி பசையறச் சுவைத்துவிடுவர்; (அப்படியன்றியே, ஆபத்திலே அபாஸ்ரயமான தன்பக்கலிலே பந் தாதிசங்கைபண்ணினவனுக்கு விஸ்வாஸம் பிறக்கும்படி), கணையொன்றாலே - ஓரம் பாலே, ஏழ்மரமும் - ஏழுமராமரத்தையும், எய்த - எய்தவுபகாரகனும், எம் - நம்மையும் விஸ்வஸிப்பிக்கும், கார்முகிலை - காளமேகஸ்வபாவனானவனை, புணையென்று - அபாஸ் ரயமென்று நினைத்து, உய்யப்போகலல்லால் - உஜ்ஜீவித்துப்போமதொழிய, பொருள்- ப்ரயோஜநம், இல்லை - இல்லை. புணை - தெப்பமாய், அமிழ்த்தாதபடி நோக்கும் அபாஸ் ரயத்தைச் சொல்லுகிறது.

ஈடு—இரண்டாம்பாட்டில், உபகாரகரைப்போலேயிருந்து, ஸ்வப்ரயோஜ நங்களையே தலைக்கட்ட நினைக்கும் அவர்களையொழிய, நிர்ஹேதுகமாக ஆபத்ஸகனைப் பற்றுங்கோள் என்கிறார்.

[துணையும் இத்யாதி] - துணையாவது - "[illegible]" என்று ஸாகூர்யங்களை யொக்க அநுஷ்டிக்கை. சார்வாவது - போக்கடியற்ற ஊமையில் தாங்களே புகலாகை. பாண்டவர்களுடைய வனவாஸத்தில் தனிமையிலே முகங்காட்டியும், த்ரௌபதியை மீட்டுக்கொண்டு போகிறபோது தங்கிள பணிக் கொட்டிலிலே சென்று முகங்காட்டிக் கடக்கநின்ற துணையானாற்போலேயும், ஸாத்தக் தன்விட்ட ஶக்தியை அர்ஜுனனோடுக்கள்ளித் தன்மார்பிலே யேற்ற க்ருஷ்ணனைப்போலே யும் இருக்கை. [ஆகுவார்போல்]-தாங்கள் உவைத்யத்தனானபடியே கடக்கநிற்பதுதன் செய்யாதே "ரக்ஷகர்" என்று ப்ரமிக்கும்படி வர்த்திப்பார்கள். [சுற்றத்தவர் பிறரும்]- பந்துக்களோடு வாஸியின்றிக்கே. [அணையவந்த ஆக்கமுண்டேல்] - கைக்கெட்டின ஸம்பத்துண்டாகில்: இவன்பக்கலிலே ஒருப்ரயோஜநம் தங்களுக்குண்டாமென்று தோற்றியிருக்கிலென்னுதல்; தங்கள்பக்கலிலே இவனுக்கொரு ப்ரயோஜநமுண்டென்று தோற்றியிருக்கிலென்னுதல். [அட்டைகள்போல் சுவைப்பர்] - ரக்தஸ்பர்ஶமற வாங்கா நிற்க ஹிதஞ்செய்ததாயிறே யிருப்பது; அதுபோலே உபகாரங் கொண்டாராய்க் கொள்ளாதே, ஹிதஞ்செய்கிறார்களாக உபஜீவிப்பர். "உன்கையிலே கனக்கக்கிடந்தால் அபஹரிப்பர்கள், என்கையிலே புகட்டுவை" என்று ஹிதஞ்செய்கிறார்களாகவிறே உப ஜீவிப்பது. [கணையொன்றாலே] - '[illegible]' என்று கைக்கெட்டிற்று ஓரம்பாலே. [ஏழ்மரமும் எய்த]-ஒன்றிரண்டாலே மஹாராஜர் அதிஶங்கை போவதா யிருக்க, ஏழுமராமரத்தையு மெய்த. [எம்கார்முகிலை] - வாலியாலே தூரப்புண்டு வெறு வியரான ஊமையிலே யுதவப்புக. ரக்ஷணத்திலே அதிஶங்கை பண்ணினவனுக்கு மழுவேந்திக்கொடுத்து, அவன்விரோதியைப் போக்கி, "[illegible]"

என்று ஆஶ்ரிதரைச் சொல்லுதல், ஆத்மநிவேதநமாய் அவருக்குச் செய்ததும் தமக்குச்செய்ததாக நினைத்திருக்கும்படியாலேபாதல். [புணையென்றுய்யப் போகலல்லால்] - அவன்பக்கல் ந்யஸ்தபரனாய் உஜ்ஜீவித்துப் போமதொழிய; “என்கார்யம் உனக்கேபரமாகவேணும்” என்று ஒருவார்த்தையே அவனுக்குச் செய்யவேண்டுவது. [இல்லைகண்டீர் பொருளே] - புறம்பொருவரைப்பற்றினால் ஒருப்ரயோஜநமில்லை. புறம் பாஶ்ரயிக்கையிலே க்லேஶிக்கச் சிலருண்டு இத்தனை; ப்ரயோஜநரூபமாவதொன் றில்லை.

ஈடு.—இரண்டாம்பாட்டு. உபகாரகரைப்போலேயிருந்து, ஸ்வப்ரயோஜநங் களைத் தலைக்கட்டநினைக்கும் அவிஶ்வஸநீயரானவர்களையொழிய, நிர்ஹேதுகமாக விஶ்வாஸஜநகனாய், ஆபத்ஸகனானவனைப்பற்றுமதன்றி ப்ரயோஜநமில்லையென்கிறார்.

[துணையித்யாதி]- துணையாகையாவது - **“ஏகம் து:கம் ஸுகஞ்ச நௌ”** (ஏகம்து:கம்ஸுகஞ்சநௌ) என்று **ஸுகது:கங்**களையொக்க அநுபவிக்கை. சார்வாகையாவது - போக்கடியற்றதசையில், தாங்களேபுகலாகை பாண்டவர்களுடைய வநவாஸத்தில் தனிமையிலே முகங்காட்டியும், த்ரௌபதியை மீட்டுக்கொண்டுபோகிற போது **“ஜகாமதாம் பார்த்தவகர்மஶாலாம்”** (ஜகாமதாம்பார்த்தவகர்மஶாலாம்) என்று அவர்கள்தங்கின பணிக்கொட்டிலிலேசென்று முகங்காட்டிக்கூடக்கிடந்து கதறியும் துணையாயும், பகதத்தன்விட்ட ஶக்தியை அர்ஜுநனைத்தள்ளித் தன்மார்பிலேயேற்றுப் புகலாயும் போந்த க்ருஷ்ணனைப்போலேயிருக்கை. [ஆதவார்போல்]-தாங்கள் அபந்துக்களானபடியே கடக்கநிற்பதுஞ்செய்யாதே “ரக்ஷகர்” என்று ப்ரமிக்கும்படி வர்த்திப்பர்கள். [சுற்றத்தவர்பிறரும்] - ஜ்ஞாதிகளும், மற்றுமுள்ளாரும். [அணையவித்யாதி] - கைக்கெட்டின ஸம்பத்துண்டாகில். “இவன்பக்கலிலே ப்ரயோஜநம் தங்களுக்கு உண்டாம்” என்று தோற்றியிருக்கிலென்னுதல். “தங்கள்பக்கல் இவனுக்கு ஒரு ப்ரயோஜநமுண்டு” என்று தோற்றியிருக்குமாகில் என்னுதல். [அட்டைகள்போல்சுவைப்பர்]-ரக்த

இரண்டாம்பாட்டு - துணையும் இத்யாதி. “துணையும்சார்வும்” என்றுதொடங்கி, “புணையென்றுய்யப்போகலல்லால்” என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - உபகாரகரை இத்யாதி.

துணைக்கும் சார்வுக்கும் பேதம் அருளிச்செய்கிறார் - துணையாகையாவது இத்யாதி. துணை - ஸஹாயம். சார்வு - ரக்ஷகம். துணையும் சார்வுமாகை ஸர்வேஶ்வரனுக்கேயுள்ளதென்று விவக்ஷித்து, அப்படி துணையும் சார்வுமாகக்கண்டவிடமுண்டோ? என்ன - பாண்டவர்களுடைய இத்யாதி. “ஸம்வஸேத்யாவஸிஷ்யதேத்யாஸஹேஷ்யகம் து:கம் ஸுகஞ்ச நௌ” இத்யாதி *கிஷ்கிந்தாகாண்டே.* “வ்ருஷ்ணிப்ரவீரஸ்ஸஹகாரப்ரவீராநாமஶகோநஸஹாராஸஹிணேய: । ஜகாமதாம்பார்த்தவகர்மஶாலாம் யத்ராஸதேதேவநராக்ஷப்ரவீரா:” *இதி ஸம்பவபர்வணி. பார்க்கவ: - குலால:.* “ஶாலாபுஸ்த்ககர்மாலயேஸ்யாத் க்ருஹமாத்ரஸம்ஸ்ரயயோ:” *இதி நிகண்டு:.* “**கர்மஶாலாம்**” *என்றதுக்கர்த்தம்* - பணிக்கொட்டிலிலே *என்றது. சார்வானதுக்கு உதாஹரணம் - பகதத்தன் இத்யாதி. “போல்” என்றதுக்கு ஸாவாந்தரம் - தாங்கள் இத்யாதி. அணையவந்த - அணைந்துவந்த - கிட்டவந்த; ஆக்கம் - ஸம்பத்து, ப்ரயோஜநமென்னுதல். யாதானுமொருவனை யணைந்துவந்தவென்னுதல்; அர்த்திகளான தங்களை வந்தணையும்படி - வந்து கிட்டும்படி யான ஆக்கம் யாதானுக்குண்டென்று தோற்றியிருக்குமாகி*

ஸ்பர்ஶமற வாங்காநிற்கச்செய்தே, இவனுக்கு ஹிதஞ்செய்தனவாயிறே இவையிருப்பது; அப்படியே, உபகாரங்கொண்டாராய்க்கொள்ளாதே, ஹிதஞ்செய்கிறார்களாய்க்கொண்டு உபஜீவிப்பர்கள். 'உன்பக்கலிலே ப்ரஹ்ங் கிடக்கில் வாங்கிக்கொள்வர்கள், அவற்றை என் மேலே ஏறிட்டுவை' என்று அவனுக்கு ஹிதஞ்செய்கிறார்களாயாயிற்று, உபஜீவிப்பது. [கணையித்யாதி]-"ஏகேநமஹேஷுணா" (ஏகேநமஹேஷுணா) என்று கைக்கேட்டிற்றோர் அம்பாலே, மஹாராஜர், தனியருமாய், வெறுவியருமாய், தமையன் பகையுமாய், மநுஷ்யஸஞ்சாரமில்லாத தனிக்காட்டிலேயிருக்க, பெருமாளையும் இளையபெருமாளையுந் தூரத்திலேகண்டு "வாலிவரவிட்டவர்கள்" என்றுஅஞ்சியோடித் திருவடியைவரவிட்டு அறிவித்தபின்பு, "நாம் உம்முடைய கார்யஞ்செய்யவல்லோம்" என்று மழுவேந்திக்கொடுத்தும் அவர்கார்யஞ்செய்தாரிறே. [ஏழ்மரமுமெய்த] - ஒன்றிரண்டாலே மஹாராஜர் அதிசங்கை தீர்க்கலாயிருக்க, ஏழுமராமரத்தையுமெய்த. [எம்கார்முகிலை] - 'எம்' என்று - ஆஶ்ரிதரைச்சொல்லுதல்; ஆத்மநி பஹுவசநமாய், மஹாராஜர்க்குச் செய்தது தமக்குச் செய்ததாக நினைத்திருந்தபடியாலே யாதல். [கார்முகிலை]-பரமோதாரனானவனை. அவன்படி யிதுவாகில் நாம் அவனுக்குச்செய்யவேண்டுவதென்னேன்னில்? — [புணையித்யாதி]-இடவேண்டுவதொரு பச்சையில்லை, ஒருக்திமாத்ரம் அமையும். "என்கார்யம் உன்க்கே பாரம்" என்றொருவார்த்தையே அவனுக்கு நேரவேண்டுவது. [இல்லைகண்டீர்பொருளே]-புறம்பொருவரைப்பற்றினால் ஒருப்ரயோஜநமுமில்லை. புறம்பாஶ்ரயிக்கையிலே க்லேசிக்கச் சிலருண்டத்தனை; ப்ரயோஜநரூபமாவதொன்றில்லை. (உ)

———

மூன்றும் பாட்டு.

———

பொருள்கையுண்டாய்ச்செல்லக்காணில்போற்றியென்றேற்றெழுவர்
இருள்கொள்துன்பத்தின்மைகாணில்என்னே! என்பாருமில்லை
மருள்கொள்செய்கையசுரர்மங்க வடமதுரைப்பிறந்தாற்கு
அருள்கொளாளாய்உய்யலல்லால்இல்லைகண்டீர்அரணே.

ஆ.—(பொருள்கை.) - இப்படி ஸ்வப்ரயோஜநபரராகைபாலே ப்ரயோஜநமுள்ளபோது பற்றி, தாரித்ர்யத்தில் விடும் ஸ்வபாவரான அவர்களைவிட்டு, ஆபத்ஸகனான க்ருஷ்ணனுடைய க்ருபைக்கு விஷயமாய் உய்யலல்லால் வேறொருபாயமில்லையென்கிறார்.

லென்னுதல். "அட்டைகள்போல்" என்றதற்கு பாவம் - ரக்தஸ்பர்ஶம் இத்யாதி வாக்யத்வயம். "ஹிதம்செய்கிறார்களாய்க்கொண்டு உபஜீவிப்பர்கள்" என்றதின் விவரணம் - உன்பக்கலிலே இத்யாதி. ஓர் அம்பாலே யெய்ததற்கு ப்ரமாணம் - ஏகேந இத்யாதி. "விவ்யாத ச ஸ நாராசம் ஏகேந ச மஹேஷுணா" இத்யாதி. "கணையொன்றாலே ஏழ்மரமுமெய்த" என்றதற்கு பாவம் - மஹாராஜர் இத்யாதி. "எம்" என்றதற்கும், "மரமும்" என்ற ஶப்தத்துக்கும் பாவம் - ஒன்றிரண்டாலே இத்யாதி. புணை - ப்ரதிபூ: "என்று" என்கிறதுக்குபாவம் - இடவேண்டுவது இத்யாதி. விவரணம் - என்கார்யம் இத்யாதி. பொருள் - ப்ரயோஜநம், விவரணம் - புறம்பு இத்யாதி. க்ரமேணாந்வய:. (உ)

ஒ.—மூன்றாம்பாட்டில், எம்பெருமானையொழிய மற்றுள்ளாரெல்லாம் ப்ரயோஜநமுள்ளபோது ஸுஹ்ருத்துக்களாய்க் கொண்டாடி, இவனுக்கு ஆபத்துவந்தால் பார்ப்பாருமில்லை ; ஆனபின்பு நிருபாதிகமாக எல்லார்க்கும் ஆபத்ஸகனாயிருக்கிற க்ருஷ்ணனையே பஜியுங்கோளென்கிறார்.

[பொருளென்று தொடங்கி] - ஒருவன் கையிலே அர்த்தம் உண்டாய் பரிமாறக்காணில் பரஸம்ருத்தியேக ப்ரயோஜநர் சொல்லும் பாசுரத்தைச் சொல்லி அவன்றன்னை அபிமுகீகரித்து, "கண்ணறமாட்டான்" என்று தோற்றினவாறே இடாயோ போகவென்று கையேற்று நிற்பர்கள் ; இப்படி அர்த்தித்தவர்களுக்குஇட்டே தரித்ரனாய் இவனுடைய ஸர்வஸ்வத்தையுங்கொண்டு ஸம்ருத்தரானவர்கள் என்னை என்ற மாத்ரத்திலே இவனுக்கு உஜ்ஜீவிக்கலானால் அம்மாத்ரம் செய்வாரு மில்லை. இருள்கொள் துன்பத்தின்மையாவது - அறிவுகேட்டையும் து꞉கத்தையும் விளைக்கக்கடவ தாரித்ர்யம். [மருள்கொளென்று தொடங்கி] - சேதநர் கலங்கும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய அஸுரர் மங்கும்படி வடமதுரைப் பிறந்தவனுடைய க்ருபைக்குப் பாத்ரமான அடியாராய் உஜ்ஜீவிக்கிலல்லது வேறு இவ்வாத்மாவுக்கு ரக்ஷை இல்லை.

ப.—அநந்தரம், அநிஷ்டநிராஸகனான க்ருஷ்ணனுடைய க்ருபாபாத்ரமாகிலல்லது வேறு முதலில்லையென்கிறார்.

கை - கையிலே, பொருள் - அர்த்தம், உண்டாய் செல்ல -, காணில் - கண்டார்களாகில், போற்றியென்று - மங்களாசாஸநம்பண்ணி, ஏற்று - (அவன்கொடுத்ததைக் கையிலே) ஏற்றுக்கொண்டு, எழுவர் - (யதாபிலஷிதம்) போகாநிற்பர்: இருள்கொள் - அஜ்ஞாநதம꞉ப்ரசுரமாய், துன்பத்து - து꞉கோத்தரமான, இன்மை - தாரித்ர்யம், காணில் - கண்டார்களாகில், என்னே - ஐயோ! என்பாரும் - என்று க்ருபை பண்ணுவாரும், இல்லை -; (ஜகத்துக்கு), மருள்கொள் - நெஞ்சுகலங்கும்படியான, செய்கை - ப்ரவ்ருத்திகளையுடைய, அசுரர்-, மங்க - கலங்கும்படியாக, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தாற்கு - அவதரித்த க்ருஷ்ணனுக்கு, அருள் கொள் - க்ருபாபாத்ரமான, ஆளாய் - சேஷபூதராய்க்கொண்டு, உய்யலல்லால் - உஜ்ஜீவிக்கிலல்லது, அரண் - வேறுபுகல், இல்லை-இல்லை.

இ.—மூன்றாம்பாட்டில், அவனையொழிந்தார், ப்ரயோஜநமுள்ளபோது ஸுஹ்ருத்துக்களாய்க் கொண்டாடி, ஆபத்துவந்தால் பார்ப்பாருமில்லை. ஆனபின்பு நிருபாதிகமாக ஆபத்ஸகனான க்ருஷ்ணனை யொழிய ரக்ஷகரில்லை யென்கிறார்.

[பொருள்கையுண்டாய்ச் செல்லக்காணில்] - ஒருவன் கையிலே அர்த்தமுண்டாய்ப்பரிமாறக் காணில். [போற்றியென்று] - பரஸம்ருத்யேக ப்ரயோஜநர் சொல்லும் வார்த்தையைச் சொல்லுவர். இன்னம் அர்த்தம் அநேகமுண்டாகவேணும் உனக்கென்பர்கள். "நம்ஸம்ருத்தியே தனக்கு ப்ரயோஜநமாயிருப்பானொருவனுண்டாவதே!" என்று குளிரப்பார்த்து, "கண்ணறமாட்டான்" என்றறிந்தவாறே [ஏற்றெழுவர்] - இடலாகாதோ போக என்றெழுந்திருப்பர்கள். [இருள்கொள் துன்பத் தின்மைகாணில்] - அஜ்ஞாநத்தையும் து꞉கத்தையும் விளைக்கக்கடவதான தாரித்ர்யத்தைக் காணில். [என்னே என்பாருமில்லை] - "ஐயோ என்னக்கடவாருமில்லை" என்று சீயர் அருளிச்செய்வர்; பிள்ளைத் திருநறையூரரையர், "அர்த்தித்தவனுக்குஇட்டே தரித்

ரனாய் இவனுடைய ஸர்வஸ்வத்தையுங்கொண்டு ஸம்ருத்தரானவர்கள், 'என்?' என்ற மாத்ரத்திலே 'இவனுடைய வந்யாய' என்று ஜீவிக்கலாயிருக்குமாகில், அதிலும் மேலாஹிகளாய் ஒரின்சொல்லுஞ் சொல்லார்'' என்பர். [மருள்கொள் இத்யாதி] - வெறுமையே பற்றுமாக ரக்ஷிப்பானொருவனுளன்; அவனைப்பற்றுங்கோள் ! என்கிறார். [மருள் கொள்செய்கை யசுரர்மங்க] - சேதந ஹ்ருதயங்களிலே அறிவுகேடு குடிகொள்ளும் படியான ப்ரவ்ருத்திகளையுடைய அஸுரர்கள் மங்கும்படி. பண்ணும் ப்ரவ்ருத்திகளிலே சேதநர் கலங்கும்படியிறே அஸுரப்ரக்ருதிகளுடைய க்ரௌர்யமிருப்பது: [வடமதுரைப் பிறந்தாற்கு] - ஆஸ்ரிதருடைய ஆபத்தைப் போக்குகைக்கு, அகர்மவஸ்யனான தான் கர்மவஸ்யர்நடுவே வந்து தத்ஸஜாதீயனாய் அவதரித்து உதவுமவனுக்கு. [அருள் கொளாளாயுய்யலல்லால்] - அவனுடைய க்ருபைக்குப் பாத்ரமான அடியாராய் உஜ்ஜீவிக்குமதொழிய அவன்க்ருபையை விலக்காதொழியுமதுவே இவனுக்கிடவேண்டும் பச்சை. தன்னருள் கொள்வாரை, ''உதாராஃ'' என்றிறே அவன்சொல்லுவது. [இல்லை கண்டீர் இன்பமே] - வேறு ரக்ஷகமாகவல்லது ஒன்றுமில்லை. ''க்ருஷ்ணாஸ்ரயாஃ க்ருஷ்ணபலாஃ க்ருஷ்ணநாதாஶ்ச பாண்டவாஃ. தயாவேவாஸ்ய க்ருஷ்ணோ ஹி ஜ்யோதிஷாமிவ சந்த்ரமாஃ''

ஈடு.—மூன்றும்பாட்டு. அவனை யொழிந்தார், ப்ரயோஜந முள்ளபோது பந்துக்களாய்க் கொண்டாடி, ஆபத்துவந்தால் பார்ப்பாருமில்லை; ஆனபின்பு, நிருபாதிகமாக ஆபத்ஸகனான க்ருஷ்ணனுடைய க்ருபாபாத்ரமாகையொழிய வேறுரக்ஷகரில்லையென்கிறார்.

[பொருள்கையுண்டாய்ச் செல்லக்காணில்] - இவன்தான் சிலவற்றை அவிழ்ப்பது முடிவது செய்ப்பதாய்ப் போராநிற்குமிறே. பொருளானது கையிலேயுண்டாய்ப் போரக்காணில். [போற்றியென்று] - பரஸம்ருத்த்யேகப்ரயோஜநரைப்போலே வார்த்தைசொல்லுவர். உனக்கு இன்னமும் ஸம்ருத்தி பெறுகவேணு மென்பர்கள். ''நம் ஸம்ருத்தியே தனக்கு ப்ரயோஜநமாயிருப்பானொருவனுண்டாவதே!'' என்று குளிரப் பார்க்குமே! இவன் இனி நமக்குக் கண்ணுறமாட்டானென்றறிந்தவாறே, [ஏற்றெழுவர்] - இடலாகாதோபோக வென்று ஏற்றுக்கொண்டெழுந்திருப்பர்கள். [இருள் இத்யாதி] - அஜ்ஞாநமடியாய், துக்கமேயாயிருக்கிற வெறுமையைக் காணில். [என்னேயென் பாருமில்லை] - ஐயோ என்பாருமில்லை. பிள்ளை திருநறையூரரையர், ''ஒருவனுக்கிட்டொருவன் வெறுவியனாவது; அவனாலே ஸம்ருத்தனானவன் இவனை 'என்' என்னுதல், இவன்க்ருஹத்திலே வந்தொருநாள்காற்கழுவிப்போதல்செய்ய, அவ்வளவாலே 'இன்றேன்

மூன்றும்பாட்டு. பொருளானை இத்யாதி. ''பொருள்கையுண்டாய்'' என்றுதொடங்கி, ''இல்லைகண்டீரின்பமே'' என்றளவுக்கு அவதாரிகை - அவனையொழிந்தார் இத்யாதி.

காண்கைக்கு ப்ரஸக்தியேதென்ன - இவன்தான் இத்யாதி. ஸம்ருத்தம் - பொருளானது இத்யாதி. ''போற்றி'' என்றதுக்கு அர்த்தம் - பரஸம்ருத்தி இத்யாதி. சொல்லும்வார்த்தை தன்னை விசதீகரிக்கிறார் - உனக்கு இன்னமும் இத்யாதி. ஸம்ருத்தி - காணிகை. கண்ணுறமாட்டான் - நிர்த்தயனாகமாட்டானென்றபடி. என்றறிந்தவாறே யென்னுமளவும், அவதாரிகை. போக்கை - உடைத்தாகையாய், அஜ்ஞாநமூலமென்றபடி. இன்மை - இல்லாமை, தாரித்ர்யம். ''என்னே'' என்றதுக்கு - என் என்பாருமில்லையென் றர்த்தாந்தரம் விவக்ஷித்து, அதுக்கு ஸம்வாதம் - பிள்ளைதிருநறையூர் இத்யாதி. அன்றிக்கே, ஏகார்த்தமேயாய், என்னேயென்பாருமில்

இன்னுனுக்கு பந்துவாகாதே!' என்று இவ்வளவுகோண்டு ஜீவிக்கலாயிருந்தால், அவ்வளவுஞ் செய்வாரில்லை'' என்று பணிப்பர். [மருள்இத்யாதி]-பொருள் கையுண்டாய்ச் செல்லக்காணுதவன்றும் ஆஸ்ரிதருடைய ஆபத்தைப் போக்குகைக்காக அகர்மவஶ்யனை தான் வந்துஅவதரித்து உதவுவா னொருவனுண்டேன்கிறதுமேலே. சேதநர்நேஞ்சிலே இருள் குடிபுகுரும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய ஆஸுரவர்க்கம் முடியும்படி, ஒருவர்அபேக்ஷியாதிருக்கத்தானேவந்துஅவதரித்து ரக்ஷிக்குமவனுக்கு. அவனுக்கு நாம்செய்ய வேண்டுவதேன் என்னில்? [அருள்கோள்இத்யாதி]-க்ருபாபாத்ரமான ஶேஷபூதராய்க் கோண்டு உஜ்ஜீவிக்கிலல்லது, அவன்பண்ணும் அருளை விலக்கா தொழியுமத்தனையே வேண்டுவது; தன்னருள்கோள்வாரை ''உதாரா:'' (உதாரா:) என்னுமவனிறே யவன். இவன் பக்கல் இதுக்கு மேற்படக் கோள்ளலாவதில்லை; அவனுக்கும் இதுக்குமேல்செய்ய வேண்டுவதில்லை; பூர்ணனுகையாலே. ஸம்பந்தமோ ஸ்வாபாவிகமாயிருந்தது; இவன் புகுரநின்ற வம்ஶமுண்டாகில், தன்பேறாக நினைத்திருக்குமவனா யிருந்தான்; இனி விலக்காமையிறே வேண்டுவது. [இல்லைகண்டீர்அரணே]-ரக்ஷகமாவதுஇதோன்றுமே; அல்லாததெல்லாம் அநர்த்தத்தோடே தலைக்கட்டு மித்தனை. சிறுப்ரஜை ''குன்றிச்சூடு'' என்று நெருப்பிலே கைவைக்குமாபோலே யிருப்பதோன்றிறே, புறம்புஇவன் ரக்ஷகமாக நினைத்திருக்கும் இவை. ''ஆதரேண யதா ஸ்தௌதி தநவந்தம் தநேச்சயா | ததா சேத் விஶ்வகர்த்தாரம் கோ ந முச்யேத பந்தநாத்'' (ஆதரேணயதாஸ்தௌதிதநவந்தந்தநேச்சயா- ததாசேத்விஶ்வகர்த்தாரம் கோநமுச்யேதபந்தநாத்)-ஸ்தோத்ரம்பண்ணிப்போந்த வாஸனையாலே உச்சைஸ்ஸாக ஸ்துதியாநிற்கும். இப்படி ஸ்துதிக்கிறது உதாரனையோ வென்னில்? ''தநவந்தம்'' (தநவந்தம்) - ஓர்பற்றையுடைய யென்றபடி; அவன்பக்கல் நெகிழ்ச்சியில்லை. ஆகில் அவனை ப்ரேரித்தார் ஆர்என்னில்?—''தநேச்சயா'' (தநேச்சயா). ஸர்வத்தையுமுடையனாய், இவனளவன்றிக்கேயிருக்கிற அவன்பக்கலிலே இவ்வாநுகூல்யத்தைப் பண்ணப்பெறில், பிறர்கீழேயிருந்து ஸ்துதிக்கவேண்டும்படி இவனை வையான். (ங)

லாமையின் ஸாமாவதிக்கு ஸம்பாதமாதல். அருளைக்கொள்ளுகிற ஆளாயென்றபடி. அப்படி விலக்கா தொழிந்தால் கனக்க நினைத்திருக்குமோவென்ன - தன்னருள்கோள்வாரை இத்யாதி. விலக்காதமாத்ரத்தாலே ''உதாரா:'' என்னக்கூடுமோவென்ன - இவன்பக்கல் இத்யாதி. விலக்காமையிறே வேண்டுவது என்னுமளவும். அவனப்படியிருந்தாலும் அவன் பெருமைக்கீடாக இவன் பச்சையிடவேண்டாமோ? என்ன - அவனுக்கும் இத்யாதி. ஒன்றுமில்லாத இவன் பக்கலிலே, விலக்காமை மாத்ரம் கொண்டு க்ருபைபண்ணுகைக்கு ஹேது அருளிச்செய்கிறார்- ஸம்பந்தமோ இத்யாதிவாக்யத்வயத்தாலே. புகுரநின்றவம்ஶம் - லபிக்குமம்ஶமென்றபடி. ''அல்லாவில்லைகண்டீர்'' என்றத்தால் பலிதம் - ரக்ஷகமாவது இத்யாதி வாக்யத்வயம். இது 'அருள் கொள்ளாமை'. இதோன்றுமே, என்கிறதேன்? வேறு ரக்ஷகரில்லையோ? என்ன - சிறுப்ரஜை இத்யாதி. குன்றிச்சூடு - குந்துமணிக்கொண்டை. அநுமதிமாத்ரம் கொண்டு அவன் ரக்ஷிக்குமென்கைக்கு ப்ரமாணம் - ஆதரேண இத்யாதி. ''ஆதரேண யதா ஸ்தௌதி தநவந்தம் தநேச்சயா | ததா சேத் விஶ்வகர்த்தாரம் கோ ந முச்யேத பந்தநாத்'' ஸ்தோத்ரம்அப்ரதிஷேத த்யோதகமென்று கருத்து ''ஆதரேண'' என்றதுக்கு பாவம் - ஸ்தோத்ரம்பண்ணி இத்யாதி. ''தநவந்தம்'' என்று - அஸ்திவிவக்ஷாயாம் மதுப்பாய், தநமுண்டானமாத்ரமென்றபடி. உத்தரார்த்தத்துக்கர்த்தம்-ஸர்வத்தையும் இத்யாதி. இவனளவன்றிக்கே யென்றது - விஶ்வகர்த்ருத்வம் தயாகார்யமாகையாலே நெகிழ்ச்சியுடையனா யிருக்குமென்றபடி. க்ரமேணாந்வய:. (ங)

நான்காம் பாட்டு.

அரணமாவர் அற்றகாலைக்குஎன்றென்றமைக்கப்பட்டார்
இரணங்கொண்ட தெப்பராவ ரின்றியிட்டாலுமஃதே
வருணித்தென்னே? வடமதுரைப்பிறந்தவன் வண்புகழே
சரணென்றுய்யப் போகலல்லாலில்லைகண்டீர் சதிரே.

ஆ.—(அரணமாவர்.) - த்ரவ்யதாராதிகளாலே ஆபத்துக்கு பந்துக்களை ஸம்பாதித்துவைத்தால், அவர்களுட் ஆபத்துவந்தால் க்ருதக்நராய் அநுபக்ருதரைப் போலே யுதவார்; ஆதலால், அவர்களைவிட்டு, உபகாராபேக்ஷையின்றியே வடமதுரையிலே வந்துபிறந்து ஆபந்நரைரக்ஷிக்கும் ஸ்வபாவனானவனுடைய கல்யாணகுணங்களை சரணமாகப்பற்றுங்கோள்; அதுவே சதிர்! என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், சிலரை "இவர்கள் நமக்கு ஆபத்துக்கு ரக்ஷகராவர்" என்று அர்த்தாதிகளைக்கொடுத்து நெடுநாள் ஆஶ்ரயித்துவைத்தால் ஆபத்து வந்தவாறே கண்ணற்றுஉபேக்ஷிப்பர்; நாம்ஆஶ்ரயியாதிருக்கச்செய்தே தானேவந்து பிறந்தருளி ஆபத்ஸகனான எம்பெருமானே ஆஶ்ரயணீயனென்கிறார்.

[இரணங்கொண்ட தெப்பராவர்] - கடவியதநத்திலே சிறிதிழந்து மேஷித்தது கொண்டுபோவாரைப்போலே இவனையுபேக்ஷித்து க்ருதக்நராய்ப் போவர். [இன்றியிட்டாலுமஃதே] - பச்சையிட்டு ஆஶ்ரயியாவிட்டாலும் இத்தப்ரமைக்கிடைக்கும். அவர்கள் தாங்கள் நடுவேமுடிந்து இவர்களுக்குஉதவாதேபோகிலும் போவரென்றுமாம். [வருணித்தென்னே] - வ்யர்த்த கதையை வருணித்து ப்ரயோஜநமென்? வண்புகழ் - கல்யாணகுணங்கள். சரண் - ரக்ஷகம்.

ப.—அநந்தரம், ஆபத்துக்குஉதவுவர்களென்றுக்கிவைத்தவர்களும், அவ்வவஸ்தையில்உதவார்கள்; அபேக்ஷாநிரபேக்ஷமாக அவதரித்து உபகரிக்குமவன்குணங்களே ரக்ஷகமாமதொழிய, வேறுகோளில்லை யென்கிறார்.

அற்றகாலைக்கு - கைம்முதலற்றகாலத்துக்கு, அரணமாவர் - புகலிடமாவர், என்றென்று - என்றுபலகாலும் அநுஸந்தித்து, அமைக்கப்பட்டார் - அர்த்தாதிகளாலே வசீகரிக்கப்பட்டார், இரணம் - கடவது, கொண்ட - கொண்டாரோபாதி, தெப்பராவர்-துச்சராய்ப்போவர்கள்; இன்றியிட்டாலும் - நாம்ஆக்காதொழியிலும், அஃதே - அவருடைய உதவாமையே ஸித்தம்; வருணித்து - க்ருதக்நப்ரகாரம்சொல்லி, என்னே-என்னப்ரயோஜநமுண்டு? வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தவன் - பிறந்தவனுடைய, வண் - நிர்ஹேதுகோபகாரகமான, புகழே - ஶீலஸௌலப்யாதிகுணங்களையே, சரண்-ரக்ஷகம், என்று - என்று நினைத்து, உய்ய - பிழைத்து, போகலல்லால்-போமதொழிய, (வேறு), சதிர் - சதிர்பாடு, இல்லை -. சதிராவது - அநாயாஸேந பலம்பெறலாம் ப்ரவ்ருத்தி. அன்றியிட்டாலும் - அவர்கள் நசித்தாலுமென்றுமாம். தெப்பர் - தப்பராய், துச்சரென்றபடி.

இ.—நாலாம்பாட்டில், சிலரை ஆபத்ஸகரென்று அர்த்தாதிகளாலே நெடுநாளாஶ்ரயித்துவைத்தால், ஆபத்துவந்தவாறே கண்ணற்று உபேக்ஷிப்பர். நிர்ஹேதுகமாக வந்து அவதரித்து ஆபத்ஸகனானவனே ஆஶ்ரயணீயனென்கிறார்.

[அற்றகாலேக்கு - அரணமாவர் - என்றென்றமைக்கப்பட்டார்] - கைம்முதலற்றவன்றைக்கு ரக்ஷகனுவானொருவன் வேணுமென்று இயற்றியுள்ள காலத்திலே பச்சையிட்டு ஆஶ்ரயித்து தனக்குஅபாஶ்ரயமாகச் சமைத்துவைத்தவர்கள். அவர்கள் ஆபத்துக்கு உதவும்படி என்னென்னில்? [இரணங்கொண்ட தெப்பராவர்] - முன்பு பச்சைகொண்டதுவும் கடவிய தாங்கொண்டாராய், ஆபத்து வந்தவாறே உபேக்ஷித்து க்ருதக்நராய்ப்போவர்கள். [தெப்பராவர்] - ''நம்மத்தை நாம் கொண்டோம்'' என்றிருக்கும் புல்லியராவர். [இன்றியிட்டாலுமஃதே] - பச்சையிட்டு ஆஶ்ரயியாவிட்டாலும் ஆபத்துவந்தால் கைவிடுவாரைக் கிடைக்கும்; ஆபத்துவந்தால் போகட்டுப்போகைக்குப் பச்சையிடவேண்டாவே? அவர்கள் தாங்கள் நடுவே முடிந்து இவர்களுக்கு உதவாதேபோனாலும் ஃபலமதுவேயென்றுமாம். [வருணித்தென்னே] - வ்யர்த்தமையைப் பாக்கச்சொல்லுகிறதுக்கென்ன ப்ரயோஜநமுண்டு? க்ருதக்நரான ஸம்ஸாரிகள் படியை அநுஸந்த்த்துஎன்ன ஃபலமுண்டு? [வடமதுரைப் பிறந்தவன்] - நாம் ஆஶ்ரயியாதிருக்க நமக்குஉதவுகையே தன்பேறாக வந்துபிறந்தவன். [வண்புகழே] - கல்யாணகுணங்களை. சரண் - ஶரணம், ரக்ஷகம். அவன் குணங்களையே ரக்ஷகமென்று உஜ்ஜீவிக்குமதொழிய. [இல்லைகண்டீர் சதிரே] - அல்பபத்தநத்தாலே வஹூஃபலம் பெறுமது - சதிர்; வஹூயத்நத்தைப்பண்ணி ஃபலவேளையில் ஒன்றுமின்றிக்கேயொழிகை; இளிப்பு.

ஈடு.—நாலாம்பாட்டு. சிலரை ஆபத்ஸகரென்று அர்த்தாதிகளாலே நெடுநாள் ஆஶ்ரயித்தால், ஆபத்துவந்தவாறே கண்ணற்று உபேக்ஷிப்பர்கள்; நிர்ஹேதுகமாக வந்தவதரித்து ஆபத்ஸகனுனவனே யாஶ்ரயணீயனென்கிறார்.

[அற்றகாலேக்கு - அரணமாவர் - என்றென்றமைக்கப்பட்டார்] - கைம் முதலற்றகாலேக்கு ரக்ஷகனுவானொருவன் வேணுமென்று பலகாலும் அநுஸந்தித்து, தனக்கு இயற்றியுள்ளகாலத்திலேபச்சையிட்டுஆஶ்ரயித்து,தனக்குஅபாஶ்ரயமாகச் சமைத்து வைத்தவர்கள். இப்படி அர்த்தாதிகளாலே வசீகரிக்கப்பட்டவர்கள் ஆபத்துக்கு உதவும்படியென்என்னில்? [இரணங்கொண்ட தெப்பராவர்]- இவனிட்டபச்சையை இவனுன்று செய்தானுக நினைத்திருக்கையன்றிக்கே, தங்களுக்கு ப்ராப்தமானத்தை வாங்கினுராய், இவனுக்குஇயற்றி யின்றிக்கே பச்சையிடாத நாளைக்கும் ''நமக்குஇட்டிலன்''என்று வெறுத்து, இப்படி கொடுத்தது வாங்கினுரோபாதி புல்லியராம்படியையுடையராவர். தெப்பர்-ஊப்ரர்; சப்ரரென்றபடி. [இன்றியிட்டாலுமஃதே] - பச்சையிட்டாஶ்ரயியாவிடிலும் ஆபத்து வந்தால் கைவிடுவோரைக்கிடைக்கும். ஆபத்துவந்தால் கைவிடுவோர்க்குப் பச்சையிட்டு

நாலாம்பாட்டு - அரணம் இத்யாதி. ''அமைக்கப்பட்டார் - இரணங்கொண்ட'' என்று தொடங்கி, ''வண்புகழேசரண்'' என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - சிலரை இத்யாதி.

காலேக்கு - காலத்துக்கு. இயற்றி - சாமர்த்யமும், யோக்யதையும், உச்ச்ராயமும். அமைக்கப்பட்டார்-சமைக்கப்பட்டார். இரணம்கொண்டதெப்பராவர் -கடன்கொடுத்துத் திரும்ப வாங்கினுரோபாதி சப்ரராவரென்றபடி. இரண ்-ருணம்; கடனென்றபடி. தெப்பர்- தப்ரர் சப்ரர். இரணம்கொண்ட ப்ரகாரத்தை யுபபாதிக்கிறார் - இவனிட்ட இத்யாதி. ''தெப்பராவர்'' என்றத்தை யுபபாதிக்கிறார் - இவனுக்கியற்றி இத்யாதி. சப்ரர். இன்றியிட்டாலும் - பச்சையிடாவிட்டாலுமென்னுதல், முடிந்துவிட்டாலுமென்னுதல். ''அஃதே'' என்றது - ''இரணங்கொண்டதெப்புராவர்'' என்றவதுவேயென்றபடி. இதுசொல்லுகிறதுக்கு ப்ரயோஜநமேதென்ன -

ஆஶ்ரயிக்க வேண்டாவே. அன்றிக்கே, இப்படியே இப்பச்சையிட்டவன் "நமக்கு ரக்ஷகன்" என்றாஶ்ரயியாநிற்கச்செய்தே, நடுவேயவன்முடிவது, அப்போதும் கீழ்ச்சொன்னதுவே பலிதமாமித்தனை. [வருணித்தென்னே] - உபகரித்தார்திறத்திலே அபகாரம் பண்ணுவார்படியை யநுஸந்தித்துவெறுத்து,'வருணித்தென்னே' என்கிறார். இளைய பெருமாள் கைகேயியுடையபடிகளை யநுஸந்தித்து, "ஆத்மகாமா ஸதா சண்டீ க்ரோதநா ப்ராஜ்ஞமாநிநீ" (ஆத்மகாமாஸதாசண்டீ க்ரோதநாப்ராஜ்ஞமாநிநீ) என்றாற்போலே சிலவற்றைச்சொல்ல;'வாராய் பிள்ளாய்!நீதான் இவையெல்லாஞ்சொல்லுகிறதுநடுவிலாய்ச் சியையே: "ந தேம்பா மத்யமா தாத கர்ஹிதவ்யா கதஞ்சந"(நதேம்பாமத்யமாதாதகர்ஹிதவ்யாகதஞ்சந)-ஒருபடியாலும் நீ அவளை இவ்வார்த்தை சொல்லக்கடவையல்லை. "தாமேவ"(தாமேவ)-வேணுமாகில் கைகண்டமருந்தைச்செய்யப்பாராய்'. "இக்ஷ்வாகுநாதஸ்ய பரதஸ்ய"(இக்ஷ்வாகுநாதஸ்யபரதஸ்ய)-ஐயரோ போகட்டுமுடிந்துபோனார்; நாம் போகட்டுப்போந்த ராஜ்யத்தை இக்குடியில் மர்யாதைகுலையாதபடியாக நோக்கிக்கொண்டு கிடந்தபிள்ளை பரதனன்றோ இக்குடிக்கு நாயன். 'பரதஸ்ய கதாம் குரு' (பரதஸ்யகதாம்குரு)-நா நீர்வரும்படியான வார்த்தை சொல்லப்பாராய். ஆக, உபகரித்தார் விஷயத்திலே அபகாரமாகநினைத்திருப்பார்படி யநுஸந்தித்து, இவ்வர்த்தகதையைக் கிடந்து வர்ணிக்கிற இத்தால் ப்ரயோஜநமென்? பச்சையிட்டமையாதவன்றும் அபேக்ஷித காலத்திலே வந்து உதவுவானொருவனுண்டு; அவனையாஶ்ரயித்துப் பிழைத்துப்போகப் பாருங்கோள்! [வடமதுரையித்யாதி] - ஒருவர் அபேக்ஷியாதேயிருக்கச் செய்தே, இவற்றினுடைய ரக்ஷணார்த்தமாகத் தானேவந்து ஸ்ரீமதுரையிலேயவதரித்தவனுடைய நிர்ஹேதுக உபகாரகமான ஸௌஶீல்ய ஸௌலப்யாதி கல்யாணகுணங்களே நமக்கு ரக்ஷகமென்று உஜ்ஜீவித்துப்போகையொழிய. [இல்லைகண்டீர்சதிரே] - நேற்றிபெருத்து பல

ஆபத்துவந்தால் இத்யாதி. "அல்லாதே" என்றதின் விவரணம் - கீழ்ச்சொன்ன இத்யாதி. அதாவது - இரணம்கொண்டதெப்பாகை. "வருணித்தென்னே" என்றது - க்ஷேபோக்தி. இப்படி வெறுத்தபெருமாண்டோவென்ன - இளையபெருமாள் இத்யாதி. "ஆத்மகாமா ஸதா சண்டீ க்ரோதநா ப்ராஜ்ஞமாநிநீ। அரோகா சாபி மே மாதா கைகேயீ கிமுவாச ஹ" இத்யயோத்யாகாண்டே (ஸ 71, ஸ்லோ-10) பரத:. "ந தேம்பா மத்யமா தாத கர்ஹிதவ்யா கதஞ்சந। தாமேவேக்ஷ்வாகுநாதஸ்ய பரதஸ்ய கதாம் குரு" இத்யாரண்யகாண்டே (ஸ-16) ராம:. ஆத்மகாமா-ஸ்வார்த்தபரா. சண்டீ-அத்யந்தகோபவதீ. க்ரோதநா-ஸ்வஸம்ஸர்க்கேண அந்யேஷாமபிகோபஜநநீ. ப்ராஜ்ஞமாநிநீ-பண்டிதம்மந்யமாநா. என்றாற்போலே யென்று-ஸ்ரீபரதாழ்வான் சொன்னாற்போலே. சிலவற்றை சொல்லவென்றது - "ஹதப்ராஜ்ஞஸமா யோத்யா யஸ்யாஸ்த்வம் ஹதஸுத: । [illegible] கைகேயீ தாத்ருஶீ க்ருதஶீலிநீ" என்று இப்படி சிலவற்றைச்சொல்ல வென்றபடி. "கதஞ்சந" என்றதுக்கர்த்தம் - ஒருபடியாலும் இத்யாதி. தேவர் இக்ஷ்வாகுநாதராயிருக்க, பரதனை இக்ஷ்வாகுநாதனென்கிறதென்? என்ன, அந்வர்த்த ஸம்ஜ்ஞையையுடையவனாகையாலே யவனே இக்ஷ்வாகுநாதனென்கிறார் - ஐயர் இத்யாதி. நா நீர்வரும்படி - நாக்குக்கு நீர்வரும்படி. "வருணித்தென்னே" என்றதுக்குக் கீழ்ச்சொன்ன அர்த்தத்தை யநுவதியாநின்றுகொண்டு, மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் - ஆக இத்யாதியாலும், பச்சையிட்டமையாத இத்யாதியாலும். வண்புகழ் - கல்யாணகுணம். வ்யதிரேகார்த்தகயுக பூர்வகமாக ஸ்வபாவார்த்தம் - நேற்றி பெருத்து இத்யாதிவாக்யத்வயம். நேற்றி - ப்ரயாஸம். பகவத்விஷயத்திலே நெற்றியல்ப

மொன்றுமின்றிக்கே யிருக்குமென்னுமது- இளிம்பிறே; நெற்றி யல்பமாய் ஃபலம் கனக்கப் பெறுமதிறே-சதிராவது. 'நமோ'வென்னலிறே-நெற்றி; 'சமன்கொள் வீடு' இறே- ஃபலம். (ச)

ஐந்தாம் பாட்டு.

சதுரமென்றுதம்மைத்தாமேசம்மதித்துஇன்மொழியார்
மதுரபோகம்துற்றவரே வைகிமற்றொன்றுறுவர்
அதிர்கோள்செய்கையசுரர்மங்க வடமதுரைப்பிறந்தாற்கு
எதிர்கொளாளாயுய்யலல்லால் இல்லைகண்டீரின்பமே.

ஆ.—(சதுரமென்று.) - சதிராகவாழாநின்றோமென்று தங்களைத்தாங்களே யிசைந்து, இனியபேச்சுக்களையுடைய ஸ்த்ரீகளுடைய மதுரமான போகங்களை புஜித்தவர்களே, புஜிக்கைக்கீடான யோக்யதை குன்றினவாறே அவர்களாலே மிகவும் பரிஹஸிக்கப்படுவர்; லோகமெல்லாம் அதிரும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய அசுரர் மங்கும்படியாக வடமதுரைப்பிறந்தாற்கு ஸ்வாநுதாநுகளைப்பண்ணி எதிர்கொள்ளும் அடியாராய் உய்யலல்லால் வேறு ஸுகவமில்லை யென்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், தங்களைப் பெறுவிடில் பூரிக்கமாட்டாதபடி ஸ்நிக்தைகளான ஸ்த்ரீகளாலே, ஆபத்துக்கள் வந்தால் இகழப்படுவர்; ஆனபின்பு, என்றும் ஏகப்ரகாரமாக ஸ்நிக்தனை எம்பெருமானை ஆஸ்ரயியுங்கோள் என்கிறார்.

[சதுரமென்று தொடங்கி] - "சதிராக வாழாநின்றோம்" என்று தங்களைத் தாங்களை இசைந்து இனிய பேச்சுக்களையுடைவர்களுடைய மதுரமான போகங்களை ஸுஜித்தவர்களே, ஸுஜிக்கைக்கீடான யோக்யதை குன்றினவாறே அவர்களாலே த்யஜிக்கப்படுவர். [அதிர்கொள் செய்கையென்று மேலுக்கு] - லோகமெல்லாம் அதிரும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய அஸுரர் மங்கும்படியாக வடமதுரைப் பிறந்தாற்கு ஸ்வாநுதாநுகளைப்பண்ணிஎதிர்கொள்ளும் அடியாராய் உஜ்ஜீவிக்கலல்லது ஆத்மாவுக்கு வேறு ஸுகவம் இல்லை.

ப.—அநந்தரம், தங்களுக்கு போஹ்யதயா ஸ்வீக்ருதைகளான ஸ்த்ரீகளும் உதவாதபடி க்லேஸிப்பர்; க்லேஸநிவர்த்தகனை க்ருஷ்ணனை யஸிகமநம்பண்ணி ஆஸ்ரயிக்குமதொழிய வேறு ஸுகவமில்லை யென்கிறார்.

சதுரம் - (அபிமதவிஷயத்தை வசீகரிக்கவல்ல) சதிரையுடையோம், என்று - என்று, தம்மை - தங்களை, தாமே - தாங்களே, சம்மதித்து - ஸம்வதித்துக்கொண்டு, இன் - ப்ரமுகஸரஸமான, மொழியார் - வார்த்தையையுடையாரான ஸ்த்ரீகளுடைய, மதுரம் - இனிதான, போகம் - போகத்தை, துற்றவரே - பூர்ணமாகவநுபவித்தவர்களே, வைகி - காலாந்தரத்திலே, (அவர்கள்), மற்றொன்று - அவமாநாதிகார்யமான விபரீதபலத்தை, உறுவர் - பெறுவர்; (லோகத்துக்கு) அதிர்கொள்-மிகவும்அதிர்த்தியை விளைப்பிக்கையே, செய்கை - ஸ்வபாவமாகவுடைய, அசுரர் - அஸுரர்கள், மங்க - நசிக்

மாய், ஃபலம் கனத்திருக்குமோவென்ன - நமோ வென்னல் இத்யாதி. இளிம்பு - அசாதுர்யம். க்ரமேணாந்வய:. (சு)

கும்படி, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தாற்கு - அவதீர்ணனான க்ருஷ்ணனுக்கு, எதிர்கொள் - அபிகமந கர்த்தாக்களான, ஆளாய் - சேஷபூதராய்க்கொண்டு, உய்யலல்லால் - உஜ்ஜீவிக்கிலல்லது, (வேறு), இன்பம் - நிரதிசயஸுகம், இல்லை—.

இ.—அஞ்சாம்பாட்டில், தங்களைப்பெறுவிடில் தரிக்கமாட்டாதபடி ஸ்நிக்தைகளான ஸ்த்ரீகளாலே ஆபத்துவந்தால் இகழப்படுவர். ஆனபின்பு, ஏகப்ரகாரமாக ஸ்நிக்தனானவனை ஆச்ரயியுங்கோளென்கிறார்.

[சதுரமென்று] - சதிராகவாழாநின்றோமென்று இருந்ததேகுடியாக எல்லாரும் தம்மை இப்படியிறே நினைத்திருப்பது. [தம்மைத்தாமே சம்மதித்து] - தங்களைத் தாங்களேயிசைந்து. இயற்றி யுடையனானவன், "நம்மை 'சதுரன்' என்றங்கே நினைப்பிடு" என்னும். இவ்வஸ்ய ப்ரவ்ருத்திக்கு வேறு ஸஹகாரிப்பாரில்லாமையாலே தாமே மேல் எழுந்திட்டுக் கொடுவரவேணும். [இன்மொழியார்]—இனிய பேச்சையுடையவர்களுடைய. அகவாய் மயிர்க்கத்தியாயிருக்கப்பேச்சில் இனிமையாலே வசீகரிப்பர்கள். [மதுரபோகந் துற்றவரே] - மதுரமான போகங்களை அவர்களைக்கொண்டு நெருங்க பூஜித்தவர்களே. [வைகி மற்றொன்றுறுவர்] - போக்யதை போனவாறே அவர்களாலே த்யஜிக்கப்படுவர்கள். போக்யதையான யௌவநமும், கைதொடுமானமான அர்த்தமும் மாண்டாலும் இவனுக்கு ப்ராத்தை மாறுதிறே; இவன் மேல்விழ அவர்கள் நிஷேதிக்க இவன்படும் எளிமைகளை வாயாலே யருளிச்செய்யமாட்டாமையாலே, 'மற்றொன்று' என்கிறார். [அதிர்கொள் இத்யாதி] - சேதநர் அதிரும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய அஸுரர்கள் மங்கும்படியாக. [வடமதுரைப் பிறந்தாற்கு எதிர்கொளாளாயுய்யலல்லால்] - அவனுக்குச் செய்யவேண்டுவதென்னென்னில்?—ஸ்வாகதாதிகளைப்பண்ணி எதிர்கொள்ளுமித்தனை. அவன் மேல் விழாநின்றால் விழுவாராகாதொழியுமத்தனையே வேண்டுவது. ஆபிமுக்யம் பண்ணும் அடியாராய் உஜ்ஜீவிக்குமதொழிய. [இல்லைகண்டீர் இன்பமே] - ஆத்மாவுக்கு வேறு ஸுகமில்லை. உயிர்க்கழுவிலேயிருந்து பிபாஸை வர்த்தித்தவனுக்கு ஊறும் சமித்துப்பிறக்கும் ஸுகம்போலேயிறே ஸம்ஸாரத்திற் பிறக்கும் ஸுகம்; பகவத்விஷயத்தைவிட்டு அநர்த்தப்படுகைக்கு வேண்டுவ

ஈடு.—அஞ்சாம்பாட்டு. தங்களைப்பெறுவிடில் தரிக்கமாட்டாதபடி ஸ்நிக்தைகளான ஸ்த்ரீகளாலே ஆபத்துவந்தால் இகழப்படுவர்; ஆனபின்பு, ஏகப்ரகாரமாக ஸ்நிக்தனானவனை ஆச்ரயிக்குமதொழிய வேறுஸுகமில்லை யென்கிறார்.

[சதுரமென்று] - சதிராகவாழாநின்றோமென்று, "நாஞ் சதிரர், நாஞ் சதிரர்" என்றாயிற்று, இருந்ததேகுடியாகத் தந்தாமை நினைத்திருப்பது. [தம்மைத்தாமே சம்மதித்து]-தங்களைத்தாங்களே ஸம்மதித்து. தாங்களேயிசைந்து. அல்பம்இயற்றியையுடை

அஞ்சாம்பாட்டு.—சதுரம் இத்யாதி. "இன்மொழியார் மதுரபோகந்துற்றவரே வைகிமற்றொன்றுறுவர் - எதிர்கொளாளாயுய்யலல்லா லில்லைகண்டீரின்பம்" என்கிறவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை - தங்களை இத்யாதி. கீழ், ப்ராபகாபாஸங்களைச் சொல்லிற்று; இதில், ப்ராப்யாபாஸங்களைச் சொல்லுகிறது. "வடமதுரைப்பிறந்தாற்கு" என்கையாலே- ஏகப்ரகாரஸ்நிக்தத்வம் ஸித்தம்.

"தம்மைத்தாமே" என்ற பஹுவசநத்தையுட்கொண்டு அர்த்தம் - நாம் சதிரர் இத்யாதி. இருந்ததே குடியாக - எல்லாருமொக்க. ஸம்மதிக்கும்ப்ரகாரம் ஏது? என்ன - அல்பம்

யனு யிருக்குமவன், "அங்கே நம்மை 'சதிரன்' என்று நினைப்பிட்டுக்கோடுவா: நாம் அதிலே மேலெழுத்திட்டுத்தர" என்னும்; இவ்†வஸதஸ்யப்ரவ்ருத்திக்கு வேறுஸஹகரிப்பாரைக் கிடையாதே; தானேயிறேயுள்ளது [இன்மொழியார்] - இனிய பேச்சையுடையராயிருந்துள்ளவர்களுடைய. அகவாய் மயிர்க்கத்தியாயிருக்கச்செய்தேயும், ப்ரணயஸரஸமான பேச்சாலே வசீகரிக்கவல்லவர்கள். [மதுரபோகந் துற்றவரே] - மதுரமானஸோமத்தை, அவர்களுடனே நெருங்க புஜித்தவர்களே. [வைகிமற்றேன்றுறுவர்] - ஸோகத்துக்குப் பாங்கான யௌவநமும், அதுக்குக்கைம்முதலான த்ரவ்யமும்போமே; பின்னையும் ஆசை மாறுதே; அவ்வோவிடங்களிலேபோயிருக்கும், வருவார்க்கும் விரோதியாய். முற்பட, மனிச்சிலே நாலிரண்டுபேண்ணை "போகலாகாதோ" என்பர்களே; "போகிறேம், போகிறேம்" என்றிருக்குமே, போகாதே; பின்னைவெள்ளாட்டியையிட்டுப் பரிஹஸிப்பர்கள்; அதுக்கும் போகானே; பின்னை யானையிட் டெழுப்பிப்பார்ப்பர்கள்; அதுக்குமெழுந்திரான்; பின்னைக் காலைப்பற்றி யிழுப்பர்கள்: இவன் தூணைக்கட்டிக்கொள்ளும்; இப்படியால் அவர்களாலே பரிஹஸிதராவர்கள்; விபாகத்தில் பிறக்கும் பரிஹவத்தை யநுஸந்தித்து வேறுத்து, அது தம்வாயாலருளிச் செய்யமாட்டாமையாலே 'மற்றேன்று' என்கிறார். அங்ஙன்னன்றிக்கே, விபாகத்தில் நன்மையோடே தலைக்கட்டும் விஷயத்தைப்பற்றி உஜ்ஜீவித்துப் போகப்பாருங்கோளேன்கிறார். [அதிரித்யாதி] – சேதநருடைய நெஞ்சுகள் அதிரும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய அசுரவர்க்கம் முடியும்படி வடமதுரையிலேவந்து திருவவதரித்தவற்கு. [எதிர்கொளாளாயுய்யலல்லால்] - ஆபிமுக்ய்ம்பண்ணும் அடியாராய் உஜ்ஜீவிக்குமதொழிய: அவனுக்கு நாம் செய்யவேண்டுவதிது,—அவன்தானே மேல்விழாநின்றால், விமுகராகாதொழியு மத்தனையே வேண்டுவது. "**அந்யத்பூர்ணாதபாம் கும்பாத்**" (அந்யத்பூர்ணாதபாம்கும்பாத்)—பாண்டவபக்ஷபாதியாயிருக்கிற க்ருஷ்ணன் வாராநின்றான்; அவனுக்கு நாட்டையுங் கொடுத்து, பொன்னையுங்கொடுத்து, நமக்

இத்யாதி. இயற்றி - த்ரவ்யாத்யாதிக்யம். 'இருக்குமவன்' என்றதுக்கு, 'என்னும்' என்றத்தோடேயந்வயம். அங்கேயென்றது - ஸபையிலே யென்றபடி. நம்மையென்று - ஸ்வாதிஶயந் தோற்றச் சொல்லுகிறபடி. "தாமே" என்ற அவதாரணார்த்தம் - இவ்வஸதஸ்ய இத்யாதி. மொழியின் இனிமையைச் சொன்னதுக்கு வ்யாவர்த்யம் - அகவாய் இத்யாதி. இவ்விடத்திலே, "**ஈஷத்விஹஸிதம் ... வாவியோஷ்டாம் ஹ்ருதிஹாஹாஹமேவைகேவலம்**" என்றது அநுஸந்தேயம். "மற்று" என்றது - மதுரபோகத்துக்கு மற்றான பரிபவமென்றபடி. "வைகிமற்றொன்றுறுவர் -" சிறிது காலம் சென்றவாறே பரிபவத்தை யடைவர்களென்று பதார்த்தம். வைகி - காலாந்தரத்திலேயென்றபடி. மற்றொன்றுறும் ப்ரகாரமேதென்ன - ஸோமத்துக்கு இத்யாதி. வைகுகை - யௌவநாதிகள்கழிகை. இருந்துபோகிறானென்று உதாஸீநைகளாயிராதே, பரிபவிப்பானென்? என்ன - வருவார்க்கும் விரோதியாய் என்கிறார். மனிச்சிலே - ஏகாந்தத்திலே. பண்ணை - பர்யாயம். "மற்று" என்கிறதென்? இன்னதென்னவொண்ணாதோ? என்ன - விபாகத்தில் இத்யாதி. விபாகத்தில் - பலவேளையில். அவர்களிற்காட்டில் இவனுக்கு ஏற்றம் அருளிச்செய்கிறார்-அங்ஙன்றிக்கே இத்யாதி. உஜ்ஜீவிகைக்கு ஆபிமுக்யம்போருமோவென்ன - அவனுக்கு இத்யாதி. விவரணம் - அவன்தானே இத்யாதி. ஆபிமுக்ய ஸந்துஷ்டனென்னுமதுக்கு ப்ரமாணம் - அந்யத்பூர்ணத் இத்யாதி. "**அந்யத்பூர்ணாதபாம் கும்பாதந்யத் பாதாவநேஜநாத் । அந்யத் குஶலஸம்ப்ரஶ்நாந்நைவேச்சதி ஜநார்தந:**" இத்யுத்யோகபர்வணி ஏகோநநவதிதமே த்ருதராஷ்ட்ரம் ப்ரதி ஸஞ்சய:. இதுக்கவதாரிகை - பாண்டவ இத்யாதி. படையறுத்து - ஸ்வவஶமாக்கி. நாடு

† அஸதஸ்யம் - ஸதஸ்ஸுக்குத் தகாதது: அஸப்யம், ஸதஸ் - ஸபை.

காக்கிக்கொள்ளுகிறேமென்றாற்போலே த்ருதராஷ்ட்ரன் சிலசொல்ல; அதுக்குக்கருத்து- இவற்றாலே அவனைப் படையறுத்துக் கொள்ளுகிறேனென்றாயிற்று. அவன்தான் நெஞ்சாலே நினைப்பதொன்றாய், வாயாலே வ்யவஹரிப்ப தொன்றாயிறே யிருப்பது; இத்தை யறிந்த ஸஞ்சயன்,வருகிறவன் அங்ஙனொத்தவனல்லன்காண்: அவனுக்குவேண்டுவேது இவ்வளவென்கிறான்; தான் குடிக்குந்தண்ணீரைக் குளிரவைக்கக்கடவனே: அத்தை அவன் வருகிறவழியிலே வாசலிலே வைக்கவமையும். தன் க்ருஹத்திலே அதிதி வந்து புகுந்தால் கால்கழுவுவதாக ஸாமாந்யஶாஸ்த்ரம் விதித்தது, அதுக்கு மேற்பட அவனை வாசிக்கு விசேஷித்துச் செய்யவேண்டுவேதில்லை:—“அந்யத்பூர்ணாதபாம் கும்பாத்” (அந்யத்பார்தாவநேஜநாத்) - அந்தக்குடத்தில் நீரையிட்டு அவன் திருவடிகளை விளக்க அமையும், மற்றுவேண்டா. “அந்யத்குஶலஸம்ப்ரஶ்நாத்” (அந்யத்குஶலஸம்ப்ரஶ்நாத்) நெடுந்தூரம் வந்தவனை “நடந்தகால்கள்நொந்தவோ?”என்ன ப்ராப்தமிறே. ‘நசேச்சதி’ (நசேச்சதி)-உண்டவனுக்கு உண்ணப்போகாதிறே; அப்படியே இவனுடைய உத்யோகத்திலே அவனுக்கு வயிறுநிறையும்; பின்பு அவன் செய்யுமவையடைய மிகையாயிருக்கும். [இல்லைகண்டீரின்பமே]-து:கங்களிலே சிலவற்றை ஸுகமென்று ப்ரமிக்கிறவித்தனை போக்கி, இதொழிய ஸுகரூபமாயிருப்பதொன்றில்லை. உயிர்க்கழுவிலே யிருக்கிறவனுக்கு பிபாஸையும்வர்த்தித்து, தண்ணீருங்குடித்து, தாஹமும்சமித்தால் பிறக்கும் ஸுகம் போலே யிருப்பதொன்றிறே, ஸம்ஸாரிகளுக்கு மோஹத்தால் பிறக்கும் ஸுகமாகிறது. ஆடுகிறபாம்பின் நிழலிலேயொதுங்கி, “அதுஅள்ளிக்கொள்ளும்” என்றறியாதே “வெய்யிலைத்தப்பப்பெற்றோம்” என்று ஹ்ருஷ்டராயிருப்பாரைப்போலேயிறே, விஷயாநுபவங்களாலே களித்திருக்கிறவிருப்பு இவனுக்கு. (௫)

ஆறாம் பாட்டு.

இல்லைகண்டீர்இன்பம்அந்தோ! உள்ளதுநினையாதே
தொல்லையார்களெத்தனைவர் தோன்றிக்கழிந்தொழிந்தார் ?
மல்லைமூதூர் வடமதுரைப்பிறந்தவன்வண்புகழே
சொல்லியுய்யப் போகலல்லால்மற்றொன்றில்லைசுருக்கே.

முதலானவற்றைக்கொடுத்து ஸ்வவஶயாக்குகை கபடமாகவேணுமோவென்ன - அவன்தான் இத்யாதி. ஆநுகூல்யமே அவனுக்கு வேண்டுவதென்னுமத்தை பதங்களிலே ஏறிட்டுக்காட்டுகிறார் - தான்குடிக்கும் இத்யாதி. “பாதாவநேஜநாத்” என்றதுக்கு அவதாரிகை - தன் க்ருஹத்திலே இத்யாதி. நடந்தகால்கள் நொந்தவோ என்றது - திருச்சந்தவிருத்தம், அறுபத்தோராம் பாட்டு. ஸ்பஷ்டோர்த்த:. ஆச்சாஹாவத்துக்கு ஹேதுவருளிச்செய்கிறார் - உண்டவனுக்கு இத்யாதி. ... தத்திலேயேதென்ன - அப்படியே இத்யாதி. ஆகிலென்னென்ன - பின்பு அவன் இத்யாதி. ... தனும் சிலஸுகங்களுண்டாயிருக்க, “இல்லை” என்கிறதென்னென்ன - து:கங்களிலே இத்யாதி. விஷயஸுகம் - ஸுகப்ராந்தியொழிய, வஸ்துத: து:கமென்கிறார் - உயிர்க்கழுவிலே இத்யாதி. “விஷயாணாநுபவஸமஹ்ராஸ்” இத்யாதி வசநாபிப்ராயேண அநர்த்தபர்யவஸாயியுமாம் என்கிறார் - ஆடுகிற இத்யாதி. (௫)

ஆ.—(இல்லைகண்டீர்.) - "எம்பெருமானல்லது வேறு புருஷார்த்தமில்லை" என்னும் இவ்வுண்மையை யுணராதே எத்தனைவர் இங்ஙனேமுடிந்து போனார்? நீங்களும் இங்ஙனே நசியாதே, ஆஸ்ரிதர்க்கும் ஆநந்தம் பண்ணுகைக்காக வந்து பிறந்தருளினவனுடைய ஔதார்யத்தையே சொல்லி யுய்யுங்கோள்! வேறு உய்யவிரகில்லை: இது ஸங்க்ஷேபேண சொன்னேனும்" என்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், "எம்பெருமானே நிரதிசயபுருஷார்த்தம்" என்னும் இவ்வர்த்தத்தை உணராதே பழையார் அநேகம்பேர் இங்ஙனே முடிந்துபோனார்; நீங்களும் இங்ஙனே நசியாதே ஆஸ்ரிதர்க்காக ஸ்ரீமதுரையிலேவந்து பிறந்தருளின ஸர்வேஸ்வரனை யாஸ்ரயிக்கைபல்லது ஆத்மாவுக்கு ஹிதமில்லை, இது ஸங்க்ரஹேண சொன்னேனென்கிறார்.

[இல்லைகண்டீர் இன்பமந்தோ உள்ளது நினையாதே] - வேறுபுருஷார்த்தம் இல்லைகிடீகோள். உண்டான புருஷார்த்தத்தை நினையாதே. [மல்லைமூதூர்] - அதிஸம்ருத்தமாய் அவனுக்குப் பழைபதாய் வருகிற ஊர்.

ப —அநந்தரம், புருஷார்த்த பரிஜ்ஞாநமில்லாமல் முடிந்துபோகாதே க்ருஷ்ணனுடைய ஆநந்தஜநகமான குணகீர்த்தநத்தைப் பண்ணிலல்லது வேறு உஜ்ஜீவநார்த்தமாயிருப்பதொரு ஸங்க்ரஹமில்லையென்கிறார்.

("ஸுகம் ... " என்கிற ஜந்மத்திலே), இன்பம் - ஸுகரூபமாயிருப்பதொன்று, இல்லைகண்டீர் - இல்லைகிடீர்: அந்தோ! - ஐயோ! உள்ளது - ஸர்வகாலவர்த்தியான ஆநந்தியாயுள்ள பகவத்ஸ்வரூபத்தை, நினையாதே - அநுஸந்தியாதே, தொல்லையார்கள் - பழையகாலத்திலுள்ளார், எத்தனைவர் - எத்தனைபேர், தோன்றிக் கழிந்தொழிந்தார் - ஜந்மமரணங்களே யாத்ரையாய்ப்போனார்! (ஆனபின்பு), மல்லை - நிரதிசயஸம்பத்ஸம்ருத்தமாய், மூதூ - (வாமநாவதாரந்தொடங்கி தத்ஸம்பந்தம் மாறாமல்) பழையதான, ஊர் - ஊராயிராநிற்கிற, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தவன் - பிறந்தவனுடைய, வண் - ஆஹ்லாதஜநகமான, புகழ் - குணங்களை, சொல்லி - கீர்த்தித்து, உய்யப்போகலல்லால் - உஜ்ஜீவித்துப்போமதொழிய, மற்று - வேறு, சுருக்கு - ஸங்க்ரஹேண சொல்லலாவது, ஒன்று இல்லை - ஒன்றுமில்லை.

இ.—ஆறாம்பாட்டில், நிரதிசயபுருஷார்த்தத்தை யுணராதே முன்புள்ளார் அநேகர் முடிந்துபோனார்; அங்ஙனே நசியாதே ஆஸ்ரிதர்க்காக அவதரித்து ரக்ஷிக்குமவனையே ஆஸ்ரயிக்குமல்லது ஆத்மாவுக்கு ஹிதமில்லை யென்கிறார்.

[இல்லைகண்டீர் இன்பம்] - ஸம்ஸாரத்தில் ஸுகமில்லை கிடீகோள்; அந்தோ! ஸ்ரோதாக்களுக்கு நான் உபதேசிக்கவேண்டுவதே! ப்ரத்யக்ஷம் அகிஞ்சித்கரமாயிருக்க உபதேசிக்கிறீரே. [உள்ளது நினையாதே] - உண்டான புருஷார்த்தத்தை நினையாதே. உண்டானஇல்லாமையை நினையாதே யென்றுமாம். [தொல்லையார்களெத்தனைவர்] - பழையராயிருப்பாரெத்தனைவர் உத்பத்தி விநாஸமேயாய் நடுவிருந்தநாள் புருஷார்த்தத்துக்கு உடல்அன்றிக்கே முடிந்துபோனார். எத்தனைவரென்கிறது - அநேகரென்கிறது. [மல்லை மூதூர்] - அதிஸம்ருத்தமாய் அவனுக்குப்பழைபதாய் வருகிறஊர். ஸித்தாஸ்ரமமாய் வாமநன் நெடுநாள் தபஸ்ஸுபண்ணியும், ஸ்ரீஸத்ருக்நாழ்வான் படைவீடுசெய்தும், கிருஷ்ணன் அவதரித்தும், இப்படி பகவத்ஸம்பந்தம் மாறாததேசம்.

[வண்புகழே] - அவனுடைய கல்யாண குணங்களையே. [சொல்லி உய்யப்போகலல்லால்]-உக்திமாத்ரத்தாலே உஜ்ஜீவித்துப்போமத்தொழிய. [மற்றொன்றில்லை சுருக்கே]-சுருங்கச் சொல்லலாம் ஹிதம் வேறொன்றுமில்லை காடு கைக்கலாவதுண்டு, திரளச் சொல்லலாவதுஇதுவே.

ஈடு.—நிரதிசயபுருஷார்த்தத்தை யுணராதே முன்புள்ளாரநேகர் முடிந்து போனார்கள்; அப்படியே நீங்களும் நசியாதே, ஆச்ரிதர்க்காக அவதரித்து ரக்ஷிக்குமவனையே ஆச்ரயிக்குமத்தனையல்லது, ஆத்மாவுக்கு ஹிதமில்லையென்கிறார்.

[இல்லைகண்டீரின்பம்] - "**ஸர்வம் து:கமயம் ஜகத்**" (ஸர்வம் து:கமயம்ஜகத்) என்கிற ஸம்ஸாரத்தில், கெடுவிகாள்! ஸுகலேசமுமில்லைகிடிகோள். [அந்தோ!] - ஸோக்தார்க்களான உங்களுக்கு நான் உபதேசிக்கவேண்டுவதே! ப்ரத்யக்ஷமும் அகிஞ்சித்கரமாயிருக்க உபதேசிக்கிறீரே. [உள்ளதுநினையாதே] - உண்டான புருஷார்த்தத்தை நினையாதே. 'ஸ்வரூபமுமாய் நித்யமுமா யிருப்பது பகவத்விஷயம்" என்று அநுஸந்தியாதே. உண்டானஇல்லாமையை நினையாதேயென்று கீழேகூட்டவுமாம். [தொல்லையித்யாதி] - பழையராயிருப்பா ரெத்தனைபேர், உத்பத்தியானது விநாசத்தோடே கூட்ட, நடுவுள்ளநாள் புருஷார்த்தத்துக்கு உடலன்றிக்கே கழிந்துபோனார். சிலபூண்டுகளுண்டாய், தோன்றின இடந்தன்னிலேநின்று தீய்ந்துபோவன; அப்படியே. [மல்லையித்யாதி] - ஸம்ருத்தியை யுடைத்தாய், அவனுக்கு என்றுமொக்கக் கலவிருக்கையாய்ப் போருகிற ஸித்தாச்ரமமாய், ஸ்ரீவாமநனெழுந்தருளியிருந்தும், ஸ்ரீசத்ருக்நாழ்வான் படைவீடுசெய்தும், க்ருஷ்ணன்வந்தவதரித்தும், இப்படி பகவத் ஸம்பந்தம் மாறாதேபோருகிற தேசமாயிற்று. [மூதூர்] - பழையதாய் வருகிறவூர்; அங்கேவந்துஅவதரித்தவனுடைய உதாரமான புகழையே வாயாலே சொல்லி யுஜ்ஜீவித்துப் போமத்தொழிய. [மற்றொன்றில்லைசுருக்கே] - புறம்பேநின்று பரக்கக்காடுகைக்கலாவதுண்டித்தனைபோக்கி, சுருங்கவொருபாசுரத்தாலே சொல்லலாவதில்லை. (௬)

ஆறும்பாட்டு—இல்லைகண்டீர் இத்யாதி. "உள்ளதுநினையாதே" என்று தொடங்கி "மற்றொன்றில்லைசுருக்கு" என்னுமளவும் - கடாக்ஷித்தவதாரிகை - நிரதிசய இத்யாதி. இந்த அவதாரிகை "உள்ளதுநினையாதே" என்றதின் மூந்தினவர்த்தத்திலே.

"அந்தோ!" என்றதுக்கு ஹார்த்த பாவம் - ஸோக்தாக்களித்யாதி. து:கரூபதை ப்ரத்யக்ஷமாயிருக்க உபதேசிக்கிறதென்? என்ன - ப்ரத்யக்ஷமும் இத்யாதி. க்ருபையாலேயென்றபடி. விவரணம் - ஸ்வரூபமுமாய் இத்யாதி. உண்டானவில்லாமை-ஸத்யமான இல்லாமை. ஸம்ஸாரத்தினுடைய பாரமார்த்திகாகாரம் - இன்பமில்லையென்னுமதென்றபடி. த்வி்தியயோஜனையில், 'இன்பம்-இல்லைகண்டீர்" என்றதுள்ளது; அத்தை நினையாதே யென்று சப்தார்த்தம். உக்தத்துக்குத்ருஷ்டாந்தம் - சிலபூண்டுகள் இத்யாதி. மல்லை - ஸம்ருத்தி. அதாவது - பகவத் ஸம்பந்தம்மாறாமை. கலவிருக்கை-கொலுவிருக்கை. என்றுமொக்க இது கலவிருக்கையாவென்ன ஸித்தாச்ரமமாய் இத்யாதி. "சுருக்கே" என்றதுக்கு பாவம் - புறம்பே இத்யாதி. காடுகைக்கலாவது - வாய்கைக்கும்படி வர்ணிக்கலாவது. வாய்க்குக்கேடாய்ச் சொல்லுகையென்றபடி. 'இல்லைகண்டீர்' என்று தொடங்கி, போகலல்லால் - சுருக்கு - மற்றொன்றில்லை என்று அந்வயம்.

ஏழாம் பாட்டு.

மற்றொன்றில்லைசுருங்கச்சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும்
சிற்றவேண்டாசிந்திப்பேயமையும் கண்டீர்கள் அந்தோ!
குற்றமன்றெங்கள்பெற்றத்தாயன் வடமதுரைப்பிறந்தான்
குற்றமில்சீர்கற்று வைகல்வாழ்தல்கண்டீர் குணமே.

ஆ. -(மற்றொன்றில்லை.) - இச்சுருக்கை மிகப்பரவாமே வ்யக்தமாக்குகிறார். வேறுவக்தவ்யமில்லாதபடி ஸங்க்ஷேபேண ஆத்மோஜ்ஜீவநோபாயத்தை எல்லார்க்கும் சொன்னோம். இதுக்கு அதிகாரிநியமமும், காலநியமமும், தேசநியமுமில்லை. "இவ்வுபாயந்தான் துஷ்கரம்" என்று குறைவுபடவும் வேண்டா, ஸ்ம்ருதிமாத்ரமே யமையும். இது நிஷ்பலமாகிலோவென்னில்?—இது செய்தால் முன்னம் அநர்த்தமில்லையிறே. ஆதலால், ஆஶ்ரிதர்க்காக வடமதுரையிலேபிறந்தானை பசுமேய்க்கும் ஆயனுடைய ஹேயப்ரத்யநீகமான கல்யாணகுணங்களை யநுஸந்தியுங்கோள்: இதுதானே யமையுமென்னும்படி போக்யமாய், யுக்தமுமாயிருக்குமென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், பகவத் ஸமாஶ்ரயணத்தினுடைய எளிமையையும் இனிமையையும் அருளிச்செய்கிறார்.

[மற்றொன்றில்லை சுருங்கச்சொன்னோம்] - இத்தோடொக்க வேறு எண்ணலாவதும் இல்லை. இதுதன்னையும் பரப்பின்றிக்கே சுருங்கச்சொன்னோம். [மாநிலத்து]- இதுக்கு அதிகாரிகள் எங்ஙனேயென்னில்? பூமியிலேஎவ்வுயிர்க்கும்: ஜந்மவ்ருத்தாதிகள் குறைந்தாரோடு நிறைந்தாரோடு வாசியின்றிக்கே எல்லா ஆத்மாக்களுக்கும். [சிற்றவேண்டா] - ஆயாஸிக்கவேண்டா. [சிந்திப்பே அமையுங்கண்டீர்கள்] உக்திநிரபேக்ஷமாக சிந்தாமாத்ரமே அமையுங்கிடீகோள். [அந்தோ] - இதிலே புகாதொழிவதே என்று இன்னாதாகிறார். [குற்றமன்று] - இவ்வுபாயம் அநர்த்தத்தை விளையாதிறே. [எங்கள் பெற்றத்தாயன் என்றுமேலுக்கு] - ஆஶ்ரிதர்க்காக் வடமதுரைப் பிறந்தானை பசுமேய்க்கும் ஆயனுடைய ஹேயப்ரத்யநீகமான கல்யாண குணங்களை அப்யஸித்து என்றும் வாழ்கை, ஆத்மாவுக்கு யுக்தம்.

ப.—அநந்தரம், சிந்தாமாத்ரஸாலப்யனான க்ருஷ்ணகுணாநுஸந்தாநம் பண்ணி, காலதத்த்வமுள்ளதனையும் வாழ்கை ப்ராப்தம் என்கிறார்.

மற்று - வேறு, ஒன்று இல்லை-வக்தவ்யமாயிருப்பதொன்று இல்லை: சுருங்க - ஸங்க்ரஹேண, சொன்னோம்-(உங்களுக்குச்) சொன்னோம்; மா - பெரிய, நிலத்து - பூமியிலே, எவ்வுயிர்க்கும் - எல்லாவாத்மாக்களுக்கும், சிற்றவேண்டா - பரக்கவாயாசப்படவேண்டா: சிந்திப்பே - சிந்தாமாத்ரமே, அமையும் - அமையும்; கண்டீர்கள் - ("**ஸுகர ஸ்ம்ரணேஜகோக்ஷ**" என்று ப்ரஸித்தமன்றோ?), அந்தோ - ஐயோ! (இந்தஸௌகர்மார்க்கம் பலவ்யாப்தமல்லவாகிலும்), குற்றம் - அநர்த்தகரம், அன்று - அல்லவே; (இப்படி ஸ்மர்த்தவ்யமெதுவென்னில்), எங்கள் - ஆஶ்ரிதஸவ்யனைப், பெற்றம்-(அஜ்ஞமான) பசுக்களுக்கு, தாயன் - ரக்ஷகமாய்க்கொண்டு, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தான் - அவதீர்ணனானவனுடைய, குற்றமில் - அபேக்ஷாநிரபேக்ஷமாக ஆஶ்ரிதஸம்ரக்ஷணைக

ப்ரயோஜநமான, சீர் - குணங்களை, கற்று - (உபதேசமுகத்தாலே யிப்படி) வ்யுத்பத்திபண்ணி, வைகல் - ("ஸததாநுகாரோநுஸந்தேய" என்கிறபடியே) யாவதாத்மபாவிகுணாநுபவம்பண்ணி, வாழ்தல்கண்டீர்-வாழ்கைகிடிகோள்! (உங்களுக்கு), குணம்-ஸ்வபாவமாகையும், ப்ராப்தமும்.

இ.—ஏழாம்பாட்டில், பகவத் ஸமாஶ்ரயணத்தினுடைய எளிமையையும் இனிமையையும் அருளிச்செய்கிறார்.

[மற்றொன்றில்லை]-இத்தோடொக்க வேறு எண்ணலாவதில்லையென்னுதல்; இப்போதித்தைச் சொல்லி வேறொருபோது வேறேயொன்றைச் சொல்லுகிறான் என்றிருக்கவேண்டாவென்னுதல். [சுருங்கச்சொன்னோம்]-இது தன்னையும் பரப்பறச்சொன்னோம். ப்ரதிபத்திக்கு அவிஷயமாம்படியன்றியே ஸங்க்ரஹமாகச் சொன்னோம். [மாநிலத்து] - இதுக்கு அதிகாரிகள் ஸம்ஸாரத்திலே. இவ்வர்த்தத்துக்கு அண்ணியார் பரமபதத்திலுள்ளாராகிலும் உபதேசத்துக்கதிகாரிகள் ஸம்ஸாரிகளென்கை. [எவ்வுயிர்க்கும்] - இது அதிக்ருதாதிகாரமன்று, ஸர்வாதிகாரம். [சிறறவேண்டா]- ஆயாஸிக்கவேண்டா. சிற்றுதல் - சிதறுதலாய் பரக்கவேண்டாவென்கை. [சிந்திப்பேயமையுங்கண்டீர்கள்] - உக்திநிரபேக்ஷமாச சிந்தாமாத்ரமேயமையுங் கிடிகோள். [அந்தோ]-இவ்விலக்ஷணவிஷயத்தை இழப்பதே என்னுதல். "இது ஸுலபம்" என்றால் காற்கடைக்கொள்ளுகைக்கு உறுப்பாவதே யென்னுதல். [குற்றமன்று] - ஒருநன்மையில்லையாகிலும், ஓர் அநர்த்தத்தை விளையாதே. "ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய" இவ்வுபாயத்துக்கு பலமில்லையாகிலும் தானே ப்ரயோஜநம் போருமென்கை. [எங்கள் பெற்றத்தாயன் வடமதுரைப் பிறந்தான்] - ஆஶ்ரிதர்க்காக வடமதுரைப் பிறந்தானை பசுமேய்க்கும் ஆயனென்னுதல். ஆஶ்ரிதர்க்காக பசுமேய்க்கும் ஆயனுவானுக வடமதுரைப் பிறந்தானென்னுதல். [குற்றமில்சீர் கற்று] - ஹேயப்ரத்யநீகமான கல்யாண குணங்களை அப்யஸிக்கவென்னுதல்; பிறப்பிலும் சேஷ்டிதங்களிலும் புரையற்றிருக்கையென்னுதல். "ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்" [வைகல் வாழ்தல் கண்டீர் குணமே] - கற்பதொருகால்; வாழ்ச்சி நித்யமாயிருக்கும் [வாழ்தல் கண்டீர் குணமே]- வாழ்தல்கிடீர் இவ்வாத்மாவுக்கு யுக்தம்; அல்லாததெல்லாம் அப்ராப்தமென்கை.

ஈடு.—ஏழாம்பாட்டு. பகவத்ஸமாஶ்ரயணத்தினுடைய எளிமையையும் இனிமையையும் அருளிச்செய்கிறார்.

[மற்றொன்றில்லை] - இத்தோடொக்க வேறு எண்ணலாவதில்லையென்னுதல், இப்போது இத்தைச்சொல்லி வேறொருபோது வேறொன்றைச்சொல்லுகிறு னென்றிருக்க வேண்டா வென்னுதல் [சுருங்கச்சொன்னோம்] - இதுதன்னைப்பரப்பறச்சொன்னோம். ப்ரதிபத்திக்கு அவிஷயமாம்படி சொல்லுகையன்றிக்கே, ஸங்க்ரஹமாகச்சொன்னோம்.

ஏழாம்பாட்டு.—மற்றென்றில்லை இத்யாதி. "சிறறவேண்டாசிந்திப்பேயமையும் குற்றமன்று" என்கிறபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - பகவத்ஸமாஶ்ரயண இத்யாதி.

இத்தோடொக்க என்றது - "சிந்திப்பேயமையும்" என்றத்தைப்பற்ற. ப்ரதிபத்தியோடொக்க எண்ணலாவது ஓர் உபாயாந்தரமில்லையென்று முந்தின அர்த்தத்துக்கு பாவம்; என் வார்த்தையை "விப்ரலம்பகவாக்யம்" என்றிருக்கவேண்டா, "ஆப்தம்" என்று விஶ்வஸியுங்கோள் என்றிரண்டாமர்த்தத்துக்கு பாவம். "சுருங்க" என்றதுக்கு - ஶப்தத்தினுடைய ஸங்க்ரஹமும், அர்த்த

[மாநிலத்து] - இதுக்கு அதிகாரிகள் ஸம்ஸாரத்திலே. இவ்வர்த்தத்துக்குஅண்ணியார் பரமபதத்திலுள்ளாராகிலும், உபதேசத்துக்கதிகாரிகள் ஸம்ஸாரத்திலுள்ளாரென்கை. [எவ்வுயிர்க்கும்] - இது அதிக்ருதாதிகாரமன்று; ஸர்வாதிகாரம். [சிற்றவேண்டா] - ஆயாஸிக்கவேண்டா. சிற்றுதல் - சிதறுதலாய், பரக்கவேண்டாவென்கை. ஒரு வ்யாபாரம் வேண்டாவென்றபடி. [சிந்திப்பேயமையுங்கண்டீர்கள்] - உக்திநிரபேக்ஷமான சிந்தாமாத்ரமே யமையுங்கிடிகோள். [அந்தோ] - "நற்சரக்குக்கிட்டினதனையும் கைவிடுகைக்கு உடலாவதே!" என்று அந்தோ! என்கிறார். [குற்றமன்று] - கீழ்ச்சொன்ன நன்மைகளொன்றுமில்லையேயாகிலும், இதுசொன்னாலும் உங்கள்தலையில் முந்தறமுன்னம் இடிவிழாது. "*யோவஸாதஸ்ஸஉச்யதாம் - ப்ராதர்த்தேவேதிக்ருஷ்ணேதி*" (யோவஸாதஸ்ஸஉச்யதாம் - ப்ராதர்த்தேவேதிக்ருஷ்ணேதி)-இவ்வுபாயத்துக்குப் பலமில்லையாகிலும், இதுதானே ப்ரயோஜநம் போரு மென்கை. [எங்கள்பெற்றத்தாயன் வடமதுரைப்பிறந்தான்] - வந்துபிறப்பதற்கு முன்னே பெற்றத்தாயன்போலேகாணும், வந்தவதரிப்பதாக ஸங்கல்பித்ததில் புரையற்றிருந்தபடி. ஆஸ்ரிதர்க்காக வடமதுரைப்பிறந்தானை பசுமேய்க்கும் ஆயனென்னுதல். பெற்றத்தாயன் - பசுமேய்க்கும் இடையன். [குற்றமில்சீர்கற்று] - ஹேயப்ரத்யநீகமான கல்யாணகுணங்களை யப்யஸித்தென்னுதல்; பிறப்பிலும் சேஷ்டிதங்களிலும் புரையற்றிருக்குமென்னுதல். "*அஹம்வோபாந்தவோஜாத:*" (அஹம்வோபாந்தவோஜாத:). [வைகல்வாழ்தல்கண்டீர்குணமே] - கற்பதொருகாலாய், பின்பு வாழ்ச்சி நித்யமாயிருக்குமாயிற்று; இதொன்றுமே குணம்; இதொழிந்ததடைய அப்ராப்தம். (எ)

தத்தினுடைய ஸாக்ரஹத்வமுமென்று இரண்டர்த்தம். இத்தையருளிச்செய்கிறார் - இதுதன்னை இத்யாதி வாக்யத்வயத்தாலே. "ஸம்ஸாரத்திலே" என்கிறதென்? நித்யவிபூதியிலேயன்றோவுள்ளது? என்ன - இவ்வர்த்தத்துக்கு *இத்யாதி. "எவ்வுயிர்க்கும்" என்றதுக்குபாவம்-*இது அதிக்ருத *இத்யாதி. "சிற்ற" என்றால் ஆயாஸத்தைக்காட்டுமோவென்ன -* சிற்றுதல் *இத்யாதி. "சிந்திப்பே" என்றவதாரணார்த்தம் -* உக்திநிரபேக்ஷமான *இத்யாதி. "அந்தோ" என்றதுக்குபாவம் -* நற்சரக்கு *இத்யாதி.* கிட்டினதனையும் - *கிட்டவிருக்கச்செய்தேயும்.* கீழ்ச்சொன்னநன்மைகளாவன *- ஸர்வோபாயாதிகதமத்வ ப்ரதிபத்திவிஷயத்வ ஸௌலப்ய ஸர்வாதிகாரத்வ அநாயாஸத்வ உக்திநிரபேக்ஷத்வரூபமான இவ்வாநுகூல்யங்கள். உக்தார்த்தத்துக்கு ஸம்வாதம் -* யோவஸாத *இத்யாதி:—*
"**ப்ராதர்த்தேவேதிக்ருஷ்ணேதிமாவிநேதிவ்ரஜஸ்தாம் । ஸ்யோதோஹவாவதாஹோவ யோவஸாதஸ்ஸஉச்யதாம்.**" *அவஸாத: - து:கம். "குற்றமன்று" என்றதுக்கு பாவாந்தரம் -* இவ்வுபாயத்துக்கு *இத்யாதி. ஏகார்த்தமாகவுமாம்.* பெற்றம் - *கன்றும் பசுவும். பிறந்தபின்பு பெற்றத்தாயனென்றதே "பெற்றத்தாயன்பிறந்தான்" என்றதுக்குபாவம் -* வந்துபிறப்பதற்கு *இத்யாதி.* பலிதம் - வந்தவதரிப்பதாக *இத்யாதி. த்விதீயார்த்தத்துக்கு, "சீர்" என்று - குணகார்யசேஷ்டிதங்களைச்சொல்லுகிறது. "பிறப்பில்புரையற்றிருக்கும்" என்றதுக்குப்ரமாணம் -* அஹம்வோபாந்தவ *இத்யாதி.* "**நாஹம்தேவோ ந கந்தர்வோ ந யக்ஷோ ந ச தாநவ: । அஹம்வோபாந்தவோஜாதோ நைதச்சிந்த்யமதோந்யதா**" *இதி ஸங்காங்குர்வதோ மோபாந்ப்ரதிஸ்ரீக்ருஷ்ண:. "கற்றுவைகல்வாழ்தல்" என்ற பதச்சேர்த்திக்குபாவம் -* கற்பதொருகாலாய் *இத்யாதி. "வாழ்தல்கண்டீர்குணம்" என்றந்வயித்து, அவதாரணார்த்தம் -* இதொன்றுமே *இத்யாதி.* குணம் - *ப்ராப்தம். "சுருங்கச்சொன்னோம்" என்றதுக்கு, "சிந்திப்பேயமையும்" என்றத்தோடே அந்வயம்.* (எ)

எட்டாம் பாட்டு.

வாழ்தல்கண்டீர்குணமிது அந்தோ மாயவனடிபரவி
போழ்துபோகவுள்ளகிற்கும் புன்மையிலாதவர்க்கு
வாழ்துணையா வடமதுரைப்பிறந்தவன்வண்புகழே
வீழ்துணையாப்போமிதனில் யாதுமில்லைமிக்கதே.

ஆ.—(வாழ்தல்கண்டீர்.) - தன்னுடைய கல்யாணகுணாநுஸந்தாநைகாத்மதாரணரான சீரியர்க்கு வாழ்துணையாக வடமதுரையிலே வந்து பிறந்தருளின ஸர்வேஶ்வரனுடைய கல்யாணகுணாநுஸந்தாநத்துக்குமேற்பட்ட புருஷார்த்தோபாயமில்லையென்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், எம்பெருமான் இங்கேவந்து திருவவதாரம்பண்ணியருளுகைக்கு நிதானத்தைச்சொல்லி அவனையே ரக்ஷகனாகப் பற்றுமித்தனைபோக்கி ஒருவர்க்கும் வேறொரு ப்ரயோஜநமில்லை என்கிறார்.

[மாயவனடி பரவியென்று தொடங்கி] - ஆஶ்சர்யமான குணசேஷ்டிதாதிகளையுடையனான தன்னுடைய திருவடிகளை இனிதாய்க்கொண்டு பேசியே போதுபோக்க வேணுமென்று அத்யவஸிக்கவல்லராய், அநந்யப்ரயோஜநரானவர்க்கு உஜ்ஜீவநஹேதுவாக வடமதுரையில் பிறந்த ஸர்வேஶ்வரனுடைய கல்யாணகுணங்களையே மேவும் துணையாக பற்றும் இதுபோக்கிச் சீரியது ஒன்றுமில்லை. [வீழ்துணையென்றது] - ஆசைப்படும் துணையென்றவாறு.

ப.—அநந்தரம், அநந்யப்ரயோஜநரான அதிகாரிகளுக்கு உஜ்ஜீவநஹேதுவான க்ருஷ்ணனுடைய குணங்களை யஹர்நிஶம் ஸேவித்தநுபவிக்குமதொழிய, இதில்விஞ்சினதொரு வாசியில்லையென்கிறார்.

வாழ்தல் - வாழுகிற, இது - இதுவன்றோ, குணம் - (எல்லார்க்கும்) குணமாவது! கண்டீர் - இதுலோகப்ரஸித்தமன்றோ? அந்தோ! - ஐயோ! (வாழும்ப்ரகாரம் அறிகிறதில்லையே. ஏதென்னில்?) மாயவன் - ஆஶ்சர்யகுணசேஷ்டிதனான ஸர்வேஶ்வரனுடைய, அடி - திருவடிகளை, பரவி - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஸ்தோத்ரம்பண்ணி, போழ்துபோக - காலக்ஷேபம்பண்ணவேணுமென்று, உள்ளகிற்கும் - நினைக்கவல்லவர்களாய், புன்மை - (ப்ரயோஜநாந்தரஸம்பந்தமாகிற) புல்லிமை, இலாதவர்க்கு - இல்லாதவர்களுக்கு, வாழ்-ஸ்வரூபாநுரூபமானவாழ்ச்சிக்கு, துணையா-உபாயஸாதனமைக்காக, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தவன் - வந்துபிறந்த க்ருஷ்ணனுடைய, வண் - ஆஶ்ரிதாநுஸாவ்யமான, புகழே - குணங்களையே, வீழ் - அஹர்நிஶமேவிஷயமான, துணையா - ஸஹாயமாய்க்கொண்டு, போம் - நடக்கிற, இதனில் - இதில், மிக்கது - விஞ்சினது, யாதும் - ஏதேனுமொருவாழ்வும், இல்லை -. வீழ்துணை - விரும்பிய துணையென்றுமாம்.

இ.—எட்டாம்பாட்டில், அவதாரத்துக்கு நிதானத்தைச் சொல்லி அவனையே ரக்ஷகனாகப் பற்றுமதொழிய வேறு விலக்ஷணமாயிருப்பதோராபாஶ்ரயமில்லை என்கிறார்.

[வாழ்தல்கண்டீர் குணமிது] - அவன் குணங்களை அநுஸந்தித்து வாழுமதே கிடீர்கோள் யுக்தம். [அந்தோ] - கரும்புதின்னக் கூலி கொடுப்பாரைப்போலே இவர்களை அபேக்ஷிக்கவேண்டுவதே எனக்கு. [மாயவனித்யாதி] - ஆச்சர்யமான ஸௌசீல்ய ஸீலாதிகளையுடையவனுடைய திருவடிகளை ப்ரீதியாலே அக்ரமமாக ஏத்தி அத்தாலே காலக்ஷேபம் பண்ணவேணுமென்று அத்யவஸிக்கவல்லரான அநந்யப்ரயோஜநர்க்கு. புன்மையில்லாதவர்கள் - சீரியவர்கள். உள்ளகிற்கை - உள்ளவல்லராகை, அத்யவஸிக்கவல்லராகை. [வாழ்துணையா வடமதுரைப் பிறந்தவன்] - கண்ணாலே கண்டநுபவிக்கைக்காக, "ஸஹம்வொவாஹுவொஜாதஃ" என்கிறபடியே துணையாய்வந்து பிறந்தவன். "வரித்ராணாயஸாதூநாம்" என்றிறே அவதாரத்துக்கு ப்ரயோஜநமிருப்பது. [வண்புகழே வீழ்துணையாப் போமிதனில்] - கல்யாணகுணங்களையே ஆசைப்படுந் துணையாகப் பற்றுமிதுபோக்கி. [வீழ்துணை] - ஆசைப்படுந் துணை. "தாம் வீழ்வார்" என்னக்கடவதிறே ஆசாயுக்தரை. [யாதுமில்லை மிக்கதே]- இதிற்காட்டில் மேற்பட்டதொன்றுமில்லை.

ஈடு.—எட்டாம்பாட்டு. அவதாரத்துக்கு நிதாநத்தைச்சொல்லி, அவனையேரக்ஷகனாகப் பற்றுமிதொழிய, வேறுவிலக்ஷணமாயிருப்பதோர் அபாஸ்ரயமில்லையென்கிறார்.

[வாழ்தல்கண்டீர்குணமிது] - அவன் குணங்களை யநுஸந்தித்து வாழுமிதுவே கிடீர்கோள் யுக்தம். [அந்தோ] - கரும்புதின்னக் கூலிகொடுப்பாரைப்போலே, இவர்களை யபேக்ஷிக்கவேண்டுவதே எனக்கு. வாழ்ச்சி உங்களதாயிருக்க, இரந்துதிரிவேன் நானாவதே! [மாயவனித்யாதி]-ஸௌசீல்யஸீலாதிகளால் ஆச்சர்யபூதனாயிருந்துள்ள வஸ்துவினுடைய குணஜிதராய், ப்ரீதியாலே அவன் திருவடிகளை யக்ரமமாகவேத்தி, அத்தாலே காலக்ஷேபம் பண்ணுவதாக அத்யவஸிக்கவல்லரான நன்மையையுடையவர்கள், சீரியவர்கள். அநந்யப்ரயோஜநரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு. * தேரித்தெழுதிவாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போதுபோக்குமவர்கள். "இந்தமாயவனடிபரவுகை சூதுசதுரங்கத்தோபாதி காலக்ஷேபமாக்குகிற புன்மையில்லாதவர்கள்" என்றுபட்டர். [வாழ்துணையித்யாதி] - புன்மையுடையவர்களும் அக்கப்படக் கழித்து அதுவேபோதுபோக்காக நின்றபின்பு, முதலிலே அதுகுடிபுகுராதவனுக்கு ஆஸ்ரிதஸம்ஸ்லேஷமொழிய வேறு

எட்டாம்பாட்டு.—வாழ்தல் இத்யாதி. "வாழ்துணையா" என்றுதொடங்கி, "யாதுமில்லைமிக்கது" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - அவதாரத்துக்கு இத்யாதி.

"வாழ்தல் கண்டீர்குணம்" என்றது அநுவாதம். அவன் குணாநுபவத்தினுடைய ரஸ்யதையைச்சொல்லி, "அந்தோ" என்றதுக்குபாவம் - கரும்புதின்ன இத்யாதி. பலிதம் - வாழ்ச்சி இத்யாதி. போழ்துபோக - காலக்ஷேபம்பண்ணுவதாக, உள்ளகிற்கும் - அநுஸந்திக்கவல்லரான. புன்மையிலாதவர்க்கு - நன்மையுடையவர்க்கென்று பரமார்த்தம். "கிற்கும்" என்றதுக்கர்த்தம் - வல்லரான என்று. உள்ளுகை - நினைக்கை. "சீரியவர்கள்" என்றத்தை விவரிக்கிறார் - அநந்யப்ரயோஜநர் இத்யாதி. ஸப்ரமாணகமாக உக்தவிவரணம் - தேரித்து இத்யாதி. நாலாந்திருவந்தாதி, அறுபத்துமூன்றாம்பாட்டு, "தரித்திருந்தேனாகவே" இத்யாதி. வழிபடுகை - அதுதானே யாத்ரையாகை. தேரித்து - தெரிந்து; அறிந்தென்றபடி. பட்டர் நிர்வாஹத்துக்கு, போழ்துபோக உள்ளகிற்கிறது புன்மை, அதில்லாதவர்களுக்கென்றபடி. அதாவது - போகரூபமாகவன்றிக்கே காலக்ஷேபார்த்தமாக வுள்ளுகிறது. புன்மை - பொல்லாங்கென்றபடி. வாழ்துணையாகைக்கோ இவன்பிறந்ததென்ன - புன்மையுடையவர்களும் இத்யாதி. கழித்து - புன்மைபோகப்பண்ணி.

ப்ரயோஜநமில்லையிறே. அவர்கள் தன் குணங்களையநுபவித்து வாழ்கைக்குத்துணையாக வடமதுரையிலேவந்து அவதரித்தவனுடைய அவதாரப்ரயோஜநம் "பரித்ராணாய ஸாதூநாம்" (பரித்ராணயஸாதூநாம்) என்றிறேயிருப்பது. [வண்புகழித்யாதி] - அவனுடைய கல்யாணகுணங்களையே யாசைப்படுந்துணையாகப்பற்றுமிதுபோக்கி. [வீழ்துணை]- ஆசைப்படுந்துணை. †"தாம்வீழ்வார் தம்வீழப்பெற்றவர்" என்னக்கடவதிறே ஆசாயுக்தரை. [இதனில்] - இதிற்காட்டில். [யாதுமில்லை மிக்கதே] – இதனில் மேலாயிருப்பதொன்றுண்டாய், "இதில்நின்று" என்னவேணுமே; இதுக்கு மேலாயிருப்பதொன்றுமில்லை. (அ)

ஒன்பதாம் பாட்டு.

யாதுமில்லைமிக்கதனில்என்றென்றதுகருதி
காதுசெய்வான்கூதைசெய்து கடைமுறைவாழ்க்கையும்போம்
மாதுகிலின்கொடிக்கொள்மாட வடமதுரைப்பிறந்த
தாதுசேர்தோட்கண்ணனல்லால் இல்லைகண்டீர்சரணே.

ஆ.—(யாதுமில்லை.) - எல்லாவற்றிலும் மேற்பட்ட புருஷார்த்தமன்றோ ஸாம்ஸாரிக துக்கநிவ்ருத்திரூப கைவல்யமென்று அத்தை புருஷார்த்தமென்று பற்றில், காதுபெருக்கவென்றுபுக்கு, பண்டுள்ளத்தையுங் கெடுத்துக் கூதையாக்கினாற்போலே, பண்டுள்ள ஸாம்ஸாரிக ஸுகத்தையும் இழக்குமித்தனை; ஆதலால், ஸ்ரீமதுரையிலே திருவவதாரம்பண்ணுகையாலே புதுக்கணித்த அழகையுடையனான கண்ணனே பரம ப்ராப்யமென்கிறார்.

ஓ.—ஒன்பதாம்பாட்டில், எம்பெருமானையொழிய வேறொன்று ரக்ஷகமுண்டென்று பற்றினவர்கள், பண்டுநின்ற நிலையுங்கெட்டு அநர்த்தப்பட்டுப்போவர்கள்; ஆனபின்பு, இவன்பக்கலிலே ஸரணமில்லையென்கிறார்.

[யாதுமில்லையென்று தொடங்கி] - இதொழிய மற்றொன்று ரக்ஷகம் இல்லையென்றேதேனுமொன்றைச்சொல்லி அத்தை ரக்ஷகமாகக்கொண்டு, காதுபெருக்கவென்றுபுக்கு பண்டுள்ளத்தையுங் கெடுத்துக் கூதையாக்கினாற்போலே பண்டுதாங்கள் வாழ்ந்துவருகிற வாழ்வையும் இழப்பர்கள். [தாதுசேர்தோள் கண்ணன்] - வைஜயந்தீ ப்ரப்ருதி மாலைகளாலே அலங்க்ருதனான க்ருஷ்ணன். "இவற்றைத்தவிர்ந்து கைவல்

இதுவே - ஐகவதநுஜவமே. அது - புன்மை. பப்தார்த்தம் - அவர்கள் இத்யாதி. "ஆஸ்ரித ஸம்ரக்ஷணமே அவதாரத்துக்கு ப்ரயோஜநம்" என்னுமதுக்கு ப்ரமாணம் - அவதாரப்ரயோஜநம் இத்யாதி. "வீழ்" என்று - ஆசையைச்சொல்லுமோவென்ன - தாம் வீழ்வார் இத்யாதி. "தாம் வீழ்வார் தம்வீழப்பெற்றவர்பெற்றாரே - காமத்தின்காழில்கனி" என்றகுறள். நாயகியை முந்துற ஆசைப்பட்டவர்கள் தங்களை அந்நாயகி யாசைப்படப்பெற்றார்களாகில், காமத்தின் கொட்டையில்லாத பலத்தை லபித்தாரென்று இதுக்குப் பொருள். காழ் - கொட்டை. கேவலம் ரஸரூபமான கனியென்றபடி.

(அ)

யத்தை புருஷார்த்தமாகப் பற்றினாலோவென்னில்; ஈஶ்வரஸமாஶ்ரயணத்துக்கு யோக்யமுமாய், ஶப்தாதிவிஷயங்களை அநுபவித்து ஸம்ஸாரத்திலே இருக்குமித்தையும் இழக்குமித்தனையதில் ப்ரயோஜநம்; ஆனபின்பு, தாதுசேர்தோள் கண்ணனல்லதில்லை கண்டீர் சரண் என்கிறார்'' என்றுஞ் சொல்லுவர்.

ப.—அநந்தரம், வேறொன்றை ப்ரயோஜநமாக நினைத்தால் முன்புள்ள க்ஷேமத்தையும் இழக்குமித்தனை. நிரதிஶயபோக்யனான க்ருஷ்ணனையொழிய ப்ராப்யமில்லை என்கிறார்.

அதனில் - அதிற்காட்டில், மிக்கு - மிஞ்சின ப்ரயோஜநம், யாதும்-ஏதேனுமொன்றும், இல்லை-; என்றென்று - என்று பலகாலும், அது - அந்த ஐஶ்வர்யகைவல்யரூபமான ப்ரயோஜநாந்தரத்தை, கருதி - அநுஸந்தித்து, காது செய்வான் - காதுசெய்யப்புக்கு, கூதைசெய்து-(ஆஶ்ரயமுங் குலைந்து) கூதையாய்விடுமாப்போலே, கடைமுறை வாழ்க்கையும் - முன்புபோகிற ஹேயப்ரயோஜநமும், போம் - நசித்துப்போமித்தனை; (ஆனபின்பு), மா - பெரிய, துகிலின் - துகில்களாலுண்டான, கொடி - கொடிகளை, கொள் - உடைய, மாடம் — மாடங்களையுடைத்தாயிருக்கிற, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்த - அவதரித்தவனாய், தாதுசேர் - துளஸீ வைஜயந்த்யாதி மாலாலங்க்ருதமான, தோள் - தோள்களையுடைய, கண்ணன் - க்ருஷ்ணனை, அல்லால்-ஒழிய, சரண் - ப்ராப்யதயா புகலிடமாவது, இல்லை - ஒன்றுமில்லை; கண்டீர் - இது நிரூபகர்க்குக் கண்டுகொள்ளலாம். தாது - புஷ்பகேஸரம்.

இ.—ஒன்பதாம் பாட்டில், இவனையொழிய வேறொன்றை ரக்ஷகமென்று பற்றினவர்கள், பண்டுநின்ற நிலையுங் கெட்டு அநர்த்தப்பட்டுப் போவர்கள்; ஆனபின்பு இவனைப்போக்கி வேறு ஶரணமில்லையென்கிறார்.

[யாதுமில்லை இத்யாதி] - ஈஶ்வரவ்யதிரிக்தமாயிருப்பதொன்றைப் பற்றி "இதொழிய வேறு ரக்ஷகமாயிருப்பதொன்றுமில்லை'' என்று சொல்லி அத்தை ரக்ஷகமாக நினைத்து, 'ஸகிமேஹாத்ருஶ்யதேகஷ்மிக'' என்கிற ப்ரதிபத்தியை அதிலே வேணுமென்று பண்ணியிருக்கை. [காது செய்வான் கூதை செய்து]-காது பெருக்கப்புக்கு பண்டுள்ள யோக்யதையையுங் கெடுத்துக் கூதையாக்கினாற்போலே. [கடைமுறை வாழ்க்கையும்போம்] - தண்ணிய முறையான வாழ்க்கையும் அழியும். ஆபத்தில் அது ரக்ஷகமாகாது; அதின் பக்கலிலே ந்யஸ்தபரனானபோலே தான் செய்து கொள்ளுமத்தையுமிழக்கும். [மாதுகிலின் இத்யாதி]- கம்ஸன் வாழ்கிறவூர்ப்படைவீட்டைக் கொடிகட்ட இவர் அத்தை க்ருஷ்ணனுடைய அவதாரத்துக்கு உடலாக்குகிறார். ஶிஶுபாலன் விவாஹார்த்தமாகச் செய்த சடங்குகளைத் தனக்குடலாக்கிக் கொண்டாற்போலே. [தாதுசேர்தோள் கண்ணனல்லால்] - வைஜயந்தி உள்ளிட்ட தோள்மாலைகளாலே அலங்க்ருதனான க்ருஷ்ணனையொழிய வேறுப்ரயோஜநம்வேண்டாவென்கை. [இல்லை கண்டீர் சரணே] - புறம்பு ரக்ஷகமில்லைகிடீர். அதவா, இப்பாட்டு கைவல்யநிந்தையென்றுமாம். ஆத்மாநுபவஸுகத்திற் காட்டில் மிக்கதொரு புருஷார்த்தமில்லையென்றே புத்தி பண்ணி. [கடைமுறை வாழ்க்கையும்போம்] - ஈஶ்வரஸமாஶ்ரயணத்துக்கு யோக்யமான ஸம்ஸாரத்திலே ஶப்தாதி விஷயங்களையநுபவித்திருக்குமத்தையும்இழக்கும். ஆனபின்பு ஸர்வாயிசனாய் ஸாலக்ஷணனைக்ருஷ்ணனே பரமப்ராப்யன் என்கை.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. இவனை யொழிய வேறே யொன்றை ரக்ஷகமென்று பற்றினவர்கள், பண்டு நின்றநிலையுங்கெட்டு அநர்த்தப்பட்டுப்போவர்கள்; ஆனபின்பு, இவனல்லது சரணமில்லையென்கிறார். அன்றிக்கே, கைவல்யபுருஷார்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம்.

[யாதுமித்யாதி] - ஐகவத்வ்யதிரிக்தமா யிருப்பதோன்றைப்பற்றி, "இதொழிய வேறுரக்ஷகமாயிருப்ப தோன்றுமில்லை" என்று சொல்லி, அத்தை ரக்ஷகமாக நினைத்து. "ஸமர்த்தோத்ருஶ்யதேகஶ்சித்" (ஸமர்த்தோத்ருஶ்யதேகஶ்சித்) என்கிற ப்ரதிபத்தியை அதிலேபண்ணி. [காது செய்வான் கூதைசெய்து] - காதுபெருக்கப்புக்கு, பண்டுள்ளயோக்யதையையுங் கெடுத்துச் கூதையாக்கினாற்போலே. [கடைமுறைவாழ்க்கையும்போம்] - தண்ணிதான முறைமையாலே வாழக்கடவவாழ்வுஉண்டு - ஸம்ஸாரத்திலே பசலுங் குட்டியுமாய் அளாய்குளாயாய்ப் போருமது:அதுவுங்கூடக் கெடுமித்தனை. ஆபத்தில்அது ரக்ஷகமாக மாட்டாது; அதின்பக்கலிலே ந்யஸ்தபரனாயிருக்கையாலே, தான்செய்துகொள்ளுமத்தனையுமிழக்கும். [மாதுகிலித்யாதி]-கம்ஸன் வாழ்கிறனாய்,அலங்காரமாகக்கட்டினகொடியை க்ருஷ்ணனுடைய அவதாரத்துக்கென்றே நினைத்திருக்கிறராயிற்றுஇவர். சிசுபாலன், பாணிக்ரஹணத்துக்கு உடலாகச்செய்த சடங்குகளடையத் தனக்கு உடலாக நினைத்துக்கைப் பிடித்தானிறே. [தாதித்யாதி] - வைஜயந்திதொடக்கமான மாலைகளாலே யலங்க்ருதமான திருத்தோள்களையுடையவன். வேறொருப்ரயோஜநந்தான் வேண்டா. [அல்லாலில்லைகண்டீர்சரணே] - அவனை யொழிய வேறு ரக்ஷகமாகவல்ல தொருவஸ்து இல்லைகிடிகோள். கைவல்யபரமானபோது. [யாதுமித்யாதி]-"இவ்வாத்மாநுபவஸுகத்துக்கு மேற்பட்டிருப்பதோன்றில்லை" என்று, அவ்வருகே பகவதநுபவஸுகமுண்டேயாகிலும் அத்தையே

ஒன்பதாம்பாட்டு.—யாதுமில்லை இத்யாதி. "யாதுமில்லை மிக்கதனில்" என்றுதொடங்கி, "கடைமுறைவாழ்க்கையும்போம் - கண்ணனல்லாலில்லைகண்டீர்சரண்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - இவனையொழிய இத்யாதி. இந்தபதங்களைக் கடாக்ஷித்து ஆத்மாநுபவத்தைச் சொல்லுகிறதென்று யோஜநாந்தரம் - அன்றிக்கே இத்யாதி.

"இதனில் - மிக்கது - யாதுமில்லை என்றென்றதுகருதி" என்றந்வயம். பகவத்பரரா யிருப்பார், "அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திகளுக்கு ஈஶ்வரனையொழியவேறொரு சக்திமானில்லை" என்று புத்திபண்ணுமத்தை, இத் தேவதைபக்கலிலே இவர்கள்புத்திபண்ணுவர்களென்கிறார் - ஸமர்த்த இத்யாதி. "நஸம்ஶயஸ்ஸோஹரேவிஷ்ணுவிநிவ்ருத்தௌ ந ஸமர்த்தோத்ருஶ்யதேகஶ்சித்தம்விநாவாராஹ்யேஷாத்ருஶ்யே". அதுகருதி - வ்யதிரிக்ததேவதையை நினைத்து. கூதை - மூளி. கடை - தண்ணிமை. பசலும் குட்டியுமாய் - குஞ்சும் குழந்தையுமாய். அளாய்குளாயென்று - ஸம்ப்ரம வ்யாபாரம். ஸம்ஸாரத்தில் வாழுகிறது கேடாம் ப்ரகாரமென்? என்ன அருளிச்செய்கிறார்-ஆபத்தில் இத்யாதி வாக்யத்வயத்தாலே. அது - தேவதாந்தரம். "மாதுகிலின் கொடிக்கொள்மாட வடமதுரைப்பிறந்த - பெரிய துகிலையுடைத்தான கொடிகளையுடைய மாடங்களையுடைத்தாயிருக்கிற வடமதுரையிலே யவதரித்தவென்று பதார்த்தம். துகில் - ஆடை. கொடிகளா லுண்டான வலங்காரத்தைச் சொல்லி, அநந்தரம், "பிறந்த" என்றதுக்கு பாவம் - கம்ஸன் இத்யாதி. இப்படி பிறர்க்காகச்செய்தது அவனுக்கானவிடமுண்டோவென்ன - சிசுபாலன் இத்யாதி. சடங்கு - க்ரியை. "தாது" என்று - உள்ளிதழாய், மாலையைலக்ஷிக்கிறது. பதார்த்தம்-வைஜயந்தி இத்யாதி. இத்தால் பலிதம் - வேறொரு இத்யாதி. "கண்ணனல்லால் - சரண் - இல்லைகண்டீர்" என்றந்வயித்தர்த்தம்-அவனையொழிய இத்யாதி. "அதுகருதி" என்றதுக் கர்த்தம் - அவ்வருகே இத்யாதி. "அதுகருதி" என்றது - ஆத்மாநுபவத்தை புத்திபண்ணியென்ற

புத்திபண்ணி, காதுபெருக்கப்புக்கவன் அத்தைப் பலகாலும் அறுத்துவைத்து முன்புத்தை யோக்யதையுங்கூடக் கெடுக்குமாபோலே, ஹரிவத் ஸமாஶ்ரயணத்துக்கு யோக்யமான ஸம்ஸாரத்திலே ஶப்தாதிவிஷயங்களை யநுபவித்திருக்கும் அத்தையும் இழக்கும்; ஆன பின்பு, ஸர்வாயிகளை க்ருஷ்ணனே பரமப்ராப்ய னென்கை. (௯)

பத்தாம் பாட்டு.

கண்ணனல்லாலில்லைகண்டீர் சரணதுநிற்கவந்து
மண்ணின்பாரம்நீக்குதற்கே வடமதுரைப்பிறந்தான்
திண்ணமாநம்முடைமையுண்டேல் அவனடிசேர்த்துய்ம்மினோ
எண்ணவேண்டாநம்மதாதும் அவனன்றிமற்றில்லையே.

ஆ.—(கண்ணனல்லால்) - க்ருஷ்ணனல்லது சரணில்லையென்றிங்ஙனே தன்னுடைய ரக்ஷகத்வத்தை நிலைநிறுத்துகைக்காக ஸ்ரீமதுரையிலேவந்துபிறந்தருளி, பூபாராவதரணம்பண்ணி, ஜகத்தைரக்ஷித்தருளினான்; ஆதலால், அவனேரக்ஷகன்; ஆன பின்பு, உங்களுக்காக வபிமாநிக்கப்படுகிற வஸ்துக்களையும் உங்களையும் அவன் திருவடிகளிலே மோக்ஷத்திலேவ ஸமர்ப்பியுங்கோள்; உங்களுக்காக அபிமாநிக்கப்படுகிறவையும் நீங்களும் அவனுக்கே மோக்ஷம், இதில்ஒருஸம்ஶயமில்லையென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், தானேயெல்லார்க்கும் சரணமென்னும்இவ்வர்த்தத்தை ப்ரதிஷ்டிக்கைக்காகவந்து திருவவதாரம் பண்ணியருளின க்ருஷ்ணன் திருவடிகளை ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

[கண்ணனென்று தொடங்கி] - க்ருஷ்ணனல்லது ஶரண் இல்லை என்னும் இவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கைக்காகவும் அதுக்குஉறுப்பாகஸம்ஹாரத்தைப்போக்கியருளுகைக்காகவும் ஸ்ரீமதுரையிலேவந்து திருவவதாரம் பண்ணினான். உங்களுடைய ஆத்மாத்மீயங்களெல்லாம் அவன்திருவடிகளிலே மோக்ஷத்திலேவ த்ருடமாக ஸமர்ப்பியுங்கோள். [எண்ணவேண்டா நம்மதாதுமவனன்றி மற்றில்லையே] - "இப்படியேயோ அன்றோ" என்று விசாரிக்கவேண்டா. அத்தனையுமன்ற. உங்களுக்கு ஸாத்யமானவையெல்லாம் ஸாதித்துத்தருவான் அவனே. உங்களினவாகநீங்கள்அபிமானிக்கிருக்கிறவையெல்லாம்அவனினவே; அதிலொரு ஸந்தேஹமில்லை யென்றுமாம்.

ப.—அநந்தரம், தானேப்ராப்யமும் ப்ராபகமுமென்னுமிடம் நிலைநிறுத்துகைக்காக அவதரித்து பூபாரநிரஸநம்பண்ணின க்ருஷ்ணன் திருவடிகளிலே, நீங்கள் ப்ராப்ய ப்ராபகமென்று நினைத்திருக்கிறவற்றையெல்லாம் த்ருடமாக ஸமர்ப்பியுங்கோளென்கிறார்.

படி. 'அத்தையுமிழக்கும்' என்ற ஶப்தத்தாலே ஹமவதநுஹவத்தை ஸூசிக்கிறது. இந்தபக்ஷத்தில், "சரண்" என்றது - ப்ராப்யமென்றபடி. 'அதனில் - மிக்கது - யாதுமில்லை - என்றென்றது கருதி' யென்றுதொடங்கி, 'வாழ்க்கையும்போம்' ஆனபின்பு, 'மாதுகிலின்' இத்யாதி, 'கண்ணனல்லாலில்லைகண்டீர் சரண்' என்றந்வயம். (௯)

கண்ணன் - க்ருஷ்ணன், அல்லால் - அல்லது, சரண் - வேறுப்ராப்யப்ராபகங்கள், இல்லைகண்டீர் - இல்லைகிடீர்கோள்; அது - அந்த தன்னுடைய ப்ராப்யப்ராபகபாவம், நிற்க - லோகத்திலே நிற்கைக்காகவும், மண்ணின்பாரம் - தத்விரோதிகளான ஆஸுரப்ரக்ருதிகளாகிற பூபாரத்தை, நீக்குதற்கு - போக்குகைக்காகவும், வந்து - நாகபர்யங்கத்தைவிட்டுவந்து, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தான் - அவதரித்தான், (ஆனபின்பு), நும் - உங்களுக்காகநினைத்திருக்கிற, உடைமை - பதார்த்தம், உண்டேல் - உண்டாமாகில், அவனடி - அவன்திருவடிகளிலே, திண்ணமா - த்ருடமாக, சேர்த்துய்ம்மினோ - ஸமர்ப்பியுங்கோள்; (இது), எண்ண வேண்டா - விசாரிக்கவேண்டா; நும்மது - உங்களுடைய, ஆதும் - ப்ராப்ய ப்ராபகரூபமான ஸமஸ்தபதார்த்தங்களும், அவனன்றி - "மாதா பிதா ப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:" என்று ஸர்வவித பந்துவானவனையொழிய, மற்று - வேறு ஸ்வநிஷ்டமாயிருப்பதொரு வஸ்து, இல்லை - இல்லை.

இ.—பத்தாம்பாட்டில், தானே சரணமென்னும் இவ்வர்த்தத்தை ப்ரதிஷ்டிக்கைக்காக வந்தவதரித்த க்ருஷ்ணன் திருவடிகளை ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

[கண்ணனல்லாலித்யாதி] - க்ருஷ்ணனையொழிய வேறு ஶரணமாவாரில்லையென்னுமிவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கைக்காகவும் அதுக்குஉறுப்பாக பூபாரத்தைப்போக்குகைக்காகவும் திருவவதாரம்பண்ணினான்; உங்களுடைய ஆத்மாத்மீயங்களை, ஶேஷியாய் ஸுலபனானவன் திருவடிகளிலே ஶேஷத்வேந த்ருடமாக ஸமர்ப்பியுங்கோள். உண்டேலென்கிறது - ஸ்வபக்ஷத்தாலில்லை; அவர்களுடைய அந்யதாப்ரதிபத்தியாலே வந்தன உண்டாகிலென்கை. எண்ணவேண்டா - "அவனதோ நம்மதோ" என்று விசாரிக்கவேண்டா; உங்களோடு உங்களுடைமையோடு வாசியற அவனுக்கே ஶேஷம். அதவா, உங்களுக்கு ஸாத்யமானவையெல்லாம் ஸாதித்துத்தருவான் அவனொழிய வேறில்லை. ஸமிதை பாதி ஸாவித்ரி பாதியாய்உங்கள் தலையிலுஞ் சிறிது கிடக்கிறதன்று. அவனே நிரபேக்ஷோபாயமென்றுமாம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. தான் ஶரணமென்னும் அர்த்தத்தை ப்ரதிஷ்டிக்கைக்காக அவதரித்த க்ருஷ்ணன் திருவடிகளை யாஶ்ரயியுங்கோளென்கிறார்.

[கண்ணனித்யாதி] - க்ருஷ்ணனையொழிய வேறுஶரணமாவாரில்லை என்னும் இவ்வர்த்தம் நிலைநிற்கைக்காக, இவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கைக்காகவும், அதுக்கு உறுப்பாக பூபாரத்தைப்போக்குகைக்காகவும் திருவவதாரம்பண்ணினான்; ஆனபின்பு, நீங்களும், உங்களுடைமையென்று நினைத்திருந்தனவுண்டாகில் கடுகஅவன்திருவடிகளிலே ஶேஷத்வேந த்ருடமாக ஸமர்ப்பியுங்கோள்! உண்டேலென்றது - ஸ்வபக்ஷத்தா

---

*பத்தாம்பாட்டு.—**கண்ணன் இத்யாதி**. "கண்ணனல்லாலில்லைகண்டீர் சரணது நிற்க வந்து-வடமதுரைப்பிறந்தான் - அவனடிசேர்த்துய்ம்மினோ" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை-* **தான்சரணம்** *இத்யாதி.*

"அது" என்றதுக்குப்பொருள் - **இவ்வர்த்தம்** *என்றது. "மண்ணின்பாரம் நீக்குதற்கு" என்றிருக்க, "சரணதுநிற்க" என்கிறமாத்ரத்தைச் சொல்லுவானென்னென்ன -* **இவ்வர்த்தத்தை** *இத்யாதி. இவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கை ப்ரதாநப்ரயோஜநம், பூபாரநிரஸநமே ததுபயுக்தமென்றபடி. "நீக்குதற்கே" என்கிற ஏவகாரம் நிரர்த்தகாவ்யயமாதல்; "அதுநிற்க" என்கிறவிடத்திலே கூட்டி, அதுநிற்கவேயென்னுதல்.* **திண்ணமா** *- த்ருடமாக. "உண்டேல்" என்கிற யதிஶப்தார்த்தம் -* **உண்டேல்** *இத்யாதி. நும்மதாதும் - உங்களுடைய* **ஆத்மாத்மீயங்களெல்லாம்**, *அவனன்றி -*

லில்லை ; அவர்களுடைய அஜ்ஞாநத்தாலுண்டான ப்ரதிபத்தியாலேவந்தன வுண்டாகிலேன்கை. [எண்ணவேண்டா] - "இதுதான் அவனதோ, நம்மதோ" என்று விசாரிக்கவேண்டா ; உங்களோடு உங்களுடைமையோடு வாசியற அவனுக்கேசேஷம். [மற்றில்லையே] - வேறில்லை. அன்றிக்கே, உங்களுடையஹ்ருதத்தில் கர்த்தவ்யாம்சமடைய உங்கள்தலையிலே கிடக்கிறதல்ல ; எல்லாம் அவன்பக்கலிலே கிடக்கிறதென்னுதல். [மற்றில்லை] - ஃபலஸித்திக்கீடான ஸாதநமும் அவனை யொழியவில்லை. ஸமிதைபாதி, ஸாவித்ரிபாதியாக நீங்களும் ஒருதலை கூட்டப்படவேண்டுவதில்லை. (கo)

பதினோராம் பாட்டு.

ஆதுமில்லைமற்றவனில் என்றதுவேதுணிந்து
தாதுசேர்தோள் கண்ணனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
தீதிலாதவொண்தமிழ்கள் இவையாயிரத்துளிப்பத்தும்
ஓதவல்லபிராக்கள்நம்மையாளுடையார்கள்பண்டே.

ஆ.—(ஆதுமில்லை.) - ஆத்மாத்மீயங்களெல்லாம் அவனுக்கேசேஷமென்று துணிந்திருந்த சடகோபன், தாதுசேர்தோள்கண்ணனைச்சொன்ன, நிரவத்யமாய் கல்யாணமான இத்திருவாய்மொழியை ஓதவல்ல மஹாத்மாக்கள், நமக்குப்பண்டே ஸ்வாமிகளென்கிறார்.

ஒ —நிருக்தத்தில் "சுஶ்ரூஷுரேவயஜுஷே" என்று தொடங்கி எம்பெருமான் அருளிச்செய்தாற்போலே, இத்திருவாய்மொழி அப்யஸிக்கவல்லார் எனக்கு ப்ரியகரரென்கிறார்.

[ஆதுமில்லைமற்றவனிலென்றதுவே துணிந்து] - அவனையொழிய வேறு ப்ராப்யப்ராபகங்கள் இல்லையென்று அத்யவஸித்து. [தாது சேரென்று தொடங்கி] - ஆழ்வார் அருளிச்செய்த நிர்தோஷமாய் ஸகலகுணமான ஆயிரம் திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி அப்யஸிக்க வல்லவர்கள் பண்டேநமக்குஸ்வாமிகள்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குஃபலமாக, இதுகற்றவர்களைப் பற்றவுண்டான ஸ்வசேஷத்வத்தை யருளிச்செய்கிறார்.

அவனில் - அவனையொழிய, மற்று-வேறு, ஆதும் - ப்ராப்யப்ராபகமாயிருப்பதொருவஸ்துவும், இல்லை-, என்றதுவே - என்னுமதத்தையே, துணிந்து - அத்யவ

அவனுக்குசேஷமன்றி, மற்றில்லை - ஸ்வநிஷ்டமாயிருப்பதில்லை; த்விதீயார்த்தத்துக்கு, நும்மதாதும் - உங்களுடையஸர்வபரங்களும், அவனன்றி - அவன்பக்கலொழிய, மற்றில்லை - உங்களிடத்திலில்லை யென்றபடி. உபாயாந்தரங்களும் ஸாதநமாகாநிற்க, "மற்றில்லை" என்பானென்னென்ன - ஃபலஸித்திக்கு இத்யாதி. "அவனையன்றிமற்றில்லை" என்றப், ஏவகாரார்த்தம் - ஸமிதை இத்யாதி. ஆவணியாவட்டத்துக்கு ஐந்நூறுஸமித்தும் ஐந்நூறுகாயத்ரியும் பண்ணவொகாதாற்போலே, அவனோடு நீங்களும் ஒருகூட்டுப்பட வொண்ணாதென்றபடி. கண்ணனல்லாலென்று தொடங்கி, நீங்குதற்கே - வந்து - வடமதுரைப்பிறந்தான், நும்முடைமையுண்டேல் - திண்ணமா - அவனடிசேர்த்துய்ம்மினோ ; எண்ணவேண்டா இத்யாதப்யாந்வயக். (க)

ஸித்து, தாதுசேர் - மாலாலங்க்ருதமான, தோள் - தோள்களையுடையனுகையாலே நிரதிஶயபோக்யனாய், கண்ணனை - ஆஶ்ரிதஸுலபனான க்ருஷ்ணனை, குருகூர்ச்சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், தீது - ஶப்தார்த்தங்களிற்குற்றம், இலாத - அற்று, ஒண் - ஸஹ்ருதயகுணமாய், தமிழ்கள் - த்ராமிடரூபமான, இவை ஆயிரத்துள் -, இப்பத்தும் - இப்பத்தையும், ஓதவல்ல - அப்யஸிக்கவல்ல, பிராக்கள் - உபகாரகரானவர்கள், பண்டே - இந்த அப்யாஸார்த்தமான ஶரீரபரிக்ரஹம் பண்ணினகாலமே தொடங்கி, நம்மை - நமக்கு, ஆளுடையார்கள் - நாயகர். இது கலித்துறை. இது சீர்வகையொழித்த "கலிவிருத்தம்" என்பாருமுளர்.

இ.—நிகமத்தில் "அத்யேஷ்யதே ச ய இமம்" என்று தொடங்கி அவன் அருளிச்செய்தாற்போலே இத்திருவாய்மொழியை அப்யஸிப்பார் எனக்கு ப்ரியகரரென்கிறார்.

[ஆதுமில்லை மற்றவனிலென்றதுவே துணிந்து] - அவனையொழிய வேறுப்ராப்ய ப்ராபகங்களில்லையென்று அத்யவஸித்து. [தாதுசேர் தோள் கண்ணனை] - இவர்க்குஇவ்வத்யவஸாயத்தைப் பிறப்பித்தாரென்னில்?—தோளுந் தோள்மாலையுமான அழகைக் காட்டியாயிற்று இவர்க்குஇவ்வத்யவஸாயத்தைப் பிறப்பித்தது. [தீதிலாதவொண்தமிழ்கள்] - க்ரந்தரப்ரஸ்தாவமின்றி யிருக்கையும் ஸ்வார்த்தங்களைத் தானே வெளியிடவற்றாகையும். நிர்தோஷமாய் ஸகுணமானவை யென்றுமாம். ஓதவல்லபிராக்கள் - இப்பத்தை அப்யஸிக்கவல்ல உபகாரகர். ஸம்ஸாரத்தின் தண்மையும், ஈஶ்வரனே ப்ராப்யப்ராபகங்களென்றுமிறே யிதிற் சொல்லிற்று. இத்தை அப்யஸித்துநல்வழி போமிதுவேயிறே இவர்க்கு உபகாரகராகையாவது. [நம்மையாளுடையார்கள் பண்டே] - இத்தை அப்யஸிக்கைக்கு ஹேதுவான ஶரீரபரிக்ரஹம்பண்ணினகாலமே பிடித்து நாயகரென்கிறார்.

ஈடு.—பதினோராம் பாட்டு. நிகமத்தில், "அத்யேஷ்யதே ச ய இமம்" (அத்யேஷ்யதேசயஇமம்) என்று தொடங்கி அவனருளிச்செய்தாற்போலே, இத்திருவாய்மொழி யப்யஸிப்பார் எனக்கு ப்ரியகரரேன்கிறார்.

[ஆதுமில்லைமற்றவனிலென்றதுவேதுணிந்து] — அவனையொழிய வேறுப்ராப்ய ப்ராபகங்களில்லை யென்றத்யவஸித்து. இவர்க்குஇப்படி இந்த வ்யவஸாயத்தைக் கொடுத்

நிகமம் - ஆதுமில்லை இத்யாதி. "ஓதவல்லபிராக்கள் நம்மையாளுடையார்கள் பண்டே" என்கிறபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - அத்யேஷ்யத இத்யாதி. "அத்யேஷ்யதே ச ய இமம் தர்ம்யம் ஸம்வாதமாவயோ: । ஜ்ஞாநயஜ்ஞேந தேநாஹமிஷ்டஸ்ஸ்யாமிதி மே மதி:" இதி கீதாஸ்வஷ்டாதஶே. "நம்மையாளுடையார்கள்" என்னுநிற்க, "ப்ரியகரர்" என்பானென்னென்னில்?—அவர் ஸ்வஸ்வரூபத்துக்கீடாக அருளிச்செய்தாலும், வஸ்துஸ்திதியா ஸ்வப்ரவ்ருத்த்யாதிகர்த்தாக்கள் தமக்கு ப்ரியவிஷயமென்னலாயிறே யிருப்பதாகையாலே இப்படியருளிச்செய்யக் குறையில்லை யென்றுகருத்து.

"அவனில் - மற்று - ஆதுமில்லை - என்றதுவே துணிந்து" என்றந்வயிப்பது. அவனையொழிய வேறேதுமில்லையென்கிறத்தையே யத்யவஸித்தென்று ஶப்தார்த்தம். "சதுரமென்று" என்கிறபாட்டாலே, "அவனையொழிந்தவிஷயங்கள் அபோக்யங்கள்" என்கையாலே - அவனே போக்யனென்றும், "மற்றொன்றில்லை" என்கிறபாட்டிலே, உபாயஸௌகர்யத்தைச்சொல்லுகையாலே - அவனேயுபாயமென்றும் ஸித்தித்ததிறே; அத்தையுட்கொண்டு 'வேறுப்ராப்ய ப்ராபகங்க ளில்லையென்றத்யவஸித்து' என்கிறார். மேலுக்கவதாரிகை - இவர்க்கு இத்யாதி.

தார்ஆர்? என்றால்,—வேறுண்டோ? அவனுடையதோளும் தோள்மாலையுமன்றோ? [தாது இத்யாதி]-அவனுடைய ஸௌந்தர்யமாயிற்று, இவரை இப்படி துணியப்பண்ணிற்று. [தீதிலாத] - கவாந்தரப்ரஸ்தாவமின்றிக்கேயிருக்கை. [ஒண்தமிழ்கள்] - உள்ளுண்டான அர்த்தத்தையடைய வெளியிட்டுக்கொடுக்கவற்றாயிருக்கை. நிர்த்தோஷமாய், ஸஹகுணமானவையென்றுமாம். [ஓதவல்லபிராக்கள்] - இப்பத்தை யப்யஸிக்கவல்லஉபகாரகர். ஸம்ஸாரத்தின்தண்மையும், ஈஶ்வரனுடைய ப்ராப்யப்ராபகபாவமுமிறே இத்திருவாய்மொழியிற் சொல்லிற்று; இத்தை யப்யஸிக்கவே, தீயவழியைத்தவிர்ந்து நல்வழிபோகத் தொடங்குவர்கள். இதுக்குமேற்பட இவர்க்கு உபகாரமில்லையிறே இவர்கள்பண்ணுவது. [நம்மையாளுடையார்கள்பண்டே] - ஒருஜந்மத்திலே யித்தையப்யஸிக்கைக்கீடான அதிகாரத்தை யுடையராயிருப்பாராகில், அவர்கள் பண்டேநமக்கு நாதஸ்தர். "அத்யேஷ்யதே" (அத்யேஷ்யதே) என்கிறபடியே, இத்தையப்யஸிக்கைக்கீடான யோக்யதையுள்ள ஜந்மந்தொடங்கி நமக்கு நாதர். (கக)

இத்தால் ஃபலிதம் - அவனுடைய இத்யாதி. ப்ரபந்தத்துக்குத் தீதேதென்ன - கதாந்தர இத்யாதி. த்விதீயார்த்தத்துக்கு, லக்ஷணஹாநியில்லாதவென்றபடி. ஒண்மை - அழகு. அழகேதென்ன - உள்ளுண்டான இத்யாதி. நிர்த்தோஷமாயென்றது - லக்ஷணஹாநியாகிற தோஷமின்றிக்கேயென்றபடி. இத்தையப்யஸித்தவர்கள் இவர்க்குச்செய்த உபகாரமேதென்ன - ஸம்ஸாரத்தின் இத்யாதி. "பண்டே" என்றதுக்கு - பூர்வஜந்மமேதொடங்கி நமக்கு நாதஸ்தரென்று விவக்ஷித்து, அன்றே தொடங்கி இவர்கள் தமக்கு நாதஸ்தரென்கைக்கு ஹேது அருளிச்செய்கிறார் - ஒரு ஜந்மத்திலே இத்யாதி. உக்தார்த்தத்தை ப்ரமாணமுகத்தாலே ஸ்திரீகரிக்கிறார் - அத்யேஷ்யத இத்யாதி. அதாவது - ய: - ஆவயோ: - இமம் ஸம்வாதம் - அத்யேஷ்யதே - அத்யயநம் பண்ணக்கடவனென்று பவிஷ்யதர்த்தமாகச் சொன்னாற்போலே, "பண்டே-நம்மையாளுடையார்கள்" என்றதுமென்றபடி. "பண்டே" என்றது - யோக்யதையுள்ள ஜந்மந்தொடங்கியென்றபடி. "அதீதே" என்னாதே, "அத்யேஷ்யதே" என்கையாலே - யோக்யதையுள்ள வன்றேதொடங்கி எனக்கு ப்ரியகரரென்று தோற்றுகிறது" என்றருளிச்செய்வர். ஆதுமில்லை இத்யாரப்ய, க்ரமேணாந்வய:. "தாது" என்று - உள்ளிதழாய் மாலையைலக்ஷித்து, மாலையோடேசேர்ந்த தோளையுடைய க்ருஷ்ணனை யென்று ஸப்தார்த்தம். (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— ஸ்வேச்சோபகாரநவமே ஶதகே ச ஶௌரி ஸ்வத்ருஷ்டா தாநஸவஸந்தி ஸஞ்ஜகே ந | நிஶ்சித்ய ஸர்வபுவி யஸ்ய தயா ஸகீர்ஶவ ஸத்வம் ஸ்புணகே திவரோவதே ஶ்ரு॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— ஸ்வஸ்யாஸக்திக்ருத்ஸ்நே ஸ்வஸ்திஜநநாநேஜ்ஜாத்ய நாஶாயஹேதோ ஜாதத்வாத் தாஸ்த்ரஸ்யாம் வாஸியோ ஸ்வஸ்ரஜ்ய தாயாந்வயாத்யை: | ஸத்யோ: க்ருக்ஷஸ்ய வாஸ்யாஶ்ரயண ஸுலபநா நாஸஹாய: வாஸே ப்ராப்ரக்ஷா ஸாஶ்ருத் ஸஹாநஹ விநஜ திஹிதம் காரிஸம் நவ ஸ்ஹா ஷே॥

திருவாய்மொழி நூற்றந்தாதி }

கொண்டபெண்டிர்தாம்முதலாச்சுற்றமுற்றூர்கன்மத்தால்
அண்டினவரென்றேயவரைவிட்டு - தொண்டருடன்
சேர்க்குந்திருமாலைச்சேருமென்றான் ஆர்க்கும்இதம்
பார்க்கும்புகழ்மாறன்பண்டு.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானார் திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்.

இரண்டாந்திருவாய்மொழி--பண்டை நாள் - ப்ரவேசங்கள்.

ஆ.—(பண்டைநாளாலே) - இப்படி எம்பெருமானுடைய உறவுடைமையை யநுஸந்தித்து, "இவ்வுறவுடையனான அவனோடே கலந்து பரிமாறவேணும்" என்று மநோரதித்துக்கொண்டு திருப்புளிங்குடியிலே போய்ப்புக்கு, அவ்விடத்தில், தன் திறத்து ஸாமாந்யகடாக்ஷமல்லது வேறொரு விசேஷகடாக்ஷம் பண்ணியருளக்காணாமை யாலே சால இன்னாதாராய், "என்னை உன் அழகிய திருக்கண்களாலே நோக்கியருள வேணும்: திருவடிகளைத் தலையிலே வைத்தருளவேணும்: திருப்பள்ளியுணர்ந்து பிராட்டியோடேகூட இருந்தருளவேணும்: எழுந்திருந்து என்னெதிரே வந்து அருளவேணும்" என்று இப்பாட்டுகளிலே தம்முடைய மநோரதங்களை யடைய அபேக்ஷிக்கிறார்.

ஒ.—இரண்டாம் திருவாய்மொழியில், கீழ்த் திருவாய்மொழியிலே அவனுடைய நிருபாதிகஸம்பந்தத்தையறிவித்த ஆழ்வார் இப்படி பரமபந்துவானவன் கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே, அவனோடே யெல்லாப்பரிமாற்றமும் பரிமாறவேணுமென்று ஆசைப்பட்டுச் சென்றபடி பெருமைபாலே விஷண்ணராய்த் தம்பக்கலிலே விசேஷகடாக்ஷம்பண்ணாதிருந்ததுக்குமேலே ஒரு சேஷ்டைகள் பண்ணாதே ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளுகையாலே "திருமேனியலசுகிறது" என்று அதிசீதருமாய் "என்னை உன்னழகிய திருக்கண்களாலே நோக்கியருளவேணும்: திருவடிகளைத் தலையிலே வைத்தருளவேணும்: திருப்பள்ளியுணர்ந்து பிராட்டியோடேகூட விருந்தருளவேணும்: எழுந்திருந்துஎன்னெதிரே வந்தருளவேணும்" என்று தொடங்கி தம்முடைய மநோரதங்களையடைய அபேக்ஷிக்கிறார்.

ப.—இரண்டாந்திருவாய்மொழியில், கீழே, நிருபாதிகபந்துவான ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபதயா ப்ராப்யதையை யருளிச்செய்து, அவன்கண்வளர்ந்தருளில் கைங்கர்யம்பண்ணுகையை மநோரதித்து, கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியானவனுடைய புண்டரீகாக்ஷத்வத்தையும், அநுரூபஸம்பந்தத்தையும், லக்ஷ்மீஸஹாயத்வத்தையும், ஔதார்யாகாரத்தையையும், மந்தஸ்மிதஸ்பாஸத்தையையும், ஆச்ரிதார்த்தமான வாஹநாயுதவத்தையையும், அஸாதாரண பரிகரயோகத்தையும், அகலலோக வந்த்யத்வத்தையும், அதிசயித ஸௌகுமார்யத்தையும், ஸ்ரீபூமி ஸேவ்யத்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம் ப்ரகாரவிசிஷ்டனான நீ, உனக்கு அஸாதாரண சேஷபூதராய்ப்போந்த எங்களுக்கு க்ருபைபண்ணி பூர்ணகடாக்ஷம்பண்ணவும், திருவடிகளையெடுத்துத் தலையிலேவைக்கவும் அங்கீகரிக்கும்போது, பிராட்டியோடேகூட எழுந்தருளியிருந்து அங்கீகரிக்கவும், ஆசாநுரூபமாக நடந்தெழுந்தருளிவரவும், முகமும் முறுவலுமாய்க்கொண்டு என் முன்னே நிற்கவும். நிற்கும்போது பெரியதிருவடியை மேற்கொண்டு திவ்யாயுதங்களையுமேந்திக்கொண்டு வரவும், அஸாதாரண பரிகரத்தோடேவந்து என்முன்னே எழுந்தருளிவந்திருக்கவும், ஸர்வலோகங்களுங்கண்டு வாழும்படி எழுந்தருளியிருக்கவும், இந்த ஸுகுமாரமானவடிவை நான் அநுபவிக்கும்படிபண்ணவும், நாய்ச்சிமாரை அடிமை கொண்டருளுகிறாப்போலே உன்திருவடிகளிலே யடிமைகொண்டருளவும் வேணு

மென்று, தம்முடைய மநோரதபரம்பரைகளை, திருப்புளிங்குடியிலே கிடந்தருளுகிற ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே ப்ரார்த்தித்தருளுகிறார்.

இ.—இரண்டாம் திருவாய்மொழியில் கீழ்த்திருவாய்மொழியிலே "அல்லாதாரடங்கலும் ஸோபாதிகபந்துக்கள்: அவனே நிருபாதிகபந்து" என்கிற அர்த்தத்தை அநுஸந்தித்து அதுக்கநுகுணமான பரிமாற்றத்துக்காக, பரமபந்துவானவன் கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே அவனோடேஎல்லாப்பரிமாற்றத்தையும் ஆசைப்பட்டுச் சென்றபடி பெறாமையாலே விஷண்ணராய், அதுக்குமேலே ஒரு சேஷ்டைகள் பண்ணாதே ஏகரூபமாகக்கண்வளர்ந்தருளுகைபாலே திருமேனியலைகிறதென்று அத்தலையிலே நோவைக்குறித்து அதிஶங்கருமாய், "என்னார்த்தியுந் தீர்க்கிறிலன், தன் ஆர்த்தியுந் தீர்க்கிறிலன்" என்று வெறுக்கிறார். ஆராவமுதில் "என்னார்த்தி தீர்க்கிறிலன்" என்று வெறுத்தார். இரண்டையுங்குறித்து வெறுக்கிறாரிதில். "கோடியார் மாடக்கோளூர்" என்றதுவே தலையெடுத்து தம்மாற்றாமையெல்லாம் தோற்றும்படி, "என்னார்த்தி தீரக்குளிர நோக்கவேணும்: அநுகூலஜநஸந்நத்தாலே அகவாயில் ஸந்தோஷம்தோற்ற விக்ருதனாய்ப் பண்ணும் ஸ்மிதத்தை நான் காணப்பெறவேணும்; பிராட்டியும் தேவருமாயிருக்கிற இச்சேர்த்தியைக்காட்டியருளவேணும்; திருவடிகளை என்தலையிலேவைத்தருளவேணும்; நான்வந்து கிட்டினஇத்தால் வந்த ப்ரீதிதோற்ற எழுந்திருந்து என்னோடேவரவேணும்" என்றுகொண்டு தம்முடைய மநோரதங்களையுடைய அபேக்ஷிக்கிறார். ப்ராப்தியை அநுபவித்தார் கீழ்; ப்ராப்திபலத்தை அபேக்ஷிக்கிறார் இதில்.

ஈடு.—கீழ்த்திருவாய்மொழியிலே - "அவனையொழிந்தாரடங்கலும் ஸோபாதிகபந்துக்கள்: அவனொருவனுமே நிருபாதிகபந்து" என்றார்; நிருபாதிகபந்துவானால் பின்னை பந்துக்ருத்யம்பண்ணாதிருக்க வொண்ணாதிறே. இப்படி பரமபந்துவானவன் கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே எல்லாப்பரிமாற்றத்தையும் ஆசைப்பட்டு இவர்சென்று கிட்டினவிடத்தில், இவரையேன்னென்னுதல், திருக்கண்களாலேகுளிரநோக்குதல், ஒரு வார்த்தைசொல்லுதல் செய்யக்கண்டிலர்; காணாமையாலே மிகவும் அவஸந்நரானார்; அது அவனுளனாகத்தீருமிறே. அதுக்குமேலேயும் ஒன்றுண்டாயிற்று - "திருமேனி யலசும்படி ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளாநின்றான்: என்வருகிறதோ?" என்று ஒருபயமோடிற்று. கீழே, * ஆராவமுதிலே, "என்னார்த்தியைத்தீர்க்கிறிலன்" என்றின்னாதானார்; இங்கே "என்னார்த்தியும் தன்னார்த்தியுந் தீர்க்கிறிலன்" என்றின்னாதாகிறார். ஆக, "கோடியார் மாடக்கோளூரகத்தும் புளிங்குடியும், மடியாதின்னே" என்றஅதுவே தலையெடுத்து, பெரிய

பண்டைநாள் ப்ரவேஶம்; வ்ருத்தாநுவாத பூர்வகமாக இத்திருவாய்மொழிக்கு ஸங்கதி - கீழ்த்திருவாய்மொழியிலே இத்யாதி. "பண்ணாதிருக்க வொண்ணாதிறே" என்று அநந்தரம் ஆகையாலே பந்துக்ருத்யம் செய்யவேணுமென்று திருப்புளிங்குடியிலேசென்று கிட்டினார் என்றிவ்வளவுங்கூட்டிக்கொள்வது. அது - அவஸாதம். அதேதென்ன - திருமேனி இத்யாதி. "திருவுடம்பசைய" என்றத்தைப் பற்ற - அலசும்படி என்றது. "எத்தனைகாலம் கிடத்தி" என்றத்தைப்பற்ற - ஏகரூபமாக என்றது. அலசும்படி - அலமாம்படி. * ஆராவமுதிலும் இப்படியன்றோ அபேக்ஷித்தது: இதுக்குவாசியேது? என்ன - கீழே இத்யாதி. தன்னார்த்தி தீர்க்கிறிலனென்றது அங்குமிங்கிலேயுஞ் சொல்லிற்றேயென்ன - ஆக, கோடியார் இத்யாதி. அதினுடைய அநுஸந்தாநமிதுவென்றபடி. 'ஆற்றாமையோடே' என்றதுக்கு, "விண்ணைப்பம் செய்து" என்றத்தோடே யந்வயம். ""தாமரைக்கண்களால்நோக்காய்"" "பாதபங்கயமே தலைக்கணி

வாற்றாமையோடே, "என்னுடையவார்த்தியெல்லாந்தீரும்படி திருக்கண்களாலே குளிர நோக்கியருளவேணும்; என்தலைமேலே திருவடிகளைவைத்தருளவேணும்; தேவரும் பிராட்டிமாருங்கூட எழுந்தருளியிருக்கு மிருப்பை யெனக்குக்காட்டியருளவேணும்; ஸஞ்சயன் பெற்றபேற்றில் எனக்குக்குறையவொண்ணாது". "**யத்ர க்ருஷ்ணௌ ச க்ருஷ்ணா ச ஸத்யபாமா ச பாமினீ**" (யத்ரக்ருஷ்ணௌசக்ருஷ்ணாசஸத்யபாமாசபாமிநீ) என்றுசொல்லுகிற படியே, அவ்விருப்பிலேயிறே யவனையழைத்துக்காட்சிகொடுத்தது. இப்படி "ஸஞ்சயன் வந்தான்" என்றறிவிக்க, "நமக்குநல்லானொருவன்; உகவாதார்க்கும் இவ்விருப்பைப் போய்ச்சொல்லுவானொருவன்; அநுகூலனான இவனுக்கு விளைநீரடைத்தோமாகிறோம்: உகவாதார் மண்ணுண்ணும்படி கார்யம்பார்த்தோமாகிறோம்: புகுரவிடுங்கோள்" என்றானிறே. **நசாபிமந்யுர் நயமௌ தம் தேசமபிஜக்மது:** (நசாபிமந்யுர்நயமௌ தம் தேசமபிஜக்மது:)-தாயுந்தமப்பனும் சேரவிருந்தவிடத்தில் ப்ரஜைகளுக்குச்சென்று கிட்டவொண்ணாமையில்லையிறே; அவர்களுக்குஞ்சென்று கிட்டவொண்ணாதபடியாயிற் றெழுந்தருளியிருக்கிறவிருப்பு; அவ்விருப்பிலேயிறே அவனையழைத்துக் காட்சி கொடுத்தது. அப்படியே "தேவரும் பிராட்டிமாரும் எழுந்தருளியிருக்கு மிருப்பை யெனக்குக்காட்டவேணும்: என்னைக்கண்டகாட்சியிலே விக்ருதனாய் என்முன்னே நாலடியுலாவியருளவேணும்: அநுகூலதர்ஶநத்தால் பிறக்கும் ஸ்மிதங்காணவேணும்: ஒருவார்த்தையருளிச்செய்யவேணும்"என்று இங்ஙனே தாமும் அவனும் அறிந்ததாகத் திருவாசலைத் திருக்காப்புக்கொண்டு ஏகாந்தத்திலே தம்முடைய மநோரதங்களையெல்லாம் விண்ணப்பஞ்செய்து, "இவற்றை இப்போதேபெறவேணும்" என்று த்வரிக்கிறார். ப்ராப்தியை யநுபவித்தார் கீழ்த்திருவாய்மொழியிலே; ப்ராப்திபலத்தை ஆசைப்பட்டு அபேக்ஷிக்கிறார் இதில்.

---

*யாய்," "உன்தாமரைமங்கையும் நீயும்" இத்யாதியைப்பற்ற - திருக்கண்களாலே இத்யாதித்ரயமும். இப்படி யபேக்ஷிக்கைக்கு நாம்ஆருக்குக்காட்டினோமென்ன - ஸஞ்சயன் இத்யாதி. அவன்பெற்ற பேறேதென்ன - யத்ரக்ருஷ்ணௌச இத்யாதி. இதுக்கவதாரிகையாதல், பாவமாதல் - இப்படிஸஞ்சயன் இத்யாதி. விளைநீரடைக்கை - விளையும்படி யொருகாலே நீரைத் தேக்குகை. அப்படியருளப்பாடிடும்படி ஒருவர்க்கும் கிட்டவொண்ணாதபடியிருக்குமோவென்ன - நசாபிமந்யு: இத்யாதி. "**யத்ர க்ருஷ்ணௌ ச க்ருஷ்ணா ச ஸத்யபாமா ச பாமினீ । ந ஸாம்போ நாபிமந்யுர்வா தம் தேசமபிகச்சதி**" இத்யாதி. உத்யோகபர்வணி ஏகோநபஞ்சாஶே த்ருதராஷ்ட்ரம் ப்ரதிஸஞ்ஜய:. இவ்விருப்பைக்காட்டிக்கொடுத்தானென்னுமது ஏற்றமாகைக்குஉறுப்பாக, அதொருவர்க்கும்சென்று ப்ரவேஶிக்கவொண்ணாத ஏகாந்தஸ்த்தலமென்கிறார் - தாயும் தமப்பனும் இத்யாதிவாக்யத்வயத்தாலே. "பவளம்போல் கனிவாய்சிவப்ப நீகாணவாராய்" என்றத்தைப்பற்ற - என்னைக்கண்ட இத்யாதி. "தவழ்கதிர்முறுவல்செய்து" என்றத்தைப் பற்ற - அநுகூல இத்யாதி. "சோதிவாய்திறந்து" என்றத்தைப்பற்றவாதல், "கூவுதல்வருதல்செய்யாய்" என்றத்தைப்பற்றவாதல் - ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும் என்றது. இப்பரிமாற்றம் லோகத்தில் நடப்பதொன்றல்லாமையாலே-தாமும் அவனுமறிந்ததாக இத்யாதி அருளிச்செய்கிறார். இதுக்கு ஸூசகஶப்தம் - "கொடுவினையேனும்" என்ற ஏகவசநமும், இருவருமான சேர்த்தியைச்சொல்லுகிற "தாமரைமங்கையும்நீயும்" என்றதுவும். இத்தால்பலிதம் - ப்ராப்தியை இத்யாதி. கீழ்த்திருவாய்மொழி - நாராயணஶப்தார்த்தம்; இது சதுர்த்யர்த்தம். ஆக, * ஆராவமுதில்பிறந்த வ்யஸநமும் * அங்குமிங்கிற் சொன்ன ஆர்த்தியும் இத்திருவாய்மொழியிலே தோற்றுகிறது. கைங்கர்யப்ரார்த்தனையாயிருக்கையே இதுக்கு விசேஷம்.*

முதற் பாட்டு.

பண்டைநாளாலேநின்திருவருளும் பங்கயத்தாள்திருவருளுங்
கொண்டுநின்கோயில்சீய்த்துப்பல்படிகாற்குடிகுடிவழிவந்தாட்செய்யும்
தொண்டரோர்க்கருளிச்சோதிவாய்திறந்துன்தாமரைக்கண்களானோக்காய்
தெண்டிரைப்பொருநற்றண்பணைசூழ்ந்ததிருப்புளிங்குடிக்கிடந்தானே!

ஆ.—பிராட்டி பரிக்ரஹமாகையாலே பண்டை உன்னாலே விஷயீக்ருதராய் ஸர்வவித கைங்கர்ய நிரதருமாய் எங்குங்குடியாக அடிமைசெய்துவர்த்திக்கிற அடியோங்களுக்கருளி, சோதிவாய்திறந்து உன்தாமரைக்கண்களால் நோக்காய்; தெளிந்த திரையையுடைய திருப்பொருநலோடு கூடின அழகிய நீர்நிலஞ்சூழ்ந்த திருப்புளிங்குடியிலே வந்து கண்வளர்ந்தருளினவனே என்று ப்ரார்த்திக்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், அநந்யகதிகளான அடியோங்களைக் குறித்து ஒரு வார்த்தையருளிச்செய்து, விடாய்கெடும்படி திருக்கண்களாலே நோக்கியருளவேணுமென்கிறார்.

[பண்டைநாளென்று தொடங்கி] - பழையதாகவே உன்னுடைய கடாக்ஷத்தையும் அதுக்கு அடியான பெரிய பிராட்டியாருடைய கடாக்ஷத்தையும் பெற்று குடிமுறையே ஶாஸ்த்ரசோதிதமானவழி தப்பாதே கோயில்களிலே அஸாதாரண பரிசர்யாரூபமான அடிமைசெய்கிற அடியோங்களுக்கு க்ருபைபண்ணி. [தெண்டிரையென்று மேலுக்கு] — **தெளிந்த திரையையுடைய** திருப்பொருநலோடு கூடின அழகிய நீர் நிலம் சூழ்ந்த **திருப்புளிங்குடியிலே வந்து ஸந்நிஹிதனாய்க் கண்வளர்ந்தருளினவனே!**

ப.—முதற்பாட்டில், குலக்ரமாகதமாக கைங்கர்யம்பண்ணிப்போந்த அடியோங்களுக்கிரங்கி, திருப்பவளத்தைத் திறந்து ஸாந்த்வவாதத்தை யருளிச்செய்து, அழகிய திருக்கண்களாலே பார்த்தருளவேணுமென்கிறார்.

தெண் - தெளிந்த, திரை - திரையையுடைத்தான, பொருநல் - திருப்பொருநலையுடைத்தாய், தண் - குளிர்ந்த, பணை - நீர்நிலங்களாலும், சூழ்ந்த - சூழ்ந்த, திருப்புளிங்குடி - திருப்புளிங்குடியிலே, கிடந்தானே - கண்வளர்ந்தருளுகிறவனே! நின் - (நிருபாதிகபந்துவான) உன், திருவருளும் - திருவருளையும், பங்கயத்தாள் - (உன்னை யருளுவிக்கக்கடவளான) பங்கயத்தாள், திருவருளும் - திருவருளையும், ("ஜாயமாநம் ஹிவ[illegible]ஷ்டி" என்கிறபடியே), பண்டைநாளாலே - உத்பத்தி காலமே பிடித்து, கொண்டு - (உடையோமாய்க்) கொண்டு, நின் - நீ புகுந்தருளின, கோயில் - திவ்யதேசத்திலே, சீய்த்து - உசித கிஞ்சித்காரத்தைப்பண்ணி, பல்படிகால் - பல்படிகாலுண்டாம்படி, குடிகுடிவழி - குலக்ரமத்திலே (அப்படிகாலந்தோறும்புத்ரபௌத்ராதிஸஹிதராய்க்கொண்டு ஶாஸ்த்ரோக்தமார்க்கத்தைத் தப்பாதபடி), வரக்கடவராய், — வந்து ஆட்செய்யும் - வந்தடிமைசெய்துபோருகிற, தொண்டரோர்க்கு - ஶேஷபூதரானவெங்களுக்கு, அருளி - நிரவதிகக்ருபையைப்பண்ணி, சோதி - உஜ்ஜ்வலமான, வாய் - திருப்பவளத்தை, திறந்து -, (ஸாந்த்வவாதம்பண்ணி), உன் - உனக்கஸாதாரணமான, தாமரை - தாமரைபோலேயிருக்கிற, கண்களால் - திருக்கண்களாலே, நோக்காய் - பூர்ணமாகப்பார்த்தருளவேணும்.

இ—முதற்பாட்டில், அநந்யகதிகளான அடியோங்களைக் குறித்து ஒரு வார்த்தையருளிச்செய்து, விடாய் கெடும்படி குளிரநோக்கியருளவேணுமென்கிறார்.

[பண்டைநாளாலே நின்திருவருளும்] - நெடுநாள் கூடவே பண்ணிப் போந்த கடாக்ஷத்தையும்; எதிர்சூழல்புக்கு நெடுநாள் பட்டக்லேஶத்தின் பலமன்றோவிது? நெடுநாள் க்ருஷிபண்ணி பலவேளையிலேகைவிடவோ? [பங்கயத்தாள் திருவருளும்] - அதுக்கடியாக பெரிய பிராட்டியார்கடாக்ஷத்தையுங் கொண்டு; அவனுடைய அருளின் ஸ்வாதந்த்ர்யமுந்தத்தைத் தவிர்க்குமருள். ப்ரணயித்வத்தால்வந்தபாரதந்த்ர்யமிறே ஸ்வாதந்த்ர்யத்தைத் தவிர்ப்பது? "என்னடியாரது செய்யார்" என்னும் உன்கடாக்ஷமும், "ந கஶ்சிந் நாபராத்யதி" என்னுமவள் கடாக்ஷத்தையும் பெற்று. "க்ருபயா பர்யபாலயத்" என்று க்ருபாபரதந்த்ரனான உன்கடாக்ஷமும் அந்தபாரதந்த்ர்யத்துக்கடியான அவள் கடாக்ஷமுமென்றுமாம். [நின்கோயில் சீய்த்து] - உகந்தருளின நிலங்களிலே அஸாதாரணபரிசர்யைபண்ணி தேஹாத்மாபிமாநிகள் தந்தாமுடையக்ருஹங்களைப்பேணுவர்கள், பிராட்டியடியாக ஸம்பந்தப்ரஸாதம் பெற்றவர்கள் உகந்தருளின தேஶங்களைப் பேணுவர்கள். [பல்படிகால்] - இன்று புதிதாய் வந்ததோ, நீ விஶேஷகடாக்ஷம் பண்ணத்தொடங்கினவன்று தொடங்கி வந்த தன்றோ? என்கை. [குடிகுடி] - ஸபரிகரமாக. [வழிவந்து] - ஶாஸ்த்ரங்களில் சொல்லுகிறமுறை தப்பாதபடி வந்து ஆட்செய்யும். [தொண்டரோர்க்கருளி] - அடிமைசெய்கிற அடியோங்கள் பக்கலிலே க்ருபைபண்ணி. [சோதிவாய் திறந்து] - பூவலருமாபோலேயாயிற்று, வாய் திறந்து வார்த்தையருளிச் செய்யும்போது திருமுகத்திற்பிறக்கும் செவ்வி. "ஶாகே ஶ்ரீரிவ க்ஷீதி" என்று வார்த்தையளவிலேயாயிற்று அக்ரூரன் அநுபவித்தது. தத்காலத்தில் திருமுகத்தில் செவ்வியுமத்தேஶ்யமாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. [தாமரைக்கண்களால் நோக்காய்] - வார்த்தையில் தோற்றாதவைஶத்யமும் நோக்கிலே அநுபவிக்கும்படி குளிரநோக்கியருளவேணும். "ஸ்வசோக்ஷதா நிரீக்ஷ்யோஸ்வாலோக்யாய". [தெண்டிரைப்பாழி] - தெளிந்த திரையையுடைய திருப்பொருநலோடே சேர்ந்த அழகிய நீர்நிலஞ்சூழப்பட்ட திருப்புளிங்குடியிலேவந்து கண்வளர்ந்தருளுகிறவனே! தேவர்ஸௌகுமார்யத்துக்குச் சேரும் ஜலஸம்ருத்தியையுடைத்தான தேஶத்திலே கண்வளர்ந்தருளின வம்ஶமுண்டு. இதின் கார்யம்பெறவேணுமென்கிறார். செய்தவம்ஶத்தில் க்ருதவம்ஶநாகவொண்ணாதே.

ஈடு—முதற்பாட்டு. அநந்யகதிகளான அடியோங்களைக்குறித்து ஒரு வார்த்தை யருளிச்செய்து விடாய்கெடும்படி குளிர நோக்கியருளவேணுமென்கிறார்.

[பண்டைநாளாலே நின்திருவருளும்] - நெடுநாள்கூடப்பண்ணிப்போந்தஉன் கடாக்ஷத்தையும். நீ நேற்றுஇன்று பண்ணிப்போந்த க்ருஷியின்ஃபலமோ இது? * எதிர் சூழல்புக்கு நெடுநாள்பட்ட க்லேஶத்தின் ஃபலமன்றோ இது? நெடுநாள் க்ருஷியைப் பண்ணி ஃபலவேளையில்கைவிடவோ? [பங்கயத்தாள் திருவருளும்] - அதுக்கடியான

முதற்பாட்டு.—பண்டைநாள் இத்யாதி. "குடிகுடிவழிவந்தாட்செய்யும்தொண்டரோர்க்கு-சோதிவாய்திறந்துஉன் தாமரைக்கண்களால்நோக்காய்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை அநந்யகதிகளான இத்யாதி.

ஶப்தார்த்தம் - நெடுநாள் இத்யாதி. முன்பேதொடங்கி உண்டான உன்திருவருளுமென்று ஶப்தார்த்தம். "அருள்" என்று - தத்கார்யமான கடாக்ஷத்தை லக்ஷிக்கிறது. ஃலிதம் - நீ நேற்றின்று இத்யாதி. இது - தாம் பண்ணுகிற கைங்கர்யம். ஆனாலென்? என்ன - நெடுநாள் இத்யாதி. அதுக்கடியான - அவனருளுக்கடியான. இவளுடையவருள் அவன்கடாக்ஷத்துக்கு அடியாகை

ப.—அநந்தரம், உகவாதார்முன்னேயகப்படப் பெரியதிருவடியை மேற்கொண்டு சென்று நின்ற நீ, உகந்துகாண ஆசைப்பட்ட என்முன்னே அப்படி அவனை மேற்கொண்டுவந்து நின்றருளவேணு மென்கிறார்.

பொன் - கநகமயமான, மலையின் - மஹாமேருவின், மீமிசை - மேலேபடிந்த, கார்முகில்போல - காளமேகம்போலே, காய்-(விரோதிவிஷயத்திலே) வெவ்விய, சினம் - சீற்றத்தையுடைய, பறவை - பெரியதிருவடியை, ஊர்ந்து - நடத்திக்கொண்டு, காய் - ப்ரதிபக்ஷங்களிலே காலாக்நிகல்பமான, சினம் - சினத்தையுடைய, ஆழி சங்கு வாள் வில் தண்டு - ஸ்ரீபஞ்சாயுதத்தையும், ஏந்தி-, மா-பெரிய, சினம் - சினத்தையுமுடைய, மாலி-, மான் - மஹானான, மாலி - சுமாலி, என்று - என்றுப்ரஸித்தரான, அவர் - அவர்கள், அங்கு - அந்தயுத்தபூமியிலே, பட - நசிக்கும்படி, ("காலாஹ்ருஹஸ்த்ராஶூ: க்ரோதயெ" என்கிற கணக்கிலே), கனன்று - பெரியசீற்றத்தோடே, முன் - (உகவாதார்)முன்னே, நின்ற - (இவ்வழகைக்காட்டி) நின்றவனாய், ("அங்கருளில்லாத்தன்மையாளன்" என்னும்கணக்கிலே), காய் - விரோதிகளுக்குதாஹகமான, சினம் - க்ரோதகுணத்தையுடைய, வேந்தே — ஸ்வாமியாய், கதிர் - விரோதிவர்க்கம் மடிகையாலே ஒளிவிடுகிற, முடியானே - திருவபிஷேகத்தை யுடையவனாய், (ஆஶ்ரிதார்த்தமாக), கலி - ஸம்ருத்தமான, வயல் - வயலையுடைய, திருப்புளிங்குடியாய் - திருப்புளிங்குடியிலே வர்த்திப்பானாய், (அவ்வழியாலே), எம் - எங்களுடைய, இடர் - அநுபவாலாபரூபமான து:கத்தை, கடிவானே - கழிக்கக் கடவனாயிருக்கிறவனே! அந்த வாஹநத்தோடும் ஆயுதங்களோடும் திருவபிஷேகத்தோடும் நான் காணும்படியாகவந்து நின் திருக்கண்தாமரை தயங்க நின்றருளாய்! என்று கீழே அந்வயம்.

இ—ஆறும்பாட்டில், உம்முடைய அபேக்ஷிதங்கள் செய்யவொண்ணாதபடி அவையிற்காட்டில் ப்ரபல ப்ரதிபந்தகங்களுண்டோ வென்ன; மாலிப்ரப்ருதி ராக்ஷஸரிலும் வலிதோ என்னுடைய ப்ரதிபந்தகம்? என்கிறார்.

[காய்சினப் பறவையூர்ந்து] - ப்ரதிபக்ஷத்தில் உனக்குத் தண்ணளியுண்டாகிலும் கண்ணற்றழியச் செய்யும் பெரிய திருவடியை நடத்தி. [பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல்] - அப்போதிருக்கும்படி மேருவைக்கினிய ஒரு காளமேகம் படிந்தாற்போலே. இப்போது இதுசொல்லுகிறது - பெரியதிருவடி முதுகில் இருப்பைக் காண்கைக்காக. [மாசினமாலி] - பெரியசினத்தை யுடையனாய்க் கொண்டு வந்தமாலி [மாலி மான்] - மஹானான மாலி, ஸுமாலி யென்றபடி. [என்று அங்கவர்பட] - என்கிறவர் அங்கே முடியும்படியாக. [கனன்று முன்நின்ற] - சீறி; அவர்கள்முன்னே நின்ற; வடிவைக் கண்டபோதே எதிரிகள் முடியும்படியிறே வீரமிருப்பது. [காய்சினவேந்தே]- திருநாமம். காயுஞ்சினத்தையுடைய நிர்வாஹகனே! [கதிர்முடியானே] - விளங்கா நின்ற திருவபிஷேகத்தை யுடையவனே! நீர் ரக்ஷகத்வத்துக்கு முடிசூடியிருக்க, நான் இழக்கவோ? [கலிவயல் திருப்புளிங்குடியாய்] - நீ தூரஸ்தனென்று தான் இழக்

கிறேனே? ஸம்ருத்தமான வயலையுடைய திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளின வனே! [காய்சினவாழி இத்யாதி] - காயுஞ் சினத்தையுடைய திருவாழி முதலான திவ்யாயுதங்களை தரித்தது ஆஸ்ரிதருடைய ஆபத்துக்களைப் போக்குகைக்கன்றோ? மேலிற்பாட்டிலே இப்பாட்டுக்குக் க்ரியை.

ஈடு.—ஆறும்பாட்டு. உம்முடைய அபேக்ஷிதங்கள் செய்யவொண்ணாதபடி ப்ரதிபந்தகங்கள் ப்ரபலமன்றோ என்னில்? — 'மாலி, சுமாலி, மால்யவான் இவர்களிலும் வலிதோ என் ப்ரதிபந்தகம்?' என்கிறார்.

[காய்சினப்பறவையூர்ந்து] - ப்ரதிபக்ஷத்தில் உனக்குக் கண்ணோடிலும் கண்ணற்றழியச்செய்யும் பெரிய திருவடியை நடத்தி. [பொன்மலையின்மீமிசைக்கார்முகில் போல்] - அப்போதிருக்கும்படி. மேருவைக்கினிய காளமேகம் படிந்தாற்போலேயாயிற்று இருப்பது. இப்போது இது சொல்லுகிறது - பெரியதிருவடி முதுகிலிருப்பைக் காண்கைக்காக. [மாசினமாலி] - பெரியசினத்தை யுடையனாய்க்கொண்டு வந்த மாலி. [மாலிமான்] - மஹானான மாலி. சுமாலியென்றபடி. [என்று அங்கவர்பட] - என்கிறவர்கள் அங்கே முடியும்படியாக. [கனன்றுமுன்னின்ற] - சீறி அவர்கள்முன்னேநின்ற. வடிவைக் கண்டபோதே எதிரிகள் முடியும்படியாயிறே வீரமிருப்பது. [காய்சினவேந்தே] - திருநாமம். காயுஞ்சினத்தையுடைய நிர்வாஹகனே! [கதிர்முடியானே] — விளங்காநின்ற திருவபிஷேகத்தை யுடையவனே! நீ ரக்ஷணத்துக்கு முடிசூடியிருக்க, நான் இழக்கவோ? [கலிவயல் திருப்புளிங்குடியாய்] - நீ தூரஸ்த்தனாய்த்தான் இழக்கிறேனோ? ஸம்ருத்தமானவயலையு டைய திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! [காய்சினவாழி இத்யாதி]-காயுஞ் சினத்தையுடைய திருவாழிமுதலான திவ்யாயுதங்களை தரித்தது ஆஸ்ரிதருடைய ஆபத்தைப் போக்குகைக்காகவன்றோ? "எம்மிடர்கடிவானே - திருக்கண்தாமரைதயங்க நின்றருளாய்" என்று கீழிற்பாட்டிலே இப்பாட்டுக்கு க்ரியை. (௬)

ஆறும்பாட்டு.—காய்சினம் இத்யாதி. "மாசினமாலிமாலிமான்" என்று தொடங்கி "கனன்று" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - உம்முடைய இத்யாதி.

"காய்சினம்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - ப்ரதிபக்ஷத்தில் இத்யாதி. அன்றிக்கே, "காய்சினப்பறவை காய்சினவேந்தே" என்ற பதங்களைக் கடாக்ஷித்து பாவமாதல். கண்ணற்று - நிர்த்தயமாய். கண்-க்ருபை. இப்போதுஇது சொல்லுகிறதென்றது - வகுத்துச்சொல்லுகிறதென்றபடி. மீமிசை - மேலே. கினிய - கபளீகரிக்க. மாலியையும் சுமாலியையுஞ்சொன்னது - மால்யவானுக்கும் உபலக்ஷணம். சுமாலியும் மால்யவானும் ஓடிப்போகையாலே, "அவர்பட" என்று - தேஜோவதத்தைச் சொல்லுகிறது. "மான்மாலி-" மஹானானமாலி. "என்று - அவர் - அங்கு - பட -" என்று ப்ரவித்தரானவர்கள் அந்தயுத்தபூமியிலே படவென்று யோஜனார்த்தம். கனன்று - சீறி. ஸஹியாதே, சீறி முன்னே நிற்பானென்னென்ன - வடிவை இத்யாதி. அங்வர்த்தநாமமென்கிறார் - காயும்சினத்தை இத்யாதி. இதுக்குபாவம் - நீ ரக்ஷணத்துக்கு இத்யாதி. கலி - ஸம்ருத்தி. "திருப்புளிங்குடியாய்" என்றதுக்குபாவம்-நீ தூரஸ்த்தனாய் இத்யாதி. "எம்" என்று - ஆஸ்ரிதரைச்சொல்லுகிறது. இப்பாட்டுக்கு க்ரியையைக் காட்டுகிறார் - எம்மிடர் இத்யாதி. 'பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல - காய்சினப்பறவையூர்ந்து - காய்சினவாழிசங்கு வாள்வில்தண்டேந்தி - மாசினமாலிமாலிமானென்று அவர் - அங்கு - படக் கனன்று முன்னின்ற காய்சினவேந்தே' என்று தொடங்கி, 'திருப்புளிங்குடியாய் - எம்மிடர்கடிவானே - நின்திருக்கண்தாமரை தயங்க நின்றருளாய்' இத்யன்வயம். (௬)

ஏழாம் பாட்டு.

எம்மிடர்கடிந்திங்கென்னையாள்வானே! இமையவர்தமக்குமாங்கனையாய் !
செம்மடல்மலருந்தாமரைப்பழனத்தண்திருப்புளிங்குடிக்கிடந்தாய்!
நம்முடையடியர்கவ்வைகண்டுகந்து நாம்களித்துளநலங்கூர
இம்மடவுலகர்காணநீயொருநாளிருந்திடாயெங்கள்கண்முகப்பே.

ஆ.—(எம்மிடர்.) உத்கர்ஷாபகர்ஷவிபாகமின்றியே ஸர்வாத்மாக்களுக்கும் நீயல்லது வேறு ரக்ஷகருளரோ ? ஆனபின்பு, உனக்கு நல்லராயிருப்பார் நீயிருந்தருளு மிருப்பைக் கண்டால் படும் பாடு கண்டு நாங்கள்வாழும்படியாக, இந்தலோகத்திலுள்ளவர்கள் காணும்படி எங்கள் கண்ணெதிரே நீ ஒருநாள் இருந்திடாய் என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், துர்வலரோடு ப்ரபலரோடு வாசியின்றிக்கே ரக்ஷகனான நீ, நாங்கள் வாழும்படி எங்கள் கண்ணெதிரே ஒருநாளிருந்திடாய் என்கிறார்.

[எம்மிடரென்று தொடங்கி] - ஸாம்ஸாரிகஸகலது:க்கங்களையும் போக்கி இங்கே என்னை ஆளுகிறவனே! எத்தனையேனும் அபிமானிகளான ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் அங்கு அப்படி நிர்வாஹகனானவனே! ஸம்ருத்தமான பழனங்களையுடைத்தாய் ப்ரமஹரமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! [நம்முடையடியர் என்று தொடங்கி] - திருவடிகளை ஆஶ்ரயித்தவர்களுடைய ஸம்ப்ரமத்தைக்கண்டு நாங்கள் களித்து மிகவும் ப்ரீதராக, இந்த லோகத்திலுள்ள ஸாதுக்கள் காணும்படி.

ப.—அநந்தரம், அளவிலிகளான எங்களோடு அளவுடையாரோடு வாசியற ரக்ஷகனான நீ, அஸாதாரணஶேஷபூதரான ஸூரிகளநுபவிக்கிற கீர்த்தியைக் கண்டு நாங்களுகக்கும்படி எங்கள் கண்முகப்பே யிருந்தருளவேணுமென்கிறார்.

எம் - எங்களுடைய, இடர் - அவித்யாதி க்ருதமான ஸகல து:கங்களையும், கடிந்து - போக்கி, இங்கு - இந்த பூமியிலேவைத்து, என்னை-, ஆள்வானே - அடிமைகொண்டு போருமவனே, இமையவர்தமக்கும் - அநிமிஷரான ப்ரஹ்மாதி தேவர்களுக்கும், ஆங்கு - அங்கு, அனையாய் - அப்படி அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகமாக இஷ்டப்ராப்தியைப் பண்ணிக்கொடுத்து ரக்ஷிக்குமவனே, செம் - சிவந்த, மடல் - இதழ், மலரும் - மலருகிற, தாமரை - தாமரையையுடைத்தான, பழனம் - நீர்நிலங்களையுடைய, தண் - குளிர்ந்த, திருப்புளிங்குடி - திருப்புளிங்குடியிலே, கிடந்தாய் - ஆஶ்ரிதார்த்தமாகக் கண்வளர்ந்தருளுகிறவனே! நம்முடை - நம்முடையாரென்னும்படி, அடியர் - உனக்குஅஸாதாரண ஶேஷபூதரான ஸூரிகளுடைய, கவ்வைகண்டு- (அநுபவஜநிதமான) கோலாஹலத்தைக் கண்டு, நாம் - நாங்கள், உகந்து - உகந்து, களித்து- ஆநந்திகளாய், உளம் - நெஞ்சிலே, நலம் - ப்ரேமமானது, கூர - வர்த்திக்கும்படியாக, மடம் - வாசியறியாத, இ - இந்த, உலகர் - லோகத்தாரும், காண - காணும்படி, நீ - (நித்யஸூரிகளை என்றுமிருந்து அநுபவிப்பிக்கிற) நீ, ஒருநாள் - ஒருநாளாகிலும், எங்கள் கண்முகப்பே— இருந்திடாய் - இருந்தருளவேணும்.

இ.—ஏழாம்பாட்டில், துர்வலரோடு ப்ரபலரோடு வாசியற ரக்ஷகனான நீ நாங்கள் வாழும்படி கண்ணெதிரே ஒருநாளிருக்கவேணுமென்கிறார்.

[எம்மிடர் கடிந்து]-எங்களுடைய ஸாம்ஸாரிக ஸகலது:கங்களையும் போக்கி. [இங்கு என்னையாள்வானே] - ஸஹவஜ்ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத இஹலோகத்திலே அடிமைகொள்ளுகிறவனே! [இமையவர் தமக்குமாங்கனையாய்] - அகிஞ்சநரான எங்களுக்கேயன்றிக்கே, "ஈஶ்வரோஹம்" என்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் அங்கு அப்படி நிர்வாஹகனானவனே! [செம்மடலித்யாதி]-சிவந்தமடல் மலராநின்றுள்ள தாமரையையுடைய நீர்நிலங்களை யுடைத்தாய் ஶ்ரமஹரமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! [நம்முடையித்யாதி] - உன்னடியார் உன்னையநுபவிக்கிற ஆரவாரத்தைக் கண்டு நாங்களுகந்து, அந்தவுகப்புத் தலைமண்டையிட்டு ஹ்ருதயத்திலே ஸ்நேஹமானது மேன்மேலென மிக்குவர. [இம்மடவுலகர்காண] - அஜ்ஞான ஸம்ஸாரிகளநுபவிக்கும்படி எங்கள் கண்வட்டத்திலே ஒருநாளிருந்தருளவேணும். நித்யஸூரிகளுக்கு ஸதா தர்ஶந விஷயமான நீ, ஒரு நாள் எங்கள் கண்ணுக்கு விஷயமாயிருந்தாலாகாதோ? உன்னுடைய தர்ஶநம் அதிக்ருதாதிகாரமாகவேணுமோ?

ஈடு.—ஏழாம்பாட்டு. துர்ப்பலரோடு ப்ரபலரோடு வாசியற ரக்ஷகனான நீ, நாங்கள் வாழும்படி கண்ணெதிரே ஒருநாளிருக்கவேணுமென்கிறார்.

[எம்மிடர்கடிந்து] - எங்களுடைய ஸாம்ஸாரிக ஸகலது:கங்களையும் போக்கி. [இங்கென்னையாள்வானே] - ஸஹவஜ்ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத இஹலோகத்திலே என்னை அடிமைகொள்ளுகிறவனே! [இமையவர் தமக்குமாங்கனையாய்] - அகிஞ்சநரான எங்களுக்கே யன்றிக்கே, "ஈஶ்வரோஹம்" (ஈஶ்வரோஹம்) என்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் அங்கு அப்படி நிர்வாஹகனானவனே! [செம்மடலித்யாதி] - சிவந்த மடல் மலராநின்றுள்ள தாமரைகளையுடைய நீர்நிலங்களை யுடைத்தாய், ஶ்ரமஹரமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! உள்ளும் புறம்புமெல்லாம் தாமரையாயிற்று. [நம்முடையித்யாதி] - உன்னடியார் உன்னையநுபவிக்கிற ஆரவாரத்தைக்கண்டு நாங்கள் உகந்து, அந்தவுகப்புத் தலைமண்டையிட்டு, ஹ்ருதயத்திலே ஸ்நேஹமானது மேன்மேலென மிக்குவர. [இம்மடவுலகர்காண] - இந்த ஸம்ஸாரத்தில் அறிவுகேடராய், இடக்கை வலக்கையறியாதவர்களும் கண்ணாலே காணும்படியாக. [நீ ஒருநாளிருந்திடாய் எங்கள்கண்முகப்பே] - எங்கள்கண்வட்டத்திலே ஒருநாள் இருந்தருளவேணும். நித்யஸூரிகளுக்கு ஸதாதர்ஶநவிஷயமான நீ, ஒருநாள் எங்கள்கண்ணுக்கு விஷயமாயிருந்தா லாகாதோ? உன்னுடைய தர்ஶநம் அதிக்ருதாதிகாரமாக வேணுமோ? (எ)

ஏழாம்பாட்டு - எம்மிடர் இத்யாதி. "என்னையாள்வானே, இமையவர் தமக்குமாங்கனையாய் - எங்கள் கண்முகப்பே - இருந்திடாய்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - துர்ப்பலரோடு இத்யாதி. "எம்" என்கையாலே - துர்ப்பலரோடு என்றது. "இமையவர்" என்கையாலே - ப்ரபலர்என்றது.

"இங்கு" என்று விசேஷித்ததுக்குபாவம் - ஸஹவஜ்ஜ்ஞாநத்துக்கு இத்யாதி. ஆங்கு - அந்த லோகத்திலே. அனையாய் - அப்படிப்பட்டவனே இத்யர்த்த:. இமையவர்க்குமென்னாதே, "தமக்கும்" என்று விசேஷித்ததுக்குபாவம் - அகிஞ்சநரான இத்யாதி. "செம்மடல் மலரும் தாமரை" என்று - புறத்தியில் தாமரையைச்சொல்லி, "கிடந்தாய்" என்று அவனைச் சொன்னதுக்குபாவம் - உள்ளும் இத்யாதி. "நம்முடை -" உம்முடைய என்றபடி. உன்னடியார் என்றது - திருப்புளிங்குடியில் ஸ்ரீவைஷ்ணவர்களை. கவ்வை - ஆரவாரம். நலம் - ஸ்நேஹம். கூர - மிக்குவர. மடப்பம் - அஜ்ஞாநம். கீழ்வாக்ய விவரணம் - நித்யஸூரிகளுக்கு இத்யாதி. "எங்கள்" என்றதுக்குபாவம் - உன்னுடைய இத்யாதி. எம்மிடர் இத்யாதி, க்ரமேணாந்வய: (எ)

எட்டாம் பாட்டு.

எங்கள்கண்முகப்பேயுலகர்களேல்லாமிணையடிதொழுதெழுதிறைஞ்சித்
தங்களன்பாரத்தமதுசொல்வலத்தால்தலைத்தலைச்சிறந்துபூசிப்பத்
திங்கள்சேர்மாடத்திருப்புளிங்குடியாய்!திருவைகுந்தத்துள்ளாய்தேவா!
இங்கண்மாஞாலத்திதனுளுமோருநாள் இருந்திடாய்வீற்றிடங்கொண்டே.

ஆ.—(எங்கள்.) - "நீர்சொல்லிற்றெல்லாம் திருநாட்டிலேசெய்கிறோம்" என்றோ பேசாதிருந்தருளுகிறது? அங்ஙனே செய்தருளவமையாது; எங்கள்கண்ணெதிரே லௌகிகரெல்லாரும் உன்திருவடிகளிரண்டையும் நிரந்தரமாகத்தொழுது க்ருதார்த்தராய், தங்களுடைய ஸ்நேஹாநுகுணமாகத் தங்களுடைய பக்த்யநுரூபமான சொற்களாலே மிகவும் மேல்விழுந்து கொண்டாட, இந்தலோகத்திலே இத்திருப்புளிங்குடியிலே பிராட்டியும் நீயுங்கூட ஒருநாளிருந்திடாய்! என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், திருநாட்டிலேயன்றோ நீர் அபேக்ஷிக்கிறபடி செய்யலாவதென்னில்; ஸகலலோகங்களும் கொண்டாடும்படி எங்கள் கண்ணெதிரே இஸ் ஸம்ஸாரத்திலே திருப்புளிங்குடியிலே உன்னுடைய வேண்டற்பாடுதோற்ற ஒருநாள் இருந்தருளவேணுமென்கிறார்.

[எங்கள் கண்முகப்பேயென்று தொடங்கி] - எங்கள் கண்ணெதிரே லௌகிகர் எல்லாம் உன்திருவடிகள் இரண்டையும் நிரந்தரமாகத்தொழுது க்ருதார்த்தராய்த் தங்களுடைய ஸ்நேஹாநுகுணமாகத் தங்களுடைய பக்த்யநுரூபமான சொற்களாலே மிகவும் மேல்விழுந்து கொண்டாட. [திங்களென்று தொடங்கி] – சந்த்ரபக்ஷத்தளவும் உயர்ந்த மாடங்களையுடைய திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதனானவனே! அவ்வளவன்றி ஸ்ரீவைகுண்டத்திலேவந்து நின்றருளி மிகவும் விளங்காநின்றுள்ளவனே!

ப.—அநந்தரம், அந்தவிபூதியி லன்றியே, ஸகலலோகங்களுங் கண்டு உன் திருவடிகளிலே விழுந்து தொழுது வாழும்படி, இந்தவிபூதியிலும் திருப்புளிங்குடியிலே உன்வாசிதோற்ற எழுந்தருளியிருக்கவேணு மென்கிறார்.

திங்கள் - (தேவலோகத்தில் மேலெல்லையிலே வர்த்திக்கிற) சந்த்ரன், சேர் - சேரும்படியோங்கின, மாடம் - மாடங்களையுடைய, திருப்புளிங்குடியாய் - திருப்புளிங்குடியிலே வர்த்திப்பானாய், திருவைகுந்தத்து - திருவைகுந்தத்திலே, உள்ளாய் - எழுந்தருளி நிற்பானாய், தேவா - இந்த ஸௌலப்ய தேஜஸ்ஸையுடையனானவனே! எங்கள் கண்முகப்பே-, உலகர்கள் - லோகத்திலுள்ளார், எல்லாம் - எல்லாரும், அடி - உன் திருவடிகள், இணை - இரண்டையும், தொழுது - தொழுது, எழுது - எழுவதாய்க் கொண்டு, இறைஞ்சி - பாரதந்த்ர்யம் தோன்றும்படி ஸஸம்ப்ரமராய், தங்கள் - தங்களுடைய, அன்பு - ஐக்தியானது, ஆர - வர்த்தியாநிற்க, (அத்தாலே), தமது - தங்களுடைய, சொல் வலத்தால் - உக்திபலாநுரூபமாக, தலைத்தலைச்சிறந்து - ஒருவர்க்கொருவர் அஹமஹமிகையாலே மேல்விழுந்து, பூசிப்ப - ஸ்வஹஸ்தமாக ஸ்தோத்ரங்களைப் பண்ணும்படி, இ - இந்த, கண் - இடமுடைத்தாய், மா - (நீ வருகைக்கிடாக) ச்லாக்யமான, (ஸ்ரீமத்தான), ஞாலத்து - பூமியிலே, இதனுளும் - திருப்புளிங்குடிக்

குள்ளேயும், வீற்றிடங்கொண்டு - உன்மேன்மை இடங்கொண்டு தோன்றும்படி, ஒரு நாள் இருந்திடாய் - ஒருநாள் இருந்தருளவேணும்.

இ.—எட்டாம்பாட்டில், பரமபதத்திலேயன்றோ இருப்பழகு காட்டலாவ தென்ன அவ்விருப்பைத் திருப்புளிங்குடியிலே ஒருநாள் இருந்தருளவேணுமென்கிறார்.

[எங்கள் கண்முகப்பே இத்யாதி] - எங்கள் கண்முகப்பே இருக்கவேணும். அது செய்தருளுமிடத்தில் லௌகிகரெல்லாம் திருவடிகளிற் சேர்த்தியழகு கண்டு திருவடிகளிலே விழுவதெழுவதாய் ஆச்ரயித்து. [தங்களன்பார] - தங்கள்ப்ரேமம் மிக்குவர. [தமது சொல்வலத்தால்] - சக்த்யநுகுணமான சொற்களாலே யென்னு தல், தாந்தாம் சொல்லவல்லவளவாலே என்னுதல். "பொன்னாலே பூணுநூ லிடுவீர்: நூறுபிராயம் புகுவீர்; "விஜயஸ்வ" என்னுதல். [தலைத்தலைச் சிறந்து பூசிப்ப] - மிகவும் மேல்விழுந்து கொண்டாட. [திங்கள் இத்யாதி] - ஸஞ்சாரசீலனான சந்த்ர னுக்கும் இளைப்பாறலாம்படியான மாடங்களையுடைய திருப்புளிங்குடியிலே ஸந்நிஹித னானவனே! [திருவைகுந்தத்துள்ளாய்] - அவ்வளவன்றிக்கே, ஸ்ரீவைகுண்டத்திலே நின்றருளினவனே! [தேவா] - பரமபதத்திற்காட்டில் ஸம்ஸாரத்தில் நிலையால்வந்த புகர். [இங்கண் இத்யாதி] - இம்மஹாப்ருதிவியிலே திருப்புளிங்குடியிலே பரம பதத்திலிருக்கும் வேண்டற்பாட்டோடே ஒருநாள் இருந்தருளவேணும்.

ஈடு.—எட்டாம்பாட்டு. பரமபதத்திலேயன்றோ இருப்பழகுகாட்டலாவதேன் னு? - அவ்விருப்பைத் திருப்புளிங்குடியிலே ஒருநாளிருந்தருளவேணுமென்கிறார்.

[எங்களித்யாதி] - எங்கள்கண்முகப்பே இருக்கவேணும். அது செய்யுமிடத் தில், லோகத்திலுள்ளாரடங்க, திருவடிகளிலுண்டான சேர்த்தியழகுகண்டு திருவடிகளிலே விழுவதெழுவதாய்க்கொண்டு ஆஶ்ரயித்து. [தங்களன்பார] - தங்கள் ப்ரேமம் மிக்குவர. [தமது சொல்வலத்தால்] - ஶக்த்யநுரூபமான சொற்களாலே யென்னுதல்; தாந்தாஞ் சொல்லவல்லவளவாலேயென்னுதல்; "யதாஜ்ஞாநந்த்வக்ஷ்யாமி புருஷந்தம் ஸநாதநம்" (யதாஜ்ஞாநந்துவக்ஷ்யாமி புருஷந்தம் ஸநாதநம்) என்னக்கடவதிறே. அதா வது - "நூறுபிராயம்புகுவீர், பொன்னாலே பூணுநூலிடுவீர்" என்றாற்போலே சொல்லுகை. வங்கிப்புரத்துநம்பி "விஜயஸ்வ" (விஜயஸ்வ) என்ன, ஆண்டான் சொன்னவார்த்தையை

எட்டாம்பாட்டு.—எங்கள் இத்யாதி. "இதனுளனமொருநாளிருந்திடாய் வீற்றிடங் கொண்டே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - பரமபதத்திலே இத்யாதி.

'எங்கள் கண்முகப்பே யிருக்கவேணும்' என்றது - அந்வயித்துச்சொன்னபடி. "தமது - வலத்து - சொல்லால்" என்றந்வயித்து, தந்தாமுடைய பலத்துக்கீடான சொற்களாலே யென்னு தல்; வலம் - பலம்; தாந்தாம் சொல்லவல்ல வளவாலே யென்னுதல். இரண்டாமர்த்தத்துக்கு ப்ர மாணம் - யதாஜ்ஞாநம் இத்யாதி. "யதாஜ்ஞாநந்த்வக்ஷ்யாமி புருஷந்தம் ஸநாதநம் । ததைவ்யஸ்யஸ்யைஷ ஸ்தம் ஹிஸவைக: புருஷ: ஸ்ம்ருத:" இதி ஸ்ரீநாராயணே ப்ரஹ்ம ருத்ரஸம்வாதே. அறிந்தவறிந்தவளவுகளிலே சொல்லுகையாவதேதென்ன - அதாவது இத்யாதி. இந்த ப்ரஸங்கத்திலே ஐதிஹ்யம் - வங்கிப்புரத்து நம்பி இத்யாதி. அதாவது - வங்கிப்புரத்து நம்பி, பெருமாளை சேவிக்க வெழுந்தருளினவளவிலே, இடைச்சிகளண்டையிலே யிருந்து ஸேவித்தா ராய், அத்தையாண்டான் கண்டருளி, "ப்ராப்யமான ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயமிருக்க அவர்களண் டைக்கெழுந்தருளுவானென்" என்ன; "நாம் அல்பம் † விரகமாயிருப்போம், 'இவர்களொன்றுமறி யாத கொச்சைகளாகையாலே, 'யஜ்ஞாரோநவஸ்யக்தி' என்கிறபடியே ஈஶ்வரனுடைய

† விரகம் - தந்த்ரமுடையோர்.

நினைப்பது. [தலைத்தலைச்சிறந்துபூசிப்ப] - ஒருவர்க்கொருவர் மேல்விழுந்து மிகவும் ஆஶ்ரயித்துக் கொண்டாட. [திங்களித்யாதி] - சந்த்ரனுக்கு இதஸ்ததஸ்ஸஞ்சரிக்கையாலுண்டான இளைப்பெல்லாம்ஆறும்படியிருக்குமாயிற்று மாடங்களினுடையவோக்கம்; அதிலே ஸந்நிஹிதனானவனே. [திருவைகுந்தத்துள்ளாய்] - அவ்வளவேயன்றிக்கே, திருவைகுந்தத்திலே நின்றருளினவனே. [தேவா] - பரமபதத்திற்காட்டில் ஸம்ஸாரத்தில் நிலையால் வந்த புகர். [இங்கண்மாஞாலத் திதனுளுமொருநாளிருந்திடாய்] - இந்த மஹாப்ருதிவியிலே, திருப்புளிங்குடியிலேயும் ஒருநாளிருந்தருளவேணும். இருக்குமிடத்தில்[வீற்றிடங்கொண்டு]- பரமபதத்திலிருக்குமாபோலே, உன்னுடைய வ்யாவ்ருத்திதோற்ற இருக்கவேணும். "இதனுளும்" - என்கிறதுக்குக் கருத்தென்னென்னில்?—சாய்ந்தருளினவழகு கண்டோமுக்கு, "இவனிருந்தால்எங்ஙனேயிருக்கிறதோ?" என்றும், "இப்படியிருக்கிறவன்றான் நின்றால் எங்ஙனேயிருக்கிறதோ?" என்றும், இங்ஙனே சில அபேக்ஷைகள் பிறக்குமிறே இவர்களுக்கு; அது வேறொருபடியிறே நமக்கு. இவையெல்லாம் நரகாவஹமான விஷயங்களிலேயுண்டு; இவ்விஷயத்தில் தெரியாது. செய்ததெல்லாம் பரிதாகையும், அவ்வருகே சிலபரிமாற்றங்களை யாசைப்படுகையு மெல்லாம் நமக்கு ப்ராக்ருதவிஷயங்களிலே யுண்டாயிருக்கும். இப்படியிருக்குமோ வென்று அறியுமித்தனை. (அ)

ஒன்பதாம் பாட்டு.

வீற்றிடங்கொண்டுவியன்கொள்மாஞாலத்திதனுளுமிருந்திடாய்அடியோம்
போற்றியோவாதேகண்ணிணைகுளிரப்புதுமலராகத்தைப்பருக
சேற்றிளவாளைசெந்நெலூடுகளுஞ்செழும்பணைத்திருப்புளிங்குடியாய்!
கூற்றமாய்அசுரர்குலமுதலரிந்தகொடுவினைப்படைகள்வல்லானே!

---

*கடாக்ஷமிவர்களிடத்திலே பள்ளமடையாயிருக்குங்காணும்' என்றங்கேயிருந்தேன்" என்ன; "அவர்கள் சொன்னதேது, தேவரீரருளிச்செய்ததேது" என்று ஆண்டான் கேட்க; "'பாலுண்பீர், பழமுண்பீர்; பொன்னாலே பூணுநூலிடுவீர்; நூறுபிராயம் புகுவீர்; அழுத்த இரட்டையுடுப்பீர்" என்கிற இது அவர்கள் சொன்னவார்த்தை: '**விஜயஸ்வ, விஜயீபவ**' என்று நான் சொன்னவார்த்தை" என்று நம்பியருளிச்செய்ய; "அங்கே போயும் முருட்டு ஸம்ஸ்க்ருதம் விட்டீரில்லையே, எங்கேயிருந்தாலும் நாம் நாங்காணும், இங்கே யெழுந்தருளீர்" என்று ஆண்டானருளிச்செய்தவார்த்தை. தலைத்தலை - ஒருவர்க்கொருவர். சிறந்து - கிட்டி. பூசிப்ப - ஆஶ்ரயிக்க. திங்கள் சேருகைக்கு ஹேதுவேதென்ன - சந்த்ரன் இத்யாதி. சேருகை - படிகையாய், விஶ்ரமிக்கையாகிறது. இங்கே தீப்தியேதென்ன - பரமபதத்தில் இத்யாதி. "**ஷிவ-ஃகீ ஶா**" இத்யாதி. "கண்" என்று - இடமாய், இடமுடைத்தான இம்மஹாபூமியிலென்றபடி. "இதனுளும்" என்றசமுச்சயார்த்தம் - பரமபதத்தில் இத்யாதி. அது நமக்குக்காண்கிறோமில்லையேயென்ன - அது வேறொரு இத்யாதி. "வேறொருபடி" என்றத்தை விவரிக்கிறார் - இவையெல்லாம் இத்யாதி. இவ்விஷயத்தில் - ஐஶ்வரவத்விஷயத்தில். ஏதத்விவரணம் - செய்ததெல்லாம் இத்யாதி. பரிதாகை - ஸ்த்தூலமாகை. அதாவது - போராதேயிருக்குமென்றபடி. 'திங்கள் சேர்மாடம்' இத்யாரப்ய, 'தேவா - உலகர்களெல்லாம்' என்று தொடங்கி, 'இங்கண்மாஞாலத்திதனுளும் - இடங்கொண்டு - எங்கள் கண்முகப்பே - ஒருநாள் - வீற்று - இருந்திடாய்' இத்யந்வய:. (அ)*

ஆ.—(வீற்றிடங்கொண்டு.) - என்னுடைய கண்ணிணையானது விடாய் தீர்ந்து குளிர உன்னுடைய செவ்விப்பூப்போலேயிருக்கிற திருமேனியை ஓவாதே பருகும்படியாக விஸ்மயநீயமான ஸம்ஸாரத்திலே உன்னுடைய வ்யாவ்ருத்தி தோற்றும்படி ஒருநாளிருந்தருளவேணும்; ஆஶ்ரிதருடைய து:கத்தைப் போக்கவல்லையாயிருந்து அவை செய்யாதொழியலாமோவென்கிறார்.

ஐ.—ஒன்பதாம்பாட்டில், இவ்விருப்பில் வீறறியாதஸம்ஸாரத்திலேயிருக்கிறதென் என்னில்? ஆசையுடைய நாங்கள் நிரந்தரமாகக் கண்டுவாழுகைக்கு என்கிறார்.

[வீற்றிடங்கொண்டென்று தொடங்கி] - உன்னைக்கொண்டு கார்யமின்றிக்கே செல்லுகிற விஸ்மயநீயமான ஸம்ஸாரத்திலே உன்னுடைய வேண்டற்பாடு தோற்றும்படி ஒருநாளிருந்தருளவேணும். இதில் உமக்கு ப்ரயோஜநம் என்னென்னில்?- அநந்யப்ரயோஜநரான நாங்கள் கண்களின் விடாய் கெடும்படி செவ்விப்பூப்போலே யிருக்கிற திருமேனியை வாழ்த்தி நிரந்தரமாக அநுபவிக்கும்படி. [சேறுஎன்று தொடங்கி] - செந்நெலின் நடுவே சேற்றிலே இளவாளைகள் களித்துத் துள்ளாநின்றுள்ள அழகிய நீர்நிலத்தையுடைய திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதனானவனே! ம்ருத்யுபோலே அஸுரருடைய குலங்களைப்போக்கவல்லையாய் அதுக்கு உபாயமாய்க் கொடிய ப்ரவ்ருத்திகளையுடைய திவ்யாயுதங்கள் கைவந்திருக்குமவனே! இது பண்டு தம்முடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கினபடிக்கு த்ருஷ்டாந்தம்.

ப.—அநந்தரம், நிரதிஶயஸுகுமாரமான உன் வடிவை நாங்கள் கண்டநுபவிக்கை ப்ரயோஜநமாக இந்த விஸூசதியிலே எழுந்தருளியிருக்கவேணுமென்கிறார்.

சேறு - தன்னிலமான சேற்றிலே வளருகையாலே, இளம்வாளை - இளகிப்பதித்தவாளைகள், செந்நெலூடு - செந்நெலூடே, உகளும் - உகளிக்களித்து வர்த்திக்கக்கடவதாய், செழு - ஸம்ருத்தமான, பணை - நீர்நிலங்களையுடைய, திருப்புளிங்குடியாய் - திருப்புளிங்குடியிலே வர்த்திக்கிறவனாய், கூற்றமாய் - ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவாய்க்கொண்டு, அசுரர்குலம் - அசுரகுலத்தை, முதல் - கர்ப்பபர்யந்தமாக, அரிந்த - அறுத்துப்போகடுமவனாய், கொடுவினை - அதுக்கீடான கொடுந்தொழிலையுடைய, படைகள் - ஆயுதங்களை, வல்லானே - விதேயமாகவுடையனானவனே! அடியோம்-உனக்கு அஸாதாரண ஶேஷபூதரான நாங்கள், போற்றி-மங்களாஶாஸநம்பண்ண, ஓவாதே - இடைவிடாதே, கண்ணிணை - கண்ணிணையானது, குளிர - பரிதாபம் தீர்ந்து குளிரும்படியாக, ("சோவநாஸ்ராவிவஹிவ" என்கிறபடியே), புதுமலர் - செவ்விப்பூப்போலே புஷ்பஹாஸஸுகுமாரமான, ஆகத்தை - உன்வடிவை, பருக - த்ருஷ்ணாநுரூபமாக அநுபவிக்கும்படி, வீற்றிடங்கொண்டு - (உன்னுடைய ஸர்வாஶ்ரகத்வத்தால்வந்த) வேறுபாடு விஸ்த்ருதமாய்க்கொண்டுதோற்றி, வியன்கொள் - விஸ்தாரவத்தாய், மா - ஶ்லாக்யமான, ஞாலத்து இதனுளும்-இந்த ஜகத்தினுள்ளேயும், இருந்திடாய் - இருந்தருளவேணும்.

இ.—ஒன்பதாம்பாட்டில், இவ்விருப்பில் வீறறியாத ஸம்ஸாரத்தில் இருக்கிறதென்னென்னில்,—ருசியுடைய நாங்கள் கண்டு அநுபவிக்கைக்கென்கிறார்.

[வீற்றிடங்கொண்டு] - ஶேஷித்வத்தால்வந்த வேறுபாடு தோற்றும்படி. [வியன்கொள் இத்யாதி] - விஸ்மயநீயமான மஹாப்ருதிவியான இதிலேயுமிருந்திடாய்.

உன்னைக்கொண்டுகார்யமின்றிக்கே அர்யபரமான ஸம்ஸாரத்திலே உன்னையொழியச் செல்லாமையுடையார் முன்பேயிருக்குமது உனக்கேற்றமோ? இதில் உமக்குப்ரயோஜநமென்னென்னில்,—[அடியோம்] - அநந்யப்ரயோஜநரான நாங்கள். [போற்றி] - அவ்விருப்பு நித்யமாய்ச்செல்லவேணுமென்று மங்களாஶாஸநம் பண்ணி. [ஓவாதே] - உச்சிவீடு விடாதே. [கண்ணிணைகுளிர] - கமர்பிளந்தகண்கள் விடாய்கெட்டுக் குளிரும்படி. [புதுமலராகத்தைப்பருக] - செவ்விப்பூப்போலேயிருக்கிற திருமேனியையநுபவிக்கும்படியாக புஷ்பஹாஸஸுகுமாரமானவடிவை "யௌவநாஹ்யாம்விஶேஷிவ" என்கிறபடியே நிரந்தரமாக அநுபவிக்கப்பெறுகை. [சேற்றிளவாளை இத்யாதி] - செந்நெலின் நடுவே சேற்றிலே பஞ்சவிம்ஶதிவார்ஷிகரான முக்தரைப்போலேயிருக்கிற வாளைகள் களித்துத்துள்ளாநிற்பதான அழகிய நீர்நிலத்தையுடைய தேஶம். [செழும்பணை]- அழகிய மருதநிலமென்றுமாம். [கூற்றமாயித்யாதி] - ம்ருத்யுபோலே ப்ரதிபக்ஷத்தை நிஶ்ஶேஷமாகப் போக்கவல்லையாய். அதுக்குஉறுப்பாகக் கொடிய தொழிலையுடைய திவ்யாயுதங்கள் கைவந்திருக்குமவனே! ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவான திவ்யாயுதமென்னவுமாம். இதுக்கு முன்பு தம்முடைய ப்ரதிவந்தகங்களைப் போக்கினபடிக்கு த்ருஷ்டாந்தமென்னுதல்; உனக்கென்ன அஶக்தி உண்டாய் நான் இழக்கிறேனென்னுதல்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. 'இவ்விருப்பில் வாசியறியாத ஸம்ஸாரத்திலேயிருக்கிறதென்?' என்னில்,—ருசியுடைய நாங்கள் கண்டநுபவிக்க என்கிறார்.

[வீற்றிடங்கொண்டு] - ஶேஷித்த்வத்தால்வந்த வேறுபாடு தோற்றும்படி. [வியன்கோள் இத்யாதி]-விஸ்மயநீயமான மஹாப்ருதிவியான இதிலேயுமிருந்திடாய் உன்னைக்கொண்டு ஒருகார்யமில்லாத ஸம்ஸாரத்திலே. [இதனுளும்இருந்திடாய்] - இந்தத் திருப்புளிங்குடியாகிற திருப்பதியிலேயும் இருந்திடாய். உன்னை யொழியச் சேல்லாமையுடையார் முன்னேயிருந்தாயென்னும் இது போருமோ?[இதனுளும்இருந்திடாய்] - சாய்ந்தருளினபோதிருக்கும் இருப்பை யநுபவிப்பித்தருளிற்று. இனி, இருந்தால் இருக்குமழகையும் அநுபவிப்பித்தருளவேணும். "நமக்கு இவையெல்லாம் இங்கேகாணலாமிறே: சாய்ந்தருளினஅழகு, பெரியபெருமாள்பக்கலிலேகாணலாம்; நின்றருளினவழகு, நம்பெருமாள் பக்கலிலே காணலாம்; இருப்பிலுண்டானவழகு, பெரியபிராட்டியார்பக்கலிலே காணலாம்"என்று பட்டர் அருளிச்செய்வர். நாம் இங்கிருந்து நீர் பெறப்புகிற பேறு ஏதென்ன?- [அடியோமித்யாதி] - அடியோம் - அவ்விருப்பைப்படிவிட, அதுவே ஜீவநமாகவிருக்கிற

ஒன்பதாம்பாட்டு.—வீற்றிடம் இத்யாதி. "வீற்றிடங்கொண்டு" என்று தொடங்கி "புதுமலராகத்தைப்பருக" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - இவ்விருப்பில் இத்யாதி.

இடங்கொண்டு - இத்தை ஸ்தாநமாகக் கைக்கொண்டு. "இதனுளும்" என்றதுக்கு இரண்டர்த்தம். மாஞாலமான இந்த பூமியிலும் என்று முந்தினது; இத்தையருளிச்செய்கிறார் - விஸ்மயநீயமான இத்யாதி. மாஞாலத்தில் வைத்துக்கொண்டு இந்தத் திருப்புளிங்குடியிலுமென்று இரண்டாமர்த்தம்; இத்தை யருளிச்செய்கிறார் - இந்தத் திருப்புளிங்குடி இத்யாதி. "இதனுளும்" என்கைக்கு இதுக்குத்தண்மையேதென்ன - உன்னைக்கோண்டு இத்யாதி. நித்யஸூரிகள் நடுவே யிருக்கக்கடவ நமக்கு இங்கே யிருக்கவேண்டுவானென்னென்ன - உன்னையொழிய இத்யாதி. த்விதீயார்த்தத்துக்கு "இதனுளும்" என்ற ஶப்தார்த்தம் - சாய்ந்தருளின இத்யாதி. இங்கே காணலாம் என்றது-கோயிலிலே காணலாமென்றபடி. இவையெல்லாம் என்றது - கிடையழகும், இருப்பழகும், நிலையழகும். ஆகத்தை - திருமேனியை, ஆகம் - திருமேனி. விவரணம் - புஷ்ப

நாங்கள். [போற்றி]-இவ்விருப்புஇங்ஙனே நித்யமாகச் செல்லவேணுமென்று மங்களாஶாஸநம்பண்ணி. [ஓவாதே] - உச்சிவிடுவிடாதே. [கண்ணிணை குளிர] - காணப்பெறுமையாலே கமர்பிளந்துகிடக்கிறகண்கள், விடாயெல்லாந்தீர்ந்து குளிரும்படியாக. [புதுமலர் இத்யாதி] - செவ்விப்பூப்போலேயிருக்கிற திருமேனியை யநுபவிக்கும்படியாக. புஷ்பஹாஸஸுகுமாரமானவடிவை, "லோசநாப்யாம் பிபந்நிவ" (லோசநாப்யாம்பிபந்நிவ) என்கிறபடியே நிரந்தரமாக அநுபவிக்கப்பெறுகை. [சேற்றிளம் இத்யாதி] – அவ்வூரில் பதார்த்தங்களுடைய* அபிமதலாபத்தாலே களித்துவர்த்திக்குமாயிற்று. செந்நெலின் நடுவே சேற்றிலே, பஞ்சவிம்ஶதிவார்ஷிகரான முக்தரைப்போலேயிருக்கிற வாளைகள் களித்துத் துள்ளாநிற்பதான அழகியநீர்நிலத்தையுடைய. [செழும்பணை] - அழகியமருதநிலமென்றுமாம். [கூற்றமாய் இத்யாதி] - ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவான திவ்யாயுதங்களை தரித்துக்கொண்டிருக்கிறவென்னுதல்; அன்றிக்கே, ப்ரதிபக்ஷத்துக்குக் கூற்றமாய்க்கொண்டு அவர்களுடைய குலத்தை முதலிலேயரிந்து போகடுமவனாய், அதுக்கு உடலாகக் கொடியதொழில்களையுடைய திவ்யாயுதங்களையுடையனாயிருக்கிறவன் என்னுதல். இப்போது இதுசொல்லுகிறது— இதுக்குமுன்பு, தம்முடைய ப்ரதிபந்தகங்களைப்போக்கினபடிக்கு த்ருஷ்டாந்தமென்னுதல்; உனக்கு என்னகுறையுண்டாய் இழக்கிறேன் என்னுதல். (௯)

———

பத்தாம் பாட்டு.

———

கோடுவினைப்படைகள்வல்லையாய்அமரர்க்கிடர்கெடஅசுரர்கட்கிடர்செய்
கடுவினைநஞ்சே!என்னுடையமுதே!கலிவயல்திருப்புளிங்குடியாய்
வடிவிணையில்லாமலர்மகள்மற்றைநிலமகள்பிடிக்கும்மெல்லடியை
கொடுவினையேனும்பிடிக்கநீயொருநாள் கூவுதல்வருதல்செய்யாயே.

ஆ.— (கொடுவினை.) - ஆஶ்ரிதவிரோதிநிரஸந ஸமர்த்தனுமாய், ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவனுமாய், எனக்கு நிரதிஶயபோக்யனாய், திருப்புளிங்குடியிலே வந்து ஸந்நிஹிதனானவனே! வடிவழகுக்கொப்பில்லாத பெரியபிராட்டியாரும், அப்படியே

ஸ்ரோஸ இத்யாதி. "தஸ்ய தத்வசநம் ஶ்ருத்வா ராமோ வசநமப்ரவீத் । வசஸா ஸாந்த்வயி
த்வைநம் லோசநாப்யாம் பிபந்நிவ" இதியுத்தகாண்டே. (௧௯-௭) "புதுமலராகத்தை-ஓவாதே-
பருக" என்றந்வயிப்பது. இப்பதத்துக்கு பாவம் - அவ்வூரில் இத்யாதி. உகளுகை - ஸம்ப்ரம
மாக ஸஞ்சரிக்கை. செழும்பணை - ஸம்ருத்தமானவயல். மருதநிலம் - நாடுசார்ந்தப்ரதேசம்.
ஜலஸ்தலமாதல். "கூற்றமாய்" என்றது - திவ்யாயுதவிசேஷணமாதல்; ஈஶ்வரவிசேஷண
மாதல். இரண்டையும் அருளிச்செய்கிறார் - ப்ரதிபக்ஷத்துக்கு இத்யாதி வாக்யத்வயத்தாலே.
த்விதீயார்த்தத்திலே "கொடுவினைப்படைகள்வல்லானே" என்றதுக்கர்த்தம் - அதுக்குஉடலாக
இத்யாதி. இதுசொல்லுகிறதுக்கு ப்ரயோஜநத்தை இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - இப்
போது இத்யாதிவாக்யத்வயத்தாலே. என்னகுறையுண்டாய்இழக்கிறேன் என்றது-விரோதியைப்
போக்கப் பரிகாரமில்லாமலோ, ஶக்தியில்லாமலோ இழக்கிறேன்? என்றபடி. 'சேற்றிளவாளை' என்று
தொடங்கி, படைகள்வல்லானே - அடியோம்போற்றி - கண்ணிணைகுளிரப் புதுமலராகத்தை -
ஓவாதே பருகும்படி - வியன்கொள்மாஞாலத் திதனுளும் - இடங்கொண்டு - வீற்று இருந்
திடாய் இத்யந்வய: (௯)

யிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியும் கூசிஸ்பர்ஶிக்கவேண்டும்படி ஸுகுமாரமான உன்னுடைய திருவடிகளை, அதில்போக்யதையையறிந்துவைத்து இழக்கைக்கீடான பாபத்தைப் பண்ணின நானும்பிடிக்கும்படி, என்னையொருநாள்அங்கே யழைத்துக் கொள்ளுதல், இங்கே வருதல் செய்தருளவேணுமென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், மிகவும் போக்யமான உன்திருவடிகளிலே நானும் வந்து அடிமைசெய்யும்படி என்னை அங்கே அழைத்துக்கொள்ளுதல், இங்கேவருதல் செய்தருளவேணு மென்கிறார்.

[கொடுவினைப்படைகள் வல்லையாய்] — உனக்கு ஶேஷமாய்வைத்தே உன்னோடு ப்ரதிகூலித்த சேதநர்பக்கல், நீரிலே நெருப்பெழுந்தாற்போலே சீறி ஆயுயமெடுக்கவல்லையாய். [அமரர்க்கென்று தொடங்கி] - தேவர்களுடைய ஸர்வ து:கங்களும் போம்படி அஸுரர்க்கு து:ஸ்ஸஹமான து:கத்தை விளைக்குமபடியான ப்ரத்யௌஷதமில்லாத நஞ்சாய் எனக்கு நிரதிஶயபோக்யனுய்த் திருப்புளிங்குடியிலேவந்து ஸந்நிஹிதனானவனே! [வடிவிணை யென்று மேலுக்கு]-வடிவழகுக்கு ஒப்பில்லாத பெரிய பிராட்டியாரும் அப்படியிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியாரும் கூசி ஸ்பர்ஶிக்கவேண்டும்படி ஸுகுமாரமான திருவடிகளை அதில் போக்யதையை யறிந்துவைத்து இழக்கைக்கீடான பாபத்தைப்பண்ணின நானும் பிடிக்கும்படி.

ப.—அநந்தரம், நாய்ச்சிமாரை யடிமைகொண்டருளினாற்போலே நானும் உன் திருவடிகளிலே யடிமைசெய்யும்படி, என்னை யங்கேயழைதல் இங்கே வருதல் செய்தருளவேணு மென்கிறார்.

கொடுவினை - விரோதிவிஷயத்தில் கொடுந்தொழிலான, படைகள் - ஆயுதங்களை, வல்லையாய் - (கார்யங்கொள்ள) வல்லையாய், அமரர்க்கு - அநுகூலரான தேவர்களுடைய, இடர் - து:கம், கெட - தீரும்படி, அசுரர்கட்கு - ப்ரதிகூலரானவசுரர்கட்கே, இடர் - து:கத்தை, செய் - விளைக்குமிடத்தில், கடு - சடக்கென்னும், வினை - ப்ரவ்ருத்தியையுடைய, நஞ்சே - நஞ்சானவனாய், என்னுடை - (அநந்யப்ரயோஜநனாய் அநந்யகதியான)எனக்கு, அமுதே-(அலப்யமான)அம்ருதமாய்,(அத்யாஸந்நமாம்படி), கலி - ஸம்ருத்தமான, வயல் - வயலையுடைய, திருப்புளிங்குடியாய் - திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே! ("சுவிஶேதக்ஷிணா" என்னும்படி), வடிவு - வடிவழகுக்கு, இணையில்லா-நீயும் தகுதியில்லாதபடியான அதிஶயிதவைலக்ஷண்யத்தையுடைய, மலர்மகள் - கமலவாஸிநியானலக்ஷ்மியும், மற்றை - ஏவம்பூதவைலக்ஷண்யத்தையுடைய, நிலமகள் - ஸ்ரீபூமியும், பிடிக்கும் - (தஙகளுடைய ஸ்வாபாவிக மார்த்தவத்தையுடைய திருக்கைகளாலே) பிடிக்கும்படியான, மெல் - நிரதிஶயஸௌகுமார்யத்தையுடைய, அடியை - திருவடிகளை, கொடுவினையேனும் - (ப்ராபதனுய்வைத்து நெடுங்காலமிழக்கும்படி) கொடியபாபத்தையுடைய நானும், பிடிக்க - பிடிக்கும்படியாக, நீ கூவுதல் - நீ அங்கேயழைத்துக்கொள்ளுதல், வருதல்-(நான்அபேக்ஷித்தபடி இங்கே)வந்தருளுதல், ஒருநாள் செய்யாய் - ஒருநாள் செய்யவேணும்.

இ.—பத்தாம்பாட்டில், நிரதிஶயபோக்யமான உன்திருவடிகளிலே நானும் வந்து அடிமை செய்யும்படி என்னை யங்கேயழைத்தல் இங்கேவருதல் செய்தருளவேணுமென்கிறார்.

[கொடுவினைப் படைகள் வல்லையாய்] - உனக்கு ஶேஷமாய்வைத்து ப்ரதிகூலித்தவர்கள்பக்கல் நீரிலே நெருப்பெழுந்தாற் போலே சீறி, ஆயுதமெடுக்கவல்லையாய். "சிலரை அழியச்செய்ய" என்றால் ஶக்தனன்றிக்கேயிருக்கை. "யதிவா ராவண: ஸ்வயம்" என்றிறேயிருப்பது. "நநமேயம்" என்று ப்ராதிகூல்யம் மிகைத்தாலும், "ஹநூமஜ்ஜாநாதி" என்று பின்பு கண்ணுங் கண்ணநீருமாய் நின்றிறே கொல்லுவது? [அமரர்க்கிடர் கெட] - அஸுரர்களாலே தேவர்களுக்குஉண்டான து:க்கம் தீரும்படி. [அசுரர்க்கிடர் செய்] - அஸுரர்க்கு து:கத்தை விளைக்கும். [கடுவினை நஞ்சே] - சடக்கென முடிக்கவற்றாய் ப்ரத்யௌஷதமில்லாத நஞ்சானவனே! [என்னுடை அமுதே] - எனக்கு நிரதிஶயபோக்யனானவனே! ஸாத்யமான தேவர்கள் அமுதன்று. [கலிவயல் திருப்புளிங்குடியாய்] - ஸ்வர்கத்திற் போகவேண்டா; கடலைக் கடைய வேண்டா; திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதமாயிற்று இவருடைய அம்ருதம். [கலி வயல்] - ஸம்ருத்தமான வயல். [வடிவிணை இத்யாதி] - இவ்வடிவில்வந்தால் ஒப்பில்லை. ஐஶ்வத்தத்த்வமும் ஒப்பன்று; "தவைநய ஸ்ரீஶ்தேக்ஷணா" என்று அற்றாய் நின்றதிறே. [மற்றை நிலமகள்] - அப்படிப்பட்ட நிலமகள். ஸஹவாஸத்தைச்சொன்னபடி மித்தனை. [பிடிக்கும் மெல்லடியை] - அவர்களும் கூசித் தொடவேண்டும்படி ஸுகுமாரமான திருவடிகளை. [கொடுவினையேனும் பிடிக்க] - "அவர்கள் ஸந்நிதியுமுண்டாயிருக்க இழப்பதே!" என்னும்இன்னாப்பாலே சொல்லுகிறார். * கண்கள் சிவந்துக்குப் பின்பு நிகர்ஷாநுஸந்தாநமில்லை. நிரதிஶயபோக்யனாய் ஸந்நிஹிதனான நீ ஸத்தையை நோக்குகைக்கு ஒருநாள் அங்கே அழைத்தல், இங்கேவருதல் செய்தருளவேணும். வருதல் என்கிற இத்தை முந்துறச் சொல்லாதொழிந்தது, அந்தஸமுதாயத்தைக் காணவேணுமென்னும் நசையாலே.

ஈடு.—பத்தாம்பாட்டு. நிரதிஶயபோக்யமான உன்னுடைய திருவடிகளிலே நானும் வந்து அடிமைசெய்யும்படி, என்னையங்கேயழைத்தல், நீஇங்கேவருதல் செய்யவேணுமென்கிறார்.

[கொடுவினைப்படைகள்வல்லையாய்] - நீரிலேநெருப்பெழுந்தாற்போலே, உனக்கு ஶேஷமாய்வைத்து ப்ரதிகூலித்தவர்கள்பக்கல்சீறி, ஆயுதமெடுக்கவல்லையாய். அவன் மாட்டாதது சிலரையழியச்செய்கையாயிற்று; "யதிவா ராவண: ஸ்வயம்" (யதிவா (ராவணஸ்ஸ்வயம்) என்னுமவனிறே. கடலையணைசெய்து, ஊரைச்சூழப்போந்து, பின்னை அங்கதப்பெருமாளைப்புகவிட்டு, கையிலேவந்தகப்பட்டவனை. "ஹநூமஜ்ஜாநாதி"

பத்தாம்பாட்டு.—கொடுவினை இத்யாதி. "வடிவிணையில்லா மலர்மகள்" என்று தொடங்கி, "கூவுதல்வருதல்செய்யாய்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - நிரதிஶய இத்யாதி. கீழேயெல்லாம் ஸந்நிஹிதனாக அருளிச்செய்து, இங்கே, "கூவுதல்வருதல் செய்யாய்" என்றது - மாநஸாநுபவ வைஶத்யத்தாலே ஸந்நிஹிதனாகவும், அது கலங்கினவாறே, தாம் இங்கும் அவன் அங்குமாகத்தோற்றுகையாலே. கொடிதான வ்யாபாரத்தையுடைய ஶத்ருஸேநையை முடிக்க வல்லையாயென்று ஶப்தார்த்தம். * ப்ரஸக்தஸ்யஹி ப்ரதிஷேத: அன்றோ? "வல்லையாய்" என்று, ஸர்வஶக்திக்கு அஶக்திப்ரஸங்கமேதென்ன - நீரிலே இத்யாதி. அப்படிமாட்டாதொழிவென்ன - யதிவா இத்யாதி. "ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா। விபீஷணோ வா ஸுக்ரீவ யதிவா ராவண: ஸ்வயம்" இதியுத்தகாண்டே ராம:. ஆனாலும் ஸம்ஹரித்தானே யென்ன - கடலை இத்யாதி. "ஹநூமஜ்ஜாநாதிரணாதுதல்லம் ப்ருவிஶ்ராநதிஶவராஜ

(கச்சாநுஜாநாமி) என்று தப்பவிட்டது, ''இன்னமோருகால் அநுகூலிக்குமோ?'' என்று; ''நான்முடிந்தேபோமித்தனை'' என்று அவன் அதிலேமுதிரநின்றபின்பு, கண்ணுங்கண்ணீரு மாயிறே நின்றுகொன்றது. இவர்கள் பண்ணும் ப்ராதிகூல்யத்தாலே யழியச்செய்யுமித்தனை போக்கி, தானுகஅழியச்செய்யமாட்டானுயிற்று. [அமரர் இத்யாதி] — அஸுரர்களாலே தேவர்களுக்கு உண்டான து:கந்தீரும்படி, அஸுரர்களுக்கு து:க்கத்தைவிளைக்கும். [கடு வினைநஞ்சே] - அப்போதே சடக்கெனமுடிக்கவற்ருய், ப்ரத்யௌஷதமில்லாத நஞ்சான வனே! [என்னுடை யமுதே] - அந்நஞ்சுதானே இவர்க்கு அம்ருதமாயிருக்கிறபடி. தேவர்க ளுடையஉப்புச்சாறன்று. [கல்வயல்இத்யாதி] - இவ்வம்ருதத்துக்குக் கடல்கடைதல், ஸ்வர்க் கத்திலேபோதல் செய்யவேண்டா; திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதமாயிற்றிவ்வம்ருதம். [கலி வயல்] - ஸம்ருத்தமான வயல். [வடிவிணையித்யாதி] - வடிவில்வந்தால் ஒப்பின்றிக்கேயிருக் கும். ஸௌலப்யத்வமும் ஒப்பன்று; ''தஞ்சேயமஸிதேக்ஷணா'' (தஞ்சேயமஸிதே க்ஷணு) என்றுஏற்றமாயே நிற்கிறதிறே. [மற்றைநிலமகள்] - ஏவம்ஸ்வபாவையென்னுமத்தனை யவளையும். [பிடிக்கும்மெல்லடியை] - அவர்களுந்திருவடிகளைப் பிடிக்கப்புக்கால், பூத்தொடு வாரைப்போலே ''கன்றுகிறதோ?'' என்றுகூசித் தொடவேண்டும்படியாயிற்று ஸௌகுமார் யமிருப்பது; அப்படிபட்டதிருவடிகளை. [கொடுவினையேனும்பிடிக்க] - * கண்கள்சிவந் துக்குப்பின்பு இவர்க்கு நிகர்ஷாநுஸந்தாநமல்லையிறே. ''அவர்களும் ஸந்நிஹிதராய், ப்ராப் தியுமுண்டாயிருக்க, நான்இகழ்ந்திருப்பதே!'' என்று, ''பாவியேன்'' என்பாரைப்போலே, 'கொடுவினையேன்' என்கிறார். [நீயொருநாள் கூவுதல்வருதல்செய்யாயே] - † (நிரதி சயபோக்யனுய் ஸந்நிஹிதனுன நீ, ஸத்தையைநோக்குகைக்குஒருநாள் அங்கேயழைத் தல், இங்கேவருதல் செய்தருளவேணும். முற்பட 'வருதல்' - என்றிலராயிற்று, அஸ்ஸமு தாயத்தைக் குலைக்கவொண்ணுதேனுமத்தாலே. அபேக்ஷையுடையார்பக்கல் அவனைத் தனிவிட்டிராரகளிறே, கூடககொடுவருவர்களென்னுமத்தைப்பற்றச் சொல்லுகிறார். (க0)

ஸுக்ஷாழ் । ஸூஸ்ஸிநாஹாயீஸயநீதஷாபஸம்ஊக்ஷ்யவிரோயஷு:'' இதியுத்த காண்டே. ''ரேணாஹாதிமெவராணீ'' ''ஸக்ஷாதபாஷு:வராவீரஹஜா'' இத்யாத் யுக்த ஸ்வபாவத்தைப்பற்ற - கண்ணுங்கண்ணீருமாய் என்றது. கண்ணும் கண்ணீருமானுல் கொல்லக்கூடுமோவென்ன - இவர்கள்பண்ணும் இத்யாதி. க்ரூரவ்யாபாரத்தையுடைய நஞ்சே யென்று பதார்த்தம். நஞ்சின க்ரௌர்யத்தை த்வேதா அருளிச்செய்கிறார் - அப்போதே இத் யாதி. 'அந்நஞ்சுதானே' இத்யாதிக்கு - அஸுரவர்க்கத்துக்கு பாதகனுயிருக்குமிருப்பு, தமக்கு போக்யமாயிருக்குமென்றுகருத்து. ''என்னுடை யமுதே'' என்றதுக்கு வ்யாவர்த்யம் - தேவர் களுடைய இத்யாதி. ''கலிவயல் திருப்புளிங்குடியாய்'' என்கிறத்தாலும் அவ்வம்ருதத்தில் வ்யா வ்ருத்தி - இவ்வம்ருதத்துக்கு இத்யாதி. கலி - ஸம்ருத்தி. இணை - ஒப்பு. ஓப்பில்லாமையின் சரமாவதி - ஸௌலப்யத்வமும் இத்யாதி. ஆதிக்யமேதென்ன - தஞ்சேயம் இத்யாதி. ''தாஜு ஸீலவயொவூதாம்தாஜுாஹிஜாமுக்ஷணாழ் । ராவஜெயாஹாபிஜெவஜெஹீம்தஞ்சே யமஸிதேக்ஷணா'' இதி ஸுந்தரகாண்டே ஹநுமாந். மற்றை - தத்துல்யையான. ''மெல்லடி' என்றுவிசேஷித்ததுக்குபாவம் - அவர்களும் இத்யாதி. ''கொடுவினையேன்'' என்றவிது, அயோக்யதாநுஸந்தானபரமோவென்ன; அன்று என்கிறார் - கண்கள் இத்யாதி. ஆனுல் ''கொடு வினை'' என்கிறதுக்கர்த்தமேதென்ன - அவர்களும் இத்யாதி. முந்துற ''வருதல்'' என்னு தொழிவானென்னென்ன - முற்பட இத்யாதி. பிற்படத்தான் ''வருதல்'' என்ருல் அஸ் ஸமுதாயங்குலையாதோவென்ன - அபேக்ஷை இத்யாதிவாக்யத்வயம். க்ரமேணுந்வய:. (ய)

பதினோராம் பாட்டு.

கூவுதல் வருதல் செய்திடாயென்று குரைகடல் கடைந்தவன்தன்னை
மேவிநன்கமர்ந்தவியன்புனல்பொருநல் வழுதிநாடன் சடகோபன்
நாவியல்பாடலாயிரத்துள்ளும்இவையுமோர்பத்தும்வல்லார்கள்
ஓவுதலின்றிஉலகமூன்றளந்தான்அடியிணைஉள்ளத்தோர்வாரே.

ஆ.—(கூவுதல்) - குரைகடல்கடைந்தவன் தன்னை பரமப்ராப்யமாகப்பற்றி, கூவுதல் வருதல் செய்திடாயென்று அபேக்ஷித்த வியன்புனல் பொருநல்வழுதிநாடன் சடகோபன் நாவியல்பாடலாயிரத்தில் இத்திருவாய்மொழியைவல்லார், ஆஶ்ரிதஸுலபனை எம்பெருமானுடைய திருவடிகளை நிந்தரமாக ஹ்ருதயத்திலே யநுபவிக்கப்பெறுவரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் எம்பெருமானை நிரந்தரமாக பூஜிக்கப்பெறுவரென்கிறார்.

"கூவுதல் வருதல்" என்று தொடங்கி - இப்பாட்டுக்கெல்லாம் ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுடைய அபேக்ஷிதம் பூர்க்கைக்காக. கடலைக் கடைந்தருளின - எம்பெருமானை இத்தன்மையை யுடையையான நீ, என்னை அங்கேயழைத்தல் இங்கே வருதல்செய்து என் அபேக்ஷிதத்தைப் பூர்க்கருளவேணும் என்றர்த்தித்து, அப்படியே பூர்ணமாகப் பெறுகையாலே ஸம்ருத்தமான திருவழுதி நாட்டையுடைய ஆழ்வாருடைய அநாயாஸமான வாக்ப்ரவ்ருத்தியையுடைய ஆயிரம் திருவாய்மொழியிலும் விலக்ஷணமான இத்திருவாய்மொழி வல்லார்கள் ஆஶ்ரிதஸுலபனை எம்பெருமானுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்தில் அநுபவிக்கப்பெறுவர் ;—ஆராவமுதில் ஆர்த்தருடைய ஆர்த்திதீர்க்கும் ஸ்வபாவனையிருந்து வைத்து என்னுடைய ஆர்த்தி தீர்க்கிலனென்று இன்னாதானார் : இங்கு - பரமபதத்தில் வாய்வைத்து என்னை அங்கீகரிக்கிலனென்றும், ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளினால் திருவடப்பலசாதேதா வென்றும் இன்னாதாகிறார்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக பகவத்ஜ்ஞாநலாபத்தை யருளிச்செய்கிறார்.

(ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்காக) குரை - அதிகோஷத்தை யுடைத்தான, கடல் - கடலை, கடைந்தவன்தன்னை - கடைந்தவனை ஸர்வேஶ்வரனை, கூவுதல் - அங்கேயழைத்துக்கொள்ளுதல், வருதல் - (நானிருந்தவிடத்தில்) வருதல், செய்திடாய் - செய்யவேணும், என்று - என்றபேக்ஷித்து, மேவி - அவனுடைய அங்கீகாரத்தைப் பெற்று, (அத்தாலே), நன்கு - நன்றாக, அமர்ந்த - தரித்தவராய், வியன் - ஸம்ருத்தமான, புனல் - ஜலத்தையுடைத்தான, பொருநல் - திருப்பொருநலையுடைத்தான, வழுதிநாடன் - திருவழுதிநாட்டுக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடைய, நாவியல் - ஜிஹ்வாவ்யாபாரமான, பாடல் ஆயிரத்துள்ளும் - பாடல் ஆயிரத்துள்ளும்வைத்துக் கொண்டு, ஓர் - அத்விதீயமான, இவையுப்பத்தும் - இப்பத்தையும், வல்லார்கள் - வல்லவர்கள், மூன்றுலகம் - த்ரைலோக்யத்தையும், அளந்தான் - அளந்துகொண்ட ஸர்வ

ஸௌலப்யன், அடி - திருவடிகள், இணை - இரண்டையும், ஓவுதல் - ஓவுதல், இன்றி -, உள்ளத்து - நெஞ்சிலே, ஓர்வார் - அநுஸந்திக்கப்பெறுவர்கள். இது எழுசீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் அவனை நிரந்தரமாக அநுபவிக்கப்பெறுவர் என்கிறார்.

[குரைகடல் கடைந்தவன் தன்னை] - கூவுதல்வருதல் செய்திடாய் என்று ப்ரயோஜநாந்தரபரருடைய அபேக்ஷிதம் பூரிக்கைக்குக் கடல்கடைந்தவனை யாயிற்று ஆச்ரயித்தது. இச்சீலத்தையறிந்து, முறைகெடவாகிலும் முறையாலேயாகிலும் கண்டுகொண்டு நிற்கவேணுமென்றாயிற்றுச் சொல்லிற்று. [மேவி நன்கமர்ந்த] - இஸ்ஸ்வபாவத்தை யநுஸந்தித்து அத்தாலே „ரித்த. [வியன்புனல் இத்யாதி] - அத்தாலே விஸ்மயநீயமான ஜலத்தையுடைய திருப்பொருநலையுடைத்தான திருவழுதிவளநாட்டையுடைய ஆழ்வார். [நாவியல் பாடல்] - மனஸ்ஸஹகாரமின்றிக்கே சொன்னவை. [ஆயிரத்துளிவையும் பத்தும் வல்லார்கள்] - விலக்ஷணமான இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார் ஆச்ரிதஸௌலப்யனுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்திலே அநுபவிக்கப்பெறுவர். "யதி நாமஸக்ருதபி கச்சதி" என்று இது தன்னைப் பேறாகச் சொல்லிற்றிறே. * ஆராவமுதில் ஆர்த்தரக்ஷணம் பண்ணுமவன் என்னுடைய ஆர்த்தி தீர்க்கிறிலன் என்றார். இந்த-பரமஸௌசீல்யவாய் வைத்து என்னை அங்கீகரித்திலனென்றும், ஏகரூபமாகக் கண்வளர்ந்தருளினால் திருவுடம்பலசாதோ என்றும் இன்னாதாகிறார்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார், அவனை நிரந்தரமாக அநுபவிக்கப்பெறுவரென்கிறார்.

[கூவுதல்இத்யாதி] - 'குரைகடல்கடைந்தவன்றன்னை கூவுதல்வருதல்செய்திடாய்'என்றாயிற்றுஇவர்சொல்லிற்று. முறைகெடவுமாம். முறையிலேயாகவுமாம், காணுமித்தனையேவேண்டுவது. [குரைகடலித்யாதி] - இவ்வபேக்ஷையில்லாதார்க்கும் உடம்புநோவக்கடல்கடைந்து அம்ருதங்கொடுக்குமவனையாயிற்று இவர் அபேக்ஷித்தது [மேவிநன்கமர்ந்த] - இந்தஸ்வபாவாநுஸந்தாநத்தாலேபொருந்திக் கால்தரையிலேபாவினாராயிற்று. [வியனித்யாதி] - விஸ்மயநீயமான நீரையுடைய திருப்பொருநலையுடைய திருவழுதிவளநாட்டுக்கு நிர்வாஹகரான ஆழ்வார். [நாவியல்பாடல்] - மநஸ்ஸஹகாரமுமொழியவா

நிகமம் - கூவுதல் இத்யாதி. "இவையும்பத்தும்வல்லார்கள்" என்றுதொடங்கி, "உள்ளத்தோர்வாரே" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

அந்வயித்தர்த்தம் - குரைகடல் இத்யாதி. "வருதல்" என்றதே, "கூவுதல்" என்று முற்படவழைப்பானென்னென்ன - முறைகெடவுமாம் இத்யாதி. உடைமையிருந்தவிடத்தே யுடையவன் வந்து கைப்பிடித்துக்கொண்டுபோகை ப்ராப்தமாகையாலே, வருகைமுறை; பார்யையை யாளிட்டழைக்கை முறைகேடானவோபாதி, கூவுகையும் முறைகேடு. குரை - கோஷிக்கிற. "குரைகடல்கடைந்தவன்றன்னை" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - இவ்வபேக்ஷ இத்யாதி. "குரைகடல்கடைந்தவன்றன்னை - கூவுதல்வருதல்செய்யாய்" என்றுசொல்லி, 'இந்தஸ்வபாவாநுஸந்தாநத்தாலே' இவனைக்கிட்டி யென்றுகூட்டுவது. நன்கமர்ந்த - நன்றாகத் தரித்த. தரையில் கால்பாவிநின்றவென்றபடி. பொருநல் - திருத்தாம்ரபர்ணி. "நாவியல்" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - மநஸ்ஸஹகாரம் இத்யாதி. நாவியல்பாடல் - ஜிஹ்வாவ்யா

யிற்றுச்சோல்லிற்று. [ஓவுதலித்யாதி] - ஆஶ்ரிதஸுலஸுனவனுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்திலே யநுபவிக்கப்பெறுவர். இத்தனைபோதும், இவர்தாம் "இவற்றைப்பெறவேணும்" என்னும் அபேக்ஷையோடே, "திருக்கண்களாலே குளிரநோக்கியருளவேணும், திருவடிகளைத்தலைமேலேவைத்தருளவேணும்; தேவரெழுந்தருளியிருக்குமிருப்பைக்காணவேணும்; நாய்ச்சிமாரும் தேவரீருமாயிருக்கும்படிகாணவேணும்; உலாவும்படி காணவேணும்; ஸ்மிதம் இருக்கும்படி காணவேணும்" என்று ஆசைப்பட்ட இவர்க்கு அப்போதே கிடையாமையாலே, "இவற்றைப்பெறவேணும்" என்னும் மநோரதந்தானே பேறாய்த் தோற்றிற்று; இத்தையப்யஸித்தவர்களுக்கும் இம்மநோரதம் மாறாதே முடியச்செல்லும் என்கிறார். "[illegible]" (யதிநாஶம்நவிந்தேததாவதாஸ்மிக்ருதீஸதா) என்கிறபடியே. (கக)

பாரமான பாடலென்று ஸப்தார்த்தம். "உலகமுன்றளந்தானடியிணை - ஓவுதலின்றி - உள்ளத்தோர்வார்" என்றந்வயிப்பது. "ஓவுதலின்றி" என்றதுக்கர்த்தம் - நிரந்தரமாக என்று. ஓர்வார் - அநுஸந்திக்கப் பெறுவார்: அநுஸவிக்கப்பெறுவா ரென்றபடி. இது கற்றார்க்கு ப்ராப்தியை ஃபலமாகச்சொல்லாதே, மநோரதத்தை ஃபலமாகச்சொல்லுவானென்? என்ன - இத்தனைபோதும் இத்யாதிவாக்யத்வயம். மநோரதமும் ஃபலமோவென்ன, அதுக்குப்ரமாணம் - யதிநாஶம் இத்யாதி ஜிதந்தாயாம், "[illegible]" இதி பூர்வார்த்தம். 'குரைகடல்கடைந்தவன்தன்னை - கூவுதல்வருதல் செய்திடாய்' என்றுதொடங்கி, 'இவைபும்பத்தும்வல்லார்கள் - உலகமுன்றளந்தானடியிணை - ஓவுதலின்றி - உள்ளத்தோர்வாரே' இத்யந்வய:.

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— [illegible] ।

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலீ.— [illegible] ।

திருவாய்மொழி நூற்றந்தாதி

பண்டையுறவானபரனைப் புளிங்குடிக்கே
கண்டெனக்கெல்லாவுறவின்காரியமும் - தண்டறநீ
செய்தருளென்றேயிரந்த சீர்மாறன்தாளிணையை
உய்துணையென்றுஉள்ளமே! ஓர்.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானர் திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்

மூன்றுந்திருவாய்மொழி--ஓராயிரம் - ப்ரவேசங்கள்.

ஆ.—(ஓராயிரம்.) - இப்படி ஆழ்வார் அபேக்ஷிக்க, "நீர் இங்ஙனே ப்ரார்த்திக்க வேணுமோ? நம்மோட்டைக் குடற்றுடக்கறியீரோ?" என்று எம்பெருமான் அருளிச்செய்ய, அவற்றையநுஸந்தித்து இனியராகிறார்.

ஒ.—மூன்றும் திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியிலே, "கூவுதல் வருதல் செய்யவேணும்" என்று எம்பெருமானை ப்ரார்த்தித்த ஆழ்வார்க்கு, அவனும் "நான் நாராயணனல்லேனோ? நீர்அபேக்ஷித்தபடியே செய்கிறோம்" என்று தன்னுடைய நாராயணத்வத்தைக் காட்டியருள; அந்த நாராயணத்வப்ரகாரத்தை அநுஸந்தித்து "அவனைக் காணவேணும்" என்றுஆசைப்பட்டுக் காணப்பெறாமையாலே ஶோகஹீநராய், "ஏதேனுமொருபடி அவனிருந்தவிடத்திலே சென்றாகிலும் அவனுடைய ஶீலவத்தையின் மிகுதியாலே அடிமைசெய்ய விரகில்லை" என்று அவனுடைய ஸௌஶீல்யாதிஶயத்தைப் பேசிமுடிக்கிறார்.

ப.—மூன்றுந்திருவாய்மொழியில், கீழே - கைங்கர்யப்ரார்த்தனையைப் பண்ணி "கூவுதல்வருதல்செய்யவேணும்" என்றுஅபேக்ஷிக்க, அவனும் தன் நிருபாதிகஸம்பந்தத்தாலே "நீர்அபேக்ஷிக்கவேணுமோ நம்முடையகார்யஞ்செய்கைக்கு?" என்று தன்னுடைய ப்ரகாரப்ரகாரி ஸம்பந்த த்யோதகமான நாராயணத்வத்தை ப்ரகாசிப்பிக்கக் கண்டு; அதினுடைய கார்யமான ஸர்வலோகரக்ஷண ஸமர்த்தமாயுள்ள திவ்யநாம ஸம்பத்தையும், ரக்ஷணார்த்த வ்யாபாரத்தையும், அகிலவேதவேத்யதாப்ரகாரத்தையும், நித்யஸூரிபோக்யதையையும், அதினுடைய நிருபமவைலக்ஷண்யத்தையும், அநிஷ்டநிவ்ருத்திஇஷ்டப்ராப்திஹேதுவான லக்ஷ்மீஸம்பந்தத்தையும், ப்ரபலாநிஷ்டபஞ்சநத்வத்தையும், அபீஷ்டதேசவர்த்தித்வத்தையும், ஆஶ்ரயணம் மிகையான அதிஶயிதஶீலத்வத்தையும், அதினுடைய வாசாமகோசரமஹத்தையையும் அநுஸந்தித்து, ஏவம்வித ஸ்வபாவனான ஸர்வேஶ்வரனை யநுபவிக்க ஆசைப்பட்டு அவனுடையஶீலத்திலே வித்தராய் அநுபவந்தன்னிலும் அக்ஷமரான ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

இ.—மூன்றுந்திருவாய்மொழியில், "கூவுதல்வருதல் செய்யாய்" என்றார் கீழே; அவன் உம்மைப் பெறுகைக்கு நாமன்றோ ப்ரார்த்திக்கக்கடவோம் என்று நாராயணத்வத்தால்வந்த தன்னோட்டை ப்ராப்தியைக் காட்டிக்கொடுக்க; அந்தநாராயணத்வப்ரகாரத்தை யநுஸந்தித்து, "அவனைக் காணவேணும்" என்றுஆசைப்பட்டுக் காணப்பெறாமையாலே பலஹீநராய் நாராயணத்வத்தில் எல்லையான ஶீலகுணத்தை அநுஸந்தித்து ஏதேனுமொருபடி அவனிருந்தவிடத்தே சென்றாகிலும் அவனுடைய ஶீலப்ராசுர்யத்தாலே அடிமைசெய்ய க்ஷமரமன்றிக்கே யிருக்கையாலே, அந்தஶீலாதிஶயத்தையே பேசிமுடிக்கிறார். அவன் ஶீலவத்தையைப் பார்த்தவிடத்து, தாம்ஒன்று செய்கை மிகையாம்படியாயிருந்தது. தம்மைப் பார்த்தால் அந்தஶீலத்திலே கால்தாழ்ந்து ஒன்றுஞ்செய்ய க்ஷமரயன்றிக்கே யிருக்கையாலே, அந்த ஶீலாதிஶயத்தைப் பேசிமுடிக்கிறார். "கிட்டியடிமை செய்யவேணும்" என்று அபேக்ஷித்தாலும் ஒரு குணத்தை அவன் ஆவிஷ்கரித்தால் அவ்வழியே போகவேண்டும்படியிறே யிருப்பது.

ஈடு.—"நீர் இங்ஙனே யர்தி்க்கவேணுமோ? நம்மோட்டைக்குடற்றுடக்கை யறியீரோ?" என்ன; அத்தை யநுஸந்தித்து இனியராகிறார். "கூவுதல்வருதல்செய்யாய்" என்று ப்ரார்த்தித்தார் கீழ்; "ஆர் ப்ரார்த்திக்கக்கடவதற்றை யார் ப்ரார்த்திக்கிறார்? உம்முடையலாபத்துக்கு நாம் ப்ரார்த்திக்கவேண்டும்படியன்றோ உம்மோடே நமக்கு உண்டான ரக்தஸ்பர்சம்? ஆனபின்பு, உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களுஞ் செய்க்கடவோம்; நீர்வெறுக்கவேண்டா" என்று ஸமாதாநம்பண்ணினான். "மையலேற்றி மயக்கவுன்முகம் மாயமந்திரந்தான்கொலோ" என்னக்கடவதிறே; ஸ்ரீகௌஸல்யையார், "ஏகபுத்ரையான நான் உம்மைப்பிரிந்து தனியிருக்கமாட்டேன்: கூடப்போருமித்தனை" என்று பின்தொடர, புரிந்துபார்த்து, "ஆய்ச்சி! நீர் என்னைப்பின்தொடருகிறவிடம் தர்மஹாநிகிடீர்" என்று முகத்தைப்பார்த்து ஒருவார்த்தை யருளிச்செய்ய, மீட்கைக்காகப்போன இவள் மங்களாசாஸநம்பண்ணிமீண்டாளிறே; இதிறே அவனுடைய பார்வைகளும் உக்திகளுமிருக்கும்படி. அவன்ஒருவார்த்தை சொன்னால் பின்னை அவன்வழியே போகவேண்டும்படியாயிறே யிருப்பது. ஆக, அவன் நாராயணனாயிருக்கிற இருப்பை யநுஸந்தித்தார்; அந்நாராயணசப்தத்தினுடைய அர்த்தத்தை ஆராயவென்றிழிந்தவாறே, ஒருவஸ்துவுக்கும் தன்னுடைய பேறிழவுக்குத் தனக்கு ப்ரார்த்திக்கைக்கு ப்ராப்தியற்றிருந்தது; இப்படியிருக்கிறவன் தன்பக்கலிலே விசேஷகடாக்ஷம்பண்ணினபடியையும், இந்நாராயணசப்தார்த்தத்துக்கு எல்லையான அவனுடைய சீலகுணத்தையும் அநுஸந்தித்து, "இப்போதே இப்படிசீலவானானவனைக்காணவேணும்" என்னும்அபேக்ஷைபிறந்தது; அதில் தமக்கு அவ

ஓராயிரம் ப்ரவேசே:—"நாராயணன் நங்கள்பிரானவனே" என்றத்தைக்கடாக்ஷித்து ஸங்க்ரஹ ஸங்கதி - நீர்இங்ஙனே இத்யாதி. விஸ்தாரஸங்கதி - கூவுதல் இத்யாதி. கீழே "குடற்றுடக்கு" என்றதின்விவரணம் - ரக்தஸ்பர்சம் என்றது. "ஸமாதாநம்பண்ணினான்" ஸமாஹிதராநென்று கூட்டுவது ஒருக்திமாத்ரத்தாலே ஸமாஹிதராக்கக்கூடுமோவென்ன-மையலேற்றி இத்யாதி. உன்னுடைய தாழ்ந்தபேச்சுக்களும் வ்யாபாரங்களும் எங்களைப்பிச்சேற்றியறிவுகெடுக்க,உன்முகம்அம்மான்பொடியோ இத்யர்த்தம். நாய்ச்சியார்திருமொழி,"பெய்யுமாமுகில்" இத்யாதி."உக்திஆகர்ஷகம்"என்னுமதுக்கு உதாஹரணம் - ஸ்ரீகௌசலையார் இத்யாதி."நஹி தாவத்வியோகேன ஜீவிதவ்யம் கதஞ்சந ஸ்ருத்வா ஸ்வகுணாவிரோஹிணீ ப்ரஹ்மா" என்றத்தைப்பற்ற - ஏகபுத்ரையான இத்யாதி. "ஸஹ த்வயாஹம் கமிஷ்யாமி வநம் புத்ர கமிஷ்யஸி" என்றத்தைப்பற்ற - கூடப்போரும் இத்யாதி. புரிந்துபார்த்து - திரும்பிப்பார்த்து. "ஜீவந்த்யா ஹி ஸ்த்ரியா பர்த்தா தைவதம் ப்ரபுரேவ ச" இத்யாதியைப்பற்ற - ஆய்ச்சீ இத்யாதி. "யதாஜ்ஞாபயதி புத்ர" இத்யாதியைப்பற்ற - மீட்கைக்காக இத்யாதி. பார்வைகளுமென்றது - "மையலேற்றி" இத்யாதியிலே விவக்ஷிதம். உக்திகளுமென்றது - "ஆய்ச்சீ, நீர" இத்யாதிகளை. "உக்திகளுமிருக்கும்படி" என்றத்தை விவரிக்கிறார் - அவன்ஒரு இத்யாதி. இத்திருவாய்மொழியில் ப்ரமேயத்தை விசதமாக உபபாதியாநின்றுகொண்டு, இவர் ஸமாஹிதரானபடியை விஸ்தரிக்கிறார் - ஆக இத்யாதி. முதற்பாட்டில் அர்த்தம் - அவன்நாராயணனாய் இத்யாதி. இரண்டாம்பாட்டைப்பற்ற - ஒருவஸ்துவுக்கும் இத்யாதி. "அறிந்தனமே," "நங்கள்பிரான்" என்றத்தைப்பற்ற - விசேஷகடாக்ஷம் பண்ணினபடியையும் என்றது. "கடைவதுங் கடலுளமுதம்" என்றத்தைப்பற்ற - சீலகுணத்தையுமென்றது. "என்மனமேமெண்ணுமிராப்பகலின்றி" என்றத்தைப்பற்ற - காணவேணுமென்னும் அபேக்ஷை பிறந்ததென்றது. அபேக்ஷைபிறந்தால் அவனிருந்தவிடத்தே போகவொண்ணாதோவென்ன - அதில்தமக்கு

னிருந்தவிடத்தளவும் கால்நடைதாராதபடிக்கீடாகவாயிற்று, அவனுடைய சீலாதிகளிலே ஈடுபட்டுத் துவக்குண்டபடி. இனித்தான், இவர்போலுலும் ஒன்றுசெய்கை மிகையாம்படியிருப்பானொருவனுயிருந்தான் அவன்; இவர்தாம், ஒன்றுசெய்தநுபவிக்கவல்லவரன்றிக்கேயிருந்தார்: அவனுடைய சீலகுணங்களிலே கால்தாழ்ந்திருக்கு மவராகையாலே. இப்படிப்பட்டவனுடைய ஶீலகுணப்ராசுர்யத்தையேசொல்லித் தலைக்கட்டுகிறது, இத்திருவாய்மொழி. அன்றிக்கே, * கண்கள்சிவந்திலே - ப்ரணவார்த்தத்தை யநுஸந்தித்தார்; அதில் முதலிரண்டரைப்பாட்டாலே - அகாரார்த்தத்தை யருளிச்செய்து, மேல் ஒன்றரைப்பாட்டாலே - சதுர்த்யர்த்தத்தையும் மத்யமாக்ஷரத்தில் அர்த்தத்தையும் த்ருதீயாக்ஷரத்தில்அர்த்தத்தையும்அருளிச்செய்து,—அவைபிரித்தருளிச்செய்யாதொழிந்தது; சதுர்த்யர்த்தமும் மத்யமாக்ஷரத்திலர்த்தமும் ஸாஶ்ரயமாயல்லதிராமையாலே கூடவருளிச்செய்தார்; — மேல்நாலுபாட்டாலே - த்ருதீயாக்ஷரவாச்யனுடைய வைலக்ஷண்யத்தையருளிச்

இத்யாதி. அவனிருந்தவிடத்தளவுமென்றது - "நின்றவேங்கடம்" என்றத்தைப்பற்ற. கால்நடை தாராதபடி என்றது - "தேவர்கள் கைதொழுவார்கள்" என்றத்தைப்பற்ற. "சீலமெல்லையிலான்" என்றத்தைப்பற்ற - சீலாதிகளிலே இத்யாதி. துவக்குண்டபடி - வசீகரிக்கப்பட்டபடி. "எழுது மென்னுமிதுமிகை" என்றத்தைப்பற்ற - இனித்தான் இத்யாதி. ஒன்றுசெய்கை - ஒருகைங்கர்யத்தைச்செய்கை. "தழுவுமாறறியேன்" என்றத்தைப்பற்ற - இவர்தாம் இத்யாதி. "சீலமெல்லையிலானடிமேல்" என்றத்தைப்பற்ற - இப்படிப்பட்டவனுடைய இத்யாதி. யோஜநாந்தரம் - அன்றிக்கே இத்யாதி. * கண்கள்சிவந்துதொடங்கி * ஓராயிரமளவும் திருமந்த்ரார்த்தத்திலே ஏறிடுகிறார். இதுவே இரண்டாம்யோஜனைக்கு வாசி. அநுஸந்தித்தபடி யெப்படியென்ன - அதில் முதலிரண்டரை இத்யாதி. அதாவது - முதற்பாட்டாலே ப்ராப்யமாயிருந்துள்ள விக்ரஹவைலக்ஷண்யத்தையும் இரண்டாம்பாட்டாலே ததாதாரமான திவ்யாத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தையும் அநுஸந்திக்கையாலே, அகாரத்தில் பதரூபத்தாலவந்த ஶேஷித்வத்தினுலும், அர்த்தபலத்தால்வந்த ஶ்ரிய:பதித்வத்தாலும் ஸித்தமான ப்ராப்யத்வத்தையும், மேல் அரைப்பாட்டாலே - "அவனதருளால்" என்று - "அவரக்ஷணே" என்கிற தாத்வர்த்தமானரக்ஷகத்வத்தாலும், ப்ரக்ருத்யர்த்தமான காரணத்வத்தாலும் ஸித்தமான வுபாயத்வத்தையும் அருளிச்செய்கையாலே, முதலிரண்டரைப் பாட்டாலே அகாரார்த்தத்தை அருளிச்செய்தா ரென்றபடி. இந்தப்ரகாரம், "ஸர்வகாரணத்வேந ஸர்வரக்ஷகத்வேந சேஷித்வம் ப்ரஸித்தம்..." என்று தீபஸங்க்ரஹத்திலே சொல்லப்பட்டது. 'மேலொன்றரைப்பாட்டாலேயித்யாதி' அதாவது - "இறவேறி" என்று ஆத்மஸ்வரூபம் தனக்கு அத்யந்த ஶேஷமென்னுமிடத்தைக் காட்டித்தந்தானென்கையாலே - லுப்தசதுர்த்யர்த்தமான ஶேஷத்வத்தையும், "யானுந்தானுயொழிந்தான்" என்று ஸமாநாதிகரணமாக அருளிச்செய்கையாலே - மத்யமாக்ஷரப்ரதிபாத்யாநந்யார்ஹ ஶேஷத்வத்தையும், "தேனும்பாலுங்கன்னலுமமுதுமாகித்தித்தித்து" என்று - த்ருதீயாக்ஷர வாச்யனான ஆத்மாவினுடைய "மநஜ்ஞாநே" என்கிற தாதுஸித்தஜ்ஞாநாநந்த விஶிஷ்டதையால்வந்த ஹோச்யதையையும் அருளிச் செய்கையாலே - மேல் ஒன்றரைப்பாட்டாலே சதுர்த்யர்த்தத்தையும், மத்யமாக்ஷரத்திலர்த்தத்தையும், த்ருதீயாக்ஷரத்தி லர்த்தத்தையும் அருளிச்செய்தென்றபடி. ஆனால் "இது ஶேஷத்வம், இது அநந்யார்ஹத்வம், இது ததாஶ்ரயமானவாத்மா" என்று பிரித்துச்சொல்லாதே, த்ருதீயாக்ஷர வாச்யனான ஆத்மாவோடேகூட்டியருளிச்செய்வானென்னென்ன - அவை இத்யாதி. வைலக்ஷண்யத்தை-ஜ்ஞாநாநந்தாதிவைலக்ஷண்

செய்து, மேலிரண்டுபோட்டாலே - இவ்வடைவிலே ப்ரணவார்த்தாநுஸந்தாநம்பண்ணுத வொஹ்யகுத்ருஷ்டிகளைநிரஸித்து. ஆக, ப்ரணவார்த்தத்தை யருளிச்செய்து, மேல், நமஸ்ஸப்தார்த்தத்தை * கருமாணிக்கமலை, * நெடுமாற்கடிமை இரண்டாலும் அருளிச் செய்து,—நமஸ்ஸப்தத்துக்கு ஸாப்தமாகவும் ஆர்த்தமாகவும் இரண்டிறே அர்த்தம். அதில் ஸாப்தமானவர்த்தத்தை * கருமாணிக்கமலையிலே யருளிச்செய்து, ஆர்த்தமானவர்த்தத்தை * நெடுமாற்கடிமையிலே யருளிச்செய்தது.— நமஸ்ஸப்தத்துக்கு ஸாப்தமானவர்த்தம் - "நானெனக்குரியேனல்லேன்" என்கையிறே. ஒருகந்யகையானல் ஒருவனுக்கேயாயிருக்கையும், † தான் தனக்கு உரியளன்றிக்கேயிருக்கையுமிறே ஸ்வரூபம்; அத்தையருளிச் செய்தார். * கருமாணிக்கமலையாலே;—மேல், * நாராயணஸப்தார்த்தத்தை யருளிச்செய்தார்- * கொண்டபெண்டிராலே; நாராயணஸப்தத்துக்கு அர்த்தம் - ஸ்வாமித்வவாத்ஸல்ய உபாயத்வோபேயத்வ வ்யாபகத்வம் இத்யாதியிறே; மேலே, சதுர்த்யர்த்தத்தை யருளிச் செய்தார் - * பண்டைநாளாலே; சதுர்த்திக்குஅர்த்தம் - கைங்கர்யப்ரார்த்தனையிறே. ப்ரணவார்த்தமும், நமஸ்ஸப்தார்த்தமும், வ்யாபகத்வமும், அவ்யாபகத்வமும், அல்லாத வ்யாபகமந்த்ரங்களிலுமுண்டு; அதில், தாம் ஆதரித்தருளிற்றுத் திருவஷ்டாக்ஷரமென்னும் இடத்தை - * ஓராயிரத்தாலே யருளிச்செய்கிறார். இது நடுவில் திருவீதிப்பிள்ளை யருளிச்செய்யும்படி.

யத்தையென்றபடி. அருளிச்செய்த ப்ரகாரமெதென்ன - நமஸ்ஸப்தத்துக்கு இத்யாதி. ஸாப்தமான அர்த்தமெது, ஆர்த்தமானவர்த்தமெது? என்ன - நமஸ்ஸப்தத்துக்கு ஸாப்தமான இத்யாதி. இது "கருமாணிக்கமலையிலே" எப்படி ஸித்திக்கிறதென்ன - ஒருகந்யகை இத்யாதி. "ஆர்த்தமானவர்த்தம்" - ததீயஸேஷத்வபர்யந்தமாகை. அத்தை யருளிச்செய்தார் * நெடுமாற்கடிமையிலே என்றுகூட்டுவது. அதெப்படி யென்ன - நாராயணசப்தத்துக்கு இத்யாதி. தத்புருஷனாலே – ஸ்வாமித்வமும், பஹுவ்ரீஹியாலே - வ்யாபகத்வ வாத்ஸல்யங்களும், அயநசப்தத்தில் வ்யுத்பத்தி த்வயத்தாலும் - உபாயோபேயத்வங்களும் சொல்லப்பட்டதிறே. இந்த ஸ்வாமித்வாதிகளாகிற நாராயணசப்தார்த்தத்தை * கொண்டபெண்டிரிலே யருளிச்செய்தார். எங்ஙனேயென்னில்; "நும்மதாதுமவனன்றிமற்றில்லை," "தொண்டரோமாய்" இத்யாதியாலே-ஸ்வாமித்வத்தையும், "வனைபுகழே" என்றும், "கிளையொன்றாலே யேழ்பாமுமெட்ட" என்றும் - ஆஸ்ரிதர் ருசிதவிடத்தே சென்று † கார்யம் என்றுவாத்ஸல்யத்தையும், "கண்ணனல்லாலில்லைகண்டீர்" என்று - உபாயத்வத்தையும், "குற்றமில்சீர்கற்றுவைகல்வாழ்தல்கண்டீர்" என்று - உபேயத்வத்தையும் அருளிச்செய்தார். "நும்மதாதுமவனன்றி மற்றில்லை" என்றதிலே – வ்யாபகத்வமும் ஸித்தம். அதெப்படியென்ன - சதுர்த்திக்கு இத்யாதி. அர்த்தத்தை யருளிச்செய்தால் போராதோ, இத்திருவாய்மொழியிலே ஸப்தத்தை யருளிச்செய்வானென்னென்ன - ப்ரணவார்த்தமும் இத்யாதி. ஆதர்த்தவ்யதைக்காக ஆட்டோபதிஷ்டமென்கிறார் - இதுநடுவில் இத்யாதி. சரமசதுர்த்தியில் தாதர்த்ய சதுர்த்தியென்று ஸேஷத்வத்தைச் சொல்லுமளவில், அது லுப்தசதுர்த்தீ ஸித்தமாகையாலும், "விஷ்ணுத்ருஹ்ருதிஸூரேத்" என்று ப்ராப்தார்த்தத்தில் விதி கோசரியாமையாலும், "நாகிஞ்சித்குர்வத ஸேஷத்வம்" என்கிற ந்யாயத்தாலே - ஸேஷத்வ ஸ்த்திரீகரணரூபமான கைங்கர்யத்தை சரமசதுர்த்தி சொல்லுகிறது. "ஈத்ருஸகைங்கர்யந்தான் ஸித்தமோ, அஸித்தமோ" என்று விசாரிக்குமளவில்; அது ஸித்தமாகையாலே, தத்ப்ரார்த்தனை உபபத்திவைலத்தாலும், "ஸ்யாம் நாராயணதாஸீ" என்கிற ஸாப்திகப்ரக்ரியையாலும், ஸித்திக்கிறது.

---

† இங்கேஅந்வயிக்கவில்லை; கோஸாந்தரங்களைப் பார்க்கவேணுமென்று தோன்றுகிறது.

முதற் பாட்டு.

ஓராயிரமாய் உலகேழளிக்கும்,
பேராயிரங்கொண்டதோர் பீடுடையன்
காராயின காளநன்மேனியினன்
நாராயணன் நங்கள்பிரானவனே.

ஆ.—ஒவ்வொருதிருநாமமே ஆயிரம்படியாய் உலகேழளிக்கும் பேராயிரமுடையவனாய், ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ ஸத்யஸங்கல்பத்வ காருண்ய ஸௌஶீல்ய வாத்ஸல்யாத்யஸங்க்யேய கல்யாணகுணவிஶிஷ்டனாய், * ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யபரிமித குணவிஶிஷ்ட நீலமேகநிப திவ்யரூபனாயிருந்த நாராயணனை ஸர்வேஶ்வரனாகப் பெறுவதே! என்று, தம்முடையதிருவுள்ளத்தில் இன்னாப்பெல்லாந்தீர்ந்து எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வத்தை யநுபவிக்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், "அவன்நாராயணனன்றோ? நம் அபேக்ஷிதஞ்செய்கை நிஶ்சிதம்" என்று தந்திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார்.

[ஓராயிரமென்று தொடங்கி] - "யௌகிகாந்யேவ நாமாநி" இத்யாதி ப்ரகாரத்தாலே ஒரோ திருநாமங்களே நிர்வசநபேதத்தாலே அநேகம்படியாலே எல்லா லோகங்களையும் ரக்ஷிக்கும் திருநாமங்கள் அநேகங்களை உடையனாகையாலே வந்த ஒப்பில்லாத பெருமையை உடையான். [காராயினவென்று தொடங்கி] - மேகம் போலே கறுத்த திருமேனியையுடையான். காராயுள்ள கறுத்தழகிய திருமேனியையுடையானென்று ரூபகம். [நாராயணனென்று தொடங்கி] - ப்ரதாநநாமத்தையுடையவனே நமக்கு ரக்ஷகன்.

ப.—முதற்பாட்டில், நாராயணத்வகார்யமான ஸர்வரக்ஷகமாயுள்ள நாமஸம்பத்தையுடையவன் நமக்கு உபகாரகனென்று அறுதியிட்டு, நெஞ்சைநோக்கி யருளிச்செய்கிறார்.

("ஸம்ஹர்த்தா இத்யாதி வசநக்ரமத்தாலே யுண்டான வ்யுத்பத்திபேதத்தாலும் நிர்வசநபேதத்தாலும்) ஓர் - ஒரோதிருநாமங்கள், ஆயிரமாய் - ஸஹஸ்ரமுகமாய்க்கொண்டு, உலகேழு - ஸர்வவிதமான ஸகல சேதநாசேதநங்களையும், அளிக்கும் - ரக்ஷிக்கக்கடவதான, பேர் - திருநாமங்கள், ஆயிரம் - ஆயிரத்தை, கொண்டது - உடைத்தான, ஓர் - அத்விதீயமான, பீடு - பெருமையை, உடையன் - உடையனாய், (இந்த நாமங்களாலே ப்ரதிபாத்யமாயிருக்கிற), காள காராயின - காளமேகம்போலே ஶ்யாமளமாய், நன் - அப்ராக்ருதமான, மேனியினன் - திவ்யவிக்ரஹத்தையுடையனாய், நாராயணனவனே - அவற்றுக்கடங்க மூலபூதமான நாராயணஶப்தவாச்யனானவனே, நங்கள் - நமக்கு, பிரான் - உபகாரகன்.

இ.—முதற்பாட்டில், "அவன் நாராயணனன்றோ? நம்மபேக்ஷிதஞ்செய்கை நிஶ்சயம்" என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

[ஓராயிரமாய்] - ஓரோ திருநாமங்களே ஆயிரம் முகத்தாலே ரக்ஷிக்கவற்றாயிருக்கும். "ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸஶ்ஶ்ரிய:" என்று நிர்வசநபேதத்தாலே அநேகம்படி ரக்ஷிக்கவற்றாயிறேயிருப்பது. [உலகு] - ரக்ஷிக்குமிடத்தில் ஓரொருத்தரையன்றிக்கே லோகமாக ரக்ஷிக்கும். [ஏழு] - அதுதன்னிலும் ஒரு லோகமாத்ரமன்றிக்கே ஸர்வலோகங்களையும் ரக்ஷிக்கும். [அளிக்கும்] - அவன் பாப ப்ராசுர்யத்தாலே, "க்ஷிபாமி" என்னக்கடவன்; இவை ரக்ஷிக்கையே ஸ்வபாவமாயிருக்கும். [ஆயிரங்கொண்டதோர் பீடுடையன்] - இப்படிப்பட்ட திருநாமங்களை ஆயிரமுடையனானையாலுண்டான பெருமையையுடையவன்; "தேவோ நாம ஸஹஸ்ரவாந்." [காராயின காள நன்மேனியன்] - கார்போன்றவென்னாதே, காராயின என்று - ரூபகம். மேகம்போலே கறுத்த திருமேனியையுடையான். [நன்மேனியன்] - சொன்னது உபமானமன்றென்கை. பெருக்காற்றில் இழிவார் தெப்பங்கொண்டு இழியுமாபோலே ஓர் உபமானம் முன்னாக இழியவேண்டுகையாலே சொன்ன இத்தனை; உபமானரஹிதமென்கை. [நாராயணன்] - ஆயிரம் திருநாமங்களையுடையவனென்று சொல்லி வைத்து, 'நாராயணன்' - என்று விஶேஷிக்கையாலே, இதுவே ஸ்வரூபநிரூபகமென்கை; ஜ்ஞாநஶக்த்யாதிகளுக்கு ஆஶ்ரயமான ஸ்வரூபத்துக்கு ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகள் நிரூபகமானாற்போலே. [நங்கள் பிரானவனே] - அவனே நமக்கு ரக்ஷகன். அவதாரணத்தால் தன்பேறாக ரக்ஷிக்குமென்கை. "கூவுதல் வருதல் செய்திடாய்" என்ற விடம் மிகை.

ஈடு.—முதற்பாட்டு. "அவன் நாராயணனன்றோ? நம் அபேக்ஷிதஞ்செய்கை நிஶ்சிதம்" என்று திருவுள்ளத்தைக்குறித்தருளிச்செய்கிறார்.

[ஓராயிரமாய்] - ஓரோருதிருநாமங்களே யாயிரம்முகத்தாலே ரக்ஷிக்கவற்றாயிருக்கும். "ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸஶ்ஶ்ரிய:" (ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸஶ்ஶ்ரிய:) என்று-நிர்வசநபேதத்தாலே அநேகம்படி ரக்ஷிக்கவற்றாயிறேயிருப்பது. [உலகு] - ரக்ஷிக்குமிடத்தில், ஓரோருத்தராகவன்றிக்கே லோகமாக ரக்ஷிக்கும். [ஏழு] - அதுதன்னிலும் ஒருலோகமாத்ரமன்றிக்கே, ஸர்வலோகங்களையும் ரக்ஷிக்கும். ஆஶ்ரிதரோருத்தரை ரக்ஷிக்குமது உண்டிறே யவனுக்கு; அங்ஙனன்றென்கைதிருநாமங்கள். [அளிக்கும்] - இவைபண்ணினபாபங்களைப்பார்த்து 'க்ஷிபாமி'

முதற்பாட்டு.—ஓராயிரம் இத்யாதி. "நாராயணன்நங்கள்பிரானவனே" என்றத்தைக் கடாக்ஷித்து, அதில் ஶப்தஸித்தமான அர்த்தத்தையும், தாத்பர்யஸித்தமான அர்த்தத்தையும் கடாக்ஷித்தவதாரிகை - அவன் இத்யாதி. திருவுள்ளத்தைக்குறித்து என்றது - நாலாம்பாட்டில் "மனமே" என்றத்தைக் கடாக்ஷித்தாதல், "மனமே-சோரேல்கண்டாய்" என்றது - முதல் மூன்றுபாட்டுக்கும் க்ரியையாக விவக்ஷித்தாதல். இதுவேமுக்யம். ஆயிரமுகத்தாலே ரக்ஷிக்கும் ப்ரகாரமேதென்ன - ஐஶ்வர்யஸ்ய இத்யாதி. நிர்வசநபேதம் - வ்யுத்பத்திபேதம். பகவானென்கிற திருநாமத்தைச் சொன்னால், அதின் அர்த்தமான ஐஶ்வர்யவீர்யாதிக ளெல்லாவற்றையும் கொடுக்குமென்றபடி. 'ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸஶ்ஶ்ரிய:। ஜ்ஞாநவைராக்யயோஶ்சைவ ஷண்ணாம் பக இதீரணா" இதி ஶ்ரீவிஷ்ணுபுராணே. "உலகு" என்றதுக்கு வ்யாவர்த்யம் - ரக்ஷிக்கும் இத்யாதி. "ஏழு" என்றதுக்கு வ்யாவர்த்யம் - அதுதன்னிலும் இத்யாதி. இத்தால் ஈஶ்வரவ்யாவ்ருத்தி - ஆஶ்ரிதர் இத்யாதி. "அளிக்கும்" என்றதுக்கு வ்யாவர்த்யம் - இவைபண்ணின இத்யாதி. "பேர்" என்

(க்ஷிபாமி) என்பதும் ஒருபோதுண்டு அவனுக்கு ; அளிக்குமதுஒன்றுமேயாயிற்று, இவற்றுக்கு ஸ்வபாவம். [பேர்] - ரக்ஷிக்கைக்கு ஒருபேர்காணும் வேண்டுவது. அப்படிப்பட்ட திருநாமங்களைத்தான் எத்தனை யுடையனென்னில் ?—[ஆயிரங்கொண்டதோர்பீடுடையன்] - "தேவோ நாமஸஹஸ்ரவாந்" (தேவோநாமஸஹஸ்ரவாந்) என்னுமா போலே. பல பசுவுடையவனென்னுமாபோலே. ஸர்வாயித்த்யம்பண்ண நினைத்தவர்கள் சோறுந்தண்ணீருங் குறையறுத்துக் கொண்டிருக்குமா போலே, ஜகத்ரக்ஷணசிந்தை பண்ணின ஈஶ்வரனுக்கு, அதுக்கு உபாயமாக ஆயிரந்திருநாமங்களுண்டாயிருக்குமாயிற்று. கோயிலாய்த்தான் புத்ரவியோகத்தாலே பட்டர் ஸ்ரீபாதத்திலேவந்து தன்ஶோக மெல்லாந்தோற்றவிழுந்துகிடக்க, அவர் அருளிச்செய்தவார்த்தையை நினைப்பது. ஆயிரந் திருநாமத்தையுடையனாகையால் வந்த பெருமையையுடையவன். அவைதாம் கரைகட்டாக்காவேரிபோலே பரந்திருந்தால், அவற்றையெல்லாம் ஒருமுகஞ்செய்தநுபவிக்கைக்கு ஈடான வடிவையுடையனாயிருக்கும். [காராயினகாளநன்மேனியினன்] - கரரென்றே யிருக்கிறாராயிற்று, ரூபகம் முற்றுகையாலே. கறுத்திருந்துள்ள காளமேகம்போலே யிருப்பதாய், அதுதானும் பெருக்காற்றிலிழிவார் ஒருதெப்பந்தேடி இழியுமாபோலே ஒன்றைச் சொல்லும்போது உபமாநம் முன்னாகவல்லது சொல்லவொண்ணாமையாலேசொன்ன இத்தனைபோக்கி, திருமேனியைப்பார்த்தால் உபமாநரஹிதமாயாயிற்று இருப்பது. இப்படியிருக்கிறவை தன்னையுடையவன்தான் ஆர் என்ன ? - [நாராயணன்] - ஜ்ஞாநஶக்த்யாதிகளும் குணங்களாயிருக்கச் செய்தே, ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகள் ஸ்வரூபநிரூபகமா

கிற ஏகவசநத்தைக் கடாக்ஷித்து ரஸோக்தி - ரக்ஷிக்கைக்கு இத்யாதி. சாடுவுக்கு, பேர்காணும் - வ்யாஜங்காணுமென்றபடி. அப்படிப்பட்ட - ஒரொன்றே யாயிரம்முகமாக ரக்ஷிக்கவற்றான. பீடு - பெருமை. "ஆயிரந்திருநாமத்தை யுடையனாகை யவனுக்குப்பெருமை" என்னுமதுக்கு ப்ரமாணம் - தேவோநாம இத்யாதி. "ஸஹஸ்ராக்ஷஸ்ஸஹஸ்ரஶீர்ஷஸ்ஸஹஸ்ரசரணோ விபு: | ஸஹஸ்ரபாஹுஸ்ஸர்வஜ்ஞோ தேவோநாமஸஹஸ்ரவாந்" இதி மஹாபாரதே. "நாமஸஹஸ்ரவாந் - தேவ:" இத்யந்வய:. "ரக்ஷணார்த்தமாக அநேகந்திருநாமங்களையுடையவன்" என்னுமதுக்கு

த்ருஷ்டாந்தம் - பலபசு இத்யாதி. ஒருதிருநாமம் போராதோ, ஆயிரம் திருநாமமேதுக்கென்ன - ஸர்வாயித்த்யம் இத்யாதி. திருநாமம்தஞ்சமாயிருக்குமென்கைக்கு ஐதிஹ்யம் - கோயிலாய்த்தான் இத்யாதி. குமாரர்க்கு பட்டர்திருநாமம்சாற்றினன்; அந்தகுமாரர் பரமபதத்துக்குப்போக, அவன் பட்டர் ஸந்நிதியிலேவந்து க்லேஶப்பட, "நீ 'நம்முடைய திருநாமம்சாற்றின பிள்ளைபோனான்' என்றன்றோ து:கிக்கிறது: அதுக்கு து:கிக்கவேண்டா, அந்தத் திருநாமமுடையநாம் இருந்தோமே !" என்று, பட்டர் தம்மைப்போலே ஒருவிக்ரஹத்தை எறியருளப்பண்ணி ப்ரஸாதித்தருளினார். ஶப்தார்த்தம் - ஆயிரந்திருநாமத்தை இத்யாதி. கொண்டது - கொண்ட; உடைத்தான வென்றபடி. மேலுக்கவதாரிகை - அவைதாம் இத்யாதி. கார்போன்றவென்னாதே, "கார்தானாயிருக்கிற" என்றதுக்குபாவம்- கரரென்றே இத்யாதி. கார் - மேகம். "காள - காராயின - நன்மேனியினன்" என்றந்வயிப்பது. கறுத்த மேகம்போன்ற விலக்ஷணமான உபமாநரஹிதமான திருமேனியையுடையவன் என்று பொருள். "நன்" என்றதுக்கர்த்தம் - அதுதானும் இத்யாதி. நன் - உபமான ரஹிதனென்றபடி. அல்லாத திருநாமங்களிருக்க, "நாராயணன்" என்று இத்தை அருளிச்சய்வானென் ? என்ன - ஜ்ஞாநஶக்த்யாதிகளும் இத்யாதி. அதாவது - ஜ்ஞாநஶக்த்யாதிகளும் குணங்களாயிருக்கச் செய்தே, ஜ்ஞாநாநந்தாதிகள் ஸ்வரூபநிரூபகங்களாய், ஜ்ஞாநஶக்த்யாதிகள் நிரூபித ஸ்வரூபவிஶேஷணங்களாகிறவோபாதி, இதுவும் திருநாமங்களிலே ஒன்றாயிருக்கச்செய்தே, இது ஸ்வரூபநிரூபகமாய்க்கொண்டு ப்ரதாநமாய், அத்தாலே நிரூபிதமான வஸ்துவினுடைய குணசேஷ்டிதங்களுக்குவாசக

யிருக்குமிறே; அப்படியே, "பேராயிரங்கொண்டதோர்பீடுடையன்" என்றவனுகிறான் ஆர் என்ன? – "இன்னான்" என்று விசேஷிக்கிறவிடத்தில், 'நாராயணன்' என்கையாலே - நிரூபகமாய்ப்புக்கதிறே இது. ஆயிரந்திருநாமங்களைச் சொல்லி, அவற்றிலே மூன்றை ப்ரயாநமாக எடுத்தது வ்யாபகமந்த்ரங்களாகையாலே; அவற்றிலே இரண்டை மற்றையவற்றோடொக்கச்சொல்லலாம்படியாயிற்று இதுக்கு உண்டான ப்ராயாந்யம். "அந்தணர்மாட்டந்திவைத்தமந்திரத்தை" என்றும், "நின்திருவெட்டெழுத்துங்கற்றுநான்- உற்றதும்" என்றும், "நாராயணாவென்னும்நாமம்" என்றும், "நமோநாராயணம்" என்றும், இவையிறே திருமங்கையாழ்வார்படி; நம்மாழ்வாரும், "வண்புகழ்நாரணன்" என்று தொடங்கி, திருவாய்மொழி முடியவநுஸந்தித்தது இதுவாயிருக்குமிறே. வேதங்களும், ஆழ்வார்களும் நம்ஆசார்யர்களுமெல்லாம் போனவழி இதுவாயிற்று ; நமக்குமெல்லாம் இப்போதும் அவற்றை ஆதரித்தால் ஒருகுற்றமில்லையிறே ; இதுதன்னை சூத்ராதிகள் மற்றையார் பரிக்ரஹிக்கை சுட்டியிறே நாம் அதுதன்னைத் தவிர்ந்தது. நம் ஆசார்யர்கள் போனது போருமிறே நமக்காதரிக்கவேண்டுவது. [நங்கள்பிரானவனே] - நமக்கு ரக்ஷகனென உபகாரகன்அவனே. "கூவுதல்வருதல்செய்திடாய்" என்று நம்பேற்றுக்கு நமக்கு ப்ரார்த்திக்க ப்ராப்தியில்லையென்கிறது - அவதாரணத்தால். (க)

இரண்டாம் பாட்டு.

அவனேயகல்ஞாலம்படைத்திடந்தான்
அவனேயஃதுஉண்டுஉமிழ்ந்தான்அளந்தான்
அவனேயவனும்அவனும்அவனும்
அவனேமற்றெல்லாமும்அறிந்தனமே.

மல்லாத திருநாமங்களென்று - இவ்வாக்யத்துக்குக் கருத்து. இது ப்ரதாநமானபடியென்? என்ன - ஆயிரந்திருநாமங்களை இத்யாதி. விஷ்ணுகாயத்ரியிலே ப்ரதாநமாக எடுத்ததென்றபடி. "நாராயணாப" என்று முற்படவெடுத்தமையைப்பற்ற - இதுக்கு உண்டானப்ராதாந்யம் என்கிறார். ஶ்ருதியேயன்றிக்கே, ஆழ்வார்களும் விரும்பியிருப்பர்களென்கிறார் - அந்தணர்மாட்டு இத்யாதி. அந்தணர் தநமானவேதத்தினுடைய உத்தரபாகத்திலேயிருக்கிற மந்திரமென்று. திருமந்த்ரத்தைச் சொல்லுகிறது. அந்தணர் - ப்ராஹ்மணர். மாடு - தநம். நிமிக்கிறார் - வேதங்களும் இத்யாதி. நம்ஆசார்யர்களுமெல்லாம் என்றது - திருமந்த்ரத்தையே யுபதேசிக்கையைப்பற்ற. ஆசார்யர்கள் இத்தைப்ரதாநமாகையாலே ஆதரித்தார்களேயாகிலும், நாம் இத்தையும் அவற்றையுமொக்க விரும்பாமே உபேக்ஷிப்பானென்? என்ன - நமக்கும் இத்யாதி. ஆனால் பின்னைத்தவிருவானென்னென்ன - இதுதன்னை இத்யாதி. அவற்றை - ஏதத்வ்யதிரிக்த வ்யாபகத்வயத்தையும், நாமாந்தரங்களையும். இதுதன்னையென்றது - ஜாத்யேகவசநமாய், மற்றை வ்யாபகமந்த்ரத்வயத்தையும், அல்லாததிருநாமங்களையும் சொல்லுகிறது. அதுதன்னை என்றதும் - கீழே இதுதன்னை என்றத்தையே சொல்லுகிறது. சுட்டியிறே - நிமித்தமாகவிறே. சூத்ராதிகள் - சைவரான சூத்ராதிகள். ஆதிஶப்தத்தாலே - வைஶ்ய க்ஷத்ரியாதிகளைச் சொல்லுகிறது. மற்றையார் - நிர்விசேஷசிந்மாத்ரவாதிகளான அத்வைதிகள். பரிக்ரஹிக்கையாவது - இந்தநாமங்களை தேவதாந்தரபரங்களாகவும் நயிப்பிக்கை. நாராயணஶப்தம், ணத்வம் பாதிக்கையாலே, நயிப்பிக்கக்கூடாதென்று கருத்து. எல்லாமென்றாலும் ஹரவந்நாமமன்றோ, பரிக்ரஹிக்கத் தட்டென்? என்ன - நம் ஆசார்யர்கள் இத்யாதி. ஏவகாரத்துக்கர்த்தம் - கூவுதல் இத்யாதி. 'ஓராயிரமாய்' என்றுதொடங்கி, 'அவனே - நங்கள்பிரான்' இத்யந்வய:. -(க)

ஆ.—(அவனே.) - ப்ரஹ்மருத்ராதிகளும் ஈஶ்வரரல்லரோ? நாராயணனே ஸர்வேஶ்வரனென்னுமிடம் எங்ஙனேயறிந்தபடி என்னில்?—அவனே நிகிலஜகந்நிர்மாணோத்தரண நிகரணோத்கிரண க்ரமணாதி ஸர்வேஶ்வராஸாதாரண திவ்ய சேஷ்டிதங்களைப் பண்ணுகையாலும், சதுர்முகபசுபதி ப்ரமுக ப்ரப்ருதி ஸ்தாவரபர்யந்தமான ஸர்வாத்மாக்களுக்கும் ஆத்மபூதனாகையாலும், நாராயணனே ஸர்வேஶ்வரனென்னுமிடம் அறிந்தேனென்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், நாராயணஶப்தத்துக்கு அர்த்தத்தை அருளிச்செய்கிறார்.

முதலடைய இரண்டுஏவகாரம்-ஸஹாயநைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகிறது. [அவனே அவனும்அவனும்அவனும்] - ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களும் அவனிட்டவழக்கு. [அவனே மற்றெல்லாமும்]-மற்றுமுண்டாயுள்ள சேதநாசேதநங்களெல்லாம் தததீநமே.

ப.—அநந்தரம், அந்தநாராயண ஶப்தார்த்தமான ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரத்தைப்பண்ணிக்கொண்டு ஸர்வாத்மபூதனானபடியை நமக்கு ப்ரகாசிப்பித்தானென்கிறார்.

அகல் - விஸ்தீர்ணமான, ஞாலம் - ஜகத்தை, படைத்து - உத்பாதித்தானும், இடந்தான் - ப்ரளயாபத்திலே முழுகியிடந்தெடுத்தானும், அவனே - ஸஹாயாந்தரநிரபேக்ஷனான அவனே: அவனே அஃது - அவனே அந்த பூமியை, உண்டு - மஹாப்ரளயத்திலே வயிற்றிலே வைத்துநோக்கி, உமிழ்ந்தான் - ப்ரளயாநந்தரம் உமிழ்ந்தவனும், அளந்தான் - அந்யாக்ரமாகம் வாராமல் அளந்துகொண்டவனும், அவனும்அவனும்அவனும் - ஸ்ருஷ்டிஸம்ஹார ரக்ஷணத்துக்குக்கடவராய், (தனக்கு ப்ரகாரதயா வேதாந்தத்திலே "ஸப்ரஹ்மா ஸ ஶிவஸ் ஸேந்த்ர:" என்று ப்ரஸித்தரான ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதிகளும்), அவனே-, மற்று - மற்றும் ஸ்ருஷ்ட்யாதிகளுக்குக் கர்மீபவித்த, எல்லாமும் - ஸகல சேதநாசேதநங்களும், அவனே - அவனேயாக, அறிந்தனம் - (அவன் தந்த ஜ்ஞாநத்தாலே) அறிந்தோம்.

இ.—இரண்டாம்பாட்டில், கீழ்ச்சொன்ன நாராயணஶப்தத்துக்கு அர்த்தமருளிச் செய்கிறார்.

[அவனே அகல்ஞாலம் படைத்திடந்தான்] - விஸ்த்ருதமான பூமியை ஸ்ருஷ்டித்து, ப்ரளயங்கொண்ட பூமியை மஹாவராஹமாய் எடுத்தானும் அவனே. அவதாரணத்தாலே, ஸ்ருஷ்ட்யாதிகளில் ஸஹகாரிநைரபேக்ஷ்யம் சொல்லுகிறது. ப்ரளயங்கொள்ளாத பூமியை வயிற்றிலே வைத்து வெளிநாடுகாணவுமிழ்ந்து, அபஹ்ருதமான பூமியை எல்லைநடந்து மீட்டுக்கொண்டான் அவனே. இந்த அவதாரணத்தாலே ஆபத்ஸகத்வாதி ரக்ஷகத்வத்திலும் ஸஹகாரிநைரபேக்ஷ்யஞ் சொல்லுகிறது. [அவனேயவனும்அவனும்அவனும்] - ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகள் அவனிட்டவழக்கு. "ஸப்ரஹ்மா ஸ ஶிவஸ் ஸேந்த்ர:" "ஸ்ருஷ்டிஸ்திதி" இத்யாதி என்கிற ப்ரமாணப்ரஸித்தியாலே சொல்லுகிறார். [அவனே மற்றெல்லாமும்]- ப்ரதாநரோடு அப்ரதாநரோடு வாசியற ஸகலசேதநாசேதநங்களும் ததீநமே. [அறிந்தனமே] - ப்ரஹ்மாதிகள், "ஸர்வம் ஸமாப்நோஷி" என்றிருக்கையும் அவர்களை ஆஶ்ரயிப்பாருமாய்ச் செல்லாநிற்க நீர் 'அவனே' என்கிறது என்கொண்டென்னில்?—மயர்வற மதிநலமருளப்பெற்றத்தாலே அறிந்தேனென்கை.

ஈடு.—இரண்டாம்பாட்டு. கீழ் ப்ரஸ்துதமான நாராயணஶப்தத்துக்கு அர்த்தத்தை யருளிச்செய்கிறார்.

[அவனே அகல்ஞாலம் படைத்திடந்தான்] - விஸ்த்ருதமான பூமியை யுண்டாக்கி, ப்ரளயங்கொண்ட பூமியை மஹாவராஹமாய் எடுத்தானும் அவனே. அவதாரணத்தால் - ஸ்ருஷ்ட்யாதிகளில் ஸஹகாரிநைரபேக்ஷ்யஞ் சொல்லுகிறது. [அவனேஇத்யாதி] - ப்ரளயங்கொள்ளாதபடி பூமியையெடுத்து வயிற்றிலே வைத்து, வெளிநாடுகாண வுமிழ்ந்து, மஹாபலியாலே யபஹ்ருதமாக, எல்லைநடந்து மீட்டுக்கொண்டான்அவனே. இந்த அவதாரணத்தால் — ஆபத்ஸகத்வாதி ரக்ஷகத்வத்திலும் ஸஹகாரிநைரபேக்ஷ்யஞ் சொல்லுகிறது. [அவனேயித்யாதி] - ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகள் அவனிட்ட வழக்கு. "ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ ஸேந்த்ர:" (ஸப்ரஹ்மாஸஶிவஸ்ஸேந்த்ர:) என்கிற ப்ரஸித்தியைப்பற்றச்சொல்லுகிறார். "ஸ:, ஸ:, ஸ:," என்றே போருகிறார். [அவனே மற்றெல்லாமும்] - "ஸோக்ஷர: பரமஸ்ஸ்வராட்" (ஸோக்ஷர: பரமஸ்வராட்) என்கிறபடியே, ப்ரயோஜநரோடு அப்ரயோஜநரோடுவாசியற ஸகல சேதநாசேதநங்களும் ததீநமே. [அறிந்தனமே] - ப்ரஹ்மாதிகள் "ஈஶ்வரோஹம்" (ஈஶ்வரோஹம்) என்றிருக்கையும், அவர்களையாஶ்ரயிருப்பாருமாய்ச் செல்லாநிற்க, நீர் 'அவனே' என்கிறதுஎன்கொண்டு என்னில்?- *மயர்வறமதிநலமருளப் பெற்றத்தாலே யறிந்தவனுகையாலே. ஆக, இரண்டுபாட்டாலும் - திருமந்த்ரத்தையும், அதில் அர்த்தத்தையும் அநுஸந்தித்தாராய் நின்றார். (உ)

மூன்றும் பாட்டு.

அறிந்தனவேதவரும்பொருள்நூல்கள்
அறிந்தனகொள்கவரும்பொருளாதல்
அறிந்தனரெல்லாம்அரியைவணங்கி
அறிந்தனர்நோய்களறுக்கும்மருந்தே.

இரண்டாம்பாட்டு.—அவனே இத்யாதி. நாராயணஶப்தத்துக்கர்த்தம்-"நாராஜ்ஜாதாநிதத்வாநி" என்று காரணத்வமும், அந்தர்யாமித்வஸஹித ரக்ஷகத்வமும், அந்தர்யாமித்வமுமாகையாலே, அம்மூன்றையும் பூர்வோத்தரார்த்தங்களாலே அருளிச்செய்கிறு ரென்றபடி. அவனுமவனுமவனும் - அவனே" என்றால் ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளைச் சொல்லும்படியென்? என்ன - ஸப்ரஹ்மா இத்யாதி. விவரணம் - ஸஸ்ஸ: இத்யாதி. ஸ: ஸ: என்றது - "ஸ ப்ரஹ்மா" என்ற ஶ்ருதியில், தச்சப்தோபாதாநமன்று; "அவன் அவன்" என்றதுக்கு ப்ரதிபதமாக ஸம்ஸ்க்ருதத்தாலே வ்யாக்யாதா அருளிச்செய்தது. "மற்று" என்கிற இது - அக்ஷரஶப்தவாச்யரான முக்தாத்மாக்களைச் சொல்லுகிறது. "பரமஸ்ஸ்வராட்" என்று - முக்தாத்மஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. அக்ஷர: - விகாரரஹித:. பரம: - ப்ரஹ்மாதிப்ய உத்க்ருஷ்ட:. ஸ்வராட் - ஸ்வதந்த்ர:. முக்தோபீஶ்வராதீந இதி ஶ்ருதேரர்த்த:. ப்ரயோஜநரோடென்றது - கிழைக்கடாக்ஷித்து. "விஶ்வமேவேதம் புருஷ:" என்றத்தைப்பற்ற - ப்ரயோஜநரோடு இத்யாதி. க்ரமேணாந்வய:. (உ)

---

† ஸஹவத் - (கக - கச).

ஆ.—(அறிந்தன.) - அபௌருஷேயதயாலே நிர்த்தோஷாதி துர்லப ப்ரயோஜநரூபார்த்தவத்தாய்ப் பரமபுருஷ யாதாத்ம்ய ஜ்ஞாபகமாயவ ப்ரவ்ருத்தமான ஸகல வேதங்களாலும், * ஜந்மாந்தரஸஹஸ்ரார்ஜித தபோஜ்ஞாநஸமாதிகளாலே ப்ரக்ஷீணாஸேஷ கல்மஷராய்த் தன் திருவடிகளிலே ஸஞ்ஜாதபக்திகளான புருஷராலும், ஸாம்ஸாரிக ஸமஸ்த துக்கௌஷதயா பரமப்ராப்யதயா அறியப்படுகிற அவனை, நான் நிர்ஹேதுகமாக அறியப்பெற்றேனென்கிறார். வேதங்களாலும் வேதவித்துக்களாலும் அறியவொண்ணாதவனை, நான் நிர்ஹேதுகமாக உள்ளபடியே அறியப்பெற்றேனென்றுமாம்.

ஒ.—மூன்றாம்பாட்டில், வேதங்களுக்கும் ருஷிகளுக்கும் அறிய நிலமல்லாத எம்பெருமான் தன்னை எனக்குப் பூர்ணமாக அறிவித்தானென்று ப்ரீதராகிறார்.

[அறிந்தன வேதமென்று தொடங்கி] - அறிந்தனவாயிருக்கிற ஞாநஜ்ஞேயார்த்தஸூசகமான வேதங்கள் ஸர்வேஸ்வரனை ஞாநஜ்ஞேயனென்று அறிந்தன. [அறிந்தனரென்று தொடங்கி] - மற்றறிந்தாராயிருக்கிற ருஷிகளும் ஸம்ஸார துரிதௌஷதமென்று அறிந்தார்கள்.

ப.—அநந்தரம், ஸகல வேதங்களோடு வைதிகபுருஷர்களோடு வாசியற, தம்மைப்போலன்றியே அவனை யறிந்தவளவை யருளிச்செய்கிறார்.

அறிந்தன - "வேதாஹமேதம்" என்று அறிந்தனவாயிருக்கிற, வேதம்- வேதங்களினுடைய, அரும் - அறிதற்கரிய, பொருள் - பொருள்களையும் நிஷ்கர்ஷித்துத் தருவதான, நூல்கள் - ப்ரஹ்மஸூத்ரேதிஹாஸ புராணாதிகளான ஶாஸ்த்ரங்கள், ("யதோ வாசோ நிவர்த்தந்தே" என்றும், "யஸ்யாமதம் தஸ்ய மதம்" என்றும், "அவிஜ்ஞாதம் விஜாநதாம்" என்றுஞ் சொல்லுகிற மர்யாதையாலே), அரும்- அறியவரிய, பொருளாதல் - பொருளென்று, அறிந்தன - அறிந்தனவாக, கொள்க - கொள்ளவமையும்; அறிந்தனர் - "அஹம் வேத்மி மஹாத்மாநம்" என்றறிந்த வைதிகபுருஷர்கள், எல்லாம் அரியை - ஸர்வபாபஹரனான ஸர்வேஸ்வரனை, வணங்கி - ஆஶ்ரயித்து, நோய்கள் - (தங்களுடைய) ஸாம்ஸாரிக மஹாவ்யாதியை, அறுக்கும் - அறுத்துக்கொள்ளும், மருந்தே - பரமௌஷதமாக, அறிந்தனர் - அறிந்தார்களித்தனை. நாம்அப்படியன்றியே அவன் போக்யதையையும், ஶீலாதிகளையும் பூர்ணமாகக்காட்ட அறியப்பெற்றோமென்று, கீழில் "அறிந்தனம்" என்கிற வாக்யத்தோடே யந்வயம்.

இ.—மூன்றாம்பாட்டில், வேதங்களும் ருஷிகளும் அறிந்த அளவன்றிக்கே, தன்னை எனக்கே பூர்ணமாக அறிவித்தானென்று ப்ரீதராகிறார்.

[அறிந்தன வேத அரும்பொருள் நூல்கள்] - ஞாநஜ்ஞேயார்த்தத்தை யறிந்தனவாயிருக்கிற வேதங்களாகிற ஶாஸ்த்ரங்கள் என்னுதல்; அறிந்தனவாயிருக்கிற வேதங்களில் உபாஜ்ஞேயார்த்தங்களை நிஷ்கர்ஷித்துத்தரும் ப்ரஹ்மஸூத்ரேதிஹாஸ புராணாதிகள் என்னுதல். [அறிந்தன கொள்க வரும் பொருளாதல்] - "ஞாநஜ்ஞேயன்" என்னும் இவ்வளவு அறிந்தனவாகக்கொள்ள அமையும். 'யதோ வாசோ நிவர்த்தந்தே' "யஸ்யாமதம் தஸ்ய மதம்" "அவிஜ்ஞாதம் விஜாநதாம்" என்னும் இவ்வளவே அறிந்தது. [அறிந்தனரெல்லாம்] - அறிந்தாராயிருக்கிற பராஶர வ்யாஸ வால்மீகி ப்ரப்ருதி ருஷிகளும். [அரியைவணங்கி] - ஸர்வது:க்க நிவர்த்தகனை வணங்கி - ஆஶ்ரயித்து. [அறிந்

தனர் நோய்களறுக்கும் மருந்தே] - ''ஸம்ஸாரது:ரிதபேஷஜம்'' என்னும் இவ்வளவு அறிந்தார்கள்; ''ஸம்ஸாரஸர்ப்பஸந்தஷ்ட நஷ்டசேஷ்டைகபேஷஜம்''. அவனுடைய போக்யதையில் இழிந்திலர்கள். அவனுடைய நிரபேக்ஷோபாயத்வத்தில் இழிந்திலர்கள்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. வேதங்களும், வேதார்த்தவித்துக்களான ருஷிகளும் அறிந்தவளவன்றிக்கே, தன்னை எனக்குப் பூர்ணமாக அறிவித்தா னென்று ப்ரீதராகிறார்.

[அறிந்தனவித்யாதி] - துர்ஜ்ஞேயார்த்தத்தை யறிந்தனவாயிருக்கிற வேதங்களாகிற ஶாஸ்த்ரங்களென்னுதல்; அறிந்தனவாயிருக்கிற வேதங்களில் துர்ஜ்ஞேயார்த்தத்தை நிஷ்கர்ஷித்துத்தரும்ப்ரஹ்மஸூத்ரம், இதிஹாஸபுராணாதிகளென்னுதல். [அறிந்தனகோள்க அரும்பொருளாதல்] - ''துர்ஜ்ஞேயன்'' என்னும் இவ்வளவுஅறிந்தனவாகக்கோள்ளவமையும், †''யதோவாசோநிவர்த்தந்தே'' (யதோவாசோநிவர்த்தந்தே), ‡''யஸ்யாமதம்தஸ்யமதம்'' (யஸ்யாமதம்தஸ்யமதம்), ''அவிஜ்ஞாதம்விஜாநதாம்'' (அவிஜ்ஞாதம் விஜாநதாம்) என்னும் இவ்வளவுஅறிந்தது. [அறிந்தனரேல்லாம்] - மற்றறிந்தாராயிருக்கிற பராஶர வ்யாஸ வால்மீகி ப்ரப்ருதிருஷிகளும். [அரியை வணங்கி] - ஸர்வது:கநிவர்த்தகனை, வணங்கி - ஆஶ்ரயித்து. [அறிந்தனர் நோய்களறுக்கும் மருந்தே] - ''ஸம்ஸாரதுரிதபேஷஜம்'' (ஸம்ஸாரதுரிதபேஷஜம்) என்னும் இவ்வளவு அறிந்தார்கள்; ''ஸம்ஸாரஸர்ப்பஸந்தஷ்டநஷ்டசேஷ்டைகபேஷஜம்'' (ஸம்ஸாரஸர்ப்பஸந்தஷ்ட நஷ்டசேஷ்டைகபேஷஜம்). அவனுடைய போக்யதையில் இழிந்திலர்கள்: அவனுடைய நிரபேக்ஷாபாயஸாவத்தி லிழிந்திலர்கள். (௩)

மூன்றாம்பாட்டு —அறிந்தன இத்யாதி. பாட்டெல்லாம் கடாக்ஷித்தவதாரிகை - வேதங்களும் இத்யாதி. பூர்ணமாக அறிவித்தான் என்று ப்ரீதராகிறாரென்றது - அர்த்தாத்ஸித்தம்.

''அரும்பொருள் - அறிந்தனவேதம் - நூல்கள்'' என்றந்வயித்து அர்த்தம் அருளிச்செய்கிறார் - துர்ஜ்ஞேயார்த்தத்தை இத்யாதி. ஸர்வேஶ்வரனை யறிந்தனவாயிருக்கிற வேதங்களில் அரும்பொருளை விசதீகரிக்கும் நூல்களென்றர்த்தாந்தரம் - அறிந்தனவாய் இத்யாதி. ''அரும்பொருளாதல் அறிந்தனகொள்க'' - அரும்பொருளானமையை யறிந்தனவாகக் கொள்க என்று திருவுள்ளத்துக்கு அருளிச்செய்கிறார். இதுக்கு நியாமகமேதென்ன - யதோவாச இத்யாதி. ஸர்வது:க நிவர்த்தகனை என்றது - ''ஹரணாதேவஸர்வபாபாநாம்ஹரிரித்யபிதீயதே'' என்கிற வசநத்தைப்பற்ற. உக்தத்துக்கு ப்ரமாணம் - ஸம்ஸாரஸர்ப்ப இத்யாதி. ''க்ருஷ்ணஇதிசேஷவம்ஶநாம ...... ஸ்ரோதோஸவஹா:'' இத்யுக்தார்த்தம். நோய்கள் அறுக்கும் மருந்தாக அறிந்தார்களாகில் அறியாதது எது? என்ன - அவனுடைய இத்யாதி. அர்த்தாந்தரம் - அவனுடைய நிரபேக்ஷ இத்யாதி. அதாவது - ''வணங்கி - நோய்களறுக்கும் மருந்தானமையை - அறிந்தார்கள்'' என்கையாலே - ஸாபேக்ஷாப்ரயமென்று அறிந்தார்கள் இத்தனையொழிய, ''அவனே நிரபேக்ஷோபாயம்'' என்னுமத்தை யறிந்திலர்களென்றபடி. 'அரும்பொருள் - அறிந்தனவேதம் - நூல்கள் - அரும்பொருளாதல் - அறிந்தன கொள்க - அறிந்தனரெல்லாம் அரியை வணங்கி - நோய்களறுக்கும் மருந்தென்று - அறிந்தனர்' இத்யந்வய:. (௩)

† ‡ கௌஷீதிக் உபநிஷத்.

நான்காம் பாட்டு.

மருந்தேநங்கள்போகமகிழ்ச்சிக்கென்று
பெருந்தேவர்குழாங்கள்பிதற்றும்பிரான்
கருந்தேவனெம்மான்கண்ணன்விண்ணுலகம்
தருந்தேவனைச்சோரேல்கண்டாய்மனமே.

.—(மருந்தே.) உன்னழகாலே எங்கள் போகத்துக்கு வர்த்தகனானவனே என்று பெருந்தேவர் குழாங்கள் பிதற்றும் பிரானாயிருந்துவைத்து, இங்கேவந்து பிறந்தருளி, ஆஸ்ரிதவத்ஸலனாய், தன்னையாஸ்ரயித்த நம்போல்வார்க்கும் நித்யஸித்தமான ஸ்வாநுபவத்தைத் தந்தருளும் ஸ்வபாவனான எம்பெருமானை ஒருவண்ணம்பெற்றோம்; இனி அவனைச்சோரவிடாதேகிடாய், நல்நெஞ்சே! என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், அயர்வறுமமரர்களுக்குங்கூட ஸ்ப்ருஹணீயனாயிருந்துவைத்து க்ருஷ்ணனாய்வந்து திருவவதாரம்பண்ணியருளி என்னையடிமைகொண்டு விண்ணுலகம் தருவானாயிருக்கிற ஸர்வேஸ்வரனை விடாதேகொள்! என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

[மருந்தேயென்று இப்பாட்டுக்கு] - உன்னுடைய அநுபவத்தாலே எங்களுக்குவரும் ஆநந்தத்துக்கு வர்த்தகனானவனேயென்று அயர்வறுமமரர்களுடைய ஸமூஹங்கள் அக்ரமமாகக் கூப்பிடும்படி அவர்களுக்குத் தன்னை போஜிக்கக் கொடுத்தவனை. [கருந்தேவன்] - கறுத்த திருநிறத்தையுடையனாய்க் கொண்டு தீப்யமாநனான அவன்.

ப.—அநந்தரம், நித்யஸூரிபோக்யனாய், நிரதிஸயஸௌலப்ய விஸிஷ்டனாய்க்கொண்டு அவ்வநுபவத்தை நமக்குத் தாவிருக்கிறவனை, நெஞ்சே விடாதேகிடாய்! என்கிறார்.

நங்கள் - எங்களுடைய, போகம் - போகத்தினுடைய, மகிழ்ச்சிக்கு - வ்ருத்திக்கு, மருந்தே - அர்த்தகமான அம்ருதமே, என்று - , பெரு - உதக்ருஷ்டரான, தேவர் - ஸூரிகளுடைய, குழாங்கள் - ஸமூஹங்களானவை, பிதற்றும் - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே யடைவுகெடக் கூப்பிடும்படி, பிரான் - அவர்களைக் களிப்பிக்கும் மஹோபகாரகனாய், கரு - கருமையையுடைய, தேவன் - திவ்யமான விக்ரஹத்தையுடையனாய், எம்மான் - (அவ்வடிவழகைக்காட்டி) என்னை யடிமைகொண்ட, கண்ணன் - ஸர்வஸுலபனான க்ருஷ்ணனாய், (அந்நிலையிலே), விண்ணுலகம் - பரமபதபோகத்தை, தரும் - தருவானான, தேவனை - ஸமாஸ்ரயணீயனை, மனமே - நெஞ்சே! சோரேல்கண்டாய் - (உன் அந்யபரதையாலே யாதல், நிகர்ஷாநுஸந்தாநத்தாலேயாதல்) நழுவவிடாதேகிடாய்! மருந்தென்று - போகத்தை ஸாத்மிப்பிக்கும் பரிஹாரமாகவுமாம்.

இ—நாலாம்பாட்டில், நித்யஸூரிகளுக்கு போக்யனாய்வைத்து க்ருஷ்ணனாய்வந்து அவதரித்து நம்மையும் அவர்கள்நடுவே வைப்பானாயிருக்கிறவனை விடாதேகிடாய் என்று திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறார்.

[மருந்தே நங்கள் போகமகிழ்ச்சிக்கு] - உன்னுடைய அநுபவத்தால் எங்களுக்குவரும் ஆநந்தத்துக்கு வர்த்தகனானவனே! இப்படிச் சொல்லுகிறவர்கள் ஆரென்னில்?—[பெருந்தேவர்]-அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகள். [குழாங்கள்]-அவர்கள், விண்ணகத்தில் இழிவாரைப்போலே திரள்திரளாகவாயிற்று இழிவது.

[பிதற்றும்] - ஜ்வரஸந்நிபதிதரைப்போலே அக்ரமமாகக் கூப்பிடாநிற்பர்கள். [பிரான்] - அவர்களுக்குத் தன்னை யநுபவிக்கக் கொடுத்த உபகாரகன். [கருந்தேவன்] - காளமேகநிபஸ்யாமமாய் திவ்யமான வடிவையுடையவன். [எம்மான்] - அவ்வடிவைக் காட்டி யென்னை அநந்யார்ஹமாக்கினவன். நித்யஸூரிகளுக்குப் படிவிடும் வடிவைக் கிடீர் எனக்கு உபகரித்தது! [கண்ணன்] - தன்னிலைகுலையாமல்நின்று உபகரிக்கையன்றியே அவதரித்துவந்து உபகரித்தவன். [விண்ணுலகம் தருந் தேவனை] - பரமபதத்தைத் தருவானாயிருக்கிற ஸர்வேஸ்வரனை. [சோரேல் கண்டாய்மனமே] - நெஞ்சே! விடாதேகிடாய்; அவன்உபகாரகனாய்நிற்க நீ வைமுக்யம்பண்ணாதே கிடாய்! அவன் வைலக்ஷண்யத்தை புத்திபண்ணாதே, "ஸாலபன்" என்றுக் காற்கடைக்கொள்ளாதே கிடாய்!

ஈடு.—நாலாம்பாட்டு. நித்யஸூரிகளுக்கு போக்யனாய்வைத்து, க்ருஷ்ணனாய்வந்தவதரித்து, நம்மையும் அவர்கள்நடுவே வைப்பானாகவிருக்கிறவனை விடாதே கிடாய்! என்று திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறார்.

[மருந்தே நங்கள் போகமகிழ்ச்சிக் கென்று] - உன்னுடைய அநுபவத்தால் எங்களுக்குவரும் ஆநந்தத்துக்கு வர்த்தகனானவனே! இப்படி சொல்லுகிறவர்கள் தான் ஆரென்னில்? - [பெருந்தேவர்] - அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகள். [குழாங்கள்] - அவர்கள், கிண்ணகத்திலிழிவாரைப்போலே திரள்திரளாகவாயிற்று இழிவது. [பிதற்றும்] - ஜ்வரஸந்நிபதிதரைப்போலே அக்ரமமாகக் கூப்பிடாநிற்பர்கள். [பிரான்] - அவர்களுக்குத் தன்னை யநுபவிக்கக்கொடுத்த உபகாரகன். [கருந்தேவன்] - காளமேகநிபஸ்யாமமாய், திவ்யமான வடிவையுடையவன். [எம்மான்] - அவ்வடிவைக்காட்டி என்னை எழுதிக்கொண்டவன். நித்யஸூரிகளுக்குப் படிவிடும் வடிவைக்கிடீர் எனக்கு உபகரித்தது! [கண்ணன்] - தன்னிலைகுலையாமல்நின்று உபகரிக்கை யன்றிக்கே, அவதரித்துவந்து உபகரிக்குமவன். [விண்ணுலகந்தருந்தேவனை] - பரமபதத்தைத் தருவானாயிருக்கிற ஸர்வேஸ்வரனை. [சோரேல்கண்டாய்மனமே] - அவனை உடம்புவெளுக்கப்பண்ணாதேகிடாய், நெஞ்சே! இவன் விடுகையாவது- அவனுக்குஇழவுபோலேகாணும். அவன்பண்ணின க்ருஷி ஃபலித்ததில்லையாமே; இல்லையாகில், அவன் வைலக்ஷண்யத்தைப் புத்திபண்ணாதே, "ஸாலபன்" என்றுக் காற்கடைக்கொள்ளாதேகிடாய்! (ச)

நாலாம்பாட்டு.—மருந்தே இத்யாதி. "பெருந்தேவர்குழாங்கள்பிதற்றும்பிரான் - விண்ணுலகம்தருந்தேவனைச் சோரேல்கண்டாய்மனமே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - நித்யஸூரிகளுக்கு இத்யாதி.

*"மருந்து" என்றால் - போக்குமென்றன்றோ அர்த்தம்? வர்த்தகத்வத்தைக் காட்டுமோ? என்ன; வ்யாதிக்குமருந்தென்றால் - தந்நிவர்த்தகத்வமும், தேஹத்துக்குமருந்தென்றால் - தத்வர்த்தகத்வமும் தோற்றுகையாலே, இங்கு வர்த்தகத்வத்தை யருளிச்செய்கிறார்-ஆநந்தத்துக்கு வர்த்தகனானவனே என்று. இவர்களுக்குப் பெருமையேதென்ன - அஸ்ப்ருஷ்ட இத்யாதி. "குழாங்கள்" என்றதுக்கு பாவம் - அவர்கள் இத்யாதி. கிண்ணகம் - ப்ரவாஹம். "பிதற்றும்" என்றதுக்கு பாவம் - ஜ்வரஸந்நிபதிதரை இத்யாதி. "பெருந்தேவர்குழாங்கள் பிதற்றும்பிரான் கருந்தேவன்" என்றவநந்தரம், "எம்மான்" என்றதுக்கு பாவம்-நித்யஸூரிகளுக்கு இத்யாதி. "எம்மான்" என்ற பதத்தோடே, "கண்ணன்" என்ற பதத்துக்கு வாஸனை - தன்னிலே இத்யாதி. "கருந்தேவன்" என்றத்தைக் கடாக்ஷித்து அருளிச்செய்கிறார் - அவனை இத்யாதி. இவர் நெஞ்சுசோர்ந்தால் அவனுடம்பு வெளுக்க வேணுமோவென்ன - இவன் விடுகை இத்யாதி. இழவுஎப்படியென்ன - அவன்பண்ணின இத்யாதி. * ப்ரஸக்தஸ்யஹிப்ரதிஷேதஃ, விலக்ஷணனானவனை விடப்ரஸக்தியேதென்ன - அவன்வைலக்ஷண்யத்தை இத்யாதி. 'நங்கள்போகமகிழ்ச்சிக்கு - மருந்தே - என்று - பெருந்தேவர்' என்று தொடங்கி, 'சோரேல்கண்டாய் மனமே' இத்யந்வயஃ.* (ச)

ஐந்தாம் பாட்டு.

மனமேஉன்னைவல்வினையேன்இரந்து
கனமேசொல்லினேன்இதுசோரேல்கண்டாய்
புனமேவியபூந்தண்துழாயலங்கல்
இனமேதுமிலானையடைவதுமே.

ஆ.—(மனமே.) - பரமபோக்யனைத் தன்னோடொப்பாரின்றிக்கேயிருக்கிறவனை விடாதேகிடாய் நெஞ்சமே! உனக்கு அடியேனாயிருக்கிறேன் என்று பின்னையும் நெஞ்சை இரக்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், நிரதிஶயபோக்யனை எம்பெருமானை விடாதேகிடீர்! என்று திருவுள்ளத்தை ஆதராதிஶயத்தாலே மிகவும் பிரார்த்திக்கிறார்.

[மனமேயென்று தொடங்கி] - நெஞ்சே! உன்னை என்னாற்றாமையாலே ப்ரார்த்தித்து த்ருடமாகச்சொன்னேன். இத்தை அவஶ்யம் சோரவிடாதொழியவேணும். [புனமேவியவென்று தொடங்கி] - செய்வதென்னென்னில்? நிரதிஶயபோக்யனைத் தன்னோடொப்பார் இன்றிக்கேயிருக்கிறவனை ஆஶ்ரயி. ஆஶ்ரயித்ததுதான் என்னென்னில்? எம்பெருமானை ஆஶ்ரயிக்கையென்றுமாம்.

ப.—அநந்தரம், போக்யதையினுடைய நிரூபக வைலக்ஷண்யத்தை யுடையவனை நாம் கிட்டவேணுமென்னுமிடத்தைச் சிக்கெனச்சொன்னேன்; இது நழுவவிடாதேகொள்! என்கிறார்.

மனமே - நெஞ்சே, உன்னை - (என்னிலும் இவ்விஷயத்தில் ஸத்வரமான) உன்னை, வல்வினையேன் - விளம்பாக்ஷமனும்படி ப்ரபலபாபத்தையுடையனான என்சாபலத்தாலே, இரந்து - அர்த்தித்து, கனமே - த்ருடமாகவே, சொல்லினேன் - சொன்னேன்; இது - இத்தை, சோரேல்கண்டாய் - நழுவவிடாதேகொள்; (எத்தையென்னில்?) புனம் - தன்னிலத்தில், மேவிய - வளர்த்தியாலே, பூ - செவ்விய, தண்துழாய் - திருத்துழாய், அலங்கல் - மாலையையுடையனை, (இந்தபோக்யதைக்கு), ஏதும் - ஒரு ப்ரகாரத்தாலும், இனம் - ஒப்பு, இலானை - இல்லாதவைலக்ஷண்யத்தையுடையவனை, அடைவதும் - கிட்டவேணுமென்கிறஇத்தை.

இ.—அஞ்சாம்பாட்டில், "நிரதிஶயபோக்யனானவனை விடாதேகிடாய்" என்று திரியட்டும் திருவுள்ளத்தை அர்த்திக்கிறார்.

[மனமே உன்னை] - "இயற்றுவாய் எம்மொடுநீகூடி" என்கிறபடியே முற்பட்டுநிற்கிற உன்னையிறே நான் இரக்கிறது. [வல்வினையேன்] - ஹ்ருவத்விஷயத்தில் க்ரமப்ராப்திபற்றாதபடியான பாபத்தைப் பண்ணினேன். உன்னையிரக்கவேண்டி இரக்கிறேனல்லேன். என்சாபலாதிஶயத்தாலே யிரக்கிறேனித்தனை. [இரந்துகனமே சொல்லினேன்] - உன்னைக் கால்பிடித்து த்ருடமாகச் சொன்னேன். [இது சோரேல்கண்டாய்] - நான் "தவிர்" என்றாலும் நீ விடப்பாராதே கிடாய். எத்தைவிடாதொழியச் சொல்லுகிறதென்னில்? [புனமேவிய இத்யாதி] - நிரதிஶய போக்யனானவனை ஆஶ்ரயிக்கையை. [புனமேவிய] - புனத்திலே மேவியிருப்பதான அழகிய திருத்துழாய்

மாலையை உடையவனுகையாலே ஒப்பின்றிக்கேயிருக்கிறவனை. அத்தோள்மாலையை யுடையனுகையிறே ஸர்வாதிகனுகையாவது. நான் நிஷேபிக்கிலும் மேல் விழவேண்டி யன்றோ விஷயமிருக்கிறது. 'அடைவது' என்று க்ரியையாதல்; சோரேல் கண்டா யென்று - க்ரியையாதல்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. நெஞ்சே! அவனைவிடாதே கிடாய் என்றார் - கீழ்; அவ்வார்த்தைதன்னை ஒலக்கவார்த்தையாக நினைத்திராதே கிடாய் என்கிறார் - இதில்.

[மனமேஉன்னை] - மோக்ஷஹேதுவாய் முற்பட்டுநிற்கிறஉன்னையன்றோ, பிற்பாடரைச்சொல்லுமாபோலே யிருக்க நான் சொல்லுகிறது? ஸம்ஸவத் ப்ராவண்யம் உனக்கு ஸ்வாபாவிகமாயிருக்க, என்செல்லாமையாலே சொல்லுகிறேனத்தனையிறே. "முந்துற்ற நெஞ்சே இயற்றுவாய் எம்மொடு நீ கூடி" என்று எனக்குங் காற்கட்டவேண்டும்படி யநுபவத்திலே முற்பட்டுநிற்கிற உன்னை. [வல்வினையேன்] - ஸம்ஸவத்விஷயத்தில் க்ரமப்ராப்தி பற்றாதபடியான பாபத்தைப்பண்ணினேன். உன்னையிரக்கவேண்டி யிரக்கிறேனல்லேன்; என் சாபலாதிஶயத்தாலே இரக்கிறே னித்தனை. [இரந்து கனமே சொல்லினேன்] - உன்னைக் கால்பிடித்து த்ருடமாகச்சொன்னேன். இரந்துசொல்லுகைக்கு மணக்கால்நம்பியோடொப்பர்காணும். [இதுசோரேல்கண்டாய்] - இன்னம் நானே "ஸம்ஸவத்ப்ராவண்யமாகாது; இத்தைத் தவிரவேணும்" என்று சொன்னாலும், நீ இத்தைநெகிழவிடாதேகிடாய்! கனம் - பொன். உனக்குப் பரமார்த்தத்தைச்சொன்னேன் என்கை. "சாயால்கரியானை" இத்யாதி. [இதுசோரேல்]-'எத்தைத்தான் நீர் இப்படி சொல்லுகிறது?' என்ன, -[புனமித்யாதி] - நிரதிஶயபோக்யனானவனை ஆஶ்ரயிக்கையை. புனத்திலே மேவியிருப்பதான அழகியதிருத்துழாய்மாலையை யுடையவனுகையாலே ஒப்பின்றிக்கே யிருக்கிறவனை. அத்தோள்மாலையையுடையவனுகையிறே ஸர்வாதிகனுகையாவது. ஒருதிருமுளைத்திருநாளி

அஞ்சாம்பாட்டு.—மனமே இத்யாதி. "சோரேல்கண்டாய்" என்று இரண்டிடத்திலும் சொன்னால் புநருக்தமன்றோவென்ன; அல்பம் வாசிபுண்டென்கிறார் - நெஞ்சே இத்யாதி. "கனமே சொல்லினேன்" என்றத்தைப்பற்ற - ஒலக்கவார்த்தை இத்யாதி. அதாவது - விடாதே கிடாயென்றது அஹ்ருதயமல்ல, ஸஹ்ருதயமென்று கருத்து.

"உன்னை" என்றதுக்குபாவம் - மோக்ஷஹேதுவாய் இத்யாதி. ஆனால்சொல்லுகிறதென்னென்ன - ஸம்ஸவத்ப்ராவண்யம் இத்யாதி. செல்லாமை - பொறுக்கமாட்டாமை. "மோக்ஷஹேதுவாய் முற்பட்டுநிற்கிறஉன்னை" என்றதுக்கு ப்ரமாணம் - முந்துற்ற இத்யாதி. இயற்றுவாய் - கார்யத்தை நடத்தப்பார். வல்வினையேனென்ன - ஸம்ஸவத்விஷயத்தில் இத்யாதி. "என்செல்லாமையாலே சொல்லுகிறேனத்தனை" என்றதின்விவரணம் - உன்னையிரக்கவேண்டி இத்யாதி. "கனம்" என்றதுக்கு இரண்டர்த்தம் - த்ருடமாகச் சொன்னேனென்னுதல்; கனம் என்று-பொன்னாய், ஶ்லாக்யமான அர்த்தத்தைச்சொன்னே னென்னுதல். இரந்துசொல்லவேணுமோ வென்ன-இரந்துசொல்லுகைக்கு இத்யாதி. "சோரேல்கண்டாய்" என்றதினுறைப்பை யருளிச்செய்கிறார் - இன்னம் நானே இத்யாதி. "கனம்" என்றதுக்கு – த்ருடமாகவென்றருளிச்செய்து, சீரிய அர்த்தத்தைச் சொன்னேனென்றர்த்தாந்தரம் - கனம் பொன் இத்யாதி. அப்படி தாம் "ஸம்ஸவத்ப்ராவண்யமாகாது" என்றாரோ வென்ன - சாயால் இத்யாதி. மேலுக்கவதாரிகை - எத்தைத்தான் இத்யாதி. சங்கைக்குப்பரிஹாரம் - நிரதிஶய இத்யாதி. கீழ் - தாத்பர்யவிஸ்தாரத்தை யருளிச்செய்து, ஶப்தார்த்தம் - புனத்திலே இத்யாதி. புனம் - நிலம். அலங்கல் - மாலை. இனம் - ஒப்பு. திருத்துழாய்மாலையை யுடையனானால் ஒப்பின்றிக்கே யிருக்கவேணுமோ என்ன - அத்தோள்மாலை இத்யாதி. ப்ராஸங்கிகம் - ஒருதிருமுளை

னன்றாக இப்பாட்டை யருளிச்செய்து, முன்னாள் கையார் சக்கரத்துக்குப் புறப்பட்டருளினபடி திருவுள்ளத்திலேகிடந்து, ''புனமேவியபூந்தண்துழாயலங்கல் இனமேதுமிலானைகையாவது - நேற்றுப்புறப்பட்டருளினபடியிறே'' என்று அருளிச்செய்தார். அடைவது-சொல்லினேன்: இதுசோரேல்கண்டாய் என்று க்ரியையாகவுமாம்; எத்தைநீர்சொல்லுகிறதென்ன?—இனமேதுமிலானை யடைவது என்று க்ரியையாகவுமாம். (ரு)

ஆறாம் பாட்டு.

அடைவதும்அணியார்மலர்மங்கைதோள்
மிடைவதும்அசுரர்க்குவெம்போர்களே
கடைவதுங்கடலுளமுதம்என்மனம்
உடைவதும்அவற்கேஒருங்காகவே.

ஆ—(அடைவதும்.) - ''அவனைவிடாதேகிடாய்'' என்று நான்சொல்லி முடிப்பதற்குமுன்னே அவனுடைய செயல்களிலே என்னெஞ்சானது ஒருகடலுடைந்தாற்போலே உடைந்து கிடக்கப்பெற்றேன் என்று தம்முடைய நெஞ்சைப் புகழுகிறார்.

ஓ.—ஆறாம்பாட்டில், தாம் இப்படி அர்த்திக்குங்காட்டில் தம்முடைய திருவுள்ளம் எம்பெருமானுடைய சேஷ்டிதங்களை அநுஸந்தித்து மிகவும் சிதிலமாகாநின்றதென்று ப்ரீதராகிறார்.

[அடைவதுமென்று தொடங்கி] - பெரிய பிராட்டியாருடைய மிகவும் அழகிதான திருத்தோளை ஸம்ச்லேஷிப்பதும் ஆச்ரிதவிரோதிகளான அஸுரரை முடிக்கும் விரகுகளே சிந்தியாநிற்பதும் ஆச்ரிதார்த்தமான மஹாப்ரவ்ருத்தி பண்ணியருளாநிற்பதும். [என்மனமென்று தொடங்கி] - என்னுடைய ஹ்ருதயம் ஒருமைப்பட உடைகுலைப்படாநிற்பதும் ஏவம்வித சேஷ்டிதங்களை யுடையவனுக்கே.

இத்யாதி. கையார்சக்கரம் - ஆழ்வார்திருநாள். புறப்பட்டருளினபடி - சேனைமுதலியார் புறப்பட்டருளினபடி. சேனைமுதலியார் புறப்பாட்டைப் பெருமாள் புறப்பாடாகத் திருவுள்ளம்பற்றினாரென்றபடி. 'அருளிச்செய்தார்' நஞ்சீயரென்றபடி. 'மனமே யுன்னை வல்வினையேனிரந்து - புனமேவிய' என்றுதொடங்கி, 'அடைவதும் - கனமேசொல்லினேன், இதுசோரேல் கண்டாய்' என்றந்வயமாதல்; 'மனமே' என்றுதொடங்கி, 'சோரேல்கண்டாய், எத்தைநீர் சொல்லுகிறதென்னில், புனமேவிய என்றுதொடங்கி யந்வயமாதல். பெரியதிருவந்தாதி பதினாலாம்பாட்டு - சாயால் இத்யாதி. 'சாயால்கரியானை' - காந்தியால் கறுத்திருக்கிற ஸர்வேச்வரனை. 'உள்ளறியாராய்' - உட்புக்குஅறியாதவளாய். 'பேயார்' - பூதனையானவள். 'பேயாராய்' - அறிவுகேட்டை யுடையளாய்க்கொண்டு, முலைகொடுத்தாள்; அப்படியே, நெஞ்சே! 'போய்' - விலக்ஷணவிஷயத்தைக்கிட்டி. 'சுவைத்தூண்' - ரஸித்தநுபவிக்கை. 'தேம்பூண்' - தேம்புதலை விளைவிக்கும்: அவத்யத்தைவிளைக்குமென்று. 'அறிந்தறிந்தும்' - மிகவும் அறிந்துவைத்தும். 'தீவினையாம் பாம்பார்வாய்' - நமக்குஅநிஷ்டமான ஐச்வர்யாநுபவமநோரதமாகிற ஸர்ப்பாஸ்யத்திலே. 'கைநீட்டல்பார்த்தி' - கைநீட்டப்பாராநின்றாய். 'நீ யார்' - நீ அந்தப்பேய்ச்சிக்கு எந்தஉறவுஉடையாய்? என்று அயோக்யதாநுஸந்தாநத்தாலே அகலுகிறாரென்று பொருள். தேம்புதல் - குறைதலாய், அவத்யத்தைச் சொல்லுகிறது. தம்செயலில் பூதனைசெயல் நன்றென்று அத்தைக் கௌரவித்து ''பேயார்'' என்கிறார். (ரு)

ப.—அநந்தரம், அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்தி ஹேதுவான லக்ஷ்மீ ஸம்பந்தத்தை யுடையவனானவனைப் பற்ற என்னெஞ்சு ஒருபடிப்பட ஶிதிலமாகா நின்றதென்கிறார்.

மலர் - பத்மவாஸிநியான ஆபிஜாத்யத்தையும், மங்கை - பருவத்தையுமுடையளான லக்ஷ்மியினுடைய, அணி - ஆபரணங்களாலே, ஆர் - நெருங்கின, தோள் - திருத்தோளையே, அடைவதும் - ஸம்ஶ்லேஷிப்பதும், (அத்தோளோடுஉண்டான பரிஷ்வங்கம் ஸித்திக்கைக்காக), அசுரர்க்கு-(ப்ரதிகூலரான) அசுரர்களுக்குஆற்றவரிய, வெம் - வெவ்விய, போர்களே - போர்களையே, மிடைவதும் - நெருங்கப்பண்ணுவதும், (ஆஶ்ரிதார்த்தமாக), கடலுள் - கடலுக்குள்ளில், அமுதம் - அம்ருதத்தை, கடைவதும் -, அவற்கே - (இப்படி லக்ஷ்மீவிஶிஷ்டனுமாய் அநிஷ்ட நிவர்த்தகனுமாய் இஷ்டப்ராபகனுமான) அவனுக்கே, என் மனம் - என் நெஞ்சானது, ஒருங்காகவே - ஒருபடிப்பட, உடைவதும் - ஶிதிலமாகாநின்றதும்.

இ.—ஆறும்பாட்டில், தம்முடைய உபதேசம்பலித்து இவ்விஷயத்திலே திருவுள்ளம் ஶிதிலமாகாநின்றதென்று ப்ரீதராகிறார்.

[அடைவதும் அணியார் மலர்மங்கைதோள்] - மிகவும் அழகிதான பிராட்டி திருத்தோளோடே ஸம்ஶ்லேஷிப்பதும்; அவன் தான் வைஶ்வரூப்யங்கொண்டிழிந்தாலும் தோளழகுக்கு அவ்வருகு போகமாட்டான். [மிடைவதும் அசுரர்க்கு வெம்போர்களே] - அவள்தோளை யணைக்கைக்கிடும் பச்சை. "ஹத்வா ஶத்ருஸங்காந் ஸுகீ" என்றிறே அவள் அணைப்பது. ஆஶ்ரிதவிரோதிகளுக்கு வெம்போர்களே நெருங்கப்பண்ணுவதும் என்னுதல்; அவர்களை முடிக்கும் விரகுகளே சிந்தியாநிற்பதென்னுதல். [கடைவதுங்கடலுளமுதம்]-ப்ரயோஜநாந்தரபரருடைய ப்ரயோஜநத்துக்காகக் கடைவதுமென்னுதல். பிராட்டியைப் பெறுகைக்கு வ்யாபரிக்கும்படி சொல்லுகிறதென்னுதல். அவளை ஸம்ஶ்லேஷிக்கும்படி சொல்லிற்று. அதுக்குஇடும்பச்சை சொல்லிற்று; அவளைப்பெறுகைக்கு யத்நம்பண்ணும்படி சொல்லிற்று. இவை இவர் திருவுள்ளம் உடைகுலைப்படுகைக்கு ஹேதுக்கள். என்னுடைய மநஸ்ஸு ஒருமடைப்பட உடைகுலைப்படாநிற்பதும் ஏவம்வித சேஷ்டிதங்களை யுடையவனுக்கே.

ஈடு.—ஆறும்பாட்டு. தம்முடைய உபதேசம்பலித்து, இவ்விஷயத்திலே திருவுள்ளம் சிதிலமாகாநின்றதென்று ப்ரீதராகிறார்.

[அடைவதும்அணியார் மலர்மங்கைதோள்] - மிகவும் அழகிதான பெரியபிராட்டியார் திருத்தோளோடே ஸம்ஶ்லேஷிப்பதும். அவன்தான் வைஶ்வரூப்யங்கொண்டிழிந்தாலும் தோளுக்குஅவ்வருகு போகமாட்டான். [அணியார்மலர்மங்கை] - "மார்வத்து மாலை" என்கிறபடியே திருமார்வுக்கெல்லாம் தானே யாபரணமாகப்போரும்படியாக

ஆறும்பாட்டு.—அடைவதும் இத்யாதி. "என்மனமுடைவதுமவற்கே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - தம்முடைய இத்யாதி.

"அணி" என்று - அழகாய், "ஆர்தல்"-மிகுதியாய், அழகுமிக்கதோள் என்று - தோளுக்கு விசேஷணமாதல்; இத்தை யருளிச்செய்கிறார் - மிகவும் இத்யாதி. அவயவாந்தரங்களிருக்க, தோளை விசேஷித்ததுக்கு பாவம் - அவன் இத்யாதி. "அணி" என்று - ஆபரணமாய், "ஆர்தல்" - பூர்த்தியாய், ஆர்ந்தவணியான - ஆபரணமாகப் போரும்படியான, மலர்மங்கை என்று - பிராட்டிக்கு விசேஷணமாக அர்த்தாந்தரம் - மார்வத்துமாலை இத்யாதி. விராதிநிரஸநம் பச்சையோவென்ன - பர்த்

விருப்பாளாய், போக்யதையால் குறைவற்றிருக்கிறவள் தோளோடேயாயிற்றணைவது. [மிடைவதும் அசுரர்க்கு வெம்போர்களே] - அவள் தோளணைக்கைக்குஇடும் பச்சை. "ப⁴ர்த்தாரம் பரிஷஸ்வஜே" (பர்த்தாரம்பரிஷஸ்வஜே' என்றிறே அவள்அணைப்பது. ஆஶ்ரிதவிரோதிகளுக்கு வெம்போர்களே நெருங்கப்பண்ணுவது மென்னுதல்; அவர்களை முடிக்கும் விரகே சிந்தியாநிற்குமென்னுதல். [கடைவதுங்கடலுளமுதம்]-ப்ரயோஜநாந்தர பரருடைய ப்ரயோஜநத்துக்காகக் கடைவதுமென்னுதல், பிராட்டியைப்பெறுகைக்கு வ்யாபரிக்கும்படி சொல்லுகிறதென்னுதல். அவளை ஸம்ஶ்லேஷிக்கும்படி சொல்லிற்று. அதுக்கிடும் பச்சைசொல்லிற்று. அவளைப்பெறுகைக்கு யத்நம்பண்ணினபடிசொல்லிற்று. இவர்திருவுள்ளம் உடைகுலைப்படுகைக்கு ஹேதுக்களிவை. [என்மனமித்யாதி] - என்னுடைய மநஸ்ஸு ஒருமடைப்பட உடைகுலைப்படாநிற்பதும் ஏவம்விதமான சேஷ்டிதங்களையுடையவனுக்கே. அவன் பனிக்கடலைக்கடைய, இவர் மனக்கட லுடையப்புக்கது. விரகராயிருப்பார், கோழைகளாயிருப்பாரை த்ரவ்யம்வாங்க நினைத்தால், முந்துற மிடுக்கராயிருப்பாரை நெருக்கிவாங்கவே இவர்கள் தாங்களே கொடுசென்று கொடுப்பர்களிறே; அவனும், மஹத்தத்த்வமான கடலை யுலக்கைவிடுநகமிட்டுநெருக்கி அதின் நல்லுயிரை †வாங்கி, இவருடைய திருவுள்ள முடையத் தொடங்கிற்று. (சு)

ஏழாம் பாட்டு.

ஆகம்சேர் நரசிங்கமதாகி ஓர்
ஆகம்வள்ளுகிரால் பிளந்தானுறை
மாகவைகுந்தங்காண்பதற்கு என்மனம்
ஏகமெண்ணும் இராப்பகலின்றியே.

தாரம் இத்யாதி. "தம் த்³ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகா²வஹம் । ப³பூ⁴வ ஹ்ருஷ்டா வைதே³ஹீ ப⁴ர்த்தாரம் பரிஷஸ்வஜே" இத்யாரண்யகாண்டே காவதாநந்தரே. மிடைகை - நெருக்கமாதல், விசாரமாதல். முடிக்கும்விரகு சிந்திக்குமோவென்ன; "தீங்கிழைக்கும்திருமால்" என்னக்கடவதிறே. "மிடைவதும்" என்றதின் அர்த்தத்வயத்துக்கும் சேரவருளிச்செய்கிறார்-ஆஶ்ரித இத்யாதி. கீழில் பதத்வயாநுகுணமாக "கடைவதும் கடலுளமுதம்" என்றதுக்கு விநியோகம் த்வேதாவருளிச்செய்கிறார் - ப்ரயோஜநாந்தர இத்யாதி வாக்யத்வயத்தாலே.‡ த்விதீயார்த்தத்துக்கு ப்ரமாணம்- "[illegible]" என்று. அதாவது - "தேவர்களுக்கு" என்று வ்யாஜமாத்ரமாய் பிராட்டிக்காகக் கடைந்தானென்றபடி. த்விதீயயோஜநாநுகுணமாக "அடைவதும்" இத்யாதிஅர்த்தத்தை நிகமிக்கிறார் - அவளை இத்யாதி. உடைகுலைப்படுகை - சிதிலமாகை. ஒருங்காக - ஏக ப்ரகாரமாக. "கடைவதும்" இத்யாதியோடே "என்மனமுடைவதும்" என்றத்தைக்கூட்டி ரஸோக்தி-அவன்பனிக்கடலை இத்யாதி. அவன் பனிக்கடலைக்கடைந்தால் இவர்மனக்கடலுடைவானென்னென்ன, ரஸோக்தியாக அருளிச்செய்கிறார்-விரகராய் இத்யாதி வாக்யத்வயத்தாலே. கோழைகள் - ம்ருது ஸ்வபாவர். அப்படியே-'அவனும்' என்றுகூட்டுவது. உலக்கைவிடுநகம்இட்டு-உலக்கையாலேகிட்டி கட்டி. நல்லுயிரை என்றது - "அமுதம்" என்றத்தைப்பற்ற. 'மலர்மங்கை அணியார் தோள் அடைவதும் - அசுரர்க்கு வெம்போர்களே மிடைவதும் - கடலுளமுதம் கடைவதும் செய்யாநிற்குமவர்க்கே - என்மனம் ஒருங்காகவே உடைவதும்' இத்யந்வயம். (சு)

---

† வாங்க என்று இருக்கலாம்.

‡ இந்த இடத்தைக் கவனிக்கும்போது, 'ஏட்டில் ஏதாவது பங்க்தி விட்டிருக்குமோ?' என்று சங்கை யுண்டாகின்றது.

ஆ.—(ஆகம்சேர்.) - இந்த ஆஶ்சர்யத்தை பநுஹவித்து, பின்னையும் ஏவம் விதசேஷ்டிதங்களைச் செய்தருளினவன் தன்னை அவனிருக்கிற திருநாட்டிலே சென்று காணவேணுமென்று ஆசைப்படாநின்றது; அதுவோ அதிதூரமாயிராநின்றது; என்னெஞ்சைக்கொண்டு என்செய்வேன்? என்கிறார்.

ஒ—ஏழாம்பாட்டில், ஏவம்விதஶீல ஶாலியானவன் நிரந்தரவாஸம்பண்ணுகிற, ஒருவர்க்கும் எட்டவொண்ணாத திருநாட்டிலே சென்று காணவேணும் என்று ஆசைப்படாநின்றது என்னெஞ்சு. இதினுடையசாபலத்துக்கு நான்என்செய்ய? என்கிறார்.

[ஆகம்சேர் நரசிங்கமென்று தொடங்கி] - நரத்வ ஸிம்ஹத்வங்கள் பரஸ்பரம் ஸுஸங்கடிதமாய் அத்யந்தவிலக்ஷணமான நரஸிம்ஹமாய் மிகவும் வரமான ஹிரண்யனுடைய உடம்பைக் கூரிய உகிராலே பிளந்தவன் நிரந்தரவாஸம்பண்ணுகிற பரமாகாஶமான ஸ்ரீவைகுண்டத்தைக் காணவேணுமென்று. [என்மனமேகம் எண்ணும் இராப்பகலின்றியே] - என்னுடைய ஹ்ருதயமானது நிரந்தரமாக எண்ணாநின்றது.

ப.—அநந்தரம், ப்ரபலாநிஷ்டபஞ்ஜகனானவன் வர்த்திக்கிற ப்ராப்யபூமியே வேணுமென்று எப்போதும் என்னெஞ்சம் எண்ணாநின்றதென்கிறார்.

ஆகம் - ஒருவடிவிலே, சேர் - பொருந்துவிக்கப்பட்ட, நரசிங்கமதுஆகி - நரத்வ ஸிம்ஹத்வங்களை யுடைத்தாய்க்கொண்டு, (ஹிரண்யனுடைய), ஓர் - அத்விதீயமான, ஆகம் - யார்வை, வள் - வளைந்த, உகிரால் - உகிராலே, பிளந்தான் - பிளந்தவன், உறை - வர்த்திக்கிற, மாக வைகுந்தம் - ஸ்ரீவைகுண்டத்தை, காண்பதற்கு - காண்கைக்கு, என்மனம் - என் நெஞ்சானது, இராப்பகல் - இராப்பகலாக, இன்றி - வேறுபாடின்றியே, ஏகம் - ஏகப்ரகாரமாக, எண்ணும் - எண்ணாநின்றது.

இ.—ஏழாம்பாட்டில், அவன் நித்யவாஸம்பண்ணுகிற பரமபதத்தைச் சென்று காணவேணு மென்னாநின்றதுஎன்னெஞ்சு என்கிறார்.

[ஆகம்சேர் இத்யாதி] - நரத்வஸிம்ஹத்வங்கள் சேர்ப்பாலுங் கண்ட சர்க்கரையும்போலே ஸுஸங்கடிதமான நரஸிம்ஹமாய் என்னுதல்; நரஸிம்ஹத்தினுடைய வடிவு இவர்நெஞ்சிலே சேர்ந்தபடியென்னுதல். [ஓராகம்] - ஹிரண்யனுடைய அத்விதீயமான முருட்டுடம்பு. [வள்ளுகிர்] - கூரியவுகிர், வளைந்தவுகிர் என்னவுமாம். விரோதிநிரஸந ஶீலனானவன் நித்யவாஸம் பண்ணுகிற பரமபதத்தைக் காணவேணுமென்று. [என் மனமேகம் எண்ணும்] - என்மநஸ்ஸு ஒருபடிப்பட நினையாநின்றது. சேதநர்க்கு இரா ஒருகார்யமும் பகல் ஒருகார்யமுமா யிருக்குமிறே; இவர்க்கு அஹோராத்ர விபாகமற இதுவேயாய்ச் செல்லாநின்றது. "[illegible] [illegible]" என்று பிராட்டி திருவயோத்யையை நினைத்தாற்போலேயாயிற்று இவர் திருவுள்ளத்துக்குப் பரமபதம் ஸ்வதேஶமா யிருக்கிறபடி.

ஈடு.—ஏழாம்பாட்டு. அவன் நித்யவாஸம்பண்ணுகிற பரமபதத்தைச்சென்று காணவேணும் என்னாநின்றது என்னெஞ்சு என்கிறார்.

ஏழாம்பாட்டு.—ஆகம் இத்யாதி. "உறைமாகவைகுந்தங்காண்பதற்கு என்மனமேகமெண்ணும்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - அவன் நித்யவாஸம் இத்யாதி.

[ஆகம்சேர் இத்யாதி] - நரத்வஸிம்ஹத்வங்கள் சேர்ப்பாலுங்கண்டசர்க்கரை யும்போலே ஸங்கடிதமான நரஸிம்ஹமா யென்னுதல்; நரஸிம்ஹத்தினுடைய வடிவு இவர்நெஞ்சிலே சேர்ந்தபடி யென்னுதல்; "ஸ்மரந் ராகவபாணாநாம்" (ஸ்மரந் ராகவபாணானும்) என்கிறபடியே மறக்கவொண்ணாதபடி திருவுள்ளத்திலே சேர்ந்தபடி யைச் சொல்லிற்றாதல்; இரண்டு வடிவையுஞ் சேர்த்துக் கோவேந்து தோன்றினபோது இவர்நெஞ்சுக்கு இனியதாய்ச் சேர்ந்திருந்தபடியைச் சொல்லுதல். [ஓராகம்] - அத்விதீய மான முருட்டுடம்பு. [வள்ளுகிரால்] - கூரிய வுகிர்; வளைந்தவுகிரென்றுமாம். [பிளந்தானுறை] - அநாயாஸேநகிழித்துப்போகட்டவன் நித்யவாஸம்பண்ணுகிற. [மாகவைகுந்தம்] - அந்நரஸிம்ஹம் வர்த்திக்கிற முழஞ்சு காணவாயிற்று ஆசைப்படுகிறது. "பரமாகாஶம்" (பரமாகாஶம்) என்னக்கடவதிறே. என்னுடைய ஹ்ருதயமானது, எப்போதுமொக்க உச்சிவீடுவிடாதேஇத்தையே மநோரதியாநின்றது. [இராப்பகலின்றியே] - இரா ஒருகார்ய மும் பகல் ஒருகார்யமுமாயிறே நாட்டார்க்கு இருப்பது ; இவர்க்குஎல்லாக்காலத்திலும் இதுவேயாயிற்று; "ஸமாத்வா தஶரதஹம்ராகவஸ்யநிவேஶநே" (ஸமாத்வா தஶதத்ராஹம்ராகவஸ்யநிவேஶநே) என்று பிராட்டி திருவயோத்யையை நினைத்தாற் போலேயாயிற்று, இவர்திருவுள்ளத்துக்குப் பரமபதம் ஸ்வதேஶமாயிருக்கிறபடி. (எ)

எட்டாம் பாட்டு.

இன்றிப்போகஇருவினையுங்கெடுத்து
ஒன்றியாக்கைபுகாமையுய்யக்கொள்வான்
நின்றவேங்கடம்நீள்நிலத்துள்ளது
சென்றுதேவர்கள்கைதொழுவார்களே.

ஆகத்திலே - ஸர்வேஶ்வரன் திருமேனியிலே, சேர்ந்த-ஸங்கடிதமான நரஸிம்ஹமாயென்னுதல்; இத்தை யருளிச்செய்கிறார் - நரத்வ ஸிம்ஹத்வங்கள் இத்யாதி. ஆகத்திலே - ஆழ்வார் திருவுள்ளத்திலே, சேர்ந்த நரசிங்கமாயென்று இரண்டாமர்த்தம் அருளிச்செய்கிறார் - நரஸிம்ஹத்தி னுடைய இத்யாதி. நரஸிம்ஹத்தின் ஆகமானது இவர் திருநெஞ்சிலேசேர்ந்த நரசிங்கமாயென்று மூன்றாமர்த்தமாதல், த்விதீயார்த்த விவரணமாதல் - ஸ்மரந் இத்யாதி. "ப்ரஹ்ருஷ்ணஸ்ய ஸுகாஶா நாம்விஸ்ருஷ்டஸ்ய பலஸ்ய ச। ஸ்மரந்ராகவபாணாநாம்விவ்யதே ராக்ஷஸேஶ்வர:" இதி யுத்தகாண்டே (சுo-ந). சேர்ப்பால்-குழம்புப்பால். முந்தினஅர்த்தவிவரணம்-இரண்டு வடிவை யும் இத்யாதி. "பிளந்தானுறை மாகவைகுந்தங்காண்பதற்கு" என்றுசேர்த்து ஸாவம்-அந்நரஸிம்ஹம் இத்யாதி. முழஞ்சு - குகை. மாகம் - மஹத்தானகம். "மாகம்" என்றால் - பரமபதத்தைச் சொல் லுமோவென்ன - பரமாகாசம் இத்யாதி. "என்மனம் - இராப்பகலின்றியே - ஏகமெண்ணும்" என்ற துக்கர்த்தம் - என்னுடைய இத்யாதி. நாள்தோறுமென்னாதே, "இராப்பகல்" என்று விசேஷித்த துக்கு, "நக்தந்திவஞ்ச" இத்யாதியைக் கடாக்ஷித்து ஸாவம் - இராவொருகார்யமும் இத்யாதி. திருநகரியைவிட்டு பரமபதத்தை எண்ணுகிறதென்னென்ன; ஸநிதர்ஶநமாக அருளிச்செய் கிறார் - ஸமாத்வாதஶ இத்யாதி. சுந்தரகாண்டே ஹநூமந்தம் ப்ரதி ஸீதா. "ஸமாத்வாதஶ தத்ராஹம் ராகவஸ்ய நிவேஶநே। புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ" இத்யுத்தரார்த்தம். 'ஆகம்சேர்' இத்யாரப்ய, 'என் மனம் - இராப்பகலின்றி - ஏகமெண்ணும்' இத்யந்வய:. (எ)

ஆ.—(இன்றிப்போக) - அவனைக் காண்கைக்குத் திருநாட்டிலே போக வேணுமோ? இங்கே அணித்தாகத் திருமலையிலேயன்றோ அவன் நின்றருளுகிறதென்னில்? - அத்தால் என் எனக்கு? அங்குச்சென்று அடிமைசெய்வார் அயர்வறுமமரர்களல்லரோ? என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், தன்னைக் காணவேண்டியிருப்பார்க்குத் திருநாடு முட்டப் போகவேண்டாதபடி யணித்தாகத் திருமலையிலேவந்து நின்றருளினபடியை அநுஸந்தித்து, கால்நடை தந்து அவ்வளவும் போகவல்லவர்களுடைய ஶ்லாக்யவத்தை யைச் சொல்லாநின்றுகொண்டு, தம்முடைய ஶலஹாநியை ஆவிஷ்கரிக்கிறார்.

[இன்றிப் போகவென்று தொடங்கி] - தன்னை ஆஶ்ரயித்தாருடைய புண்ய பாபரூபகர்மங்களை நிஶ்ஶேஷமாகப் போக்கிப் பின்னை ப்ரக்ருதியில் ஸம்பந்தியாதபடி பண்ணி ரக்ஷித்தருளும் ஸ்வபாவனானவன் நின்றருளும் திருமலை ஸ்வஸம்பந்தத்தாலே ஶ்லாக்யமான பூமியது. [சென்றென்று தொடங்கி] - அவ்வளவும்போய்த் தொழுமிடுக்குடையார் ஶ்லாக்யவான்கள்.

ப.—அநந்தரம், ஆஸந்நமாக அவன்வர்த்திக்கிற அத்ருஷ்டதேஶமாயுள்ள திருமலையைச் சென்று அநுபவிப்பார் ஸூரிஸமரானாரிறேயென்று தம்முடைய ஶைதில்யத்தை யருளிச்செய்கிறார்.

இருவினையும் - புண்யபாபரூபமான கர்மங்களிரண்டையும், இன்றி - ஸத்தையழிந்து, போக - போம்படி, கெடுத்து - நஶிப்பித்து, ஒன்றி - துர்விவேசமாம்படி அசித்தோடே ஸம்ஸ்ருஷ்டனாய், ஆக்கைபுகாமை - தேவாதிஶரீரப்ரவேஶம் பண்ணாதபடி, உய்யக்கொள்வான் - அடிமைகொண்டு உஜ்ஜீவிப்பிக்குமவன், நின்ற - அவஸரப்ரதீக்ஷனாய்நிற்கிற, வேங்கடம் - திருமலையானது, நீள்நிலத்து - ஶ்லாக்யபூமியிலே, உள்ளது - உண்டாயிருப்பதொன்று, சென்று - கிட்டி, கைதொழுவார்கள் - கைதொழுமவர்கள், தேவர்களே - (மநுஷ்யரல்லரே;) தேவர்களன்றோ ?

இ.—எட்டாம்பாட்டில், தன்னைக் காண்கைக்குப் பரமபதத்துக்குப் போக வேண்டாதபடி திருமலையிலே வந்து நின்றருளினபடியை யநுஸந்தித்து தம் ஶலஹாநியாலே தமக்குத் திருமலையோடு பரமபதத்தோடு வாசியற்றதென்கிறார்.

[இன்றிப்போக இருவினையுங்கெடுத்து] - புண்யபாபங்களை இன்றிப்போம்படி ஸவாஸநமாகப் போம்படிபண்ணி. இத்தலையாலே போக்கும்போதிறே ஶேஷிக்கப் போவது. [ஒன்றியாக்கை புகாமை] - அசித்தோடேசேர்ந்து கர்மகார்யமான ஶரீர ப்ரவேஶம்பண்ணாதபடி. [உய்யக்கொள்வான் நின்றவேங்கடம்]—"உயிரளிப்பான்" என்கிறபடியே ரக்ஷணார்த்தமாக அவஸரப்ரதீக்ஷனாய் நின்ற திருமலை. [நீள்நிலத்துள்ளது] - ஸ்வஸம்பந்தத்தாலே ஶ்லாக்யமான பூமியிலுள்ளது. [சென்று தேவர்கள் கைதொழுவார்களே] - அவ்வளவு சென்று தொழுமிடுக்குடையார்: "நதேதேந ஷ்யா தேவாஸ்தே" என்கிறபடியே ஶ்லாக்யவான்களான தேவர்கள்.

ஈடு.—எட்டாம்பாட்டு. இஶ்ஶரீரஸம்பந்தமற்றால் போய் அநுபவிக்கும் பரமபதம் வேணுமோ? இஶ்ஶரீரத்தோடேயநுபவிக்குந் திருமலை பூமியதன்றோ? ஆனாலும், நமக்குத் திருமலையோடு பரமபதத்தோடு வாசியற்றதிறே! என்கிறார்.

எட்டாம்பாட்டு.—இன்றிப்போக இத்யாதி. 'நின்றவேங்கடம்'' என்றதொடங்கி, "கைதொழுவார்களே'' என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - இஶ்ஶரீர இத்யாதி.

[இன்றிப்போகஇருவினையுங்கெடுத்து] - புண்யபாபரூப கர்மங்களானவை, இன்றிப்போம்படி - ஸவாஸநமாகப் போம்படி - பண்ணி. தானே போக்கிக்கொள்ளப் பார்க்குமன்றிறே சிறிது கிடக்கப்போவது. [ஒன்றியித்யாதி] - பின்னையும் ருசிவாஸநை கிடக்கில், அசித்தத்த்வத்தோடேபோய்க் கலசி, ஶரீரப்ரவேஶம்பண்ணி, அத்தால் வரும் க்லேஶம் அநுபவிக்க வேணுமிறே; அதுசெய்யாமை. [உய்யக்கோள்வான்இத்யாதி] - ''உயிரளிப்பான்''என்கிறபடியே, ஸர்வரக்ஷணார்த்தமாக அவஸரப்ரதீக்ஷணாய்க்கொண்டு நிற்கிற திருமலை. [நீள்நிலத்துள்ளது] - திருமலையை யுடைத்தாகையாலே ஶ்லாக்ய மான பூமியிலுள்ளது திருமலை. அத்தால் பெற்றதென்? [சென்றித்யாதி] - அவ்வளவு கால்நடைதந்து போகவல்லார் பாக்யாதிகரிறே; ''நதேமநுஷ்யாதேவாஸ்தே'' (நதேமநுஷ்யாதேவாஸ்தே) என்னுமாபோலே, அவனுடைய ஶீலாதிகுணத்தை யநுஸந்தித்துச் சொல்லுகிறார். ப்ரேமாந்தர்க்கு அவ்விடத்தோடு இவ்விடத்தோடு வாசியற்றதிறே, எட்டாமைக்கு. (அ)

ஒன்பதாம் பாட்டு.

தொழுதுமாமலர்நீர்சுடர்தூபங்கொண்டு
எழுதுமென்னும் இதுமிகையாதலின்
பழுதில்தோல்புகழ்ப்பாம்பணைப்பள்ளியாய்!
தழுவுமாறறியேன்உனதாள்களே.

''இருவினையும் - இன்றிப்போக - கெடுத்து'' என்றந்வயித்தர்த்தம் - புண்யபாப இத்யாதி. கர்மங்கள் ஸவாஸநமாகப் போகக் கூடுமோவென்ன - தானே இத்யாதி. கர்மம் க்ஷயித்தால் ஶரீரம் தன்னடையே போம்; ஆயிருக்க, ''ஒன்றியாக்கை புகாமை'' என்று விசேஷிப்பானென்? என்ன - பின்னையும் இத்யாதி. நசிவாஸநை என்றது - ப்ரக்ருதியினுடைய ருசிவாஸநையென்றபடி. போய்க்கலசி என்றது - த்பு பர்ஜந்ய க்ரமேண வந்தென்றபடி. நிலத்துக்கு நீட்சியேதென்ன - திருமலையை இத்யாதி. நீள் - ஶ்லாக்யமானபடி. இது ஸந்நிஹிதமானாலும் தமக்குப்போக பலமில்லை யென்று விவக்ஷித்து - அத்தால் பெற்றதேன் என்கிறார். ஸந்நிஹிதமானால் போய் அநுபவிக்கலாயிருக்க, ''அத்தால் பெற்றதென்?'' என்று விஷண்ணராவானென்னென்ன - அவ்வளவு இத்யாதி. தான் சேவிக்கமாட்டாவிட்டால் சேவிக்கிறவர்களை பாக்யாதிகரென்ற பேருண்டோவென்ன- நதேமநுஷ்யா இத்யாதி. ''நதேமநுஷ்யாதேவாஸ்தேயேசாருஶுபகுண்டலம் । முகம்த்ரக்ஷ்யந்திராமஸ்யவர்ஷேபஞ்சதஶேபுந:'' இத்யயோத்யாகாண்டே தஶரத:. சக்ரவர்த்திக்குப் பெருமாளைப் பிரிகையாலே ''நதேமநுஷ்யா:'' என்னலாம்; இவர்க்கு பலஹாநியென்னென்ன - அவனுடைய இத்யாதி. பரமபதம்போலே திருமலையும்எட்டாநிலமோவென்ன - ப்ரேமாந்தர்க்கு இத்யாதி. 'இருவினையும் - இன்றிப்போக - கெடுத்து - ஆக்கைபுகாமை யுய்யக்கொள்வான் நின்ற வேங்கடம்' என்றுதொடங்கி, 'சென்று - கைதொழுவார்கள் - தேவர்கள்' என்றந்வயம். உய்யக்கோள்வான் - உஜ்ஜீவிப்பிக்கைக்காக. நின்றவேங்கடம் - அவஸரப்ரதீக்ஷணாய் நிற்கிற திருமலை யென்றபடி. (அ)

ஆ.—(தொழுது) - உமக்குத்தான் அங்கேசென்று அடிமைசெய்கைக்குத் தட்டென்னென்னில்?-ஹேய ப்ரத்யநீக கல்யாண குண விசிஷ்ட ஸேஷஸேஷாசந கருட ப்ரமுக திவ்யபுருஷர்களாலே பரிசரித சரணயுகளனான உன் திருவடிமலர்களிலே, அத்யந்தம் அபக்ருஷ்டனான நான் அடிமைசெய்கைக்கு அர்ஹனோ? என்கிறார்.

ஓ.—ஒன்பதாம்பாட்டில், ஏதேனும் ஒருபடி உன்னுடைய திருவடிகளிலே வந்தேனேயாகிலும் "[illegible]" என்னும்படியாலே ஸமாஸ்ரயணோந்முகர்பக்கல் அவர்களுடைய ஆபிமுக்யமாத்ரத்திலே துஷ்டனும் ஸ்வஹாவனான உன்னுடைய ஸீலவத்தையின் மிகுதியாலே அடிமைசெய்கை யரிதென்கிறார்.

[தொழுதுமாமலர் என்றுதொடங்கி] - அழகிய புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு அடிமைசெய்து உஜ்ஜீவிப்போமென்றால் உன் ஸீலவத்தையாலே இக்குத்தைக்கு மிகை ஆதலால். [பழுதிலென்று தொடங்கி] - திருவநந்தாழ்வானோட்டை ஸம்ஸ்லேஷத்தாலே ஸ்வாராத்யத்வப்ரதையை யுடையவனே! உன்னுடைய திருவடிகளில் அடிமை செய்யும்விரகு அறிகிறிலேன்.

ப.—அநந்தரம், ஆஸ்ரயணத்தோடும் மிகையாம்படியான உன்னுடைய ஸீலாதிஸயத்தை யநுஸந்தித்து, உன் திருவடிகளில் ஒருப்ரவ்ருத்திக்கு க்ஷமனாகிறிலேனென்கிறார்.

மா - ஸ்லாக்யமான, மலர் - புஷ்பத்தையும், நீர் - அர்க்யாதிஜலத்தையும், சுடர் தூபம் - தீபதூபங்களையும், கொண்டு - ஸ்வீகரித்துக்கொண்டு, தொழுது-தொழுகைக்காக, எழுதும் - உத்யோகிப்போம், என்னுமிது—, (உன்ஸீலாதிஸயத்தாலே), மிகைஆதலின் - மிகையாயிருத்தலால், பழுது-(தூராராத்யதைபடியான)பழுது, இல்- இன்றியே, தொல்புகழ்-ஸ்வாபாவிகஸௌஸீல்ய ப்ரதையையுடையையாய்,(அதுக்கு ஸூசகமாம்படி), பாம்பு - திருவநந்தாழ்வானை, அணை — படுக்கையாய்க்கொண்டு, பள்ளியாய் - நித்யஸம்ஸ்லேஷம்பண்ணிக் கண்வளர்ந்தருளுகிறவனே!உன தாள்கள்-உன்திருவடிகளை, தழுவும் — ஸம்ஸ்லேஷிக்கும், ஆறு - ப்ரகாரம், அறியேன் - அறிகிறிலேன். அக்குத்தைக்கு ஒருப்ரவ்ருத்தி அபேக்ஷிதையல்ல; நான் ஒருப்ரவ்ருத்திக்கு க்ஷமனாகிறிலேனென்று கருத்து.

இ. —ஒன்பதாம்பாட்டில், இப்படி ஸுலபனான உன்திருவடிகளைக் கிட்டப்பெற்றாலும் ஆஸ்ரயணத்தில் ஆபிமுக்யமாத்ரத்திலே துஷ்டனும் உன் ஸீலவத்தையை அநுஸந்தித்து ஒருப்ரவ்ருத்தி பண்ண க்ஷமனாகிறிலேனென்கிறார்.

[தொழுது இத்யாதி] - "ஸ்லாக்யமான புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு அடிமைசெய்து உஜ்ஜீவிப்போம்" என்றால், இது மிகையாம்படியன்றோ உன்னுடைய ஸீலவத்தையிருப்பது? "[illegible]" என்கிற விஷயமிறே. [ஆதலின்] - இப்படி ஸீலாதிகனாகையாலே "தூராராத்யன்" என்கிற பழுதின்றிக்கே, ஸ்வாபாவிகமான ஸ்வாராத்யத்வ ப்ரதையையுடையையாய், அதுக்குஅடியாக திருவநந்தாழ்வானோடே ஸம்ஸ்லேஷிக்கிறவனே!உன்திருவடிகளை யணையும்விரகு அறிகிறிலேன். திருவடிகளில் அடிமைசெய்யும்விரகுஅறிகிறிலேன்.வைலக்ஷண்யாலே முதலிலே கிட்டுகை யரிது. கிட்டினாலும் ஸீலாதிக்யத்தை அநுஸந்தித்து ஒருப்ரவ்ருத்தி பண்ண க்ஷமனாகிறிலேன். "இப்பாட்டால் அயோக்யதாநுஸந்தாநம் பண்ணுகிறார்" என்பாரும்

உண்டு. * கண்கள் சிவந்துக்குப் பின்பு அதில்லை. "அவனுடைய உபாயஹாவத்தை அநுஸந்தித்து இத்தலையால் ஒன்றுசெய்கை மிகையாயிருக்கிறபடி சொல்லுகிறார்" என்பாருமுண்டு. இவை - பக்ஷமன்று.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. இப்படி ஸாலஹ்ஞன உன்திருவடிகளிலே கிட்டப்பெற்றாலும், ஆஸ்ரயணத்தில் ஆஹிமுக்யத்திலே ஸந்துஷ்டனும்உன்ஶீலவத்தையை யநுஸந்தித்து, ஒருப்ரவ்ருத்திபண்ண க்ஷமனுகிறிலேனென்கிறார். அன்றிக்கே, "இங்ஙனே ஒருமூன்றுபாட்டு தம்முடைய அயோக்யதையைச் சோல்லுகிறார்" என்பாருமுண்டு; அதுஇல்லையிறே * கண்கள் சிவந்துக்குப்பின்பு இவர்க்கு. "இத்தலையாலே யொன்றை யர்த்தித்துப்பெறுகை மிகையாம்படியா யிருக்கிறவனுடைய உபாயஹாவத்தைச்சோல்லுகிறார்" என்பாருமுண்டு. இவையெல்லாமல்ல; "அவன் ஸந்நிதியில் க்ரமத்தில் பரிமாறவொண்ணுதபடி யழிக்கும் அவனுடைய ஶீலகுணத்தைச் சோல்லுகிறது" என்று நம்முடையவர்கள் நிர்வஹிக்கும்படி.

[தோழுதுஇத்யாதி] - "ஶ்லாக்யமான புஷ்பாத்யுபகரணங்களைக்கோண்டு அடிமைசெய்து உஜ்ஜீவிப்போம்" என்றால், இது மிகையாம்படியன்றே உன்னுடைய ஶீலவத்தை யிருப்பது? "அந்யத்பூர்ணாதபாம்கும்பாத்" (அந்யத்பூர்ணுதபாம்கும் பாத்) என்கிற விஷயமிறே. [ஆதலின்]-இப்படி ஶீலாதிகளுகையாலே. "துராராதன்" என்கிறபழுதுஇன்றிக்கே, ஸ்வாஹாவிகமான ஸ்வாராதத்வ ப்ரஜையையுடையையாய், அதுக்குஅடியாகத் திருவநந்தாழ்வானேடே ஸம்ஶ்லேஷிக்கிறவனே! [தழுவுமாறறியேன்]-உன்திருவடிகளையணையும் விரகுஅறிகிறிலேன். ஷலஹாநியாலே முதலிலேகிட்டுகையரிது; கிட்டினாலும் ஶீலாதிக்யத்தை யநுஸந்தித்து ஒருப்ரவ்ருத்திபண்ண க்ஷமனுகிறிலேன். (கூ)

ஒன்பதாம்பாட்டு.—தோழுது இத்யாதி. "தொழுது-எழுதுமென்னு மிது மிகையாதலின் - தழுவுமாறறியேன்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - இப்படி இத்யாதி. "தொழுது - எழுதும்" என்றதிலேநோக்காக நிர்வாஹாந்தரத்வயம் - அன்றிக்கே இத்யாதி.ப்ராயமாவதாரிகாவிவரணம்-இவையெல்லாமல்ல அவன்ஸந்நிதியில் இத்யாதி. மூன்றுபாட்டு என்றது எட்டாம்பாட்டுத்தொடங்கி மூன்றுபாட்டென்றபடி. 'இத்தலை' இத்யாதிக்கு - தஆஸ்ரயணஸௌகர்யஞ் சொல்லுகைக்காக ஆஸ்ரயணீயனுனவனுடைய ஸ்வாராததையைச் சொல்லுகிறுரென்று கருத்து.

"மாமலர்நீர்சுடர்தூபங்கொண்டு-தொழுது-எழுதுமென்னுமிது மிகை" என்று அந்வயித்து அர்த்தம் - ஶ்லாக்யமான இத்யாதி. "மா" என்றத்தை - மலர் நீர் சுடர் தூபமெங்கும் கூட்டுவது. "இப்படிஇவன் ஸ்வாராத்யன்" என்னுமதுக்கு ப்ரமாணம் - அந்யத் இத்யாதி "அந்யத்பூர்ணாதபாம் கும்பாதந்யத்பாதாவநேஜநாத் । அந்யத்குஶலஸம்ப்ரஶ்நாந்நசேச்சதி ஜநார்தந:" இதி ஸஞ்சய:. அதுக்கடியாக - ஸ்வாராததைக்கடியாக. இத்தால் - திருவநந்தாழ்வான் அல்பாநுகூல்யங்கொண்டு அங்கீகரிப்பிக்கு மென்றபடி. விரகறியாமைக்கு ஹேதுஎது? என்ன - ஷலஹாநியாலே இத்யாதி. 'மாமலர்நீர்சுடர் தூபங்கொண்டு - தொழுது - எழுதும்' இத்யாரப்யஅந்வய:. (கூ)

பத்தாம் பாட்டு.

தாளதாமரையான்உனதுந்தியான்
வாள்கொள்நீள்மழுவாளிஉன்னாகத்தான்
ஆளராய்த்தொழுவாரும்அமரர்கள்
நாளும்என்புகழ்கோஉனசீலமே?

ஆ.— (தாளதாமரையான்.) - தம்முடைய அநர்ஹாநுஸந்தாநத்தாலே அவன்திருவடிகளில் அடிமைசெய்கையில் தமக்குப்பிறந்த கூச்சமெல்லாம் போம்படியாகத் திருவேங்கடமுடையானுடைய நிரவதிக ஸௌஶீல்யகுணத்தைக் கண்டு புகழுகிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், ஞாஸ்யச்சுவடறியாத க்ஷுத்ரரான தேவர்களுக்குங்கூட ஸமாஶ்ரயணீயனாயிருக்கிற உன்னுடைய திருவடிகளில் ஸௌஶீல்யம் காலமெல்லாங்கூடினாலும் என்னால் புகழ்ந்துமுடிக்க வொண்ணாதென்கிறார்.

[தாளதாமரையானென்று தொடங்கி] - அத்யபிமாநியான கமலாஸநன் உன்னுடைய திருநாபியிலான். அநந்யஶரண ரல்லாதமன்றிக்கே, ஒளியையுடைத்தாய் நீண்டமழுவையுடைய ருத்ரன் உன்னுடைய திருமேனியில் ஒருப்ரதேஶத்திலான்; பரிசர்யை பண்ணுகிறார் அடிமைக்குத் தகாத தேவாதிகள்.

ப.—அநந்தரம், ப்ரயோஜநாந்தரபரர்க்கும் முகங்கொடுக்கும் உன்னுடைய ஶீலம் வாசாமகோசரமஹிமாவன்றோ? என்கிறார்.

தாள - தாளையுடைத்தான, தாமரையான் - தாமரையிலேபிறந்த ப்ரஹ்மா, உனது உந்தியான் - உனதுஉந்தியை யாஶ்ரயமாகவுடையவன்; வாள்-ஒளியை, கொள்- உடைத்தான, நீள் - பெரிய, மழு - பரசுவை, ஆளி - ஆண்டுகொண்டுபோருகிற ருத்ரன், உன் ஆகத்தான் - உன் திருமேனியிலொருபக்கத்தான்; ஆளர் ஆய் - ஸூரிகளோபாதிஶேஷபூதராய், தொழுவாரும்-தொழுமவர்கள், அமரர்கள் - ப்ரயோஜநாந்தரபரரான தேவதாந்தரவர்க்கம்; (இப்படி நிரவதிகமான), உன - உன்னுடைய, சீலம் - ஶீலத்தை, நாளும் - காலதத்வமெல்லாங்கூடினாலும், என் - எத்தைச்சொல்லி, புகழ்கோ - புகழ்வேன்?

இ.—பத்தாம்பாட்டில், ஞாஸ்யச்சுவடறியாத ப்ரஹ்மாதிகளுக்கும் ஸமாஶ்ரயணீயனாயிருக்கிற உன்னுடைய ஶீலம் என்னாற் புகழ்ந்துமுடிக்கவொண்ணாதென்கிறார்.

[தாளதாமரையான் இத்யாதி] - தாமரைப்பூவை உத்பத்திஸ்தாநமாகவுடைய ப்ரஹ்மா உன் திருநாபியைப்பற்றி வர்த்தியாநின்றான். கமலயோநித்வத்தால் வந்த ஞாநமாநத்தை உடையவனுக்கிறே உடம்புகொடுத்தது. ஒளியையுடைத்தாய்த் தொடங்கின கார்யத்தை முடியநடத்தவற்றான மழுவையுடைய ருத்ரன் உன்திருமேனியில் ஏகதேஶத்திலான். அநந்யஶரணத்வலக்ஷணமான தொடையொத்த துளபமுங் கூடையுமாய்ப் புகழ்ந்து நிற்கிறானல்லனே. அடியராய் பரிசர்யை பண்ணுகிறார் தேவர்கள். நித்யஸூரிகள் செய்யும் அடிமையிறே, தேவத்வஸாம்யத்தாலே, "நான்

ஈஶ்வரன்" என்றிருக்குமவர்கள் செய்கிறது. [உனசீலம் - நாளும் என்புகழ்கோ]- உன்னுடைய ஶீலகுணத்தைக் காலமெல்லாங்கூடினாலும் என்னால் புகழ்ந்துமுடிய வொண்ணுமோ ?

ஈடு.—பத்தாம்பாட்டு. தாஸ்யச்சுவடறியாத ப்ரஹ்மாதிகளுக்கும் ஸமாஶ்ரயணீயனாயிருக்கிறஉன்னுடைய ஶீலம் என்னால் புகழ்ந்து முடிக்கவொண்ணாதென்கிறார்.

[தாளதாமரையான் உனதுந்தியான்] - தாமரைப்பூவை யுத்பத்தி ஸ்த்தாநமாக வுடைய ப்ரஹ்மா, உன் திருநாபியைப்பற்றி வர்த்தியாநின்றான். கமலயோநித்வத்தால் வந்த துர்மாநத்தையுடையவனுக்கிறே உடம்புகொடுத்தது. [வாள்இத்யாதி] – ஒளியை யுடைத்தாய், தொடங்கினகார்யத்தை முடிய நடத்தவற்றான மழுவையுடைய ருத்ரன், உன்திருமேனியில் ஏகதேசத்தைப்பற்றி வர்த்தியா நின்றான். அநந்யஶரணத்வ லக்ஷணமான* தொடையொத்த துளபமுங் கூடையுமாய்ப் புகுந்திருக்கிறானல்லனே. [ஆளர்ஆய்த் தொழுவாருமமரர்கள்]-அடியாராய் ஆஶ்ரயிக்கிறவர்களும் தேவர்கள். நித்யஸூரிகள்செய்யும் அடிமையிறே அமரத்வ ஸாம்யத்தாலே "நாங்களும் ஈஶ்வரர்கள்" என்றிருக்குமவர்கள் செய்கிறது. [நாளும்இத்யாதி] - காலத்தையடைய ஒரு போகியாக்கி எனக்குப்புகழுகைக்கு உறுப்பாக்கினால்தான், என்னாலே புகழ்ந்து தலைக்கட்டலா யிருந்ததோ உன்னுடைய ஶீலகுணம்? உனசீலம் - நாளுமென்புகழ்கோ. (௧௦)

பதினோராம் பாட்டு.

சீலமெல்லையிலான் அடிமேல்அணி
கோலநீள்குருகூர்ச்சடகோபன் சொல்
மாலையாயிரத்துள் இவைபத்தினின்
பாலர் வைகுந்தமேறுதல் பான்மையே.

ஆ.—(சீலம்.) - *சீலமெல்லையிலானாயிருந்த திருவேங்கடமுடையான் திருவடிகளுக்குத் திருவணிகலமாயிருந்த இத்திருவாய்மொழியோடே ஒருஸம்பந்தமுடையார், வைகுந்தமேறுகை ஆஶ்சர்யமன்றென்கிறார்.*

பத்தாம்பாட்டு.—தாளதாமரையான் இத்யாதி. "தாள்தாமரையான்" இத்யாரப்ய, "உனசீலமே" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - தாஸ்ய இத்யாதி.

"தாளதாமரையான், வாள்கொள் நீள்மழுவாளி" என்று - திருநாபீகமலத்திலே பிறந்தவன், ஹிம்ஸாபரிகரமான மழுவையுடையவன்; "அமரரும்" என்று - என்றுமொக்கச் சாகாதிருக்கிறவர்கள் என்கிற விசேஷணங்கள், 'தாஸ்யச்சுவடறியாத' என்னுமத்தைக் காட்டுகிறது. தாளையுடைய தாமரையென்று ஶப்தார்த்தம். இது ஶீலமானபடி யென்னென்ன - கமலயோநித்வ இத்யாதி. வாள்-காந்தி. மழு - பரசு. மழுவாளி - மழுவையாளும் ருத்ரன், "நீள்" என்றதுக்கர்த்தம் - தொடங்கின இத்யாதி. இதுசீலமோவென்ன - அநந்யஶரணத்வ இத்யாதி. அநந்யஶரணத்வலக்ஷணமான - பாரதந்த்ர்ய லக்ஷணமான வென்றபடி. இது சீலகார்யமோவென்ன - நித்யஸூரிகள் இத்யாதி. "நாளும்" என்று சொல்லி, "உனசீலம் - என்புகழ்கோ" என்றதுக்குபாவம் - காலத்தை இத்யாதி. ஒருபோகியாக்கி - ஏகவிஷயமாக்கி. நாளும் - ஸர்வகாலமும். என்புகழ்கோ - என்னவென்று ஸ்தோத்ரம்பண்ணப் போகிறேனென்றபடி. எத்தைச்சொல்லிப் புகழ்வேனென்றபடி. (௧௦)

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் ஸ்ரீவைகுண்டத்திலே செல்லுகை ஆஶ்சர்யமன்று; ப்ராப்தமென்கிறார்.

[ஶீலமென்று தொடங்கி] - அமர்யாதஶீலனான எம்பெருமானுடைய திருவடிகளிலே விலக்ஷணமான அழகுமிக்கிருக்கிற திருநகரியையுடைய ஆழ்வாருடைய சொற்றொடையான ஆயிரம் திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியோடு ஸம்பந்தமுடையார். பான்மை - கடன்.

பி.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக பரமபதப்ராப்தியை யருளிச்செய்கிறார்.

சீலமெல்லையிலான் - அபர்யந்தமான ஶீலத்தையுடையவன், அடிமேல் - திருவடிகளின்மேலே, அணி - அணியப்பட்டதாய், கோலம் - தர்ஶநீயமானரூபமாய், நீள் - ஆயாமவிஸ்தாரவத்தான, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடைய, சொல் - ஶப்தாத்மகமான, மாலை - மாலையாயிருக்கிற, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இவைபத்தினின் - இப்பத்தினுடைய, பாலர்-பரிஸரத்திலே (ஶப்தமுகத்தாலேயாதல் அர்த்தமுகத்தாலேயாதல்) அந்வயமுடையவர்கள், வைகுந்தம் - பரமபதத்தில், ஏறுதல் - ஏறப்பெறுகை, பான்மை - ஸ்வபாவம். இது-கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் பரமபதத்திற் செல்லுகை ஆஶ்சர்யமன்று; ப்ராப்தமென்கிறார்.

[சீலமெல்லையிலான் அடிமேல்] - அமர்யாதஶீலனான அவனுடைய திருவடிகளிலே. இத்திருவாய்மொழியால் ப்ரதிபாதிக்கப்பட்டது, ஶீலாதிக்யமாயிற்று. அத்தை நிகமிக்கிறார்: [அணியித்யாதி] - அழகுமிக்கிருந்துள்ள திருநகரி. அன்றியே "கோலநீள்" என்று - ஶப்தந்தானே உண்டாகையாலே. அடிமேலணி-மாலை - என்று கூட்டிக்கொள்ளவுமாம். [ஆயிரத்துள் இவைபத்தினின்பாலர்] - இப்பத்தின் பரிஸரத்திலே யுளராமவர்கள். உக்திமாத்ரம், பாடமாரணம் அர்த்தாநுஸந்தாநம். ஒருவழியாலே இதிலே அந்வயமுண்டாகையாலே பரமபதத்திலே செல்லுகை ப்ராப்தம். "மாக வைகுந்தங் காண்பதற்கு" என்று இவர் ப்ரார்த்தித்தார். இவரை ஆஶ்ரயித்தவர்களுக்கு ப்ரார்த்த்யமன்று; ப்ராப்தம். பித்ருதநம் புத்ரனுக்கு தாயப்ராப்தமாய் வருமதிறே.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் பரமபதத்தே செல்லுகை ஆஶ்சர்யமன்று; ப்ராப்தமேன்கிறார்.

[சீலமெல்லையிலானடிமேல்]- †அமர்யாதஶீலனானவனுடைய திருவடிகளிலே. இத்திருவாய்மொழியால் ப்ரதிபாதிக்கப்பட்டது - ஶீலாதிக்யமாயிற்று; அத்தை நிகமிக்கிறார். [அணிகோலநீள் குருகூர்ச்சடகோபன்சொன்மாலை] - அழகுமிக்கிருந்துள்ள திருநகரி

நிகமம்.—சீலம் இத்யாதி. "பத்தினின்பாலர் வைகுந்தமேறுதல்பான்மையே" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை-இத்திருவாய்மொழி இத்யாதி.

இத்தால்ஸாவம் - இத்திருவாய்மொழியால் இத்யாதி. "கோலநீள்" என்றத்தை - * குருகூருக்கு விசேஷணமாக்கி யருளிச்செய்து, "கோலநீள் - அடிமேலணி" என்று - திருவடிகளுக்கு

† மர்யாதா - எல்லை, அமர்யாதஶீலன் - எல்லையில்லாத சீலகுணத்தை யுடையவன்,

யையுடைய ஆழ்வார். அன்றிக்கே, கோலநீளென்று - ஶப்தந்தானே யுண்டாகையாலே, 'அடிமேலணி - மாலை' - என்று கூட்டிக்கொள்ளவுமாம். [ஆயிரத்துள்ளிவைபத்தி னின்பாலர்] - இப்பத்தின் பரிஸரத்திலேயுளராமவர்கள். உக்திமாத்ரம், பாடயாரணம், அர்த்தாநுஸந்யாநம், ஒருவழியாலே இதிலேயந்வயமுடையவர்கள். [வைகுந்தம்இத்யாதி]- பரமபதத்திலே செல்லுகை ப்ராப்தம். * மாகவைகுந்தம்காண்பதற் கேகமேண்ணினூர்- இவர்; இப்பாசுரத்தே யந்வயித்தவர்களுக்கு ப்ரார்த்யமன்று, ப்ராப்தம். பித்ருயநம் புத்ர னுக்கு ஊயப்ராபதமாயிருக்குமிறே. (கக)

விசேஷணமாக அர்த்தாந்தரம் - அன்றிக்கே இத்யாதி. அர்த்தத்வபத்திலும், "அணி" என்றது - சாத்தப்பட்டவென்றுய், சொன்மாலைக்கு விசேஷணம். யத்வா, முந்தினவர்த்தத்தில், "அணி" என்றது - விலக்ஷணமென்றுய், குருகூருக்கு விசேஷணமாதல். இப்பத்தின் பரிஸரத்திலேயுள ராகையாவதென்? என்ன - உக்திமாத்ரம் இத்யாதி. இவர்க்கு "ஏகமெண்ணும்" என்று ப்ரார்த்யமா யிருக்க, இவர்களுக்கு ப்ராப்தமாகக் கூடுமோவென்ன - மாகவைகுந்தம் இத்யாதி. பான்மை-ப்ராப் தம். அதெப்படியென்ன - பித்ருதநம் இத்யாதி. சீலமெல்லையிலானடிமே லணியப்பட்டதாய், கோல நீள் குருகூர்ச் சடகோபனுடைய சொல்மாலை யித்யாரப்யாந்வய: (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.—நாராயணேऽபி ஸதி ஸஹ்ய
விஜ்ஞா நாஹ்யாதவேதி விஹாநா பஹூ ஶோபநாஜா । க்ருஷ்ணாவதாஶிரவயிஞி
ஜஶீலவத்தா உந்நாஜ்ரீ உநவஹரிவஉநிஷ்த்ஜீயே ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—நைகஶ்ரீநாதவக்த்ராஜ
ஊஊயஸஸம்ஸ்தாவநாநெஜ்ஜஷஹ்ரிகா ஊநாநோக்ஷஸ்ஜமயஸ்திஹவடிக
ஶ்ரேணிவஉதிஉக்தாக । வ்யூஹாஊாஹாஊகா ஊஜூஷிமிக்ருகை ஸஞியாநாஞி
க்ஷேத்ர ஶவஜ்ஜெஹ்வாஜஊாநாஊக்ஷி யஊவதிஶ்ரீரூதாகரோஸள ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.
ஓராநீர்வேண்டினவையுள்ளதெல்லாஞ்செய்கின்றேன்
நாராயணனன்றேநானென்று - பேருறவைக்
காட்டவல்லசீலத்திற்கால்தாழ்ந்தமாறனருள்
மாட்டிவிடும்நம்மனத்துமை.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானுர் திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்.

நான்காந்திருவாய்மொழி—மையார் ப்ரவேசங்கள்.

ஆ.—(மையார்கருங்கண்ணி) - இப்படி எம்பெருமானுடைய ஸௌசீல்யாதி ஸந்தானத்தாலே நிர்ப்பீகராய், தத்அநுபவத்திலே ப்ரவ்ருத்தராய் அது கைவாராமையாலே தாம் அவஸந்நராய், அவஸந்ந ஸர்வகரணராயிருந்த ஆழ்வார்

ஒ.—நாலாந்திருவாய்மொழியில், எம்பெருமானுடைய ஸௌசீல்யத்தையும் அதுக்கடியான ஸ்ரீய:பதித்வத்தையும் அநுஸந்திக்கையாலே, அப்போதே இந்த்ரியங்களும் தாமும் "அவனைக்காணவேணும்" என்று ஆசைப்பட்டபடி பெறாமையாலே மிகவும் நோவுபட்ட ஆழ்வார் தூணிலே வந்து தோற்றி ஹிரண்யனால் வந்த நலிவை ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குத் தீர்த்தருளினாற்போலே, தம்முடைய ஆர்த்தியைத் தீர்த்தருளின படியை அநுஸந்தித்து ப்ரீதராய் முடிக்கிறார்.

ப.—நாலாந்திருவாய்மொழியில், கீழே அவன் சீலாதிசயத்தை யநுஸந்தித்து ப்ரீதிலரானவர், "சீலவானைப் ஸ்ரீய:பதியானவனை யநுபவிக்கவேணும்" என்று அபிநிவேசித்து, அந்த அபிநிவேசாநுரூபமான ஸந்நிதிவிசிஷ்டத்வத்தையும், அத்யபிநிவேசவிஷயத்வத்தையும், ஆஸ்ரிதரக்ஷகத்வத்தையும், அசேஷப்ரதிஸம்ஸ்ப்ருஹத்வத்தையும், காரணத்வாதி குணயோகத்தையும், பரமபத நிலயத்வத்தையும், ஹ்ருதயதாதிசயத்தையும், ஸர்வாந்தராத்மத்வாதிகளையும், கிஞ்சித்காரவிஷயத்வத்தையும், நிருபாதிகஸம்பந்தத்தையும் அநுஸந்தித்து, "ஏவம்பூதனானவனையநுபவிக்கவேணும்" என்கிற ஆகாங்க்ஷையாலே, தம்மோடு கரணங்களோடு வாசிபற நொந்தபட்ட இவருடைய ஆர்த்தி தீரும்படி முகங்காட்ட அநுபவித்து ஸந்துஷ்டராய், ஆஸ்ரிதாநுபாவ்யமான திருவாய்மொழியை அவன்திருவடிகளிலே பாடி உஜ்ஜீவிக்கப்பெற்றேன் என்று மிகவும் ஹ்ருஷ்டராகிறார்.

இ.—நாலாந்திருவாய்மொழியில், கீழே-அவனுடைய ஸௌசீல்யத்தையும் அதுக்கடியான ஸ்ரீய:பதித்வத்தையும் அநுஸந்திக்கையாலே "அப்போதேபெறவேணும்" என்னும் சாபலம் பிறந்து, பெறாமையாலே* முடியானேயிற்போலே தாமும் விடாய்த்து தம்முடைய கரணக்ராமங்களும் சேதநஸமமாயிற்றாலே விடாய்த்து மிகவும் அவஸந்நரானார்; இவருடைய அவஸாதந்தான் அவன் "க்ரமத்திலே வந்து முகங்காட்டுகிறோம்" என்னவொண்ணாதபடியாயிருக்கையாலே, அவன் தூணிலேவந்து தோற்றி ஹிரண்யனால் வந்த நலிவை ஸ்ரீப்ரஹ்லாதனுக்குத் தீர்த்தருளினாற்போலே தம்மார்த்தி தீரவந்து முகங்காட்டினபடியை அநுஸந்தித்து ஹ்ருஷ்டராய்க் காணப்பெற்றேன் என்கிறவளவேயன்றிக்கே "வைஷ்ணவர்களுக்கும் உபகாரகனாகப்பெற்றேன்" என்று தாம் பெற்ற பேற்றைப் பேசி ஹ்ருஷ்டராகிறார்.

ஈடு.—ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்துக்குஅடி-அவன் தானாயிருக்கும்; சீலாதிகுணங்களுக்குஅடி-பிராட்டியாயிருக்கும். இதிலேவந்தவாறே ஸ்வாதீநமன்றிக்கே யொழிகிறதோ

மையார்ப்ரவேசே: கீழில்திருவாய்மொழியிலே - சீலகுணத்தையும், அதுக்கடியான ஸ்ரிய:பதித்வத்தையும் அருளிச்செய்தாரென்று விவக்ஷித்து, 'சீலகுணத்துக்குஅடி பிராட்டியானால், ஔபாதி

வேண்ணில்? - அங்ஙனுமாயிராது; நிரூபித்தால், அந்த ஸ்வாதந்த்ர்யத்தோபாதி இவளோட்டைச்சேர்த்தி நித்யமாயிருக்கையாலே. ஹாஷ்யகாரர் மேலே "ஸ்ரீவல்லப:" (ஸ்ரீவல்லப:)என்ன நினைத்து, ஸ்வரூபத்தை நிரூபிக்கிறவிடத்திலே, ஜ்ஞாநாநந்தங்களுக்கு முன்னே "ஸ்ரிய:பதி:" (ஸ்ரிய:பதி:) என்றுரிறே. இப்படியிருக்கிறவனுடைய ஶீல குணத்தையும், அதுக்குஅடியான ஸ்ரிய:பதித்வத்தையும் அநுஸந்தித்தார் - கீழில்திருவாய்மொழியிலே; கடுகப்பெறவேண்டும்படி குணாதிகனுமாய்ப்பெறுவிப்பாரும் அருகேயுண்டாயிருக்கையாலே, இப்போதே பெறவேண்டும்படியான சாபலம் பிறந்தது; அப்போதே பெறக்காணுமையாலே விஷயாநுரூபமாக விடாய்த்தார். பெறவேண்டும்படி குணாதிகனுமாய்,பெறுவிப்பாரும் அருகேயுண்டாயிருக்கப்பெருவிட்டால்ஆறியிருக்கப்போகாதே ஆகையாலே, சேதநஸாமாந்யியாலே தனித்தனியே கரணங்களும்விடாய்த்துத் தாமும்விடாய்த்தார், * முடியானேயில் வாஸனையாலே. இதுதான் எல்லாத்திருவாய்மொழியோடுங்கூடியிருப்பதோன்றுயிற்று: ஒரு "சேஞ்சொற்கவி," "வீற்றிருந்தேழுலகு," "என்றைக்குமேன்னை," "முடியானே," இவையித்தனையிலும் ஓடுகிற ஹாவவ்ருத்தியையுடைத்தாயாயிற்றிருப்பது இப்படி இந்த்ரியங்களும் தனித்தனியேவிடாய்த்துத் தாமும் விடாய்த்தபடி- ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்திக்குத்தோற்றின இதுதான் க்ரமத்திலே வந்தானேனலாம்படி, ஆற்றுமைக்கு க்ரமத்திலேதோற்றப்பற்றுதே தூணிலேவந்துதோற்றினுற்போலே தோற்றவேண்டும்படியாயிற்று. இப்படிப்பட்ட தம்முடைமையையும், அதுக்சடி

கமாகையாலே அநித்யமாகாதோ" என்று சங்கித்துப்பரிஹரிக்கிருர் - ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்துக்கு இத்யாதி. 'ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்துக்குஅடி யவன்ருணுயிருக்கும்' என்கிற இத்தை இப்போதருளிச் செய்தது - ஸ்வாதந்த்ர்யம் ஸ்வாதீநமாகையாலே, அதுக்கு அநித்யத்வப்ரஸக்தியில்லை யென்று தோற்றுகைக்காக. 'இதிலே' என்றது - ஶீலாதிகுணங்களிலே யென்றபடி. ஸ்வாதீநமன்றிக்கே யொழிகிறதோ - ஸ்வாஹாவிகமல்லாமையாலே ஔபாதிகமாய் நித்யமன்றிக்கே யொழிகிறதோ வென்றபடி. அங்ஙனுமாயிராது - ஔபாதிகமானுலும் அநித்யமாயிராதென்றபடி. அதுக்கு ஹேதுவேதென்ன- அந்த ஸ்வாதந்த்ர்ய இத்யாதி. அதாவது - உபாஶ்ரியான பிராட்டியோட்டைச்சேர்த்தி நித்யமாகையாலே இதுவும் நித்யமென்றபடி. நித்யமாகைக்கு அடி ஸ்வரூபநிரூபகையாகையாலே என்னப்பார்த்து, அப்படி ஸ்வரூபநிரூபகையாகையோ? என்ன - ஹாஷ்யகாரர் இத்யாதி. 'ஶ்ரிய:பதி:' என்றுரிறே? ஶ்ரீஹாஷ்யத்திலேயென்றபடி."ஶ்ரிய:பதிர்நிகிலஹேயப்ரத்யநீககல்யாணைகதாநாநந்தஜ்ஞாநாநந்தைகஸ்வரூப:" இத்யாரப்ய, "ஸ்வாஹாவிகாநவதிகாதிஶயஅஸங்க்யேய நிரவத்ய ஸ்வரூபரூபகுண விஹவைஶ்வர்யஶீலாத்யநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுணகணஶ்ரீவல்லப:" இதி ஸ்ரீ ஶ்ரீஹாஷ்யே. ப்ராஸங்கிக ஶங்கையைப் பரிஹரித்து, இத்திருவாய்மொழிக்கு ஸங்கதி - இப்படி இத்யாதி. ஶ்ரிய:பதித்வத்தையும் என்றது - "அணியார்மலர்மங்கைதோள்" என்றத்தைப்பற்ற. ஶீலாதிகுணங்களும் ஶ்ரிய:பதித்வமும் இத்திருவாய்மொழியில் இவர்க்குஓடுகிற விடாய்க்கு உத்தம்பகமென்னுமத்தை யருளிச் செய்கிருர் - கடுக இத்யாதி. விடாய்க்கிறதென்? ஆறியிருக்கவொண்ணுதோ? என்ன - பெறவேண்டும்படி இத்யாதி. உக்தார்த்த நிகமநபூர்வகமாக விடாயினுடைய எல்லையை யருளிச்செய்கிருர் - ஆகையாலே இத்யாதி. விடாய்மாத்ரமோ, ஸங்கோசமில்லையோவென்ன-இதுதான் இத்யாதி. ஏதத்விவரணம் - ஒருசேஞ்சொல் இத்யாதி. இவர்க்கு இத்திருவாய்மொழில் பிறந்த விடாயினுடைய உறைப்பு எவ்வளவென்ன - இப்படியிந்த்ரியங்களும் இத்யாதி. தனித்தனியே என்றது - "கண்ணே," "என்கருத்தே" "உன்னையுள்ளுமென்னுள்ளம்" இத்யாதியைப்பற்ற. தாமும்விடாய்த்து என்றது - "நானழைப்பன்" "பேதுறுவன்" இத்யாதியைப்பற்ற. தூணிலே வந்து என்றது - "நரசிங்கமதாய்" என்றத்தைப்பற்ற. இத்திருவாய்மொழியில் பத்துப்பாட்டில் ப்ரமேயங்களையும் கொய்துபிடித்தருளிச்செய்கிருர் - இப்படிப்பட்ட இத்யாதி. "என்னுள்ளமுகந்தே" என்றத்தைப்

யான விடாயையும், அவன்விடாயறிந்து அதுக்கு உதவவந்து முகங்காட்டினபடியையும் அநுஸந்தித்து ஹ்ருஷ்டராய், ''நான் க்ருதக்ருத்யனானேன்: அடிமைசெய்யப்பெற்றேன்: வாழ்ந்தேன்: ஸ்ரீவைஷ்ணவர்களுக்குமெல்லாம் நான் உபகாரகனும்படியானேன்: இதோ ருவன் பெறும்பேறிருந்தபடியே!'' என்று தமக்குப்பிறந்த லாபத்தை யநுஸந்தித்து இனிய ராய், அத்தைப்பேசித் தலைக்கட்டுகிறார்.

முதற் பாட்டு.

மையார்கருங்கண்ணிகமலமலர்மேல்
செய்யாள்திருமார்வினிற்சேர்திருமாலே!
வெய்யார்சுடராழிசுரிசங்கமேந்தும்
கையா! உன்னைக்காணக்கருதுமென்கண்ணே.

ஆ.—லக்ஷ்மீகடாக்ஷ ஸம்ஶீலைஷக ஶோபனைப், தத்பரவஶனைப், ஶங்க சக்ர திவ்யாயுதவிஶேஷிதகரனை உன் அழகை என்கண்ணானது காண ஆசைப்படா நின்றதென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், ஸ்ரிய:பதியான எம்பெருமானைக் காணவேணும் என்று தம்முடைய சக்ஷுரிந்த்ரியத்திற்குப் பிறந்த சாபலத்தை அருளிச்செய்கிறார்.

[மையாரென்று தொடங்கி] - மேவத்திலே மின் சேர்ந்தாற்போலே மையார்ந்து கறுத்த திருக்கண்களையுடையளாய்ப் பரமபோக்யமாய்ச் சிவந்ததிருநிறத்தையுடைய பெரிய பிராட்டியார் சேரும் திருமார்வையுடையையாய் அவள்பக்கல் அத்யந்தம் வ்யாமுக்தனானவனே! [வெய்யாரென்று தொடங்கி] - மிகவும் வெவ்விதான தேஜஸ்ஸை யுடைய திருவாழி, கண்ணுக்கிலக்காம்படி சுரியையுடைய ஸ்ரீபாஞ்சஜந்யம் இவற்றை ஏந்தும் திருக்கையையுடையவனே! இப்படிஸம்ருத்தனான உன்னைக் காண ஆசைப் படாநின்றது என்னுடைய கண்.

ப.—முதற்பாட்டில், நிரதிஶயபோக்யதாப்ரகாஶகமான லக்ஷ்மீஸம்பந்தத்தையும், அந்தபோக்யதையைக் காத்தூட்டும் ஆயுதபூர்த்தியையுமுடைய உன்னைக் காண ஆசைப்படாநின்றது என் கண் என்கிறார்.

மையார் - அஞ்சநாலங்காரத்தையுடைத்தாய், கரு - ''அஸிதேக்ஷணா'' என்னும்படி ஸ்வாபாவிகமான கருமையையுடைத்தான, கண்ணி - திருக்கண்களையுடையளாய், கமலமலர்மேல் - தாமரைப்பூவின்மேலேயிருப்பாளாய், செய்யாள் - (பத்மவர்ணையாகையாலே) சிவந்தநிறத்தையுடையளான லக்ஷ்மியானவள், (''அகலகில்லேனிறையும்'' என்று), திருமார்வினில் - திருமார்பினழகிலே (ஈடுபட்டு), சேர் - சேரும்படியாய், (அவ

பற்ற - ஹ்ருஷ்டராய் என்றது. ''கண்டுகொண்டேனே'' என்றத்தைப்பற்ற - க்ருத க்ருத்ய னானேன் என்றது. ''தொண்டர்க்கமுதண்ண'' இத்யாதியைப்பற்ற-ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் இத்யாதி. ''உய்ந்தவாறே'' என்றைத்தைப்பற்ற - இதோரவன் இத்யாதி. அஞ்சுபாட்டு - * முடியானேயில்ப்ரமேயம்; மூன்றுபாட்டு - * வீற்றிருந்தேழுலகில் ப்ரமேயம்; ஒன்பதாம்பாட்டு - * என்றைக்கும் ப்ரமேயம்; பத்தாம்பாட்டு - * செஞ்சொற்கவியில் ப்ரமேயம்.

ளுடைய அவயவஶோபையிலும் ஆபிஜாத்யத்திலும் துவக்குண்டு), திரு - அவள்பக்கலிலே, மாலே - அதிஶயிதவ்யாமோஹத்தைப்பண்ணுமவனாய், (இந்தச்சேர்த்திக்கு அஸஹ்யாநேஹ்யஸங்கிகளாய், ரக்ஷணோத்யோமத்தாலே ப்ரதிபக்ஷத்திலே), வெய்யார் - வெம்மைமிஞ்சின, சுடர் - ஜ்வாலையையுடைய, ஆழி - திருவாழியையும், சுரி - (வடிவுதானே யெதிரிகளையும் அழித்து ஆஸ்ரிதர்க்கநுபாவ்யமாம்படியான வடிவிலே) ரேகாவலயத்தையுடைய, சங்கம் - ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், ஏந்தும்—, கையா - திருக்கையையுடையவனே! உன்னை - (இப்படி ஸ்ரிய:பதியாய் ஶங்கசக்ரகதாதரனான) உன்னை, என் - என்னுடைய, கண் - (சபலமான) கண்ணானது, காண - (ஸூரிகளோபாதி) ஸாக்ஷாத்காரம்பண்ண, கருதும் - மநோரதியாநின்றது.

இ.—முதற்பாட்டில், ஸ்ரிய:பதியானவனைக் காணவேணுமென்று தம்முடைய சக்ஷுரிந்த்ரியத்துக்குப் பிறந்த சாபலத்தை யருளிச்செய்கிறார்.

[மையார் கருங்கண்ணி] - ஸ்வாபாவிகமான கறுப்பையுடைத்தாய் அஞ்ஜநத்தாலே அலங்க்ருதமான திருக்கண்களை யுடையவள். ஒன்றால் ஸமாதாநம்பண்ண வேண்டாதபடி அழகுஸ்வாபாவிகமாயிருக்கையாலே, கண்ணுக்கு அஞ்ஜநம் மங்களார்த்தமாயித்தனையிறே. [கமலமலர்மேற் செய்யாள்] - ஸௌகுமார்யத்தால் வந்த ஶோபையை யுடையவள். [திருமார்வினிற்சேர்] - மேகத்திலே மின்சேர்ந்தாற்போலேயாயிற்று, சேர்த்தியால் வந்த அழகு; அப்பூ அடிக்கொதித்துக் கால்வாங்கித் திருமார்விலே ஏறவேண்டும்படியாயிற்று, அவளுக்குத் திருமார்விற் சேர்த்தியிருப்பது. [திருமாலே] - அவள் பக்கல் அத்யந்தம் வ்யாமுக்தனானவனே! அவள் திருமார்விற் பண்ணின வ்யாமோஹத்தை இவன் அவயவங்கள் தோறும் பண்ணுமென்கை. இப்படி அந்யோந்யம் சேர்ந்த சேர்த்தியிலேயிறே கைங்கர்யம்பண்ண ஆசைப்பட்டது. இச்சேர்த்தியைப் பற்றவிறே அவள்முன்னாகப் பற்ற ஆசைப்படுவார் ஆசைப்படுவது. "நகஶ்சிந்நாபராத்யதி" என்னுமவளும் "என்னடியார தூசெய்யார்" என்னுமவனுமான இச்சேர்த்தியிறே ஸம்ஸாரிகளுக்குத் தஞ்சம். [வெய்யார்சுடராழி] - ப்ரதிபக்ஷத்தின்மேலே வெம்மை மிக்கிருந்துள்ள தேஜஸ்ஸையுடைய திருவாழி. [சுரிசங்கம்] - ஒருகார்யம் செய்யவேண்டாதே ஸந்நிவேஶந்தானே தர்ஶநீயமாயிருக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யம். [ஏந்தும் கையா] - கையும் திவ்யாயுதமுமான சேர்த்தியழகையாயிற்று இவர் காணவேண்டியிருப்பது. [உன்னை] - "ஶங்குசக்ரகதாதர: ஸ்ரீவத்ஸவக்ஷா:" என்கிறவடிவையுடைய உன்னை, [காணக் கருதும்] - காண ஆசைப்படாநின்றது. இவ்வஸ்துவைப்பார்த்தால் கண்டுகொண்டிருக்கையிறே ஸத்ருஶம். நித்யஸூரிகளும் ஸாக்ஷாத்காரமிறே பண்ணுவது. [என் கண்ணே] - ஸம்ஸாரிகளில் இவர்க்குள்ள வ்யாவ்ருத்தி போருமாயிற்று, இவரிற்காட்டில் இவர் கண்ணுக்கு.

ஈடு.—முதற்பாட்டு. "ஸ்ரிய:பதியானவனைக் காணவேணும்" என்று தம்முடைய சக்ஷுரிந்த்ரியத்துக்குப் பிறந்த சாபலத்தை யருளிச்செய்கிறார்.

[மையார்கருங்கண்ணி] - "அவனைப்பெறவேணும்" என்றிருப்பார் ஆசைப்படுவதும் அவள் முன்னாகவாய், பெற்றால் பின்னை கைங்கர்யம்பண்ணுவதும் இருவருமான

முதற்பாட்டு.—மையார் இத்யாதி. "திருமாலே" என்னுமளவும், "உன்னைக்காணக் கருதுமென்கண்ணே" என்றவற்றையும் கடாக்ஷித்தவதாரிகை - ஶ்ரிய:பதி இத்யாதி.

பிராட்டிசேர்த்திசொன்னதுக்கு பாவமேதென்ன - அவனை இத்யாதி. ஆசைப்படுவதும் என்றது - உபாயமாக ப்ரார்த்திப்பதுமென்றபடி. இது, பூர்வகண்டத்தைப்பற்ற. "கருங்

சேர்த்தியிலேயாயிருக்குமிறே. [மையார்கருங் கண்ணி] - †ஒன்றால் ஸமாதாநம் பண்ண வேண்டாதபடி ஸ்வாபாவிகமான அழகையுடைத்தாயாயிற்றுத் திருக்கண்களிருப்பது. இனி மங்களார்த்தமாக தரிக்குமித்தனையிறே அஞ்சநம். "கருங்கண்ணி" என்றாகிற் கச்செய்தே 'மையார்' என்னும்போது, மங்களார்த்தமாக அஞ்சநம் தரித்ததாமித்தனையிறே. [கமலமலர்மேற்செய்யாள்] - இதுவாயிற்று ஸௌகுமார்யமிருக்கும்படி. [திருமார்வுஇத்யாதி] - தாமரைப்பூவில் பரிமளமும் தாதும் அடிக்கோதித்தால் உன்மார்விலே யடிமாறியிடவேண்டும்படி மார்வுபடைத்தவனே! இவள் இவ்வேற்றமெல்லாங் கொண்டும் அம்மார்வுக்குஅவ்வருகுபோகமாட்டாள். அவ்வகலமெல்லாம் போக்யமாயிருக்கையாலே, அவ்வருகுபோகவேண்டாவே. [திருமாலே] - அவனும், இவள் மார்வில் படும்பாட்டை இவளுடைய ஸர்வாவயவங்களிலும் பிச்சேறியிருக்குமாயிற்று. அவனுக்குத் திருக்கண்கள் சிவந்தாயிற்றிருப்பது. அவன் இவளை நிரந்தரகடாக்ஷம்பண்ணுகையாலே, அவன்கண்ணின்சிவப்பு இவள்மேலேயூறி இவள்திருமேனி சிவந்திருக்கும்; இவள் அவனை நிரந்தரகடாக்ஷம் பண்ணுகையாலே, இவள் கண்ணிற்கறுப்பு அவன் திருமேனியிலேபரந்து அவன் திருமேனி ஶ்யாமளமாயிருக்கும். இவளுக்குத் திருக்கண்கள் குளிர்ந்திருக்கும்; அவனுக்கு வாத்ஸல்யம் விஞ்சியிருக்கும். அவனோட்டைச் சேர்த்தியாலேயாயிற்று இவளுக்குத் தண்ணளி விஞ்சியிருப்பது; இவளோட்டைச் சேர்த்தியாலேயாயிற்று அவனுக்கு வாத்ஸல்யம் விஞ்சியிருப்பது. ஆக, இருவர்க்கும் இரண்டும் குறைவற்றிருக்கும், ப்ரணயித்வத்தாலே. வரவிட்ட ஆள் அழியச்செய்யப்புக, "நகஶ்சிந்நாபராத்யதி" (நகஶ்சிந்நாபராத்யதி) என்னுமிவள், "என்னடியாரது செய்யார்" என்று அவள்தன்னோடே

கண்ணி" என்றதுக்குபாவம் - ஒன்றால் இத்யாதி. ஆனால் "மையார்" என்பானென்னென்ன - இனி இத்யாதி. "மங்களார்த்தம்" என்கிறதென்? அழகுக்குடலாறோவென்ன - கருங்கண்ணி இத்யாதி. இத்தால் ஸௌந்தர்யஞ்சொல்லிற்று; மேல் ஸௌகுமார்யம் சொல்லுகிறதென்கிறார் - இதுவாயிற்று இத்யாதி. அதாவது - மலர்மேலேயிருப்பதத்தனைபோக்கி, மற்றையிடம்பொறாத ஸௌகுமார்யமென்கை. "திரு" என்று - அழகைவிவக்ஷித்துபாவமாதல், "சேர்" என்றதுக்குபாவமாதல் - தாமரைப்பூவில் இத்யாதி. "மார்வு" என்று ஏகாவயவகதத்துக்குபாவமாதல், "சேர்" என்கிறவர்த்தமானார்த்தமாதல் - இவள்இவ்வேற்றம் இத்யாதி. இவ்வேற்றம் என்றது - கீழ்ச்சொன்ன ஸௌந்தர்யஸௌகுமார்யாதிகளை. மாட்டாமைக்கு ஹேதுவேதென்ன - அவ்வகலம் இத்யாதி. அகலம் - வைபுல்யம்: மார்வு என்று லக்ஷணார்த்தம். "மார்வு" என்று ஓரவயவத்தை விசேஷியாதே, வெறுமனே "திருமால்" என்றதுக்குபாவம் - அவனும் இத்யாதி. திருவினிடத்திலே வ்யாமுக்தனென்று பதார்த்தம். அஞ்சநாலங்க்ருதமாய் ஸ்வாபாவிகமான கருமையையுடைத்தான திருக்கண்களையுடையளாய், தாமரைப்பூவின்மேலேயிருப்பாளாய், பத்மவர்ணையாகையாலே சிவந்தநிறத்தையுடைய லக்ஷ்மியானவள், அழகியமார்விலே சேரும்படியாய், திருவினிடத்திலே வ்யாமோஹத்தையுடையவனேயென்று பதார்த்தம். "மையார்கருங்கண்ணி, செய்யாள்" என்றப்ரஸங்கத்திலே, பரஸ்பரகடாக்ஷங்களாலே திருமேனிகளுக்கு நிறம்வந்ததாக ரஸோக்தி - அவனுக்குத் திருக்கண்கள் இத்யாதி. இருவருடையவும் திருமேனியில் சிவப்பும் கறுப்பும் பரஸ்பரகடாக்ஷங்களால் வந்தவையென்று; இவர்களுடைய தயாவாத்ஸல்யங்களும் பரஸ்பரகடாக்ஷங்களாலே வந்ததென்கிறார் - இவளுக்கு இத்யாதி. தத்விவரணம் - அவனோட்டை இத்யாதி. அந்யோந்யம் சேர்த்தியாலே க்ருபாவாத்ஸல்யங்களானால், ஔபாதிகமாய் அநித்யமாகாதோவென்ன; உபாதி நித்யமாகையாலே நித்யமென்கிறார் - ஆக இத்யாதி. கறுப்பு-குளிர்த்தியாய், க்ருபையைச்சொல்லுகிறது. அப்படி இருவர்க்கும் இரண்டும் விஞ்சியிருக்குமென்கைக்கு நியாமகமேதென்ன, இருவருடையவும் உக்திகளென்கிறார் - வரவிட்டஆள்

† ஒன்றால் ஸமாதாநம்பண்ண - அழகுக்காக ஒன்றைக்கொண்டு வைக்க.

மறுதலைக்கும்படியாயிற்று அவன் இருப்பது; ஆகையாலே, இருவருமானசேர்த்தியிலே இவை இருவர்க்கும் குறைவற்றிருக்குமென்றுமாம். வ்யதிரேகித்தஅன்றும் தனித்தனியேகுறைவற்றிருக்குமென்றுமாம். [திருமார்வினில்சேர்] - நித்யாநுபவம் பண்ணுநிற்கச்செய்தேயும், "அகலகில்லேனிறையும்" என்று இன்று வந்து கிட்டின புதியார்படுவத்தையெல்லாம் படாநிற்கும். சேரேன்கிற வர்த்தமாநம் - இத்தைக் காட்டுகிறது. [வெய்யாரித்யாதி] - இவள் கையில் லீலாரவிந்தம் அவனுக்கு போக்யமாயிருக்குமாபோலேயாயிற்று, அவன்கையில் திவ்யாயுயங்கள் இவளுக்குஇனிதாயிருக்கும்படி. இவள் உகப்புக்காக ஆஸ்ரிதவிரோயிகளை யழியச்செய்கைக்குமுதலாய் ஈர்ஶநீயமாயிருக்குமாயிற்று. ப்ரதிபக்ஷத்தின்மேலே மிக்கவெம்மையையுடைத்தாய்ப் புகரோடு கூடியிருக்கிறதிருவாழி, ஸந்நிவேஶமேயமைந்து வேறொருகார்யங் கொள்ளவேண்டாதே வைத்தகண்வாங்காதே கண்டுகொண்டிருக்க வேண்டும்படியான ஸ்ரீபாஞ்சஜந்யம். [ஏந்துமகையா] - வெறும்இவையுமன்று, கையுமன்று: இரண்டினுடையவுஞ்சேர்த்தியாயிற்று, இவர்ஆசைப்படுகிறது. "கூராராழிவெண்சங்கேந்தி - வாராய்" என்னுமவிறே. [உன்னை] - லக்ஷ்மீஸம்பந்தத்தோடும், திவ்யாயுதங்களோடும், திவ்யவிக்ரஹத்தோடுங் கூடியிருக்கிற உன்னை. இவருடைய உத்தேஶ்ய வஸ்து இருக்கிறபடி இதுகாணும். [காணக்கருதும்] - "ஶங்கசக்ரகதாதர: - ஸ்ரீவத்ஸவக்ஷா:" (ஶங்கசக்ரகதாதர: - ஸ்ரீவத்ஸவக்ஷா:) என்கிற உன்வடிவைக்காண ஆசைப்படாநின்றது. அவனை யாசைப்படுவார் ஆசைப்படுவது ஒருகார்யங்கொள்ளவன்று, காணவாயிற்று. * திருவேங்கடத்தானைக் காணவிறே. * காரார்திருமேனிகாணுமளவுமிறே.

இத்யாதிவாக்யத்வயத்தாலே. கீழ் - பரஸ்பரம் சேர்த்தியாலே க்ருபாவாத்ஸல்யங்கள் வந்ததாகச் சொல்லி, இவளுக்கு அவிதேக்ஷணத்வமும், அவனுக்கு புருஷோத்தமத்வப்ரயுக்தமான புண்டரீகாக்ஷத்வமும் ஸ்வதஸ்ஸித்தமாகையாலே, க்ருபாவாத்ஸல்யங்களும் பரஸ்பரம் சேர்த்தியால்வந்ததன்றிக்கே ஸ்வாபாவிகங்களென்கிறார் - வ்யதிரேகித்த இத்யாதி. இவள் அம்மார்வுவிட்டு அவ்வருகு போகமாட்டாமையின் எல்லையையருளிச்செய்யாநின்றுகொண்டு, இது "சேர்" என்கிறவர்த்தமாநவித்தமென்று முக்தகண்டமாகவருளிச்செய்கிறார் - நித்யாநுபவம் இத்யாதிவாக்யத்வயத்தாலே. பிராட்டியைச்சொல்லி, அநந்தரம் ஆயுயங்களைச்சொன்னதுக்கு பாவம் - இவள்கையில் இத்யாதி. இவ்விடத்திலே - "ஸா சோந்நோந்நதி... ஸ்தநயுகளாஶ்லேஷிணீ... ... வக்ஷஸ்ஸ்தலீ..." இத்யாத்யநுஸந்தேயம். ஸ்ரீகுணரத்நகோஶே(சஎ). ஆனால், "வெய்யார்சுடர்" என்று விசேஷிப்பானென்னென்ன - இவள்உகப்புக்காக இத்யாதி. ஶப்தார்த்தம் - ப்ரதிபக்ஷத்தின் இத்யாதி. "சுரி" என்றதுக்கு பாவம் - ஸந்நிவேசம் இத்யாதி. ஸந்நிவேசம் - ஸம்ஸ்த்தாநம். "ஸந்நிவேஶஸ்ஸம்ஸ்த்தாநம்" இதி நிகண்டு. "ஏந்துமகையா" என்றதுக்கு பாவம் - வெறும்இவையும் இத்யாதி. இரண்டினுடையவும் சேர்த்தியழகை யாசைப்பட்டிருப்பரென்னுமதுக்கு ப்ரமாணம் - கூராராழி இத்யாதி. கீழெல்லாவற்றையும் கடாக்ஷித்து - லக்ஷ்மீஸம்பந்தம் இத்யாதி. திவ்யவிக்ரஹத்தோடுமென்றது - "ஏந்துமகையா" என்றத்தைப்பற்ற. இவர்க்குஅநுபாவ்யவஸ்து இப்படிப்பட்டதென்கிறார் - இவருடைய இத்யாதி. "காண" என்றதுக்கு பாவம் - ஶங்கசக்ர இத்யாதி. "தமஸ: பரமோ தாதா ஶங்கசக்ரகதாதர: । ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீரஜய்ய: ஶாஶ்வதோ த்ருவ:" இதி ராவண வதாநந்தரே மண்டோதரீ. ஸ்ரீஸ்ச வத்ஸஸ்ச வக்ஷஸி யஸ்ய ஸ: - ஸ்ரீவத்ஸவக்ஷா: என்றுஇங்குஸமாஸம் விவக்ஷிதம். வத்ஸம் - மறு. "காண" என்கிறதென்? கார்யம்கொள்ளவேண்டாவோவென்ன - அவனை இத்யாதி. காண்கைக்கே யாசைப்பட்டிருப்பரென்னுமதுக்கு ப்ரமாணம் - திருவேங்கடத்தானை இத்யாதி. ஸ்பஷ்டோர்த்த:. அங்கும்

நித்யஸூரிகளும் ஸதாதர்ஶநம்பண்ணும் இத்தனையிறே. "அணியரங்கனென்னமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக்காணா" என்று இவ்வளவிலே தேக்கிட்டேவிடுவேர்கள் இங்குள்ளார்; "ஸதா பஶ்யந்தி ஸூரய:" (எத்தேவாம்ருதம்த்ருஷ்ட்வாத்ருப்யந்தி) என்று இவ்வளவிலே தேக்கிட்டேவிடுவேர்கள் அங்குள்ளார். [என்கண்ணே] - ஸம்ஸாரிகளில் தமக்கு உண்டான சாபலத்தோபாதியும் போருமாயிற்று, இவர்தம்மிற்காட்டிலும் இவருடைய திருக்கண்களுக்கு. இவர்க்கு நேத்ரஸூதரான ஏற்றமுண்டிறே அவற்றுக்கு.

இரண்டாம் பாட்டு.

கண்ணே! உன்னைக்காணக்கருதிஎன்னெஞ்சம்
எண்ணேகொண்ட சிந்தையதாய்நின்றியம்பும்
விண்ணோர்முனிவர்க்கென்றுங்காண்பரியாயை
நண்ணாதொழியேனென்றுநான் அழைப்பனே.

ஆ—(கண்ணே.) - என்னெஞ்சம் உன்னைக்காண ஆசைப்படாநின்றது. ப்ரஹ்மாதிகளுக்கும் காணஅரிதாயிருக்கச்செய்தே, எனக்கு த்ருஷ்டிபூதனாயிருந்த உன்னையொழிய வேறு எனக்குச் செல்லாமையாலே உன்னைக் காணாதொழியில் தரியேனென்று நான் கிடந்து கதறுகின்றேனென்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், தமக்கும் தம்முடைய ஹ்ருதயத்துக்கும்உண்டான சாபலத்தை யருளிச்செய்கிறார்.

[கண்ணே என்றுதொடங்கி] - எனக்கு த்ருஷ்டியானவனே! உன்னைக் காண ஆசைப்பட்டு பஹுமநோரதங்களைப்பண்ணி என்னுடைய ஹ்ருதயம் நிரந்தரமாகக் கூப்பிடாநிற்கும். [விண்ணோரென்று தொடங்கி] - ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்குங்கூட அரியையாயிருக்கச்செய்தே என்னுடைய சாபலத்தாலே நான் உன்னைப்பெற்று முடிவன் என்று கூப்பிடாநின்றேன். [நண்ணாதொழியேன்] - உன்னைப் பெறுவிடில் தரியேனென்றுமாம்.

ப.—அநந்தரம், "உன்னைக்காணவேணும்" என்கிற அபிநிவேஶத்தாலே, என்னெஞ்சும் நானும் அலற்றாநின்றோமென்கிறார்.

கண்ணே - (எனக்கு தர்ஶநஸாதநபூதனாய்க்கொண்டு) த்ருஷ்டியானவனே! உன்னை - (ஸாத்யபூதனான) உன்னையே, காண - ஸதா தர்ஶநம்பண்ணி யநுபவிக்க, கருதி, (என்னிலும் சபலமான), என் நெஞ்சம் - என் நெஞ்சானது, எண்ணே கொண்ட - பஹுஸங்க்யாதமான, சிந்தையதாய் - மநோரதங்களைப்பண்ணி நின்று, (காண்கையிலும் ப்ரதிபந்தகம்போகையிலும் அடிமைசெய்கையிலுமுண்டான அபிநிவேஶத்தாலே), இயம்பும் - அலற்றாநிற்கும்; நான் - (கரணியான) நான், விண்ணோர்-

---

அப்படியென்கிறார் - நித்யஸூரிகளும் இத்யாதி. இவ்விரண்டுக்குமடையே ப்ரமாணங்கள் - அணியரங்கன் இத்யாதி. "என்" என்ற விசேஷணத்துக்கு பாவம் - ஸம்ஸாரிகளில் இத்யாதி. நேத்ரபூதர் - ப்ரதாநர். க்ரமேணாந்வய:.

ப்ரஹ்மாதிகளுக்கும், முனிவர்க்கு - ஸநகாதிகளுக்கும், என்றும் -, காண்பு அரியாயை - காணஅரிய உன்னை, நண்ணுதொழியேன் - கிட்டாமல்விடேன், என்று - என்று வ்யவஸிதனுய்க்கொண்டு, அழைப்பன் - (த்வரையாலே) கூப்பிடாநின்றேன்.

இ.—இரண்டாம்பாட்டில், தமக்கும் தம்முடைய நெஞ்சுக்கும் உண்டான சாபலத்தை யருளிச்செய்கிறார்.

[கண்ணே]—எனக்கு த்ருஷ்டியானவனே! [உன்னைக் காணக்கருதி] - நிரதிசயபோக்யனான உன்னைக் காண ஆசைப்பட்டு; காண்கைக்கு ஸாதநமான கண்ணும் காணப்படும் விஷயமும் அவனே என்கிறார்; "சக்ஷுஸ்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண:" என்னக்கடவதிறே. அவன் தன்னாலே அவனைப்பெறுமவரிறே இவர். ப்ராப்யத்தில் நியதிபோலேயிறே இவர்க்கு ப்ராபகத்தில் நியதியும். [என்னெஞ்சம்] - "இயற்றுவாய் எம்மொடுநீகூடி" என்னவேண்டும்படியான நெஞ்சும். [எண்ணேகொண்ட சிந்தையதாய்] - எண்கொண்ட மநோரதத்தை யுடைத்தாய்: பஹுமநோரதங்களைப் பண்ணி, "காணவேணும்' காணாதேபட்ட து:கத்தைப் போக்கவேணும். அடிமை செய்யவேணும்" என்று. [நின்றியம்பும்] - நிரந்தரமாகக் கூப்பிடாநிற்கும். வாக்வ்ருத்தியையும் தானே ஏறிட்டுக்கொள்ளாநிற்கும். [விண்ணோர் இத்யாதி] — தம்முடைய கூப்பீட்டைச் சொல்லுகிறார். ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும்என்றும் கிட்டஅரிய உன்னை. [நண்ணுதொழியேன் இத்யாதி] - "பெறுதொழியேன்: பெற்றுமுடிவன்" என்று நான் கூப்பிடாநின்றேன். ப்ரஹ்மாதிகளுக்கு து:ர்லபனாயிருக்கிற உன்னை "பெற்றுமுடிவன்" என்கிறதுஎன்கொண் டென்னில்?—தந்தாம் தலையிலே ஸாதநம் கிடந்தவர்களுக்கு விளம்பஹேதுவுமுண்டு. முதலிலே ந்யஸ்தபரனாயிருக்கிற எனக்கு விளம்பஹேதுவில்லை. [நண்ணுதொழியேன்] - அவனைக் கிட்டாதொழியில் நான் தரியேனென்றுமாம். இது ஆய்த்தான் நிர்வாஹம். 'கண்ணே' என்றஇடம் - "அவனே உபாயம்" என்கிறது ; 'உன்னைக் காணக்கருதி' என்றஇடம் - "உபேயமும் அவனே" என்கிறது ; 'எண்ணேகொண்ட சிந்தையதாய்' - என்றஇடம் ஸ்வீக்ருதோபாயருடைய யாத்ரை சொல்லுகிறது. 'நண்ணுதொழியேன்' என்றஇடம் - மஹாவிஸ்வாஸஞ் சொல்லுகிறது.

ஈடு.—இரண்டாம்பாட்டு. தமக்கும் தம்முடைய நெஞ்சுக்கும் உண்டான சாபலத்தை யருளிச்செய்கிறார்.

[கண்ணே] - எனக்கு த்ருஷ்டியானவனே! [உன்னைக்காணக்கருதி] - நிரதிசயபோக்யனை உன்னைக் காண ஆசைப்பட்டு. கண்ணைக்கொண்டே கண்ணைக்காணவிருக்குமாபோலேகாணும் இவர்இருக்கிறது. காண்கைக்கு ஸாதநமான கண்ணும், காணப்படும் விஷயமும் அவனென்கிறார்: "சக்ஷுஸ்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண:" (சக்ஷு

இரண்டாம்பாட்டு.—கண்ணே இத்யாதி. "என்னெஞ்சமெண்ணேகொண்டசிந்தையதாய்" என்றத்தையும் 'நானழைப்பன்" என்றத்தையும் கடாக்ஷித்தவதாரிகை - தமக்கும் இத்யாதி.

ரஸோக்தி - கண்ணைக்கொண்டே இத்யாதி. இத்தால் ஃபலிதம் - காண்கைக்கு இத்யாதி. அப்படி யிரண்டுமவனேயென்ன - சக்ஷு இத்யாதி. "சக்ஷுஸ்ஸாம், அத்தால் காணப்படுகிற பதார்த்தமும், அவனுக்கு ப்ரகாரதயாவாம்" என்று இந்த ஸ்ருதிக்கு "ப்ரகார ப்ரகாரி

ஸசத்ரஷ்டவ்யஞ்ச நாராயண:)என்னக்கடவதிறே. அவன் தன்னாலே அவனைப் பெறுமவரிறே இவர். ப்ராப்யத்தில் நியதிபோலே, இவர்க்கு ப்ராபகத்தில் நியதியும். [என்னெஞ்சம்] - ஸங்கஹேதுவாய்க்கொண்டு, விஷயங்களிலே "பரதுபரது" என்று வாராநிற்குமிறே ஸம்ஸாரிகளுடைய நெஞ்சம்; * மயர்வறமதிநலமருளப்பெற்றார் நெஞ்சிறே, "தொழுதெழு" என்பது. [எண்ணேயித்யாதி] - எண்கொண்ட மநோரதத்தையுடைத்தாய்: பஹுமநோரதங்களைப்பண்ணி, "காணவேணும், காணாதேபட்ட து:கத்தைப் போக்கவேணும், அடிமைசெய்யவேணும்" என்று. [நின்றியம்பும்] - நிரந்தரமாகக்கூப்பிடாநிற்கும். ப்ரவ்ருத்தியையுந் தானே யேறிட்டுக்கொள்ளாநிற்கும். 'கண்ணே' என்கையாலே - "ப்ராபகனவனே" என்றதாய், "உன்னைக்காண" என்கையாலே - "ப்ராப்யவஸ்துவும்அவன்" என்றதாய், "எண்ணேகொண்ட" என்கையாலே - அந்தப்ராபகத்தைக்கொண்டு இந்த ப்ராப்யத்தைப் பெறவேணும்"என்றிருக்கும் அதிகாரியுடைய யாத்ரையிருக்கும்படி சொல்லிற்று. [விண்ணோரித்யாதி] - இதுதான் நெஞ்சுக்கேயாய் நான் கைவாங்கியிருக்கிறேனோ ? ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் என்றுமொக்கக் காணஅரியையாயிருக்கிற உன்னை நான் கிட்டாதொழிவனோ? "பெற்றுமுடிப்பன்" என்று நான் கூப்பிடாநின்றேன்."பெற்றுமுடிப்பன்"என்கிறது இவர்என்கொண்டென்னில்?-"விலக்ஷணதேசவாஸிகளாய்த் தங்களுக்கென்ன ஒருகைம்முதலுண்டாயிருக்கிறவர்களாகையாலே, விளம்பஹேதுவுண்டு அவர்களுக்கு; அங்ஙன்ஒருகைம்முதலில்லாதவர்களுக்கு விளம்பஹேது உண்டோ?" என்று கூப்பிடாநின்றேன். [நண்ணாதொழியேன்] - அவனைக்கிட்டாதொழியில் நான் தரியேன். இது ஆய்த்தான் நிர்வாஹம். "நண்ணாதொழியேன்" என்றவிடம் - மஹாவிஶ்வாஸஞ் சொல்லுகிறது. அவர்கள் விலக்ஷண தேசத்திலேயிருக்கையாலே க்ரமத்திலே யெடுக்கலாம் ; அங்ஙனன்றிக்கே, ஸம்ஸாரத்தே யகப்பட்டுநிற்கிற

ஹாவமன்றிக்கே சக்ஷுஸ்ஸாம் சக்ஷுஸ்ஸாலே காணப்படும் விஷயமும் அவனே" என்ற இதுவும் ஓரர்த்தம் இவர்க்கு விவக்ஷிதம். உபாயாந்தரங்களாலும் அவனைப் பெறலாமேயென்ன - அவன் தன்னாலே இத்யாதி. இந்நிர்ப்பந்தத்துக்கு அடியென்னென்ன - ப்ராப்யத்தில் இத்யாதி. "என்" என்றதுக்கு பாவம் - பந்தஹேதுவாய் இத்யாதி வாக்யத்வயம். பரதுபரது என்று - பரபரப்பாய்க்கொண்டு, "எண்ணேகொண்ட -" எண்ணிக்கையை - ஸங்க்யையை, கொண்ட - க்ரமித்த. ஸங்க்யையை யதிக்ரமித்திருக்கிறஎன்றபடி. விவரணம் - பஹுமநோரத இத்யாதி. பஹுமநோரதங்களேது? என்ன - காணவேணும் இத்யாதி. இயம்பும் - கூப்பிடும். நெஞ்சுக்கு ஸ்மரணமொழிய கூப்பிடக்கூடுமோவென்ன - ப்ரவ்ருத்தியை இத்யாதி. "கண்ணே" என்று தொடங்கி, "சிந்தையதாய்நின்றியம்பும்" என்னுமளவாலே - ஜ்ஞாநப்ரவ்ருத்தி த்ரயமும் ஸித்தித்ததென்கிறார் - கண்ணே இத்யாதி. உத்தரார்த்தத்துக்கு ஸங்கதி - இதுதான் இத்யாதி. பதார்த்தம் - ப்ரஹ்மாதிகளுக்கும் இத்யாதி. பெற்று முடிப்பன் என்றது - ஃபலிதார்த்தம். ப்ரஹ்மாதிகளுக்கு அஷ்ப்ராபமான வஸ்துவைக் கிட்டுவேனென்கிறது என்னஹேதுவைக்கொண்டென்று சங்காவாக்யத்துக்குக் கருத்து. பரிஹாரம் - விலக்ஷண இத்யாதி. அதாவது - போகங்களெல்லாவற்றாலும் குறைவற்றதேசத்திலிருக்கிறவர்களாகையாலே, "இப்போதே யவனைப்பெறவேணும்" என்னுமது பிறவாதாகையாலும், தந்தாம் ஸாதநம்முற்றி ஃபலிக்கவேணுமென்னும் அபிஸந்தி நடக்கையாலும் அவர்களுக்குவிளம்பமுண்டென்றபடி. அர்த்தாந்தரம் - அவனை இத்யாதி. "நண்ணாதபோது, ஒழியேன் - தரியேன்" என்ற ஆய்த்தான் நிர்வாஹம். "கிட்டியேவிடுவேன்" என்றத்தால் ஃபலிதமான அர்த்தவிசேஷத்தை யருளிச்செய்கிறார் - நண்ணாதொழியேன் இத்யாதி. 'அங்ஙனொருகைம்முதல்' இத்யாதிவாக்யத்திலே, "முனிவர்" என்ற - பதநசீலரென்றதுக்கு ப்ரதிகோடிகாட்டி, "விண்ணோர்" என்றதுக்கு ப்ரதிகோடிகாட்டுகிறார் -

இவரையிறே க்கேவெடுக்கவேண்டுவது. எடுக்கவேண்டும் நிலத்திலே யிருந்தேன்; எடுக்க வேணுமென்றிருந்தேன்; எடுப்பான் தானுமிருந்தான்; எடுத்தால் பெறுவது தன்னையா யிருந்தது; ஆனபின்பு, எனக்கு என்னகண்ணழிவு உண்டு? (௨)

மூன்றாம் பாட்டு.

அழைக்கின்றவடிநாயேன்நாய்கூழைவாலாற்
குழைக்கின்றதுபோலஎன்னுள்ளங்குழையும்
மழைக்குஅன்றுகுன்றமெடுத்துஆநிரைகாத்தாய் !
பிழைக்கின்றதருளென்று பேதுறுவனே.

ஆ.—(அழைக்கின்ற.) - என்னெஞ்சானது, தன்னுடைய அயோக்யதை யையும், ஸாமக்ரீவைகல்யத்தையும் பாராதே, தன்னுடைய சாபலத்தாலே யுன்னை யாசைப்பட்டு விடமாட்டுகிறதில்லை; இப்படி என்னுடைய ஸர்வகரணங்களும் தளரா நிற்கச்செய்தே பேசாதிருந்தருளுகையாலே, உபாயசூந்யராய் ஆபந்நராயிருப்பாரை ரக்ஷிக்கக்கடவதான உன்னுடைய நிரவத்யக காருண்யவெள்ளத்திலும் நான் அகப்ப டேனோ? என்றஞ்சாநின்றேன் என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், எம்பெருமானைக் காணவேணுமென்று கூப்பிட்டு மிகவும் அவஸந்நராகச்செய்தே அவன் வரக்காணாமையாலே, நிஸ்ஸாதநராய் ஆர்த்த ராயிருந்தவர்களைத் தானே கைக்கொண்டு ரக்ஷிக்கக்கடவதான இக்குணத்துக்குப் புறம் பானேனோ என்று நோவுபடுகிறார்.

[அழைக்கின்றவென்று தொடங்கி] - அயோக்யனுமாய் அதிக்ஷுத்ரனுமா யிருந்துவைத்து ஆர்த்தனாய்க் கூப்பிடுகிற என்னுடைய ஹ்ருதயமானது நாய் தன்னு டைய கூழைவாலாலே பிறர்க்குத் தெரியாதபடி ஸ்வாபேக்ஷிதஸூசகமான சேஷ்டை களைப் பண்ணுமாபோலே, ஒருவர்க்குமறிய நிலமல்லாதபடி நோவுபடாநின்றது நிஸ்ஸாதநனாய் வைத்து ஆசைப்படாநின்றேன் என்றுமாம். [மழைக்கு அன்றென்று தொடங்கி]- பசுக்களும் இடையரும் நோவுபடும்படி இந்த்ரன் வர்ஷித்த வர்ஷத்துக்கு மலையை எடுத்துப்பரிஹரித்தருளின உன்னுடைய குணத்துக்குப்புறம்பாகாநின்றேன் என்று நோவுபடாநின்றேன்.

ப—அநந்தரம், ஆர்த்தியேபற்றாசாக ஆஶ்ரிதரக்ஷகனான உன்னுடைய க்ருபையானது என்னை நழுவவிடுகிறதோ? என்றஞ்சாநின்றேனென்கிறார்.

அழைக்கின்ற - (அபிநிவேஶாதிஶயத்தாலே) அழைத்துக்கூப்பிடாநிற்பே னாய், அடி - அநந்யகதியான ஸம்பந்தத்தையுடையேனாய், நாயேன் - அணுவில் அவத் யாவஹமான நிகர்ஷத்தையுடைய என்னுடைய, என்னுள்ளம் - து꞉க்கக்ஷீணமானநெஞ் சானது, (உன்னுடையஸந்நிதியிலே), நாய் - நாயானது, (தன்னினைவை), கூழை -

அவர்கள் விலக்ஷண இத்யாதிவாக்யத்வயத்தாலே. பாட்டெல்லாவற்றாலும் ஸித்தித்தவர்த்தத் தைக் கொய்துபிடித்து நிரூபிக்கிறார் - 'எடுக்க' 'எடுக்கவேண்டும்' இத்யாதி. "விண்ணோர்" என்றதுக்கு ப்ரதிகோடியை விவக்ஷித்து "அழைப்பன், கண்ணே, உன்னைக்காண" என்ற பதத்ரயத்தையும்பற்ற - எடுக்கவேணும் இத்யாதிவாக்யத்ரயமும். என்ன கண்ணழிவுஉண்டு என்றது - உக்தஹேதுக்களைப்பற்ற, கண்ணழிவு - விளம்பமும், குறையும். க்ரமேணாந்வய꞉. (௨)

கூழையான, வாலால் - வாலையசைத்து, குழைக்கின்றதுபோல - ப்ரகாசிப்பிக்குமா போலே; குழையும் - சிதிலமாகாநின்றது; (இந்த்ரன்), அன்று - (அப்பவர்ஷமுகத்தாலே ஆர்த்தியைஜநிப்பித்த) அன்று, மழைக்கு - அந்தவர்ஷத்துக்கு நிவாரணமாம்படி, குன்றம் - மலையை, எடுத்து - எடுத்து, ஆ - (ரக்ஷாபேக்ஷைபண்ணவும் அறியாத) பசுக்களுடைய, நிரை - திரளை, காத்தாய் - ரக்ஷித்தவனே! (உன்னுடைய), அருள் - நிரவதிகக்ருபையானது, (என்னளவில்), பிழைக்கின்றது - தப்புகிறதோ, என்று—, பேதுறுவன் - கலங்காநின்றேன். உனக்குத் தப்புகிறதோவென்றுமாம்.

இ.—மூன்றாம்பாட்டில், இப்படிக் கூப்பிடச் செய்தேயும் அவன் வரக்காணாமையாலே ஆர்த்தியேமுதலாக ரக்ஷிக்கக்கடவ உன்குணத்துக்குப் புறம்பானேனோ என்கிறார்.

[அழைக்கின்றவடிநாயேன் இத்யாதி] - அயோக்யனாய் க்ஷுத்ரனாயிருந்து வைத்து ஆர்த்தியாலே கூப்பிடாநின்றேன். ருசியாலே தவிரமாட்டார். கிட்டினால் அத்தலைக்கு அவத்யமாம்படியாயிற்று தம்முடைய நிலை. அது தன்னை உடையவனுக்குத் தன் அபிமதத்திலே ருசியைத் தெரிவிப்பது வாலாலேயாயிற்று; அதுதான் கூழையானால், தெரிவிக்கை அரிதாமிறே; அதுபோலே என்மநஸ்ஸானது நோவுபடாநின்றது. இத்தால், தமக்குஓடுகிற க்லேசம் பேச்சுக்கு நிலமன்றென்கை. நிஸ்ஸாதநனாய் வைத்து ஆசைப்படாநின்றேன் என்றுமாம். [மழைக்கன்று இத்யாதி] - இந்த்ரன்வர்ஷிக்கிற ஊமையிலே மலையை எடுத்து இடையரையும் பசுக்களையும் ஆர்த்தியே முதலாக ரக்ஷித்தவனே! [பிழைக்கின்ற தருளென்றுபேதுறுவனே] - "வரையாதே ரக்ஷித்த அந்த மஹாகுணம் எனக்கு உதவாமையாலே பிழைக்கப்புகாநின்றாய் என்று பேகணியாநின்றேன் என்று ஆளவந்தார் நிர்வாஹம். "அந்த மஹாகுணத்துக்குப் புறம்பாகிறேனோ என்றஞ்சாநின்றேன்" என்று எம்பெருமானார் அருளிச்செய்வர்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. இப்படிக் கூப்பிடச்செய்தேயும் வரக்காணாமையாலே, ஆர்த்தியே கைம்முதலாக ரக்ஷிக்கக்கடவ உன்குணத்துக்குப் புறம்பானேனோ? என்கிறார்.

[அழைக்கின்றவடிநாயேன்இத்யாதி] - அயோக்யனாய் க்ஷுத்ரனாயிருந்து வைத்து, ஆர்த்தியாலே கூப்பிடாநின்றேன். ருசியாலே தவிரமாட்டார். கிட்டினால் அத்தலைக்கு அவத்யமாம்படியாயிற்றுத் தம்முடைய நிலை. நாய், தன்னையுடையவனுக்குத் தன்னபிமதத்தில் ருசியைத்தெரிவிப்பது வாலாலேயாயிற்று; அவ்வால்தான் கூழையானால் தெரிவிக்கையரிதாமிறே; அதுபோலே, என்மநஸ்ஸானது நோவுபடாநின்றது. இத்தால் - தமக்குஓடுகிறக்லேசம் பேச்சுக்கு நிலமன்றென்கை. நிஸ்ஸாதநனாய்வைத்து ஆசைப்படாநின்றே

மூன்றாம்பாட்டு.—அழைக்கின்ற இத்யாதி. "பிழைக்கின்றதருளென்றுபேதுறுவன்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - இப்படி இத்யாதி.

"அடிநாய் - நாயேனான நான், அழைக்கின்றேன்" என்றந்வயித்து அருளிச்செய்கிறார் - அயோக்யனாய் இத்யாதி. "நாய்" என்கையாலே - அயோக்யத்வமும், க்ஷுத்ரத்வமும் ஸித்தம். அடி - அடியனாய், நாயேன் - நிஹீநனான என்னுடையவென்று பஃதார்த்தம். அயோக்யனானால் கூப்பிடுகிறதென்? தவிரலாமேயென்ன - ருசியாலே இத்யாதி. வாலென்னாதே, "கூழை" என்று விசேஷித்ததுக்குபாவம் - நாய், தன்னை இத்யாதி. "கூழைவாலால்" என்றத்ருஷ்டாந்தத்துக்கு அநுகுணமாக பாவத்வயமருளிச் செய்கிறார் - இத்தால் தமக்குஇத்யாதி வாக்யத்வயத்தாலே, த்ருஷ்

னென்றுமாம். [மழைக்குஇத்யாதி] — இந்த்ரன் அஶ்மவர்ஷத்தை வர்ஷிக்கிறவளவிலே, மலையையெடுத்து இடையரையும் பசுக்களையும் ஆர்த்தியே கைம்முதலாக ரக்ஷித்தவனே! [பிழைக்கின்றதருளென்றுபேதுறுவனே] - "'வரையாதேரக்ஷித்தமஹாகுணம் எனக்கு உதவாமையாலே யிழக்கப்புகாநின்றாய்'என்று பேகணியாநின்றேன்" என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி. அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இது, பொருளழகிது: ஆனால், இப்போது இவர்க்குஓடுகிற ஊமைக்குச் சேராது; ஆனபின்பு,'பசுக்களும்இடையரும் வர்ஷத்திலே நோவுபடாதபடி மலையையெடுத்துமறித்த இம்மஹாகுணத்துக்கு நான் புறம்பாகிறேனே?' என்று பேதுறுநின்றேன்" என்று. (௩)

நான்காம் பாட்டு.

உறுவதிதுவென்றுஉனக்காட்பட்டுநின்கண்
பெறுவதேதுகோலென்று பேதையேன்நெஞ்சம்
மறுகல்செய்யும் வானவர்தானவர்க்கென்றும்
அறிவதரியஅரியாயஅம்மானே!

ஆ.—(உறுவதிது) - நீ ஆஶ்ரிதஸுலபனுமாயிருக்கச்செய்தே சிலருக்கு அரியையாயிருக்கையாலே, எனக்கும் அரிபையாயிருக்கிற்செய்வதென்? என்று என்னெஞ்சு நடுங்காநின்றதென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும், அரியையாயிருக்கக் காண்கையாலே நெஞ்சு கலங்காநின்றது என்கிறார்.

[உறுவதிதுவென்று தொடங்கி] - இது பரமப்ரயோஜநம் என்று அடிமை புகுந்து, உன்பக்கல் அடிமைசெய்யப் பெற்றேனோ என்று மிகவும் மூக்யமான என்னுடைய ஹ்ருதயமானது கலங்காநின்றது; தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் என்று மொக்க அறியவொண்ணாத நரஸிம்ஹமான ஸர்வேஶ்வரனே!

ப.—அநந்தரம், உத்தேஶ்யமான ஶேஷத்த்வத்துக்கு ப்ரதிஸம்பந்தியான உனக்கு அடிமையாய்வைத்து,என்பேறு ஏதாயிருக்கிறதோ? என்று என்னெஞ்சுகலங்காநின்றதென்கிறார்.

(ஸம்பந்தமொத்திருக்கச் செய்தேயும்), வானவர் - அநுகூலரானவானவரோடு, தானவர்க்கு - ப்ரதிகூலரானதாநவரோடுவாசியற, (ஆஶ்ரித ஸௌலப்யத்திலும் ஸர்வேஶ்வரத்வத்திலும், என்றப் - என்றுமொக்க, அறிவது-அறிய, அரிய - அரியை

டாந்தத்துக்குத் தெரிவிக்கையரிதென்கிறமாத்ரமே அபேக்ஷிதம். ஆளவந்தார்நிர்வாஹத்துக்கு, அவ்வருள் உன்னைத் தப்பிப்போகிறதென்று பேதுறுநின்றேனென்று ஸப்தார்த்தம். அருளென்னைத் தப்பிப்போகிறதென்று பேதுறுநின்றேனென்று எம்பெருமானார் நிர்வாஹத்துக்கு ஸப்தார்த்தம். பேகணியாநின்றேன் - *க்லேசியாநின்றேன்.* இவர்க்கோடுகிறதசைக்குச் சேராது என்றது - *அலாஹத்தாலே நோவுபடாநிற்க அவனிழவுக்குநோவுபடுகை சேராதென்றபடி.* பேதுறுகை - *து:கப்படுகை. 'அழைக்கின்றஅடிநாயேனை - என்னுள்ளம் - நாய் கூழைவாலால் குழைக்கின்றது போல - குழையும்; இவ்வவஸ்தையிலும் வரக்காணாமையாலே, மழைக்குஅன்றென்றுதொடங்கி, அருள் - பிழைக்கின்றது என்று பேதுறுவன் இத்யந்வய:.* (௩)

யாம்படியான, அரிஆய - நரஸிம்ஹமான, அம்மானே - ஸ்வாமியே! இது - இந்த ஶேஷத்வமாகிறஸ்வரூபமே, உறுவது - உத்தேஶ்யம், என்று - என்றறுதியிட்டு, உனக்கு - (தத்ப்ரதிஸம்பந்தியான) உனக்கு, ஆட்பட்டு - தாஸ்யாநுமதியைப்பண்ணி, நின்கண் - (ஸ்வாமியான) உன்பக்கல், பெறுவது - ஃபலமாக லபிக்கவருகிறது, எதுகொல் - (ஸ்வரூபாநுரூபகைங்கர்யமோ, ஸம்ஸாரஸ்திதியோ?) ஏதாயிருக்கிறது? என்று—, பேதையேன் - (ஏதேனுமொன்றை நீ செய்தபடிகண்டிருக்கை ப்ராப்தமென்னும்) அறிவில்லாத என்னுடைய, நெஞ்சம் - நெஞ்சானது, மறுகல்செய்யும் - கலங்காநின்றது.

இ.—நாலாம்பாட்டில், நீர் இங்ஙன் ஐயப்படுகிறதென்னென்ன? "தேவாதிகளுக்கு அரியையாகையாலே எனக்கும் அரியையாகிறாயோ?" என்று என்னெஞ்சு கலங்காநின்றதென்கிறார்.

[உறுவது இதுவென்று] - சீரியது அடிமைசெய்யுமது என்று. [உனக்காட்பட்டு] - உனக்கு அடிமைபுகுந்து. "ஸ்வரூபம் பரவத்பாரதந்த்ர்யம்" என்று உணர்ந்தால் சீரிய ப்ரயோஜநம் கைங்கர்யமிறே. [நின்கண்பெறுவதெது கொலென்று] - உன்பக்கல் பெறுவதேதோவென்று. ஸ்வரூபத்தையும் உணர்ந்து, "கைங்கர்யமே சீரியது" என்றும் அறிந்து, "ஈஶ்வரன் அநந்யப்ரயோஜநர்க்கு வேறொன்றைக் கொடுத்துவிடுவான் ஒருத்தனல்லன்" என்றும் அறியும் இவர், "உன்பக்கல் பெறுவதேதோ?" என்கைக்கு ஹேது என்னென்னில்?—க்ரமத்திலேவந்து முகங்காட்டுகிறோம் என்று ஸம்ஸாரத்திலிருப்பே ஶேஷித்துவிடப் புகுகிறதோ? என்த்வரையறிந்து சடக்கென முகங்காட்டுகிறாயோ? என்கை. [பேதையேன்நெஞ்சம் மறுகல்செய்யும்] - நாம் அபிஸந்திபண்ணினபடியே ஃபலிக்கும் என்னும் அறிவின்றிக்கேயிருக்கிற என்னெஞ்சு கலங்காநின்றது. இங்ஙன் கலங்குகைக்கு அடியென்னென்னில்? [வானவர் இத்யாதி] - "தேவா நாநாஜாநந்தி" என்று ஸம்பந்தமொத்திருக்க தேவஜாதவர்களுக்கும் என்றுமொக்க அறியவொண்ணாத நரஸிம்ஹமான ஸர்வேஶ்வரனே! ஆஶ்ரிதவாத்ஸல்யத்தோடு ஸர்வேஶ்வரத்வத்தோடு வாசியற அவர்களுக்கு அறியவரியனென்கை. இத்தால், 'ப்ரஹ்லாதனுக்கு எளியையான கோடியிலேயாகிறேனோ, தேவாதிகளுக்கு அரியையாகிற கோடியிலேயாகிறேனோ?' என்று அஞ்சாநின்றேன். தேவாஸுரவிமர்த்தம் பண்ணின ஸமநந்தரம் "நாம் எக்கோடியிலே யாகிறோமோ?" என்று அர்ஜுநன் அஞ்சினாற்போலே அஞ்சாநின்றேன்.

ஈடு.—நாலாம்பாட்டு. 'நீர் இங்ஙன் பயப்படுகிறதென்?' என்ன,—"தேவாதிகளுக்குஅரியையாகையாலே எனக்கும் அரியையாகிறாயோ?" என்று என்னெஞ்சுகலங்காநின்றதென்கிறார்.

[உறுவதிதுவென்று] - சீரியது அடிமைசெய்யுமிது என்று. [உனக்காட்பட்டு] - உனக்குஅடிமைபுகுந்து. "ஸ்வரூபம் பரவத்பாரதந்த்ர்யம்" என்றறிந்தால் சீரிய

நாலாம்பாட்டு.—உறுவது இத்யாதி. "என்னெஞ்சம்மறுகல்செய்யும், வானவர்தானவர்க்கென்றும் அறிவரிய" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - நீர்இங்ஙன் இத்யாதி. இந்தஅவதாரிகை, "மழைக்கன்று" இத்யாதிக்கு - எம்பெருமானார் நிர்வாஹத்தைப்பற்ற.

உறுவது - யோக்யமானது. சீரியதென்றபடி. சீரியதென்றறிந்தபடியென்னென்ன - ஸ்வரூபம் இத்யாதி. இவ்விடத்தில் - "ஶ்ருதாபிநோநாநுமுணவஸ்ஷாயுஷ்வ

ப்ரயோஜநம் கைங்கர்யமேயிறே. [நின்கண் பெறுவதெதுகோலென்று] - உன்பக்கல் பெறுவதுஏதோவென்று: ஸ்வரூபத்தையுமுணர்ந்து, “கைங்கர்யமே சீரியதும்” என்றறிந்து, ‘ஈச்வரன்அநந்யப்ரயோஜநர்க்கு வேறொன்றைக்கொடுத்துவிடுவா னொருவனல்லன்” என்றும் அறியும்இவர், “உன்பக்கல் பெறுவதெது?” என்கைக்கு ஹேதுவென்னென்னில்;— “க்ரமத்திலேசெய்கிறோம்” என்று ஸம்ஸாரத்திலிருப்பேக்ஷித்துவிடப்புகுகிறதோ? என் த்வரையறிந்து சடக்கென முகங்காட்டுகிறாயோ? என்கை. [பேதையேன் நெஞ்சம்மறுகல்செய்யும்] - “நாம் அபிஸந்திபண்ணினபடியே பலிக்கும்” என்னும் அறிவின்றிக்கேயிருக்கிற என்னெஞ்சம் கலங்காநின்றது. இங்ஙன் கலங்குகைக்குஅடியென்? என்னில்,—நெஞ்சினுடைய விவேகசூந்யதையிறே இதுக்கடி; நீதானும்இதுக்கடி. [வானவரித்யாதி] - “தேவாநாம் தாநவாநாம்” (தேவாநாம்தாநவாநாம்) அம்மானாயிருந்துவைத்து - ஸர்வேச்வரனாயிருந்துவைத்து, தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் என்றுமொக்க அறியவரியையாய், அந்நிலை தன்னிலே ஒரு சிறுக்கனுக்கு உன்னை யுள்ளபடியறியலாயிருந்தாய்: அதில் நான் எக்கோடியிலே யாகிறேனோ? என்றறியாமை. தேவாஸுரவிபாகம்பண்ணின வநந்தரம், அர்ஜுநன் ‘நான் எக்கோடியிலேயாகிறேனோ” என்றஞ்சினாற்போலே. பின்னை அவன் இதுக்குப்பண்ணின பரிஹாரமேன்? என்னில்; —தன் ஸௌலப்யத்தை ப்ரகாசிப்பிக்கையிறே. எளியோமாகையும் ஒருகோடியுண்டாக நீர் சொன்னீராகில், நீர்தாம் அக்கோடியிலேயுள்ளா ரொருவராய் இருந்தீராகில் உமக்கு இனி நாம் கைப்புகுந்தோமென்றிருக்கையமையாதோ? என்கையிறே. (ச)

ஸ்யா। ஸமவதாரதஜ்ஞாதிப்ரபாத்யஸ்யஸாவாயதே” என்று, பிள்ளையருளிச்செய்த வசநத்தை ஸம்வாதமாக அருளிச்செய்வர். “க்ரமத்திலேசெய்கிறோம்” இத்யாதி பரிஹாரவாக்யத்துக்குக்கருத்து - ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு உதவினாற்போலே சடக்கெனவுதவுகிறாயோ? ஸ்ரீபரதாழ்வானுக்குப்போலே க்ரமத்திலே செய்கிறாயோ?” என்றருளிச்செய்வர். மேலுக்கவதாரிகை - நீதானும்இதுக்கடி என்று. இதுக்கு - விவேகசூந்யதைக்கு. “அம்மான்” என்றதைப்பற்ற - தேவாநாம் இத்யாதி. “தேவாநாம்தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்। ஸர்வதா சரணத்வந்த்வம்” இத்யாதி. எக்கோடியிலே யாகிறேனோ வென்றது - தேவாஸுரகோடியிலே யாகிறேனோ; ப்ரஹ்லாதகோடியிலே யாகிறேனோ? என்றபடி. ஆழ்வாருடைய ஸம்சயம் விளம்பாவிளம்ப கோடிகமாகையாலும், அர்ஜுநனுடையஸம்சயம் தேவாஸுரகோடிகமாகையாலும், ஸம்சயமாத்ரத்திலே த்ருஷ்டாந்தம் அருளிச்செய்கிறார் - தேவாஸுர இத்யாதி. இவ்விடத்திலே - “த்வௌபூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச। தைவீஸம்பத்விமோக்ஷாய நிபந்தாயாஸுரீமதா। த்விவிதோ பூதஸர்கோயம் தைவ ஆஸுர ஏவ ச। விஷ்ணுபக்திபரோ தைவோ விபரீதஸ்ததாஸுர:” என்று அவர்கள் ஸ்வரூபத்தைச் சொல்லி, இதுதன்னை, ‘மஹாத்மாநஸ்து மாம் பார்த்த’ இத்யாதியாலும், ‘ஆஸுரீம் யோநிமாபந்நா:’ இத்யாதியாலும்விஸ்தரித்து, ‘மா ஶுச: ஸம்பதம் தைவீமபிஜாதோஸி பாண்டவ’ என்று பரிஹரிப்பதும்செய்தான்” என்றருளிச்செய்வர். இதுக்கு - “மறுகல்செய்யும்” என்றதுக்கு. “உகந்தேயுன்னையுள்ளுமென்னுள்ளம்” என்கிற ஏழாம்பாட்டைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் - தன் ஸௌலப்யத்தை இத்யாதி. விவரணம் - எளியோம் இத்யாதி. ‘சொன்னீராகில்’ என்றவநந்தரம், “நரசிங்கமதாயவுருவே - உகந்தேயுன்னையுள்ளும்” என்றுநீரே சொல்லுகையாலே என்றுகூட்டுவது. ‘அம்மானாய்வைத்து - வானவர்தானவர்க்கென்றும் அறிவதரியையாய் அரியானவனே - உறுவதிது’ என்றதொடங்கி, ‘மறுகல்செய்யும்’ என்றந்வயம். (ச)

ஐந்தாம் பாட்டு.

அரியாயவம்மானையமரர்பிரானைப்
பெரியானைப்பிரமனைமுன்படைத்தானை
வரிவாளரவினணைப் பள்ளிகொள்கின்ற
கரியான்கழல்காணக் கருதுங்கருத்தே.

ஆ.—(அரியாய)- உம்முடைய அபேக்ஷிதந்தானெதென்னில்,—அண்டாதிபதியான ப்ரஹ்மாவுக்கும் காரணபூதனாகையாலே ஸர்வேஶ்வரனாய், * அயர்வறுமமரர்களதிபதியாய், ஸகலஜநமநோநயநஹாரி திவ்யஸௌந்தர்யவிஶிஷ்டனாய், ஆஶ்ரிதர்க்காத்மதாநம்பண்ணுகைக்காகத் திருப்பாற்கடலிலேவந்து கண்வளர்ந்தருளுகிற கரியான் கழல் காண ஆசைப்படாநிற்கு மென்னெஞ்சு என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், ஸர்வேஶ்வரனாய்வைத்து ஆஶ்ரிதஸம்ஶ்லேஷைகஸ்வபாவனானவன் கழல்காணக் கருதுமென்னெஞ்சம் என்கிறார்.

[அரியாயவென்ற இப்பாட்டுக்கு]- அபரிச்சேத்யனாய் அயர்வறுமமரர்களதிபதியாயிருந்துவைத்து ஜகத்ஸ்ருஷ்டிக்கு உறுப்பாக ப்ரஹ்மாவை முதலிலே உண்டாக்குவதுஞ்செய்து ஆஶ்ரிதர்க்குஅத்யந்த ஸுலபனாய் ஆஶ்ரித ஸம்ஶ்லேஷைக ஸ்வபாவனாய் நிரதிஶய ஸௌந்தர்யனானவன் திருவடிகளைக்காணவேணுமென்று நினையாநின்றது என்கருத்து.

ப. அநந்தரம், காரணத்வாதி குணயோகத்தையுடையனான உன் திருவடிகளைக் காணவேணுமென்று என்னுடைய நெஞ்சானது நினையாநின்றதென்கிறார்.

அரி ஆய - விரோதிநிரஸநஶீலனான, அம்மானை - ஸ்வாமியாய், அமரர் - நிரஸ்த ஸமஸ்தவிரோதிகளான ஸூரிகளுக்கு, பிரானை - போகப்ரதனாய், பெரியானை - அவர்களாலும் பரிச்சேதித்து அநுபவிக்கவொண்ணாத பெருமையையுடையனாய், (முமுக்ஷுஸிஸ்ருக்ஷையாலே ஜகத்தைஸ்ருஷ்டிக்கைக்கு); முன் - முற்படவே, பிரமனை - ப்ரஹ்மாவை, படைத்தானை - உத்பாதித்தவனாய், (உத்பந்நஜந்துரக்ஷணார்த்தமாக,) வரி - வரியையும், வாள் - ஒளியையுமுடைத்தான, அரவின் அணை - திருவரவணையிலே, பள்ளிகொள்கின்ற - பள்ளிகொண்டருளுகிற, கரியான் - (படுக்கைக்குப் ப்ரபாகமான) ஶ்யாமளவிக்ரஹத்தையுடையவனை, கழல் - திருவடிகளிலே, காண - காணவேணுமென்று, கருத்து - புத்தியானது, கருதும் - நினையாநின்றது. கரியானையென்கிற இரண்டாம்வேற்றுமை எஞ்சிக்கிடக்கிறது. கரியான்றனையென்றும் பாடஞ்சொல்லுவர்.

இ.—அஞ்சாம்பாட்டில்; நாம் எளியோமான கோடியிலேயன்றோ நீர், உமக்குப் பேறு கைபுகுந்திருக்க இங்ஙன் பதறுகிறதென்? என்ன,—என்னெஞ்சு காண்கையிலே பதறாநின்றதென்கிறார்.

[அம்மானை] - ஸர்வாதிகனானவனை. [அமரர்பிரானை] - நித்யஸூரிகளுக்குத் தன்னை உபகரித்துக் கொண்டிருக்கிறவனை. [பெரியானை] - அவர்களுக்கும் பரிச்சேதிக்கவொண்ணாதவனை. [பிரமனை முன்படைத்தானை] - ஜகத்தைஸ்ருஷ்டிக்கைக்காக ப்ரஹ்மாவை முதலிலே உண்டாக்கினவனை. அரியாயவென்று கீழோடே கூட்டுவது.

ஸ்ருஷ்டமான ஜகத்திலே ஆஶ்ரிதார்த்தமாகத் தன்னை அழியமாறிவந்து அவதரித்தவனை. [வரிவாள் இத்யாதி] - ஆஶ்ரிதர்க்கு உதவுகையன்றிக்கே தத்ஸம்ஶ்லேஷைக ஸ்வபாவனானவனை. [வரிவாளரவு]-வரியையும் ஒளியையுமுடைய அரவு. [கரியான்] - வெளுத்த திருநிறத்தையுடைய திருவநந்தாழ்வான்மேலே காளமேகம் சாய்ந்தாற்போலேயாயிற்று கண்வளர்ந்தருளுவது. [காணக்கருதுங் கருத்தே] - காண்கையிலே த்வரியாநின்றது என் மநஸ்ஸு. படுக்கைக்கு பராபாகமானவடிவும் அதுக்குப் பராபாகமான திருவடிகளும் இத்தையாயிற்று ஆசைப்படுகிறது.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. நாம் எளியோமானகோடியிலேயன்றோ? உமக்குப் பேறு கைபுகுந்திருக்க நீர இங்ஙன் படுகிறதென்னென்ன,—என்னெஞ்சுகாண்கையிலே த்வரியாநின்றதென்கிறார்.

[அம்மானை] - ஸர்வேஶ்வரனை. [அமரர்பிரானை] - நித்யஸூரிகளுக்குத் தன்னைக்காட்டிக்கொடுத்துஅநுபவிப்பிக்கும் உபகாரகனை. [பெரியானை] - அவர்களுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகள் தன்னதீநமாய், தன்னை யவர்களால் பரிச்சேதிக்கவொண்ணாதவனை. [பிரமனைமுன்படைத்தானை] - சதுர்முகனுக்கு ஜநகனுயுள்ளவனை, அரியாய வென்று - கீழேகூட்டுவேது. ஸ்ருஷ்டமானஜகத்திலே, ஆஶ்ரிதார்த்தமாக அவன்ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே தன்னை யழியமாறிவந்து அவதரித்தவனை. [வரிவாளித்யாதி] - ஆஶ்ரிதர்க்கு உதவுகையன்றிக்கே, தத்ஸம்ஶ்லேஷஸ்வபாவனுயுள்ளவனை. [வரிவாளரவு] - வரியையும் ஒளியையுமுடைய அரவு. வரி - அழகு. [கரியான்] - வெளுத்ததிருநிறத்தையுடைய திருவநந்தாழ்வான்மேலே ஒருகாளமேகம் சாய்ந்தாற்போலேயாயிற்றுக் கணவளர்ந்தருளுவது. [காணக்கருதுங்கருத்தே] - காண்கையிலே த்வரியாநின்றது, என மநஸ்ஸு. படுக்கைக்குப் பராபாகமானவடிவும், அதுக்குப் பராபாகமான திருவடிகளும் இத்தையாயிற்றுக்காண ஆசைப்படுகிறது. (௫)

அஞ்சாம்பாட்டு.—அரியாய இத்யாதி. "அரியாய" என்றத்தையும், "காணக்கருதும் கருத்து" என்றத்தையும் கடாக்ஷித்தவதாரிகை - நாம்எளியோமான இத்யாதி.

கருத்து - நெஞ்சு. கீழேகூட்டுவதென்றது - "பிரமனை முன்படைத்தானை" என்றதுக்குப் பிற்பாடு கூட்டுவதென்றபடி. "அரியாய" என்றவிசேஷணத்துக்கர்த்தம் - ஸ்ருஷ்டமான இத்யாதி. 'ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே' என்றவிடத்திலே - "ஸ்ரஹாஸம்ஸநாவஷ்டப்யதாரக்ஷிதவாநுஷஸி: । ஸ்யாரக்ஷிதவஸஸ்யஸ்ருணோதிவர்ணிதம்ஸஹா" என்று ப்ரஸாதிப்பர். "அரியாய" என்றவநந்தரம், "வரிவாளரவினணை" இத்யாதிக்குஸங்கதி - ஆஶ்ரிதர்க்கு இத்யாதி. வரி - அவயவஸௌந்தர்யம். வாள் - ஸமுதாயஶோபை. "அரவினணைப்பள்ளிகொள்கின்றகரியான்" என்றத்தால் பலித்தபாவம் - வெளுத்த இத்யாதி. "கரியான்" என்றத்தைக்கடாக்ஷித்து - படுக்கைக்கு இத்யாதி. அதுக்கு - வடிவுக்கு. கரியானையும் கழலையும்காண - கருத்து - கருதுமென்றந்வயமாதல்; அன்றிக்கே, அம்மானுய், அமரர்பிரானுய், பெரியானுய் பிரமனைமுன்படைத்தானுய் - அரியானுய் - வரிவாளரவினணைப்பள்ளிகொள்கின்ற கரியானுடைய கழலைக்காண - கருத்து - கருதுமென்றந்வயமாதல்; இந்தயோஜநையில், த்விதீயை வாக்யாலங்காரம். (௫)

ஆறும் பாட்டு.

கருத்தே!உன்னைக்காணக்கருதிஎன்னெஞ்சத்து
இருத்தாகவிருத்தினேன் தேவர்கட்கெல்லாம்
விருத்தா!விளங்குஞ்சுடர்ச்சோதியுயர
தொருத்தா! உன்னையுள்ளுமென்னுள்ளமுகந்தே.

ஆ—(கருத்தே.) - இப்படி நான் உன்னைக்காண இச்சிக்குமளவில், திருநாட்டிலிருக்கும்படியேவந்து என்னெஞ்சிலே புகுந்தருளின உன்னை என்னெஞ்சு உகந்து புஜியாநின்றதென்கிறார்.

ஒ—ஆறும்பாட்டில், தாம் காண ஆசைப்படுமளவிலே எம்பெருமான் தம்முடைய திருவுள்ளத்திலே வந்து புகுந்தருளினவாறே நெஞ்சு உகந்தநுபவிக்கிறபடியை அருளிச் செய்கிறார்.

[கருத்தே என்றுதொடங்கி]-எனக்கு மிடுக்கானவனே! உன்னைக்காணவேணுமென்று அல்பம் மநோரதித்தேன். இனி ஒருகாலும் போகாதபடியாக என்னெஞ்சிலேயிருத்தினேனென்றுமாம். [தேவர்கட்கெல்லாம்விருத்தாவிளங்கும் சுடர்ச்சோதி உயரத்தொருத்தா] - அயர்வறுமமரர்களதிபதியாய் விலக்ஷணதேஜோரூபமாய் உச்ச்ரிதமான திருநாட்டிலே எழுந்தருளியிருந்தருளின அத்விதீயனானவனே!

ப.—அநந்தரம், நான் மநோரதித்தபடியே, பரமபதநிலயனாய் ஸூரிஸேவ்யனான உன்னை என்னெஞ்சானது கண்டு அநுபவியாநின்றதென்கிறார்.

கருத்தே - நான் தளராதபடி எனக்கு ஸஹகாரனாகக்கொண்டு நெஞ்சுவலியானவனே! உன்னைக் காண - உன்னைக் கண்டநுபவிக்கவேணுமென்று, கருதி - மநோரதித்து, என் நெஞ்சத்து - என் நெஞ்சுக்குள்ளே, இருத்தாக - எழுந்திராதபடி, இருத்தினேன் - இருத்திக்கொண்டேன்; தேவர்கட்கெல்லாம் - ஸூரிகளுக்கெல்லாம், விருத்தா - மூப்பானசேஷியாய், விளங்கும் - உஜ்ஜ்வலமான, சுடர் - ப்ரஜ்ஞையையுடைத்தாய், சோதி - தேஜோமயமாய், உயரத்து - ("விஶ்வதஃப்ருஷ்டேஷு ஸர்வதஃப்ருஷ்டேஷு" என்று) ஸர்வோத்தரமான பரமபதத்திலே, ஒருத்தா - அத்விதீயனாயிருக்குமவனே! என் - என்னுடைய, உள்ளம் - அந்தஃகரணமானது, உன்னை - (நிரதிஶய ப்ராப்யபூதனான)உன்னை, உகந்து - அத்யந்தப்ரேமவிஶிஷ்டமாய்க்கொண்டு, உள்ளும் - அகவாயிலேயநுபவியாநின்றது.

இ—ஆறும்பாட்டில், காண ஆசைப்பட்ட வளவிலே அவன் தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்தருள, தம்முடைய நெஞ்சு உகந்தநுபவிக்கிறபடியை அருளிச் செய்கிறார்.

[கருத்தேயித்யாதி] - எனக்குமிடுக்கானவனே! உன்னைக்காண ஆசைப்பட்டவளவிலே முகங்காட்டினாய். இவ்விஷயத்தை லபிக்கைக்கு ருசியே அமையுமென்கை. "கண்ணே உன்னைக்காணக்கருதி" என்றார் கீழே; "கருத்தே உன்னைக்காணக்கருதி" என்றார் இங்கே. [என்நெஞ்சத்திருத்தாக விருத்தினேன்] - "மறுகல்செய்யும்" என்கிற நெஞ்சிலே பரமபதத்திலிருக்குமாபோலே யிருத்தினேன். ஐஶவத்கயாமங்யாஹ்ருத

மான நெஞ்சிலேறயிது. [தேவர்கட்கெல்லாம் விருத்தா] - நித்யஸூரிகளுக்கெல்லாம் நிர்வாஹகனானவனே! தமிழர் கிழவனென்றும் கிழத்தியென்றும் தலைமகனையும் தலைமகளையுஞ் சொல்லுவர்கள். [விளங்கு தீத்யாதி] - மிக்கபுகரையுடைய தேஜஸ்ஸை வடிவாகவுடைத்தாய் ஸர்வோத்க்ருஷ்டமான பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கிற அத்தியனே ! [உன்னையுள்ளும் என்னுள்ள முகந்தே] - சடக்கென முகங்காட்டின உன்னைக் கண்டு கலங்கின என்னெஞ்சம் உகந்தே அநுபவியாநின்றது.

ஈடு.—ஆறும்பாட்டு. காண ஆசைப்பட்டவளவிலே அவன் தம்முடைய திருவுள்ளத்திலேபுகுந்தருள, தம்முடையநெஞ்சு உகந்தநுபவிக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

[கருத்தேயுன்னைக்காணக்கருதி] - எனக்கு மிடுக்கான உன்னைக் காண ஆசைப்பட்டவளவிலே முகங்காட்டினாய் ; இவ்விஷயத்தை லபிக்கைக்கு ருசியேயமையுமென்கை. "கண்ணேயுன்னைக்காணக்கருதி" என்றார் - கீழ்; "கருத்தேயுன்னைக்காணக் கருதி" என்றார்- இங்கே. அநுபபத்தியைக்கொண்டு அர்த்தாபத்தியாலே கல்பித்தல், அநுமானத்தாலே அதீந்த்ரியமென்றறிதல்செய்யும் வஸ்துவை ஸாக்ஷாத்கரிக்கவேணுமென்று மநோரதிக்கிறார். இவர்க்குக் கண்ணுங் கருத்தும் அவனாயிற்று. [என்னெஞ்சத்திருத்தாக விருத்தினேன்] - * மறுகல்செய்தநெஞ்சிலே, * மறுகலிலீசனைப் பரமபதத்திலேயிருக்குமா போலே யிருத்தினேன். "இவர்பக்கல் இசைவுபெற்றிலோம்" என்றிருக்கிறவன் இத்தனை இசைவுபெற்றால் பின்னைத் தள்ளிக்கதவடைத்தாலும் போகானிறே. "யதீஹஸா ஸாக்ஷா

ஆறும்பாட்டு.—கருத்தே இத்யாதி. "என்னெஞ்சத்திருத்தாகவிருத்தினேன் - உன்னையுள்ளுமென்னுள்ளமுகந்து" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - காண ஆசைப்பட்ட இத்யாதி.

கருத்து - மிடுக்கு. "கருதி" என்றது - முகங்காட்டினதுக்கும் உபலக்ஷணமாதல்; "இருத்தாகவிருத்தினேன்" என்றத்தைக்கடாக்ஷித்து - முகங்காட்டினாய் என்கிறாராதல். "ஆசைப்பட்டவளவிலே முகங்காட்டினாய்" என்றத்தால் ஃபலிதம் - இவ்விஷயத்தை இத்யாதி. அஜ்ஞாநஶக்திகளை முன்னிட்டுப் பெறவிருக்கிற எனக்கு, அவனுடைய ஜ்ஞாநஶக்திகளே பேற்றுக்கு பர்யாப்தமென்னுமிடந்தோன்ற அருளிச்செய்கிறார் - கண்ணே இத்யாதி வாக்யத்வயத்வயத்தாலே. 'கருத்தேயுன்னைக்காணக்கருதியென்றாரிங்கே' என்றவநந்தரம், 'இவர்க்குக்கண்ணும் கருத்தும் அவனாயிற்று' என்றந்வயித்துக்கொள்வது. ஜ்ஞாநஶக்திகளிரண்டும் அவனாயிற்றென்றபடி. த்வந்யர்த்தம் - "கண்ணும்கருத்தும் நன்றாயிருக்கவேணும்" என்று லௌகிகவார்த்தை. "உன்னைக்காணக்கருதி" என்கையாலே - ஸாத்யப்ராபனான ஈஶ்வரனைக் காணவாசைப்படுகிறாரென்னுமிடந் தோன்றுகிறதென்கிறார் - அநுபபத்தியை இத்யாதி. அநுபபத்தியைக்கொண்டு அர்த்தாபத்தியாலே கல்பித்தலாவது - மஹீமஹீதராதி ரூபேண வேறொருவரால் செய்யமுடியாத விசித்ரகார்யங்களைக்கண்டு, "இவையெல்லாம் உண்டாக்குகைக்கு யோக்யமான விசித்ரஜ்ஞாநஶக்திகளையுடையானொருவன் கர்த்தாவாகவேணும்" என்று ஓரீஶ்வரனைக் கல்பிக்கை. "த்ருஷ்ட: ஶ்ருதோ வார்த்தோ(அ)ந்யதா நோபபத்யதே இத்யர்த்தகல்பநா - அர்த்தாபத்தி:"

இதி அர்த்தாபத்திலக்ஷணம். அர்த்தாபத்திவாதீ - ப்ரபாகரன். அநுமாநத்தாலே அதீந்த்ரியனென்றறிகையாவது - யுக்தியாலே இந்த்ரியங்களுக்கு அப்பாற்பட்டிருப்பானொருவன் கர்த்தாவாகவேணுமென்றறிகை. மஹீமஹீதராதி நிஷ்டகார்யத்வாநுமாநத்தாலே தந்நிர்மாணாநுகுணவிசித்ரஜ்ஞாநஶக்திகனாய் நிரவயவனான ஈஶ்வரனைக் காரணத்வேந கல்பிக்குமவன் - தார்க்கிகன். "இருத்தாக" என்றதுக்கு - ஸ்த்தாவரமாகவென்று விவக்ஷித்தர்த்தம் - மறுகல் இத்யாதி. ஸர்வாதிகன் பரமபதத்திலிருக்குமாபோலே இவர்திருவுள்ளத்திலேயிருக்கக் கூடுமோவென்ன - இவர்பக்கல் இத்யாதி. ஸர்வாதிகன் இப்படி ஸாலஹனான இடமுண்டோவென்ன - யதீஹ இத்யாதி. "யதீஹஸ

நேகாஸ்த்வயாஸார்த்தமநிந்திதே", "இஹவத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேந பக்ஷிணா" (யதீஹஸரதோநேகாஸ்த்வயாஸார்த்தமநிந்திதே", "இஹ வத்ஸ்யாமிஸௌமித்ரேஸார்த்தமேதேநபக்ஷிணு) — ஐயர் கண்வட்டத்திலே வர்த்திக்கவேணுமென்று நினைத்திருந்தோம்; நடுவிலாய்ச்சிக்கு ப்ரியஞ்செய்யவேண்டுகையாலே அதுசெய்யப்பெற்றிலோம்; இனி, இவர் சிறகின்கீழேயாகிலும் வர்த்திக்கப்பாராநின்றோமென்றாரிறே அன்றிக்கே, [இருந்தாக]-மித்ரபாவமேகிடீர் என்பக்கலுள்ளதென்னுதல். [தேவர்கட்கெல்லாம் விருத்தா] - "இனியவ்வருகில்லை" என்னும்படி உயர்ந்தவர்களுக்கும் அவ்வருகானவனே! தலைமகனையும் தலைமகளையும் "கிழவனும்கிழத்தியும்" என்று தமிழர் சொல்லக்கடவர்களிறே. அவளையும் "மலர்க்கிழத்தி" என்றார்களிறே. [விளங்கும் இத்யாதி] - **"அதயதத: பரோதிவோஜ்யோதிர்த்தீப்யதே"** (அதயததஃபரோதிவோ ஜ்யோதிர்த்தீப்யதே) என்கிறபடியே, எப்போதுமொக்க விளங்காநிற்பதாய், நிரவதிகதேஜோரூபமாயிருக்கிற பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கிற அத்விதீயனே! ப்ரகாரத்திலேயிறே நாநாத்வமுள்ளது; ப்ரகாரி ஒருவனேயிறே. [உன்னையித்யாதி] - சடக்கென முகங்காட்டின உன்னை, கண்டு கலங்கின என்னெஞ்சம் உகந்தேயநுபவியாநின்றது. "தேவர்கட்கெல்லாம்விருத்தா, விளங்குஞ் சுடர்ச்சோதி உயரத்தோருத்தா" - என்று சொல்லுகிற இவ்விசேஷணங்களுக்குக் கருத்து-மேலானார்க்கும்மேலாய்ப்பரமபதத்திலே யெழுந்தருளியிருந்து அவர்களை யநுபவிக்குமாபோலே தன்னை யநுபவிப்பிக்க அநுபவித்த என்னெஞ்சம் ப்ரீதமாகாநின்றதென்கை.

ஏழாம் பாட்டு.

உகந்தேஉன்னை உள்ளும் என்னுள்ளத்துஅகம்பால்
அகந்தானமர்ந்தே இடங்கொண்டஅமலா!
மிகுந்தானவன்மார்வகலம் இருகூறு
நகந்தாய் நரசிங்கமதாயவுருவே.

"ரகோத்தநேகாஸ்த்வயாஸார்த்தமநிந்திதே। அக்ஷிணோவத்ஸ்யாமி நசோசோகஸ்ஸ்ரோபேக்ஷ்யதி" இதி சித்ரகூடே விதாம் ப்ரதிராமஃ. "இஹவத்ஸ்யாமி இஹவத்ஸ்யாமி இஹவத்ஸ்யாமிஸௌமித்ரே। இஹவத்ஸ்யாமிஸௌமித்ரேஸார்த்தமேதேநபக்ஷிணா" இதி பஞ்சவட்யாம் ராமஃ. அண்டஜேநவென்னுதே, "பக்ஷிணு" என்றதுக்குபாவம் - ஐயர் இத்யாதி. "இருந்தாக" என்றதுக்கு - இருக்கவேணுமென்கிற நினைவுமாத்ரத்தாலேயென்றர்த்தாந்தரம் - மித்ரபாவமே இத்யாதி. விருத்தா - வ்ருத்தா என்றபடி. "விருத்தன்" என்று - ப்ராஹ்மணனைச் சொல்லுமோவென்ன - தலைமகனையும் இத்யாதி. தலைமகளை "கிழத்தி" என்றவிடமுண்டோவென்ன - அவளையும் இத்யாதி. கிழத்தி - கிழவி. "பூதலக்கிழத்தி" என்னவும் கடவதிறே. "அதயததஃபரஃ" இத்யாதி சாந்தோக்யே. "அதஃ திவஃ பரஃ யஜ்ஜ்யோதிர்த்தீப்யதே" என்றந்வயம். பரஃ - பரஸ்தாத் என்றபடி. இந்த்ரப்ரஹ்மலோகாதிகளுக்கெல்லாம் மேலாயிருக்கிற வைகுண்டரூபமான யாதொருஜ்யோதிஸ்ஸு விளங்காநின்றது என்று இந்தஶ்ருதிக்கு இங்கிப்படி அர்த்தம் விவக்ஷிதம். பாஷ்யத்திலே, ஜ்யோதிஶ்ஶப்தநிர்த்திஷ்டம் - பரம்ப்ரஹ்மமென்றர்த்தம். "விளங்கும்" என்றவர்த்தமாநார்த்தம் - எப்போதுமொக்க என்றது. "சுடர்ச்சோதி" என்று-மீமிசைச்சொல்லாய், நிரவதிகதேஜோரூபமாய் என்கிறது ஒருவனேயுள்ளது நித்யஸூரிகளில்லையோவென்ன - ப்ரகாரத்திலே இத்யாதி. 'என்னுள்ளம் - உன்னை - உகந்தே - உள்ளும்' என்றந்வயம். (க)

ஆ.—(உகந்தே.) - என்னுள்ளேபுகுந்தருளின உன் அழகையும் செயலையும் என்னெஞ்சு உகந்துகொண்டு அநுஸந்திக்க, இதுகாரணமாக நீ மிகவும் ப்ரீதனாய், உன்னைக்காணப்பெறுமையாலே கலங்கின என்னெஞ்சு தெளியும்படி என்னெஞ்சை எற்றைக்கும் இடமாகக் கொண்டருளினாய்! என்கிறார்.

ஒ.—ஏழாம் பாட்டில், ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய ஆர்த்தியைத் தீர்த்தருளினாற்போலே தம்முடைய ஆர்த்தியை எம்பெருமான் தீர்த்தருளினபடியை அநுஸந்தித்து ப்ரீதராய் அவனை ஏத்துகிறார்.

[உகந்தேயென்று தொடங்கி] - ப்ரீதியோடே உன்னை அநுபவியாநின்றுள்ள ஹ்ருதயத்தினுடைய உள்ளுக்குள்ளே நிர்மலனாய்வைத்து நிர்ஹேதுகமாக அத்யபிநிவேசத்தைப்பண்ணி வர்த்தித்தருளுகிறவனே! [மிகுந்தானவனென்று தொடங்கி] - கிளர்ந்திருந்துள்ள ஹிரண்யனுடைய அகன்றமார்வை இருகூறும்படி பண்ணவல்ல நகத்தையுடையையுமாய், ஆர்த்தருடைய ஆர்த்தியைத் தீர்க்கும் நரஸிம்ஹரூபியானவனே! நகத்தாயை-நகந்தாயென்று மெல்கிக் கிடக்கிறது.

ப.—அநந்தரம், ஹ்ருத்யனாய்க்கொண்டு என்னெஞ்சிலேயிருந்து விரோதிநிரஸந சீலனான உன்னை என்னகவாய் உகந்தநுபவியாநின்றதென்கிறார்.

அகந்தான் - அகவாயிலே, அமர்ந்து - பொருந்தி, இடங்கொண்ட - இடங்கொண்டு (அதுதானே ப்ரயோஜநமாக)இருந்த, அமலா-உஜ்ஜ்வலஸ்வபாவனாய், (ப்ரபலமான துர்மாநத்தை யழித்திருந்தமைக்கு ஸூசகமென்னலாம்படி), மிகும் - வரபலபுஜபலங்களாலேமிக்க, தானவன் - அஸுரனான ஹிரண்யனுடைய, மார்வு - மார்பத்திலே, அகலம் - பெரியவிடத்தை, † இருகூறு - இருகூறும்படியாக, நகம் - நகத்தை, தாய் - தாவும்படிபண்ணின, நரசிங்கமதாய - நரஸிம்ஹமான, உருவே - ரூபத்தையுடையவனே! என் உள்ளத்து-என் உள்ளத்தின், அகம்பால் - அகவாயானது, உன்னை உகந்தே-, உள்ளும் - அநுபவியாநின்றது.

இ—ஏழாம்பாட்டில், தூணிலேதோற்றி ப்ரஹ்லாதனுடைய ஆர்த்தியைத் தீர்த்தாற்போலே தம்மார்த்தியைத் தீர்த்தருளினபடியை அநுஸந்தித்து ஏத்துகிறார்.

[உகந்தே உன்னை உள்ளும்] - பிரிந்துக்லேஶத்தோடே தலைக்கட்டும் உகப்பன்றிக்கே ஏகரூபமாக உன்னை அநுபவிக்கும்படி. [என்னுள்ளத்து]-எண்ணே கொண்ட சிந்தை என்கிற மநஸ்ஸிலே. [அகம்பாலகந்தான்]-உள்ளுக்குள்ளே. "உள்ளுளாவி" என்னுமாபோலே கமர்பிளந்தவிடமெங்கும் மறுநனையும்படி. [அமர்ந்தே] - தன்பேறாக அத்யபிநிவேசத்தைப்பண்ணி. [இடங்கொண்ட] - அவகாசமுள்ளவிடமெங்குந் தானேயாம்படி நிறைந்த. [அமலா] - இவ்விருப்புக்கு அவ்வருகு ஒரு ப்ரயோஜநத்தைக் கணிசித்தன்றிக்கே ஒருஹேதுவைப் பற்றியுமன்றிக்கேயிருக்கை. "எண்ணே கொண்ட சிந்தையதாய் நின்றியம்பும்" என்கிறத்தை ஸாபேக்ஷமாக நினைத்திருக்கிறிலர். [மிகுந்தானவன்] - ப்ராதிகூல்யத்தில் ஓரளவில்நில்லாதவன். தன்னை யில்லைசெய்கையன்றிக்கே தன்னுயிர்நிலையிலே நலிந்தவன்: "ஜ்ஞாநீத்வாத்மைவ"என்னக்கடவதிறே. [மார்வகலமிருகூறு நகந்தாய்] - அகன்றமார்வானது இரண்டுகூறும்படி பண்ணவல்ல நகத்தையுடையவனே! நகத்தாயென்ற வல்லொற்றை மெல்லொற்றாக்கிக் கிடக்கிறது. [நரசிங்கமதாயவுருவே] - ஸதைகரூபமான வடிவை உடையவன் தன்னை இங்ஙனே யழிய மாறுவதே!

என்கிறார். இத்தால் - என்னெஞ்சு உகக்கும்படி தூணிலேவந்து தோற்றினாற்போலே சடக்கென முகங்காட்டி என்னை அநுபவிப்பித்தானென்கிறார்.

ஈடு —ஏழாம்பாட்டு. தூணிலேதோற்றி ப்ரஹ்லாதனுடைய ஆர்த்தியைத்தீர்த்தாற்போலே தம் ஆர்த்தியைத் தீர்த்தபடியை யநுஸந்தித்து ஏத்துகிறார்.

[உகந்தேஉன்னைஉள்ளும்] - பிரிந்து க்லேசத்தோடே தலைக்கட்டும் உகப்பன்றிக்கே, ஏகரூபமாக உன்னையநுபவிக்கும்படி. [என்னுள்ளத்து] - * எண்ணே கொண்ட சிந்தையுடைத்தான என்உள்ளத்து. [அகம்பால்அகந்தான்]- உள்ளுக்கும் உள்ளே. "உள்ளுளாவி" என்னும்படியே கமர்பிளந்த விடமெங்கும் மறுநனையும்படி. [அமர்ந்தே] - தன்பேறாக அத்யபிநிவேசத்தைப்பண்ணி. [இடங்கொண்ட] - அவகாசமுள்ள இடமெங்கும் தானேயாம்படி நிறைந்த. [அமலா] - இவ்விருப்புக்குஅவ்வருகு ஒருப்ரயோஜநத்தைக்கணிசித்தன்றிக்கே,ஒருஹேதுவைப்பற்றியும் அன்றியேயிருக்கை "எண்ணேகொண்ட சிந்தையதாய்" என்றத்தை ஸாதநமாக நினைத்திருக்கிறிலர். [மிகுந்தானவன்] - ப்ராதிகூல்யத்தில்ஓரளவில் நில்லாத ஊநவன். தன்னை யில்லைசெய்கையன்றிக்கே, தன்னுயிர்நிலையிலே நலிந்தவன்; "ஜ்ஞாநீத்வாத்மைவ" (ஜ்ஞாநீத்வாத்மைவ) என்னக்கடவதிறே. [மார்வகலமிருகூறாநகந்தாய்] - அகன்றமார்வானது இரண்டு கூறும்படி பண்ணவல்ல நகத்தையுடையவனே! நகத்தாயேன்கிற வல்லொற்றை மெல்லொற்றாக்கிக்கிடக்கிறது. [நரசிங்கமதாயவுருவே] - "ஸதைகரூபரூபாய" (ஸதைகரூபரூபாய) என்கிற விக்ரஹத்தையே இப்படிகொள்வது ! இரண்டவடிவைக்கொள்வதே! இத்தால்சொல்லிற்றாயிற்றென்னென்னில்; - ஆஶ்ரிதருடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலேவந்து தோற்றுமவனாகையாலே, தூணிலேதோற்றினாற்போலேவந்துதோற்றி, ஹ்ருதயாவகாசமுள்ளவிடமெங்கும் புகுந்து, கமர்பிளந்தவிடமெங்கும் நீர்பாய்ச்சுமாபோலே, நிரம்ப என்னையநுபவிப்பித்தானேன்கிறார். (எ)

ஏழாம்பாட்டு.—உகந்தே இத்யாதி. "இருகூறாநகந்தாய் நரசிங்கமதாயவுருவே" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - தூணிலே இத்யாதி.

ஏவகாரார்த்தம் - பிரிந்து இத்யாதி. விவரணம் - உள்ளுளாவி இத்யாதி. "அமலா" என்றதுக்குபாவம் - இவ்விருப்புக்கு இத்யாதி. ஸ்வயம்ப்ரயோஜநமாகவும், நிர்ஹேதுகமாகவுமிருக்கை அமலத்வமாவது என்றபடி. "ஒருஹேதுவைப்பற்றியன்றிக்கே" என்கிறதென்? "எண்ணேகொண்டசிந்தையதாய்" என்றது ஸாதநமன்றோ? என்ன - எண்ணேகொண்ட இத்யாதி. 'மிகுதி' எத்தாலேயென்ன - ப்ராதிகூல்யத்தில் இத்யாதி. ஏதத்விவரணம் - தன்னை இத்யாதி. தானவன் - ஊநவன், ப்ரஹ்லாத னுயிர்நிலையோவென்ன - ஜ்ஞாநீது இத்யாதி. "உதாராஸ்ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்" இதிகீதாயாம்(எ-கஅ). நகத்தாயென்றாலன்றோ, நகத்தையுடையவனென்னக் காட்டுமென்ன - நகத்தாயேன்கிற இத்யாதி. ஹார்த்தபாவம் - ஸதைகரூப இத்யாதி. "ஸதைகரூபரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே" இதிஸ்ரீவிஷ்ணுபுராணே. "நரசிங்கம்" என்றதுக்குபாவம்-இரண்டு இத்யாதி. பாட்டால்ஃபலித்தபாவம் - இத்தால் இத்யாதி. இத்தால் என்றது - இப்பாட்டாலென்றபடி. 'மிகுந்தானவன்' என்று தொடங்கி; 'உருவே - உகந்தேயுன்னையுள்ளும்படி யென்னுள்ளத்தகம்பால்' என்று தொடங்கி, 'ஏத்துகிறார்' இத்யந்வய: (எ)

எட்டாம் பாட்டு.

உருவாகியஆறுசமயங்கட்கெல்லாம்
பொருவாகிநின்றானவன்எல்லாப்பொருட்கும்
அருவாகியஆதியைத்தேவர்கட்கெல்லாம்
கருவாகியகண்ணனைக்கண்டுகொண்டேனே.

ஆ.—(உருவாகிய.)-வேதபாஹ்யமான ஷட்ஸமயங்களில் நான் புகாதபடி பரிஹரித்து, ஸர்வாத்மபூதனான தன்னை எனக்குக்காட்டியருளினவனை நான் காணவும் பெற்றேனென்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், எம்பெருமானைக் காணப்பெற்றேனென்று இனியராகிறார்.

[உருவாகியவென்று தொடங்கி] - ஆபாத ப்ரதீதியில் "இவையும் சில தர்சநமோ" என்று தோற்றுகிற பாஹ்யமான ஷட்ஸமயங்களாலும் அவிசால்யமான படியையுடையனாய் ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய் ப்ரயோஜநனுமானவனை. [தேவர்கட்கென்று தொடங்கி] - ப்ரஹ்மாதிகளுக்குங்கூட காரணபூதனானவனை.

ப.—அநந்தரம், ஸர்வாந்தராத்மாவாய், ஸர்வகாரணபூதனாய், ஸர்வஸுலபனான உன்னைக் காணப்பெற்றேனென்கிறார்.

உருவாகிய - ஆபாதப்ரதீதியிலொன்றுபோலே யிருக்கக்கடவதான, ஆறுசமயங்கட்கெல்லாம - சார்வாக பௌத்த க்ஷபண வைசேஷிக ஸாங்க்ய பாசுபதரூபமான பாஹ்யஸமயங்களாறுக்கும், பொருவாகி - "அறுவகைச்சமயமு மறிவருநிலையினை" என்கிறபடியே ப்ரதிபடனாய்க்கொண்டு, நின்றானவன் - அப்ரகம்ப்பனாயிருக்குமவனாய், எல்லாப்பொருட்கும் - ஸமஸ்தபதார்த்தங்களுக்கும், அருவாகிய - அந்தராத்மாவாய்க்கொண்டு, ஆதியை - ப்ரயோஜநனாய், தேவர்கட்கெல்லாம் - ப்ரஹ்மாதிதேவர்களுக்கடங்க, கருவாகிய - காரணபூதனாய், கண்ணனை - ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக க்ருஷ்ணனாய்அவதரித்தவனை, கண்டுகொண்டேன் - கண்டநுபவிக்கப்பெற்றேன். பொரு - எதிர்.

இ.—எட்டாம்பாட்டில், கிருஷ்ணனானவனைக் காணப்பெற்றேனென்று இனியராகிறார்.

[உருவாகியவாறு சமயங்கட்கெல்லாம்] - விஹிதாநுஷ்டாநங்களும் நிஷித்தபரிஹாரங்களுமாக உபதேசிப்பாரும் கேட்பாருமாய்ப் போருகையாலே, ஆபாதப்ரதீதியி லொன்று போலேயிருக்கிற பாஹ்ய ஸமயங்களுக்கெல்லாம் அவிசால்யமானபடியையுடையனாய் நின்றான். [பொருவென்று] - தடை. அவற்றால் மேலிடவொண்ணாதபடி நிற்கை. [எல்லாப்பொருட்கும் அருவாகிய வாதியை]-ஸகல பதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய் நியாமகத்வத்தாலே ப்ரயோஜநனுமானவனை [தேவர்கட் கெல்லாம் கருவாகிய]- ப்ரஹ்மாதிகளுக்குங்கூட காரணபூதனானவனை.[கண்ணனை]-கார்யங்களிலேஒன்றுக்குத்தான் கார்யமானவனை.[கண்டுகொண்டேனே]-அவதாரத்துக்குப்பிற்பாடராயிருக்க, கண்டுகொண்டேனே என்கிறாரிறே; ப்ரேமார்த்ரசித்தர்க்கென்றுங் காணலாம்; அவதார ஸமகாலத்திலுங் காணவொண்ணாது சிசுபாலாதிகளுக்கு. பாஹ்யஸமயங்களால் அவி

சால்யனுப்ஸர்வாந்தராத்மாவாய்க்கொண்டுஸர்வநியந்தாவாய் ப்ரஹ்மாதிகளுக்குமுத்பாதகனுயிருந்துவைத்து ஆஸ்ரிதர்க்கு ஸுலபனுயிருக்கிறவனைக் காணப்பெற்றேனென்கிறார்.

எ௫.—எட்டாம்பாட்டு. ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய் ப்ரஹ்மாதிகளுக்குக் காரணபூதனுனவனைக் காணப்பெற்றேனென்று இனியராகிறார்.

[உருவாகிய வாறுசமயங்கட்கெல்லாம்] - ஆபாதப்ரதீதியில் ஒன்று போலேயிருக்க, சிலவற்றைவிதிப்பது, சிலவற்றைநிஷேதிப்பது, நிஷ்கர்ஷ்டாகாரத்தைச் சொல்லுவதாய்க்கொண்டு உபதேசிப்பாரும் கேட்பாருமாய்ப்போருகிற பாஹ்யஸமயங்களெல்லாவற்றாலும். [பொருவாகிநின்றானவன்] - பொருவென்று தடை. அவற்றால் தன்னை இல்லைசெய்யவொண்ணாதபடி அப்ரதிஹதனாய் நின்றான். [எல்லாப்பொருட்கும் அருவாகியவாதியை] - ஸகலபதார்த்தங்களுக்கும் அந்தராத்மாவாய், நியாமகத்வத்தாலே ப்ரதாநனுமானவனை. [தேவர்கட்கெல்லாம்கருவாகிய] - ப்ரஹ்மாதிதேவர்களுக்கெல்லாம் காரணபூதனாயுள்ளவனை. [கண்ணனை] - கார்யங்களிலே யொன்றுக்குத் தான் கார்யமானவனை. [கண்டுகொண்டேனே] - அவதாரத்துக்குப் பிற்பாடராயிருக்க, 'கண்டுகொண்டேன்' என்கிறாரிறே; ப்ரேமார்த்ரசித்தர்க்கென்றுங்காணலாம்: அவதாரஸமகாலத்திலுங்காணவொண்ணாது சிசுபாலாதிகளுக்கு. பாஹ்யஸமயங்களால் அவிசால்யனாய், ஸர்வாந்தராத்மாவாய்க்கொண்டு ஸர்வநியந்தாவாய், ப்ரஹ்மாதிகளுக்கும் உத்பாதகனாயிருந்துவைத்து, ஆஸ்ரிதஸுலபனானவனைக் காணப்பெற்றேனென்கிறார். (அ)

ஒன்பதாம் பாட்டு.

கண்டுகொண்டு என்கண்ணிணையாரக்களித்து
பண்டைவினையாயின பற்றோடறுத்து
தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள்சொன்னேன்
அண்டத்தமரர்பெருமான்அடியேனே.

ஆ.—(கண்டுகொண்டு) - இப்படி கண்ணாரக்கண்டுகொண்டு அவனை வத்தவும் பெற்றேனென்கிறார்.

எட்டாம்பாட்டு.—உருவாகிய இத்யாதி. "எல்லாப்பொருட்கும்அருவாகிய - தேவர்கட்கெல்லாம் கருவாகியகண்ணனைக்கண்டுகொண்டேன்" என்ற பதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - ஸகலபதார்த்தங்களுக்கும் இத்யாதி.

"உருவாகிய வாறுசமயங்கட்கெல்லாம்" - அழகியதாயிருக்கிற ஆறுஸமயங்களெல்லாவற்றுக்குமென்று ஸப்தார்த்தம். அபார்த்தங்களைச்சொல்லுகிற ஸமயங்களுக்கு அழகேதென்ன - ஆபாத இத்யாதி. உருவாகிய - ஆபாதப்ரதீதியிலொன்றுபோலே யிருக்கிற என்றபடி ஸப்தார்த்தமாகவுமாம். பொருவாகிநின்றான் - தடையாய்நின்றான்; ப்ரதிபடனென்றபடி. "தடை" என்றத்தால்பாவம் - அவற்றால் இத்யாதி. அப்ரதிஹதனாய் நிற்கைபாவது - த்ருஷ்டப்ரமாணபலித்தனாய் நிற்கை. மேலே "கருவாகிய" என்று - காரணத்வஞ்சொல்லுகையாலே, "ஆதியை" என்று - ப்ரதாநனைச்சொல்லுகிறது. கருவென்று - கர்ப்பமாய், அத்தாலே காரணத்வஞ்சொல்லுகிறது. காரணத்வமேயாகில் ஸௌலப்யமில்லையோவென்ன - கார்யங்களிலே இத்யாதி. ஒன்றுக்கு - வசுதேவர்க்கு. 'கண்டுகொண்டேனென்கிறாரிறே' என்றவநந்தரம், இதுக்குக்கருத்தென்னென்னில்?—என்றுகூட்டுவது. பாட்டை நிகமிக்கிறார் - பாஹ்ய இத்யாதி. (அ)

ஒ.— ஒன்பதாம்பாட்டில், தன்னை அநுபவிக்கவும்பெற்று ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யமாம்படி திருவாய்மொழி பாடவும் பெற்றேனென்று ப்ரீதராகிறார்.

[கண்டுகொண்டேனென்று தொடங்கி] - என்னுடைய ஸகலஇந்த்ரியங்களும் க்ருதார்த்தமாம்படி கண்டுகொண்டு. நானும் களித்துக் காண்பதுக்கு முன்புபட்ட து:க்கத்தை நிஶ்ஶேஷமாகப்போக்கி. [அண்டத்தென்று தொடங்கி] - நான் ஸர்வேஶ்வரனாலே விஷயீக்ருதனானேன்.

ப.—அநந்தரம், என்னுடைய ஸ்வரூபாநுரூபமாகக் கண்டநுபவித்து விரோதியுங்கழிந்து, ப்ராப்யபூதனானவன் விஷயத்திலே ஸாதவதர்க்கு போக்யமாம்படி வாசிககிஞ்சித்காரம் பண்ணப்பெற்றேனென்கிறார்.

(ஜ்ஞாநப்ரமாத்மகமான), என்கண் - என்கண்கள், இணை - இரண்டும், ஆர - வயிறு நிறையும்படி, கண்டுகொண்டு களித்து -, (இந்த ஸ்வரூபஜ்ஞாநமடியாக), பண்டை - அநாதிஸித்தமான, வினை ஆயின - அஹங்காரமமகாராதி ஸமஸ்தவிரோதிகளையும், பற்றோடு - ஸவாஸநமாக, அறுத்து - போக்கி, அண்டத்து - பரமபதத்திலே, அமரர் பெருமான் - * அயர்வறுமமரர்களதிபதியான ப்ராப்யபூதனுக்கு, அடியேன் - (நித்ய கிங்கரனான) நான், தொண்டர்க்கு - அவனடியார்க்கு, அமுதுண்ண - உகந்தநுபவிக்கலாம்படி, சொல்மாலைகள் - ஶப்தஸந்தர்ப்பரூபமான வாசிக கைங்கர்யத்தை, சொன்னேன் - பண்ணினேன். இப்பாட்டில் - மந்த்ரத்தில் ப்ரதமபதார்த்தமான ஸ்வரூப ஜ்ஞாநத்தையும், மத்யமபதார்த்தமான விரோதிநிவ்ருத்தியையும், சரமபதார்த்தமான கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையும், கைங்கர்யவ்ருத்திவிஶேஷத்தையும், மந்த்ர தாத்பர்யமான ததீயஶேஷத்வத்தையுஞ் சொல்லிற்றாயிற்று.

இ.—ஒன்பதாம்பாட்டில், தன்னை யநுபவிக்கப்பெற்று அதுக்குமேலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யமாம்படி திருவாய்மொழி பாடவும் பெற்றேனென்கிறார்.

[கண்டுகொண்டு] - “நான் அழைப்பனே” என்ற விடாய் எல்லாங்கெடக் காணப்பெற்று. [என் கண்ணிணையார] - “காணக்கருதும் என்கண்ணே” என்கிற கண்களின் விடாய்கெட. [கண்ணிணையார - கண்டுகொண்டு] - கலியர் “வயிறு நிரம்பவுண்டேன்” என்னுமாபோலே களித்து-மறுகினநெஞ்சு களிக்கும்படி. [பண்டையித்யாதி] - இவ்வுகப்புக்கு இடைச்சுவரான ப்ராக்தந கர்மங்களானவற்றை ஸ்வாஸநமாகப்போக்கி, காண்பதற்கு முன்புள்ள து:க்கத்தை ஸவாஸநமாகப்போக்கி. [தொண்டர்க்கு இத்யாதி] - என்னளவன்றிக்கே, வைஷ்ணவர்களுக்கும் உபகாரகனாகப்பெற்றேன். இப்பேறு என்னால் வந்ததாகமாட்டாது; நான் ஸர்வேஶ்வரனாலே விஷயீக்ருதனானேன்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. தன்னையநுபவிக்கப்பெற்று, அதுக்குமேலே, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யமாம்படி திருவாய்மொழி பாடவும்பெற்றேனென்கிறார்.

[கண்டுகொண்டு] - “நான் அழைப்பன்” என்ற விடாயெல்லாங்கெடக் காணப்பெற்று. [என்கண்ணிணையார] - “காணக்கருதுமென்கண்ணே” என்ற கண்

ஒன்பதாம்பாட்டு.—கண்டுகொண்டு இத்யாதி. “கண்டுகொண்டென்கண்ணிணையாரக் களித்து - தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்சொன்னேன்” என்ற பதங்களைக் கடாக்ஷித் தவதாரிகை - தன்னை இத்யாதி.

கண்டென்றதே, “கண்டுகொண்டு” என்றதுக்குவாஸநை - நான்அழைப்பன் இத்யாதி. “ஆர” என்றதுக்கர்த்தம் - கலியர் இத்யாதி. கலியர் - பசியர். ஆர - பூர்ணமாக,

கள் விடாய்கெட. [கண்ணிணையார - கண்டுகொண்டு] - கலியர் ''வயிறாரவுண்டு'' என்னுமாபோலே. [களித்து] - மறுகின நெஞ்சு களித்து. [பண்டைவினையாயின பற்றோடறுத்து] - இவ்வுகப்புக்கு இடைச்சுவரான ப்ராக்தநகர்மங்களை ஸவாஸநமாகப்போக்கி. [தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்] - என்னளவும் அன்றிக்கே, வைஷ்ணவர்களுக்கும் உபகாரகனுகப்பெற்றேன். ''நானுமுண்டு என்பரிகரமும் ஜீவித்து, என்பந்துக்களுக்கும் விருந்திடவல்லேனானேன்'' என்பாரைப்போலே. [சொல்மாலைகள்சொன்னேன்] - ததீயஶேஷத்த்வபர்யந்தமான பேற்றைப் பெற்றேன். பெற்ற பேற்றின் கனமிருந்தபடியாலே, இது தான்றோன்றியான கைப்பற்றடியாகவந்ததொன்றல்ல. [அண்டத்தமரர்பெருமானடியேனே] - ஸர்வேஶ்வரனாலே விஷயீக்ருதனானேன்.

பத்தாம் பாட்டு.

அடியானிவனென்று எனக்காரருள்செய்யும்
நெடியானை நிறைபுகழ்அஞ்சிறைப்புள்ளின்
கொடியானைக் குன்றாமலுலகமளந்த
அடியானையடைந்து அடியேன்உய்ந்தவாறே !

ஆ.—(அடியானிவன்.) - பெரியதிருவடி தன்திருவடிகளிற்செய்யும் வ்ருத்திகளெல்லாவற்றையும் என்னையிட்டு நிர்ஹேதுகமாகச் செய்வித்துக் கொண்டருளின ஒருவனையாஶ்ரயித்து நானுய்யும்படியே! என்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், *எம்பெருமானைப் பெற்று க்ருதார்த்தனானேன் என்கிறார்.*

[அடியான் இவனென்று தொடங்கி] - அடியான் என்றஒரு வ்யாஜத்தாலே நிர்ஹேதுகமாகத் தன்னளவிலே எனக்கு ப்ரஸாதத்தைப் பண்ணும் ஸர்வேஶ்வரனை. [நிறைபுகழென்று மேலுக்கு]-ஸௌர்யவீர்யாதிகுண ப்ரதையையுடைய பெரியதிருவடியைத் தன்னுடைய நிர்ஹேதுகரக்ஷணத்துக்குக் கொடியாக எடுப்பதுஞ்செய்து குணாகுண நிரூபணம்பண்ணாதே ஜகத்தையெல்லாம் அந்தரப்படாதபடி அளந்துகொண்டு ரக்ஷிக்கும் ஸ்வபாவனானவனைப்பெற்று நான் க்ருதார்த்தனானபடியென்? பெரியதிருவடியை விஷயீகரித்தாற்போலே என்னை விஷயீகரித்தது என்பக்கல் என்ன நன்மை கண்டென்னில்?— திருவுலகளந்தருளினாற்போலே நிர்ஹேதுகமாக என்றுமாம்.

பண்டை - *ப்ராக்தநமான.* பற்றோடு - *வாஸனையோடு.* இடைச்சுவர் - *ப்ரதிபந்தகம்.* நானுமுண்டு என்றது - *''கண்டுகொண்டு'' என்றத்தைப்பற்ற. ''என்கண்ணிணையாரக்களித்து'' என்றத்தைப்பற்ற* - என்பரிகரமும் *இத்யாதி. ''தொண்டர்க்கமுதுண்ண'' என்றத்தைப்பற்ற* - என்பந்துக்களுக்கும் *இத்யாதி. ஹவிதார்த்தம் -* ததீயஶேஷத்வ *இத்யாதி. அதாவது - வாசிக கைங்கர்யம் பண்ணப் பெற்றேனென்று கருத்து. மேலுக்கவதாரிகை -* பெற்றபேற்றின் *இத்யாதி.* தான்றோன்றியான கைப்பற்று - *ஸ்வயத்நமூலமான ஸாதநம். 'அண்டத்தமரர்பெருமானடியேன் - களிக்கும்படி - என்கண்ணிணையார - கண்டுகொண்டு - பண்டை' என்றுதொடங்கி, 'சொல்மாலைகள்சொன்னேன்'* இத்யந்வய:. (கு)

ப.—அநந்தரம், இந்த அநுபவத்துக்கடியான நிருபாதிகஸம்பந்தத்தை யுடையவனைக் கிட்டி நான் உஜ்ஜீவித்த ப்ரகாரமென்? என்று ஹ்ருஷ்டராகிறார்.

இவன் அடியான் - இவன் நமக்கு ஸ்வதஸ்ஸேஷபூதன், என்று - என்று திருவுள்ளத்திலேகொண்டு, எனக்கு ஆர் - எனக்கு பரிபூர்ணமான, அருள் - க்ருபையை, செய்யும் - பண்ணாநிற்கச்செய்தே, நெடியானை - ஒன்றுஞ்செய்யாதபடி மேன்மேலெனப் பாரிப்பையுடைய பெரியவனும், நிறை - இந்தரக்ஷணத்துக்கு அநுரூபமான, புகழ் - ஶீல ஸௌலப்ய ஜ்ஞாநஶக்திப்ரமுவமான ப்ரஜ்ஞையை யுடையனும், அம் - விலக்ஷணமான, சிறை - சிறகையுடைய, புள்ளின் - பெரியதிருவடியை, கொடியானை - ரக்ஷணப்ரஜ்ஞைக்குக் கொடியாகவுடையனும், குன்றாமல் - அந்யாபிமாநமாகிற குறைவுவாராமல், உலகம் - லோகத்தை, அளந்த - அளந்துகொண்ட, அடியானை - நிருபாதிகஸம்பந்த ப்ரகாஶகமான திருவடிகளையுடையவனை, அடைந்து - கிட்டி, அடியேன் - ப்ரகாஶிதமான ஶேஷத்வஸ்வரூபத்தையுடைய நான், உய்ந்தவாறே - உஜ்ஜீவிக்கப்பெற்றபடியே!

இ.—பத்தாம்பாட்டில், இப்படி அவனைப்பெற்று க்ருதார்த்தனானேனென்கிறார்.

[அடியானிவனென்று] - "மேல் பண்ணப்புகுகிற ஔதார்யம் ப்ராப்தம்" என்று தோற்றுகைக்காக "அடியான்" என்றுஒருபேரையிட்டாயிற்று உபகரித்தது. [எனக்காரருள்செய்யும் நெடியானை] - கொள்ளுகிற என்னளவன்றிக்கே தன்னளவிலே உபகரித்த ஸர்வேஶ்வரனை. [நிறைபுகழ்அஞ்சிறைப்புள்ளின் கொடியானை] - ஶௌர்யவீர்யாதி குணப்ரஜ்ஞையையுடையனும் நிரந்தரபகவதநுபவத்தாலே பூர்ணீயனுமான பெரியதிருவடியைக் கொடியாகவுடையவனை; ரக்ஷணத்துக்குக் கொடிகட்டி ரக்ஷிக்குமவனை; பெரியதிருவடியை விஷயீகரித்தாற் போலே என்னை விஷயீகரித்தவன் என்கை. இப்படி விஷயீகரிக்கைக்கு இத்தலையில் என்னநன்மையுண்டென்னில்? - [குன்றாமலித்யாதி] - குணாகுண நிரூபணம்பண்ணாதே திருவுலகளந்தருளினாற் போலே நிர்ஹேதுகமாக என்கிறார். தன்பெருமையையும் ஸௌலப்யத்தையும் என்னை அநுபவிப்பித்தான். [அடைந்தடியேன் உய்ந்தவாறே] - ஶேஷத்வமே ஹேதுவாக உஜ்ஜீவித்தபடியென்? ஶேஷத்வஜ்ஞாநத்துக்கு இத்தனை ப்ரயோஜநமுண்டோ?

ஈடு.—பத்தாம்பாட்டு. இப்படி அவனைப்பெற்று க்ருதார்த்தனானேனென்கிறார்.

[அடியானிவனென்று] - "மேல் பண்ணப்புகுகிற ஔதார்யம் ப்ராப்தம்" என்றுசொல்லுகைக்காக, "அடியான்" என்றுஒருபேரையிட்டாயிற்று உபகரித்தது. [எனக்காரருள்செய்யும்நெடியானை] - கொள்ளுகிறஎன்னளவன்றிக்கே, தன்னளவிலேயுபகரித்த ஸர்வேஶ்வரனை. * அருள்பெறுவார் அடியாரிறே:புத்ரர்களுக்கு அம்மமேயிறே

பத்தாம்பாட்டு.—அடியான் இத்யாதி. "அடைந்தடியேனுய்ந்தவாறே" என்றத்தைப் பற்ற அவதாரிகை - இப்படி இத்யாதி.

அருள்செய்யுமென்னாதே, "அடியானிவன்" என்று விசேஷித்ததுக்குபாவம் - மேல் பண்ண இத்யாதி. அருள்செய்கைக்கு ஹேது "அடியான்" என்கிறஇதுஎன்றபடி. "ஆரருள் செய்யும்" என்றவநந்தரம், "நெடியான்" என்றதுக்கு பாவம் - கொள்ளுகிற இத்யாதி. அடியார்க்கருள்செய்கை ப்ராப்தமோவென்ன - அருள்பெறுவார் இத்யாதி. அருள்பெற ப்ராப்தியுள்ளது புத்ரர்களுக்கன்றோவென்ன - புத்ரர்களுக்கு இத்யாதிவாக்யத்வயம். அடியாரிடத்திலே

யுள்ளது; எல்லாவற்றிலும் கூறுண்டாயிருக்குமிறே யதுபார்த்து. பிள்ளை யகளங்கப்ரஹ்ம ராயர், பட்டரை ஸமாதாநம் பண்ணவேணும் என்று. "இருகைமதவாரணம்" என்கிறவனை வரக்காட்டினராய், "அவனைத் திருவுள்ளத்திலே விஷயீகரித்திருப்பர்" என்னுமத்தைப்பற்ற; அவனும்வந்து சிலவார்த்தைகளை விண்ணப்பஞ்செய்து, திருவுள்ளமும் ப்ரஸந்நமாயிருக்கிறவளவிலே; "இவனுடைய வைஷ்ணவத்வம் நிரூபித்துத் திருவுள்ளம் பற்றியிருக்கையுண்டே" என்றார்களாய்; "சொல்லவேணுமோ, நம்முடையவர்களன்றே" என்றது தொடக்கமாக, இப்பாட்டை யருளிச்செய்தார். [ஆருள்செய்யும்] - பெறுகிற என்னளவிலேயன்றிக்கே, தருகிற தன்னளவிலே தந்தான். தனக்களவுதானென்னேன்ன? - [நேடியானை] - "ஸர்வேஸ்வரன்" என்னுமித்தனை.[நிறையித்பாதி]- இதுதான் நான்இன்றிருந்து உபபாதிக்கவேண்டியிருந்ததோ? கட்டிக்கொண்டிருக்கிற கொடியிலே தெரியாதோ? ஸௌர்யவீர்யாதி குணப்ரதையையுடையனாய் நிரந்தரஸம்வஹநஸவத்தாலே தர்ஸநீயமான வேஷத்தையுடையனா யிருக்கிற பெரிய திருவடியை த்வஜமாகவுடையவனை. பெரியதிருவடியை விஷயீகரித்தாற்போலே என்னை விஷயீகரித்தவனை. இப்படி விஷயீகரிக்கைக்கு இத்தலையில்என்ன நன்மையுண்டேன்னில்? [குன்றுமலுலகமளந்தஅடியானை] - குணாகுணநிரூபணம்பண்ணாதே திருவுலகளந்தருளினாற்போலே, நிர்ஹேதுகமாகவேன்கிறார். ஓரடியுந்தறையாமே பூமிப்பரப்பை யளந்து கோண்ட திருவடிகளையுடையவனை.தன்பேருமையையும், ஸௌலப்யத்தையும் என்னை யநுஸவிப்பித்தான். [அடைந்தடியேன்உய்ந்தவாறே] - ஶேஷத்வமே ஹேதுவாக உஜ்ஜீவித்தபடியேன்? ஶேஷத்வ ஜ்ஞாநத்துக்கு இத்தனை ப்ரயோஜநமுண்டோ? (௧0)

ஈஸ்வராநுக்ரஹம் அதிஶயித்திருக்குமென்னுமதுக்கு ஸம்வாதம் - பிள்ளையகளங்க இத்யாதி. ஆழ்வான் ஸ்ரீபாதத்திலே யாஶ்ரயித்த பிள்ளையகளங்கப்ரஹ்மராயர், பட்டரிடத்திலே அபசாரப்பட, அதுநிமித்தமாகக் கோயிலைவிட்டு பட்டர் திருக்கோட்டியூரிலே யெழுந்தருள, "இருகைமதவாரணம்" என்கிறவனை பட்டர்திருவுள்ளத்திலே விஷயீகரித்திருப்பரென்னுமத்தைப்பற்ற ஸமாதாநம்பண்ணவேணுமென்று அந்தத் † திருவெள்ளைக்காரனை வரக்காட்டினாரென்று சிலவ்யாஹரித்துக்கொண்டு அந்வயித்துக்கொள்வது. இருகைமதவாரணமென்கிறவன் - நம்பெருமாளுக்குப் பரிவனான கைக்கோளன். 'இவனுடைய' இத்யாதிவாக்யம் - நடன்த்ருஹலக்ஷணம். 'சொல்லவேணுமோவித்யாதி'- பட்டர் ஸ்ரீஸூக்தி. "கொள்ளுகிற" இத்யாதிவாக்யவிவரணம் - பெறுகிற இத்யாதி. இதுதான் என்றது - ஸர்வேஸ்வரத்வந்தானென்றபடி. மேலுக்கவதாரிகை - இப்படி இத்யாதி. இப்படி விஷயீகரிக்கைக்கு என்றது - "ஆருள்செய்யும்" என்றத்தைப்பற்ற. தாத்பர்யவித்தார்த்தம் - குணாகுண இத்யாதி. ஶப்தார்த்தம் - ஓரடியும் இத்யாதி. கீழே - "நெடியானை" என்று தொடங்கி "உலகமளந்தவடியானை" என்னுமளவும் - அருளுகைக்கு ஶேஷமாக யோஜித்து, இங்கே - பரத்வஸௌலப்யங்களை யநுஸவிப்பித்தானென்று ப்ரத்யேகமாக்கி ஹாவாந்தரம் - தன்பேருமையையும் இத்யாதி. கீழே "அடியான்" என்று சொல்லியிருக்க, மீளவும் "அடியேன்" என்பானென்னென்ன அருளிச்செய்கிறார் - ஶேஷத்வமே இத்யாதி. "உய்ந்தவாறே!" என்கிற ஸ்வரத்துக்கு அர்த்தமாதல், விவரணமாதல் - ஶேஷத்வ ஜ்ஞாநத்துக்கு இத்யாதி. க்ரமேணாந்வய:. (௧0)

---

† திருவேளைக்காரனை என்றிருக்குமோ? என்று தோன்றுகின்றது.

பதினோராம் பாட்டு.

ஆறுமதயானை யடர்த்தவன்தன்னை
சேறார்வயல்தென் குருகூர்ச்சடகோபன்
நூறேசொன்னஓராயிரத்துள் இப்பத்தும்
ஏறேதரும் வானவர்தம்இன்னுயிர்க்கே.

ஆ.—(ஆறுமதயானை] - ப்ரதிகூலநிரஸநம்பண்ணினாற்போலே என்னுடைய து:கத்தையெல்லாம் போக்கியருளினவனைச் சொன்ன இப்பத்தும், வானவர்தம் இன்னுயிர்க்கேறானவனைத் தரும் என்கிறார்.

ஒ.—நிமமத்தில், இத்திருவாய்மொழி தன்னுடைய ரஸ்யதையாலே அயர்வறுமமரர்களுடைய ஹ்ருதயத்தை நோவுபடுத்துமென்கிறார்.

[ஆறுமதயானையடர்த்தவன்றன்னை]- குவலயாபீடத்தை முறித்தாற்போலே நம்முடைய ஊரிதத்தைப் போக்கினவனை. [சேறார்வயலென்றுமேலுக்கு]-ப்ரதிபக்ஷம் போனவாறே ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வார், ஹாரதாராமாயணாதிகளில் காண்ட பர்வாதிபேதம்போலே தரிப்பார்க்கெளிதாம்படி நூறுநூறாக அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழிலும் இத்திருவாய்மொழி வானவர்தம் இன் உயிர்க்கு ஏறானவனைத் தருமென்றுஞ் சொல்லுவர்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக இதனுடைய நித்யஸூரிபோக்யதையை யருளிச்செய்கிறார்.

ஆறு - ஒருகாலும் மட்டுப்படாத, மதம் - மதத்தையுடைய, யானை - குவலயாபீடமாகிறவானையை, அடர்த்தவன்தன்னை - நிரஸித்தக்ருஷ்ணனைப்பற்ற, சேறு - சேறு, ஆர் - மிக்க, வயல் - வயலையுடைத்தான, தென் - அழகிய, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், நூறே - நூறுநூறாக, சொன்ன ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் - , வானவர்தம் - நித்யஸூரிகளுடைய, இன் - உகந்த, உயிர்க்கு - நெஞ்சிலேசென்று, ஏறேதரும் - ஏறாநிற்கும். வானவர்தம்இன்னுயிர்க்கு ஏறான ஸர்வேஶ்வரனைத்தருமென்றுமாம். இது - கலிவிருத்தம்.

இ.—நிமமத்தில், இத்திருவாய்மொழி தன்போக்யதையாலே நித்யஸூரிகளுடைய ஹ்ருதயத்தை நோவுபடுத்துமென்கிறார்.

[ஆறுமித்யாதி] - ஒருநாளும்மாறாத மதத்தையுடைய குவலயாபீடத்தை நிரஸித்தவனை; அத்தை நிரஸித்தாற்போலே என் விரோதியைப் போக்கினவனை. ப்ரதிபக்ஷம் போனவாறே ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வார். [நூறே சொன்னவாயிரம்] - கிழிகிழியாகக் கொடுப்பாரைப்போலே, நூறுநூறாக அருளிச்செய்தபடி. ஹாரதாராமாயணாதிகளில் காண்டபர்வாதி பேதம்போலே தரிப்பார்க்கெளிதாம்படி செய்தாரென்கை. இத்திருவாய்மொழி நித்யஸூரிகள் ஹ்ருதயத்தைப் புண்படுத்துமென்னுதல்; நித்யஸூரிகளுக்கு ஏறான ஸர்வேஶ்வரனைத் தருமென்னுதல்.

ஈடு.—பதினோராம்பாட்டு. நிகமத்தில், இத்திருவாய்மொழி, தன்போக்யதையாலே நித்யஸூரிகள் ஹ்ருதயத்தை நோவுபடுத்துமென்கிறார்.

[ஆறுமதயானையடர்த்தவன்தன்னை] - ஒருநாளும் மாறாத மதத்தையுடைய குவலயாபீடத்தை நிரஸித்தவனை. அத்தைநிரஸித்தாற்போலே என்விரோதியைப்போக்கினவனை. [சேறார்வயல்] - குவலயாபீடமோதான், திருநகரியில் வயலையுழுவது நடுவேதாகவோட்டாதேகிடந்தது! [நூறேசொன்னவோராயிரம்] — கிழிகிழியாகக்கொடுப்பாரைப் போலே, நூறுநூறாகச்சொன்னபடி. ஸாரதராமாயஜாதிகளில் காண்டபர்வாதிலேடுகட் போலே, யரிப்பார்க்கு எளிதாம்படி செய்தாரென்கை. இத்திருவாய்மொழி நித்யஸூரிகள் ஹ்ருதயத்தைப் புண்படுத்துமென்னுதல்; நித்யஸூரிகளுக்குநாதனான ஸர்வேஶ்வரனைத்தரு மென்னுதல். (கக)

நிகமம்.—ஆறு இத்யாதி. "இப்பத்தும்ஏறேதரும்வானவர்தமின்னுயிர்க்கு" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி. நித்யஸூரிகள் ஹ்ருதயத்தை நோவுபடுத்துகைக்கு ஹேது அருளிச்செய்கிறார் - தன்போக்யதையாலே என்று.

ஆறுகை - மாறுதல். ஸார்த்தபாவம் - அந்தை இத்யாதி. "யானையடர்த்தவன்றன்னைச் சேறார்வயல்" என்ற பதச்சேர்த்திக்கு பாவம் - குவலயாபீடமோதான் இத்யாதி. இது வ்யாக்யாதாவின் ரஸோக்தி. அதாவது - அங்குத்தைக்கு ஒருதிக்குவரில் ஆழ்வாருளராகமாட்டார்; ஆழ்வார்க்கொரு தீங்குவரில் திருநகரியிலுள்ளார் ஸத்தையின்றிக்கே யிருக்கையாலே யவ்வூரில் வயலுழுவாரில்லை; ஆகையாலே, ப்ரதிபக்ஷம்போனவாறே ஸம்ருத்தமான வயலையுடைய திருநகரியென்கை. "நூறு" என்கிறதுக்கு பாவம் - கிழி இத்யாதி. கிழி - கூனிகை. நூறுநூறாகச் சொன்னதுக்கு பாவமேதென்ன - பாரத இத்யாதி. முதல் ஆழிபதத்தாலே - பர்வதமும், இரண்டாம் ஆழிபதத்தாலே - ஸ்கந்தமும் சொல்லுகிறது. "வானவர்தம்இன்னுயிர்க்கு-ஏறேதரும்" என்றந்வயித்தர்த்தம் - இத்திருவாய்மொழி இத்யாதி. "ஏறு" என்று - ப்ரஹாரமாய், ஏடுபாடு. ஒருவனொருவன்கையிலே யடிபட்டால் "அவனேறுண்டான்" என்று லோகத்தார்சொல்லக் கடவர்களிறே. த்விதீயார்த்தத்துக்கு, "ஏறு" என்று - வ்ருஷபமாய், நித்யஸூரிகளுக்கு ப்ரதானனான ஸர்வேஶ்வரனைச் சொல்லுகிறது. "உயிர்" என்று - நெஞ்சு. இன்னுயிர் - உகந்தநெஞ்சு. 'ஆறுமதயானை' இத்யாரப்ய, 'பத்தும் - வானவர்தம் இன்னுயிர்க்கு - ஏறேதரும்' இத்யந்வய:.

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.—ஶ்ரீமாயி: ஶ்ரீயஶோதாஸுதஸுததுஹிதா நாதவ்யாதேஷ்டவஸ்துஸம்ஶ்லிஷ்டக்ருத்பிரார்த்தவிதஸ்ஸ: । ஸம்யக் ஸ்வைகவேத்யஸ்த்வா கடாக்ஷைர்த்ராக்ஷீமஶிகிலஸ்ருஜஸுஷுத்த: ஸ்ரோத்ய: ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—† ஸ்துதிவக்ஷஸ்ஸ்லாவாஸ்வ ஜநஸ்ஸமஸதாவவ்தோஸாரணாஷேத்ய ஸ்வேச்சேஜயதவ்யஸ்தாஷ்வரா ஷேபவிஸவதி தயாநாகிநாம்வ்ருஷஸாவாஸ: । ஸ்வேஷாம்ஸ்ருஜாவிதாயா: ஸ்வஜநவஶதயா தத்ர ஸக்தஸ்ஸந்ந: । ஸ்வஸ்வாதிஸ்வாதிஸ்யூநாஜஹதவதிஸாரிஸ்வேத்யாணீஸ்வரோஸி: ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி }

மையார்கண்மாமார்பில் மன்னும் திருமாலைக்
கையாழிசங்குடனே காணவெண்ணி - மெய்யான
காதலுடன் கூப்பிட்டுக்கண்டுகந்தமாறன்பேர்
ஓதவுய்யுமே இன்னுயிர்.

ஆழ்வார்திருவடிகளே ஶரணம், எம்பெருமானார்திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

---

† ஸ்துஷ்டவக்ஷஸ்ஸ்லாவாஸ என்று இருக்கலாம்.

ஐந்தாந்திருவாய்மொழி--இன்னுயிர் - ப்ரவேசங்கள்.

ஆ.—(இன்னுயிர்ச்சேவலும்) - இப்படி எம்பெருமானை ப்ரத்யக்ஷித்தாற்
போலே திருவுள்ளத்தாலே விசதமாக அநுஸந்தித்து, பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே ப்ர
வ்ருத்தராய், அது கைவாராமையாலே, எம்பெருமானோடே கலந்து பிரிந்தாளொருபிராட்
டியைப்போலே யவஸந்நராய், அவளுடைய பாசுரத்தாலே தம்முடைய வ்யஸநத்தைப்
பேசுகிறார். இப்பிராட்டிதான், எம்பெருமானைப் பிரிந்திருக்கிறஸமயத்திலே சில குயில்க
ளுடைய கூக்குரல்களைக்கேட்டுத் தனியே சிந்திக்கிறாள். எம்பெருமான் "என்னை
முடிக்கவேண்டும்" என்றுகோலி, முடிக்குமிடத்தில் ஸ்வவிஶ்லேஷத்தாலல்லது முடிக்க
வொண்ணாமையாலே, விஶ்லேஷந்தான் ஸம்ஶ்லேஷத்தை யொழியக் கூடாமையாலே,
விஶ்லேஷார்த்தமாக ஸம்ஶ்லேஷித்து, பின்னை விஶ்லேஷிப்பதுஞ் செய்து, " இந்தவிஶ்
லேஷத்தாலும் முடியாதொழியிலோ?" என்னும் ஶங்கையாலே, "யதி விஶ்லேஷத்திலும்
கொடிதான என்குணங்களை யவளுடைய ஸந்நிதியிலேசொல்லி யவளை முடியுங்கோள்!"
என்றுசொல்லிக் குயில்களைப் போரவிட்டானென்று தன்னிலே சிந்தித்து ;

ஒ.—அஞ்சாந் திருவாய்மொழியில், கீழிற்றிருவாய்மொழியில் எம்பெரு
மானை ஸாக்ஷாத்கரித்து ப்ரீதராய், பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே ப்ரவ்ருத்தராய், அப்
போதே தம்அபேக்ஷிதம் பெறாமையாலே மிகவும் அவஸந்நராய், தமக்கோடுகிற வ்யஸ
நம் பொறுக்கமாட்டாமையாலே லௌகிக பதார்த்தாநுஸந்தாநத்தாலே ஹ்ருதயத்தை
அந்யபரமாக்கித் தரிக்கவேணும் என்று அவற்றையநுஸந்திக்கப்புக, அவையும் அவ
னுக்கு ஸ்மாரகமாக அவற்றாலே மிகவும் நோவுபட்ட ஆழ்வார் தம்முடைய தசையை
அந்யாபதேசத்தாலே பேசுகிறார் : எம்பெருமானைப் பிரிந்து நோவுபடுகிறாளொரு
பிராட்டி, பெருவிடாய் பட்டார்க்குத் தண்ணீர் குடித்ததாறாதே அதிலே மிகவும்
அபேக்ஷை பிறக்குமாபோலே பண்டை ஸம்ஶ்லேஷமும் மிகவும் த்ருஷ்ணை பிறந்து
நோவுபடுகைக்கு உடலாய், அவனைக் காணப்பெறாமையாலே போதுபோகாமே ஒருபடி
போதுபோக்குகைக்காகத் தன்னுடைய நிரதிஶய போக்யமான உத்யானத்திலேசென்று
புக்கு, பரஸ்பர ஸம்ஶ்லேஷப்ரவணமாய் மிதுநமாய்க்கொண்டு வர்த்திக்கிற பக்ஷிகளுடைய
வடிவுகளையும் ப்ரவ்ருத்திகளையும் பேச்சுக்களையும் அநுஸந்தித்து, அவை எம்பெருமா
னோடேக் கலவியையும் அவன் தன்னையும் ஸ்மரிப்பிக்க அத்தாலே மிகவும் கலங்கி,
"என்னை முடிக்கைக்கு உபாயம் விஶ்லேஷம்" என்று பார்த்து விஶ்லேஷந்தான் ஸம்ஶ்
லேஷத்தை யொழியக் கூடாமையாலே அதுக்காக என்னோடே கலந்து பிரிந்தவிடத்
திலும் நான் முடியாமையாலே, "நாம் முகங்காட்டாதே நமக்கு ஸ்மாரகமான பதார்
த்தங்களைப் போகக்காட்ட அவற்றைக்கண்டு இவள்முடியும்" என்றுபார்த்து இவன் வரக்
காட்ட வந்தனவாகக் கொண்டு, "முசல்வேட்டைக்கு அரணைப் பண்ணினாற்போலே
என்னை முடிக்கைக்கு இத்தனை பாரிப்புவேணுமோ?" என்று மிகவும்நொந்து ஸத்யந்தர
மில்லாமையாலே ஸஹவத்ஸாநுஸந்தாநத்தாலே தரிக்கிறாள்.

ப.—அஞ்சாந் திருவாய்மொழியில், கீழே - மாநஸமாக அபரோக்ஷித்தது
ஸவித்து ப்ரீதரானவர், அவ்வநுபவாநுரூபமாக பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே அபிநிவே

ஶம்பிறந்து; அநுஸாவ்யனை ஸர்வேஶ்வரனுடைய ஆஶ்ரிதஸௌலப்யத்தையும், ஸௌஶீல்யத்தையும், தந்நிவேந்யநமான ஆகர்ஷகத்வத்தையும், ஆஶ்சர்யகுணசேஷ்டிதயோகத்தையும், அநந்யார்ஹத்வாபாதநத்தையும், அநுஸாவ்யமான அவயவஶோபையும், ஶைதில்யஜநகமான ரூபவைலக்ஷண்யத்தையும், அவஸாதகரமான மாயவத்தையும், ஸோக்யமான புண்டரீகாக்ஷத்வத்தையும், ப்ராப்யதேஶவர்த்தித்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்பூதனானவனோடு யதாமநோரதங்கலந்து பரிமாறப்பெறாத ஆர்த்திக்கு மேலே, ஸ்வச்சந்தவர்த்திகளான லௌகிகபதார்த்தங்களும் தத்தத்விக்ரஹாதிகளுக்கு ஸ்மாரகமாக, அத்தாலே ஶிதிலராய், முத்பந்தராஸங்கதையாலே அவனுடைய குணாநுஸந்தானத்தாலே தரித்த ப்ரகாரத்தை, நாயகனை ஈஶ்வரனைப் பிரிந்தபிராநாயகி, தன்னுற்றாமையாலே 'லௌகிகமான பக்ஷ்யாதி பதார்த்தங்களைக் கண்டாகிலும் போதுபோக்குவோம்" என்று அபிஸந்திபண்ணி, பரஸ்பர ஸம்ஶ்லிஷ்டங்களாய் ரஸித்துத்திரிகிறஅவை அவனுடைய ஸம்ஶ்லேஷத்துக்கும் வடிவுக்கும் பேச்சுக்கும் ஸ்மாரகமாய்க் கொண்டுநலிய, அத்தாலே ஈடுபட்டுப் போலிகண்டு இரங்கினவள், பின்னும் போக்கில்லாமையாலே அவனுடைய குணங்களை ஸ்மரித்து தரித்தப்ரகாரத்தாலே யருளிச்செய்கிறார்.

இ.—அஞ்சாந் திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியிலே அவனை ஸாக்ஷாத்கரித்து ப்ரீதராய் பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே ப்ரவ்ருத்தராய் அப்போதே கண்ணாலே காணுதல், அணைத்தல், வார்த்தைசொல்லக் கேட்டல் செய்யப் பெறாமையாலே அவஸந்நராய், "லௌகிகபதார்த்தாநுஸந்தானத்தாலே ஹ்ருதயத்தை அந்யபரமாக்கித் தரிக்கவேணும்" என்று அவற்றை அநுஸந்திக்கப்புக, அவையும் அவனுக்கு ஸ்மாரகமாக, அவற்றாலே நோவுபட்டவர் தம்முடைய தஶையை அந்யாபதேஶத்தாலே அருளிச்செய்கிறார். "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றவர் தம் ப்ராணரக்ஷணத்துக்கு ஒரு திர்யக்கின்காலிலே விழுகிறாரிறே. "அடியேன் உய்ந்தவாறே" என்றவர், ஸ்மாரகங்கள் கையிலே நோவுபடும்படியாய் விழுந்ததிறே. கலந்துபிரிந்து நோவுபடுவாள் ஒருபிராட்டி, அவன் வரக்காணாமையாலே லௌகிகபதார்த்த தர்ஶநத்தாலே போதுபோக்குகைக்காகத் தன்னுடைய உத்யானவனத்திலேபுக்கு, ஸ்நேஹப்ரவணமாய் மிதுநமாயிருக்கிற பக்ஷிகளுடைய வடிவுகளையும், ப்ரவ்ருத்திகளையும், பேச்சுக்களையுங்கண்டு, "இவை அவனோட்டைக் கலவிக்கும், அவன் வடிவுக்கும், பேச்சுக்கும் ஸ்மாரகமாய்நலிய, இவற்றுக்கு நம்மோடு பகை பெரிதன்று; அவன வரவிட்டவையாகவேணும்: அவன்தான் நம்மைமுடிக்கைக்கு உபாயம் விஶ்லேஷமென்றுபார்த்து, அதுதான் ஸம்ஶ்லேஷத்தையொழியக் கூடாமையாலே அதுக்காகக் கலந்துபிரிந்தான்: நாம் அவ்வளவிலும் முடியாமையாலே சென்றற்ற ஸமயத்திலே, ஸ்மாரகங்களைமுன்னிட இவள்முடியுமென்று பார்த்து அவன் வரக்காட்ட வந்தன" எனக்கொண்டு, "என்னைமுடிக்கைக்கு முசல்வேட்டைக்கு அரணைப்பண்ணினாற்போலே இத்தனை பாரிப்புவேணுமோ?" என்று நொந்து கத்யந்தரமில்லாமையாலே அவன்குணங்களையே அநுஸந்தித்து தரித்தாளாய்த் தலைக்கட்டுகிறது. நம்மைப் பார்த்தால் இழவேயாயிருந்ததேயாகிலும் அவனைப்பார்த்தால் இழக்கவேண்டாதபடியிறே அவன்குணங்களிருப்பது.

ஈடு.—"தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்சொன்னேன்" என்று களித்தவர், தம்முடைய ப்ராணரக்ஷணத்துக்கு திர்யக்குக்களின் காலிலேவிழும்படி

யாயிற்று. ''தேவர்கட்கெல்லாம் கருவாகியகண்ணனைக்கண்டுகொண்டேனே'' என்னும்
படி வைஶத்ய ம்பிறந்தபோதே, பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே யபேக்ஷைபிறந்தது. ''இவர்
க்குஇன்னம் விடாயைப்பிறப்பித்து முகங்காட்டவேணும்'' என்று இவர் அபேக்ஷித்த
தைச் சடக்கெனத்தலைக்கட்டிற்றிலன் ஈஶ்வரன். நினைத்தபோதே அபேக்ஷிதம் பெரு
மையாலே தளர்ந்து, லௌகிகபதார்த்தாநுஸந்தாநத்தாலே ஹ்ருதயத்தை யந்யபரமாக்கி
தரிப்போம்'' என்றும், ''அவனோடுபோலியான பதார்த்தங்களைக்கண்டாகிலும் தரிப்
போம்'' என்றும் லௌகிகபதார்த்தங்களிலே கண்வைத்தார். அவை ஆஶ்வாஸஹேது
வன்றிக்கே, ஸ்மாரகமாய் பாதகமாகப்புக்கது. ஏதேனுமொருபதார்த்தம் தோற்றிலும்,
அவற்றினுடையஸத்பாவம் அவனையொழியவில்லாமையாலே, அவனைக்காட்டிக்கொண்
டிறே தோற்றுவது.

லௌகிகபதார்த்தங்கள் அவனுக்கு ஸ்மாரகமாய் நலிய, அவற்றால் நோவுபடுகிற
படியை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார். எம்பெருமானோடேகலந்து பிரிந்தாளொரு
பிராட்டி, தன்னாற்றாமையாலே ''அவனோடு போலியான பதார்த்தங்களைக் கண்டாகிலும்
தரிப்போம்'' என்று, அவ்வாற்றாமை கைகொடுக்க உத்யாநத்திலேபுறப்பட, அங்குண்
டான குயில்மயில்தொடக்கமானவை அவனுடைய பேச்சுக்கும் வடிவுக்கும் ஸ்மாரக
மாய்நலிய, ''இவைநலிகைக்கு இவற்றோடு நமக்கொருபகையில்லை, இவை நலிகைக்கு
ஓரடியுண்டாகவேணும்; அவன் நம்மை 'முடிக்கவேணும்' என்று பார்த்தான்; 'அதுக்கு
உபாயம்விஶ்லேஷம்' என்றுபார்த்து, பிரிவு கலவியை யொழியக் கூடாமையாலே கலந்
தான், பிரிந்தான், பிரிந்தவிடத்திலும் நாம் முடியாதிருந்தோம், பிரிந்து நோவுபட்டிருக்கிற
ஸமயத்திலே 'நம்மோடுபோலியான பதார்த்தங்களைக்காட்டி முடிப்போம்' என்று பார்த்து
வரவிட்டானித்தனை; ''உங்களுக்கு நினைவு இதுவாகில் இப்பாரிப்பெல்லாம்வேணுமோ''
என்று அவற்றுக்கு வார்த்தைசொல்லி, ''நம்மைப் பார்த்தாலிறே இப்படிநோவுபடவேண்
டுவது? அவனைப் பார்த்தால் நோவுபடவேண்டாவிறே!'' என்று அவன் குணஜ்ஞாநத்
தாலே, வருந்தி தரித்துத் தலைக்கட்டுகிறதாயிருக்கிறது.

இன்னுயிர்ப்ரவேஶ: கீழ்த்திருவாய்மொழியில் - ப்ரமேயத்தையும், இதில்-ப்ரமேயத்
தையும் அநுஸந்தித்து வ்யாக்யாதாவின் ஈடுபாடு - தொண்டர்க்குஇத்யாதி. விஸ்தாரஸங்கதி -
தேவர்கட்கு இத்யாதி. ஆனால், ஈஶ்வரனநுபவிப்பியா தொழிவானென்? என்ன - இவர்க்கு
இன்னம் இத்யாதி. 'அபேக்ஷிதம்பெருமையாலேதளர்ந்து' என்ற வநந்தரம், ''லௌகிகபதார்த்
தங்களிலே கண்வைத்தார்: விரக்தராயிருக்கிறவர்இதிலே கண்வைப்பானென்னென்னில்'' என்று
இத்தனையும் அத்யாஹரிப்பது. இதுக்கு பரிஹாரத்வயம் - லௌகிக இத்யாதி. அதாவது
ஹ்ருதயத்தை யந்யபரமாக்கி தரிப்போமென்றும், போலியான பதார்த்தத்தர்ஶநத்தாலே தரிப்போ
மென்றும் கண்வைத்தாரென்றபடி. போலியான பதார்த்தம் பாதகமானமையைக்காட்டுகிறார் -
அவையாஶ்வாஸ இத்யாதி. ஹ்ருதயத்தை அந்யபரமாக்கி தரிக்கப்போகாமையைக் காட்டுகிறார்-
ஏதேனும் இத்யாதி. ''நிற்கின்றதெல்லாம்நெடுமால்'' என்னக்கடவதிறே.

அந்யாபதேசத்தாலேபேசும் ப்ரகாரத்தை விஸ்தரிக்கிறார்-எம்பெருமானோடே இத்யாதி.
குயில் - பேச்சுக்கும், மயில் - வடிவுக்கும் ஸ்மாரகம். நம்மைப்பார்த்தால் - நம்முடைய தோஷ
பூயஸ்தையைப்பார்த்தாலென்றபடி. அவனைப்பார்த்தால் - தயாதிகுணவிஶிஷ்டனான அவனைப்
பார்த்தாலென்றபடி. ''தன்புகழேத்த'' என்றத்தைப்பற்ற - குணஜ்ஞாநத்தாலே இத்யாதி. இத்
திருவாய்மொழியால் - ''முமுக்ஷுவுக்கு விஷயதர்ஶநம் பாதகம்'' என்கிறது. ''இதுஎம்பெரு
மானார் உகந்ததிருவாய்மொழி'' என்று அந்தப்ரஸங்கத்திலே ஆழ்வார் திருவரங்கப்பெருமாள
ரையர் கதையைப்ப்ரஸாதிப்பர்.

முதற் பாட்டு.

இன்னுயிர்ச்சேவலும் நீருங்கூவிக்கொண்டிங்கெத்தனை
யென்னுயிர்நோவமிழற்றேன்மின் குயிற்பேடைகாள்
என்னுயிர்க்கண்ணபிரானை நீர்வரக்கூவுகிலீர்
என்னுயிர்கூவிக்கொடுப்பார்க்கும் இத்தனைவேண்டுமோ ?

ஆ.—இக்குயில்களை நோக்கி "அவன் திருநாமங்களைச் சொல்லிக்கூவி என்னை நோவுசெய்யாதே கொள்ளுங்கோள் ! இங்கு அத்தனைக்கு விஷயமுண்டோ ?" என்ன, இக்குயில்கள் "உன்னை நோவுசெய்கைக்காகவோ அவனை நாங்கள் கூவுகிறது" என்ன, அன்றாகில், அவனை வரக்கூவுகிறிலிகோளே, என்னை முடிக்கவிறே கூவுகிறது; என்னை முடிக்கும்போது இத்தனை பாரிப்பு வேணுமோ? என்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், சில குயிற்பேடைகளைக் குறித்து என்னை முடிக்கைக்கு இத்தனை பாரிப்புவேணுமோ? என்கிறார்.

[இன்னுயிர்ச்சேவலென்று தொடங்கி]-விரஹவ்யஸநம் அறிந்திருக்கிற குயிற்பேடைகாள் ! உங்களுக்கு நற்சீவனான சேவல்களும் அவற்றுக்கு அஸாதாரணைகளான நீங்களும் பரஸ்பரஸம்ச்லேஷார்த்தமாக அழைத்துக்கொண்டு விச்லேஷத்தாலே தளர்ந்திருக்கிற என் உயிர்நோவ மிகவும் ப்ரணயகூஜிதத்தைப் பண்ணாதே கொள்ளுங்கோள்! [என்னுயிர்க் கண்ணபிரானென்று மேலுக்கு]-பாதகரைச் சொல்லுமாபோலே எங்களை இங்ஙனே சொல்லுவானேன் ? என்றினவாகக்கொண்டு தாரகனான க்ருஷ்ணனைவரக் கூவுகிறிலிகோள் ; ஆனபின்பு, என்னை முடிப்பார்க்கு இத்தனைபாரிப்பு வேணுமோ ?

ப.—முதற்பாட்டில், ஆச்ரிதஸுலபனான க்ருஷ்ணனை வரவழையாதே உங்களில் நீங்கள் அழைத்து மிழற்றி என்னைநலியாதே கொள்ளுங்கோளென்று, சேவலோடே சேர்ந்த சில குயிற்பேடைகளைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

குயில்பேடைகாள் - ! இன்னுயிர் - பஹிச்சரமான ப்ராணன்போலே போக்யமாய் தாரகமான, சேவலும் -, இன்னுயிர் நீரும் - அதுக்குஇனியவுயிராய் என்னோடு ஸ்த்ரீத்வஸாஜாத்யத்தையுடைய நீரும், கூவிக்கொண்டு - (ஒருவர்க்கொருவர் ஸம்ச்லேஷார்த்தமாக) அழைத்துக்கொண்டு, இங்கு - என் ஸந்நிதியிலே, எத்தனை - மிகவும், என் உயிர் - என் ப்ராணனானது, நோவ - நடுபடும்படிக்கீடாக, மிழற்றேன்மின் - அநக்ஷரரஸமான ஸம்ச்லேஷ பேச்சுக்களைப் பண்ணாதே கொள்ளுங்கோள் ! என் - எனக்கு, உயிர் - தாரகனாயுள்ள, கண்ணன் - க்ருஷ்ணனாகிற, பிரானை - உபகாரகனை, நீர் - நீங்கள், வரக்கூவுகிலீர் - வரும்படி அழைக்கிறிலிகோள்! (உங்கள் கூவுதலால்) என் உயிர் - என் ப்ராணனை, கூவி - அபஹரித்து, கொடுப்பார்க்கும் - அவனுக்குக் கொடுப்பார்க்கும், இத்தனை - இத்தனை வ்யாபாரம், வேண்டுமோ - வேணுமோ ?

இ.—முதற்பாட்டில், சில குயிற்பேடைகளைக் குறித்து என்னை முடிக்கைக்கு இத்தனைபாரிப்பு வேணுமோ? என்கிறாள்.

[இன்னுயிர்ச் சேவலும்] - நற்சீவனான சேவலும் பஹிச்சரப்ராணனைப் போலே கண்வட்டத்திலே வர்த்தியாநிற்கை. பிரிந்துபடுகுலையடிக்கும் சேவலைப்போ

லன்றிக்கே, பேடைக்கு தாரகமாயிருக்கும் சேவலுமுண்டாகாதே! போக்யமுமாய்
தாரகமுமாயிருக்கும் சேவலுமுண்டாகாதே! [நீரும்]-சேவலுக்குஇன்னுயிரான நீரும்.
[கூவிக்கொண்டு] - சேர்த்தியைக்காட்டி நலிகிறதுக்குமேலே, பேச்சாலும் நலியவே
ணுமோ! ஸம்ஶ்லேஷார்த்தமாக பரஸ்பரம் பேரைச்சொல்லி அழைத்துக்கொண்டு.
[இங்குஎத்தனை] - இந்த எத்தனைத்த விஷயமுண்டோ? பிரிவாலே சென்றற்ற இதில்
உங்கள்பாரிப்புக்கு விஷயமுண்டோ? அன்றிக்கே,[எத்தனை என்னுயிர்நோவ மிழற்றேன்
மின்] - பிரிவாலேதளர்ந்திருக்கிற என்னுயிர்நோவ மிகவும் ப்ரணய கூஜிதத்தைப்பண்
ணாதே கொள்ளுங்கோள். 'உயிர்நோவ' - என்கையாலே உடல் சென்றற்றதென்கை.
ராமஶரம்போலே உயிரிலேபுக்கு வ்யாபரிக்கவற்றாயிற்று இந்த த்வநி. என்னுயிரொன்
கையாலே - இவற்றின் பேச்சுக்கேட்கத் தளிர்க்கும் அவனில் தனக்கு உண்டான
வ்யாவ்ருத்தி. [மிழற்றுகையாவது] - நிரம்பாமென்சொல். ஸம்ஶ்லேஷதசையிற் சொல்
லத்தொடங்கித் தலைக்கட்டாத பேச்சுக்கள். [நோவமிழற்றேன்மின்] - இப்பேச்சைக்
கேட்கில் இவள்முடியுமென்று அறிந்து பேசாதிருக்கவேண்டாவோ? ஸ்த்ரீவதமென்
றறிந்தால் மீளவேண்டாவோ? [குயிற்பேடைகாள்] - விஜாதீயர் செய்யுமத்தை நீங்
களுஞ் செய்யவேணுமோ? சேவலைக்கொண்டு காரியங்கொள்ள நினைத்தாலும் பேடை
யின் காலைபிறேபிடிப்பது. [என்னுயிர் இத்யாதி] - எங்களை வாதகரைச்சொல்லுமா
போலே சொல்லுகிறதென்? என்றனவாகக்கொண்டு எனக்கு தாரகனான க்ருஷ்ணனை
வரக்கூவுகிறிலீகோள். தாரகங்கள் வ்யக்திதோறும் வ்யவஸ்திதமாயிறேயிருப்பது. திர்
யக்குக்களுக்கு த்ருணம், மனுஷ்யர்களுக்குச் சோறு, தேவர்களுக்கு அம்ருதம், இவ
ளுக்கு க்ருஷ்ணன். [கண்ணபிரான்] - பாரார்த்யமாகத் தன்னையாக்கி வைக்குமவன்.
[நீர்] - அந்வயத்தில் ரஸமறியும் நீங்கள், வ்யதிரேகத்தில் நோவு அறியவேண்டாவோ?
[வரக்கூவுகிலீர்] - நீங்கள் அவன்முன்னே சென்று த்வநித்திகோளாகில் அத்தாலே
என்செல்லாமையை நினைத்துவாரானே? அது செய்கிறிலீகோள்; என்னை நலிகைக்கு
வேண்டுவது செய்கிறீகோள் அத்தனை; நானும் அவனுஞ் சேருகைக்கு வேண்டுவது
செய்கிறிலீகோள். அழிக்கவல்லவை சேர்க்கவும்வற்று என்றிருக்கிறாள். அவன்கார்யம்
இவற்றின் கையது என்றிருக்கிறாள். கடகரானவர்கள் வாதகரேயாகிலும் ரக்ஷ
கர் என்றிறேயிருப்பது. [என்னுயிர் இத்யாதி] - என்னையும் அவனையுஞ் சேர்க்கிறிலீ
கோள்; அல்லாதபின்பு, இனி என்னை முடிக்கையாயிருந்ததிறே உங்களுக்குக் கருத்து;
அதுக்கு இப்பாரிப்பெல்லாம் வேணுமோ? பண்டே சென்றற்ற என்னுயிரைவாங்கி
அவன்கையிலே கொடுக்கையாகில் கருத்து. அதுக்கு இதெல்லாம் வேணுமோ? நீங்
கள் சேரவிருக்கையும் கலக்கையும் அந்யோந்யம் நாமக்ரஹணம்பண்ணுகையும், ப்ரணய
மதுரத்வநியும் இதெல்லாம் வேணுமோ? நொந்தாரை ஜீவிப்பிக்கையன்றோ அரி
யது? முடிக்கையிற் பணியுண்டோ?

ஈடு.—முதற்பாட்டு. சில குயிற்பேடைகளைக்குறித்து, என்னை முடிக்கைக்கு இத்தனை பாரிப்பு வேணுமோ? என்கிறாள்.

முதற்பாட்டு - இன்னுயிர் இத்யாதி. "குயிற்பேடைகாள் - என்னுயிர் கூவிக்கொடுப்பார்க்குமித்தனைவேண்டுமோ" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - சிலகுயில் இத்யாதி.

[இன்னுயிர்ச்சேவலும்] - நற்சீவனான சேவலும். வைஹிம்சப்ராணியைப் போலே கண்வட்டத்திலே வர்த்தியாநிற்கை. பிரிந்து படுதலையடிக்கும் சேவலைப்போலன்றிக்கே, பேடைக்கு ப்ராணாதாரகமாயிருக்கும் சேவலும் உண்டாகாதே! போக்யமுமாய் தாரகமுமாயிருக்கும் சேவலுமுண்டாகாதே! [நீரும்] - சேவலுக்குஇன்னுயிரான நீரும். [கூவிக்கொண்டு] - சேர்த்தியைக்காட்டி நலிகிறதுக்கு மேலே, பேச்சாலும் நலிய வேணுமோ? ஸம்ஶ்லேஷார்த்தமாக பரஸ்பரநாமக்ரஹணம் பண்ணிக்கொண்டு. [இங்கு எத்தனை] - இங்கு அத்தனைக்கு விஷயமுண்டோ? இங்குப்பிரிவாலே சென்றற்றது. உங்கள் பாரிப்புக்கு விஷயமுண்டோ? "அதிகம் ஶோபதே" (அதிகம்ஶோபதே) என்னுமா போலே நலியாநின்றதாயிற்று; அன்றிக்கே, [எத்தனை யென்னுயிர்நோவமிழற்றேல்மின்] - பிரிவிலே தளர்ந்திருக்கிற என்னுயிர்நோவ மிகவும்ப்ரணயகூஜிதத்தைப்பண்ணுதேகோள்ளுங்கோள். "உயிர்நோவ" என்கையாலே-உடல் பண்டே சென்றற்றதென்கை. ராமஶரம் போலே உயிரிலேபுக்குவ்யாபரிக்கவும்வற்றாயிற்று இந்தத்வநி. "என்னுயிர்" என்கையாலே இவற்றின்பேச்சுக்கேட்கத்தளிர்க்குமவனில் வ்யாவ்ருத்தி. மிழற்றுகையாவது-நிரம்பாமென்சொல்; ஸம்ஶ்லேஷ தசையில் சொல்லத்தொடங்கித் தலைக்கட்டாதபேச்சுக்கள். [நோவமிழற்றேல்மின்]-இப்பேச்சு இவள் செவிப்படில் முடியுமென்றறிந்து, பேசாதிருக்க வேண்டாவோ? ஸ்த்ரீவத்யமென்றறிந்தால் மீளவேண்டாவோ? [குயிற்பேடைகாள்]-விஜா

இன்னுயிரான சேவலென்கிறார் - நற்சீவனுன் இத்யாதி. விவரணம் - வைஹிம்ஸ இத்யாதி. பேடை கண்வட்டத்தைவிடாதே வர்த்திக்கிறவையைப்பற்ற "நற்சீவன்" என்கிறதென்றபடி. இதுக்கு ஹார்த்தஹாவம் - பிரிந்து இத்யாதி. படுதலையடிக்கும் - ஹிம்ஸிக்கும், இனிதுமாய் உயிருமான சேவலென்றர்த்தாந்தரம் - போக்யமுமாய் இத்யாதி. பேச்சு, நலிவான படியைக் காட்டாநின்றுகொண்டு, ஸப்தார்த்தம் - ஸம்ஶ்லேஷார்த்தமாக இத்யாதி. "இங்கு" என்றது - என்னிடத்திலே என்றபடியாய், "எத்தனை" என்று - அல்பமாய், உங்கள் பாரிப்புக்கு அல்பமும் விஷயமில்லையென்று மூந்தினவர்த்தம் - இங்குஅத்தனைக்கு இத்யாதி. அத்தனைக்கு - சேர்த்திக்கும் நாமக்ரஹணத்துக்கும். "அத்தனைக்கு விஷயம்" என்றதின்விவரணம் - இங்குப் பிரிவாலே இத்யாதி. இவைதன்னை நலிகையாவது - அத்தலையை ஸம்பிப்பித்து பாதகமாகை யாகையாலே, அத்தை உதாஹரணபூர்வகமாகத் தெரிவிக்கிறார்-அதிகம் இத்யாதி. "அதிகம் ஶோபதே [illegible]" இதி கிஷ்கிந்தாகாண்டே ப்ரயுமே. (கoo) "அதிகம்ஶோபதே" என்கையாலே - விஷயத்தினளவல்லாத பாதகத்வஞ்சொல்லுகிறது. இரண்டாம்அர்த்தம் - அன்றிக்கே எத்தனை இத்யாதி. அதாவது - "இங்கு" என்று - இத்தஸ்யலமாய், "எத்தனை" என்று - மிகுதியாய், என்னுயிர்நோவ இந்தஸ்யலத்திலே மிகவும் மிழற்றேல்மின் என்றபடி. இந்த அர்த்தத்துக்கு, "எத்தனை" என்றது-"மிழற்றேல்மின்" என்றத்தோடே அந்வயிப்பது. "என்னுயிர்" என்கிறதுக்கு அர்த்தகதநபூர்வகமாக மேல்வாக்யவிவரணம் - பிரிவிலே இத்யாதி. "உயிர்நோவ" என்றதுக்குவாக்யார்த்தம் - உயிர்நோவ இத்யாதி. "உயிர்நோவ" என்றதுக்குஹாவாந்தரம் - ராமஶரம்போலே இத்யாதி. அதாவது - உடல்குறியழியாதிருக்க உயிரிலே நலியவற்றென்றபடி. "என்னுயிர்" என்றதுக்கு வ்யாவர்த்த்யம் - என்னுயிரென்கையாலே இத்யாதி. † "மிழற்றலும் மிழற்றலும் நிரம்பாமென் சொல்." நிரம்பாமென்சொல் என்றது - அர்த்தோக்தியான ம்ருதுபாஷணம். "நிரம்பாமென் சொல்" என்றதின்விவரணம் - ஸம்ஶ்லேஷதசையில் இத்யாதி. எங்களுக்கு ப்ராக்ருதியான மிழற்றுதலைத்தவிரப்போமோவென்ன - இப்பேச்சு இத்யாதி. விவரணம் - ஸ்த்ரீவதம் இத்யாதி. "பேடைகாள்" என்றதுக்குஹாவம் - விஜாதியர் இத்யாதி. விஜாதியர் - புமான்கள். சேவலைக்

---

† திவாகரம்—(கo-ந் தொகுதி.

தீர்செய்வதை நீங்களுஞ்செய்யவேணுமோ? சேவலைக்கொண்டு கார்யங்கொள்ளநினைத்தாலும் பேடையின்காலையிறே பிடிப்பது. [என்னுயிர்க் கண்ணபிரானை] - "எங்களை யாதுகரைச்சொல்லுமாபோலே சொல்லுகிறதென்?" என்றினவாகக்கொண்டு; எனக்கு தாரகனான க்ருஷ்ணனை வரக்கூவுகிறிலிகோள். தாரகங்கள், வ்யக்திதோறும் வ்யவஸ்திதங்களாயிறேயிருப்பது. திர்யக்குக்களுக்கு த்ருணம், மநுஷ்யர்களுக்கு அந்நம், தேவர்களுக்கு அம்ருதம், இவளுக்கு க்ருஷ்ணன்; * எல்லாங்கண்ணனிறே. [கண்ணபிரான்] - பரார்த்தமாகத் தன்னை ஒக்கிவைக்குமவன். [நீர்] - அந்வயத்தில் ரஸமறியும் நீங்கள், வ்யதிரேகத்தில் நோவுமறியவேண்டாவோ? [வரக்கூவுகிலீர்] - நீங்கள் அவன்முன்னேசென்று பிரார்த்திக்கவேண்டா; நீங்கள் இருந்தவிடத்திலே நின்று கூவுநீர்; உங்கள் குரலைக் கேட்டால் அவன் தானே வருவனென்று நினைத்திருக்கிறாள். அவன் வரும்படியாக சப்திக்கிறிலிகோள். நீங்கள் வருகிறிலிகோள் என்று ப்ரஸ்தாவித்திகோளாகில், தானேசெல்லாமையை நினைத்துவாரானோ? அதுசெய்கிறிலிகோள். என்னைநலியவேண்டுவன செய்திகோள்இத்தனை. நானும்அவனும் சேருகைக்குவேண்டுவன செய்திலிகோள். அழிக்கவல்லவை சேர்க்கவம்வற்று என்றிருக்கிறாள். இவற்றின்வாயது வாணாளென்றிருக்கிறாள். [என்னுயிர்கூவிக்கொடுப்பார்க்குமித்தனைவேண்டுமோ] - என்னையும் அவனையுஞ்சேர்க்கிறிகோளல்லாதபின்பு, இனிஎன்னைமுடிக்கையாயிருந்ததிறே உங்களுக்குக்கருத்து; அதுக்கு இப்பாரிப்பெல்லாம்வேணுமோ? பண்டேசென்றற்றஎன்னுயிரைவாங்கி அவன்கையிலே கொடுக்கையாகில்கருத்து, அதுக்கு இதெல்லாம்வேணுமோ? நீங்கள்சேரவிருக்கையும், கலக்கையும் அந்யோந்ய நாமக்ரஹணம் பண்ணுகையும் ப்ரணயகத்கதத்வநியும், இதெல்லாம்வேணுமோ? நொந்தாரைஜீவிப்பிக்கையன்றோஅரிது? முடிக்கையில் பணியுண்டோ?

இரண்டாம் பாட்டு.

இத்தனைவேண்டுவதன்றந்தோ! அன்றிற்பேடைகாள்!
எத்தனைநீரும்நுஞ்சேவலும் கரைந்தேங்குதிர்
வித்தகன்கோவிந்தன்மெய்யல்லனொருவர்க்கும்
அத்தனையாம்இனியென்னுயிர்அவன்கையதே.

கொண்டு கார்யங்கொள்ள நினைத்தமைதோற்ற "இன்னுயிர்ச்சேவல்" என்று முந்துறவெடுத்து, இங்கே "பேடைகாள்" என்றத்தை ப்ரயோகமாகச்சொல்லுவானென்? என்ன - சேவலை இத்யாதி. "கூவுகிலீர்" என்றதற்கு அவதாரிகை - எங்களை இத்யாதி. என்றினவாக - என்று சொன்னதுகளாக. இவளுக்குக்ருஷ்ணன் தாரகமானபடியென்? என்ன - தாரகங்கள் இத்யாதி. "வ்யவஸ்திதங்கள்" என்றதைக்காட்டுகிறார் - திர்யக்குக்களுக்கு இத்யாதி. "இவளுக்கு க்ருஷ்ணன்" என்னுமதுக்கு ப்ரமாணம் - எல்லாம் இத்யாதி. "பிரான்" என்றதுக்கர்த்தம் - பாரார்த்யமாக இத்யாதி. உனக்கு பாதகமாகிறது எங்களுக்குத் தெரியுமோவென்ன - அந்வயத்தில் இத்யாதி. அந்வயம் - ஸம்ஶ்லேஷம். வ்யதிரேகம் - விஶ்லேஷம். நாங்கள்கூவினால் அவன் வருமோ? என்ன - நீங்கள் இத்யாதி. விவரணம் - என்னைநலிய இத்யாதிவாக்யத்வயம். பக்ஷிகள் சேர்ப்பிக்கவற்றோவென்ன - அழிக்கவல்லவை இத்யாதி. விவரணம் - இவற்றின் இத்யாதி. வாயதுவாணாள் - என்றது - வார்த்தையாலேவாழும்நாளான ஆயுஸ்ஸென்றபடி. நாங்கள்முடிக்க வந்ததுக்கு நியாமகமேதென்ன - என்னையும் இத்யாதி. ஸப்தார்த்தம் - பண்டே இத்யாதி. இதெல்லாவற்றை நடம்கடாக்ஷித்து "இதெல்லாம்" என்றத்தைக்காட்டுகிறார் - நீங்கள் இத்யாதி. "வேண்டுமோ?" என்ற ஸ்வரத்துக்கு பாவம் - நொந்தாரை இத்யாதி. குயிற்பேடைகாள் - இன்னுயிர்ச்சேவலும் இத்யாதப்யாந்வய:.

(௧)

ஆ.—(இத்தனை.) - "அன்றிற்பேடைகாள்! நீரும் நஞ்சேவலும் கரைந்தேங்குதிர்; என்னுயிர் கூவிக்கொடுப்பார்க்கும் இத்தனை வேண்டுவதில்லை" என்று சொல்ல, அவையும், "உன்னோடுள்ள கலவியே தாரகமாயிருக்கிறவன் ஒருக்ஷணமும் உன்னைப் பிரியுமளவில் அவனை இங்ஙனே கொடுமை சொல்லவேணுமோ? தானே வருகிறானிறே!" என்ன; "அவன் அங்ஙனே ப்ரணயஸ்வபாவனைப்போலேயிருக்கு மத்தனை காண்! அவனொருவர்க்கும் மெய்யாக ஸ்நேஹியல்லன்; ஆனபின்பு, அவன்வருகையென்றொரு பொருளுண்டோ? இனியென்னுயிரானது முடிந்ததிறே." என்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், 'உங்கள் சேவலும் நீங்களுமாய்க்கொண்டு ப்ரணயகூஜிதங்களாலே என்னைநலியாதே கொள்ளுங்கோள்!' என்று சிலவன்றிற்பேடைகளை தயநீயமாக இரக்கிறாள்.

[அன்றிற்பேடைகாள்] - 'பெண்பிறந்தீரல்லீரோ? [எத்தனைநீரும் நஞ்சேவலுங்கரைந்தேங்குதிர்]-நாங்களென்செய்தோம்?' என்ன, மிகவும் கரைந்து ஏங்காநின்றீர்கோள். [வித்தகன் கோவிந்தன் மெய்யனல்லனொருவர்க்கும்] - 'உன்னோடுள்ள கலவியே தாரகமாயிருக்கிற அவன் ஒருக்ஷணமும் பிரியுமளவில் அங்ஙனே எங்களையிட்டு நலிவிக்கிறானைக் கொடுமை சொல்லவேணுமோ? அவன்தானே வருகிறானிறே' என்ன,- அவன் அங்ஙனே ப்ரணயஸ்வபாவரைப்போலே இருக்குமத்தனை. [ஒருவர்க்கும் மெய்யனல்லன்] - உங்களுக்கும் இத்தனையே வலிப்பது. [அத்தனையாம் இனியென்னுயிர் அவன்கையதே] - இப்படிச் சொல்லவும் அவைவிடாதே கூவப்புக்கவாறே முடிந்தேனாகாதே என்கிறாள்.

ப.—அநந்தரம், பசுக்களுக்கும் ரக்ஷகனும்படி ஸுசீலனான க்ருஷ்ணனை மெய்யனாகநினைத்து, என்னை யவனுக்காக என்செய்யநலிகிறீர்கோளென்று, சில அன்றிற்பேடைகளைச் சொல்லுகிறாள்.

அன்றிற்பேடைகாள் - (பிரிவில் தரிக்கமாட்டாத ஸ்வபாவத்தையுடைய) அன்றிற்பேடைகாள்! நீரும் - (சேவலின் நினைவறிந்து பரிமாறும்) நீங்களும், நஞ்சேவலும் - (உங்கள் நினைவறிந்து பரிமாறும்) சேவலுமாய்க்கொண்டு, எத்தனை - எத்தனை ப்ரகாரம், கரைந்து - ஸம்ச்லேஷரஸத்தாலே புள்ளரித்து, ஏங்குதிர் - ஜல்பிக்கிறீர்கோள்? இத்தனை - இத்தனை ப்ரவ்ருத்தி, வேண்டுவதன்று - ; அந்தோ -! (என்னை நலியும்படி யுங்களை வரக்காட்டினை), வித்தகன் - விஸ்மயநீய சேஷ்டிதனாய், கோவிந்தன் - பசுக்களையும் ரக்ஷிக்குமவனென்கிற ஸௌசீல்யத்தை ப்ரகாசிப்பித்து லோகத்தை வசீகரிக்கும் க்ருஷ்ணனானவன், ஒருவர்க்கும் - (நாட்டாரோடு நல்லவர்களோடு வாசியற) ஒருவர்க்கும், மெய்யன் அல்லன் - மெய் பரிமாறுவானொருவனல்லன்; (ஆனபின்பு, அவன் நினைவின்படி உங்கள் ப்ரவ்ருத்தியுண்டாகையாலே), இனி என்னுயிர் - இனி என்ப்ராணனானது, அவன்கையதே ஆம் அத்தனை -.

இ.—இரண்டாம்பாட்டில், சில அன்றிற்பேடைகளைக் குறித்து, உங்கள் சேவலும் நீங்களுமாய்ப் ப்ரணயகூஜிதங்களாலே யென்னை நலிகிறதென்? என்கிறாள்.

[இத்தனை வேண்டுவதன்று] - என்னை முடிக்கைக்கு இத்தனை வேண்டுவதில்லை. குயில்களைப்பார்த்து "இத்தனை வேண்டுமோ?" என்னாநிற்க, இடையிலே அன்றில்களினுடைய த்வநி நலிய, 'இத்தனை வேண்டா' என்னவேண்டும்படியிறே இவள்

தனை. குயில்களினுடைய த்வநியிலே பணிபோந்து செல்லாநிற்க நடுவே, † ஒளியம்பு விடுவாரைப்போலே அன்றில்கள் த்வநிக்க, புரிந்துபார்த்து, இவையவையோ! நீங்களும் வேணுமோ! என்கிறாளிறே. இப்படி சொன்னவிடத்திலும் மேன்மேலென த்வநிக்கத் தொடங்கிற்று; அந்நிலைதான் சோர்ந்து பாவமாத்ரையாய், "ஐயோ!" என்கிறாள். [அன்றிற்பேடைகாள்] - குயிற்பேடைகளிற்காட்டில் உங்கள்பக்கல் ஒருவாசிகண்டிலோம்; அவற்றிற்காட்டில் வ்யதிரேகத்தில் ஆற்றாமைமிக்கிறே யிவற்றுக்கிருப்பது. உங்கள்சேவலிற்காட்டிலும் ஒருவாசிகண்டிலோம்; குயிற்பேடைகளிற்காட்டிலும் ஒருவாசி கண்டிலோம். நலிவுக்கு விஜாதியரிலுமவ்வருகாய், ஸஜாதியரிலும் அவ்வருக யிருந்திகோள். "நாங்கள் என்செய்தோம்" என்ன? - [எத்தனைநீரும் நுஞ்சேவலுங் கரைந்தேங்குதிர்]-[நீரும்]-சேவலினுடைய கருத்தறிந்து பரிமாறுகிறநீரும். [நுஞ்சேவலும்]-உங்கள் கருத்தறிந்து பரிமாறுகிற உங்கள்சேவலும். [எத்தனைகரைந்தேங்குதிர்] - ப்ரணயத்திலே இழிந்தமைதோற்றப் பரிமாறுகின்றிகோள். இருவர் கூடக்கலக்கும் ஸம்ப்ரமோவிது? என்னை நலிகைக்காகக் கலந்திகோளித்தனை யன்றோ; கலந்தால்தான் உங்கள்குறைதோற்ற வாய்விடவேணுமோ! உங்களை யழியமாறியன்றோ என்னைநலிகிறது. [வித்தகன் இத்யாதி] - "அவனொரு க்ஷணகாலம் தாழ்க்குமளவில் எங்களையிட்டு அவன் நலிவிக்கிறானாகச் சொல்லவேணுமோ?" என்ன, அவன்படிகளை என்வாயிலே கேளுங்கோளென்கிறாள். வித்தகன் - விஸ்மயநீயன். இப்போது அநுகூலர்க்கு அரியவித்தகனாயிருந்தவன். கோவிந்தன் - ஸர்வரக்ஷகன். இத்தால் ரக்ஷகராவாரைப்போலேயிருந்து பாதகனுமவன். ரக்ஷகனென்று பற்றப்போகாது; பாதகனென்று விடப்போகாது. [மெய்யனல்லனொருவர்க்கும்] - "பரமப்ரணயி, ஸர்வரக்ஷகன்" என்றிருக்கிற உங்களுக்கும் பொய்யே யாயிற்று. "ராமோ த்விர்நாபிபாஷதே" "ஸக்ருதேவ," "வ்ரதம் மம" என்னும் ராமாவதாரத்தைப்போலேயிறே நீங்கள் நினைத்திருக்கிறது; கபந்தனுக்கும் மெய்சொல்லி, திருவடிக்கும் மெய்சொல்லுமவனல்லனே! "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுக்கையும், பகலையிரவாக்குகையுமிறே இவ்வவதாரத்தில் கருத்தும். இப்படி சொல்லவும் அவைவிடாதே கூவிற்றின; முடிந்தேனாகாதே! என்கிறாள். [அத்தனையாம் இனி] - இனி, அத்தனையாகாதே என்கிறாள். [எனதுயிர் அவன்கையதே] - என்னுடைய ப்ராணனானது அவன் கைப்பட்டது. அவன் தன்னதேயாய்த் தலைக்கட்டினபின்பு, என்னுடைய ப்ராணரக்ஷணத்துக்கு உங்கள் கால்பிடிக்க வேண்டாவாகாதே.

ஈடு.—இரண்டாம் பாட்டு. சிலஅன்றிற்பேடைகளைக்குறித்து, உங்கள்சேவல்களும் நீங்களுமாய் ப்ரணயகூஜிதங்களாலே என்னை நலிகிறதென்? என்கிறாள்.

[இத்தனைவேண்டுவதன்று] - என்னைமுடிக்கைக்கு இத்தனைவேண்டுவதில்லை. குயில்களைப்பார்த்து, "இத்தனைவேண்டுமோ!" என்றுநிற்கச்செய்தே, இடையிலே அன்றி

இரண்டாம் பாட்டு - இத்தனை இத்யாதி. "அந்தோவன்றிற்பேடைகாள் எத்தனைநீரும் நுஞ்சேவலுங்கரைந்தேங்குதிர்" என்றவர்த்தைக்கடாக்ஷித்தவதாரிகை - சிலஅன்றில் இத்யாதி.

இதேது குயிலுக்குச்சொன்ன வார்த்தையையே அன்றில்களுக்கும் சொல்லுவானென்? என்ன - குயில்களை இத்யாதி. அதாவது - ஆற்றாமையின் அதிசயத்தாலேயென்றபடி. ஸ

† ஒளியம்பு - மறைந்திருந்து எய்யும் அம்பு.

லினுடைய த்வநி நலிய, அப்பாசுரமே இவற்றுக்குச் சொல்லவேண்டும்படியிறே பிறந்த தசை. மஹாராஜநும் வாலியும் போராநிற்க நடுவே ஒளிப்பட்டாகப் பெருமாள்விட்டாற்போலே, குயில்களும் இவளுடைய "கூவாதே கொள்ளுங்கோள்" என்பது அவையுயரக்கூவுவது ஆகாநிற்கச்செய்தே, நடுவே அன்றிலானது, செவிவழியே நெருப்பையுருக்கி வார்த்தாற்போலே த்வநிக்க, புரிந்துபார்த்து, "இவையெ பகையாதோ! நீங்களும் வேணுமோ!" என்கிறாள். இவள் இப்படி சொல்லச்செய்தேயும் த்வநிக்கத்தொடங்கிற்று. [அந்தோ!] - "சரணம்" என்றவாயை அம்பாலே சீறைப்பாரைப்போலே, உங்கள்படியிருந்தபடியேன்! ஐயோ! என்கிறாள். [அன்றிற்பேடைகாள்] - குயிற்பேடைகளிற்காட்டில் உங்களுக்கு ஒருவாசிகண்டிலோம். உங்கள் சேவலிற்காட்டில் ஒருவாசியும் கண்டிலோம். நலிகைக்கு, ஸஜாதீயரிலும் விஜாதீயரிலும் அவ்வருகாயிருந்தீகோள். "நாங்கள் என் செய்தோம்?" என்ன, - [எத்தனை] - மிகவும். [நீரும் நுஞ்சேவலும்] - சேவலின் கருத்தறிந்து நடத்துகிற நீரும், உங்கள்கருத்தறிந்து பரிமாறுகிற உங்கள் சேவலும். "அந்தர்ஜாதமபி வ்யக்தம்" (அந்தர்ஜாதமபிவ்யக்தம்) என்னுமாபோலே, பேடையின்கருத்தறிந்து பரிமாறுகின்றதாயிற்றுச் சேவல். [கரைந்தேங்குதிர்] - பிறரை நலிகைக்காகத் தந்தாமை யழித்துக்கொள்வாருண்டாகாதே! ப்ரணயதாரையில் தானழிந்தமைதோற்றப் பரிமாறுகின்றன. இருவர் கூடக்கலக்கும் ஸமயமோ இது? கலந்தாற்றான், உங்கள் தசைதோற்ற வாய்விடவேணுமோ? [வித்தகன் இத்யாதி] - "அவன்

த்ருஷ்டாந்தமாக விவரணமாதல், "இத்தனை வேண்டுவதன்று" என்றதுக்கு ஸாவகாசமாதல் - மஹாராஜநும் இத்யாதி. இவையெ பகையாதோவென்றது - குயில்களே பகையாதோவென்றபடி. "அந்தோ!" என்றதுக்கு தாத்பர்யம் - இவளிப்படி இத்யாதி. "அந்தோ!" என்றதுக்கு வாஸனை - சரணம் இத்யாதி. இதுக்கு பாவம் - குயிற்பேடைகளில் இத்யாதி. அதாவது - குயிற்பேடைகளைப்பற்ற அன்றிற்பேடைகளுக்கு, வாயலகு நெகிழ்க்கிலும் பொறுக்கமாட்டாத விஶ்லேஷாஸஹிஷ்ணுத்வமுண்டாகையாலே, அந்தவாசியைக் கண்டிலோமென்றபடி. "பேடைகாள்" என்றதுக்கு பாவம் - உங்கள்சேவலில் இத்யாதி. அதாவது - சேவல் பரிமாறுகையாலே, கடினப்ரக்ருதியாய்ப் பெண்ணினுடைய வ்யஸநமறியாத ஆகாரத்தையுடையனாயிருக்கும்; அப்படியன்றிக்கே, பெண்கள்படும் வ்யஸநம் பெண்களுக்குத்தெரிவிப்படியான ஸ்த்ரீத்வமுண்டே உங்களுக்கு. இப்போது நிர்த்தயமாய் நலிகையாலே அந்தவாசிகண்டிலோமென்றபடி. விவரணம் - நலிகைக்கு இத்யாதி. ஸஜாதீயர் - குயிற்பேடைகள். விஜாதீயர் - சேவல்கள். பேடையின்கருத்தறிந்து பரிமாறுகைக்கு த்ருஷ்டாந்தம் - அந்தர்ஜாதம் இத்யாதி. "தஸ்யாஶ்ச பர்த்தா த்விகுணம் ஹ்ருதயே பரிவர்த்ததே। அந்தர்ஜாதமபி வ்யக்தமாக்யாதி ஹ்ருதயம் ஹ்ருதா। தஸ்ய பூயோ விஶேஷேண மைதிலீ ஜநகாத்மஜா" இதி பாலகாண்டே ஸர்கே. (எ) "அஸ்யாஶ்ச; தஸ்யாஶ்ச ஹ்ருதயே ராம:, த்விகுணம் - ப்ருஶம், பரிவர்த்ததே; தஸ்மாத் ஸ ராம:, தஸ்யா: அந்தர்ஜாதமபி ஹ்ருதயம் - அபிப்ராயம், ஹ்ருதா - மநஸா, வ்யக்தமாக்யாதி - ஜாநாதி. தஸ்ய - ராமஸ்ய, ஹ்ருதயே, மைதிலீ, பூயோவிஶேஷேண - அதிஶயேந, பரிவர்த்ததே; தஸ்மாத், தஸ்ய - ராமஸ்ய, ஹ்ருதயம் - அபிப்ராயம், மைதிலீ, மநஸா, ஆக்யாதி - ஜாநாதி, ஏதத்துக்தம்பவதி: - பரஸ்பரஹ்ருதயாந்தர்வர்த்தித்வேந பரஸ்பரபாவம் உபஜஜ்ஞாதே இத்யர்த்த இதி" என்றவுடால். "கரைந்து" என்றதுக்கு பாவம் - பிறரை இத்யாதி. "ஏங்குதிர்" என்றதுக்கு பாவம் - ப்ரணயதாரையில் இத்யா கரைந்து - கூப்பிட்டு. ஏங்குதிர் - ஸாகாதிசயத்தாலே வார்த்தை சொல்லப்புக்குத் தலைக்கட்டமாட்டாதே நடுங்குதிர். இத்தால் பாவம் - இருவர்கூட இத்யாதிவாக்யத்வயம். கலக்கும் ஸமயமோ இது என்றது - தன் தசையைப்பற்ற. வாய்விடவேணுமோவென்றது - "ஏங்குதிர்"

† ஒரு க்ஷணகாலம் தாழ்க்குமளவில் எங்களைவிட்டு அவன் நலிகிறனென்று சொல்ல வேணுமோ?'' என்ன; அவன்படிகளையுட்படக்க என்பக்கலிலேகேளுங்கோள்! [வித்தகன்] - விஸ்மயநீயன். இப்போது, அநுகூலர்க்கு * அரியவித்தகன். [கோவிந்தன்] - ஸர்வ ரக்ஷகன். இத்தால் - ஸர்வரக்ஷகரைப்போலேயிருந்து வ்யாபகனுமவன். ரக்ஷகனென்று பற்றப்போகாது, வ்யாபகனென்று விடப்போகாது. [மெய்யனல்லனொருவர்க்கும்] - "பரம ப்ரணயி, ஸர்வரக்ஷகன்'' என்றுநினைத்து அவன்கார்யம் செய்யப்போந்த உங்களுக்கும் பொய்யே ஸலிப்பது. "ராமோத்விர்நாபிபாஷதே,'' (ராமோத்விர்நாபிபாஷதே) "நத்யஜேயம்,'' (நத்யஜேயம்) "ஏதத்வ்ரதம்மம'' (ஏதத்வ்ரதம்மம) என்னும் ராமாவதாரம்போலேயென்றிறே நீங்கள் நினைத்திருக்கிறது; பகலையிரவாக்குவது, "ஆயுதமெடேன்'' என்றுஆயுதமெடுப்பதாகையிறே இவ்வவதாரத்துக்கு க்ருத்யம். "ராமாவதாரத்தில் மெய்யும், க்ருஷ்ணாவதாரத்தில் பொய்யுமிறே, ஆஸ்ரிதர்க்குத்தஞ்சம்; அவன் பொய்யனுகிலேன்? மெய்யனுகிலேன்? இருந்தபடி யுகக்குமத்தனையன்றோ நாங்கள்''என்றுதொடங்கின கார்யத் திலே முதிரநின்றன. [அத்தனையாம் இனி] - இனியத்தனையாகாதே! இவற்றின் ஒருப்பா டிருந்தபடியால், அவன்நினைவே தலைக்கட்டிவிட்டதாகாதே! என்கிறாள். என்ப்ராணன் அவன்கைப்பட்டபின்பு, என்னுடைய ரக்ஷணத்துக்கு உங்கள் கால்பிடிக்கவேண்டாவே?

என்பதைப்பற்ற. பரமப்ரணயியாய் ஸர்வரக்ஷகனை - அவன் ஒருக்ஷணகாலம் தாழ்க்குமளவில் என்று கூட்டுவது. "விஸ்மயநீயன்'' என்றதாலே அவனுடைய காபட்யம் சொல்லிற்றோ வென்ன - இப்போது இத்யாதி. * பிரகடகரியவித்தகனன்றிக்கே, இப்போது அநுகூலர்க்கு * அரியவித்தகனென்றபடி. ஸர்வரக்ஷகத்வம் காபட்யமல்லவேயென்ன - ஸர்வரக்ஷகன் இத்யாதி. மேலே, "மெய்யனல்லன்'' என்றிருக்கையாலே, "வித்தகன்-'' ப்ரணயிபோலே யிருக்கிறா னொழிய அநுகூலர்க்கு ப்ரணயியல்ல, தூர்லபனென்றும், "கோவிந்தன்'' - 'ரக்ஷகரைப்போலே இருந்து வ்யாபகனுமவன்' என்றும், வ்யங்க்யமாக வ்யாக்யாநம் பண்ணுகிறார். "கோவிந்தன்'' என்ற தக்கு ஸலிதம் - ரக்ஷகனென்று இத்யாதி. ரக்ஷகனென்று பற்றப்போகாது, இப்போது வ்யாபக னாகையாலே; வ்யாபகனென்றுவிடப்போகாது, முன்பு பசுக்களை ரக்ஷிக்கையாலே. "ஒருவர்க் கும்'' என்ற சப்தத்துக்கு பாவம் - பரமப்ரணயி இத்யாதி. "வித்தகன்'' என்றத்தைப்பற்ற - பரமப்ரணயியென்றது. "கோவிந்தன்மெய்யனல்லன்'' என்று கூட்டி பாவம்-ராமோத்விர் இத்யாதி. "தத்வஹிவஸநம்தேவிராஜ்யாதுவிகாஸ்ஸக்தீ தவ்கனிஷ்டாக்ஞாநேவராமோத்விர்நாபிபாஷதே'' இதி கைகேயீம் ப்ரதி ராமஃ. (அயோத்யா சர்-கு௦) "அவன்வஞ்சகன்'' என்னுமத்தை அவன் செயலே ஸூசிப்பிக்குமென்கிறார் - பகலை இத்யாதி. மேலுக்கவதாரிகை - ராமாவதாரத்தில் இத்யாதி. 'ஆஸ்ரிதர்க்குத்தஞ்சம்' என்றவநந்தரம், "ஆகையாலே'' என்றுகூட்டு வது. தொடங்கினகார்யத்தில் - இவளை நலிகையில். விவரணம் - இவற்றினொருப்பாடு இத்யாதி. ஒருப்பாடு - உத்யோகம். "என்னுயிர் அவன்கையதே'' என்றதுக்கு பாவம் - என் ப்ராணன் இத்யாதி. 'அன்றிற்பேடைகாள், எத்தனை நீரும் நஞ்சேவலும் கரைந்தேங்குதிர் - இத்தனைவேண் டுவதன்று அந்தோ! வித்தகன் கோவிந்தன் - ஒருவர்க்கும் - மெய்யனல்லன்; இனியென்னுயிர் அவன்கையதே யாமத்தனை' என்று அந்வயம். (உ)

---

† 'க்ஷணம் கால் தாழ்க்குமளவில்' என்று பாடாந்தரம்.

மூன்றாம் பாட்டு.

அவன்கையதேயெனதாருயிர் அன்றிற்பேடைகாள்!
†எவன்சொல்லிநீர்குடைந்தாடுதிர் புடைசூழவே
தவஞ்செய்திலா வினையாட்டியேனுயிரிங்குண்டோ?
†எவன்சொல்லிநிற்றும்? நும்ஏங்குகூக்குரல்கேட்டுமே.

ஆ.—(அவன்கையதே.) - எம்பெருமானோடே கலந்து பரிமாறுகைக்கு பாக்யஹீநையான என்னுயிர், நும் ஏங்குகூக்குரல்கேட்டு மயங்கிக் கிடக்கச்செய்தே, அதின்மேலே ஏதேனுஞ்சொல்லிக்கொண்டு ஏன் குடைந்து ஆடுகிறீர்கோள் என்னருகே நின்று? என்கிறாள்.

ஒ.—மூன்றாம்பாட்டில், அற நோவுபட்ட என்னை நலியாதே கொள்ளுங்கோள் என்று அன்றிற்பேடைகளை மீளவும் இரக்கிறாள்.

[அவன்கையதே யென்று தொடங்கி] - அன்றிற்பேடைகாள்! என்னுடைய ப்ராணன் அவன்கையிலேயா யிருக்கச்செய்தே என்னை "முடிக்கவேணும்" என்று எனக்கு உச்ச்வாஸமாம்படி ப்ரணய ஊஷ்மாவிலேயுள்ளன சில உக்திகளைப் பண்ணிக்கொண்டு ஒன்றிலேயொன்று அவகாஹித்து ஸஞ்சரியா நின்றீர்கோள்; உங்களுக்கு நலியலாம்படி ப்ராணனைத் தருகைக்கிடான பாக்யத்தைப் பண்ணாதிருக்கிற என்னுடைய ப்ராணன் என்பக்கல் உண்டோ? தவஞ்செய்திலா வினையாட்டியேனென்கிறது-விஶ்லேஷித்தாலும் அவனைப்போலே தரித்திருக்கைக்கு பாக்யம் பண்ணிற்றிலேனென்றுமாம். [எவனென்று தொடங்கி] - ப்ரணயபரவசமாய்க்கொண்டு ப்ரவ்ருத்தமான உங்களுடைய த்வநியைக்கேட்டு எத்தைச்சொல்லி தரிப்போம்.

ப.—அநந்தரம், அவனுடைய ஸௌஶீல்யாதிஶயத்தாலே ஆக்ருஷ்டப்ராணையாயிருக்கிற நான் உங்கள் ஶப்தத்தைக்கேட்டும் எத்தைச்சொல்லி தரிப்பேனென்று, பின்னையும் அவ்வன்றிற்பேடைகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

அன்றிற்பேடைகாள் -! அவன்கையதே - அந்த ஸுஶீலனான கோவிந்தன் கையதே, எனது ஆருயிர் - என்னுடைய ப்ராணனானது; நீர் - நீங்கள், எவன்சொல்லி - எத்தனை உக்திவிசேஷங்களைப்பண்ணி, குடைந்து - ஒன்றுக்கொன்று உள்ளேயாம்படி ஸம்ஶ்லேஷித்து, புடைசூழவே - என்னுடைய பரிஸரத்திலே, ஆடுதிர் - ஸஞ்சரிக்கிறீர்கோள்! தவம் - அவனைப்போலே பிரிவுக்காற்றியிருக்கும் பாக்யத்தை, செய்திலா - பண்ணாதே, வினையாட்டியேன் - போலிகண்டு ஈடுபடும்படியான பாபத்தைப்பண்ணின என்னுடைய, உயிர் - ப்ராணன், (அங்கே போனபடியாலே), இங்கு உண்டோ-? நும் - உங்களுடைய, ஏங்கு - ஸம்ஶ்லேஷசிதிலமான, கூக்குரல் - ஶப்தங்களை கேட்டும், எவன் - எத்தை, சொல்லி நிற்றும் - சொல்லிநிற்பது?

இ.—மூன்றாம்பாட்டில், அற நோவுபட்ட என்னை நலியாதே கொள்ளுங்கோள் என்று அன்றிற்பேடைகளையே திரியவும் இரக்கிறாள்.

---

† 'எவம்' என்று வழங்கும்.

[அவன்கையதே எனதாருயிர்] - என்னுடைய ப்ராணன் அவன்கையதே. மிதுநமானால் ப்ராணன்கள் மாறாடியன்றோவிருப்பது? உங்களுக்கு இது அவ்யுத்பந்நமோ! "ஜஹ்யாஜ்ஜீவ்யாஃ." [அன்றிற்பேடைகாள்] - வ்யதிரேகத்தில் ஆற்றாமையை அறியும் நீங்கள் இதில் இழிபாதொழியவேண்டாவோ! "உன்னை நலிகிறேனோ! எங்களுக்குக் கலவிஸ்வபாவமன்றோ?" என்ன. [எவன்சொல்லி] - ப்ரணயரோஷமையிலே உள்ளனவாய் எனக்கு தௌர்ஸ்ஸஹமான சிலஉக்திகளைப்பண்ணி; அவைசொன்னபாசுரம் தன்வாயாற் சொல்லமாட்டுகிறிலள். [நீர்துடைந்து] - ஒன்றிலேயொன்று அவகாஹித்து. [ஆடுதிர்] - பரிமாறுகின்றீகோள். ஆட்டம் - நடையாட்டம், [புடைசூழவே] - சுற்றிலே ஸஞ்சரியாநின்றீகோள்; அடைமதிட்படுத்துகைக்குச் சுற்றிலே விட்டுக்கொண்டிருப்பாரைப் போலே. செவியைப்புதைத்துப் பிழைப்பேனோ! கண்ணைப்புதைத்துப் பிழைப்பேனோ! [தவஞ்செய்திலா இத்யாதி] - என்னைமுடிக்க நினைத்துவந்த உங்களுக்கு, என்ப்ராணனை இங்கேவைத்துத் தருகைக்கீடான பாக்யத்தைப் பண்ணப்பெற்றிலேன். கபோதம்போலே உங்களுக்கு உபகரித்து உங்கள் ப்ரீதியைப்பெறாத பாபகர்மாவானேன். "அவனைப்போலே பிரிக்கு இளைபாதபடி பாக்யத்தைப்பண்ணப் பெற்றிலேன்" என்று பிள்ளான் நிர்வாஹம். [உயிருக்குண்டோ] — என்னுயிர்தேவ மிழந்தினவன்றோ அங்கேபோய்த்தே என் ப்ராணன்; என்பக்கலுண்டோ?" என்று விளக்கேற்றிக் காட்டுவாரைப்போலே யிருக்கிறது. [எவன்சொல்லிநிற்றும்]-எத்தைச்சொல்லித் தரிப்போம்? உங்கள் ஒருப்பாடு இதுவானபின்பு, தரிக்கவிரகுண்டோ? [நும்மேங்குகூக்குரல் கேட்டுமே] - ப்ரணயபரவசமான உங்களுடைய த்வநியைக்கேட்டும், பிரிவாற்றாமைக்கு தரிக்கிலும் உங்கள் த்வநிக்குப் பிழைக்கவல்லேலாமோ! உங்கள்த்வநி கேட்டாரை முடிக்குமதன்றோ! உங்கள்செவியைப் புதைத்தோ நீங்கள் கூப்பிடுகிறது? "நிஷ்பந்தா க்வசிதாகாநாம நிஸ்ஸ்யூஸஞ்சாரிணஃ । ஸாஹ்லீசவிஸாஶாகூஜீதையஶேஷாஹவிஷ்யதி".

ஈடு.—மூன்றாம்பாட்டு. அவ்வன்றிற்பேடைகள் தம்மையே, திரியவும், தன் சேயலறுதியாலே யிரக்கிறாள்.

[அவன்கையதே எனதாருயிர்] - என் ப்ராணன், அவன்கையதே. மிதுநமானால் ப்ராணன்கள் மாறாடியன்றோவிருப்பது? உங்களுக்கு இது அவ்யுத்பந்நமோ? [அன்றிற்பேடைகாள்] - அந்வயரஸம்அறிவார், பிரிந்தார்படுவதும் அறியவேண்டாவோ? [எவன்சொல்லி] - ஏதேனும் சிலவற்றைச் சொல்லி. அவைசொல்லுகிற பாசுரஞ் சொல்லில் தன்வாய் வேம்போலேகாணும். [நீர்துடைந்து] - ஒன்றிலேயொன்று அவகாஹித்து. [ஆடுதிர்] - பரிமாறுகின்றீகோள். [புடைசூழவே] - சுற்றிலே ஸஞ்சரியா

மூன்றாம்பாட்டு - அவன் இத்யாதி. மீளவும் அன்றிற்பேடைகளை இரப்பானென்? என்ன- அவ்வன்றில் இத்யாதி.

"அவன்கையதே" என்று அறியும்படி யென்? என்ன - மிதுநம் இத்யாதி. "ஜஹ்யாஜ்ஜீவ்யாஃ" இத்யாதி அநுஸந்தேயம். கீழிற்பாட்டிலே - "அவன்கையதே" என்றது - நைராஸ்யத்தால் சொன்னவார்த்தை; இதிலே ப்ரணயித்வத்தாலே சொன்னவார்த்தை. "பிரிவில் நாங்கள் செய்கிறவையெல்லாம் பாதகமாகச் சொல்லாகின்றாய்: பிரிவு உனக்குபாதகமென்கிற இதுஎங்களுக்குத் தெரியுமோ?" என்ன - அந்வயரஸம் இத்யாதி. அந்வயரஸம் - ஸம்ஶ்லேஷ ரஸம். இன்னதென்றுதே, "எவன்" என்பானென்? என்ன - அவைசொல்லுகிற இத்யாதி. நீர் - நீங்கள். சூழ - ஸஞ்

நின்றிகோள். அடைமதிட்படுத்துவார் சுற்றிலேவிட்டுக்கொண் டிருக்குமாபோலே. செவியைப் புதைத்துப் பிழைப்பேனோ! கண்ணைப்புதைத்துப் பிழைப்பேனோ! பெருமாளும் பரிகரமும் லங்கையை யழிக்கைக்குச் சூழப்போந்தாற்போலேகாணும் இவளுக்கு இது இருக்கிறது. பாவியேன்! உங்கள்பாரிப்புக்கு இங்கு விஷயமுண்டாகப் பெற்றதில்லை; [தவஞ்செய்திலா] - உயிரை இங்கேவைத்து உங்களுக்கு உபகரிக்க பாக்யம்பண்ணிற்றிலேன். "அவனைப்போலே பிரிவுக்குச் சிதையாதபடி பாக்யத்தைப் பண்ணப்பெற்றிலேன்" என்று பிள்ளான்பணிக்கும். [உயிரிங்குண்டோ!] - வல்லடிக்காரர்க்கு விளக்கேற்றிக் காட்டுமோபோலேகாணும், "இங்குண்டோ!" என்று காட்டுகிறபடி. [எவஞ்சொல்லிநிற்றும்] - எத்தைச் சொல்லித் தரிப்பது? [நும் இத்யாதி] - ப்ரணயபரவசரான உங்களுடைய த்வநியைக்கேட்டும்.பிரிவுக்குத் தரித்திருக்கிலும்,உங்கள் த்வநிக்குப் பிழைக்கவல்லோமோ! உங்கள் த்வநி, கேட்டாரை முடிக்குமதன்றோ! உங்கள்சேவியைப்புதைத்தோ நீங்கள் கூப்பிடுகிறது? "நிஸ்வநம் சக்ரவாகாநாம் நிஶம்ய ஸஹசாரிணாம் | புண்டரீகவிஶாலாக்ஷ: கமேஷா ஹவிஷ்யதி" (நிஸ்வநம்சக்ரவாகாநாம் நிஶம்யஸஹசாரிணாம் | புண்டரீகவிஶாலாக்ஷ:கதமேஷாபவிஷ்யதி.) (௩)

நான்காம் பாட்டு.

கூக்குரல்கேட்டும்நங்கண்ணன்மாயன்வெளிப்படான்
மேற்கிளைகொள்ளேன்மின் ‡நீருஞ்சேவலுங்கோழிகாள்!
வாக்கும்மனமும்கருமமும் நமக்காங்கதே
ஆக்கையும்ஆவியும் அந்தரம்நின்றுழலுமே.

ரிக்கிறதுக்கு த்ருஷ்டாந்தம் - அடைமதிள் இத்யாதி. அடைமதிட்படுத்துகை - முற்றுகை போடுகை. "எவஞ்சொல்லி, புடைசூழ" என்கிற இரண்டுபதங்களாலும் - தனக்குஇவற்றால்வந்த நலிவைத் தப்பவிரகில்லை என்கிறார் - செவியை இத்யாதி. "எவஞ்சொல்லி" என்றத்தைப்பற்ற - செவியை இத்யாதி. "புடைசூழவே" என்றத்தைப்பற்ற - கண்ணை இத்யாதி. "அடைமதிட் படுத்துவார்" என்றத்தை விஶேஷரிஷ்டமாகக் காட்டுகிறார் - பெருமாளும் இத்யாதி. மேலுக் கவதாரிகை - பாவியேன் இத்யாதி. "தவஞ்செய்திலா" இத்யாதிக்கர்த்தம் - உயிரை இத்யாதி, அர்த்தாந்தரம் - அவனைப்போலே இத்யாதி. பாக்யத்தைப்பண்ணாத பாவியேனுடைய என்னுடைய ப்ராணன்கள் இங்குண்டோ? என்று ஶப்தார்த்தம். உயிருண்டோவென்றதே, "இங்கு" என்று விசேஷித்ததுக்கு பாவம் - வல்லடிக்காரர் இத்யாதி. வல்லடிக்காரர் - ஹிம்ஸகர். நிற்றும் - தரிப்போம், "எங்குகூக்குரல்" என்றதுக்கு பாவமாதல், "கேட்டும்" என்ற ஶப்தத்துக்கு பாவமாதல் - பிரிவுக்கு இத்யாதி. பிழைக்கப்போகாதோவென்ன - உங்கள் இத்யாதி. தனக்கு வ்யாபகமாகையாலே அவற்றுக்கும்இதுவ்யாபகமென்றுநினைத்து பாவம்- உங்கள்சேவியை இத்யாதி.தனக்கு வ்யாபகமென்றத்தைக்கொண்டு இப்படி நினைத்தபேருண்டோ வென்ன - நிஸ்வநம் இத்யாதி. "நிஸ்வநம் சக்ரவாகாநாம் நிஶம்ய ஸஹசாரிணாம் | புண்டரீகவிஶாலாக்ஷ: கமேஷா ஹவிஷ்யதி" இதி (கிஷ் - ௩௦ - ௧௦) ராமஃ. 'அன்றிற்பேடைகாள் - எனதாருயிர் - அவன் கையதே; எவஞ்சொல்லி நீர்' என்றுதொடங்கி, 'உயிரிங்குண்டோ? நும்மெங்கு கூக்குரல்கேட்டும். எவஞ்சொல்லிநிற்றும்', இத்யந்வயஃ. (௩)

---

‡ 'நீரும் நுஞ்சேவலும்' என்பதும் பாடம்.

ஆ.—(கூக்குரல்) - கோழிகாள்! நீரும் நுஞ்சேவலும் மேன்மேலும் அவனை என்செய்யக் கூவுகிறீர்கள்? என்ன; "நாங்கள் அவனைவரக்கூவுகிறோம்" என்று அவை சொல்ல; அவன்வருகைக்குக் கூவுகிறீர்களாகில் அவன் வாராதொழிகிறதென்? ஆதலால், அவன்வரக்கூவுகிறீரல்லீர்; என்னை முடிக்கைக்காகக் கூவுகிறீர்தானே? முன்னமே என்னுடைய ஸர்வகரணங்களும் முடிந்தன; இனி என்செய்ய வருந்துகிறீர்கள்? என்ன; கரணங்கள் முடிந்தனவாகில் உன்னுடைய பேச்சும் இச்சேஷ்டிதங்களுங் கூடுகிறபடி யெங்ஙனே? என்னில்,—முடியச்செய்தே, என்னுடைய ஆக்கையும் ஆவியும் நடுவே நின்று பழைய வ்யஸநவாஸநையாலே அழைக்கிறனவத்தனை யென்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், சிலகோழிகளைக் குறித்து நீங்கள் உச்சமாகக்கூவி என்னைநலியாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

[கூக்குரலென்று தொடங்கி] - உங்களுடைய கூக்குரலைக் கேட்டிருந்தும் ஆஶ்சர்யசீலனாக ப்ரஸித்தனான க்ருஷ்ணன் "இவள் பிழைபாள்" என்று பார்த்துத் தோற்றி வருகிறிலன். கோழிகாள்! உங்களுடைய சேவல்களும் நீங்களும் உங்களுடைய ஜாத்யுசிதமாய் ப்ரணயப்ரவ்ருத்தமான உச்சஶப்தத்தைப் பண்ணாதே கொள்ளுங்கோள்! [வாக்கும்மனமும் என்றுதொடங்கி] - "உன்னுடைய ஸர்வகரணங்களையும் அபஹரித்து உன்னை முடிக்கவென்றுவந்த நாங்கள் கூவாதிருப்போமோ?" என்றனவாகக்கொண்டு என்னுடைய ஸர்வகரணமும் பண்டே அவன்பக்கலின; இனிஎன்செய்ய வருந்துகிறீகோள்? என்ன; ஆகில், இப்பேச்சும் இச்சேஷ்டிதமுங் கூடினபடி எங்ஙனே என்னில்?—அவை போகச்செய்தே வ்யஸநவாஸநையாலே தேஹமும் ப்ராணனும் நடுவேநின்று துக்கப்படுகிறன வித்தனை.

ப.—அநந்தரம், ஆஶ்சர்யகுணசேஷ்டிதனான க்ருஷ்ணன் வருகிறிலன், நீங்கள் எனக்கு வ்யாகுலமாம்படி கூப்பிடாதே கொள்ளுங்கோள்என்று, சில மயிற்பேடைகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

கோழிகாள் - மயில்காள், கூக்குரல் - நீங்கள் ஒன்றுக்கொன்று அழைக்கிற குரல், கேட்டும் - அவனிருந்தவிடத்திலும் கேட்கும்படியாயிருக்கச்செய்தேயும், நம் - (எல்லாரும் "நம்முடையவன்" என்னும்படி) ஸுலபனாய், மாயன் - கிட்டினாரை யாஶ்சர்யகுணசேஷ்டிதங்களாலே ஈடுபடுத்தும், கண்ணன் - க்ருஷ்ணன், வெளிப்படான் - வருகிறிலன்; நும் - உங்கள், சேவலும் நீரும் - சேவலும் நீருமாகச் சேர்ந்துகொண்டு, மேல் - மேலே, கிளைகொள்ளேன்மின் - திரளாகக்கூப்பிடாதே கொள்ளுங்கோள்! நமக்கு - எங்களுக்கு, வாக்கும் மனமும் கருமமும் - வாங்மநஃகாயங்கள், ஆங்கதே - அவன்பக்கலிலேயாயிற்று; ஆக்கையும் - ஶரீரமும், ஆவியும் - ப்ராணனும், அந்தரம் நின்று - நடுவே, உழலுமே - அலமருகிறவித்தனை. கோழி - மயில். கிளைத்தல் - ஶப்தித்தல்.

இ.—நாலாம்பாட்டில், சிலமயில்களைக் குறித்து நீங்கள் உச்சமாகக்கூவி என்னை நலியாநின்றீகோள் என்கிறாள்.

[கூக்குரல் கேட்டும்] - நீங்கள்கூவுகிற த்வநியைக் கேட்டிருந்தும். இவற்றினுடைய த்வநிசெல்லாதவிடமில்லை யென்றிருக்கிறாள். [நங்கண்ணன்] - வடயக்ஷப்ரஸித்திபோலே இதொருப்ரஸித்தி யுண்டாக்கிவைப்பதே. [மாயன்] - ஆஶ்சர்யசீலன்; பிரிந்தால் தரிக்கவொண்ணாதபடி கிட்டினபோது ஸைகயைக் காலைப்பிடித்துத் தாழ

நின்று பரிமாறுமவன். [வெளிப்படான்]-"இவள்பிழையாள்" என்று தோற்றுகிறிலன்; "தாஸாரோவிரஹுக்ஷ" என்னுமவன்கிடீர்! ருஷியும் 'ஆவிராஸீக்ஷ' என்றான்; இவளும் 'வெளிப்படான்' - என்றாள். கைகழியப்போகான்; மறைந்து நின்று தோற்றுமென்றிருக்கிறாள். [மேற்கிளை கொள்ளேன்மின்] - மேலான கிளை உச்சைஸ்ஸான த்வநி. ஜாத்யுசிதமாய் ப்ரணயப்ரவ்ருத்தமான உச்சஸப்தத்தைப் பண்ணாதே கொள்ளுங்கோள். இவள்பிரிவாலே நோவுபட்ட தசையிலே உயர்ந்த தானத்திலே த்வநிக்கத்தொடங்கிற்று. [நீரும் சேவலும்] - ஒன்றுதொடங்கின தானத்திலே ஸஹசரமுந் தொடங்கிக் குறையுங் கூடமுடியாநின்றது. [கோழிகாள்] - மயில்களைச்சொல்லுகிறது. [வாக்கும்என்று தொடங்கி] - உன்னுடைய ஸர்வசரணங்களையும் அபஹரிக்க வந்த நாங்கள் நீ நிஷேதித்தவாறே தவிருவதோமோ! என்ன,—அதுவாகில், அவையும் அவன்பக்கலின: அதுக்கும் அங்கே செல்லுங்கோள். அங்கே போய் இவை த்வநிக்க அவனுக்குத் தரிப்பரிதாய் வந்து முகங்காட்டுமென்னும் நினைவாலே சொல்லுகிறாள். ஆகில்,இப்பேச்சும் சேஷ்டிதமுங் கூடினபடி யென்? என்ன. [ஆக்கையும் ஆவியுமந்தரம் நின்றுழலுமே] - வ்யஸநவாஸனையிறே தேஹமும் ப்ராணனும் நடுவே நின்று க்லேசப்படுகிற இத்தனை. பிடித்துவிட்ட கொப்புபோலே வாஸனையேயுள்ளது. நோவுபட வேண்டுவதுண்டு; உங்களுக்கு நலிகைக்கு ஆச்ரயமில்லை.

ஈடு.— நாலாம்பாட்டு. சில மயில்களைக்குறித்து, நீங்கள்உச்சமாகக்கூவி என்னை நலியாநின்றீகோள்! என்கிறாள்.

[கூக்குரல்கேட்டும்] - நீங்கள் கூவுகிற த்வநியைக்கேட்டு வைத்தும். இவற்றின் த்வநி செல்லாதவிடமில்லை என்றிருக்கிறாள். [நங்கண்ணன்] - வடயக்ஷப்ரஸித்தி போலேகிடீர் ஸவ்யனென்னும் இது. [மாயன்] - ஆச்சர்யசீலன்; கலக்கும் ஸமயத்தில் மெய்போலே பரிமாறவல்லவன். [வெளிப்படான்] - "இவள் பிழையாள்" என்று, தோற்றுகிறிலன்; "தாஸாரோவிரஹுக்ஷ" (தாஸாமாவிரபூத்) என்னுமவன் கிடீர்! ருஷியும், "ஆவிராஸீக்ஷ" (ஆவிரபூத்) என்றான்; இவளும், "வெளிப்படான்" என்றாள். [மேற்கிளைகொள்ளேன்மின்] - மேலான கிளை - உச்சமான த்வநி. ஜாத்யுசித

நாலாம்பாட்டு - கூக்குரல் இத்யாதி. "நீருஞ்சேவலுங்கோழிகாள் - மேற்கிளைகொள்ளேன்மின்" என்றவற்றைச் சடாக்ஷித்தவதாரிகை - சிலமயில்களை இத்யாதி. பரமபதஸ்த்தனுக்கு இதுகேட்குமோவென்ன - இவற்றின் இத்யாதி. மேலே, "மேற்கிளை கொள்ளேன்மின்" என்றத்தைப்பற்ற - செல்லாத விடமில்லை என்றது. "நம்" என்றதுக்கர்த்தம் - வடயக்ஷ இத்யாதி. "நம்" என்று - ப்ரஸித்தி. வடயக்ஷப்ரஸித்தியாவது - இதுவேட யக்ஷஸ் திஷ்டதி-இந்தஆலமரத்திற் பேயுண்டென்னுமது. இத்தால், ஸவ்யனென்கிறது; ப்ரஸித்திமாத்ரமொழிய அநுபவமில்லையென்கிறது. "வெளிப்படான்" என்றதுக்குச்சேர, "நங்கண்ணன்மாயன்" என்றதுக்கு வெறுப்பாக வ்யாக்யாநம் பண்ணுகிறார். மாயன் - ஆச்சர்யபூதன். ஆச்சர்யமெது? என்ன - கலக்கும் இத்யாதி. வெளிப்பட ப்ரஸக்தியெதென்ன - இவள் இத்யாதி. அதாவது - "இந்தத்வநி இவளுக்கு பாதகம்" என்றால் ஓடிவரவேண்டியிருக்க, அது செய்கிறானில்லையென்றபடி. அப்படி விஶ்லேஷதசையில் தோற்றுமோவென்ன, ப்ரமாணம் - தாஸாம் இத்யாதி. "தாஸாமாவிரபூச்சௌரி ஸ்ஸ்மயமாநமுகாம்புஜ:" இத்யாதி, கோபிகாகீதாஸமநந்தரம். ஸப்தமொத்திருக்கிறதென்கிறார் - ருஷியும் இத்யாதி. அதாவது - கோபிமார்க்கு ஸமீபஸ்த்தனாய்த் தோற்றாநிருந்தானென்றாற்போலே, இவளும் ஸந்நிஹிதனாயிருந்துவைத்தே வெளிப்படானென்கிறாளென்றபடி. "கிளை" என்று-

மாய் ப்ரணயப்ரவ்ருத்தமான உச்சசப்தத்தைப் பண்ணாதேகோள்ளுங்கோள். இவள் ஈடுபடப்பட, ஒரு தானமேழவைத்துக் கூவாநின்றன வாய்த்து. [நீருஞ்சேவலும்]-ஒன்று தோடங்கின கார்யத்தை ஸஹசரமுந்தோடங்கிக் கூறையுங் கூடமுடியாநின்றது. [கோழிகாள்] - ஸ்த்ரீவதம்பண்ணுகைக்கு ஒருஜாதியாக ஒருப்படவேணுமோ? கோழியேன்கிறது - மயிலே. ''நீர் நலியாதே கோள்ளுங்கோள்' என்னுமளவும் பார்த்தன்றே நாங்களிருக்கிறது? ஸர்வகரணங்களையும் அபஹரிக்கவந்த நாங்கள் தவிருவோமோ? தோடங்கினகார்யம் தலைக்கட்டவேணுமே, எங்களுக்கு'' என்று கருத்தாக, அதுக்காகில் பின்னை அங்கே போங்கோளேன்கிறுள். [வாக்கும் மனமும் கருமமும் நமக்காங்கதே] - என்னுடைய ஸர்வ கரணங்களும் அவன்பக்கலின. ''அங்கேபோய் இவை த்வநிக்க அவனுக்குத் தரிப்புஅரிதாய் வந்து முகங்காட்டும்'' என்னும் நினைவாலே சோல்லுகிறுள். அங்கேயாகில், இப்பேச்சும் சேஷ்டிதங்களும் கூடினபடியேன்னேன்ன? - [ஆக்கையுமாவியுமந்தரம்நின்றுழலுமே] - வ்யஸநவாஸனையாலே, தேஹமும் ப்ராணனும் நடுவே நின்று க்லேசப்படுகிற இத்தனை. பிடித்துவிட்ட கோம்புபோலே வாஸனையேயுள்ளது. நோவுபடவேண்டுவதுண்டு, நலிகைக்கு ஆச்ரயமில்லை. (ச)

ஐந்தாம் பாட்டு.

அந்தரம் நின்றுழல்கின்ற யானுடைப்பூவைகாள்!
நந்த்றத்தேதுமிடையில்லை குழறேன்மினே
இந்திரஞாலங்கள்காட்டி இவ்வேழுலகுங்கோண்ட
நந்திருமார்வன்நம்மாவியுண்ணநன்கேண்ணினன்.

ஆ.—(அந்தரம்நின்ற.)-'உங்களுக்கு நானென்னஅநிஷ்டம் பண்ணினேன்? நீங்கள் நடுவேநின்று, அவன்திருநாமங்களைச்சொல்லி என்னைவையியாதேகொள்ளுங்கோள்!' என்று பூவைகளை நோக்கிச்சொல்லி, 'பண்டு இந்தலோகத்தைத் தனக்காக்கிக்கொள்ளுகைக்குச் சிலபொய்செய்தாற்போலே என்னோடேகலந்து பரிமாறுகிறுனைத் தோற்றும்படி சிலபொய்களைச் செய்தகன்றுபோன இது; என்னைமுடிக்கைக்கு நல்ல விரகுபார்த்தான்; என்ன சதுரனே!' என்று தன்னிலேநொந்து சொல்லுகிறுள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், தன்னினவாயிருந்து நலிகிற பூவைகளைக்குறித்து, ''அவன்தான் என்னை முடிக்கைக்கு அழகிதான விரகுபார்த்தான்; உங்களுக்கு இங்கு விஷயமில்லை'' என்கிறுள்.

பஸிப்ஸப்தமாகையாலே, 'ஜாத்யுசிதமாய்' என்கிறுர். ''ஆந்தை கிளைக்கூட்டிற்று''
திரே. ''மேல்'' என்றதுக்குஹாவம் - இவள்படப இத்யாதி. ''நீரும்சேவலும்'' என்றிரண்டையும் சொல்லி, ''கிளை'' என்று ஏகவசநமாகச் சொன்னதுக்கு ஹாவம் - ஒன்றுதொடங்கின இத்யாதி. ''கோழிகாள்'' என்கிற வெஹுவசநத்துக்கர்த்தம் - ஸ்த்ரீவதம் இத்யாதி. பேச்சும் சேஷ்டிதமும் என்றது - ''மேற்கிளைகொள்ளேன்மின், உழலும்'' என்றத்தைப்பற்ற. விவரணமாதல், தேஹமும் ப்ராணனும் நடுவே நின்று க்லேஸப்படுகிறதுக்கு த்ருஷ்டாந்தமாதல் - பிடித்துவிட்ட இத்யாதி. ஃலிதம் - நோவுபட இத்யாதி. ''உழலும்'' என்றதுக்கு ஹாவமாதல். 'கூக்குரல்கேட்டும் நங்கண்ணன் மாயன் வெளிப்படான் - வாக்கும்' என்றுதொடங்கி, 'உழலுமே; கோழிகாள் நீரும்சேவலும் மேற்கிளைகொள்ளேன்மின்' இத்யந்வயம். (ச)

[அந்தரமென்று தொடங்கி] — நலிகைக்கொரு காரணமின்றிக்கே யிருக்கச் செய்தே, என்னை நலிந்துகொண்டு ஸஞ்சரிக்கிற என்னுடைய பூவைகாள்! உங்களுடைய பாரிப்புக்கு என்பக்கல் அவகாசமில்லை. குழறாதே கொள்ளுங்கோள்! [இந்திரஞால மென்று தொடங்கி] - ப்ரணயித்வ ப்ரஸித்தியையுடையனாயிருந்துள்ள எம்பெருமான் பண்டு இந்தலோகத்தைத் தனக்காக்கிக் கொள்ளுகைக்குச் சிலபொய் செய்தாற்போலே என்னோடேகலந்து பிரிமாறுகிறானாகத் தோற்றும்படி சிலபொய்களைச் சொல்லி விட்டுபே க்ஷிக்கை என்னை முடிக்கைக்கு உபாய மென்று அவன்தானே நல்லவிரகு பார்த்தான்; என்னைமுடிக்கப் பார்த்த பார்வை, அழகிதாகப் பார்த்தான் என்று தன்னிலே நொந்து சொல்லுகிறாளென்றுமாம்.

ப.—அநந்தரம், க்ருத்ரிமசேஷ்டிதங்களைக்காட்டி ஸர்வலோகத்தையும் பிறர்க்காகாதபடி பண்ணுமவன் உள்ளாளான உங்களையிட்டு நம்முடைய ப்ராணப ஹாரம்பண்ணுகைக்கு நன்றாக எண்ணினானென்று, தன்னுடைய பூவைகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

நலிகைக்கு விஷயமின்றிக்கே யிருக்கச்செய்தே, அந்தரம் நின்று-நடுவே, உழல்கின்ற - நிஷ்ப்ரயோஜநமாக அலமருகிற, யானுடைப்பூவைகாள் - நான் என்னுடையவை என்றுஅபிமானித்த பூவைகாள்! நும்திறத்து - உங்கள்இடையாட்டத்தில், (என்னை நலிகைக்கு), ஏதும்இடையில்லை-ஓர்அவகாசமில்லை; குழறேன்மின்-(நீங்கள்) அநக்ஷரரஸமாம்படி ஸப்தியாதே கொள்ளுங்கோள்! இந்திரஞாலங்கள்காட்டி - இந்த்ரஜாலங்கள் போலே மெய்யென்று ப்ரமிக்கும்படியாக குணவிக்ரஹ சேஷ்டிதங்களைக்காட்டி, இவ்வேழுலகும் - இந்த ஸப்தலோகத்தையும், கொண்ட - (பராதீநத்தையும் ஸ்வாதீநத்தையும் அறுத்துத் தனக்கேயாம்படி) பண்ணிக்கொண்டு, நம்திருமார்வன் - நமக்கு(தன்) திருமார்விலேயிருக்கிற பிராட்டிபக்கல் ப்ரணயித்வத்தைக்காட்டி வசப்படுத்தினவன், நம் - நம்முடைய, ஆவி - ப்ராணனை, உண்ண - க்ரஸித்துக்கொள்ளுகைக்கு, நன்கு எண்ணினான் - நன்றாக நிரூபித்தான்.

ஈ.—அஞ்சாம்பாட்டில், தன்னினவாயிருந்து நலிகிற பூவைகளைக்குறித்து அவன்தான் என்னைமுடிக்கைக்கு நல்விரகுபார்த்தான்; இனி, உங்களுக்கு இங்கு விஷயமில்லை என்கிறாள்.

[அந்தரம்நின்றுழல்கின்ற] - உங்களுக்கு இங்குநலிகைக்கு விஷயமின்றிக்கே யிருக்க நடுவேநின்று வ்யர்த்தமே க்லேசப்படுகிறீர்கோள் இத்தனை. [யானுடைப் பூவைகாள்] - என்னுடைய பூவைகாள்! ஸர்வஸாதாரணராயிருப்பார் செய்யுமத்தை, சிலர்க்கு ஸ்வம்மாயிருப்பார் செய்யக்கடவதோ? ஸ்வதந்த்ரன் செய்யுமத்தை பரதந்த்ரரான நீங்களும் செய்யக்கடவதோ? நான் எனக்கு என்னவமையுமாகாதே வையகமாகைக்கு? அவனும் என்னுடையவனாகையிறே நலிந்தது. கலந்தார் செய்யக்கடவத்தை வயிற்றிற் பிறந்தார் செய்யக்கடவதோ? [நுந்திறத்தேதுமிடையில்லை] - உங்கள்இடையாட்டத்தில், என்னைநலிகைக்கு ஓர்அவகாசமில்லை; உங்கள்பாரிப்புக்கு என்பக்கல் ஓர்அவகாசமில்லையென்றுமாம். [குழறேன்மினோ] - அநக்ஷரரஸமானபேச்சைக் காட்டி முடியாதே கொள்ளுங்கோள். "உருவினவாள் உறையிலிடுங்கோள்" என்னுமா போலே. கெடுவிகாள்! உங்கள்வாயைப் புதையுங்கோளென்கிறாள். [இந்திரஞாலங்கள் காட்டி]-

கண்டார்க்கு விடவொண்ணாத வடிவையும், சீலத்தையும், சேஷ்டிதத்தையுங்காட்டி. 'இவை நிலைநில்லாமையாலே பொய்காண்' என்கிறாள். [ஏழுலகுங்கொண்ட] - பிறருடைமை கொள்ளுமிடத்தில் லஜ்ஜியாதபடி கொள்ளுமவன். [நந்திருமார்வன்] - ப்ரணயித்வத்தால்வந்த ப்ரஸித்தியை எனக்குக்காட்டி. பிராட்டியோடு பழகிற்றும் ப்ரணயிபாப் அன்று; அத்தைக்காட்டிக் கண்டாரை அகப்படுத்திக் கொள்ளுகைக்காக. சில பொய்களைக்காட்டி மஹாபலிபக்கல் நின்றும் பூமியைக் கொண்டாற்போலே, கலந்து பரிமாறுகிறானென்று தோற்றும்படி சிலபொய்களைச் செய்து விஶ்லேஷிக்கை. என்னை முடிக்கைக்கு உபாய மென்றுமாம். [நம்மாவியுண்ண நன்கெண்ணினான்] - நம்மை முடிக்கைக்கு நல்விரகு தானேபார்த்தான். உங்களுக்கு இங்கு அவகாசமில்லை. ஸர்வ ஶக்தியானவன் உத்யோகித்த கார்யத்திலே குறைகிடப்பதாய் அதிலே நீங்கள் ஸஹகரிக்கிறிகோளோ? நம்மை முடிக்கப் பார்த்தபார்வை அழகிதாகப் பார்த்தான் என்று தன்னிலே நொந்து சொல்லுகிறாள் என்றுமாம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. தன்னினவாயிருந்துநலிகிற பூவைகளைக்குறித்து, அவன்தான் என்னை முடிக்கைக்கு நல்ல விரகு பார்த்தான்; இனி உங்களுக்கு இங்கு விஷயமில்லை என்கிறாள்.

[அந்தரம்நின்றுழல்கின்ற]—உங்களுக்கு இங்கு நலிய விஷயமின்றிக்கேயிருக்க, நடுவேநின்று வ்யர்த்தமே க்லேஶப்படுகிறிகோளித்தனை. [யானுடைப்பூவைகாள்] - என்னுடைப்பூவைகாள்! ஸர்வஸாதாரணராயிருப்பார் செய்பவற்றை, சிலர்க்கு ஸ்வமாயிருப்பார் செய்யக்கடவதோ? நான் எனக்குஎன்ன வமையுமாகாதே பாதிக்கைக்கு? அவனும், என்னுடையவ ளுகையிறே நலிந்தது! [நுந்திறத்தேதுமிடையில்லை] - உங்கள் இடையாட்டத்தில், என்னைநலிகைக்கு ஓர் அவகாசமில்லை; உங்கள் பாரிப்புக்கு என்பக்கல் ஓரவகாசமில்லையென்றுமாம். [குழறேன்மின்] - அக்ஷர ரஸமானபேச்சைக் காட்டி முடியாதேகொள்ளுங்கோள்! அவன்தான் அதிகரித்தகார்யத்தில் நெகிழநின்றானல்லன்றே, நீங்கள் இப்படி முதிரநிற்கவேண்டுவது? அதுக்கு உங்களுக்கு அவகாசம் வைத்தானோ! [இந்திரஞாலங்கள்காட்டி] - கண்டார்க்குவிடவொண்ணாதவடிவையும், சீலத்தையும்,

---

அஞ்சாம்பாட்டு - அந்தரம் இத்யாதி. " யானுடைப்பூவைகாள் - நம்மாவியுண்ணநன்கெண்ணினான் - நுந்திறத்தேதுமிடையில்லை குழறேன்மினோ ' என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - தன்னினவாய் இத்யாதி. தன்னினவாய் என்றது - " யானுடைப்பூவைகாள் " என்றத்தைப்பற்ற. தன்னினவாய் - தன்னுடையவைகளாய்; தனக்கு ஶேஷங்களாய் என்றபடி.

" யானுடைப்பூவைகாள் " என்று விசேஷிக்கிறவளுடைய ஹார்த்தபாவம் - ஸர்வஸாதாரண இத்யாதி. ஸர்வஸாதாரணராயிருப்பார் என்றது - காட்டிலேவர்த்திக்கையாலே ஸர்வஸாதாரணமான மயில்தொடக்கமான பக்ஷிகளாயாதல், கீழ்ப்பாட்டில் "நங்கண்ணன்" என்ற க்ருஷ்ணனையாதல், "நந்திருமார்வன்" என்றத்தைக்கடாக்ஷித்து, என்னோட்டை ஸம்பந்தமே ஹேதுவாக பாதிக்கிறிகோளென்று ஸாவாந்தரம் - நான்எனக்கு இத்யாதி. விவரணம் - அவனும் இத்யாதி. இடை - அவகாசம். உங்களிடையாட்டத்தில் என்றது - உங்களுக்கென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, "திறம்" என்று - ஸமூஹமாய், பாரிப்பைச் சொல்லுகிறது. மேலுக்கெல்லாம் அவதாரிகை - அவன்தான் இத்யாதி. அவகாசம் வையாமல் அவன்செய்த வ்யாபாரங்களைச் சொல்லுகிறது மேல். "இந்திரஞாலங்கள்" என்கிற பஹுவசந விவக்ஷிதங்களையும், அவற்றை இந்திரஞாலமாக அருளிச்செய்கைக்கு ஹேதுவையும் அருளிச்செய்கிறார் - கண்டார்க்கு இத்யாதி. அதாவது - இந்திரஞாலமாவது, கண்டல்லது நிற்கவொண்ணாதபடி ஆகர்ஷகமாயிருப்பதொரு வித்யையிறே; அப்படி ஸௌந்தர்யாதி

சேஷ்டிதத்தையுங் காட்டி. இவை நிலைநில்லாமையாலே, "போய்கள்" என்கிறாள். இந்திரஜாலமென்றும், பொய்யென்றும் பர்யாயம். [ஜாலத்தைக் கொண்டு] - பிறருடைய வஸ்துவை அபஹரிக்கப்புக்கால், அவர்களுக்கு ஒன்றும் தோன்றாதபடி அபஹரிக்குமவன். [நந்திருமார்வன்] - ப்ரணயித்வத்தால்வந்த ப்ரஸித்தியை எனக்குக்காட்டி. பிராட்டியோடே பழகிற்றும் ப்ரணயியாய்அன்று; அத்தைக்காட்டிக் கண்டாரை வசப்படுத்திக் கொள்ளுகைக்காக. சிலபொய்களைக்காட்டி பூமியைக்கொண்டாற் போலே, கலந்து பரிமாறுகிறானென்றுதோற்றும்படி சில பொய்களைச் செய்து விஶ்லேஷிக்கை என்னை முடிக்கைக்கு உபாயமென்றுமாம். [நம்மாவியுண்ண நன்கெண்ணினான்] - நம்மை முடிக்கைக்கு நல்விரகுபார்த்தான். உங்களுக்கு இங்கு அவகாஶமில்லை. ஸர்வஶக்தி யுத்யோகித்த கார்யத்திலே குறைகிடப்பதாய், அதிலே நீங்களும் ஸஹகரிக்கிறீர்களோ! நம்மை முடிக்கப்பார்த்த பார்வை அழகிதாகப்பார்த்தான் என்று, தன்னிலே நொந்து சொல்லுகிறாளென்றுமாம். (ரு)

ஆறாம் பாட்டு.

நன்கெண்ணிநான்வளர்த்த சிறுகிளிப்பைதலே
யின்குரல்நீமிழற்றேல் என்னாருயிர்க்காகுத்தன்
நின்செய்யவாயொக்கும்வாயன் கண்ணன்கைகாலினன்
நின்பசுஞ்சாமநிறத்தன் கூட்டுண்டு நீங்கினான்.

ஆ.—(நன்கெண்ணி.) - 'அவன்பிரிந்த தசையில் அவன்திருநாமங்களையும் சொல்லாமைக்கன்றோ உன்னை நான் வளர்த்தது? ஆனபின்பு, அவன்திருவடிவுபோலே

களும் அநுபவித்தாலொழிய நிற்கவொண்ணாதபடி ஆஸாஸமாயிருக்கும்படியைப்பற்ற, இவற்றை "இந்திரஜாலங்கள்" என்கிறதென்றபடி. வைஹாவஸாவிகந்தக்கள் - ஸௌந்தர்யாதிகள். பொய்யாக அர்த்தாந்தரம் - இவை இத்யாதி. "இந்திரஜாலம்" என்றால், பொய்யைச் சொல்லுமோவென்ன - இந்திரஜாலமென்றும் பொய்யென்றும் பர்யாயம் என்று. "ஜாலத்தை" என்ற சப்தத்துக்கு பாவம் - பிறருடைய இத்யாதி. "நம்" என்ற ப்ரஸித்திக்கு பாவம் - ப்ரணயித்வத்தால் இத்யாதி. ப்ரஸித்தனான திருமார்வனென்று ஸமஸ்தார்த்தம். பிராட்டியோட்டைச் சேர்த்தியைக்காட்டி என்னை வசப்படுத்திக்கொண்டவனென்று தாத்பர்யார்த்தம். "திருமார்வன்" என்றதுக்கு வேறுப்பாகவர்த்தம். பிராட்டியோடே இத்யாதி. "இந்திரஜாலங்கள்" என்றுதொடக்கி, "நன்கெண்ணினான்" என்னுமளவும் - பக்ஷிகளைப்பார்த்துச்சொல்லுகிறாளென்றும், தன்னிலே நொந்து சொல்லுகிறாளென்றும், இத்தை த்வேதாவிவக்ஷித்து முந்தினவகையைக்காட்டுகிறார் - சிலபொய்களை இத்யாதியாலே; இரண்டாம்வகையைக்காட்டுகிறார்-நம்மை முடிக்க இத்யாதி முடிவில் வாக்யத்தாலே. "நன்கு" என்கிறதுக்கு அர்த்தத்வயம் - நன்றாகவென்றும், வ்யதிரேகலக்ஷணையாய், க்ரூரமாகவென்றும். இந்தஇரண்டர்த்தத்தையும் அருளிச்செய்கிறார் - நல்விரகுபார்த்தான் என்றும், அழகிதாகப்பார்த்தான் என்றும். அழகிதாக - க்ரூரமாகவென்றபடி. "அவனும்செய்துபோகிறான், அவன்செய்தகுறைகளை நாங்கள்முடிக்கிறோம்" என்ன-ஸர்வஶக்தி இத்யாதி. 'அந்தரம்நின்றுழல்கின்ற யானுடைப்பூவைகாள்! இந்திரஜாலங்கள்' என்றுதொடங்கி, நன்கெண்ணினான்-நந்திறத்தேதுமிடையில்லை குழறேன்மினோ?' இத்யந்வயம். 'நம்மாவியுண்ணநன்கெண்ணினான்' - நம்முடையப்ராணன்களை க்ரஸித்துக்கொள்ளுகைக்கு நன்றாக நிரூபியாநின்றானென்று உரையில் ஸமஸ்தார்த்தம். (ரு)

யிருக்கும் உன்வடிவைக்காட்டி, அதின்மேலே அவன் திருநாமங்களையுஞ்சொல்லி என்னை நோவுசெய்யாதேகொள்ளாய்!' என்று தன்கிளியைக் குறித்துச்சொல்லுகிறாள்.

ஒ.—ஆறும்பாட்டில், தன்தசையை அறியாதே திருநாமத்தைச் சொல்லுகிற கிளியைக் குறித்து நான் ஸ்வஸ்தையாயிருந்தபோது எனக்குஇனிதாகத்திருநாமத்தைச் சொல்லக் கேட்கைக்கன்றோ உன்னை நான் வளர்த்தது. எனக்கு அஸாத்யமான தசையில் திருநாமத்தைச் சொல்லாதேகொள்! என்று அத்தை நிவர்த்திப்பிக்கிறாள்.

[என்னுயிர்க் காகுத்தனென்று மேலுக்கு] - உன்னுடைய சிவந்தவாயும் கண்ணும் கையுங் காலும்போலேயிருக்கிற திருப்பவளந் தொடக்கமான திவ்யாவயவங்களையுடையவனுமாய் உன்னுடைய குளிர்ந்த ச்யாமமாயிருந்துள்ள திருநிறத்தையுடையனாய் எனக்கு நல்லுயிராயிருக்கிற காகுத்ஸ்தன் இனி என்னோடே ஸம்ச்லேஷித்து என்ப்ரக்ருதியை அறிந்துவைத்தே பிரிந்தான்.

ப.—அநந்தரம், தர்சநீயமான அவயவசோபையையுடைய சக்ரவர்த்தித்திருமகன் கலந்துபிரிந்தான்; அவனுக்கு ஸ்மாரகமான வடிவோடேயிருந்து உன்னுடைய ம்ருதுபாஷணத்தாலே நலியாதேகொள்! என்று தான் வளர்த்ததொரு கிளியைச் சொல்லுகிறாள்.

என் ஆருயிர் - எனக்கு வ்யதிரேகத்திலே தரிக்கவரிதான ப்ராணனாய், காகுத்தன் - "மற்றிலேன்தஞ்சமாகவே" என்னும்படியான சக்ரவர்த்தித்திருமகன்; நின் - உன்னுடைய, செய்ய - சிவந்த, வாய் - வாயை, ஒக்கும் வாயன் - ஒக்கும் வாயையுடையனாய், கண்ணன் - அத்தோடொக்கும் கண்ணையுடையனாய், கைகாலினன் - அத்தோடொக்கும் கைகாலையுடையனாய், நின் - உன்னுடைய, பசும் சாமம் - பசுமை யழியாத ச்யாமநிறம்போலேயிருக்கிற, நிறத்தன் - நிறத்தையுடையனாய்க்கொண்டு, கூட்டுண்டு - (என்னோடே) ஸம்ச்லேஷித்து, நீங்கினான் - பிரிந்தான்; நன்கு- (எனக்கு ஆபத்துக்கு உதவுதியென்கிற)நன்மையை, எண்ணி - எண்ணி, நான் வளர்த்த - நான் வளர்த்துப்போந்த, சிறு - சிறியவடிவையுடைத்தாய், பைதல் - முக்யமான, கிளியே - கிளியே! இன் - இனிமையாலே என்னைநோவுபடுத்துகிற, குரல் - குரலை, நீ - (அவன் வடிவுக்கு ஸ்மாரகமாய் நலிகிற) நீ, மிழற்றேல் - அர்த்தோக்தி ஸரஸமாகப் பண்ணாதே கொள்.

இ.—ஆறும்பாட்டில், தன்தசையை அறியாதே திருநாமத்தைச் சொல்லுகிற கிளியைக்குறித்து எனக்கு அஸஹ்யமான தசையிலே சொல்லவோ உன்னை வளர்த்தது? என்று அத்தை நிவர்த்திப்பிக்கிறாள்.

[நன்கெண்ணி] - திருநாமம் ஸாத்மிக்கும் தசையையறிந்து சொல்லவும், அஸஹ்யமான தசையில் தவிரவுமன்றோ உன்னைவளர்த்தது? [நான்வளர்த்த] - ஏக புத்ரைகளைப் போலேயாய்த்து வளர்த்தது. நான்ஒன்றை ஆதரிக்கவமையுமாகாதே அநந்யயாவாகைக்கு! அவனும் கிளியோபாதி ஸவ்யனாயிறேயிருப்பது. [சிறுகிளிப் பைதலே]-சிறுமை - பருவம். பைதல்-வயஸ்ஸுக்குத்தக்க பாசமுமின்றிக்கேயிருக்கை. உன் பசற்றனமிறே நலிகைக்கடி. [இன்குரல்]-''கூரியவேல் என்னுமாபோலே. [நீமிழற்றேல்] - நிரம்பாமென்சொல்லாலே என்னை முடியாதேகொள். மாத்ருவதத்திலேயும் ப்ரவ்ருத்திப்பார் உண்டோ? [என்னாருயிர்க் காகுத்தன்] - வ்யதிரேகத்தில் தரிக்க

அரிதாம்படியிறே கிட்டினபோது பரிமாறும்படி. "தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாக" என்றிறே இவர் இருப்பது. [நின்செய்யவாயொக்கும்வாயன்] - உன்னுடைய சிவந்தவாய்போலே யிருக்கும் வாயையுடையவன். உபமானத்தைச் சொல்லிச் சேர்த்துவிடுமித்தனையொழிய, உபமேயந்தன்னைப் பேசமுடியாது. உன்னைப்போலே சிவந்தகண்ணையும், கையையும் திருவடிகளையும் உடையவன். [நின்பசுஞ்சாமநிறத்தன்]- உன்னுடைய குளிர்ந்த ச்யாமமான நிறத்தையுடையவன். பசுஞ்சாமம் - ச்யாமமாய், எரித்திருக்கையன்றிக்கே குளிர்ந்திருக்கை. பச்சைநிறமென்னவுமாம். ஒருடம்பிலே இத்தனைபகை தேடிவைக்கலாமோ! [கூட்டுண்டு நீங்கினான்] - கலந்து என்ப்ரக்ருதியை அறிந்துவைத்துப் பிரிந்தான்: அவன் கூடவிருந்தாலன்றோ உன்படிகள் அநுகூலமாயிருப்பது! தனியிருப்பில் நலிவார் ராவணாதிகளன்றோ! அநுகூலர் நலிவரோ?

ஈடு.—ஆறும் பாட்டு. தன்தசையறியாதே திருநாமத்தைச்சொல்லுகிற கிளிப்பிள்ளையைக்குறித்து, எனக்குஅஸஹ்யமான தசையிலே சொல்லவோ உன்னைவளர்த்தது? என்று அத்தை நிவர்த்திப்பிக்கிறாள்.

[நன்கெண்ணி] - திருநாமம் ஸாத்மிக்கும் தசையறிந்து சொல்லவும் அஸஹ்யமானதசையில் தவிரவுமன்றோ உன்னைவளர்த்தது? [நான்வளர்த்த] - ஏகபுத்ரைகளைப் போலே யாயத்துவளர்த்தது; நானொன்றைஆதரிக்கவமையுமாகாதே அந்யமாவாகைக்கு! அவனும் கிளியோபாதி ஸவ்யனாயிறே யிருப்பது. [சிறுகிளிப்பைதலே] - சிறுமை-பருவம். பைதல் - வயஸ்ஸாக்குத்தக்க பாகமுமின்றிக்கேயிருக்கை. உன் பசற்றனமிறே நலிகைக் கடி. [இன்குரல்] - "கூரியவேல்" என்னுமாபோலே. [நீ மிழற்றேல்] - நிரம்பா மென்சொல்லால் என்னை முடியாதேகொள்! மாத்ருவதத்திலேயும் ப்ரவர்த்திப்பாருண்டோ? [என்னாருயிர்க் காகுத்தன்] - வ்யதிரேகத்தில் தரிக்கையரிதாம்படி யிறே கிட்டினபோது பரிமாறிற்று. "தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன்தஞ்சமாக" என்றிறே இவரிருப்பது; [நின்செய்யவாயொக்கும்வாயன்] - உன்னுடைய வாய்போலே யிருக்கும் வாயையுடையவன். உபமாநத்தைச்சொல்லிச் சேர்த்துவிடுமித்தனையொழிய, உபமேயந்தன்னைப் பேசமுடியாது. [கண்ணன்கைக்காலினன்] -உன்னைப்போலே சிவந்த

௬ம் பாட்டு—நன்கெண்ணி இத்யாதி. "நான்வளர்த்த சிறுகிளிப்பைதலே - இன்குரல் நீமிழற்றேல்" என்ற பதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - தன்தசை இத்யாதி.

வளர்க்கையிலே, நன்றாகவெண்ணி வளர்க்கையாவதென்? என்ன, அருளிச்செய்கிறார்-திருநாமம் இத்யாதி. "கிளிப்பைதலே" என்ற ஏகவசநத்தைக்கடாக்ஷித்தாதல், "வளர்த்த" என்ற மாத்ரத்துக்காதல் அர்த்தமருளிச்செய்கிறார் - ஏகபுத்ரைகளை இத்யாதி. இத்தால் ஹார்த்தபாவமாதல், "நான் வளர்த்த" என்றதுக்கர்த்தமாதல் - நானொன்றை இத்யாதி. நீ யாதரித்தாரில் அப்படி யந்யதாவானாருண்டோவென்ன - அவனும் இத்யாதி. சிறுமையும் பைதலும் புநருக்தமன்றோவென்ன - சிறுமை இத்யாதி. "பைதல்" என்றத்தால்பாவம் - உன்பசற்றனம் இத்யாதி. பசற்றனம் - பால்யம். விஸ்லேஷதசையில் இதின்குரல், விரஹிணிகளுக்கு பாதகமாயிருக்குமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - கூரியவேல் இத்யாதி. நிரம்பாமென்சொல் - அபூர்ணமாய் ம்ருதுவானஅர்த்தோக்திகள். "யான்வளர்த்த" என்றத்தைக்கடாக்ஷித்து, "மிழற்றேல்" என்றதுக்கு ஹார்த்தபாவம் - மாத்ருவதத்திலேயும் இத்யாதி. கூட்டுண்டுநீங்கினவனை "என்னாருயிர்" என்பானென்? என்ன - வ்யதிரேகத்தில் இத்யாதி. வ்யதிரேகத்தில் - விஸ்லேஷத்தில். பெருமாளை இவர் தஞ்சமென்றிருப்பாரோவென்ன - தயரதற்கு இத்யாதி. செய்யவாயனென்றால் போதாதோ? "செய்யவாயொக்கும்" என்பானென்? என்ன - உபமாநத்தை இத்யாதி. உன்னைப்போலேசிவந்த என்றது - உன்வாயைப்போலே சிவந்த

கண்ணையும், கையையும், திருவடிகளையுமுடையவன். [நின் பசுஞ்சாமநிறத்தன்] - உன்னுடையகுளிர்ந்த ஶ்யாமமான நிறத்தையுடையவன். [பசுஞ்சாமம்] - ஶ்யாமமாய் எரித்திருக்கையன்றிக்கே, குளிர்ந்திருக்கை. ஓருடம்பிலே இத்தனை பகைதேடிவைக்கலாமோ? [கூட்டுண்டு நீங்கினான்] - கலந்து என் ப்ரக்ருதியையறிந்துவைத்துப் பிரிந்தான்; அவன் கூடவிருந்தாலன்றோ உன்படிகள்அநுகூலமாயிருப்பது? தனியிருப்பில் நலிவார் ராவணாதிகளன்றோ? அநுகூலரும் நலிவரோ? (சு)

ஏழாம் பாட்டு.

கூட்டுண்டுநீங்கிய கோலத்தாமரைக்கண்செவ்வாய்
வாட்டமிலென்கருமாணிக்கம் கண்ணன்மாயன்போல்
கோட்டியவில்லோடு மின்னுமேகக்குழாங்கள்காள்
காட்டேன்மின்நும்முருஎன்னுயிர்க்குஅதுகாலனே.

ஆ.—(கூட்டுண்டு) - என்னோடே கூட்டுண்டுநீங்கி, அதினால் ஒருவாட்டமின்றியே ஆஶ்சர்யமான அழகையுடையவனாய், ஶார்ங்காதிதிவ்யாயுதோபேதனாய், ஹாரகேயூராதி திவ்யபூஷண பூஷிதனாயிருந்த கண்ணனைப்போலேயிருந்த, கோட்டிய வில்லொடு மின்னுமேகக்குழாங்கள்காள்! இந்த வ்யஸநத்தின்மேலே, காட்டேன்மின் நும் உரு; என்னுயிர்க்கு அதுகாலன் என்கிறாள்.

ஓ.—ஏழாம்பாட்டில், அவனுடைய திருநிறம்போலேயிருக்கிற நிறத்தையுடைய மேகமாலையைக் கண்டு பொறுக்கமாட்டாமை உங்கள் வடிவைக்காட்டி என்னை முடியாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

[கூட்டுண்டென்றுதொடங்கி]-என்னோடேகலந்து பிரிகையாலே அழகிய தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்களையும் சிவந்த திருப்பவளத்தையும் எனக்கு மறக்கவொண்ணாதபடி ஶ்லாக்யமான கறுத்த திருநிறத்தையுமுடையனாய் அத்யாஶ்சர்யமான வடிவழகையுடையனுமாய், என்னைப்பிரிந்து ஒருவாட்டமின்றிக்கேயிருக்கிற க்ருஷ்ணனைப் போலே. [கோட்டியவில் என்று மேலுக்கு] - வளைந்த வில்லோடே கூட மின்னுகின்றுள்ள, மேகஸமூஹங்காள்! உங்கள்வடிவைக் காட்டாதே கொள்ளுங்கோள்; என்செய்யவென்னில்,-என்னுடைய ப்ராணனுக்கு அது ம்ருத்யு. அதுவென்று-மேகங்களுடைய வடிவைக் காணமாட்டாமை பராங்முகியாயிருந்து சொல்லுகிறாள்.

ப.—அநந்தரம், தன்னை ஈடுபடுத்தின க்ருஷ்ணன்வடிவுக்குப் போலியான மேகஸமூஹத்தைக்கண்டு, என்னைமுடிக்கைக்கு ஹேதுவான உங்களுடைய ரூபத்தைக் காட்டாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

என்றபடி. பசுமை - குளிர்த்தி. சாமம் என்றால் போராதோ? 'பசு' என்று குளிர்த்தியை விசேஷிப்பானென்? என்ன - ஶ்யாமமாய் இத்யாதி. "நின்செய்யவாயொக்கும்" இத்யாதியால் ஸூசிதம் - ஓருடம்பிலே இத்யாதி. இவைபகையோ, அவனுக்குஸ்மாரகமாய் அநுகூலமா யிராதோவென்ன - அவன் கூட இத்யாதி. "நீமிழற்றேல்" என்றக்ரியாபதத்துக்குச்சேர பாவம்-தனியிருப்பில் இத்யாதி வாக்யத்வயம். 'நன்கெண்ணி - நான்வளர்த்த சிறுகிளிப்பைதலே - என்னாருயிர்க்காகுத்தன்' என்று தொடங்கி, 'நீங்கினான் - இன்குரல்-நீமிழற்றேல்' இத்யந்வயஃ (சு)

கூட்டுண்டு - என்னோடு ஏகரஸமாம்படி ஸம்ச்லேஷித்து, நீங்கிய - பிரிந்த தசையில், கோலம் - தர்சநீயமான, தாமரை - தாமரைபோலேயிருக்கிற, கண் - கண்ணையும், செம்-சிவந்த, வாய்-அதரத்தையுமுடையனாய், வாட்டமில் என் கருமாணிக்கம் - இடைவிடாமல்எனக்கு ஸ்ம்ருதிவிஷயமான நீலரத்நம்போலேயிருக்கிற வடிவையுடையனாய்க்கொண்டு, (எனக்கு), கண்ணன் - (ஸ்வபனான) க்ருஷ்ணனாகிற, மாயன்போல்- ஆச்சர்யசேஷ்டிதனைப்போலேயிருக்கிற, கோட்டிய - வளைக்கப்பட்ட, வில்லொடு-வில்லோடே கூட, மின்னும் - மின்னுகிற, மேகக்குழாங்கள்காள் - மேகஸமூஹங்கள்காள்! என் - என்னுடைய, உயிர்க்கு - ப்ராணனுக்கு, அது காலன் - அது ம்ருத்யுரூபமாயிருக்கும்; நும்உரு - உங்கள்வடிவை, காட்டேன்மின் - காட்டாதேகொள்ளுங்கோள்.

இ.—ஏழாம் பாட்டில், அவன்வடிவுக்குப் போலியான மேகமாலைகளைக் கண்டு உங்கள் வடிவைக்காட்டி என்னைமுடியாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

[கூட்டுண்டு நீங்கியவென்று தொடங்கி]-"ஏகதத்த்வம்" என்னும்படி கலந்து பிரிந்தபின்பு அவனுடைய அவயவஸோபையிருந்தபடி என்னுதல்; இவளோடே கலக்கையாலேவந்த ஸோபையென்னுதல். [கோலத்தாமரைக்கண் செவ்வாய்] - தர்சநீயமான தாமரைபோலேயிருக்கிற கண்ணையும் சிவந்தவாயையும் உடையவனாய். [வாட்டமில் என்கருமாணிக்கம்] - பிரிந்தபின்பும் மறக்கவொண்ணாதபடி ஸ்மாரகமாய் நசிக்கிற நீலரத்நம்போலேயிருக்கிற நிறத்தையுடையனாய்; கலந்தபோது வடிவிற்பிறந்த செவ்வி பிரிந்தபின்பும் அப்படியேயிருக்கிறபடியைச் சொல்லிற்றாகவுமாம்: இத்தலையை வெறுந்தரையாக்கினபின்பு நிறம் இரட்டித்தபடி. "நைவஸோஷ்ஸோகாது" என்று அவனிருக்க, அரைக்ஷணம் தாழ்த்தோமென்று இவ்வார்த்தையைச் சொல்லுகிறாளிறே! [கண்ணன் மாயன்போல்] - ஆச்சர்யசேஷ்டிதனான க்ருஷ்ணனைப்போலே; கலந்தபோது காலைக் கையைப்பிடித்துப் பரிமாறி ஸ்வபனாயிருந்தபடி. [கோட்டிய இத்யாதி] - வளைத்த வில்லோடேகூடி மின்னாநின்றுள்ள மேகஸமூஹங்காள்! கௌஸ்துபஸ்தாநீயமிறே மின். [காட்டேன்மின் நும்உரு] - ம்ருத்யுஸத்ருசமான உங்கள் வடிவைக்காட்டாதே கொள்ளுங்கோள். அவ்வடிவைக்கொண்டு அகலிருந்தவனோடு உங்களோடு வாசியற்றிருந்ததீ! "அதுவென்" என்னில் ?- [என்னுயிர்க்கு அது காலனே]-பண்டே விரகந்தின்ற என்னுடைய ப்ராணனுக்கு ம்ருத்யு. 'குழாங்கள்காள்' என்றுவைத்து, 'அது' என்கிறது காணமாட்டாமையாலே முகம்மாறிச் சொல்லுகிறாள்.

ஈடு.—ஏழாம்பாட்டு. அவன்வடிவுக்குப்போலியான மேகமாலையைக்கண்டு, உங்கள் வடிவைக்காட்டி என்னைமுடியாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

[கூட்டுண்டுஇத்யாதி] - "ஏகதத்த்வம்" என்னும்படி கலந்து பிரிந்தபின்பு அவனுடைய அவயவஸோபையிருந்தபடி யென்னுதல்; இவளோட்டைக் கலவியால்வந்த ஸோபையென்னுதல். [கோலத்தாமரைக்கண்செவ்வாய்] - அழகியதாமரைபோலேயிருக்கிற திருக்கண்களையும், சிவந்த அதரத்தையுமுடையனாய். [வாட்டம் இத்யாதி] - கலந்த

ஏழாம்பாட்டு.—கூட்டுண்டு இத்யாதி. "கண்ணன்மாயன்போல்கோட்டியவில்லொடு மின்னுமேகக்குழாங்கள்காள்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - அவன்வடிவுக்கு இத்யாதி.

"கோலத்தாமரைக்கண்செவ்வாய்"—அவயவஸோபைசொன்னதுக்கு பாவத்வயம்-ஏகதத்த்வம் இத்யாதிவாக்யத்வயத்தாலே. மூந்தினபாவம் - வெறுப்பிலே. கீழ்ப்பதத்தில் பாவத்வயாத

போதைச்சேவ்வி, விரஹத்திலும் தலைச்சாவி வெட்டப்போகிறதில்லைகாணும்; இத்தலையை வெறுந்தரையாக்கினபின்பு இரட்டித்தபடி. [என்கருமாணிக்கம்] - பிரிந்தபின்பும் மறக்கவொண்ணுதபடி நலிகிற நீலரத்நம்போலேயிருக்கிற திருநிறத்தை யுடையனுய். "ஔேநவதம்ஸாநமஸாகாந" (நைவதம்ஸாந்நமஸாகாந்) என்று அவனிருக்க, அரைக்ஷணந் தாழ்த்தானேன்னு இவ்வார்த்தையைச் சோல்லுகிருளிறே! [கண்ணன் மாயன் போல்] - ஆஶ்சர்யஸமேதனை க்ருஷ்ணனைப்போலே; கலந்தபோது காலைக்கையைப் பிடித்துப் பரிமாறி ஹவ்யனுயிருந்தபடி. [கோட்டியவில்இத்யாதி] - வளைத்தவில்லோடே கூடி மின்னுநின்றுள்ள மேகஸமூஹங்காள்! கௌஸ்துபம் திருமேனிக்கு ப்ரகாஶகமாமாபோலே இராநின்றது மின். [காட்டேன்மின் நம் உரு] - ம்ருத்யுஸத்ருஶமான உங்கள் வடிவைக் காட்டாதேகோள்ளுங்கோள்! அவ்வடிவைக்கோண்டு அகல இருந்தவனோடு உங்களோடு வாசியில்லையா யிருந்ததீ! "அதுவேன்?" என்னில், - [என்னுயிர்க்கு அது காலனே]-விரஹம்தின்று பண்டே தற்புஅற்ற என்ப்ராணனுக்கு அது ம்ருத்யுவாகாநின்றது. 'குழாங்கள்காள்காட்டேன்மின்நம்உரு' - என்றுவைத்து 'அது' - என்கிறது, காணமாட்டாமை, முகத்தைமாறவைத்துச் சோல்லுகிருள். (எ)

எட்டாம் பாட்டு.

உயிர்க்கதுகாலனேன்றுஉம்மையானிரந்தேற்கு நீர்
குயிற்பைதல்காள்!கண்ணன்நாமமேகுழறிக்கோன்றீர்
தயிர்ப்பழஞ்சோற்றேடு பாலடிசிலுந்தந்து சோல்
பயிற்றியநல்வளமூட்டினீர் பண்புடையீரே!

குணமாக வ்யுத்க்ரமமாக ஸாவத்வயம் - கலந்தபோதை இத்யாதிவாக்யத்வயம். தலைச்சாவிவேட்டப்போகிறதில்லை - எழுச்சியறுக்கப்போகிறதில்லை. தலைச்சாவிவேட்டுகையாவது - பயிர் மதாளித்துப்போனுல் தனிசிலைபறித்துப் போகடுகை. இத்தால் - கலந்தபோதைச் செவ்வியின் ஆதிக்யஞ்சொல்லுகிறது. "என்" என்றதுக்குஸாவம் - பிரிந்தபின்பும் இத்யாதி. வாட்டமின்றிக்கேயிருக்கிற, என்னுடைய நீலரத்நம்போன்ற வடிவையுடையவனென்று ஶப்தார்த்தம். "என்-" எனக்கு எப்போதும் ஸ்ம்ருதிவிஷயமான என்றபடி. "நஜீவேயம்க்ஷணமபி" என்றிருக்கிறவனை, விஶ்லேஷத்தாலே உஜ்ஜ்வலனுயிருக்கிருனென்பானேன்? என்ன - நைவதம்ஸாந் இத்யாதி. ஆற்றுமையாலேஎன்றபடி. "நைவதம்ஸாந்நமஶகாந்நகீடாந்நஸரீஸ்ருபாந்। ராவவோபநயேத்காத்ராத்த்வத்கதேநாந்தராத்மநா" இதி வைதேஹீம்ப்ரதி மாருதிः. ஸுந்-(ருகூ-சஉ) ஆஶ்சர்யமேதென்ன-கலந்தபோது இத்யாதி. கோட்டுதல் - வளைத்தல், "மின்" என்றதுக்கு த்ருஷ்டாந்தமேதென்ன - கௌஸ்துபம் இத்யாதி. "கோட்டியவில்" என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - ஶ்ரீஶார்ங்கமென்று கண்டுகொள்வது. "நம்" என்றதுக்குஸாவம் - அவ்வடிவை இத்யாதி, என்னுதல்; ஆஶ்வஸிப்பிக்கவந்த எங்களையிங்ஙன் சொல்லுவானேன்? என்ன - அவ்வடிவை இத்யாதி என்னுதல். அதுவேன்னேன்னில் என்றது - உம்முருவைக் காட்டாதேகொள்ளுங்கோ ளென்கிறதுக்கடி என்? என்னில் என்றபடி. தற்புஅற்ற- பலமற்ற. "நம்முரு" என்று ப்ரத்யக்ஷமாகச்சொல்லிவைத்து, "அது" என்கிறதென்? என்ன - குழாங்கள்காள் இத்யாதி. அடைவே அந்வயம்.

(எ)

ஆ — (உயிர்க்கது) - 'கண்ணனுடைய திருநாமங்களைச்சொல்லில் நான் முடிவன்: அவற்றைச் சொல்லாதொழியவேணும்' என்று உங்களை நான் இரக்க, பின்னையும் அவற்றையேசொல்லிக்கொன்றிகோள்! நான் உங்களை வளர்த்தப்ரயோஜநம் அழகிதாகப் பெற்றேனென்று, தன் குயில்களை இன்னாதாகிறாள்.

ஒ. — எட்டாம்பாட்டில், சில குயில்களைக்குறித்து, வேண்டாவென்று ப்ரார்த்திக்க மேன்மேல் திருநாமத்தைச்சொல்லி நலிந்திகோள்: உங்களை வளர்த்த ப்ரயோஜநம் பெற்றேனிறே என்று இன்னாதாகிறாள்.

[உயிர்க்கென்று தொடங்கி] - 'குயிற்பிள்ளைகாள்! அவனுடைய திருநாமங்களை நீங்கள் சொல்லில் நான்முடிவன்; அவற்றைச் சொல்லாதொழியவேணும்' என்று உங்களை இரந்த எனக்கு, க்ருஷ்ணனுடைய திருநாமங்களையே சொல்லி என்னைக் கொன்றிகோள். [தயிர்ப்பழஞ்சோறென்று தொடங்கி] - காலந்தோறும் உங்களுக்கு அபேக்ஷிதமானவற்றையே தேடியிட்டு உங்களைச்சொல்ல அப்பஸிப்பித்ததுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணினிகோள்! சாலத் தக்காராயிருந்திகோள்!

ப. — அநந்தரம், அவஸாதிகரமான க்ருஷ்ணன்நாமங்களைச்சொல்லவேண்டாவென்கைச்செய்தே சொல்லிமுடித்திகோளே!' என்று, தான்வளர்த்த சிலகுயில்களைச் சொல்லுகிறாள்.

நான் - நான், (இவ்வவஸ்தையில்), அது - அது, உயிர்க்கு - ப்ராணனுக்கு, காலமென்று - ம்ருத்யுரூபங்கிடீகோளென்றுசொல்லி, உம்மை - உங்களைக்குறித்து, இரந்தேதற்கு - ப்ரார்த்தித்த எனக்கு; குயிற்பைதல்காள் - குயிற்பிள்ளைகாள்! நீர் - நீங்கள், (உங்கள் பிள்ளைத்தனத்தாலே), கண்ணன்நாமமே - ஸ்ரீ ப்ருஷ்ணனுடைய திருநாமங்களை, குழறி - அநக்ஷரமதுரமாகச்சொல்லி, கொன்றீர் - முடித்துவிட்டிகோளிறே! (உங்கள்பால்யத்துக்கீடாக), தயிர்ப்பழஞ்சோற்றொடு - இளம்போதைக்குத் தயிரையுடைத்தான பழஞ்சோற்றோடே, பாலடிசிலும் - பிற்காலுக்குப்பாலுஞ்சோறுமாக, தந்து - (உங்களுக்குத்)தந்து, சொல் - (அவன் திருநாமங்களாகிற) சொற்களை, பயிற்றிய - அப்பஸிப்பித்த, (அதுக்குப்ரத்யுபகாரமாக), நல்வளம் - நல்லஸம்பத்தை, ஊட்டினீர் - அநுபவிப்பித்தீர்! பண்பு - நல்லசீர்மையை, உடையீர் - உடையீராயிருந்தீர்!

இ. — எட்டாம் பாட்டில், சில குயில்களைக்குறித்து திருநாமஞ் சொல்லவேண்டாவென்றிரக்க, அத்தையே சொல்லி நலிந்திகோள்! உங்களை வளர்த்த ப்ரயோஜநம் பெற்றேன்! என்கிறாள்.

[உயிர்க்கு] - தோற்புரையேபோமதன்று அது என்கிறாள், தன்வாயாலே சொல்ல மாட்டாமையாலே. [காலமென்று] - நலிகையன்றிக்கே முடிக்குமென்று. [உம்மை] - நீங்களேயிரந்து என்கார்யஞ்செய்யும் உங்களை. [நான்] - உங்களுக்கு ஜநநியாய் மறக்கவொண்ணாத நான். [இரந்தேதற்கு] - உங்களை நியமித்தேனோ? என்செல்லாமையாலே சரணம்புகுந்த எனக்கு. [நீர்] - நியாம்யரான நீங்கள், பாரதந்த்ர்யாதுகரானிகோள். [குயிற்பைதல்காள்] - உங்கள் பால்யம் என்ப்ராணனோடே போய்த்திறே! பருவம்நிரம்பாமை ... தாய்வாசியறியவேண்டாவோ? "நாங்கள்செய்ததென்?" என்ன, [கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்] - தீரா மாற்றாலே நெஞ்சைப் புண்படுத்திவைக்கும் க்ருஷ்ணன் திருநாமங்களையே அவ்யக்தமாகச்சொல்லி முடித்திகோள். ம்ருதஸஞ்ஜீவநமான ராம

ஞுணங்களை ஒருகால் சொல்லலாகாதோ ? [தயிர் இத்யாதி] - தயிரும் பழஞ்சோறும், பாலும்வெஞ்சோறும் அவ்வவகாலங்களுக்கு உசிதமாகத்தந்து திருநாமங்களைக்கற்பித்ததுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணினிகோள். [நல்வளமூட்டினீர்] - நல்லஸம்பத்தை ஹுஜிப்பித்திகோள் ! நான் காலந்தோறும் உங்களுடைய ரக்ஷணம்பண்ணிப் போந்தேன்; நீங்களும் இவ்விடங்களிலே ஙலிந்துபோந்திகோள் ! [பண்புடையீரே] - ப்ராப்தியும் ஹவ்யதையும் கிடக்க, சாலநீர்மையுடையீரா யிருந்திகோள் ! ரக்ஷகவிஷயத்தில் நிர்த்தயராயிருந்திகோள் ! பண்பு - குணம்.

ஈடு.—எட்டாம் பாட்டு. சில குயில்களைக்குறித்து, திருநாமஞ்சொல்லவேண்டாவென்று நான் இரக்க, அத்தையேசொல்லி நலிந்திகோள் ; உங்களை வளர்த்த ப்ரயோஜநம்பெற்றேன் என்கிறாள்.

[உயிர்க்குஅது] – தோற்புரையேபோமதன்று அது வென்கிறாள், தன்வாயாலே சொல்ல மாட்டாமையாலே. [காலனென்று] - நலிகையன்றிக்கே முடிக்குமென்று. [உம்மை] - இரந்து என்கார்யஞ்செய்யும் உங்களை. [நான்] - உங்களுக்கு மறுக்கவொண்ணுதபடி ஜநநியான நான். [இரந்தேற்கு] - உங்களை நியமித்தேனோ? என்செல்லாமையாலே சரணம்புகுந்த எனக்கு. [நீர்] - நியாம்யரான நீங்கள். ஸரணாகதவாதுகரானிகோள். [குயிற்பைதல்காள்] - உங்கள்பால்யம் என்ப்ராணனோடே போய்த்திறே! பருவம் நிரம்பாமையிலும் தாய்வாசியறிய வேண்டாவோ ? "நாங்கள்செய்ததேன் ?" என்ன, [கண்ணன்நாமமே குழறிக்கோன்றீர்] - தீரா மாற்றாலே நெஞ்சைப்புண்படுத்திவைக்கும் க்ருஷ்ணன் திருநாமங்களையே அவ்யக்தமாகச்சொல்லி முடித்திகோள். * ம்ருதஸஞ்சீவநமான ராமகுணங்களையும் ஒருகால் சொன்னலாகாதோ ! [தயிர்இத்யாதி] - தயிரும்பழஞ்சோறும், பாலும்வெஞ்சோறும் அவ்வவகாலங்களிலேதந்து திருநாமங்களைக்கற்பித்த அதுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணினிகோள் ! [நல்வளமூட்டினீர] - நல்லஸம்பத்தை புஜிப்பித்திகோள் ! நான் காலந்தோறும் உங்களுடைய ரக்ஷணம்பண்ணிப்போந்தேன் ; நீங்களும் இவ்விடங்களிலேவந்து நலிந்துபோந்திகோள். இக்குயில்களுக்கு அந்நதோஷம்பலித்து

ருக்கை. கட்டடங்க அழகிதாயிருக்கை. விஜயமுண்டானபோதே ப்ராஸ்திமாலைகளுஞ் செல்லாநிற்குமிறே. [சன்மம்முடிவெய்தி] - ஜந்மபரம்பரைக்கு அவஸாநத்தைலபித்து. [நாசங்கண்டார்களெங்கானலே]-ஜந்மத்துக்கு அடியான ஸம்ஸாரமும் நசிக்கும். கானல்-ம்ருகத்ருஷ்ணிகை. இன்னமிங்கே பிறக்கவிராதே, ஸத்வத்துக்கு ஸம்பந்தம் ஸாத்மிக்கும் தேசத்திலேபுகுவர்கள். (கக)

மையாயிரம்" என்றகூட்டிஷாவம் - விஜயம் இத்யாதி. ப்ராஸ்திமாலைகள் - வெற்றி ஸ்தோத்ர மாலைகள். "சன்மம்" என்றது - ஜாத்யேக வசநம். நாசங்கண்டார்கள் - நாசமாக்கிவிட்டோர்கள். எங் கானல் - நம்முடைய ஸம்ஸாரம். "எம்" என்று - ஸம்ஸாரிகளைச் சொல்லுகிறது. ஸலிதம் - இன்னமிங்கே இத்யாதி. "கானல்" என்று - ம்ருகத்ருஷ்ணிகைபோல் ஸம்ஸாரமென்றபடி. 'கடியனும்' என்று தொடங்கி, 'இப்பத்தினுல் சன்மம் முடிவெய்தி - எங்கானல் - நாசங்கண்டார்கள்'' என்றந்வயம். (கக)

த்ராவிடோபநிஷத்ஸங்கதி.—ஸ்வஸ்யாஸ்தோத்ரேண தந்நஸ்ஸ்வயமிதி ரமயந் ஸம்ப்ராப்யாஷ்டவிஶோஷஸிரிஸ்யஸ்தாஸ: | யத்ஷ்டேஷ்டமஸ்யஷத்தேஷ்வேதா ஸம்ஸ்தூயந்த்யஸ்த தாதேநாஶ்ரயந்தம் ஷிதே ||

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— ஶ்ரீஶேஷாதீந் ஸ்வா உவிஶேஷிதயாவாஞ்சாத்ஸ்வஸம்ஶ்லேஷஸம்ஶ்லேஷஸிம்ஹாஸந்ததாஸ்வ தாகஷ்டகாஸ் ஒளதாயபூர்வேவிபூஸிஷ்டாவி உ ஸவஸ்தகம் ஶஷ்டிணே ஶ்ரீவ ஸத்ரா ஶ்ரீஸ்தாபூம்வைஸ்யஸ்யஷாரிஷிதிஶஜ்ஞஸ்வமித்ராஜ ||

திருவாய்மொழி நூற்றந்தாதி.

> உருகுமாலென்னெஞ்சமுன்செயல்களெண்ணிப்
> பெருகுமால்வேட்கையெனப்பேசி — மருவுகின்ற
> வின்னாப்புடனவன்செய்ரக்ஷையுரைத்தமாறன்சொல்
> † என்னச்சொல்லாதிருப்பதெங்கு.

ஆழ்வார்திருவடிகளே ஶரணம், எம்பெருமானார்திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

---

† 'என்னல்ல'ன்றும் பாடம்,

ஏழாந்திருவாய்மொழி. எங்கானல் - ப்ரவேசங்கள்.

ஆ.—(எங்கானல்.) - இந்த அப்ராப்திகர்ப்பமான குணாநுஸந்தாந ஜநித ப்ரீதியானதுமாறி அப்ராப்த்யம்சமே தலையெடுத்து அந்யாபதேசத்தாலே தூதப்ரேஷணம்பண்ணுகிறார்.

ஒ.—ஏழாந்திருவாய்மொழியில், இப்படி அப்ராப்திகர்ப ஸ்மரணத்தாலே மிகவும் ப்ரீதரானவர்க்கு இப்போது ஸம்ஸ்லேஷஸாக்ஷாத்கார மில்லாமையாலே, ஸ்மரணத்தால்வந்த ப்ரீதியும் மாறி அப்ராப்தியே தலையெடுத்து, அத்யந்தம் அவஸந்நரான ஆழ்வார், தம்முடைய தசையை ஒருபிராட்டியுடைய தூதவாக்யத்தாலே எம்பெருமானுக்கு அறிவிக்கிறார். எம்பெருமானுடைய அழகிலே ஈடுபட்டு அவனோடே ஸம்ச்லேஷித்தாள் ஒருபிராட்டி அவன்வரவு காணாதே அவனாலல்லது செல்லாத ப்ரக்ருதியாகையாலே தன்னாற்றாமையாலே க்ருஹத்தில் நின்றும் உத்யாநப்ரதேசத்திற் சென்று, அங்கேயிருந்த சிலபக்ஷிகளைக்குறித்து நிரதிசயபோக்யமான வடிவையுடையனாய் க்ருபாப்ரசுரனானவன், தான் தனக்கு ஸ்நேஹிகளானாரோட்டைப் பரிமாற்றத்தாலே என்தசையை உணராதே மறந்திருந்தானத்தனை. ஆதலால், தன்னழகைக் கண்டு பிரிந்தார் தரிப்பரோ என்று அவனுக்கு அறிவிக்கவேணுமென்று அவற்றை ஸவிநயமாக இரக்கிறாள்.

ப.—ஏழாந்திருவாய்மொழியில், கீழ் குணஸ்மரணத்தாலே சிதிலரானவர், அந்த சைதில்யம் ஸாக்ஷாத்ஸம்பவபர்யந்தமான அபிநிவேசத்தைப் பிறப்பிக்க, அநுபவயோக்யமாம்படி திருமூழிக்களத்திலே எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனுடைய அதிசயித போக்யதாகாரத்தையும், அஸாதாரணஜநாநுபாவ்யத்வத்தையும், சேஷித்வப்ரகாசகரூபவைலக்ஷண்யத்தையும், நித்யாநுபாவ்ய சேஷித்வத்தையும், நிரதிசயவிபூதிமத்த்வத்தையும், நித்யாநபாயிநீஸம்பந்தத்தையும், அத்யுஜ்ஜ்வல அவயவத்வத்தையும், ஆபிரூப்யாதிசயத்தையும், அஸாதாரணசேஷித்வசிஹ்நத்தையும், அநுபஹித க்ருபாயோகத்தையும் அநுஸந்தித்து, ஏவம்விசிஷ்டனான ஸர்வேச்வரனைக் கிட்டியநுபவிக்கப்பெறாத ஆர்த்தியாலே ஸ்த்ரீபாவத்தாலே லபிக்கப் பாரித்தப்ரகாரத்தை, நாயகனான ஸர்வேச்வரனைப்பிரிந்தநாயகியானவள், வ்யதிரேகத்தில் தரிக்கவரிதான அவனுடைய அழகை யநுபவிக்கைக்காகச் சிலபக்ஷிகளை இரந்து தூதுபோகவிடுகிற பாசுரத்தாலே யருளிச்செய்கிறார். * அஞ்சிறையமடநாராயிலே - அபராதஸஹத்வம் பற்றாசாகவும், * வைகல்பூங்கழிவாயிலே - சேஷித்வஸம்பந்தம் பற்றாசாகவும், * பொன்னுலகாளீரிலே - ஏகரஸத்வம் பற்றாசாகவும், இத்திருவாய்மொழியிலே - ஸௌந்தர்யம் பற்றாசாகவும் தூதுவிடுகிறாள்: "ஸ்வாபாயஸம்ஸ்தாப்ய விஶ்லேஷ நவேஷ்வாஸ । ஸௌந்தர்யஸம்பத்ஸ்ப்ருஹயா ஸ்வட காநுபாவ தோக்தி:."

இ.—ஏழாந்திருவாய்மொழியில், அப்ராப்திகர்ப குணஸ்மரணத்தாலே மிகவும் ப்ரீதரானவர், போக்யதாதிசயத்தாலே அப்ராப்த்யம்சமே தலையெடுத்து அவனைப்பெறில் ஜீவித்தல், பெறாவிடில் முடிதலாம்படியான தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே

அருளிச்செய்கிறார். இயற்கையிலே புணர்ந்துபிரிந்தாளொருபிராட்டி, அவன் அழகிலே ஈடுபட்டு அவஸந்நையாய்த் தன்னாற்றாமை கைகொடுக்க உத்யாநத்திலே சென்று அங்கிருக்கிற பக்ஷிகளைக்குறித்து, 'பின்னானார் வணங்குஞ் சோதி திருமூழிக்களம்' என்கிறபடியே தூதுபோவார்க்கு அருமைப்பட்டு அறிவிக்கவேண்டாதபடி திருமூழிக்களத்திலே வந்துநின்றருளினான், தனக்கு நல்லாரை விடமாட்டாதவனாகையாலே நம்தசையை அறியாதிருந்தானத்தனை. க்ருபாஸ்வபாவனாகையாலே நம்தசையை அறிவிக்க வரும்; தன்னழகைக்கண்டு பிரிந்தார் தரிப்பரோ? என்று அறிவிக்கவேணுமென்று, அவற்றை ஸவிநயமாக இரக்கிறாளொருபிராட்டி பேச்சாலே தம்தசையை அருளிச்செய்கிறார். அஞ்சிறையமடநாரையில் "இத்தலையில் அபராதத்தாலே வாராதொழிந்தானை" என்று அவனுடைய அபராதஸஹத்வம் பற்றாசாகத் தூதுவிட்டார்; வைகல் பூங்கழிவாயில் "நல்லதுகண்டால் கால்தாழுமவனாகையாலே மறந்திருந்தானித்தனை; நம் ஆர்த்தியை யறிவித்தால் தன்னினிமையிலே நெஞ்சுவைப்பானொருவனல்லன்" என்று அதுபற்றாசாகத் தூதுவிட்டார்; பொன்னுலகாளியில் "ஐச்வர்யப்பரப்பாலே மறந்திருந்தானத்தனை. ஆச்ரிதரோடு ஏகரஸனென்று அறிவிக்கவே வரும்" என்று ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிட்டார்; இதில் தனக்கு நல்லாரை விடமாட்டாமையாலே வாராதிருந்தானத்தனை. "தன்வடிவழகது, குணங்களவை; ஆனபின்பு பிரிந்தார்க்கு ஜீவித்திருக்கப்போமோ" என்று அவ்வடிவழகும் குணங்களும் பற்றாசாகத் தூதுவிடுகிறது.

ஈடு.—கீழ் அப்ரீதிகர்ப்பஸுகாநுஸந்தாநத்தாலே மிகவும்ப்ரீதரானவர், ஸாத்ய ஹாநியாலே அப்ரீத்யம்ஸமே தலையெடுத்து, அவனைப்பெற்றுப் பிழைத்தல், பெறுவிடில் முடிதலாம்படியான தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிறார்.

இயற்கையிலே புணர்ந்து பிரிந்தாளொருபிராட்டி, அவன்வடிவழகிலே ஈடுபட்டு அவஸந்நையாய், தன்ஆற்றாமை கைகொடுக்கத் தன்உத்யாநத்திலேசென்று, அங்கிருக்கிற பக்ஷிகளைக்குறித்து, '''பின்னானார்வணங்குஞ்சோதி திருமூழிக்களம்'' என்கிறபடியே தூது போவார்க்கு அருமைப்பட்டு அறிவிக்கவேண்டாதபடி திருமூழிக்களத்திலேவந்து நின்றருளினான்; தனக்கு நல்லாரை விடமாட்டாதவனாகையாலே நம்தசையறியாதிருந்தானத்தனை; க்ருபாவானாகையாலே நம் தசையறிவிக்கவரும்; ''உம்மைப்பிரிந்தார் தரிப்பரோ?'' என்று அறிவிக்கவேணும்'' என்று அவற்றை ஸவிநயமாக இரக்கிறாளொருபிராட்டி பேச்சாலே தம்தசையை அருளிச்செய்கிறார். * அஞ்சிறையமடநாரையிலே, ''நம்பக்கல் அபராதத்தாலே வாராதொழிந்தானத்தனை: அவனுடைய அபராத ஸஹத்வத்தை யறி

எங்கானல் ப்ரவேசே: ஸங்க்ரஹஸங்கதி - கீழ் அப்ரீதிகர்ப்ப இத்யாதி. பெறுவிடில் முடிதலாம்படியான என்றது - ''* என்னகமேனியொடும்'' என்றத்தைப்பற்ற.

'' அந்யாபதேசத்தாலே'' என்றத்தை உபபாதிக்கிறார் - இயற்கையிலே - யாத்ருச்சிகமாக வென்றபடி. அவஸந்நையாகில், உத்யாநகமநங்கூடுமோவென்ன - தன் ஆற்றாமை இத்யாதி. ஆனால் வாராதிருப்பானென்னென்ன - தனக்குநல்லாரை இத்யாதி. ''தமரோடங்குறைவார்க்கு'' என்றத்தைக் கடாக்ஷித்து - நல்லாரைவிடமாட்டாதவனாகையாலே என்றது. ''தான் தம்மைக்கொண்டகல்தல் தகவன்று'' என்றத்தைப்பற்ற - க்ருபாவானாகையாலே என்றது. ''நுங்கால்களென்தலைமேற் கெழுமீரோ'' என்றத்தைப்பற்ற - ஸவிநயமாகஇரக்கிறாள் என்றது. கீழே, தூதப்ரேஷணம்பண்ணின மூன்று திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் வாசியேதென்ன - அஞ்சிறைய இத்யாதி. அபராதத்தாலே என்றது- ''என்பிழையே நினைந்தருளி'' என்றத்தைப்பற்ற. அபராதஸஹ

விக்கவரும்'' என்று அபராதஸஹத்வம் பற்றாசாகத் தூதுவிட்டாள் ; * வைகல்பூங்கழி வாயில், ''நல்லதுகண்டால் கால்தாழுமவனாகையாலே திருவண்வண்டூரில் ஸம்ருத்தி யைக்கண்டு கால்தாழ்ந்தானத்தனை. நம்மார்த்தியை யறிவித்தால் தன்இனிமையில் நெஞ் சுவைப்பானொருவனல்லன்'' என்று அதுபற்றாசாகத் தூதுவிட்டாள் ; *,பொன்னுலகாளி யில், ''திருக்கோளூரேறப்போக'' என்று தன்னுடைய ந ஞரோபவநத்தளவுஞ்சென்று வைலஹாநியாலே போகமாட்டாதேயிருக்கிற பிராட்டி, பின்னையும், அவன்வரக்காணா மையாலே, ''வாராதொழிகைக்கு நிவந்யநம் - தன்ஐஶ்வர்யப் பரப்பாலே; தான் ஆஶ் ரிதரோடு ஏகரஸனாகையாலே வரும்'' என்று ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிட்டாள் ; இதில், ''தனக்கு நல்லராயிருப்பாரை விடமாட்டாமையாலே வாராதிருந்தானுமித்தனை; தன்வடிவழகது ; குணங்களவை; ஆனபின்பு, பிரிந்தார்க்கு ஜீவித்திருக்கப்போமோ?'' என்று அவன் வடிவழகும் குணங்களும் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்.

முதற் பாட்டு.

எங்கானலகங்கழிவாய் இரைதேர்ந்திங்கினிதமரும்
செங்காலமடநாராய் ! திருமூழிக்களத்துறையும்
கொங்கார்பூந்துழாய்முடியெங்குடக்கூத்தர்க்கென்தூதாய்
நுங்கால்களென்தலைமேற் கெழுமீரோநுமரோடே.

ஆ.—'தன்னைப்பிரியில் நான் தரிக்கமாட்டாததொருபடி, தன்அழகாலும் தன்செயலாலும் என்னைத் தோற்பித்துஅடிமையாக்கி, என்னோடே கலந்தருளிப்போய், திருமூழிக்களத்திலே இருந்தருளின எம்பெருமானுக்கு என்திறஞ்சொல்லவேணும்; உங்களுக்கடிமையே நானிருக்கிறேன் ' என்று நாரைகளை இரக்கிறாள்.

ஒ.—முதற்பாட்டில், சிலநாரைகளைக் குறித்து எம்பெருமான் தன்னுடைய அழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச் சொல்லி அவனுக்கு என் உரைமையை அறிவித்து வந்து உங்களுடைய திருவடிகளை என்தலைமேலே வைக்கவேணு மென்கிறாள்.

[எங்கானலென்று தொடங்கி] - எங்கள் உத்யாநத்தில் உள்ளிற்கழியிலே இரைதேடி இங்கே இனிதாகவர்த்திக்கிற சிவந்தகாலையுடைய ஶ்லக்ஷ்ணமான நாராய்! [எங் குடக் கூத்தர்க்கு] - ஆத்மநிவேதநவசநம். குடக்கூத்தாடின அழகைக்காட்டி என்னை யகப்படுத்திக் கொண்டவனுக்கு. [நுங்கால்களென்று தொடங்கி] - ஸபரிகரமாக உங் கள் திருவடிகளை என்தலைமேலே வைக்கவேணும்.

த்வம் என்றது - ''என்பிழைத்தாள் திருவடியின்தகவினுக்கு'' என்றத்தைப்பற்ற. ஸம்ருத்தியை என் றது - ''சிறந்தசெல்வம்'' என்றத்தைப்பற்ற. அதுபற்றாசாக - ஆர்த்தரக்ஷணதீக்ஷை பற்றாசாக; இது ''என்னையுமுளளென்மின்கள்'' என்றத்தைப்பற்ற. ஐஶ்வர்யப்பரப்பாலே என்றது - ''யாவையும் யாவருமாய்'' என்றத்தைப்பற்றவாதல், ''மூன்னுலகங்களெல்லாம்படைத்த'' என்றத்தைப்பற்ற வாதல். ஐகரஸ்யம் பற்றாசாக என்றது - ''தண்துழாய்நமக்கன்றி நல்கான்'' என்றத்தைப்பற்ற. வடிவழகு என்றது - ''அக்கமலத்திலைபோலுந்திருமேனி'' என்றத்தைப்பற்ற. ''தமரோடங்குறை வார்க்கு'' என்றத்தைப்பற்ற - குணங்களவை என்றது.

ப—முதற்பாட்டில், அதிசயிதமான போக்யதா ப்ரகாரத்தை யுடையனாயுள்ள க்ருஷ்ணனுக்கு என் தூதாகப்போன உபகாரத்துக்காக என்தலையிலே உங்கள் கால்களை வைக்கவேணுமென்று சிலநாரைகளை ஆதரித்து அபேக்ஷிக்கிறாள்.

எங்கானல்அகங்கழிவாய்-உங்களுக்கு விதிபோசார்ஹமாம்படி எங்கள் மயதையிலே வர்த்திக்கிற கடற்கரையிற் சோலையிலகவாயிற் கழியிடத்திலே, இரைதேர்ந்து - உங்கள் வைந்யாதிசயபர்ந்தோற்றம்படி இங்குத்தை வஸ்துவை போக்யமாக விரும்பி, இங்கு - ஸந்நிதியிலே, இனிது - ப்ரணயப்ரீதியோடே, அமரும் - வர்த்திக்கக்கடவையாய், செம் - என்தலைக்குஅலங்காரமென்னலாம்படி சிவந்திருக்கிற, கால் - காலையுடைத்தாய், மடம் - நியமித்துக் கார்யங்கொள்ளலாம்படி ம்ருதுதையையுடைய, நாராய்-, திருமூழிக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - ஆஸ்ரிதஸௌலப்யத்தைக்கொண்டு நித்யவாஸம்பண்ணுமவராய், கொங்குஆர் - தேன்மிஞ்சி, பூ - தர்ஸநீயமான, துழாய்முடி -திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமுடியையுடையராய், எங்குடக்கூத்தர்க்கு-குடக்கூத்தாடுகிற மனோஹாரிசேஷ்டிதத்தாலே எங்களுக்கு நிரதிசயபோக்யரானவர்க்கு, என் தூதாய் -என்னுடைய தூதக்ருத்யத்திலே சென்று, (அந்தவுபகாராதிசயத்தாலே),நுமரோடே-(''ஸ்வாசார்யவம்ஸஜா ஸ்வேஷ்டா'' என்கிறபடியே, உன்ஸம்பந்திகளான) தாரபுத்ராதிகளோடேகூட, நுங்கால்கள் - எனக்காக வழிநடந்த உங்கள் கால்களை, என்தலைமேல் - அதுக்குப்பாத்ரமாகையாலே உத்தமாங்கமான என் தலையிலே, கெழுமீர் - சேர்க்கவேணும். உபகாரகன் அசாபீனனாகிலும் உபகாரஸ்ம்ருதி தத்ஸம்பந்தி பரம்பரையளவுஞ் செல்லுமிறே. ''நாராய்'' என்கிற ஒருமை ஜாத்யேகவசநம்.

இ.—முதற்பாட்டில், சிலநாரைகளைக் குறித்து அவன் தன்அழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச் சொல்லி என்தசையை அவனுக்கு அறிவித்துவந்து உங்களுடைய திருவடிகளை என்தலைமேலே வைக்கவேணுமென்கிறாள்.

[எங்கானல்] - ஐகவத்விஷயத்தில் உபகாரகரோடு ஐகரஸம்பந்தம் ப்ராப்தமாயிருக்க 'எம்' என்கிறது- உபகாரஸ்ம்ருதியாலே ஒன்றைத் தன்னதாக்கிக் கொடுத்தல்லது தரிக்கமாட்டாதபடியாலே சொல்லுகிறது. பிறர்க்கு உபகரிக்கைக்கு உறுப்பாகவரும் மமகாரம் உத்தேஸ்யமாயிருக்குமிறே. ஐகவத்விஷயத்துக்கு ஆக்கினவன்றே தன்னதடங்க வடகர்க்கு போஷமாயிருக்க உபகாரஸ்ம்ருதி ஆற்பிருக்க வொட்டாமையாலே வருமதிறே. ஆத்ம ஸமர்ப்பணத்திற்கும் அடி இதுவிறே. [கானலென்று]-கடற்கரைச் சோலையாதல், நெய்தல் நிலமாதல். [அகங்கழிவாய்]-உள்ளான கழியிடத்திலே. அந்தர் க்ருஹப்ரவேஸத்திற்கு அநுமதிவேண்டாதபடியிறே இவை அந்தரங்கமாயிருக்கிறபடி. ''கழிதாநிர ஹஸ்யாநி'' என்கிறபடியே வர்த்தியாநின்றன. [இரைதேர்ந்து] - இரைதேடி; ''ஸ்ருஹஸாக்ஷரோஜிதழ்'' என்கிறபடியே; பண்டுதனக்கு உபகரித்தபடியைச் சொல்லுகிறாள், இப்போது உபகரிக்கைக்காக. [இங்கு] - இத்தலையையழித்துத் தூதுவிடவேண்டும்படி அகலவிருந்தவனைப் போலன்றியே, ஸந்நிஹிதராகப் பெற்றேன் என்கிறாள். [இனிதமரும்] - இனிதாக நம்மோடே ஸஹவாஸம்பண்ணப் பெறுகை; விலக்ஷணபோகங்களை ஸாஜித்து வர்த்திக்குமென்றபடியாம். [செங்கால] - சிவந்தகாலையுடைய. என்மடியிலேயிருக்கும் கால்போலேயிருந்ததீ, நான் தலையிலே

வைத்துக்கொள்ளப் புகுகிறகாலும். [மடநாராய்] - ஸௌம்யமான நாராய்! [திருமூழிக்களத்துறையும்] - தூதுபோவார்க்கு அடுத்து அணித்தாக நிற்கையாலே பரமபதத்திற் காட்டில் ஏற்றமிருக்கிறபடி. [கொங்கார் பூந்துழாய்முடி யெங் குடக்கூத்தர்க்கு] - ஒப்பனையையும் மநோஹாரிசேஷ்டிதங்களையும் எனக்காக்கி வைத்தவர்க்கு; 'எம்' என்கிறது ஒப்பனையிலும் சேஷ்டிதத்திலும் இரண்டிலுமாகிறது. 'எம்' என்று - ஆத்மநிவேதநவசநம். [என்தூதாய்]-ஒப்பனையிலும் செயலிலுந் தோற்று வெறுந்தரையாயிருக்கிற என்னுடைய தௌத்யத்திலே அதிகரித்து. [நுங்கால்கள் என்தலைமேல்] - உபகாரகரான உங்களுடையகாலை உபக்ருதையாய் உஜ்ஜீவிக்க இருக்கிற என்தலையிலே. இவளுடைய தலையிலே வைக்கக்கண்டதாய்த்து இவற்றின்கால்; இவற்றினுடைய காலைவைக்கக் கண்டதாய்த்து இவள்தலை; இரண்டும் பரார்த்தமாகக் கண்டதாய்த்து. [கெழுமீரோ] - அவனுக்கு சேஷமாக்கினபோதே வடகர்க்கு சேஷமாகையாலே என்னையிகொண்டு வைக்கவேண்டாவிறே; என்தலைமேலே சேரீரோ? [நும ரோடே] - "ஸவா ஸ்த்ரவள ஸ்த்ரஸமண:" என்கிறபடியே ஸபரிகரமாக. "ஸூவாயபூ வதாவாய பூவா தெருவநாத்தி:" என்னக்கடவதிறே.

ஈடு.—முதற்பாட்டு. சிலநாரைகளைக் குறித்து அவன் தன்னழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச்சொல்லி, என்தசையை அவனுக்குஅறிவித்துவந்து உங்கள்திருவடிகளை என்தலைமேலே வைக்கவேணு மென்கிறாள்.

[எங்கானல்] - பகவத்விஷயத்தில் உபகாரகரோடு ஐகரஸ்யம் ப்ராப்தமாயிருக்க, 'எம்' என்றது - ஒன்றைத் தம்மதாக்கிக் கொடுத்தல்லது தரிக்கமாட்டாத உபகாரஸ்ம்ருதியாலே சொல்லுகிறது. பிறர்க்கு உபகரிக்கைக்காகவரும் மமகாரம் உத்தேஶ்யமாயிருக்குமிறே. தன்னை பகவத்விஷயத்துக்குஆக்கினவன்றே தன்னதடங்கலும் அங்குத்தைக்கு சேஷமாயிருக்க, உபகாரஸ்ம்ருதியிறே இப்படி சொல்லுவித்தது. ஆத்மஸமர்ப்பணத்துக்கும் அடி இதுவிறே. கானலென்கிறது - கடற்கரைச்சோலையாதல், நெய்தல்நிலமாதல். [அகங்கழிவாய்] - உள்ளான கழியிடத்து. அந்தர்க்ருஹப்ரவேஶத்துக்கு அநுமதி வேண்டாதபடியிறே இவை அந்தரங்கமாயிருக்கிறபடி. "க்ஷயிதாநி ரஹஸ்யாநி"

முதற்பாட்டு - எங்கானல் இத்யாதி. "செங்கால மடநாராய்" என்று தொடங்கி "கெழுமீரோ" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - சிலநாரைகளை இத்யாதி. குணங்களாலும் என்றது "திருமூழிக்களத்துறையும்" என்றத்தைப்பற்ற.

'ஐகரஸ்யம் ப்ராப்தமாயிருக்க' என்றவநந்தரம், "எம் என்று மமகரிப்பானென்னென்ன" என்று கூட்டுவது. பரிஹாரம் - எம் என்றது இத்யாதி. உபகாரமாவது-இத்தசையிலேவந்து முகங்காட்டினது. எல்லாமென்றுமும் மமகாரம த்யாஜ்யமன்றோவென்ன - பிறர்க்கு இத்யாதி. "பகவத்விஷயத்தில்" இத்யாதி வாக்ய விவரணம் - தன்னை பகவத்விஷயத்துக்கு இத்யாதி. அங்குத்தைக்கு என்றது - வடகர்க்கு என்றபடி. இப்படி சொல்லுவித்தது என்றது - "எங்கானல்" என்னும்படி சொல்லுவித்ததென்றபடி. அப்படி உபகாரஸ்ம்ருதியாலே மமகாரம்பண்ணின இடமுண்டோவென்ன -ஆத்மஸமர்ப்பணத்துக்கும் இத்யாதி. இதுக்கு "எனதாவி தந்தொழிந்தேன்" என்றதிலே நோக்கு. நெய்தல் நிலமாவது - கடற்கரைமாத்ரம். எங்களுடையகானலில் உள்ளானகழியிடத்து என்று ஸமுதாயார்த்தம். "அகங்கழிவாய்" என்ற பதங்களுக்கு பாவம் - அந்தர்க்ருஹ இத்யாதி. அந்தரங்கத்வ கார்யத்தைக்காட்டுகிறார்-க்ஷயிதாநி இத்யாதி. "க்ஷயிதாநி ரஹஸ்யாநி ஹ்ருதயே ஸம்ப்ரதிஷ்டிதம்। தஶயிஷ்யதி கஸ்மை த்ராணி ஸஹ ஸம்ரக்ஷிதா: ஸவா" இதி மஹாபாரதே கர்ணவசநம் (க). இவற்

(கதிதாநிரஹஸ்யாநி) என்கிறபடியே வர்த்தியாநின்றன. [இரைதேர்ந்து] - இரைதேடி; "ம்ருகெளஹாக்ஷ்ணரஞ்ஜிதம்" (க்ருஹோபக்தமஸங்கீதம்) என்கிறபடியே: பண்டு தனக்கு உபகரித்தபடியைச் சொல்லுகிறாள், இப்போது உபகரிக்கைக்காக. [இன்று]-இத்தலையை யழித்துத் தூதுவிடவேண்டும்படி அகலவிருந்த அவனைப்போலன்றியே, ஸந்நிஹிதராகப் பெற்றேனென்கிறாள். [இனிதமரும்] - இனிதாக நம்மோடே ஸஹவாஸம் பண்ணப் பெறுகை; விலக்ஷணபோகங்களை ஸாஜித்து வர்த்திக்குமென்றுமாம் [செங்கால]-சிவந்த காலையுடைய. என்மடியிலேயிருக்கும் கால்போலேயிருந்தத் நான் தலையிலே வைத்துக் கொள்ளப்புகுகிற காலும். [மடநாராய்]-ஸவ்யமான நாராய்! [திருமூழிக்களத்துறையும்]-தூதுபோவார்க்குஅடுத்தணித்தாகத் திருமூழிக்களத்திலே நிற்கையாலே, பரமபதத்திற்காட்டில் ஏற்றமிருக்கிறபடி. [கொங்கார்பூந்துழாய்முடி யெங்குடக்கூத்தர்க்கு] - ஒப்பனையையும் மநோஹாரிசேஷ்டிதத்தையும் இரண்டையும் எனக்கு ஆக்கிவைத்தவர்க்கு."எம்" என்கிறது - ஒப்பனையிலும் சேஷ்டிதத்திலு மிரண்டிலுமாகிறது. 'எம்' என்று - ஆத்மநி பஹுவசநம். [என்தூதாய்] - அவ்வொப்பனையிலும் சேஷ்டிதத்திலுந்தோற்று அவனைப் பெற்று ஜீவித்தல், இல்லையாகில் முடிதலாயிருக்கிற என் தூதக்ருத்யத்திலே யதிகரித்து. [நுங்கால்களென்றலைமேல்] - உபகாரகரான உங்களுடையகாலை, நீங்கள் உபகரிக்க ஜீவிக்கவிருக்கிற என்தலைமேலே; மயிர்கழுவிப் பூச்சூட விருப்பாரைப்போலே. அவற்றின் காலாகில் இவள் தலையிலே யிருக்கக்கண்டன; இவள தலையாகில் அவற்றின் கால்வைக்கக் கண்டிருந்தது; இரண்டும் பராரியமாயிருந்தபடி. [கெழுமீரோ]-ஒரு விரகிகொண்டு ப்ரவர்த்திக்க வேண்டாவாய்த்து இங்கு; † அவனுக்காக்கினவாறே உங்களதாயிருக்குமிறே. கொடுவந்துசேரீகோளோ: [நுமரோடே] - "ஸவாந்தவஸுஹ்ருஜ்ஜநா:" (ஸபுத்ரபெளத்ர

றைத் தூதுவிட நினைக்கிறவள் இரைதேடினத்தைச் சொல்லுவானேனென்னென்ன - பண்டு தனக்குதித்யாதி. பண்டு உபகரிக்கையாவது-தூதுபோவதற்குமுன்னே தன் சந்நிதியிலே இரைதேடினை. "இனிதமரும்" என்றதுக்கு அர்த்தத்வயம் - அமருகை - பொருகை - பொருந்துகையாய். இனிதாக நம்மோடே ஸஹவாஸம்பண்ணப் பெறுகையாதல், சேவலும் பேடையும் விலக்ஷண போகங்களை ஸாஜித்து வர்த்திக்கையாதல்; இந்தஅர்த்தத்வயத்தையும் அருளிச்செய்கிறார்-இனிதாக இத்யாதிவாக்யத்வயத்தாலே. இத்தால் - "உபரிஷ்டாதிகஜேத்ராணி" என்றதைச் சொல்லுகிறதென்றுக் கண்டுகொள்வது. காலில் சிவப்பைச் சொல்லுகிறதுக்கு தாத்பர்யம் - என்மடியிலே இத்யாதி. மடியிலிருக்கும்கால் - நாயகன் கால். அடுத்தணித்தாக - மிகவும் ஸந்நிஹிதமாக. கொங்கு - பரிமளம், ஆர் - பூர்ணமான, பூந்துழாய்முடி - புஷ்பங்களையுடைய திருத்துழாயை முடியிலேயுடையவென்று ஸப்தார்த்தம். "இரண்டையு மெனக்காக்கிவைத்த" என்றதுக்கு ஸப்தமென்ன - எம் என்கிறது இத்யாதி. "தலைமேல்" என்னவமைந்திருக்க, "என்றலைமேல்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - மயிர்கழுவி இத்யாதி. அதாவது - தன்தலை அவற்றின் காலுக்கு அர்ஹமென்றுமிடம் தோற்றுகைக்காக விசேஷிக்கிறதென்றபடி. "நுங்கால்கள், என்தலை" என்ற பதச்சேர்த்திக்கு பாவம் - அவற்றின் இத்யாதி வாக்யத்வயம். இத்தால் ஃபலிதம் - இரண்டும் இத்யாதி. "கெழுமீரோ!" என்ற ஸ்வரத்துக்குபாவம் - ஒருவிரகி இத்யாதி. அதுக்கடியேதென்ன - அவனதாக்கின இத்யாதி கெழுமீரோ-சேருங்கோள். "ஸதநாவ்யாநரோபாஷ்யம் ஸாரோபண ஸ்ரா: । ஸவாந்தவஸுஹ்ருஜ்ஜநா: ஸ்வஹ்ருதய ஸமேஷ்யஹிவதே" இதி ஸங்க்ஷேபே (கக). அப்படி பத்ராதிகளும் உத்தேஸ்யரோவென்ன-ஆசார்யவத் இத்யாதி."ஆசார்யவதாசார்யதாரேவ்ருத்தி:, தயாஸஸாநிஷேப்யாவய திவ்யஜதவேஸஸூவாபிணி, உவிஷ்டாபஸதவஜாய; ஆசார்யவதாசார்ய

† 'அவனுக்கு' என்கிற இந்தப்பாடம் அடையவளைந்தானரும்பதத்துக்குச் சேரும், நீயாரும்பதத்துக்கு 'அவனது' என்று பாடமாகத் தோற்றுகிறது.

ஸ்ஸகண:)என்னுமாபோலே,ஸபரிகரமாக.''ஆசார்யவதாசார்யபுத்ரேவ்ருத்தி:'' (ஆசார்யவதாசார்யபுத்த்ரேவ்ருத்தி:) என்னக்கடவதிறே. (க)

இரண்டாம் பாட்டு.

நமரோடும்பிரியாதேநீரும்நுஞ்சேவலுமாய்
அமர்காதற்குருகினங்காள்! அணிமுழிக்களத்துறையும்
எமராலும்பழிப்புண்டு இங்குஎன்? தம்மாலிழிப்புண்டு
தமரோடங்குறைவார்க்குத்தக்கிலமே? கேளீரே!

ஆ.—(நமரோடும்) - "அவருக்குச் சொல்லும் வார்த்தையைக் கேளுங்கோள்" என்று குருகுகளையழைத்துவைத்து, நடுவே, தன்னோவாலே, "தம்மாலும் உபேக்ஷிதையாய் எம்பந்துக்களாலும் கர்ஹிதையாயிங்கேயிருக்கும் இவ்விருப்பென் செய்ய! இவ்விருப்பில் முடிகையேநன்று" என்று தன்னிலேசொல்லி இன்னுதாய், பின்னையும் அவனை விடமாட்டாமையாலே, "தாமும் தம் பரிஜநங்களுமாயிருந்த இருப்புக்காண்கைக்கு நான் அநர்ஹையாயிழந்துபோமித்தனையோ?" என்று கேளீரென்று கொண்டு, தான் சொல்லப்புக்கவார்த்தையை அவற்றுக்குச் சொல்லிமுடிக்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், சிலகுருகுகளைக்குறித்து திருமூழிக்களத்து எம்பெருமானுக்குத் தாமும் தமக்கு நல்லாருமாயிருந்தஇருப்பை நான் இழந்தேபோமித்தனையோ? என்று அறிவியுங்கோள் என்கிறாள்.

[நமரோடும் என்றுதொடங்கி] - உங்களுடைய பந்துக்களோடும் பிரியாதே நீங்களும் உங்களுடைய சேவல்களும் ஸம்ஶ்லேஷியா நிற்பதுஞ்செய்து பரஸ்பரம் காதலையுடைய குருகினங்காள்! [அணிமூழிக்களத்துறையும் என்றுமேலுக்கு] - குருகினங்களைக்குறித்து வார்த்தை சொல்லுகிறவள், அர்த்தாத்தியிலே அத்தைத் தவிர்ந்து பந்துக்களாலும் இகழப்பட்டு திருமூழிக்களத்திலே உறைகிற தம்மாலும் உபேக்ஷிக்கப்பட்டிருக்கும் இவ்விருப்பில் முடிகையே நன்று என்று தன்னிலே விஷண்ணையாய் மீளவும் அவற்றைக்குறித்து தாம் தம்பரிஜநங்களோடே அங்கே நித்யஸம்ஶ்லிஷ்டரானவர்க்கு நாங்களாகோமோ என்று கேளுங்கோள் என்று,தொடங்கின வார்த்தையை முடியச்சொல்லுகிறாள்.

ப.—அநந்தரம், "அஸாதாரணபரிஜநங்களோடே அநுஸாவ்யராயிருக்கிற தமக்கு நாங்கள் அநுரூபரல்லோமோ?" என்று கேளுங்கோள் என்று சில குருகுகளைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

நமரோடும் - சந்தாநுவர்த்திகளான பந்துஜநங்களோடும், பிரியாதே-, நீரும்- (சேவலையநுவிதாநம்பண்ணும்) நீங்களும், நுஞ்சேவலுமாய் - உங்களையநுவிதாநம்பண்ணுஞ்சேவலுமாய், அமர்காதல் - ஸம்ஶ்லேஷித்து வர்த்திக்கும்படியான ப்ரணயத்தை

வா°ச்ருவ்ருத்தி:" இத்யாபஸ்தம்பஸூத்ரமே. 'எங்கானலகம்' என்று தொடங்கி, 'என்தூதாய் - நமரோடே - நுங்கால்களென்றலைமேல் கெழுமீரோ' இத்யந்வய:. (க)

யுடைய, குருகினங்காள் - ! அணி - ஊர்த்வமான, அழுந்திக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - நித்யவாஸம்பண்ணுகிற, தம்மால் - தம்மாலே, இழிப்புண்டு - காதாசித்க ஸம்ச்லேஷாநந்தரம் உபேக்ஷிக்கப்பட்டு, (அதடியாக), எமராலும் - என்னுடைய அநுவர்த்தமுடையவராலும், பழிப்புண்டு - பழிக்கப்பட்டு, இங்கென் - இங்குத்தை யிருப்புக்கு என்னப்ரயோஜநமுண்டு! தமரோடு - அஸாதாரணபரிஜநத்தோடே, அங்கு - அங்கே, உறைவார்க்கு - நித்யவாஸம்பண்ணுகிற தமக்கு, தக்கிலமே - நாங்களாகோமோ? கேளீரே - கேளுங்கோள்.

இ.—இரண்டாம்பாட்டில், சிலகுருகுகளைக் குறித்து தாமும் தமக்கு நல்லாருமாயிருக்கிற விருப்பை நான் இழந்தேபோயித்தனையோ? என்று அறிவியுங்கோள் என்கிறாள்.

[நுமரோடும் பிரியாதே] - "தமரோடங்குறைவார்" என்றதுபற்றது, ப்ராப்ய வஸ்துவைச்சொல்ல நினைக்கிறது; அதுக்கீடாக இவையும் குறையற்றிருக்கிறபடி. குறைவாளர் கார்யம் குறைவற்றார்க்குத் தீர்க்கவேண்டாவோ? [நீரும்நுஞ்சேவலுமாய்] - சேவலின் நினைவறிந்து பரிமாறும்நீரும்உம்முடையகருத்தறிந்து பரிமாறுஞ்சேவலுமாய் ஸம்ச்லேஷரஸம் அறியும் நீங்கள். பிரிந்தாருடைய செல்லாமையும்அறியவேண்டாவோ! உண்டார்க்கு உண்ணாதார் பசி தீர்க்கவேண்டாவோ? [அயர்காதல் குருகினங்காள்] - பரஸ்பரம்பொருந்தின காதல்; ஆசையிலே விச்லேஷத்தை ஸஹிப்பியாத ஆசையுண்டாகாதே! ஆசையிலுங்குறைவற்று, விச்லேஷமுமின்றியிலே கருத்தறிந்து பரிமாறவுங் கடவதாயிருக்கப்பெறுவதே நீங்கள்! [குருகினங்காள்] - என்று ஸம்போதித்து வைத்துத் தொடங்கின வார்த்தை முடியச்சொல்லமாட்டாதவலஹாரிபாலே அர்த்தோக்தியிலே அத்தைமுடித்துத் தானிருக்கிற இருப்பிலே விஷண்ணையாகிறாள். [எமராலும் பழிப்புண்டு அணிமூழிக்களத்துறையும் தம்மாலும் இழிப்புண்டு] - காதாசித்க ஸம்ச்லேஷமே ஹேதுவாக பந்துக்கள் கைவிட்டார்கள். காதாசித்கமாக ஸம்ச்லேஷித்தவளவிலே தாமும் உபேக்ஷித்தார்; பந்துக்கள் கைவிட்டதுவே ஹேதுவாகக் கைக்கொள்ளவேணும். பிறப்பட்டார்க்குக் காட்டிக் கொடுக்கவந்து நிற்கிற நிலையாலும் கைக்கொள்ளவேணும். இரண்டும் என்னளவிலே உபேக்ஷா ஹேதுவாவதே! [இங்கு என்] - இவ்விருப்புக்கு என்னப்ரயோஜநமுண்டு? "ஸம்ஸாரத்தில் ஒருதேசவிசேஷத்திலே பெறவேண்டித்தான் ஆறியிருக்கிறேனோ!" என்று தன்னிலே விஷண்ணையாய்ப் பின்னையும் தன்செல்லாமையாலே அவற்றைக் குறித்து வார்த்தை சொல்லுகிறாள். [தமரோடு இத்யாதி] - தம் பரிஜனங்களோடே பங்கே நித்யவாஸம்பண்ணுகிற தமக்கு நாங்களாகோமோ என்று கேளுங்கோள். தாமும் தமக்கு நல்லாருமாயிருக்கிற இருப்புக்கு, "அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ" என்றிருப்பாராகாரோ என்று கேளுங்கோள்!

ஈடு.—இரண்டாம்பாட்டு. சில குருகினங்களைக் குறித்து, "தாமும் தமக்கு நல்லாருமாயிருந்தவிருப்பை நானிழந்தேபோயித்தனையோ?" என்றறிவியுங்கோளென்கிறாள்.

இரண்டாம்பாட்டு — நுமரோடும் இத்யாதி. "தமரோடங்குறைவார்க்குத் தக்கிலமே கேளீர்" என்றத்தைக் கடாக்ஷித் தவதாரிகை - சிலகுருகினங்களை இத்யாதி.

[நுமரோடும்பிரியாதே] - "தமரோடங்குறைவார்" என்றுய்த்து ப்ராப்யவஸ்துவைச்சொல்ல நினைக்கிறது; அப்படியே இவையும் குறைவற்றிருக்கிறபடி. குறைவாளர் கார்யம் குறைவற்றார்க்குத் தீர்க்கவேண்டாவோ! உண்டார்க்கு, பட்டினிகிடந்தார் பசி பரிஹரிக்க ப்ராப்தமிறே. [நீரும் நுஞ்சேவலுமாய்] - சேவல்நினைவறிந்து பரிமாறும் நீரும், உம்முடைய கருத்தறிந்து பரிமாறும்சேவலுமாய். ஸம்ஶ்லேஷரஸமறியும் நீங்கள், பிரிந்தாருடைய செல்லாமையும் அறியவேண்டாவோ! [அமர்காதல் குருகினங்காள்] - பரஸ்பரம் பொருந்தின காதல். ஆசையிலே, விஶ்லேஷத்தை ஃபலிப்பியாதவாசையுண்டாகாதே! ஆசையிலுங்குறைவற்று, விஶ்லேஷமுமின்றியிலே, கருத்தறிந்து பரிமாறவுங்கடவதாயிருப்பதே நீங்கள்முன்னம்! "குருகினங்காள்" என்று ஸம்போதித்துவைத்து, தொடங்கின வார்த்தை முடியச்சொல்லமாட்டாத பலஹாநியாலே அர்த்தோக்தியிலே யத்தை முடித்து, தானிருக்கிறவிருப்பிலே விஷண்ணையாகிறாள். [எமராலும்பழிப்புண்டு - அணிமுழிக்களத்துறையும் தம்மாலு மிழிப்புண்டு] - காதாசித்க ஸம்ஶ்லேஷமே ஹேதுவாக பந்துக்கள் கைவிட்டார்கள்; காதாசித்க ஸம்ஶ்லேஷத்தளவிலே தாமும் உபேக்ஷித்தார். பந்துக்கள் கைவிட்டதே ஹேதுவாகக் கைக்கொள்ளவேணும்; பிற்பாடர்க்குக் காட்சி கொடுக்கவந்துநிற்கிற நிலையாகையாலும் கைக்கொள்ளவேணும்; இரண்டும் என்னளவில் உபேக்ஷாஹேதுவாவதே! [இங்கேன்] - இவ்விருப்புக்கு என்ன ப்ரயோஜநமுண்டு? தம்மைப்பெற்றிருக்கிறேனோ, பந்துக்களைப் பெற்றிருக்கிறேனோ? இங்குள்ளார்கைவிட்டால் பின்பு தம்மெல்லைக்குள்ளே யாக்கிக்கொள்ளவேண்டாவோ? ஐகவத் விஷயத்திலே புட்புக புட்புக, அன்றுதொடங்கிக் கைவிடுவர்களிறே ஸம்ஸாரத்திலுள்ளார். †("ஶரீர ஸம்பந்தத்திலே ஒருதேசவிசேஷத்திலே பெறவேண்டித்தான் ஆறியிருக்கிறேனோ?" என்று தன்னிலே விஷண்ணையாய், அத்தை) அவ்வளவிலேவிச்சேதித்து, பின்னையும், தன்செல்லாமையாலே அவற்றைக்குறித்து வார்த்தைசொல்லுகிறாள்:—[தமரோடங்குறைவார்க்கு] - தம்பரிஜனங்களோடே அங்கே நித்யவாஸம் பண்ணுகிறதமக்கு, நாங்களாகோமோ?

"நுமரோடும்" என்றிவற்றைச்சொன்னதுக்கு ஹாவம் - தமரோடு இத்யாதி. இவை குறைவற்றால் தனக்கு ப்ரயோஜநமேதென்ன-குறைவாளர் இத்யாதி. "தீர்க்கவேணும்" என்கிறநிர்ப்பந்தமேதென்ன,- லௌகிக த்ருஷ்டாந்தத்தாலே யத்தை த்ருடீகரிக்கிறார் - உண்டார்க்கு இத்யாதி. இத்தால்ஹாவம் - ஸம்ஶ்லேஷ இத்யாதி. "அமர்காதல்" என்றதுக்கு - பாஸ்பரஸத்ருஶமான காதலென்று கீழருளிச்செய்து, அமருதல் - காலத்தோடேபொருந்துதலாய், நித்யமான காதலென்றர்த்தாந்தரமாதல், கீழ்வாக்யத்துக்கு ஃபலிதமாதல் - ஆசையிலே இத்யாதி. "அமர்காதல், நுமரோடும் பிரியாதே, நீரும் நுஞ்சேவலுமாய்" என்கிற பதத்ரயங்களாலும் ஃபலிதம் - ஆசையிலும் இத்யாதி. "இங்கென்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - குருகினங்காள்என்று இத்யாதி. "தக்கிலமேகேளீர்" என்று முடியச்சொல்லமாட்டாத பலஹாநியாலேயென்றபடி. பதத்வயத்துக்கும்ஹாவம் - காதாசித்க இத்யாதி வாக்யத்வயம். கீழ்வாக்யத்வயஃபலிதம்-பந்துக்கள் இத்யாதிவாக்யத்ரயம். என், ப்ரயோஜநமில்லையோ? என்ன-தம்மைப்பெற்று இத்யாதி. ஆனால் செய்யவடுப்பதென்? என்ன - இங்குள்ளார் இத்யாதி. காதாசித்க ஸம்ஶ்லேஷமாத்ரத்திலே பந்துக்கள் விடுவார்களோவென்ன - ஐகவத்விஷயத்திலே இத்யாதி. மேலுக்கவதாரிகை - அவ்வளவிலே இத்யாதி. அவ்வளவிலே - விஷண்ணையானவளவிலே. விச்சேதித்து - விஷாதத்தைவிட்டு. தக்கிலமே - தகோமோ? கீழ்வாக்யத்துக்குஹாவம் -

---

† குண்டலிதம் சில ஸ்ரீகோஶங்களில் இல்லையென்கிறார்கள்.

என்று கேளுங்கோள். தாமும் தமக்கு நல்லாருமாயிருக்கிற விருப்புக்கு, "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவ தென்றுகொலோ" என்றிருப்பாராகாரோ? என்று கேளுங்கோள். (உ)

மூன்றும் பாட்டு.

தக்கிலமே?கேளீர்கள்தடம்புனல்வாய்இரைதேரும்
கொக்கினங்காள்குருகினங்காள்குளிர்மூழிக்களத்துறையும்
செக்கமலத்தலர்போலும் கண்கைகால்செங்கனிவாய்
அக்கமலத்திலைபோலும் திருமேனியடிகளுக்கே.

ஆ —(தக்கிலமே.)-தன்னைக்காண்கைக்கு நான் அர்ஹையன்றியே அவ்வழகையுங் காணப்பெறாதே இழந்துபோயித்தனையோ? என்றுகேளீர் என்கிறாள்.

ஒ.—மூன்றாம்பாட்டில், சிலகொக்கினங்களையும், குருகினங்களையும் நோக்கித் தன்னழகைக் காண்கைக்கு நாங்கள் போக்யதையை உடையோமல்லோமோ? என்று கேளீர் என்கிறாள்.

[தடம்புனல்வாய்இரைதேரும்]- பொய்கைகளுடைய நீரிலே இரைதேடுகிற. [செக்கமலம்] - செந்தாமரை. [அடிகள்] - ஸ்வாமி.

ப.—அநந்தரம், அவயவங்களோடு ஸமுதாயத்தோடு வாசியற அதிமாத்ர போக்யமான வடிவையுடையவர்க்கு நாங்கள் அபோக்யரோ? கேளுங்கோள்! என்று சில சில கொக்கினங்களையும் குருகினங்களையுங்கூட அபேக்ஷிக்கிறாள்.

தட - பெரிய, புனல்வாய் - தடாகத்திலே, இரைதேரும் - ஆமிஷார்த்திகளாய்க்கொண்டு, (என்னுடைய நிர்வேதாநுகுணமாகத் தனித்தனியே திரள்திரளாயிருக்கிற), கொக்கினங்காள் குருகினங்காள்-! குளிர் - ச்ரமஹரமான, மூழிக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - நித்யவாஸம் பண்ணுமவராய், செம் - சிவந்த, கமலத்து - கமலத்தின், அலர்போலும் - அலர்போலேயிருக்கிற, கண் - ("ஜிதந்தே" என்னப் பண்ணும்) கண்ணையும், கை - ("ஸவ்யம் பாதம் ப்ரஸார்ய ஸ்ரித துரிதஹரம் தக்ஷிணம் குஞ்சயித்வா" என்று ப்ரார்த்திக்கும்படியே யணைக்கும்) கையையும், கால்-("சரணம் த்வாம் ப்ரபந்நாஸ்மி" என்று ஆஸ்ரயிக்கும்) திருவடிகளையும், செங்கனிவாய் - ("மாசுச:" என்று ஸாந்த்வநம் பண்ணும்) சிவந்தகனிநிறத் திருப்பவளத்தையும், அக்கமலத்து - அந்தக்கமலத்துக்குப்பரபாகருமான, இலைபோலும் - இலைச்செறிவுபோலே யிருக்கிற ச்யாமளமான, திருமேனி-திருமேனியையுமுடையராய், அடிகளுக்கு - அவ்வடிவழகைக்காட்டி எனக்கு

தாழும்தமக்கு இத்யாதி. அதவா, "தமரோடு" என்று விசேஷித்ததற்கு தாத்பர்யமாதல் - தாழும் தமக்கு இத்யாதி. அதாவது - தாம் மாத்ரமன்றிக்கே ததீயபர்யந்தமாக அபேக்ஷித்த நாங்கள் அந்தத் தைக்கு ஆகோமோவென்று வ்யங்க்யம். 'நமரோடும்' என்றுதொடங்கி, 'குருகினங்காள் - எமராலும் பழிப்புண்டு - அணிமூழிக்களத்துறையும்-தம்மாலுமிழிப்புண்டு - இங்கென்?, - தமரோடங்குறைவார்க்குத் தக்கிலமேகேளீர்' இத்யந்வய: பழிப்புண்கை - பழிக்கப்படுகை. இழிப்புண்கை - உபேக்ஷிக்கப்படுகை. (உ)

ஸ்வாமியானவர்க்கு, தக்கிலமே - (இவ்வழகை யநுபவிக்கைக்கு நாங்கள்) யோக்யரல்லோமோ என்று, கேளீர்கள் - கேளுங்கோள்.

இ.—மூன்றும்பாட்டில், சிலகொக்கினங்களையும் குருகினங்களையும் நோக்கித் தன்அழகு காண்கைக்கு நாங்கள் யோக்யரல்லோமோவென்று கேளீர் என்கிறாள்.

[தக்கிலமே கேளீர்கள்] - ஓரறுதிபெறக் கேட்டுப்போருங்கோள்! அவர் "வேணும்" என்னில் நாமும் நம்ப்ராணனைநோக்கவும், அவர் "வேண்டா" என்றாராகில் நாமும் ஒன்றிலே துணியும்படியும் நிஸ்சிதமாகக்கேட்டுப் போருங்கோள். [தடம்புனல்வாயிரைதேரும்]-பொய்கைபின்நீரிலே இரைதேருகிற; உபவாஸக்ருஸையான என்னைப் போலன்றியே இரை மிடற்றுக்குக் கீழேயிழியும்படியிறே உங்கள் ஸௌஷ்கல்யம். [கொக்கினங்காள் - குருகினங்காள்] - "யாம்கவீநாம்ஸஹஸ்ராணி" என்கிறபடியே கண்ணால் கண்டவற்றை அடைய வவுகிறாள். "சிலவற்றைப் போகவிட்டோம், அத்தாலே நங்கார்யம் தலைக்கட்டும்" என்று ஆறியிருக்கும் விஷயமன்றே. [குளிர்மூழிக்களத்துறையும்] - விரஹதாப தப்தையாயிருக்கிற எனக்கு அந்தஸ்ரமஹரமான தேஸத்தில் ப்ராப்தியரிதாவதே! [செக்கமலம் இத்யாதி] - இக்குளிர்த்திக்கு அடியான அகவாயில் வாசத்தடமிருக்கிறபடி; சிவந்தலர்ந்த தாமரைபோலேயிருக்கிற கண்முதலான திவ்யாவயவங்களையுடையவன்; முதலுறவு பண்ணும் கண், அந்நோக்குக்குத் தோற்றாரை அணைக்கும் கை, ஸ்பர்ஸத்துக்குத் தோற்றார்விழுந் திருவடிகள், திருவடிகளிலே விழுந்தாரை ஸாந்த்வநம்பண்ணி தரிப்பிக்கும் முறுவல். [அக்கமலத்திலைபோலுந் திருமேனி] - அவர்களுக்கு உஜ்ஜீவநமான வடிவு. அவயவங்களுக்குப் பரபாகமான செந்தாமரை யிலைபோலேயாய்த்து திருமேனி. வெண்டாமரையென்னில் விஜாதீயமென்று 'அக்கமலம்' என்கிறது. [அடிகளுக்கு]-வடிவழகையும் அவயவஸோபையையுங்காட்டி யெழுதிக்கொண்டவர்க்கு இவ்வடிவுக்குத் தோற்று வைவர்ண்யத்தை தரித்திருப்பார் யோக்யரல்லரோ? என்றுகேட்டுப் போருங்கோள்!

ஈடு.—மூன்றும் பாட்டு. சில கொக்கினங்களையும் குருகினங்களையும்நோக்கி, தன் அழகுகாண்கைக்கு நாங்கள் யோக்யரல்லோமோ? என்றுகேளீர் என்கிறாள்.

[தக்கிலமேகேளீர்கள்] - நாம்ஒன்றிலே துணியும்படி அறுதியாகக் கேட்டுப் போருங்கோள். அவன் இன்னம் "இதுவேணும்" என்றிருந்தானாகில் ப்ராணன்களை வருந்தி நோக்கிக்கொண்டுகிடக்கவும், "வேண்டா" என்றிருந்தானாகில் நாமும் ஒன்றிலே துணியும்படியும் அறுதியாகக்கேட்டுவிடுங்கோள். [தடம்புனல்வாயிரைதேரும்] - மிக்க ஜல ஸம்ருத்தியையுடைய பொய்கையில் நீரிலே இரைதேடுகிறவளவாயிருந்தது உங்களுக்கு. ("உபவாஸக்ருஸாம்" (உபவாஸக்ருஸாம்) என்கிறபடியே) † உபவாஸக்ருஸையான என்னைப்போலன்றியே, இரை மிடற்றுக்குக்கீழ் இழியும்படியிறே உங்கள்ஸௌஷ்கல்யம்!

மூன்றும்பாட்டு.—தக்கிலமே இத்யாதி. "கொக்கினங்காள்குருகினங்காள் - திருமேனியடிகளுக்கு-தக்கிலமேகேளீர்கள்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - சிலகொக்கினங்களையும் இத்யாதி.

மீளவும் "தக்கிலமேகேளீர்" என்றதுக்கு பாவம் - நாமொன்றிலே இத்யாதி. விவரணம்-அவன்இன்னம் இத்யாதி. "தடம்புனல்" என்றதிலே, ஜலஸம்ருத்தியும் அர்த்தாத்ஸித்தம். விவரணம்-உபவாஸ இத்யாதி. கோய்யடி - மெத்தென்றவடி. 'இனங்காள்' என்ற பஹுவசநார்த்தம் -

---

† குண்டலிதம் இரண்டு ஸ்ரீகோஸங்களில் இல்லையென்கிறார்கள்.

[கொக்கினங்காள் குருகினங்காள்] - குருகு - கொக்கினங்கள். "யாம்கவீ நாம்ஸஹஸ்ராணி" (யாம்கபீநாம்ஸஹஸ்ராணி) என்கிறபடியே, கண்ணுற் கண்டவற்றையுடைய ஏவுகிருள்; "சிலவற்றைப்போகவிட்டோம், அவை நங்கார்யம் தலைக்கட்டும்" என்று கூறி யிருக்கும் விஷயமன்றே! [குளிர்மூழிக்களத்துறையும்] - விரஹதப்தையாயிருக்கிற எனக்கு அந்த ச்ரமஹரமான தேசத்தில் ப்ராப்தியரிதாவதே! [செக்கமலத்தியாதி] - அக்குளிர்த்திக்கு அடியான உள்ளில் வாசத்தடமிருக்கிறபடி; சிவந்தலர்ந்த தாமரைபோலேயிருக்கிற கண்முதலான திவ்யாவயவங்களையுடையவன் முதலுறவு பண்ணும் கண்; அந்நோக்குக்குத் தோற்றாரையணைக்கும் கை; ஸ்பர்சத்துக்குத்தோற்றார் விழுந்திருவடிகள்; திருவடிகளிலே விழுந்தாரை †ஸாந்த்வநம்பண்ணி யரிப்பிக்கும் முறுவல். [அக்கமலத்திலைபோலுந் திருமேனி] - அவர்களுக்கு உஜ்ஜீவநமானவடிவு. அவயவங்களுக்குப் பரபாகமான செந்தாமரையிலைபோலே யாய்த்துத் திருமேனி. வெண்டாமரையேன்னில் விஜாதீயமென்று, 'அக்கமலம்' என்கிறது. [அடிகளுக்கு] - அந்த அவயவசோபையையும் வடிவழகையுங்காட்டி யெழுதிக்கொண்டவர்க்கு. இவ்வடிவழகுக்குத் தோற்று வைவர்ண்யத்தை தரித்திருப்பார் அங்குத்தைக்கு அயோக்யரோ என்று கேட்டுப்போருங்கோள். அவன் புருஷோத்தமனுனல், இவள் * நாரீணமுத்தமையாம்போது இப்படியேயிருக்க வேணுமிறே. (௩)

நான்காம் பாட்டு.

திருமேனியடிகளுக்குத் தீவினையேன்விடுதூதாய்
திருமூழிக்களமென்னுஞ்செழுநகர்வாயணிமுகில்காள்!
திருமேனிஅவட்கருளீரென்றக்கால் உம்மைத்தன்
திருமேனியொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே.

யாம்கவீ நாம் இத்யாதி. "யாம்கவீநாம்ஸஹஸ்ராணி ஸமவேக்ஷ்ய ப்ரத்யுபஸ்தித! நிக்ஷேபவாநஸௌ நைஷ கேயம்வாதிக்ராமேத்" இதி லைந்தரகாண்டே பஞ்சாசத்ருபஞ்சாஹார்மாம் (௩௦-௩). முற்றப் போகவிட்டவை வருமளவும் ஆறியிராமல் கண்டவற்றையெல்லாம் தூதுவிடுவானென்? என்ன-சிலவற்றை இத்யாதி. திருமூழிக்களத்திலுண்டான ஐச்வர்யத்தை வர்ணிக்கிறதுக்கு ஹாவம்-விரஹதப்தையாய் இத்யாதி. வாசத்தடம் என்றது - அவயவங்கள் தாமரையானல், அதுகளிருக்குமிடம் தடாகமென்னுமத்தாலே. "கண், கை, கால்" என்கிற க்ரமத்துக்கு ஹாவம் - முதலுறவு இத்யாதி. அவர்களுக்கு - அநுபவிப்பார்க்கு. பரபாகம் - அவயவங்களுக்கு இத்யாதி. "கமலத்திலை" என்னுமே, "அக்கமலம்" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - வெண்டாமரை இத்யாதி. அதாவது - ஸாமாந்யேந "கமலம்" என்றால், வெண்டாமரையைச் சொல்லுமாகையாலே, வைஜாத்ய பரிஹாரார்த்தமாக "அக்கமலம்" என்று செந்தாமரையை விசேஷிக்கிறதென்றபடி. "கண்கைகால் செங்கனிவாய் - திருமேனி" என்றவநந்தரம் "அடிகளுக்கே" என்றதுக்கு ஹாவம் - அந்தஅவயவ இத்யாதி. கீழ்வாக்யத்துக்குஹாவம்-இவ்வடிவழகுக்கு இத்யாதி. வாசஸம்பந்தமில்லாதிருக்க, "வைவர்ண்யத்தை யரித்திருப்பார்" என்கிறதென்? என்ன - அவன் புருஷோத்தமன் இத்யாதி. 'நடம்புனல் வாய்' என்றுதொடங்கி, 'அடிகட்கு - தக்கிலமே கேளீர்கள்' இத்யர்வம். (௩)

† ஸாந்த்வநம் பண்ணுதல் - நல்வார்த்தை சொல்லுதல்.

ஆ.—(திருமேனி.) - திருமூழிக்களமென்னுஞ் செழுநகர்வாய் அணிமுகில்காள்! திருமேனி யவட்கருளீர் என்று இத்தனையுஞ்சொன்னாலும், உங்களுக்குப் பரமதனமான திருமேனியொளியை யுங்களை யிழப்பித்து, அவ்வூரில் நின்றும் போகவிடுக்குமோ? இத்தனையுஞ் சொன்னால் என்செய்யும்? என்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், சிலமேகங்களை நோக்கி 'என்வார்த்தையை அவனுக்குச் சொன்னால் உங்களைத் தண்டிக்குமோ?' என்கிறாள்.

[திருமேனியென்று தொடங்கி] - தன்வடிவழகாலே ஜகத்தையடைய அடிமைகொண்டிருக்கிறவர்க்கு அவ்வழகையிழந்து நோவுபடுகைக்கீடான பாபத்தைப் பண்ணின என்னுடைய தூதாய், திருமூழிக்களமென்று ப்ரஸித்தமாயிருக்கிற திருநகரியில், அழகிய முகில்காள்! [திருமேனியவட்கென்று மேலுக்கு] - அவளுக்கு உம்முடைய திருமேனியை அருளீர் என்று சொன்னக்கால், உங்களைத் தன்திருமேனியில் ஒளியைமாற்றி, உங்கள்அழகெல்லாம்தெரியும்படிநீங்கள்நிற்கும் நிர்மலமான ஆகாசத்தில் நின்றும் உங்களைப்போக்குமோ! திருமூழிக்களமென்னுஞ் செழுநகரில், திருமேனியடிகளுக்கு என்றுமாம்.

ப.—அநந்தரம், 'அழகாலேஅடிமைகொள்ளுமவர்க்கு என்தூதாய்ச்சென்று, உம்முடைய திருமேனியை யவளுக்கு உபகரியீரென்று ஒருவார்த்தைசொன்னால் உங்கள் ஸாரூப்யத்தையும் தேஶவாஸத்தையுந் தவிர்க்குமோ' என்று சிலமேகங்களைக் குறித்து வார்த்தைசொல்லுகிறாள்.

அணி-தர்ஶநீயமான வடிவையுடைய, முகில்காள்-! திருமூழிக்களமென்னும்- "பின்னானார்வணங்குஞ்சோதி திருமூழிக்களம்" என்னும்படி ப்ரஸித்தமான, செழுநகர்வாய் - விலக்ஷணநகரத்திலே வர்த்திக்கிறவராய், திருமேனியடிகளுக்கு - "ரூபமேவாஸ்யைதந்மஹிமாநம் வ்யாசஷ்டே" என்று வடிவுதானே ஸர்வாதிகத்வ ப்ரகாஶகமான ஸௌஷ்டவத்தையுடையவர்க்கு, தீவினையேன்-(அவரோடுஉறவுண்டாயிருக்க அநுபவிக்கப்பெறாத) க்ரூரமான பாபத்தையுடைய நான், விடு - விடுகிற, தூதாய் - தூதராய்ச்சென்று, 'அவட்கு - அவளுக்கு, திருமேனி - உம்முடைய நிரதிஶயபோக்யமான வடிவை, அருளீர் - உபகரித்தருளீர்' என்றக்கால் - என்று ஒருஉக்தி நேர்ந்தக்கால், உம்மை - (பாரார்த்யமாகவார்த்தைசொன்ன உங்களை), தன் திருமேனி ஒளி - (தான்அடியிலே யுங்களுக்குத்தந்த)தன்திருமேனியிலொளியை, அகற்றி - தவிர்த்து, தெளிவிசும்பு கடியுமே - விலக்ஷணமான ஆகாசத்தில் வர்த்தியாதபடி பண்ணுமோ? ஸ்வார்த்தமாக அபேக்ஷித்தார்க்குங் கொடுக்குமவன், எனக்காக அபேக்ஷித்ததுக்காக ஸாரூப்யத்தையும் விஷ்ணுபதாஶ்ரயத்வத்தையும் தவிர்க்கை அஸம்பாவிதமென்கிறாள்.

இ.—நாலாம்பாட்டில், சிலமேகங்களைநோக்கி 'என்ஸாவத்தை அவனுக்குச் சொன்னால் உங்களை தண்டிக்குமோ?' என்கிறாள்.

[திருமேனியடிகளுக்கு] - ஸ்வரூபகுண விபூதிகளையொழிய வடிவழகாலே ஸர்வஸ்வாமியென்று தோற்றும்படியிருக்கிறவர்க்கு. வடிவழகாலே ஜகத்தையடையத் தோற்பித்து அடிமைகொண்டிருக்கிறவர்க் கென்றுமாம். "[illegible]" என்கிறபடியே, ப்ரதிகூலர்க்கும் ஆகர்ஷகமாயிறே வடிவிருப்பது. [தீவினையேன் விடு தூதாய்] - ஸர்வ ஸாதாரணமான வடிவையிழந்து உங்கள்காலிலே விழவேண்டும்

படியான என்னுடைய துஷ்க்ருதபத்திலே அபிசரித்து. [திருமூழிக்களமென்னும்] - ஆர்த்தரக்ஷணத்துக்கு வந்து நிற்கிற இடமென்று ப்ரஸித்தமான தேசம். [செழுநகர்] - பரமபதத்திற்காட்டிலுண்டான ஏற்றம். செழுநகர்வாய் வர்த்திக்கிற அழகிய முகில்காள்! என்னுதல், செழுநகர்வாபடிகளுக்குச் செப்புக்கோள் என்னுதல், செழுநகர் வாய்ச்சென்று செப்புக்கோளென்னுதல். [திருமேனியவட்கருளீர்] - பாரிப்பான திருவுடம்பை, ஆசைப்பட்டவர்களுக்குக் கொடுத்தாலாகாதோ? இவ்வுடம்பை உமக்கே கண்டது என்றிருக்கிறீரோ? என்று சொல்லுக்கோள்! "ஜுஷ்டாநாம்" என்கிறபடியே இவ்வுடம்பு ஆசைப்பட்டாரதன்றோ என்று சொல்லுக்கோள்; காமினிக்கு ஸ்வரூபாபிகளிற் காட்டில் வடிவிலேயிறே அபேக்ஷை. [அருளீர்] - ப்ரணயித்வத்துக்கு போனால் க்ருபையும் மறுத்ததோ? [என்றக்கால்] - "வாஸாயமேவாஸ்யவலி" என்று உங்களுக்கு ஒருவார்த்தையன்றோ சொல்லவேண்டுவது? [உம்மை] - இப்படி உபகாரகராயிருக்கிற உங்களை. [தன்திருமேனி யொளியகற்றித் தெளிவிசும்பு கடியுமே] - உங்கள் வடிவிலுண்டான புகரையும்போக்கி நிர்மலமான ஆகாசத்தில் நின்றும் உங்களையும் ஓட்டுமோ? உங்களுக்குஇல்லாதவற்றை உண்டாக்குமதொழிய, பண்டுள்ளவற்றைத் தவிர்த்து உங்களைத் தண்டிக்குமோ? அல்பஸாத்ருஶ்யத்தைத் தவிர்த்து, "ஸாலோக்ய ஸாருப்ய" என்கிறபடியே ஸர்வஸாத்ருஶ்யத்தையுந் தந்து ஆகாசமாத்ரஸ்திதியாவன்றிக்கே, பரமாகாசத்தையுந் தாராதோ? உங்களுடைய உக்திமாத்ரத்திலே எனக்கும் உங்களுக்கும் ப்ரயோஜநம் கனத்திருக்க, ஆறியிருக்கக்கடவீர்களோ?

ஈடு.—நாலாம்பாட்டு. சில மேகங்களைநோக்கி, 'என்வார்த்தையை அவனுக்குச்சொன்னால் உங்களைத் தண்டிக்குமோ?' என்கிறாள்.

[திருமேனியடிகளுக்கு] - ஸ்வரூபகுணவிபூதிகளையொழிய வடிவழகாலே ஸர்வஸ்வாமியென்று தோற்றும்படி யிருக்கிறவர்க்கு; வடிவழகாலே ஜகத்தையடையத் தோற்பித்து அடிமைகொண்டிருக்கிறவர்க்கு என்றுமாம். "அவஶாஃப்ரதிபேதிரே" (அவாஶாஃப்ரதிபேதிரே) என்கிறபடியே ப்ரதிகூலர்க்கும் ஆகர்ஷகமாயிறே வடிவிருப்பது. [தீவினையேன்விடுதூதாய்] - ஸர்வஸாதாரணமான உடம்பையிழந்து உங்கள் காலிலேவிழ வேண்டும்படியான பாபத்தைப்பண்ணின என்னுடைய துஷ்க்ருதபத்திலே பதிகரித்து. [திருமூழிக்களமென்னும்] - ஆர்த்தரக்ஷணத்துக்காக வந்து நிற்கிறஇடமென்று ப்ரஸித்தமான தேசம். [செழுநகர்] - பரமபதத்திற்காட்டில் உண்டான ஏற்றம். செழுநகர்வாய்

நாலாம்பாட்டு—திருமேனி இத்யாதி. "அணிமுகில்காள் - என்றக்கால்,உம்மைத் தன்திருமேனியொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே?" என்றவர்களைக் கடாக்ஷித்தவார்த்தை - சில மேகங்களை இத்யாதி.

"கண்டவாற்றால்" இத்யாதிப்படியே திருமேனியில் ஐஶ்வர்யத்தாலே ஸர்வஸ்வாமி என்று தோற்றுகிறவர்க்கென்று முந்தினவர்த்தம்; இவ்விடத்திலே, † "தேவஸ்ரியாவபரயோ" இத்யாதி ஶ்லோகம் அநுஸந்தேயம். வடிவழகாலே ஜகத்தை ஶேஷமாக்கின ஸ்வாமிக்கென்று இரண்டாமர்த்தம். அநுகூலரையொழிய ஜகத்தையடைய வடிவழகாலே தோற்பிக்கக்கூடுமோவென்ன - அவஶாஃ இத்யாதி. "த்ருஷ்ட்வா ஸீதாம் ததா ராமம் ராக்ஷஸ்யஃ ஸர்வ ஏவ தா: அவஶாஃப்ரதிபேதிரே" இதி ஸ்ரீராமாயணம். (ரு) "தீவினையேன்" என்றதுக்குபாவம் - ஸர்வஸாதாரணம் இத்யாதி. "என்னும்" என்று ப்ரஸித்தியேதென்ன - ஆர்த்தரக்ஷணத்துக்கு இத்யாதி. "செழு" என்று - அழகைச் சொன்னதுக்குபாவம் - பரமபதத்தில் இத்யாதி. செழுநகர்வாய்-அழகியநகரத்திலே வர்த்திக்கிற

† ஸ்ரீவைகுண்டஸ்தவே - 26.

வர்த்திக்கிற அழகியமுகில்காளேன்னுதல்; செழுநகர்வாயடிகளுக்குச் செப்புமின்களேன்னுதல். [திருமேனியவட்கருளீர்] - பரார்த்யமான உடம்பை ஆசைப்பட்டார்க்குக் கொடுத்தலாகாதோ? 'ஹஸ்தா.நாடீ' (பக்தாநாம்) என்கிறபடியே, இவ்வுடம்பு ஆசைப்பட்டாரதன்றே? என்றுசொல்லுங்கோள். காமினிகளுக்கு ஸ்வரூபாதிகளிற்காட்டில் வடிவிலேயிறே அபேக்ஷை. [அருளீர்] - ப்ரணயித்வமன்றே குடிபோய்த்து; க்ருபையும் மறுத்ததோ? [என்றக்கால்] - "வாஸாதர்மமவாப்நுஹி" (வாசாதர்மமவாப்நுஹி) என்று உங்களுக்கொருவார்த்தையன்றே நேரவேண்டுவது! [உம்மை]-இப்படி உபகாரகரான உங்களை. [தன்திருமேனியொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே]-உங்கள்வடிவிற் புகரையும்போக்கி நிர்மலமான ஆகாசத்தினின்று உங்களையோட்டுமோ? உங்களுக்கு இதுக்கு முன்பில்லாதவற்றையும் உண்டாக்குமதொழிய, பண்டுள்ளவற்றைத் தவிர்த்து உங்களை தண்டிக்குமோ? அல்ப ஸாத்ருஸ்யத்தைத்தவிர்த்து, "பரமம்ஸாம்யமுபைதி" (பரமம்ஸாம்யமுபைதி) என்கிறபடியே ஸர்வதாஸாத்ருஸ்யத்தையும்தந்து, ஆகாசமாத்ரஸ்த்திதிகளன்றிக்கே பரமகாசத்தையுந்தாரானே? உங்களுடைய உக்திமாத்ரத்தாலே எனக்கும் உங்களுக்கும் ப்ரயோஜநமொத்திருக்க, ஆறியிருக்கக்கடவிகோளோ? (ச)

ஐந்தாம் பாட்டு.

தெளிவிசும்புகடிதோடித்தீவளைத்துமின்னிலகும்
ஒளிமுகில்காள்!திருமூழிக்களத்துறையும்ஒண்சுடர்க்குத்
தெளிவிசும்புதிருநாடாத் தீவினையேன்மனத்துறையும்
துளிவார்கட்குழலார்க்குஎன்தூதுரைத்தல்செப்புமினே.

ஆ. — (தெளிவிசும்பு.)-அவளுக்கு அருளீர் என்னவமையுமோ? இன்னாருக்கருளீரென்னவேண்டாவோ வென்னில், - யாவளொருத்தியுடைய நெஞ்சையுமக்குத் திருநாடாகக்கொண்டு நீருறைகிறீர், அவளுக்கருளீர்! என்று சொல்லிகோளென்கிறாள்.

என்ற ஸப்தார்த்தம். செப்புமின்கள் என்று - அத்யாஹார்யம். "ஹஸ்தா.நாடீ" என்றத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் - பரார்த்யமான இத்யாதி. அருளீர்-அருளிலாகாதோ? திருமேனி பரார்த்யமோவென்ன - பக்தாநாம் இத்யாதி. ஸ்வரூபகுணாதிகளிருக்க, திருமேனியைச் சொல்லுவானென்னென்ன - காமினிகளுக்கு இத்யாதி. தன் திருமேனியோடொத்த வொளியையகற்றியென்று ஸப்தார்த்தம். "கடியுமே" என்றபிரிநிலையேகாரத்துக்குபாவம் - உங்களுக்குஇதுக்கு இத்யாதி. விவரணம் - அல்ப இத்யாதி. "என்றக்கால்" என்றத்தைக்கடாக்ஷித்துபாவம் - உங்களுடைய இத்யாதி. எனக்கு ப்ரயோஜநம் என்றது - ஸத்தையை; உங்களுக்கு ப்ரயோஜநம் என்றது - பரமஸாம்யாபத்தியை. 'திருமூழிக்களமென்னும்' என்றதொடங்கி, 'முகில்காள் - திருமேனியடிகட்குத் தீவினையேன் விடுதூதாய் - திருமேனியவட்கருளீர் என்றக்கால்' என்று தொடங்கி கடியுமே யென்றந்வயமாதல்; அணிமுகில்காள் - தீவினையேன் விடுதூதாய் திருமூழிக்களமென்னுஞ் செழுநகர்வாய்வர்த்திக்கிற - திருமேனியடிகட்கு - திருமேனியவட்கருளீர் என்று செப்புமின்கள்: என்றக்கால், உம்மை என்று தொடங்கி, கடியுமே என்றந்வயமாதல். இதுக்கு ஸ்வாபதேசமாக, "† பூண்டநாள்" இத்யாதிசூர்ணை யநுஸந்தேயம். (ச)

† ஆசார்யஹ்ருதயே.

ஆ.—அஞ்சாம்பாட்டில், "நாங்கள் உன்வார்த்தையை விண்ணப்பஞ்செய்தால், அவன் அங்கீகரிக்குமோ?" என்று கேட்பீர்களாகில், பரமபதத்திற்பண்ணும் அபிநிவேசத்தை என்பக்கலிலே பண்ணினவன் அங்கீகரிக்கும்; ஆனபின்பு, அவனுக்கு எனக்காக ஒருவார்த்தை விண்ணப்பஞ்செய்யவேணும் என்கிறாள்.

[தெளிவிசும்பென்று தொடங்கி] - நிர்மலமான ஆகாசத்திலே கடுகச் சுழலக் கொள்ளிவட்டம்போலே மின்விளங்குகிற அழகிய முகில்காள்! [திருமூழிக்களத்துறையு மொண்சுடர்க்கென்று மேலுக்கு] - கண்ணுறக் காணவொண்ணாதபடி பாபத்தைப்பண்ணின என்னுடைய ஹ்ருதயத்திலே பரமபதத்திற்பண்ணும் வ்யாமோஹத்தைப்பண்ணி வர்த்திப்பதுஞ்செய்து, துளியொழுகும் மதுவை உடைத்தான திருக்குழலையும் விலக்ஷணமான ஒளியையுமுடையனுக்கொண்டு திருமூழிக்களத்திலே வர்த்திக்கிறவனுக்கு என்னுடைய ஸந்தேசவாக்யத்தைச் சொல்லுங்கோள்.

ப.—அநந்தரம், பரமவ்யோமஸாப்ய வாச்யமான நிரதிசயபவித்ரதியில் இருக்குமாபோலே என்னெஞ்சிலே யிருக்கிறவனுக்கு என் தூதாய்ச்சென்று வார்த்தைசொல்லக்குறையில்லை என்று, அம்மேகங்களையே பார்த்துச் சொல்லுகிறாள்.

தெளிவிசும்பு - நிர்மலமான ஆகாசத்திலே, கடிதோடி - (நிலத்திலே நடப்பாரைப்போலே என்கார்யத்துக்கு த்வரிக்கிறீர்களென்னலாம்படி) கடுகவோடி, தீ வளைத்து - அலாதசக்ரம்போலே, மின் இலகும் ஒளி முகில்காள் - அழகிய மின்விளங்காநிற்க அத்தாலே வடிவில் அழகுவளர்ந்து தோற்றும்படியான முகில்காள்! திருமூழிக்களத்து - திருமூழிக்களத்தில், உறையும் ஒண்சுடர்க்கு - நித்யவாஸத்தாலே ஸௌசீல்யஸௌலப்யாதி விலக்ஷண கல்யாணகுணவிஶிஷ்டனாய், தெளிவிசும்பு - விமலமான திவ்யாகாசத்தை, திருநாடா - நிரதிசயவிபூதியாகவுடையராய்வைத்து, தீவினையேன்மனத்து - ஸம்ஶ்லேஷமுகத்தாலே பரிதாபஹேதுவான பாபத்தையுடைய என்னெஞ்சிலே, உறையும் - முகந்தோன்றாமே ஸஞ்சரித்துக்கொண்டு, துளி - துளித்து, வார் - ஒழுகுகிற, கள் - மதுவையுடைத்தான, குழலார்க்கு - மயிர்முடியழகை ப்ரகாசிப்பித்துக்கொண்டிருக்கிற அவருக்கு, என் தூதுரைத்தல் - 'சேஷபூதையான இவளை ரக்ஷிக்கவேணும்' என்கிற ஸந்தேசவாக்யத்தை, செப்புமின் - சொல்லுங்கோள்! திருக்குழல் மதுவாருகிறது - அபிமதவஸ்துவாகைப்பூச்செவ்விமாறாதே.

இ.—அஞ்சாம்பாட்டில், நீங்களே ஸமாதானத்தைப் பிறப்பித்துத் திருமேனியொளிபகற்றி என்று; ஆனபின்பு, எங்கள் வார்த்தையை அங்கீகரிக்குமோ? என்னில்,- பரமபதத்திற்பண்ணும் ஆதரத்தை என்பக்கலிலே பண்ணினவன் அங்கீகரியாதொழியான்; ஆனபின்பு, எனக்காக ஒருவார்த்தை விண்ணப்பஞ்செய்யவேணும்! என்கிறாள்.

[தெளிவிசும்பு கடிதோடி]-நிர்மலமாய் நிராலம்பநமான ஆகாசத்திலே பூமியிலே ஸஞ்சரிப்பாரைப்போலே கடுகநடையிலே ஸஞ்சரித்து. இவற்றின் த்வரையெல்லாம் தன்கார்யத்துக்கு உடலென்றிருக்கிறாள். [தீவளைத்து மின்னிலகும்]-கொள்ளிவட்டம்போலே மின்விளங்காநிற்கிற; தன்வடிவில் இருட்சிக்குக் கைவிளக்குக்கொண்டு திரிவாரைப்போலேயாய்த்து மின்னிக்கொண்டு ஸஞ்சரிக்கிறபடி. [ஒளிமுகில்காள்] - பரபாகத்தாலே அழகிதானவடிவையுடைய முகில்காள்! [திருமூழிக்களத்துறையும் ஒண்சுடர்க்கு] - திருமூழிக்களத்திலே நித்யவாஸம் பண்ணுகையாலே புகர்மிக்கிருந்தவர்க்கு.

அவன்வடிவுக்குப் போலியாயிறே உங்கள்வடிவிருப்பது. [தெளிவிசும்பு இத்யாதி] - "பரமபதம் தேசமாயிருக்க அத்தைக் காற்கடைக்கொண்டு என் நெஞ்சிலே நித்ய வாஸம்பண்ணுகிறவன்" என்று சிற்றுட்கொண்டான் பணிக்கும். "பரமபதத்திற் பண்ணும் வ்யாமோஹத்தை என்நெஞ்சிலேபண்ணி வர்த்தியாநின்றான்" என்று எம்பெருமானர். [தீவினையேன்] - நெஞ்சிலே ப்ரகாசியாநிற்க, காணவொண்ணாதபடி பாபத்தைப்பண்ணினேன். [துளிவார்கட் குழலார்க்கு] - துளியொழுகும் மதுவை யுடைத்தான திருக்குழலையுடையவர்க்கு; வல்லார் பூமுடித்தால் பூதோற்றக்கடவதன்றியே, மதுவொழுகக் காணுமித்தனையிறே. [என்தூதுரைத்தல் செப்புமினே] - தலையிற்பூச் சருகாயிருக்கிற என்னுடைய ஊதவாக்யத்தை அவர்க்குச் சொல்லுங்கோள். ஆஸிநிவிஷ்டராய்த் தாமே வரக்கடவராகச் சொல்லிவைத்து, தூதுவிடவிருக்கிறபடியை அறிவியுங்கோள்.

ஈடு.— அஞ்சாம்பாட்டு. "எங்கள் வார்த்தையை அவன் அங்கீகரிக்குமோ?" என்றிருந்தனவாக. 'பரமபதத்திற்பண்ணின ஆதரத்தை என்பக்கலிலே பண்ணினவன் அங்கீகரியாதொழியான்; ஆனபின்பு, எனக்காக ஒருவார்த்தை விண்ணப்பஞ்செய்யவேணும்' என்கிறாள்.

[தெளிவிசும்புகடிதோடி] - நிர்மலமாய் நிராலம்பநமான ஆகாசத்திலே, பூமியிலே ஸஞ்சரித்தாற்போலே சுநேடையிலே ஸஞ்சரித்து. இவற்றின் த்வரையெல்லாம் தன் கார்யத்துக்கு உடலென்றிருக்கிறாள். [தீவளைத்துமின்னிலகும்]-கொள்ளிவட்டம்போலே மின் விளங்காநிற்கிற. தன்வடிவில் இருட்சிக்குக் கைவிளக்குக்கொண்டு திரிவாரைப் போலேயாய்த்து,மின்னிக்கொண்டு ஸஞ்சரிக்கிறபடி. [ஒளிமுகில்காள்]-பரஹாஹத்தாலே அழகிதான வடிவையுடைய முகில்காள்! [திருமூழிக்களத்துறையுமொண்சுடர்க்கு] - திருமூழிக்களத்திலே நித்யவாஸம்பண்ணுகையாலே புகர் மிக்கிருக்கிறவர்க்கு. அவன் வடிவுக்குப் போலியாயிறே உங்கள்வடிவிருப்பது. [தெளிவிசும்பித்யாதி] - பரமபதத்திற்பண்ணும் வ்யாமோஹத்தை என்னெஞ்சிலேபண்ணி வர்த்தியாநின்றான். [தீவினையேன்] - நெஞ்சிலே ப்ரகாசியாநிற்க, காணவொண்ணாதபடி பாபத்தைப் பண்ணினேன். இதுக்கு, சிற்றாள்கொண்டான், "கொம்பது பருத்தியாக அங்காடிபாரித்து, தனக்கு பரமபதங் கல

அஞ்சாம்பாட்டு - தெளிவிசும்பு இத்யாதி. இதிலும் கீழிற்பாட்டிற் சொன்ன மேகங்களையே தூதுவிடுகையாலே, அதுக்கீடாக "தெளிவிசும்பு திருநாடாத்தீவினையேன் மனத்துறையும்" இத்யாதியையும், "என்தூதுரைத்தல் செப்புமினே" என்றத்தையும் கடாக்ஷித்தவதார்கை - எங்கள் வார்த்தை இத்யாதி. "திருமேனியொளியகற்றி" இத்யாதியாலே இவள் ஹபஸங்கையைப் பிறப்பிக்கையாலே, அத்தைக் கேட்ட மேவுங்கள், எங்கள் வார்த்தையை அங்கீகரிக்குமோ என்றிருந்தன வென்றபடி "விசும்பு" என்றதுக்கர்த்தம் - நிராலம்பநமான என்றது. "கடிதோடி" என்று விசேஷித்ததுக்குஹாவம் - இவற்றின் இத்யாதி. தீவளைத்து - தீவளைத்தாற்போலே; கொள்ளிவட்டம்போலே. கொள்ளிவட்டம் - அலாதசக்ரம். "மின்னிலகும்" என்றதுக்கு ஹாவம் - தன்வடிவில் இத்யாதி. மின்னோடே கூடுகையால்வந்த பரஹாஹத்தாலே யென்றபடி. ஒளி - அழகு. "ஒளிமுகில் - ஒண்சுடர்" என்றபதச்சேர்த்திக்குஹாவம் - அவன்வடிவுக்கு இத்யாதி. "தீவினையேன் மனத்தை - தெளிவிசும்பு திருநாடாகக்கொண்டு - உறையும்" என்று முந்தின நிர்வாஹம். மனத்தே யுறையாநிற்க, "தீவினை" என்கிறதென்னென்ன - நெஞ்சிலே இத்யாதி. வெறுப்பாக தாத்பர்யாந்தரம் - இதுக்கு இத்யாதி. "தெளிவிசும்பு திருநாடாயிருக்க, தீவினையேன் மனத்துறையும்" என்று சிற்றாள்கொண்டான் நிர்வாஹம். கொம்பது பருத்தியாக - பருத்தி கொம்பிலேயிருக்கச் செய்தே. அங்காடி பாரித்து - அது புடவையானதாய் அத்தை விற்

விருக்கையாயிருக்க, அத்தைக் காற்கடைக்கொண்டு ஸங்க்ஷிப்தரைப்போலேயிருக்க என்னெஞ்சிலே ப்ரகாசியாநின்றான்" என்று. இதுதான் இத்திருவாய்மொழிக்குச் சொன்ன வாக்யார்த்தத்தோடு சேராது; ஒரோர் அவஸரங்களிலே சொல்லிப்போம் வார்த்தையிறே. [துளிவார்கட்குழலார்க்கு] - துளியோழுகும் மதுவையுடைத்தான திருக்குழலையுடையவர்க்கு; வல்லார் பூமுடித்தால் பூத் தோற்றக்கடவதன்றிக்கே மதுவொழுகக்காணுமத்தனையிறே. [என்தூதுரைத்தல் செப்புமினே] - தலையிற்பூச்சருகாயிருக்கிற என் உக்திவாக்யத்தை யவர்க்குச் சொல்லுங்கோள். அவிநிவிஷ்டராய்த் தாமே வருவாராகச்சொல்லிவைத்து, இப்போது தூதுவிட விருக்கிறபடியை யறிவியுங்கோள். (௫)

ஆறாம் பாட்டு.

தூதுரைத்தல்செப்புமின்கள் தூமொழிவாய்வண்டினங்காள்!
போதிரைத்துமதுநுகரும் பொழில்மூழிக்களத்துறையும்
மாதரைத்தம்மார்பகத்தே வைத்தார்க்கு,என்வாய்மாற்றம்
தூதுரைத்தல்செப்புதிரேல் சுடர்வளையும்கலையுமே.

ஆ.—(தூதுரைத்தல்.) - 'தூமொழிவாய்வண்டினங்காள்! என்னுடைய சுடர்வளையும் கலையுமிழந்தேனென்று சொல்லவேணும்; சொல்லுமிடத்தில், அவனுடைய உங்கள்வார்த்தையை அநாதரியாமே, பிராட்டி ஸந்நிதியிலே வைத்துச் சொல்லவேணும்' என்கிறாள்.

ஓ.—ஆறாம்பாட்டில், எம்பெருமானுக்கு என்இடையாட்டம் விண்ணப்பம் செய்யுமிடத்து உங்கள்வார்த்தை விலைசெல்லும்படி பிராட்டி ஸந்நிதியிலேவைத்துச் சொல்லுங்கோள்! என்று சிலவண்டுகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

[தூமொழிவாய் வண்டினங்காள்] - வாராமல்லோம் என்றிருக்கிலும் உங்கள் பேச்சாலே அவனுக்கும் வரவேண்டும்படியான இனியபேச்சையுடைய வண்டினங்காள்! [போதிரைத்து மதுநுகரும்பொழில்] - பூக்களிலே இரைத்துக்கொண்டு மதுபானம் பண்ணும்பொழில். [என்வாய்மாற்றமென்று தொடங்கி] - என் பாசுரமான உக்திவாக்யத்தைச் சொல்லுவதிரேயாகில், என்னுடைய அழகியவளையும் கலையும் ஒழிலமானபடியைச் சொல்லுங்கோள்.

கக் கடைபரப்பி அளப்பது விலைபேசுவதாமாபோலே யென்றபடி. அங்காடி பார்த்து - பாரித்தாற்போலே யென்று கூட்டுவது. தூதப்ரகரணத்திலே வெறுப்பாகச் சொல்லுகிறது உசிதமோ என்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார் - இதுதான் இத்யாதி. இதுதான் என்றது - "மனத்துளைவாரைப்போலே" என்று வெறுப்பாகச் சொல்லுவதுதானென்றபடி. வாக்யார்த்தத்தோடு என்றது - இதின் ப்ரவேஶத்திலே "வடிவழகும் குணங்களும் பற்றாசாகத் தூதுவிடுகிறாள்" என்ற வாக்யார்த்தத்தோடு சேராதென்றபடி. ஆனால் இது எங்ஙனே சேரும்படியென்ன - ஒரோரவஸரங்களிலே இத்யாதி. குழலிலே பூவொழிய மதுவுண்டோவென்ன - வல்லார் இத்யாதி. கீழ்ப்பதத்தோடே "என்" என்றத்தைக்கூட்டி பாவம் - தலையில் இத்யாதி. அவனை "துளிவார்கட்குழல்" என்கையாலே, ப்ரதிகோடியாக - தலையிற் பூச்சருகாய் என்கிறார். "தூதுரைத்தல்" என்றதுக்கு பாவம் - அவிநிவிஷ்டராய் இத்யாதி. க்ரமேணார்த்ய॰ (௫)

ப.—அநந்தரம், நித்யாநபாயிநியான பிராட்டியைத் திருமார்விலே யுடையவர்க்கு, உங்கள் வார்த்தை ஈடேறும்படி அச்சேர்த்தியிலே சொல்லுங்கோள் என்று, சிலவண்டுகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

தூமொழிவாய் - கந்தலற்றபேச்சில் வாய்ப்பையுடைய, வண்டினங்காள் -! போதுஇரைத்து- புஷ்பவிகாஸதசையில் ஹர்ஷத்தாலேகோலாஹலம்பண்ணிக்கொண்டு, மதுநுகரும் - உங்களுக்கு மதுபாநம்பண்ணலாம்படியான, பொழில்- பொழிலையுடைத்தான, மூழிக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - வர்த்திப்பாராய், மாதரை - நாரீணாமுத்தமையானலக்ஷ்மியை, தம் மார்பகத்தேவைத்தார்க்கு - அவளும் "அகலகில்லேன்" என்னும்படி போக்யமான தன்திருமார்விலே நித்யவாஸம்பண்ணும்படி வைத்தவர்க்கு, என்வாய்மாற்றம் - என்வாக்கின்பாசுரமான, தூதுரைத்தல் - தூதவாக்யத்தை, செப்புதிரேல் - சொல்லப்பார்த்திகோளாகில், சுடர் - உஜ்ஜ்வலமான, வளையும்- வளையையும், கலையும் - வஸ்த்ரத்தையும், தூதுரைத்தல் - தூதுக்குப்பாசுரமாக, செப்புமின்கள் - சொல்லுங்கோள்.

இ.—ஆறும்பாட்டில், சிலவண்டுகளைக்குறித்து, உங்கள்வார்த்தை விலைசெல்லும்படி பிராட்டி ஸந்நிதியிலே சொல்லுங்கோள் என்கிறாள்.

[தூதுரைத்தல் செப்புமின்கள்] - என்னுடைய தூதவாக்யத்தை அறிவிக்க அமையும்; நீங்கள் கொண்டுவரவேண்டா. [தூமொழிவாய் வண்டினங்காள்] - இனிய பேச்சையுடைய வண்டுகாள்! அவன் அநாதரிக்கிலும் உங்கள்பேச்சினிமையாலே வரவேண்டும்படியிறே உங்கள் பேச்சிருப்பது. மஹாராஜர்க்கும் பெருமாளுக்கும், "வாநராணாம் நராணாம் ச" என்று விஜாதீயமான இரண்டுதலையும் பொருந்தும்படி திருவடிவார்த்தை சொன்னாற்போலே. "ஸுஹ்ருஸம்ஸாரஸம்வஸ:". [போதிரைத்து மதுநுகரும்பொழில்] - பூக்களிலே யிரைத்துக்கொண்டு மதுபாநம் பண்ணும்பொழில் என்னுதல். போதிலே - காலத்திலேயென்னுதல், எதிரிகளோடும் அம்பேர்க்கவும் வேண்டா. மீட்சியிலேயாகவும் வேண்டா, உயிருவாகுகள் காத்திருப்பாருமில்லை. மதுபாநம்பண்ணுகிறவர்களுடனே கூட மதுபாநம்பண்ண அமையும். [மாதரைத் தம்மார்பகத்தேவைத்தார்க்கு] - நீங்கள் சொல்லுமத்தனையே வேண்டுவது. உங்கள்வார்த்தை கொண்டாடிக்கேட்பிக்கும் புருஷகாரமும் உண்டென்கை. [என்வாய்மாற்றம் இத்யாதி]- என்பாசுரமான தூதவாக்யத்தைச் சொல்லப் பார்த்திகோளாகில், என்னுடைய அழகியவளையும் கலையும் ஶிதிலமானபடியைச் சொல்லுங்கோள்; செப்புவுதிகோளாகில் அதுதானே யெனக்குச் சுடர்வளையும் கலையும். அறிவிக்குமதுவே குறை; வரவு தப்பாதென்கை.

ஈடு.—ஆறும்பாட்டு. சிலவண்டுகளைக்குறித்து, 'உங்கள்வார்த்தை விலை செல்லும்படி பிராட்டிஸந்நிதியிலே சொல்லுங்கோள் என் தூதவாக்யத்தை' என்கிறாள்.

[தூதுரைத்தல் செப்புமின்கள்] - என்தூதவாக்யத்தை யறிவிக்கவமையும்; கோண்டுவரவேண்டா. [தூமோழிவாய் வண்டினங்காள்] - இனியபேச்சையுடைய

ஆறும்பாட்டு - தூதுரைத்தல் இத்யாதி. "வண்டினங்காள் - மாதரைத்தம்மார்பகத்தே வைத்தார்க்கு" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - சிலவண்டுகளை இத்யாதி.

"செப்புமின்கள்" என்றதுக்கு பாவம் - என்தூதவாக்யத்தை இத்யாதி. "தூய்தானமொழி

வண்டுகாள்! அவன் அநாதரிக்கிலும் உங்கள் பேச்சினிமையாலே வரவேண்டும்படியிறே பேச்சிருப்பது. பெருமாளும் இளையபெருமாளும் கையும் வில்லுமாய் வருகிறபடியைக் கண்டு, "இவர்கள் வாலிவரவிடவருகிறார்களோ?" என்றுஅஞ்சி மஹாராஜர் நாலுமூன்று யோஜநம்அவ்வருகேயோட, மீண்டுவந்து "[illegible]" (ஏகம்து:கம் ஸுகஞ்சநௌ) என்று விஜாதீயமான இரண்டுதேஹம் பொருந்தும்படியாக "[illegible]" (அதஸம்ஸ்காரஸம்பந்ந:) என்கிறபடியே வார்த்தைசொன்னானிறே. [போதிரைத்துமதுநுகரும்பொழில்] - பூக்களிலே இரைத்துக்கொண்டு மதுபாநம்பண்ணும்பொழிலென்னுதல்; போதிலே - காலத்திலேயென்னுதல். உங்களுக்கு மீட்சியிலே யாகவும்வேண்டா: உயிமுவாதிகள் காப்பாருமில்லை; முன்பு மதுபாநம்பண்ணுகிறவர்களோடே மதுபாநம்பண்ணவமையும். [மாதரைத் தம்மார்பகத்தேவைத்தார்க்கு] - நீங்கள் சொல்லுமத்தனையேவேண்டுவது. உங்கள்வார்த்தைகேட்டிருக்கவும், கேட்டுக்கொண்டாடுகைக்கும் புருஷகாரமுண்டேன்கை. [என்வாய்மாற்றம் இத்யாதி] - என்பாசுரமான உசிதவாக்யத்தைச் சொல்லப்பார்த்திகோளாகில், என்னுடைய அழகியவளையும் கலையும் ஶிதிலமானபடியைச் சொல்லுங்கோள்! செப்பீதிகோளாகில், அதுதானே எனக்குச்சுடர்வளையும் கலையுமென்னுதல். அறிவிக்குமதே குறை, அவர்வரவு தப்பாது. (௬)

ஸ்லோகத்திற்படியே யென்றபடி. இவர்நேர்பட்டால் விஷயம் குறைபட்டிருக்குமோவென்ன - இளையபெருமாளை இத்யாதி. எற்றமுண்டென்கிறார் - ஸ்ரீஜநகராஜன் இத்யாதி. (௨)

[கவையில் மனமின்றி] - அது தன்னிலும் இதுவும் முகாந்தரமுமாய்ச் செல்லுகிறதோ? இருதலைத்த நெஞ்சின்றியே. [கண்ணீர்கள் கலுழ்வன்] - கண்ணீர்கள் வெள்ளமிட விருப்பன். [நவையில் திருநாரணன்] - துர்லபத்வாதி தோஷமின்றிக்கேயிருக்கிற ஸ்ரீமானான நாராயணன். ஸௌலப்யத்துக்குஊற்றான பிராட்டியோடேகூடத் திருநாவாயிலேவந்து ஸுலபனானவன். [திருநாவாயவையுள் புகலாவதோர் நாளறியேனே] - திருநாவாயிலே பேரோலக்கமாகவிருக்க அத்திரளிலேசென்றுகூடப் பெறும்நாளென்றென்று அறிகிறிலேன். அவை - சபை, நவை - குற்றம். "அடியார்கள்குழாங்களை - உடன்கூடுவதென்று கொலோ" என்றிருக்கும் அவராகையாலே, அந்நாளை யாசைப்படுகிறார்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. 'திருநாவாயில் திருவோலக்கத்திலே புகும்நாள் என்று?' என்றறிகிலேனென்கிறார்.

[எவைகொலித்யாதி] – நான் வந்து கிட்டப் பெறும்நாள் எவை என்று ? [எப்போதும்] - ஒருகால் இத்தைச் சொல்லி அல்லாதபோது அந்யபரதைபண்ணுகிறேனோ ? [கவையில் மனமின்றி] - அதுதன்னிலும் இதுவும் முகாந்தரமுமாய்ச் செல்லுகிறதோ? இருதலைத்த நெஞ்சின்றிக்கே. [கண்ணீர்கள்கலுழ்வன்] - கண்ணீர்கள் வெள்ளமிடவிருப்பன். [நவையில்திருநாரணன்] - துர்லபத்வாதி தோஷம்இன்றிக்கே யிருக்கிற ஸ்ரீமானான நாராயணன். ஸௌலப்யத்துக்குஊற்றான பிராட்டியோடேகூடத் திருநாவாயிலேவந்து ஸுலபனானவன். 'திருநாவாயிலே பேரோலக்கமாக விருக்க, "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதுஎன்றுகொலோ?" என்று' ஆசைப்பட்ட நான் அத்திரளிலேசென்று கூடப் பெறும் நாள் என்று?' என்றறிகிறிலேன். அவை - சபை. நவை - குற்றம். (௩)

நான்காம் பாட்டு.

நாளேலறியேன் எனக்குள்ளனநாளும்
மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன்
நீளார்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய்
வாளேய்தடங்கண் மடப்பின்னைமணளா!

ஆ.—(நாளேலறியேன்.) - நிரவதிக ஸௌந்தர்யகுண விசிஷ்டையான நப்பின்னைப்பிராட்டிக்கு ஸ்நேஹயனான உனக்கு மீளாஅடிமைப்பணிசெய்யப்புகுந்தேன் ; 'அடிமைசெய்யும் நாளென்று?' என்றறிகிறிலேனென்கிறார்.

மூன்றாம்பாட்டு.—எவைகொல் இத்யாதி. " திருநாவாயவையுள்புகலாவதோர்நாளறியேன்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - திருநாவாய் இத்யாதி.

இப்பதப்ரயோகத்துக்கு ஸ்வாபம் - அதுதன்னிலும் இத்யாதி. இதுக்கர்த்தம்-இருதலைத்த நெஞ்சின்றிக்கே என்று. இருதலைத்தநெஞ்சு - இருதலையான நெஞ்சென்றபடி. முகாந்தரமுமாய் - விஷயாந்தரமுமாயென்றபடி. கவையில் மனமின்றி-கவையிலேயான மனமின்றிக்கே-வேறொன்றிற்பெருகின நெஞ்சின்றிக்கே; ஏகாக்ரசித்தனாய்க்கொண்டென்றபடி. கவை - கார்யம்; விஷயாந்தரமென்றபடி. கண்ணநீர்களாலே கலங்குவனென்று ஸப்தார்த்தம். அதாவது - கண்ணநீர் வெள்ளமிடாநிற்பனென்றபடி. "கலுழ்வன்" என்கிறதுக்கு நிகண்டு - "கலுழி - கலங்குதல், அழுதல்." "கலுழுவன்" என்று இவ்வர்த்தங்களையெல்லாஞ் சொல்லும். "திருநாரணன்" என்று தொடங்கி மேலுக்கு ஸப்தார்த்தம் - ஸௌலப்யத்துக்கு இத்யாதி. (௩)

ஒ.—நாலாம்பாட்டில், எல்லாவடிமையும் கொள்ளுகைக்குறுப்பான திருச்சோலையையுடைய திருநாவாயிலே நப்பின்னைப்பிராட்டியோடேகூட எழுந்தருளியிருக்கிற உனக்கு ஆத்மாந்ததாஸ்யம் பண்ணும்படி விஷயீக்ருதனான நான் திருவடிகளில் அடிமையிலே அதிகரிக்கும்நாள் என்றென்று அறிகிலேனென்று பகருகிறார்.

[வாளேய்தடங்கண்] - வாள்போலேயாய்ப் பெருத்திருக்குமான கண்.

ப.—அநந்தரம், நித்யகைங்கர்யத்திலே அர்த்திதனாய்ப்புகுந்த நான், அந்தக் கைங்கர்யோபயுக்தமான நாள்கள் உளவானபடி யறிகிறிலேனென்கிறார்.

சீர் - ஓங்கி, ஆர் - நிறைந்த, மலர் - பூவையுடைத்தான, சோலைகள்-சோலைகள், சூழ் - சூழ்ந்த, திருநாவாய் - திருநாவாயிலே, வாள்ஏய் - வாள்போலே நீண்ட ஒளியையுடைத்தான, தடங்கண் - பெரியகண்ணை யுடையளாய், மடப்பின்னை - ஆத்மகுணபூர்ணையான நப்பின்னைப்பிராட்டிக்கு, மணாளா - நிரதிசயபோக்தாவானவனே! (ஸூரிகளைப்போலே), நானும்-, மீளாவடிமைப்பணி செய்ய - விச்சேதரஹித நிரந்தர கைங்கர்யம் பண்ணுகைக்கு, புகுந்தேன் - அத்யவஸித்தேன்; (அதுக்கு), எனக்கு -, உள்ளன - உளவாகக் கற்பித்துவைத்த, நாள்ஏல் - நாளாகில், அறியேன் - (அவை) நானறிகிறிலேன்.

இ.—நாலாம்பாட்டில், ஆத்மாந்ததாஸ்யம் பண்ணும்படி விஷயீக்ருதனான நான் நப்பின்னைப்பிராட்டியோடே கூட விருக்கிறவிருப்பிலே அடிமை செய்யப்பெறும் நாள்என்றென்றறிகிறிலேன் என்கிறார்.

[நாளேலறியேனெனக்குள்ளன] - பெறக்கடவ நாள்என்றென்று அறிகிறிலேன் என்னுதல். பிரிந்திருக்கக்கடவ நாளைத்தானென்று அறிகிறிலேன் என்னுதல். பேறுஸித்தமானபின்பு பதறுகிறதென்னென்னில்?- [நானும் மீளாவடிமைப்பணிசெய்யப் புகுந்தேன்] - நித்யஸூரிகள்பண்ணும் ஆத்மாந்ததாஸ்யத்திலேயன்றோ நானும்அதிகரித்தது. ஒருப்ரயோஜநத்தைக் கொள்ளக்கிட்டினவனைப் ஆறியிருக்கிறேனோ? தாஸ்ய பரிமளத்தில் சுவடறியாதவனைப் ஆறியிருக்கிறேனோ? [சீர்ஆர்மலர்ச் சோலைகள்] - ஓங்கிப்பரப்புமாறப் பூத்தசோலைகளை யுடைத்தான தேசம்; அடிமைசெய்கைக்குப் புஷ்பாத்யுபகரணங்களால் குறைவற்ற தேசமென்னுதல். நப்பின்னைப் பிராட்டியுந்தானுமாகப் புஷ்பாபசயம் பண்ணலாம் தேசமென்னுதல். [வாளேய்தடக்கண்] - ஒளியையுடைத்தான பரந்த கண்ணென்னுதல், வாள்போலேகண்டாரை அழிக்கவல்ல பரந்த கண்ணென்னுதல்; அவனை அநந்யார்ஹனாம்படியாக்கவல்ல கண்ணழகையுடையவள் என்கை. [மடப்பின்னை மணாளா] - அழகேயன்றிக்கே ஆத்மகுணங்களாலும் துவக்க வல்லவளுக்கு வல்லபனானவனே! தேசாந்தரம்போன ப்ரஜை ஊர்அணித்தானவாறே தாய்மாரைப் பலகாலும் நினைக்குமாபோலே ப்ராப்யதேசம்அணித்தானவாறே திரளவும் தனித்தனியும் பிராட்டிமாரை அநுஸந்திக்கிறார்.

ஈடு.—நாலாம்பாட்டு. 'ஆத்மாந்ததாஸ்யம்பண்ணும்படி விஷயீக்ருதனான நான், நப்பின்னைப்பிராட்டியோடேகூடவிருக்கிற விருப்பிலே யடிமைசெய்யப்பெறும் நாள் என்று? என்றுஅறிகிறிலேன்' என்கிறார்.

நாலாம்பாட்டு.—நாளேல் இத்யாதி. "மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன் - மடப் பின்னைமணாளா - நாளேலறியேன்" இத்யாதிகளைக் கடாக்ஷித்தவதாரிகை - ஆத்மாந்ததாஸ்யம் இத்யாதி.

[நாளேலறியேனெனக்குள்ளன] - பெறக்கடவநாள் என்றென்றறிகிறிலேன் என்னுதல்; நான் பிரிந்திருக்கக்கடவ நாள்எத்தனையுண்டென்றறிகிறிலேனென்னுதல். பேறு ஸித்தமானபின்பு பதறுகிறதென்? என்னில் - [நானும் மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன்] - நித்யஸூரிகள்பண்ணும் ஆத்மாந்ததாஸ்யத்திலேயன்றே நானும்அதிகரித்தது? ஒருப்ரயோஜநத்தைக் கொள்ளக் கிட்டினவனாய்ஆறியிருக்கிறேனோ? தாஸ்ய பரிமளத்திற் சுவடறியாதவனாய்ஆறியிருக்கிறேனோ? [நீளார்மலர்ச்சோலைகள்] - ஓங்கிப் பரப்புமாறப்பூத்த சோலைகளையுடைத்தான தேசம். அடிமைசெய்கைக்குப்புஷ்பாத்யுபகரணங்களால் குறைவற்றதேசம் என்னுதல்; நப்பின்னைப்பிராட்டியும் தானுமாகப் புஷ்பாபசயம்பண்ணலாம் தேசமென்னுதல். [வாளேய்தடங்கண்] - ஒளியையுடைத்தான பரந்த கண்ணையென்னுதல்; வாள்போலே கண்டாரை அழிக்கவல்ல பரந்தகண் என்னுதல்; அவனை அநந்யார்ஹமாக்கவல்ல கண்ணழகையுடையவளென்கை. [மடப்பின்னைமணாளா] - அழகேயன்றிக்கே ஆத்மகுணங்களாலும் துவக்கவல்லவளுக்கு வல்லபனானவனே! தேசாந்தரம்போனப்ரஜை ஊர்அணித்தானவாறே தாய்மாரைப் பலகால் நினைக்குமாபோலே, ப்ராப்யதேசம்அணித்தானவாறே திரளவும் தனித்தனியும் பிராட்டிமாரை அநுஸந்திக்கிறார். (௪)

ஐந்தாம் பாட்டு.

மணாளன்மலர்மங்கைக்கும்மண்மடந்தைக்கும்
கண்ணாளனுலகத்துயிர்தேவர்கட்கெல்லாம்
விண்ணாளன்விரும்பியுறையுந்திருநாவாய்
கண்ணாரக்களிக்கின்றதிங்கென்றுகொல்கண்டே.

ஆ.—(மணாளன்.) - லக்ஷ்மீஸமிநீளாநாயகனைப், தேவாதி ஸ்தாவராந்த நிகிலஜநநிர்வாஹகனைப், ஸ்ரீவைகுண்டநிலயனான எம்பெருமான் விரும்பியுறையும் திருநாவாயை, இப்ப்ரக்ருதியோடே கண்ணாரக்கண்டு களிப்பதென்றோ? என்கிறார்.

ஓ.—அஞ்சாம்பாட்டில், திருநாவாயை என் கண்ணின்விடாய் தீரக் கண்டு க்ருதார்த்தனாவதென்றோ? என்கிறார்.

"எனக்குள்ளன - நாளேலறியேன்" என்றந்வயிப்பது. எனக்குளவாகக் கற்பித்து வைத்த நாளானவறியேனென்று ஸப்தார்த்தம். இன்னநாளென்று விசேஷியாமையாலே இத்தை த்வேதா காட்டுகிறார் - பெறக்கடவநாள் இத்யாதி வாக்யத்வயத்தாலே. மீளா - அவிச்சிந்நமான. அடிமைப்பணி - தாஸ்யக்ருத்யம். "அடிமைப்பணி" என்றதுக்கு ஹாவம் - ஒரு ப்ரயோஜநத்தை இத்யாதி. "மீளாவடிமைப்பணி" என்றதுக்கு ஹாவம்-தாஸ்யபரிமளத்தில் இத்யாதி. "அடிமைப் பணிசெய்ய" என்றத்தையும் "மடப்பின்னைமணாளா" என்றத்தையும் கூட்டி ஹாவத்வயம் - அடிமைசெய்கைக்கு இத்யாதிவாக்யத்வயம். வாள் - ஒளியும், வேலும். ஏய்கை - உடைத்தாகையும், ஒப்பும். கீழ் வாக்யவிவரணம் - அவனை இத்யாதி. துவக்கவல்ல - வசீகரிக்கவல்ல. பாட்டுத்தோறும் பிராட்டிமாரை யருளிச்செய்ததுக்கு ஹாவம் - தேசாந்தரம் இத்யாதி. 'நீளார்மலர்' என்று தொடங்கி 'அடிமைப்பணி செய்யப் புகுந்தேன்: எனக்குள்ளன - நாளேலறியேன்' இத்யந்வயம். (௪)

[கண்ணாளன் உலகத்துயிர் தேவர்கட்கெல்லாம் விண்ணாளன் விரும்பியுறையும் திருநாவாய்] - லோகத்திலுண்டான தேவமனுஷ்யாதிகளுக்கு நிர்வாஹகனும், ஸ்ரீவைகுண்டநாதனு மிருந்தவன் அத்யாதரம் பண்ணிக்கொண்டு வர்த்திக்கிறதிருநாவாயை. [இங்கு] - ப்ரக்ருதியோடே.

ப.—அநந்தரம், பத்நீபரிஜநஸ்தாநாதி பரிபூர்ணனானவன் வர்த்திக்கிற திருநாவாயை, என்கண்ணானது நிறையும்படி கண்டு அநுபவிப்பதென்றோ? என்கிறார்.

மலர்மங்கைக்கும் - பத்மவாஸிநியான லக்ஷ்மிக்கும், மண்மடந்தைக்கும் - ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும், மணாளன் - போக்தாவாய், உலகத்து - லோகத்தில், உயிர் தேவர்கட்கெல்லாம் - ப்ராணிகள் தேவதைகள் எல்லார்க்கும், கண்ணாளன் — நிர்வாஹகனாய், விண் ஆளன் - பரமவ்யோமமாப்தவாச்யமான பரமபதத்தில் ஆன்மாவையும் அடிமைகொள்ளுமவன், விரும்பி-(இந்தவிபூதித்வபத்திலும்)விரும்பி, உறையும் - வர்த்திக்கிற, திருநாவாய் - திருநாவாயை, கண் - கண்கள், ஆர - பரிபூர்ணமாம்படி, கண்டு-, இங்கு - இங்கே, களிக்கின்றது - ப்ரத்யக்ஷமாகப்பாவது, என்றுகொல் - என்றோ?

இ.—அஞ்சாம்பாட்டில், திருநாவாயை என் கண்ணின்விடாய்தீரக்கண்டு உகப்பதென்றோ? என்கிறார்.

[மணாளன் இத்யாதி] - பிராட்டிக்கும், ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும் வல்லபன். புருஷகாரமாவாரும் பொறைக்குஉவாத்தாவாரும் உண்டாயிருக்க இழக்கக்கடவேனோ? [கண்ணாளன் இத்யாதி] - லோகத்தில் மனுஷ்யர்களென்ன, தேவர்களென்ன, எல்லார்க்கும் நிர்வாஹகனானவன். அவர்கள் படுக்கைப்பற்று நோக்குகிறபடி. [விண்ணாளன்] - பிராட்டிமாரும் தானும் தனக்குத் தகுதியான பரமபதத்திலே திவ்யபர்யங்கத்திலேயிருந்து நித்யஸூரிகளை நிர்வஹிக்கிறவன். [விரும்பியுறையும் திருநாவாய்] - உபயவிபூதிநாதன் பெறாப்பேறாக ஆதரித்து வர்த்திக்கிற தேசம். அவன் விரும்புகிற தேசமல்லது ப்ராப்யமில்லையிறே. [கண்ணார] - காண்கையிலே விடாய்ப்பட்ட கண்கள் வயிறுநிறைய. [களிக்கின்றது இங்கு என்றுகொல்] - "கலைசேர்" என்று ஒரு தேச விசேஷத்திலே களிக்கையொழிய, இங்கே களிக்கப்பெறுவதென்றோ? [கண்டே] - "காண்கை நிச்சிதம்" என்னும் விச்வாஸத்தால் களிக்கையன்றிக்கே, கண்டே களிப்பது என்றோ?

ஈடு.—அஞ்சாம்பாட்டு. திருநாவாயைக் கண்ணின்விடாய்தீரக்கண்டு அநுபவிப்பதென்று? என்கிறார்.

[மணாளனித்யாதி] - பெரியபிராட்டியார்க்கும் ஸ்ரீபூமிப்பிராட்டியார்க்கும் வல்லபனானவன். புருஷகாரமாவாரும் பொறைக்குஉவாத்தாவாருமுண்டாயிருக்க இழக்கவேணுமோ? [கண்ணாளனித்யாதி] - லோகத்தில் மநுஷ்யர்களென்ன, தேவர்களென்ன, எல்லார்க்கும் நிர்வாஹகனானவன். அவர்கள் படுக்கைப்பற்று நோக்குகிறபடி.

அஞ்சாம்பாட்டு-மணாளன் இத்யாதி. "திருநாவாய் கண்ணாரக்களிக்கின்றதிங்கென்றுகொல்கண்டே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - திருநாவாயை இத்யாதி.

இத்தால் ஸாவம் - புருஷகாரம் இத்யாதி. உவாத்து - உபாத்யாயன். உயிர் - மநுஷ்யர். "பிராட்டிமார்க்கு - மணாளன்" என்றவநந்தரம் "தேவர்கட்கெல்லாம் - கண்ணாளன்" என்றதற்கு ஸாவம் - அவர்கள் இத்யாதி. படுக்கைப்பற்று - ஸ்த்ரீகளுக்குவிட்ட தேசம். "படுக்கைதானிருக்

[விண்ணுளன்] - படுக்கைதானிருக்கிறபடி ; பிராட்டிமாரும்தானும் தனக்குத்தகுதியான பரமபதத்தில் திவ்யபர்யங்கத்திலேயிருந்து நித்யஸூரிகளை நிர்வஹிக்கிறவன். [விரும்பியுறையும்திருநாவாய்] - உபயவிபூதிநாயகன், பெறுப்பேறாக ஆதரித்து வர்த்திக்கிறதேசம். அவன்விரும்புகிறதேசமல்லது ப்ராப்யமில்லையிறே. [கண்ணுர]-காண்கையிலே விடாய்ப்பட்ட கண், ஆர - வயிறுநிறைய. [களிக்கின்றது இங்கு என்று கொல்]-“**[illegible]**” (அஹமந்நமஹமந்நம்) என்றுஒரு தேசவிசேஷத்தே களிக்கையொழிய, இங்கே களிக்கப்பெறுவதுஎன்றோ ? [கண்டே]-“காண்கை நிஸ்சிதம்” என்னும் விஸ்வாஸத்தால் களிக்கையன்றிக்கே, கண்டேகளிப்பதென்றோ ? (ரு)

ஆறும் பாட்டு.

கண்டேகளிக்கின்றதிங்கேன்றுகோல்கண்கள்
தொண்டேயுனக்காயொழிந்தேன்துரிசின்றி
வண்டார்மலர்ச்சோலைகள்சூழ்திருநாவாய்
கொண்டேயுறைகின்றஎங்கோவலர்கோவே.

ஆ.—(கண்டே) - எனக்காகத் திருநாவாயைக் கோயிலாகக்கொண்டுஉறைகிற கோவலர்கோவே ! உன்பக்கலிலே அநந்யப்ரயோஜநமான ஸ்நேஹத்தையுடையேனை என்னுடைய கண்கள் திருநாவாயிலே உன்னைக் கண்டு களிப்பதானென்றோ ? என்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், திருநாவாயில் எம்பெருமானைக் குறித்து, கண்கள் உன்னைக்கண்டு களிப்பதென்றோ ? என்கிறார்.

[தொண்டே உனக்காய் ஒழிந்தேன் துரிசின்றி] - அந்யபரதை கெட்டு உனக்கே அடிமையானேன். [வண்டென்று மேலுக்கு] - புக்காரை மற்றொன்றறியாதபடி பண்ணவல்ல நிரதிஸய போக்யமான திருச்சோலைகள் சூழப்பட்ட திருநாவாயை ஆதரித்து அங்கே நிரந்தரவாஸம் பண்ணுகிற ஆஸ்ரிதஸுலபனானவனே !

ப.—அநந்தரம், திருநாவாயிலே வர்த்திக்கிற ஆஸ்ரிதஸுலபனான உன்னைக் கண்டு என்கண்கள் களிப்பதென்று ? என்கிறார்.

வண்டுஆர் - வண்டுகள்நிறைந்த, மலர்ச்சோலைகள் - மலரையுடையசோலைகள், சூழ் - சூழ்ந்த, திருநாவாய் - திருநாவாயை, கொண்டு - (வாஸஸ்தாநமாகத்திருவுள்ளத்திலே) கொண்டு, உறைகின்ற - நித்யவாஸம்பண்ணுமவனாய், எங்கோவலர்கோவே - எனக்கும் கோபாலர்க்கும் ஸௌலப்யத்தைக்காட்டி ஸ்வாமியான க்ருஷ்ணனே ! துரி

கிறபடி” என்றத்தை விவரிக்கிறார் - பிராட்டிமாரும் இத்யாதி. “கண்ணுளன் - விண்ணுளன் விரும்பியுறையும்” என்று கூட்டி பாவம் - உபயவிபூதி இத்யாதி. பரமபதத்தைவிட்டுத் திருநாவாயை “கண்ணுர - கண்டு” என்கிறதென்னென்ன - அவன்விரும்புகிற இத்யாதி. “விடாய்ப்பட்ட” என்கையாலே - வயிறுநிறைய என்றது. “இங்கு” என்றதுக்கு பாவம் - அஹமந்நம் இத்யாதி. “கண்டே !” என்கிற ஏவகாரார்த்தம் - காண்கை இத்யாதி. ‘மலர்மங்கைக்கும் மண்மடந்தைக்கும் - மணாளன் - உலகத்துயிர் தேவர்கட்கெல்லாம் - கண்ணுளன்-விண்ணுளன்-விரும்பியுறையும் திருநாவாய் - இங்கு - கண்ணுர - கண்டே - களிக்கின்றது-என்றுகொல்?’ இத்யந்வய:

சின்றி - க்ருத்ரிமமின்றியே, உனக்கே, தொண்டே பூண்டேன் - அடிமைப்பட்டேன்; கண்கள் - என்கண்கள், இங்கு - இங்கே, கண்டே களிக்கின்றது - [illegible] களிப்பது, என்றுகொல் - என்றாயிருக்கிறது ?

இ.—ஆறாம்பாட்டில், வேறொருவன் றிக்கே [illegible] கண்களிப்பதென்றோ ? என்கிறார்.

[கண்டேயித்யாதி] - நான் செப்தபடிசெப்ய; கண்களின்விடாய் தீருவதென்றோ ? ஒருநாளிலேகாண்கை நிச்சிதம்; ஆனபின்பு, இந்நிர்ப்பந்தத்துக்கு வலமென் ? என்ன, [தொண்டேயித்யாதி] - அந்யபரதையன்றிக்கே உன் திருவடிகளிலே அதிசபலனானேன்; அரைக்ஷணம் இழக்கமாட்டாதபடியாயன்றோ என்சாபலமிருக்கிறது ? துரிசாகிறது - மநஸ்ஸுக்கு ஹேயவிஷயஸ்பர்சம். [வண்டாரித்யாதி] - பரிமளத்தோபாதி வண்டுகளும் படிந்துகிடக்கும்படி புஷ்பிதமான சோலைகளை உடைத்தான தேசம். "நவவாநராவதஜூதே" என்கிறபடியே புக்காரை [illegible] போக்யமான தேசம். [கொண்டேயுறைகின்ற] - 'ஆச்ரிதரோடே அநுபவிக்கலாம் தேசம்' என்று திருவுள்ளத்திலேகொண்டு [illegible] தேசம். [எங் கோவலர்கோவே] - க்ருஷ்ணனாய்வந்து அவதரித்து இடையர்க்கு ஸுலபனானாற்போலே திருநாவாயிலே வந்து எனக்கு ஸுலபனானவனே !

ஈடு.—ஆறாம்பாட்டு. ஊரையன்றிக்கே வேறில் [illegible] உன்னைக்கண்டு களிப்பதென்றோ ? என்கிறார்.

[கண்டேகளிக்கின்றது இங்கு என்று கொல்கண்கள்] - நான் சொன்னபடிசெய்ய; கண்களின்விடாய் கெடுவதென்றோ ? ஒருநாளிலேகாண்கை நிச்சிதம்; ஆனபின்பு, இந்நிர்ப்பந்தத்துக்கு வலமென் என்னில் ? [தொண்டேயுனக்காயொழிந்தேனித்யாதி] - அந்யபரதையின்றிக்கே உன்திருவடிகளிலே அதிசபலனானேன். அரைக்ஷணம் இழக்க மாட்டாதபடியன்றோ என்சாபலமிருப்பது. துரிசாகிறது - மநஸ்ஸுக்கு ஹேயவிஷயஸ்பர்சம். [வண்டுஇத்யாதி] - பரிமளத்தோபாதி வண்டுகளும் படிந்துகிடக்கும்படி புஷ்பிதமான சோலைகளையுடைத்தான தேசம். "நவவாநராவதஜூதே" ([illegible]வர்த்ததே) என்கிறபடியே புக்காரை மீளவொட்டாதபடி [illegible] போக்யமான தேசம். [கொண்டேயுறைகின்ற] - "நமக்கும் நம்மையடைந்தார்க்கும் [illegible] அநுபவிக்கலாம் தேசம்" என்று திருவுள்ளத்தாலே [illegible]த்துக்கொண்டு வர்த்திக்கிற தேச

ஆறாம்பாட்டு - கண்டே இத்யாதி. "திருநாவாய்கொண்டே [illegible] எங்கோவலர் கோவே - இங்கு - கண்டே - கண்கள் - களிக்கின்றது - என்றுகொல்" [illegible] தவதாரிகை - ஊரையன்றிக்கே இத்யாதி. "கோவலர்கோவே" என்று [illegible] யாலே - ஊரில்நின்ற [illegible] என்கிறது.

[illegible] தாம் ஆநந்திப்பதென்றோ என்று [illegible]. இப்போது கண்களினுடைய ஆநந்தத்தை ப்ரார்த்திப்பானென் ? என்ன - நான் இத்யாதி. [illegible] ஆநந்தமல்லா விட்டாலும் தன்னுடையப்ராணனுக்கு ஆநந்தத்தை ப்ரார்த்திக்குமாபோலே [illegible]. இத்தால் பாவம் - அரைக்ஷணம் இத்யாதி. இது [illegible] சங்கைக்கு உத்தரமாயிருக்கிறது. "அந்ய பரதையின்றிக்கே" என்றதால் ஃபலிதம் - துரிசாகிறது இத்யாதி. துரிசு - குற்றம். ஆர்தல் - பொருந்துதலாய், படிதலைச்சொல்லுகிறது. சோலைகளை [illegible]க்கு பாவம் - நவ இத்யாதி. "கொண்டே" என்றதுக்கு பாவம் - நமக்கும் இத்யாதி. "எங்கோவலர்கோவே" என்றதுக்கு

மாய்த்து. [எங்கோவலர்கோவே] - க்ருஷ்ணனாய்வந்தவதரித்து இடையர்க்கு ஸுலபனாற்போலே, திருநாவாயிலேவந்து எனக்கு ஸுலபனானவனே! (சு)

ஏழாம் பாட்டு.

கோவாகியமாவலியைநிலங்கொண்டாய்
தேவாசுரஞ்செற்றவனேதிருமாலே
நாவாயுறைகின்றஎன்னாரணநம்பீ!
ஆவாவடியான்இவனென்றருளாயே.

ஆ.—(கோவாகிய) - ஆஸ்ரிதஜநஸமீஹிதப்ரதனாய், ஆஸ்ரிதஜநாநிஷ்ட நிவாரணஸ்வபாவனுமாய் ஆஸ்ரிதவத்ஸலனுமாய், ஆஸ்ரிதஸுலபத்வார்த்தமாகத் திருநாவாயிலே அவதீர்ணனுமாயிருந்த நாராயணநம்பீ! ஆவா அடியானிவனென்றருளாய், என்கிறார்.

ஒ.—ஏழாப்பாட்டில், திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிற நாரணநம்பீ! ஐயோ இவன்அநந்யமதியென்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார்.

[கோவென்று தொடங்கி] - ஆஸ்ரிதருடைய அபேக்ஷிதங்களை முடித்துக் கொடுக்கும் ஸ்வபாவனாய் ஆஸ்ரிதப்ரதிகூலநிரஸந ஸ்வபாவனுமாய் வைத்து அதுக் கடியான ஸ்ரிய:பதியுமாய் ஆஸ்ரிதர்க்கணித்தாகைக்காக திருநாவாயிலே எழுந்தருளியிருப்பதுஞ்செய்து ஆஸ்ரிதவத்ஸலனாய் இப்படி "ஆஸ்ரிதர்க்குஉறுப்பாகப் பெற்றோம்" என்றத்தாலே பூர்ணனானவனே!

ப.—அநந்தரம், ஸேஷித்வ ரக்ஷகத்வ ப்ராப்யத்வ ரூபமான ஆகாரபூர்த்தியையுடைய நீ, உறவைப்பார்த்து க்ருபைபண்ணவேணுமென்கிறார்.

கோவாகிய-(த்ரைலோக்யத்துக்கும்) ஸேஷியாகத் தன்னையபிமாநித்திருந்த, மாவலியை - மஹாபலியை, நிலங்கொண்டாய் - பூமியை அபேக்ஷித்துவாங்கி அதினுடைய அந்யஸேஷத்வம்போய் அநந்யார்ஹமாம்படி ஸேஷியானவனாய், (ஸேஷமான ஜகத்துக்கு), தேவாசுரம் - தேவாஸுரவிமர்தத்தால் வருகிற விரோதத்தை, செற்றவனே - ஸமிப்பித்து த்வதேகஸரணனுக்குமவனாய், நாவாயுறைகின்ற - திருநாவாயிலே நிரந்தரவாஸம்பண்ணுகிற, என்-, நாரணநம்பீ - ஸமஸ்தகல்யாணவிபூதி விஸிஷ்டத்வத்தால்வந்த நாராயணத்வ பூர்த்தியையுடையையாய், திருமாலே - இந்த ஸேஷித்வ ரக்ஷகத்வ ப்ராப்யத்வபூர்த்திக்கு அஸாதாரணமான ஸ்ரிய:பதித்வத்தையுடையவனே! (காருண்யரூபையானவளோட்டைச்சேர்த்தியாலே), ஆ ஆ - ஐயோ! இவன் அடியானென்று-இவன் நமக்கு ஸேஷபூதனென்று, அருளாயே-* ஆகாரத்ரயவிஸிஷ்ட ஸம்பந்தத்தைப்பார்த்து இரங்கியருளவேணும்.

இ.—ஏழாம்பாட்டில், ஆஸ்ரிதார்த்தமாகத் திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிற தேவர் அநந்யமதியென்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார்.

ஸுலபம் - க்ருஷ்ணனாய் இத்யாதி. 'வண்டார்' என்றுதொடங்கி, 'கோவே - அரிசின்றி-உனக்கு-தொண்டாயொழிந்தேன்; இங்கு - கண்டே-கண்கள்-களிக்கின்றது-என்றுகொல்?' இத்யந்வய:.(சு)

[கோவாகிய இத்யாதி] - ஈஶ்வரன் இந்த்ரனை த்ரைலோக்யாதிபதியாக வைத்தான், மஹாபலி அவனைத்தள்ளி அப்பதத்தைத் தான் எறட்டுக்கொண்டான்; ரக்ஷகனானவன் ஸ்வபலத்தாலே பெறட்டுக்கொண்டபடியாலே "ஈதி நோபயிஷ்யே" என்று ரக்ஷகனை இந்த்ரனுக்குக் கொடுக்கைக்காக அவன் பக்கலிநின்றும் விபூதியை வாங்கினானாய்த்து. ஆஶ்ரிதருடைய அபேக்ஷிதம் கொடுத்துத் தன்னையழியமாறும் ஸ்வபாவனென்கை. [தேவாசுரர்ச்செற்றவனே] - தேவாஸுரஸங்க்ராமத்திலே பரஸ்பரவதமேயாய்ச் சென்றவாறே, அநுகூலரான தேவர்களுக்காக அஸுரர்களை யழியச்செய்தவனே! மஹாபலிபக்கல் குணலேஶத்தாலே தன்னையழியமாறினான்; அசுரர்பக்கல் அதுவுமொன்றில்லாமையாலே அவர்களையழியச் செய்தபடி. [திருமாலே] - ஆஶ்ரிதரை ரக்ஷிக்கைக்கும் தத்ப்ரதிகூலரை நிரஸிக்கைக்கும் அடி ஶ்ரிய:பதியாகையாலே; தான் உகவாதார்பக்கல் ஐஶ்வர்யத்தைமாற்றி உகப்பார்க்குக் கொடுக்கைக்கு அடி ஶ்ரிய:பதியாகையாலே. [நாவாயுறைகின்ற] - ரக்ஷகனானவன் தூரஸ்தனாகையன்றிகே ஆஶ்ரிதஸந்நிதாநார்த்தமாகத் திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிறவனே! [நாரணநம்பீ] - அதுக்கு உறுப்பாக ஆஶ்ரிதவத்ஸலனாய் "அவர்களுக்கு உறுப்பாகப் பெற்றோம்" என்று அத்தாலே பூர்ணனானவனே! ஆஶ்ரிதரக்ஷணத்தை நினைத்து ஸர்வாத்மபாவமுடையானவன் என்றுமாம். [ஆவாவடியானிவனென்றருளாயே] - "அநந்யகதியான இவன் ஹா ஹா நோவுபடுவதே" என்று க்ருபைபண்ணியருளவேணும்; "ஸோஹந்தே தேவதேவேஶ நார்ச்சநாதௌ ஸ்துதௌ ந ச ஸாமர்த்யவாந் க்ருபாமாத்ரமநோவ்ருத்தி: ப்ரஸீத மே"; இவன் நமக்கு அஸாதாரணனென்று, ஸம்பந்தத்தைப் பார்த்து க்ருபைபண்ணியருளவேணும் என்றுமாம்.

ஈடு.—ஏழாம்பாட்டு. ஆஶ்ரிதார்த்தமாகத் திருநாவாயிலே நித்யவாஸம்பண்ணுகிற தேவர், அநந்யகதியேன்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார்.

[கோவாகியமாவலியை நிலங்கொண்டாய்] - ஸர்வேஶ்வரன் இந்த்ரனை த்ரைலோக்யாதிபதியாக்கிவைத்தான்; அவனைத்தள்ளி அந்தப்பதத்தைத் தானெறட்டுக்கொண்டு "நானே அரசு" என்றிருந்தானாய்த்து. நீ கொடுக்கக்கொள்கை யன்றிக்கே, அதுக்கெல்லாம் தானே நியாமகன் என்றபிமானித்திருந்தானாய்த்து; "வெறும்புறத்திலே தன்னதல்லாதத்தை 'தன்னது' என்றெறட்டுக்கொண்டிருக்கக்கடவ அவன் கையிலே இவ்விஷயமுங்கிடக்குமாகில் நாடுதேடிக்கிடவாது" என்று பார்த்தருளி, இந்த்ரனதான விபூதியை அவன்பக்கலில்நின்றும் வாங்கினான். [தேவாசுரர்ச்செற்றவனே] - தேவாஸுர ஸங்க்ராமத்திலே அவர்கள் படுவது இவர்கள் படுவதாய் இங்ஙனே பருவச்செல்லப்புக்கவாறே, ஒருதலையையழித்து தேவஜாதிக்குக் குடியிருப்பும் பண்ணிக்கொடுத்தானாய்த்து. [திருமாலே] - ஆஶ்ரிதரக்ஷணத்துக்கும் தத்ப்ரதிகூல நிரஸநத்துக்கும் அடி ஶ்ரிய:பதி யாகை. [நாவாயுறைகின்ற] - இப்படி ரக்ஷிக்குமிடத்தில் அடுத்தணித்தாக முகந்தோற்றத்

ஏழாம்பாட்டு - கோவாகிய இத்யாதி. "நாவாயுறைகின்ற என்நாரணநம்பீ - ஆவாவடியானிவனென்றருளாயே" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - ஆஶ்ரிதார்த்தமாக இத்யாதி.

"ஆகிய" என்றதுக்கு ஹாவம் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. அதாவது - தனக்கில்லாததத்தை எறட்டுக்கொண்டானென்கிறது "ஆகிய" என்கையாலே என்றபடி. விவரணம் - நீகொடுக்க இத்யாதி. "மாவலியைநிலங்கொண்டாய்" என்றதுக்கு ஹாவம் - வெறும்புறத்திலே இத்யாதி. வெறும்புறத்திலே - நிர்நிபந்தநமாக. மாவலியை-மாவலிபக்கல்நின்றும். தேவாஸுரயுத்தத்திலே அஸுரரைச் செற்றவனே. ஒழிரண்டையும்பற்ற - ஆஶ்ரித இத்யாதி. அடுத்தணித்தாக - ப்ரத்யாஸந்நமாக.

திருநாவாயிலே நித்யவாஸம்பண்ணுகிற. [என்நாரணநம்பீ] - ஆஶ்ரிதவர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலே நோக்காக ஸர்வாந்தர்யாமியானவன். [நாரணநம்பீ] - அதுக்கு உறுப்பாக ஆஶ்ரிதவத்ஸலனாய், அவர்களுக்கு உறுப்பாகப்பெற்றோமென்றத்தாலே பரிபூர்ணனானவனே! [ஆவா இத்யாதி] - "க்ருபாமாத்ரமநோவ்ருத்தி:" (க்ருபாமாத்ரமநோவ்ருத்தி:) என்கிறபடியே, 'ஐயோ, இவன் அநந்யமதி; இவனுக்கு வேறொருபுகலில்லை' என்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணும். [அடியான்] - அவன் அருளுகைக்கும் இவன் அருள்கொள்ளுகைக்கும் ஸம்பந்தஞ் சொல்லுகிறது.

எட்டாம் பாட்டு.

அருளாதொழிவாய்அருள்செய்துஅடியேனைப்
பொருளாக்கி உன்பொன்னடிக்கீழ்ப்புகவைப்பாய்
மருளேயின்றி உன்னைஎன்னெஞ்சத்திருத்தும்
தெருளேதரு தென்திருநாவாயென்தேவே!

ஆ.—(அருளாதொழிவாய்.) - அஜ்ஞாநகந்தமில்லாததொருபடி உன்னுடைய ஸ்வரூபரூப குணவிபூதிவிஷய திவ்ய ஜ்ஞாநத்தை உன்க்ருபையாலே எனக்குத் தந்தருளின நீ, இன்னமும் உன்க்ருபையாலே "நம்மடியான் இவன்" என்று விஷயீகரித்தருளி, அடியேனை உன் பொன்னடிக்கீழ்ப் புகவைத்தருளுவாய், வைத்தருளாதொழிவாய், திருவுள்ளமானபடி செய்தருள்! என்றுகொண்டு எம்பெருமானை இன்னாதாகிறார்.

ஓ.—எட்டாம்பாட்டில், அபிலஷித்தபடி பெறாமையாலே திருவுள்ளம் கலங்கின ஆழ்வார் "அருளிலுமருள், தவிரிலும் தவிர், இப்போது கலங்காதே உன்னை அநுஸந்திக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணும்" என்றர்த்திக்கிறார். [அருளாதொழிவாயென்று தொடங்கி] - க்ருபைபண்ணாதொழியிலுமொழி, க்ருபைபண்ணி சிரமஸாத்யமான திருவடிக்கீழே என்னை வைத்துக்கொள்ளிலும் கொள். [மருளே என்று மேலுக்கு] - தென் திருநாவாயென்தேவே! அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை என்னெஞ்சிலே இருத்தும்தெளிவைத் தரவேணும்.

"நம்பி" என்றதுக்கு பாவம் - அதுக்கு உறுப்பாக இத்யாதி. அதவா, கீழ்வாக்யத்திலே, அந்தர்யாமித்வஸூசித ஸௌலப்யத்தைச்சொல்லி, இவ்வாக்யத்தில் - வாத்ஸல்யஞ் சொல்லுகிறதாதல். அதுக்கு உறுப்பாக - ரக்ஷணத்துக்குஉறுப்பாக. அந்தர்யாமித்வமும் வாத்ஸல்யமும் பஹுவ்ரீஹியாலே-'க்ருபாமாத்ர இத்யாதி.' "ஸாஹமேகமேவஸ்வாமிநம் அநந்யஸ்வாமிகம் ஸம்ஶ்ரயே க்ருபாமாத்ரமநோவ்ருத்தி: ப்ரஸீதமே" இதி பஞ்சமேமஶே (எ - எ௦). "அடியான்" என்றதுக்கு ப்ராப்தமான அர்த்தம் - அநந்யார்ஹ ஶேஷத்வம்; ஆர்த்தமானவர்த்தம் - அநந்யமதித்வம். ஒருவர்க்காயிருப்பாரை வேறு சிலர் ரக்ஷிக்க ப்ராப்தியில்லையிறே என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - இவன் அநந்யமதி இத்யாதி. "அடியான்" என்றதுக்கு பாவாந்தரம்-அவன் அருளுகைக்கு இத்யாதி. முந்தினது - அநந்யமதித்வம். (எ)

ப.—அநந்தரம், நீ யருளாதிருக்கவுமாம், அருளவுமாம்; ஒரு கலக்கமில்லாதபடி உன்னை என்னெஞ்சிலேவைத்து அநுபவிக்கும்படியான ஜ்ஞாநத்தைத் தந்தருள வேணுமென்கிறார்.

அருளாதொழிவாய் - (இவன் செய்தபடி செய்கிறான் என்று) க்ருபைபண்ணா திருக்கிலுமிருக்கிறாய்; அடியேனை - (அநந்யகதியாய்ப் புகலற்றவனாயிருக்கிற) என்னை, அருள்செய்து - நிரவதிக க்ருபைபண்ணி, பொருள் ஆக்கி - வஸ்துவாக்கி, உன் பொன்னடிக்கீழ் - உன்னுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளின்கீழே, புக - ப்ரவேசிக்கும்படி, வைப்பாய் - வைக்கிலும் வைக்கிறாய்; தென் - கட்டளைப்பட்ட, திருநாவாய் - திருநாவாயிலே, என்தேவே - எனக்குப் பரமப்ராப்யபூதனாயிருக்கிறவனே! மருளே இன்றி - ஒருகாலும் அஜ்ஞாநகந்தமில்லாதபடி, உன்னை - (ஸர்வப்ரகாரபரிபூர்ணனாய் போக்யனான) உன்னை, என்னெஞ்சத்து - (அக்பந்தாஸ்திநிவிஷ்டனான) என்னெஞ்சிலே, இருத்தும் - இருத்தியநுபவிக்கும்படியான, தெருளே - தெளிந்த அறிவை, தரு - எனக்குத் தந்தருளவேணும். தருவென்று - தருவாயாகவேணுமென்றபடி.

இ.—எட்டாம்பாட்டில், அப்போதே அபேக்ஷிதம் பெறாமையாலே, "அருளவுமாம், தவிரவுமாம்; அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை என்னெஞ்சிலே இருத்தும்படி தெளிவைத் தரவேணும்" என்கிறார்.

[அருளாதொழிவாய்] - இவன் செய்தபடி செய்கிறோமென்று க்ருபைபண்ணாதேயிருக்கிலும்இரு; என்னார்த்தியைக்கண்டு க்ருபைபண்ணி நிரதிசயபோக்யமான உன்திருவடிகளின்கீழே அநந்யகதியான என்னை வைத்துக்கொள்ளிலும் கொள். [மருள் இத்யாதி] - மயர்வறமதிநலமருளினபடியே அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை எப்போதும் என்மநஸ்ஸிலே வைத்துக்கொள்ளும்படி, "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்கிற தெளிவைத் தரவேணும். [தென்திருநாவாயென்தேவே] - "திருநாவாயிலே நின்றருளின நீயே ஆஶ்ரயணீயன்" என்னுமிடத்தை எனக்கறிவித்தவனே!

ஈடு.—எட்டாம்பாட்டு. அப்போதே யபேக்ஷிதம் பெறாமையாலே, "அருளவுமாம், தவிரவுமாம்; அஜ்ஞாநகந்தமில்லாதபடிஉன்னை என்னெஞ்சிலேயிருத்தும்படி தெளிவைத் தரவேணும்" என்கிறார்.

[அருளாதொழிவாய்] - என்பக்கல் க்ருபைபண்ணாதே இவன் பட்டது படுகிறான் என்றிருக்கிலும் இரு. [அருள்செய்து] - அன்றிக்கே, என்துர்க்கதியைக்கண்டு க்ருபைபண்ணி. [அடியேனை யித்யாதி]-அஸத்கல்பனாயிருக்கிற என்னை,"ஸந்தமேநம்" என்கிறபடியே ஒருவஸ்துவாம்படி பண்ணி, நிரதிசயபோக்யமான உன் திருவடிகளின் கீழே வைத்துக்கொள்ளிலும் கோள். பொருளானாரை வைத்துக்கொள்ளும் ஸ்தாநம் பொன்னடிக்கீழ்போலே காணும். [மருளேயின்றியித்யாதி] - அடியில் * மயர்வறமதிநல மருளினபடியே, அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை என் மநஸ்ஸிலே எப்போதும் வைத்துக்கொள்ளும்படி, "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்கிற தெளிவைத் தரவேணும். [தென்திருநாவாயென்தேவே - தெருளேதரு] என்று க்ரியை; அன்றிக்கே,

---

எட்டாம்பாட்டு - அருளாதொழிவாய் இத்யாதி. பாட்டையெல்லாம் கடாக்ஷித்தவதாரிகை - அப்போதே இத்யாதி. அருளாயென்றார் - அப்போதே என்று கூட்டுவது.

"ஆக்கி"என்றதுக்கு பாவம்-அஸத்கல்பனாய் இத்யாதி. "பொன்" என்கையாலே-நிரதிசயபோக்யம் என்றபடி. இத்தால் ரஸோக்தியாக பாவம் - பொருளானாரை இத்யாதி. பொருள் -

"மருளேயின்றி யுன்னை என்னெஞ்சத்திருத்தும் தெருளேதரு தென்திருநாவாய் என்தேவே! அருளாதொழிவாய், அருள்செய்து அடியேனைப் பொருளாக்கியுன்பொன்னடிக்கீழ்ப்புகவைப்பாய்: திருவுள்ளமானபடிசெய்" என்றும் பிள்ளான்பணிப்பது. (அ)

ஒன்பதாம் பாட்டு.

தேவர்முனிவர்க்குஎன்றுங்காண்டற்கரியன்
மூவர்முதல்வன்ஒருமூவுலகாளி
தேவன்விரும்பியுறையுந்திருநாவாய்
யாவரணுகப்பெறுவார்இனியந்தோ?

ஆ.—(தேவர்.)-ப்ரஹ்மாதிகளுடைய சக்ஷுராதி ஸர்வகரணங்களுக்கும் அகோசரனாய், ப்ரஹ்மாதி ஸ்தாவராந்த ஸமஸ்தஜந்து நிர்மாணத்ராண ஸம்ஹரண சீலனான எம்பெருமான் விரும்பிக்கொண்டு ஸர்வகாலமும் உறைகிற திருநாவாயை அணுகப்பெறுமவர்கள் என்ன பாக்யம் பண்ணினார்களோ? நான் பாக்யஹீனனாயிழந்தேன்! என்று நோகிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், "நதேநாஷ்யாஷேவாஷே" என்று சக்ரவர்த்தி சொன்னாற்போலே "திருநாவாய் காணப்பெறாதே நான் முடியாநின்றேன். இனி வேறு திருநாவாய் அநுபவிக்கும் பாக்யவான்களாரோ" என்கிறார்.

[தேவரென்றுதொடங்கி] - ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் துர்ஜ்ஞேயனாய் ப்ரஹ்மாதிகளுக்கும் காரணபூதனான ஸர்வேஶ்வரனாய் அத்யந்த ஸுலபனானவன் அத்யாதரத்தைப்பண்ணிக்கொண்டு நிரந்தரமாக வர்த்தித்தருளுகிற திருநாவாயை.

ப.—அநந்தரம், 'அறிவுடையார்க்கும் அறியவரிய ஸர்வாதிகன் வர்த்திக்கிற திருநாவாயை, அத்யந்தாபிநிவிஷ்டனான நான் பெற்றிலேன்; இனி யார் பெறப் புகுகிறார்?' என்கிறார்.

தேவர் முனிவர்க்கு-ஸமஸ்ததேவர்களுக்கும் ஸநகாதிமுனிவர்களுக்கும், (ஸ்வயத்நத்தால்), என்றும் - ஸர்வகாலமும், காண்டற்கு - காண, அரியன் - அரியனாய், மூவர் - ப்ரஹ்மருத்ராதிகளுக்கு, முதல்வன் - ஸத்தாதிஹேதுபூதனாய், ஒரு - அத்விதீயமான, மூவுலகு - ஜகத்த்ரயத்தையும், ஆளி - (தன் ஸங்கல்பத்தாலே) நிர்வஹிக்குமவனாய், தேவன் - ஸமஸ்தகல்யாணகுணாத்மகனான ஈஶ்வரன், விரும்பி - அத்யாதரம் பண்ணி, உறையும் - வர்த்திக்கிற, திருநாவாய் - திருநாவாயை, அந்தோ - ஐயோ! இனி - இனி, அணுகப்பெறுவார்யாவர் - அணுகப்பெறுவாரார்? இவ்வபிநிவேசாதிசயத்திலும் கிட்டாதது இனிக்கிட்டுகிறதோ என்று கருத்து.

இ.—ஒன்பதாம்பாட்டில், தாம் இப்படிச் சொன்ன வநந்தரம் அவன்பக்கல் ஒருவாசி காணாமைபாலே, "நதேநாஷ்யாஷேவாஷே" என்று சக்ரவர்த்தி சொன்

வல்லதுவும், தநமும். தரு-தரவேணும். தென்-அழகியதான. பிள்ளான் நிர்வாஹத்துக்கு, "தெருளே தரு" என்றது - தேவுக்கு விசேஷணம். (அ)

றாற்போலே "திருநாவாய் காணப்பெறுவன் முடியாநின்றேன்; நீயும் அப்படியே அநுஸந்திக்கும் ஆழ்வான்களானீரோ?" என்கிறார்.

[தேவரித்யாதி] - "ஸ்வயத்நத்தாலே காண்பாய்" என்றும் ப்ரஹ்மாதிகளுக்கும் லோகாதிகளுக்கும் காரணபூதனாயிருக்கும். [மூவர்முதல்வன்] - ப்ரஹ்மருத்ராதிகள் நடுவே வந்தவதரித்து அவர்களுக்கு நிர்வாஹகனானவன் என்னுதல்; ப்ரஹ்மருத்ராதிகளுக்கு நிர்வாஹகன் என்னுதல். [ஒருமூவுலகாளி] - கீழும்மேலும் நடுவுமான ஸர்வலோகத்துக்கும் அத்விதீயனான நிர்வாஹகன். [தேவன்] - ஸர்வவிஸஜாதீயன். [விரும்பியுறையும் திருநாவாய்] - இப்படி ஸர்வேஶ்வரனாயிருக்க, ஒரு குடியிருப்பில்லாதாரைப்போலே, "ஆஶ்ரிதரக்ஷணத்துக்குப் பாங்கான விடம்" என்று அத்யாதரம் பண்ணிவர்த்திக்கிற தேஶத்தை. [யாவராணுகப்பெறுவாரினி] - நான் முடியாநின்றேன், இனி, இப்பேறு பெற இருக்கிறார்களோ! "நதேநஶ்யாஃ" என்கிறபடியே மநுஷ்யர்க்குக் கூட்டல்லர். [அந்தோ] - உடைமையான எனக்கு உடையவனுக்கின்றிக்கே ஒழிவதே!

௯. — ஒன்பதாம்பாட்டு. இப்படிச் சொன்னவிடத்திலும் ஒருவிஶேஷகடாக்ஷம்பண்ணாமையாலே, "நான் இவ்வாசையோடே முடியாநின்றேன்; என்னவிடத்தும் பெறப்புகுகிற ஸாத்யாதிகளாரோ?" என்கிறார்.

[தேவர்முனிவர்க்குஎன்றும்காண்டற்கரியன்] - ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கும் ஸ்வயத்நத்தாலே என்றுமொக்கக் காணவரியனாயிருப்பவன். [மூவர்முதல்வன்] - ப்ரஹ்மருத்ரர்கள் நடுவேவந்து அவதரித்து, அவர்களுக்கு நிர்வாஹகனென்னுதல்; ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுக்கு நிர்வாஹகனென்னுதல். [ஒருமூவுலகாளி] - இந்த்ரமுகத்தாலே நின்று த்ரைலோக்யத்தையும் ரக்ஷிக்கும்படியைச் சொல்லுதல்; அன்றிக்கே, கீழும் மேலும் நடுவுமான ஸர்வலோகத்துக்கும் அத்விதீய நாயகன் என்னுதல். [தேவன்] - ஸர்வவிஸஜாதீயன். [விரும்பியுறையும்திருநாவாய்] - இப்படி ஸர்வநிர்வாஹகனானவன், தனக்கென்ன ஒருகுடியிருப்பு இல்லாதானொருவன் குடியிருப்புப் பெற்றாற்போலே, "ஆஶ்ரிதரக்ஷணத்துக்குப்பாங்கான தேஶம்" என்று அத்யாதரம்பண்ணிவர்த்திக்குந் தேஶத்தை. [யாவராணுகப்பெறுவாரினி] - நான் முடியப்புகாநின்றேன்; இனிப் பெறவிருக்கிறார்ஆரோ! "நதேநஶ்யாஃ" (நதேமநுஷ்யாஃ) என்கிறபடியே, அவர்கள் மநுஷ்யர்களுக்குக் கூட்டல்லர். 'இனி' - என்கிறபதத்தாலே - நான்முடிந்தேன் என்கிறது ஸூசிக்கிறது.

ஒன்பதாம்பாட்டு - தேவர் இத்யாதி. "யாவராணுகப்பெறுவாரினியந்தோ" என்றதைக் கடாக்ஷித்துஅவதாரிகை - இப்படி இத்யாதி.

காண்டற்கரியன் - காண்கைக்கரியன். முந்தின அர்த்தத்துக்கு, மூவரிலும் ஸஜாதீயனாய்க்கொண்டு அவதீர்ணனான தான், ப்ரதாநனாயிருக்குமென்று பலிதார்த்தம். இரண்டாமர்த்தத்துக்கு, ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுக்குக் காரணபூதனென்று பலிதார்த்தம். "மூவர்முதல்வன்" என்றதின் அர்த்தத்வயாநுகுணமாக அர்த்தத்வயம் - இந்த்ரமுகத்தாலே இத்யாதி வாக்யத்வயத்தாலே. "தேவன் - த்யோதமாநன்" என்றதை நினைத்து - ஸர்வவிஸஜாதீயன் என்றது. "விரும்பியுறையும்" என்றதுக்கர்த்தம் - இப்படி இத்யாதி. "இனி" என்றதுக்கர்த்தம் - நான்முடிய இத்யாதி. ஆரோ என்கையாலே - அவர்கள் ஸாத்யாதிகளென்று விவக்ஷித்து, ப்ரமாணம் - நதேமநுஷ்யாஃ இத்யாதி. "முடியப்புகாநின்றது" என்றதுக்கு பலிதமேதென்ன - இனியென்கிற இத்யாதி. "நதேநஶ்யாஃ" என்கிற ஶ்லோகத்துக்கர்த்தம் அவர்கள் இத்யாதி. "நதேநஶ்யா

'அந்தோ' - என்கிறபதத்தாலே - எனக்குள்ளது, அவனுக்கு உண்டாகப் பெறுதொழிவதே. "நதேமநுஷ்யா:" (நதே³மநுஷ்யா꞉) - அவர்கள் செத்துப் பிறக்கிறவர்களுக்குக் கூட்டல்லர்கள். "தேவா:" (தே³வா:)-அவர்கள் நித்யாநுபவம்பண்ணுகிறவர்களுக்குக் கூட்டாமித்தனை. "யஇத்யாதி" (யஇத்யாதி)-பதினாலாண்டும் ஒருபடி தப்பிக்கிடந்து அவர் மீண்டுவந்தால் அவ்வோப்பித்த முகத்தைக் காணப்பெறும் பாக்யாதிகர் ஆரோ? இங்கே, காதாசித்காநுபவம்பண்ணுமவர்கள், நித்யாநுபவம் பண்ணுமவர்களிலும் சீரியரே; "விண்ணுளாரிலும்சீரியரே." "வர்ஷேபஞ்சதஸேபுந:" (வர்ஷேபஞ்சதஸேபுந꞉) - பதினாலாண்டும் கழித்துப் பதினையாம் ஆண்டைக்கு இருப்பாரிறே காணப் பெறுவார்? காலம் முடிந்ததேன்றிருக்கிறுய்த்து சக்ரவர்த்தி. (கூ)

பத்தாம் பாட்டு.

அந்தோ! அணுகப்பெறுநாளென்றுஎப்போதும்
சிந்தைகலங்கித்திருமால்!என்றழைப்பன்
கொந்தார்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய்
வந்தேயுறைகின்றஎம்மாமணிவண்ணா.

ஆ.—(அந்தோ.) - இப்படி யுன்னை யாசைப்பட்டுப் பெறுதேயொழிந்தாலும் நிராசனுய்விடமாட்டாதே, பின்னையும், என்னோடு ஸம்ஸ்லேஷிக்கைக்காகத் திருநாவாயிலேவந்திருந்தருளின இக்குணத்தை யநுஸந்தித்து, என்றோ உன்னை நான் அணுகப்பெறுவதென்று எப்போதும் சிந்தைகலங்கித் திருமாலென்றழையாநிற்பன்! என்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், உன்னை ஆசைப்பட்டுப் பெறுதொழிந்தாலும் விடமாட்டாதே சிந்தைகலங்கித் திருமாலே என்றழைப்பன்! என்கிறார்.

[அந்தோவென்று தொடங்கி] - 'ஐயோ! அணுகப்பெறும் நாளென்றோ? என்று ஸர்வகாலமும் ஹ்ருதயம் கலங்கி ஸ்ரிய:பதியே!' என்று கூப்பிடாநிற்பன். [கொந்தார்மலரென்று மேலுக்கு] - நிரதிஸய போக்யமான திருச்சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாயிலே ஆஸ்ரிதர்க்கு ஸுலபனாய்வந்து வர்த்தித்தருளுவதுஞ்செய்து அதிஸ்லாக்யமான அழகை உடையவனே!

தேவாஸ்ச யேஸாஸ்ய ஸகாஸம் ஏஷ்யதி ராமஸ்ய வர்ஷேபஞ்சதஸே புந:" இத்யயோத்யாகாண்டே (கூச.கூக) தஸரத:. "வர்ஷேபஞ்சதஸே" என்றத்தைக் கடாக்ஷித்து - பதினாலாண்டுமோரபடி இத்யாதி. ஒருகால் பெருமாளைக்கண்டவர்கள் நித்யாநுபவம்பண்ணுமவர்களுக்குக் கூட்டாவர்களோவென்ன - காதாசித்க இத்யாதி. "த்ரக்ஷ்யதி" என்கையாலே - காதாசித்காநுபவம் என்றது. இதுக்கு ஸம்வாதம்-விண்ணுளாரிலும் இத்யாதி. ஸதாநுபவத்துக்கு மேட்டுமடையான இங்கேயிருந்து காதாசித்காநுபவம் பண்ணுமவர்கள், நித்யாநுபவம் பண்ணுகிறவர்களிலும் அதிகரென்றபடி. "புந:" என்றதுக்கர்த்தம் - பதினாலாண்டும் கழித்து இத்யாதி· பதினாலாண்டும் கழிந்து பதினையாமாண்டு வாராதோவென்ன - காலம் இத்யாதி. (கூ)

ப.—அநந்தம், விடவொண்ணாத ஸௌசீல்யத்தையுடைய உன்னைக் கிட்டப்பெறுநாளுண்டாவதுதான்! என்று நெஞ்சுகலங்கிக் கூப்பிடாநின்றேனென்கிறார்.

கொந்துஆர் - கொத்தாகநெருங்க, மலர்ச்சோலைகள் - பூவையுடைத்தான சோலைகள், சூழ் - சூழ்ந்த, திருநாவாய் - திருநாவாயிலே, வந்தே - (பரமபதத்தினின்று விட்டே)வந்துநிற்குமவனாய், உறைகின்ற - நித்யவாஸம்பண்ணுகிற, எம் மாயவன் ஆ- நிரதிசயபோக்யமான சேலாத்தம்போலே யிருக்கிற வடிவையுடையவனே! அந்தோ - ஐயோ! அணுகப்பெறுநாள் என்று - உன்னை யணுகப்பெறுநாளாவதுதான் என்று, எப்போதும் - ஸர்வகாலமும், சிந்தைகலங்கி - நெஞ்சுகலங்கி, திருமாலென்று - ஸ்ரீமானே யென்று, அழைப்பன் - கூப்பிடாநின்றேன்.

இ.—பத்தாம்பாட்டில், உன்னைப்பெறுதொழிந்தாலும் விடமாட்டாதே மநஸ்ஸுகலங்கிக் கூப்பிடாநிற்பன் என்கிறார்.

[அந்தோ இத்யாதி] - சொல்லத்தொடங்கினது தலைக்கட்டமாட்டாத வலஹாநியாலே அந்தோ! என்கிறார். "அணுகப்பெறுநாள்யவை" என்னவேண்டியிருக்க அதுமாட்டாதொழிகிறாரிறே. ஒருகால்சொல்லி ஸலஹாநியாலே விடுகையன்றிக்கே, ஸர்வகாலமும் ஹ்ருதயம் கலங்கி மாதாபிதாக்களைச்சொல்லிக் கூப்பிடுமாபோலே திருமாலென்றழையாநிற்பன். "ஸீதாஸோதாவஸோயவ:". [கொந்தாரித்யாதி] - கொத்து மிக்க மலரையுடைத்தான சோலைகளாலே சூழப்பட்டிருந்துள்ள திருநாவாயிலே. நித்யவஸந்தமான சோலைகளை உடைத்தாகையாலே நிரதிசயபோக்யமான தேசமென்கை. [வந்தேயித்யாதி] - ஒருதேசத்திலேசென்றே காணக்கடவதான வடிவைக்கொண்டு ஆஸ்ரிதார்த்தமாகவந்து நித்யவாஸம் பண்ணுகிறவனே! அவ்வடிவை எனக்குக் காட்டாதவன்று, உன்வரவு அஸத்ஸமமென்றே யென்கை.

ஈடு.—பத்தாம் பாட்டு. உன்னைக் காணப்பெறாமை நெஞ்சழிந்து கூப்பிடாநின்றேன் என்கிறார்.

[அந்தோஅணுகப்பெறுநாள் என்றேப்போதும்] - சொல்லத்தொடங்கினது தலைக்கட்டமாட்டாத வலஹாநியாலே, அந்தோ! என்கிறார். "அணுகப்பெறுநாள்யவைசொல்" என்னவிறே நினைப்பது. [எப்போதும்]-ஒருகால் சொல்லப்புக்கு நினைத்தால் விடுகையன்றிக்கே, ஸர்வகாலமும். [சிந்தைகலங்கிஇத்யாதி]-ஹ்ருதயம்கலங்கி; மாதாபிதாக்கள் பேரைச்சொல்லி ஆர்த்தனை ப்ரஜை கூப்பிடுமாபோலே திருமால் என்றழைப்பன். [கொந்தார் இத்யாதி] - கொத்துமிக்க மலரையுடைத்தான சோலைகளாலேசூழப்பட்ட திருநாவாயிலே. நித்யவஸந்தமான சோலைகளை யுடைத்தாகையாலே நிரதிசயபோக்யமான தேசமென்கை. [வந்தேயுறைகின்ற] - ஒருதேசவிசேஷத்திலே சென்று காணக்கடவதான வடிவைக் கொண்டு ஆஸ்ரிதார்த்தமாகவந்து நித்யவாஸம்பண்ணுகிறவனே! அவ்வடிவு எனக்குக் காட்டாதவன்று உன்வரவு அஸத்ஸமமென்கை. (கo)

பத்தாம்பாட்டு.—அந்தோ இத்யாதி. "சிந்தைகலங்கித் திருமாலென்றழைப்பன்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - உன்னை இத்யாதி.

சொல்லத்தொடங்கினது எது? என்ன-அணுக இத்யாதி. அதாவது - "அணுகப்பெறுநாள்யவைசொலோ அந்தோ!" என்னநினைத்து, ஸலஹாநியாலே "யவைசொல்" என்று முடியச் சொல்லமாட்டாதே, முன்னே "அந்தோ" என்கிறுமென்றபடி. யவைசொல் என்று - அத்யாஹார்யம். சோலைகளைச் சொன்னதுக்கு பாவம் - நித்யவஸந்தமான இத்யாதி. "மாமணிவண்ணா" என்றதுக்கர்த்தம் - ஒருதேசவிசேஷத்திலே இத்யாதி. ஹார்த்தபாவம் - அவ்வடிவு இத்யாதி. உத்தரார்த்தத்தை யநுஸந்தித்து பூர்வார்த்தத்தை யநுஸந்திப்பது - அந்வயம். (கo)

பதினோராம் பாட்டு.

வண்ணம்மணிமாட நல்நாவாயுள்ளானை
திண்ணம்மதிள்தென்குருகூர்ச்சடகோபன்
பண்ணார்தமிழ்ஆயிரத்திப்பத்தும்வல்லார்
மண்ணாண்டுமணங்கமழ்வர்மல்லிகையே.

ஆ.—(வண்ணம்.) - இத்திருவாய்மொழிவல்லார், ஐஹிகாமுஷ்மிக ஸகல க்ஷேமங்களையும் ஆர்ஜிக்கப்பெறுவரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் பெறும்பேற்றை யருளிச்செய்கிறார்.

[வண்ணம்மணிமாடமென்று தொடங்கி]-நாநாவர்ணங்களான ரத்நங்களாலே செய்யப்பட்ட மாடங்களையுடைத்தாய் நிரதிஶயபோக்யமான திருநாவாயிலே நின்றருளினவனை. [திண்ணம்மதிளென்று மேலுக்கு] - திண்ணிதான மதிளையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த. பண் ஆர்ந்த தமிழான ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி வல்லார்கள், ஐஹிகாமுஷ்மிக ஸகல க்ஷேமங்களையும் ஆர்ஜிக்கப்பெறுவர்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு ஃலமாக, உபயவிபூதியிலுண்டான ஆதரணீயத்தைத்† யருளிச்செய்கிறார்.

வண்ணம் – நாநாவர்ணங்களை யுடைத்தான, மணி - மாணிக்கங்களாலே சமைந்த, மாடம் - மாடங்களையுடைத்தாய், நல் - நிரதிஶயபோக்யமான, நாவாயுள்ளானை - திருநாவாயிலே வர்த்திக்கிறவனைப் பற்றவுண்டாய், திண் - திண்ணியதாய், அம் - அழகிய, மதிள் - மதிளையுடைய, தென்குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடையதாய், பண் ஆர் - பண்நிறைந்த, தமிழாயிரத்து - தமிழானவாயிரத்து, இப்பத்தும் - இப்பத்தையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், மண் - பூம்யுபலக்ஷிதமான லீலாவிபூதியை, ஆண்டு - தங்கள் நினைவின்படியே ஸ்வவஶமாக நிர்வஹித்து நித்யவிபூதியிலும் பகவதநுபவ ஜ்ஞாநத்தாலே, மல்லிகை - மல்லிகைபோலே பரிஶுத்தமான, மணம்கமழ்வர் - யஶஸ் ஸௌரப்யவிகாஸத்தையுடையவராவர். இது - கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் ஐஹிகாமுஷ்மிக க்ஷேமங்களையும் ஆர்ஜிக்கப்பெறுவர் என்கிறார்.

[வண்ணம்இத்யாதி]-நாநாவர்ணங்களானரத்நங்களாலே செய்யப்பட்ட மாடங்களையுடைத்தாய் நிரதிஶயபோக்யமான திருநாவாயிலே நின்றருளினவனை. [திண்ணம்மதிளித்யாதி] - திண்ணிதானமதிளையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வாரருளிச்செய்த; திருநாவாய்க்குரக்ஷை திருநகரியிலேபோலே. ஆழ்வார்பரியவே அவ்வூர்க்கு ரக்ஷையென்னுதல். ஈஶ்வரனுக்கு ஸ்தாநம்ஆழ்வாராகையாலே ஸ்தாநம்கிடந்தவிடத்திலே

---

† ஆதரணீயதையை என்றிருந்தால் ஸ்வரஸம். அல்லது - பாவப்ரதாந நிர்தேஶமென்று கொள்க.

யிதோ மதிளிதேவிதென்னுதல். [பண்ணார்தமிழ்] - பண்மிகுந்ததமிழ். [மண்ணோண்டு] - இஹலோகத்திலே வைஷ்ணவஸ்ரீயால் ஸம்பந்நராய். [மணங்கமழ்வர் மல்லிகையே] - மல்லிகை மணங்கமழ்வர் "ஸர்வகந்த:" என்கிற விஷயத்தோடே ஸாம்யாபன்னராவர். மல்லிகை மணமென்று - ஸர்வகந்தத்துக்கும் உபலக்ஷணம்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார், ஐஹிகாமுஷ்மிகஸகலபோகங்களையும் புஜிக்கப்பெறுவர் என்கிறார்.

[வண்ணம்மணிமாடநன்னாவாயுள்ளானை] - நாநாவர்ணங்களான ரத்நங்களாலே செய்யப்பட்ட மாடங்களையுடைத்தாய், நிரதிசயபோக்யமான திருநாவாயிலே நின்றருளினவனை. [திண்ணம் இத்யாதி] - திண்ணிதான மதிளையுடைத்தான திருநகரியை யுடைய ஆழ்வார் அருளிச்செய்த. திருநாவாய்க்கு ரக்ஷை திருநகரியில் மதிள்போலே காணும். ஆழ்வார்பரிவே அப்பரிவுதானே அவ்வூருக்கு ரக்ஷையென்னுதல்; ஸம்ஸாரிக்கு ரக்ஷகம் ஆழ்வாராகையாலே ரக்ஷகராயிடத்தலைதோ மதிளிதேவதேன்னுதல். [பண்ணார்தமிழ்] - பண்மிகுந்த தமிழ். [மண்ணாண்டு] - இஹலோகத்திலே வைஷ்ணவஸ்ரீயால் ஸம்பந்நராய். [மணங்கமழ்வர் மல்லிகையே] - மல்லிகைமணங் கமழ்வர். இது உபலக்ஷணமாய், "ஸர்வகந்த:" (ஸர்வகந்த:) என்கிறவிஷயத்தோடே ஸாம்யாபத்தியைப் பெறுவர். இவருடையமநோரதமும் அவர்கள்பேற்றுக்கு உடலாம்.

நிகமம் - வண்ணம் இத்யாதி. "இப்பத்தும்வல்லார் மண்ணாண்டு மணங்கமழ்வர் மல்லிகையே" என்றதற்குக் கடாக்ஷித் தபடியிதை - இத்திருவாய்மொழிகற்றார் இத்யாதி.

"நன்னாவாயுள்ளானைத்திண்ணம் மதிள்தென்குருகூர்ச் சடகோபன்" என்ற பதத்தின் சுரத்திக்கு ஸாவம் - திருநாவாய்க்கு இத்யாதி. திருநகரியில்மதிள். திருநாவாய்க்கு ரக்ஷையாயிருக்கை யென்ன; இரண்டுவகையாக பரிஹாரம் - ஆழ்வார் இத்யாதிவாக்யத்வயம். தானே - திருநகரியில் மதிள் ஆழ்வார்க்குரக்ஷையாய், ஆழ்வார் ஸாக்ஷிதமாயிருக்கையாலே. ஆழ்வார் பரிவு திருநாவாய்க்கு ரக்ஷகமாகையாலே, திருநகரியில் மதிள் பரம்பரயா ரக்ஷையென்றபடி. த்விதீயபரிஹாரத்துக்கு, "திண்ணம் மதிள்" என்றது - ஆழ்வார்க்கு விசேஷணம். அர்த்தம் - மிகுதி. இவர்மநோரதமிக்க அவர்கள் பேறும்படியென்? என்ன - இவருடைய இத்யாதி. "மல்லிகை - மணங்கமழ்வர்" என்றதுவியப்பது. மல்லிகைபோன்ற மெளரப்யவிசாலத்தை யுடையவராயென்று ஸம்ப்ரதாத்தம்.

த்ராவிடோபநிஷத்ஸங்கதி.—ஸம்ஸேவ்ய ஸேவிதபதோ விதிவத்ஸதாம் ச விக்ஷாவலீக்ஷுஸு ஸம்யக் கௌதுகீ யத்த | தேவோ ஜனேஷு கலிதேஷு விஶேஷ ரஜோத்யாயான்ஸ்ரத ஸத்யவிதோ பரமஸ்ய ரமேஸ ||

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலீ.—வஸ்துநோ தேஶ்ச ரக்ஷாபோகாஸ்தி வாஸவிஹித ஸ்ரீவவெளவாஸ்யாஸ்வா த்ருதோ தெஶ்யா ப்ரபாஸ மாநவ தாரண ஹரிஸ்வாமினம் யத்ப்ரஸ்தஹ்ஸூ ஸர்வதாஸ்யா ஸர்வலோகஹிதாய ந்யாஸிதஸக்ஸாரஸகல லோகஸ்வாமி இஷ்டம் ஸ்ரீஸம்ஸாரி: நிர்யதிதஸ்ஸ ஸம்ஸ்ரிதாஸ்வா வேதநாய: ||

திருவாய்மொழி நூற்றந்தாதி.

அறுக்கும்இடர். என்றவன்பாலாக்குமிட்ட ஆகர்
மறித்துவரப்பற்றுமனத்தா - வறப்பகதிச்
செய்ய திருநாவாயிற்செல்லதிளைக்கான்மாறன்
மையலினூற்செய்வறிதாமல்.

ஆழ்வார்திருவடிகளே ஶரணம், எம்பெருமானார்திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

ஒன்பதாந் திருவாய்மொழி--மல்லிகை - ப்ரவேசங்கள்.

ஆ.—(மல்லிகை.) - இப்படி வ்யஸநம் அதிமாத்ரமானவாறே, அந்யாபதேசத்தாலே தம்முடைய வ்யஸநத்தைப் பேசுகிறார். வண்துவரைப்பெருமாளோடே கலந்தாள் ஒருபிராட்டி, அவன்பசுமேய்க்கப்போய் மீண்டுவரக்கடவிய * அந்தியம்போதானதுவந்து, அவன்தான் வாராமையால் அத்யந்தம் அவஸந்நையாய்,

ஒ.—ஒன்பதாம் திருவாய்மொழியில், அறுக்கும் வினையில் "எம்பெருமானைக் காணவேணும்" என்று மநோரதித்து மிகவும்பதறி அப்போதே காணப்பெறாத வ்யஸநத்தாலே மிகவும் நோவுபட்ட ஆழ்வார், தம்முடைய தஸையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். திருவாய்ப்பாடியிற் பெண்பிள்ளைகள் க்ருஷ்ணனோடே கலந்து, அவன் பசுமேய்க்கப் போகையாலே பகலெல்லாம் அவன்வரவு பார்த்திருக்க, விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியின்றிக்கே எல்லாரையும் போகப்ராவண்யத்தாலே சபலராக்காநின்றுள்ள ஸந்த்யையை வர, க்ருஷ்ணனும் வாராநின்றானென்று நிஸ்சிதமாயிருக்க, ஒருக்ஷணம் காணப்பெறாமையாலே அநேககாலம் விஸ்லேஷித்தால் படும் வ்யஸநத்தைப்படாநிற்க; அதுக்குமேலே மல்லிகையின் பரிமளத்தையுடைய தென்றல் தொடக்கமான ஸந்த்யாகாலத்தில் பதார்த்தங்களும் அக்காலத்திலுண்டான குழலோசைகளும் அவற்றாலே ஸ்ம்ருதமான க்ருஷ்ணனுடைய குணசேஷ்டிதாதிகளும் துஸ்ஸஹமான நிலாவும் ஸமுத்ரகோஷம் தொடக்கமான பதார்த்தங்களெல்லாம் தனித்தனியும் திரளவும்நலிய மிகவும் நோவுபட்டு, கேட்டார்க்குத் தரிப்பரிதாம்படி ஆர்த்திமிகுதியாலே கூப்பிட்ட பாசுரத்தை ஒருத்தி சொல்லுகிறாள். ஸந்த்யையாவது - எம்பெருமான் தம்மை விஷயீகரிப்பதுக்குமுன்பு உண்டான அல்பகாலம்; அக்காலத்தில் பாதகபதார்த்தங்களாகிறன — தம்மை விஷயீகரிக்கைக்கு உத்யோகிக்கிற எம்பெருமானுடைய சங்கசார்ங்காதி கோஷங்களும், பெரியதிருவடியுடைய திருச்சிறகொலியும் அவன் வரவுக்கு ஸூசகமான மந:ப்ரஸாதாதிகளான நிமித்தங்களும். இவை பாதகமாகைக்குக் காரணம் - இவை அவன்வரவுக்கு ஸூசகமாயிருக்கச்செய்தே அப்போதே அவனைக் காணாமை.

ப.—ஒன்பதாந்திருவாய்மொழியில், கீழ் ப்ராப்யவிஷயமான அபிநிவேசத்தாலே ஈடுபட்டவர், அநுபவயோக்யாவஸ்த்தை ஸந்நிஹிதையாயிருக்கச்செய்தேயும் அநுபாவ்யனான ஈஸ்வரன் அஸந்நிஹிதனாகையாலே, விளம்பாக்ஷமதையடியாக போக்யபூதனானவனுடைய ரஞ்சநீய ஸ்வபாவதையையும், ரக்ஷணப்ரகாரத்தையும், ரமணீயாவயவத்வத்தையும், அபிரூபவாஹநவத்தையையும், ஆஸ்ரிதஸௌலப்யத்தையும், அநவதிகஸௌஸீல்யத்தையும், அத்யுதாரரூபதையையும், அதிசயித ஸம்ஸ்லேஷத்தையும், ஸாபிப்ராய நிரீக்ஷணாதிகளையும், விஸ்லேஷாஸஹ்யமான ஆஸ்சர்யரூபதையையும் அநுஸந்தித்து, ஏவம்ப்ரகாரவிஸிஷ்டனான போக்யபூதனை யதாமநோரதம் அநுபவிக்கப் பெறாத ஆர்த்தியாலும், ஸ்மாரகமாயும் ஆஸக்திஸூசகமாயுமிருக்கிற பதார்த்ததர்சநத்தால்வந்த சைதில்யத்தாலும், அல்பகாலவிளம்பமும் பொறுக்கமாட்டாமல் கூப்பிட்ட ப்ரகாரத்தை; பசுமேய்க்கப்போந்தக்ருஷ்ணன், ஸந்த்யைவந்திருக்கச்செய்தேயும் வாராத

விளம்பம் பொறுக்கமாட்டாமல் கோபீஜநங்கள் தத்காலிக்க ஸம்ப்ருங்காரத்திலே தரி பட்டு, பொழுதுகண்டிரங்கிக்கூப்பிட்ட பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

௯.—ஒன்பதாம் திருவாய்மொழியில், கீழ் அநுபவித்த அவனை, “அவனைக் காணவேணும்” என்று மநோரதித்து மிகவும் த்வரித்து, அப்போதே காணப்பெறாத வ்யஸநத்தாலே மிகவும் நோவுபட்டவர், தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணஸம்ச்லேஷம் பண்ணின பெண்கள் பகலெல்லாம் பசுமேய்க்கப் போகையாலே வரவுபார்த்திருக்க, விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற எல்லாரையும் நோவுபடுத்தும் ஸந்த்யையாய், க்ருஷ்ணன்வரவு ஸந்தேஹமாயிருக்கச்செய்தே முற்கொழுந்திற் காணப்பெறாமையாலே அநேககாலம் பிரிந்தாப்போலே வ்யஸநத்தைப்பட, அதுக்குமேலே ஸந்த்யாகாலத்திற் பதார்த்தங்களான மல்லிகையின் பரிமளத்தை யுடைத்தான தென்றல் குழலோசை மந்த்ரகோஷம் முதலான பதார்த்தங்களானவை தனித்தனியும் திரளவும் நலிய மிகவும் நோவுபட்டுக் கேட்டார்க்குத் தரிப்பரிதாம்படி கூப்பிட்ட கூப்பீட்டை ஒருத்தி சொல்லுகிறாளான பாசுரத்தாலே தம் தசையை அருளிச்செய்கிறார். “திருவாய்ப்பாடிற் பெண்களெல்லாம் ஒருராத்ரியில் க்ருஷ்ணவிரஹத்தாற் பட்ட நோவை, இவரொருவருமே படுகிறார்” என்று ஆளவந்தார் அருளிச்செய்வர். “முன்பே ஆற்றாமையாலே தப்பத் திருக்கிறவராகையாலே, அத்தனை பாடல் கொடுக்கைக்கு ஆச்ரயமில்லை; ஒருஸந்த்யையில் அவர்கள்பட்ட நோவைப்படுகிறார்” என்று அருளிச்செய்வர் எம்பெருமானார். ஸந்த்யையாகிறது - ஜ்ஞானம்பிறந்த பின்பு ப்ராப்யபூமியில் கிட்டப்பெறாதே நோவுபடுகிற காலம். “ஸந்த்யாகால ச்லேஷவிரஹயோகஜவிசேஷ்ய” என்னக்கடவதிறே. அக்காலத்தில் வ்யஞ்ஜகபதார்த்தங்களாகிறன - ஸமவல்லாஹ ஸூசகங்களான பதார்த்தங்கள். [மல்லிகை கமழ்தென்றல்]. இவை வ்யஞ்ஜகமாகைக்குக் காரணம் ஸமவல்லாஹ ஸூசகமாயிருக்கச்செய்தே அப்போதே லபிக்கப்பெறாமை.

௧௦.—“படைவீட்டிலிருந்தால் ராமனும் மாமியார்க்குக்கூசிப் பெருமாளுடன் நினைத்தபடி பரிமாறப்போகாது” என்று காட்டிலே கொண்டுபோக அநுபவிப்பதாக மநோரதித்துப் போந்த பிராட்டியை, “காநநம் ஸ்வயம் விஜநே விஸ்ருஜ்ய பாலேவ கந்யாவிலலாப ஸீதா” (காநநத்திலே விஜநத்திலே விஸ்ருஜ்ய பாலேவ கந்யாவிலலாபஸீதா) என்கிறபடியே கூப்பிடப்பண்ணினாற்போலே, அத்திருநகரியிலே புக்கு அநுபவிப்பதாக மநோரதித்த இவர்க்கு, ஸாயம்காலத்திலே அக்நிக் கூப்பிடும்படியாய் விளைந்தது.

பெற்றி, ஒருநாள் நம்பிதிருவரங்கநாராயணதாஸர் என்பாரொருவர் எம்பக்கலிலே திருவாய்மொழிகேட்டு அங்கேசென்றாராய், “இன்று பிள்ளையோடு விநோதமேன்?”

மல்லிகைப்ரவேசம்; ஸத்ருஷ்டாந்தமாக ஸங்க்ரஹஸங்கதி - படைவீட்டில் இத்யாதி. “ஸாராக்ஷவியுக்தாவிராவத்ஸஸம்ப்ரவணதஜிக்தா” என்று பூர்வார்த்தம்; ஸாந்தராகாண்டே வேண்யுத்க்ரதநபூர்வஸர்கம் (௨௮-௨).

“இத்திருவாய்மொழி மாலைப்பூசல்” என்கைக்கு ஸம்வாதம் - பெற்றி இத்யாதி. அங்கே-பெற்றிபக்கலிலேயென்றபடி. ‘பெற்றி - கேட்டவாறே’ என்றந்வயிப்பது. எல்லாரும் ரஸிக்கும்படி ச்லோகத்திகளையிட்டு வ்யாக்யாநம் பண்ணுகையாலே - விநோதம் என்கிறார். ஆகையாலே, விநோதமென்றது - அருளிச்செய்த வ்யாக்யாநமென்றபடி. இங்கே, “வேதஸாஸ்விநோதேநகாலோ

என்று கேட்டவாறே, " * அறுக்கும்வினைசாற்றினேம் " என்றாராய், " நாளை மல்லிகை கமழ்தென்றலும் மாலைப்பூசலும் என்னாய் " என்று பணித்தாராம். " ப்ராப்யவஸ்துவைப் பெறும்படியை மநோரதித்தார் கீழில்திருவாய்மொழியிலே ; மநோரதஸமநந்தரம் பெறக் காணாமையாலே, திருவாய்ப்பாடியிலுள்ளார் க்ருஷ்ணனைப்பிரிந்து ஒருராத்ரிபட்ட வ்யஸநத்தை இவரொருத்தரும் படுகிறார் " என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி- (என்று திருமாலையாண்டான்பணிக்க) அத்தை எம்பெருமானார் கேட்டருளி, " முன்பே ஆற்றாமையாலே தறபுஅற்றிருக்கிறவராகையாலே அத்தனை யாடல்கொடுக்கைக்குவேண்டும் ஆஶ்ரயம்போராது ; ஆனபின்பு, அவனைப்பிரிந்து ஒருஸந்த்யையிற்பட்ட நோவைப்படுகிறார் " என்றருளிச்செய்வர். இது தன்னிற்செய்ததாகிறதேன் ? என்னில், - ஜ்ஞாநம்பிறந்தபின்பு விரோதியான ஸம்ஸாரத்தினின்றும் கால்வாங்கவும்மாட்டாதே, ப்ராப்யபூமியில் மநோரதத்தாலும், பாதகவர்க்கத்துக்கு ஈரலாம்படி பதஞ்செய்ததாய்த்து. * பொய்ந்நின்ற ஞானத்தில், "ஹ்ருவத்விஷயத்தில் ஜ்ஞாநம்பிறந்தபோதே, விரோதியான ஸம்ஸாரத்தில் ஸம்பந்தத்தை யறுத்துத்தந்தருளவேணும் " என்று அபேக்ஷிக்கச்செய்தேயும், " இவரைக்கொண்டு சிலப்ரபந்தங்கள் தலைக்கட்டவேணும்" என்றிருக்கையாலே, அப்போதே அப்படிச்செய்திலன் ; அந்தவிரோதியில்அருசி இவ்வளவும் வர நிலைநின்றபடி சொல்லுகிறதிறே. இங்குத்தான் செய்கிறவிது வேதாந்தங்களிற்போகிற கட்டளையில் என்னாவதென்னில் ? - " தஸ்ய தாவதேவ சிரம் " (தஸ்யதாவதேவசிரம்) என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறதிறே - "தஸ்ய தாவதேவ சிரம், யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே " (தஸ்யதாவதேவசிரம், * யாவந்நவிமோக்ஷ்யே அதஸம்பத்ஸ்யே) இறே -

ஸம்பத்ஸ்யேத " இத்யாத்யநுஸந்தேயம். நம்பி திருவரங்க நாராயணதாஸர் * அறுக்கும்வினை சாற்றினேமென்றாராயென்றபடி. பெற்றி பணித்தாராம் என்றபடி. பெற்றி யென்கிறவர் - நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலவர். நம்பிதிருவரங்க நாராயணதாஸர் என்கிறவர் - நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலவர். விஸ்தாரஸங்கதி - ப்ராப்ய இத்யாதி. மாலை யென்று - ராத்ரிக்கும் ஸந்த்யையைக்கும் பேராகையாலே, எத்தைச்சொல்லுகிறதென்ன ; நிர்வாஹத்வயம் - மநோரத இத்யாதி. அடல் கொடுக்கைக்கு - வ்யஸநத்தையநுபவிக்கைக்கு. இத்திருவாய்மொழிக்கு ஸ்வாபதேஶம் - இதுதன்னில் இத்யாதி. அதாவது - " பகற்கண்டேன் " என்கிறவிடிவுக்கும் * இருள்தருமாஞாலமான ராத்ரிக்கும் நடுவில் முமுக்ஷுத்வாவஸ்தையை மாலையென்கிறதென்றபடி. ஜ்ஞாநம் பிறந்தபின்பு என்றது - " ஸம்ஸாரம்ஹேயம் " என்கிற ஜ்ஞாநம் பிறந்தபின்பு என்றபடி. ஈரலாம்படி-வாய்பிளக்கலாம்படி. கால்வாங்கமாட்டாமற் படுகிற அருசியை * பொய்ந்நின்ற ஞானத்திலே ஈஶ்வரனுக்கறிவித்திருக்க, கார்யம்செய்யாதிருப்பானென் ? என்ன - பொய்ந்நின்ற இத்யாதி. ஆக, இத்தால் - ஶரீரத்தைக் கழித்துத் தரவேணுமென்றதாயிறே இத்திருவாய்மொழியிருக்கிறது ; இது வேதாந்தத்தில் எங்கே சொல்லிற்றென்கிற ஜிஜ்ஞாஸாப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார் - இங்குத்தான் இத்யாதி. இங்குத்தான் செய்கிறஇது என்றது-ஹ்ருவத்விஷயஜ்ஞாநமும் பிறந்து இங்கேப்ராக்ருதியோடே யிருக்கிறவிருப்பும் அதிதுஸ்ஸஹமாயிருக்கிற இவ்வர்த்தந்தானென்றபடி. சிரம் - க்ஷணகாலமாத்ரமும் துஸ்ஸஹமாயிருக்கையாலே, நெடுங்காலமென்றது. "மே" என்கிற ஶப்தம் இந்த ஶ்ருதியிலில்லையேயென்ன - யாவந் இத்யாதி. அதஸம்பத்ஸ்யேஇறே அநந்தரமென்றது - " தஸ்ய தாவதேவ சிரம் " என்றதுக்கநந்தரம், " விமோக்ஷ்யே, ஸம்பத்ஸ்யே " என்கிறக்ரியை உத்தமபுருஷனையிறே யிருக்கிறதென்றபடி. இத்தால் க்ரியை உத்தமபுருஷனாகையாலே, "மே" என்கிற இது ஶ்ருதியிலில்லையேயாகிலும், [illegible] । [illegible] । [illegible] " என்கிற ஶாப்திகப்ரக்ரியையாலே - அஸ்மச்சப்தமும் வரக்கடவதென்ற

அநந்தரம். * முடியானேயில் தம்முடைய கரணங்களுக்கு உண்டான வைலக்ஷண்யத்தைச் சொன்னார்; இதில் - அந்த கரணங்களோடேகூட அவற்றுக்கு ஆச்ரயமான அவயவி தான் ஒன்றாக அழிகிறபடியைச் சொல்லுகிறது. ஞானேந்த்ரியங்களோடு கர்மேந்த்ரியங்களோடு வாசியற ஒன்றாக அழிகிறபடியைச் சொல்லுகிறது. ராமாவதாரத்தில் பதினாலாண்டு போலேயாய்த்து, திருவாய்ப்பாடியிற் பெண்களுக்கு க்ருஷ்ணவிரஹத்தால் ஒருநாள் ஸந்த்யை. குணாதிகவிஷயத்தைப் பிரிகையாலே அங்குப் பதினாலாண்டாய் அழியவங்கு போயிற்று; இங்கு இவள் நீர்மையிலே கைபடியண்டிருக்கையாலே, * ஒருபகல் ஆயிரங்கல்பமாய்த் தோற்றுமிறே. குணங்கள்தாம் காற்கட்டுகிறது குணமாயல்லவிறே; அவ்வாச்ரயத்திலே கிடந்தவையாயிறே. இங்கு பாழ்மி அதுவேயாய், அதுக்குமேலே தீம்புமாகால் பாடாற்றப் போகாதிறே. நாட்டார் போக்யதாபுத்திபண்ணியிருக்கிற பதார்த்தவிஷயங்களையடையத் தமக்கு உபாயகமாக, ப்ராப்யவஸ்துவைப்பெறாதே, நம்மை ஆண்டவியான ஸ்ரீபீஷ்மர் அர்ஜுநன்கையில் அம்புகளாலே உளைய வெண்டுகிடந்து துடித்தாற்போலே, கிடந்து துடிக்கிறார். திருவாய்ப்பாடியிலுள்ளார், க்ருஷ்ணன் "பசுமேய்க்க" என்று புறப்பட்டால், அவன் வருமளவும் அவர்களபடும்பாடு சொல்லுகிறது. அதாவது - ப்ராஹ்மணர்க்கு ஸந்த்யையாவந்தநம்போலேயிறே இடையர்க்குப் பசுமேய்க்கை ஜாதிபுசித்த தர்மம்: ஆகையாலே தவிரவொண்ணாதிருக்குமிறே. இப்படியாலே அவனைப் பசுக்களின்பின்னே புறப்பட விட்டு, அவன்வரும் ஸந்த்யைவளவும்பார்த்திருக்குமத்தனையாய்த்து. ஆக, அவன் பசுமேய்க்கப்போனால் பகல்பொழுதைவருந்தி ஒருபடியாற்றினால், அவன்வருங்காலமான ஸந்த்யை

படி. "மல்லிகைகமழ் தென்றல்" இத்யாதியாலே - ஸந்த்யாகாலத்திற் றுதாயானவை புகுந்தபடி சொல்லுகிறதென்று வகுத்தது. ஆகக் காரணத்திலுமென்ன * முடியானேயிற்பற்றி த்ரித்து வாசியமதன்ன - முடியானேயில் இத்யாதி. அவயவிதான் என்றது - "மல்லிகைமுலை" என்றத்தைப்பற்ற. வைசயவரண - ஞானேந்த்ரியங்களோடு இத்யாதி. "மல்லிகைகமழ்" என்று - க்ராணமும், "தென்றல்" என்று - ஸ்பர்சமும், "குழற்கேவலை" என்று - ச்ரோத்ரமும், "நன்மேசகன்" என்று - சக்ஷுஸ்ஸும், கர ஜாதத்தைச் சொல்லுகையாலே - ஞானேந்த்ரியங்கள் என்றது. "தோளிடையொண் " என்கையாலே - கர்மேந்த்ரியங்களோடு என்றது. "தோள்" என்றது - கர்மேந்த்ரியங்களுக்கு - உபலக்ஷணம். அவனைக்குமாப்போல என் சக்தையாம் இப்படி புகக் கூடுமோவென்ன - ராமாவதாரத்தில் இத்யாதி. ஸந்த்யை - பதினாலாண்டுபோலே. பக்கைப்படுமே தென்ன - குணாதிக இத்யாதி. ப்ரணயத்திலே - நம்முடைய மைக்கரத்திலே, இத்யாதி. குணங்கள் பற்றவும் தீம்பு சம்பந்தமுமென்றபடி. கைபடியுண்டிருக்கை - ப்ரதானமுமாகை. ஆனாலும் குணங்களொழியத் தீம்பு சம்பந்தத்துக்குடலாமோவென்ன - குணங்கள்தான் இத்யாதி. அதுவேயாய்-குணமேயாய். பாடாற்றப்போகாது - பொறுக்கப்போகாது. தென்றல்முதலான போக்யபதார்த்தங்களுக்கு ஸ்வாபதேசம் - நாட்டார் இத்யாதி. உளைய-துன்பப்பட. ஏதுணாய் - கைப்பட்டு. "ஸந்த்யையிற்பட்ட கோவைப்பசுகளே" என்று கீழ்த்தத்தை வர்ணிக்கிறார்-திருவாய்ப்பாடியில் இத்யாதி. இவன்தான் இவர்களைவிட்டுப் பசுமேய்க்கப் போவானேனென்ன - அதாவது ப்ராஹ்மணர்க்கு இத்யாதி. உக்தத்தை நிகமிக்கிறார் - இப்படியாலே இத்யாதி. அவன் வருகிற ஸந்த்யாகாலத்திலே நோவுபடுவானேன்? பகல்போலேயாயிருக்கவொண்ணாதோ? என்ன; அவன் வருங்காலமான ஸந்த்யையிலே வாராதிருக்கில் வாரியிருக்கப்போமோவென்கிறார் - ஆகஅவன்பசு இத்யாதி. அவன் தான் முற்கொழுந்திலேவாராதே பிற்கூழையிலே வருவானென்னென்ன - அதாவது அவன்தான் இத்யாதி. உக்தத்தை யருவதியாகின்றகொண்டு ஸந்த்யாஸமயத்திலே அவனைப்பிரிகையாலே வந்த நோவேயன்றிக்கே, போக்யபதார்த்தங்களும் மேலிடத் தொடங்கிற்றென்கிறார் - அவன்வரக்கடவ இத்யாதி. "மாலையும்வந்தது" என்றத்தைப்பற்ற - ஸந்த்யையும் வந்தது என்றது. "ஆபுகுமாலை

யும்வந்துமுகங்காட்டிப்பசுக்களின் முற்கோழுந்துவந்து தலைவைக்கச்செய்தே அவன்தன்னை வரக்காணவிட்டால் ஆற்றப்போகாதிறே. அதாவது - அவன்தான் முற்கோழுந்திலே வாராதே பிற்கூழையிலேசிற்குமாய்த்து, நடுவுபடும்அலமாப்புக்காண்கைக்காக. அவன்வரக் கடவ காலமான ஸந்த்யையையும் வந்தது:கூடவரும் பசுக்களும் வந்தன:அவன்தான் வரக் காணவிட்டவாறே, அக்காலத்தில், மல்லிகையின்பரிமளம், நல்லகுறிஞ்சியிசைதொடக்க மான அநுகூலபதார்த்தங்கள், தென்றல், நிலா, கடலோசை, அன்றில், குழலோசை முதலானவை பாதகமாகத் தொடங்கிற்று. குழலோசையும், அவ்வழியே அவனுடைய குணங்களை ஸ்மரிப்பித்து நோவுபடுகைக்கு உடலாயிருக்குமிறே. அப்படியிருக்கிற பாதக பதார்த்தங்களெல்லாம், முன்பு தனித்தனியே பருஷஹாஷணங்களைப்பண்ணி நலிந்த ஏகாக்ஷி ஏககர்ணியுள்ளிட்ட ராக்ஷஸிகள் பின்பு அவ்வளவில்நில்லாதே எல்லாரு மொக்க மேல்விழுந்து அதுக்குமேலே சிலநலிவுகளைப்பண்ண நினைத்தாற்போலே, பாதக வர்க்கமடைய, தனித்தனியும் திரளவும் மேல்விழுந்து நலிய, அவற்றாலே நலிவுபட்டவர்க ளெல்லாரும் கூப்பிட்ட கூப்பீட்டை இவரொருத்தருமே கூப்பிடுகிறார்.

முதற் பாட்டு.

மல்லிகைகமழ்தென்றலீருமாலோ!வண்குறிஞ்சியிசைதவழுமாலோ!
செல்கதிர்மாலையும்மயக்குமாலோ!செக்கர்நன்மேகங்கள்சிதைக்குமாலோ!
அல்லியந்தாமரைக்கண்ணனெம்மான்ஆயர்களேறரியேறுஎம்மாயோன்
புல்லியமுலைகளுந்தோளுங்கொண்டு புகலிடமறிகிலம்தமியமாலோ!

மாலையும்வந்ததுமாயன்வாரான்மாமணிபுலம்பலல்லேறணைந்த.கோலநன்னாகுகளுகளுமாலோகொடியனகுழல்களுங்குழறுமாலோ, வாலொளி வளர்முல்லைக்கருமுகைகள்மல்லிகையலம்பிவண்டாலுமாலோ, வேலையும்விசும்பில்விண்டலறுமாலோஎன்சொல்லியுய்வனிங்கவனைவிட்டே.

ஆ.—(மாலையும்)-மாலையும் வந்தது, மாயன் வருகிறிலன்; மாமணிபுலம்ப வல்லேறணைந்த கோலநன்னாகுகள் களித்துக் கொண்டிராநின்றன; மன்றுவரைப்பெருமாளுடைய திருத்தோழன்மார் குழல்களை ஊதிக்கொண்டு வந்து உலாநின்றனர்; அதிதவளமான ஒளிவளர்கிற முல்லை கருமுகைகள் மல்லிகைத்தொடக்கமான பூக்களின் மதுக்களைப் பருகி வண்டுகள் ஆலாநின்றன; கடலும் கிளர்த்துக்கொண்டேயாநின்றது; இத்தசையில் அவனைவிட்டு நான் எத்தைச்சொல்லி உய்வது? என்கிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், ராத்ரியும் வந்து [illegible] வர்த்தியாநிற்க அவனைவரக் காண்கிறிலோம்; இனி போக்யங்களுடைய வர்த்திப்பில் அவனையொழியத் தரிப்பரிது என்கிறாள்.

[மாயன் வாரான்] - தன்னைக்காணவே ப்ரதிகூலங்களெல்லாம் அநுகூலமாம்படி தோற்றும் ஆச்சர்யபூதனானவனும் வருகிறிலன். [மாமணியென்று தொடங்கி] - கழுத்திற்பூண்ட பெரியமணிகள் ஓசைப்படும்படி வலிய ஏறுகள் அணைகையாலே புதுக் களித்த நாகுகள் களியாநின்றன. ஊரையணித்தாக வந்து இடைப்பிள்ளைகளெல்லாருங்கூடக் கேட்டார்க்குத் தரிப்பரிதாக ஊதுகிற குழல்களும் கூடத் த்வநியாநின்றன. [வாலொளியென்று தொடங்கி] - மிக்க ஒளியையுடைத்தாய்க் கொண்டு வளர்கிற முல்லை கருமுகைகள் மல்லிகை இவற்றிலுள்ளே புக்கு முழுகி வண்டுகள் ஆலியாநின்றன. கடலும் ஆகாசத்திலே கிட்டுக் கூப்பிடாநின்றது: இவற்றின் நடுவே அவனையொழியப் பிழைக்கும்படி யெங்ஙனே?

ப.—அந்தராய், ஆச்சர்யபூதனானவன் வந்திலன்; போக்யங்கள் [illegible]றன; இனி எங்ஙனே உஜ்ஜீவிப்பேன்? என்கிறாள்.

மாலையும்வந்தது - வருவதாக அவன் குறித்துப்போன மாலைக்காலமும் வந்தது; மாயன் - தன் சேஷ்டிதமெல்லாம் அநுபவிக்கும்படியான ஆச்சர்யத்தையுடையவன், வாரான் - வருகிறிலன்; மாமணி - பெரியமணிகள், புலம்ப - த்வநிக்கும்படி, வல்- பெருமிடுக்கனான, ஏறு - ஏறுகள், அணைந்த - அணைந்த; கோலம் - சோபையான வடிவையுடையவாய், நல் - ஏறுகளோடு கலந்த வுகப்பையுடைத்தான, நாகுகள் - நாகுகளானவை, உகளும் - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஸம்ப்ரம ஸஞ்சாரத்தைப்பண்ணுகின்றன; குழல்களும் —(பசுக்கள் குவிகைக்காகப் பலவிடத்திலும் ஊதின) குழல்களானவை, (அவன் குழலோசையை ஸ்மரிப்பித்து), கொடியன - அஸஹ்யமாம்படி, குழறும் - அநக்ஷரஸமாக த்வநியாநின்றன; வால் - வெளுத்த, ஒளி - ஒளியையுடைத்தான, வளர் - கொடியானது மிகாநிற்கிற, முல்லை -, கருமுகை -, மல்லிகைகள் - மல்லிகைகளை; அலம்பி - அவகாஹித்து, வண்டு - வண்டுகளானவை, ஆலும் - மத்தியாநின்றன; வேலை

யும் - ஸமுத்ரமும், விசும்பில் - ஆகாஶத்திலேகிட்டி, விண்டுஅலறும் - வாய்விட்டுக் கூப்பிடாநின்றது; இங்கு - இவ்வளவில், அவனைவிட்டு -, என்சொல்லி - எத்தைச்சொல்லி, உய்வன் - உஜ்ஜீவிப்பேன்?

இ—பத்தாம்பாட்டில், வருவதாகச் சொன்னகாலம் வந்திருக்க, அவன் வருகிறிலன்; பாதகங்களுடைய ஸந்நிதியில் அவனையொழிய தரிப்பரிது என்கிறாள்.

[மாலையித்யாதி] - மாலையையும் அவனையும் கூடப்பிணைத்து விட்டாள்போலே காணும். அவன்வருவானாகக் குறித்துப் போன காலம் வந்தது; தான் வருகிறிலன். [மாயன்] - தன்னைக்காணவே ப்ரதிகூலங்களெல்லாம் அநுகூலமாம்படி தோற்றும் ஆஶ்சர்யஸ்வபாவன் வரக்காண்கிறிலேன். [மாமணியித்யாதி] - பெரியமணி த்வநிக்கும்படி வலிய ஏறுஅணைகையாலே தர்ஶநீயமான வடிவையுடைத்தாய், "த்ருஷ்டஶ்ரீவத்ஸ ... தாஃ" என்கிறபடியே ருஷபத்துக்கு ஶத்ருஶமான பருவத்தையுமுடைய நாகுகள் களியாநின்றன. [வல்லேறு] - நாகு பிடிகொடுத்ததில்லை என்றுமீளாதே தொடங்கினதுமுடிய நடத்தவல்ல ருஷபம். உகளுகை - கலவிக்குப் போக்குவிட்டு ஸஸம்ப்ரமவ்ருத்திகளைப் பண்ணுகை. [கொடியன] - கேட்டார்க்குத் தரிப்பரிதாமவை. [குழல்களும்] - தூரப்போன பசுக்களை மீட்கைக்காக அங்குமிங்கும் சிதறின இடையரெல்லாரும் திரண்டு ஊரைவந்து கிட்டி யூதுகிறகுழல்களும். [குழலும்] - எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி விரவிக்கொண்டு எழாநின்றது; நாகுகளால்வந்த நலிவுக்குமேலே குழல்களும் நலியாநின்றன. [வாலொளியித்யாதி]-மிக்க ஒளியையுடைத்தாய்க் கொள்கொம்புமுட வளருகிற முல்லை, அப்படியிருந்துள்ள கருமுகை, அதுபோலேயிருந்துள்ள மல்லிகை, இவற்றினுள்ளே முழுகி வண்டுகள் ஆலியாநின்றன; கடலும் ஆகாஶத்திலே கிளர்ந்து கூப்பிடாநின்றது. ஸம்ஹார மத்யத்திலே தைர்யபங்கம் பிறந்து கூப்பிடும்படிக்கு ஸ்மாரகமாய் நலியாநின்றது. [இங்கு அவனைவிட்டு என்சொல்லியுய்வன்] - பாதகபதார்த்தங்கள்நடுவு அவனையொழிய எத்தைச் சொல்லி உஜ்ஜீவிப்பது? இவை மேல்விழுந்து நலியாநின்றன; அவனோ வந்திலன். நான் உஜ்ஜீவிக்கவென்பது ஒன்றுண்டோ? முடிந்தேன்! என்றபடி.

ஈடு.—பத்தாம்பாட்டு. வருவதாகச்சொன்ன காலம் வந்திருக்க அவன் வருகிறிலன்; பாதகங்களுடைய ஸந்நிதியில் அவனையொழியத் தரிப்பதெங்கே? என்கிறாள்.

[மாலையித்யாதி] - மாலையையும் மாலையும் கூடப் பிணைத்துவிட்டாள் போலே காணும். வருவதாகக் குறித்துப்போன காலம் வந்தது, அவன்தான் வருகிறிலன். அவனைக்காணவே, ப்ரதிகூலமெல்லாம் அநுகூலமாய்த் தோற்றுமிறே. [மாமணிபுலம்ப] - பெருத்தமணி த்வநிக்க. [வல்லேறு இத்யாதி] - நாகு கைபுகுந்தாலல்லது மீளாதாய்த்து. அபிமதம் கைபுகுந்தாலல்லது மீளாத ஏறுகளோடே கலந்த தர்ஶநீயமான ஸ்நேஹத்தை

பத்தாம்பாட்டு.— மாலையும் இத்யாதி. "மாலையும்வந்ததுமாயன்வாரான்,மாமணிபுலம்ப" என்றுதொடங்கி, "இங்கவனைவிட்டு" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - வருவதாக இத்யாதி.

"மாலையும் - மாயன்" என்ற பதச்சேர்த்திக்கு ரஸோக்தியாக பாவம் - மாலையையும் இத்யாதி. ஶப்தார்த்தம் - வருவதாகஇத்யாதி. அவன் வந்தால் பெறுகிறபேறேதென்ன - அவனைக் காணவே இத்யாதி. ருஷபத்துக்கு வலிமையேதென்ன - நாகு கைபுகுந்தால் இத்யாதி. உகத்தையநுவதித்துக்கொண்டு, "உகளுமாலோ" என்னுமளவுக்கும் ஶப்தார்த்தம் - அபிமதம் இத்

யுடைய நாகுகள், அந்த ஸம்ச்லேஷத்தாலுண்டான ஹர்ஷத்தாலே ஸஸம்ப்ரமந்ருத்தி கள் பண்ணுகின்றன. நான் சோகத்தோடேயிருந்தேன், இவை ஹர்ஷத்துக்குப் போக்கு விடாநின்றன. பின்னை, அவன்செய்த தென்னென்னில் ? - அவன் இன்னமும் வாராத்து க்ருஷிபண்ணுகின்றான். [கோடியனவித்யாதி] - தூரப்போன பசுக்களை மேய்ட்டத்திலே திரட்டுகைக்காக அங்குமிங்கும் சிதறின இடையரடையத் திரண்டு எல்லாருமாகக் குழல்களைவாங்கி ஸந்த்யாஸமயத்திலே தங்கள்வரவை அறிவிப்பதாகவும் பெண்கள் நெஞ்சில் மறமறம்படியாகவும் எழுத்தும் சொல்லும்போருளும் தெரியாதபடி ஒன்றாக விரவியெழும்படி ஊதுவதொரு த்வனியோசையுண்டு; அது வ்யாகுலமாகாநின்றதாய்த்து. [வாலொளி இத்யாதி] - மிக்கவொளியையுடைத்தாய்க் கண்டவிடமெங்கும் தானேயாம்படி படர்ந்தமுல்லை, அப்படியிருக்கிற கருமுகை, மல்லிகை, இவற்றிலேபடிந்த மதுபானம்பண்ணி அலைகிற - ஆலிக்கிறவண்டுகளானவை ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுகின்றன; திர்யக்குக்களானவை, ஸம்ச்லேஷத்தால்வந்த ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டுக் களிப்பனவும், ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணுவனவு மாகாநின்றன. [வேலையும்] - கடலும், தூரத்திலே நின்று கூப்பிடாநின்றது. ஸந்த்யாஸமயத்திலே பைரவலங்கம்பிறந்து கூட்டுப்படிக்குள்ளாக மாய் நலியாநின்றது. [இங்கவனைவிட்டு-என்சொல்லியுய்வன்] - பாதகபதார்த்தங்களின் நடுவே, அவனையொழிய எத்தைச்சொல்லி யுஜ்ஜீவிப்பது? இவை மேன்மேலென நலியாநின்றன: அவனோ வந்திலன், நான் உஜ்ஜீவிக்கவென்று ஒன்றுண்டோ? முடிந்தே னென்றபடி. (கo)

பதினோராம் பாட்டு.

அவனைவிட்டகன்று யிராற்றகில்லா அணியிழையாய்ச்சியர் மாலைப்
பூசல், அவனைவிட்டகல்வதற்கேயிரங்கியணிகுருகூர்ச்சடகோபன்மாறன்,
அவனியுண்டுமிழ்ந்தவன்மேலுரைத்தஆயிரத்துள்ளிவைபத்துங்கொண்டு,
அவனியளலற்றிநின்றுய்ம்மின்தொண்டீர்அச் சொன்னமாலை நண்ணித்
தொழுதே.

*ஆ.—(அவனைவிட்டு) வந்தவரைப்பெருமானைப்பிரிந்து தங்களைப்பிரிந்து தங்களைக்கொண்டு தரிக்கமாட்டாமை * அந்தியம்போது அணியிழையாய்ச்சியர் திரள*

யாதி. அணைந்த - ஸம்ச்லேஷித்த. இத்தால் ஸாரம்-நான் சோக இத்யாதி. பெருக்குவதர்கை. பின்னை இத்யாதி. கோடியன - க்ரூரங்களான. "குழல்கள்" என்கிற பஹுவசநத்துக்கர்த்தம் - தூரப்போன இத்யாதி. விரவி - கூடி. "வாலொளிவளர்" என்கிறது - முன்பூத்துக்கும் விசேஷணம். வால் - மிகுதி. அலம்புகை - அலைகையாய், மட்டிக்கிறதென்றபடி. ஆலுகை-ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணுகை. "அலம்பி - அலைகாநின்று, ஆலும் - மட்டியாநின்றன" என்று உரையிலர்த்தம். "நாகுகளுகளும், வண்டாலும்" என்கிற இரண்டாலும் பலித்தவர்த்தம் - திர்யக்குகள இத்யாதி. களிப்பனவும் என்றது - நாகுகளை; நிருத்தம்பண்ணுவனவும் என்றது - வண்டுகளை. விண்டு - வாய்விட்டு. இது சொன்னதுக்கு ஸாரம் - ஸம்ஹோம இத்யாதி. மட்டார்த்தம் - வாயக இத்யாதி. இத்தால் ஸாரம்-இவை மேன்மேல் இத்யாதி. (கo)

நின்று கூப்பிட்டாற்போலே, ஆழ்வாரும் அவனைப்பிரிந்து தரிக்கமாட்டாமை கூப்பிட்ட லற்றின இத்திருவாய்மொழியைக்கொண்டு அலற்றியுய்யலாமென்கிறார்.

ஒ.—நிகமத்தில், அவன்பக்கல் சாபலமுடையார் இத்திருவாய்மொழியைச் சொல்லி அவனைப் பெறுங்கோள் என்கிறார்.

[அவனையென்று தொடங்கி] - எம்பெருமானை விஶ்லேஷித்து ஆத்மதாரண க்ஷமைகளன்றிக்கே யிருக்கிற விலக்ஷணைகளான இடைப்பெண்கள் அவன்வரவுதாழ்த்த ஸந்த்யாகாலத்தில் கூப்பிட்ட பாசுரத்தை ஆழ்வார் அவனுடைய பிரிவாலே நோவுபட்டு எல்லார்க்கும் எல்லாப்படிகளாலும் ரக்ஷகனானவன் விஷயமாகச் சொன்ன ஆயிரந் திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியைக் கொண்டு. [அவனியென்று தொடங்கி] - அப்படி ரக்ஷகனைச்சொன்ன எம்பெருமானை அவன்பக்கல் சாபலமுடையார் பூமியிலே நிரந்தரமாக ஆஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோள் என்கிறார்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக பகவத்ஸம்ஶ்லேஷத்தை யருளிச் செய்கிறார்.

அவனைவிட்டகன்று - அதிஶயிதபோக்யனை க்ருஷ்ணனைவிட்டகன்று, உயிர் ஆற்றகில்லா - ப்ராணதாரணம்பண்ணமாட்டாதேயிருப்பாராய், அணியிழை - அவன் வரவுக்கீடாக அணியப்பட்ட ஆபரணங்களையுடையரான, ஆய்ச்சியர் - கோபிமார், மாலை - மாலைக்காலத்தில், பூசல் - அவன்வரவுகாணாமல் கூப்பிட்டபடியை, அவனை விட்டகல்வதற்கே - அவனை விட்டகன்றிருக்கைநிமித்தமாக, இரங்கி - நோவுபட்டு, அணிகுருகூர் - அழகியதிருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன்மாறன் - ஆழ்வாரானவர், அவனி - பூமியை, உண்டு - ப்ரளயங்கொள்ளாமல் உண்டு, உமிழ்ந்தவன்மேல்-உமிழ்ந்தவன் விஷயமாக, உரைத்த - அருளிச்செய்த, ஆயிரத்துள் இவைபத்தும்கொண்டு-ஆயிரத்துள் இவைபத்தையும் ஸ்வீகரித்துக்கொண்டு, அவனியுள் - பூமிக்குள்ளே, அலற்றி நின்று - ப்ரீதியாலே திரளாகக்கூப்பிட்டுநின்று, தொண்டீர்-அநுபவசாபலத்தையுடையவர்களே! அச்சொன்னமாலை - அங்குச்சொன்ன ஆஶ்ரிதவ்யாமுக்தனைக்ருஷ்ணனை, நண்ணித்தொழுது - கிட்டித்தொழுது, உய்ம்மின் - உஜ்ஜீவியுங்கோள்! இத்திருவாய்மொழியில் இப்பத்துப்பாட்டும்-கோபிமார் தனித்தனியே கூப்பிட்ட பாசுரமாதல், ஒரு கோபிகை திரளோடேகூடியும் தனியுமாய்க்கூப்பிட்ட பாசுரமாதலாயிருக்கிறது. இது எண ம.

இ.—நிகமத்தில், அவன்பக்கல் சாபலமுடையார் இத்திருவாய்மொழியைச் சொல்லி அவனைப்பெறுங்கோள் என்கிறார்.

[அவனைவிட்டகன்று உயிராற்றகில்லா] - அவனை விஶ்லேஷித்து ப்ராணதாரணக்ஷமைகளன்றிக்கே யிருக்கிறவர்கள். [அணியிழையாய்ச்சியர்] - ஒப்பிக்கப்பட்ட ஆபரணங்களையுடைய இடைப்பெண்கள். "கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து" என்கிறபடியே, அவன் வரவுக்குஉடலாகத் தங்களை அலங்கரித்து வரும் காலத்தில் வரக் காணாமையாலே கூப்பிட்ட கூப்பீட்டை. [அவனையித்யாதி] - அவனுடைய பிரிவாலே நோவுபட்டு அருளிச்செய்த ஆழ்வார். அவர்களெல்லாரும் பட்ட க்லேஶத்தை இவரொருவருமே பட்டாரென்கை. [அவனியுண்டு உமிழ்ந்தவன் மேலுரைத்த] - ஸர்வரையும் ப்ரளயாபத்திலே ரக்ஷித்து அழிந்தவற்றை யடங்க உண்டாக்கின ஸர்

வேஸ்வரன் திருவடிகளிலேயாக்குக் கொல்லிற்று. [illegible] தம்மை யெடுக்க வேணுமென்று சொன்ன வார்த்தையாய்த்து. [illegible] தொழுது தொண்டர் - அவனியுளலற்றி நின்றும்பர் நின்று - [illegible] யவனைக்கிட்டித் தொழுத சாபலமுடையார் [illegible] பிட்டு உஜ்ஜீவியுங்கோள். இத்திருவாய்மொழியை அப்யஸிக்கார்க்கு, என்னைப் போலே "என்சொல்லிப்புல்வன்?" என்று [illegible].

ஈடு.—நிகமத்தில், அவன்பக்கல் சாபலமுடையார், [illegible] யைச் சொல்லி அவனைப்பெறுங்கோ [illegible].

[அவனைவிட்டகன் றுயிர்ஆற்றகில்லா அணியிழை ஆய்ச்சியர் - அவனைவிச்லேஷித்துத் தந்தாமுடைய ப்ராணன்களைக் கொண்டு தரிக்கக்கூடமாட்டாதே, அவனுடைய வரவுக்கு உறுப்பாக ஒப்பிக்கப்பட்ட ஆபரணங்களை யுடைய இடைப்பெண்கள். "கோங்கைமேல்தஞ் சமத்தின் [illegible]" [illegible] அவன்வரவுக்கு உடலாகத் தங்களையலங்கரித்து வருங்காலத்தில் [illegible] திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியிற்பெண்கள் க்ருஷ்ணவிரஹத்திலே [illegible] கூப்பிட்ட கூப்பீடாய்த்து. [அவனைவிட்டகல்வதற்கே யிரங்கி - [illegible] பட்டு) அவர்களெல்லாரும்பட்ட க்லேசத்தை இவரொருவரும் பட்டாரென்கை. [அவனியுண்டுமிழ்ந்தவன்மேலுரைத்த - ஸர்வரையும் ப்ரளயத்திலே ரக்ஷித்து அதில் [illegible] யடையவுண்டாக்கின ஸர்வேச்வரன் திருவடிகளிலேயாய்த்துச் சொல்லிற்று! தொண்டர் - அணிகுருகூர்ச்சடகோபன்மாறன். அவனியுண்டுமிழ்ந்தவன்மேலுரைத்த [illegible] துள் - அவனைவிட்டகல்வதற்கேயிரங்கி - அவனைவிட்டகன் றுயிராற்றகில்லா அணியிழை யாய்ச்சியர் மாலைப்பூசல் - சொன்ன - இப்பத்துங்கொண்டு - அம்மாலைகண்ணித் தொழுது - அவனியுளலற்றிநின்றும்பரே.' இப்போது இது சொல்லிற்று விரஹப்ரளயத்தில் நின்றும் தம்மை யெடுக்கவேணுமென்கைக்காக. [அச்சொன்னமாலை நண்ணித்தொழுது - அவனியுளலற்றிநின்றும்பர் தொண்டர் - அப்படிப்பட்ட வ்யாமோஹத்தை விளைக்கவல்ல வனைக்கிட்டி, அவனைத்தொழுது, அவன்பக்கல்சாபலமுடையார், [illegible] அடைய

[illegible].—அவனி இத்யாதி. "தொண்டர் - [illegible] [illegible] த்தைப்பற்ற வசுதாரிகை - அவன்பக்கல் இத்யாதி.

"விட்டகன்று" என்று - [illegible]; [illegible] தைகளானவர்களாலே [illegible] ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் - அவனுடைய வரவுக்கு இத்யாதி. அணியிழை - [illegible] ஆபரணம். அணிகை-பூண்கை. "அவன் வரவுக்கு உறுப்பாக" இத்யாதியாலே [illegible], "மாலைப்பூசல்" என்றதுக்கர்த்தம்-கோங்கை இத்யாதி. "மாலை" என்று [illegible] கூப்பீடாய், ஸந்த்யாகாலத்திலே கூப்பீடென்றபடி. "விட்டகல்வதற்கு" என்று - [illegible] பிரிவுக்காகவென்றபடி. "அவனைவிட்டகன்று" என்றதொடக்கி "[illegible]" என்று பதச்சேர்த்திச்சு ஆவதும் - அவர்களெல்லாரும் இத்யாதி. இவ்விடத்திலே. "அவனைவிட்டகல்வதற்கேயிரங்கி" என்றது - * கடலோபாதுக்கு விசேஷணமாகவும்; [illegible] இவ்விடத்தில் * ஆய்ச்சியர்க்கு விசேஷணமாகவும் கண்டுகொள்வது. [illegible] சொல்லுகைக்கு ப்ரயோஜநமருளிச்செய்கிறார் - இப்போது இத்யாதி. இதுவென்றது - "அவனியுண்டுமிழ்ந்த" என்றத்தை. இத்தால் - ஆழ்வாரோடே [illegible] "அச்சொன்ன" என்கிறவிடத்தில், அகாரம் ஸர்வ விசேஷணமாய், அம்மாலையென்றபடி. இத்தால் ஃபலிதம் -

† குண்டலிதம் ப்ரக்ஷிப்தம்

கேடக்கூப்பிட்டு உஜ்ஜீவித்துப் போகப்பாருங்கோள். இப்பாசுரத்தை யப்யஸிப்பார்க்கு என்னைப்போலே கூப்பிடவேண்டா; "என்சொல்லியுய்வன்" என்று ஆசைப்பட்டபேறு பெறுகையில் கண்ணழிவில்லை.

இப்பாசுரத்தை இத்யாதி. ஆசைப்பட்டபேறுவது - உஜ்ஜீவநம். பதார்த்தங்கள் வ்யக்தங்களாகையாலே அந்வயம் காட்டுகிறார் - தோண்டீர் இத்யாதி. "பூசல் - சொன்ன" என்றது - பூசலைச் சொன்னவென்றபடி. (௧௧)

த்ராவிடோபநிஷத்ஸங்கதி.— [illegible]

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—(மல்லிகை.) [illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி

மல்லடிமைசெய்யுநாள்மால்தன்னைக்கேட்கவவன்
சொல்லுமளவும்பற்றாத்தொன்னலத்தால் - செல்கின்ற
வாற்றாமைபேசிபலமந்தமாறனருள்
மாற்றுகப்போகுமென்றன்மால்.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானார் திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்

பத்தாந் திருவாய்மொழி—மாலைநண்ணி - ப்ரவேசங்கள்.

ஆ.—(மாலைநண்ணி.) - "என்சொல்லியுய்வன் இங்கவனைவிட்டு" என்று கிடந்துஅலற்றுகிற்கச்செய்தே, அவனும் பசுமேய்க்கப்போனவிடத்தில் கோபிமார் அவனோடே கலந்து பரிமாறினபோலே, தம்முடைய அபேக்ஷையை நிறைவேற்ற திருக்கண்ணபுரத்திலே அவனைக்கண்டு அவனோடே கலந்துபரிமாறி, தம்முடைய ப்ரீத்யதிசயத்தாலே அநுகூல ஜநங்களைக்குறித்து,

ஐ.—பத்தாந் திருவாய்மொழியில், அநந்தரத்திலே நான் ஆர்த்தராந்த ஊஸ்பத்தில் அபேக்ஷிக்கும் காலமென்றென்று அறிகிலேன் என்று பதறுமவராய்ச் செய்துவைத்த மல்லிகைகமழ் தென்றலிலே தன்னைக்காணப்பெறாதே நோவுபட்ட ஆழ்வாருக்கு இவர்பட்ட து:க்கமெல்லாம் தீரும்படி திருக்கண்ணபுரத்திலே நின்றருளினபடியைக் காட்டியருளி "நான் உன்னோடே உடம்பிருந்திருக்கிறேன்; இச்சரீராவஸாநத்திலே நீர் அபேக்ஷித்த படியே செய்கிறோம்" என்று எம்பெருமான் அருளிச்செய்ய அத்தாலே மிகவும் ப்ரீதராய் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே. "ஸர்வஸமாச்ரயணீயனாய்த் திருக்கண்ணபுரத்திலே நின்றருளின எம்பெருமானை உங்களுடைய து:க்கமெல்லாம் தீரும்படி ஆச்ரயியுங்கோள்" என்று பரரைக்குறித்து அருளிச்செய்கிறார். வேதாந்தங்களில் ப்ராரப்த கர்மத்தினுடைய முடிவு - பகவத் ப்ராப்திகாலமாகச் சொல்லாநிற்க, இச்சரீராவஸாநத்தைக் காலமாக எம்பெருமான் அருளிச்செய்யக் கூடினபடி எங்ஙனேயென்னில்,- ஸ்வஸாமர்த்யத்தாலே ஆச்ரயிக்குமவர்களுக்குத் தங்களுடைய உபாஸநங்கள் முற்றினால் கொண்டுபோகைக்காக ப்ராரப்தகர்மாவஸாநத்தைக் காலமாகச் சொல்லிற்று அங்கு; இங்கு - கேவல பகவத் ப்ரஸாதத்தாலே பெறுமவர்களுக்கு அக்காலவிளம்பம் வேண்டாமையாலே சரீராவஸாநம் காலமாகச்சொல்லுகை கூடும். அங்ஙனேயாகில், இவ்வதிகாரிகள் "எம்பெருமானே ரக்ஷகன்" என்னும் அறிவுபிறந்து அவன்பக்கலிலே தங்கள் பரத்தைப் பொகட்டவநந்தரத்திலே அவனைப் பெறுகொழிகிறதென்? என்னில்,- அவனை ப்ரபந்நனானவன் ப்ரபத்த்யநந்தரத்திலே இச்சரீரத்தைவிடில் மரணபயத்தாலே அஞ்சி இஜ்ஜ்ஞாநத்துக்கு ஆள்கிடையாதென்றும் ஜ்ஞாநப்ரவர்த்தகராக இவனிருக்க வேண்டுகையாலும் சரமதேஹத்தை எம்பெருமான் தான் விரும்புகையாலும் சரீராவஸாநத்தளவுமிருக்கப் பொறுக்கிறான்; அங்ஙனேயாகில் ப்ரபந்நனான இவன் நிர்து:க்கனாயிராதே, வ்யாத்யாதிபீடைகளாலே நலிவுபடுவானேன்? என்னில், ஸம்ஸாரத்திலே பழகிவந்த இவனுக்கு இங்கே நிர்து:க்கமாக ஸுகங்களைக்காட்டில் இதற்றைப்பற்றித் தன்னை ஆசைப்படாதேயொழியுமென்றுபார்த்து து:கிதனாக வைக்கிறான். அதுவும் இவர்கள்பக்கலுண்டான அநுக்ரஹாதிசயமான பின்பு இவ்விடத்தில் ஒரு ஸங்கடமில்லை.

ப.—பத்தாந் திருவாய்மொழியில், கீழ் ப்ராப்யத்வரையாலே ஆர்த்தராய்க் கூப்பிட்டவர்க்கு ஈச்வரன் அர்ச்சாவதாரஸௌலப்யத்தைக்கொண்டு திருக்கண்ணபுரத்திலே நிற்கிறநிலையைக்காட்டி இவருடைய ஆர்த்தியை சமிப்பிக்க இவ்வாபத்ஸகத்வத்

திலே ஸந்துஷ்டராய்; வடதளஶாயித்வமஹோபகாரத்தையும், வஸ்தவ்யதேஶவைலக்ஷண்யத்தையும், விலக்ஷணவிஹங்கஸந்நியோகத்தையும், அதிஶயிதஸௌந்தர்யத்வத்தையும், பரமபதப்ரதத்வத்தையும், அநுகூலவிரோதிநிரஸகத்வத்தையும், அநந்யப்ரயோஜநஸுலபதையையும், ஸம்ஸாரநிவர்த்தகத்வத்தையும், காரணத்வத்தையும், ஸ்ரிய:பதித்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்ப்ரகாரவிஶிஷ்டனைக்கொண்டு ஆஶ்ரயணஸ்தலத்திலே யடிமைகொள்வதாக நிற்கிற கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையும் அநுஸந்தித்து, அத்யந்தஹ்ருஷ்டராய், "பக்திபரராயும் ப்ரபத்திபரராயும் உக்திபரராயுங்கொண்டு அவனை யாஶ்ரயித்தும் அநுபவித்தும் அவன் திருவடிகளிலே கைங்கர்யம் பண்ணியும், நிவ்ருத்தஸாம்ஸாரிகஸகலக்லேஶராய்க் கொண்டு வர்த்தியுங்கோள்" என்று, அவனுடைய கிஞ்சித்கார ப்ரதிஸம்பந்தித்வத்தால்வந்த பலரூபத்தை ப்ரதிபாதித்து நிகமிக்கிறார்.

இ.—பத்தாந் திருவாய்மொழியில், அறுக்கும்வினையிலே "அவனைப் பெறவேணும்" என்றும் "பெறும் நாள் என்று?" என்றும் மநோரதித்தார். மநோரதித்த அநந்தரம் வரக்காணாமையாலே மல்லிகைகமழ்தென்றலிலே மிகவும் நோவுபட்ட இவர்க்கு இவர் து:கமெல்லாம் தீரும்படி திருக்கண்ணபுரத்திலே நின்றருளினபடியைக் காட்டியருளி "உம்மைப்பெறுகைக்கு மநோரதமும் இழவும் நம்மதன்றோ" என்று ஸமாதாநம் பண்ண, "என் அபேக்ஷிதம்ஸித்திக்கும் நாள் என்று?" என்று இவர்கேட்க, "ஶரீராவஸாநத்திலே பெறுகக் கடவது" என்றருளிச்செய்ய, "நமக்குஇனி பேற்றுக்குத் தட்டில்லை" என்று ஹ்ருஷ்டராய், "ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஸர்வஸமாஶ்ரயணீயனைக்கொண்டு திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளி நின்றான். அவனை ஆஶ்ரயிக்கப் பாருங்கோள்"! என்று பரோபதேஶ ப்ரவ்ருத்தராகிறார். "ஆஶ்ரயிக்குமிடத்திலும் அவன் திருவடிகளிலே பக்தியைப் பண்ணுங்கோள்! அதுக்குப் பரிகரமில்லாதார் ப்ரபத்தி பண்ணுவது. அதுக்குத் தக்க வ்யவஸாயமில்லாதார் உக்திமாத்ரத்தையாகிலும் பண்ணுவது. அவ்வளவு உண்டாகவே அவன் விடான். ஆனபின்பு அவனையே ஆஶ்ரயிக்கப் பாருங்கோள்!" என்கிறார். இவர் தாம்இழந்து நோவுபடுதல், சிறிது ஆஶ்வாஸம் பெற்றாராகில் பரஹிதத்திலே ப்ரவ்ருத்தராதல் செய்யுமித்தனை. வேதாந்தங்களில் ப்ராரப்தகர்மாவஸாநம் பகவத்ப்ராப்திக்குக் காலமாகச் சொல்லாநிற்க இஶ்ஶரீராவஸாநத்தைக் காலமாக அருளிச்செய்த இது அவற்றோடு விரோதியாதோ? என்னில், உபாஸகரான பக்தியோகநிஷ்டர்க்கு ஸாதநஸமாப்தியிலே பெறவேண்டுகையாலே கர்மாவஸாநமாகக் கடவது. ப்ரபந்நனுக்குக் கேவல பகவத் ப்ரஸாதத்தாலே பேறாய்க் காலவிளம்பம் வேண்டாமையாலே ஶரீராவஸாநமாகக் கடவது. இத்திருவாய்மொழி தன்னிலும் பக்தியைவிதித்து அதில் அஶக்தர்க்கு ப்ரபத்தியை விதித்ததிறே. "தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே" என்கிற வாக்யம் ந்யாயாபேக்ஷமாகையாலே, இந்ந்யாயம் அதிலும் ஸஞ்சரிக்கும். ப்ரபந்நனுக்கு அவன்பக்கலிலே பரந்யாஸம் பண்ணினவனாகையாலே தன்பக்கல் விளம்பஹேதுவில்லை; அவன் ஸர்வஶக்தியாகையாலே அவன்பக்கல் விளம்பஹேதுவில்லை. ஆனபின்பு ப்ரபத்திபண்ணினவநந்தரம் பெறுதொழிகிறது என்? என்னில், - ப்ரபத்த்யநந்தரத்திலே ஶரீரத்தைவிடில் மரணபயத்தாலே, இஜ்ஜ்ஞாநத்துக்கு ஆள் கிடையாதென்றும், ஜ்ஞாநப் ப்ரவர்த்தநார்த்தமாக இவனிருக்க வேண்டுகையாலும், சரமதேஹத்தை ஈஶ்வரன் தான் விரும்புகையாலும் ஶரீராவஸாநத்தளவுமிருக்கப் பொறுக்கிறான். "பக

ஸஹாப்ருவஷாவா'' என்று பெரிய பெருமாள் திருமுகத்திலே ப்ரஸந்நமான பார்த்தி ருகிரியுடைய திவ்ய ஸந்நிதியிலே ஆகாசம் முகந்திடுகிறது. அன்றிக்கே, இவன் கைங்கர்யத்தாலே பிறக்கிறது என்று நினைப்பது — ஸ்வாபாவிகமான வ்யாபாரிகனோடே பிறப்பானென்னில், — இதில் உண்மையைப் பற்றத் தன்னை ஆசைப்படுகைக்காக ஸமஸ்தாத்மாக்களுக்கும் இதுதன்னிலே ஸமர்ப்பித்தன்னை யின் மரிக்கும் என்று. ஆக இப்படியைக்கிறது அருமையான கார்யமானமையால் ஒரு தட்டில்லை; ப்ரபத்திகாலத்தில் இவ்வதிகாரிக்குத் தான் ஸர்வரக்ஷகத்வம் ஸம்ப்ரதானம் பண்ணு தல் ஸர்வபரமாக பண்ணுதல் செய்யாதே ஸர்வஸ்வாமியாக வேணுமென்றும் இவ வளவே இவனுக்கு ஸம்பவிப்பது; ஆகையாலே, தத்தத்வாயத்தாலே அவ்வளவிலே மலராகக்கடவது என்னவுமாம்.

ஈடு.—அறக்கும் வினையோடே - அவனைப் பெறவேணுமென்று மநோரதமாய்ச் சென்றது; மநோரதவிஷயத்திலே அபேக்ஷித்தபடி கிடையாமையாலே மனம் க்லேசப்பட்டபடி சொல்லிற்று - * மல்லிகைகமழ்தென்றலில்; அதுதான் ராத்ரியிலானால் நோவுபட்டபடியிறே. இப்படி மநோரதித்துப் பெறாமையாலே நோவுபட்ட இவருடைய அவஸாதத்தை ஸஹஸங்கித்து ஸர்வேச்வரன் "நீரோ இப்படி மநோரதித்தும் அதுகிடை யாமல் க்லேசப்படுகிறீர்? உம்மைப்பெறவேணுமென்று மநோரதித்தோமும் நாமன்றோ? உம்மைக் கிடையாமையால் இழவுபட்டோமும் நாமன்றோ? உமக்கோ குறைவுண்டோ? * கலங்காப்பெருநகரம் கலவிருக்கை யாயிருக்க அவ்விடத்தை விட்டுத் திருக்கண்ணபுரத் திலே நாம் வந்து ஸந்நிதிபண்ணிற்றும் உமக்காகவன்றோ? ஸர்வாவஸரத்திலே உம்முடைய அபேக்ஷிதம் செய்யக்கடவோம்'' என்று ஸமாதாநம்பண்ண, ஸமாஹிதராய், இவரும் ஹ்ருஷ்டராகிறார்; அவன் "ஒன்றுசெய்யக்கடவோம்'' என்றால் அப்போதே பெற்றதாக நினைத்து ஹ்ருஷ்டராகலாம்படியிறே அவன்படியிருப்பது.

இப்படி ஹ்ருஷ்டராய், "அவன்படியிதுவானபின் ஸர்வ ஸமாஸ்ரயணீயனாய்க்கொண்டு திருக்கண்ணபுரத்திலே ஸந்நிதிபண்ணினான்: எல்லாரும் மோக்ஷ அவனையாஸ்ரயியுங்கோள்; ஆச்ரயிக்குமிடத்தில், அவன்திருவடிகளிலே பக்தி யைப்பண்ணுங்கோள்; பக்திக்குப் பரிகரமில்லாதார் ப்ரபத்தியைப்பண்ணுங்கோள்;

மாலைநண்ணி ப்ரவேசம். * அறக்கும்வினைதொடக்கி ஸக்ருத்ப்ரவ்ருத்திகொண்டு - அறக் கும்வினை இத்யாதி. மிகுந்த க்லேசமாக தென்னென்ன - அதுதான் இத்யாதி. இத ஆச்சர்ய நிர்வாஹத்திலே. நோவுபட்டபடியிறே என்றது - ப்ராப்திதசையன்றோ என்றபடி. இவரைப் பெறவேணுமென்னும் மநோரதமும் இவரைக் கிடையாமையால் வந்த இழவும் தன்னதென்னுமிடத்துக்கு நியாமகம் காட்டுகிறார் - கலங்காப்பெருநகரம் இத்யாதி. "மனையாகக்'' என்றதைப்பற்ற - ஸர்வாவஸரத்திலே என்றது. அவன் சொன்னதைக்கொண்டு ஹ்ருஷ்டராகக் கூடுமோவென்ன அவன் ஒன்றுசெய்ய இத்யாதி.

இப்படி ஹ்ருஷ்டராய்ப் பின்பு எல்லாரும் திருவடிகளைப்பற்றக்கடவீர்கள் என்று தமமு டைய பரமக்ருபையாலே அவர்களுக்கு மோக்ஷப்ராப்தி ஸாதநவிசேஷங்களை அருளிச்செய்கிறார் கிறார் - இப்படிஹ்ருஷ்டராய் இத்யாதி. அவன்படியிதுவானபின்பு என்றது - இப்படி ஸுலபனா னபின்பு என்றபடி. "தனதாளடைந்தார்க்கெல்லாம் - சரணமாகும்'' என்றதைப்பற்ற - ஸர்வ ஸமாஸ்ரயணீயனாய்க்கொண்டு என்றது. "தொழுதெழுமினதொண்டர்'' என்றதைப்பற்ற - எல்லாருமோக்ஷ அவனையாஸ்ரயியுங்கோள் என்றது. முதல் நாலுபாட்டையும்பற்ற - பக்தியைப் பண்ணுங்கோள் என்றது. "சரணமாகும்'' என்றுதொடக்கி மேல்நாலுபாட்டுக்களையும்பற்ற-ப்ரபத்தி

அதுக்கீடான அத்யவஸாயமில்லாதார் உக்திமாத்ரத்தையாகிலும் பண்ணுங்கோள்: அவ்வளவேகொண்டு அவன்தான் கைவிடான்; ஆனபின்பு, எல்லாருமொக்க அவனை யாஶ்ரயியுங்கோள்'' என்று பரோபதேசத்திலே ப்ரவ்ருத்தராகிறார். மோஹித்துக்கிடந்தாராகில் கிடக்குமித்தனைபோக்கி, உணர்ந்தாராகில் பிறர்க்கு ஹிதஞ்சொல்லியல்லது நிற்கமாட்டார்.

"'ஶரீராவஸாநத்திலே உம்முடைய அபேக்ஷிதம் செய்யக்கடவோம்' என்று ஈஶ்வரன்சொன்னவிடமும், அதுகேட்டு இவர் ஹ்ருஷ்டரானவிடமும்கூடாது; 'ப்ராரப்த கர்மாவஸாநத்திலே மோக்ஷமாகக்கடவது' என்றன்றோ வேதாந்தங்களில்வாஸனை'' என்னில்,— இத்திருவாய்மொழிதன்னிலே, "பக்தியைப்பண்ணுங்கோள்" என்றும், "அதுமாட்டாதார் ப்ரபத்தியைப்பண்ணுங்கோள்" என்றும் சொல்லிற்றிறே. அதில், உபாஸகனுகிற அதிகாரியைப்பற்றச்சொல்லுகிறது; இங்கு ப்ரபந்நனுக்குச் சொல்லுகிறது; "தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே" (தஸ்யதாவதேவசிரம்யாவந்நவிமோக்ஷ்யே) என்கிற வாக்யமன்றோ இவ்வர்த்தத்தைச்சொல்லுகிறது. "'இதுதான் ஶரீராவஸாநத்தைப் பற்றச்சொல்லுகிறதோ, கர்மாவஸாநத்தைப்பற்றச்சொல்லுகிறதோ?' என்று விசாரித்து, கர்மாவஸாநத்தைப்பற்றச்சொல்லுகிறதென்று ஸித்தாந்தித்ததில்லையோ? அத்தோடு விரோதியாதோ? இது'' என்னில்,—ந்யாயாநுக்ருஹீதமாயிறே வாக்யம்அர்த்த ப்ரத்யாயகமாவது: உபாஸகனுக்குத் தான்பற்றினவுபாயம்முற்றி பலிக்கவேண்டுகையாலே அவ்வளவும் ந்யாயம் நடக்கும். இவன், முதலடியிலே, "என்னுடைய ஸர்வ

யைப் பண்ணுங்கோள் என்றது. 'அத்யவஸாயமில்லாதார்' என்றவிடத்திலே, "விஶ்வாஸாயாஸஹீநா ந்யஸநஜநயோமஹாளாரவெகோவிஶேஷ:'' இத்யாத்யநுஸந்தேயம். "திருக் கண்ணபுரஞ்சொல்ல'' என்றத்தைப்பற்ற - உக்திமாத்ரத்தையாகிலும் என்றது. உக்திமாத்ரத்திலே பலமுண்டோ ? என்ன-அவ்வளவேகொண்டு இத்யாதி. தம்முடையவநுபவத்தைவிட்டுப் பரோபதேஶம் பண்ணுவானென்னென்ன - மோஹித்து இத்யாதி. ப்ராரப்த கர்மாவஸாநத்திலேயன்றோ மோக்ஷம்? ஶரீராவஸாநத்திலே கூடுமோவென்கிற ஶங்கையைப் பரிஹரிப்பதாக பூர்வபக்ஷாநுவாதம் - ஶரீராவஸாநத்திலே இத்யாதி. "போகேந த்விதரே க்ஷபயித்வா ஸம்பத்யதே" என்கிற ஸூத்ரத்தைப்பற்ற - வேதாந்தங்களில் வாஸனை என்றது. வாஸனையென்றது - சொல்லப்பட்டதென்றபடி. இதரே - பூர்வோத்தராகவ்யதிரிக்தே-ப்ராரப்தே புண்யபாபே, போகேந - அநுபவேந, க்ஷபயித்வா, அத-தத்பலபோக ஸமாப்த்யநந்தரம், ப்ரஹ்மஸம்பத்யதே. அபஶப்த: பக்ஷவ்யாவ்ருத்யர்த்த: இதி ஸூத்ரார்த்த:. அதில்உபாஸகனுகிறஅதிகாரியைப் பற்றச்சொல்லுகிறதென்றது (அவ்விருவரிலும் வைத்துக்கொண்டு) வேதாந்தங்களிலே, ப்ராரப்தகர்மாவஸாநத்திலே மோக்ஷமென்றது உபாஸகனை அதிகாரியைப்பற்றச் சொல்லுகிறதென்றபடி. இங்கு ப்ரபந்நனுக்குச் சொல்லுகிறதென்றது - இத்திருவாய்மொழியில் "ஶரீராவஸாநத்திலேமோக்ஷம்'' என்றது ப்ரபந்நனுக்குச்சொல்லுகிறதென்றபடி; ஆகையாலே விரோதமில்லையென்று கருத்து. அதில்என்றது - வேதாந்தத்திலென்றபடி. இங்கு என்றது - இத்திருவாய்மொழியிலென்றபடி. "உபாயபக்தி: ப்ராரப்தவ்யதிரிக்தாகநாஶிநீ। ஸாத்யபக்திஸ்து ஸா ஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ'' இத்யாத்யநுஸந்தேயம். ஸாத்யபக்தி: - ப்ரபத்திரித்யர்த்த:. ப்ரபந்நனுக்கு ஶரீராவஸாநத்திலே மோக்ஷமென்னுமதுக்கு ப்ரமாணமேதென்ன - தஸ்ய இத்யாதி. ஶாந்தோக்யே. இதுதான் -இந்தஶ்ருதிதான். ஸித்தாந்தித்ததில்லையோ, ஆகையாலே எம்பெருமானார் திவ்யஸூக்தியோடுவிரோதியாதோவென்னிலென்றபடி. இது-ஶரீராவஸாநத்திலே மோக்ஷமென்கிறவிது. ந்யாயாநுக்ருஹீதமாயிறே வாக்யம்அர்த்தப்ரத்யாயகமாவதென்றது-தர்க்கத்தோடேகூடினலிறே வாக்யம்அர்த்தநிஶ்சாயகமாவதென்றபடி. அந்தந்யாயத்தையுபபாதிக்கிறார்- உபாஸகனுக்குத் இத்யாதிவாச்யத்வயத்தாலே. முற்றி - பக்வமாய். அவ்வளவும் - கர்மாவஸாநத்தள

பரங்களுக்கும் கடவாய்த்தே" என்றுகொண்டு ஸர்வேச்வரன்பக்கலிலே ஸமர்ப்பணம் பண்ணினவனிறே; "இவன் தான் செய்கிறதொன்றுண்டாய் அது பக்வமாய்ப்பெற வேணும்" என்னும் விளம்பஹேதுவில்லை! இவன்தான் ஸர்வஸமர்ப்பணம் பண்ணின ஈச்வரனுக்கு அசக்தியுண்டாய் அது விளம்பஹேதுவாகிறதுமன்று. ஆக, இப்படி ப்ரமாணங்கள் காட்டினவாறே இவனுக்கு சரீராவஸாநத்திலே பேறுகைக்குத் தட்டில்லையிறே. இனித்தான், "ஸமவஸாஹுவஙாவாலஸமவஙவோவவா" (ஸகலத்துக்கும் பங்காஸாடகவந்தமவாபஸா) என்று - மாதவி ப்ரபத்திபண்ணின் அர்த்தம் பேற்றுமாகச் சொல்லாநின்றதிறே. முக்தலோபாக்யாநத்திலேயும் "ஸாதாரணமங்பண்ணுகிறவர்கள் ஸமஙங்நாமச்ரவணத்தாலே அநந்தரம் முக்தராவார்கள்" என்றதிறே; "அவதாரரஹஸ்யஜ்ஞாநமுடையவன் இச்சரீராவஸாநத்திலே பேறுக்கடவன்" என்றே சொல்லாநின்றதிறே; "த்யக்த்வாதேஹம் புநர்ஜந்ம நைதி" (தேஹத்தைவிட்டால் புநர்ஜந்மநைதி) "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" (ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்றும் சொல்லாநின்றதிறே. "ஆனால், ப்ரபத்திபண்ணினவந்தரத்திலே ஸமவத்ப்ராப்தியாக வேண்டாவோ? 'இவ்விரோதியைப்போக்கி உன்திருவடிகளைத் தரவேணும்'" என்றன்றோ இவன் அபேக்ஷிக்கிறது. பின்னையும், அநர்த்தமான சரீரத்தோடே யிருக்கிறவிருப்பு கர்மஃபலத்தாலேயாவதோ, ஈச்வரன்வைக்க விருக்கிறானுவதோ என்னில்? ஈச்வரன்வைக்கிறானாகில், அவனுக்குச் சிலதோஷம் ப்ரஸங்கிக்கும்; அவன்தான் நம்விரோதியை நமக்கேதுண்டாக்கி அப்படியே கொண்டுபோகிறேன்

வும். இவன்தான் ஸாத்யஸம்பண்ணினால் சரீராவஸாநத்திலே பேறுகிறதென்ன நிறுத்துகிறார் - இவன்தான் இத்யாதிவாக்யத்வயத்தாலே. 'ப்ரமாதுக்குறைந்தமில்லை' இத்யாதிவாக்யம் தொடங்கி, 'சரீராவஸாநத்திலே பேறுகைக்குத் தட்டில்லையிறே' என்னுமளவுக்கும் தாத்பர்யம்:—உபாஸகனுக்கு விளம்ப ஹேதுவுண்டாகையாலே ப்ராரப்தகர்மாவஸாநத்தளவும் நடக்கும்; ப்ரபந்நனுக்கு விளம்பஹேதுவில்லாமையாலே, இந்த சரீராவஸாநத்திலே மோக்ஷமாகக்கடவது; ஆகையாலே. இந்த ச்ருதி இந்த ப்ரமாதுக்குறைந்தையாக்கொண்டு அதிகாரிபேதேந தாத்பர்யபேதம் கொண்டு கடவதாகையாலே எம்பெருமானார் திவ்யஸூக்திக்கு விரோதமில்லையென்றபடி. ப்ரபந்நனுக்கு சரீராவஸாநத்திலே மோக்ஷம் என்னுமதுக்கு ப்ரமாணங்காட்டி, அதுக்குண்டான ப்ரமாணம் காட்டுகிறார் - இனித்தான் ஸமவந்தம் இத்யாதி. "ஸமஸ்தாயவிஸாவிதவஹவஙாவாவவநுபூ ஸவவஙாஸமவஙஙவோவவஸா" இதி மாதவியினை ஸ்ரீமதஸ்யாதத்ய தாத்பர்யம்.
ஸமவந்நாமச்ரவணத்தாலே என்றது-ப்ரபத்திக்கும் உபலக்ஷணம். அவதாரரஹஸ்யஜ்ஞாநமாவது ஈச்வரனுடையஜந்மம் கர்மநிபந்தமன்று, அநுக்ரஹநிபந்தமென்றறிகை. எங்ஙனே யென்னில் அஜாயமாநோ இத்யாதி. "ஜந்மகர்ம ச மே திவ்யம்" இத்யாதி, ச்லோகம். "தேஹாவஸாநத்திலே மோக்ஷம்" என்றதுக்கு, "த்யக்த்வா தேஹம்" இத்யாதிப்ரமாணம் தவிர ப்ரமாணத்வயம் - ஸ்வாதந்த்ர்யநிரபேக்ஷன் ஆம், ஸர்வபாபேப்யஃ என்றும். "த்யக்த்வாதேஹம்" என்றது - உபாஸகவிஷயமானாலும், ப்ரபந்நனுக்கும் கைமுத்யந்யாயத்தாலே ஸித்திக்கையாலே, சரீராவஸாநத்திலே மோக்ஷமென்கிற அர்த்தத்துக்கு ப்ரமாணமாகக் குறையில்லை. ஸங்காநுவாதம் - ஆனால் இத்யாதி. ஆனால் என்றது - இவனுக்கு விளம்பஹேதுவில்லையாகிலென்றபடி. ஆகிலும் இவனுக்கு ருசியில்லாமையாலே விளம்பிக்கிறதென்கிற ஸங்கையை விவக்ஷித்து, இவனுக்கு ருசியும் குறைந்ததில்லையென்கிறார் - இவ்விரோதியை இத்யாதி. பரிஹாரம் - ஈச்வரன் இத்யாதி. சில தோஷம் ப்ரஸங்கிக்கும் என்றது-ஸாமர்த்யநிநதனை பின்பும் இவன்துக்கத்தை யநுபவிக்கிறான் என்ன இருக்கானுகில் ஸர்வஜ்ஞத்வமாகுமென்றும் மென்றபடி. ஆகையாலே, ஈச்வரன் வைக்கிறானென்னப்போகாதென்றபடி. ஸங்காந்தராநுவாதம்.

என்று சொன்னத்தோடும் விரோதிக்கும்; ஆனபின்பு, கர்மவஶ்யரோபாதி ஸுகதுஃகாத்யநுபவம் இவனும் பண்ணியிருக்கையாலே கர்மத்தாலேயா மித்தனையன்றோ? இனி, கர்மம் நடையாடக்கடவதானால் அவ்வளவும் போகத்தட்டேன்? என்னில்,— அதுவேண்டா: அதிகாரிவிஶேஷத்தாலே. இவன் ப்ரபத்திபண்ணினவநந்தரம் முக்தனுமாகில் இதுதன்னை நச்சுப்பொய்கையோபாதியாக நினைத்தஞ்சி ஆட்பற்றுரு; இனிஇவனை இங்கே சிலநாளிருத்தவே, ஸ்ரீ பீஷ்மரையிட்டு நாட்டுக்கு வெளிச்சிறப்பைப்பண்ணிக் கொடுத்தாற்போலே, இவன் சிலர்க்கு உபதேசித்தும், இவனுடைய வ்ருத்தங்கண்டு திருந்துவாருமாய், இங்ஙனே சிலநன்மைகளுக்கும் உடலாயிருக்கும்; இனித்தான் "இவன் தன்னைத்தந்த ஶரீரமன்றோ" என்று இச்சரமஶரீரத்தை ஈஶ்வரன் தானுகஉபேக்ஷிக்கவும்மாட்டான். இவன்தான் ப்ரபத்திபண்ணுகிற ஸமயத்திலே "இப்போதே விரோதி போய் உன்திருவடிகளைப்பெறவேணும்" என்னும் த்வரையும் இவனுக்குண்டாக ஸம்பாவனையில்லை; முகம் பழகினதாகையாலே "இத்தைவிட" என்றால் கடுக இசையான்; இனியொரு ஶரீரபரிக்ரஹம்பண்ணுதல் கர்பவாஸம்பண்ணுதல் செய்யாதொழியவேணுமென்னுமளவாய்த்து, இவனுக்குஉண்டாகிலுள்ளது; ஆகையாலே தத்க்ரதுந்யாயத்தாலே அப்படியே பேறாயிருக்கும்; இவனுடைய நினைவையும்பற்ற, "இவன்தான் இதிலே சாபலம்பண்ணியிருந்தானுகில் நாலுநாளிருந்திடுவோனுக்கு" என்றிருக்கும் ஈஶ்வரன். "ஆனால், இங்கிருக்கிறநாலுநாளும் ஆதிவ்யாதிகளுக்கு இடங்கொடாதபடி அல்லாதாரில் வ்யாவ்ருத்தி தோற்ற இவனை ஸுகோத்தரனுக வையாதொழிவானேன்? நாட்டாரோபாதி ஒன்றையிழந்தபோதாக ஶோகித்தும் ஒன்றினுடைய லாபமுண்டானபோது ஹ்ருஷ்டனுமாற்போலேயிருந்தும் போருமபடிக்கடாகவைக்கிறதேன்?" என்னில்; இவன்தான் "இவ்விரோதியைப்போக்கி யுன்னைத்தரவேணும்" என்றே யபேக்ஷித்தது; இதுதான் தண்ணி

இனி, கர்மம் இத்யாதி. அவ்வளவும் - ப்ராரப்தகர்மாவஸாநத்தளவும். பரிஹாரம் - அதுவேண்டா இத்யாதி. ஆர்த்தப்ரபந்நனென்றும் த்ருப்தப்ரபந்நனென்றும் இரண்டுவகையாக விவக்ஷித்து, ஆர்த்தனை வைக்கைக்கு மூன்றுஹேதுவும் த்ருப்தனைவைக்கைக்கு ஒரு ஹேதுவுமாய் நாலுஹேதுவருளிச்செய்கிறுர் - இவன் ப்ரபத்திபண்ணின இத்யாதி. நச்சுப்பொய்கை - விஷஹ்ரதம். 'சரமஶரீரத்தை ஈஶ்வரன்தானுக உபேக்ஷிக்கமாட்டான்' என்கிறவிடத்திலே, † "ஸம்யாம்வ்யாமஹே ஸம்ஜயே ப்ரஹ்மணேஷ: । ஈஶேதகஸிஞ்சதஜீணபுஶயாநெ । தெநம்ஜஹாத்ருஹஸ்தவஸ்ஜிவேஷ்டுஷ" என்கிற ஶ்ருதியை ப்ரமாணமாக ப்ரஸாதிப்பர். கீழ், ஆர்த்தவிஷயமாக ஹேதுத்ரயம் அருளிச்செய்து, த்ருப்த விஷயமாக ஒருஹேது - இவன்தான் ப்ரபத்தி இத்யாதி, நாலுநாளிருந்திடுவோனுக்குஎன்றிருக்கும்ஈஶ்வரன் என்னுமளவும், ஸம்பாவனையில்லாமையைக் காட்டுகிறுர் - முகம்பழகின இத்யாதி. ஆனாலிவனெதுக்கிசையுமென்ன-இனியொரு இத்யாதி. கர்பவாஸமின்றிக்கே ப்ருதுசக்ரவர்த்தி முதலானுர்க்கு ஶரீரபரிக்ரஹமுண்டாகையாலே இனியொரு ஶரீரபரிக்ரஹம்பண்ணுதல் கர்ப்பவாஸம்பண்ணுதல் என்று விகல்பித்தருளிச்செய்கிறுர். தத்க்ரதுந்யாயமாவது - இவன் யாதொருபடி ஸங்கல்பித்தான், அப்படியே ஃபலிக்கை. கீழுக்தமான ஹேதுத்ரயத்தையும் ஸமுச்சித்ய வருளிச்செய்கிறுர் - இவனுடைய இத்யாதி. 'நினைவையும்' என்ற சகாரம்-கீழில் ஹேதுத்ரயத்தையும் ஸமுச்சயிக்கிறது. அதாவது - "இவனுடையநினைவையும்பற்ற" என்கையாலே கீழ்ச்சொன்ன மூன்றுஹேதுக்களோடே நினைவுமொருஹேதுவென்றபடி. ஶங்காந்தரம் - ஆனால் இத்யாதி. இவனை இஶ்ஶரீரத்தோடே யிருக்கிறநாள் ஸுகோத்தரமாக்கி வையாமைக்கு இரண்டுஹேது அருளிச்செய்யாநின்றுகொண்டு, இப்படி வைக்கிறதும் இவனுடைய ஹிதார்த்தமென்கிறுர் - இவன்தான் இவ்விரோதியை இத்யாதி, 'இருந்தபடியிருக்கிறுனென்றிருக்கும்' என்னுமள

---

† யஜுர், ஆருணம், 3,14,4.

தென்றறியாதிற்கச்செய்தேயும் விடமாட்டாதிருக்கிறவன், இதிலே ஸாவோத்ஸாஹமாக்கி வைக்குமன்று, "இதுதானே நன்றாயிருந்ததாகில் இன்னம் சிலநாள் இதுதானே கடவர்த்தித்திடுகே" என்றிருக்குமிறே; இவனுடைய இச்சைக்கீடாக வைக்குமன்று இன்னமும் இந்த சரீரத்திலே யிவனுக்கு ருசியுண்டாகவுங்கூடுமே; ஆகையாலே, இவனுடையது [illegible] "இவனிருந்தபடியிருக்கிறான்" என்றிருக்கும். ஆகையாலே, முதற்பதின இச் சரீரம் தன்னடையேகழிந்து இனிபோக [illegible] இவனுக்கு ருசிபிறப்பதற்கு முன்னே, ஈச்வரனுக்குக் காரியஞ்செய்து தலைக்கட்டவாயிருக்கும். முதற்பதினது தன்னடையே கழிந்துகொடுநிற்கும்; மேல்வரப்புகுகிறது அறியாமையாலே அதில் ருசியில்லை. "இதுதான் பொல்லாது" என்று போலியாக அறிந்தும் வைக்குமே. இவன் முதலிலே "இத்தைத்தவிர்த்துத்தரவேணும்" என்று ஒருவார்த்தை சொல்லிவைக்கையாலே, அவனுக்கு ப்ரதார்த்தம் செய்தானாகவும் வேண்டாவிறே. இனி சாமக்ஷணமாகிலே * காலக்ஷேபமான ஸங்கல்பமாயிருக்குமிறே. ஆகையாலே முதற்சொன்ன வார்த்தையைக்கொண்டு, இவன் விலக்கமாட்டாதவளவிலே ஈச்வரன்காரியஞ்செய்து தலைக்கட்டும். "அசித்கல்பனாய்க்கிடக்கிறவன் தலையிலே ஒருதேவையிடேன், நானே சிந்திக்கக்கடவேன்" என்று சொல்லிவைத்தானிறே. "இஸ்ஸ்லோகத்வயமும் எம்பெருமானுடைய ஸர்வஸ்வம்" என்றுசொல்லக் கடவதிறே. "வ்ருதி தச ஜவலி" (ஸ்ரீவைஷ்ணவ [illegible]) * நின்றவாநில்லாநெஞ்சம் முதலானதிலே நிற்பது. பட்டிதின்றுதிரியும் பசுவுடையவனுக்கு ஒன்றில் ப்ரவர்த்திக்கவொண்ணாதிறே; நெஞ்சைக்கொண்டு ப்ரவர்த்திக்கவேணுமிறே ப்ரயோஜனம்பெறும்போது; "தவ [illegible]

வும். ஸாவோத்ஸாஹமாகவைக்கில் இச்சரீரத்தோடே இவனிருக்கவேணுமென்கிற [illegible] சரீராந்தரங்களையும் அபேக்ஷிக்குமென்கிறார் - இவனுடைய இச்சைக்கீடாக இத்யாதி. ஆகையாலே, கீழ்ச்சொன்ன ஹேதுத்வயத்தாலே ஸாவோத்ஸாஹமாக வையாமைக்கு [illegible] அருளிச்செய்து ஈச்வரனுக்கும் காரியஞ்செய்யவாயிருக்குமென்கிறார் - ஆகையாலே முதற்பதின இத்யாதி. ஆகையாலே - கீழ்ச்சொன்ன ஹேதுத்வயமுமாக ஸாவோத்ஸாஹமாக வையாமையாலே என்றபடி. கழிந்துகொடுநிற்கும்படியையும் [illegible] - முதற்பதினது இத்யாதி [illegible] தாலே. ஹேத்வந்தரம் - இதுதான் இத்யாதி. போலியாக அறிந்தும் வைக்குமே - [illegible] யத்தாலும் ஈச்வரனுக்குக் காரியஞ்செய்து தலைக்கட்டவேண்டுமென்று [illegible]. இவன் [illegible] சரீரவஸானத்திலே காரியஞ்செய்யும்போது அவனுக்கு ப்ரதார்த்தம் [illegible]? என்ன - இவன் முதலிலே இத்யாதி. ஸத்வம் தலையெடுத்தபோது "இத்தைத்தவிர்த்துத்தரவேணும்" என்று முதலிலே சொன்னானேயாகிலும், சாமக்ஷணமாகிலே "வேண்டாம்" என்று விலக்கிலுங் காரியம் செய்யமாட்டானோ? என்ன - இனிசாம இத்யாதி. "இவன்முதலிலே" இத்யாதியோடத்தை [illegible] - ஆகையாலே முதற்சொன்ன இத்யாதி. காலக்ஷேபமான ஸங்கல்பமென்ன [illegible] என்ன - அசித்கல்பனாய் இத்யாதி. அப்படி, ஆனால் அத்தில் [illegible] வேண்டாவோ? என்ன - அசித்கல்பனாய் இத்யாதி என்னவுமாம். ஸ்லோகத்வயத்துக்கும் அர்த்தம் அருளிச்செய்ததாக, இதின் [illegible] யையருளிச்செய்கிறார் - எம்பெருமானுடைய இத்யாதி. "[illegible] - [illegible]" [illegible]. நின்றவா நில்லா இத்யாதி. திருமொழி - நின்றவா நில்லா நெஞ்சினையுடையேன் - ஒருவிஷயத்திலும் அரைக்ஷணம் கால்தாழாத நெஞ்சையுடையேனென்றபடி. "[illegible]" இத்யாதி பட்டி. நிற்கவேணு மென்னும் நிர்ப்பந்தமேதென்ன - பட்டிதின்று இத்யாதி. பட்டிதின்று திரியும் பசுவுடையவனுக்கு என்றது - ஸ்வேச்சாஸஞ்சாரம் பண்ணிக்கொண்டு திரிகிறபசுப்போலே, ஒருவிஷயத்திலே அரைக்ஷணம் நில்லாத நெஞ்சையுடையவனுக்கென்றபடி. நெஞ்சுதான் வேணுமோவென்ன - நெஞ்சைக்கொண்டு இத்யாதி. நெஞ்சை நியமிக்கவருந்தவோ? என்ன - தஸ்யாஹம் இத்யாதி.

ஹம் நிக்³ரஹம் மந்யே வாயோரிவ ஸுது³ஷ்கரம்" (தஸ்யாஹம் நிக்ரஹம்மந்யே வாயோரிவஸுதுஷ்கரம்)என்றானிறே.நாட்டார் ஊர்வஶீ ஸாலோக்யத்துக்கு ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணாநிற்க, அவள்தான்வந்து உபஸ்த்தாநம்பண்ணாநிற்க, "நீ என்தாயன்றோ?" என்று நமஸ்கரித்துக் கடக்கநிற்கவல்ல விரக்தனிறே இவ்வார்த்தை சொல்லுகிறான். "ஸுஸ்வஸ்த்தே² ஶரீரே" (ஸுஸ்வஸ்த்தேஶரீரே) - பரிணமித்ரவ்யமான ஶரீரமும் ஒருநிலையிலேநிற்பது. "தா⁴துஸாம்யே ஸ்த்தி²தே" (தாதுஸாம்யேஸ்த்திதே) - அதுக்குஉறுப்பாக தாதுக்களும் ஒன்றுமுடங்கி ஒன்றுநிமிருகையன்றிக்கே இவையுமெல்லாம் ஸமமாய், ஶரீரத்திலே ஒருலாகவம்பிறந்து, ஸத்த்வம் தலையெடுத்தபோதாக நம்மை யாவனொருவன் ஸ்மரிக்கிறான்-"நாம் ஆர்? ஶரீரமாகிறஇது அசித்தாயிருந்தது: தேஹாதிரிக்தனாயிருப்பானொர் ஆத்மாவுளன்: அவன்தான் ஈஶ்வரனுக்கு ஶேஷபூதன்; அவனைப்பெறுகை இவ்வாத்மாவுக்கு மோக்ஷமாகிறது" என்று ஸ்மரித்து. "விஶ்வரூபஞ்ச மாம்" (விஶ்வரூபஞ்சமாம்) - குடற்றுடக்காலே முட்பாய்ந்தால் வரும்வ்யஸநம் ஆத்மாவதாமாபோலே, இவற்றுக்குவந்ததொன்று தனக்குவந்ததாம்படி எல்லாவற்றையும் ஶரீரமாகவுடையனாயிருக்கிற என்னை. "அஜம்"(அஜம்)-இவனைப்போலே ஜந்மநிப³ந்த⁴நமான கலக்கமின்றிக்கே யிருக்கையிறே. "ததஸ்தம்" (ததஸ்தம்) இத்யாதி:—நடையாடித்திரியுமன்று இவனுக்கும் உண்டிறே இந்நினைவு; அசித்கல்பனாய்க் கிடந்தவன்றும் "இவன் நினைத்திலன்" என்று தேவையிடாதே நான்அவனை யெப்போதும் நினைத்தபடியே நிற்பன்."மத்³ப⁴க்தம்"(மத்பக்தம்)-அடைகோடு பாழ்போகமேவனையோ அவன்பற்றிற்று? நெடுநாள் பச்சையிடுவித்துக்கொண்டு கார்யகாலத்திலே வந்தவாறே பச்சையிடாதநாளை எண்ணியகற்றுமவனையோபற்றிற்று? "நயாமி பரமாம் க³திம்" (நயாமிபரமாம்கதிம்) - கள்வன்கொல்லிற் பிராட்டியை அத்தவாளத்தலையையிட்டு மறைத்துக்கொடுபோனாற்போலே, தானே கையைப்பிடித்துக் கொடுபோ

ஸ்ரீகீதாயாம், "அஸம்ஶயம் மஹாபா³ஹோ மநோ து³ர்நிக்³ரஹம் சலம்" இதி பூர்வார்த்தம். ஸ்ரீவராஹபுராணே, "ஸ்த்தி²தே மநஸி" இத்யாதி. இவன்சொன்னால் ப்ரமாணமாமோவென்ன - நாட்டார் இத்யாதி. "புரூரவா என்கிற ராஜா உர்வஶீ ஸாலோக்யத்துக்கு ஸாதநாநுஷ்ட்டாநம்பண்ணிப் பெற்றான்" என்கிற கதையையநுஸந்திப்பது. 'நீ என் தாயன்றோ' என்கிறவிடத்தில், "அர்க்⁴யேஷ்வேவாப்ஸரஶ்ரேஷ்டா² ஸஜாதா விஶ்வமோஹிநீ। ப்ராஹ விஸ்மிதஸந்த்ரஸ்தா ஶாப³ஸம்ப்⁴ரமகாதரா" என்கிறது அநுஸந்தேயம். தாதுக்கள் - வாதபித்த ஶ்லேஷ்மங்கள். ஸ்மரணப்ரகாரத்தைக் காட்டுகிறார் - நாம்ஆர் இத்யாதி. "விஶ்வரூபஞ்ச மாமஜம்" என்றது - நாராயணஶப்தார்த்தம். "விஶ்வரூபம் - மாம்" என்று ஸ்வாமித்வ ஸௌலப்யங்களைச் சொன்னது, வாத்ஸல்ய ஸௌஶீல்யங்களுக்கும் உபலக்ஷணம். "அஜம்" என்று ஜந்மநிபந்தநமான கலக்கமில்லாமையைச் சொல்லுகையாலே, ஜ்ஞாநஶக்த்யாதிகளைச் சொல்லுகிறது. பிறக்கை சுட்டியிறே சேதநனுக்கு ஜ்ஞாநாதிகள் ஒளி மழுங்குகிறது. "தத:" என்றது - ஹேது பரம். "காஷ்டபாஷாணஸந்நிபம் - ம்ரியமாணம் - அஹம் ஸ்மராமி" என்றதுக்கர்த்தம் - நடையாடி இத்யாதிவாக்யத்வயத்தாலே. இந்நினைவு - "ஸ்மராமி" என்கிற நினைவு. "ஸ்மராமி" என்கிற வர்த்தமாநார்த்தம் - எப்போதும் நினைத்தபடியே நிற்பன் என்றது. "மத்" என்றதுக்கு பாவம் - அடை இத்யாதி. அடைகோடுபாழ்போகடுகை - ரக்ஷிக்கிறோமென்று கைக்கொண்டு கைவிடுகை. விவரணம் - நெடுநாள் இத்யாதி. "நயாமி" என்றதுக்கர்த்தம் - கள்வன் இத்யாதி. அத்தவாளத்தலை - முன்தானையிற்றலை.

மாய்த்து. ஆதிவாஹிகரை வரக்காட்டியாதல் பெரியதிருவடியை வரக்காட்டியாதல் கொடு போகையன்றிக்கே, ஆதிவாஹிகரில் ப்ரதாநனை தானே கொடுபோம்.

முதற் பாட்டு.

மாலைநண்ணித் தொழுதெழுமினோ வினைகெட
காலைமாலை கமலமலரிட்டு நீர்
வேலைமோதும் மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து
ஆலின்மேலால் அமர்ந்தான் அடியிணைகளே.

ஆ.—ஸர்வ ஸமாஶ்ரயணீயனாய்க்கொண்டு திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளியிருந்த எம்பெருமானை ரக்ஷகனாகப்பற்றி அவன் திருவடிகளைக் கமலமலரிட்டு நீர் வினைகெடத் தொழுதெழுமின்; இதுக்கொரு காலநியமாபேக்ஷையில்லையென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், 'உங்களுடைய ஸகலது:க்கங்களும் போம்படி திருக்கண்ணபுரத்திலே நின்றருளின எம்பெருமானை ஆஶ்ரயியுங்கோள்!' என்று இத்திருவாய்மொழியிற் சொல்லுகிற ஆஶ்ரயணத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

[மாலை நண்ணி] - ஸ்நேஹயுக்தராய். [காலைமாலை கமலமலர்] - ஸர்வகாலங்களுக்கும் ஸர்வபுஷ்பங்களுக்கும் உபலக்ஷணம். [ஆலின் மேலென்று மேலுக்கு] - ஆஶ்ரிதருடைய அபேக்ஷிதங்களை துர்க்கடங்களேயாகிலும் கடிப்பிக்கவல்லவன் திருவடிகளை.

ப.—முதற்பாட்டில், வடதளஶாயியான மஹோபகாரகன் திருவடிகளிலே ப்ரேமயுக்தராய்க்கொண்டு ஸர்வகாலங்களிலும் கைங்கர்யம்பண்ணுங்கோளென்று இத்திருவாய்மொழிக்கு ப்ரதிபாத்யமான அர்த்தத்தை ஸங்க்ரஹித்து அருளிச்செய்கிறார்.

வேலை - திரைக்கிளப்பத்தையுடைய ஸமுத்ரத்தாலே, மோதும் - மோதப்பட்ட, மதிள் சூழ் - மதிள் சூழ்ந்த, திருக்கண்ணபுரத்து - திருக்கண்ணபுரத்திலே வர்த்திக்குமவனாய், ஆலின்மேலால்அமர்ந்தான் அடியிணைகள் - வடதளஶாயியாய்க்கொண்டு ஜகத்தைரக்ஷித்த அகடிதகடநா ஸமர்த்தனானவன் திருவடிகளை யுத்தேஶித்து, மாலை - ப்ரேமபாரவஶ்யத்தை, நண்ணி - பெற்றுக்கொண்டு, காலைமாலை - அஹோராத்ரவிபாகமற, (ஆதாராநுரூபமாக), கமலமலர் - விலக்ஷணமான தாமரைப்பூக்களை, இட்டு - பணிமாறி, நீர் - நீங்கள், வினை - உங்கள் அநுபவாலாப க்லேஶம், கெட - தீரும்படி, தொழுது எழுமினோ - ‘‘வைஜ்ஞவாடா:’’ என்கிறபடியே ஶேஷத்வாநுரூபவ்ருத்தியைப்பண்ணி உஜ்ஜீவியுங்கோள். மேலாலென்றது - ஆலின்மேலென்றபடி. ஆல் - அசையாய்க்கிடக்கிறது.

இ.—முதற்பாட்டில், இத்திருவாய்மொழியிற் சொல்லுகிற ஆஶ்ரயணத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

ஏதத்வ்யாவர்த்யம்-ஆதிவாஹிகரை இத்யாதி. ஆதிவாஹிகரில் ப்ரதாநனையென்றது - ‘‘ஸாக்ஷாத்ர நாமஹ்ருஷீக:’’ என்றத்தைக் கடாக்ஷித்து. ஹார்த்தன் - ஸர்வேஶ்வரன்.

[மாலைநண்ணித் தொழுதெழுமினோ] - ஸர்வேஶ்வரன் திருவடிகளைக்கிட்டி ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோள். "மால்" என்று ஸ்நேஹகார்யமான வ்யாமோஹமாய், மாலையுற்றேனெனவுமாம்; ஐக்தியுக்தராய் என்றபடி. "தொழுதெழு" என்கிற தம்முடைய வாஸனையாலே, "தொழுதெழுமினோ" என்கிறார். [வினைகெட] - ஐஶ்வர்யப்ராப்தி விரோதியான கர்மமென்னுதல்; மல்லிகை கமழ்தென்றலில் விரஹ க்லேஶம் தீரும்படியாக என்னுதல். [காலைமாலை] - ஆஶ்ரயணத்துக்குக் காலநியதி இல்லையென்கிறது; "ஆகிநடுவந்திவாய்" என்கிறபடியே ஸர்வகாலத்துக்கும் உபலக்ஷணம். [கமலமலரிட்டு] - ஸர்வபுஷ்பங்களுக்கும் உபலக்ஷணம். நீங்கள் விரும்பின ப்ராக்ருத த்ரவ்யமே அமையுமென்கை. [நீர்] — அதிகாரிகளும் முன்புத்தை நீங்களேயமையும். [வேலையித்யாதி] - ஸமுத்ரம் அணித்தாகையாலே திரைகள்வந்து மோதாநின்றுள்ள மதிளாலேசூழப்பட்ட திருக்கண்ணபுரத்திலே ப்ரமஹரமான தேஶமென்கை. [ஆலின்மேலால் அமர்ந்தான்]-ஸகலலோகங்களையும் வயிற்றிலேவைத்து ஒரு பவனை ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளினவன். உங்கள்விரோதி நிரஸநங்கள் ஊர் வெடங்களேயாகிலும் வடிப்பிக்கவல்லன் என்கை. அவன் அடியிணைகளை, இறைஞ்சுமின்.

ஈடு.—முதற்பாட்டு. இத்திருவாய்மொழியிற் சொல்லுகிற ஆஶ்ரயணத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

[மாலைநண்ணித்தொழுதெழுமினோ]-ஸர்வேஶ்வரன் திருவடிகளைக்கிட்டி யாஶ்ரயித்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோள். "மால்" என்று ஸ்நேஹகார்யமான வ்யாமோஹமாய், மாலையுற்றேன்னவுமாம்; ஐக்தியுக்தராயேன்றபடி. 'தொழுதெழுமினோ' என்கிறார், "தொழுதெழு" என்கிற தம்முடைய வாஸனையாலே. "அருளினன்" என்று ப்ரபத்தியைப்பற்றி இழிந்தவராகையாலே, தம்வாஸனை தோற்றச்சொல்லுகிறார். [எழுமினோ] - ஸர்வேஶ்வரன் இவ்வாத்மவர்க்கத்துக்கெல்லாம் ஶேஷியாய் அவனைக் குறித்து ஶேஷத்வாகாரம் எல்லார்க்கும் ஒத்திருக்கையாலே பலர்க்குமாகச் சொல்லுகிறார். [வினைகெட] - ஐஶ்வர்யப்ராப்தி விரோதிவர்க்க மென்னுதல்; * மல்லிகைகமழ் தென்றலில் விரஹக்லேசந் தீரும்

முதற்பாட்டு.—மாலை இத்யாதி. இத்திருவாய்மொழியிற் சொல்லுகிற ஆஶ்ரயணமாவது - உபாஸநமுகத்தாலும் ப்ரபத்திமுகத்தாலும் அவனையடைகை.

"ஆலின்மேலாலமர்ந்தானை - மாலினுடைய - அடியிணைகளை - நண்ணித் தொழுதெழுமினோ" என்றந்வயித்து, ப்ரபத்திபரமாக அர்த்தம் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. "மாலை" என்கிற ஐகாரம் அவ்யயம். "மாலைநண்ணி" என்றதுக்கு ஐக்திபரமாக அர்த்தாந்தரம் - மாலென்று இத்யாதி. ஸ்நேஹகார்யமான வ்யாமோஹத்தை ஐக்தியென்கிறது, காரணே கார்யோபசாரம் பண்ணுகிறதென்றபடி. ஆயாஸ ஸாத்யஐக்தியை, "தொழுதெழுமினோ" என்று லகுவாகச் சொல்லுவானென்? என்ன - தொழுதெழுமினோ இத்யாதி. விவரணம் - அருளினன் இத்யாதி. அதாவது - "அருளினன்" என்று நிர்ஹேதுக ஐஶ்வர்யக்ருபை யொன்றையே யவலம்பித்து ஸர்வேஶ்வரனைப்பற்றின வாஸனை தோற்ற வென்றபடி. "எழுமினோ" என்கிற பஹுவசநார்த்தம் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. ஐக்திபரமானபோது, "வினை" என்றதுக்கர்த்தம் - ஐஶ்வர்யப்ராப்தி இத்யாதி. ப்ரபத்திபரமானபோது அர்த்தாந்தரம் - மல்லிகை இத்யாதி. அதவா, அர்த்தத்வயமும் ஐக்திபரயோஜனையிலேயாகவுமாம்; அப்போது, விரஹக்லேஶம் தீரும்படியென்றது ஐக்திமான்களுக்கு விரஹக்லேஶமில்லாதிருக்கச்செய்தேயும் தம்முடைய வாஸனையாலே யருளிச்செய்தாரென்றபடி. ஐக்திமானுக்கு, "ப்ராதஸ்ஸ்நாத்வா ஸந்த்யாம் உபாஸ்ய ஹ்ருதி ஸம்ஸ்மரந் । நாராயணமவாப்நோதி ஸந்த்யோபாஸக ஸாரதா:" என்று - காலையும் மாலையும் ஆஶ்ரயிக்கவேணும். ப்ரபத்திபரமான

படி யென்னுதல். [காலைமாலை] - ஆச்ரயணத்துக்குக் காலநியதி யில்லையென்கை. "ஊழி நடுவேந்திவாய்" என்கிறபடியே ஸர்வகாலத்துக்கும் உபலக்ஷணம். [கமலமலரிட்டு] - ஸர்வ புஷ்பங்களுக்கும் உபலக்ஷணம்; நீங்கள் விரும்பின [illegible] மென்கை. [நீர்] - அதிகாரிகளும் முன்புத்தை நீங்களே யாமைப். [வேலைமோதும்மதிள்] - ஸமுத்ரம் அணித்தாகையாலே திரைகள்வந்து மோதாநின்றுள்ள மதிளாலே சூழப்பட்டிருக்குமா திருக்கண்ணபுரத்திலே. ப்ராப்யமான தேசமென்கை. [ஆலின்மேலால் அமர்ந்தான்] - ஸகல லோகங்களையும் வயிற்றிலே வைத்து ஒரு பவனுரு ஆலந்தளிரின்மேலே கண்வளர்ந்தவன். உங்கள் விரோதிநிரஸநங்கள் [illegible] வொட்டிக்கவல்லவனென்கை. அவனடியிணைகளை, இறைஞ்சுமின். [ஆலின்மேலால் அமர்ந்தான்] - ஆல் நீரும், இடமும். நீரின்மேல் ஆலென்றுமாம்; ஆலின்மேலிடத்திலென்றுமாம்: † ஆல் - செய்யுளின்பம். (௧)

போது "காலைமாலை" என்றதுக்குக் கருத்தேதென்ன - ஆச்ரயணத்துக்கு இத்யாதி. அதிகாரிகளென்ன - அதிநம இத்யாதி. முதலும் ஈற்றும் முதலான ஸர்வகாலங்களிலு மென்றபடி. இரண்டாந்திருவந்தாதி எழுபத்துமூன்றாம்பாட்டு. "ஆச்ரயிப்பன" இத்யாதி. [illegible] என்கிற நிர்ப்பந்தமென்னென்ன - ஸர்வபுஷ்ப இத்யாதி; "கண்ணி ரெழுந்த" இத்யாதியுமுணர்த்தம். இத்தால் பாவம் - நீங்கள் இத்யாதி. வேலை - ஸமுத்ரம். திரைகள் மோதுமென்றது - அணித்தாதலித்தம். "வேலை மோதும்" என்று விசேஷித்ததற்கு பாவம் - ப்ராப்யமான இத்யாதி. இத்தால் - ஆச்ரயணீயஸ்தாநம் ஸூசிதம். பவனுரு-பவனுரு - உண்டாகாநிற்க, ஆலின்மேல் - ஆலந்தளிரின் மேலே. இது சொன்னதற்கு பாவம் - உங்கள் விரோதி இத்யாதி. அர்த்தாந்தரசமநத்துக்காக ப்ரதிகோபாதாநம் - ஆலின்மேல் இத்யாதி. ஆலின்மேல் - ஜலத்தின்மேலே, ஆல் அமர்ந்தான் - ஆலிலையிலே யமர்ந்தானென்னுதல்; "ஆல்" என்று - இடமாய், ஆலிலையின்மேலிடத்தே யமர்ந்தானென்னுதல் என்றர்த்தம். இவ்விடத்தே பெரியஜீயர் வ்யாக்யாநம்பண்ணாநிற்கச்செய்தே "ஆலென்று" ஜலத்தைச் சொல்லும்படியேதோ?" என்று விசாரியாநிற்க, ஈத்தானாடைசாதன் "ஆலக் கட்டி என்னக்கடவதே" என்ன, ஸ்ரீயருளிச்செய்தார். 'ஆல்' என்று ஜலத்தைச் சொல்லுமோ வென்ன அருளிச்செய்கிறார் - ஆல் செய்யுளின்பம் என்று. செய்யுளின்பம் - சாஸ்த்ரையுக்தமான பேச்சு : ஈண்டு வித்தப்பேச்சு, இசைச்சொல், வழக்குச்சொல், செய்யுட்சொல் என்று மூன்றுவகையாயிருக்குமிறே; அதில், இசைச்சொல்லாவது - தேசபாஷை; வழக்குச்சொல்லாவது - வ்யாவஹாரிகபாஷை; செய்யுட்சொல்லாவது - சாஸ்த்ரபாஷை என்று தமிழ்ச்செந்நூல் சொல்லுகிறது. "மால்" என்று ஸர்வேச்வரனென்றபக்ஷத்தில், 'வேலைமோதும்' என்று தொடங்கி 'அமர்ந்தானுடைய - மாலின்-அடியிணைகளை-நண்ணி - காலைமாலை கமலமலரிட்டு-நீர்-வினைகெட - தொழுதெழுமினோ' என்றந்வயம்; "மாலை" என்கிறவிடத்தில் ஐகாரம் அசைபடை. "மால்" என்று ஸந்த்யையான போது, 'நீர் - காலைமாலை கமலமலரிட்டு - வினைகெட - மாலைநண்ணித் தொழுதெழுமினோ - வேலைமோதும்' என்று தொடங்கி, 'அடியிணைகளை - கள்ளவிழும் மலரிட்டு நீரிறைஞ்சுமின்' என்றந்வயம்.(௧)

---

† ஆலின்மேல் என்பதே ஆலின்மேலிடத்து என்ற பொருளைக் காட்டுமாதலால், ஆலின் மேலால் என்று 'ஆல்' என்பதைச் சேர்த்துச்சொன்னது செய்யுளின்பத்திற்காக என்றபடி; ஆல் - அசை என்றவாறு. இவ்விடத்தில் அரும்பதத்திலுருப்பது யுக்தமாகத் தோன்றவில்லை. ப்ர க்ஷிப்தமாயிருக்கலாம்.

இரண்டாம் பாட்டு.

கள்ளவிழும்மலரிட்டு நீர்இறைஞ்சுமின்
நள்ளிசேரும்வயல்சூழ் கிடங்கின்புடை
வெள்ளியேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
உள்ளி நாளுந்தொழுதெழுமினோ தொண்டரே !

ஆ.—(கள்ளவிழும்.) - அவன்திருவடிகளைக் கள்ளவிழும் மலரிட்டு நீர் இறைஞ்சுமிடத்தில், அவற்றை நெஞ்சாலே நினைத்துக்கொண்டு நாளும் இறைஞ்சுமின் என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், 'சாபலமுடையார் அவன்திருவடிகளை ஸமாஶ்ரயிக்குமிடத்தில் அவனுக்குஎன் புகுருகிறதோ ? என்று ஸ்நேஹிகளுக்கு அஞ்சவேண்டாதபடி க்ஷேமமுடைத்தான திருக்கண்ணபுரத்தை அநுஸந்தித்து நிர்ப்பரராய் நீங்கள் நாள்தோறும் ஆஶ்ரயியுங்கோள் ? என்கிறார்.

[கள்ளவிழும் மலர்] - செவ்விப் பூ. [நள்ளியென்று தொடங்கி] - ஜல ஸம்ருத்தியாலே நள்ளிசேரும் வயல்சூழ்ந்த அகழின் அருகே நக்ஷத்ர பர்யந்தளவும் உயர்ந்திருக்கிற மதிள்சூழ்ந்த திருக்கண்ணபுரத்தை. வெள்ளியாலே செய்யப்பட்டுத் தகுதியான மதிளென்றுமாம்.

ப.—அநந்தரம், அவன் வர்த்திக்கிறதேசத்தை ஆராதித்து அதினுடைய க்ஷேமவத்தையை யநுஸந்தித்து ஸுகிகளாய் வர்த்திக்கப் பாருங்கோளென்கிறார்.

தொண்டர் - அநுபவசாபலமுடைய, நீர் - நீங்கள், கள் - மதுவை, அவிழும் - மலருகிற, மலர்இட்டு - பூக்களைக்கொண்டு, இறைஞ்சுமின் - ஆராதியுங்கோள் ; (போக்யஸம்ருத்தியாலே), நள்ளி - (க்ஷுத்ரமான) பெண்நண்டுகள் அகப்பட, சேரும் - சேர்ந்துவர்த்திக்கிற, வயல் - வயல்களாலே, சூழ் - சூழப்பட்ட, கிடங்கின் - அகழினுடைய, புடை - பரிஸரத்திலே, வெள்ளி - வெள்ளியாலே, ஏய்ந்த - சமைந்த, மதிள் - மதிளாலே, சூழ் - சூழப்பட்ட, திருக்கண்ணபுரம் - திருக்கண்ணபுரத்தை, (ரக்ஷையுடையதேசமென்று), நாளும்உள்ளி - நித்யாநுஸந்தாநம்பண்ணி, தொழுதுஎழுமினோ - அநுபவஜநிதப்ரீதியாலே தொழுது கிளர்த்தியோடே அர்த்தியுங்கோள். 'இறைஞ்சுமின்' என்கிறவிடம், கீழில் * அடியிணைகளோடே யந்விதமாய், தேசபரமாகவுமாம். வெள்ளியேய்ந்தவென்று - சுக்ரபதத்தோடே சேர்ந்தவென்றுமாம். அன்றியே, வெள்ளி போன்ற நிறமுடைய மதிளென்றுமாம். நள்ளி - பெண்நண்டு.

இ.—இரண்டாம்பாட்டில், "இவ்விஷயத்துக்கு என்வருகிறதோ ?" என்று அஞ்சும்படி சாபலமுடையார் ஸுரக்ஷிதமான தேஶமென்று, நிர்பயராய் நிச்சயமாக ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

[கள்ளவிழும் இத்யாதி] - செவ்விப்பூவைக் கொண்டுஆஶ்ரயியுங்கோள். இவன் ப்ரேமத்தாலே செவ்வியை யுடைத்தாய் விலக்ஷணமான புஷ்பங்கள் தேடக்கடவன் ; "கள்ளார் துழாயும் கணவலரும்" என்கிறபடியே புஷ்பஜாதிமாத்ரமே அமையுமிறே, அவன்படியைப் பார்த்தால். [நள்ளியித்யாதி] - நள்ளியென்று, பெண்நண்டு. நீர்

மாறுத நிலங்களிலேயாய்த்து இவை வர்த்திப்பது. ஜலஸம்ருத்தியை யுடைத்தான வயலாலே சூழப்பட்ட அகழின் அருகே. [கிடந்து] - அசந். [வெள்ளியித்யாதி] - நக்ஷத்ர பதத்தளவும் ஓங்கின மதிளென்னுதல்; வெள்ளியாலே செய்யப்பட்ட மதிளென்னுதல். வெள்ளியாலே செய்த மதிளென்று நாம் ப்ரத்யக்ஷிக்கிறிலோமாகிலும், ப்ரேமாதிசயத்தாலே இவர்க்கு அது விலக்ஷணமாய்த் தோற்றக்கடவதிறே. [திருக்கண்ணபுரம் உள்ளி] - க்ஷேமத்தாலே நிர்பயமான தேசமென்று அநுஸந்தித்து இவ்விஷயத்திலே சபலராயிருப்பார் நித்யமாகத்தொழுது உஜ்ஜீவியுங்கோள். "அபர்வணி கடல் தீண்டலாகாது" என்னுமாபோலே இவ்விஷயத்தில் காலநியதி இல்லை.

ஈடு.—இரண்டாம்பாட்டு. "இவ்விஷயத்துக்குதென்வருகிறதோ?" என்ற அதிசாபலமுடையார், ஸுரக்ஷிதமான தேசமென்று நிர்பயராய் நித்யமாக ஆஸ்ரயியுங்கோளென்கிறார்.

[கள்ளவிழும் இத்யாதி] -செவ்விப் பூவைக்கொண்டு ஆஸ்ரயியுங்கோள். ஸ்நேஹசனாயிருப்பார், செவ்விப்பூத் தேடுவர்களிறே; "கள்ளார்துழாயும் கணவலரும்" என்கிறபடியே புஷ்பஜாதிமாத்ரமே யமையுமிறே, அவன்படியைப்பார்த்தால்- ஆக, த்ரவ்ய தாரதம்யம் பாரான், ஆஸ்ரயிக்குமவன் ப்ரேமத்தையே பார்க்குமத்தனை. ஸ்ரீபுருஷோத்தமமுடையானுக்கு ராஜபுத்ரன் சாத்தின செண்பகப்பூ வார்த்தையை ஸ்மரிப்பது. [நள்ளி இத்யாதி] - நள்ளியென்று பெண்நண்டு. நீர்மாறுதவிடங்களிலேயாய்த்து அவைவர்த்திப்பது. ஜலஸம்ருத்தியை யுடைத்தான வயலாலே சூழப்பட்ட அகழினருகே. [கிடந்து] - அசந். [வெள்ளியித்யாதி] - நக்ஷத்ரபதத்தளவும் ஓங்கின மதிளென்னுதல்; வெள்ளியாலே செய்யப்பட்ட † (தகுதியான) மதிளென்னுதல் ப்ரத்யக்ஷிக்கிறிலோமாகிலும் ப்ரேமாதிசயத்தாலே அதிவிலக்ஷணமாய்த் தோற்றுமிறே. [திருக்கண்ணபுரமுள்ளி] - ‡ க்ஷேமத்தாலே நிர்பயமான தேசமென்று அநுஸந்தித்து, இவ்விஷயத்திலே சபலராயிருப்பார், நித்யமாகத்தொழுது உஜ்ஜீவியுங்கோள். "அபர்வணி கடல் தீண்டலாகாது" என்னுமாபோலே இவ்விஷயத்தில் காலநியதியில்லை. (உ)

இரண்டாம்பாட்டு.—கள்ளவிழும் இத்யாதி. "தொண்டீர் - வெள்ளியேய்ந்த" என்று தொடங்கி "எழுமினோ" என்னுமளவும் வாக்யத்தைத் தொகை - இவ்விஷயத்துக்கு இத்யாதி.

"கள்ளவிழும்" என்றதுக்கு பாவம் - செவ்வி இத்யாதி. கள்ளவிழும்மலர் - தேன்சொரிகிற மலர். கீழே "ப்ராக்ருதத்ரவ்யமல்லாமை" என்றவைகளை. இங்கே "செவ்விப்பூ" என்று விசேஷிக்கிறதென்னென்ன - ஸ்நேஹிகளாய் இத்யாதி. அதாவது - பூவின் செவ்வியென்றபடி. இதனுக்குக் கர்ப்பந்தமில்லையோவென்ன - கள்ளார் இத்யாதி. திருவாய். கணவலர் - காக்கணம்பூ. த்ரவ்யாதிலலித்தவர்த்தமேதென்ன - ஆக இத்யாதி. ப்ரேமத்தையே பார்க்குமென்றதுக்கு உதாஹரணம் ஸ்ரீபுருஷோத்தமம் இத்யாதி. *ஒழிவில்காலத்திலே நுக்கதைப் பார்த்துக்கொள்வது. இதுசொன்னதுக்கு பாவம்- நீர்மாறுத இத்யாதி. "வெள்ளி" என்ற சக்ரனும், அத்தாலே - நக்ஷத்ரபதத்தைச் சொல்லுகிறது. ஏய்கை - அடைகையும், பண்ணுகையும். அப்படி நடக்குந் தோற்றவில்லையேயென்ன - ப்ரத்யக்ஷிக்கிறிலோம் இத்யாதி. "வெள்ளியேய்ந்தமதில்" என்றதைப்பற்ற க்ஷேமத்தாலே நிர்பயமான என்றது. "தொண்டீர் - நாளும்தொழுதெழுமினோ" என்றதுக்கு அர்த்தம் - இவ்விஷயத்திலே இத்யாதி- "நாளும்" என்ற விசேஷத்துக்கு பாவம் - அபர்வணி இத்யாதி. "ஸமுத்ரம் விஹாய ஸர்வேஷாம் ஸ்நாநம் ஸ்யாத் ஸர்வதா த்விஜாஸ்ஸமுத்ரே ஸ்நாநம் ஸர்வபர்வஸு" என்றதைப்பற்ற - அபர்வணி என்கிறது. 'கள்ளவிழும்மலரிட்டு நீர் இறைஞ்சுமின்' என்றதுக்குக் கீழ்ப்பாட்டோடே நகவும். (உ)

† குண்டலிதம் ப்ரக்ஷிப்தம். ‡ ப்ரேமத்தாலே என்று பாடாந்தரம்.

மூன்றாம் பாட்டு.

தொண்டர்! நுந்தம் துயர் போக நீர் ஏகமாய்
விண்டு வாடா மலரிட்டு நீர் இறைஞ்சுமின்
வண்டு பாடும் பொழில் சூழ் திருக்கண்ணபுரத்து
அண்டவாணன் அமரர் பெருமானையே.

ஆ.—(தொண்டர்.) - ஸர்வலோகேஶ்வரனாய், * அயர்வறுமமரர்கள் அதிபதியாயிருந்துவைத்து, ஸர்வஸமாஶ்ரயணீயனாகைக்காகத் திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளியிருந்த அவனுக்கு அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு அடிமைசெய்யுங்கோள் என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், சாபலமுடைய நீங்கள் துஃகம்கெட உபயவிபூதி யுக்தனாய் திருக்கண்ணபுரத்திலே நின்றருளினவனை அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

[வண்டுபாடும் பொழில்] - நிரதிஶயபோக்யமான திருச்சோலை. [அண்டவாணன்] - லீலாவிபூதியையுடையான். [அமரர்பெருமான்] - நித்யவிபூதியையுடையான்.

ப.—அநந்தரம், விலக்ஷணவிபூதியுக்தனாய்க்கொண்டு ஸுலபனான ஸர்வேஶ்வரனை ஏககண்டராயாராதியுங்கோள் என்கிறார்.

வண்டு - வண்டுகளானவை, பாடும் - களித்துப்பாடும், பொழில்-, சூழ் - சூழ்ந்த, திருக்கண்ணபுரத்து - திருக்கண்ணபுரத்திலே, அண்டவாணன் - பரமபதநிலயனாய், அமரர்பெருமானை - ஸூரிபோக்யனாய்க்கொண்டு நின்றவனை, தொண்டர் - ஸகலகைங்கர்யாபிநிவேஶயுக்தரானவர்களே! நுந்தம்துயர் - உங்களநுபவாலாபக்லேஶம், போக - தீரும்படி, நீர் - நீங்கள், ஏகம்ஆய் - ஏக ஹ்ருதயராய்க்கொண்டு, விண்டு - விகாஸோந்முகமாய், வாடா - செவ்வியழியாத, மலர்இட்டு - பூக்களையிட்டு, நீர்இறைஞ்சுமின் - உங்கள் ஶேஷத்வாநுரூபமாக ஆராதியுங்கோள்.

இ—மூன்றாம்பாட்டில், திருக்கண்ணபுரத்திலே நின்றருளினவன் உபயவிபூதியுக்தனாய்த்து; உங்கள் துஃகம் கெட அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

[தொண்டர்] - ஆஶாலேஶமுடைய நீங்களென்னுதல்; "கைங்கர்யமநுஷ்ட்ட்ரீ" என்றிருக்கும் நீங்களென்னுதல். [நுந்தம் துயர்போக] - துயரும் வ்யாவ்ருத்தமாயிறே யிருப்பது. விஷயப்ராவண்யத்தால்வந்த துஃகமென்னுதல், இறைஞ்சப்பெறாத தன்னுடைய விரஹத்தால்வந்த துஃகமென்னுதல். [நீர் ஏகமாய்] - நீங்கள் அநந்யப்ரயோஜநராய் என்னுதல், நீங்களெல்லாரும் ஒருமிடறாய் என்னுதல். 'தொண்டர்' என்கையாலே எல்லாரும் ஒருமிடறாகலாமிறே. [விண்டு வாடாமலர்] - அலரத் தொடங்கினவளவாய்க் கழியவலர்ந்து வாடாத பூ. செவ்விப்பூவைக்கொண்டு ஆஶ்ரயியுங்கோள் என்கை. [வண்டுபாடும் இத்யாதி] - வண்டுகள் மதுபாநமத்தமாய்க்கொண்டு பாடாநின்றுள்ள சோலைசூழ்ந்த தேஶம்; "வநதகஸ்ஸாதஹாயநாஸு" என்கிறபடியே நிரதிஶயபோக்யமான தேஶமென்கை. [திருக்கண்ணபுரத்து அண்டவாணன் அமரர்

பெருமானையே]-திருக்கண்ணபுரத்திலேவந்து எளியனாயிருக்கிறவன் உபயவிபூதிநாதனாயிருந்து. பரமபதநிலயனாய் அயர்வறுமமரர்கள் அதிபதியானவன் என்னுதல், லீலாவிபூதிக்கு நிர்வாஹகனுமாய் நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவன் என்னுதல். இங்கே ஆச்ரயித்தவிரோதியைப்போக்கி பூர்ணாநுபவம்பண்ண ஒரு தேசாந்தரமும் தேடிப் போகவேண்டா. நித்யஸூரிகளுக்கு இங்கேவந்து அநுபவிக்கும் [illegible]யிக்பமுண்டு-இங்கு; ஸம்ஸாரிகளுக்குக் கிட்டவொண்ணாத [illegible] பரமபதத்தில்.

ஈ௩.—மூன்றாம்பாட்டு. திருக்கண்ணபுரத்திலே நின்றருளினவன் உபயவிபூதிநாயகனாயிருந்து; உங்கள் து:கம்கெட அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஆச்ரயியுங்கோளென்கிறார்.

தோளுநான்குடைச் சுரிகுழல்கமலக்கண்கனிவாய்
காளமேகத்தையன்றி மற்றொன்றிலம்கதியே.

ஆ.—பண்டுசெய்த ஆஸ்ரித விரோதிநிரஸநரூபமான பராக்ரமங்களைத் தோற்றுவிக்கிற திருத்தோள்களையும், அழகாலே நிரவதிகபோக்யமாயிருந்த திருக்குழல்களையும், திருக்கண்களையும், திருப்பவளத்தையும், காளமேகம்போலேயிருந்த திருமேனியையுமுடையவனாய், திருநாட்டிற்காட்டிலும் திருமோகூரிலே அதிமாத்ரமாக ஸ்நேஹத்தைப் பண்ணி எழுந்தருளியிருந்த எம்பெருமானல்லது நமக்கு மற்றொரு ப்ராப்யமில்லை என்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், ப்ரதிகூல நிரஸநஸ்வபாவனான காளமேகத்தையொழிய வேறு நமக்கு ரக்ஷகரில்லையென்கிறார்.

[தாளதாமரை என்று தொடக்கி] - பூவின் பெருமையைப் பொறுக்கவல்ல தாளையுடைய தாமரைத் தடமெல்லாம் பூக்கும் வயலையுடைய திருமோகூரிலே நாள்தோறும் அத்யாதரத்தைப் பண்ணி ஆஸ்ரயப்ரயோஜநனைச் சேர்த்துநின்று.

ப.—முதற்பாட்டில், ப்ரதிகூலநிரஸந ஸ்வபாவனும் நிரதிஸயபோக்ய ஸமேதனான காளமேகத்தையொழிய நமக்கு ஸஹாயபதார்த்தமில்லையென்கிறார்.

தாள - தாளையுடைய, தாமரை - தாமரைகளானவை, தடம் - தடாகங்களை, அணி - அலங்கரியாநிற்கிற, வயல் - வயலையுடைய, திருமோகூர் - திருமோகூரிலே, நாளும்மேவி - நித்யவாஸம்பண்ணி, நன்கு - நன்றாய், அமர்ந்துநின்று - ஸ்வயம்ப்ரயோஜநமாம்படி உகப்போடே பொருந்திநிற்குமவனாய், அசுரரை - விரோதிகளான அஸுரர்களை, தகர்க்கும் - புடைத்துப்போகடிப்பதாய், (பரிவையாபரமாய் வழிபோக்கில் நிழ

"ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாஶஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே । பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்" இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே. (ங-எ-கச) "உன்றமர்" என்கிறவிடத்திலே அவனுக்கு மதிப்புத் தோற்றிற்றில்லையாகிலும், அவன்தமர்க்கு அதன்பாஷையாலே அவனுக்கு நிரபேக்ஷமாயித்ததென்று கருத்து. ஸக்தியுண்டாகில் போராதோ, மதிப்பும் வேணுமோவென்ன — ஸர்வஸக்தியாயிருக்கச் செய்தேயும் மதிப்பில்லாமையாலே மார்க்கண்டேயன் நிமித்தமாக விழப்புண்டானிறே" என்றருளிச்செய்வர். 'ப்ராப்தனுமிருக்குமிறே' என்றவாறாம் 'உன்றமேவன்தமர்க்கு' இத்யாதியை யனுஸந்தித்து, அநந்தரம் 'இன்னவாவக்கொன்றும்' இத்யாதியையனுஸந்தித்து, அநந்தரம் 'அசுர விரோதிகளைப்போக்கி' இத்யாதிவாக்யத்தையனுஸந்திப்பது. 'உன்றமேவ' இத்யாதிக்குப் ப்ரமாணம் ந8. திருமொழி எட்டாம்பத்துப்பத்தாந்திருமொழி எட்டாம்பாட்டு, "[illegible]" இத்யாதி.

லைச்செய்யும்படி கற்பகப்பனைபோலேயிருக்கிற), நான்குதோளுடை - நாலுதிருத்தோளையுமுடையனாய், சுரிகுழல்-(சுருள் வக்கிலஸம்ஸமமாய்த் துணைபாகைக்கு யோக்யமான) சுரிந்து தன்னுகுழலையுடையனாய், (பின்பேவருகிற என்னைப்புரிந்து கடாக்ஷிக்கைக்குக்கடான), கமலக்கண் - கமலம்போன்ற கண்ணையுடையனாய், (இளைப்பாறும்படி ஸ்மிதமாதுர்யமுடையனாய்), கனிவாய் - ஸ்நிக்தமான திருப்பவளத்தையுடையனாய், காளமேகத்தையன்றி - காளமேகம்போலே உதாரரூபத்தையுடையவனையொழிய, மற்றொன்றிலம் கதி - வேறாகமக்குத்துணையாக ஶரண்யமாயிருப்பதொருவஸ்துவை, இலம் - உடையோமல்லோம். தாமரையைத் தடம்அணிந்ததாகவுமாம்.

ஈடு.—முதற்பாட்டில், ப்ரதிகூல நிரஸநஶீலனான காளமேகத்தை யொழிய வேறு நமக்கு ரக்ஷகரில்லையென்கிறார். [தாளதாமரை] - தாளையுடைய தாமரை. மலைச்சுமந்தாற்போலே பூவின்பெருமையைப் பொறுக்கவல்ல தாளையுடைய தாமரை. சேற்றின் நன்மையாலே உரத்ததாளையுடைய தாமரை. "உரம்பெற்ற மலர்க்கமலம் உலகளந்த சேவடிபோல் உயர்ந்துகாட்ட" என்னக்கடவதிறே. [தடமணிவயல்] - பூவாலே அலங்கரிக்கப்பட்ட தடாகங்களையுடைய வயல். [திருமோகூர்]- ஊரில் போக்யதை வயலின் நிலத்திலே காணுமித்தனை. [நாளுமேவி] - நாள்தோறும் அத்யாதரத்தைப்பண்ணி. இவ்வூரில் விடுவதோறும் அவனுக்கு "ஸாந்த்ரூஹாதவ சேதிஸா" என்னும்படியாய்த்து இருப்பது. [நன்கமர்ந்து நின்று] - அநந்யப்ரயோஜநனாய்ச் சேர்ந்துநின்று. அவ்வூரில்வாஸம் ஒன்றுக்காகவன்றிக்கே ஸ்வயம்ப்ரயோஜநமாயிருக்கை. [அசுரரை இத்யாதி] - அஸுரரை அழியச்செய்யுமா போலே, என் விரோதிகளைத்தணிக்கவல்ல தோள்களையுடையவன். "ஸஜம்வாவீக்ஷ்யஸிம்ஹம்வாவ்யாவ்யாவதநீரஸ்தா தாஸாரபநிஸமர்ஸம்வாஸாஹ்ராநவேஷ்யஸம்ஸ்ரிதா" என்னக்கடவதிறே. விடாதாய்க் கிடந்தாலும் தொட்டகாதென்று தெரியுமாபோலே, தோள்களைக் கண்டபோதே விரோதிநிரஸநஶீலனென்று தோற்றியிருக்குமென்கை. இவன்பின்பே வழிபோமிடத்துத் திருக்குழலை ஒருகால் பேண, நெடுநாள் ஸம்ஸாரத்திலபட்ட க்லேஶமெல்லாம் தீரும்படியாய்த்திருப்பது. "கேஶவக்லேஶநாஶந:" [கமலக்கண்கனிவாய்] - ஸம்யமெல்லாம் தோற்றும்படியான நோக்கும் ஸ்மிதமுமிருக்கிறபடி. ஸம்ஸாரத்தில் வெப்பமுடைய நோக்கிலும் ஸ்மிதத்திலும்பட்ட நோவெல்லாம் ஆறும்படியிறே இருப்பது. "ஸத்காரதாரோஷதாநம்ஸ்ருஷணாருஹீதவேதஸாஷ்யவாயேயம் ஸாஷ்ரீகாக்ஷகாலேஷ்ஸீகதாஸ்ருதம்" [காளமேகத்தை] - வழி போம் போது முன்னே ஒருகாளமேகம் வர்ஷித்துக்கொண்டுபோகப் பின்னே போமாபோலே ஶ்ரமஹரமாயிறே இருப்பது. "லவஷ்மணம்" என்கிற விஷயமாகையாலே, அவ்வாசனைத்தைப்பருஷித்துக்கொண்டுபோமித்தனை. [அன்றிமற்றொன்றிலம்கதியே] - அவனையொழிய வேறுகதிஉடையோமல்லோம். வேறொருவரை ரக்ஷகமாக உடையோமல்லோம்.

சுஶு.—முதற்பாட்டு. மரணமான மஹாபயத்துக்கு விரோதிநிரஸநஶீலனான காளமேகமல்லது துணையில்லையென்று அவனைப்பற்றுகிறார்.

முதற்பாட்டு.—தாளதாமரை இத்யாதி, "அசுரரைத்தகர்க்கும்" என்றுதொடங்கி "மற்றொன்றிலம்கதியே" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - மரணமான இத்யாதி.

[தாள்தாமரை]-மலையைச் சுமந்தாற்போலே பூவின்பெருமையைப் பொறுக்க வல்ல தாளையுடைய தாமரையென்கை. "உரம்பெற்றமலர்க்கமலம் உலகளந்தசேவடிபோ லுயர்ந்துகாட்ட" என்னக்கடவதிறே. சேற்றின்நன்மையாலே உரத்த தாளையுடைய தாமரையென்கை. [தடமணி] - இப்படிப்பட்ட பூக்களாலே அலங்கரித்தாற்போலே யிருக்குமாய்த்துத் தடம்: "உரம்பெற்றமலர்க்கமலம் உலகளந்தசேவடிபோலுயர்ந்து காட்ட" சேற்றுவாய்ப்பாலே உரம்பெற்றிருக்கிற கமலமானது ஓங்கியளந்தபோது திருவுலகளந்தபோதைத்தைத்த திருவடிகளுக்குப் போலியாயிருந்தது. "வரம்புற்ற இத்யாதி":—அப்போது, "ஸவ்யாபஸவ்யாபாணய:" (ஸங்கைகளைவலமாகும்) என்கிறபடியே தேவர்கள் திரண்டு காலிலேபட்டுத் தலையைவணங்கித் தண்டனிட்டாற்போலே யிருக்கின்றதாய்த்து, செந்நெல்களானவை விழுந்து தலைசாய்ந்து கிடக்கிறபோது: இப்படிப்பட்ட தடங்களையும் வயல்களையுமுடைத்தான திருமோகூர். ஊரில் போக்யதையுடைய வயலிலேகாணு மித்தனை. [நாளுமேவி] - நாள்தோறும் ஆச்ரயாதாத்தைப்பண்ணி. அவ்வூரில் விடிந்த விடிவுதோறும், அவனுக்கு "ஸாஹ்லாதாவஸ்தா" (ஸாம்யாதாமவேசமா) என்னும்படியாய்த்திருப்பது. [நன்கமர்ந்துநின்று] - இவ்வூரில் வாஸமொழிய வேறொரு ப்ரயோஜநத்தைக் கணிசியாதே இதுதானே ப்ரயோஜநமாக நின்று. [அசுரர் இத்யாதி] - அஸுரஸங்கத்தைத் துணித்துபேக்ஷி விரோதியைப் போக்கிக்கொண்டு போகவல்லனென்று தோற்றும்படியான திருத்தோள்கள் நாலையுமுடைய. "இவர் இப்போதிந்தபடியேங் கனே?" என்றுகேட்க, "விரோதாறுவும் தோளுட்செவார்த்த காதேன்றுதேரிடக்காண்" என்றருளிச்செய்தருளின வார்த்தை. [சுரிகுழல்] - செறிவான ஸம்ஸாரத்திலே பட்ட

தாளில்லாத தாமரையில்லையேயாயிருக்க, "தாள்" என்று விசேஷிக்கைக்கு பாவம் - மலையை இத்யாதி. அப்படிப்பட்ட தாளுடைத்தோதென்ன - உரம்பெற்ற இத்யாதி. ஸம்தார்த் தம் - சேற்றில் இத்யாதி. "தாள்தாமரை - அணி - தடம்" என்றாகவிருத்தாத்தம் - இப்படிப்பட்ட பூக்களாலே இத்யாதி. ப்ரஸ்துதமான "உரம்பெற்ற" இத்யாதி பாசுரத்தைக் கு அர்த்தகாரத்தமாக ப்ரதிபோபாதநம் - உரம் இத்யாதி. பெரியாழ்வார் திருமொழி பாசுரத்தை ஒன்பதாக்கிரு மொழி எட்டாம்பாட்டு, "உரம்பற்றி" இத்யாதி, "வரம்பெற்ற" இத்யாதிக்கர்த்தம் - சேற்றுவாய்ப்பாலே இத்யாதி. "தாள்தாமரை - அணி" என்றதை * தடத்துக்கும் * வயலுக்கும் விசேஷணமாக்கி யருளிச்செய்கிறார் - இப்படிப்பட்டதடங்களையும் இத்யாதி. வாயில் - ஊரில் இத்யாதி. மேவிய தாகைத்தால் பாவம் - அவ்வூரில் விடிந்த இத்யாதி. ஸதாஸத - அப்பூர் நித்யாநுபவமாயிருக்கைமாலே, அவனுக்கும் ஆதாரம் நித்யானுபவமாயிருக்கும்; இப்படியாநுபவமாகில் விடிந்தவிடிவு தோறும் அவனுக்கு "ஸாஹ்லாதாவஸ்தா" என்னும்படி இருக்கிறதென்றபடி. "ஸஹ்ய

ஸேவஸம்ஜாதஸாஹ்லாதாவஸ்தா । ஸந்தஸ்திதஸ்ய ஸுதர்ஸநம் விஷ்ணோ ஸ்ய

ஸ்யாதிஸம்ஜாதவஸ்தா" இதி மந்த்ரயோகோ ... ஸவ்யாபஸவ்யாபாணயஸ்ஸ

மதிவ்யஸுயாதோ த்விஷ்டாயதேவலதாே । ஸுஸமக்ஷத்ரோதஸ்ய ஸஹஸ்ர

ஸவஹுகாதீதஸுதோஜஸ்வயஸவஹேமஸாஜ:" இதி ஸ்ரீ விஷ்ணுதர்மே பாக்ஷஸபங்க்தய.

"நன்கமர்ந்துநின்று - நன்றாகப் பொருந்திநின்று" என்றதால் பாவம் - இவ்வூரில் இத்யாதி. தோளைக்கண்டபாத்ரத்திலே "அசுரரைத்தகர்க்கும்" என்று தோற்றுமேவென்கிற சங்கையை யருளிச்செய்கிறார் - இவர் இத்யாதி. அதாவது திருத்தோள்களும் * அதாகிவைர்க்கைக்கோரமாயாமலே, அஸுரநிரஸநத்தைத் தோற்றுவிக்குமென்றபடி. இப்படி கேட்க நஞ்சீயரருளிச்செய்த வார்த்தை யென்றபடி. வந்தித்தவையாகப்பற்றுகிறதிலே "சுரிகுழல்" என்று விசேஷிக்கிறதுக்கு பாவம் -

ஸகலதாபங்களும் ஆறும்படியிருக்குமாய்த்து, பின்னே போகிறவனுக்கு முன்னே போகிறவன் ஒருகால் திருக்குழலைக் குலைத்து நடந்த; "கேஶவ: க்லேஶநாஶந:" (கேசவஃக்லேசநாசனஃ) [கமலமித்யாதி] - க்ஷுத்ரவிஷயங்களினுடைய பொய்யான நோக்கிலும் பொய்யானமுறுவலிலும் அகப்பட்ட நெஞ்சாறலெல்லாம் தீரும்படி மெய்யானநோக்கும் மெய்யானமுறுவலுமிருக்கும்படி சொல்லுகிறது. [காளமேகத்தை]-†ராஜாக்கள்போம்போது முன்னே மேகர்நீர் விடுமாபோலே, முன்னாய் காளமேகம் ஸௌந்தர்யாம்ருதத்தை வர்ஷித்துக்கொண்டுபோக, பின்னே அக்குளிர்வாசத்தையநுபவித்துப் போகலாயிருக்குமாய்த்து. [அன்றிமற்றொன்றிலம் கதியே] - காளமேகத்தையொழிய வேறு வழித்துணையுடையோமல்லோம். (௧)

இரண்டாம் பாட்டு.

இலம்கதிமற்றொன்றுஎம்மைக்குமீன்தண்துழாயின்
அலங்கலங்கண்ணிஆயிரம்பேருடையம்மான்
நலங்கொள்நான்மறைவாணர்கள்வாழ் திருமோகூர்
நலங்கழலவனடிநிழல் தடமன்றியாமே.

ஆ —(இலங்கதி.) - நமக்கெற்றைக்கும் ஸமஸ்த கல்யாண குணாட்யனான அவன் திருவடிகளின் நிழலாகிற குளிர்ந்த தடாகமல்லது மற்றொரு ப்ராப்யமில்லையென்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், ஆஶ்ரிதர்க்கு ஶ்ரமஹரமான போக்யதையையும் அவர்களுக்கு உஜ்ஜீவநஹேதுவான திருநாமங்களையுமுடையனானவனுடைய ஶ்ரமஹரமான திருவடிகளல்லது காலதத்வமுள்ளதனையும் வேறு புகலுடையோமல்லோம் என்கிறார்.

[எம்மைக்கும்] - எப்பிறப்புக்கும். [ஈன்தண்துழாயின் என்று தொடங்கி]- செவ்வியையும் குளிர்த்தியையுமுடைய திருத்துழாயினுடைய ஒளியையுடைத்தான அழகிய மாலையையும், குணசேஷ்டிதாதிகளுக்கு வாசகமான அபர்யந்தமான திருநாமங்களையுமுடைய ஸர்வேஶ்வரனுமாய், ஆந்ருஶம்ஸ்யாதிகளையுடையராய் எம்பெருமானுக்

சேர்ந்தான் இத்யாதி. அப்படி தாபஹரமோவென்ன, ப்ரமாணம்-கேஶவ: இத்யாதி. "நாகேவலம் ஸ்தநம்யோபி ஸேவநீஷித:। கிம்புநர்யா நாவிஷ்டோதாஷேவ: கேஶவ: க்லேஶநாஶந:" இதி மஹாபாரதே. "கேஶவ:" என்றதுக்கு - ப்ரஶஸ்தகேஶத்வத்திலே நோக்கு. சுரிகுழல் - சுருண்டகுழல். "கமலக்கண்ணனாய்" என்றதுக்கு ப்ரக்ருதாநுகுணமாக ஹாவம்-க்ஷுத்ரவிஷயங்களினுடைய இத்யாதி. "வழித்துணை" என்றதுக்கநுகுணமாக "காளம்" என்று விசேஷித்தது ஸூசிதம் - ராஜாக்கள்போம்போது இத்யாதி. மேகர் - மார்க்கசோதகர். நீர்விடுகிறவர்களுமாம். மேகஸ்த்தம். "நீலமேகவத்" என்கிற ப்ராது திஷ்டாந்தமாகையாலே, அத்தையுட்கொண்டு-வர்ஷித்துக்கொண்டுபோகவென்றது. குளிர்வாசத்தை - குளிர்ந்தவாஸனையை. 'தாளதாமரை - தாள் - தடம், தாளதாமரை - அணிவயல் திருமோகூர்' இத்யாரப்யாந்வய:. (௧)

---

† ராஜாக்கள் போம்போது என்னுமிடத்தில் 'போம்போது' என்பதே அடையவளைந்தானரும்பதத்துப் பாடம்.

ிய மாலையையும், குணசேஷ்டிதாதிகளுக்கு வாசகமான அபர்யந்தமான திருநாமங்களையுமுடைய ஸர்வேஶ்வரனுமாய், ஆந்ருஶம்ஸ்யாதிகளையுடையராய் எம்பெருமானுக்கும் கூட "ஆஶ்ரிதஸம்ரக்ஷணமே பரமதர்மம்" என்று ஓதுவிக்கும்படியாக வேதார்த்தம் கைவந்திருக்குமவர்கள் நிரந்தரமாக அநுபவிக்கிற திருமோகூரிலே ஆஶ்ரிதருடைய குணதோஷநிரூபணம் பண்ணாத திருவடிகளையுடையவனுடைய பாதச்சாயையாகிற பொய்கையை யொழிய.

ப.—ஆர்த்ரம், நிரதிஶயபோக்யமாகிற [illegible] திருத்துழாய்மாலையுடைய ஸர்வேஶ்வரன் திருவடிகளையொழிய ஸர்வாவஸ்தையிலும் வேறொரு கதியுமுடையோமல்லோமென்கிறார்.

ஈன் - பூந்தாரையீன்கிற, தண் - குளிர்ந்த, துழாயின் - திருத்துழாயை யுடைத்தாய், அலங்கல் - அசையாநிற்கிற, அம் - அழகிய, கண்ணி - மாலையையுடையனும், ஆயிரம்பேருடை - அநுபவ்யமாய் அஸங்க்யாதமான திருநாமங்களையுடைய, அம்மான் - நிருபாதிகஸ்வாமியாய், நலங்கொள் - ஆந்ருஶம்ஸ்யாதி கல்யாணகுணங்களை யுடையராய், நான்மறை - நாலுவேதங்களுக்கும், வாணர்கள் - நிர்வாஹகரானவர்கள், வாழ் - ரக்ஷகத்வாதி குணாநுபவத்தாலே வாழுகிற, திருமோகூர் - திருமோகூரிலே வர்த்திக்கிறவனுடைய, நலங்கழலவன் - ஆஶ்ரிததாரதம்யம்பாராதே நன்மைக்கிட்ட அழகிய வீரக்கழலையுடையவனுடைய, அடிநிழல் - பாதச்சாயையாகிற, தடமன்றி - தடாகமொழிய, யாம் - நாம், எம்மைக்கும் - எல்லாஜந்மத்திலும், கதி - ப்ராப்யமாக, மற்றொன்று - வேறொன்றை, இலம் - உடையோமல்லோம். ஈன்துழாய் - இனிய துழாய் என்றுமாம். அலங்கல் - மாலையாய், கண்ணி - தாராய், தொடையாகவுமாம். அலங்கல் - அலங்காரமாகவுமாம்.

இ.—இரண்டாம்பாட்டில், போக்யமான ஒப்பனையையும் உஜ்ஜீவநஹேதுவான திருநாமங்களையுமுடையவனுடைய திருவடிகளல்லது வேறுகாலதத்வமுள்ளதனையும் புகலுடையோமல்லோம் என்கிறார்.

[எம்மைக்கும் - மற்றொன்று - இலங்கதி] - இவ்வார்த்தை ஒரு ஜன்மத்துக்கன்றிக்கே, எல்லா ஜன்மத்துக்கும் இதுவேவார்த்தை என்கை. [எம்மைக்கும்] - எப்பிறப்புக்கும்; எல்லாக்காலங்களிலுமென்றபடி. [ஈன்தண்துழாய் இத்யாதி] - தாரையும் குளிர்த்தியையுமுடைய திருத்துழாயின் ஒளியையுடைத்தான அழகிய மாலை. [அலங்கல்] - ஒளியென்னுதல், அசைவென்னுதல்; பிங்கை போகாநின்றால் அடிமாறியிடும்போது விளையமைசர்ந்து வருகிறபடி என்னுதல், திருமேனியிலே சேருகையால் வந்த புகரைச் சொல்லுதல். [ஆயிரம்பேருடை] - ஒப்பனைக்குத் தோற்று ஏத்துகைக்கு அஸங்க்யாதமான திருநாமங்களையுடையவன். [அம்மான்] - அழகின்மிக்கை யொழிந்தாலும் எத்தனைக்கு ப்ராப்தமான விஷயம். [நலங்கொள் இத்யாதி] - "ஆந்ருஶம்ஸ்யமே வேதார்த்தம்" என்று வேததாத்பர்யம் கைவந்திருக்குமவர்களாய் வேதநிர்வாஹகரானவர்கள் நித்யாநுபவம்பண்ணுகிற தேஶம். அத்தேஶவாஸத்தாலே, "ஆஶ்ரிதஸம்ரக்ஷணமே பரமதர்மம்" என்று ஸர்வேஶ்வரனுக்கும் அதிலே நிஷ்டைகளைவேண்டியிருக்கும் தேஶம். அவ்வூரிலே ஆஶ்ரயிக்கச்சென்றாரை, "[illegible]" என்னுமவர்கள். [நலங்கழல்] - ஆஶ்ரிதருடைய குணதோஷநிரூபணம் பண்ணாத திருவடிகள். அவர்கள் ப்ரமாணமாய், "ஸதாமேதத்" என்றாலும் "நத்யஜேயம்" என்னுமவன். [அவனடிநிழல் தடமன்றியாமே] - அவனுடைய பாதச்சாயை

யாகிற பொய்கைபொழிய. [யாம் - இலக்கதி மற்றொன்று எம்மைக்கும்] - அவன் தானே, "வயலூசூழ்" என்றதும் புறம்பு புகலற்றிருக்கிறபடி.

ஈடு.—இரண்டாம்பாட்டு. லோகஹேதுவான ஒப்பனையையும் உஜ்ஜீவந ஹேதுவான திருநாமங்களையுமுடையவனுடைய திருவடிகளல்லது வேறு, காலதத்த்வமுள்ளதனையும் புகலுடையோமல்லோம் என்கிறார்.

[இலக்கதிமற்றொன்று எம்மைக்கும்] (எம்மைக்கும் - மற்றொன்று - இலங்கதி) - இவ்வார்த்தை ஒருஜந்மத்துக்கன்றியே, எல்லாஜந்மத்துக்கும் இதுவேவார்த்தை. எல்லாக் காலத்துக்கும் இதையொழிய வேறு துணையுடையோமல்லோம். [தன் இத்யாதி] - தாரையும் குளிர்த்தியையு முடைய திருத்துழாயின் ஒளியையுடைத்தான அழகியமாலை. [அலங்கல்] - ஒளியென்னுதல், அசைவென்னுதல்; பின்னே போகாநின்றால் அடிமாறியிட்டுபோக வனையும் அசைந்துவருகிறபடியென்னுதல்; திருமேனியிலே சேருகையாலே வந்த பகரைச் சொல்லுதல். [ஆயிரம்பேருடை] - தோளும் தோள்மாலையுமான அழகைக்கண்டு இவன் ஏத்தப்புக்கால், இழிந்தவிடமெல்லாம் துறையாம்படி அஸங்க்யாதமான திருநாமங்களையுடையவன் [அம்மான்] - வடிவழகுகண்டு அப்ராப்த ஸ்தலத்திலே ஏத்திற்றாகவேண்டாதே, "ஆழியங்கையம்மானை யேத்தாதயர்த்து - வாளாவிருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம்" என்று ஏத்தாதநாளைக்கும் வயிறுபிடிக்கவேண்டும்படியான விஷயம். [நலங்கொள் இத்யாதி] - "ஆந்ருசம்ஸ்யமே வேதார்த்தம்" என்று வேதாதாத்பர்யம் கைவந்திருக்குமவர்களாய், வேதத்துக்கு வ்யாஸபதம் செலுத்தவல்லரானவர்கள் நித்யவாஸம்பண்ணுகிற தேசம். அவ்வூரில் வர்த்தனந்தானேயிறே வாழ்ச்சி. அத்தேசவாஸத்தாலே. "ஆஸ்ரிதஸம்ரக்ஷணமே பரமதர்மம்" என்று ஈஸ்வரனுக்கும் அதிலே சிக்ஷிக்கவேண்டும் தேசம். அவ்வூரிலே ஆஸ்ரயிக்கச் சென்றாரை, "ஆநாதி ஸந்த்யஜேயம்" (அஸ்மாபிஸ்துல்யோபவது) என்னுமவர்கள். [நலங்கழலவன்] - ஆஸ்ரிதருடைய துணைதோஷநிரூபணம்பண்ணாத திருவடிகள். அவர்கள் தாங்கள்

இரண்டாம்பாட்டு.—இலங்கதி இத்யாதி. "தன் தண்டுழாய்" இத்யாரப்ய, "அம்மானடி யிற்றடைன்றி - எம்மைக்கும் - மற்றொன்று - இலங்கதி" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - ஹேதுவானது இத்யாதி.

"எம்மைக்கும்" என்றதற்கு ஹாவம் - இவ்வார்த்தை இத்யாதி. எம்மைக்கும் - எல்லா ஜந்மத்துக்கும். அதில் இதுவன்னமும் ஒருஜந்மமுண்டாகச் சொல்லுகிறாரோவென்ன - எல்லாக் காலத்துக்கும் இத்யாதி. "தண்" என்று - தாராய், பூவென்றுதல். பூவை, தன்கிற - ப்ரஸவியாசித்தமென்றுதல். உத்தரார்த்த ஸ்வபத்தையும் வ்யுத்க்ரமேண விவரிக்கிறார் - பின்னே இத்யாதி. திருமேனியைக் கட்டிக்கொண்டதற்கு ஹாவம் - தோளும் இத்யாதி. திருமேனிகட்டி "அம்மான்" என்றதுக்கு வாசம் - வடிவழகு இத்யாதி. 'ஆழியங்கையித்யாதி' பெரியதிருவந்தாதி எண்பத்திரண்டாம் பாட்டு: "தெரிந்துணர்வொன்றின்மையால்" இத்யாதி. அயர்த்து - மறந்து. வாளா - வ்யர்த்தமாக. நலம் - ஈருணை; கொள்கை - உடைத்தாகை; ஆந்ருசம்ஸ்யத்தை யுடையவர்களென்றபடி. "நலங்கொள்" என்பதோடு "நான்மறைவாணர்" என்றவிசேஷித்ததுக்கு ஹாவம் - ஆந்ருசம்ஸ்யமே இத்யாதி. நான்மறைவாணர்கள் - நாலுவேதங்களுக்கு நிர்வாஹகரானவர்கள். வாணர் - வாழ்பவர். "வாழ்" என்றதுக்கு ஹாவம் - அவ்வூரில் இத்யாதி. இந்த நிர்வாஹகர்கள். வர்த்திக்கிறவென்றதே, "வாழ்" என்றதுக்கு ஹாவம் - அந்தேச இத்யாதி. "நலங்கொள் நான்மறைவாணர்கள்" என்றதுக்கு பதப்ரயோஜனத்துக்கு ஹாவம் - அவ்வூரிலே இத்யாதி. 'த்வமாஸ்ரிதஸம்ரக்ஷணமே ஹாஸ்வஹிதம்' இத்யாதி. "ஆநாதி ஸந்த்யஜேயம் கதஞ்சந । தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத் அகர்ஹிதம்" இதி யுத்தகாண்டே ஸ்லோகம் ॥ விபீஷணோ வா ஸுக்ரீவ யதி வா ராவண: ஸ்வயம்" இதி யுத்தகாண்டே

ப்ரேமாந்தராய், "வத்யதாம்" (வத்யதாம்) என்றும், "ரக்ஷ்யதாம்" (ரக்ஷ்யதாம்) என்னுமவன். [அவனடிநிழல்தடமன்றியாமே] - அவனென்கிற பதம் இரண்டடத்திலும் அந்வயிக்கிறது. அவன் பாதச்சாயையாகிற போக்யதையை யொழிய நாம் வேறொரு கதியுடையோ மல்லோம். (உ)

மூன்றாம் பாட்டு.

அன்றியாமொருபுகலிடம்இலம் என்றென்றலற்றி
நின்றுநான்முகன்அரனொடு தேவர்கள்நாட
வென்றுஇம்மூவுலகளித்துழல்வான்திருமோகூர்
நன்றுநாமினிநணுகுதும் நமதிடர்கெடவே.

ஆ.—(அன்றியாம்.) - ஆகையால், ஆர்த்திரக்ஷகனாயிருக்குமவனுடைய திருமோகூரிலேசென்று நம்முடைய க்லேசமெல்லாம் போம்படி அநுபவிப்போம் என்கிறார்.

ஈ.—மூன்றாம்பாட்டில், ஸர்வலோகநாயகனான ஸர்வேச்வரன் வர்த்திக்கிற திருமோகூரை நம்முடைய ஸகல துக்கங்களுங்கெடச்சென்று ப்ராபிப்போம்; இது ஹிதம் என்கிறார்.

[அன்றியென்று தொடங்கி] - தேவு நாங்கள் ஒருபுகலிடம் உடையோமல்லோம் என்று நிரந்தரமாகக் கூப்பிட்டு ப்ரஹ்மருத்ர ப்ரமுகரான தேவர்கள் ஆச்ரயிக்க, ப்ரதிபக்ஷத்தை வென்று, இந்த மூன்று லோகத்தையும் ரக்ஷித்து அதுவே தனக்குப் போதுபோக்கானவனுடைய திருமோகூரை. [நன்று - நணுகுதும்] - நன்றாகக் கூடுவோம்.

ப.—அநந்தரம், ஆச்ரிதரக்ஷண ஸ்வபாவனானவனுடைய திருமோகூரை, நமக்குத் துக்கம் தீரும்படியான துர்லபம் கெடும்படி கிட்டுவோமென்கிறார்.

அன்றி - உன்னையொழிய, யாம் - நாங்கள், ஒருபுகலிடம் - வேறொருபுகலிடம், இலம் - உடையோமல்லோம், என்றென்றலற்றி - என்று தார்த்தியோடும் பலகாலும் கூப்பிட்டு, நின்று - (ப்ரயோஜநாந்தரமில்லாமல்) நின்று, நான்முகன் அரனொடு - ப்ரஹ்மருத்ரர்களோடே, தேவர்கள் - தேவஜாதிகள், நாட - தேடியாச்ரயிக்க, வென்று - விரோதிகளை வென்று, இம்மூவுலகு - இந்த த்ரைலோக்யத்தையும், அளித்து - ரக்ஷிக்கையே யாத்திரையா யிருக்குமவனுடைய, திருமோகூர் - திருமோகூரை, நாம், நமது - நம்முடைய, இடர் கெட - (அநிஷ்டமான) ப்ராரப்தம் திரும்ப, இனி - (ரக்ஷகனானவன் ஸந்நிதியறிந்த) பின்பு, நன்று - ஆதரப்ரயோஜனமாய்க்கொண்டு, நணுகுதும் - கிட்டக்கடவோம்.

அவ்யாக்ருதம். (உகந்தருளினநிலங்களுக்குத்தான் வைபவத்தைச் சொன்ன ஆச்ரிதருடைய நிர்ப்பந்தம். "துணைநிலையே நிருபணம்பன்றுற" என்றதால்வலிதம் - அவர்கள் தாங்கள் நிர்ப்பந்தம் என்று சொல்லப்படுதல்; 'ஆச்ரிதருடைய நிர்ப்பந்தமும் - 'நம' என்றதை சப்தத்துக்கு விசேஷணமாக்கி அந்த மாய், "அவர்கள் நாங்கள்" நிர்ப்பந்தமும் - அதனுக்கு விசேஷணமாக்கி அந்வயிப்பதால். 'நன் - தண்டுயரில்' என்றுதொடங்கி, 'லக்ஷணை வைதிகமான அன்றியாம் - என்னைத்தும் - மற்றொன்று - கதி - இலம்' நிர்ப்பந்தமும். "அவன்" என்றது, மேலும் அந்வயிக்கிறது. (உ)

இ—மூன்ரும்பாட்டில், ஸர்வரக்ஷகன் வர்த்திக்கிற திருமோகூரை, நம்முடைய ஸகலது:க்கங்களும் கெடச்சென்று ப்ராபிப்போம் என்கிருர்.

[அன்றி இத்யாதி] - “தேவும் நாங்கள் ஒருபுகலிடமறியோமல்லோம்” என்ருப்த்து ப்ரஹ்மாதிகள் வார்த்தை. அநந்யப்ரயோஜநர் சொல்லும் வார்த்தையைச் சொல்லுவர்களாய்த்து இவன்முகங் காட்டுகைக்காக. [என்றென்று அலற்றி] - நிரந்தரமாகக் கூப்பிட்டு. [நின்று] - தங்கள் ப்ரயோஜநம் பெற்ருலல்லது மீளமாட்டாதே நின்று, ப்ரஹ்மருத்ரர்களோடே தேவர்கள் ஆஶ்ரயிக்க, அவர்கள் ப்ரதிபக்ஷத்தை வென்று, இந்தஸகலலோகங்களையும் ரக்ஷித்து அதுவே யாத்ரையாயிருக்கிறவன் வர்த்திக்கிற தேஶம். [இனி - நாம் - நன்று - நணுகுதும்] - அவன் ஸர்வரக்ஷகனைபின்பு, ரக்ஷாபேக்ஷையுடைய நாம் நன்ருகக்கூடுவோம். ஸ்ரீமதுரையை காலயவநஜராஸந்தாதிகள் கிட்டினற்போலன்றியே, ப்ரஹ்மாதிகள் க்ஷீராப்தியைக் கிட்டினற்போலுமன்றியே, அநந்யப்ரயோஜநராய்க் கிட்டுவோம். [நமதிடர் கெடவே] — வழித்துணை தேடி க்லேஶிக்கிற நம்முடைய து:க்கங்கெட.

ஈடு.—மூன்ரும்பாட்டு. ஸர்வரக்ஷகனானவன் வர்த்திக்கிற திருமோகூரை, நம்முடைய ஸகலது:கமும் கெடச்சென்று ப்ராபிப்போமென்கிருர்.

[அன்றி இத்யாதி] - ப்ரயோஜநாந்தரபரரும் அநந்யப்ரயோஜநருடைய பாசுரத்தைச் சொல்லுவர்களாய்த்து அவன்முகங்காட்டுகைக்காக. “தேவரையொழிய நாங்கள் ஒருபுகலுடையோமல்லோம்” என்று நிரந்தரமாக அடைவுகெடச்சொல்லிக் கூப்பிட்டு. [நின்று] - அநந்யப்ரயோஜநரைப்போலே தங்கள் ப்ரயோஜநம் கைபுகுருமளவும் நின்று. [நான்முகன்இத்யாதி] - சதுர்முகன், ருத்ரன, இவர்களோடேகூட தேவஜாதியடைய ஆஶ்ரயிக்க. [வென்றுஇத்யாதி] - அவர்கள் ப்ரதிபக்ஷத்தைவென்று, அவர்களுக்கு விஷயமான இத்த்ரைலோக்யத்தையும் ரக்ஷித்து, அதுவே யாத்ரையாயிருக்குமவன் வந்து வர்த்திக்கிற தேஶமாய்த்து. [நன்றுநாமினிநணுகுதும்] ‘இனி - நாம் - நன்று - நணுகுதும்’ - அவன் ஸர்வரக்ஷகனானபின்பு, ரக்ஷாபேக்ஷையுடைய நாம் நன்ருகக்கிட்டுவோம். ஸ்ரீமதுரையிலே காலயவநஜராஸந்தாதிகள் கிட்டினற்போலேயன்றிக்கே, “நீணகர்நீள்வைத்தருளாய்” என்று ப்ரஹ்மாதிகள் க்ஷீராப்தியைக் கிட்டினற்போலுமன்றிக்கே, அநந்யப்ரயோஜநராய்க் கிட்டுவோம். [நமதுஇடர்கெடவே] - “ஆவாரார்துணை” என்றிருக்கிற நம்முடைய க்லேஶம்கெட. (௩)

மூன்ரும்பாட்டு.—அன்றி யாம் இத்யாதி. உத்தரார்த்தத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - ஸர்வரக்ஷகனானவன் இத்யாதி.

ப்ரயோஜநாந்தரபரரானவர்கள் “அன்றியாம் ஒருபுகல்” என்பானென்? என்ன - ப்ரயோஜநாந்தரபரரும் இத்யாதி. ஸப்தார்த்தம் - தேவரை இத்யாதி. நாடுகை - தேடுகையாய், மநஸ்ஸாலேயாராய்கை. “வென்று, இம்மூவுலகு” என்று பதச்சேதம். “நன்று” என்றவிசேஷணத் தாத்பர்யம் - ஸ்ரீமதுரையிலே இத்யாதி. “நீணகர்” இத்யாதிக்கு - ஸங்கையை ஒஹிப்பிக்க வேணுமென்றர்த்தம். திருவிருத்தம், “பேணலமில்லாவரக்கர்” இத்யாதி. ‘அன்றியாம்’ இத்யாதிப்படி, ‘திருமோகூரை - இனி - நாம் - நமதிடர்கெட - நன்று - நணுகுதும்’ இத்யந்வய:. (௩)

நான்காம் பாட்டு.

இடர்கெடஎம்மைப்போந்தளியாய்என்றென்றேத்திச்
சுடர்கொள்சோதியைத் தேவரும்முனிவருந்தொடரப்
படர்கொள்பாம்பணைப் பள்ளிகொள்வான்திருமோகூர்
இடர்கெடஅடிபரவுதுந்தொண்டீர்!வம்மினே.

ஆ.—(இடர்கெட.) - ப்ரஹ்மாதிகள் ஸ்வாபேக்ஷிதங்களைப்ப்ரார்த்திக்கைக்கு எளியனாகைக்காகத் திருப்பாற்கடலிலே புகுந்தருளின அவன், அப்படியே நமக்கும நம்முடைய அபேக்ஷிதத்தை ப்ரார்த்திக்கைக்கு எளியனாய்க்கொண்டு திருமோகூரிலே புகுந்தருளினான்: அவன் திருவடிகளையே ஸேவிப்போம்: வாருங்கோள் என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், நம்முடைய ஸமஸ்த து:க்கங்களும்போக திருமோகூரில் எம்பெருமானை ஆஸ்ரயிப்போம், வாருங்கோள் என்று ஸ்ரீவைஷ்ணவர்களை அழைக்கிறார்.

[இடரென்று தொடங்கி] - விலக்ஷணமான அழகையுடையவனை, தேவர்களும், முனிவர்களும், எங்களுடைய ஸமஸ்தது:க்கங்களும் போம்படிபோந்து, ரக்ஷித்தருளாய் என்று பலகாலும் ஆஸ்ரயிக்கலாம்படி, தன்னுடைய ஸ்பர்ஸத்தாலே வளரா நின்றுள்ள திருவநந்தாழ்வான்மேலே பள்ளிகொள்ளுமவன் அப்படியே நமக்கு ஸுலபனாகைக்காக நின்றருளின திருமோகூரிலே.

ப.—அநந்தரம், ஐஹிகாமுஷ்மிகமாக ஆர்த்தஸகாயியானவனுடைய திருவடிகளை யாஸ்ரயிப்போம் வாருங்கோளென்று, ருசியையுடையரான ஸாத்விகரை யழைத்தருளுகிறார்.

'இடர்கெட - விரோதிகளால் வந்த து:க்கம் தீரும்படி, போந்து - எழுந்தருளிப்போந்து, எம்மை - எங்களை, அளியாய் - ரக்ஷித்தருளாய்,' என்றென்று - என்று பலகாலும் தனித்தனியே சொல்லி, ஏத்தி - ஸ்துதித்து, (அத்தாலே), சுடர்கொள் - தேஜஸ்ஸையுடைத்தான, சோதியை - தேஜோமயமாயுள்ள திருமேனியை, தேவரும் - ஸ்வர்வாஸிமார்களான தேவர்களும், முனிவரும் - (ஸர்வபதார்த்தங்களைப் மனனம்பண்ணுகிற) ருஷிகளும், தொடர - அநுவர்த்தித்து ஆஸ்ரயிக்கைக்காக, படர்கொள் - ஸ்பர்ஸத்தாலே விரிவையுடைத்தாய், பாம்பணை - ஜாதிப்ரயுக்தமான மென்மை குளிர்த்தி நாற்றத்தையுடைய திருவரவணையிலே, பள்ளிகொள்வான் - பள்ளிகொண்டருளுகிறவனுடைய, திருமோகூர் - திருமோகூரிலே, இடர் - (நம்முடைய) ஸகலது:க்கங்களும், கெட - போம்படியாக, தொண்டீர் - ஆஸ்ரயணருசியையுடையர்களான நீங்கள், அடி - அவன் திருவடிகளை, பரவுதும் - ஸ்துதிப்போம்; வம்மின் - வாருங்கோள்!

இ—நாலாம்பாட்டில், நம்முடைய ஸமஸ்தது:க்கங்களும்போக, திருமோகூரிலேவந்து ஸுலபனாய்நிற்கிறவனை ஆஸ்ரயிக்கப்போருங்கோள் என்று, ஸ்ரீவைஷ்ணவர்களை அழைக்கிறார்.

[இடர்கெட இத்யாதி] - "எம்மை-இடர்கெட போந்தளியாய்" என்றிருக்கை ஸ்வர்வாஸிமார்களுக்கும் ஸாபாநுக்ரஹ ஸமர்த்தர்க்கும் வார்த்தை. வேதாபஹாரி

---

† அஸம்ஸ்லேஷது:க்கம் - ஸஹாயாஸம்ஸ்லேஷது:க்கம் என்பர்.

துக்கங்கள் போக. [எம்மை] - முன்பு “ஈச்வரோஹம்” என்றிருந்தவர்கள், ஆபத்து மிக்கவாறே, “ஏஹி பஶ்ய ஶரீராணி” என்னுமாபோலே தங்கள் வெறுமையை முன்னிடுவித்து. [போந்தளியாய்] - அவதரித்து ரக்ஷிக்கவேணு மென்பர்கள். [என்றென்றேத்தி - தொடர] - தங்கள் ஆபத்தாலே இடைவிடாதே புகழ்ந்து வடிம்பிட்டு ஆச்ரயிக்கைக்காக. [சுடர்கொள் சோதியை] - “ஆபத்தாலேயாகிலும் நம்பாடே வரப் பெற்றோமே!” என்று உஜ்ஜ்வலனாயிருக்குமவனை யென்னுதல், விலக்ஷணமான அழகை யுடையவனாகையாலே ஸ்வயம்ப்ரயோஜநமானவனைக் கிட்டி துக்கநிவர்த்தகனாக நினைத்தது என்னுதல். [தேவரும் முனிவரும் தொடர] - தேவதைகளும், ஸாபாநுக்ரஹஸமர்த்தரான ருஷிகளும்; “ஈச்வரோஹம்” என்றிருப்பாரும், ஐச்வர்யார்த்தமாக யத்நம்பண்ணுவாரும் என்றுமாம். [படங்கொள் பாம்பணைப் பள்ளி கொள்வான்] - ஸம்பந்தத்தாலே விக்ருதனானவனைச் சொல்லுகிறது. அநந்யப்ரயோஜநரை அடிமை கொள்ளுகிறவனைக் கிட்டி பரயோஜநாந்தரபரர்க்கு முகங்கொடுக்க அவஸரப்ரதீக்ஷையிலே கண்வளர்ந்தருளுகிறான். [படங்கொள் பாம்பு] - ஸ்பர்சத்தாலே மலர்ந்துள்ள திருவநந்தாழ்வான். [பள்ளிகொள்வான் திருமோகூர்] - தேவாதிகளுக்கு ஸௌலப்யத்துக்கப்பாலே ஒக்கும் ஸௌலப்யத்துக்காகத் திருமோகூரிலே நின்றருளினான். [இடர்கெட அடி பரவுதும்] - நம்முடைய ஸகலதுக்கங்களும் போம்படி அவனுடைய திருவடிகளை ஆச்ரயிப்போம். [தொண்டர் வம்மினே] - என்னோடு ஸஹோத்ரிகளாயிருப்பார் திரளுகைக்காக.

ஈடு.—நாலாம்பாட்டு. நம்முடைய ஸமஸ்தது:க்கங்களும்கெட, திருமோகூரிலேவந்து ஸுலபனாய் நிற்கிறவனை யாச்ரயிக்கவாருங்கோளென்று ஸ்ரீவைஷ்ணவர்களை யழைக்கிறார்.

[இடர்கெடவித்யாதி] - “எம்மை-இடர்கெட-போந்தளியாய்” என்றாய்த்து ஸம்ஸாரிகளுக்கும், ஸாபாநுக்ரஹஸமர்த்தர்க்கும் வார்த்தை. * வேதாபஹாராதி துக்கங்கள் போக. [எம்மை]-முன்பு “ஈச்வரோஹம்” (ஈச்வரோஹம்) என்றிருந்தவர்கள், ஆபத்து மிக்கவாறே “ஏஹி பஶ்ய ஶரீராணி” (ஏஹிபச்யஶரீராணி) என்னுமாபோலே தங்கள் வெறுமையை முன்னிடுமேத்தனை. [போந்தளியாய்] - அவதரித்து ரக்ஷிக்கவேணும் என்பர்கள். முன்பெல்லாம் உபேக்ஷித்திருந்தவர்கள், ஒன்று

நாலாம்பாட்டு:—இடர்கெட இத்யாதி. “இடர்கெடவடிபரவுதும் தொண்டர்வம்மின்” என்றதனைத் தொகுத்தருளினை - நம்முடைய இத்யாதி.

“தேவரும் முனிவரும்” என்றதனைத் தொடங்கி, “இடர்கெட எம்மைப்போந்தளியாய்” என்றதுக்கு ஸம்ஸாரிகளுக்கு என்கையருளிச்செய்கிறார் - எம்மை இத்யாதி. “இடர் கெட” என்றதைக்கொண்டு - வேதாபஹார இத்யாதி. “எம்மை” என்றதுக்கு அவதாரிகையாக - முன்பு ஈச்வரோஹம் இத்யாதி. “ஏஹி பஶ்ய ஶரீராணி முநீநாம் பாவிதாத்மநாம் ஹதாநாம் ராக்ஷஸைர்கோரைர் பஹூநாம் பஹுதா வநே” இத்யாரண்யகாண்டே [illegible] (௬ - ௧௬) முன்பு இவனைக்கொண்டு ஒரு கார்யமில்லை யென்றிருந்தவர்கள், ஆபத்துவந்தவாறே, இவன்பக்கலிலே தங்கள் வைதந்யந்தோற்றவந்து ஆச்ரயிக்கும் ப்ரகாரத்தை [illegible] அருளிச்செய்கிறார் - முன்பெல்லாம் இத்யாதி. படிகாப்பார் - தலையாரிகள். வடிம்பிட்டு - சர்ப்பத்தித்து. “பள்ளிகொள்வான்” என்றத்தைப்பற்ற - நீ

கேட்டவாறே படிகாப்பானை [illegible] கிடக்கிறதென்று என்பர்கள். [illegible] வடிவிட்டு [illegible] "[illegible]" என்று [illegible] "வாமநாவதாரமும்" [illegible] கொண்டு [illegible] திருவாக்காய்வான். [illegible] திருவரங்காய்வான். [illegible] அவனுடைய [illegible] [தொண்டர் வம்மின்] - [illegible]. (ச)

ஐந்தாம் பாட்டு.

தொண்டீர்வம்மின் நம்சுடரொளியொருதனிமுதல்வன்
அண்டமூவுலகளந்தவன் அணிதிருமோகூர்
எண்டிசையுமீன்கரும்பொடு பெருஞ்செந்நெல்விளைக்
கொண்டகோயிலை வலஞ்செய்திங் காடுதுங்கூத்தே.

கிடக்கிறது என்றது. [illegible] "முனிவர்" என்றது [illegible] இங்கே [illegible] பண்ணுவாரும் என்ற. [illegible] "படுகொள்" [illegible] பள்ளிகொள்வான்" என்னையாலே [illegible]. 'தென்னருளின்' என்றது - [illegible] தொண்டர் - [illegible] முனிவரும் - இடப்பேடு - [illegible] பணைப்பள்ளி கொள்வானவன் திருமோகூரிலே நின்றான். [illegible] இடம்: தொண்டர் வம்மின்' இத்யாதி. (ரு)

ஆ.—(தொண்டர்.) - ஜகத்துக்கு த்ரிவிதகாரணமும் தானேயாய், அப்ராக்ருதமான அழகையுடையனுமாய், மஹாபலியாலே யபஹ்ருதமான த்ரைலோக்யத்தையும் அளந்துகொண்ட எம்பெருமான் எழுந்தருளியிருக்கையாலே அதிஸ்லாக்யமான திருமோகூரை யாஸ்ரயிக்க வாருங்கோள் என்கிறார்.

ஓ.—அஞ்சாம்பாட்டில், அவன் எழுந்தருளி நின்றருளின திருமோகூரை ஆஸ்ரயிக்க வாருங்கோள் என்கிறார்.

[நம் சுடர் ஒளியென்று தொடக்கி] - ஜகத்துக்கு த்ரிவிதகாரணமும் தானேயாய் அப்ராக்ருதமான அழகையுடையவனுமாய் மஹாபலியாலே அபஹ்ருதமான அண்டோதரத்திலே மூன்று லோகத்தையும் அளந்து கொண்டவனுடைய ஸ்லாக்யமான திருமோகூர் எட்டுத்திக்கும் கன்னல் கரும்பொடு பெருஞ்செந்நெல் விளையும்படி பரிக்ரஹித்த கோயில்.

ப.—தொண்டர், அபிமதஸம்ஸ்லேஷ ஸ்வபாவனான த்ரிவிக்ரமன் வர்த்திக்கிற திருமோகூரில் கோயிலை ப்ரதக்ஷிணித்து ப்ரீதராவோம், வாருங்கோள் என்கிறார்.

நம் - நமக்கு அநுரூபமாய், சுடர் - நிரவதிகௌஜ்ஜ்வல்யத்தையுடைத்தான, ஒளி - தேஜோமய விக்ரஹத்தையுடையனுய், ஒருதனிமுதல்வன் - ஜகத்துக்கு நிமித்தோபாதாந ஸஹகாரிரூபமான த்ரிவிதகாரணமும் தானேயாய், அண்டம் - ஸ்ருஷ்டமான அண்டத்துக்கு உள்வாயிருந்துள்ள, மூவுலகு - ஜகத்த்ரயத்தையும், அளந்தவன் - அளந்துகொண்டவன், அணி - அழகிய, திருமோகூர் - திருமோகூரிலே, எண்திசையும் - எட்டுத்திக்குக்கள்தோறும், கன்னல் - இனிய, கரும்பொடு - கரும்போடேகூட, பெருஞ்செந்நெல் - பெரியசெந்நெலானது, விளைய - விளையும்படியாக, கொண்ட - பரிக்ரஹித்த, கோயிலை, இங்கு - இந்பூமியிலே, வலஞ்செய்து - ப்ரதக்ஷிணம்பண்ணி, கூத்தாடுதும் - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ந்ருத்தம்பண்ணுவோம்; தொண்டீர் - ஆசையுடையவர்கள், வம்மின் - வாருங்கோள்!

ஓ.—அஞ்சாம்பாட்டில், அவன் எழுந்தருளி நின்றருளின திருமோகூரை ப்ரதக்ஷிணித்து அநுபவிக்க வாருங்கோள்! என்கிறார்.

[தொண்டீர் வம்மின்] - ஸர்வத்ர விஷயத்தில் சபலரானீர் வாருங்கோள். [நம் சுடரொளி ஒருதனி முதல்வன்] - நிரவதிகதேஜோரூபியாய் த்ரிவிதகாரணமும் தானேயானவன். 'நம்' - என்று ப்ரமாணப்ரஸித்தியைச் சொல்லுதல்; தன்வடிவழகையும் ஜகத்காரணனான தன்னேற்றத்தை ப்ராப்தியையும் நமக்கு அறிவித்தவன் என்னுதல். [அண்டம் மூவுலகளந்தவன் - அணி திருமோகூர்] - அவன்தனக்கு ஆபரணமான தேசமென்னுதல்; ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான தேசமென்னுதல். [எண்திசையும் இத்யாதி] - எட்டுத்திக்கிலும் கன்னல் கரும்போடே பெருஞ்செந்நெல் விளையும்படி பரிக்ரஹித்த கோயில். கரும்புக்கு நிழல் செய்தாற்போலே இருக்கும் செந்நெல்; "அவன் ஸந்நிதியிலே ஸகலமும், "[illegible]" என்கிறபடியேயாய்த்தென்கை. [வலஞ்செய்து] - ப்ரதக்ஷிணம்பண்ணி. [இங்கு ஆடுதும் கூத்தே] - பங்க்யம் இது, வடிவழகு அது: அனுபின்பு; கூடாதே இருக்கப்போமோ? அங்குப்போனால், "[illegible]" என்று களிக்குமத்தை இங்கே களிப்போம்.

[illegible] அநுலவிக்கவாருக்கோலென்கிறார்.

[illegible]

[illegible] (5)

ஆறாம் பாட்டு.

கூத்தன்கோவலன் குதற்றுவல்லசுரர்கள்கூற்றம்
ஏத்தும்நங்கட்கும் அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன்
வாய்த்ததண்டாமரைவளவடல்தந்திநடோசர்
ஆத்தன்தாமரையடியன்றி மற்றிலம்அரணே.

[illegible]

[illegible] (6)

10—3

ஆ.—(கூத்தன்) - கோபாலனாய், மநோஹாரி சேஷ்டிதங்களையுடையனாய், மிறுக்குச்செய்யும் வலியரான அஸுரர்க்கு ம்ருத்யுவாய், நித்யஸித்தர்க்கும் இன்றாஶ்ரயிக்கிறநமக்கும் ஒக்கவினியனாய், மிகவுமழகிதான நீர்நிலங்களையுடைய அளவிதான வயல் சூழ்ந்த திருமோகூரிலே பரமாப்தனாயெழுந்தருளியிருக்கிற எம்பெருமானுடைய திருவடிகளல்லது வேறுநமக்கு அரணில்லையென்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், திருமோகூரில் நின்றருளின பரமாப்ததமனானவனுடைய திருவடிகளல்லது வேறு நமக்கு அரண் இல்லை என்கிறார்.

[கூத்தன் என்றுதொடங்கி] - கோபாலனாய், மநோஹாரியான சேஷ்டிதங்களையுடையனாய், மிறுக்குச்செய்யும் வலியரான அஸுரர்க்கு ம்ருத்யுவாய், நித்யஸித்தர்க்கும் இன்று ஆஶ்ரயிக்கிற நமக்கும் ஒக்க இனியனானவன். [வாய்த்த தண்பணை வளவயல்சூழ் திருமோகூர்] - மிகவும் அழகிதான நீர்நிலங்களையுடைய அளவிதான வயல்சூழ்ந்த திருமோகூரிலே.

ப.—அநந்தரம், ஶ்ரோத்தாக்களுக்கு அநுகூலப்ரீதனாய் ஆப்தனான அவன் திருவடிகளொழிய வேறொன்றை ரக்ஷகமாகவுடையோமல்லோம் என்கிறார்.

கூத்தன் - வல்லாராடினாற்போலே ஸ்ப்ருஹணீயகதியாய், கோவலன் - ரக்ஷ்யவர்க்கத்தைப் பின்சென்று ரக்ஷிக்குமவனாய், குதற்று - பீடகரான குதற்றுதலையுடையராய், வல் - ப்ரபலரான, அசுரர்கள் - கேஶிதேநுகப்ரப்ருதிகளான அஸுர ப்ரக்ருதிகளுக்கு, கூற்றம் - ம்ருத்யுவாய், எத்தும் - அநந்யப்ரயோஜநராயேத்துகிற, நங்கட்கும் — (அநவிமாநரான) நமக்கும், அமரர்க்கும் - நித்யாநுபவம்பண்ணுகிற அமரர்க்கும், முனிவர்க்கும் -, இன்பன் - ஆநந்தகனாய், வாய்த்த - ஸம்ருத்தமாய், தண் - குளிர்ந்த, பணை - நீர்நிலங்களாலும், வளவயல் - ஸ்ப்ருஹணீயமானவயலாலும், சூழ் - சூழப்பட்ட, திருமோகூர் - திருமோகூரிலே, ஆத்தன் - (ஆஶ்ரிதர்க்கு) விஶ்வஸித்துப்பற்றலாம்படி நிற்கிற ஆப்ததமனுடைய, தாமரை அடி அன்றி - நிரதிஶயபோக்யமான தாமரைபோன்ற திருவடிகளையொழிய, மற்று அரண் இலம் - வேறொருரக்ஷகமுடையோமல்லோம்.

இ.—ஆறாம்பாட்டில், திருமோகூரிலே நின்றருளின பரமாப்ததமன் திருவடிகளல்லது வேறு நமக்கு அரண் இல்லை என்கிறார்.

[கூத்தன்] - நடக்கப்புக்கால் வல்லாராடினாற்போலே இருக்கை. "ஸாது ஸாதஸிமஹதி"-வழித்துணையாய் அவன் முன்னேபோக பின்னே போமிடத்து நடையழகுதானே ப்ரயோஜநமாயிருக்கை. "ஆடல்பாடலவை மாறினார்தாமே" என்னக் கடவதிறே: இவன் திருக்குழல்வாய்வைத்தபோது அப்ஸரஸ்ஸுக்கள் குழலோசையைக் கேட்டுப் பாட்டுத்தவிர்ந்தார்கள், இவன் நடைகண்டு ஆடல்தவிர்ந்தார்கள். [கோவலன்]- ஆஶ்ரயித்தாரை ரக்ஷிக்குமிடத்துத் தாழவந்து அவதரித்து ரக்ஷிக்குமவன். பிசாசத்துக்கு மோக்ஷப்ரதனாய் வழிநடத்தினவனிறே. ஆஶ்ரிதர் சிறுமைபாராதவனிறே. [குதற்றுவல்லசுரர்கள் கூற்றம்] - மிறுக்கைப்பண்ணும் ப்ரபலரான அஸுரர்களுக்கு ம்ருத்யுவானவன். குதற்றுதல் - நெறிதவிர்தல். இன்று ஆஶ்ரயிக்கிற நமக்கும், "வைகுந்தத்தமரும் முனிவரும்" என்கிற நித்யாஶ்ரிதர்க்கும் ஒக்க இனியனானவன். [வாய்த்த இத்யாதி] - அழகிதான நீர் நிலங்களும் அளவிதான வயலும் சூழ்ந்த திருமோகூரிலே நின்றருளின பரமபந்து, தான் தனக்கில்லாத மரணஸமயத்திலே, "க்ஷமம்

ஸ்மராமிமத்பக்தம்நயாமி" என்னும் பரமாப்ததமன். தன்னை அஞ்சினபோது அவன்பக்க லிலே ந்யஸ்தபரனும்படியான ஆப்ததமன். [தாமரை அடியன்றி] - அநாப்தனுகிலும் விடவொண்ணுதபடியாய்த்துத் திருவடிகளில் போக்யதை. [மற்றிலம் அரணே]-வேறு சிலரை ரக்ஷகமாக உடையோமல்லோம். போக்யதை இல்லையாகிலும் அநாப்தனுகிலும் புறம்பு புகலில்லை யென்கை.

ஈடு. — ஆரும்பாட்டு. திருமோகூரிலே நின்றருளின பரமாப்ததமன் திருவடிகளல்லது வேறு நமக்கு ரக்ஷையில்லையென்கிருர்.

[கூத்தன்] - நடக்கப்புக்கால் வல்லாராடினுற்போலேயிருக்கை. "அக்ரதப்ரயயௌராமஃ" (அக்ரதஃப்ரயயௌராமஃ) என்கிறபடியே நடைச்சக்ரவத்துப்பிடிக்கலா யிருக்குமாய்த்து. அவன்முன்னேபோகப் பின்னே போகையாவது - கூத்துக்கண்டு போகையாய்த்து. "ஆடல்பாடலவைமாறினர்தாமே" என்னக்கடவதிறே - அவன்திருக் குழலை வாய்வைத்தபோது அப்ஸரஸ்ஸுக்கள் குழலோசையைக்கேட்டுப் பாடத்தவிர்ந் தார்கள்; அவன் நடையழகைக்கண்டு ஆடத்தவிர்ந்தார்கள். [கோவலன்] - தன்னைத் தாழவிட்டு ஆஸ்ரிதரை ரக்ஷிக்குமவன். பிசாசத்துக்கு மோக்ஷப்ரதனுய் வழி நடத்தினவ னிறே. [குதற்றுவல்லசுரர்கள் கூற்றம்] - மிறுக்குக்களைப்பண்ணுநிற்பராய், பெருமிடுக்க ரான அஸுரர்களுக்கு ம்ருத்யுவாயுள்ளவன். [ஏத்துமித்யாதி] - இன்றுஆஸ்ரயிக்கிற நமக் கும், "வைகுந்தத்தமரரும் முனிவரும்" என்கிற நித்யாஸ்ரிதர்க்குமொக்க இனியனுன வன். [வாய்த்தஇத்யாதி] - அழகிதான நீர்நிலங்களையும் அளவிதான வயலையுமுடைய திருமோகூரிலே நின்றருளின பரமபந்து. தான் தனக்கில்லாத மரணஸமயத்தில் "அஹம்ஸ்மராமிமத்பக்தம்நயாமி" (அஹம்ஸ்மராமிமத்பக்தம்நயாமி) என்னும் பரமாப்த தமன் தன்னை யஞ்சினபோது அவன்பக்கலிலே ந்யஸ்தபரனுய் நிர்பரனும்படியான ஆப்ததமன். [தாமரையடியன்றி] - அநாப்தனுகிலும் விடவொண்ணுதாய்த்துத் திருவடி களில் போக்யதை. [மற்றிலம்அரணே]- வேறுசிலரை ரக்ஷகராகவுடையோமல்லோம். போக்யதையில்லையாகிலும் விடவொண்ணுதபடி புறம்புபுகலில்லையென்கை. (௬)

ஆரும்பாட்டு,—கூத்தன் இத்யாதி. "திருமோகூராத்தன் தாமரையடியன்றி மற்றில மரண்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - திருமோகூரிலே இத்யாதி.

கூத்தாடுகிறவனையன்றே கூத்தனென்பது? இவன் அப்படி கூத்தாடுகிருனே? என்ன - நடக்க இத்யாதி. அப்படியிருக்குமோவென்ன - அக்ரதஃ இத்யாதி. "ப்ரயயௌ" என்ற பதத்திலே நோக்கு. "அக்ரதஃப்ரயயௌராமஸ்ஸீதாமத்யேஸுமத்யமா । ப்ருஷ்டதஸ்துதநுஷ்பாணிர்லக்ஷ்மணோநுஜகாமஹ" இத்யாரண்யகாண்டே (௧௧-௧). நடைச்சக்ரவத் துப்பிடிக்கலாம்படி-நடையழகுக்கு சக்ரவர்த்திவந்தானென்று விருதுபிடிக்கலாம்படியென்றபடி. இத்தால் பலிதம் - அவன் முன்னே இத்யாதி. "வல்லாராடினுற்போலேயிருக்கும்" என்றதுக்கு ப்ரமாணந்தரம் - ஆடல் இத்யாதி. பெரியாழ்வார் திருமொழி. இதுக்கர்த்தம் - அவன் இத்யாதி. "கோபாலன்" என்றதுக்கு பாவம் - தன்னை இத்யாதி. வழித்துணையாகப் பற்றுகிறவிடத்திலே க்ருஷ்ணப்ரஸங்கமேதுக்கென்ன - பிசாசத்துக்கு இத்யாதி. பிசாசத்துக்கு - கண்டாகர்ணனுக்கு. குதற்று - குதறுதலையுடையராய். குதற்றல் குதறுதலாய், நெறிதவிர்தல்: அதாவது - உன்மார்க்க வர்த்தித்வம். தண் - குளிர்ந்த. வளவயல் - ஶ்லாகநீயமானவயல். இத்தால் பாவம் - தான்தனக்கு இத்யாதி. விவரணம் - தன்னையஞ்சின இத்யாதி. "தாமரையடி" என்றதுக்கு பாவம் - அநாப் தன் இத்யாதி. இத்தால் பலிதம் - போக்யதை இத்யாதி. க்ரமேணுந்வயஃ. (௬)

ஏழாம் பாட்டு.

மற்றிலம்அரண்வான்பெரும்பாழ்தனிமுதலாச்
சுற்றும்நீர்படைத்துஅதன்வழித்தொல்முனிமுதலா
முற்றுந்தேவரோடுஉலகுசெய்வான்திருமோகூர்
சுற்றிநாம்வலஞ்செய்ய நம்துயர்கெடும்கடிதே.

ஆ.—(மற்றிலம்அரண்.)-பெரியதாய் ஒப்பின்றிக்கேயிருக்கிற ப்ரக்ருதியைக் காரணமாகக்கொண்டு ஆவரணஜலத்தைப்படைத்து அவ்வழியாலே ப்ரஹ்மாமுதலான தேவர்களோடுகூடின எல்லாலோகங்களையும் உண்டாக்குகையாலே, நம்முடைய ரக்ஷணம் தனக்கு அவர்ஜநீயமாம்படியான எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற திருமோகூரைச்சுற்றி நாம் வலஞ்செய்ய, அப்போதே நம்முடைய ஸமஸ்தது:க்கங்களும் கெடும் என் .

ஒ.—ஏழாம்பாட்டில், ஸர்வகாரணமாகையாலே நம்முடைய ரக்ஷணம் தனக்கு அவர்ஜநீயமாம்படியானவனுடைய திருமோகூரை ஆஶ்ரயிக்கவே நம்முடைய ஸமஸ்தது:க்கங்களும் அப்போதே கெடும் என்கிறார்.

[மற்றிலம் அரண்] - வேறுஅரணை யுடையோமல்லோம். [வானென்று தொடங்கி] - பரிச்சேதிக்க வொண்ணாதபடி பெரியதாய் ஒப்பின்றிக்கேயிருக்கிற ப்ரக்ருதியைக் காரணமாகக்கொண்டு ஆவரணஜலத்தைப் படைத்து, அவ்வழியாலே ப்ரஹ்மா முதலான தேவர்களோடுகூடின எல்லாலோகத்தையும் உண்டாக்கினவனுடைய திருமோகூரை.

ப.—அநந்தரம், அகிலஜகத்ஸ்ரஷ்டாவான ஸர்வேஶ்வரன் வர்த்திக்கிற திருமோகூரைப்பற்றி அநுகூலவ்ருத்திகளைப்பண்ண, நம்முடையது:க்கம் சடக்கெனப் போம் என்கிறார்.

தனி - (“ஏகமேவாத்விதீயம்” என்கிறபடியேஉத்பத்த்யாதிகளில்லாத) வைலக்ஷண்யத்தையுடைத்தாய், (நாநாவித †கார்யங்களுக்குத் தான் ஏககாரணமாய்), வான் - (ஸமஸ்தகார்யங்களும் ஸ்வைகதேசத்திலேயாம்படி) நிரதிஶயமஹத்தையையுடைத்தாய், பெரு - அஶேஷகார்யத்தையும் உண்டாக்குகைக்கு யோக்யதையான, பாழ்முதலா - ப்ரக்ருதிமுதலாகக்கொண்டு, சுற்றும் - எங்குமொக்க வ்யாப்தமான, நீர் - காரணஜலத்தை, படைத்து - ஸ்ருஷ்டித்து, அதன்வழி - அந்தவழியாலே, தொல் - (அண்டத்துள்வாயிலே ஸ்ருஜ்யஜகத்துக்கு முற்பாடனாகையாலே) பழையனாய், முனிமுதலா - ஸ்ருஷ்டிப்ரகார மநநஶீலனான ப்ரஹ்மாமுதலாக, முற்றும் தேவரோடு - ஸமஸ்ததேவதைகளோடுகூடின, முற்றும்உலகு - ஸகலலோகங்களையும், செய்வான் - பண்ணுமவனுடைய, திருமோகூர் - திருமோகூரை, சுற்றி வலம் நாம் செய்ய - ப்ரதக்ஷிணம்முதலான அநுகூலவ்ருத்திகளை (ஸோமநபேக்ஷ)நாம் பண்ண, நம் - நம்முடைய, துயர் - தனிமையால்வந்த து:க்கம், கடிது - சடக்கென, கெடும் - போம்; (ஆதலால்), மற்று அரண் இலம் - மற்று ரக்ஷகருடையோ மல்லோம்.

இ.—ஏழாம்பாட்டில், நம்முடைய ரக்ஷணம் தனக்கு அவர்ஜநீயமான உத்பாதகன் வர்த்திக்கிற திருமோகூரை ஆஶ்ரயிக்கவே நம்முடைய து:க்கங்கள் அப்

† கைங்கர்யங்களுக்கு என்று காணப்படுகிற பாடம் பொருத்தமுள்ளதாகத் தோன்றவில்லை.

போதே போம் என்கிருர். [மற்றிலம் அரண்] - இவனையொழிய வேறுரக்ஷகரில்லை. [வான்பெரும்பாழ் தனிமுதலா] - கார்யஜாதமழிந்தாலும் அழியாமையாலே வலிதாய், அபரிச்சிந்நமாய், ஹோமமோக்ஷங்களை விளைப்பதாய், அத்விதீயமான மூலப்ரக்ருதி தொடக்கமாக. [சுற்றுநீர் படைத்து] - "அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்கிறபடியே, ஆவரணஜலத்தை ஸ்ருஷ்டித்து. [அதன்வழித்தொல் முனிமுதலா] - அவ்வழியாலே தேவாதிகளைப்பற்றப் பழையனுய் மநநசீலனுன சதுர்முகன் தொடக்கமாக. [முற்றும் தேவரோடு உலகுசெய்வான் திருமோகூர்] - எல்லா தேவஜாதியோடுங்கூட எல்லா லோகங்களையும் உண்டாக்குமவன் வர்த்திக்கிற திருமோகூர். [சுற்றி நாம் வலஞ் செய்ய] - நாம் சென்று விடாதே ப்ரதக்ஷிணாதிகளைப்பண்ண. [நம் துயர் கெடும் கடிதே] - "வழித்துணையில்லை" என்று நாம்படுகிற து:கங்கள் சடக்கெனப்போம். "அதஸோ அபயம் கதோ பவதி" என்னக்கடவதிறே. ஆனபின்பு, மற்றிலம் அரண்.

ஈடு.—ஏழாம்பாட்டு. நம்முடையரக்ஷணம் தனக்குஅவர்ஜநீயமான உத்பாதகன் வர்த்திக்கிற திருமோகூரை யாஶ்ரயிக்கவே, நம்முடையது:கங்கள் அப்போதேபோமென்கிருர்.

[மற்றிலம்அரண்] - வேருேர்அரணையுடையோமல்லோம். அவன்தான் ரக்ஷகனுகவல்லனேவென்னில்; இதுவன்றே அவன்படியென்கிறது, மேல். [வான் இத்யாதி] - இவ்வருகுண்டான கார்யவர்க்கமடங்கலும்அழிந்தவன்றும் தானழியாமையாலேவலிதாய், அபரிச்சிந்நமாய், ஹோமமோக்ஷங்களை விளைப்பதான அத்விதீயமான மூலப்ரக்ருதிதொடக்கமாக [சுற்றுநீர்படைத்து] - "**அப ஏவ ஸஸர்ஜாதௌ**" (அபஏவஸஸர்ஜாதௌ) என்கிறபடியே ஆவரணஜலத்தை ஸ்ருஷ்டித்து. [அதன்வழித்தொல்முனிமுதலா] - அவ்வழியாலே, தேவாதிகளைப்பற்றப் பழையனுய் மநநசீலனுன சதுர்முகன்தொடக்கமாக. [முற்றுந்தேவரோடுஉலகுசெய்வான்திருமோகூர்] - எல்லா தேவஜாதியோடுங்கூட எல்லா லோகங்களையும் உண்டாக்குமவன் வர்த்திக்கிற திருமோகூர். [சுற்றிநாம்வலம்செய்ய] - நாம்சென்றுவிடாதே ப்ரதக்ஷிணாதிகளைப்பண்ண. [நம்துயர்கெடும்கடிதே] - "வழித்துணையில்லை" என்று நாம் படுகிறது:கம் சடக்கெனப்போம் "**அதஸோ அபயம் கதோ பவதி**"(அதஸோபயம்கதோபவதி) என்னக்கடவதிறே; ஆனபின்பு, மற்றிலம்அரண்.(எ)

ஏழாம்பாட்டு.—மற்றிலம் இத்யாதி. உத்தரார்த்தத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - நம்முடைய

"வான்" என்று - வலிதாய், நித்யமாயென்றபடி. அபரிச்சிந்நமாய் என்றது - "அநந்தஸ்யாந்தஸ்யாஸ:" என்றத்தைப்பற்ற. நித்யமான மூலப்ரக்ருதியை ஸ்ருஷ்டிக்கையாவது - தமோக்ஷராவ்யக்தரூபேண பரிணமிப்பிக்கை. சுற்றுநீர் - ஆவரணஜலம். "அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யமவாஸ்ருஜத் । தத³ண்ட³மப⁴வத்³தை⁴மம் ஸஹஸ்ராம்ஶுஸமப்ரப⁴ம்" இதி மநுஸ்ம்ருதௌ (க-அ). அதன்வழி - அவ்வழியாலே. "அதன்வழி" என்று - ஸமஷ்டிஸ்ருஷ்டி, பஞ்சீகரணம், அண்டஸ்ருஷ்டி முதலானவற்றைச் சொல்லுகிறது. தொன்மை – பழமை. "முற்றும்" என்றது - * தேவர்க்கும் * உலகுக்கும் விசேஷணம். சுற்றி - விடாதே. அவனையாஶ்ரயித்தால் து:கம் போமோவென்ன - அதஸோஅபயம் இத்யாதி. தைத்திரீயகே. யதொருபோது ப்ரஹ்மயாநத்தை யடைகிருன், அநந்தரம் அபயங்கதனுவன் என்று ஶ்ருதிக்கர்த்தம். ப்ரதிஷ்டா - யாநம். 'வான்பெரும் பாழ்' என்றுதொடங்கி, 'உலகுசெய்வானுடைய திருமோகூரை நாம் - சுற்றி - வலஞ்செய்ய - கடிது - நந்துயர்கெடும்; ஆகையாலே, அரண் - மற்றிலம்' இத்யந்வய:. (எ)

எட்டாம் பாட்டு.

துயர்கெடும்கடிதடைந்துவந்து அடியவர்!தொழுமின்
உயர்கொள்சோலை யொண்தடமணியொளிதிருமோகூர்
பெயர்களாயிரமுடைய வல்லரக்கர்புக்கழுந்தத்
தயரதன்பெற்ற மரதகமணித்தடத்தினையே.

ஆ.— (துயர்கெடும்) - பரமப்ராப்ய ஸாதனை அவனுக்குங்கூட போக்யமான திருமோகூரே நமக்கு ப்ராப்யம்; ஆதலால், ப்ரதிகூலரெல்லாரும் து:க்கஸாகர நிமக்நராம்படி தயரதன்பெற்ற ஸமஸ்தகல்யாணகுண விசிஷ்டமான மரதகமணித்தடத்தினைத் திருமோகூரிலே ஈண்டச்சென்று ஆச்ரயியுங்கோள் என்கிறார்.

ஒ.— எட்டாம்பாட்டில், திருமோகூரில் நின்றருளின ஆண்பிள்ளையான தசரதாத்மஜனை ஆச்ரயிக்க நம்முடைய து:க்கங்களெல்லாம்போம் என்கிறார். [அடைந்து] - கிட்டி. [உயர் என்றுதொடங்கி] - உயர்ந்த சோலையாலும் அழகிய தடாகங்களாலும் அலங்க்ருதமான ஒளியையுடைய திருமோகூரிலே. [பெயர்கள் ஆயிரம் என்று மேலுக்கு] - சௌர்யவீர்யாதிகளுக்கு வாசகமான பல பெயர்களையுடைய வலியராக்ஷஸர்கள் புக்கழுந்தும்படி தயரதன்பெற்ற மரதகமணிபோலேயிருக்கிற தடாகத்தினை.

ப.—அநந்தரம், உங்களுடைய ஸகல க்லேசமும் தீரும்படி சீலசீதள்மான தசரதாத்மஜதடாகத்தைக் கிட்டி யநுபவியுங்கோள் என்கிறார்.

உயர்கொள் - உயர்த்தியையுடைய, சோலை - சோலைகளையும், ஒண் - விலக்ஷணமான, தடம் - தடாகங்களையும், அணி - அலங்காரமாக வுடைத்தாய், ஒளி - அத்யுஜ்ஜ்வலமான, திருமோகூர் - திருமோகூரிலே, (ஜகத் ரக்ஷகத்வத்தால்வந்த), ஆயிரம் - அஸங்க்யாதமான, பெயர்கள்உடைய - விருதுபேரையுடையராய், வல் - ப்ரபலரான, அரக்கர் - ராக்ஷஸர், (விபீஷணப்ரப்ருதிகளைப்போலே துறையறிந் திழியாமையாலே), புக்கழுந்த - புக்கழுந்தும்படியாக, தயரதன்பெற்ற - தசரதன்பெற்ற, (விஷஹரமுமாய் ஆபரணமுமான), மரதகமணி - மரகதமணிபோலே ச்யாமளமான நிறத்தையுடைய, தடத்தினை - தடாகத்தை, அடியவர் - * ருணைக-ஸ்யமுபாமதரான நீங்கள், வந்து அடைந்து - வந்துகிட்டி, தொழுமின் - தொழுங்கோள். துயர் - உங்கள்அஸஹாயத்தாலே க்லேசமானது, கடிது - சடக்கென, கெடும் - நசிக்கும். விஷஹரமுமாய் ஆபரணமுமான மரதக த்ருஷ்டாந்தத்தாலே ப்ரதிகூல நிரஸநமும் அநுகூலர்க்கு ஆச்ரயமுமாம் என்று கருத்து.

இ.—எட்டாம்பாட்டில், திருமோகூரிலே நின்றருளின ஆண்பிள்ளையான தசரதாத்மஜனை ஆச்ரயிக்க நம்முடைய து:க்கமெல்லாம்போம் என்கிறார்.

[துயர்கெடும்கடிது] - நாம் அபேக்ஷியாதிருக்க து:க்கமானது சடக்கெனத் தானே போம். [அடைந்துவந்து] - வந்தடைந்து; வந்துகிட்டி. [அடியவர் தொழுமின்] - "வழித்துணையில்லை" என்று க்லேசப்படுகிற நீங்கள் ஆச்ரயியுங்கோள். [உயர்

கோள் இத்யாதி] - உயர்ந்த சோலைகளாலும் அழகிய தடாகங்களாலும் அலங்க்ருதமான ஒளியையுடைய திருமோகூர். ஒளி - ஸமுதாயஶோபை. சோலையைக் கண்டால் வடிவை ஸ்மரிக்கலாயிருக்கும், தடாகங்களைக்கண்டால் வடிவில் ஶ்ரமஹரதையை நினைக்கலாயிருக்கும். [பெயர்கள் ஆயிரமுடைய] - ஈஶ்வரனுக்கு ரக்ஷணத்தாலே ஆயிரம் திருநாமம் உண்டாயிருக்குமாபோலே, இவர்களும் பாதகத்வத்தாலே அநேகம் பெயரையுடையராயிருப்பர்கள். "யஜ்ஞஶத்ரு, ப்ரஹ்மஶத்ரு" என்றிறே பெயர்கள். [வல்லரக்கர் புக்கழுந்த] - பெருமிடுக்கரான அஸுரர்கள் புக்கழுந்தும்படி, சக்ரவர்த்திபெற்ற நீலமணிபோலேயிருக்கிற தடாகத்தினை - அடைந்துவந்து - அடியவர் தொழுமின். "பதிதாரோரோவாபீவாரிவத்ஸர்வபோக்ய" என்கிறபடியே அநுகூலர்க்கு ரக்ஷகமாய், "காகுத்ஸ்தபாதாலவெவதநுஷ:" என்கிறபடியே உகவாதார்க்கு நாஶகமாயிறேயிருப்பது. "யோகஸம்ஸேநாஜ்ஞாதொமுஷ்டொகாநநாந்தகோநு" என்று பக்ஷியைப் போகவிட்டாரிறே.

௭௫.—எட்டாம் பாட்டு. திருமோகூரிலே நின்றருளின ஆண்பிள்ளையான தசரதாத்மஜனை ஆஶ்ரயிக்க நம்முடைய துக்கமெல்லாம் போம் என்கிறார்.

[துயர்கெடும்கடிது] - நாம் அபேக்ஷியாதிருக்கத் தன்னடையே சடக்கெனப் போம் நம்முடைய து:கங்கள். [அடைந்துவந்து] - வந்தடைந்து; வந்துகிட்டி. [அடியவர்தொழுமின்] - "வழித்துணையில்லை" என்று க்லேஶப்படுகிற நீங்கள் ஆஶ்ரயியுங்கோள். [உயர் இத்யாதி] - உயர்ந்தசோலைகளாலும் அழகிய தடாகங்களாலும் அலங்க்ருதமான ஒளியையுடைய திருமோகூர். †(ஒளி - ஸமுதாயஶோபை.) சோலையைக்கண்டால் அவன் வடிவுக்கு ஸ்மாரகமாயிருக்கும், தடாகங்களைக்கண்டால் அவன்வடிவில் ஶ்ரமஹரதைக்கு ஸ்மாரகமாயிருக்கும். * வாசத்தடம்போல் வருவானிறே அவன்தான். [பெயர்களாயிரமுடைய]-ஈஶ்வரன் ரக்ஷித்துப் படைத்த பெயர்களோபாதி போருமாய்த்து இவர்கள் பரஹிம்ஸைபண்ணிப்படைத்த பெயர்; "யஜ்ஞஶத்ரு, ப்ரஹ்மஶத்ரு" என்றாற்போலேயிறே இவர்கள் பெயர். [வல்லரக்கர்புக்கழுந்த] - பெருமிடுக்கரான அஸுரர்கள் புக்கழுந்தும்படி. [தயரதன் இத்யாதி] - சக்ரவர்த்திபெற்ற நீலமணிபோலே யிருக்கிற தடத்தை - அடைந்துவந்து அடியவர் தொழுமின். "பதிதாரோரோவாபீ வாரிவத்ஸர்வபோக்ய" (பதிதருமருவாபீ வாரிவத்ஸர்வபோக்யம்) என்கிறபடியே அநுகூலர்க்கு ரக்ஷகமாய், "காகுத்ஸ்தபாதாலவெவதநுஷ:" (காகுத்ஸ்த்தபாதால

எட்டாம்பாட்டு.—துயர் இத்யாதி. "திருமோகூர் - தயரதன்பெற்ற மரதக மணித்தடத்தை - வந்தடியவர்தொழுமின்: துயர்கெடும் கடிது" என்றவற்றைக்கடாக்ஷித்தவதாரிகை - திருமோகூரிலே இத்யாதி.

"கடிது - துயர்கெடும்" என்றதுக்கர்த்தம் - நாம் இத்யாதி. உயர்த்தியையுடைய சோலைகளாலும் அழகிய தடாகங்களாலும் அலங்க்ருதமாய் ஒளியையுடைத்தான திருமோகூரென்று ஸப்தார்த்தம். ஒளி - ஸமுதாயஶோபை. "மரதகமணித்தடம்" என்றத்தைக் கடாக்ஷித்து, இதுசொன்னதுக்கு ஹேது - சோலையை இத்யாதிவாக்யத்வயம். அப்படியிருக்குமோவென்ன - வாசத்தடம் இத்யாதி. "தேவாநாமஸஹஸ்ராணி" என்று - ஆயிரம்பேருள்ளது அவனுக்கன்றோவென்ன - ஈஶ்வரன் இத்யாதி. அந்தப்பேர்களேதென்ன - யஜ்ஞசத்ரு இத்யாதி. இவனைத் தடாகமாக ரூபித்ததுக்கு ஹேது த்வேதா அருளிச்செய்கிறார் - பதிதரு இத்யாதி. "ஸம்ஹாரிணாராவணஸாம

† குண்டலிதம் ப்ரக்ஷிப்தம்,

முகேபதந்ஸ:) என்கிறபடியே உகவாதார்க்கு நாசகமாயிறேயிருப்பது. "மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாநநுத்தமாந்" (மயாத்வம்ஸமநுஜ்ஞாதோ கச்சலோகாநநுத்தமாந்) என்று பக்ஷியையும் வழிநடத்துமவனிறே. (௭)

ஒன்பதாம் பாட்டு.

மணித்தடத்தடிமலர்க்கண்கள் பவளச்சேவ்வாய்
அணிக்கோள்நால்தடந்தோள்தேய்வம் அசுரரையேன்னும்
துணிக்கும்வல்லரட்டன் உறைபோழில்திருமோகூர்
நணித்துநம்முடைநல்லரண் நாம்அடைந்தனமே.

ஆ.—(மணித்தடத்தடி.) - நிரவயிக ஸௌந்தர்யத்தையும் ப்ரதிகூலநிரஸந ஸாமர்த்த்யத்தையும் உடையனாயிருந்த எம்பெருமான் எழுந்தருளியிருந்த, ஸர்வஸுலபமாய் பரமப்ராப்யமான திருமோகூரை நாமும் புஜிக்கப் பெற்றோமேயென்று, தம்முடைய லாபத்தைப் பேசுகிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், நமக்கு அரணான திருமோகூரை நாம் ப்ராபிக்கப் பெற்றோமென்று ஸ்வலாபத்தைப்பேசுகிறார்.

[மணித்தடத்து என்றுதொடங்கி] - ப்ரமஹாமான திருவடிகளையும், மலர் போலேயிருக்கிற திருக்கண்களையும், பவளம்போலே சிவந்த வாயையுமுடையனாய், தனக்குத்தானே ஆபரணமாய்ப் பெரிய நாலுதிருத்தோள்களையுமுடைய தைவமாய், ப்ரதிகூலரை என்றும் மாய்க்கும் ஸ்வபாவனாய், மிகவும் மிடுக்கனானவன் நிரந்தரவாஸம் பண்ணுவதுஞ்செய்த பொழிலையுடைய திருமோகூர் ப்ரத்யாஸந்நமாய்த்து.

ப.—அநந்தரம், விலக்ஷணாவயவ விசிஷ்டன் வர்த்திக்கிற திருமோகூரை நமக்கு ரக்ஷகமாகக் கிட்டப்பெற்றோமென்று ப்ரீதராகிறார்.

மணித்தடத்து - தெளிந்த தடாகம்போலே (குளிர்ந்த), அடி - திருவடிகளையும், மலர் - விகஸிதமான தாமரைபோலேயிருக்கிற, கண்கள் - திருக்கண்களையும், பவளம்செவ்வாய்-பவளம்போலே சிவந்த திருவதரத்தையுமுடையனாய், அணிக்கொள்-* ஸர்வபூஷண பூஷார்ஹமாய், நால் - நாலுவகைப்பட்ட, தடம் - பெரிய, தோள் - திருத்தோள்களையுடைய, தெய்வம் - திவ்யவிக்ரஹத்தையுடையனாய், (இவ்வழகுக்குப்

ரேண ப்ராத்ரா நிரஸ்தோஸ்ம்யஹம் | யாத்ரஸம் தாரயிதாமஸஸே தரக்ஷாகாம ஸர்வதாருசேஷ வைவதநுவஸ:" இதி ப்ரஹஸ்தாதீந்ப்ரதி விபீஷண:. (ராம-யு-௧௭-௨௰) வழித்துணையாகப் பற்றுகிறவிடத்திலே சக்ரவர்த்தித்திருமகனைச் சொல்லுவானென்னென்ன-மயாத்வம்இத்யாதி. "யா கதிர்யஜ்ஞஶீலாநாமாஹிதாக்நேஶ்ச யா கதி: | அபராவர்த்திநாம் யா ச யா ச பூமிப்ரதாயிநாம் (௬௮-௨௯½) மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாநநுத்தமாந்" இத்யாரண்யகாண்டே ராம:. 'உயர்கோள்சோலை' என்று தொடங்கி, 'மணித்தடத்தினை - அடியவர் - வந்து - அடைந்து - தொழுமின்: கடிது - துயர்கெடும்' இத்யந்வய:. (௮)

புறம்பு ரக்ஷைதேடவேண்டாதபடி), அசுரரை - ஆஸுரப்ரக்ருதிகளை, என்றும் - ஸர்வ காலமும், துணிக்கும் - சேதிக்கும், வல்அரட்டன் - பெருமிடுக்கனானவன், (ஆஸ்ரிதர்க்கு அச்சமறும்படி அநுஸாவ்யமாகைக்காக), உறை - நித்யவாஸம்பண்ணுமிடமாய், பொழில் - (ஸேவ்யமான) பொழிலையுடைய, திருமோகூர் — திருமோகூராகிற, நம்முடை - நம்முடைய, நல்அரண் - விலக்ஷணரக்ஷகமான தேசமானது, நணித்து - அத்யாஸந்நமாய்த்து: நாம் - (துணைதேடித் தனிமைப்படுகிற) நாம், அடைந்தனம் - அணுகப்பெற்றோம். அரட்டன் - மிடுக்கன்.

இ.—ஒன்பதாம்பாட்டில், நமக்கு அரணான திருமோகூரை நாம் ப்ராபிக்கப் பெற்றோமென்று ஸ்வலாபத்தைப்பேசுகிறார்.

[மணித்தடத்தடி] - தெளிந்ததொரு தடாகம்போலேயாய்த்துத் திருவடிகளிருப்பது. ஶ்ரமஹரமான திருவடிகளென்கை. [மலர்க்கண்கள்] - அந்தத் தடாகம் பூத்தாற்போலேயாய்த்துத் திருக்கண்கள் இருப்பது. [பவளச்செவ்வாய்] - பவளம் போலே சிவந்த திருவதரத்தையுடையனாய். [அணிக்கொள் இத்யாதி] - தனக்குத் தானே ஆபரணமாய்ப் பெரிய நாலுதிருத்தோள்களையுமுடைய தைவம். அவன் வழித்துணையாம்போது ஶ்ரமஹரமான வடிவும் தன் உகப்புத்தோற்றின ஸ்மிதவீக்ஷணமுமுடையனாய், ஒரு கல் மதிளுக்குள்ளேபோமாபோலே அச்சங்கெடும்படியாய்த்துக் கொடுபோவது. [தெய்வம்] - விஜிகீஷையோடேயாய்த்துக் கொடுபோவது. இவனுக்கு எங்கே என்ன தீங்குவருகிறது என்னும் அதிஶங்கையினாலே, ஆசிலேவைத்த கையும் தானுமாய்ப்போகை. [அசுரரை என்றும் துணிக்கும் வல்லரட்டன்] - அஸுரவர்கத்தை என்றும் † துணித்தொடுக்கும் பெருமிடுக்கன் நித்யவாஸம்பண்ணுகிற பொழிலையுடைய திருமோகூர். "ஸிம்ஹம்வர்த்திக்கும் முழைஞ்சு" என்னுமாபோலே. [நணித்து] - கிட்டிற்று. ப்ரத்யாஸந்நம். [நம்முடை நல்லரண்] - நமக்கு ரக்ஷகமான தேசத்தை. [நாம் அடைந்தனம்] - ரக்ஷகாபேக்ஷையுடைய நாம் கிட்டப்பெற்றோம்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. நமக்குஅரணான திருமோகூரை நாம் ப்ராபிக்கப் பெற்றோமென்று ஸ்வலாபத்தைப் பேசுகிறார்.

[மணித்தடத்தடி] - தெளிந்த தடாகம்போலேயாய்த்துத் திருவடிகளிருப்பது. ஶ்ரமஹரமான திருவடிகளென்கை. [மலர்க்கண்கள்] - அத்தடாகம் பூத்தாற்போலேயாய்த்துத் திருக்கண்கள் இருப்பது. [பவளச்செவ்வாய்] - ப்ரவாளம்போலே சிவந்த திருவதரத்தையுடையனாய், தனக்குத் தானே ஆபரணமாயிருக்கும் பெரிய நாலுதிருத்தோள்களையுமுடைய தெய்வம். அவன் வழித்துணையாகப் போம்போது, ஶ்ரமஹரமான வடிவும் தன்னுகப்புத்தோற்றின ‡ஸ்மிதவீக்ஷணாதிகளையும் உடையனாய், ஒருகல் மதிளுக்

ஒன்பதாம்பாட்டு.—மணித்தடத்து இத்யாதி. "நம்முடை நல்லரண் நாமடைந்தனமே" என்றத்தைக் கடாக்ஷித் தவதாரிகை - நமக்கு இத்யாதி.

"மணி" என்கையாலே - நைர்மல்யம் சொல்லுகிறது. இத்தால்பாவம் - ஶ்ரமஹரமான இத்யாதி. * தடத்துக்கநந்தரம் "மலர்" என்றதுக்குபாவம் - அத்தடாகம் இத்யாதி. "அணிக்கொள் - தடம் - நால் - தோள்தெய்வம்" என்றந்வயிப்பது. வழித்துணைசொல்லுகிறவிடத்திலே திவ்யாவயவங்களைச் சொல்லுகிறதுக்குபாவம் - அவன்வழித்துணையாக இத்யாதி. "அடி" என்று திருமேனிக்கும் உபலக்ஷணம். "தெய்வம்" என்றது - "திவுக்ரீடாவிஜிகீஷா" இத்

† துணித்தடுக்கும் என்று காணப்படுகிறது. ‡ ஸ்மிதவீக்ஷணங்கள் என்றிருக்கலாம்.

குள்ளே போமாபோலே அச்சங்கெட்டுப் போம்படியாய்த்துத் தோள்நிழலிலே யொதுங்கிறு லிருக்கும்படி. விஜிகீஷையோடேயாய்த்துப் போவது : "வழியிலே யெங்கே யென்ன ப்ரதிபந்தகம்வருகிறதோ?" என்று ஆசிலேவைத்த கையுந்தானுமாயாய்த்துப்போவது. [அசுரரையென்றும் துணிக்கும் வல்லரட்டன்] - அஸுரவர்க்கத்தை யென்றும் துணிக்கும் பெருமிடுக்கன். [உறைபொழில்திருமோகூர்] - நித்யவாஸம்பண்ணுகிற பொழிலையுடைய திருமோகூர். "ஸிம்ஹம்வர்த்திக்கும் முழைஞ்சு" என்னுமாபோலே. [நணித்து] - கிட்டிற்று - ப்ரதயாஸந்நம். [நம்முடைநல்லரண்] - நமக்கு ரக்ஷகமான தேசத்தை. [நாம் அடைந்தனமே] - ரக்ஷாபேக்ஷையுடைய நாம் கிட்டப் பெற்றோம். (க)

பத்தாம் பாட்டு.

நாமடைந்தநல்லரண்நமக்கென்றுநல்லமரர்
தீமைசெய்யும்வல்லசுரரை அஞ்சிச்சென்றடைந்தால்
காமரூபங்கொண்டு எழுந்தளிப்பான்திருமோகூர்
நாமமேநவின்றுஎண்ணுமின்ஏத்துமின்நமர்காள் !

ஆ.—(நாமடைந்த.) - திருமோகூரே நமக்கெற்றைக்கும் ப்ராப்யமாக நாம் அடையப்பெறுவதே! என்று பின்னையும் ஸ்வலாபத்தைச் சொல்லி யநுபவித்து, ஆச்ரிதருடைய இச்சாநுகுணமான வடிவைக்கொண்டு அவர்களுடைய விரோதிகளை நிரஸித்து ரக்ஷித்தருளுமவன் எழுந்தருளியிருந்த திருமோகூரினுடைய திருநாமத்தையே சொல்லி அவ்வூரை யேத்துங்கோள் என்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், ஸர்வரக்ஷகனுமிருக்கிறவன்எழுந்தருளியிருக்கிறதிருமோகூரை ஆதரித்துநினைத்துஏத்துங்கோள், நமக்குபந்துக்களாயுள்ளார் என்கிறார்.

[நாமடைந்த என்று தொடங்கி] - நமக்கு நாம் பற்றின நல்லரண் என்று உபாயஜ்ஞரான அமரர், பாதகரான அஸுரரை அஞ்சிச்சென்று ஆச்ரயித்தால் அவர்களுடைய ரக்ஷணத்துக்கு வேண்டும் வடிவைக்கொண்டு புறப்பட்டு ரக்ஷிக்குமவனுடைய திருமோகூரினுடைய.

ப.—அநந்தரம், ஆச்ரிதவிஷயத்தில் அபீஷ்டவிக்ரஹ பரிக்ரஹம்பண்ணி ரக்ஷிக்குமவனுடைய திருமோகூரினுடைய திருநாமத்தை, நம்மோடு அந்வயமுடையார், அநுஸந்தித்து ஏத்துங்கோள் என்கிறார்.

'நமக்கு - நமக்கு அஸாதாரணமாக, நாம்அடைந்த - நாம்பற்றின, நல்லரண் - விலக்ஷணமானஅரண்', என்று - என்றுகொண்டு, நல்அமரர் - நல்லதறியும் தேவர்களானவர்கள், தீமைசெய்யும் - பொல்லாங்கை ப்ரவர்த்திக்கக்கடவ, வல் - ப்ரபலரான, அசுரரை - அஸுரர்களைக்குறித்து, அஞ்சிச்சென்றடைந்தால் - அஞ்சிச்சென்றாச்ரயித்

யாதி ப்ராதுர்பூதமான விஜிகீஷையைச் சொல்லுகிறதென்கிறார் - விஜிகீஷையோடே இத்யாதி. விவரணம் - வழியிலே இத்யாதி. ஆசிலே - ஆயுதப்பிடியிலே. "வல்" என்று - பெருமையாய், "அரட்டு" என்று - மிடுக்காய், பெருமிடுக்கனென்றபடி. "வல்லரட்டன்" இத்யாதிக்கு ஹாவம் - ஸிம்ஹம் இத்யாதி. (க)

தால், காமரூபங்கொண்டு - அநுரூபமாய் அபீஷ்டமான வடிவைக்கொண்டு, எழுந்து - கிளர்ந்து, அளிப்பான் - ரக்ஷிக்குமவன், திருமோகூர் - திருமோகூரினுடைய, நாமமே - பேர்பட்டபுகழையே, நமர்காள் - நம்மோடு அநுபந்தமுடைய நீங்கள், நவின்று - பயின்று, எண்ணுமின் - நினையுங்கோள்; (அவ்வளவில் பர்யவஸியாதே), ஏத்துமின் - ப்ரீதிப்ரேரிதரா யேத்துங்கோள். காமரூபம் என்று - அம்ருதப்ரதாநதசையில் பெண்ணாகி யமுதூட்டினபடியைச் சொல்லிற்றாகவுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், ரக்ஷகனானவன்வர்த்திக்கிற திருமோகூரை, நமக்கு பந்துக்களானார் ஆதரித்து நினைத்து ஏத்துங்கோள் என்கிறார்.

[நாம் அடைந்த இத்யாதி] - நமக்கு நாம் ரக்ஷகமென்று அடைந்த நல்ல அரண் என்று. [நல்லமரர்] - தங்கள் ஆபத்துக்கு இவனே உபாயம் என்றிருக்கையாலே 'நல்லமரர்' என்கிறார். இதிறே அஸுரர்களிற்காட்டில் வ்யாவ்ருத்தி. பரஹிம்ஸையே யாத்ரையாயிருக்கிற அஸுரர்களுக்கு அஞ்சிவந்து சரணம்புக்கால். [காமரூபங்கொண்டு இத்யாதி] - ரக்ஷணாநுரூபமான வடிவைக்கொண்டு புறப்பட்டு ரக்ஷிக்குமவன் வர்த்திக்கிற திருமோகூரினுடைய. [காமரூபம்] - "நரஸ்யார்த்த தநும் க்ருத்வா ஸிம்ஹஸ்யார்த்த தநும் ததா" என்கிறபடியே, ஊரின்பேரை வாயாலே சொல்லி அத்தை அநுஸந்தித்து ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஏத்துங்கோள் நம்முடையவர்கள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. ஸர்வரக்ஷகன் வர்த்திக்கிற திருமோகூரை, நமக்கு பந்துக்களானார், ஆதரித்து நினைத்தேத்துங்கோள் என்கிறார்.

[நாம் அடைந்தவித்யாதி]-"நமக்கு ரக்ஷையாக நாம்கிட்டின நல்லரண்"என்று அவர்கள் பாசுரமிருக்கும்படி. [நல்லமரர்] - தங்கள் ஆபத்துக்கு இவனே யுபாயமென்றிகையாலே 'நல்லமரர்' என்கிறார். அசுரர்களிற்காட்டில் வ்யாவ்ருத்தியித்தனையுமிறே. [தீமைசெய்யும் இத்யாதி] - பரஹிம்ஸையேயாத்ரையாயிருக்கிற அஸுரர்களுக்குஅஞ்சி வந்து சரணம் புக்கால். [காமம் இத்யாதி] - ரக்ஷணாநுரூபமான வடிவைக்கோண்டு புறப்பட்டு ரக்ஷிக்கிறவன் வர்த்திக்கிற திருமோகூர். [நாமமே நவின்று] - ஊரின்பேரை வாயாலேசொல்லி யநுஸந்தித்து, ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஏத்துங்கோள் நம்முடையவர்கள்.

பத்தாம்பாட்டு.—நாமடைந்த இத்யாதி. "எழுந்தளிப்பான் திருமோகூர் நாமமேநவின்றெண்ணுமின் ஏத்துமினமர்காள்" என்றவற்றைக் கடாக்ஷித் தவதாரிகை - ஸர்வரக்ஷகன் இத்யாதி. "நமக்கு - நாமடைந்தநல்லரண்" என்றந்வயம். ரக்ஷையாகவென்றது - அத்யாஹார்யம். ஈச்வராபிமாநிகளை "நல்லமரர்" என்பானேன் அவர்களென்றது - வக்ஷ்யமாணரான நல்லமரரை. ஃபலிதம் - அசுரர்களில் இத்யாதி. "தீமைசெய்யும்" என்றுனென்ன - தங்களாபத்து இத்யாதி. பரஹிம்ஸையே யாத்ரையாய் என்றது. "அசுரரை" என்றது-நிரூபகமாகச் சொல்லுகையாலே - பரஹிம்ஸையே யாத்ரையாய் என்றது. "அசுரரை" என்றது-அசுரர்க்கென்றபடி. எழுந்து - புறப்பட்டு. நவின்று - வாயாலேசொல்லி. எண்ணுமின் - அநுஸந்தியுங்கோள். 'நல்லமரர் - நமக்கு ரக்ஷையாக - நாமடைந்தநல்லரண் - என்று' என்றுதொடங்கி, 'ஏத்துமின்நமர்காள்' இத்யந்வய:. திருமோகூரினுடைய நாமமேயென்றபடி. (கo)

பதினோராம் பாட்டு.

ஏத்துமின் †நமர்காள்!என்றுதான் குடமாடு
கூத்தனைகுருகூர்ச்சடகோபன் ‡குற்றேவல்கள்
வாய்த்தஆயிரத்துள்இவை வண்திருமோகூர்க்கு
ஈத்தபத்திவைஏத்தவல்லார்க்குஇடர்கெடுமே.

ஆ.—(ஏத்துமின்.) - என்னுடைய திவ்யமான சேஷ்டிதங்களை யுகந்திருப்பார் எல்லாரும் வந்தேத்தி வாழுங்கோளென்று தான் குடமாடுகூத்தனைக் குருகூர்ச்சடகோபன் சொன்னவாயிரத்தில், திருமோகூரைச்சொன்ன இத்திருவாய்மொழியைக் கொண்டு அவ்வூரை யேத்துங்கோள் என்கிறார்.

ஒ.—நிகமத்தில், திருமோகூர்க்குக் கொடுத்த இத்திருவாய்மொழியை விரும்புவார்க்கு ஸகல து:க்கங்களும் போமென்கிறார்.

[ஏத்துமின் என்று தொடங்கி] - தன்னுடைய திவ்யசேஷ்டிதங்களை உகந்திருப்பார் எல்லாருங்கண்டு வாழுங்கோளென்று தான் குடமாடுகையாகிற மநோஹாரி சேஷ்டிதங்களையுடையனானவனைக் குறித்து அந்தரங்கவ்ருத்திகளாய்க்கொண்டு நேர்ப்பட்ட ஆயிரம் திருவாய்மொழியிலும்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக, ஐஹிகத்ப்ராப்தி விரோதிநிவ்ருத்தியை யருளிச்செய்கிறார்.

நமர்காள் - நம்முடையவர்களெல்லாரும், ஏத்துமினென்று - (உங்களுகப்புத் தோற்றும்படி) ஏத்துங்கோளென்று, தான் குடமாடுகூத்தனை - தான்குடங்கொண்டாடின கூத்தனானவனைப்பற்ற, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடைய, குற்றேவல்கள் - அந்தரங்கவ்ருத்திகளாய், இவை - (ஈச்வரனுக்குத் தகுதியாம்படியாக),வாய்த்த-, ஆயிரத்துள் - ஆயிரத்துக்குள்ளே, வண்திருமோகூர்க்கு - விலக்ஷணமான திருமோகூர்க்கு, ஈத்தபத்திவை - ஸமர்ப்பிக்கப்பட்ட பத்து: (இவற்றை), ஏத்தவல்லார்க்கு- ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு சொல்லவல்லவர்களுக்கு, இடர்கெடும் - (பரிஸரவஸாநத்திலே வழித்துணை யில்லாத) து:க்கம் தீரும்.

இ.—நிகமத்தில், திருமோகூர்க்குக் கொடுத்த இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார்க்கு து:க்கநிவ்ருத்தி உண்டாம் என்கிறார்.

[ஏத்துமின்] - நச்சேஷ்டிதங்களை உகப்பார் எல்லாருங்கண்டு வாய்படைத்த ப்ரயோஜநம் பெறும்படி ஏத்துங்கோளென்று தானேசொல்லிக் குடக்கூத்தாடினவனை. [குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள்] - ஆழ்வாருடைய அந்தரங்க வ்ருத்திகள். அவன் குடக்கூத்தை அநுஸந்தித்து இவர் வாசிகமான அடிமையிலே அதிகரித்தார். [வாய்த்த ஆயிரத்துள்இவை] - ஸர்வேச்வரனுக்கு நேர்பட்ட ஆயிரத்துக்குள்ளேயுள்ள இவை. [வண்திருமோகூர்க்கு ஈத்தபத்து] - விலக்ஷணமான திருமோகூர்க்குக்கொடுத்த பத்து. "ரத்நஹாரீ ச பார்த்திவ:" என்னுமாபோலே இப்பத்தின்நன்மையாலே இவை திரு

† 'எமர்காள்' என்றும் பாடம். ‡ 'குற்றேவல்' என்பதும் பாடம்.

மோகூர்க்காயிருந்ததென்று கொடுத்தார். [இவை ஏத்தவல்லார்க்கு இடர்கெடுமே] - இப்பத்தை அப்யஸிக்கவல்லார்க்கு, ஶரீராவஸாநத்திலே "வழித்துணையில்லை" என்று க்லேஶப்பட வேண்டாதபடி காளமேகம் வழித்துணையாம்.

ஈடு.—நிகமத்தில், பரமோதாரமான திருமோகூர்க்குக்கோடுத்த இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார்க்கு து:கநிவ்ருத்தியுண்டாம் என்கிறார்.

[ஏத்துமின்] - நம்சேஷ்டிதங்களை யுகப்பார் எல்லாரும் கண்டு வாய்படைத்த ப்ரயோஜநம் பெறும்படி யேத்துங்கோளென்று, தான்சொல்லி, அதுக்கு விஷயமாகத் தான் குடக்கூத்தாடினவனை. [குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள்] - ஆழ்வாருடைய அந்தரங்க வ்ருத்திகள். அவன்குடக்கூத்தை யநுஸந்தித்து இவர் வாசிகமான அடிமையிலே யதிகரித்தார். [வாய்த்தவாயிரத்துள்ளிவை] - ஸர்வேஶ்வரனுக்கு நேர்பட்ட ஆயிரத்துக்குள்ளே வாய்த்தவையாய்த்து இவை. [வண்திருமோகூர்க்கு ஈத்தபத்து] - பரமோதாரமான திருமோகூர்க்குக் கோடுத்த பத்து. "*ரத்நஹாரீச பார்த்திவ:*" (ரத்நஹாரீசபார்த்திவ:) என்னுமாபோலே, இத்திருவாய்மொழியில் இனிமையாலே திருமோகூர்க்காயிருந்தனவென்று கோடுத்தார். [இவையேத்தவல்லார்க்கு இடர்கேடும்] - இப்பத்தை யப்யஸிக்க வல்லார்க்கு, ஶரீராவஸாநத்தில், "வழித்துணையில்லை" என்று க்லேஶப்படவேண்டாதபடி காளமேகம் வழித்துணையாம். (கக)

நிகமம் - ஏத்துமின் இத்யாதி. "வண்திருமோகூர்க்கீத்த பத்திவையேத்தவல்லார்க்கு இடர் கெடும்" என்றத்தைக்கடாக்ஷித் தவதாரிகை - பரமோதாரமான இத்யாதி.

அதுக்கு - ஏத்துகைக்கு. அவன் "எமர்காள் - ஏத்துமின்" என்றதிவர்க்கு ஸலித்ததென்கிறார் - அவன் குடக்கூத்தை இத்யாதி. "வாய்த்த" என்றது - ஆயிரத்துக்கும் பத்துக்கும் விசேஷணம். ஈத்த - கொடுத்த. ஆயிரத்திலும் இப்பத்தைக்கொடுப்பானென்னென்ன - ரத்நஹாரீ இத்யாதி. "யாநி ரத்நாநி ஸந்தீஹ தாநி ஸர்வாணி தே ந்ருப! ரத்நஹாரீ ச பார்த்திவ:" இதி பாலகாண்டே வஸிஷ்டம் ப்ரதி விஶ்வாமித்ர:(ருங க). "இடர்கெடும்" என்றதால் ஸலிதம் - இப்பத்தை இத்யாதி. 'எமர்காள் - ஏத்துமின் - என்று தான் குடமாடு' இத்யாரப் யாந்வய:. (கக)

—

த்ராவிடோபநிஷத்ஸங்கதி.--ஸ்நேஹி ஶ்ரேஷ்ட்²யஸ்ய தஸ்ய ப்ரதிநிதி⁴ஸுலப⁴ ஸ்ராணிஶ்ரித்ய வத்ஸநிஸமாய ஸைந்யக்ஷோண: ஸ்வயம் ஸித ஜநஸமஸித ஸிஷ்ஸா ஸ்வராஜாக்ஷம் கோஸமுராயீஶ ஸ்வஸ்ய வேஶிணோ பூர்யதா:॥

—

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—தைத்யாநாம் நாஶகத்வா த்³யுதததமஸி காலமேகத்வாஜ்ஜயித்வா ஸ்வதாயீ ஸம்ஶயத்வா த்³ரவயித்வா த்³ரவீகரணாத் ஜ்யோதி ராஜ்ஞோ ஸ்வஸ்யாஸாவாத்: । லோகாநாம் ஸ்வஸ்ய ஷட்³ஸாவா உபாயஸ்த்வாதீ ஸமாஸ்ரிதா ஹாரிகந்தவேந்ராகாரேஸ்வஸ்ய ஸ்வாரஜத்வம் தநுராஶ்ரிதே தநாஸ்யாயி.

—

திருவாய்மொழி நூற்றந்தாதி }

தாளடைந்தோர்தங்கட்குத் தானேவழித்துணையாம்
காளமேகத்தைக் கதியாக்கி - மீளுதலாம்
ஏதமிலா விண்ணுலகில்ஏகவெண்ணும்மாறனெனக்
கேதமுள தெல்லாம் கெடும்.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானார் திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

இரண்டாந் திருவாய்மொழி—கேடுமிடர் ப்ரவேசங்கள்.

ஆ.—(கெடுமிடர்.) - இப்படி ஸ்ரீவைஷ்ணவர்களோடேகூடத் திருமோகூரில் எம்பெருமானையநுபவித்து, திருவநந்தபுரத்திலேயும் அவனை இவர்களோடேகூட அநுபவிக்கைக்காக,—

ஒ.—இரண்டாம் திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியிலே தமக்கு வழிகொடுபோகைக்கு நல்லதுணையைப் பெற்ற ஆழ்வார், "தமக்கு ப்ராப்யதேசம் ஏதோ?" என்று ஆராய்ந்து, ஸாம்ஸாரிக ஸகலது:க்கங்களுமின்றிக்கே நிரதிசய போக்யமாய், நித்யஸூரிகளுக்குங்கூட ஸ்ப்ருஹணீயமாய், தமக்கு எல்லா அடிமையும் செய்கைக்கு யோக்யமாயிருந்துள்ள திருவனந்தபுரத்தை ப்ராப்யதேசமாக அத்யவஸித்து, அங்கேபோய் ஸர்வஶேஷவ்ருத்தியும் பண்ணவேணுமென்று அநுகூலஜநங்களோடேகூடப் போகையிலே உத்யோகிக்கிறார்.

ப.—இரண்டாந் திருவாய்மொழியில், கீழே வழித்துணையாகக் காளமேகத்தை ஆஶ்ரயித்த இவ்வாழ்வாரை ப்ராப்யதேசத்தேறக் கொண்டுபோக உத்யோகித்த ஸர்வேஶ்வரன், "தேசத்தினுடைய ப்ராப்யத்வத்தையும் தன்னுடைய கைங்கர்ய ப்ரதிஸம்பந்திதையையும் இந்தவிஷயத்திலே ப்ரகாஶிப்பித்து இவர் உகப்பை விளைப்பித்துக்கொண்டுபோவோம்" என்று திருவுள்ளம்பற்றி, நிரதிஶயபோக்யமான திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிறபடியைக்காட்டக் கண்டு ஸந்துஷ்டராய்; அவனுடைய ஆஶ்ரித ஸம்ஶ்லேஷஸ்வபாவத்தையும், ஆஶ்சர்யாவஹமான அந்வயத்தையும், அஶேஷஜகத்ரக்ஷகத்வத்தையும், அநவதிக வாத்ஸல்யத்தையும், அநுபஹிதஶேஷித்வத்தையும், ஸர்வதேவநிர்வாஹகத்வத்தையும், ஸகலஜகத்ஸ்ருஷ்ட்யாதியோகத்தையும், பரமப்ராப்யத்வத்தையும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையும், ஆராதநவைலக்ஷண்யா பாதகத்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேஶ்வரன் வர்த்திக்கிற திருவனந்தபுரந்தன்னையே ப்ராப்யமாக அறுதியிட்டு, இங்கே தம்முடைய ஸகலக்லேஶமும் தீரும்படி அவனுடைய போக்யமான திருநாமங்களைக் கீர்த்தித்தும், பஹுமுகமான கைங்கர்யங்களைப் பண்ணியும், அநுகூலஜநங்களோடே அநுபவிக்கப்பார்க்கிறார்.

இ.—இரண்டாந் திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியிலே தமக்கு வழிகொடுபோகைக்குத் துணைபெற்ற ஆழ்வார், "தமக்கு ப்ராப்ய தேசம் ஏதோ?" என்று ஆராய்ந்து, "திருவனந்தபுரமே ப்ராப்யம்" என்று அறுதியிட்டாராய், ஸர்வேஶ்வரன் தான் வந்து விரும்பி வர்த்திக்கும்படியான போக்யதையாலும், அவன் நித்யவாஸம் பண்ணுகையாலே ஸாம்ஸாரிக துரிதம் தட்டாமையாலும், நித்யஸூரிகளும் இங்கேவருகையாலே அடியார்கள் குழாங்களும் இங்கே உண்டாய் அத்திரளிலே சென்று புகலாம்படியிருக்கையாலும், அவ்வருகே போக்குண்டானால் அவர்களோடே போகலாயிருக்கையாலும், வழிபோமிடத்தில் "ஸாதிப்ரநாதஹ்ருஹீதஃ" என்னும்படியாலே ஆதிவாஹிகரில் தலைவனாய்த் தன்பேறாகக் கொண்டுபோவான் ஒருவனாகையா

லும், அங்குப்போனால் பெறக்கடவ அடிமையை "கடைத்தலை சீய்க்கப்பெற்றால் கடுவினை களையலாம்" என்று இங்கே பெறலாயிருக்கையாலும் திருவநந்தபுரமே ப்ராப்யமென்று அறுதியிட்டு, அங்கேபோய்ப் புகுகைக்கு அநுகூலஜனங்களோடே கூடப்போகைக்கு உத்யோகிக்கிறார். உகந்தருளின நிலங்களிற்காட்டில் திருவனந்தபுரத்தை ப்ராப்யமென்கைக்கு அடி, "கடைத்தலை சீய்க்கப்பெற்றால்" என்று அடிமைசெய்யலாயிருக்கையாலும், "அமரர்கோனர்ச்சிக்கின்று அங்ககப்பணி செய்வர் விண்ணோர்" என்று நித்யஸூரிகளும் இங்கே வருகையாலும்: இவர் ஒன்றை ஆதரித்தால் அதுக்குத் தக்க பாசுரமிட்டுச் சொல்லுமித்தனைபிறே.

ஈடு.—"'ஒருநற்சுற்றம்' என்கிறதிருமொழியிலே பலதிருப்பதிகளையும் அருளிச்செய்த இதுக்குக் கருத்தேன்?" என்று சீயர் பட்டரைக்கேட்க, "பிறந்தகத்தில்நின்றும் புக்ககத்துக்குப்போம் பெண்பிள்ளைகள் ஸம்பந்திகளிருந்தவிடமெங்கும் கண்டு வினவப்போமாபோலே, ப்ராப்யபூமியணித்தானவாறே திருப்பதிகள்தோறும் புகுகிறார்" என்றருளிச்செய்தார். இவரும் அப்படியே திருப்புளிங்குடியிலேபுகுவது, திருக்காட்கரையிலே புகுவது, திருமூழிக்களத்திலேபுகுவது, திருநாவாயிலேபுகுவது, திருக்கண்ணபுரத்திலேபுகுவது, திருமோகூரிலேபுகுவது, திருவனந்தபுரத்திலே புகுவதாகிறார். ப்ராப்யபூமியேறப் போவதாக ஒருப்பட்டு, நடுவுண்டான ப்ரதிபந்தகங்களைப்போக்கி வழிகொடுபோய்விடுகைக்குக் காளமேகத்தைத் துணையாகப்பற்றினாராய் நின்றது - கீழ்; "அவ்வளவுதான் நமக்குப்போகவேணுமோ, இங்கே (நமக்கு) திருவனந்தபுரம் ப்ராப்யமாகவுண்டாயிருக்க?" என்று திருவனந்தபுரத்தை ப்ராப்யமாக அத்யவஸித்து; அத்தேசமாகிற இதுதான், வாசமே கமழுஞ்சோலை வயலணியனந்தபுர மாகையாலே, அவன்தனக்குவிரும்பி வர்த்திக்கவேண்டும்படி நிரதிசயபோக்யமுமாய், அவன்வந்து வர்த்திக்கையாலே ஸம்ஸாரதுரிதமும் தட்டாதவிடமுமாய், இஶ்ஶரீரஸம்பந்தமற்று அவ்வருகுபோனால் செய்யுமடிமையை ருசிபிறந்தபோதே இங்கேசெய்யலாம்படியுமாய், இனித்தான் 'அமரர்கோனர்ச்சிக்கின்றங்ககப் பணிசெய்வர்விண்ணோர்" என்கிறபடியே நித்யஸூரிகளும் வந்தடிமைசெய்கிற தேசமாகையாலே "அடியார்கள்குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ?" என்று ஆசைப்பட்டபடியே அவர்களோடேகூடவுமாய், அவ்வருகுபோக வேண்டிற்றாகிலும் "பேரியோரை யொருகாலும்பிரிகிலேன்" என்கிறபடியே அவர்களோடேபோகவுமாயிருக்குமிறே. உகந்தருளின நிலங்களில் நிலைதான் - முதலிலே பகவத்விஷயத்தில் ருசியைப்பிறப்பிக்கைக்கு உடலுமாய், ருசிபிறந்தால் "**யேயதாமாம்ப்ரபத்யந்தே**" (யேயதாமாம்ப்ரபத்யந்தே) என்கிறபடியே ஸௌலப்யத்துக்கு எல்லைநிலமுமாகையாலே உபாய பாவமும் பூர்ணமாய், ப்ராப்யபூமியில் கொடுபோமிடத்தில், ஆதிவாஹிககணத்தில் ப்ரதாநனை

---

*கெடுமிடர் ப்ரவேசமே; * பண்டைநாள் தொடங்கிப் பலகாலும் திருப்பதிகளை யருளிச்செய்வானென்னென்ன - ஒருநற்சுற்றம் இத்யாதி. கீழோடுஇத்திருவாய்மொழிக்கு ஸங்கதி ப்ராப்யபூமி இத்யாதி. "சுரும்பலற்றும்" இத்யாதியைப்பற்ற - ப்ராப்யமாகவுண்டாயிருக்க என்றது. ப்ராப்யமாக அத்யவஸிக்கைக்கடியேதென்ன, பலஹேதுக்களாலே அது ப்ராப்யமாம் ப்ரகாரத்தை தர்ஶிப்பிக்கிறார் - அத்தேசமாகிற இத்யாதி. "நேசஞ்செய்து" என்றத்தைப்பற்ற - அவன்றனக்கு விரும்பி இத்யாதி. "தீருநோய்வினைகளெல்லாம்" என்றத்தைப்பற்ற - ஸம்ஸாரதுரிதம் இத்யாதி. "கடைத்தலைசீய்க்கப்பெற்றால்" இத்யாதியைப்பற்ற - இஶ்ஶரீரஸம்பந்தம் இத்யாதி. உத்தாகாரங்களெல்லாம் இங்குக்கூடுமோவென்ன - உகந்தருளின இத்யாதி. 'உடலாயிருக்குமிறே'*

தானே "ஹார்தாநுக்ருஹீத:" (ஹார்த்தாநுக்ருஹீத:) என்கிறபடியே வழியில் ப்ரதிவந்த்யகங்களைப்போக்கிக் கொடுபோகைக்கும் முற்பாடனைக்கும் உடலாய், ஸம்ஸாரஸம்பந்தமற்று அவ்வருகேபோனால் செய்யும்அடிமையை விரோதிகிடக்கச்செய்தே காதாசித்கமாகச்செய்கைக்கும் உடலாயிருக்குமிறே. ஆக, "ருசியைப்பிறப்பிக்கைக்கும் உடலாய், ருசிபிறந்தபோதே யுபாயமாகைக்கும் உடலாய், ஜ்ஞாநஶக்திவர்த்தகங்களுமாய், விரோதியும் கிடக்கச்செய்தே யடிமைசெய்கைக்கும் உடலாயிருக்கையாலே, திருவனந்த புரமே பரமப்ராப்யம்" என்றறுதியிட்டு, நம்மோடு ஸம்பந்தமுடைய அஜகூலஜநங்க ளடங்க அங்கேபோய்த் திரளுங்கோளென்கிறார். இதுதான் அல்லாததிருப்பதிகளுக்கும் ஒவ்வாதோ? "யாவரும் வந்துவணங்கும்பொழில் திருவாறன்விளையதனை மேவிவலஞ் செய்து கைதொழக்கூடுங்கொலென்னு மென்சிந்தனையே" என்று இத்யாதிகளுமுண்டே யென்னில் ? - எல்லாவற்றுக்கும் எல்லாமுண்டாயிருந்தாலும் ஓரோவிடங்களிலே ஓரநுஸந் தாநவிசேஷங்களோடினால் அதுக்குச்சேர வார்த்தைசொல்லு மித்தனையிறே.

முதற் பாட்டு.

கெடும்இடராயவெல்லாம் கேசவாவென்னநாளும்
கொடுவினைசெய்யுங்கூற்றின்தமர்களுங்குறுககில்லார்
விடமுடையரவில் பள்ளிவிரும்பினான்சுரும்பலற்றும்
தடமுடைவயல் அனந்தபுரநகர்புகுதும்இன்றே.

ஆ — *திருவனந்தபுரத்திலே போய்ப்புகுகைக்கு ப்ரதிபந்தகம்போகைக்கு கேசவாவென்று திருநாமத்தைச் சொல்லிக்கொண்டுபோய்ப் புகுவோம்; வாருங்கோள் என்கிறார்.*

ஓ.— முதற்பாட்டில், ப்ராப்யமான திருவநந்தபுரத்துக்குப் போகைக்குப் ப்ரதிபந்தக கர்மங்களெல்லாம் போம்: நமக்கு இனிதாக "கேசவா" என்னும் இத்திரு

ஆகையாலே கூடுமென்றபடி. உக்தத்தைச் சேர்த்துக்கொண்டு பரமப்ராப்யத்தை நிகமிக்கிறார் - ஆக இத்யாதி. 'ஜ்ஞாநஶக்தி வர்த்தகங்களுமாய்' என்றவிடத்திலே - " [illegible] " *என்றதநுஸந்தேயம். "நடமினோநமர்க ளுள்ளீர்" என்றத்தைப்பற்ற-*நம்மோடு ஸம்பந்தம் இத்யாதி. அதுக்குச்சேர வார்த்தைசொல்லு மித்தனை *என்றது - இருந்தபடிக்கீடாக வ்யாக்யாநம் பண்ணவேணுமேயென்றபடி.* பெரியோரை யொருகாலும் பிரிகிலேன் *என்றது - திருமொழி. * கண்சோர வெங்குருதியிலே, "தோளும்" இத்யாதி.* " [illegible] " *இதி ஸ்ரீகீதாயாம் (௰ - ௧௧). ஹார்த்தாநுக்ருஹீத இதி.* "ததோகோக்ரஜ்வலநம் தத்ப்ரகாசிதத்வாரோ வித்யாஸாமர்த்யாத் தச்சேஷகத்யநுஸ்ம்ருதியோகாச்ச ஹார்தாநுக்ருஹீத: சதாதிகயா" *இதி உத்தரமீமாம்ஸாயாம் சதுர்த்தாத்யாயஸ்ய த்விதீயபாதே.*

நாமத்தைச் சொல்லிக்கொண்டு அங்கே போய்ப் புகுருவோம் வாருங்கோள் என்று, ஸ்ரீவைஷ்ணவர்களை அழைக்கிறார்.

[கேசவன்] – கேஶிஹந்தா. [நாளும் கொடுவினைசெய்யும் கூற்றின்தமர்களும் குறுககில்லார்] - என்றும் கொடிய ப்ரவ்ருத்திகளைப்பண்ணி நலியக்கடவ யமபடரும் கிட்டமாட்டார். [விடமுடையரவு என்றுமேலுக்கு] - "படர்கொள் பாம்பணைப்பள்ளிகொள்வான்" என்று ஆசைப்பட்டாற்போலே ப்ரதிகூலர்க்கு வந்து அணுகவொண்ணாதபடி விஷத்தையுடைய திருவநந்தாழ்வான்மேலே ஆதரித்துக் கண்வளர்ந்தருளுகிறவனதாய், "ப்ராப்யதேஶம்" என்று தெரியும்படி மது பாநமத்தமான வண்டுகளாலே அலற்றவும்பட்டுத் தாபத்ரயத்தைப் போக்கவல்ல பொய்கைகளோடு கூடின வயலாலே அணைத்திருந்துள்ள திருவநந்தபுரத்திலே இச்சை பிறந்த இன்றே போய்ப்புகுவோம்.

ப.—முதற்பாட்டில், அயர்வக்லேஶம் தீரும்படி பாவ்யமான அவனுடைய போக்யநாமங்களைக் கீர்த்தித்துக்கொண்டு ஆஶ்ரிதஸம்ஶ்லேஷ ஸ்வபாவனானவனுடைய திருவனந்தபுரத்தைக் கிட்டுங்கோள் என்று, ஸ்வஜநமான ஸாத்விகர்களைக்குறித்து அருளிச்செய்கிறார்.

"கேசவாநாம ஶ்ரவணே ஶேஷாவிநாஶநம்" என்கிறபடியே, ப்ரஶஸ்தகேஶனான க்ருஷ்ணனுடைய, கேசவாஎன்ன - கேசவநாமத்தைச் சொல்லவே, (போக்யமான பாலைக்குடிக்கவே பித்தம் தன்னடையே நசிக்குமோபாதி), இடர்ஆயஎல்லாம் - ஸகலது:கங்களும், கெடும் - (புக்கவிடம் தெரியாதபடி) கெட்டுப்போம்; நாளும் - நிரந்தரமாக, (பாபாநுரூபமாக), கொடு வினை - க்ரூரயாதனைகளை, செய்யும் - செய்யாநிற்கிற, கூற்றின்தமர்களும் — யமபடரானவர்கள், ("உதீரயதி" என்று கமலநயநநாமோச்சாரணத்தாலே, "த்ருணஸ்ய தூராத்" என்கிறபடியே*கோலாடி குறுகப்பெறாதே, "கள்ளர்போல்" என்னும்படியே), குறுககில்லார் - ஓடிப்போவர்கள்; (ஆனபின்பு), (விரோதிவர்க்கம் அணுகாதபடி), விடம்உடை - விஷௌஜ்ஜ்வல்யத்தையுடைய, அரவில் - திருவரவணையிலே, பள்ளிவிரும்பினன் - ஆஶ்ரிதஸம்ஶ்லேஷ ப்ரீதிதோன்றும்படி விரும்பிக் கண்வளர்ந்தருளுகிறவனுடையதாய், (குணாநுபவப்ரீதரான முக்தர் ஸாமகாநம்பண்ணுமாபோலே), சுரும்பு - மது பாநமத்தமான வண்டுகள், அலற்றும் - அக்ரமமாக (அலற்றும்படியான), தடம் - பூந்தடங்களை, உடை - உடைத்தான, வயல் - வயல்களையுடைய, அனந்தபுரநகர் - திருவனந்தபுரத்தை, இன்றே - (காலவிளம்பம் பிறவாதபடி) இன்றே, புகுதும் - கிட்டுங்கோள்.

இ.—முதற்பாட்டில், ப்ரீதியாலே திருநாமத்தைச்சொல்லி, திருவநந்தபுரத்துக்குப் போவார்க்கு ப்ரதிபந்தகங்களெல்லாம் கெடும்: அங்கேபோய்ப் புக வாருங்கோள் என்று அநுகூலரை அழைக்கிறார்.

[கெடும் இடராயவெல்லாம்] - இடர் என்று பேர்பெற்றவை யடங்கப்போம். "பாபானாம் ஆநுரூப்யாணி" என்று பாபாநுரூபமாக ப்ராயஶ்சித்தம் ஜோதித்திருக்கும்; திருநாமத்துக்கு அங்ஙன் ஒருநியதி இல்லை. "ஸர்வேஷாமேவ பாபாநாம் - ஸந்த்யஸ்ய" என்கிறபடியே ஸகலபாபங்களும் போம். திருநாமங்கள்தான் பல வேணுமோ? என்னில்,—[கேசவாவென்ன]- ஒருவிரோதியைப் போக்கினபடியைச்சொல்ல விரோதி

வர்க்கமாகப் போமென்னுதல், ப்ரஶஸ்தகேஶனென்றால், "கேஶவ: க்லேஶநாஶந:" என்கிறபடியே ஸாம்ஸாரிக து:கங்களெல்லாம் போமென்னுதல். "பாபேந்த்நாக்நி:" என்னக்கடவதிறே. [என்ன] - அர்த்தாநுஸந்தாநம் வேண்டா: உக்திமாத்ரமே அமையும் பாபவிமோசனத்துக்கு, என்கிறது. [நாளும் இத்யாதி] - நாள்தோறும் க்ரூரமான வ்ருத்தியைப்பண்ணும் யமபடரும் கிட்டமாட்டார். "ஸ்வபுருஷம்" இத்யாதி, "தஸ்ய யஜ்ஞவராஹஸ்ய" இத்யாதி. [கில்லார்] - ஶக்தரல்லர். எரிகிறநெருப்பிலே ஏறச் சக்தருண்டோ ? [விடமுடை இத்யாதி] - இனிமேல் ப்ராப்யத்தைச்சொல்லுகிறது. [விடமுடை] - விரோதிவர்க்கத்துக்குக் கிட்டவொண்ணாதபடியிருக்கை. [அரவு] - ஜாதிப்ரயுக்தமான மென்மை குளிர்த்தி நாற்றங்களை யுடைத்தாயிருக்கை. [பள்ளிவிரும்பினான்] - பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியேயாய்த்து அங்குக் கண் வளருவது. "பாஷிநாம் ரோஹதி" என்னலாம்படி யாய்த்திருப்பது. [சுரும்பலற்றும்] - "ஸாமகாயந்நாஸ்தே" என்று முக்தர் களித்து வர்த்திக்குமாபோலே யாய்த்து, அவ்வூரில் திர்யக்குக்களும் வர்த்திக்கிறபடி. [தடமுடை வயல்] - ஸாம்ஸாரிகமான தாபத்தைப் போக்கும் விரஜாதிகளைப்போலே ஶ்ரமஹரமாயாய்த்துத் தடாகங்களிருப்பது. [அனந்தபுரநகர்] - கலங்காப் பெருநகரம் போலன்றியே, இவ்வுடம்போடேகிட்டி அநுபவிக்கலாம் தேஶம். [புகுதும் இன்றே] - "க்ரமத்திலே புகுகிறோம்" என்று ஆறியிருக்குமதன்று; இச்சைபிறந்த இன்றேபோய்ப் புக வாருங்கோள்.

ஈடு.—முதற்பாட்டு. ப்ரீதியாலே திருநாமத்தைச்சொல்ல, திருவனந்தபுரத்துக்குப் போகைக்கு விரோதியானவையெல்லாம்போம்; அங்கே புகவாருங்கோள் என்று அநுகூலரையழைக்கிறார்.

[கேடுமிடராயவெல்லாம்] - இடரென்று பேர்பெற்றவையெல்லாம் கெடும். ப்ரஹ்மஹத்யைக்கு ப்ராயஶ்சித்தமாக த்வாதஶவார்ஷிகம் சரித்தால் மற்றொருபாபத்துக்கு மற்றொருப்ராயஶ்சித்தம்பண்ணவேண்டியிருக்குமிறே; இங்கு அதுவேண்டா; "பாபேந்தநாக்நி:" (பாபேந்தநாக்நி:) என்கிறபடியே. ப்ராயஶ்சித்தமும் பலவாயிருக்குமோவென்னில்?—[கேசவாவென்ன] - அவன்ஒருவிரோதியைப்போக்கினபடிசொல்ல, விரோதியென்று பேர்பெற்றவையெல்லாம் நஶிக்கும்; ராவணனொருவனும் ப்ராதிகூல்யம்பண்ண ராக்ஷஸஜாதியாக நசித்தாற்போலே. [எல்லாம்] - அநுபவிக்கக்கடவையும் முன்பே

முதற்பாட்டு.—கேடுமிடர் இத்யாதி. "கேசவாவென்ன - இடராயவெல்லாம் - கெடும் தடமுடைவயல் அனந்தபுரநகர் புகுதும்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - ப்ரீதியாலே இத்யாதி.

இத்தால் பலிதம் - ப்ரஹ்மஹத்யைக்கு இத்யாதி. "திருநாமம்பாபநிவர்த்தகம்" என்னுமதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார் -பாபேந்தந: இத்யாதி. "யஜ்ஞேஶாச்யுத கோவிந்த மாதவாநந்த கேஶவ । க்ருஷ்ண விஷ்ணோ ஹ்ருஷீகேஶ வாஸுதேவ நமோஸ்து தே ॥ பாபேந்தநாக்நிஸ்ஸததம் ஜந்துர்விஷ்ணோஸ்ஸ்மரேச்ச ய:" இதி ஶ்ரீவிஷ்ணுதர்மே மாங்கல்யஸ்தவே. "கேஶவா" என்கிறவிடத்தில்-"யஸ்மாத்த்வயைஷ துஷ்டாத்மா ஹத: கேஶீ ஜநார்த்தந । தஸ்மாத் கேஶவநாம்நா த்வம் லோகே ஜ்ஞேயோ பவிஷ்யஸி" (விபு-ரு-௧௬-௨௩) என்றது அநுஸந்தேயம்.ஒருவிரோதிநிரஸநவாசகமான திருநாமம்சொன்னால் ஸகலவிரோதிகளும் போகக்கூடுமோவென்ன,வ்யதிரேகத்ருஷ்டாந்தம்-ராவணன் இத்யாதி. "எல்லாம்" என்றதுக்கர்த்தம் - அநுபவிக்க இத்யாதி. அநுபவிக்கக்கடவை யென்றது - உத்தராகம். அநுபவிக்கிறவை-பூர்வாகம். அப்படி நசிக்குமோவென்ன; ப்ரமாணம்-

தொடங்கி அநுபவிக்கிறவையும் நசிக்கும்; "போயபிழையும் புகுதருவானின்றனவும்." [என்ன] - உக்திமாத்ரமே இதுக்கு வேண்டுவது: கார்யத்தில்வந்தால் அர்த்தக்ரியாகாரியாயே தலைக்கட்டும்; அன்றிக்கே, ப்ரஶஸ்தகேஶனாயிருக்கும் இருப்பைச்சொல்ல ஸம்ஸாரதுரிதங்கள் அடங்கலும்போம் என்னுதல், "கேஶவ: க்லேஶநாஶந:" (கேஶவ: க்லேஶநாஶந:) என்கிறபடியே; அன்றியே, ப்ரஹ்மருத்ரர்களுக்கு நிர்வாஹகனென்னுதல்; ஆனாலும் சொல்லிப்போருமது முதற்பொருளே. [நாளும்இத்யாதி]-நாள்தோறும் கொடிய செயலைச் செய்யக்கடவ ம்ருத்யுவுக்கு அந்தரங்கராயிருப்பாரும் வந்துகிட்டப்பெறார்கள். யமனுக்குஅந்தரங்கரென்று ஸர்வேஶ்வரனுடையார்பக்கலிலேவந்துகிட்டவோ? "ஸ்வபுருஷம்" (ஸ்வபுருஷம்) இத்யாதி; "தஸ்யஜ்ஞவராஹஸ்ய" (தஸ்யஜ்ஞவராஹஸ்ய) இத்யாதி; "ப்ரணமந்த்யேபிகுர்வந்தி" (ப்ரணமம்யேபிகுர்வந்தி) என்றிறே அவன்வார்த்தையும். "இறைஞ்சியும்சாதுவராய்ப்போதுமின்களென்றான்"-அவர்களைக்கண்டால் "நாம் கடவோமல்லோம்" என்றுபோராதே, கிட்டியநுவர்த்தித்துப் போரும்கிடீர்கோள்! "ஸ்வபுருஷம்"(ஸ்வபுருஷம்)-யமன், தன்பரிகரம்கையும்பாசமும்சூலமும் நாயுமாய்ப்போருகிறபடியைப்பார்த்து, பாகவதர்களும்அல்லாதாரும்கலந்திருப்பர்கள்; "பாகவதர்கள்முன்னே இவன்கிட்டில்செய்வதேன்?" என்று துணுக்கென்று சொல்லுகிறான். "ஸ்வபுருஷம்" (ஸ்வபுருஷம்) - தனக்குஅந்தரங்கனாயிருக்கையாலே, தன்மேன்மை சொல்லவேண்டுமிடத்திலே தாழ்வுசொல்லுகிறானாய்த்துத் தவிரவொண்ணாமையாலே. "அபிவீக்ஷ்ய" (அபிவீக்ஷ்ய) - இவன்தான் நாலிரண்டோலைமறுக்கத் தரமுடையனாயிருக்குமாய்த்து ; சொற்செல்லுகைக்காக இப்படியிருக்கிறவனைப் பார்க்கிறபார்வையிலே கார்யகௌரவமெல்லாம் தோற்றும்படிபார்த்தானாய்த்து. "மதுஸூதநப்ரபந்நாந்" (மதுஸூதநப்ரபந்நாந்) - "இவர்களைநலிந்தால்அவனுக்கென்?" என்ன ; இவர்கள் அவன் பக்கலிலே ந்யஸ்தபரராயிருப்பர்கள் ; இவர்களுக்கு வந்ததொன்றுக்கு அவன்மார்வுதட்டிக்கொண்டு வரும். உன்னுடையோமாய்ப்போகிற எங்களுக்கு வேறுசிலர்க்குஅஞ்சவேண்

போய இத்யாதி,போயபிழை-பூர்வாவயம். புகுதருவானின்றன-உத்தராவயங்கள். "என்ன-கெடும்" என்றதுக்குபாவம் - உக்திமாத்ரமே இத்யாதி. "நச கேஶவஸ்ய ஸத்ருஶம் ஸ்யாத் கேநசித் அபி ஹாஸ்ருத: । க்ஷிப்ர நாமா விழ்வதோ கேஶவ: க்லேஶநாஶந:" இதி மஹாபாரதே. மூன்றாமர்த்தத்துக்கு "ஜகத்வ்யூஹநே ப்ரஹ்ம ரூபம் ஶிவஶ்ச மஹதஸ்ஸவரூபே சின்யோ: । ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேஶவ நாமவாந்" என்கிற ஶ்லோகமநுஸந்தேயம். "கெடுமிடராய வெல்லாம்" என்றதுக்கு ஸ்வாரஸ்யமுண்டாகையைப்பற்ற அருளிச் செய்கிறார் - ஆனாலும் இத்யாதி. "தமர்களும்" என்ற ச ஶப்தத்துக்கர்த்தம் - யமனுக்கு இத்யாதி. கிட்டமாட்டாமைக்குப் பல ப்ரமாணங்கள் - ஸ்வபுருஷம் இத்யாதி. * தாளதாமரையிலெழுதப்பட்டது. "தஸ்யயஜ்ஞவராஹஸ்ய விஷ்ணோரமிததேஜஸ: । ப்ரணாமம் யேபிகுர்வந்தி தேஷாமபி நமோ நம:" இதி ஸ்ரீ விஷ்ணுதர்மே. அவன் வார்த்தையும்-யமன்வார்த்தையும். "இறைஞ்சியும்" இத்யாதி பாசுரத்துக்கர்த்தம் -அவர்களை இத்யாதி. "ஸ்வபுருஷம்" (விபு-௩-எக௩). என்றெடுத்ததுக்கர்த்தம் சொல்லுவதாகப் பதோபாதாநம்-ஸ்வபுருஷம் என்று. "பாஶஹஸ்தம்" என்றத்தைக் கடாக்ஷித்து ஶ்லோகாவதாரிகை - யமன் இத்யாதி. "அபி, வி" என்ற உபஸர்க்கார்த்தம்-இவன்தான் இத்யாதி வாக்யத்வயம். அவனுக்கு - ஈஶ்வரனுக்கு. அவன் மார்வுதட்டிக்கொண்டு என்றது - "ஸகருதேவ

மேம்படி இருந்ததாகில் நீ பின்னை யாராய் இவ்விருப்பிருந்துஎவுகிறது? என்ன,—''ப்ரபுர்ப்ர ஹ்மாதீநாம்''(ப்ரபுரஹமங்யங்ருணும்)-எனக்கு அடைத்தவிஷயத்தில் சொற்செல்லா தாகிலன்றே எனக்குக் குறையாவது? நாம் கடவோமல்லாதவிஷயத்திலே நாம் ஆராயாநிற் கவோ? இதுதன்னைத் திருமழிசைப்பிரானும் அருளிச்செய்தாரிறே - ''திறம்பேன்மின்'' இத்யாதி.''அவன்றமரேவ்வினையர்'' இத்யாதி. அவர்கள் தங்களிலே சொல்லியிருக்கும் வார்த் தையிறேஇது. ''மாறுசெய்த'' இத்யாதி. சக்ரவர்த்தித்திருமகனார் பேரை இவன்ஆராயவோ? ஒருதிருவேட்டையிலே, பட்டர் திருவூற்றங் கரையிலே பேரோலக்கமாகவிருக்க, ''ஸந்ய யையானது'' என்று சிலர் விண்ணப்பஞ் செய்ய, ''நாம் பெருமாளழகிலே துவக்குண்டு இன்றொருநாளும் கர்த்தவ்யத்திலே அல்பம் தாழநின்றோமென்றால் இது குற்றமாக யமன் கேட்கவோ? †ஒருராஜாஇருந்து நாட்டுக்கணக்குக் கேட்டுக்கொடு வாராநின்றால் ராஜாவுக்கு அந்தரங்கனாயிருப்பானொருவன்பேரை வாசித்தால், 'ஓங்காண்! அதுகிடக்க: மேற்சொல்

ஷ்டாதி'' என்றத்தைப்பற்ற. ''ப்ரபுர்ப்ரஹ்மாதீநாம்'' இத்யாதிக்கவதாரிகை உன்னுடை யோமாய் இத்யாதி. திறம்பேன்மின்கண்டீர் - தப்பாதேகிடிகோள். செவிக்கு - செவியிலே. ''மறந்தும் புறந்தொழாமாந்தர்'' என்றவிடத்திலே - ''பெருமாள்ஒருநாள் கிழக்கே புறப்பட்டரு ளின வளவிலே மழைவர, கீழையூரிலாலயத்திலே யெழுந்தருள, எம்பெருமானாரும் முதலிகளும் புறம்பேமழையிலே நனைந்துகொண்டு நிற்கிறவளவிலே, ஒருவன்வந்து 'பெருமாளுள்ளேயெழுந் தருளினாரே: தேவரீரும்உள்ளே யெழுந்தருள வொண்ணாதோ?' என்ன, 'கெடுவாய், மஹாராஜர் வேஶ்யாகமநம் பண்ணினால் ததஸாமாரண்மஹிஷியும் பரபுருஷகாமிநியாகலாமோ?'என்ற எம்பெரு மானாருளிச்செய்தார்'' என்கிற ஐதிஹ்யம் அருளிச்செய்வர். ''யமபடர்கிட்டமாட்டார்'' என்னு மதுக்கு ப்ரமாணாந்தரமும் அதுக்கர்த்தமும் அருளிச்செய்கிறார் - அவன்றமர் இத்யாதி நாலுவாக்யத் தாலே. மூதற்றிருவந்தாதி ஐம்பத்தஞ்சாம் பாட்டு. அவர்கள் தங்களிலே - யமபடர் தங்களிலே யென்னுதல், ஆழ்வார்கள் தங்களிலேயென்னுதல்: இவ்வாக்யத்துக்கர்த்தம் ஸங்க்ஷிப்தம். ''ஆட்பட் டார் பேர்'' என்றது - ஆட்பட்டபேரென்னுதல், ஆட்பட்டவர்களுடைய பரிகரபூதரென்னுதல், ஆட்பட்டவர்களுடைய பேரை யரித்தவர்களென்னுதலென்று மூன்றர்த்தம். அவன்றமர் - அவ னடியார், எவ்வினையராகிலும் - எப்படிப்பட்ட பாபத்தையுடையரேயாகிலும், எம்கோனவன்ற மரேயென்றொழிவதல்லால் - நம்முடைய ஸ்வாமியானவனுடைய அடியாரென்றொழியுமதல்லால், நமன்றமராலாராயப்பட்டறியார்கண்டீர் - யமபடராலாராயப்பட்டறியார்கிடிகோள், அரவணைமேல் பேராயற்காட்பட்டார் பேர். ஆட்பட்டார்பேர் - ஆராயப்பட்டறியார்கண்டீர் இத்யந்வயம். ப்ரமா ணாந்தரம் - மாறுசெய்த இத்யாதி. திருச்சந்தவிருத்தம். இதுக்கு பாவம் - சக்ரவர்த்தி இத்யாதி. மாறுசெய்த - எதிரிட்டுக்கொண்ட, வாளரக்கன் - ருத்ரன்பக்கல் பெற்ற வாளையுடைய ராவண னுடைய, நாள்உலப்ப - ஆயுஸ்ஸை முடிக்கைக்காக, அன்று - பிராட்டியைப் பிரித்து ப்ராதிகூல் யத்திலே கைவளர்ந்தவன்று, இலங்கை நீறுசெய்து - திருவடியைக்கொண்டு லங்கையை பஸ்ம மாக்கி, சென்று கொன்று - லங்கையளவும் சென்று அவனைக்கொன்று, வென்றிகொண்டவீரனார் - அவனை ஜயித்த வீரஸ்ரீயையுடைய சக்ரவர்த்தித் திருமகனார்; வேறுசெய்து தம்முளென்னைவைத் திடாமையால் - ''இவன் நம் திருவடிகளுக்குப் புறம்பாயிருப்பானொருவன்'' என்று தம்முடைய திருவுள்ளத்திலென்னை நினையாமையால், நமன்கூறுசெய்துகொண்டு - செய்தார் செய்தகுற்ற மாராயக்கடவ யமன், சக்ரவர்த்தித்திருமகனார் அந்தரங்கனாக்கிவைத்த என்னைப் பிரித்துக்கொண்டு, இறந்தகுற்றமெண்ணவல்லனே - செய்துகழிந்த பாபத்தை நினைக்க ஶக்தனோ? என்று பாட்டுக்கு ஸம்பதார்த்தம். ''யமவஶ்யதைக்கஞ்சவேண்டா'' என்னுமதுக்குஐதிஹ்யம்- ஒரு திருவேட்டையிலே இத்யாதி. கேட்கவோ - கேளானே யென்றபடி. ''ச்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா'' என்ற ஈஶ்வராஜ்ஞையை மறுத்தால் தண்டியாதிருக்கலாமோவென்ன - ஒருராஜா இத்யாதி. ஆகில், ஆஜ்

† 'ஒரு' என்பதில்லாமல் 'ராஜா' என்பதே அடையவளைந்தானிற் பாடம்.

என்றால் பின்னையொருகாலமும் அப்பேரெடுத்து வாசிக்கப்பெறுதுகாண்'' என்றாம்: இந்தப்ரஸங்கத்திலே, ''உனக்காகித் தொண்டுபட்டநல்லேனை வினைகள்நலியாமைநம்பு நம்பீ'' என்றருளிச்செய்தார். ''வள்ளலேஉன்தமர்க்கென்றும் நமன்றமர்கள்ளர்போல்'' இருவர் ஒருவழிப் போகப்பெறார்கள். ''கொடுமைசெய்யும்'' இத்யாதி -விழுக்காடறியாதே வந்துகிட்டில் செய்வதென்னென்னில், - ''தடவரை'' யித்யாதி - திருவாழியையிட்டுத் தோளைக்கழித்தல், ஓர்அம்பாலே தலையையுருட்டுதல் செய்யுமத்தனை. வாணன்பட்டது படுதல், ராவணன்பட்டது படுதல் செய்யுமத்தனை. ''வேண்டாமை நமன்றமரென்தமரை வினவப்பெறுவாரலரென்று உலகேழாண்டான்'' - யமபடர் நம்முடையாரை வினவப் பெறார்கள், அதுக்கடியென்? ''வேண்டாமை''. ஊர்க்கணக்கனே கோயிற்கட்டணத்திலே புக்குப் படுக்கைப்பற்றுஆராய்வான்? ''செய்தாரேல் நன்றுசெய்தார்'' என்கிறவன் இவர் கள்கையில் காட்டிக்கொடானே. ''நின்னுமம்கற்றவாவலிப்புடைமை - நமன்றமர்தலை கள்மீதே - நாவலிட்டுழிதருகின்றோம்.'' ''ப்ரபவதிஸம்யமநே'' (ப்ரபவதிஸம்யமநே)- உங்களை நியமிக்கப்போந்த என்னைப்போலல்லகாண் என்னை நியமிக்குமவன்; இவ்வோலக்கத்திலே வந்தாலிறே †நான் ஆராய்வது? அவன் எங்குமுளனிறே. [நாளும்கொடுவினை செய்யுங்கூற்றின்தமர்களும்குறுககில்லார்] - பழையதாக நலிந்துபோந்த வாஸனைகொண்டு ஸ்வவத் விஷயத்திலே முதலடியிட்ட இன்றும் கிட்டவோ? [குறுககில்லார்]- ''நிஷேத்ர

ஞாதிலங்கநம் பிறந்தாலும் அஞ்சவேண்டாவேயென்ன - இந்த இத்யாதி. இந்தப்ரஸங்கத்திலே என்றது - அந்தரங்கனுயிருப்பா னொருவனென்ற இந்தப்ரஸங்கத்திலேயென்றபடி. திருமொழி ஆறும்பத்து மூன்றாந்திருமொழி ஒன்பதாம்பாட்டு. சொல்லாய் திருமார்பா - பிராட்டியைத் திருமார்விலேயுடையவனே! இதுக்கொரு போக்கடி சொல்லவேணும்; உனக்காகித் தொண்டுபட்ட நல்லேனை - உன் திருவடிகளில் நித்யகைங்கர்யத்திலே யந்வயிக்கும்படியான வைலக்ஷண்யத்தை யுடைய என்னை, வினைகள்நலியாமைநம்புநம்பீ-கர்மங்கள்என்னை நெருக்காதபடி நீ யங்கீகரித்தருளவேணும் பூர்ணனவனே! என்று ஸப்தார்த்தம். ''யமவஶ்யதைக்கு அஞ்சவேண்டா'' என்னுமதுக்கு ப்ரமாணாந்தரம் - வள்ளலே இத்யாதி. ''கள்ளர்'' என்றதுக்கு பாவம்-இருவர் இத்யாதி. ப்ரமாணாந்தரமும் அதுக்குபாவமும் அருளிச்செய்கிறார் - கொடுமை செய்யும் இத்யாதி வாக்யத்ரயத்தாலே. உக்ரக்ருத்யங்களைச் செய்யும் யமனும், என்கோலாடிகுறுகப்பெறு-என்னுடைய ஆஜ்ஞை நடக்குமிடமெல்லாம் புகுரப்பெறான் இத்யர்த்தம். விவரணம்-வாணன் இத்யாதி. ப்ரமாணாந்தரம் - வேண்டாமை இத்யாதி. திருமொழி பத்தாம்பத்து ஆறாந்திருமொழி அஞ்சாம்பாட்டு, ''நீண்டான்'' இத்யாதி. இதுக்கு பாவம் - யமபடர் இத்யாதி. வேண்டாமை - ப்ராப்தியில்லாமையாலென்று ஸப்தார்த்தம். இதுக்கு லௌகிகத்ருஷ்டாந்தம் - ஊர் இத்யாதி. கோயிற்கட்டணம் - அந்தஃபுரம். படுக்கைப்பற்று - ஸ்த்ரீகளிருக்கிறவிடம். அவன்தான் காட்டிக்கொடுத்தாலோ - என்ன - செய்தாரேல் இத்யாதி. ப்ரமாணாந்தரம் - நின்றுமங்கற்ற இத்யாதி. திருமாலை, முதற்பாட்டு. ஆவலிப்பு - அவலேபம்; கர்வமென்றபடி. யமனுக்கு எல்லாரும் அஞ்சவேண்டியிருக்க, யமன்தான் ஈஶ்வரனுக்கு அஞ்சுகைக்கடி யருளிச்செய்கிறார்-ப்ரபவதி இத்யாதி. ''[Grantha text] விஷ்ணு:.'' ''விஷ்ணு:'' என்றத்தைக் கடாக்ஷித்தர்த்தம் - உங்களை இத்யாதி, இவனுக்குக் குறையேது, அவனுக்குஏற்றமேதென்ன-இவ்வோலக்கத்திலே இத்யாதி. என்றும் வ்யாபித்துப்போந்தவனுக்கு இன்று கிட்டவொண்ணுதோவென்ன- பழையதாக இத்யாதி; இதுக்கு ''நாளும்'' என்றதிலே நோக்கு. ''கேசவா'' என்றது - உக்திமாத்ரமாகையாலே, 'முதலடியிட்ட' என்கிறார். கிட்டாமைக்கடியேதென்ன - நிர்த்தோஷம் இத்

† இவன் என்ற பாடம் ஸ்வரஸமன்று.

[illegible]" (நிர்த்தோஷம்வித்தி)-சாவதுபிறப்பதாய்ப் போந்தவனுவது, பரிஹாரமில்லாத தோஷங்களையுடையனுவது: ஆனாலும் அவனை நிர்த்தோஷனுகவே புத்திபண்ணுவது. தோஷங்களுண்டாயிருக்க இப்படி நினைக்கவேண்டுவானேனென்னென்னெ? "[illegible]" (ப்ரபாவாத்)-இவனையோ பார்ப்பது? இவன்பற்றினவனைப் பார்க்கவேண்டாவோ? இவனை யாராய்கையாவது - ஸம்பவத் ப்ரஸாவத்தைப் பரிச்சேதிக்கையாமிறே. [கில்லார்] - எரிகிறநெருப்பிலே கிட்டுவாருண்டோ? நியாமகனுடைய நியமநவாக்யங்கொண்டு கிட்டாமையல்லவிறே; தந்தாமை வேண்டாதாருண்டோ? [விடமுடையித்யாதி] - இனிமேல் ப்ராப்யத்தைச் சொல்லுகிறது. [விடமுடை] - சேந்தேங்குக்கு முட்கட்டினுற்போலே ஒருவர்க்கும் முகங்கொள்ளவொண்ணுதிருக்கை; "வாய்ந்தமதுகைடபரும் வயிறுருகிமாண்டார்"- விரோதிகளாய்க்கிட்டினர் முடிந்துபோம்படியா யிருக்கும். [அரவு] - ஜாதிப்ரயுக்தமான மேன்மை குளிர்த்தி நாற்றங்களையுடைத்தாயிருக்குமிறே. [பள்ளிவிரும்பினன்] - பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியேயாய்த்து அங்குக் கண்வளர்ந்தருளுகிறது. "[illegible]" (பாதேநாத்யாரோஹதி) என்று துகைத்தேறலாயாய்த்து இருப்பது. [சுரும்பலற்றும்] - "[illegible]" (ஏதத்ஸாமகாயந்நாஸ்தே) என்று முக்தர்செய்யுமவற்றை வண்டுகள்செய்யாநிற்கும். [தடமுடைவயல்] - விரஜை மற்றையவற்றுக்குப் போலியா யிருக்குமாய்த்துத் தடாகங்கள். [அனந்தபுரநகர்] - கலங்காப்பெருநகரத்துக்குப் போலியாயிருக்கும். [புகுதுமின்றே] - "க்ரமத்திலேபுகுகிறேம்" என்றுஆறியிருக்குமதன்று; இச்சைபிறந்தஇன்றே போய்ப்புகுவோம். (க)

யாதி. "[illegible] । [illegible] । [illegible]" இதி ஸாரதே ஸாத்த்வதேச. "[illegible]" என்றத்தையும் "[illegible]" இத்யாதிகளையும் கடாக்ஷித்து, "[illegible]" என்றதுக்கர்த்தம் அருளிச்செய்கிறுர் - சாவது இத்யாதி வாக்யத்ரயத்தாலே. குறுகாதென்னுதே, "கில்லார்" என்றதுக்கு பாவம் - எரிகிற இத்யாதி. இவ்விடத்திலே, "[illegible] । [illegible]" என்றது அநுஸந்தேயம். விவரணம் - நியாமகனுடைய இத்யாதி. சேந்தேங்கு - செவ்விளநீர். ஒருவர்க்கும் முகங்கொள்ளவொண்ணுதிருக்கைக்கு ப்ரமாணம் - வாய்ந்த இத்யாதி. மூன்றுந்திருவந்தாதி, அறுபத்தாறும்பாட்டு, "காய்ந்து" இத்யாதி. இதுக்கு பாவம் - விரோதி இத்யாதி. பர்யங்கவித்யை - தேவிமாரிலே கண்டுகொள்வது. கண்வளர்ந்தருளுகைக்கு ப்ரயோஜநம் - பாதேந இத்யாதி. சுரும்பு - வண்டு. இதுக்கு பாவம் - ஏதத் இத்யாதி. மற்றவை யென்றது - ஆரம், ஐரம்மதீயம் என்கிற தடாகங்களை. "நகர்" என்றதுக்கு பாவம் - கலங்கா இத்யாதி. "இன்றே" என்கிற அவதாரணுர்த்தம் - க்ரமத்திலே இத்யாதி. 'விடமுடை' என்று தொடங்கி, 'நகர் - இன்றே புகுதும்: கேசவாவென்ன - இடராயவெல்லாம் - கெடும்: நாளும் கொடுவினைசெய்யும் கூற்றின் தமர்களும் குறுககில்லார்' இத்யந்வய꞉. (க)

இரண்டாம் பாட்டு.

இன்றுபோய்ப்புகுதிராகில் எழுமையும்ஏதஞ்சாரா
குன்றுநேர்மாடமாடே குருந்துசேர்செருந்திபுன்னை
மன்றலர்பொழில் அனந்தபுரநகர்மாயன்நாமம்
ஒன்றும்†ஓராயிரமாம் உள்ளுவார்க்குஉம்பரூரே.

ஆ.—(இன்றுபோய்.) - ப்ரதிவந்யகம் போகைக்குக் கேசவாவென்னும் திருநாமம் சொல்லவேணுமென்று நியமமுண்டோவென்னில், - அதில்லை; அவனுடைய ஆயிரந்திருநாமத்திலே வேண்டிற்றொரு திருநாமத்தை நினைக்கஅமையும்; நினைக்கவே, நிரஸ்த ஸமஸ்த ப்ரதிவந்யகராய் இன்றேபோய்த் திருவனந்தபுரத்திலே புகலாம்; போய்ப்புகுதிராகில் ஒருநாளும் ஒருதுக்கமில்லை யென்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், ப்ரதிவந்யகங்கள் போகைக்கு ஒருதிருநாமம் சொல்ல அமையும்; அது ஒன்றுமே ஆயிரம் ப்ரகாரத்தாலே ரக்ஷகமாம் என்கிறார்.

[இன்று என்றுதொடங்கி]-போவோமென்று இச்சைபிறந்த இன்றேபோய்ப் புகுவுதிகோளாகில் ஒருநாளும் ஒருது:க்கமும் ஸ்பர்ஶியா. [குன்று என்றுதொடங்கி]- குன்றையொத்த மாடங்களையும், அவற்றினருகே பரஸ்பரம் சேர்ந்த குருந்துமுத லான வ்ருக்ஷங்களையும் மன்றிலே அலராநின்றுள்ள பொழிலையுமுடைய திருவனந்தபுர மாகிற நகரத்தில் ஆஶ்சர்யபூததனை எம்பெருமானுடைய திருநாமம். [உள்ளு வார்க்கு உம்பரூரே] - ஆராய்வார்க்குத் திருவனந்தபுரமே ப்ராப்யபூமி.

ப.—அநந்தரம், ஆஶ்சர்யபூததனானவனுடைய திருநாமங்கள் ஸஹஸ்ர முவமாக ஹேதுவாமாம் என்கிறார்.

இன்று - காலவிளம்பம் பிறவாதபடி ருசிபிறந்தவின்றே, போய் - சென்று, புகுதிர்ஆகில் - ப்ராபிப்புதிகோளாகில், (“ஜநாவஜநம்ஸாரா” என்கிறபடியே), எழு மையும் - யாவதாத்மபாவி, ஏதம் - ஸம்ஸாரதோஷம், சாரா - தட்டாது; (ப்ராபிக்கிற ப்ராப்யதேசந்தான்), குன்றுநேர் - மலைபோலேயிருக்கிற, மாடம் - மாடங்களினுடைய, மாடே - பரிஸரத்திலே, குருந்துசேர் - குருந்தோடு சேர்ந்த, செருந்தி - செருந்தி யும், புன்னை - புன்னையும், மன்று - மன்றிலே, அலர் - அலரும்படியான, பொழில் - பொழிலையுடைத்தாகைபாலே நிரதிஶயபோக்யமான, அனந்தபுரநகர் - திருவனந்த புரமாகிற நகரத்திலே, மாயன் - (ஆஶ்ரிதர்க்கநுபாவ்யமான ஸௌந்தர்ய ஸௌஶீல்ய ஸௌலப்யாதி குணவிசிஷ்டனான) ஆஶ்சர்யபூததனுடைய, நாமம்-தத்குணவாசகநாமம், ஒன்றும் - ஏதேனுமொன்றாகிலும், ஓர்- அத்விதீயமாய்க்கொண்டு, ஆயிரம்ஆ - ஸஹஸ்ர முவமாக, உள்ளுவார்க்கு-நிரூபிப்பார்க்கு, (அத்தேசத்தில் குறையறுவமே), உம்பரூர்- பரமபதம். பரமபதம் வர்ஜநீய மென்றுமாம். மன்றென்று - மன்றலாய், பரிமளத்தை விகஸிக்கிற பொழிலென்றுமாம்.

இ.—இரண்டாம்பாட்டில், ப்ரதிவந்யகங்கள் போகைக்குச்சொன்ன திரு நாமங்கள்தானே ஓரோவொன்றே ஆயிரம் ப்ரகாரத்தாலே ரக்ஷகமா மென்கிறார்.

[இன்றுபோய்ப் புகுதிராகில்] - போவோமென்று இச்சைபிறந்த இன்றே போய்த் திருவனந்தபுரத்தே சென்று புகுவீராகில். இதரவிஷய விரக்திவேண்டாவோ? இச்சாமாத்ரமே அமையுமோ? என்னில்,— "யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்" என்ன வேண்டுவது, அதிக்ருதாதிகாரமானவற்றுக்கு; ஸர்வாதிகாரமுமாய், ப்ராப்தமுமாய், முன்பே இவனையிச்சித்து இவன்இச்சை பார்த்திருக்கும் விஷயத்துக்கு, இச்சாமாத்ரமே வேண்டுவது. அப்ராப்தவிஷயத்துக்கிறே அதிகாரிஸம்பத்தி வேண்டுவது? [ஏழுமையும் ஏதம்சாரா] - காலதத்வமுள்ளதனையும் ஒருவ்யஸநம் வாராது. [சாரா] - அவன் திருமுகங்கொண்டு தவிர்க்கவேண்டா; இவ்வாஶ்ரயம் நமக்கு இருப்பன்று என்று, ஸர்வது:கமும் கழலும். ஏதத்தைவிளைத்தாலும் விடவொண்ணாதபோக்யதையைச்சொல்லுகிறது:—[குன்றுநேர் இத்யாதி]-குன்றோடொத்த மாடங்கள். மலைகளைச் சேரவைத்தாற்போலேயாய்த்து மாடங்கள் இருப்பது. அதினருகே அம்மாடங்களுக்கு நிழலாம்படியாய்த்துக் குருந்தமிருப்பது. அதனோடே சேர்ந்த செருந்தி புன்னை என்னுதல்; அந்யோந்யம் சேர்ந்தவையென்னுதல். ஊர்ச்சுற்றிலே அலர்ந்துகிடக்கும்படியான பொழிலையுடைய ஊர். இத்தால் - உகந்தருளின நிலங்களில் ஸ்தாவரங்களும் ஜ்ஞாநாதிகரோபாதி உத்தேஶ்யமென்கை. [அனந்தபுர நகர்மாயன்] - நித்யஸூரிகள் ஓலக்கங்கொடுக்க மேன்மையோடேயிருக்கும் வைகுந்த மாநகர்போலன்றியே தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கும் ஶீலாதிகன் வர்த்திக்கிற ஊர். [மாயன்] - தன்மேன்மை பாராதே, ஸம்ஸாரிகள் சிறுமைபாராதே முகங்கொடுக்கும் ஆஶ்சர்யபூதன். [நாமம் ஒன்றும் ஓராயிரமாம்] - ஒருநாமமே அநேகமாம்படி ரக்ஷகமாம்; "உலகேழளிக்கும் பேராயிரம் கொண்டதோர் பீடுடையன்" என்கிறபடியே. [உள்ளுவார்க்கு உம்பரூரே]-இந்நீர்மையையும் ப்ரயோஜநத்தையும் அநுஸந்திப்பார்க்கு இதுதானே பரமபதமென்னுதல், அவர்களுக்கு அநந்தரம் ப்ராப்யம் பரமபதமென்னுதல். அவன் நித்யவாஸம் பண்ணுகையாலேயிறே பரமபதம் உத்தேஶ்யமென்கிறது.

ஈடு.—இரண்டாம்பாட்டு, ப்ரதிபந்தகங்கள் போகைக்குச் சொன்ன திருநாமந்தானே ஆயிரம்ப்ரகாரத்தாலே ரக்ஷகமாமென்கிறார்.

[இன்றுபோய்ப்புகுதிராகில்] - போவோமென்று இச்சைபிறந்த இன்றே போய்ப் புகுவதிகோளாகில். இதரவிஷய விரக்திதொடக்கமான அதிகாரிஸம்பத்திவேண்டாவோ? இச்சாமாத்ரமே யமையுமோ? வென்னில் - "யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்" (யதஹரேவவிரஜேத் ததஹரேவப்ரவ்ரஜேத்) என்கிறபடியே அவை

இரண்டாம்பாட்டு.—இன்றுபோய் இத்யாதி. "நாமமொன்றுமோராயிரமாம்" என்றதைக் கடாக்ஷித்து அவதாரிகை - ப்ரதிபந்தகங்கள் இத்யாதி. சொன்னதிருநாமந்தானே யென்றது - "கேசவா" என்றத்தைப்பற்ற.

'இதரவிஷய' இத்யாதிவாக்யம் - ஶங்காநுவாதம். பரிஹாரம் - யதஹ: இத்யாதி. "ப்ரஹ்மசர்யம் ஸமாப்ய க்ருஹீ பவேத் । க்ருஹாத் வநீ பூத்வா ப்ரவ்ரஜேத் । யதிவேதரதா ப்ரஹ்மசர்யாதேவ ப்ரவ்ரஜேத் । க்ருஹாத்வா வநாத்வா யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்" இதி ஜாபாலி:. யதஹரேவ - யஸ்மிந்நஹந்யேவேத்யர்த்த:. விரஜேத் - விரக்தோபவதி. ததஹரேவ - தஸ்மிந்நஹந்யேவ. ப்ரவ்ரஜேத் - ஸந்ந்யஸ்தோபவேதித்யர்த்த:.

வேண்டுவேது, அதிக்ருதாதிகாரமான விஷயங்களுக்கு; ஸர்வாதிகாரமுமாய் ப்ராப்தமுமாய் முன்பே இவனையிச்சித்து இச்சைபார்த்திருக்கும் விஷயத்துக்கு இச்சாமாத்ரமே வேண்டுவது; விஷயாநுரூபமாக அதிகாரி ஸம்பத்தி இவனால் ஸம்பாதிக்க முடியாமையாலும் ஆட்பார்த்துழிதருமவனாகையாலும் வேண்டா. "யதிவா ராவணஸ்ஸ்வயம்" (யதிவா ராவணஸ்ஸ்வயம்) - என்னுமவனிறே; விபீஷணனென்று பேராய், ராவணனாயிருந்தானென்று மீளாதேகிடீர். அதுவேன்? அங்குநின்றும்வந்தானொருவனைக் கைக்கொண்டதாகவமையாதோ வென்னவேண்டா: குறைவாளர்க்கிறே நம்மால் அபேக்ஷையுள்ளது: அதுள்ளது ராவணனுக்கிறே. "விபீஷணஸ்துதர்மாத்மா" (விபீஷணஸ்துதர்மாத்மா) என்று தனக்கென்ன ஒருகைம்முதலுமுண்டாகையாலே நாளைவரவுமாம்: அரைக்ஷணம் கிட்டாவிடில் நாசமாயிருக்கிறது அவனுக்கேயன்றோ? ஆனபின்பு, அவனையன்றோ முற்படக் கைக்கொள்ளவேண்டுவேது? இனித்தான் இவனைக் கைக்கொண்டால், இவனும் இவன்தன்னோடே நால்வருமாய்ப்போம்; ராவணனைக் கைக்கொண்டால், துறுப்புக்கூடாகக் கைக்கொண்டதாகலாம்; மஹாராஜரோருவரையும் அங்கீகரிக்க வாநரஜாதியாக வாழ்ந்துபோனாற்போலே. [எமுமையுமேதஞ்சாரா] - ஒருகாலமும் பொல்லாங்குவந்து கிட்டாது. [சாரா] - அதுக்கு அவன்தான் நினைப்பிடவும்வேண்டா. "சும்மெனாதே கைவிட்டோடித்தூறுகள்பாய்ந்தன" என்கிறபடியே "நமக்குஇவ்விடம் ஆஶ்ரயமல்ல" என்று தன்னடையேவந்து கிட்டாது; ராஜகுலஸம்பந்தத்தாலே விட்டோடிப்போம்; "வானோ

அவை - அதிகாரிஸம்பத்பாதிகள். அதிக்ருதாதிகாரமான விஷயங்களுக்கு - ப்ரவ்ரஜ்யாதிகர்மங்களுக்கு. 'ஸர்வாதிகாரமுமாய்' என்றவிடத்திலே-" ப்ரஹ்மக்ஷத்ரவிஶஶ்ஶூத்ராः ஸ்த்ரியஶ்சாந்த்ரஜாதய: । ஸர்வ ஏவ ப்ரபத்யேரந் ஸர்வதாதாரமச்யுதம்" என்றதுஅநுஸந்தேயம். இச்சாமாத்ரமேயமையும் என்னுமதுக்கு ஹேத்வந்தர கர்ப்பபூர்வகமாக, இச்சைபார்த்திருக்கும் என்னுமதுக்கு ப்ரமாணங் காட்டுகிறார் - விஷயாநுரூபமாக இத்யாதி. ஆட்பார்த்துழி தருமவன் என்றது - "நமக்கடிமையாவாருண்டோ" என்றதுவே யாத்ரையாய்த் திரியுமவனென்றபடி. நாலாந்திருவந்தாதி அறுபதாம்பாட்டு, "ஆட்பார்த்துழிதருவாய்" இத்யாதி. அப்படி இவன் ஆபிமுக்யம் பார்த்திருக்குமோவென்ன - யதிவா இத்யாதி. "ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா । விபீஷணோ வா ஸுக்ரீவ யதி வா ராவணஸ்ஸ்வயம்" இதி யுத்தகாண்டே ராம: (18-34½) "யதிவா" என்றதுக்கர்த்தம் - விபீஷணன் என்று இத்யாதி. பேராய் என்றது பேரிட்டுக்கொண்டுவந்தானாயென்றபடி. "ஸ்வயம்" என்றதுக்கு ஹாவம் - அதுவேன் இத்யாதி. அதாவது - "ஸ்வயம்" என்று இவனுக்கதிஶயஞ் சொல்லுகிறதென்? அங்குநின்றும் வந்தவனொருவனாகிலும் அவனைக் கைக்கொண்டாரென்னுமது அமையாதோ என்னவேண்டாமென்றபடி. அது - குறை. விபீஷணன் குறைவாளனல்லவோவென்ன - விபீஷணஸ்த்வித்யாதி. "விபீஷணஸ்து தர்மாத்மா ந து ராக்ஷஸசேஷ்டித: । ப்ருதக்தவிரஹேவ ஸத்வ லோகேஷ வாநராந் ..." இத்யாரண்யகாண்டே சூர்பணகா (கஎ-உ௩). ராவணனையே கைக்கொள்ளவேணுமென்றதுக்கு ஹேத்வந்தரம்-இனித்தான் இத்யாதி. துறுப்புக்கூடு-தூற்றுப்பொலி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - மஹாராஜர் இத்யாதி. ஏதத்தைப் போக்குமென்னாதே, "ஏதம்சாரா" என்றதுக்கு ஹாவம்-அதுக்குஅவன் இத்யாதி. விவரணம்-சும்மெனாதே இத்யாதி. சும்மெனாதே-மூச்சுவிடாதே போகைக்கு ஹேது - ராஜகுல இத்யாதி. அப்படி போமோவென்ன, ப்ரமாணம் - வானோ இத்யாதி. பெரியதிருவந்தாதி ஐம்பத்துநாலாம்பாட்டு. ஆகாசம், கடல், காற்றுத் தீ காடுகளிலே எங்கேயொருங்கிற்றோ? வன்துயரை மருங்கு கண்டிலம் என்று பாட்டுக்கர்த்தம். "ஏதஞ்சாரா" என்ற

மறிகடலோ" இத்யாதி. [குன்றுஇத்யாதி] - ஏதம் சார்ந்தாலும் சென்று புகவேண்டும்படி காணும் ஊரின்ஐஶ்வர்யமும் போக்யதையும். மலைகளைப் புடைபடத்தோளைத்து நேருங்கவைத்தாற்போலே யிருக்கிற மாடங்களும், அதினருகே அம்மாடங்களுக்கு நிழல்செய் தாற்போலே யிருக்கிற குருந்து, அத்தோடே சேர்ந்த செருந்தி, புன்னையென்னுதல்; அந்யோந்யம் சேர்ந்தவையென்னுதல். [மன்றலர்பொழில்] - ஊர்ச்சுற்றிலே யலர்ந்துகிடக்குமாய்த்துப் பொழில்கள். அன்றியே, மன்றென்று - மன்றலாய், மன்றலென்று - பரிமளமாய், அலருகையாவது - பரம்புகையுமாய், பரிமளம் பரம்பாநின்றுள்ள பொழிலென்றுமாம். மன்றலை-மன்று என்று குறைத்துக் கிடக்கிறது. [குன்றுநேர்மாடம்] - "பிள்ளை திருநறையூரரையரும் பட்டரும் உள்ளேபுக்கு ப்ரதக்ஷிணம்பண்ணாநிற்க நான் ஸேவித்துப் போனேன்: அல்லாதாரெல்லாம் விரைந்து சடக்கென வாராநிற்க, இவர்கள் திருமாளிகைகளையும் திருக்கோபுரங்களையும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்துக்கொண்டு வருகிறபடியைக் கண்டு, 'அல்லாதார்க்கும் இவர்களுக்கும் செயல்ஒத்திருக்கச்செய்தே இவர்களான வாசியிருந்தபடியேன்!' என்றிருந்தேன்" என்றருளிச்செய்வர். [சேர் செருந்தி] - "ராவவொஹ-ூதிவெவஷெஹீூ" போலேயாய்த்து. மேல் நித்யஸூரிகளைச் சொல்லக்கடவதாயிருக்க, இங்கே ஸ்த்தாவரங்களைச் சொல்லுகிறது - உகந்தருளின நிலங்களில் விலக்ஷணரோடு ஸ்த்தாவரங்களோடு வாசியில்லையென்றிருக்கும் உத்தேஶ்ய புத்தியாலே: நித்யஸூரிகளுக்கானால் அவ்வருகேபோக நினைவுண்டாகைக்கு யோக்யதையுண்டு: நினையார்கள் இத்தனை: சைதந்யத்தில் உறைப்பாலே: நினைக்கைக்கும் யோக்யதையுண்டிறே; வேறோரிடத்தில் போக நினைக்கைக்கு ப்ராப்தியில்லையிறே இவற்றுக்கு. பிள்ளை ஜநநாதப்ரஹ்மராயர் திருமுடிக்குறையிலே மரம்வெட்டுவியாநிற்க எம்பார் அருளிச்செய்த வார்த்தையை நினைப்பது. ஆச்சான் திருவாலிநாடுதாஸர் நல்லன சில

"குன்றுநேர்" இத்யாதிகளைச் சொன்னதுக்கு ஹாவம் - ஏதம் இத்யாதி. "குன்றுநேர் வநந்தரம் "குன்றுநேர்" இத்யாதியைப்பற்ற - போக் மாடம்" என்றத்தைப்பற்ற - ஐஶ்வர்யமும் என்றது; "குருந்துசேர்" இத்யாதியைப்பற்ற - போக் யதையும் என்றது. ஸப்தார்த்தம் - மலைகளை இத்யாதி. நேர் - ஒப்பு. மாடு - சமீபம். புடைபட - இடமுண்டாம்படி. "மாடேகுருந்து" என்றதுக்கு ஹாவம் - அம்மாடங்களுக்கு இத்யாதி. "சேர்" என்றதுக்கு - மாடங்களினருகேசேர்ந்தகுருந்துசேர்புன்னை என்று முந்தினவர்த்தம். அத்தோடே - அந்தமாடங்களோடேயென்றபடி. 'மன்று' என்று-நாற்சந்தியாய், சுற்றுமென்றபடி. † புன்னைகளை யுடைத்தாய் க்ராமபர்யந்தங்களிலே விகஸியாநின்றுள்ள பொழிலென்னுதல், குருந்து முதலான வ்ருக்ஷங்களை யுடைத்தாய் பரிமளம் ப்ரவஹியாநின்றுள்ள பொழிலென்னுதல். "மன்று" என்று - பரிமளத்தைச் சொல்லும்படியென்? என்ன - மன்றலை இத்யாதி. "குன்றுநேர்" இத்யாதியாலே வர்ணிக்கைக்கு இவை போக்யமாயிருக்குமோவென்ன, ஐதிஹ்யம் - பிள்ளை இத்யாதி. விரைந்து - த்வரித்து. 'அருளிச்செய்வர்' நஞ்சீயரென்றபடி. "சேர்" என்றதுக்கு - வ்ருக்ஷங்கள் அந்யோந்யம் ஸக்ருஶமாயிருக்குமென்று மூன்றுமர்த்தமாதல், த்விதீயார்த்த விவரணமாதல். ராகவோர்ஹதி இத்யாதி. கீழ் பொழிலை வர்ணித்த வபிப்ராயத்தை யநுவதித்துப் பரிஹரிக்கிறார்-மேல்நித்யஸூரிகளை இத்யாதி. "விண்ணோர்" என்றத்தைப்பற்ற - நித்யஸூரிகள் என்றது. ஆறு லும் விலக்ஷணரான ஸூரிகளோபாதி இவையும் உத்தேஶ்யமாமோவென்ன-நித்யஸூரிகளுக்கு இத் யாதிநாலுவாக்யம். சைதந்யத்திலுறைப்பு - ஜ்ஞாநகார்யமான ப்ரேமாதிஶயம். திவ்யதேசங்களிலுள்ளவை ஸஹவத்கடாக்ஷவிஷயமாகையாலே யுத்தேஶ்யமென்னுமதுக்கு ஐதிஹ்யம் - பிள்ளைஜநநாத இத்யாதி. எம்பார் அருளிச்செய்த வார்த்தை *மானேய்நோக்கிலே கண்டுகொள்வது. இவை அவன் கடாக்ஷவிஷயமென்றதுக்கைதிஹ்யம் - ஆச்சான் இத்யாதி. சுரவன்பாக்து - ஶ்லாக்யமான

---

† 'குருந்துமுதலான வ்ருக்ஷங்களை' என்றிருக்கலாம்.

சுரவன்பாக்குக்களை பட்டருக்குக் கொடுவந்துகொடுத்தாராய், அவற்றைக்கண்டு "இவை யிருந்தபடியென்? * திருவருள்கமுகினின்றும்வந்தவையோ?" என்றருளிச் செய்தாராம். நீராலே வளர்ந்தவையன்றே, அவனுடைய கடாக்ஷத்தாலே வளர்ந்தவையிறே. [அனந்த புரநகர்மாயன்] - ஸ்ரீவைகுண்டத்தைவிட்டு "தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கலாம்" என்னுமத்தாலே திருவனந்தபுரத்தை விடமாட்டாதே நிற்கிற ஶீலகுணாதிக்யத்தைச் சொல்லுகிறது. [நாமமொன்றுமோராயிரமாம்] - ஒருதிருநாமந்தானே விரோதிகளைப்போக்கி ரக்ஷிக்குமென்னுமிடஞ் சொல்லிற்றிறே; அப்படியே ஆயிரம்படி ரக்ஷகமான ஆயிரந்திரு நாமத்தையுடையவன். [உள்ளுவார்க்கு] - உத்தேஶ்யதை குறைவற்றிருந்தது, இனி அநுஸந்திப்பாரேயிறே தேட்டம். [உள்ளுவார்க்கு] - ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகளோலக்கங்கொடுக்க அவர்கள் நடுவேயிருக்கக்கடவ ஸர்வேஶ்வரன், "தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கலாம்" என்று இத்தேசத்தை விரும்பிவர்த்திக்கிற நீர்மையிலேற்றத்தை அநுஸந்திக்கவல்லார்க்கு. [உம்பரூரே] - திருநாமங்களை யநுஸந்திப்பார்க்கு, அவ்விடந் தானே யும்பரூரென்றுமாம்; அன்றியே, உள்ளுவார்பெறுமிடம் உம்பரூரென்னவுமாம். அவ்விடந்தானுமுத்தேஶ்யமாகிறதும் அவன்விடாதே வர்த்திக்கையிறே. இனி ஶர்மைக்ய முடையவன் தான் இவ்விடத்தே வர்த்தியாநின்றால் பின்னை இவ்விடமேஉத்தேஶ்ய மாகத் தட்டில்லையிறே. (உ)

மூன்றாம் பாட்டு.

ஊரும்புட்கொடியும்அஃதே உலகேல்லாம்உண்டுமிழ்ந்தான்
சேரும்தண்ணனந்தபுரம் சிக்கெனப்புகுதிராகில்
தீரும்நோய்வினைகளெல்லாந் திண்ணம்நாம்அறியச்சொன்னோம்
பேருமோராயிரத்துள் ஒன்றுநீர்பேசுமினே.

ஆ —(ஊரும்புள்.) - போகோபகரணங்களினாலும் லீலோபகரணங்களினாலும் பரிபூர்ணனாயிருந்த எம்பெருமானுக்கும் ப்ராப்யமான திருவனந்தபுரத்திலே

பாக்கு. "திருவருட்கமுகு" என்றதுக்கர்த்தம் - நீராலே இத்யாதி. அனந்தபுரநகரில்ஆஶ்சர்யமேதென்ன - ஸ்ரீ வைகுண்டத்தை இத்யாதி. 'சொல்லிற்றிறே' - முதற்பாட்டிலேயென்றபடி. திருநாமங்களாயிரத்தையு முடையவனென்றது - ப்ராஸங்கிகம். "உள்ளுவார்க்கு" என்றதுக்கு அவதாரிகை - உத்தேஶ்யதை இத்யாதி. "ஒன்றுமோராயிரமாம்" என்றது - ஒருநாமமே ஆயிரம்ப்ரகாரம் ரக்ஷகமாமென்னுதல், குணசேஷ்டிதாதிகளையொழிய நாமமொன்றுமே ஆயிரமுண்டாயிருக்குமென்னுதல்; 'என்னுதல்' என்கையாலே - இவ்வர்த்தத்வயமும் தோற்றுகிறது. "ஓராயிரமாம்" என்றத்தோடே "உள்ளுவார்க்கு" என்றத்தைச் சேர்த்து பாவம்-திருநாமங்களை இத்யாதி. இங்ஙனே, நாமத்தை உள்ளுவார்க்கு என்றருளிச்செய்து, "மாயன்" என்றதிற்சொன்ன ஶீலகுணத்தையுள்ளுவார்க்கு என்று அர்த்தாந்தரம் - ஸ்ரீ வைகுண்டத்திலே இத்யாதி. இது சதுர்விம்ஶத்ஸஹஸ்ரத்திலே ஸ்புடம். அவ்விடந்தானே - திருவனந்தபுரந்தானே. நித்யவிபூதியன்றோ வுத்தேஶ்யமென்ன - அவ்விடந்தானும் இத்யாதி. அவ்விடந்தானும் - பரமபதந் தானும். இவ்விடமே - திருவனந்தபுரமே. உம்பரூர் - * தேவாநாம் ஸூரித்யர்த்த:. பரமபதம். "உம்பரூர்" என்றதுக்கு - திருவனந்தபுரமே யும்பரூரென்னுதல், திருநாமங்களை யநுஸந்திப்பாரிருந்தவிடமே யும்பரூரென்னுதல், உள்ளுவார் பெறுமிடம் உம்பரூரென்னுதல் என்றர்த்தத்ரயமாதல்; அர்த்தத்வயமாதல். (உ)

அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு புகுதிராகில் உங்களுடைய ஸமஸ்தது:க்கங்களும் போம்: இது நிஸ்ஸிதம்; இப்ப்ராப்யத்தைப்பெறுகைக்கும் ப்ரதிபந்தகம்போகைக்கும் ஆயிரந்திருநாமத்திலே ஒருதிருநாமத்தைச் சொல்லவேணுமென்னும் நியமமில்லை; அவனுடைய அஸங்க்யேயமான திருநாமத்திலே வேண்டிற்றொரு திருநாமத்தைச் சொல்லுங்கோளென்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், ப்ரதிபந்தகங்கள் போகைக்கு இன்னதிருநாமமென்று இல்லை, ஆயிரத்திலும் ஏதேனுமொன்றைச் சொல்லவமையுமென்கிறார்.

[ஊரும்புள்ளென்றுமேனுக்கு] - ஸர்வவிஷயமோக்ஷவ்ருத்தியும் பெரிய திருவடியைக் கொள்ளுவதுஞ்செய்து ஜகத்துக்கு ஸர்வவிதரக்ஷகனுமானவன் கண்வளர்ந்தருளுகிற நிரதிஶயபோக்யமான திருவனந்தபுரத்தைப் பரமப்ராப்யமென்று அங்கேபுகுவுதிகோளாகில், து:க்கங்களும் து:க்கஹேதுவான பாபங்களுமெல்லாம் போம்; ஒருவர்க்கும் தெரியாத ரஹஸ்யத்தை வ்யக்தமாம்படி நாங்கள் சொன்னோம்.

ப.—அநந்தரம், அத்தேசத்தை ப்ராபித்தவளவிலே ஸமஸ்தவிரோதிகளும் கழலும்: ஸர்வரக்ஷகனான அத்தேசிகனுடைய திருநாமங்களாயிரத்திலும் ஏதேனுமொன்றையும்சொல்லி அநுஸந்தியுங்கோளென்கிறார்.

(ரக்ஷணார்த்தமாக), புள் - பெரியதிருவடியை, ஊரும் - நடத்தாநிற்கும், கொடியும் - ரக்ஷணத்துக்குக்கட்டினகொடியும், அஃதே - அதுவே: (சென்று ரக்ஷிக்க வொண்ணாத ப்ரளயத்தளவில்), உலகெல்லாம் - லோகத்தையெல்லாம், உண்டு - அமுதுசெய்து (வயிற்றிலேவைத்துநோக்கி), உமிழ்ந்தான் - ப்ரளயாநந்தரமுமிழ்ந்தவன், சேரும் - பிற்பாடர்க்கு முகங்கொடுக்கைக்காகக் கண்வளர்ந்தருளுகிற, தண் - ஶ்ரமஹரமான, அனந்தபுரம் - திருவனந்தபுரத்தை, சிக்கென - அநந்யப்ரயோஜநத்வ வ்யவஸாயத்தையுடையீர்களாய்க்கொண்டு, புகுதிராகில் - ப்ராபிப்புதிகோளாகில், நோய் - (ப்ரயோஜநாந்தரருசியான) நோயும், வினைகளெல்லாந்தீரும் - (அதுக்கடியான) கர்மங்களும் நிஶ்ஶேஷமாக நஶிக்கும்; நாம் - இவ்வர்த்தத்தில் நிலவரானநாங்கள், (உங்களுக்கு), அறிய - அறியும்படி, திண்ணம் - த்ருடமாக, சொன்னோம் -; (அங்குச்சென்றால்), பேருமோராயிரத்துள் - அவனுடைய அநுஸந்தேயமான நாமமாயிரத்திலும் வைத்துக்கொண்டு, ஒன்று - ஏதேனுமொன்றை, நீர் -, பேசுமின் - சொல்லுங்கோள். போக்யமாமிடத்தில் ப்ரயோகாப்ரயோக நிர்பந்தமில்லையென்று கருத்து.

இ.—மூன்றாம்பாட்டில், ப்ரதிபந்தகங்கள் போகைக்கு தேசப்ராப்தியே அமையும், ஆயிரம்திருநாமத்திலும் ஏதேனுமொன்றைச் சொல்லுங்கோள் என்கிறார்.

[ஊரும்புள்] - வாஹனமானது பெரியதிருவடி. [கொடியும் அஃதே] - இது நித்யஸூரிகளுக்கும் உபலக்ஷணம். இது, நித்யஸூரிகளுக்குக் கொடுத்துவைக்கும் ஸாநாராஸாநுபவத்தை இன்றுசெல்லுமவனுக்கும் கொடுக்குமென்னுமிதுக்காகச் சொல்லுகிறது. [உலகெல்லாம் உண்டுமிழ்ந்தான்] - ப்ரளயாபத்தில் ஆபத்தேமுதலாக வரையாதே திருவயிற்றிலேவைத்து, உள்ளிருந்து நோவுபடாதபடி வெளிநாடுகாண உமிழ்ந்தான். [சேரும்] - இப்படி உபயவிபூதியையும் நிர்வஹிக்கிறவன் ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய ரக்ஷணார்த்தமாகத் தன்செல்லாமையாலே வந்து கண்வளர்ந்தருளுகிற நிரதிஶயபோக்யமான திருவனந்தபுரத்தை. [சிக்கெனப் புகுதிராகில்] - "நவ

ஸாநுஷு ரம்ஸ்யதே'' என்கிறபடியே மீட்சியில்லாத ருசியோடேபோய்ப் புகுவுதிரேகோளாகில், து:க்கங்களும் து:க்கஹேதுக்களான பாபங்களும் போம். [திண்ணம் நாம் அறியச்சொன்னோம்] - அநுபவித்துக் கைவந்த நாங்கள், ஒருத்தர்க்கும் தெரியாத ரஹஸ்யத்தை வ்யக்தமாக அறியும்படி சொன்னோம். இதுண்டாய்க் கழிந்தார் வார்த்தையாகையாலே ஆப்தமென்கை. ப்ரதிபத்தி பண்ணுதார் இழக்குமித்தனை. து:க்கநிவ்ருத்திக்கு தேசப்ராப்தியே அமையும்; குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்கள் ஆயிரத்திலும் ஒரு திருநாமத்தைச் சொல்லி அநுபவியுங்கோள்.

ஈடு.—மூன்ரும்பாட்டு. ப்ரதிவந்யகங்கள்போகைக்கு தேசப்ராப்தியேயமையும்: ஆயிரந்திருநாமத்திலும் ஏதேனுமொன்றைச்சொல்லி யநுபவியுங்கோ ளென்கிருர்.

[ஊரும்புள்] - பெரியதிருவடியை வாஹநமாகக்கொண்டு நடத்தும். [கொடியுமஃதே] - இது நித்யஸூரிகளுக்கும் உபலக்ஷணம். அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தர்க்கு ''சென்றுற்குடையாம்'' என்கிறபடியே உண்டாகச் சொல்லுகிற நாநாபாவம், இன்று போய்க்கிட்டினவனுக்கும் வாசியறக் கொடுக்கு மென்கைக்காகச் சொல்லுகிறது. இவன் ''**அஹம் ஸர்வம் கரிஷ்யாமி**'' (அஹம்ஸர்வம்கரிஷ்யாமி) என்றிருந்தாலும் பலமில்லையிறே, ''குருஷ்வ'' என்று அவன்அப்படி கொள்ளாதவன்று. இவனுக்கு கிஞ்சித்கரியாதவன்று ஸ்வரூபலாபமில்லை. நிரபேக்ஷனதான் குறையநின்று இவனுடைய குறையைத்தீர்க்குமாய்த்து. தான் ஸாபேக்ஷனுய் நின்று இவனை நிரபேக்ஷனுக்கும். இவனுக்கு ஸ்வரூபஸித்தியுண்டாம்படி பண்ணிக்கொண்டு நிரபேக்ஷனுகவேணுமிறே அவனுக்கு. இவனுடைய ஸ்வரூபஸித்த்யர்த்தமாக அவன் தன்னைத் தாழவிட்டானேன்ருல், அதுதானே நைரபேக்ஷ்யத்துக்கு உடலாயிருக்குமிறே அவனுக்கு. ''இன்னார்தூதனென நின்றான்''என்றபின்பிறே அவனுக்கு ஸ்வரூபஸித்தியுண்டாய்த்து. [உலகு இத்யாதி]-ஸம்

---

*மூன்ரும்பாட்டு.—***ஊரும்** *இத்யாதி. ''அனந்தபுரம் சிக்கெனப்புகுதிராகில் தீரும் நோய் வினைகளெல்லாம். பேருமோராயிரத்துள் ஒன்று நீர்பேசுமின்'' என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை -* **ப்ரதிவந்யகங்கள்** *இத்யாதி.*

''புள்ளை - ஊரும்'' என்றந்வயிப்பது. இது உபலக்ஷணமென்கிருர் - **நித்ய** *இத்யாதி.* **நித்யஸூரிகளுக்கும் உபலக்ஷணம்** *என்றது - பெரியதிருவடி யொருவனையும் வாஹநமாகவும் கொடியாகவும் கொள்ளுமென்ற இது, நித்யஸூரிகளெல்லாரையும் ஒவ்வொருத்தரையே அநேக சேஷவ்ருத்திகள் கொள்ளுமென்னுமதுக்கும் உபலக்ஷணமென்றபடி. இப்பதப்ரயோகத்துக்கு* **பாவம்- அஸ்ப்ருஷ்ட** *இத்யாதி. அவன் கொடுக்கிறதென், தானேசெய்யவொண்ணுதோவென்ன -* **இவன்** *இத்யாதி. ''**அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஶ்ச தே| பவாம்ஸ்து**'' இத்யாதி* **[illegible]** *'' இத்யயோத்யாகாண்டே லக்ஷ்மண:. (ஙக-உக,-உஉ) பூர்ணனவன் இவனைக்கொண்டு கைங்கர்யம் கொள்ளுகிறதென்னென்ன-* **இவனுக்கு** *இத்யாதி. ஆகையாலே நிரபேக்ஷனென்று கூட்டுவது. விவரணம் -* **தான் ஸாபேக்ஷன்** *இத்யாதி. ஆனாலும் நைரபேக்ஷ்யஹாநிவாராதோவென்ன -* **இவனுக்கு** *இத்யாதி என்னுதல்; கீழே-பரார்த்தமாக ஸாபேக்ஷனுகையாலே நைரபேக்ஷ்யஹாநியில்லை யென்றருளிச்செய்து, இங்கே - ஸ்வநைரபேக்ஷ்ய ஸித்தியும் இவனையும் நிரபேக்ஷனுக்கிறலென்கிருர் -* **இவனுக்கு** *இத்யாதி என்னுதல். விவரணம் -* **இவனுடைய** *இத்யாதி. தாழவிட்டது நைரபேக்ஷ்யத்துக்கு உடலாகக்கண்ட விடமுண்டோவென்ன -* **இன்னார் தூதன்** *இத்யாதி. திருமொழி இரண்டாம்பத்து, ''முன்னோர்தூது'' இத்யாதி.* **நின்றன் - ஸத்தை**

ஸாரஸ்பர்ஶமில்லாதாரை எல்லாவடிமைகளும் கொள்ளுகையன்றிக்கே, ப்ரளயாபத்தில் லோகத்தை யெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கி, பின்னை யுள்ளேகிடந்து தளர வொண்ணாதென்று வெளிநாடுகாண வுமிழ்ந்தவன். [சேரும்தண்ணனந்தபுரம்] - ப்ரளயாபத்தில் ஜகத்துக்கு அவன்வயிற்றில் புகாதபோது உண்டான செல்லாமையோபாதியும் போருமாய்த்து அவனுக்குஇத்தேசத்தில் புகுராதபோதுஉண்டானதரிப்பறுதி; ப்ரளயாபத்தினின்றும் ஜகத்தையடைய ரக்ஷித்தவன் † (ஸ்ருஷ்டமான ஜகத்தினுடையரக்ஷணார்த்தமாக) வந்துசேருகிற விடமேன்னுதல், அவன் நிர்ப்பரனாய்க்கொண்டு சாய்ந்தருளுகிற விடமேன்னுதல். [தண்ணனந்தபுரம்] - ப்ராந்தியாலே அவன்இப்படி விரும்புகிறானல்லன்; ஹோக்யதையாலே விடமாட்டாமையாய்த்து. உகந்தருளினநிலமாகில் இப்படியிருக்கவேண்டாவோ? "தானுகந்தவூர்" என்னக்கடவதிறே. தானுமுகந்து நித்யஸூரிகளும் உகக்குமிடமிறே பரமபதம்; இங்குத் தன்னுகப்பேயிறே: இவர்கள் வைமுக்யம்பண்ணா நிற்கச்செய்தேயும் தான் விடமாட்டாதே அவஸரப்ரதீக்ஷனாய் நிற்கிறவிடமிறே. [சிக்கென] - "நசபுநராவர்த்ததே" (நசபுநராவர்த்ததே) என்கிறபடியே மீளாத ருசியையுடையீர்களாய்க்கொண்டு கிட்டுவுதிகோளாகில். [தீரும்இத்யாதி]-து:க்கங்களும் து:க்கஹேதுக்களு மெல்லாம் நசிக்கும். [திண்ணம்] - "ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்யம்" (ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்யம்) என்னுமாபோலே. [நாம்அறியச்சொன்னோம்] - சரதமாக அநுபவத்தாலே கைகண்ட நாம்,இதில் வாசியறியாத நீங்களும் இழக்கவொண்ணாதென்று உங்கள் நெஞ்சிலே படும்படிசொன்னோம். [நாம்] - நெடுநாள் க்லேஶப்பட்டுக் கரைகண்டவரிறே. [சொன்னோம்] - இனி கர்மவஶ்யராய்ப்படுமேவர்கள், சொன்ன வார்த்தை ப்ரதிபத்திபண்ணாமையாலே படுகிறார்களத்தனை ; நம்மேல் குறையற நாம் சொன்னோம். செயலுக்கு தேசப்ராப்திஅமையுமென்றார், இனிச்சொல்லிருக்க வடுப்பதேன் என்ன ?-[பேரும்ஓர்இத்யாதி]-ஒருதிருநாமந்தானே ஆயிரம்படி ரக்ஷகமான ஆயிரந் திருநாமத்தையுடையவனென்று சொன்னோமிறே முன்பே; அதில் வாய்க்குத்தோற்றிற்று ஒரு திருநாமத்தைச் சொல்லுங்கோள். [பேசுமினே]-மநஸ்ஸஹகாரமும் வேண்டா. (ந)

பெற்றான். "உலகெல்லாமுண்டுமிழ்ந்தான் சேரும்" என்றபதச்சேர்த்திக்கு பாவம் - ப்ரளயாபத்தில் ஜகத்துக்கு இத்யாதி. உக்தத்தை யநுவதியாநின்றுகொண்டு, பதச்சேர்த்திக்கு பாவாந்தரம் - ப்ரளயாபத்தினின்றும் இத்யாதிவாக்யத்வயம். "சேரும்" என்றது - ரக்ஷ்யாபேக்ஷையோடேவந்து நிற்கிறவென்னுதல், சாய்ந்தருளுகிறவென்னுதலென் றர்த்தத்வயம். "தண்" என்றதுக்கு பாவம் - ப்ராந்தியாலே இத்யாதி. ஈடுபாடு - உகந்தருளின இத்யாதி. இப்படியிருக்கவேண்டாவோ வென்றது - ஈஶ்வரன விரும்பும்படி ஹோக்யமாயிருக்க வேண்டாவோவென்றபடி. "அவன் விரும்பினதே உகந்தருளினநிலம்" என்றதுக்கு ப்ரமாணம் - தானுகந்த இத்யாதி. "அலம்புரிந்த" இத்யாதி, திருநெடுந்தாண்டகம். இதுக்கர்த்தம் - தானும் இத்யாதி. "தன்னுகப்பேயிறே" என்றத்தை விவரிக்கிறார் - இவர்கள் இத்யாதி. சரதம் - நிஶ்சிதம். "நசபுநராவர்த்ததே நசபுநராவர்த்ததே" இதி சாந்தோக்யே. (அ-கஙு-சரமனக8)" ஸத்யம்ஸத்யம் புநஸ்ஸத்யமுத்த்ருத்ய புஜமுச்யதே । வேதஶாஸ்த்ராத் பரம் நாஸ்தி நதைவம் கேஶவாத் பரம்" இதிமஹாபாரதே. "அறிய" என்றதுக்கு பாவம்-இதில்வாசி இத்யாதி. அப்படி கைகண்டாரோவென்ன-நெடுநாள் இத்யாதி. "சொன்னோம்" என்ற ஆதரிர்த்தேசத்தால் ஃபலிதம்-இனி கர்மவஶ்யராய் இத்யாதி. செயலுக்கு - காயிகவ்யாபாரத்துக்கு. சொன்னோமிறே முன்பேயென்றது- "ஓராயிரமாய்" என்கிறபாட்டிலேயென்றபடி. "பேசுமின்" என்றதுக்கு பாவம்-மநஸ்ஸஹகாரமும் இத்யாதி. அத்விதீயமான ஆயிரந்திருநாமத்திலும் வைத்துக்கொண்டு ஏதேனுமொன்றைச் சொல்லுங்கோளென்று ஶப்தார்த்தம். (ந)

நான்காம் பாட்டு.

பேசுமின்கூசமின்றிப்பெரியநீர் வேலைசூழ்ந்து
வாசமேகமழுஞ்சோலை வயலணியனந்தபுரம்
நேசஞ்செய்துறைகின்றானைநெறிமையால்மலர்கள்தூவிப்
பூசனைசெய்கின்றார்கள் புண்ணியஞ்செய்தவாறே.

ஆ.—(பேசுமின்.) - நாம் அநர்ஹரென்று கூசாதே அவன்திருநாமத்தைச சொல்லுங்கோளென்றுசொல்லி, அடிமைசெய்கையிலே அவர்களுக்கு ஸ்ப்ருஹைபெறுகைக்காகத் திருவனந்தபுரத்தில் எம்பெருமானுக்கு அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு அடிமைசெய்கிறவர்கள் என்னபுண்யஞ்செய்தாரோவென்று, அவர்களுடைய ப்ரஶம்ஸாமுகத்தாலே ப்ராப்யமான அடிமையினுடைய உத்கர்ஷத்தைச் சொல்லுகிறார்.

ஒ.—நாலாப்பாட்டில், ஆஶ்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக, 'திருவனந்தபுரத்தில் எம்பெருமானுக்கு அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு அடிமை செய்கிறவர்கள் என்னபுண்யம் செய்தார்களோ?' என்கிறார்; அவர்கள் பாக்யம்பண்ணினபடியைப் பேசுங்கோள் என்றுமாம்.

[பேசுமின் கூசமின்றி] - அயோக்யரென்று கூசாதே திருநாமத்தைச்சொல்லுங்கோள். [பெரியநீர் என்றுதொடங்கி] - பெரியநீரையுடைய கடல்சூழ்ந்து நிரந்தரமான பரிமளத்தையுடைய சோலையோடுகூடினவயலாலே அணியப்பட்ட திருவனந்தபுரத்தை விரும்பி அங்கே கண்வளர்ந்தருளுகிறவனை.

ப.—அநந்தரம், ஆஶ்ரித ரக்ஷணார்த்தமான நிரவதிக வாத்ஸல்யத்தையுடையனைக்கொண்டு திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிறவனை ஆராதிக்கிறவர்களுடைய பாக்யாதிஶயத்தை ஶ்லாகிக்கப்பாருங்கோள் என்கிறார்.

பெரிய - ஸம்ருத்தமான, நீர் - ஜலத்தையுடைத்தான, வேலை - கடலாலே, சூழ்ந்து - சூழப்பட்டு, வாசமே கமழும் - பரிமளத்தைப்பரப்பாநிற்கிற, சோலை - சோலைகளையும், வயல் - வயல்களையும், அணி - அலங்காரமாகவுடைய, அனந்தபுரம் - திருவனந்தபுரத்திலே, நேசம்செய்து - (ஆஶ்ரித முகப்ரேக்ஷகனாக) நிரதிஶய வாத்ஸல்யத்தைப்பண்ணி, உறைகின்றானை - நித்யவாஸம்பண்ணுகிறவனை, நெறிமையால் - அவன் ஶேஷித்வாநுரூபமான மார்க்கத்தாலே, மலர்கள் - புஷ்பாத்யுபகரணங்களை, தூவி - (ப்ரேமபரவசராய்க்கொண்டு) விநியோகித்து, பூசனைசெய்கின்றார்கள் - ஆராதிக்கிறவர்கள், புண்ணியம் - பாக்யத்தை, செய்தவாறு - பண்ணினப்ரகாரத்தை, கூசமின்றி - (உங்களுடைய) அயோக்யதையைப்பாராதே (வத்ஸலனானவனை ஆராதிக்கிறவர்களுடைய வாத்ஸல்யாதிஶயத்தைப்பார்த்துக்) கூசாதே, பேசுமின் - ஶ்லாகிக்கப்பாருங்கோள்.

இ.—நாலாம்பாட்டில், ஆஶ்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக, 'திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமைசெய்கிறவர்கள் என்ன பாக்யவான்கள்!, என்கிறார்; அவர்கள் பாக்யம் பண்ணினபடியைப் பேசுங்கோள் என்றுமாம்.

[பேசுமின் கூசமின்றி] - உங்கள் அயோக்யதையைப்பார்த்துக் கூசாதே, அத்தலையில் நீர்மையையும் ப்ராப்தியையும் பார்த்துப் பேசுங்கோள். ஊளவேழுலகில்

தமக்குப்பிறந்த விருப்பு இவர்களுக்கும் ஒக்குமென்றிருப்பரிறே. [பெரியநீர் இத்யாதி] - பெரியநீரையுடைத்தான கடல்சூழ்ந்திருப்பதாய் நிரந்தரமான பரிமளத்தையுடைய சோலையோடுகூடின வயலாலே அலங்க்ருதமான திருவனந்தபுரம். சோலையின் பரிமளம் புறப்படாதபடி மதிளிட்டாற்போலேயாய்த்துக் கடலிருப்பது. கடலில் நாற்றம் மேலிடாதபடியாய்த்துப் பரிமளம் விஞ்சியிருப்பது. [நேசஞ்செய்து உறைகின்றானை] - பரமபதத்திற்காட்டில் வ்யாவ்ருத்தி; "ஸ்வயம்வாஸரவாஸாது" என்கிறபடியே. ஆர்த்தரக்ஷணத்துக்கு உடலான தேசமென்று ஸ்நேஹித்து நித்யவாஸம்பண்ணுகிறவனை. அத்தேசத்துக்கு ஆர்த்தரில்லாக் குறையுண்டிறே. "ஆர்த்தரில்லாதவிடமும் ஒருவாஸஸ்தாநமோ?" என்று அத்தேசத்தை வசைபாடியாய்த்திருப்பது. 'நேசஞ்செய்து உறைகின்றானை-பேசுமின் கூசமின்றி' என்னுதல்; 'புண்ணியஞ்செய்தவாற்றை-பேசுமின் கூசமின்றி' என்னுதல். [நெறிமையால் இத்யாதி] - அநந்யப்ரயோஜநராய், சூட்டுநன்மாலைப்படியே புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு அக்ரமமாக ப்ரயோகித்து அடிமைசெய்யுமவர்கள் நித்யஸூரிகளிற்காட்டில் பாக்யாதிகர்: ஸம்ஸாரத்திலே நித்யஸூரிகள் பரிமாற்றத்தையுடையவர்கள் பாக்யாதிகரன்றோ? அப்போது, புண்ணியஞ்செய்தவாறே! என்று ஆஸ்சர்யம். இவர்கள்படியைப் பேசும்போது ஸர்வேஸ்வரனைப் பேசுமதிற்காட்டில் கூச்சமறப் பேசலாமிறே.

ஈடு.—நாலாம்பாட்டு. ஆஸ்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக, 'திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமை செய்கிறவர்கள் என்ன பாக்யவான்கள்!' என்கிறார்; அவர்கள் பாக்யம்பண்ணினபடியைப் பேசுங்கோளென்றுமாம்.

[பேசுமின்கூசமின்றி] - உங்கள் அயோக்யதையைப்பார்த்துக் கூசாதே பேசுங்கோள். தாம் * மயர்வறமதிநலம்அருளப்பெறச்செய்தேயும், அநாதிகாலம் ஸம்ஸரித்துப் போந்த வாஸநையாலே "அருவினையேன்" என்று பேசுகைக்குக் கூசினவிது, இவர்களுக்கும் உண்டேன்றிருக்கிறார். பகவத்விஷயத்தைப் பேசும்போது கூசத்தான்வேண்டாவிறே: அப்ரதிபத்தியாலேயிறே பேசாதிருந்தது; ப்ராப்தவிஷயமென்றறியவே கூசாதே பேசலாமிறே. [பெரியநீர் இத்யாதி] - மிக்கஜலத்தையுடைத்தான கடலாலேசூழப்பட்டு, வாசமேகமழாநிற்குமாய்த்துச்சோலை. சூழப்போந்தசோலையில் பரிமளம் புறம்புபோகாதபடி மதிளிட்டாற்போலேயாய்த் திருப்பது கடல். [வாசமே கமழும்] - கடலில் நாற்றம் மேலிடாதபடி சோலையில் பரிமளமே விஞ்சியிருக்குமாய்த்து; இப்படிப்பட்ட சோலையையுடைத்தான வயலாலே யலங்க்ருதமான திருவனந்தபுரத்தை. 'நேசஞ்செய்து றைகின்

நாலாம்பாட்டு.—பேசுமின் இத்யாதி. "பூசனைசெய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாறே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகாத்வயம் அருளிச்செய்கிறார் - ஆஸ்ரயிப்பார்க்கு இத்யாதிவாக்யத்வயத்தாலே..

இவர்களுக்குக்கூச ப்ரஸக்தியேதென்ன - தாம் இத்யாதி. அவனைப்பேசும்போது கூசவேண்டாவென்னுமத்தையும், இப்படியிருக்கச்செய்தேயும் தாம் கூசியகன்றதுக்கு ஹேதுவையும், அவனைக் கூசாதேபேசுகைக்கு ஹேதுவையும் அடைவேயருளிச்செய்கிறார் - பகவத்விஷயத்தை இத்யாதி வாக்யத்ரயத்தாலே. "வேலைசூழ்ந்து வாசமேகமழும்" என்ற பதச்சேர்த்திக்கு பாவம்-சூழப்போந்த இத்யாதி. "வாசமே" என்ற அவதாரணார்த்தம் - கடலில் இத்யாதி. "கடலில் நாற்றம் மேலிடாதபடி" என்றதுக்கு ஸ்வாபதேஸம் - ஸம்ஸாரகந்தமும் தட்டாதபடியென்று. சோலையையுடைத்தான வென்றது-சோலையையுமுடைத்தாயென்றபடி. பாட்டின் முந்தினவவதாரிகைக்குச்சேர அந்வயம்-நேசஞ்செய்து இத்யாதி வாக்யத்வயம். த்விதீயாவதாரிகைக்குச் சேர அந்வயம்-

றுனை - பேசுமின் கூசமின்றி' என்று கீழோடே கூட்டவுமாம்; அப்போது, "நேசஞ்செய் துறைகின்றுனை - பூசனைசெய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாறே?" என்றது - ஆஶ்சர்யத்திலே யாகிறது. அன்றிக்கே, பெரியநீர் தொடங்கி - 'பூசனைசெய்கின்றார்கள் புண்ணியஞ் செய்தவாற்றை - பேசுமின் கூசமின்றி' என்னவுமாம்; அப்போது, கூசமின்றிப் பேசுகையாவதென்? என்னில்,—பாகவத்விஷயம்போலே வாய்வந்தபடி சொல்லவொண்ணாதிறே பாகவத விஷயம். [நேசஞ்செய்துறைகின்றானை] - பரமபதத்தில் தவிரவொண்ணாமையாலே யிருக்குமத்தனை. அவ்விடத்தை வசைசொல்லியாய்த்து இங்குவர்த்திப்பது; "ஆர்த்தரக்ஷணத்துக்கு உடலல்லாதவிடமும் ஒரு வாஸஸ்த்தாநமாயற்றதோ!" என்று, ஆர்த்தரக்ஷணத்துக்குப் பாங்கானதேஶமென்று விரும்பிவர்த்திப்பது இங்கேயாய்த்து; "அதிகம் புரவாஸாச்ச" (அதிகம்புரவாஸாச்ச). [நெறிமையால் மலர்கள்தூவி]- "ஸர்வேஶ்வரன் ஶேஷி; இவ்வாத்மவஸ்து அவனுக்குஶேஷம்" என்கிற முறைமையாலே, புஷ்பாத்யுபகரணங்களை அவன்திருவடிகளிலே பணிமாறி; அன்றிக்கே, அவன் தான் இத்தேஶத்தை ஸ்நேஹித்து வர்த்திக்கிறாப்போலே தாங்களும் ஸ்நேஹத்தையுடையராய் மலர்கள் தூவியென்னுதல்; இவர்கள் வர்த்திக்கிறவிடமென்று அவன் விரும்பி வந்தவோபாதி தாங்களும் ஒருப்ரயோஜநத்தைக் கணிசியாதே யாஶ்ரயித்தென்னவுமாம். [புண்ணியஞ்செய்தவாறே] - * சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி அடிமைசெய்கிறவர்களதும் ஓரடிமையாயற்றதோ! ஸ்ரீபரதாழ்வானைப்போலே யாய்த்துஅவர்கள்; இளையபெருமாளைப்போலேயாய்த்து இவர்கள். அவன் விட்டுப்போரச்செய்தேயும், பாரதந்த்ர்யத்தாலே விடமாட்டாதே கிடக்கிறார்களித்தனையிறே. (அ)

அன்றிக்கேஇத்யாதி. பாகவதர்களைப்பேசும்போது கூச்சத்துக்கு ப்ரஸக்தியேதென்கிற ஶங்கையையநுவதித்துப் பரிஹரிக்கிறார் - அப்போது கூசமின்றி இத்யாதிவாக்யத்வயத்தாலே. 'அப்போது' என்றவநந்தரம், "பாகவதவிஷயத்தை" என்றுகூட்டுவது. 'வாய்வந்தபடி சொல்லவொண்ணாதிறே பாகவதவிஷயம் என்றது-அவர்கள்அவனிலும் பூஜ்யராகையாலே பேசப்போகாதென்றபடி. ஆனால் பேசும்படியென்னென்ன; பூஜ்யரேயாகிலும் ஸுலபராகையாலேபேசத்தட்டில்லையென்று கருத்து. "அனந்தபுரம்நேசஞ்செய்து" என்றத்தால் பாவம்- பரமபதத்தில் இத்யாதி. கீழ்வாக்ய விவரணம் - அவ்விடத்தை இத்யாதி. வசை-தோஷம். இங்கே யவனுக்கு ஸ்நேஹமுண்டாகைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் - ஆர்த்தரக்ஷணத்துக்கு இத்யாதி. இவ்வாக்யாநந்தரம் அவ்விடத்தை வசை இத்யாதி வாக்யம் அநுஸந்தேயம். இதுக்கு ஸம்வாதம் - அதிகம் இத்யாதி. "தர்ஶநம் சித்ரகூடஸ்ய மந்தாகிந்யாஶ்ச ஶோபநே । அதிகம் புரவாஸாச்ச மந்யே தவ ச தர்ஶநாத்" இதி சித்ரகூடே ஸீதாம்ப்ரதி ராம:.(அயோ-கூ-கஉ) சித்ரகூடஸ்ய-தர்ஶநம்-புரவாஸாத்-அதிகம்ச, மந்தாகிந்யா:-தர்ஶநம்-தவ - தர்ஶநாத்-அதிகம்ச-மந்யே இத்யந்வய:. நெறிமையால் - ஶேஷஶேஷிபாவமுறையாலேயென்னுதல், ஸ்நேஹமார்க்கத்தாலேயென்னுதல். த்விதீயார்த்தத்துக்கு, நெறிமையாலென்று-அவன் ஸ்நேஹித்தமார்க்கத்தாலேயென்றபடி. த்விதீயார்த்தவிவரணமாதல், த்ருதீயார்த்தமாதல் - இவர்கள் வர்த்திக்கிற இத்யாதி. த்ருதீயார்த்தமானபோது, "நெறிமையால்" என்றது - அநந்யப்ரயோஜநதையாலே யென்றபடி. "செய்தவாறே" என்ற ஸ்வரத்துக்கு பாவம், சூட்டுநன்மாலைகள் இத்யாதி. திருவிருத்தம். இருவருடையவும் ஆதிக்யந்யூநதைகளுக்கு த்ருஷ்டாந்தம் - ஸ்ரீபரதாழ்வானை இத்யாதி வாக்யத்வயம். அவர்கள்- நித்யஸூரிகள். இவர்கள் - திருவனந்தபுரத்தி லடிமைசெய்கிறவர்கள். நித்யஸூரிகள் ஸ்ரீபரதாழ்வானைப்போலே யானபடியை இசைவிக்கிறார் - அவன்விட்டுப்போர இத்யாதி. 'பெரியநீர்' என்று தொடங்கி, 'நேசம்செய் துறைகின்றானை - கூசமின்றி - பேசுமின்; நேசம்செய் துறைகின்றானை நெறிமையால்' என்று தொடங்கி, 'புண்ணியம் செய்தவாறே' என்று விஸ்மிதராகிறாரென்னுதல்; 'பெரியநீர்' என்று தொடங்கி, 'புண்ணியம்செய்தவாற்றை - கூசமின்றி - பேசுமின்' என்றந்வயமாதல். (அ)

ஐந்தாம் பாட்டு.

புண்ணியஞ்செய்துநல்லபுனலோடுமலர்கள்தூவி
எண்ணுமின் எந்தைநாமம் இப்பிறப்பறுக்கும்அப்பால்
திண்ணம்நாம்அறியச்சொன்னோம்செறிபொழில்அனந்தபுரத்து
அண்ணலார்கமலபாதம் அணுகுவாரமரராவார்.

ஆ.—(புண்ணியஞ்செய்து.) - நீங்களும் அங்ஙனே புண்யரூபமான திருநாமத்தைச்சொல்லி நிரஸ்தஸமஸ்தப்ரதிபந்தகராய்த் திருவனந்தபுரத்திலேபோய்ப் புக்கு பாஹ்யாந்தர் ஸர்வகரணங்களாலும் எம்பெருமானுக்கு அடிமைசெய்யுங்கோள்! அவன் உங்களுடைய இந்தஸம்ஸாரத்தைப் போக்கும்; இப்போது தன்திருவடிகளை ஆஶ்ரயிக்கிற உங்களைப் பின்னை யமரராக்கும்; இது நிஶ்சிதம். உமக்குத் தெரியச் சொன்னோம் என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருவனந்தபுரத்தில் ஆஶ்ரயிக்குமவர்கள் அயர்வறுமமரர்களோடு ஒப்பர் என்றுகொண்டாடி, அப்படியே நீங்களும் ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

[புண்ணியம் என்றுதொடங்கி] - ஸ்நேஹத்தைப்பண்ணி நல்லபுனலோடு கூடின மலர்களை ப்ரேமபரவஶராய்க்கொண்டு திருவடிகளிலே பணிமாறி என்ஸ்வாமியுடைய திருநாமத்தை அநுஸந்தியுங்கோள்; அடிமைக்கு விரோதியான இஸ்ஸம்ஸாரத்தை அறுக்கும். [அப்பால் என்றுமேலுக்கு] - வேறு அயர்வறுமமரர்கள் என்று சொல்லப்படுகிறவர்களும் செறிந்த பொழிலையுடைய திருவனந்தபுரத்திற் கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனுடைய நிரதிஶய போக்யமான திருவடிகளை ஆஶ்ரயிக்குமவர்கள்; இப்பொருள் நிஶ்சிதம்; இது வ்யக்தமாகச் சொன்னோம்.

ப.—அநந்தரம், திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிற நிருபாதிகஶேஷியானவன்திருவடியைக் கிட்டினவர்கள் ஸூரிகளாகை அறுதி; ஆகலால், ப்ரேமயுக்தராய்க் கொண்டு ஆராதித்து அவன் திருநாமங்களை 'யநுஸந்தியுங்கோள் என்கிறார்.

புண்ணியம்செய்து-போக்யதையான பக்தியைப்பண்ணி, நல்ல-ஐக்த்யுபஹ்ருதமாகையாலே அவனுக்கு ஆதரணீயமான, புனலொடு மலர்கள் - ஜலபுஷ்பாதிகளை, தூவி – (ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு) ப்ரயோகித்து, எந்தை - உத்பாதகனானவனுடைய, நாமம் - திருநாமங்களை, எண்ணுமின் - நிரந்தராநுஸந்தானம்பண்ணி யநுஸந்தியுங்கோள்; (இவ்வநுஸந்தானே), இப்பிறப்பு - த்ருஷ்டதோஷமான இஜ்ஜந்மத்தை, அறுக்கும் - அறும்படிபண்ணும்; அப்பால் - மேலும், செறிபொழில் - செறிந்த பொழிலையுடைத்தான, அனந்தபுரத்து - திருவநந்தபுரத்திலே, அண்ணலார்கமலபாதம் - நிருபாதிகஸ்வாமியானவன் திருவடிகளை, அணுகுவார் - (உக்தப்ரகாரத்திலே) ஸ்நேஹமாகக்கிட்டுமவர்கள், அமரராவார் - * அயர்வறுமமரர்களிலே அந்யதமராவர்கள்; (இவ்வர்த்தத்தை), நாம் - (அபிஜ்ஞரான) நாங்கள், திண்ணம் - த்ருடமாக, அறிய-, சொன்னோம் - சொன்னோம்.

இ.—அஞ்சாம்பாட்டில், திருவனந்தபுரத்தில் ஆஶ்ரயிக்குமவர்கள் நித்யஸூரிகளாவர்கள்; ஆகையாலே, நீங்களும் ஆஶ்ரயியுங்கோள் என்கிறார்.

[புண்ணியம் செய்து] - ஸ்நேஹத்தைப்பண்ணி: வர்ணாஶ்ரமதர்மஇதிகர்தவ்யதாகமான பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தை நினைக்கிறது. "மத்பக்தோ மந்மநாபவ" என்னக்கடவதிறே. [நல்லபுனல் இத்யாதி] - நல்லபுனலோடேகூடின மலர்களைப்பரிமாறி: அர்ச்சனாதிகளைச் சொல்லுகிறது. "மத்யாஜீமாம்நமஸ்குரு" என்னக்கடவதிறே. [எண்ணுமின் எந்தைநாமம்] - என்ஸ்வாமியுடைய திருநாமத்தை அநுஸந்தியுங்கோள். இடறினவன் "அம்மே?" என்னுமாபோலே வகுத்தவனுடைய திருநாமத்தை அநுஸந்தியுங்கோள்: "ஸததம்கீர்த்தயந்த:" என்னக்கடவதிறே. [இப்பிறப்பறுக்கும்]- பிறவியினுடைய தோஷப்ராசுர்யம் ப்ரத்யக்ஷஸித்தமிறே. [அப்பால் - அமரராவார் - செறிபொழிலனந்தபுரத்து அண்ணலார் கமலபாதம் அணுகுவார்] - செறிந்தபொழிலையுடைய திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனுடைய நிரதிஶயபோக்யமான திருவடிகளை ஆஶ்ரயிக்குமவர்கள், "இப்பிறப்பறுக்கவேணும்" என்ன வேண்டாத நித்யஸூரிகளாவர்கள். இத்தால் - விரோதியைப் போக்குமளவன்றியே உத்தேஶ்யத்தைப் பெறுகைக்கும் திருவனந்தபுரமே ஆஶ்ரயணீயஸ்தலமென்கிறது. [திண்ணம்நாம் அறியச்சொன்னோம்] - வ்யக்தமாக, மயர்வறமதிநலமருளப்பெற்ற நாம், தேஹாத்மாபிமாநிகளான நீங்கள் அறியும்படி. உங்கள் அநர்த்தத்தைப் பார்த்துச் சொன்னோம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. திருவனந்தபுரத்தில் ஆஶ்ரயிக்குமவர்கள் நித்யஸூரிகளாவர்கள்;ஆகையாலே, அங்கே நீங்களும் ஆஶ்ரயியுங்கோளென்கிறார்.

[புண்ணியஞ்செய்து] - ஸ்நேஹத்தைப்பண்ணி. ப்ரயாநம் வர்ணாஶ்ரமதர்மங்களை இதிகர்த்தவ்யதையாக வுடைத்தா யிருக்குமிறே; ஆக, ஸத்கர்மபலமான பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தை நினைக்கிறது. "மத்பக்தோ - மந்மநாபவ" (மத்பக்தோ - மந்மநாபவ) என்னக்கடவதிறே. [நல்லபுனலோடு மலர்கள் தூவி] - நல்ல புனலோடே கூடின மலர்களை ப்ரேமபரவசராய்க்கொண்டு பணிமாறி. இத்தால் - அர்ச்சநாதிகளைச் சொல்லுகிறது."மத்யாஜீமாம்நமஸ்குரு" (மத்யாஜீமாம்நமஸ்குரு) என்னக்கடவதிறே. [எண்ணுமின்] - "ஸததம்கீர்த்தயந்த:" (ஸததம்கீர்த்தயந்த:) என்னாநின்றதிறே.

அஞ்சாம்பாட்டு.—புண்ணியம் இத்யாதி. "அனந்தபுரத்தண்ணலார் கமலபாதமணுகுவார் - அப்பால் - அமரராவார்: எண்ணுமின்எந்தைநாமம்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - திருவனந்தபுரத்தில் இத்யாதி.

புண்யஶப்தம் கர்மவாசக மொழிய, பக்திவாசகமாம்படியென்? என்ன - ப்ரயாநம் இத்யாதி; வர்ணாஶ்ரமதர்மங்களை யென்றபடி. இதிகர்த்தவ்யதையாக - அங்கமாக. ஸ்நேஹமும் பக்தியும் பர்யாயம். இத்தால்-காரணமான கர்மத்தையிட்டுக் கார்யமான பக்தியை லக்ஷிக்கிறதென்கிறார் - ஆக ஸத்கர்ம இத்யாதி. காரணமான கர்மத்தையிட்டுக் கார்யமான பக்தியை லக்ஷிக்கிறதென்? கர்மந்தன்னையே சொன்னாலோ? என்ன -மத்பக்த: இத்யாதி. அதாவது - "மத்பக்தோ மந்மநாபவ, மத்பக்தோ மத்யாஜீபவ, மத்பக்தோ மாம்நமஸ்குரு" என்று எல்லாம் பக்திபுரஸ்ஸரமாகச் செய்யச்சொல்லுகையாலே, இங்கும் "நல்லபுனலொடு" இத்யாத்யுக்த அர்ச்சநாத்யங்கத்வேந பக்தியைச் சொல்லுகிறதென்று கொள்ளவேணுமென்றபடி. "அர்ச்சநாதிகளைப்பண்ணி" என்றதுக்கு ப்ரமாணம் - "மத்யாஜீ" இத்யாதி. பகவந்நாமோச்சாரணமும் பக்திக்குஉபயுக்தமென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் - "ஸததம்" இத்யாதி. "மந்மநாபவமத்பக்தோ மத்யாஜீமாம் நமஸ்குரு। மாமேவைஷ்யஸியுக்த்வைவமாத்மாநம் மத்பராயண: ॥ (௩௪) ஸததம்

[எந்தைநாமம்] - இடறினவன் "அம்மே" என்னுமாபோலே திருநாமம்சொல்லும்போது ஒரு அதிகாரிஸம்பத்தி தேடவேண்டா; சீயர் பட்டரை "திருநாமம் சொல்லும்போது ப்ரயதனாய்க்கொண்டுசொல்லவேணுமோ?" என்று கேட்க, "கங்கையிலேமுழுகப்போமவனுக்கு வேறொரு †உவர்க்குழியிலே முழுகிப்போக வேணுமோ? மேலுண்டான நன்மையைத் தருகிற இது அதிகாரிஸம்பத்தியையும் தரமாட்டாதோ?" என்றருளிச்செய்தாராம். திருநாமம் சொல்லுகைக்கு ருசியேயாய்த்து வேண்டுவது; அவர்களே அதிகாரிகள். [இப்பிறப்பறுக்கும்] - கண்டதிறே இதினுடைய இழையீடு. கவிழ்ந்துபார்க்கவமையுமே இதினுடைய அகவாயை; தன்னடையே விரக்தி பிறக்குமே. இப்படி ப்ரத்யக்ஷிக்கச் செய்தேயும் கார்யகரமாகாதிருக்கிறதிறே வாஸநையின் கனம். ஒருசெட்டியை "இவன் தமிழுக்குத்தேசிகனாயிருக்கும்"என்று பட்டருக்குக்காட்டினார்களாய், "உனக்குஏதேனும் அபேக்ஷையுண்டாகில் கேட்கலாகாதோ?" என்ன. "சிலர் 'காண்கிறதேஹத்துக்கு அவ்வருகு ஆத்மாவுமில்லை, தர்மாதர்மங்களுமில்லை, ஈஶ்வரனுமில்லை' என்றிராநின்றார்கள்: சிலர் 'இத்தேஹந்தான் அஸ்த்திரம்' என்று இதின்தோஷத்தை தர்ஶித்து 'அவ்வருகேஸ்த்திரமாயிருப்பதொன்றைப் பற்றவேணும்' என்றிராநின்றார்கள்: விஷயமொன்றாயிருக்க இவ்விரண்டு பரிமாற்றமும் நடக்கிறபடியெங்ஙனே?" என்ன; "'மம மாயா துரத்யயா" (மமமாயாதுரத்யயா) என்றும் 'மாயாமேதாந்தரந்திதே' (மாயாமேதாந்தரந்திதே) என்றும் சொல்லுகிறபடியே ஸாக்யவான்களுக்கு இதினுடைய தோஷதர்ஶநத்தைப் பண்ணிக் கழித்துக்கொள்ளுகைக்கும், ஸாக்யஹீநர்க்கு இதிலே போக்யதாபுத்திபண்ணி அநர்த்தப்படுகைக்கும் உடலாம்படி கர்மாநுகுணமாக இத்தை இடையேடுத்துக்காணும் ஈஶ்வரன்பண்ணிற்று" என்றருளிச்செய்தார். "இதுகண்டாய்" என்னும்படியாயிருக்குமிறே:நாம் நன்றாக நினைத்திருக்குமதல்ல இதுக்குஆகாரம்; ஈஶ்வரன், வெளிச்சிறப்பைப் பிறப்பிக்க "இது அல்பம், அஸ்த்திரம்" என்றுஅறிந்தஇதுவேகிடாய் இதுக்கு நிலைநின்ற ஸ்வபாவம். [இப்பிறப்பறுக்கும்] - இப்படி ஹேயதயா ஜ்ஞாதவ்யமான இத்தேஹஸம்பந்தத்தை யறுக்கும். [சேறிபொழில்இத்யாதி] - செறிந்த சோலையையுடைத்தான திருவனந்தபுரத்திலேவந்து கண்வளர்ந்தருளுகிற ஸர்வஸ்வாமியுடைய நிரதிஶயபோக்

[illegible] ஸதே" (கசு) இதி ஶ்ரீபகவத்கீதாஸ்மரணமே. "எந்தைநாமம்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - இடறினவன் இத்யாதி. இதுக்கு ஸம்வாதம் - சீயர் இத்யாதி. இத்தால் பலிதம் - திருநாமம் இத்யாதி. "இ" என்றதுக்கு பாவம் - கண்டதிறே இத்யாதி. இதினுடைய - தேஹத்தினுடைய. இழையீடு - நூலாலே தைக்கை. அதாவது - இழையிட்டாற்போலே யிருக்கிற அவயவங்களுடைய சேர்த்தி. விவரணம் - கவிழ்ந்து இத்யாதி. அகவாயை - அந்தஸ்த்தங்களான மூத்ரபுரீஷாதி தோஷங்களை. அகவாயில் தோஷத்தை தர்ஶிக்கவும் நமக்கு விரக்தி பிறவாமைக் கடியேதென்ன - இப்படி இத்யாதி. "வாஸநையின்கனம்" என்றதுக்கு ஸம்வாதம் - ஒரு செட்டியை இத்யாதி. காட்டினவிடத்து, பட்டர் "நாமறியாததொன்று இவனைக் கேட்கவேண்டியிருந்ததோ" என்று, அவன்தன்னையே "நம்பக்கலிலே வேண்டுவது கேட்கலாகாதோ" என்றாரென்றபடி. இடையேடுத்து - நிறுத்து; நிஶ்சயித்தென்றபடி. இது ஹேயம் என்னுமதுக்குப்ரமாணம் - இதுகண்டாய் இத்யாதி. இரண்டாந்திருவந்தாதி, அறுபத்தாறாம்பாட்டு. இதுக்கர்த்தம்-நாம் இத்யாதி. உக்தத்தையநுவதித்துக்கொண்டு, பலிதார்த்தம் - இப்படி இத்யாதி. "அப்பால் - அமரரானவர்களும் - அனந்தபுரத்தண்ணலார் கமலபாதமணுகுவார்" என்று தாத்பர்யாந்தரம் - இப்பிறப்பறுக்கும் இத்

† 'உவட் குழியில்' என்று காணப்படுகிறது.

யமான திருவடிகளைக் கிட்டுமவர்கள். [அப்பால் - அமரராவார்] - "இப்பிறப்பறுக்கும்" என்ன வேண்டாத தேஹத்தைப் பரிக்ரஹித்து அடிமைசெய்கிறவர்களும், திருவனந்த புரத்துக் கண்வளர்ந்தருளுகிறவன் திருவடிகளை யாஶ்ரயித்தவர்கள். ஆக, இத்தால் விரோதியைப் போக்குமளவே யன்றியே உத்தேஶ்யத்தைப் பெறுகைக்கும் திருவனந்த புரமே ஆஶ்ரயணீயஸ்த்தலமென்கிறது. [திண்ணம்] - நிஶ்சிதம். [நாம்அறியச்சொன்னோம்] - அவனாலே * மயர்வறமதிநலமருளப்பெற்ற நாம், தேஹாத்மாபிமாநிகளான நீங்களும் அறியும்படி உங்கள்அநர்த்தத்தைப் பார்த்துச் சொன்னோம். (ரு)

ஆறாம் பாட்டு.

அமரராய்த்திரிகின்றார்கட்கு ஆதிசேரனந்தபுரத்து
அமரர்கோன்அர்ச்சிக்கின்று அங்ககப்பணிசெய்வர்விண்ணோர்
நமர்களோ!சொல்லக்கேண்மின்நாமும்போய்நணுகவேண்டும்
குமரனார்தாதைதுன்பந்துடைத்தகோவிந்தனாரே.

ஆ.—(அமரராய்.) - திருநாட்டிலேபோய் எம்பெருமானுக்கு அடிமைசெய்கையன்றோ ப்ராப்யமென்னில்?—அங்குள்ளாரும் திருவனந்தபுரத்திலே வந்தன்றோ அடிமைசெய்கிறது; ஆதலால் இங்கே யடிமைசெய்யும் இதுவே ப்ராப்யம்; ஆனபின்பு, நாம் இங்கேபோய் அடிமைசெய்யவேணுமென்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், அயர்வறுமமரர்களும்வந்து அடிமைசெய்கிறது திருவனந்தபுரத்திலேயாதலால் திருநாட்டிற்காட்டில் பரமப்ராப்பம் திருவனந்தபுரம்; நாமும் இங்கே அடிமைசெய்யவேணும் என்கிறார்.

யாதி. முந்தினயோஜனையில் " இப்பிறப்பறுக்கும், அப்பால் - அமரராவார் " என்கிற பதத்வயத்தாலும் ஃபலிதம் - ஆக இத்யாதி. 'புண்ணியம்செய்து' என்று தொடங்கி, 'எந்தைநாமம்-எண்ணுமின், இப்பிறப்பறுக்கும்; 'செறிபொழில்' என்று தொடங்கி, 'அணுகுவார்' - அப்பால் - அமரராவார்; திண்ணம் நாம் அறியச்சொன்னோம்' இத்யந்வயః. 'இதுகண்டாய் நன்னெஞ்சே' இத்யாதி. நன்னெஞ்சே - ஸம்ஸாரம் பொல்லாதென்றால் அதுக்கிசைந்து என்னோடு ஒருமிடறானநல்ல நெஞ்சே! இப்பிறவியாவது, த்ருஷ்டதோஷதுஷ்டமான இந்த ஸம்ஸாரமாகிறது - இதுகண்டாய் - "இது நிலைநிற்கும், போக்யமாயிருக்கும்" என்று நாட்டார் ப்ரமிக்கிறவாகாரமின்றிக்கே அல்பாஸ்த்திரத்வாதி தோஷதூஷிதமான இவ்வாகாரத்தோடேகூடின இதுவே கிடாய்; எல்லாநாமுற்றது இதுகண்டாய் - முன்பு அநாதிகாலமெல்லாம் நன்றாய்த்தோற்றுகிற ஆகாரத்தாலே நாம் மறுபாடுருவ துக்காநுபவம் பண்ணிப் போந்தது இதுகிடாய்; நாரணன்பேரோதி - வகுத்தஶேஷியான நாராயணனுடைய திருநாமங்களை நிரந்தரமாகச்சொல்லி, நரகத்தருகணையாக்காரணமும் இதுகண்டாய் - ஸம்ஸாரமாகிற நரகத்தினுடைய பர்யந்தத்திலும் ப்ரவேஶியாமைக்குக் காரணமும் அல்பாஸ்த்திரத்வாதி தோஷங்களாலே த்யாஜ்யமென்னும் ஆகாரம் ப்ரத்யக்ஷிக்கலாம்படி யிருக்கிற இஜ்ஜந்ம ஸம்பந்தங்கிடாய்; வல்லையேல்காண் - 'மேலெழத்தோற்றுகிற நன்மையில் பசையில்லை, தோஷமேயிதுக்கு வேஷம்'என்னுமத்தைத் தப்பாதபடி காணவல்லையாகில் நான்சொன்னதொக்குமென்னும் இடத்தைக் கண்டுகொள் என்று பாட்டுக்கர்த்தம். (கூ)

[அமரரென்று தொடங்கி] - தேவர்களாய்த்திரிகிற ப்ரஹ்மாதிகளுக்கும் காரணபூதனானவன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலே அயர்வறுமமரர்களுக்கு ப்ரதாநனான ஸ்ரீஸேனாபதியாழ்வான் அடிமைசெய்யுமிடத்தில் எடுத்துக் கை நீட்டுவார் அயர்வறுமமரர்கள். [நமர்கள் என்றுமேலுக்கு] - பந்துக்களாயுள்ள நீங்கள் சொல்லக்கேளுங்கோள்; தேவஸேனாபதியாய்ப் பெருமிடுக்கனான ஸுப்ரஹ்மண்யனுக்குங்கூட ஜநகனானவனுக்குப் பாதகத்தால்வந்த து:கத்தைப்போக்கின க்ருஷ்ணனை நாமும் போய்க்கிட்டவேணும்.

ப.—அநந்தரம், ஸர்வதேவநிர்வாஹகன் வர்த்திக்கிற திருவநந்தபுரத்திலே ஸூரிகள் ஆராதியாநிற்பர்கள்; நாமும்போய்க் கிட்டவேணும் என்கிறார்.

குமரனார்தாதை - ஸுப்ரஹ்மண்யனுக்கு உத்பாதகனான ருத்ரனுடைய, துன்பம் துடைத்த - பாதகது:கத்தைப்போக்கின, கோவிந்தனார் - க்ருஷ்ணனாய், அமரர் ஆய் - மற்றும் தேவர்களாய், திரிகின்றார்கட்கு - திரிகிறவர்களுக்கும், ஆதி - உத்பாதகனானவன், சேர் - கண்வளர்ந்தருளுகிற, அனந்தபுரத்து - திருவனந்தபுரத்திலே, அமரர்கோன் - ஸேனைமுதலியார், அர்ச்சிக்கின்ற - ஆராதிக்கிற இதுக்கு, அங்கு - அத்தேசத்திலேவந்து, அகப்பணிசெய்வர் - அந்தரங்கவ்ருத்திபண்ணி எடுத்துக்கைநீட்டுவார், விண்ணோர் - பரமபதவாஸிகளாயிருக்கும்; நமர்களோ - நம்முடையவர்களானவர்களே! சொல்லக்கேண்மின் - சொல்லக்கேளுங்கோள்; நாமும் போய் - நாமும்(அவர்களோடே) போய், நணுகவேண்டும் - கிட்டவேணும்.

தி.—ஆறாம்பாட்டில, நித்யஸூரிகளும் வந்து அடிமைசெய்கையாலே திருவனந்தபுரமே ப்ராப்யம்: அங்கே நாம் அடிமைசெய்யவேணும் என்கிறார்.

[அமரராய்த் திரிகின்றார்கட்கு] - மநுஷ்யாதிகளிற்காட்டில் சிலநாள்ஏறவிருக்கிற இத்தைக்கொண்டு தங்களை நித்யரென்று அபிமாநித்திருக்கிறவர்களுக்கு. [திரிகின்றார்கட்கு] - மநுஷ்யாதிகளிற்காட்டில் பந்தகம் கனத்திருக்கச்செய்தேயும், நிர்ப்பயராய்த் திரியாநிற்பர்கள். மநுஷ்யர்களுடைய விரக்திக்கு அவர்கள் பரிக்ரஹித்தவளவிறே த்யஜிக்கவேண்டுவது? ப்ரஹ்மாவுக்கு சதுர்த்தஶபுவநமும் த்யஜிக்கவேணும். [ஆதிசேர் அனந்தபுரத்து] - காரணபூதன் வர்த்திக்கிற தேஶத்திலே. [அமரர்கோனர்ச்சிக்கின்ற இத்யாதி] - ஸ்ரீஸேனாபதியாழ்வான் அடிமைசெய்யுமிடத்தில் எடுத்துக் கைநீட்டுவார் நித்யஸூரிகள். [நமர்களோ சொல்லக்கேண்மின்] - நம்மோடு குடற்றுடக்குள்ள நீங்கள் சொல்லக்கேளுங்கோள்; "வழுவிலா அடிமைசெய்யவேண்டும்நாம்" என்கிற நம்நினைவே நினைவாயுள்ளார் கேளுங்கோள். [நாமும்போய் நணுகவேண்டும்] - அந்த நித்யஸூரிகள்திரளிலே அடிமையில் ருசியையுடைய நாமும் சென்று கிட்டவேணும். இங்கேயிருந்து மநோரதிக்குமளவு போராது; அத்திரளிலே சடக்கெனப் புகவேணும். அவர்கள்நடுவே ஸம்ஸாரிகளான நமக்குக் கிட்டவொண்ணுமோ? என்னில்,—[குமரனார் இத்யாதி] - தேவஸேனாபதியாய் ப்ரபலனான ஸுப்ரஹ்மண்யனுக்குங்கூட ஜநகனானவனுக்குப் பாதகத்தால்வந்த து:கத்தைப்போக்கின க்ருஷ்ணனை; பாணனுக்குத் துணையாயிருக்கிற ருத்ராதிகள் து:கநிவ்ருத்திக்கு ஹேதுவாயிருக்கிறவன் நம்து:கத்தைப்போக்கச் சொல்லவேணுமோ? ருத்ராதிகளுக்கு து:கநிவர்த்தகனாயிருக்கும்; பசுக்களுக்கும் இடையர்க்கும் எளியனாயிருக்குமென்கை.

ஈடு.—ஆறும்பாட்டு. நித்யஸூரிகளும் வந்து அடிமைசெய்கிறது இங்கே யாகையாலே திருவனந்தபுரமே பரமப்ராப்யம்: அங்கே நாம் அடிமைசெய்யவேணு மென்கிறார்.

[அமரராய்த்திரிகின்றார்கட்கு]-மாம்பழத்தோடு ஒருஸம்பந்தமில்லாத தொன்றுக்கு மாம்பழவுண்ணியென்று பேராயிருக்குமாபோலே, இக்கரையராய் அவ்வருகுள்ளாரிற்காட்டில் நாலுநாளேழ ஜீவித்திருந்து சாகிற இவ்வளவையேகொண்டு தங்களுடைய ஆயுஸ்ஸுக்கு ஓரவஸாநமுண்டாயிருக்கச்செய்தே அதில்லாதாரைப்போலே துர்மாநம் பண்ணிக்கொண்டு திரிவர்களாய்த்து. [திரிகின்றார்] - வெந்யகம் கனத்திருக்கச்செய்தேயும், நிர்ப்பயராய்த் திரிவர்களாய்த்து. இவனளவல்லவிறே யவர்களுக்கு. விடும்போது ஒரு தேஹமாத்ரமாதல், ஒரு ஸ்த்ரீயாதலாயிருக்கும் இவனுக்கு; ப்ரஹ்மாவுக்கு அண்டமித்தனையும் விடவேண்டி வருமிறே. [ஆதிசே ரனந்தபுரத்து] - இவர்களுக்கும் அவர்களுக்கும் அவன்பக்கல் ஸாம்யம் காரணத்வத்திலேயாய்த்து. அவர்களுக்கு, ஸத்தையை நிர்வஹித்துக்கொடுக்கும்; இவர்களுக்கு, தேஹத்தையும் ஆத்மாவையும்சேர்த்து இத்தேஹம் க்ஷணந்தோறும் நசிக்க உண்டாக்கி நடத்திக்கொடுக்கும். ஜகத்காரணபூதனானவன் வந்து நித்யவாஸம்பண்ணுகிற திருவனந்தபுரத்து. [அமரர்கோன் இத்யாதி] - ஸ்ரீஸேநாபதியாழ்வான் நித்யகைங்கர்யம் பண்ணுகிறான்; நித்யஸூரிக ளெடுத்துக் கைநீட்டுவார். [நமர்களோ சொல்லக் கேண்மின்] - "வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்" என்று சொன்னதுக்குள்ளே யடங்கும்படி என்னோடே நிருபாதிகஸம்பந்தமுடையாரடங்க நான்சொல்லுகிற வார்த்தையைக் கேளுங்கோள். பந்துக்களாயிருப்பார்க்கு நல்வார்த்தை சொல்லவேணுமிறே. [நாமும்] - அடிமையிலே ருசியுடையநாமும், நித்யஸூரிகளோடு ஒருகோவையாய்ச் சென்றுகிட்டி அடிமைசெய்யவேணும். [போய் நணுகவேண்டும்] - இங்கேயிருந்து மநோரதிக்குமளவு போராது, போய்ப்புகவேணும். அவர்கள் நடுவே ஸம்

ஆறும்பாட்டு.—அமரராய் இத்யாதி. "அமரர்கோனர்ச்சிக்கின்றங்கு அகப்பணி செய்வர்விண்ணோர், நாமும்போய் நணுகவேண்டும்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - நித்யஸூரிகளும் இத்யாதி.

"ஆய்" என்றதுக்கு பாவம் - மாம்பழத்தோடு இத்யாதி. அதாவது - நித்யஸூரிகளுடைய அமரத்வம் தங்களுக்கின்றிக்கேயிருக்க, அதுஉண்டானதாக அபிமானித்துக்கொண்டு திரிவர்களென்றபடி. ஏழ - விளம்பித்து. "திரிகிறார்கள்" என்றதுக்கு பாவம் - வந்யகம் இத்யாதி. அப்படி வந்யகமதிகமோ? என்ன - இவனளவல்ல இத்யாதி. இவன் - மநுஷ்யன். அதெங்ஙனேயென்ன அருளிச்செய்கிறார் - விடும்போது இத்யாதி வாக்யத்வயத்தாலே. ப்ரஹ்மாதிகளுக்கு அமரத்வமில்லையாகிலும், நித்யஸூரிகளுக்கும் ப்ரஹ்மாதிகளுக்கும் ஈஸ்வரன்உத்பாதகனமாகாரம் ஸமானமென்கிறார் - இவர்களுக்கும் இத்யாதி. ஸாம்யம் காரணத்வத்திலே என்கையாலே - ப்ரஹ்மாதிகளுக்கு நித்யஸூரிகளோடு அமரத்வஸாம்யமில்லையென்று கருத்து. இருவர்க்கும் ஆதியாம் ப்ரகாரமேதென்ன - அவர்களுக்கு இத்யாதி. அநுபவாபாவத்தில் ஸத்தாஹாநி பிறக்கையாலே அநுபவிப்பித்து ஸத்தையை நோக்குமென்றபடி. "அமரராய்த் திரிகின்றார்கட்காதி" என்றதால் பலிதம் - ஜகத்காரண இத்யாதி. "அர்ச்சிக்கின்று" என்றது - மலையாளபாஷை; அர்ச்சிக்கிறவிடத்திலென்னுதல், அர்ச்சிக்கிறானென்னுதல். 'அங்கு - அத்தசையிலே. அகப்பணி செய்வர் - அந்தரங்கவ்ருத்திபண்ணுவார்; எடுத்துக் கைநீட்டுவாரென்றபடி. நமர்களானால் சொல்லவேணுமோவென்ன - பந்துக்களாய் இத்யாதி. "நணுகவேண்டும்" என்றதிக்கர்த்தம் - நித்யஸூரிகளோடு இத்யாதி. "போய்" என்றதுக்கு வ்யாவர்த்யம் - இங்கேயிருந்து இத்யாதி. தூமானுர்

ஸாரிகளான நமக்குக் கிட்டவொண்ணுமோவென்னில் - [குமரனார் இத்யாதி] - (தேவஸேநாபதியாய் ப்ரபலனான ஸுப்ரஹ்மண்யனுக்குங்கூட ஜநகனானவனுக்குப் பாதகத்தால்வந்த து:க்கத்தைப் போக்கினக்ருஷ்ணனை)தேவர்களும்அஸுரர்களும்கூட்டுப்படையாய் எதிரிட்டுவருமன்றும், அவர்கள் ஆபந்நரானால் அவர்கள் ஆபத்தைப்போக்கி ரக்ஷிக்குமவனாய்த்து அவன்; ஆனபின்பு, நமக்கு அத்தேசத்தை ப்ராபிக்கைக்கு ஓரருமைப்படவேணுமோ? துர்மாநிகளுக்கும் து:க்கநிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுக்குமவன், அபிமாநசூந்யரான நமக்குத் தன்னைக் கிட்டுகையில் அருமைப்படுத்துமோ? ருத்ராதிகளுக்கு து:க்கநிவர்த்தகனாயிருக்கும்; பசுக்களுக்கும் இடையர்க்கும் கையாளாயிருக்கும். 'கோவிந்தனாரை - நாமும் போய் நணுகவேண்டும்.' (௬)

ஏழாம் பாட்டு.

துடைத்தகோவிந்தனாரேஉலகுயிர்தேவும்மற்றும்
படைத்தஎம்பரமமூர்த்தி பாம்பணைப்பள்ளிகொண்டான்
மடைத்தலைவாளைபாயும் வயலணியனந்தபுரம்
கடைத்தலைசீய்க்கப்பெற்றால்கடுவினைகளையலாமே.

ஆ.—(துடைத்த) - ஆஸ்ரிதது:க்காபநோதந ஸ்வபாவனாய், ஸர்வகாரணமாகையாலே ஸர்வேஸ்வரனான எம்பெருமான் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலேசென்று அடிமைசெய்யப்பெறில், நம்முடைய து:க்கமெல்லாம்போம், அடிமைசெய்யப்போங்கோளென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், ஸர்வேஸ்வரன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலே சென்று அடிமைசெய்ய இதுக்குமுன்பெல்லாம் அடிமைசெய்யப் பெற்றிலோமென்னும் து:க்கம் இப்போதே போமென்கிறார்.

[உலகுயிர் என்றுதொடங்கி] - லோகத்தையும் தேவர்களையும் மற்றுமுண்டான ஆத்மாக்களையும் உண்டாக்கின ஆஸ்ரிதர்க்கு பவ்யனான ஸர்வேஸ்வரனுமாய், திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுவதுஞ்செய்தவனுடைய, ஜலஸம்ருத்தியாலே களித்து மடைத்தலையிலே வாளைபாயாநின்றுள்ள வயலாலே அலங்க்ருதமான திருவனந்தபுரத்தில் திருவாசலிலே திருவலகுதிருப்பணி செய்யப்பெற்றால்.

தாதை துன்பம்துடைத்தது - *வாணனைத் தலையறாதே ரக்ஷிக்கையென்கிறார்* - **தேவர்களும் இத்**யாதி. *அதாவது - "கோவிந்தனார்" என்று க்ருஷ்ணனைச்சொல்லுகையாலே, பாணயுத்தத்தில் துன்பம் துடைத்தானென்றபடி.* ஆனபின்பு *என்றது - துர்மாநிகளுக்கும் ரக்ஷகனானபின்பென்றபடி. "அருமைப்படவேணுமோ" என்றத்தை யுபபாதிக்கிறார் -* துர்மாநிகளுக்கும் இத்யாதி. *கீழிற்பதத்தோடே "கோவிந்தனார்" என்றத்தைக்கூட்டி* பாவம் - ருத்ராதிகளுக்கு இத்யாதி. *க்ரியையேதென்ன* - கோவிந்தனாரை இத்யாதி. *'அமரராய்' என்று தொடங்கி, 'விண்ணோர்: ஆஜ்ஞையாலே, நமர்களோ! சொல்லக்கேண்மின்; குமரனார்' என்று தொடங்கி, 'கோவிந்தனாரை - நாமும்போய் நணுகவேண்டும்'* இத்யந்வய:. (௬)

ப.—அநந்தரம், ஸகலஜகத்ஸ்ருஷ்ட்யாதி யுக்தனான ஸர்வேஸ்வரன் வர்த்திக்கிற திருவனந்தபுரத்திலே யடிமைசெய்யப்பெற்றால், ப்ராப்யாலாபநிபந்தநமான க்லேஸத்தைப் போக்கலா மென்கிறார்.

உலகு - லோகங்களையும், உயிர்-(மநுஷ்யாதிகளான) ப்ராணிகளையும், தேவும்-தேவதைகளையும், மற்றும் - மற்றும் மஹதாதிபதார்த்தங்களையும், துடைத்த - ஒன்றொழியாமல் படைத்து ஸம்ஹரித்தவனாய், கோவிந்தனாரே - ("தஸ்யைவ ரோஷேண வனகீஷவதி" என்கிறபடியே அவ்வவஸ்தையில் த்யோதமான விக்ரஹயுக்தனானையாலே) கோவிந்தஸப்தவாச்யனானவன்தானே, (ஸம்ஹ்ருதமான அந்த ஸகலபதார்த்தங்களையும்), படைத்த - உத்பாதித்தவனாய், எம் - இக்காரணத்வத்தை நமக்குப்ரகாசிப்பித்த, பரமமூர்த்தி - ஸர்வாதிகஸேஷியாய், (ஸ்ருஷ்ட ஜகத்ரக்ஷணார்த்தமாக), பாம்புஅணை-திருவரவணையிலே, பள்ளிகொண்டான் - கண்வளர்ந்தருளுகிறவனுடையதாய், (ஜலஸம்ருத்தியாலே), மடைத்தலை-மடைத்தலைகளிலே, வாளை பாயும் - வாளை களித்துப்பாயும், வயல் அணி - வயல் அலங்காரமாகவுடைய, அனந்தபுரம் - திருவனந்தபுரத்திலே, கடைத்தலை - திருவாசலிலே, சீய்க்கப்பெற்றால் - ஸம்மார்ஜநப்ரமுகஸேஷவ்ருத்திகளைப் பண்ணப்பெற்றால், கடு வினை-(கைங்கர்யாலாபநிபந்தநமான) அதிஸயிததுக்கத்தை, களையலாம் - போக்கலாம். கோவிந்தனென்றது - "க்ருஷ்ண ஏவஹி லோகாநாமுத்பத்திரபிசாப்யய:" என்று க்ருஷ்ணனைச் சொல்லிற்றாகவுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், ஸர்வேஸ்வரன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலேசென்று அடிமைசெய்யப்பெறில், ஒருதேஸவிசேஷத்திலே சென்று அடிமைசெய்யப் பெற்றிலோமென்னும் துக்கம் போமென்கிறார்.

[துடைத்த கோவிந்தனார் இத்யாதி] - துடைக்கை - ஸம்ஹரிக்கை. அப்யயபூர்விகையாயிறே ஸ்ருஷ்டியிருப்பது. "க்ருஷ்ண ஏவஹி லோகாநாம்". [உலகுயிர் இத்யாதி] - லோகத்தையும் தேவஜாதியையும் மற்றுமுண்டான ஆத்மாக்களையும் உண்டாக்கினவன். இவை, அதிப்ரவ்ருத்தமானவன்று ஸம்ஹரித்து, பின்பு, புருஷார்த்தோபயோகியான கரணங்களைக் கொடுத்து ரக்ஷித்த. [எம் பரமமூர்த்தி]- ஆஸ்ரிதஸவ்யனான ஸர்வேஸ்வரன். [பாம்பணைப் பள்ளிகொண்டான்] - ஸ்ருஷ்டமான ஜகத்திலே ரக்ஷணார்த்தமாகத் திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளினவனுடைய. [மடைத்தலை இத்யாதி] - ஜலஸம்ருத்தியாலே மடைத்தலைகளிலே களித்து வாளை பாயாநின்றுள்ள வயலாலே யலங்க்ருதமான தேஸத்திலே. ஸாமகாநத்தாலே முக்தர் களித்துவர்த்திக்குமாபோலேயாய்த்து அத்தேசத்தில் திர்யக்குக்களும் களித்து வர்த்திக்கும்படி. [கடைத்தலை சீய்க்கப்பெற்றால்] - திருவாசலிலே திருவலகு திருப்பணிசெய்யப்பெற்றால். [கடுவினை களையலாமே] - அடிமைசெய்யப்பெறாமையாலுண்டான க்லேஸமெல்லாம் போம். ஸேஷத்வஜ்ஞாநம் பிறந்தால், ஸ்வரூபாநுரூபமானவ்ருத்தி பெறாமையால் வரும் க்லேஸம் ப்ராயஸ்சித்தத்தால் போக்குமதன்றிறே.

ஈடு.—ஏழாம்பாட்டு. ஸர்வேஸ்வரன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலே சென்று அடிமைசெய்யப்பெறில், ஒருதேஸவிசேஷத்தே சென்று அடிமைசெய்யப்பெற்றிலோமென்னும் துக்கம் போ மேன்கிறார்.

ஏழாம்பாட்டு.—துடைத்தகோவிந்தனார் இத்யாதி. "அனந்தபுரம் கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடுவினை களையலாமே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - ஸர்வேஸ்வரன் இத்யாதி.

[துடைத்தகோவிந்தனாரே இத்யாதி]-துடைக்கை - ஸம்ஹரிக்கை. அப்யயபூர்விகையாயிறே ஸ்ருஷ்டி யிருப்பது. "க்ருஷ்ணஏவஹிலோகாநாம்" (க்ருஷ்ணஏவஹி லோகாநாம்,) "வையமேழும்கண்டாள் பிள்ளைவாயுளே." [உலகுயிரித்யாதி] - லோகத்தையும் தேவஜாதியையும் மற்றுமுண்டான ஆத்மாக்களையும் உண்டாக்கின. இவை அதிப்ரவ்ருத்தமான வன்று ஸம்ஹரித்து, பின்னை புருஷார்த்தோபயோகியான கரணங்களைக் கொடுத்து ரக்ஷித்த. [எம் பரமமூர்த்தி] - ஆஸ்ரிதஸவ்யனான ஸர்வேஸ்வரன். [பாம்பணைப் பள்ளிகொண்டான்] - ஸ்ருஷ்டமான ஜகத்திலே ரக்ஷணார்த்தமாகத் திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறவனுடைய. [மடைத்தலை இத்யாதி] - ஜலஸம்ருத்தியாலே மடைத்தலைகளிலே களித்து வாளைகள் பாயாநின்றுள்ள வயலாலே அலங்க்ருதமான தேசத்திலே; முக்தர் ஸாமகாநம்பண்ணிக் களித்து வர்த்திக்குமாபோலே யாய்த்து, அத்தேசத்தில் திர்யக்குக்களும் களித்து வர்த்திப்பது [கடைத்தலைசீய்க்கப்பெற்றால்] - திருவாசலிலே திருவலகு திருப்பணிசெய்யப்பெற்றால். [கடுவினைகளையலாமே] - அடிமைசெய்யப் பெறாமையாலுண்டான க்லேஶமெல்லாம் போம். ஶேஷத்வஜ்ஞாநம் பிறந்தால், ஸ்வரூபாநுரூபமான வ்ருத்திபெறாமையால் வரும் க்லேஶம் ப்ராயஶ்சித்தத்தால் போக்குமதன்றே. (எ)

எட்டாம் பாட்டு.

கடுவினைகளையலாகுங் காமனைப்பயந்தகாளை
இடவகைகோண்டதேன்பரெழிலணியனந்தபுரம்
படமுடையரவிற் பள்ளிபயின்றவன்பாதங்காண
நடமினோநமர்களுள்ளீர்! நாம்உமக்கறியச்சோன்னோம்.

ஆ.—(கடுவினை.) - ஸௌந்தர்ய லாவண்ய யௌவநாதி கல்யாணகுணநிதியான எம்பெருமான் எல்லார்க்கும் ஆத்மப்ரதாநம்பண்ணிக்கொண்டிருக்கிற திருநகரி, திருவனந்தபுரம் என்றுசொல்லாநின்றார்கள்; நாமும் அங்கே கண்வளர்ந்தருளுகிற

ஸ்ருஷ்டிக்குமுன்னே ஸம்ஹாரத்தைச் சொல்லுவானென்னென்ன - அப்யய இத்யாதி. க்ருஷ்ணனோ ஜகத்ஸம்ஹாரம் பண்ணினானென்ன- க்ருஷ்ணஏவஹி இத்யாதி. "க்ருஷ்ணஏவஹிலோகாநாம் உத்பத்திரபிசாவ்யய:" இத்யாதி மஹாபாரதே ராஜஸூயே.(௩அ உ௩) இதுக்கு ப்ரமாணாந்தரமாதல், அன்றிக்கே, துடைக்கை-நிஶ்ஶேஷமாக விழுங்குகையென்று அவாந்தரப்ரளயமாக அர்த்தாந்தரம் விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணமாதல் வையமேழும் இத்யாதி.படைத்த தொழியத் துடைத்ததும் உபகாரமோவென்ன - இவை அதிப்ரவ்ருத்தம் இத்யாதி. மடைத்தலை - மடைகளிலேயென்றபடி. இதுக்கு பாவம் - முக்தர் இத்யாதி. கடைத்தலை - தலைக்கடை; வாசலென்றபடி. சீய்க்கை - திருவலகிடுகை. கைங்கர்யம் பண்ணப்பெறாமையாலுள்ள க்லேஶத்தை "கடுவினை" என்னலாமோவென்ன - ஶேஷத்வஜ்ஞாநம் இத்யாதி. அதாவது - ஶேஷத்வஜ்ஞாநாநந்தரம் கடைத்தலை சீய்க்கப்பெற்றால் களையலான கடுவினை, அதுபெறாமையால்வந்த க்லேஶமேயாகவேணும். அஶ்கர்மமாகில் ப்ராயஶ்சித்தவிநாஶ்யமென்கை. 'உலகுயிர்தேவும்மற்றும்-துடைத்த கோவிந்தனாரே, உலகுயிர்தேவும்மற்றும் படைத்த எம் பரமமூர்த்தி' என்றுதொடங்கி, 'களையலாமே' இத்யந்வய:. (எ)

அவன் திருவடிகளைக் காணப்போரிகோள்: இஸ்ஸம்ருத்தியை நீங்கள் அறியாமையாலே இழக்கலாகாதென்று உங்களுக்கு அறிவித்தோமென்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், 'திருவனந்தபுரத்தில் கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளைக் காணப்போருங்கோள் !' என்று ஸ்ரீவைஷ்ணவர்களை அழைக்கிறார்.

[கடுவினை] - மிக்க வினை. [காமனை என்று தொடங்கி] - விலக்ஷணமான திருவனந்தபுரத்தை லோகத்தையெல்லாம் தன்னழகாலே பிச்சேற்றக்கடவனான காமனுக்கு ஜநகனாய், அவனிலும் முக்தனான க்ருஷ்ணன், ஸ்யாநமாகக் கொண்டதென்பர். தன்னுடைய ஸ்பர்ஶவத்தாலே விரித்தபணங்களையுடைய திருவநந்தாழ்வான்மேலே நிரந்தரமாகப் பள்ளிகொண்டருளுகிறவனுடைய திருவடிகளைக் காண நடவுங்கோள். எனக்கு வந்யக்களாயுள்ள நீங்கள் இஸ்ஸம்ருத்தியை யறியாதே இழக்கலாகாதென்று சொன்னோம்.

ப.—அநந்தரம், நிரதிஶயபோக்யமான திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற பரமப்ராப்யனுதன் திருவடிகளை யநுபவிக்கைக்கு நம்முடையராயுள்ளார் எல்லாரும் நடக்கும்படி பாருங்கோளென்கிறார்.

கடு வினை-(ப்ராப்திவிளம்ப ஹேதுக்களாயுள்ள)க்ரூரமான பாபங்களை, களையல் ஆகும் - போக்கலாம், காமனை - (அழகுக்கு ப்ரஸித்தனான) காமனை, பயந்த - உத்பாதித்தவனாய், காளை - (அவ்வளவிலும்) யௌவநம்குலையாத க்ருஷ்ணனானவன், இடவகை - இடமாக, கொண்டது—, எழில்-அழகை, அணி- அணிந்த, அனந்தபுரம் - திருவனந்தபுரம், என்பர் - என்றுசொல்லாநிற்பர் ; (அங்கே), படமுடை-(ஸ்வஸ்பர்ஶத்தாலே விரிகிற)பணங்களையுடைய, அரவில் - திருவரவணையிலே, பள்ளி - கண்வளர்ந்தருளுகையிலே, பயின்றவன் - மிகவும் செறிந்தவனுடைய, பாதம் - திருவடிகளை, காண - கண்டநுபவிக்கைக்கு, நமர்களுள்ளீர் - நம்முடையராயுள்ளீர், நடமினோ - நடவுங்கோள் ; (அறிவிப்பார் குறையாயிராதே), நாம் - (விஷயவைலக்ஷண்யம் அறிந்த) நாங்கள், உமக்கு - உங்களுக்கு, அறிய - அறியும்படி, சொன்னோம் - சொன்னோம்.

இ.—எட்டாம்பாட்டில், திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளைக் காணப்போருங்கோள் என்று அநுகூலரை அழைக்கிறார்.

[கடுவினை களையலாகும்] - அநுபவவிரோதியாய்ப் போக்கவரிதான பாபம் போம். [காமனைப் பயந்தகாளை] - இது நான்உபதேசிக்கவேண்டுவது அவனை ப்ரத்யக்ஷிக்குந்தனையுமிறே. நாட்டையடங்கத் தன்னழகாலே பிச்சேற்றித்திரியும் காமனுக்கும் உத்பாதகனானவன். [காளை]-யௌவநம் ப்ரஸவாந்தமாயிருக்க, பருவத்தால் அவனிலும் இளகிப்பதித்திருக்கும். [இடவகை இத்யாதி] - அழகாலே அலங்க்ருதமான திருவனந்தபுரத்தை வாஸஸ்யாநமாகக் கொண்டதென்று விஶேஷஜ்ஞர் வாய்புலற்றாநிற்பர்; "வஹுநாமவிஷவை-பயா:". [படமுடைஇத்யாதி] ஸ்வஸ்பர்ஶத்தாலேவிஸ்த்ருதபணனான திருவநந்தாழ்வான்மேலே நிரந்தரமாகக் கண்வளர்ந்தருளுகிறவனுடைய திருவடிகளைக் காண. பயின்றவென்று - வீசி வில்லிட்டெழுப்பிலும் எழுப்பவொண்ணாதபடியிறே படுக்கை வாய்ப்பிருப்பது. [நடமினோநமர்கள் உள்ளீர்] - என்னோடு குடற்றுடக்குடையாரடைய நடவுங்கோள்.[நாம் உமக்குஅறியச்சொன்னோம்]-"வரிவாளரவினணைப்

பள்ளிகொள்கின்றகரியான்கழல் காணக்கருதுங்கருத்தே'' என்று சபலரான நாம், ''[illegible]'' என்னும்படியிருக்கிறஉங்களுக்குநெஞ்சிலேபடச்சொன்னோம்.

ஈடு.—எட்டாம்பாட்டு. திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக்காணப் போருங்கோளென்று, அநுகூலரை யழைக்கிறார்.

[கடுவினைகளையலாகும்]-நம்மால்போக்கவரிதான பாபங்களையும் போக்கலாம். [காமனைப்பயந்தகாளை] - உங்களுக்கு நான் உபதேசிக்கவேண்டுவது அவ்வஸ்துவை ஸாக்ஷாத்கரிக்குமளவுமே! நாட்டைத் தன்னழகாலேவெருட்டித் திரிகிற காமனுக்கும் உத்பாதகனாயிருக்கும். இருவரையும் கூடக்கண்டால் ''முறைகெடச்சொன்னார்களே'' என்றிருக்கும். ''[illegible]'' (ப்ரஸவாந்தஞ்சயௌவநம்) என்கிறதும், இவ்விஷயத்திலே மற்றைப்படியாயிருக்கிறது காணும். [இடவகைகொண்டதென்பர்] - இவ்விடத்தை வாஸஸ்தானமாகக்கோண்டதென்று, அறிவுடையாரடங்கச் சேவிசீப் பாய்ந்துகிடப்பார்கள்; ''[illegible]'' (பத்மநாபம்விதுர்ப்புதா:). [எழிலணியனந்தபுரம்] - பரமபதத்தில் ஒருபுதுமை செய்யவொண்ணாதிறே; அங்குத்தையிற்காட்டில் இங்குத்தைக்குத் தன்னேற்றமிருக்கிறபடி. [படமுடையரவில்] - ஸர்வேச்வரன் சாய்ந்தருளினால் அவனுக்குப்பிறக்கும் விகாஸம்சோல்லுகிறது - படமுடையரவென்று. [பள்ளிபயின்றவன்] - ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான வஸ்துவும் உணர்த்தியறும்படியாய்த்துப் படுக்கைவாய்ப்பு. [பாதம்இத்யாதி] - திருவடிகளைக்காணும்படியாக, ''வரிவாளரவினணைப்பள்ளிகோள்கின்ற கரியான்கழல்காணக்கருதும்கருத்து'' என்றிருக்கும் என்னோடு ஒருகுடற்றுடக்குடையாரடங்கலும் போகப் பாருங்கோள். திருவத்யயநம பாடாநிறக, இத்தைக் கேட்டருளி, ஆளவந்தார் ''நமக்குஆழ்வாரோடே ஒருஸம்பந்தமுண்டாக வேணும்'' என்று, அப்போதே ஸ்ரீபாதத்தையுடையாரைக் கூட்டிக்கொண்டெழுந்தருளினார். [நாம்] - கண்வளர்ந்தருளுகிறவழகில் சுவடறிந்து, ''யவரேலுமவர் - எம்மையாளும் பரமர்'' என்னக்கடவ நாம். [உமக்குஅறியச்சொன்னோம்] - அவவடிவைக் காணவேணுமென்கிற அபேக்ஷையுடைய உங்களுக்கு அறியும்படிசொனனோம். (அ)

எட்டாம்பாட்டு.—கடுவினை இத்யாதி. '' பள்ளிபயின்றவன் '' என்றுதொடங்கி, ''நமர்களுள்ளீர்'' என்றவற்றைக்கடாக்ஷித்தவதாரிகை - திருவனந்தபுரத்திலே இத்யாதி.

'' கடுவினை '' என்றதுக்கு பாவம் - நம்மால் இத்யாதி. இப்போது அவன் அழகைச் சொல்லுகிறதுக்கு பாவம் - உங்களுக்கு இத்யாதி. ஸப்தார்த்தம் - நாட்டை இத்யாதி. வெருட்டி - மருட்டி. '' காமனைப்பயந்த '' என்றவநந்தரம் ''காளை'' என்றதுக்கு பாவம் - இருவரையும் இத்யாதி. ''காளை'' என்றதுக்கு பாவம் - ப்ரஸவாந்தஞ்ச இத்யாதி. ''[illegible]''. காளை - யுவா. '' என்பர் '' என்றதுக்கு பாவம்-அறிவுடையார் இத்யாதி. சேவிசீப்பாய்ந்துகிடப்பர்கள் - வித்தராயிப்பார்கள். வித்தராயிருக்கிறதுக்கு ப்ரமாணம் - பத்மநாபம் இத்யாதி. இது ப்ரமாணத்திரட்டில் காணவில்லை. ''எழில்'' என்று - உபலநாதிகாந்தியாய், அத்தாலே அலங்க்ருதமான அனந்தபுரமென்றபடி. இத்தால் வ்யாவ்ருத்தி - பரமபதத்தில் இத்யாதி. அவனுக்கு - திருவனந்தாழ்வானுக்கு. ''நமர்கள் - நடமின்'' என்றதுக்கு பாவம் - வரிவாள் இத்யாதி. போருங்கோள் - வாருங்கோள். ப்ராஸங்கிகம் - திருவத்யயநம் இத்யாதி. ''நாம்'' என்றதுக்கு பாவம்-கண்வளர்ந்து இத்யாதி. ''பாற்கடல்சேர்ந்த'' என்றத்தைப்பற்ற-கண்வளர்ந்தருளுகிற என்றது. 'காமனைப்பயந்தகாளை - எழிலணியனந்தபுரம் - இடவகைகொண்டதென்பர்; கடுவினைகளையலாகும்; படமுடையரவில்பள்ளி' என்றுதொடங்கி, 'பாதம்காண - நமர்களுள்ளீர் - நடமினோ; நாம் உமக்கறியச்சொன்னோம்' இத்யந்வய:. (அ)

ஒன்பதாம் பாட்டு.

நாம்உமக்கறியச்சொன்னநாள்களும்நணியவான
சேமம்நன்குடைத்துக்கண்டீர் செறிபொழில்அனந்தபுரம்
தூமநல்விரைமலர்கள்துவளறவாய்ந்துகொண்டு
வாமனனடிக்கென்றேத்தமாய்ந்தறும்வினைகள்தாமே.

ஆ.—(நாம் உமக்கு.) - சேமம் நன்குடைத்தான திருவனந்தபுரத்திலே சென்று எம்பெருமானுக்கு அடிமைசெய்ய உங்களுடைய ஊழ்வினைகளெல்லாம் தாமே போம்; ஆனபின்பு, அடிமைசெய்கைக்கு உபகரணமான இப்ப்ரக்ருதிமுடிவதற்கு முன்னே இப்போதேசென்று அடிமைசெய்யுங்கோள்; நாம் உமக்குஅறியச்சொன்னோம் என்கிறார்.

ஒ.--ஒன்பதாம்பாட்டில், "நாளேலறியேன்" என்றும், "மரணமானால்" என்றும் சொன்னகாலம் அணித்தாய்த்து; ஈண்டெனத் திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமைசெய்ய, அடிமைக்கு விரோதியான கர்மங்களெல்லாம் நசிக்குமென்கிறார்.

[நன்குடைத்து] - மிக உடைத்து. [தூமநல்விரைமலர் என்று மேலுக்கு] - வாமநனுடைய திருவடிகளுக்கென்று நல்ல ஸமாராதநோபகரணங்களை ஸம்பாதித்து அவனை ஆச்ரயிக்க அடிமைக்கு ப்ரதிபந்தகங்களெல்லாம் தானே நசிக்கும்.

ப.—அநந்தரம், ப்ராப்தனானவன்திருவடிகளிலே கைங்கர்யத்தைப்பண்ண கைங்கர்யப்ரதிபந்தகங்கள் தானே போமென்கிறார்.

("வைத்தநாள்வரை"என்று), நாம்-நாம், (முன்பு),உமக்கு-உங்களுக்கு, அறியச்சொன்ன நாள்களும் - சொன்னசரீராவஸாந திவஸங்களும், நணியஆன-நண்ணியவாய்த்தின, செறிபொழில் - செறிந்தபொழிலையுடைத்தான, அனந்தபுரம்- திருவனந்தபுரமானது, நன்கு - நன்றான, சேமம் - ரக்ஷையை, உடைத்துக்கண்டீர் - உடைத்துக்கிடிகோள்! (ஆனபின்பு அங்கே), தூமம் - ஆராதநோபகரணமான தூபத்தையும், நல் - நன்றான, விரை - பரிமளத்தையுடைத்தான, மலர்கள் - புஷ்பங்களையும், துவள் அற - குற்றமற, ஆய்ந்துகொண்டு-, வாமனன்அடிக்குஎன்று - ஆஸ்ரிதஸம்ஶ்லேஷஸ்வபாவனான ஸ்ரீவாமநன்திருவடிகளுக்கென்று ஸங்கல்பித்து, ஏத்த - (தநங்கீகாரார்த்தமாக) அவனுடைய சீலாதிகுணங்களை ஸ்துதிக்க, வினைகள் - கைங்கர்ய ப்ரதிபந்தி கர்மங்கள், தானே - ஸ்வயமேவ, மாய்ந்தறும் - நசித்துப்போம். தூபமென்றும் பாடஞ் சொல்லுவர்கள்.

இ.—ஒன்பதாம்பாட்டில், சரீராவஸாநமணித்தாய்த்து; ஈண்டெனத் திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமைசெய்ய,ஊஸ்யவிரோதியான கர்மம் போமென்கிறார்.

[நாம் உமக்கு இத்யாதி] - "நாளேலறியேன்" என்றும், "மரணமானால்" என்றும் நாம் உங்களுக்குச்சொன்ன காலம்அணித்தாய்த்து. 'ததஸ்தம் ம்ருதகல்பம்' என்று அவன்தான் சொன்ன வார்த்தையை இவர் சொல்லுகிறார். [சேமம் நன்குடைத்துக்கண்டீர் செறிபொழில் அனந்தபுரம்] - ஸம்ஸாரபயத்துக்கு மிகவும் ரக்ஷகமாய் போக்யமுமான தேசம்; போக்யமான தேசந்தானே பயசாந்திக்கு ஹேதுவாகப்

பெற்றது. [நன்குடைத்து] - மிகவுமுடைத்து. [தூம நல்விரைமலர் இத்யாதி] - புஷ்பாத்யுபகரணங்களை விலக்ஷணமாக்கிக்கொண்டு. [வாமனன் இத்யாதி] - தன்னுடைமை பெறுகைக்குத் தான் இரப்பாளனுமவனை, அநந்யப்ரயோஜநராய் ஆஶ்ரயிக்க, அடிமைக்கு ப்ரதிபந்தகங்கள் தானே நஶிக்கும்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. ஶரீராவஸாநம் அணித்தாய்த்து; ஈண்டெனத் திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமைசெய்ய, தாஸ்யவிரோதிகர்மங்கள் தானே நசிக்குமென்கிறார்.

[நாம்உமக்கு இத்யாதி] - "நாளேலறியேன்" என்றும் "மரணமானால்" என்றும் சொல்லிப்போந்த நாள்களும் கிட்டியவாய்த்தின. பிறர்க்குஅப்படித்தாம் சொன்னாரோவென்னில்,—*மாலைநண்ணியிலே "மரணமானால்" என்று ஈஶ்வராபிப்ராயத்தைத் தாம் அறிந்து, அத்தைப்பிறர்க்கு உபதேஶித்தாரிறே. இதிலும் பரோபதேஶமிறே. "தஸ்மிந்நஸ்தமிதே" (தஸ்மிந்நஸ்தமிதே) இத்யாதி-பீஷ்மன் முடியாநின்றான், பின்னை இவ்வர்த்தம் †கேட்கலாவார் இல்லையென்று அவன் அருளிச்செய்தவார்த்தையை, இப்போது இவர்தாம் அருளிச்செய்கிறார். "அஸ்தமிதே" (அஸ்தமிதே)-கண்ணுக்கு வெளிச்சிறப்பைப் பண்ணுவாரும், நெஞ்சுக்கு வெளிச்சிறப்பைப் பண்ணுவாருமாக, ஆதித்யர்களிருவராய்த்து; "ஞானமாகி நாயிறாகி." "ஜ்ஞாநாந்யல்பீபவிஷ்யந்தி" (ஜ்ஞாநாந்யல்பீபவிஷ்யந்தி) ஸ்வரூபத்தோபாதி நித்யமாயிருக்குமிறே தர்மபூதஜ்ஞாநமும்; இனி இதுக்கு உதயாஸ்தமய வ்யவஹாரம் ஜ்ஞாநப்ரஸர த்வாரத்தை யபேக்ஷித்தாயிருக்குமிறே. அவன்போனால்

ஒன்பதாம்பாட்டு.— நாம் உமக்கு இத்யாதி. பாட்டையெல்லாம் கடாக்ஷித்தவதாரிகை - ஶரீராவஸாநம் இத்யாதி. தமக்கு ஶரீராவஸாநமணித்தாய்த்தென்றபடி.

"நாளேலறியேன்" என்று ப்ரார்த்தித்த தமக்கு "மரணமானால்" என்று ஈஶ்வரன்அவதியாகச் சொல்லிப்போந்த நாள்களும் கிட்டினவாய்த்தின என்றபடி. ஆனால் அவன் தமக்கு அவதியாகவிட்டுக்கொடுத்த நாளன்றோ; அது பிறர்க்குத் தாம் சொல்லவில்லையே; ஆனபின்பு, "உமக்கறியச்சொன்ன" என்னும்படி எங்ஙனே? என்கிற ஶங்கையை யநுவதித்து பரிஹரிக்கிறார் - பிறர்க்கப்படி இத்யாதி. பரோபதேசமிறே-பரோபதேசமாகையாலே பிறர்க்குஉபதேசித்தாரென்றபடி. "மரணமானால்" என்று முன்பு நாம்உங்களுக்குச் சொன்ன ஶரீராவஸாநதினங்களும் கிட்டின வாய்த்தினவென்று ஶப்தார்த்தம். "தமக்கு ஶரீராவஸாநமணித்தாய்த்து" என்கிற இத்தை இப்போதருளிச்செய்கிறதுக்கு ப்ரயோஜநத்தை ஸநிதர்ஶநமாக அருளிச்செய்கிறார் - தஸ்மிந் இத்யாதி. "தஸ்மிந்நஸ்தமிதே பீஷ்மே கௌரவாணாம் துரந்தரே। ஜ்ஞாநாந்யல்பீபவிஷ்யந்தி தஸ்மாத் த்வாம் சோதயாம்யஹம்" இதி மஹாபாரதே தர்மபுத்ரம் ப்ரதி க்ருஷ்ண:. இதுக்கர்த்தம்-பீஷ்மன் இத்யாதி. "ஸூர்யே" என்னாதே "அஸ்தமிதே" என்றதுக்கு பாவம்-கண்ணுக்கு இத்யாதி. ஜ்ஞாநியை ஆதித்யனாகச் சொல்லலாமோவென்ன - ஞானமாகி இத்யாதி. திருச்சந்தவிருத்தம் நூற்றுப்பதினாலாம்பாட்டு, "ஈனமாய" இத்யாதி. "நாயிறாகி" என்று - ஆதித்யஸஹபாடத்தாலே ஜ்ஞாநமுமாதித்யனென்றபடியாய், அதுதான் ஜ்ஞாதாவுக்கும் உபலக்ஷணம். "தமஸோ வா ஹ்யதிவிநஶ்யந்தி பாவகாதிவத்யஸ்மிந்யள। ஸவா ஹ்யாஹ்யதரமேவவிஷண்ணமத்தே ஸூர்யகஸ்மிந்யள" என்னக்கடவதிறே. நித்யமாய் விபுவான ஜ்ஞாநம்அல்பமாவானென்?என்ன - ஸ்வரூப இத்யாதி. 'தர்மபூத ஜ்ஞாநமும்' என்றவநந்தரம், "இப்படியிருக்க ஜ்ஞாநாந்யல்பீபவிஷ்யந்தி என்பானென்னென்னில்" என்று கூட்டுவது. பரிஹார: - இனிஇதுக்கு இத்யாதி: அதாவது - கர்மஸம்ஸ்ருஷ்டசேதநனுடைய மநஸ்ஸை யபேக்ஷித்திருக்கையாலே அல்பமாயிருக்குமென்றபடி. இவனை வேணுமென்கிற நிர்ப்பந்தமேதென்ன - அவன்போனால் இத்யாதி. அதாவது -

† கேட்கலாவார் - தெரிந்துகொள்ளுமாறு வினவப்படுதற்கு உரியவர்.

பின்னைக் கொள்வாரும் கொடுப்பாருமின்றிக்கே பரிமாற்ற மறும். இதுக்கு பட்டர் அருளிச் செய்ததாக, பரிஜையப்பர் - "ஒருமதிப்பன் தலையில் கிடவாதவன்று கொள்வார் கொடுப்பாரின்றியே எளிவிலையனாய்ப் போம்." "𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌚𑍋𑌦𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍" (தஸ்மாத்த்வாம் சோதயாம்யஹம்) - ஆகையாலேகாண் உன்னை த்வரிப்பித்து "அவன்பக்கலிலேபோய்க் கேள்" என்று சொல்லுகிறது. [சேமம் நன்குடைத்துக்கண்டீர் செறிபொழிலனந்தபுரம்] - நிரதிசயபோக்யமான தேசந்தானே மரணஉசைக்கு ரக்ஷகமாம். [தூமநல்விரைமலர்கள்]- நன்றான தூபம், பரிமளத்தையுடைத்தான நல்லபுஷ்பங்கள் இவற்றை. [துவளற இத்யாதி] - தனக்கும் அவனுக்கும் ஸத்ருசமாம்படி விலக்ஷணமாக்கிக்கொண்டு. [வாமனன் இத்யாதி] - தன்னுடைமை பெறுகைக்குத் தான் இரப்பாளனாயிருக்குமவன் திருவடிகளுக்குஎன்றேத்த. [மாய்ந்தறும்வினைகள்தானே] - இவன் தன் ஸ்வரூபத்துக்கு அநுரூபமான பரிமாற்றத்திலே யந்வயிக்க, விரோதிகளடைய நசித்துப்போம். (௯)

பத்தாம் பாட்டு.

மாய்ந்தறும்வினைகள்தாமேமாதவா! என்னநாளும்
எய்ந்தபொன்மதிள்அனந்தபுரநகர்எந்தைக்கென்று
சாந்தொடுவிளக்கந்தூபந் தாமரைமலர்கள்நல்ல
ஆய்ந்துகொண்டேத்தவல்லார்அந்தமில்புகழினாரே.

ஆ.—(மாய்ந்தறும்.) - அவன் திருநாமங்களிலே ஏதேனும் ஒருதிருநாமத்தைச்சொல்ல, அடிமைசெய்கைக்கு ப்ரதிபந்தகங்களெல்லாம் தானே போமென்று சொல்லிமுடித்து, திருவனந்தபுரத்திலேபோய் எம்பெருமானுக்கு அடிமைசெய்யும் மஹாத்மாக்கள் ஆரோதான்? என்றுகொண்டு, அவர்களைக் கொண்டாடுகிறார்.

ஓ.—பத்தாம்பாட்டில், திருவனந்தபுரத்தில் எம்பெருமானுக்கு அடிமைசெய்யுமவர்களுடைய மாஹாத்ம்யம் பேசிலமன்று என்கிறார்.

[எய்ந்தபொன் மதிள்] - சேர்ந்திருந்துள்ள பொன்மதிள்.

ப.—அநந்தரம், திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிற ஸ்வாமிதிருவடிகளிலே ஆராதநரூப கைங்கர்யம்பண்ணுவர்கள், அநவதிகமாஹாத்ம்ய யுக்தராவாரென்கிறார்.

மாதவா! என்ன - ஸ்ரிய:பதியென்று சொன்னபோதே, வினைகள் - விரோதிகள், தானே - ஸ்வயமேவ, மாய்ந்தறும் - நசிக்கும்; நாளும் - நிரந்தரமாக, எய்ந்த - செறிந்த, பொன்மதிள் - பொன்மதிளையுடைத்தாயிருக்கிற, அனந்தபுரநகர் - திருவனந்தபுரமாகிற நகரத்தில், எந்தைக்கு - ஸ்வாமியானவனுக்கு, என்று - என்று ஸங்

மதிப்பன் தலையில்கிடவாமையாலே பரிமாற்றமறுமென்றபடி இதுக்குஆப்தஸம்வாதம் - இதுக்கு பட்டர் இத்யாதி. இதுக்கு - இஸ்ஸ்லோகத்துக்குத் தாத்பர்யமாகவென்றபடி. பரிஜை என்று ஊர். செறிந்தபொழிலையுடைய திருவனந்தபுரமானது நன்றான ரக்ஷையையுடைத்துக் கிடிகோளென்று ஸப்தார்த்தம். 'நல்லதூமம், நல்லமலர்கள்' என்று கூட்டுவது. துவளற - குற்றமற. "ஏத்த- மாய்ந்தறும்வினைகள்" என்று ஸாதநமாகவோ ஏத்துகிறதென்ன - இவன்தன் இத்யாதி. அடிக்கென்று - திருவடிகளுக்கென்று ஸங்கல்பித்து. "தூபநல்விரை" என்றும் "தூமநல்விரைமலர்" என்றும் பாடத்வயமுண்டு. (௧)

கல்பித்து, நல்ல - நன்றான, சாந்தொடு - அங்கராகத்தோடே, விளக்கம் - தீபத்தையும், தூபம் - தூபத்தையும், தாமரைமலர்கள் — தாமரைப்பூக்களையும், ஆய்ந்துகொண்டு - (பலஸங்கசர்த்ருத்வங்களாகிற தூளாலும் மயிரும் புழுவும்படாதபடி) ஆராய்ந்துகொண்டு, ஏத்தவல்லார் - அங்கீகாரஸந்துஷ்டராய் ஏத்தவல்லவர்கள், அந்தமில் - நிரவயிகமான, புகழினர் - ஶ்லாக்யதையை யுடையராவர்.

இ—பத்தாம்பாட்டில், திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமைசெய்யுமவர்கள் பெருமை பேசநிலமன்று என்கிறார்.

[மாய்ந்தறும் இத்யாதி] - மாதாபிதாக்கள் பேர்த்தியைச்சொல்ல அநாதி காலார்ஜிதமான ஊஃவங்கள் தானே போம். [ஏய்ந்த இத்யாதி] - அங்குத்தைக்குத் தகுதியான மதிளையுடைய திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிற என்ஸ்வாமிக்கென்று புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு ஆஶ்ரயிக்கவல்லார். [அந்தமில் புகழினரே]-"அமரராவார்" என்கிறவளவன்றிக்கே, விண்ணுளாரிலும் சீரியராவர்.

ஈடு.—பத்தாம்பாட்டு. திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமை செய்கிறவர்கள் பெருமை பேச நிலமன் றேன்கிறார்.

[மாய்ந்தறும்வினைகள்தானே மாதவாவென்ன] - மாதாபிதாக்கள் பேரைச் சொல்ல அநாதிகாலார்ஜிதமான ஊஃவங்கள் தானேபோம். (மாதவாவென்ன - மாய்ந் தறும்வினைகள்) - அப்பாவென்ன உச்சி குளிருங்காணும். [ஏய்ந்தஇத்யாதி] - அங்குத் தைக்கு ஈடான போன்மதிளையுடைய திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிற என் ஸ்வாமிக் கென்று புஷ்பாத்யுபகரணங்களைக் கோண்டு ஆஶ்ரயிக்கவல்லார்.[அந்தமில்புகழினரே] - "அமரராவார்" என்கிறவளவன்றிக்கே * விண்ணுளாரிலும் சீரியராவர். (க௦)

பதினோராம் பாட்டு.

அந்தமில்புகழ்அனந்தபுரநகராதிதன்னை
கோந்தலர்போழிற்குருகூர்மாறன்சோல்லாயிரத்துள்
ஐந்திநோடைந்தும்வல்லார்அணைவர்போய்அமருலகில்
பைந்தோடிமடந்தையர்தம்வேய்மருதோளிணையே.

ஆ.—(அந்தமில்) - ப்ரியதமர்களுக்கு ப்ரியதமைகள் போக்யமாமாபோலே, திருநாட்டிலுள்ளார்க்கும் இத்திருவாய்மொழி வல்லார் போக்யமாவ ரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லார் திருநாட்டிலுள்ளார்க்கு போக் யராவரென்கிறார்.

பத்தாம்பாட்டு.—மாய்ந்தறும் இத்யாதி. "அனந்தபுரநகரெந்தைக்கென்று - ஏத்தவல் லார் அந்தமில்புகழினர்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - திருவனந்தபுரத்திலே இத்யாதி.

"மாதவாவென்ன நாளும் - வினைகள் மாய்ந்தறும்" என்றந்வயித்தர்த்தம்-மாதாபிதாக் கள் இத்யாதி. "மாதவாவென்ன - வினைகள் - மாய்ந்தறும்" என்றதிலே ரஸோக்தி - அப்பா இத்யாதி. அப்பாவென்ன உச்சிகுளிருமோ? என்ன, லோகத்தில் வ்யங்க்ய வ்யவஹாரம்இங்கே மெய்யாய்த்து என்றபடி. ஏய்ந்த - தகுதியான. ஆய்ந்துகோண்டு - ஆராய்ந்துகொண்டு. 'மாதவா வென்னநாளும் - வினைகள் மாய்ந்தறும்; ஏய்ந்த' என்றுதொடங்கி அந்வயம். (௯௦)

[அந்தமில் என்றுதொடங்கி]-முடிவில்லாத புகழையுடையனாய்த் திருவனந்த புரத்திலே ஸந்நிஹிதனான ஜகத்காரணபூதபுருஷனை, ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக, பரமபதத்தில் * மதிமுகமடந்தையராலுண்டான ப்ரஹ்மாலங்கார ப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

அந்தமில்புகழ் - நிரவதிக குணனாய்க்கொண்டு, அனந்தபுரநகர் - திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிற, ஆதிதன்னை - ஸர்வகாரணபூதனை, கொந்து - பூங்கொத்துக்கள், அலர் - அலருகிற, பொழில் - பொழில்சூழ்ந்த, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, மாறன் - ஆழ்வார், சொல் - அருளிச்செய்த, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளும், ஐந்தினோடு - (கேவலம் பரோபதேசமான) ஐந்தினோடேகூட, ஐந்தும் - தம்மையும் கூட்டிக்கொண்டு உபதேசித்த ஐந்தையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், போய் - (அர்ச்சிராதிமார்க்கத்தாலே) போய், அமருலகில் - * அயர்வறும் அமரர்களினுடைய லோகமான பரமபதத்திலே, பைந்தொடி - அழகியஹஸ்தாபரணங்களையுடையரான, மடந்தையர்தம் - திவ்யாப்ஸரஸ்ஸுக்களினுடைய, வேய் மரு - வேய்போலே விலக்ஷணமான, தோளிணை - தோள்களாலே செய்யப்படுமதான ப்ரஹ்மாலங்காரத்தை, அணைவர் - அணையப்பெறுவர். தொடி - வளை. இது - கலிவிருத்தம்.

இ.— நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லார் திருநாட்டிலுள்ளார்க்கு போக்யராவர் என்கிறார்.

[அந்தமில்புகழ் அனந்தபுரநகராதி தன்னை]-திருவனந்தபுரத்திலே நிரவதிக குணனாய் ஜகத்காரணபூதனானவனை. பரமபதத்தில் குணம் ஸாவதிபோலேகாணும். நித்யவஸந்தமான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த. [ஐந்தினோடைந்தும் வல்லார்] - ரத்நங்களை முகமறிந்து சேர்த்துச்சேர்த்திகளைக் கொண்டாடுமாபோலே, ஐயைந்தாகவாய்த்து அநுபவிக்கிறது. [அணைவர் இத்யாதி] - பரமபதத்திலே, "ஶதம் மாலாஹஸ்தா:" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, அப்ஸரஸ்ஸுக்களுடைய கொண்டாட்டத்துக்கு விஷயபூதராவர். "முடியுடைவானவர் முறைமுறை எதிர்கொள்ள" என்றதோடு "வேய்மருதோளிணையை - அணைவர்" என்கிற இதோடு வாசியில்லை. "மதிமுகமடந்தையரேந்தினர்வந்தே" என்னக்கடவதிறே.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லார் திருநாட்டிலுள்ளார்க்குபோக்யராவரென்கிறார்.

[அந்தமில்இத்யாதி] - திருவனந்தபுரத்திலே நிரவதிக குணனாய், ஜகத்காரணபூதனானவனை; ஆஶ்ரயிக்கிறவர்களும் அந்தமில்புகழினர்: ஆஶ்ரயணீயனும் அந்தமில்புகழினன்காணும். பரமபதத்தை விட்டுத் திருவனந்தபுரத்திலேவந்து ஆஶ்ரிதர்க்காகக் கண்வளர்ந்தருளுகையாலே புகழுக்குஒருமுடிவில்லையாய்த்து அவனுக்கு; ஸம்ஸாரத்தை விட்டு உகந்தருளினநிலத்திலே அடிமைசெய்கையாலே புகழுக்குஅந்தமில்லையாய்த்து இவர்களுக்கு. இவனை அடிமைகொள்ளுகையாலே புகழுக்கெல்லையில்லையாய்த்து அவனுக்கு;

நிகமம்.—அந்தமில் இத்யாதி. "ஐந்தினோடைந்தும்வல்லார்" என்றுதொடங்கி "தோளிணையே" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

"அனந்தபுரநகர் - அந்தமில்புகழ் - ஆதிதன்னை" என்றந்வயித்தர்த்தம் - திருவனந்தபுரத்திலே இத்யாதி. கீழே ஆஶ்ரயிக்குமவர்களை "அந்தமில்புகழினர்" என்று, இங்கே ஆஶ்ரயணீயனை "அந்தமில்புகழாதி" என்றதுக்கு ஹாவம் - ஆஶ்ரயிக்கிறவர்களும் இத்யாதி. அதெப்படியென்ன - பரமபதத்தை இத்யாதி வாக்யத்வயம். கீழ்வாக்யத்வயவிவரணம் - இவனையடிமை

அவனுக்குஅடிமைசெய்கையாலே புகழுக்கு அந்தமில்லையாய்த்து இவர்களுக்கு. இஸ்ஸம்ஸாரத்திலேயிருந்தால் இவனுக்குப் புகழுண்டாகிலாய்த்துப் பரமபதத்திலிருந்தால் அவனுக்குப் புகழுண்டாவது. இந்நிலத்தை விடவிட இவனுக்குப் புகழுண்டாமாபோலே, அந்நிலத்தைவிட விட அவனுக்குப்புகழுண்டாம். இருவர்க்கும் இரண்டும் அலப்யலாபமிறே. [கொந்தலர்பொழில்குருகூர்இத்யாதி] - நித்யவஸந்தமான திருநகரியையுடைய ஆழ்வார்அருளிச்செய்த. [ஐந்திநோடைந்தும்வல்லார்] - ரத்நங்களை முகமறிந்துகோத்துச் சேர்த்திகளைக் கொண்டாடுமாபோலே, ஐயைந்தாகவாய்த்து அநுபவிக்கிறது. [அணைவர்இத்யாதி] - ஸ்ரீவைகுண்டத்தேறப்போய், "ஶதம் மாலாஹஸ்தா:" (ஶதம்மாலாஹஸ்தா:) இத்யாதிகளிற்சொல்லுகிறபடியே, அங்குத்தை யப்ஸரஸ்ஸுக்களுடைய ஆதரத்துக்கு விஷயபூதராவரென்றபடி. "முடியுடைவானவர் முறைமுறையெதிர்கொள்ள" என்றத்தோடு "வேய்மருதோளிணை - அணைவர்" என்கிற இத்தோடு வாசியில்லை "மதிமுகமடந்தையரேந்தினர்வந்தே" என்னக்கடவதிறே. (கக)

இத்யாதி. அனந்தபுரநகரிலே வந்தபின்பு "அந்தமில்புகழ்" என்கிறதென்? பரமபதத்திலேயிருந்தால் புகழில்லையோவென்ன - இஸ்ஸம்ஸாரத்திலே இத்யாதி. விவரணம்-இந்நிலத்தை இத்யாதி. இத்தால் பலிதம் - இருவர்க்கும் இத்யாதி. கொந்தலர் - கொத்துக்கொத்தாக அலருகிற. பத்தென்றதே, "ஐந்திநோடைந்தும்" என்றதுக்கு பாவம் - ரத்நங்களை இத்யாதி. "அவர்கள் தோளோடேயணைவர்" என்கிறதுக்கு பாவமேதென்ன - "ஶதம் மாலா" இத்யாதி. "தம் பஞ்ச ஶதாந்யப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி । ஶதம் மாலாஹஸ்தா:, ஶதமஞ்ஜநஹஸ்தா:, ஶதம் சூர்ணஹஸ்தா:, ஶதம் வாஸோஹஸ்தா:, ஶதம் பணஹஸ்தா:" இத்யாதி; கௌஷீதக்யுபநிஷதி. என்றபடி என்கையாலே - இதுவே தாத்பர்யமென்று கருத்து. பைந்தொடி - அழகிய ஹஸ்தாபரணங்களையுடைய. தொடி - முன்கைவளை. வேய்மருதோளிணை - மூங்கிலோடொத்த தோளிணையோடே, அணைவர் - ஸம்ஶ்லேஷிக்கப் பெறுவரென்று ஶப்தார்த்தம். 'அந்தமில்புகழ்' என்று தொடங்கி, 'ஐந்திநோடைந்தும்வல்லார் - அமருலகில் - போய் - பைந்தொடி மடந்தையர்தம் வேய்மருதோளிணை - அணைவர்' இத்யந்வய:. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— வைகுண்டே த்ருணீயே ஶேஷபாஸ்யே தேவகேவலே நிஜபதஸவிதே ஶேஷிதஸ்து । ப்ராப்யஸ்யாஸ்யாதிஸந்நிதநிவதநஜுஷாம் ஸ்ரீஶஸ்தைநாஹ்யதாம் ஶம்ஸதி ஸ்ம ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— ஊசே ஸ்ரீகேஶவஸ்யா ஹ்ருதவஸிதமாயீஸங்கேதயோகா தாஸஸங்கா த்வதிஸ்மா தரேவஸிஷ்டாஶ்ரிதஸ்ஸம்ப்ருத்தி । வ்யாவாரோஹ்யக்ஷிப்தேவைப்ரவிபஜமஶாயிஸ்வே ஶ்ருதிஸ்தோத்ரவஸ்ஸ்மர்யதே ஶ்ரீஸர்வவிதமவா நித்யநித்யஸம்யாமி: ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

கெடுமிடர்வைகுந்தத்தைக்கிட்டினாற்போல்
தடமுடையனந்தபுரந்தன்னில் - படவரவில்
கண்டுயில்மாற்காட்செய்யக்காதலித்தான்மாறனுயர்
விண்டனிலுள்ளோர்வியப்பவே.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானார்திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்.

மூன்றாந் திருவாய்மொழி—வேய்மருதோள் - ப்ரவேசங்கள்.

ஆ.—(வேய்மருதோள்.) - இப்படி எம்பெருமானோடேகலந்து பரிமாறிச் செல்லாநிற்கச்செய்தே, இப்ப்ரக்ருதியிலே தாமிருந்த இருப்பைக்கண்டு, "இப்ப்ரக்ருதி ஸம்பந்தம் காரணமாக எம்பெருமான் விடிலோ?" என்றுள்ள அதிசங்கையாலே அவஸந்நராகிறார். வண்துவரைப்பெருமானோடே கலந்து பரிமாறச்செய்தே பசுமேய்க்கப்போங்காலம் ப்ராப்தமானவாறே "இவன் இனிப்பசுமேய்க்கப்போகிலோ?" என்றுள்ள அதிசங்கையினாலே அக்கோபிமார் அவஸந்நைகளானாற்போலே அவஸந்நராய், அவர்களுடைய பாசுரத்தாலே அலற்றுகிறார். திருவாய்ப்பாடியிற் பெண்பிள்ளைகள், வண்துவரைப்பெருமானோடேகூட எழுந்தருளியிருக்கச்செய்தே, அவன்பசுமேய்க்கப் போங்காலம் வருமளவில் அவன்போனானாகக்கொண்டு, பிரிந்தார்படும் வ்யஸநமெல்லாம் பட்டு, வ்யஸநத்தையும் பிரிந்தஅவன்கொடுமையையும் தோழிமாருக்குச் சொல்லுமா போலே அவன்தன்னைக்குறித்துச் சொல்லுகிறார்கள்.

ஒ.—மூன்றாந்திருவாய்மொழியில், ப்ராப்யபூமியில் போக்யதையையும், அங்குப்போனால் அடிமைசெய்யும்படியையும் அநுஸந்தித்து ப்ரீதராய், அப்போதே ப்ராப்யபூமியில் செல்லப்பெறாமையாலும் பண்டு பலகால்பிரிந்த வாஸநையாலும் ப்ரக்ருதியிலே யிருக்கிறமையை அநுஸந்தித்தும், தான் நினைத்ததே செய்யக்கடவதான ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ர்யத்தை யநுஸந்தித்தும், அவனுக்குத் தம்மை விஷயீகரித்தல்லது நிற்கவொண்ணாத பரமபக்தி தமக்கில்லையாகவும் பார்த்தும், "இப்ப்ரக்ருதியிலே இன்னமும் தம்மை வைத்தருளில் செய்வதென்?" என்னும் பயத்தாலே மிகவும் அவஸந்நரான ஆழ்வார், தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். இரவெல்லாம் எம்பெருமானோடே ஸம்ச்லேஷித்து விடிந்தாலும் பிரியக்கடவதாக அவனுக்கு நினைவின்றிக்கே யிருக்கச்செய்தே, ஸகலஸத்த்வங்களும் உணர்ந்து கிளம்புவதுஞ் செய்து, குயில்கள் கூவுவது, மயில்களாலிப்பது, இளங்காற்று வந்துநடையாடாநிற்பது, கன்றுகளும் பசுக்களும் காடெல்லாம் பரவாநிற்பதுமாய்க்கொண்டு போதுவிடிந்தவாறே பண்டென்றும் இக்காலத்திலே பிரியக்கண்ட பழக்கத்தாலே வெருவி, அவன் பசுமேய்க்கப்போகிறானாக அதிசங்கைபண்ணி, அவன்எதிரே அவனைப்பிரிந்தால் படும் வ்யஸநத்தைப் படுகிறாளொரு பிராட்டி, அவனைப்பிரிந்து இன்னுயிர்ச்சேவலினும் மல்லிகை கமழ்தென்றலினும் படும் வ்யஸநத்தை அவன்முன்பே படாநின்றுகொண்டு தாம் தம்மைக்கொண்டகல்தல் தகவன்றென்று நோவுபடும் ப்ரக்ருதியுமாய், அவன்பக்கல் பரிவுடையாரெல்லாருடைய பரிவையுடையாளான இவள், வ்யஸநத்தின் மிகுதியாலே, "பசுநிரைமேய்க்கப் போகவேண்டா என்று வாயாற்சொல்லவும் க்ஷமையாகிறிலேன்; நான் நினைத்தன சொல்லவல்லேனாம்படி உன்னுடைய அணிமிகு தாமரைக்கையை என் தலைமேலே வைத்தருளி உன்னுடைய திருக்கண்களாலே நோக்கியருளி என்னைத் தரிப்பித்தருளவேணும்" என்றும், "ஸப்ரமாதமான காட்டில் பசுமேய்க்கப்போகா தொழியவேணும்" என்றும் சொல்லி மிகவும்ஆர்த்தையாய்க் கூப்பிடுகிறாள். எம்மாவீட்டில், தம்முடைய தாதர்த்த்யத்தை ஆசைப்பட்டார்; இத்திருவாய்மொழியில் நான்

தஞர்த்தமாகவுமாம், தவிரவுமாம்: எம்பெருமானுக்கு ஸம்ருத்திகளுண்டாம் இத்தனை வேண்டுவ தென்கிறுர்.

ப.—மூன்றுந் திருவாய்மொழியில், கீழே திருவனந்தபுரத்திலே அடிமை செய்யப் பாரித்தவர், அவிலம்பேந கிட்டப்பெறுமையாலே, அவனுடைய போக்யதை யும் ப்ராப்யஸாவமும் அடிமைகொள்ளப்பாரித்திருக்கிறபடியும் புத்திஸ்த்தமாம்படி ஹ்ரு தயஸந்நிஹிதனு யிருக்கச்செய்தேயும், சீக்ரப்ராப்தியில் இச்சையாலே த்வரிக்கும்படி யான ஸௌஹார்த்யாதிசயத்தை யுடைய ளுகையாலே, அவனுடைய புண்டரீகாக்ஷத்வத் தையும், ஆஸ்ரிதஸவ்யத்வத்தையும், அபிரூபத்வத்தையும், ஆஸ்ரிதரக்ஷகத்வத்தையும், அர்ஹநீய ஸம்ஸ்லேஷத்வத்தையும், அஸாதாரணஸ்வபாவத்தையும், ரமணீய ஸௌலப் யத்வத்தையும், ஆகர்ஷகாவயவத்வத்தையும், அஸாதாரணநாயகத்வத்தையும், ஆஸ்ரித ஜநபோக்யத்வத்தையும் அநுபவித்து, விலம்பம் பொறுமையாலே விஸ்லேஷத்தை அதிசங்கித்து, ஏவம்பூதனுன நீ என்னை அகலாதொழியவேணுமென்று அபேக்ஷித்து, தமக்குப்பிறந்த ஆர்த்தியை அவன் ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்த ப்ரகாரத்தை; க்ருஷ்ணனேடே ஸம்ஸ்லேஷித்து ப்ராதஸமயத்திலே அவனுடைய பிரிவை ஸங் கித்து ஆஞ்சினளொருகோபிகை, "ஸந்நிதியில் பாதகங்கள் நலிவுசெய்யாநிற்கும்: என்னை நீ ஆஸ்வஸிப்பித்துக்கொண்டிருக்கவும்வேணும்; போனவிடத்திலே ஆஸுரப்ர க்ருதிகள்வரில என்னும்மா என்றஞ்சாநின்றேன்" என்று, திருவாய்ப்பாடியில் பெண்க ளெல்லார்க்குமாகச் சமைந்தவனுடைய போக்கை விலக்கின பாசுரத்தாலே அருளிச் செய்கிறுர்.

இ.—மூன்றுந்திருவாய்மொழியில், திருவநந்தபுரத்தில் போக்யதையையும் அங்குப்போனல் அடிமைசெய்யும்படியையும் அநுஸந்தித்து, அந்த ப்ராப்யபூமியிலே புகவேணுமென்று பாரித்திருந்தார்; அப்போதே செல்லப்பெறுமையாலே அஸ்தாநே பயசங்கையாய விழுந்தது. ப்ராப்யபூமியில் அப்போதே செல்லப்பெறுமையாலும், பாரித்தபடியே அடிமைசெய்யப் பெறுமையாலும், முன்பு பலகாலும் பிரிந்தவாஸ னையாலும், அநாதிகாலம் வாஸிதமான ஆசிதஸம்ஸர்க்கத்தாலும், ஈஸ்வரனுடைய ஸ்வா தந்த்ர்யத்தாலும், - அதாகிறது - ஸம்ஸாரிகளுக்குத் தன்னைக்கொடுத்தும் ஸ்ரீஸர தாழ்வான வளைப்புக்கிடக்க மறுத்து மீண்டுபோரும்படியுமிறே ஸ்வாதந்த்ரியமிருப்பது; அதுதாலும்,- அவன்தான வந்து மேல்விழும்படியான பரமபக்தி நமக்கில்லையென்றிருக் கையாலும், "இன்னம் ப்ரக்ருதியிலே தம்மைவைக்கில் செய்வதென்?" என்னும் பயத்தாலே அவஸந்நரானவர், தமதுசமயை அந்யாபதேசத்தாலே பேசுகிறுர். இவை தான் பயந்வ்ருத்திக்கு உடலாயிருக்க, கலக்கத்தாலே பயப்படுகிறுர். அத்தேசத் தில் புகப்பெறுமோமோ என்னவேண்டா: "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்று உபக்ரமத்திலே ஸம்ஸிலராம்படியான ப்ரேமபாரவஸ்யத்தாலே இப்போது போக மாட்டாதொழிகிறுராகையாலே. அங்கேசென்று அடிமைசெய்யப் பெற்றிலோமென்ன வேண்டா; புகழும நல்லொருவனிற்படியே இவர்சொல்முதலாக த்ரிவிதகரணவ்யா பாரங்களையும் அவன் தனக்கெல்லாவடிமையுமாக நினைத்திருக்கையாலே. அசித்வாஸ னைக்கு அஞ்சவேண்டா; விலக்ஷணவாஸனையாலே துர்வாஸனையைப் பரிஹரிக்க இருக் கிறவரல்லாமையாலே, ஸர்வசக்தியைக்கொண்டு பரிஹரிக்குமவரிறே; இன்னம் முடியா தொழிற்காரணங்களையுடையவர்க்கு பயமில்லையிறே. அவன் ஸ்வாதந்த்ர்யத்துக்கு அஞ்ச

வேண்டா; விரோதியை இடையிலே துணித்துக்கொண்டு போகைக்கு உடலாகையாலே; “சுகம் த்வா ஸஹ வா வெஹ்யா ரோக்ஷயிஷ்யதி” என்றானிறே. ஶக்தியில்லை யென்று அஞ்சவேண்டா; அது உபாயமல்ல. இங்ஙனேயிருக்க, ப்ரேமத்தாலேவந்த இருட்சியாலே அஸ்தாநேபயஶங்கிதராய் தம்தசையை அந்யாபதேசத்தாலே சொல்லுகிறார். ராத்ரியெல்லாம் க்ருஷ்ணனோடே ஸம்ஶ்லேஷித்து, ப்ரபாதஸமயத்திலே ஸகல ஸத்த்வங்களும் உணர்ந்து, குயில்கூவுவது, மயில்களாலிப்பது, இளங்காற்று ஸஞ்சரிப்பது, கன்றுகள் பசுக்கள் காடெங்கும் பரம்புவதாகிறவற்றைக்கண்டு, அவனுக்குப் பிரியக்கடவதாக நினைவின்றிக்கேயிருக்கப் பண்டுஎன்றும் இக்காலந்தன்னிலே பிரிந்துபோந்த வாஸனையாலே அவன் பசுமேய்க்கப் போகிறானாக அதிஶங்கைபண்ணி, போனானாக அத்யவஸித்து, “நீயும்பிரிந்தாய்; நீ பிரிந்தால் நலியக்கடவ பதார்த்தங்களும் நலியாநின்றன; பசுமேய்க்கப்போமது எனக்கு அநபிமதம். நீபோகவேண்டா என்றுசொல்லவொண்ணாதபடி என்னுடையநாக்கு நீரற்றுவாராநின்றது. நான் நினைத்தது சொல்லவல்லேனாம்படி உன்னுடைய அணிமிகு தாமரைக்கையை என்தலையிலே வைத்தருளி உன்திருக்கண்களாலே நோக்கியருளவேணும்; அஸுரராக்ஷஸ ஸஞ்சாரத்தாலே ஸப்ரமாதமானகாட்டில் பசுமேய்க்கப் போகாதொழியவேணும்.”—“ரோதாவிதாஹா தா”, என்று இவ்வாத்மாவுக்கு ஸர்வவிதபந்துவுமென்று உணர்ந்தால் தன்னிழவிற்காட்டில் இவனுக்குப் பரியவேண்டும்படியாயிறே யிருப்பது; ஆனபின்பு, -“நீபோகில் நானுளளாகமாட்டேன்” என்று இன்னுயிர்ச்சேவலிலும் மல்லிகைகமழ்தென்றலிலும் அவனைப் பிரிந்துபட்ட வ்யஸநத்தை அவன்ஸந்நிதியிலேபட, அத்தைப்பார்த்து, “நாம் போகக்கடவோமல்லோம்; நாம்போக நினைப்பதும் செய்திலோம்” என்று தான் போகாமையை இவள்நெஞ்சிலே படுத்த, அத்தாலே தரித்தாளொரு பிராட்டி பேச்சாலே தம் தசையை யருளிச்செய்கிறார். எம்மாவீட்டில், தம்முடைய தாஸ்யத்தை ஆசைப்பட்டார்; இதில் அவன்ஸம்ருத்தியை ஆஶாஸிக்குமிதுவே புருஷார்த்தமென்கிறார்.

ஈடு.—திருவனந்தபுரத்திலேபுக்குப் பாரித்தபடியே அடிமைசெய்யப் பெறாமையாலே, அதிஶங்கைபண்ணவேண்டும்படியாய் வந்து விழுந்தது.

ஸ்ரீவைஷ்ணவர்களும் தாமுமாய் அடிமைசெய்யவேணுமென்று பாரித்தார்; பாரித்தபடியே அத்தேசத்திலேபோய்ப் புக்கு அடிமைசெய்யப் பெற்றிலர். அத்தேசத்திலே அப்போதேபோய்ப் புகப்பெறாமையாலும், பாரித்தபடி அடிமைசெய்யப்பெறாமையாலும், நெடுநாள் பிரிந்துபோந்த வாஸனையாலும் - அநாதியாய்வருகிற அசித்ஸம்ஸர்க்கத்தை அநுஸந்தித்து அஞ்சினவச்சத்தாலும், ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்தை அநுஸந்தித்து அஞ்சினபடியாலும், - அதாவது - ஶிஶுபாலனுக்குத் தன்னைக்கொடுத்து ஸ்ரீபரதாழ்வானுக்கு

வேய்மருதோளிணை ப்ரவேசம்; கீழே திருவனந்தபுரத்தை ப்ராப்யமாகவத்யவஸித்து ஸ்ரீவைஷ்ணவர்களும் தாமுமாய் அடிமைசெய்யப்பாரித்தவர், இதிலே உபேக்ஷைப்படுவானென்? என்கிற ஶங்கையிலே ஸங்க்ரஹஸங்கதி - திருவனந்தபுரத்திலே இத்யாதி.

விஸ்தரஸங்கதி - ஸ்ரீவைஷ்ணவர்களும் இத்யாதி. “காலாழும்நெஞ்சழியும்” என்னுமவராகையாலே - அடிமைசெய்யப்பெற்றிலர் என்றபடி. நெடுநாள் பிரிந்துபோந்த வாஸனையாவது - * யாதானும்பற்றி நீங்கித் திரிந்த வாஸனை, ஏதத்விவரணம் - அநாதியாய் இத்யாதி. “ஸ்வாதந்த்ர்யத்தை யநுஸந்தித்தஞ்சினபடியாலும்” என்று ஸ்வாதந்த்ர்யத்துக்கு அஞ்ச ப்ரஸக்தியேதென்ன - அதாவது இத்யாதி. கீழ்ச்சொன்னவையெல்லாம் பயநிவ்ருத்திக்கு ஹேதுவன்றோ?

மறுத்துப்போன ஸ்வாதந்த்ர்யமிறே.—இனி ஸர்வேஶ்வரன் தானேவந்து விஷயீகரிக்கைக் கீடான ஶக்தி தமக்கு இல்லையென்றிருக்கையாலும், † (“இன்னமும் ப்ரக்ருதியிலே வைக்கில் செய்வதேன்? என்னும் ஸயத்தாலே அவஸந்நராய்) தமக்குப்பிறந்த ஶோகா விஶேஷத்தை ஒருபிராட்டி பாசுரத்தாலே அருளிச்செய்கிறார். ஸயநிவ்ருத்திக்கு உடலான இதுதானேயிறே இப்போது இவர்க்கு ஸயஹேதுவாகிறது. இப்போதே அத்தேசத்திலே போய்ப் புகப்பெற்றிலோம் என்றிருக்கவேண்டா: அவனை அநுஸந்திதால் “காலாழும் நெஞ்சழியும்” என்று ஶக்திபாரவஶ்யத்தாலே இப்போது அடியிடமாட்டாது ஒழிகிறு ராகையாலே. அடிமைசெய்யப்பெற்றிலோ மென்று அஞ்சவேண்டா; * புகழுநல்லொருவ னிற்படியே இருந்தவிடத்தேயிருந்து ஏதேனுமாகச்சொன்னவற்றையே தனக்கு அடிமை யாகக்கொள்ளும் ஸ்வஸாவத்தாலே. இன்று நினைத்தவற்றையும் செய்தவற்றையுமெல் லாம் தனக்கு அடிமையாக நினைத்திருக்குமவனிறேயவன். இனித் தமப்பன்பகை யாக அவனிலும் இவன் அண்ணியனென்று வரநின்ற ப்ரஹ்லாதனிறே முடிவிலேவந்து எதிரிட்டான். ஆக, ப்ராந்தனுக்குப்பிறந்த தெளிவுபோலே அசித்ஸம்ஸ்ருஷ்டனுக்குப் பிறக்கும் ஜ்ஞாநத்தை விஶ்வஸிக்கவொண்ணாது என்றிறே இவர்தாம் ப்ரக்ருதி ஸம்பந் தத்தைநினைத்து “தேறேல்என்னை” என்று அஞ்சிற்றும்; அங்ஙனஞ்சவேண்டா, * முடி யானேயிற் கரணங்களையுடையவராகையாலே.; அவன் ஸ்வாதந்த்ர்யத்தை நினைத்தஞ்ச வேண்டா; “𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿” (ஸர்வபாபேப்யோமோக்ஷ யிஷ்யாமி) என்று விரோதியைத் துண்டித்துக்கொண்டு போகைக்கும் உடலாயிருக்கை யாலே. ஶக்தி தமக்கு இல்லையென்றிருக்கவேண்டா; ப்ரபத்தியை யுபாயமாகப்பற்றின வராகையாலே. இனி, “𑌨𑍋𑌪𑌜𑌨𑌂 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍” (நோபஜநம்ஸ்மரந்) என்கிறபடியே இத்தை ஸ்மரியாதபடியான ஸாக்ஷாத்காரமில்லாமல் † படுத்துகிறபாடிறே இது. ப்ரத்

என்ன - பயநிவ்ருத்திக்கு இத்யாதி. கீழ்ச்சொன்ன அஞ்சும் ஸயநிவ்ருத்தி ஹேதுவானமையைக் காட்டுகிறார்-இப்போதே இத்யாதி. அவன் அப்படிகொள்ளும் ஸ்வஸாவனே வென்ன-இன்றுநினைத் தவற்றையும் இத்யாதி. இவ்விடத்திலே, “[illegible]” என்றது அநுஸந்தேயம். அசித்ஸம் ஸர்க்கத்தை நினைத்தால் ஸயப்ராஸக்தி யேதென்ன - இனித்தமப்பன் இத்யாதி. ஆனால் ஜ்ஞாநம் பிறந்ததுவேதாய்த்தென்ன - ஆக ப்ராந்தனுக்கு இத்யாதி. இந்த அசித்ஸம்ஸர்க்கம் ஸயநிவ்ருத்திக்கு உடலானபடியென்? என்ன - அங்ஙனஞ்சவேண்டா இத்யாதி. இத்தால் - ப்ரஹ்லாதாழ்வானைப் போலே கரணங்கள் ப்ராக்ருதஸோமங்களிலே மண்டியிருக்கையன்றிக்கே, தமக்கு ஸகவத்விஷயத் தில் மண்டினகரணங்களாகையாலே அஞ்சவேண்டாவென்றபடி. “நெடுநாள்பிரிந்துபோந்த வாஸ னையாலும்” என்றது - ப்ரத்யேகஹேதுவாய், ஸயஹேதுவாகிறதென்னவுமாம்; அப்போது இந்த த்ருதீயஹேதுவுக்கு ஸயநிவ்ருத்தி ஹேதுத்வம் சொல்லாவிட்டாலும், *முடியானேயிற்கரணங்களை யுடையவராகையாலே ப்ரக்ருதிஸம்பந்தத்தை நினைத்து அஞ்சவேண்டா வென்று சொன்னது, ப்ரக்ருதிஸம்பந்தத்தால்வந்த பிரிவையும் நினைத்தஞ்சவேண்டா வென்னுமதுக்கும் உபலக்ஷண மென்றுகண்டுகொள்வது. ஸ்வாதந்த்ர்யம் ஸயநிவருத்திஹேதுவாம்படியை யருளிச்செய்கிறார் - அவன் ஸ்வாதந்த்ர்யத்தை இத்யாதி. ஶக்தியில்லையென்னுமது ஸயஹேதுவன்றோ? என்ன. ஶக்தி தமக்கு இத்யாதி. ஆனால் எத்தாலே அதிஶங்கைபண்ணுகிறாரென்ன - இனி நோபஜநம் இத் யாதி. ஸயஹேதுக்களானபக்ஷத்திலே பரிஹாரம் அஞ்சுக்குச்சொல்லி, “நெடுநாள் பிரிந்து போந்த வாஸனையாலும்” என்றதுக்கு பரிஹாரம் சொல்லாமையாலே, ஸாக்ஷாத்காரமில்லாமல் படுத்துகிறபாடிறேயிது என்றது - ‘ஸாக்ஷாத்காரமில்லாமல் நெடுநாள் பிரிந்துபோந்தவாஸனை

† படுத்துகிறபடியிறே என்றும் பாடமுண்டு.

யக்ஷமும் அகிஞ்சித்கரமாய், கூடவிருக்கச்செய்தே "பிரிந்தான்" என்று ப்ரமிக்கும்படி பிரிவால்வந்த வாஸநை மேற்கோள்ளுகிறதிறே. யோக்யதைகிடந்து, படுத்துகிறபாடிறே. "மயர்வறமதிநலமருளினன்" என்று - ஸஹவத்ப்ரஸாதலப்தமாய், பரபக்திரூபமாய், ருசிகார்யமாயிருக்கிற இருட்சியிருக்கிறபடியிறே இது. இனி, ஈஶ்வரனுக்குக் கால்நடையாடாததோரு தேசத்திலே இவரைவைத்துப்பரிஹரிக்கலாமத்தனை. கலந்து நெடுநாள்பிரிந்து போந்தாள் ஒருபிராட்டியாய், அவ்வாஸநையாலே, க்ருஷ்ணன்கூடவிருக்கச்செய்தேயும், இவன்பண்டுபிரிந்துபோந்த ப்ரஹாதகாலமும்வந்து அக்காலத்துக்கு அடைத்தகாற்றுக்கள் அடிக்கையாலும், குயில்கள்கூவுகையாலும், மயில்கள் ஆலிக்கையாலும், காடேங்கும் ஒக்கக் கன்றுகளும் பசுக்களும் பரக்கையாலும்,"இக்காலத்தில் அவன்போகை தவிரான்; பசுக்களினுடைய ரக்ஷணம் ஒருதலையானால் அவற்றைவிட்டு நம்மோடிருப்பான் ஒருவனல்லன்; ஆனபின்பு அவன்போனான்" என்று கூடவிருக்கச்செய்தேயும் அவன்பிரிவை நிஶ்சயித்து, ஒரு * இன்னுயிர்ச்சேவல் * மல்லிகைகமழ்தென்றல் தொடக்கமானவற்றில் அவன் அஸந்நிதியிற் பட்ட க்லேஶத்தையுடைய அவன்கண்முகப்பேபட்டு, ஸர்வஶக்தியான அவன்தனக்கும் பரிஹரிக்கவோண்ணாதபடியாய்த்து இவ்வாபத்து. அதாவது-போனானாய் வருகிறானல்லன், போகநினைத்தானாய்த் தவிருகிறானல்லனே. இப்படிநோவுபட்டு, "நீ ஸர்வதா பசுமேய்க்கப்போகை தவிராய்: உன்போக்கு எனக்கு அஸஹ்யமதம்; ஆகையாலே உன்னுடையபோக்கை விலக்கவேணுமென்று நினையாநின்றேன்; இதுக்கு நாநீர் வருகிறதில்லை; அதுக்குப் பரிஹாரமாக உன்கையை என்தலையிலேவைக்கவேணும்; நீ பசுமேய்க்கப்போகாதோழியவேணும்; 'ஸப்ரமாதமானகாட்டில் நீ பசுமேய்க்கப்போனால்

படுத்துகிறபாடிறேயிது' என்று கூட்டிக்கொள்வது என்றும் சொல்லுவர்கள். அதாவது, இப்போது * முடியானேயிற் கரணங்களையுடையாராய் ஸாக்ஷாத்காரமுண்டாயிருக்கையாலே அஞ்சவேண்டாவென்று கருத்து. ஸாக்ஷாத்காரமில்லையென்கிறதென்? * கெடுமிடரிலே ப்ரத்யக்ஷஸமாநாகாரமான மாநஸாநுஸந்தானத்தைப் பண்ணிக்கொடுக்கவில்லையோ? என்ன - ப்ரத்யக்ஷமும் இத்யாதி என்னுதல்; அன்றிக்கே, இவ்வாக்யம் அந்யாபதேஶத்திலேயாய், ஒருகோபிகை, க்ருஷ்ணன் ப்ராதஃகாலத்திலே கூடவிருக்கச்செய்தே பசுமேய்க்கப்போனதாக அதிஶங்கைபண்ணுகிறாளென்று விவக்ஷித்து, கூடவிருக்கச்செய்தே போனதாக அதிஶங்கைபண்ணக்கூடுமோ? என்ன - ப்ரத்யக்ஷமும் இத்யாதி என்னவுமாம். "மேற்கொள்ளுகிறதிறே" என்றத்தை விவரிக்கிறார் - யோக்யதை இத்யாதி. யோக்யதையாவது - விஶ்லேஷஹேதுவான ஶரீரபரிக்ரஹம். அதிஶங்கை பண்ணுகிறது ப்ராந்திகார்யமன்றோ? அது த்யாஜ்யமன்றோ? என்ன - மயர்வற இத்யாதி. இவ்வதிஶங்கை இவர்க்கு நிவ்ருத்தமாவதுஎப்போது? என்ன-இனி ஈஶ்வரன் இத்யாதி. "ஒருபிராட்டி பாசுரத்தாலே பேசுகிறார்" என்றத்தை விஸ்தரேண அருளிச்செய்கிறார் - கலந்து இத்யாதி. "நீகண்ணா" என்றத்தைப்பற்ற - கூடவிருக்கச்செய்தேயும் என்றது. "அவைமேய்க்கப்போதி" "பசுநிரைமேய்ப்பொழிப்பான்" இத்யாதியாலே 'ப்ரஹாதகாலம்' என்றது ஸ்புடம் "வாடைதூவ" என்றத்தைப்பற்ற-அக்காலத்துக்கு இத்யாதி. "இனநிரைமேய்க்க" என்றத்தைப்பற்ற-காடேங்கும் ஒக்க இத்யாதி. "அவைமேய்க்கப்போதி" என்றத்தைப்பற்ற - அவன்போகைதவிரான் என்றது. தவிரானென்று நிஶ்சயிக்கைக்கு நியாமகமேதென்ன - பசுக்களினுடைய இத்யாதி. ஒருதலையானால் - தனக்கே பாரமானாலென்றபடி. அதெப்படியென்ன-அதாவது போனானாய் இத்யாதி. "வெவ்வுயிர்க்கொண்டெனதாவிவேம்" என்றத்தைப்பற்ற - எனக்குஅஸஹ்யமதம் என்றது. "அணிமிகுதாமரைக்கையை" இத்யாதியையும், "வீவநின்பசுநிரைமேய்க்கப்போக்கு" என்றத்தையும், "அசுரர்கள் தலைப்பெய்யில்யவங்கொல்" என்றத்தையும்பற்ற - உன்கையையென்று தொடங்கி, அஞ்சாநின்றேன் என்னுமளவும். "அஞ்சனவண்ணனே" என்கிற திருமொழிப்படியே "என்

அங்குள்ள அஸுரராக்ஷஸாதிகளாலே என்புகுருகிறதோ?' என்றுஅஞ்சாநின்றேன்" இனி, **"மாதாபிதா ப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:"** (மாதாபி தாப்ராதாநிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத்கதிர்நாராயண:)என்றுஅவன் ஸர்வவித பந்துவுமாயிருக்குமாபோலே; இத்தலைக்கும் ஸம்பந்தஜ்ஞாநம்பிறந்தால் எல்லாப்பிரிவுகளும் உண்டாயிருக்குமிறே; ***"யதாயதாஹி"*** (யதாயதாஹி) என்கிறபடியே. ஆனபின்பு, நீ போகில் நான் உள்ளாகமாட்டேனென்று இப்படி நோவுபட, அவனும் இத்தையடைய அநுஸந்தித்து, "நான் போகிறேனல்லேன்" என்று, தன்போகாமையை இவள்நெஞ்சிலே படுத்தித்தரிப்பிக்கத்தரித்ததாய்த்தலைக்கட்டுகிறது இத்திருவாய்மொழியில். இத்தால்- தாதர்த்த்யத்தினுடைய எல்லையிருக்கிறபடியிறே * எம்மாவீட்டிலே "தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" என்று நிஷ்கர்ஷித்ததொன்று உண்டிறே; அத்தை அழிக்கிறதாய்த்துஇங்கு. என்னைக்கொள்ளவேணுமென்றிறே அங்குச்சொல்லிற்று; என்னோடு கலக்கவுமாம், வேறே சிலரோடே கலக்கவுமாம்: அங்குத்தைக் குறை தீருமத்தனை வேண்டுவதென்கிறது இங்கு. அதுதன்னில் எனக்கு என்றவிடம், புருஷார்த்தமாகைக்காகச் சொன்னவித்தனையிறே. அது அசித்வ்யாவ்ருத்திக்கு உடலாமித்தனை. இவன்தான் எனக்கு என்னுதவன்று புருஷார்த்தமாகாது, அவன்தான் விரும்பி ப்ரவர்த்திப்பதும் செய்யான்.

செயப்பிள்ளையைப் போக்கினேனெல்லே பாவம்" என்று தாயாரன்றோ பரியக்கடவள்? தாய்க்குண்டான பரிவு இவர்க்குஉண்டாகக்கூடுமோ? என்று ஸ்வாபதேஶத்திலும், மஹிஷியானவளுக்கு மாதாவுக்குஉள்ள பரிவுண்டாகக்கூடுமோ? என்று அந்யாபதேஶத்திலும், வருகிற இரண்டு ஶங்கைக்கும் பரிஹாரம் அருளிச்செய்கிறார்-இனி, **மாதாபிதா** *இத்யாதி வாக்யத்வயத்தாலே. அதாவது - அவனுடைய ஸர்வவித பாந்தவத்துக்குள்ளே புத்ரத்வமும் ஒரு பாந்தவமாகையாலே புத்ரனிடத்தில் தாய்க்குள்ள பரிவு ஈஶ்வரனிடத்திலே இவர்க்கு நடக்குமென்று - 'மாதாபிதா' இத்யாதி வாக்யத்வயத்துக்கு ஹாவம். மஹிஷியான ஸ்ரீகௌஸலையார்க்கு சக்ரவர்த்தியிடத்திலே மாத்ருத்வப்ரயுக்தமான பரிவு நடந்தாற்போலே, இவளுக்கும் க்ருஷ்ணனிடத்திலே மாத்ருத்வப்ரயுக்தமான பரிவு நடக்குமென்று - 'யதாயதாஹி' இத்யாதிவாக்யத்துக்கு ஹாவம் -* **மாதாபிதா** *இத்யாதி. ஸுபாலோபநிஷதி.* **"யதாயதாஹி கௌஸல்யா தாஸீவச்ச ஸகீவச । பார்யாவத் பகிநீவச்ச மாத்ருவச்சோபதிஷ்டதே"** *இத்யயோத்யாகாண்டே கைகேயீம் ப்ரதி தஶரத:. "செங்கனிவாய்' என்றத்தைப்பற்ற -* **தரிப்பிக்கத்தரித்ததாய்** *இத்யாதி. இத்திருவாய்மொழியால் ஆழ்வாருடைய அத்யந்த பாரதந்த்ர்யம் ப்ரகாஶிக்கிறதென்கிறார் -* **இத்தால்** *இத்யாதி. இத்தாலென்றது - இத்திருவாய்மொழியாலென்றபடி.* **தாதர்த்த்யத்தினுடைய வெல்லையாவது** *- அத்தலைக்கே உறுப்பாக விநியோகப்படுகை. "உன்தன் திருவுள்ளம் இடர்கெடுந்தோறும்" இத்யாதியைப்பற்ற -* **தாதர்த்த்யத்தினுடைய வெல்லையிருக்கிறபடி** *என்றது. இதுதான் * எம்மாவீட்டிலும் சொல்லிற்றில்லையோ? அதில் இதுக்கு வாசியேதென்ன -* **எம்மாவீட்டிலே** *இத்யாதி வாக்யத்வயம். அதாவது - அங்கு விநியோகப்பட்டது தமக்கு உறுப்பாக விநியோகப்பட்டாரென்னும்படி: அதிலும் இது ஸாராம்ஶமாயிருக்கும் என்றபடி. அதெப்படியென்ன -* **என்னைக்கொள்ளவேணும்** *இத்யாதி. கீழே * எம்மாவீட்டிலும்இதுக்கு ஆதிக்யமுண்டென்று அருளிச்செய்து, இரண்டுக்கும் ஸாம்யம் விவக்ஷித்து, ஆனால் அங்கே எனக்கு என்று சொல்லுவானென்னென்ன -* **அதுதன்னில்** *இத்யாதி.* **புருஷார்த்தமாகைக்காக** *வென்றது - ஸ்வபோக்த்ருத்வ கந்தரஹிதமாக அவன்கொடுக்கிறபேறு ரஸமாகைக்காகவென்றபடி. அவ்வளவுமன்றிக்கே, சேதநனை வாசியைப்பற்ற எனக்கு என்கிறதென்று ஹேத்வந்தரம் -* **அது அசித்வ்யாவ்ருத்திக்கு** *இத்யாதி. இவ்விரண்டு அர்த்தத்தையும் முகபேதேந விவரிக்கிறார் -* **இவன்தான்** *இத்யாதி வாக்யத்வயத்தாலே,*

முதற் பாட்டு.

வேய்மருதோளிணைமெலியுமாலோ!மெலிவும்என்தனிமையும்யாதும்நோக்
காமருகுயில்களுங்கூவுமாலோ!கணமயிலவைகலந்தாலுமாலோ! [காக்
ஆமருவினநிரைமேய்க்கநீபோக்குஒருபகலாயிரமூழியாலோ!
தாமரைக்கண்கள்கொண்டீர்தியாலோ! தகவிலைதகவிலையேநீகண்ணா!

ஆ.—உன்னைப் பிரிகையாலே என்னுடைய தோள்கள் மெலியா நின்றன; இவற்றின்மெலிவும் என் தனிமையும் ஒன்றும்பாராதே இக்குயில்களானவை உன்திரு நாமங்களைக் கூவாநின்றன; அதின்மேலே மயில்களும் கலந்தாலாநின்றன; ஒருபகல் பிரியுமளவில் இங்ஙனே படவேண்டுமோ? என்னில்,—நீ பசுமேய்க்கப் போனவாறே அவ்வொருபகல்தான் ஆயிரம்ஊழிபாகாநிற்கும்; அதின்மேலே நீயும் உன்னுடைய கண்களாலே என்னை ஈராநின்றாய்; உன்னைப் பிரிந்து நான் இங்ஙனே படாநிற்கச் செய்தே எங்களைப்பிரிந்து நீயிருக்கவல்லையாவதே! நீயிருந்த லோகத்திலும் இல்லை யாகாதே க்ருபை! லோகத்திலே சிறிது க்ருபையுண்டாகிலும் உன்பக்கல் ஒருக்ருபை யில்லை என்கிறாள்.

ஒ.—முதற்பாட்டில், எம்பெருமான் பிரிகிறானென்று வ்யஸநப்படாநிற்கச் செய்தே அதுக்குமேலே குயில்தொடக்கமான பதார்த்தங்களுடைய ப்ரூவங்களாலும் அவனுடைய நோக்காலும் தனக்குப்பிறந்த அவஸாதத்தை வாயாலே தோழிமார்க்குச் சொல்லுமாபோலே அவனுக்கு அறிவிக்கிறாள்.

[வேய்மரு தோள்] - உனக்கு ஸ்ப்ருஹணீயமான தோள். [மெலிவும் என்று தொடங்கி] - உன்னைப்பிரிந்திருக்கிற என்னுடைய அவஸாதமும் இவ்வவஸாதத்திலே எனக்கு ஒருதுணையின்றிக்கே யிருக்கிறமையையும் ஒன்றும்பாராதே பரஸ்பரம் விருப்ப முடைய குயில்களும் கூவாநின்றன; அதுக்குமேலே, மயில்கள் திரண்டு கலந்து ஆலாநின்றன. கண்டு தரிக்கமாட்டாமையாலே முகத்தைத் திரியவைத்து 'அவை' என்கிறாள். [ஆமருவென்று தொடங்கி] - உன்னோடும் மருவித் தன்னிலொத்த பசு நிரைகளை மேய்க்கைக்கு நீபோகிற ஒருபகல் ஆயிரம் ஊழியாகாநின்றது என்று இவள் சொல்ல; "இதொரு ஸ்வபாவமிருக்கும்படியே?" என்று ப்ரீதனாய் அவன் நோக்க; நீ பசுமேய்க்கப் போமதிலுங்காட்டிலும் அழகிய திருக்கண்களாலே நோக்கி நோவு படுத்தா நின்றாய்; க்ருஷ்ணனே! நீயிருக்கிற லோகத்தில் க்ருபாதத்த்வமில்லை, அங் குண்டாகிலும் உன்பக்கல் க்ருபையில்லை என்கிறாள்.

ப.—முதற்பாட்டில், நீ பிரியப்புகுகிறாயென்கிற நினைவாலே குயில்தொடக்க மானவற்றாலே ஈடுபடுகிறஎன்னை, உன்கண்ணழகைக்கொண்டு நலியாநின்றாயென்கிறாள்.

(விரஹம் பொறுமையாலே), வேய்மரு - வேய்போலேகுழலோடின, தோள் இணை - தோள்கள் இரண்டும், மெலியும் - (புறவாயும் காணலாம்படி) மெலியாநின்றன; (அவ்வளவன்றியே), என்மெலிவும் - (ஆஶ்ரயமான) என்ஶரீரத்தின் மெலிவும், என் தனிமையும்-(பிரிவாற்றாத) என்தனிமையும், யாதும் - ஒன்றையும், நோக்கா -பாராதே, காமரு - தர்ஶநீயமான, குயில்களும் - குயில்களானவை, ("தனிமைப்பட்டாரை

நலியக்கடவோமல்லோம்" என்றிராதே), கூவும் - (தம்மில் தாம் சேர்த்திக்காகக்) கூவா நின்றன ; கணமயிலவை - திரளானமயில்களானவை, கலந்து - (தம்மில்தாம்) கலந்து, ஆலும் - நடியாநின்றன ; ஆ - பசுக்களானவை, மருவு இனம் — செறிந்து இனமொத்திருக்கிற, நிரை - திரள்களை, மேய்க்க - மேய்க்கைக்காக, நீ-, போக்கு - லீலாபரனாய்க்கொண்டு போகிற, ஒருபகல்-, ஆயிரம்ஊழி - ("க்ஷணயுகாயதே" என்கிற படியே) ஸஹஸ்ரயுகமாகாநின்றது ; (அதுக்குமேலே குயில்கள் மயில்கள் உன்போக்குத் தாம் நன்றாம்படி), தாமரை - தாமரைபோலே உர்ஸநீயமான, கண்கள்கொண்டு - கண்களைக்கொண்டு, ஈர்தி-ஈராநின்றாய் ; கண்ணா-(பெண்பிறந்தாரை * நெஞ்சு துக்கஞ்செய்யப்போந்த) க்ருஷ்ணனே ! நீ தகவிலை - நீ (ஸ்த்ரீகளை) நலியத்தகாதென்கிற ஸாமாந்ய க்ருபையுமுடையையல்லை ; தகவிலை - (நோவுபட்டாரை நலியலாகாதென்கிற) விசேஷ க்ருபையும் உடையையல்லை. இந்த நைர்க்ருண்யம் ஸ்வபாவமாயே விட்டதிறே என்றுகருத்து. வேய்மருதோளிணை என்று - அவன்கொண்டாடும்படி அழகைச்சொல்லவுமாம். காமருகுயிலென்று அழகியகுயில்; காவிலேமருவினவென்னவுமாம். "ஆலோ!" என்னுமவைகள் - விஷாதஸூசகங்கள்.

ஈ.—முதற்பாட்டில், அவன்பிரிகிறானென்கிற வ்யஸநம் செல்லாநிற்க, அதுக்குமேலே குயில்தொடக்கமான பதார்த்தங்களின் த்வநிகளாலும் அவன்நோக்காலும் தனக்குப்பிறந்த அவஸாதத்தை, தோழிமார்க்குச் சொல்லும் பாசுரத்தாலே அவன்தனக்குச் சொல்லுகிறாள்.

[வேய்மருதோளிணை] - பசுமைக்கும் சுற்றுடைமைக்கும் செவ்வைக்கும் வேயைப்போலியாகச் சொல்லலாம் தோள்கள்இரண்டும். [இணைமெலியுமாலோ] - நீ சேர்த்தியழகு கொண்டாடும் தோள்களிரண்டும் பட்டபாடு பாராய்! தன்தோளழகைத் தான்சொல்லுமவளல்லள் ; அவன் கொண்டாடக் கேட்டுப்போந்தவளாகையாலே சொல்லுகிறாள். ராஜபுத்ரனுக்கு "பூந்தோட்டமழியாநின்றது" என்பாரைப்போலே, உன்ஹோமோபகரணங்கள் அழிகிறபடி பாராய் ! என்கிறாள். கிண்ணகத்திலே அடிச்சுடுமாபோலே, அவன் கூடியிருக்கச்செய்தே ப்ராந்திஜ்ஞாநத்தை யநுவர்த்தித்துத் தோளிணை மெலியாநின்றன. இவன் ஸந்நியியிலும் அகவாயிற் பிரிவுகிடக்கையாலே அதின்கார்யம் உடம்பிலும் உண்டாகாநின்றது. [மெலியுமாலோ] - இனி நீவந்தாலும் அஸத்ஸமமென்கை. [ஆலோ] - விஷாதாதிஶயஸூசகமாய்க்கிடக்கிறது. [மெலிவும் என்தனிமையும்] - நாட்டாருடைய மெலிவும் தனிமையும்போலல்ல, என்மெலிவும் தனிமையும். உன்தனிமையும் உன்மெலிவும்போலல்ல. "மிகமேனிமெலிவெய்தி" என்றும் "தமியமாலோ" என்றும் பிரிவிற்சொன்னவையுமன்று ; அவன்கூடவிருக்கச்செய்தே வந்த மெலிவும் தனிமையுமிறே இது. இங்ஙன்கூடுமோவென்னில் ; "தாம் தம்மைக்கொண்டகறல் தகவன்று" என்னுமவள் கூடவிருக்கச்செய்தே பிரிந்தானாகச் சொல்லவும் தட்டில்லையிறே ; இவன்தன்னாலும் ஸமாதேயமன்று ; போனானையிட்டு வருகிறானல்லன்; போகநினைத்தானாய்த் தவிருகிறானல்லன். அவனும் இவள்தோளில் மெலிவில் மெய்ப்பாட்டைக்கண்டு "நாம் பிரிந்தோமோ" என்று ப்ரமிக்குமத்தனை ; அதுதான் இவன்தன்னுடைய ஸௌஹார்த்ய ஃபலமிறே. முன்பு பிரிந்தால் இவளுடைய ஆற்றாமை தோழிமார் சொல்லக்கேட்டுப் போருமித்தனை ; இப்போது, தானேயிருந்து காணப்பெற்றான். தோழிமாரோடே பண்ணும் வ்ருத்தகீர்த்தனத்தை இவன்தன்

னோடே பண்ணுகிறாள். [யாதும் நோக்கா] - ஒன்றும் நோக்கா. என்மெலிவாதல், என்தனிமையாதல், ஒன்றும் பார்க்கிறனவில்லை. [காமருகுயில்களும்] - காமருதல் - விரும்புதல். பரஸ்பரம் விருப்பத்தையுடைத்தாயிருக்கை. பிரிவுக்கு உடலான கலவியன்றிக்கே நித்யஸம்ஶ்லேஷத்துக்கடியான ப்ரீதியோடே கலவாநின்றன. நீ நலிகிற துக்குமேலே குயில்களும் நலியாநின்றன. நீ நலியவரவிட்ட பதார்த்தங்களிலும் நீயே நல்லை. [கூவுமாலோ] - தனியிருப்பில் என்னோவைக்கண்டால், கலவிக்குப் போக்கு விடுகிற தங்கள் வாயைப் புதைக்க வேண்டாவோ? [கணமயிலவை] - ஒரு திரளாக வ்யாபகமாகாநின்றன. [அவை] - த்ருஷ்டிவிஷம்போலே யிருக்கையாலே, முகத்தைத் திரியவைத்து 'அவை' என்கிறாள். [கலந்தாலுமாலோ] - "இத்தனியிருப்பிலே கலக்கையாவது ஸ்த்ரீவதம்" என்றிருக்கவேண்டாவோ? இவற்றுக்குக் கலவியால் உண்டான ஹர்ஷம் உள்ளடங்காமையாலே ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுகின்றன. "வஸ்த்ரலக்ஷணந்ருத்யம் யோபிராமவந்ருத்யதி। யோபிராஸ்வாதநாந்நம் ராக்ஷஸாநஷ்டாதாவிபா" இம்மயிலினுடைய பேடை அவனாலே அபஹ்ருதசித்தையாய்த் தில்லையாகாதே! "ஹாஸ்யஸ்ரீகவிஸாராரக்ஷகயமேஷாஷவிஷ்யதி" என்னவேண்டியிருக்கிற தசையிலே, நீயும் உன்னுடைய ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்தே போகாநின்றாய். [ஆமருவினநிரைமேய்க்க] - உன்னோடு மருவித் தன்னிலொத்த பசுநிரைகளை மேய்க்கைக்கு. [மருவினநிரை] - "மேய்ந்தபுல்லும் கடைவாய்வழிசோர" என்கிறபடியே, அவனையொழியில் தரியாதவையிறே. ரக்ஷிக்கும்போதும் திரளாக வேணுமோ? [நீபோக்கு ஒருபகல்] - நீபோகிற ஒருபகலென்னுதல், உன்னுடைய போக்கான ஒருபகலென்னுதல்; இவை பக்ஷத்திலே பிறக்குண்டு. போகவிடுகிற ஒருபகல், நீ கழிக்கிற ஒருபகலென்னுதல்; இது பக்ஷத்துக்குச்சேரும், சொல்லிப் போருமதன்று. "ஒருபகலளவேயன்றோ?" என்ன,—உன்னைப்போலே என்றிராதே கொள்ளாய்; உனக்கிறே ஒருபகலாயிருக்கிறது: அதுதானே எனக்கு அநேக கல்பமாயிராநின்றது; "யதாவகோடிப்ரதிமः க்ஷணஸ்தேநவிநாபவத்". [தாமரைக்கண்கள் கொண்டுஈர்தியாலோ] - "நாம் பிரிந்திலோம், பிரியநினைத்திலோம்: இப்படியிருக்க, போனோமுமாய், போனால் நலியக்கடவ பதார்த்தங்களும் நலிந்ததாயிருக்கிற இது, ஒரு ப்ரேமஸ்வபாவமிருக்கும்படியே!" என்று ஸாதரமாகப்பார்க்க, அழகிய திருக்கண்களாலே நோக்கி நோவுபடுத்தாநின்றாய் என்கிறாள். இந்நோக்கிற்காட்டில் நீ பசுமேய்க்கப்போக அமையுமென்கை. "முன்புத்தை நோக்கு ஸ்ம்ருதிவிஷயமாகச் சொல்லுகிறாள்" என்பாருமுண்டு. 'ஈர்தி' - என்கையாலே இப்போது பார்த்தானாகவேணும். இப்படி சொன்னவிடத்திலும் நோக்கை மாறவைத்திலன். [தகவிலை தகவிலையேநீகண்ணா] - [தகவிலை] - நீஇருந்த லோகத்தில் க்ருபையில்லை. [கண்ணா - நீ - தகவிலை] - ஜகத்திலுண்டாகிலும், க்ருஷ்ணனே! உன்பக்கல் க்ருபையில்லை என்னுதல்; வீப்ஸையாலே, உனக்கு க்ருபையில்லை என்று நான் கொடியெடுக்கிறேனென்னுதல். "ஸீதாவிவாஸநவயோः காருண்யாக்ஷதவெ" "ஸத்யம் ஸத்யம்புந ஸத்யமுத்த்ருத்யபுஜமுச்யதே". விலக்காதவளைக்கொண்டு பிறரை யின்னாதாகிறதென்? உன்பக்கல் க்ருபையில்லை; "ஸவஸோ தபுரஸாயோஷித்ஸாக்ஷாத் க்ஷஸ்யநஜாயதே".

ஈடு.—முதற்பாட்டு. அவன்பிரிகிறனென்கிற வ்யஸநம் செல்லாநிற்க, அதுக்கு மேலே, குயில்தொடக்கமான பாதகபதார்த்தங்களின் த்வநியாலும் அவன் நோக்காலும் தனக்குப் பிறந்த அவஸாதத்தைத் தோழிமார்க்குச் சொல்லுமாபோலே அவன்தனக்குச் சொல்லுகிறாள்.

[வேயித்யாதி] - சுற்றுடைமையாலும் பசுமையாலும் வேயை ஒருவகைக்குப் போலியாகச் சொல்லலாயிருக்கிற தோள்களிரண்டும் மெலியாநின்றனவென்கிறாள் ; செருக்கனாயிருக்கும் ராஜபுத்ரனுக்கு "உன்பூந்தோட்டம்அழிகிறது" என்பாரைப்போலே. தன் பிரிவில் இவளாற்றாமை கேட்டார்வாய்கேட்கை யன்றிக்கே கைம்மேலே காணலாயிருக்கிறதுகாணும் இவள்மெலிவு. இவளுடைய ப்ராந்தியை யநுவர்த்தித்து, கிண்ணகத்திலே யடிச்சுடுவாரைப்போலே அவன் கூடவிருக்கச் செய்தேயும் மெலியாநின்றனவாய்த்துத் தோள்கள். கூடவிருந்தாலும் ப்ரயோஜநமில்லையிறே அகவாயிலே பிரிவுண்டானால்; அதின் கார்யமான மெலிவு பிறந்தன்றிநில்லாதிறே. தன்தோள்கள் மெலிகிறஇத்தை "உன்னுடையதோள்கள்மெலியாநின்றன" என்பாரைப்போலே சொல்லுகிறாள் காணும்! தேவதத்தனென்றத்தோடு வாஸுதேவஸப்தத்தோடு வாசியறும்படி அவனுக்கு ப்ரகாரமாயிறே இவ்வாத்மவஸ்து இருப்பது. நீ கலக்கப் புக்கால் விடாயாறுவதெங்கே? * மெல்லியல் தோள்தோய்ந்திறே விடாயாறுவது. [இணை] - நீ சேர்த்தியழகுசொல்லி வாய்வெருவும் தோள்கள் படுகிறபாடு பாராய்! தன்னழகைத் தான் கொண்டாடுமவளல்லளே: அவன் சொல்லக்கேட்ட செவியேற்றாலே சொல்லுகிறாளிறே. இனி நீ வந்தாலும் அஸத்ஸமங்

முதற்பாட்டு.— வேய்மரு இத்யாதி. "ஆமருவினநிரைமேய்க்க நீ போக்கொருபகலாயிர மூழியாலோ, காமருகுயில்களும் கூவுமாலோ, கணமயிலவைகலந்தாலுமாலோ, தாமரைக்கண்கள் கொண்டீர்தியாலோ" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - அவன் பிரிகிறன் இத்யாதி. வ்யஸநம்செல்லாநிற்க என்றது - "மெலிவும் என் தனிமையும்" என்றத்தைப்பற்ற.

வேயோடே பொருந்தியிருக்கிறது எவ்வாகாரத்தாலே? என்ன - சுற்றுடைமையாலும் இத்யாதி. மருவுகை - ஸாத்ருஸ்யாகாரேண பொருந்துகை. தோள்களை வர்ணித்து, இது மெலியாநின்றது என்று அவனுக்குச் சொல்லுகிறதுக்கு பாவம் - செருக்கனாய் இத்யாதி. சாடு - தன் பிரிவில் இத்யாதி. கைம்மேலே - ப்ரத்யக்ஷமாகவென்று சாடுவுக்கர்த்தம். விஸ்லேஷத்திலொழிய கூடவிருக்கச்செய்தே மெலியக்கூடுமோவென்ன - இவளுடைய இத்யாதி. விவரணமாதல், ப்ராந்தியாலன்றிக்கே அகவாயில் விஸ்லேஷாநுஸந்தாநத்தாலும் மெலிவுண்டாகிறதென்று பரிஹாராந்தரமாதல் - கூடவிருந்தாலும் இத்யாதி. வ்யாக்யாதாவின் ஈடுபாடு-தன்தோள்கள் இத்யாதி. ஆற்றாமையிருந்தபடி யென்னென்றபடி. இத்தால் - இவள்தோள் மெலிந்தால் தன்னுடைய அபிமதம் போகிறதென்று வ்யஸநப்படுகை யன்றிக்கே, இவளுக்குவந்த மெலிவு தனக்குவந்ததாயிருக்கையாலும், அவனுக்கு வ்யஸநம் இரட்டித்திருக்குமென்று கருத்து. இவள் தோள்மெலிந்தால் வ்யஸநம் அவனதாயிருக்குமென்கிற இதுக்கு வ்யபதேஸம் - தேவதத்தன் இத்யாதி. "வேய்மருதோளிணை மெலியும்" என்றத்தால் ஸூசிதமாதல், "மெலியும்" என்றதுக்கு ஹார்த்தபாவமாதல் - நீகலக்க இத்யாதி. அப்படி இவள்தோள் விடாயாறு மிடமோவென்ன - மெல்லியல் இத்யாதி. மருது ஸ்வபாவமான தோளோடேயணைந்தென்றபடி. திருநெடுந்தாண்டகம், "கல்லெடுத்து" இத்யாதி. "இணை" என்றதுக்கு ஹார்த்தபாவம் - நீசேர்த்தியழகு இத்யாதி. அவன்வாய்வெருவும் தோளென்பானென்? தன்தோளழகைத் தானே சொல்லுகிறாளானாலோ, என்ன - தன்னழகை இத்யாதி. செவியேற்றாலே - செவியாலே கேட்கையாலே. மெலியும் - ஸிதிலமாகாநின்றன. † "மெலியும்" என்ற ஹேத்வர்த்தத்துக்கு பாவம்-இனிநீவந்தாலும் இத்யாதி.மெலிவும் தனிமையும்

---

† மெலியுமென்றது - காலத்தைக்காட்டாது தன்மையைக் காட்டுவதாகக் கொண்டு ஹேத்வர்த்தமாகக் கூறுகிறாரென்க.

கிடாய். [ஆலோ!] - விஷாதாதிஶய ஸூசகமிருக்கிறபடி. [மேலிவும்என்தனிமையும்] - நாட்டார் மெலிவும் தனிமையும்போலல்லவிறே என்மெலிவும் என்தனிமையும். உன் மெலிவும் உன்தனிமையும்போலல்ல; கூடவிருக்கச்செய்தே வருகிற தனிமையும், பிரியா திருக்கச்செய்தே வருகிற மெலிவுமிறே இது. "பொன்செய்பூண்மென்முலைக்கென்றுமெலி யுமே" என்றும், "மிகமேனிமெலிவெய்தி" என்றும், "தமியமாலோ" என்றும் சொன்ன வற்றி னளவல்லவிறே. அவன் அஸந்நிதியில் பட்டவையிறே அவை; கூடவிருக்கச்செய்தே வருகிறதிறே இது. "தாந்தம்மைக்கொண்டகறல் தகவன்று" என்று தாம் போவார் தம்மை வைத்தன்றோ போகக்கடவது என்னக்கடவ அவளுக்கு, கூடவிருக்கச்செய்தே போனானென்று நினைக்கவுமாமிறே ப்ரேமஸ்வபாவத்தாலே. அவன்தான் போனானாய் வருகிறானல்லன், போகநினைத்தானாய்த் தவிருகிறானல்லன்; அவனாலும் அப்ரதிக்ரியமிறே இது. அவன்தானும், இவள் மெலிவில் மெய்ப்பாட்டைக்கண்டு "நாம்பிரிந்தோமோ?" என்று ப்ரமிக்கும்படியிறே யிருக்கிறது. இருவரும் இருவர்க்கும் ஊமத்தங்காயானால் தெளியவிரகில்லை. இதுதான் அவனுடைய ஸௌபாக்யபல மிருந்தபடியிறே. முன்பு இவள்பிரிவாற்றாமையால் பட்டவையெல்லாம் தான் கண்டறியானே; தோழிமார் மற்றையார்சொல்லக் கேட்டார்வாய் கேட்குமித்தனையிறே; "*வாஹிவாத*" (வாஹிவாத) இத்யாதிவத்; இப்போது, தன் கண்ணாலே காணப்பெற்றானே. இவள்தான், தோழிமாரோடு சொல்லுமத்தை இப்போது அவன்தன்னோடே சொல்லுகிறாளிறே. [யாதும்நோக்கா] - ஒன்றையும் பார்க்கிறதில்லை. தோளின்மெலிவும் தனிமையும் இவையொன்றும் பார்க்கிறனவில்லை. [காமருகுயில்களும்] - காமருதலாவது விருப்பம். இவற்றினுடைய கலவி பிரிவுக்கு உடலாயிராமையாலே மேன்மேலென விருப்பத்தை யுடைத்தாயிருக்குமிறே. கலவி பிரிவோடே வ்யாப்தமென்னும் பயமில்லை இவற்றுக்கு. [குயில்களும்] - நீயேயன்றிக்கே, இவையும் பாதகமாகாநின்றன. நீ பாதிக்க வரவிட்ட பரிகரத்திற்காட்டில் இன்னமும்

தன்னதாயிருக்க, "என்மெலிவும், என்தனிமையும்" என்று விசேஷித்ததுக்குபாவம் - நாட்டார் *இத்யாதி. அதாவது - லோகத்தில் விரஹிணிகளுடைய மெலிவையும் அஸஹாயதையையும் வ்யாவர்த்திக்கிறது. அவ்வளவன்றிக்கே, ஈஶ்வரனில் வ்யாவ்ருத்தி* - உன்மெலிவும் *இத்யாதி. நாட்டாருடையவும் ஈஶ்வரனுடையவும் மெலிவும் தனிமையும் போலல்லாதபடியெப்படியென்ன* - கூட *விருக்க இத்யாதி. "என்மெலிவு மென்தனிமையும்" என்றதுக்கு - நாட்டாரிலும் ஈஶ்வரனிலும் வ்யாவ்ருத்தியாக அருளிச்செய்து, தான் கீழ்பட்ட மெலிவு தனிமைகளளவல்லவென்று மூன்றாம் வ்யாவ்ருத்தி* - பொன்செய்பூண் *இத்யாதி. அதெப்படியென்ன*-அவன் அஸந்நிதியில் *இத்யாதி. கூடவிருக்கச்செய்தே போனானென்று நினைக்கலாமோ? என்ன,*— தாந்தம்மை *இத்யாதி. அதாவது - அங்கு அஸம்பாவிதத்தைச் சொன்னாற்போலே இங்கு இதுவும் கூடுமென்றபடி. இப்படி நினைக்கிறவளுக்கொரு பரிஹாரம்பண்ணவொண்ணாதோ? என்ன* - அவன்தான் *இத்யாதி. 'அப்ரதிக்ரியம்" என்றதின் சரமாவதி* - அவன்தானும் *இத்யாதி. இத்தால்பலிதம்* - இருவரும் *இத்யாதி. இவ்வாற்றாமைதான் அவனுக்குப் பெரும்பேறாயிருக்குமென்கிறாராதல், மேலுக்கு உபோத்காதமாதல்* - இதுதான் *இத்யாதி. இதுதான் என்றது - இந்த வ்யஸநஹேதுவான ப்ராவண்யந்தானென்றபடி. அதெப்படியென்ன* - முன்பு இவள் *இத்யாதி வாக்ய சதுஷ்டயம். அவ்வளவன்றிக்கே, இவனுக்கின்னமுமொரு அலப்யலாபமென்கிறார்* - இவள்தான் *இத்யாதி. அதாவது - காணப்பெற்றமாத்ரமன்றிக்கே வாயாலே சொல்லக்கேட்கவும் பெற்றானென்று இதுவும் ஒரு ஸௌபாக்யமென்றபடி. விவரணம்* - தோளின் மெலிவும் *இத்யாதி. "காமரு" என்றவர்த்தமாந்நிர்த்தேசத்துக்கர்த்தம்* - இவற்றினுடைய *இத்யாதி. விவரணம்* - கலவி *இத்யாதி. அநுக்த ஸமுச்சயமாக சமப்தார்த்தம்* - நீயேயன்றிக்கே *இத்யாதி. ப்ராயாங்யே ஸமுச்சயமாக அர்த்தாந்தரம்*

நீதானே நல்லே. [கூவுமாலோ] - என்னுடைய ஸௌந்தர்யத்தைக்கண்டால் இவற்றுக்கு வாயைப்புதைக்க வேண்டாவோ? பிரிந்து நோவுபடுகிற என்படியைக் கண்டால் "நஞ்சுபோலே நம்முடைய ய்வநி இவளுக்கு பாதகமாம்" என்று தவிரவேண்டாவோ? "கஸ்யநாராத்யதேசித்தம்" (கஸ்யநாராத்யதேசித்தம்) - உருவின வாள் உறையிலே யிடவேண்டும்படிகாணும் இவளுடைய ஸௌந்தர்யம். [கணமயில்] - எதிர்த்தலையையும் தனியேவைத்து நோவுபடுத்தித் தானும் தனியேயிருந்து நோவுபடுவாரைப்போலே யன்றிக்கே, சேர்த்தியையுடையவா யிரா நின்றதாய்த்து இவை. [அவை] - த்ருஷ்டிவிஷம்போலே யிருக்கையாலே முகத்தை மாறவைத்து 'அவை' என்கிறாள்: கண்கொண்டு காணப்போகாமையாலே. ஒருதிரளாக பாதகமாகாநின்றதாய்த்து. [கலந்து] - "இவ்வளவில் நாம் கலக்கை ஸ்த்ரீவஸ்யம்" என்றறிந்து மீளுகிறதில்லே. [ஆலுமாலோ] - கலந்த கலவியால் வந்த ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுகின்றனவென்று ப்ரத்யக்ஷித்துவைத்து, 'அவை' என்னும்போது முகத்தை மாறிச்சொல்லுகிறாளாய் இருந்ததிறே. "மயூரஸ்ய" (மயூரஸ்ய) - இருவராயிருப்பார் எல்லாரையும் பிரித்தானென்றேயிருக்கிறாள். மயிலினுடைய பெண்டாட்டியை ராவணன் கொண்டுபோய்த்திலனோ? "வநே" (வநே)-திருவயோத்யை யிலேவந்து பிரித்தானல்லனே! ஹோமத்துக்கு ஏகாந்தமான காட்டிலேயிறே. "ரக்ஷஸா ந ஹ்ருதாப்ரியா" (ரக்ஷஸாநஹ்ருதாப்ரியா) - நீர்மைகேடனான அப்படுகோலக்காரனால் பிரிக்கப்படாதது இதொன்றுமேயாகாதே! [ஆமருவுஇத்யாதி] - இவ்வளவில் "கதமேஷா பவிஷ்யதி" (கதமேஷாபவிஷ்யதி) என்னவேண்டியிருக்க, அதுசெய்யாதே, அவன் தன்னுடைய ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலே ஒருப்படாநின்றான். உன்னோடே

நீபாயிக்க இத்யாதி. "கூவும்" என்றதுக்குஹார்த்தபாவம் - என்ஸௌந்தர்யத்தை இத்யாதி. உன் ஸௌந்தர்யத்தைக்கண்டால் வாயைப் புதைக்கவேணுமோவென்ன - பிரிந்து இத்யாதி. விவரணமாதல். இவளுக்கு பாதகமானால் தவிரவேணும் என்னுமதுக்கு த்ருஷ்டாந்தம் - கஸ்ய இத்யாதி. "ஸுநயா வித்ருயா வாவா த்ருஷா நவ்யஜ்ஞநஸ்யா । கஸ்யநாராத்யதேசித்தம் ஸ்தா ஸௌரஸௌரவி" இதி கிஷ்கிந்தாகாண்டே ஹநுமத்வசநமதாரீம் † ப்லாவதோ ராமஸ்யவசநம். (௩௩). "உத்ருதாஸெ:" என்றதுக்கு பாவம்- உருவின இத்யாதி. இத்தால் - திருவடிவார்த்தை மாதுர்யத்தாலே சத்ருவையும் ஈடுபடுத்துமாபோலே, இவளுடைய ஸௌந்தர்யத்தைக்கண்டால் சத்ருக்களு மிரங்கவேண்டும்படி யிருக்குமென்றபடி. "கணமயில்" என்றதுக்கு - மிதுநமான மயிலென்று விவக்ஷித்து, இதுக்கு வ்யாவர்த்த்யம் - எதிர்த்தலையையும் இத்யாதி. ப்ரத்யக்ஷத்திலே ஆலுகிற மயிலே "அவை" என்கிறதென்னென்ன - த்ருஷ்டிவிஷம் இத்யாதி. "த்ருஷ்டிவிஷம்போலே" என்றதின்விவரணம் - கண்கொண்டு இத்யாதி. "கணமயில்" என்றதுக்கர்த்தாந்தரம் - ஒருதிரளாக இத்யாதி. அதுக்குத் தன் ஸ்த்ரீயோடே கலக்கவேண்டாவோ? நீ ஈடுபடுவானென்? என்ன - இவ்வளவில் இத்யாதி. முகத்தை மாறவைத்துச் சொல்லுகிறாளென்கிறதென்கொண்டென்ன-கலந்தகலவியால் இத்யாதி. விஸ்லேஷத்தில் மயூரதர்ஸநம் பாதகமானவிடமுண்டோவென்ன - மயூரஸ்ய இத்யாதி. "மயூரஸ்ய வநே நூநம் ரக்ஷஸா ந ஹ்ருதா ப்ரியா । தஸ்மாந்ந்ருத்யதி ரம்யேஷு வநேஷு ஸஹ காந்தயா" இதி கிஷ்கிந்தாகாண்டே. (க-௪½). இதுக்கு பாவம்-இருவராய் இத்யாதி. ஸப்தார்த்தம்-மயில் இத்யாதி. "வநே" என்கிறதுக்கு பாவம்-திருவயோத்யையிலே இத்யாதி. "ரக்ஷஸா" என்றதுக்கு வாஸநை - நீர்மை இத்யாதி. படுகோலக்காரன் - பாதகன். "ஆமருவினம்" இத்யாதிக்கவதாரிகை - இவ்வளவில் இத்யாதி. "மருவு இனம்- ஆ - நிரை" என்றந்வயித்தர்த்தம் - உன்னோடே இத்யாதி. மருவு - மருவியிருக்குமென்ற

---

† "ப்லாவத:" என்ற இடத்தில் ஸத்ருப்ரத்யம் சிந்த்யம்; ப்லாவமாநஸ்ய என்று இருக்கலாம்.

மருவித் திரளாயிருக்கிற ஆநிரையுண்டு - பசுநிரை; அத்தைமேய்க்க. * மேய்ந்தபுல்லும் கடைவாய்வழி சோரவிறே நிற்பது; வேறொன்றின்றிக்கே இவனோட்டைச் சேர்த்தியேயிறே இவற்றுக்கு தாரகம். [இனம்] - அவனுடைய ரக்ஷ்யகோடியிலே யந்வயித்தாலும் தனியராயிருப்பாரை ரக்ஷிக்கநினையான்; திரளாயிருப்பாரையாய்த்து அவன் ரக்ஷிக்க நினைப்பது. [நீபோக்கொருபகல்] - நீபோகிற ஒருபகலென்னுதல்; உன்னுடைய போக்கான ஒரு பகலென்னுதல்; அன்றிக்கே, பசுக்களை மேய்க்கைக்காக நீபோகவிடுகிற பகல் என்னவுமாம். "இதெல்லாம் ஒருபகலளவேயன்றோ?" என்தான்! [ஆயிரம்இத்யாதி] - உன்னைப் போலேயன்று இராதேகொள்ளாய் எங்களையும். இரவொன்றும் பகலொன்றும் உத்தேஶ்யமாயிருப்பார் படியாயிராதுகாண், எல்லாக்காலத்திலுமொன்றே போதுபோக்காக இருப்பார்க்கு. "யதாப்தகோடிப்ரதிம: க்ஷணஸ்தேந விநாபவத்" (யதாப்தகோடி ப்ரதிம: க்ஷணஸ்தேநவிநாபவத்.) 'போனோமல்லோம்: போகநினைத்தோமல்லோம்; நாம் கூடவிருக்கச்செய்தே பிரிந்தோமாகக்கொண்டு நோவுபட்டுப் பதார்த்தங்களுமுடைய ஸ்வபாவமாயிருப்பதே! இதொரு ப்ரேமஸ்வபாவம் இருக்கும்படியென்?" என்று கண்ணாலே குளிரநோக்கினான்:—[தாமரைக்கண்கள்கொண்டீர்தியாலோ] - நீ நோக்காலே நலிவதில் இன்னம் பசுமேய்க்கப்போகையே நன்று. "முன்புத்தைநோக்கு ஸ்ம்ருதிவிஷயமாய்ச் சொல்லுகிறாள்" என்பாருமுண்டு; "ஈர்தி" - என்கையாலே இப்போது நலியாநின்றாய் என்றே சொல்ல அமையுமிறே. இப்படி சொல்லச்செய்தேயும் நோக்கை மாறவைத்திலன். [தகவிலை] - ஜகத்தில் க்ருபையில்லைகிடீர் என்கிறாள்; அவனை விலக்குகிறார் இல்லையாகாதே. நம்மோடு விரோதித்தாரை இன்னாதாகிறதென், இவன் நம்மை நலியாநிற்க? ஒன்றுக்கு அந்நதோஷமுண்டு, ஒன்றுக்கு ஸம்ஸர்க்க தோஷமுண்டு; ஆனபின்பு, இவை நம்மோடே விரோதிக்கை ப்ராப்தமன்றோ? மயில், ஸுப்ரஹ்மண்யனுடைய வாஹநமாகையாலே ஸம்ஸர்க்க தோஷமுண்டு; குயில், †பலிபுக்கினுடைய அந்நத்தை புஜிக்கைபடி.

*மருவுகை - பொருந்துகை. இவனோடே மருவியிருக்குமோவென்ன - மேய்ந்த இத்யாதி. கடைவாய்வழியே நழுவவென்றபடி. பெரியாழ்வார் திருமொழி, மூன்றாம்பத்து, ஆறாந்திருமொழி, ஒன்பதாம்பாட்டு, "திரண்டெழுதழை" இத்யாதி. புல்லு கடைவாயிலேவழிந்தால் அவற்றுக்கு தாரகமேதென்ன - வேறொன்றின்றிக்கே இத்யாதி. "இனம்" என்றதுக்கு பாவம் - அவனுடைய இத்யாதி. 'மேய்க்கைக்காக - பசுக்களை - நீ போகவிடுகிறபகல்' என்றந்வயிப்பது. "போக்கொருபகல்" என்றதுக்கு - போகிறவொருபகலென்னுதல்; போக்குகிற - கழிக்கிற, ஒருபகலென்னுதல்; பசுக்களைப்போகவிடுகிற வொருபகலென்னுதல் என்றர்த்தத்ரயம். விவரணம் - இரவொன்றும் இத்யாதி. ஸ்வாவாந்தரமாதல். ஒருபகலாயிரமூழியாமோவென்ன - யதாப்த: இத்யாதி. "ஸ தயா ஸஹ ஸௌவீர ... | யதாப்தகோடிப்ரதிம: க்ஷணஸ்தேந விநாபவத்" இதி பஞ்சமேம்ஸேத்ருதீயே(ருக). மேலுக்கவதாரிகை-போனோமல்லோம் இத்யாதி. "தகவிலை" என்றதுக்கவதாரிகை - இப்படி இத்யாதி. க்ருபையில்லாமைக்கு நியாமகமேதென்ன - அவனை இத்யாதி. கண்கள்கொண்டீராதபடி விலக்குகிறாரில்லை, க்ருபையுண்டானாலாரேனும் விலக்குவர்களிறே; ஆகையாலே, தகவில்லையென்றபடி. முந்தின "தகவிலை" என்றதுக்கு - லோகத்தில் தகவில்லையென்ற அர்த்தமொழிய, குயில்மயில் தொடக்கமானவற்றுக்குத் தகவில்லையென்றர்த்தாந்தரம் விவக்ஷித்து, "நீகண்ணை - தகவில்லை" என்றதுக்கவதாரிகை - நம்மோடு இத்யாதி. அவற்றுக்குத் தன்னோடுவிரோதிக்க ப்ராப்தியேதென்ன - ஒன்றுக்கு இத்யாதி வாக்யத்ரயம். தோஷத்வயத்தையும் உபபாதிக்கிறார் - மயில் இத்யாதி. வ்யாக்யாதாவினீடுபாடு -

† பலிபுக்கு-காக்கை. குயில் காக்கையாலே வளர்க்கப்படுதலால், அதின் அன்னத்தைப்புஜித்ததாம்.

யாலே அந்நதோஷமுண்டு [நீ - தகவிலை] - உனக்குத் தகவில்லை. "தகவுடையவனே" என்று கூப்பிடுமவள்கிடீர், அவன் ஸந்நிதியிலே இப்போது 'தகவிலை' என்கிறாள். நீ தகவுடையையல்லை. மேலில் "தகவிலை" என்கிறது போலன்றிக்கே, முற்பட்டதுக்குத் தகவிலையென்று பொருளாய், நாட்டில் க்ருபையில்லையென்னவுமாம்; அன்றியே இரண்டும் தகவிலை என்றேயாய், அப்போது இரட்டிப்புக்குக்கருத்து-நீதகவுடையை யல்லையென்னுமிடத்துக்குக்†கோடியெடுக்கிறேன்என்கிறாள், "ஏவமார்த்தாஸஂயோஷித்ஸஂக்ருபாகஸ்யநஜாயதே"(ஏவமார்த்தாஸஂயோஷித்ஸஂக்ருபாகஸ்யநஜாயதே)என்கிறபடியே.

இரண்டாம் பாட்டு.

தகவிலைதகவிலையேநீகண்ணா! தடமுலைபுணர்தோறும்புணர்ச்சிக் காராச், சுகவெள்ளம்விசும்பிறந்துஅறிவைமுழ்க்கச்சூழ்ந்துஅதுகனவென நீங்கியாங்கே, அகவுயிரகமகந்தோறும்உள்புக்குஆவியின்பரமல்லவேட்கை அந்தோ!, மிகமிகஇனிஉன்னைட்‡பிரிவையாமால்வீவநின்பசுநிரைமேய்க் கப்போக்கே.

ஆ.—(தகவிலை.) - ஸம்ஶ்லேஷஜநிதமான நிரவதிக நிர்வ்ருதி செல்லாநிற்கச்செய்தே இப்படிபடுகிறதென்? என்ன,—அந்த நிரதிஶய ஸம்ஶ்லேஷ மெல்லாம் ஸ்வப்நகல்பமாய், உன்பக்கலுள்ள நிரதிஶயஸ்நேஹத்தாலே பசுமேய்க்கப்போக்குக் காரணமாக நீபிரிகிறாயென்று நான்முடியக்கிடாய் புகுகிறதென்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், இங்ஙனே இப்பிராட்டி சொல்லாநிற்கச்செய்தே இவள் தரிக்கைக்காகப் பலகாலும் அணைத்தருள, நீ இங்ஙனே ஸம்ஶ்லேஷித்து நிரதிஶயஸுகம் பிறக்கச்செய்தே அந்த ஸுகமெல்லாம் நீபோகக்கடவையென்னுமதாலே ஸ்வப்நங்கண்டு விழித்தாற்போலே பொய்யாய் நோவுபடாநின்றேனென்கிறாள். பூர்வ வ்ருத்தமான ஸம்ஶ்லேஷந்தன்னையே சொல்லிற்றாகவுமாம். [தடமுலையென்று தொடங்கி] - தடமுலைபுணர்தொறும் புணர்ச்சியின் அளவல்லாத ஸுகவெள்ளம் அபரிச்சேத்யமான ஆகாஶத்தையும் கடந்து என்னுடைய அறிவுகெடும்படி பெருகினது, ஸ்வப்நம்போலேபாய்; போய். [ஆங்கேஎன்றுமேலுக்கு] - அத்தஶையிலே ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களால் இடமுடைத்தான ஹ்ருதயத்திலுள்ளுண்டான அவகாஶங்கள்

தகவுடையவனே இத்யாதி. ஶப்தார்த்தம் - நீ தகவுடையையல்லை என்று. ஶப்தநிர்வாஹம் காட்டுகிறார் - மேலில் இத்யாதி. மேலில் தகவிலையென்கிறதுபோலன்றிக்கே யென்றது - "நீ கண்ணா-தகவிலை" என்றதுபோலே அவனை ஸம்போதித்து மத்யமபுருஷனாகச் சொல்லுகையன்றிக்கே என்றபடி. கோடியெடுக்கிறேன் - அநேகஞ் சொல்லுகிறேனென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, இரண்டும் மத்யமபுருஷன்; முந்தினவர்த்தத்துக்கு,முந்தின தகவிலை-ப்ரதமபுருஷனாய்,, தகவில்லையென்றபடி,இரண்டாம் தகவிலை-மத்யமபுருஷன்."நாட்டில் க்ருபையில்லை"என்றதுக்குஸம்வாதம்-ஏவம் இத்யாதி. "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம । ஏவமார்த்தாஸஂயோஷித்ஸஂக்ருபாகஸ்யநஜாயதே" இதி பஞ்சமேம்ஶே ஏகோநவிம்ஶே. (கக - ஙo).

---

† கொடியெடுக்கிறேனென்று அடையவளைந்தானுக்குப்பாடம்.

‡ பிரிவையாமா என்று பன்னீராயிரப்படிக்குப்பாடம்.

தோறும் உள்ளே சென்றுபுக்கு அபிநிவேஶம் பொறுக்குமளவன்றிக்கே யிராநின்றது; பலகாலும் உன்னைப்பிரிகையுண்டாம்படி நீ பசுநிரை மேய்க்கப் போம் போக்கெல்லாம் வீவனவாகவேணும்.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதஸௌலப்யனான நீ ஒருக்ருபையின்றி யிராநின்றாய்; உன்னுடைய ஸம்ஶ்லேஷரஸந்தானே பரிதாபஹேதுவாகா நின்றது, விஶ்லேஷஹேதுவான பசுமேய்க்கப்போக்குத் தவிரவேணுமென்கிறாள்.

கண்ணா-(பெண்பிறந்தார்க்கு ஸுலபனென்று ப்ரஸித்தனான) கண்ணா! நீ -, தகவிலைதகவிலையே - (அந்தஸௌலப்யத்தைக்கீடான) க்ருபையை ஒருபடியாலுமுடையையல்லையா யிராநின்றாய்; (நீ ஸந்நிஹிதனாயிருந்து ஸம்ஶ்லேஷிக்கிறவளவிலும்), தட - (நீ ஶ்லாகிக்கும்படி) பெரிதான, முலை - முலைகளை, புணர்தொறும் - பரிஷ்வங்கம்பண்ணும் க்ஷணந்தோறும், புணர்ச்சிக்கு-அந்தஸம்ஶ்லேஷத்துக்கு, ஆரா - உள்ளடங்காதே அதிஶயிதமான, சுகவெள்ளம்-ஸுகஸாகரமானது, விசும்புஇறந்து-(அபர்யந்தமான) ஆகாசத்துக்கும் அவ்வருகேபோய், அறிவை - அறிவும், மூழ்க்க-அழுந்தும்படியாக, சூழ்ந்து-, (அப்போதே), அது கனவென - அதுஸ்வப்நகல்பமாக, நீங்கி-கழிந்து, ஆங்கே - அவ்வவஸ்தையிலே, அகவுயிர் - அந்தர்க்கதமான ப்ராணன்நின்ற, அகமகந்தோறும் - புடைகள்தோறும், உள்புக்கு - உள்ளே ப்ரவேசித்து, ஆவியின் - (ஆஶ்ரயமான) ஆத்மாவுக்கு, பரம்அல்ல-பொறுக்கவொண்ணாதபடி, வேட்கை - அபிநிவேஶம்(போந்து வாரா நின்றது); அந்தோ! - ஐயோ! [கூடஇருக்கிற உனக்கு இத்தசை சொல்லிக் காட்ட வேண்டுவதே!] இனி -, (இவ்வளவில் நீ செய்யவேண்டுவது), மிகமிக - மேன்மேலும், உன்னை-, பிரிவையாம்ஆல்-பிரிவானத்தை நாங்களுடையோமாம்படியாக, நின் - உன்னுடைய, பசுநிரைமேய்க்கப்போக்கு - பசுநிரைமேய்க்கப்போக்குக்களானவை, வீவ-தவிர்வனவாகவேணும். வீதல் - ஒழிதல்.

இ.—இரண்டாம்பாட்டில், இவள் தரிக்கைக்காகப் பலகால் அணைத்தருள, இஸ்ஸம்ஶ்லேஷமெல்லாம் நீபோகக்கடவை என்னுமதினாலே ஸ்வப்நங்கண்டு விழித்தாற்போலே பொய்யாய், நோவுபடாநின்றேனென்கிறாள். பூர்வ வ்ருத்தமான ஸம்ஶ்லேஷத்தைச் சொல்லிற்றாகவுமாம்.

[தகவிலைதகவிலை இத்யாதி] - [நீகண்ணா - தகவிலையே] - பெண்பிறந்தார்க்கு ஸ்வம்மான நீ நிர்க்ருபனே யாகாநின்றாய். க்ருஷ்ணனென்றால் பெண்களுக்கேயாயிருக்குமென்னுமிடம் ப்ரஸித்தமிறே. "நாம் பிரிய நினையாதிருக்க, நிர்க்ருபன் என்கிறது தன்ஆற்றாமையாலேயிறே" என்றுஅதுக்குப்பரிஹாரமாகஅணைத்தான். [தடமுலைபுணர்தொறும்]- "அணைக்கிறது பிரிகைக்கிறே" என்று கைநெகிழ்ந்தவிடத்திலே உடம்பு வெளுக்கும்: அதுக்குப் பரிஹாரார்த்தமாகத் திரியவணைக்கும்; ஆக, இப்படி அதிஶங்கையும் பரிஹாரமுமாய்ச் செல்லுமித்தனை யாய்த்து. தடமுலையென்றது - போக்தாவாலுண்டறுக்கவொண்ணாத போக்யதாப்ரகர்ஷம்; "மலராள் தனத்துள்ளான்" இத்யாதி. [புணர்ச்சிக்காராச்சுகவெள்ளம்]-கலவியினளவல்லாத ஸுகஸாகரம்: கலக்குமிடத்தில் இருவர்க்கும் அநுரூபமாயிறே ஸுகமிருப்பது. அவன்ஸ்வரூபம் இயத்தாரஹிதமாயிருக்குமாபோலே யாய்த்து போக்யதாப்ரகர்ஷமும்: அதனிற்பெரிய அவாவிறே இவளது. [விசும்பிறந்து இத்யாதி] - அந்த ஸுகம் அபரிச்சிந்நமான ஆகாஶத்தைக்கடந்து மயர்வறமதிநல மருளப்பெற்ற அறிவையும் மூழ்த்தும்படி பெருகிற்றென்னுதல்; விசும்பென்று - பரம

ப்டம். அறிவாகிறது உபயவிபூதியையும் விளாக்கொலைகொள்ளும் தன்னறிவென்னுதல். [கனவெண நீங்கி] - ஸ்வப்நகல்ப மென்னலாம்படி வற்றிப்போய். இந்த்ரஜாலங்களென்றும் கனவென்றும் அஸ்திரங்களைச் சொல்லக்கடவதிறே. கலந்தபோது ஸுகம் அபரிச்சிந்நமாயிருக்கும், பிரிவைக்கண்டவாறே பெருக்காறு அடிசுடுமாபோலே து:கமும் அபரிச்சிந்நமாயிருக்கும். [ஆங்கே] - அத்தசையிலே. [அகவுயிர்] - ப்ராணஸ்தாநமான ஹ்ருதயம். [அகமகந்தோறும்] - ஹ்ருதயத்திலுள்ளுண்டான அவகாசந்தோறும். முன்புள்ள ஸம்ச்லேஷவிச்லேஷங்களாலே ஹ்ருதயம் புடைபட்டிறேயிருப்பது; அவ்வவகாசங்களினுள்ளே சென்றுபுக்கு, ஆச்ரயத்தினளவன்றிக்கே அக்நிவேசம் பெருகிவாராநின்றது. ஸம்ச்லேஷஸுகம் புக்கவிடமெங்கும் ஆற்றாமையாய்த்து. அணுபரிமாணமான ஆத்மாவால் பொறுக்குமளவன்று. ஆசை. ஸுகமும், து:கமும், ஸ்வரூபேணவஸ்திதியும் என்றுமூன்று; ஸ்வரூபேணவஸ்திதியில் நிற்கிறதில்லை. [அந்தோ] - இது உனக்கு உபதேசிக்கவேண்டுவதே! கலவியில் இருவரும் கூடக் கலந்து பிரிவாலாற்றாமை உனக்கு உபதேசகம்யமாவதே! கலவிக்கு இருவராய், நோவு ஒருதலைக்கேயாவதே! இனிமேற் செய்யவடுப்பதென்னென்ன?—[பசுநிரைமேய்க்கப் போக்கு - வீவ] - போக்கு - போக்குக்களானவை, "பசுவந்தன" என்னுமாபோலே. [வீவ] - தவிர்வனவாகவேணும். அதுவேண்டுகிறதென்னென்ன? [மிகமிகஇனி உன்னைப்பிரிவையாமால்] - போகில் மேன்மேலெனப் பிரிவுண்டாம். பிரிவையென்று - செய்யுட்பாடாய், பிரிவாமென்றபடி. உன்னைப்பிரிகையுண்டாம். [இனி] - முன்புத்தைப் பிரிவுகளுக்கு ஜீவித்திருந்தேனாகிலும் இனி ஜீவித்திருக்கமாட்டேன்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. இவள் தரிக்கைக்காகப் பலகால் அணைத்தருள, இஸ்ஸம்ச்லேஷ ஸுகமெல்லாம் நீ போகக்கடவையென்னும் இதினாலே ஸ்வப்நம் கண்டு விழித்தாற்போலேயாய் நோவுபடாநின்றேனென்கிறாள். பூர்வவ்ருத்தமான ஸம்ச்லேஷத்தையே சொல்லிற்றாகவுமாம்.

[தகவிலை இத்யாதி] - (நீ - கண்ணா - தகவிலையே) - க்ருஷ்ணனென்றால் பெண்களுக்கு ஸ்வம்மாயிருக்குமென்று ப்ரஸித்தமிறே. பெண்களுக்கு ஸ்வம்மான நீ நிர்த்தயனே யாகாநின்றாய். "நம்மை நிர்த்தயனென்பதே! பிரியநினைத்தோமல்லோம்: பிரிந்தோமல்லோம்" என்று இவள் தரிக்கைக்காக நெருக்கி யணைத்தான். [தடமுலை இத்யாதி] - நூறாயிரந்தரம் அணையாநிற்கச்செய்தேயும் "அணைக்கிறது பிரிகைக்கிறே" என்று அணைத்த கை நெகிழ்த்தவிடமெங்கும் இவளுடம்பு வெளுக்கப்புக்கவாறே, அத்தைக் கண்டு இதினுடைய ஸமாதாநார்த்தமாக அணைக்க, இங்ஙனே அதிசங்கையும் ஸமாதாநமுமாய்ச் செல்லுமத்தனை. இதுதான் பூர்வஸம்ச்லேஷத்தைச் சொல்லிற்றாகவுமாம். இப்போதை ஸம்ச்லேஷந்தன்னையே சொல்லுகிறது. [தடமுலை] - தன்னையறியப்புக்கார்

இரண்டாம்பாட்டு.—தகவிலை இத்யாதி. "தடமுலைபுணர்தொறும் புணர்ச்சிக்காரா" என்றுதொடங்கி "வேட்கை" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - இவள் இத்யாதி.

"நீகண்ணா - தகவிலை" என்று - அநுவாதம். 'பெண்களுக்குஸ்வம்மான' இத்யாதிவாக்யாநந்தரம் - க்ருஷ்ணனென்றால் இத்யாதி வாக்யம்அநுஸந்தேயம். மேலுக்கவதாரிகை - நம்மை இத்யாதி. "புணர்தொறும்" என்றதுக்கு பாவம் - நூறாயிரந்தரம் இத்யாதி. இப்போதை ஸம்ச்லேஷந்தன்னையே சொல்லுகிறதென்றது - இப்போதையில் ஸம்ச்லேஷம் சொல்லுகிறதே முக்யமென்றபடி. "தடம்" என்றதுக்குபாவம் - தன்னை இத்யாதி, "நேதிநேதி" என்றபடுவத்தையென்றபடி.

படுவேத்தையாய்த்து இவற்றை அநுபவிக்கப்புக்க தானும்படுவேது; துலைய அநுபவித்து முடிக்கப்போகாதாய்த்து; போக்தாவாலும் உண்டறுக்கவொண்ணாத போக்யதாதிஶயத்தைச் சொன்னபடி. [புணர்ச்சிக்காராச்சுகவெள்ளம்] - ஸம்ஶ்லேஷத்துக்கு அடங்காத ஸுகஸாகரம். கலக்கிற இருவர்க்கும் ஈடாயிறே ஸுகமிருப்பது. அவன் ஸ்வரூபம் இயத்தாரஹிதமாய் இருக்குமாபோலேயாய்த்து போக்யதாப்ரகர்ஷமும்: * அதனிற்பெரிய என் அவாவிறே இவளது. அன்றியே, [புணர்தோறும் புணர்ச்சிக்காராச்சுகவெள்ளம்]- அதாவது - ஸம்ஶ்லேஷம் காதாசித்கமாய், ஸுகம் நிரதிஶயமாயிருக்கை. † "நிலத்தினும் பெரிதேவானிலும் உயர்ந்தன்று, நீரினுமாரளவன்றே சாரல், கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேனிழைக்கும் நாடனோடுநட்பே" என்னக்கடவதிறே. குறிஞ்சிப்பூக் கொண்டு, பெருந்தேனிழைக்கை. இஸ்ஸுகந்தான் எவ்வளவுபோருமென்னில்? [விசும்பு இத்யாதி] - ஸர்வபதார்த்தங்களையும் தன்னுள்ளே வைத்துக்கொண்டிருக்குமதிறே ஆகாஶமாகிறது; அதுதன்னைக் குளப்படியாக்கி, * மயர்வறமதிநலமருளப்பெற்ற அறிவையும் விளாக்கொலைகொள்ளாநின்றதாய்த்து. அன்றிக்கே, விசும்பென்று-பரமபதமாய்,—"தாமரைக் கண்ணனுலகு" என்னக்கடவதிறே ஸுகாதிஶயத்துக்கு. ஆக,—த்ரிபாத்விபூதியையும் விஞ்சி, உபயவிபூதியையும் தன்னுள்ளேயாம்படியிருக்கிற அறிவையும் மேலிடும்

ஏதத்விவரணம் - துலைய இத்யாதி. இத்தால் பலிதம் - போக்தாவால் இத்யாதி. உண்டறுக்க - அநுபவித்துத்தலைக்கட்ட. புணர்தோறும் - ஸம்ஶ்லேஷிக்குந்தோறும். அதுக்கடிஎது? என்ன - கலக்கிற இத்யாதி. இருவர்படியும் எப்படியிருக்குமென்ன - அவன்ஸ்வரூபம் இத்யாதி வாக்யத்வயம். அவன் போக்யதா ப்ரகர்ஷமும் என்றபடி. "புணர்ச்சி" என்று - அல்பஸம்ஶ்லேஷமாய், ஆராச்சுகவெள்ளம் - அதுக்கடங்காத நிரதிஶயஸுகம் என்றருளிச்செய்து, "புணர்ச்சி" என்று - காதாசித்க ஸம்ஶ்லேஷமாய், "ஆராச்சுகவெள்ளம்" என்று - அதுக்கடங்காத நிரவதிகஸுகமென்று யோஜநாந்தரம் - அன்றியே புணர்தோறும் இத்யாதி. அல்பஸம்ஶ்லேஷத்தாலுண்டான அநவதிகஸுகமென்னுதல், காதாசித்க ஸம்ஶ்லேஷத்தாலுண்டான அநவதிகஸுகமென்னுதலென்று அர்த்தத்வயம். ஸம்ஶ்லேஷம் அல்பமாய் ஸுகம் அநவதிகமாயிருக்குமென்றும், ஸம்ஶ்லேஷம் அல்பகாலமாய் அத்தாலே ஸுகம் அநவதிகமாயிருக்குமென்றும் இரண்டுக்கும்பேதம். "அல்பஸம்ஶ்லேஷத்தாலே அநவதிகஸுகமுண்டு" என்கைக்கு ஸம்வாதம் - நிலத்தினும் இத்யாதி. இச்செய்யுளிலே அல்பஸம்ஶ்லேஷத்தாலே அதிகஸுகமுண்டாமென்று எங்கேசொல்லிற்றென்ன - குறிஞ்சிப்பூ இத்யாதி. தாழ்வரையில் கறுத்தகோலையுடைய குறிஞ்சிப்பூவின் ரஸத்தைக்கொண்டு மிக்க தேனை ஸம்பாதிக்கிற நாட்டையுடையவனோட்டை ஸ்நேஹம், பூமியைப்பற்றவும் பெரிதாய் ஆகாஶத்தைப்பற்றவுமுயர்ந்து நீரைப்பற்றவும்நிறைந்திருக்குமன்றோ? என்றபடி. உயர்ந்தன்று என்றது உயர்ந்ததென்றபடி. இம்மூன்றும் மற்றையிரண்டு பூதங்களுக்கும் உபலக்ஷணமாய், பஞ்சபூதங்களைப்பற்றவும் பெரியதென்றபடி. இத்தால் - அல்பரஸத்தைக்கொண்டு அதிகமானதேனை ஸம்பாதிக்கிறதேசமாகையாலே அத்தேசத்தையுடையவனுடைய அல்பஸம்ஶ்லேஷம் அதிகஸுகாவஹமென்றுகருத்து. "விசும்பிறந்து" என்றதுக்கர்த்தாந்தரம் - அன்றிக்கே இத்யாதி. மோக்ஷஸுகத்தைப்பற்றவும் ஸம்ஶ்லேஷஸுகம் விஞ்சியிருக்குமோவென்ன - தாமரை இத்யாதி. அதாவது - அத்யந்த விஷயாஸக்தனாயிருப்பானொருவனை மீட்கைக்காக "காமபுருஷார்த்தம் அல்பாஸ்த்திரத்வாதிதோஷதுஷ்டம், மோக்ஷஸுகமேகாண் அநந்தஸ்த்திரபலம்" என்ன, விஷயாஸக்தன் சொல்லுகிறான்- "தாம்வீழ்வார்மென்றோட்டுயிலினினிதுகொல், தாமரைக்கண்ணனுலகு" என்று: தாமரைக்கண்ணனுலகுண்டு - மோக்ஷஸுகம்; அது, தாங்களேவிழுந்துஆசைப்படும் ஸ்த்ரீகளுடைய ம்ருதுவானதோளிலே யுறங்குகிறதிற்காட்டில் இனிதுகொல்? அன்றேயென்றபடி. "தாமரைக்கண்ணனுலகு - இனிதுகொல்" என்றந்வயம். த்வதீயார்த்தத்தை விவக்ஷித்து, "விசும்பிறந்துஅறிவைமூழ்க்க" என்றதின் அர்த்தத்தைநிருமிக்கிறார்- ஆகஇத்யாதி. மூழ்க்கச்சூழ்ந்தது - மூடும்படிவிஞ்சியிருக்கிற அந்தச்சுகவெள்ளமென்றபடி. "அதனிற்பெரிய

† குறுந்தொகை - ௩.

படியாய்த் திருக்கிறது. [அது கனவெனநீங்கி] - அது ஸ்வப்நகல்ப மென்னலாம்படி கழிந்த தாய்த்து. அதின்பரப்பைக்கண்டவாறே அதுக்கு ஓர்அவதியில்லை யென்னும்படியாய்த்திருந் தது; அதுவும் வற்றினபடியைக் கண்டவாறே, இது பெருக்காறுவற்றி அடிசுட்டாற்போ லேயாய்த்து. அப்படி கலந்தவனிறே பிரிந்தானும். கனவென்றும் இந்த்ரஜாலமென்றும் - அபர்யாப்தமான கலவியைச் சொல்லக்கடவது; இதுவும் அநந்தரம் காணவொண்ணாத படியாயிருக்குமே. [ஆங்கே] - அத்தஶையிலே. [அகவுயிர்] - ப்ராணஸ்தாநமான ஹ்ரு தயம். [அகமகந்தோறும்] - ஹ்ருதயத்திலுண்டான அவகாஶந்தோறும். முன்புள்ள ஸம்ஶ் லேஷவிஶ்லேஷங்களாலே ஹ்ருதயம் புடைபட்டிறேயிருப்பது. ஸம்ஶ்லேஷவிஶ்லேஷம் அவகாஶத்தையுண்டாக்கும்; அந்த அவகாஶமுள்ளவிடமெங்கும் ஆற்றாமை புகுந்தது. [ஆவியின்பரமல்லவேட்கை] - அணுபரிமாணமான ஆத்மவஸ்துவின் அளவல்ல அபிநி வேஶம்; “என்றனளவன்றால் யானுடையவன்பு” என்றாரே அவரும்; ஆஶ்ரயத்தின் அள வல்லவாய்த்து அபிநிவேஶம். ஸுகது:க்கங்களும், அவையொழிந்த ஸ்வரூபேணா வஸ்திதியும் என்று மூன்றுஉண்டிறே ; அதில் ஸ்வரூபேணாவஸ்திதியிலேதான் நிற்கப்பெற் றதோ! [அந்தோ!] - இதுதனக்கு உபதேசங்கொண்டறிய வேண்டுவதே! கலக்கிறபோது இருவரும்வேண்டிப் பிரிவில்வந்த ஆற்றாமைக்கு நான் சொல்லவேண்டும்படியாவதே !. கலவிக்கு இருவராய் ஆற்றாமை யொருதலையிலேயாவதே!. ஆனால் செய்யவேண்டுவ தென்னென்னில்?—[நின்பசுநிரைமேய்க்கப்போக்கு - வீவ]. அதுதான் தவிரவேண்டுகிறது என்னென்னில், - [மிகமிகவினியுன்னைப் பிரிவையாமால்] – மேன்மேலெனஉன்னைப்பிரி வாம். [பிரிவை] - என்கிறவிது - செய்யுட்பாடாய், பிரிவுண்டாம்படி வருகிற பசுநிரை

வென்னவா” என்னக்கடவதிறே. ஆராச்சுகவெள்ளமானது கனவென நீங்கினபடியென்னென்ன - அதின்பரப்பை இத்யாதிவாக்யத்வயம்.அதின்பரப்பை-ஸுகத்தின் வைபுல்யத்தை. அதுக்குஹேது வேதென்ன - அப்படிகலந்தவன் இத்யாதி. அதாவது - அவ்வஸ்துவின் வைலக்ஷண்யம் பிரிவிலும் அப்படிபண்ணவற்றென்றபடி. அப்படியென்றது - ஆராச்சுகவெள்ளம் உண்டாம்படியென்றபடி. “கனவு” என்று - ஸ்வப்நம்; அன்றிக்கே, அபர்யாப்தமான கலவியாகவுமாமென்கிறார் - கனவென் றும் இத்யாதி. “கனவு” என்று - அபர்யாப்தமான கலவியைச்சொல்லுமோவென்ன - இதுவும் இத்யாதி. இதுவும் - கலவியுமென்றபடி. உயிருடையஅகம் - ப்ராணஸ்தாநமான மநஸ்ஸு. அக மகந்தோறும் - மநஸ்ஸினுடைய அவகாசந்தோறுமென்றபடி. அணுவானமநஸ்ஸுக்கு அவகாஶமுண் டோவென்ன-முன்புள்ள இத்யாதி. உக்தத்தை யநுவதியாநின்றுகொண்டு, “உள்புக்குஆவியின் பர மல்லவேட்கை” என்றதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார் - ஸம்ஶ்லேஷம் இத்யாதி வாக்யத்வயத் தாலே. “ஆத்மவஸ்துவினளவல்ல அபிநிவேஶம்” என்றதுக்கு ப்ரமாணம் - என்றனளவன்றால் இத்யாதி. இரண்டாந்திருவந்தாதி, ‘மாலேநெடியோனே” இத்யாதி. இதுக்கர்த்தம் - ஆஶ்ரயத்தின் இத்யாதி. ‘அந்தோ’ என்ற பதோபாதாநாநந்தரம், ஸுகது:கங்களும் இத்யாதிவாக்யம் அநுஸந்தேயப் பது. “அந்தோ!” என்றதுக்குஆவம் - ஸுகது:கங்களும்இத்யாதி. ஸ்வரூபேணாவஸ்திதியாவது- ஸுகது:கங்களிரண்டுமின்றிக்கே யிருக்கிற அவஸ்த்தை. “அந்தோ!” என்றதுக்குஆவாந்தரம் - இதுதனக்கு இத்யாதி. விவரணம் - கலக்கிறபோது இத்யாதி. ஏதத்விவரணம் - கலவிக்கு இத் யாதி. மிகமிக - மேன்மேல். “உன்னைப்பிரிவையாம் -” உன்னுடைய விஶ்லேஷமுண்டாம். உத்த ரோத்தரமுன்னுடைய விஶ்லேஷவ்யஸநம்வருமென்றபடி. “பிரிவையாம்” என்றிருக்க, பிரிவாம் என்பானென்னென்ன - பிரிவையென்கிற இத்யாதி. செய்யுட்பாடு - அவ்யயம். “பாட்டென்ன வும் செய்யுளெனப்படும்” என்றிருக்கையாலே, செய்யுளென்று - பாட்டாய், பாடென்று - சேருகை யாய், சந்தஸ்ஸுசேரும்படி யென்றபடி. ஆக, செய்யுட்பாடாயென்றது - சந்த:பூரணார்த்தமாயென்ற படி. ஆல் - அசை. “போக்கு” என்று ஏகவசநமாய், “வீவ” என்று பஹுவசநமாவானென்

மேய்க்கப்போக்கு வீவ. ''பசுவந்தன'' என்னுமாபோலே போக்குக்கள் தவிரப்படுவன வாக. [இனி - வீவ] - இதுக்கு முன்புள்ளகாலமெல்லாம் பிரிந்துபோந்தாயேயாகிலும், இனிமேலுள்ள காலமாகிலும் தவிரவேணும். (உ)

மூன்றாம் பாட்டு.

வீவன்நின்பசுநிரைமேய்க்கப்போக்கு வெவ்வுயிர்கொண்டெனதாவிவேமால்,யாவருந்துணையில்லையானிருந்துஉன்னஞ்சனமேனியையாட்டங்காணேன், போவதன்றுஒருபகல்நீயகன்றால்போருகயற்கண்ணிணைநீரும்நில்லா, சாவதுஇவ்வாய்க்குலத்தாய்ச்சியோமாய்ப்பிறந்தஇத்தொழுத்தையோம்தனிமைதானே.

ஆ.—(வீவனின்.) - உன் பசுமேய்க்கப் போக்குக் காரணமாக நான் முடிவன்; விரஹாக்நியாலே என்னாத்மா தஹ்யமாநமாகாநின்றது: பின்னையொரு துணையுமில்லை; உன்வரவு பார்த்துக்கொண்டு நான் தனியேயிருப்பன்; என் துணையானவுன்னை வரவுங்காணேன்; நீ யகன்றால் இப்பகலெங்கும் போவதுஞ்செய்யாது; இக்கண்ணநீரும் நில்லாது; இந்த ஒருதலைமாத்திரமான ஸ்நேஹமானது சாலப்பொல்லாதாகாதே! என்கிறாள்.

ஒ.—மூன்றாம்பாட்டில், நீஉபேக்ஷித்திருக்க இடைப்பெண்களான நாங்களே ஸ்நேஹித்திருக்கிற இவ்வொருதலைக்காமம் நஶிக்கவேணு மென்கிறாள்.

[வெவ்வுயிர்கொண்டு என்று தொடங்கி] - வெவ்விதாக நெடுமூச்செறிந்து என்னுடைய ஹ்ருதயம் தஹ்யமாகாநின்றது; நீ போனவாறே ஸர்வமும் ப்ரதிகூலமாம்; இவ்வவஸாதத்தோடே நான் ஜீவித்திருப்பதுஞ்செய்து ஶ்ரமஹரமான வடிவையுடைய உன்னுடைய ஸஞ்சாரமும் காணேன்; நீ போனால் பகல் குறைந்துகாட்டாது; வ்யஸநம் பொறுக்கமாட்டாமையாலே அலமந்துபோருகிற கயல்போலேயிருக்கிற கண்களும் நீர் மாறுகிறனவில்லை. [சாவது இவ்வாய்க்குலத்து என்று தொடங்கின மேலுக்கு] - எங்களுடைய விஶ்லேஷம் நஶிப்பதென்றுமாம். முடிந்து பிழைக்கவேணுமென்று கருத்து. எங்களுக்கு விநாஶமாவது தனிமை யென்றுமாம்.

ப.—அநந்தரம், தர்ஶநீயமான வடிவழகையுடைய உன்னைக்காணாதே க்லேஶிக்கிற எங்களுடைய தனிமையானது முடிவாகவேணுமென்கிறாள்.

நின்பசுநிரைமேய்க்கப்போக்கு-(நீ ஸ்வதர்மாநுஷ்டாநமாக நினைத்துப்போருகிற) உன் பசுநிரைமேய்க்கப்போக்கிலே, வீவன் - நான்முடிந்துவிடுவன்; வெவ்வுயிர்கொண்டு - (விரஹவ்யஸையாலே) வெவ்விதாகமூச்சுவிட்டு, எனது ஆவி - என்னுடைய ஆத்மாவானது, வேம் - அத்தாலேபரிதபியாநின்றது; (அவ்வவஸ்தையில்), துணை - துணையாவார், யாவருமில்லை - ஒருவருமில்லை: (அவ்வளவிலும் ஆஶாபந்தத்தாலே), யான் - நான், இருந்து - முடியாதிருந்து, உன் அஞ்சனமேனியை - அஞ்சநம்போலே

னென்ன - பசுவந்தன் இத்யாதி. *அதாவது - பசுக்களென்று அர்த்தாத்ஸித்திக்குமாபோலே,* போக்குக்கள்என்றும் *ஸித்திக்குமென்றபடி.* '' இனி '' என்றதுக்கர்த்தம் - இதுக்குமுன்பு இத்யாதி. (உ)

ர்ஶநீயமானஉன்வடிவை, ஆட்டம் - நடையாட்டம், காணேன்-; நீ அகன்றால் - நீ போனால், ஒருபகல் - அந்தவொருபகல்தான், போவதுஅன்று-போகாதேநில்லாநிற்கும்: (ஆற்றாமையாலே அலமந்து), பொரு - (தன்னில்தான்)பொருகிற, கயல்-கயல்போன்ற, கண்ணிணை - நீ கொண்டாடும்கண்ணிரண்டும், நீரும் நில்லா-நீர்தணித்தாலும் நிற்கிறன வில்லை; இவ்வாய்க்குலத்து - (நீ பிறந்த) இடைக்குலத்திலே, ஆய்ச்சியோமாய்ப்பிறந்த-இடையராய்ப்பிறவாதே இடைச்சிகளாய்ப்பிறந்த, தொழுத்தையோம் - தண்ணியோமான எங்களுடைய, இத்தனிமைதானே - இத்தனியிருப்புச்செய்தது, சாவது - போவதாகவேணும். தனிமை — ஸ்வபாவமாகையாலே, அதன்முடிவு தங்கள்முடிவென்று கருத்து. தனிமைதானே எங்களுக்குச் சாவாவதென்றுமாம்.

இ.—மூன்றாம்பாட்டில், நீ உபேக்ஷித்திருக்க நாங்கள் ஸ்நேஹித்திருக்கிற இவ்வொருதலைக்காமம் நஶிக்கவேணுமென்கிறாள்.

[வீவன் இத்யாதி]-"பசுமேய்க்கை ஸ்வதர்மமாகையாலே அதுக்காகப் போக்கைத் தவிரலாமோ?" என்ன; உன்போக்கிலே நான்முடிவன்; ஸ்த்ரீவதம் ஃபலிக்கவரும் தர்மம் தர்மமல்ல காண்! இது உனக்கு முடிவாகிறபடி எங்ஙனே? என்ன,—[வெவ்வுயிர் இத்யாதி] - உன்போக்கை நினைத்து வெவ்விதாக நெடுமூச்செறிந்து, அத்தாலே ஹ்ருதயம் உலர்ந்து, விரஹாக்நியாலே வேவாநின்றது. நான் போனால வ்ருத்தகீர்த்தநத்தாலே தரித்தாலோவென்ன?—[யாவரும் துணையில்லை] - நீபோனால் உதவக்கடவ தோழியரும் துணையல்லர்: குயில்முதலான பதார்த்தங்களும் ப்ரதிகூலமாம். துணையான உன்ஸந்நிதியில் எல்லாரும் துணையாம், நீபோனாலொரு துணையில்லை. [யான் இருந்து]- வ்யவஸாயத்திலும் நூறே பிராயமாயிருப்பன். விலக்ஷணவிஷயமாகையாலே முடியவுமொட்டாது, தரிக்கவுமொட்டாது. நசையாலே முடியவுமொண்ணாது, ஆற்றாமை தரிக்கவுமொட்டாது. [உன் அஞ்சனமேனியை யாட்டம்காணேன்] - இருந்தால் ஜீவிக்கும் ஜீவநமும் பெறேன். ஶ்ரமஹரமான வடிவைக்கொண்டு என்முன்னே ஸஞ்சரிக்கக் காணேன். உன்னைக் கண்ணாடிப்புறத்திலும் கண்டறியாயோ? இவ்வடிவைப் பிரிந்தார் பிழையாரென்றிருக்க வேண்டாவோ? காமினியாகையாலே ஸ்வரூபத்திலும் குணத்திலும்இழியாளிறே: வடிவையிறே ஆசைப்படுவது. [ஆட்டம்] - நடையாட்டம். இதெல்லாம் ஒரு பகலளவுக்கேயென்ன - [நீயகன்றால் - போவதன்று ஒருபகல்] - நீ பிரிகையாலே ஒரு பகலாவது போகிறதில்லை. முப்பது நாழிகை சென்றால் ஒரு க்ஷணமும் குறைந்து காட்டுகிறதில்லை. உனக்குப்போலே யென்றிருந்தாயோ எனக்கும்? காலத்தினுடைய குறைவும் நிறைவும் விஷயாதீநமாயிறே யிருப்பது. கலவியில் கல்பம் க்ஷணமாய், வ்யதிரேகத்தில் ஒருக்ஷணம் கல்பமாயிறே யிருப்பது. [பொருகயல் இத்யாதி] - வ்யஸநத்தாலே அலமந்து பொருகிற கயல்போலேயிருக்கிற கண்களும் நீர்மாறுகிறதில்லை. கண்ணீர் என்றால் தகையப்போகிறதில்லை. [நீரும்நில்லா] - உன்னைத்தகையிலும் என்றால் அத்தைத் தகையப்போகிறதில்லை. பின்னைச் செய்யவடுப்பதென்? என்ன,—[சாவது இத்யாதி] - இவ்வாய்க்குலத்திலே இடைச்சியோமாய்ப்பிறந்த இத்தண்ணியோமான எங்கள் தனிமை. [சாவது] - நஶிப்பது. அதாவது - முடிந்து பிழைக்கவேணு மென்கை. [தனிமைதானே - சாவது] - எங்களுக்குத் தனிமைதானேயிறே மரணமாவது? தனிமையென்றும் விநாஶமென்றுமிரண்டில்லை யென்றுமாம். நாங்கள் ஜீவிக்கவுமாம், தவிரவுமாம்: இந்த ஒருதலைக்காமம் நஶிக்கவேணும்.

௩௫.—மூன்றாம்பாட்டு. நீ உபேக்ஷித்திருக்க நாங்கள் ஸ்நேஹித்திருக்கிற ஒருதலைக்காமம் நசிக்கவேணுமென்கிறாள்.

[வீவன் இத்யாதி] - உன் பசுநிரைமேய்க்கப் போக்குநிமித்தமாக, நான்வீவன்-நான்முடிவன். "அதுஎனக்கு தர்மமன்றோ?" என்றிராதே, உனக்கு ஸ்த்ரீவதமாய்ப்பலிக்கக்கிடாய்ப் புகுகிறது. இப்போது முடியும்படி வந்ததென்னென்னில், - [வெவ்வுயிர் இத்யாதி] - என்னைப்பார்க்கமாட்டாயோ? உன்னுடைய போக்குநிமித்தமாக நெடுமூச்செறிந்து அதுவேஹேதுவாக உலர்ந்த என்னுடைய ஹ்ருதயமானது விரஹாக்நிகொளுந்தி எரியாநின்றது; இதிலே நீரைச்சொரியவல்லையே யென்கிறாள். [எனதாவி] - உன்னைப் போலேயென்றிராதே கொள்ளாய் அல்லாதாரையும் [யாவருந்துணையில்லை] - துணையான நீதானேபோனாய்: நீபோனால் துணையான தோழிமார்தானேயில்லை: குயில் மயில் தொடக்கமானவை தானே ஊர்ப்பகையாய்த்து. [யானிருந்து] - நீபோனால் படுவுற்றைத்தான் படப்பெற்றேனோ? எல்லாம் பட்டும் நூறேபிராயமாயிருந்தது; இன்னம் ஒருகால் காணலாமென்னும் நசைமுடியவொட்டாதிறே. பிரிந்த விஷயந்தான் முடியவுமொட்டாது, தரித்திருக்கவுமொட்டாது; அர்ஜுநன் பின்பிருந்து எளிவரவுபட்டாற்போலே. [உன்னஞ்சன மேனியை யாட்டங்காணேன்] - இருந்தார் ஜீவிக்கும் ஜீவநத்தைத்தான் ஜீவிக்கப்பெற்றேனோ? * ஏழையராவி தேட்டமாயிருக்கிறதுகாணும் இவளுக்கு இப்போது. [உன்] - உன்னை நீதான் கண்ணாடிப்புறத்திலே கண்டறிதியே. கண்டாயாகில் "நம்மைப்பிரிந்தவர்கள்பிழையார்கள்" என்றிருக்கவேண்டாவோ? [மேனியை] – ஸ்வரூபத்திலாதல்

மூன்றாம்பாட்டு.—வீவன் இத்யாதி. "இவ்வாய்க்குலத்தாய்ச்சியோமாய்ப் பிறந்த இத்தொழுத்தையோம் தனிமைதானே - சாவது" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - நீ உபேக்ஷித்திருக்க இத்யாதி.

*"முடிவன்" என்றால் ஜாத்யுசிதபூர்மத்தை விடப்போமோவென்ன - அதுஎனக்கு இத்யாதி. வெவ்வுயிர்கொண்டு - நெடுமூச்செறிந்துகொண்டு. வெவ்வுயிர் - பெருமூச்சு. தாத்பர்யம் - என்னைப்பார்க்க இத்யாதி. "ஆவி வேம்" என்றதுக்கு ஹார்த்தபாவமாதல், "ஆவ்" என்றதுக்கு பாவமாதல் - இதிலே இத்யாதி. "எனது" என்றதுக்கு பாவம் - உன்னைப்போலே இத்யாதி. நான் போனால் வ்ருத்தகீர்த்தநத்தாலே தரித்தாலோவென்ன - யாவரும்துணையில்லை இத்யாதி. இதுக்கர்த்தம் - துணையான இத்யாதி. ஊர்ப்பகை - ஊரிலுள்ளபேரெல்லாம் பகை. "யானிருந்து" என்றதுக்கு பாவம் - நீபோனால் இத்யாதிவாக்யத்வயம். படுவுற்றைத்தான் படுகையாவது - உத்தரக்ஷணத்திலே முடிகை. ஆனால் முடியவொண்ணாதோவென்ன - இன்னமொருகால் இத்யாதி. ஆனால் தரித்திருக்கிறதுக்கென்னென்ன-பிரிந்த இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - அர்ஜுநன் இத்யாதி. அவன்போனாகை நிஸ்சயித்துச் சொல்லுகிற ப்ரகரணமாகையாலே, "அஞ்சனமேனியையாட்டங்காணேன்" என்றதுக்கு - உருவுவெளிப்பாடாக்கி, அந்தவுருவுவெளிப்பாடுதான் தேட்டமாயிருக்கிறதென்கிறார் - இருந்தார் இத்யாதி. விஸ்லேஷத்தில் உருவுவெளிப்பாடு காமிநிகளுக்கு உஜ்ஜீவநமாயன்றோ விருப்பது? அதுவுமில்லையென்றபடி. ஆனால் * ஏழையராவியிலே உருவுவெளிப்பாடும் பாதகமாய்த்தில்லையே? என்ன - ஏழையராவி இத்யாதி. அபவா, "அஞ்சனமேனி" என்றதுக்கு பாவம் - இருந்தார் இத்யாதி. இருந்தார் - நூறேபிராயமாக விருந்தார். ஜீவிக்கும்ஜீவநம் - அநுபவிக்கும்அநுபவம். "ஆட்டம்காணேன்" என்றதுக்கு பாவம் - ஏழையராவி இத்யாதி என்றிங்ஙனே யோஜிக்கவுமாம். நம் வடிவு உனக்குஅநுபவிக்கவேணுமாகில், மெள்ளச்செய்கிறோமென்றாறியிருக்க வொண்ணாதோவென்ன-உன்னை இத்யாதி. கண்டால் நாம் செய்யுமதேதென்ன-கண்டாயாகில் இத்யாதி. ஸ்வரூபாதிகள்கிடக்கத் திருமேனியைச் சொல்லுவானென்னென்ன - ஸ்வரூபத்திலாதல்*

குணத்திலாதல் இழியுமவளன்றே: காமிநி உடம்பை ஆசைப்படுமவளிறே! [ஆட்டங் காணேன்]-அவ்வடிவோடே என்முன்னே ஸஞ்சரிக்கக் காணப் பெறுகிறிலேன். "இதெல் லாம் ஒருபகலைக்கே" என்றான் - [போவதன்று இத்யாதி] - உனக்குப்போலே என்றிராதே கொள்ளாய் எங்களுக்கும். நீ பேரநின்றால், நாழிகைமுப்பது சென்றாலும் மலையாளர் வளைப் புப்போலே ஓரடிபேராதாய்த்து; அது பகலின் ஸ்வபாவமல்ல :—[நீயகன்றால்] - உன் ஸ்வபாவத்தாலே. பகலின் ஸ்வபாவமாகில் கூடவிருந்தபோதும் போகாதொழியவேணு மிறே. கூடவிருந்தால் இரவுகாணவொண்ணாதாற்போலே யாய்த்து, நீயகன்றால் பகல் போகாதபடி. அவன்கூடவிருந்தால் இரவுகாணவொண்ணாதே; * நாரணனைக்கண்டேன் - பகற்கண்டேனிறே. "போவதன்றொருபகல்" என்று இதுதானும் சொல்லமாட்டாதே காணும் அவனிருக்கிறது; "கலவி செல்லாநிற்கச்செய்தே பிரிவைநினைக்கையாவதேன்?" என்றிறே அவனிருப்பது; "பிரியேன்" என்னவல்லன் என்றாளே பண்டே. [பொருகயல் இத்யாதி] - உன்போக்கை நினைத்துப் பாய்கிற கண்ணநீர் என்னால் தகையப்போகிற தில்லை. [நீரும்நில்லா] - உன்னைத் தகையிலும் நீரைத் தகையப் போகிறதில்லை. பொரு கிற கயல்போலேயாய்த்துப் பிரிவைநினைத்துத் தடுமாறுகிறபடி. அதுக்குச் செய்யவேண்டுவ தென் ? என்ன — [சாவது இத்யாதி] - இவ்விடைக்குலத்தில் இடைச்சிகளாய்ப் பிறந்த தண்ணியோமான எங்களுடைய தனிமை சாவது. நீபோகிலும் போகிறாய், இருக்கிலும் இருக்கிறாய்: இத்தனிமை நசிப்பது. "இவனுக்கு நான் நூறுபிள்ளை பெறவேணும்" என்ற ஸாவித்ரியைப்போலே சொல்லுகிறாள். அன்றிக்கே, [தனிமைதானே-சாவது]-எங்க ளுக்குத் தனிமையென்றும் விநாஶமென்றும் இரண்டில்லைகாண்! தனிமைதானே விநாஶ மென்னவுமாம். "நின்னலாலிலேன்" என்னுமவரிறே ; "இறப்பதற்கேயெண்ணாது" என்

இத்யாதி. உக்தார்த்தத்துக்கு உபபத்தி - காமிநி இத்யாதி. "இருந்தார் ஜீவிக்கும்" இத்யாதியி தின் அர்த்தாநுகுணமாக "ஆட்டம்காணேன்" என்றதுக்கர்த்தம் - அவ்வடிவோடே இத்யாதி. ஆட் டம் - நடையாட்டம்; ஸஞ்சாரம். "நீயகன்றால் - ஒருபகல் - போவதன்று" என்றதுக்கு பாவம் - உனக்குப்போலே இத்யாதி. *விவரணம் - நீ பேர இத்யாதி. மலையாளர்வளைப்பாவது - மலையாளி கள் ஒருவன்கையிலே யொன்றைவாங்க நினைத்தால் வாங்கியல்லது போகார்கள்: வளைப்புக்கிடப்பார் கள்; அதுபோலே என்றபடி. "நீயகன்றால்" என்றதுக்கவதாரிகை-அது இத்யாதி. பகலின் ஸ்வபா வந்தானனறோவென்ன - பகலின் இத்யாதி. அதாவது - பகலின் ஸ்வபாவமேயானால், அவ னோடே கூடியிருந்தபோது ஒருக்ஷணமாய்ப்போகிறதிறே, அப்போதும் போகாதொழிய வேணுமென்ற படி. அவன் ஸ்வபாவத்தாலே போமோவென்ன ; வ்யதிரேக த்ருஷ்டாந்தமுகேந உபபாதநம்-கூட விருந்தால் இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - பகற்கண்டேன் இத்யாதி. இவளைப்போலே அவனும் "நீயகன்றால் - போவதன்றொருபகல்" என்னவேண்டாவோவென்ன - போவதன்று இத்யாதி. மாட்டாமைக்குஹேதுவேதென்ன - கலவி இத்யாதி. ஹேத்வந்தரம்-பிரியேன் இத்யாதி. அதாவது- சொன்னாலும் விஶ்வஸியாளென்றபடி. "பேதை நின்னைப்பிரியேனினியென்றகன்றான்" என்று திருமொழி. " நீரும்" என்ற சமுச்சயார்த்தம் - உன்னை இத்யாதி. "பொரு" என்றதுக்கு பாவம் . பொருகிற இத்யாதி. பொருகிற - யுத்தம் பண்ணுகிற. விவரணம் - நீபோகிலும் இத்யாதி. தோழத் தையோம் இத்தனிமை, என்றந்வயிப்பது. இதுக்கு த்ருஷ்டாந்தம் - இவனுக்கு இத்யாதி. அதா வது - நீ போகாதே கூடவிருக்கவேணுமென்று மறைத்துச்சொல்லுகிறாளென்றபடி. "சாவது", என் கிற இது, மரணவாசியாக அர்த்தாந்தரம் - எங்களுக்கு இத்யாதி. "தனிமை-விநாசம்" என்னுமதுக்கு ப்ரமாணத்வயம் - நின்னலால் இத்யாதிவாக்யத்வயம். இறப்பதற்கேயெண்ணாது - கைவல்யத்தில் மநஸ்ஸைவையாதேயென்று பரப்தார்த்தம். கைவல்யத்தையென்னாதே, "இறப்பதற்கே" என்கை யாலே - பகவத்விஶ்லேஷம் மரணமென்றபடி. இத்தால் - கேவலனுக்கு பகவத்ப்ராப்தி யில்லை யென்றுகருத்து. திருநெடுந்தாண்டகம், "மின்னுருவாய்" இத்யாதி. தோழத்தையோம் . தண்ணி*

முரே யவரும். அன்றிக்கே, [தனிமை- சாவது] - இத்தனிமை சாலப்பொல்லாதென்னவுமாம். இவ்வொருதலைக்காமம் போவது. கைக்கிளைத்தலைவி பொறையழிந்தால்எல்லாம் சொல்லப்பெறுமிறே. (௩)

நான்காம் பாட்டு.

தொழுத்தையோந்தனிமையுந்துணைபிரிந்தார்துயரமும்நினைகிலை கோவிந்தாநின், தொழுத்தனிற்பசுக்களையேவிரும்பித் துறந்தெம்மையிட்டு அவைமேய்க்கப்போதி, பழுத்தநல்லமுதின்இன்சாற்றுவெள்ளம்பாவியேன்மனமகந்தோறும்உள்புக்கு, அழுத்தநின்செங்கனிவாயின்கள்வப் பணிமொழிநினைதோறும்ஆவிவேமால்.

ஆ —(தொழுத்தையோம்.) - அடியோங்கள் தனிமையையும் உன்னைப் பிரிந்து நாங்கள்படுகிற வ்யஸநத்தையும் ஒன்றும்பாராதே, உன்னுடைய பசுக்களையே யுகந்து எங்களைத்துறந்து பொகட்டு அவை மேய்க்கப்போதி என்ன; "உன்னுடைய கடாக்ஷமே ஧ாரகமாயிருக்கிற நான் உன்னைப்பிரிந்துபோகையாவதென்" என்றாற்போலே ஸாந்த்வரூபமாய் ப்ரேமகர்ப்பமாய் அதிமதுரமாயிருப்பனசில பணிமொழிகளையருளிச்செய்தருள; இவையிறே நினைக்கநினைக்க என்னைமாய்க்கின்றன என்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், இவன் போகிறானென்று இப்பிராட்டி நோவுபடப்புக்கவாறே, "உன்னைப்பிரிய ஸம்ஹாவனையுண்டோ?" என்று மற்றும் ஸவிநயமாகச் சில வார்த்தைகளை யருளிச்செய்ய, இவையிறே என்னைமாய்க்கின்றன என்கிறாள்.

[தொழுத்தையோம் என்றுதொடங்கி] - கோவிந்தா! அஹிமதரைப்பிரிந்தார் படும் விஶ்லேஷமும், உன்னைப்பிரிந்து நாங்கள்படும் வ்யஸநமும் நினைக்கிறிலை; உன் தொழுவில்நிற்கும் பசுக்களையே ஆதரித்து அசேதநபதார்த்தங்களைப் பொகடுமாபோலே எங்களைப்பொகட்டு அவை மேய்க்கப் போகக்கடவை. [பழுத்த நல்லமுது என்று தொடங்கி] - பக்வமாய் விலக்ஷணமான அம்ருதத்தினுடைய இனியசாற்று வெள்ளம்போலே போக்யமாயிருக்கிற உன்னுடைய பணிமொழிகளை ஹ்ருதயாவகாஶந்தோறும் மறக்கவொண்ணாதபடி ஸ்திரமாக்க, உன்னுடைய சிவந்த கனிபோலேயிருக்கிற வாயில் ஸர்வஸ்வாபஹாரக்ஷமமான பணிமொழிகளை நினைதோறும் ஆவி வேவாநின்றது.

யோம். மூன்றாமர்த்தத்துக்கு, "தனிமை - சாவது" என்றது - தனிமை மரணஸமமென்று ஸப்தார்த்தம். அதாவது - "[illegible]" என்றாற்போலே சாவதுக்குஒக்குமென்றாய், பொல்லாதென்றபடி. "தனிமை - சாவது" என்றந்வயம். அவன்செய்தபடி கண்டிருக்குமதொழிய, கற்புடைய தலைவி "நீபோனால் முடிவன்" என்னலாமோவென்ன - கைக்கிளை இத்யாதி. கைக்கிளையென்று - ஒருதலைக்காமமாய், தலைவியென்று - நாயகியாய், ஒருதலைக்காமமுடையநாயகி யென்றபடி. பொறை - க்ஷமை. (௩)

ப.—அநந்தரம், ஆஶ்ரிதரக்ஷணஸ்வபாவனான நீ ரக்ஷ்யைகதேசமான எங்களைப்போகட்டுப்போகாநின்றாய்; நாங்கள் உன்னுடைய க்ருத்ரிமோக்திகளை நினைத்து க்லேஶியாநின்றோம் என்கிறாள்.

கோவிந்தா - (கோபீஜநரக்ஷணத்தாலே) கோவிந்தாபிஷேகம்பண்ணினவனே! தொழுத்தையோம்-(உனக்கு ரக்ஷ்யவர்க்கமாய்) அடிமைப்பட்ட எங்களுடைய, தனிமையும் - தனிமையையும், துணை - துணையானஉன்னை, பிரிந்தார் - பிரிந்தவர்கள், துயரமும் - ஆற்றாமையையும், நினைகிலை - நினைக்கிறிலை; (பிரிந்து தனிமைக்கு ஆற்றாமைப்பட்ட ஆர்த்திபாராதே), உன் - உன்னபிமாநமான, தொழுத்தனில் - தொழுவில், பசுக்களையே - பசுக்களையே, விரும்பி - ஆதரித்து, எம்மை - (ரக்ஷ்யைகதேஶமான) எங்களை, துறந்து - அநாதரித்து, இட்டு - பொகட்டு, அவை - அவற்றை, மேய்க்க - ரக்ஷிக்கைக்காகவே, போதி - போகாநிற்புதி: (அதுக்குமேலே), பழுத்த - பரிபக்வமாய், நல்அமுதின் - தெளிந்த அம்ருதத்தினுடைய, இன் - இனிய, சாற்றுவெள்ளம் - ரஸத்தினுடைய வெள்ளமானது, பாவியேன் - பிரிவுக்கடியான பாபத்தையுடைய என், மனமகந்தோறும் - நெஞ்சுபுடைதோறும், உள்புக்கு - புக்கு, அழுத்த - அழுத்தும்படியாக, நின் - உன்னுடைய, செம் - சிவந்த, கனிவாயின் - கனிபோலே போக்யமாயிருக்கிற திருப்பவளத்தில், கள்வம் - க்ருத்ரிமமான, பணி - தாழ்ந்த, மொழி - மொழிகளானவற்றை, நினைதொறும் - நினைக்குந்தோறும், ஆவி - என் ப்ராணன், வேம் - பரிதபியாநின்றது. பணிமொழி - தாழ்வையுடைத்தானமொழி; சொன்னமொழியென்னவுமாம்.

ஈ.—நாலாம்பாட்டில், இவன்போக்கை நினைத்து நோவுபடப்புக்கவாறே, "உன்னைப்பிரிய ஸம்பாவனையுண்டோ?" என்று இப்புடைகளிலே ஸவிநயமாகச் சில வார்த்தைகளைச் சொல்லப்புக, இவையிறே என்னை யழிக்கிறதென்கிறாள்.

[தொழுத்தையோம் தனிமையும்] - பஞ்சலக்ஷங்குடியிற்பெண்கள் திரண்ட திரளிலே படுகிற தனிமையிறே. தொழுத்தையோமென்றும் அடிச்சியோமென்றும் தங்கள் தோல்வியைச் சொல்லுகிறார்கள். [துணைபிரிந்தார் துயரமும்] - துணைபிரிந்தாரென்று - உன்னைப்பிரிந்தாரென்றபடி. "துணையென்றால் த்விஷ்டமாயன்று காணிருப்பது" என்னும் ஆச்சான். அவனே துணை; அல்லாதாரெல்லாம் கழுத்துக்கட்டி. தொழுத்தையோம் தனிமையும் அறிகிறிலை, துணைபிரிந்தார் துயரமும் அறிகிறிலை. பிரிகிறோம் நாங்களென்றும் அறிகிறிலை; பிரிகிறது உன்னையென்றும் அறிகிறிலை. [கோவிந்தா] - பசுக்களையும் இடையரையும் ரக்ஷிக்கவன்றோ கோவிந்தாபிஷேகம் பண்ணிற்று. [உன்தொழுத்தனில் பசுக்களையே விரும்பி] - உனக்கு ரக்ஷ்யமிரண்டானால் ஒருதலையை விரும்பவேண்டுகிறதென்? உன்தொழுவிலே வளைத்துவைத்தபசுக்களையோ விரும்பலாவது? உன்கைக்குள் அகப்பட்டாரை விரும்பலாகாதோ? பிரிந்தால்வரும் ஆற்றாமையறியாதார் வேணுமோ ரக்ஷிக்கைக்கு? [பசுக்களையே விரும்பி] - இவர்களையணைத்துக்கொண்டிருக்கும் தசையிலும் நினைவு அங்கேயாய், கண்ணியென்பது, பசுவென்பதாகாநிற்கும்: மித்யாபரிரம்பணமே யாய்த்துள்ளது. அமுதனார் "பசுவின் காலிலே முட்பாய்ந்தால் இடையன் தலைகாண் சீக்கொள்ளுமது" என்பர். உடம்பில் முட்பாய்ந்தால் நோவறிவதும் ஆத்மாவிறே. [துறந்து] - அவற்றை விரும்பித் தங்களை ஸந்ந்யஸித்தான் என்றிருக்கிறார்கள். [எம்மையிட்டு]-அசேதநபதார்த்தங்களைப்

போகடுமாபோலே எங்களைப்போகட்டு. [அளை மேய்க்கப்போதி] - கூடவிருக்கும்போதும் அவற்றை ஸ்மரிக்கும். அவற்றின்பின்பு போனால் நம்மை நினைப்பதும் செய்யான். அவற்றினுடைய ரக்ஷணத்திலே ஆயாஸமுண்டு; எங்களுடைய ரக்ஷணத்திற்கு ஸந்நியிலேயமையும். [பழுத்த இத்யாதி] - "நாம் போகையாவதென்? போனாற்றான் உங்களை மறப்பதுண்டோ? என் ஆற்றாமை உங்களுக்குண்டோ, மாதாபிதாக்கள் சொல்விற்றுச் செய்யவேண்டுகையாலே பசுமேய்க்கப்போகிறோம் இத்தனையன்றோ?" என்று சிலநீசஸாஷணத்தைப் பண்ணினான்; இவைகிடாய் உன்மறத்தை எங்கள்பக்கல் வரவொட்டாதவை. பக்வமாய் விலக்ஷணமான அம்ருதத்தினுடைய இனிய சாற்றுவெள்ளம்போலே போக்யமாயிருக்கிற உன்னுடைய பணிமொழியுண்டு - சொல்லுகிறவார்த்தையென்னுதல்; கலவியிலே ஒருவகையான வாமம்ருதத்தைச் சொல்லுதல். [பாவியேன்] - அம்ருதம் நஞ்சாம்படியான பாபத்தைப் பண்ணினேன். பிரிவை நினைத்து, "பிரியேன்" என்னுமது விஷஸமமிறே. ஹ்ருதயாவகாஸந்தோறும் பிரிக்கவொண்ணாதபடி யழுத்த, உன்னுடைய சிவந்தகனிபோலேயிருக்கிற வாயில். [கள்வப்பணிமொழி] - எழுதிக்கொள்ளுகிற தாழ்ந்தபேச்சுக்கள். பிரிவை நினைத்துச் சொல்லுகிற வார்த்தையாகையாலே நெஞ்சையழிக்கக் கடவதாயிறேயிருப்பது. [கள்வம்] - நினைவொன்றும் செயலொன்றுமாயிருக்கை. [நினைதொறும்] - "தரிக்கலாமோ?" என்று நினைக்கப்புகும்: அதுதான் வ்யயகமாம்! பின்னையும் விடமாட்டாள்; இப்படி யுருவச்செல்லாநிற்கை. [ஆவி வேமால்] - தனக்கு ஆஸ்ரயமான ப்ராணனானது வேவாநின்றது. க்ஷணிக பதார்யம்போலே உத்பத்தியும் விநாஸமுமாய்ச் செல்லாநிற்கை. அக்நி ஆஸ்ரயாஸியாயிறேயிருப்பது?

ஈடு.—நாலாம்பாட்டு. இவன்போக்கை நினைத்து நோவுபடப்புக்கவாறே "உன்னைப் பிரிகைக்கு ஸம்ஹாவனையுண்டோ?" என்று இப்புடையிலே ஸவிநயமாகச் சில வார்த்தைசொல்ல, இவையிறே யென்னை யழிக்கிற தென்கிறாள்.

[தோழுத்தையோம்தனிமையும்] - பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களும் கூடிப்படுகிற தனிமையிறே. தொழுத்தையோமென்றும் அடிச்சியோமென்றும் தாங்கள்தோற்ற தோல்வி தோற்றச் சொல்லுகிறார்கள். [துணைபிரிந்தார்துயரமும்] - துணைபிரிந்தாரென்று உன்னைப்பிரிந்தாரென்றபடி. "துணையென்றால் த்விஷ்ட்டமாயன்றுகாணிருப்பது" என்னுமாச்சான். இவர்களும் அவனுக்குத்துணையாய், அவனும் இவர்களுக்குத் துணையாயன்றிருப்பது; துணையாகை ஒருதலையிலே வ்யவஸ்த்திதமாய்த்து; துணையாவானவனொரு

நாலாம்பாட்டு.—தோழுத்தையோம் இத்யாதி. "நின்செங்கனிவாயின் கள்வப்பணிமொழி நினைதொறுமாவிவேமால்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை அருளிச்செய்கிறார், இதுக்குக் கீழோடே ஸங்கதி - இவன்போக்கை இத்யாதி.

"தொழுத்தையோம்" என்ற பஹுவசநார்த்தம் - பஞ்சலக்ஷம் இத்யாதி. பதப்ரயோகத்துக்கு ஹாவம் - தோழுத்தையோம் என்றும் இத்யாதி. "துணை" என்றால் உன்னையென்று காட்டுமோவென்ன - துணையென்றல் இத்யாதி. விவரணம் - இவர்களும் இத்யாதிவாக்யத்வயம். அவனையொழிந்தார் துணையாகவொண்ணாதோ, அவனே துணையாகவேணுமோவென்ன; "அவனொருவனுமேதுணை, அல்லாதாரெல்லாம்பாதகர்" என்று ஊர்ப்பிப்பியாநின்றுகொண்டு, அதுக்கு ப்ரமாணமும்காட்டுகிறார் - துணையாவான் இத்யாதிவாக்யத்ரயத்தாலே. கழுத்துக்கட்டி - கழுத்திற் கட்டிபோலே பாதகமென்று ஸ்வஹாவார்த்தம்; கழுத்திலேகட்டப்பட்ட லிங்கமென்று யுக்தி,

வனுமேயாய்த்து; அல்லாதாரடங்கலும் கழுத்துக்கட்டியாயாய்த்திருப்பது; * வன்துணையிறே. தொழுத்தையோம் தனிமையும் நினைகிறிலை, துணைபிரிந்தார் துயரமும் நினைகிறிலை. பிரிகிறோம் நாங்களென்றும் பிரிகிறதுஉன்னையென்றும் பார்க்கிறிலை. [கோவிந்தா] - பசுக்களையும் இடையரையும் ரக்ஷிக்கைக்கன்றோ கோவிந்தாபிஷேகம் பண்ணிற்று. பிறவிப்பாடும் பின்தொடருமிறே. அதாவது - தன்ஸ்த்ரீ ஆர்த்தையாயிருந்தாலும், பசுக்களை விரும்பி அவற்றுக்குப் புல்லும் நீருமுள்ள இடந்தேடுமித்தனையிறே. [நின்இத்யாதி] - உனக்கு ரக்ஷ்யகோடி இரண்டானால் ஒருதலையே விரும்பவேண்டுகிறதேன்? இரண்டு தலையையும் ஒக்கவிரும்பினாலாகாதோ? [நின்தொழுத்தனில்] - ஓரிடத்தே வளைத்து வைத்த பசுக்களையேயோ ரக்ஷிக்கலாவது? உன்கைக்குள் அகப்பட்டாரை ரக்ஷிக்கலாகாதோ? இவர்களையணைத்துவிட்டுப் பின்னையிறே பசுமேய்க்கப்போவது. [பசுக்களையே] - நீ போனால் பிரிவுக்குஆற்றாமைப்பட அறியாதாரையேயோ நீ ஆதரிப்பது? [விரும்பி] - இவர்களையணைத்துக் கட்டிக்கொடுகிடந்தாலும், கண்ணியென்பது, கன்றுகள்விட்டுக் கொடுபோகாநின்றதேன்பதாய் வாய்வெருவுவது அவற்றையேயாய்த்து. இங்கிருக்கும்போதும் நெஞ்சுஅங்கேயாய்த்து. இங்குள்ளது மித்யா†பரிரம்பணமே. பிள்ளையமுதனார், "ஒருபசுவின்காலிலே முள்பாய்ந்தால் இடையன் தலைகாண் சீக்கொள்ளுவது" என்பராம். ஶரீரத்திலேயொன்று வந்தால் ஸுகதுःகங்கள் அநுபவிப்பான் ஆத்மாவிறே. [துறந்துஎம்மை] - அவற்றை விரும்பவிரும்பத் தங்களை ஸந்ந்யஸித்ததேன்றிருக்கிறார்கள். [எம்மைஇட்டு] - அசேதநபதார்த்தங்களைப் போகமோபோலே எங்களைப் போகட்டு. இவர்களுடனிருக்கும்போதும் அவற்றை ஸ்மரிக்கும்; அவற்றின்பின்னே போனால் இவர்களை நினையான். [அவைமேய்க்கப்போதி] - அவற்றினுடைய ரக்ஷணார்த்தமாகப் போகக்கடவை. அவற்றினுடைய ரக்ஷணத்தில் ஆயாஸமுண்டு, எங்களுடைய ரக்ஷணத்துக்கு ஸந்நிதியேயமையும்; "இடறவேன்பிள்ளையைப் போக்கினேன்" "எற்றுக்கேன் பிள்ளையைப் போக்கினேன்" என்று வயிறுபிடிக்கவேண்

வன்துணை - வலியஅணை, திருமொழி, மூன்றாம்பத்து, ஏழாந்திருமொழி ஆறாம்பாட்டு, "என் துணையென்று" இத்யாதி. தாத்பர்யார்த்தமாதல், "தொழுத்தையோம் தனிமையும் துணைபிரிந்தார்" என்கிற புநருக்திக்குப் பரிஹாரமாதல் - பிரிக்றோம் இத்யாதி. அதாவது - எங்கள் மார்த்தவமும் உன் வைலக்ஷண்யமும் நினைக்கிறிலையென்றபடி. "கோவிந்தா" என்றதை "தொழுத்தையோம்" இத்யாதியோடே கூட்டிபாவம் - பசுக்களையும் இத்யாதி. அதாவது - எங்களையும் ரக்ஷியாதேவிடலாமோவென்றபடி. "கோவிந்தா - பசுக்களையேவிரும்பி" என்று மேலேகூட்டிபாவம் - பிறவிப்பாடு இத்யாதிவாக்யத்வயம். "பசுக்களையே" என்றஅவதாரணார்த்தம் - உனக்கு ரக்ஷ்ய இத்யாதி. "தொழுத்தனில்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - ஓரிடத்தே இத்யாதிவாக்யத்வயம். தொழுத்தனில் - தொழுத்தில். இவர்கள் கைக்குள்ளே யகப்பட்டார்களோவென்ன - இவர்களை இத்யாதி. "பசுக்கள்" என்ற அல்ப சைதந்யவத்தைக்கு பாவம் - நீபோனால் இத்யாதி. விருப்பத்தின் சரமாவதி - இவர்களையணைத்து இத்யாதி. பலிதம் - இங்கிருக்கும்போதும் இத்யாதி. பசுக்களிடத்தில் விருப்பத்தின் சரமாவதிக்கு ஸம்வாதம் - பிள்ளையமுதனார் இத்யாதி. பசுக்களின் நோவு இவனதானதுக்கு த்ருஷ்டாந்தம் - ஶரீரத்திலே இத்யாதி. "விரும்பி - எம்மை - துறந்து" என்ற பதச்சேர்த்திக்கு பாவம் - அவற்றை இத்யாதி. "இட்டு" என்றதுக்குபாவம் - அசேதந இத்யாதி. "விரும்பி - இட்டு" என்ற பதத்வயபலிதம் - இவர்களுடன் இத்யாதிவாக்யத்வயமும். "போதி" என்றதுக்கு ஹார்த்தபாவம் - அவற்றினுடையரக்ஷணத்தில் என்று தொடங்கி நாலுவாக்யம். பெரியாழ்வார் திருமொழி, மூன்றாம்பத்து இரண்டாந்திருமொழி, "மிடறு" இத்யாதி, "பற்று மஞ்சள்" இத்யாதி-எற்றுக்கு- என்னப்ரயோஜநத்துக்கு. அவர்கள் சொன்னதுக்கு ஸமாதானம் பண

† பரிரம்பணம்-ஆலிங்கநம்.

மேம்படியா யிருக்குமது; எங்களுடைய ரக்ஷணத்தில் ஆயாஸம் வேண்டா, கூட விருக்கவமையும். [பழுத்த இத்யாதி] - “நான் போகையாவதேன்? போனால்தான் உங்களை மறப்பதுண்டோ ? என்னுற்றமை உங்களுக்குண்டோ ? †நான் மாதாபிதாக்களுக்குப் பரதந்த்ரனானால் அவர்கள் சொல்லிற்றுச் செய்யவேண்டுகையாலே போகிறேனித்தனையன்றோ ? போனாலும் நெஞ்சு இங்கேயன்றோ ? ” என்றாற்போலே சில நீசஹாஷணங்களைப் பண்ணினான் ; இவைகிடாய் எங்களை மறக்கவொண்ணாதபடி பண்ணுகிறது. பக்வமாய் அதிவிலக்ஷணமான அம்ருதத்தினுடைய இனிய சாற்றுவெள்ளம்போலே ஹோக்யமாம்படி சொல்லுகிற வார்த்தையென்னுதல்; அன்றிக்கே, கலவியிலே ஒருவகையைச் சொல்லிற்றாகவுமாம். அதாவது - வாமம்ருதமென்றபடி; “வாயமுதம் தந்தென்னைத் தளிர்ப்பிக்கின்றான்”என்னக்கடவதிறே. [பாவியேன்]- அம்ருதமே நஞ்சாம்படியான பாபத்தைப்பண்ணினேன். பிரிவை நினைத்து “பிரியேன்” என்னும் இது விஷஸமமிறே. [மனமகந்தோறும்இத்யாதி] - ஹ்ருதயாவகாஸந்தோறும் மறக்கவொண்ணாதபடி யழுத்த, உன்னுடைய சிவந்தகனிபோலேயிருக்கிற வாயினுடைய. [கள்வப்பணிமொழி] - இச்சாற்றுவெள்ளத்துக்குஊற்றுவாய்காணும்; எழுதிக்கொள்ளுகிற தாழ்ந்த பேச்சுக்கள். பிரிவைநினைத்துச் சொல்லுகிற வார்த்தையாகையாலே, நெஞ்சையழிக்கக் கடவதாயிறே யிருப்பது. நினைவுஒன்றும் சொலவுஒன்றுமாயிருக்கை. [நினைதோறும்] - “இவை யாரகமாமோ?”என்னும்நினைவாலே நினைக்கப்புகுமே: அதுவாயகமாமே; பின்னையும் விடமாட்டாளே; இங்ஙனே யுருவச் செல்லு மித்தனை. [ஆவி

ணிக்கொள்ளுகிறான் - நான் இத்யாதி. “போதி”என்றதுக்கு உத்தரம் - நான் போகையாவதேன் என்று. “நினைகிலே” என்றதுக்கு உத்தரம் - போனாற்றன் இத்யாதி. “தனிமையும் துயரமும்” என்றதுக்கு உத்தரம்-என்னுற்றமை இத்யாதி. “பசுக்களையே” என்றதுக்கு உத்தரம் - நான் மாதா இத்யாதி. “விரும்பி” என்றதுக்கு உத்தரம் - போனாலும் இத்யாதி. “பழுத்தநல்லமுதின் இன் சாற்றுவெள்ளமான - நின்செங்கனிவாயின கள்வப்பணிமொழி” என்று “சாற்றுவெள்ளம்” என்றத்தை * கள்வப்பணிமொழியோடே அந்வயித்தல் ; அன்றிக்கே, “நின்செங்கனிவாயின் - பழுத்த நல்லமுதின் இன்சாற்றுவெள்ளம்” என்று வாமம்ருதமாதல். அதரரஸத்தை “அமுதம்” என்றதுக்குப்ரமாணம் - வாயமுதம் இத்யாதி. பெரியாழ்வார்திருமொழி, “கன்னற்குடம்” இத்யாதி. தளிர்ப்பிக்கை - தரிப்பிக்கையென்றபடி. ‘க்ஷாநா வாமா விசேஷம் தஸ்யா: ஸ்வேதிவா நநு। மாம் ஷதாஸ்யஹாவாஸ்யா ‡ரஸாயநமிவோத்தம்’’ என்றாற்றே பெருமாள். “பாவியேன்” என்றதுக்கர்த்தம் - அம்ருதமே இத்யாதி. இது கீழ்ச்சொன்ன முந்தினவர்த்தத்துக்கு அநுகுணம்—அம்ருதம்போன்ற மொழி நஞ்சாவானென என்ன?-பிரிவை இத்யாதி. அங்ஙனன்றிக்கே, ‘அம்ருதமே’ இத்யாதிவாக்யம் த்விதீயார்த்தானுகுணம்; ‘பிரிவை நினைத்து’ இத்யாதிவாக்யம் ப்ரதமார்த்தாநுகுணமென்னவுமாம். அழுத்த - நீயழுந்தப்பண்ண வென்றபடி. முந்தினவர்த்தத்திலே ரஸோக்தி - இச்சாற்றுவெள்ளத்துக்கு இத்யாதி. “கள்வம்” என்று - களவாய், அத்தால் ஆகர்ஷகத்வமாக அர்த்தம் - எழுதிக்கொள்ளுகிற இத்யாதி. தாழ்ந்தபேச்சானால் ஆவி வேகவேணுமோவென்ன - பிரிவை நினைத்து இத்யாதி. “கள்வம்” என்றதுக்கு - கபடமாகவர்த்தாந்தரம் - நினைவுஒன்றும் இத்யாதி. பணிமொழி - நீச ஹாஷணம். ஆக, “கள்வம்” என்று - ஆகர்ஷகமென்னுதல்,கபடமென்னுதல் என்று அர்த்தத்வயம்.“நினைதொறும்”என்கிற ப்ரகாரஸாஹித்யத்துக்கு ஸாவம் - இவை யாரகமாமோ இத்யாதி. தனக்கு என்றது - நினைவுக்கென்றபடி. ப்ரா

† நான் என்பது அடையவளைந்தானுக்குப் பாடமில்லை.

‡ ரஸாயநமிவாத்ரா8 என்று பாடம்.

வேமால்]- தனக்குஆஸ்ரயமான ப்ராணனுனது வேவாநின்றது.அக்நி ஆஸ்ரயாஸியாயிறே யிருப்பது. 'பழுத்தநல்லமுதினின் சாற்றுவெள்ளமான - நின்செங்கனிவாயின் கள்வப் பணிமொழி - பாவியேன் மனமகந்தோறும், உள்புக்கழுத்த - நீ மறக்கவொண்ணுதபடி பழுந்தப்பண்ண அவற்றை நினைக்கநினைக்க ஆவி வேவாநின்றது.' (ச)

ஐந்தாம் பாட்டு.

பணிமொழிநினைதோறும் ஆவிவேமால்பகனிரைமேய்க்கியபோயகண்ணு!
பிணியவிழ்மல்லிகைவாடைதூவப்பெருமதமாலையும்†வந்தன்ருலோ [தந்து
மணிமிகுமார்வினின்முல்லைப்போதுஎன்வனமுலைகமழ்வித்துன்வாயமுதந்
அணிமிகுதாமரைக்கையைஅந்தோ அடிச்சியோந்தலைமிசைநீயணியாய்!

ஆ.—(பணிமொழி.) - "பசுமேய்க்கப்போகாதிருக்கச்செய்தே இப்படிப் படுகிறதென்?" என்ன; பசுமேய்க்கப் போனுயே யல்லையோ?பசுமேய்க்கப்போய்ப் பகலு மெல்லாம் முடிந்து பிணியவிழ்மல்லிகைவாடை தூவப் பெருமதமாலையும்வந்ததுகிடாய்! ஈண்டபகலெல்லாம் உன்னைப்பிரிந்தாலுள்ள வ்யஸநமெல்லாந் தீரும்படி என்னை ஒருகால் புல்கி, ம்ருதஸஞ்ஜீவநமாய் அம்ருதகல்பமான திருவார்த்தைகளாலே என்னை யுஜ்ஜீவிப் பித்து, என்னுடைய ஆர்த்தியெல்லாம் போம்படி உன்னுடைய அழகிய திருக்கைகளை என் தலையிலே ஒருகால் வைத்தருளாயென்கிருள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், "நான் உன்னுடைய ஸந்நிதியிலே வர்த்தியாநிற்க, நீ இப்படிப்படுகிறதென்?" என்று எம்பெருமான் இப்பிராட்டிக்குஅருளிச்செய்ய; இப்பிராட்டியும், "நீ பசுமேய்க்கப்போகக் கடவையான பின்பு,நீயும்போனுய்; நீபோனுல் நலியக்கடவஸந்த்யையை தொடக்கமான பதார்த்தங்களாலே நலிவுபடுகிற என்னை ஆலிங்க நாதிகளைப்பண்ணி உஜ்ஜீவிப்பித்தருளவேணும்" என்கிருள்.

[மேய்க்கிய] - மேய்க்க. [பிணியவிழ் மல்லிகைவாடை தூவப்பெருமதமாலை யும் வந்தன்ருலோ] - அலராநின்றுள்ள மல்லிகையினுடைய மணத்தை வாடையானது தூவ; பெருங்கிளர்த்தியானஸந்த்யையும் வந்தது. [மணிமிகுமார்வினில்என்றுமேலுக்கு] - கௌஸ்துபாதிகள் நிறம்பெறும்படியான உன்னுடைய திருமார்பில் முல்லைமாலையாலே என்னுடைய அழகியமுலையைக் கமழப்பண்ணி, உன்னுடைய வாயமுதத்தைத்தந்து அணி மிக்கிருந்துள்ள அழகிய திருக்கையை எங்கள்தலைமேலே ஐயோ! வைத்தருளாய்.

ணன் என்று - ஆத்மாவைச்சொல்லுகிறது. ஆஸ்ரயம் வேவானென்? என்ன - அக்நி இத்யாதி. அதாவது-அக்நி தனக்காஸ்ரயமான காஷ்டத்தை ஊஹிக்குமாபோலே,நினைவும் தனக்காஸ்ரயமான ஆத்மாவை ஊஹிக்கிறதென்றபடி. அழவா, நினைவுக்குஆஸ்ரயம் மநஸ்ஸாகையாலே,ப்ராணனென்று மநஸ்ஸைச் சொல்லுகிறதென்னவுமாம். முந்தினவர்த்தத்திலே, அந்வயம் - பழுத்த இத்யாதி. 'நீமறக்கவொண்ணுதபடி' என்றதுக்குச் சேர, "பணிமொழியைக்கொண்டு" என்று கூட்டிக்கொள்வது. "வாஹம்ருதம்" என்ற பக்ஷத்தில், 'நின்செங்கனிவாயின் - பழுத்தநல்லமுதினின் சாற்று வெள்ளம்' என்றுதொடங்கி, 'அழுத்த - அழுந்தப்பண்ண, அதுக்குமேலே, கள்வப்பணிமொழி நினைதொறும் ஆவிவேமால்' என்று அந்வயம். பணி-தாழ்ச்சி,மொழி-உக்தி:நீசஸாஷணமென்றபடி.

---

† 'வந்தின்ருலோ' என்று ஓதுவர்.

ப.—அநந்தரம், உன்னுடைய விஶ்லேஷத்தாலே என்னை வாடைதொடக்கமானவை நலியாநின்றன, என் ஆர்த்தி தீரும்படி ஸம்ஶ்லேஷித்து ஆஶ்வஸிப்பிக்க வேணுமென்கிறாள்.

பணி மொழி - (நீ) ஆஶ்வாஸகரமாகச் சொல்லுகிற வார்த்தைகள்தானே, (பிரிவுக்குஉறுப்பாகையாலே), நினைதொறும் - நினைக்குந்தோறெல்லாம், ஆவி - நெஞ்சு, வேம் - வேவாநின்றது ; பகல் - பகலெல்லாம், நிரைமேய்க்கிய - நிரைமேய்க்கைக்காக, போய - போய்விட்ட, கண்ணே - க்ருஷ்ணனே ! பிணி - கட்டிலேபகப்பட்டு, அவிழ் - விகஸிதமான, மல்லிகை - (மதுவையுடைத்தான) மல்லிகையை, வாடை - வாடையானது, தூவ-தூவாநிற்க, பெரு - பெரிய, மதம் - செருக்கோடே, (மத்தகஜம்போலே), மாலையும் - மாலை, வந்தன்று - வந்தநித்தனை ; (இங்ஙனையிலே யகப்படாதபடி), மணி-கௌஸ்துப ரத்நமானது, மிளிரும் - பேரொளிவிஞ்சிவருகிற, மார்வினில் - திருமார்பில், முல்லைப்போது-முல்லைப்பூவானது, என் வனமுலை-என் அழகியமுலையிலே, கமழ்வித்து-கமழும்படியாகப் பரிஷ்வங்கித்து. உன்வாயமுதம்தந்து-நிரதிஶயபோக்யமான உன்னுடைய வாயம்ருதத்தைத் தந்து, அணி மிகு - அலங்காரோத்தரமாய் ஸ்ப்ருஹணீயமான, தாமரை - தாமரைபோன்ற, கையை -, அடிச்சியோந்தலைமிசை - அடிச்சியோமான எங்கள் தலையிலே, நீ,— அணியாய் - அலங்காரரூபமாக வைக்கவேணுமென்று அக்ராம்யமாக ஸம்ஶ்லேஷப்ரகாரஸூசகமாயிருக்கிறது. அந்தோ - ! என்னுற்றமையை உனக்கறிவிக்கவேண்டுவதே ! என்று கருத்து.

இ.—அஞ்சாம்பாட்டில், “நான் ஸந்நிஹிதனாயிருக்க நீ இப்படிப்படுகிறது என்?”என்ன; “நீ பசுமேய்க்கப் போகக்கடவையானபின்பு,நீயும்போனாயே; நீ போனால் நலியக்கடவ ஸந்த்யாதிபதார்த்தங்களாலே நலிவுபடுகிற என்னை ஆஶ்வஸிப்பித்தருள வேணும்” என்கிறாள்.

[பணிமொழி இத்யாதி] - பிரிவைநினைத்து “பிரியேன்” என்று சொல்லுகிற உன்வார்த்தைபோலே, உன்னைப் பிரியாமைக்குச் சொல்லுகிற வார்த்தைபல்ல. உன்னது கள்வப்பணிமொழியாகையாலே பொய்; இது அநுபவத்துக்குப் பாசுரமிட்டுச் சொல்லுகிற வார்த்தையாகையாலே மெய். நான் போனேனேனென்ன? [பகல்நிரை இத்யாதி] - பகலெல்லாம் பசுமேய்க்கப்போனாய். [கண்ணே] - என்று ஸம்போதித்து, அவன் தனக்கே “நீபோனாய்” என்கிறாளிறே. [மேய்க்கிய] - மேய்க்க. [பிணிஇத்யாதி] - நீபோனால் நலிபக்கடவ பதார்த்தங்கள் நலிகைபாலே, போனமை நிஶ்சிதம் என்கிறாள். மல்லிகை கமழ்தென்றல் ஆகாராந்தரத்தாலே நலியாநின்றது. கட்டவிழுகிற மல்லிகையினுடைய மணத்தை வாடையானது தூவாநின்றது. ராவணன் ஸந்ந்யாஸிவேஷத்தைக் கொண்டுவந்து தோற்றினாற்போலே, வாடையானது குளிர்காற்றாய் வந்து நலியாநின்றது. [தூவ] - தன்மேல் வெக்காயந்தட்டாமே கடக்கநின்று வீசாநின்றது. “வஹ்நிகௌஸுபஸம்ஸ்ருஷ்ட:” - மத்தகஜமானது முன்னே தலைப்பறைகொட்ட வருமாபோலே, வாடையை முன்னேவிட்டுக்கொண்டு பெரிய கிளர்த்தியோடே ஸந்த்யையும் வந்தது. இவளை முடிக்கவேணுமென்று ஸந்த்யையானது கூட்டுத் தேடிக்கொண்டு வாராநின்றது. [வந்தன்றுலோ] - வந்தால் பரிஹரிக்க வொண்ணாது. அர்ஜுநனைக்குறித்து ஹகதத்தன் விட்ட ஶக்திக்கு மார்வையேற்றாற்போலே, நடுவேபுகுந்து நோக்காய்.ஸந்நிஹிதனாயிருந்த என்னை, நீ செய்யச்சொல்லு

கிறதென்? என்ன, - [மணிமிகு மார்பினில்] - ஸ்ரீகௌஸ்துபம் நிறம்பெறும்படியான மார்வென்னுதல், திருமார்வடங்க ஸ்ரீகௌஸ்துபத்திற் புகரேயாம்படி யிருக்குமென்னுதல். கலவியிலும் கழற்றவொண்ணாதபடியிறே ஸ்ரீகௌஸ்துபமிருப்பது. ஸ்த்ரீக்கு ஸ்தநம்போலே, ஸ்ரீகௌஸ்துபம் புருஷோத்தமசிஹ்நமிறே. அம்மார்வில் முல்லைமாலையாலே என்னுடைய அழகிய முலையைப்பரிமளிதமாக்கி. ஸ்ரீகௌஸ்துபத்தோடு தோளில் மாலையோடு வாசியற ஹோரோபகரணமாயிருக்கிறபடி. தோளில் முல்லைமாலையின் பரிமளத்தை முலைக்கு ஆக்கவேணுமென்கையாலே, கலவியை அழகாரம்யமாகச் சொல்லுகிறது. [உன்வாயமுதம் தந்து] – கலவியில் உன்மஸ்தகரஸமானவளவில் தடுமாற்றத்திற்குப் பரிஹாரமான தாழ்ந்தபேச்சுக்களைச் சொல்லுதல், வாகம்ருதத்தைச் சொல்லுதல்: பேச்சென்றேயாய்த்துச் சொல்லிப் போருவது. "உன்போக்கு எனக்குஅஸஹ்யம், அத்தைத்தவிர்" என்று சொல்லப்புக்கு, அதொண்ணாதபடி 'நாநீர் வருகிறதில்லை: அதுக்குப் பரிஹாரமாக உன்கையை என்தலைமேலே வைகிடாய்' என்கிறாள். ஆஹாரண ப்ரசுரமாய் அதுதான் மிகையாம்படி தனக்குத்தானே ஆஹாரணமான கையை. [அந்தோ] - சேர்ந்து குளிர்ந்துவிடாயர்க்குச் சமைத்துவைத்த தண்ணீரை வார்க்கச் சொல்லவேண்டுவதே! என் ஆற்றாமையை நான் உனக்கு அறிவிக்கவேண்டும்படியாவதே! [அடிச்சியோம்] - கலவியில் தோற்ற தோல்வியாலே சொல்லுகிறாள். [தலைமிசை நீஅணியாய்] - எங்கள் ஶிரஸ்ஸோத்துக்குப் பரிஹாரமாக உன்கையை வையாய். "வேணுமாகில் எடுத்துவைத்துக் கொள்ளுங்கோள்" என்ன; "எங்கள் பேற்றுக்கு நாங்கள் யத்நம்பண்ணுமவர்களோ? நாங்கள் நீவிரும்பி மேல்விழப் பெறுமவர்களன்றோ?" [அணியாய்] - ஆஹாரணங்களுக்கு அவன் கைபோலேயாய்த்து இவர்கள்தலைக்கு அவன் கை. ஆற்றாமைமிக்கவளவிலும் அவனாலே பெறவிருக்குமவர்களிறே. "நின்பாதபங்கயமே தலைக்கணியாய்." "ஜீயஉ-ஞய-பா-நலெஞஙரிஷ்)தி" என்னக்கடவதிறே.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. "நான் ஸந்நிஹிதனாயிருக்க நீஇப்படிப்படுகிறதேன்?" என்ன,—"நீ பசுமேய்க்கக்கடவையான பின்பு, நீயும்போனாய்: நீபோனால்நலியக்கடவஸந்த்யாதிபதார்த்தங்களால் நலிவுபடுகிற என்னை ஆஶ்வஸிப்பித்தருளவேணும்"என்கிறாள்.

[பணிமொழிநினைதோறும்ஆவிவேமால்]- பிரிவைநினைத்து "பிரியேன்" என்று சொல்லுகிற உன்வார்த்தைபோலே உன்னைப் பிரியாமைக்காகச் சொல்லுகிற வார்த்தையல்ல; உன்னது * கள்வப்பணிமொழியாகையாலே போய், இது அநுபவத்துக்குப் பாசுரமிட்டுச் சொல்லுகிறதாகையாலே மெய். "நான்போனேனோ?" என்ன,—[பகல்இத்யாதி] - பகலெல்லாம் பசுமேய்க்கப்போனாய். [கண்ணா] - என்று ஸம்போதித்து,

---

அஞ்சாம்பாட்டு.—பணிமொழி இத்யாதி. "பகல்நிரைமேய்க்கியபோயகண்ணா" என்றதுக்கு ப்ரஸங்கமருளிச்செய்யாநின்றுகொண்டு, "பிணியவிழ்மல்லிகை" இத்யாதியைக் கடாக்ஷித்துப் பாட்டுக்கவதாரிகை - நான் இத்யாதி. ஸந்த்யாதி-ஸாயம்ஸந்த்யாதி.

மீளவும் "பணிமொழிநினைதொறுமாவிவேமால்" என்றதுக்கு பாவம் - பிரிவைநினைத்து இத்யாதி வாக்யத்ரயம். அதாவது - நான் போகாமைக்காக ஒன்றைச்சொன்னாயத்தனைபோக்கி இது ஸத்யமன்றென்று அவன் சொன்ன வார்த்தையை ஹ்ருதிகரித்துக்கொண்டு, தான்சொன்ன வார்த்தை ஸத்யமென்று அவன்நெஞ்சிலே படுத்துகைக்காக மீளவும் சொல்லுகிறாளென்றபடி. ஈடுபாடு - கண்ணாவென்று இத்யாதி; இதொரு ப்ராந்தி யிருந்தபடியென்? என்றபடி. 'என்கிறா

அவன்தனக்கே "நீ போனாய்" என்கிறாளிறே!. [மேய்க்கிய] - மேய்க்க. [பிணி இத்யாதி] - நீபோனால் பாதகமாகக்கடவ * மல்லிகைகமழ்தென்றல் தொடக்கமானவை மறுவலிடுகையாலே நீபோனமை நிஸ்சித மென்கிறாள். கட்டவிழ்கிற மல்லிகையினுடைய மணத்தை வாடையானது தூவாநின்றது. ராவணன் ஸந்ந்யாஸி வேஷத்தைக் கொண்டு வந்து தோற்றினாற்போலே, வாடையானது குளிர்காற்றாய்வந்து நலியாநின்றது. [தூவ] - வெக்காயம் தட்டாமே கடக்கநின்று வீசாநின்றது: "பத்மகேஸரஸம்ஸ்ருஷ்ட:" (பத்மகேஸர ஸம்ஸ்ருஷ்ட:)-மத்தகஜமானது முன்னே தலைப்பறைகொட்ட வருமாபோலே, வாடையை முன் நடக்கவிட்டுக்கொண்டாய்த்து மாலை வருகிறது. இவளை மதித்தபடியாலே கூட்டுப்படையாய் வாராநின்றதாய்த்து [வந்தன்றாலோ] - வந்தது கிடாய்; உடம்பிலே பட்டொழிந்ததுகிடாய். ஹமதத்தன் விட்ட அஸ்த்ரத்துக்கு அர்ஜுநனைப் பின்னையிட்டு உன்மார்வையேற்றாற்போலே, நடுவேபுகுந்து கட்டிக்கோள்கிடாய். பெரிய கிளர்த்தியையுடைய மாலையானதுவரும் என்றஞ்சுகிறதல்ல, வந்தது. ஆனால் செய்யவடுப்பதென்னென்ன - [மணிமிகுமார்வினில்] - ஸ்ரீகௌஸ்துபம் நிறம்பெறும்படியான மார்வு என்னுதல்; திருமார்வடங்க ஸ்ரீகௌஸ்துபத்திற் புகரேயாம்படி யிருக்குமென்னுதல். கலவியிலும் கழற்றவேண்டாதபடியிறே ஸ்ரீகௌஸ்துபமிருப்பது; "நிரதிசயஸுகஸ்பர்ச" என்னக்கடவதிறே. இவளுடைய ஸ்த்ரீத்வத்துக்கு ஸ்தநம்போலேயாய்த்து, அவனுடைய பும்ஸ்த்வத்துக்கு ஸ்ரீகௌஸ்துபம். புருஷோத்தமத்வ லக்ஷணமிறே. அம்மார்வில் முல்லைமாலையாலே என்னுடைய அழகியமுலையைப் பரிமளிதமாக்கி.

ளிறே' என்றவநந்தரம், "கூடவிருக்கச்செய்தே பிரிவை யதிசங்கைபண்ணுகிறதினாற்றம்" என்கிற இவ்வளவும் அத்யாஹரித்துக்கொள்வது. ஸந்நிஹிதனை "போனாய்" என்கிறதென்கொண்டென்ன-நீபோனால் இத்யாதி. இது மேலுக்கவதாரிகை. கட்டவிழ்கிற - விகஸிதமாகிற: பிணி - கட்டு,முகுளம். மல்லிகைமணத்தைத் தென்றலொழிய ப்ராத:காலவாயுவான வாடைவீசக் கூடுமோவென்ன - ராவணன் இத்யாதி. குளிர்காற்றாய் - தென்றலாய், வாடை தென்றலினாகாரத்தை ஏறிட்டுக்கொண்டு வந்ததென்றபடி. வெக்காயம் - ஔஷ்ண்யம். கடக்கநின்று வீசுகிறதுக்கு ப்ரமாணம் பத்மகேஸர இத்யாதி. "பத்மகேஸரஸம்ஸ்ருஷ்டோ வ்ருக்ஷாந்தரவிநிஸ்ஸ்ருத: । நிச்வாஸ இவ ஸீதாயா வாதி வாயுர் மநோஹர:" இதி கிஷ்கிந்தாகாண்டே,ப்ரதமே.வாடை தூவ மாலைவருகிறதுக்கு த்ருஷ்டாந்தம்-மத்தகஜம் இத்யாதி.।இது"பெருமதம்" என்றத்தைப்பற்ற. தலைப்பறை - முன்னேகொட்டுகிற வாத்யம். மாலை - ஸந்த்யை. மாலை வாடையைக் கூட்டிக்கொண்டு வருவானென்னென்ன - இவளை இத்யாதி. வந்தன்று - வந்தது. விவரணம் - உடம்பிலே இத்யாதி. ஆனால் செய்யவடுப்பதென்னென்ன - ஹமதத்தன் இத்யர்தி. "பெருமதமாலை" என்றதுக்கு பதார்த்தம் - பெரியகிளர்த்தியை இத்யாதி. 'ஆனால் செய்யவடுப்பதென்? என்ன,— என்றவநந்தரம், 'ஹமதத்தன்' இத்யாதிவாக்யமநுஸந்தேயம்; இது "மணிமிகுமார்வு" இத்யாதிக்கு அவதாரிகை யென்றுகொள்ளவுமாம். மணி தான் மிகும்படியான மார்வென்று அர்த்தம் விவக்ஷித்து, இத்தால் ஃபலிதம் - ஸ்ரீகௌஸ்துபம் இத்யாதி. மணியே மிகும்படியான மார்வென்றர்த்தாந்தரம் விவக்ஷித்து, அத்தால் ஃபலிதம் - திருமார்வடங்க இத்யாதி. "வனமுலைகமழ்வித்து" என்று ஸம்ஶ்லேஷம் சொல்லாநிற்க, தத்விருத்தமன்றோ கௌஸ்துபமென்ன-கலவியிலும் இத்யாதி. அதுக்கடியேதென்ன - நிரதிசய இத்யாதி. நிரூபகமாகையாலும் கழற்றவொண்ணாதென்று பரிஹாராந்தரம் - இவளுடைய இத்யாதி என்னுதல், "மணிமிகுமார்வு, வனமுலை" என்ற பதத்வயத்துக்கும் பாவமாதல். பதார்த்தம் - அம்மார்வில் இத்யாதி. முல்லைப்போது-முல்லைப்போதாலே யென்றபடி. போது என்று - புஷ்பமாய், முல்லைப்பூமாலையைச் சொல்லுகிறது. "மணிமிகுமார்வு - முல்

ஸ்ரீகௌஸ்துபத்தோடு தோளில்மாலையோடு வாசியின்றிக்கே ஸம்போகோபகரணமாயிருக்கிறதாய்த்து. தோளில்முல்லைமாலையின் பரிமளத்தை என்முலைக்கு ஆக்கவேணும் என் கையாலே, அஸ்ராம்யமாகக் கலவியைச் சொன்னபடி. குளித்துப் பூச்சூட விருப்பாரைப் போலேயாய்த்து இம்முலைகள். இவை ப்ரஹ்மசாரிமுலையாகாமே, இம்மாலையில் பரிமளத்தாலே இவற்றை வாஸிதமாக்காய்; அம்மாலையில் பரிமளம் இங்கும், கோது அங்கு மாகப் பண்ணவேணும். அம்மாலையில் பரிமளம் முலையிலேயாம்போது கலவியையொழியக்கூடாதிறே; "கிம்முகம்வநமாலாஸங்க்ரமஸ்ய" (கிம்முகம்வநமாலாஸங்க்ரமஸ்ய) என்றாற்போலே. [வாயமுதம்தந்து] - ஸம்ஶ்லேஷரஸம் உந்மஸ்தகமாக மிக்கவாறே யாரணார்த்தமாகச் சிலபேச்சுண்டிறே பேசுவது, அப்பேச்சாதல்; அன்றிக்கே, வாக்ம்ருதத்தைச் சொல்லவுமாம். பேச்சு என்று நிர்வஹித்துப்போருவது [அணி இத்யாதி] - உன் போக்கைநினைத்து நாநீர் வருகிறதில்லை. அதுக்குப் பரிஹாரமாக உன்கையை என் தலைமேலே வைக்கவல்லையே? நாநீர்வருகைக்கு இவர்களுடைய முந்திரிகைப்பழம் இருக்கிறபடி. [அணிமிகுதாமரைக் கை] - ஆபரணப்ரசுரமாய், அதுதான் மிகையாம்படி "ஸர்வபூஷணபூஷார்ஹ:" (ஸர்வபூஷணபூஷார்ஹ:) என்கிறபடியே தனக்குத் தானே ஆபரணமென்கிற கையை. "பசுமேய்க்கப்போனால் வருமளவும் எனக்கு தாரகமாக உன்கையில் ஆபரணத்தைத் தா, உன்கையில் ஆபரணத்தைத்தா" என்று அவர்களுக்கு அற்றுக்காட்டி வாங்கியிட்டுவைக்குமே; பசுமேய்க்கப்போகைக்குத் தான்ஒப்பித்தபடியைச் சொன்னாளாகவுமாம். அத்தைச்செய்து அவன் போகப்புக்கவாறே ஶிதிலையாகிறாளிறே. [தாமரைக்கையை] - ஆபரணங்கள் மிகையாம்படியான கையை. [அந்தோ] - சேர்ந்து குளிர்ந்த தண்ணீரை விடாயர்க்கு வாராயென்று சொல்ல

லைப்போது" என்ற பதச்சேர்த்திக்கு பாவம் - ஸ்ரீகௌஸ்துபத்தோடு இத்யாதி. முலையைப் பரிமளிதமாக்கினாலமையுமோவென்ன - தோளில் இத்யாதி. அஸ்ராம்யமாக - கோப்யமாகவென்றபடி. முலை என்னாதே "வனம்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - குளித்து இத்யாதி. "என்" என்றதுக்கு பாவமர்தல். "வனம்" என்று - அழகு. "கமழ்வித்து" என்றதுக்கு பாவம் - இவை இத்யாதி. விவரணம்-அம்மாலை இத்யாதி. "வனமுலைகமழ்வித்து" என்று அஸ்ராம்யமாகக் கலவியைச் சொல்லும்படியென்னென்ன - அம்மாலையில் இத்யாதி. இதுக்கு உதாஹரணம் - கிம்முகம் இத்யாதி. வநமாலாஸங்க்ரமஸ்ய, கிம் முகம் - கிம் த்வாரம்: வழியேதென்றபடி. இந்த ப்ரமாணம் வந்தவிடத்தே கண்டுகொள்வது. வாயமுதம் - அம்ருதம்போன்ற வார்த்தையென்று முந்தினவர்த்தம். "அணி" இத்யாதிக்கவதாரிகையாதல், தாத்பர்யமாதல் - உன்போக்கை இத்யாதி. ரஸோக்தி- நாநீர் இத்யாதி. முந்திரிகைப்பழம் - த்ராக்ஷைப்பழம். "தாமரைக்கை" என்றதுக்கு பாவம் - அது தானும்மிகை இத்யாதி. ஸர்வபூஷணநிபூஷயிதுமர்ஹா: என்று விவக்ஷிதம். ஆபரணப்ராசுர்யத்துக் கடியேதென்ன; த்விவிதமாகக் காட்டுகிறார் - பசுமேய்க்க இத்யாதிவாக்யத்வயத்தாலே. அற்றுக்காட்டி - அத்யந்தபாரதந்த்ரனாயென்றபடி. தானே அலங்கரித்தால் உபேக்ஷிப்பானென்னென்ன - அத்தைச்செய்து இத்யாதி. 'அதுதான் மிகையாம்படி' என்று கீழ்ச்சொன்னத்தை பதோபாதாந பூர்வகமாக ஸப்தத்தி லேறிட்டருளிச்செய்கிறார் - தாமரைக்கையை இத்யாதி "ஆயதாஸ்ச ஸுவ்ருத்தாஸ்ச பாஹவ: பரிகோபமா: । ஸர்வபூஷணபூஷார்ஹா: கிமர்த்தம் ந விபூஷிதா:" ராமலக்ஷ்மணௌ த்ருஷ்ட்வா ஹநுமாந். "தாமரைக் கையை - நீ அணியாய்" என்றத்தைக் கடாக்ஷித்து, "அந்தோ!" என்றதுக்கு ஹார்த்தபாவம் - சேர்ந்து இத்யாதி. "தாமரைக்கை" என்று - கையில் குளிர்த்தியைச் சொல்லிற்றிறே, "அணி

வேண்டுவதே யுனக்கு ! [அடிச்சியோம்] - அழகுக்குத் தோற்ற தோல்வி சொல்லுகிறாள். [தலைமிசை நீயணியாய்]-ஆபரணத்துக்கு அக்கைபோலேயாய்த்து அக்கைக்கு இவள்தலை. "பாதபங்கயமே தலைக்கணியாய்" என்பது, "அடிச்சியோம்தலைமிசைநீயணியாய்" என்பதாய், காலைக்கையைப்பிடித்துக் காரியம் முற்றுவிக்கப் பார்க்கிறார்கள். "மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி" (மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி) என்றிறே இவர்களிருப்பது. "இந்நிர்ப்பந்தங்களெல்லாம் அறிவாரார்? வேணுமாகில் எடுத்துவைத்துக் கொள்ளாய்!" என்றான்; காலன்கொண்டு மோதிரமிடுவாரைப் போலே என்பேற்றுக்கு நான் யத்நம்பண்ணுமவளோ? நீயே மேல்விழுந்து தரக்கொள்ளுமவளன்றோ நான்? என்றும் அத்தலையாலே பேறவிருக்குமவர்களிறே இவர்கள்தான். [அணியாய்] - ஆற்றாமை மிக்கதென்று அல்வழக்குச் செய்யோங்காண்! நீ செய்வுற்றை நாங்கள் செய்யவோ? (ரு)

ஆறும் பாட்டு.

அடிச்சியோந்தலைமிசைநீயணியாய்ஆழியங்கண்ணா!உன்கோலப்பாதம்
பிடித்ததுநடுவுனக்கரிவையரும்பலர்அதுநிற்கஎம்பெண்மையாற்றோம்
வடித்தடங்கண்ணிணைநீரும்நில்லாமனமும்நில்லாஎமக்கதுதன்னாலே
வெடிப்புநின்பசுநிரைமேய்க்கப்போக்குவேம்எமதுயிரழன்மெழுகிலுக்கே.

ஆ.—(அடிச்சியோம்.) - உன்னுடைய அழகிய திருக்கைகளை அடியோங்களுடைய தலையிலேவைத்தருளித் திருக்கண்களாலே குளிரப் பார்த்தருளாயென்று பின்னையும் இங்ஙனே சொல்லுபளவில், "ஒருபகல்மாத்ரமேயன்றோ பசுமேய்க்கப் போய் நான் பிரிந்திருப்பது;இதுக்குஇங்ஙனே படவேணுமோ?" என்று அவன்சொல்ல; பசுமேய்க்கப் போகையாவது உனக்கு அபிமதைகளாயிருப்பாரோடே நீ கலந்து பரிமாறுகையிறே; ஆனபின்பு, இங்ஙனேபடவேணுமோ என்றுசொல்லலாமிறே யுனக்கு. அதுநிற்க, நாங்கள் உன்னைப்பற்றியல்லது தரிக்கமாட்டாத பிறவி பிறக்கையாலே உன்னைப்பிரியில் நாங்கள் தரிக்கமாட்டோம்: இக்கண்ணநீரும் நில்லாது: நெஞ்சுதளராநின்

மிகுதாமரைக்கையை" என்றவநந்தரம் "அடிச்சியோம்" என்றதுக்கு பாவம் - அழகுக்கு இத்யாதி. அடிச்சியோம் - சேஷபூதைகளோம். "அணிமிகுதாமரைக்கை" என்ற அழகுக்குத் தோற்றவென்றபடி. வையாதென்னாதே "அணியாய்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - ஆபரணத்துக்கு இத்யாதி- அதாவது - அக்கை ஆபரணத்துக்கு அலங்காரமானாற்போலே இவள் தலைக்கும் அக்கை யாபரணமானபடி என்றபடி."அக்கைக்குஇவள்தலை என்றது-பாடஸ்கலநத்தாலே வந்ததத்தனை; இவள்தலைக்குஅக்கை என்றே பாடம்" என்றருளிச்செய்வர். "நீ யணியாய்" என்று நிர்ப்பந்திப்பானென்னென்ன ; ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - பாதபங்கயமே இத்யாதி. "அணியாய்" என்கைக்கு, இவர்களாபரணமென்று நினைத்திருப்பார்களோவென்ன - மதீய இத்யாதி. ஸ்தோத்ரே, "கதாபுநஃ" இத்யாதி. 'இவர்களிருப்பது' என்று பஹுவசநமாகச் சொன்னது, இவர் ப்ரார்த்தித்தது எல்லார்க்குமொக்குமென்று தோற்றுகைக்காக. "நீயணியாய்" என்றதுக்கு அவதாரிகை-இந்நிர்ப்பந்தங்கள் இத்யாதி. "நீயணியாய்" என்றதுக்கு பாவம் - காலன் இத்யாதிவாக்யத்வயம். ஸ்வாபதேசம் - என்றும் இத்யாதி. காலன்கொண்டு - காலபுருஷதாநம் வாங்கி. "காலன்கொண்டு" இத்யாதி வாக்யவிவரணம் - ஆற்றாமை இத்யாதி. அல்வழக்கு - அப்ராப்தம்.

(ரு)

றது. ஆதலால், நீ பசுநிரைமேய்க்கப் போகிறது, எங்களுக்கு ஒன்றும் பொறுக்கவொண்ணாது; எங்கள்உயிரானது விரஹாக்நியாலே வேவக்கிடாய் புகுகிறதென்கிறாள்.

ஒ.—ஆறும்பாட்டில், போனபோன விடங்களெல்லாம் உனக்கு அபிமதைகளான பெண்கள் அநேகர் உளர்: உனக்கு ஒரு குறையில்லை: நாங்கள் உன்னைப்பிரிந்து தரிக்கமாட்டுகிறிலோம்: உன்போக்கானது, எங்களுக்கு அஸஹ்யமென்கிறாள்.

[அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய் ஆழியங்கண்ணா] - கடல்போலேயிருக்கிற அழகியகண்களாலே என்னைக் குளிரநோக்கி என்தலைமேலே கையை வைத்தருளவேணும். [உன்கோலப்பாதம் பிடித்ததுநடு வுனக்கு அரிவையரும்பலர்] - 'நான் போகிறேனாகக்கொண்டே இங்ஙன்படுகிறது; போனால்தான் உன்னைப்பிரிந்து தரிப்பனோ?' என்ன,—நீபோனவிடத்திலே நடுவே உன்திருவடிகளைப்பிடிப்பார் உனக்கு அபிமதைகளும் பலர். [அதுநிற்க எம்பெண்மையாற்றோம்] - அவர்கள் இடையாட்டம் நிற்க, நாங்கள் எங்கள் பெண்மைகொண்டு செலுத்தமாட்டோம். ஜீவிக்கமாட்டோம் என்று கருத்து. [வடித்தடங்கண் ணின்றுமேலுக்கு] - கூர்த்துப் பெருத்திருந்துள்ள கண்கள் நீர்மாறுகிறதில்லை. மநஸ்ஸு ஶிதிலமாகாநின்றது. ஆகையாலே எங்களுக்கு உன்னுடைய பசுநிரைமேய்க்கப்போக்காகிறது அஸஹ்யம். நீபோகிறாயென்று எங்கள் ஆத்மா நெருப்பிலிட்ட மெழுகுபோலே ஶிதிலமாய் வேவாநின்றது.

ப.—அநந்தரம், உன்னுடைய விஶ்லேஷம் எங்களுக்குக்லேஶமாயிருக்கும்; எங்கள் ஆர்த்தி தீரும்படி அஸாதாரணஸ்வபாவனான உன்னுடைய திருவடிகளைத் தலையிலே வைத்தருளவேணுமென்கிறாள்.

ஆழி - கடல்போலே (அளவிடவொண்ணாதஸ்வபாவத்தையுடையையாய்), அம் - ஶ்லாக்யனான, கண்ணா - க்ருஷ்ணனே! உன் - உன்னுடைய, கோலப்பாதம் - அலங்காரோத்தரமான திருவடிகளை, அடிச்சியோம் தலைமிசை - அநந்யார்ஹைகளான எம்தலைமேலே, நீஅணியாய் - நீ வைத்தருளவேணும்; (வந்தால் செய்கிறோமென்னவொண்ணாது); நடுவு - (நீபோகிறகார்யத்துக்கு) நடுவே, (காற்கட்டாம்படி), அது பிடித்து - அத்திருவடிகளைப் பிடித்து, அரிவையரும் - தங்கள் மேன்மை தலைபெற்றிருப்பாரும், உனக்கு - உனக்கு, (பஞ்சலக்ஷக்குடியும் சேஷமாகையாலே), பலர் - பலருமுண்டாயிருக்கும்; (உன்பரப்பைச் சுருக்கப்புகுகிறோமோ?) அது நிற்க -: எம்பெண்மை - எங்கள் ஸ்த்ரீத்வத்தை, ஆற்றோம் - ஆற்றி அடக்கமாட்டுகிறிலோம்; (உன்னைப்போலே வன்மையின்றியே அபலைகளான எங்களுக்கு ஆற்றாமையாலே), வடி - மாவடுவிற்பிளவுபோலே ஶ்லாக்யமாய், தட - பெருத்து, கண்ணிணை - (நீ ஶ்லாகிக்கும்) கண்களிரண்டில், நீரும் நில்லா - நீரும் தகைவுபட்டுநிற்கிறதில்லை; மனமும் - நெஞ்சும், நில்லா - ஒருநிலையில் நிற்கிறதில்லை; அதுதன்னாலே - ஆகையாலே, (எமக்கு), நின் - உன்னுடைய, பசுநிரை மேய்க்கப்போக்கு - பசுமேய்க்கப்போக்கு, வெடிப்பு - உத்வேககரமாயிராநின்றது; எமதுஉயிர் - எங்களாத்மாவானது, அழல் - நெருப்பில், மெழுகில் - மெழுகுபோலே, உக்கு - உருகி, வேம் - வேவாநின்றது. அபரிச்சேத்யமான கடல்போன்ற கண்ணையுடையவனென்றுமாம்.

இ.—ஆறும்பாட்டில், உனக்குப் போனவிடமெங்கும் அபிமதைகள் பலர் உளர்; உனக்கு ஒரு குறையில்லை, நாங்கள் உன்னைப்பிரிந்து தரிக்கமாட்டுகிறிலோம்; உன்போக்கானது எங்களுக்கு அஸஹ்யமென்கிறாள்.

[ஆழியங்கண்ணு - அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய்] - கண்ணாலே குளிரநோக்கவும்வேணும், தலையிலே கையை வைக்கவும் வேணுமென்கிறாள். உனக்குத் தோற்றுரை "ஐயோ!" என்று குளிரநோக்கி ஈரக்கையாலே தடவவேண்டாவோ? [ஆழியங்கண்ணு] - கடல்போலே ப்ரமஹரமாய், ஊர்பரநீயமான கண். [தலைமிசை நீ அணியாய்] - என்கிற அதினருகேயாகையாலே, 'ஆழிபங்கண்ணு' - என்கிற ஸம்போதநத்துக்கு - குளிரநோக்கியருள வேணுமென்று கருத்து. நான் போகிறேனுகக் கொண்டோ நீங்கள் படுகிறது? இது உங்களைக்குறித்து நான் சொல்லும் வார்த்தையன்றோ? எனக்குப்போக்குண்டோ? போனால் விஷயாந்தரமுண்டோ? என்ன,—[உன் கோலம் இத்யாதி] - அதாகில் உன்திருவடிகளையேபற்றி வர்த்திப்பாரும் அநேகரில்லையோ? உனக்குப் போனவிடமெங்கும் பெரியதிருநாளன்றோ? [நடுவு] - போகிற கார்யமொழிய நடுவே. [அரிவையர்] - தங்கள் பருவத்தாலே துவக்கவல்லவர்கள். [பலர்] - ஒருவரிருவரோ? "ஷோடஶஸ்த்ரீஸஹஸ்ராணி" அன்றே. [அதுநிற்க] - அதுகிடக்கிடாய். ஆனைக்கூட்டத்துக்குக் கதவிட்டு உன்னை நியமிக்கப்போகிறோமோ? [எம்பெண்மையாற்றேம்]-எங்களுடைய ஸ்த்ரீத்வம்கொண்டு ஆற்றமாட்டோமென்கை. ஜீவிக்கமாட்டுகிறிலோமென்கை. ஸ்த்ரீத்வம் ஸ்வரூபமானால் வருந்தித் தரிக்கவேண்டாவோ? என்ன, - [வடித்தடங்கண்ணிணை நீரும் நில்லா] - எங்களைப் பார்க்கமாட்டாயோ? ஜீவிப்பார்க்குள்ள லக்ஷணமுண்டாயிருந்ததோ? கூர்த்துப் பெருத்தகண்கள் நீர்மாறுகிறதில்லை. 'ஓரானும்ஒருநோக்கும் நேராம்படி இதொரு கூர்மையே! ஹோமயதையிட்பரப்பு ஹோக்தாக்களளவன்றிக்கே யிருப்பதே!' என்று நீ வாய்வெருவும் கண்கள் படுகிற்பாடு பாராய்! [நீரும்நில்லா] - உன்னைத்தகையிலும் கண்ணநீர் தகையப்போகிறதில்லை. [மனமும்நில்லா] - "நெஞ்சில் தைர்யத்தாலே கண்ணநீரைத் தகைவோம்" என்னவொண்ணுதபடி மநஸ்ஸில் தைர்யமும் போய்த்து. [எமக்கு]- பிரிவிலும் நெஞ்சு நெகிழாதொழிகைக்கு நீயன்றே நாங்கள். [அதுதன்னாலே]-மநஸ்ஸு ஶிதிலமாகையாலே. [வெடிப்புநின்பசுநிரைமெய்க்கப்போக்கு] - உன்னுடைய பசுநிரை மேய்க்கப்போக்காகிறது எங்களுக்கு வெடிப்பு. வெடிப்பாவதென்? என்ன - [வேம் எமதுயிர் அழல்மெழுகிலுக்கே]- எங்கள் ஆத்மா நெருப்பிலிட்ட மெழுகுபோலே ஶிதிலமாய் உஹியாநின்றது.

ஈடு.—ஆரும்பாட்டு. உனக்குப் போனவிடமெங்கும் அபிமதைகள் பலருளர்; உனக்குஒருகுறையில்லை, நாங்கள் உன்னைப் பிரிந்து தரிக்கமாட்டுகிறிலோம்: உன் போக்கானது எங்களுக்கு அஸஹ்யமென்கிறாள்.

[அடிச்சியோந்தலைமிசை நீயணியாய் ஆழியங்கண்ணு] - தோற்றுரை ஈரக்கையாலே தடவவேண்டாவோ? [ஆழியங்கண்ணு] - கடல்போலே ப்ரமஹரமாய் ஊர்ஶநீயமான கண். 'நீயணியாய்' - என்கிறவதினருகே 'ஆழியங்கண்ணு' என்கையாலே -

ஆரும்பாட்டு.— அடிச்சியோம் இத்யாதி. "உன்கோலப்பாதம்பிடித்து" என்று தொடங்கி "வெடிப்புநின்பசுநிரைமேய்க்கப்போக்கு" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - உனக்கு இத்யாதி.

'அடிச்சியோந் தலைமிசை நீயணியாய்' என்றது - அநுவாதம். தாத்பர்யம் - தோற்றுரை இத்யாதி. தோற்றுரையென்றது - "அடிச்சியோம்" என்றத்தைப்பற்ற. இங்கே கண்ணழகைச் சொன்னதுக்கு ஹாவம் - நீயணியாய் இத்யாதி. திருக்கைகளாலே ஸ்பர்ஶித்தமாத்ரமன்றிக்கே

‘திருக்கண்களாலே குளிரநோக்கவேணும். உங்கள்கையாலே ஸ்பர்மிக்கவேணும்’ என்றன்றோ நானிருப்பது? எனக்குப் போக்குண்டோ? போனால் உங்களையொழியப் புறம்பு விஷயந்தானெனக்குண்டோ வென்ன? - ஓங்காண்! இதுகிடக்கிடாய்! [உன்கோலம் இத்யாதி]-உன்திருவடிகளைப் பற்றியிருப்பார் அநேகர்; உனக்குப்போனபோன விடமெங்கும் பெரியதிருநாளன்றோ? [நடுவே] - போகிறகார்யமொழிய நடுவே. [அரிவையர்] - தங்கள் பருவத்தாலே துவக்கவல்லவர். [பலர்] - ஒருவரிருவரோ? “ஷோடஶஸ்த்ரீஸஹஸ்ராணி,” (ஷோடஶஸ்த்ரீஸஹஸ்ராணி,) “பதினாறுமாயிரவர்தேவிமார்.” [அதுநிற்க] - அதுகிடக்க. ஆனைக்கூட்டத்துக்குக் கதவிடப் புகுகிறோமோ? [எம்பெண்மையாற்றோம்]- எங்கள் ஸ்த்ரீத்வங்கொண்டாற்ற மாட்டுகிறிலோம். நீ போனால் நாங்கள் ஜீவிக்கமாட்டோம். ஸ்த்ரீத்வம் ஸ்வரூபமானால் வருமளவும் வருந்தி தரிக்கவேண்டாவோவென்ன - [வடித்தடங்கண்ணிணை நீரும்நில்லா] - எங்களைப்பார்க்கமாட்டாயோ? ஜீவிப்பாருடைய லக்ஷணமுண்டோ எங்களுடம்பில்? கூர்த்துப் பெருத்திருந்துள்ள கண்கள் நீர்மாறுகிறதில்லை. ஓராளும்ஒருநோக்கும் நேராம்படி இதொருகூர்மையே! “போக்யதையில் பரப்பு போக்தாக்கள் அளவன்றியே இருக்கும்படியே!” என்று நீ வாய்வெருவும் கண்கள் படுகிறபாடு பாராய்! [நீரும்நில்லா] - நீ நிற்கிலும் நீர் நிற்கிறதில்லை. உன்னைத் தகையிலும் நீரைத் தகையப்போகிறதில்லை. ‘நில்லாவாவதேன்? வருந்தித் தகையவேண்டாவோ’ என்ன,— ஊற்றைத் தகையவேணுமே இது நிற்கும்போது? என்கிறாள். ஆனால்,ஊற்றான நெஞ்சைத் தகையுமித்தனையன்றோ வென்ன? - [மனமும்நில்லா]- தைர்யபங்கம் பிறந்து நாங்கள் படுகிறபாடு பாராயோ? வருந்தி நெஞ்சைப்பிடித்து தரிக்கவேண்டாவோ? என்ன ;— [நமக்கு] - நீயாகவேணுமே யதுக்கு : பிரிகைக்கும் பிரிவில் நெஞ்சிளையாமைக்கும்; * யாமுடையாயன்றன்மனம்கல்லிறே. [அதுதன்னாலே] - இப்படி மநஸ்ஸு ஶிதிலமாகையாலே. [வெடிப்பு நின்பசுநிரைமேய்க்கப் போக்கு] - நீபசுமேய்க்கப் போகிற

திருக்கண்களாலே நோக்கவும்வேணுமென்றபடி. மேலுக்கவதாரிகை - உங்கள் இத்யாதி. தாத்பர்யம் - உன்திருவடிகளை இத்யாதி. விவரணம் - உனக்கு இத்யாதி. போகிறகார்யமொழிய - பசுமேய்க்கப்போகிற கார்யமொழிய. “உனக்கு-நடுவு - உனக்காலப்பாதம்பிடித்தது - அரிவையரும் பலர்” என்றந்வயிப்பது. “பிடித்தது”என்றது - பிடிக்கிறதுக்கென்றபடி. அரிவையர் - யுவதிகள். “பலர்”என்றதுக்கு ப்ரமாணங்கள்-ஷோடஶ இத்யாதி. “ஷோடஶஸ்த்ரீஸஹஸ்ராணி ஶதமேகம் ததோதிகம் । தாவந்தி சக்ரே ரூபாணி பகவாந்தேவகீஸுத:” இதிபஞ்சமேம்ஶே ஏகத்ரிம்ஶே (௩௧). பெரியாழ்வார்திருமொழி (௪-௯-௪). “அதுநிற்க” என்றதுக்குஹார்த்தபாவம்- ஆனைக்கூட்டத்துக்கு இத்யாதி. ஆனைக்கூட்டத்துக்குக்கதவிட-ப்ரதிபந்தகம்பண்ண. விவரணம் - நீபோனால் இத்யாதி. “பெண்மையாற்றோம்” என்றவநந்தரம் “கண்ணிணைநீரும்” இத்யாதிமேலுக்கெல்லாம் ப்ரஶ்நோத்தரரூபேண பாவம் - ஸ்த்ரீத்வம் இத்யாதி, எங்களை இத்யாதி வாக்யத்வயம். ஶப்தார்த்தம் - கூர்த்து இத்யாதி. கூர்த்து-கூர்மைப்பட்டு - வடி - கூர்மை. “வடித்தடங்கண்ணிணை” என்று கண்ணழகை வர்ணிக்கிறதுக்கு பாவம் - ஓராளும் இத்யாதி. ஒருநோக்குக்கு ஓராள் தப்பாதபடி யகப்படுகை. “நீரும்” என்ற சப்தார்த்தம் - நீநிற்கிலும் இத்யாதி. விவரணம் - உன்னை இத்யாதி. “மனமும்நில்லா” என்றதுக்கு பாவம் - ஊற்றை இத்யாதி. “மனமும்” என்ற சப்தார்த்தம் - தைர்யபங்கம் இத்யாதி. “எமக்கு” என்றதுக்கு வ்யாவர்த்யகதநபூர்வகமாக பாவம் - நீயாகவேணுமேயதுக்கு என்று. “அதுக்கு” என்றத்தைக் காட்டுகிறார்-பிரிகைக்கும் இத்யாதி. இளையாமைக்கும் - கடிநமாகைக்கும். அப்படி கடிநமோவென்ன - யாமுடை இத்

இது - வெடிப்பு. வெடிப்பாவதேன்னென்ன? - [வேமித்யாதி] - எங்களுடைய ப்ராணனது அக்நிஸகாஶத்தில் மெழுகிலுங்காட்டில்உருகிவெந்துபோகாநின்றது. உன் பசுநிரைமேய்க்கப் போக்கானது வெடிப்பு - விநாசம். (சு)

ஏழாம் பாட்டு.

வேமெமதுயிர்அழல்மெழுகிலுக்குவெள்வளைமேகலைகழன்றுவீழ, தூமலர்க்கண்ணிணைமுத்தஞ்சோரத்துணைமுலைபயந்தெனதோள்கள்வாட, மாமணிவண்ணா!உன்செங்கமலவண்ணமென்மலரடிநோவநீபோய், ஆமகிழ்ந்துகந்தவை மேய்க்கின்று உன்னொடசுரர்கள்தலைப்பெய்யில் யவன் கோல்ஆங்கே?

ஆ.—(வேம்எமதுயிர்.) - விரஹாக்நியாலே எங்களுயிர்வேவ, ஆஶ்ரயம் முடிகையாலே வளைகளும் மேகலையும் கழன்றுவீழ, உன்னைக்காண்கையாலே புதுக்கணித்த என் கண்கள் அருவிசோர்ந்து துணைமுலைபயந்து என் தோள்கள்வாட, அதின்மேலே, உன்திருமேனியும் அதிகோமளமான உன் திருவடிகளும் நோவ, நீபோய், ஆமகிழ்ந்து உகந்தவைமேய்க்கின்று, உன்னொடு அஸுரர்கள் தலைப்பெய்யில் என்னும் விளையக்கடவதென்கிறாள்.

ஒ.—ஏழாம்பாட்டில், நாங்கள் நோவுபட உன்னுடைய ஸுகுமாரமான திருவடிகள்நோவ நீபசுமேய்க்கப்போனால் அங்கே அஸுரர்வந்துகிட்டில் என்ன ப்ரமாதம் புகுரக்கடவதென்கிறாள். [வெள்வளை என்று மேலுக்கு] - விரஹகார்ஶ்யத்தாலே வெள்வளைகளும் மேகலைகளும் கழன்று விழும்படியாகவும், அழகிய கண்கள் நீர்சோரும்படியாகவும், முலைகளும் விவர்ணமாய்த் தோள்களும் வாடும்படியாகவும். [மாமணிவண்ணா] - பெருவிலையனான நீலமணிபோன்ற திருநிறத்தையுடையவனே:

ப.—அநந்தரம், ஊர்மநீயமான நீலரத்நம்போலே முடிந்தாளலாம்படி ஸுலபனான நீ, பசுமேய்க்கப்போனால் அங்கே அஸுரர்கள் வரில் என்னும்? என்று எங்கள் ஆத்மா பரிதபியாநின்றதென்கிறாள்.

வெள் வளை - வெளுத்தசங்குவளையும், மேகலை - அரையின்மேகலையும், கழன்றுவீழ - பொருந்தாமல் கழன்றுவிழும்படியாகவும், தூ - அழுக்கற்ற, மலர் - செவ்வித்தாமரைப்பூப்போலே, கண்ணிணை - நீவிரும்பின கண்களிரண்டும், முத்தம் - ஶோகாஶ்ருபிந்துக்களானவை, சோர - அவஶமாக ப்ரவஹிக்கவும், துணைமுலை - நீசேர்த்தியழகு கொண்டாடும் முலைகளிரண்டும், பயந்து - விவர்ணமாய், எனதோள்கள் -

---

யாதி. வெடிப்பாவதேன்னென்ன என்றது - விநாசமான ப்ரகாரமேதென்னவென்றபடி. "வெடிப்பு" என்றதின்விவரணம் - "எமதுயிர்அழல்மெழுகிலுக்கு- வேம்" என்றது. அழல்-அக்நி. மெழுகில் - மெழுகிலுங்காட்டில், உக்கு - உருகிப்போய். 'ஆழியங்கண்ணா - அடிச்சியோம்தலைமிசை நீயணியாய்; நடவு - உன்கோலம் - பிடித்தது - அரிவையரும் - உனக்கு - பலர்: அதுநிற்க என்றுதொடங்கி, 'அதுதன்னாலே - நின்பசுநிரைமேய்க்கப்போக்கு - வெடிப்பு; எமதுயிரழல்மெழுகிலுக்கு - வேம்' இத்யந்வயீ. "வெடிப்பு" என்று - அஸஹ்யமாய், விநாசமென்றபடி. (சு)

என்தோள்கள், வாட - உபவனமொழிந்தகொடிபோலேவாடும்படியாகவும், மாமணி - ஶ்லாக்யமான நீலரத்நம்போலே (முடிந்தாளலாம்படி ஹ்ருத்யமான), வண்ணா - வடிவை யுடையவனே! செங்கமலம் - சிவந்தகமலம்போலே வண்ணம் - தர்ஶநீயமாய், மென் மலர் - புஷ்பஹாஸஸுகுமாரமான, உன் அடிநோவ - உன்திருவடிகள் நோவும்படி, நீ போய்-(பிரிவில்தரிப்பாரான)நீ போய், (எங்களைப்போலன்றியிலே), ஆ-பசுக்களளவிலே, மகிழ்ந்து உகந்து - அத்யந்தம்ஹ்ருஷ்டனாய் ஆதரித்து, அவை மேய்க்கின்று - அவற்றை மேயாநிற்கிறவிடத்திலே, உன்னோடு - கலஹமிடும் உன்னோடே, அசுரர்கள் - (அரிஷ்டதேநுகாதிகளாகிற) அஸுரர்கள், தலைப்பெய்யில் - தலைப்படில், யவன்கொல் - என்வருகிறதோ? (என்று), எமதுயிர் - எங்களாத்மாவானது, அழல் - நெருப்பில், மெழுகில் - மெழுகுபோலே, உக்கு - உருகி, வேம் - வேவாநின்றது.

இ.—ஏழாம்பாட்டில், நாங்கள் நோவுபட உன் ஸுகுமாரமான திருவடிகள் நோவப் பசுமேய்க்கப்போனால், அங்கே அஸுரர்கள்கிட்டில் என்னாய் விளையுமென்கிறாள்.

[வேய்எமதுயிர் இத்யாதி] - உனக்குஹ்ருதயவைஷம்யமில்லையாகில் எங்கள் உபதேஶங்கொண்டாகிலும் அறியாய் [எமதுயிர்]-உனக்கில்லையென்னுமிடம் கண்டோமிறே. [வெள்வளை இத்யாதி] - ஶங்கவளை. விரஹகார்ஶ்யத்தாலே வெள்வளைகளும் மேகலைகளும் கழன்று விழும்படியாகவும். பிறரறியாமைக்காகப் பலகாலுமெடுத்திடுவது பேணுவதானாலும் அவை நிராஶ்ரயமாக நில்லாவிறே. அழகிய தாமரைப்பூப்போலேயிருக்கிறகண்கள் ஶோகாஶ்ரு விழும்படியாகவும். ஆநந்தாஶ்ருவுக்கு யோக்யமான கண்களை ஶோகாஶ்ருவுக்குஇலக்காக்கப் புகுகிறாயே. ஸம்ஶ்லேஷதஶையில் ஆநந்தாஶ்ருவைக்கண்டு, தாமரையிலே முத்துப்பட்டாற்போலே "இதொரு கண்ணழகே!" என்று கொண்டாடும் நாயகஸமாதியாலே தன்கண்ணழகைச் சொல்லுகிறாளிறே. [துணைமுலைபயந்து] - நீசேர்த்தி அழகு கொண்டாடும் முலை விவர்ணமாய், எனதோள்கள் ஆஶ்ரயமிழந்ததளிர்போலே வாடும்படியாகவும். [மாமணிவண்ணா] - முன்பு அவனழகைச்சொன்னாள்; இப்போது தன்னழகைச்சொல்லுகிறாள். பெருவிலையனான நீலமணிபோன்ற வடிவையுடையவனே! இவ்வடிவைக்கொண்டே போகப்புகுகிறது? [உன் செங்கமல வண்ணமென்மலரடி நோவ] - விகாஸம்செவ்வி குளிர்த்தி நாற்றத்துக்கு தாமரையை ஒப்பாகச்சொல்லும், ஸௌகுமார்யத்துக்குச் சொல்லலாவதில்லை. [நீ போய்] - புக்கவிடத்திலே ஊர்ப்பூசல் விளைக்கும் நீ போகக்கடவையோ? குணாதிகனான சக்கரவர்த்தித் திருமகனாய் வழிகொடு வழிபோகிறாயன்றே. போகத் தவிராதானால் "அக்ரதஸ்தே கமிஷ்யாமி" என்று முன்னேபோய் நான் வழிபண்ணினாலன்றோபோவது. [ஆமகிழ்ந்து இத்யாதி] - எங்களைப்போலன்றியே பசுக்களைவிரும்பி. [உகந்தவை] - நீ அவற்றுக்கு உகந்துகொண்டு மேய்க்கிறவிடத்திலே. நீ அங்யபரனான ஸமயத்திலே. [உன்னோடு அசுரர்கள் தலைப்பெய்யில்] - உன்னோடே துஷ்ப்ரக்ருதிகள் கிட்டில், கருமுகைமாலையை நெருப்புக்கிட்டினாற்போலே. [யவன்கொல்ஆங்கே] - அங்கு என்னாய் விளையுமென்றபடி. நாம் புக்கவிடத்தில் வெற்றியல்லதுண்டோவென்ன; "அநவஸ்தாநம் ஶௌர்யம்" என்று சொல்லுகிறபடியே யுத்தத்தில் ஜயாபஜயங்கள் வ்யவஸ்திதமாயிருக்குமோ? அங்குப்பிறக்கும் ப்ரமாதத்தைத் தன்வாயாற்சொல்ல மாட்டாமையாலே, என்னாய் விளையுமென்கிறாள்.

ஈடு.—ஏழாம்பாட்டு. 'நாங்கள்நோவுபட,உன்ஸுகுமாரமான திருவடிகள் நோவப் பசுமேய்க்கப்போனால், அங்கே அஸுரர்கள் கிட்டினால் என்னாய்விளையும்?' என்கிறாள். [வேம் இத்யாதி] - உனக்கு ஹாவஸம்பந்தமில்லாமையாலே தெரியாவிட்டால் எங்கள் உபதேசங்கொண்டு அறிந்தாலாகாதோ? 'எமதுயிர்வேம்' என்கையாலே, உனக்கு அதில்லை என்றதாமிறே. [வெள்வளை இத்யாதி] - சங்குவளை. விரஹகார்ஶ்யத்தாலே வெள்வளைகளும் மேகலைகளும் கழன்றுவிழும்படியாகவும். பிறர் அறியாதபடி பலகாலும் எடுத்திடுவது பேணுவதானாலும், அவை நிராஶ்ரயமாக நில்லாவிறே; ஆகாசத்தில் தோங்காதே: அப்படிகாணும் உடம்பு க்ருஶமானபடி. [தூமலர் இத்யாதி]-நாயகஸமாதியாலே சொன்னபடி. என்? தன்கண்ணைத்தானே நாயகன் இப்படி சொன்னானேயென்னில், *"கண்களாயதுணைமலர் - காவியும் நீலமும் வேலும் கயலும் பலபலவென்றிருக்கும்" என்றானிறே. [தூமலர்க்கண்ணிணைமுத்தஞ்சோர] - உனக்கு ஓர் அபூர்வம் காணலாம்: போகாதேகிடாயென்கிறாள். தாமரைப்பூவிலே முத்துப்பட்டது; நேத்ரஜாதமான முத்திறே. அவனுக்குத் தோழிசொல்லச் செவியேறுகேட்டுச் சொல்லுகிறாள். *"ஞாலமெய்தற்குரியன வொண்முத்தும் பைம்பொன்னுமேந்திற்றின" என்று(கருத்தறிந்தபடியைத் தான்) சொன்னானே. [துணைமுலைபயந்து] - நீ சேர்த்தியழகு சொல்லிக்கொண்டாடும் முலைகளானவை வைவர்ண்யத்தை ஹ்ஜியாநின்றன; 'அவனுடைய கோயிற்கட்டணமழிகிறது' என்கிறாள். [எனதோள்கள்வாட] - அவயவிபோனால் தோளிணை பின்னைவாடுமித்தனையிறே. அப்ர

ஏழாம்பாட்டு.—வேம்எமது இத்யாதி.*பாட்டையெல்லாம் கடாக்ஷித்தவதாரிகை*-நாங்கள் *இத்யாதி. "வேம் எமதுயிர் அழல் மெழுகிலுக்கு" என்ற அநுவாதத்துக்கு ஹாவம்*-உனக்கு இத்யாதி *ஹாவபந்தமில்லாமைக்கு ஸூசகமேதென்ன* - எமதுயிர் இத்யாதி. *புத்திபூர்வகமாகதரித்த வளையும் மேகலையும் கழன்று விழுவானேன்னென்ன* - பிறரறியாதபடி இத்யாதி. *இது "வீழ" என்ற வர்த்தமாநார்த்தம். ஶரீரமிருக்க ஆகாசமென்பானேன்னென்ன* - அப்படிகாணும் இத்யாதி. *தன்கண்ணைத்தானே வர்ணிக்கலாமோ? என்ன* - நாயக இத்யாதி. நாயகஸமாதியாலே - *நாயகன் சொல்லுகிறஆகாரத்தாலே. 'என்? தன்கண்ணைத்தானே' என்று* - *வ்யாக்யாதாவினீடுபாடு. திருவிருத்தம் அறுபத்தேழாம்பாட்டு, "காவியும் நீலமும்" இத்யாதி. கண்களாகிற பரஸ்பரஸத்ருஶமான இரண்டுபூக்கள், சிவப்பாலே செங்கழுநீரையும், கருமையாலே நெய்தலையும். ஓராளுமொரு நோக்கும் நேராயிருக்கும்படியாலே வேலையும், மௌக்த்யத்தாலே கயலையும், மற்றுமொப்பாகச் சொல்லும் பலவற்றையும் ஜயித்திருக்குமென்று ஶப்தார்த்தம்.* கண்களாயதுணைமலர் *என்று - அந்வயித்துச்சொன்னபடி. "தூமலர்க்கண்ணிணைமுத்தம் சோர" என்றதுக்கு ஹார்த்தஹாவம் -* உனக்கு *இத்யாதி. அந்தஅபூர்வமேதென்ன*-தாமரைப்பூவிலே *இத்யாதி. ரஸோக்தி*-நேத்ரஜாத *இத்யாதி. நேத்ரத்திலேயுண்டானவென்றும், ஶ்ரேஷ்டமானவென்றும் அர்த்தத்வயம். "முத்தம்சோர" என்கைக்கு தன்கண்ணழகு தனக்குத் தெரியுமோவென்ன* - அவனுக்கு இத்யாதி. செவியேறுகேட்டு - *செவியேற்றாலே கேட்டு. காதாலே கேட்டென்றபடி. அம்மாத்ரமன்றிக்கே அவன்சொல்லவும் கேட்டிருக்குமென்கிறார்*-ஞாலமெய்தற்கு *இத்யாதி. பூமியை ப்ராபிக்கைக்குத் தக்கவையாய் வெளுத்தமுத்தையும் பசும்பொன்னையும் ஏந்திற்றின வென்றபடி. திருவிருத்தம், "அரியனயாமின்று" இத்யாதி. "துணைமுலை" என்றதுக்கும் கீழ்ச்சொன்னப்ரகாரமேயென்கிறார்* - நீ சேர்த்தியழகு *இத்யாதி.* தூமலர்க்கண்ணிணைமுத்தம்சோர - *அழுக்கற்ற செவ்விமலர் போன்ற கண்களிரண்டும் ஶோகாஶ்ருபிந்துக்கள் ப்ரவஹிக்கவென்று ஶப்தார்த்தம்.* துணைமுலை பயந்து - *சேர்த்தியழகையுடைய முலை வைவர்ண்யத்தையடைந்து இதிஶப்தார்த்த:. இத்தால் ஹாவம்* - அவனுடைய *இத்யாதி. "மலராள்தனத்துள்ளான்" என்கையாலே 'கோயிற்கட்டணம்' என்கிறார்.* கோயிற்கட்டணம்-*அந்த:புரம்.*வாடுகைக்கடியேதென்ன - அவயவி *இத்யாதி.* அவயவி போனாலென்றது- *"மேகலைகழன்றுவீழ" என்றத்தைப்பற்றவாதல், "முலைபயந்து" என்றதுஶரீரத்*

யோஜநத்திலேநின்று பரக்கிறதேன்? இதுக்குமுன்பு அவனிழவு சொன்னாள்; மேல், தன்னிழவு சொல்லுகிறாள். [மாமணிவண்ணா] - நீலரத்நம்போன்ற வடிவையுடையவனே! மா என்று - கறுப்பு. இவ்வடிவைக் கொண்டே நீபோகிறது? வெய்யில் கானல்பொறுக்குமோ இவ்வடிவு? உன்னைநீ பிரிந்தறியாயே! [உன் இத்யாதி] - விகாஸாதிகளால் தாமரையை ஒருபோலியாகச் சொல்லலாயிருக்கும், மார்த்தவத்துக்கு ஒப்பில்லை. [நீபோய்] - தன்காலாலே போகவேணும் அவன் என்றிருக்கிறாள் காணும். "[illegible]" (அக்ரதஸ்தேகமிஷ்யாமிம்ருத்நந்தீகுஸகண்டகாந்) என்னுமவளிறே. போக்குத்தவிராவிட்டால் பின்னை வழிக்குக்கடவார் †வழிதிருத்தினால் போகவேண்டாவோ? [நீபோய்] - குணாதிகனை சக்ரவர்த்தித்திருமகனே வழிபோய்வழிவருகைக்கு; போனபோனவிடமெங்கும் பூசல்விளைக்குமவனிறே. [ஆமகிழ்ந்து] - எங்களைப்போலே உபேக்ஷித்திருக்கிறாயல்லையே பசுக்களை. [உகந்தவை மேய்க்கின்று] - அவற்றின் பக்கலுண்டான விருப்பத்தாலே அவற்றையுகந்து மேயாநிற்புதி. [மேய்க்கின்று] - மேயாநின்றவிடத்தில் அந்யபரனை அந்த ஷித்ரத்திலே. [உன்னோடசுரர்கள்தலைப்பெய்யில்] - கருமுகைமாலையும் காலாக்நியும் கூடினாற்போலேயிறே. [யவன்கொலாங்கே] - ஆங்கு - யவன்கோல்? எவன்கோலேன்றபடி. அங்கேன்னாய்விளையுமோ? நாம்எங்கேனும்போகிலும் ஆரேனும்கிட்டிலும் வெற்றிநம்மதன்றோஎன்னுமே அவன். "[illegible]" (அவ்யவஸத்தேளஹித்ருஶ்யேதேயுத்தேஜயபராஜயௌ) என்கிறபடியே - யுத்தத்திலே ஜயாபஜயங்கள் அவ்யவஸ்த்திதமன்றோ? 'அது மற்றைப்படியாகில்செய்வதேன்?' என்றுஅஞ்சாநின்றேன் அவர்கள்கிட்டில்அங்கென்னாய்விளையுமோ? அதுதன்வாயால் சொல்லமாட்டாமையாலே. என்னாய் விளையுமென்கிறாள். (எ)

னிக்கும் உபலக்ஷணமென்று நினைத்தாதல். "மாமணிவண்ணா" என்றதுக்கவதாரிகை-அப்ரயோஜநத்திலே இத்யாதிவாக்யத்ரயமும். முதல்வாக்யவிவரணம்- இதுக்குமுன்பு இத்யாதி. இத்தால் ஃபலிதம்- இவ்வடிவை இத்யாதி: விவரணம் - வெய்யில் இத்யாதி. அவதாரிகையாதல், "உன்" என்றதுக்கு ஹாவமாதல்-உன்னை நீ இத்யாதி. "செங்கமலமலர் - வண்ணம்" என்றதுக்கு ஹாவம் - விகாஸாதி இத்யாதி. மென்மைக்குஹாவம் - மார்த்தவத்துக்கு இத்யாதி. சிவந்த கமலமலர்போலேயிருப்பதாய் ம்ருதுவான அடிநோவவென்று ஸப்தார்த்தம். வண்ணம் - ஒப்பு. "நீபோய்" என்றதுக்கு ஹாவம் - தன்காலாலே இத்யாதி. அப்படி பரிவுடையளோவென்ன - அக்ரதஸ்தே இத்யாதி. அயோத்யாகாண்டே ஸீதா, (உஎ-சு) "[illegible]" இதிபூர்வார்த்தம். இதுக்கு ஹாவம்-போக்கு இத்யாதி. 'பின்னை-போகவேண்டாவோ?' என்றந்வயிப்பது. "நீபோய்" என்றதுக்கு - என்காலாலே போகவேணுமென்றருளிச்செய்து, நிம்பனை நீபோய் என்றர்த்தாந்தரம் - குணாதிகனை இத்யாதி. "மகிழ்ந்து" என்றதுக்கு ஹாவம் - எங்களைப்போலே இத்யாதி. "மகிழ்ந்துகந்து" என்கிற புநருக்திக்குஹேதும் - அருளிச்செய்கிறார் - அவற்றின்பக்கல் இத்யாதி. பதச்சேர்த்திக்கு ஹாவம் - கருமுகை இத்யாதி. ஸுகுமாரனை வுன்னோடேயென்றபடி. விவரணம் - அங்கேன்னாய் இத்யாதி. "யவன்?கொல்" என்றதுக்கு ஹார்த்தஹாவத்தை இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - நாம் எங்கேனும் என்று தொடங்கி மேல் அஞ்சுவாக்யத்தாலே. "யவன்கொல்" என்கிறதென், இன்னதிங்கென்னவொண்ணாதோ? என்ன - அதுதன்வாயால் இத்யாதி. இது "யவன்?கொல்" என்றதுக்கு இரண்டாம்ஹாவம். 'வெள்வளைமேகலைகழன்று விழும்படியும், முத்தம்சோரும்படியும், தோள்கள்வாடும்படியும், மென்மலரடிநோவவும் - நீபோய்' என்று தொடங்கி, 'ஆங்கு - யவன்? கொல்' இத்யந்வய: 'அவ்யவஸ்த்தா இதி' "[illegible]" இதி ஸுந்தரகாண்டே ஹநூமந்தம்ப்ரதி ஸீதா (ங௭-௫௩). (எ)

---

† 'வழிதிருத்திப்போகவேண்டாவோ?' என்று பாடமிருப்பின் நலமென்று தோன்றுகின்றது.

எட்டாம் பாட்டு.

அசுரர்கள்தலைப்பெய்யில்எவன்கொல்? ஆங்குஎன்றுஆழுமென்னுருயிர்ஆன்பின்போகேல், கசிகையும்வேட்கையும்உள்கலந்துகலவியும் நலியும்என்கைகழியேல், வசிசெயுன்தாமரைக்கண்ணும்வாயும்கைகளும் பீதகவுடையும்காட்டி, ஏசிசெய்நுண்ணிடையிளவாய்ச்சியர் நீயுகக்கும் நல்லவரோடும்உழிதராயே.

ஆ.—(அசுரர்கள்.) - 'அங்கே அஸுரர்கள் தலைப்பெய்யில் என்விளைகிறதென்று நடுங்காநின்றேன், பிரானே! ஆன்பின்போகேல்: நீ போனால், உன்பக்கலுள்ள ஸ்நேஹமும், அந்தஸ்நேஹவிபாகரூபமாய் உன்னைக்கண்டல்லது தரிக்கவொண்ணாத அபிநிவேசமும், இப்போது கலக்கிறகலவியும் நலியும்; என்கைகழியேல்' என்ன, பேசாதிருந்தவாறே பின்னையும், 'உன்னுடைய ஸௌந்தர்யாதிகளிலே ஈடுபட்டு உனக்கு அபிமதைகளாயிருப்பார் யாவர்சிலர் அவர்களும் நீயும்கூட என்கண்வட்டத்திலே ஸஞ்சரிக்கவமையும்' என்கிறாள்.

ஒ.—எட்டாம்பாட்டில், நீபசுமேய்க்கப் போனால்என்னப்ரமாதம்புகுகிறதோ? என்று அஞ்சாநின்றேன்: உன்னை விஶ்லேஷிக்கவும் க்ஷமையாகிறிலேன்; ஆனபின்பு, உன்னுடைய ஸௌந்தர்யத்தாலே உனக்கு அபிமதைகளாயிருப்பாரை வசீகரித்துஅவர்களும் நீயுங்கூட என்கண்வட்டத்திலே உலாவித்திரியவேணுமென்கிறாள்.

[ஆழும்] - அழுந்தும். [கசிகையும் என்று தொடங்கி] - உன்னோட்டை ஸங்கமும் உன்னோடு ஸம்ஶ்லேஷிக்க வேணுமென்னும் அபிநிவேசமும் இப்போதே உன்னோட்டை ஸம்ஶ்லேஷமும் நீபோனால் ஸ்ம்ருதமாய் பாதிக்கும்; ஆனபின்பு, என்னைக் கழியப்போகாதொழியவேணும். [வசி] - வஶ்யம். ஏசிகை - துவளுகை.

ப—அநந்தரம், ஆகர்ஷகமான உன்னுடைய அவயவங்களைக்காட்டி நீயும் உன்னபிமதைகளுமாக என் ஸந்நிதியிலே ஸஞ்சரிக்கவமையும்; ப்ரமாதஸ்தலத்தில் போகாதேகொள்! என்கிறாள்.

அசுரர்கள் - ஆஸுரப்ரக்ருதிகள், தலைப்பெய்யில் - தலைப்பெய்வர்களாகில், எவன்கொல்ஆங்கு - என்னப்ரமாதங்களுண்டாகிறனவோ, என்று-, என்னுருயிர்-என்னுத்மாவானது, ஆழும்-(கடலிலேபுக்காற்போலே) ஆழங்காற்பட்டு க்லேசியாநிற்கும்; (ஆகையாலே), ஆன்பின்போகேல் - பசுக்களின்பின்பு போகாதேகொள்: (அதுக்குமேலே), கசிகையும்-(ப்ராவண்யத்தால்வந்த) ஈடுபாடும், வேட்கையும்-(அதுக்குமேலான) அபிநிவேசமும், கலவியும்-(அதுக்குஅநுரூபமாகக்கலந்த)கலவியும், உள்கலந்து - என்னெஞ்சுக்குள்ளேகலந்து, நலியும் - நலியாநிற்கும்; என்-என்னுடைய, கைகழியேல்-கைகழியாதேகொள்; (நான்உன்னை வளைத்துவைக்கிறேனல்லேன்); வசிசெய்-வசீகரங்களாயிருக்கிற, உன் - உன்னுடைய, தாமரை - தாமரைபோலேயிருக்கிற, கண்ணும்-திருக்கண்களையும், வாயும் - திருப்பவளத்தையும், கைகளும் - திருக்கையையும், பீதகவுடை

யும் - திருப்பீதாம்பரத்தினுடையவழகையும் காட்டி-, ஒசிசெய் - (ஸ்வபாவத்தாலும் ஸம்ஶ்லேஷத்தாலும்) தளர்த்தியைவிளைவிப்பதாய், நுண்ணிடை - நுண்ணிதான இடையையுடையராய், இளம் - முக்தமான பருவத்தையுடையராய், ஆய்ச்சியர் — (ஸத்ருஶமான குலத்திலேபிறந்த) இடைச்சியராய், (இதெல்லாமுண்டானாலும் எங்களைப்போலன்றியே), நீயுகக்கும் - நீயுகக்கும்படி, நல்லவரொடும் - விலக்ஷணர்களானவர்களோடுங் கூட, உழிதராய் - ஸஞ்சரிக்கவமையும்.

இ —எட்டாம்பாட்டில், நீபோனால் ஸப்ரமாதமென்று அஞ்சாநின்றேன்; உன்னைப்பிரியவும் மாட்டேன்; பசுமேய்க்கை வ்யாஜமாகக்கொண்டு அபிமதவிஷயங்களை நினைத்துப்போகிறாயாகில் என்கண்வட்டத்திலே உனக்கு அபிமதைகளோடே ஸஞ்சரிக்கவேணுமென்கிறாள்.

[அசுரர்கள் இத்யாதி] - யதாஸங்கல்பம் நீ வெற்றியோடேமீண்டாலும் அதுக்குமுன்னே நான் தரைப்படுவன்? நான் உனக்குவேண்டாவோ! என்கிறாள். [ஆழும்] - அழுந்தும். அதுக்குநம்மால் செய்யலாவதென்னென்ன ?—[ஆன்பின் போகேல்] - பசுக்கள்பின்பு போகாதேகொள். 'ஜாத்யுசிதமான தர்மத்தை விடப்போமோ? அவ்வளவும் தரித்திருக்குமத்தனையன்றோ?' என்ன,—பிரிவில் தரிக்கலாம்படியோ நீ கலவியிற் பரிமாறிற்றென்கிறாள்: அபிமதவிஷயத்தோடே யிருக்கச்செய்தே ஸந்த்யாவந்தநம்பண்ண நினைப்பாருண்டோ? ஸ்வஜநத்தைவிட்டோ ஸ்வதர்மத்தை ரக்ஷிப்பது? [கசிகையும்] - ஸ்நேஹமும். [வேட்கையும்] - மேன்மேலும் உன்னோட்டைக் கலவியிலுண்டான அபிநிவேசமும்: அருகேயிருக்க, பிரிந்தால் பிறக்கும் அலமாப்புஉண்டாம்படியிறே அபிநிவேசம். [கலவியும்] - கலக்கும்போது தலைதடுமாறாகப் பரிமாறும் பரிமாற்றமும். [உள்கலந்து நலியும்] - என்னுடைய ஹ்ருதயத்திலே ஸ்ம்ருதமாய் பாதிக்கும். அதுக்கு நம்மால் பரிஹாரமென்னென்ன ?—[என்கைகழியேல்] - நான் அணைத்த கைக்குள்ளேயிருக்கப் பார். 'இவர்கள்சொல்லுவது கேட்கைக்காக ஏகதாரவ்ரதனோநான்?' என்ன,—'உனக்கு அபிமதைகளானாரோடு கலக்கவேண்டா வென்கிறேனல்லேன்: அவர்களோடே என்முன்னே ஸஞ்சரியாய்' என்ன,—அவர்களை அழைத்துத் தருவார் வேண்டாவோவென்ன ; உனக்குக் குறையுண்டோ தூதுசெய் கண்களிருக்க என்கிறாள்:—[வசிசெய் உன் தாமரைக்கண்ணும்] - இனிப் பொருந்தோமென்று பெண்கள்நெஞ்சிற் பிறந்த மறமெல்லாம் தீரும்படி வஶீகரிக்கவல்ல கண்ணும், [வாயும்] - கண்ணாலே நினைத்தத்தை ஆவிஷ்கரிக்கிற வாயும். [கைகளும்] - அந்நோக்குக்கும் ஸ்மிதத்துக்கும் தோற்றவளவில் அநுவர்த்தித்தணைக்கும கைகளும். [பீதகவுடையும்] - அவற்றுக்குத் தோற்றுவிழும்போது நடுவே தகையும் திருப்பீதாம்பரமும். "பீதாம்பரதரஸ்ரக்வீ." [காட்டி] - உனக்கு அவர்களை அழைக்கைக்குப் பணியுண்டோ? வடிவைக் காட்ட அமையாதோ ? [ஒசிசெய்நுண்ணிடை] - பண்டே தொட்டாரோடே தோஷமாம்படியான இடை. இதுக்குமேலே கலவியாலே துவண்டஇடையை யுடையவர்கள். [இளவாய்ச்சியர்] - உன்னோடொத்த பருவத்தையுடையவர்கள். வடிவழகாலும் பருவத்தாலும் உன்னைத் துவக்கவல்லார் எத்தனைவர் கிடக்கிறது? [நீயுகக்கும் நல்லவர்] - வடிவழகும் பருவமுமொழியவே நீஉகந்த நன்மையையுடையவர்கள்; அவர்களோடே கூட என்கண்வட்டத்திலே ஸஞ்சரிக்க அமையும்.

௯-—எட்டாம்பாட்டு. நீபோனல் ஸப்ரமாதமென்றஞ்சாநின்றேன்; உன்னைப் பிரியவும்மாட்டேன். பசுமேய்க்கை வ்யாஜமாக அபிமதவிஷயங்களை நினைத்துப்போகிறு யாகில் என் கண்வட்டத்திலே உனக்குஅபிமதைகளோடே ஸஞ்சரிக்கவேணுமென்கிறுள்.

[அசுரரித்யாதி] - நீவெற்றியோடே மீண்டாலும் அதுக்கு முன்னே நான் தறைப் படுவேன்; நான்உனக்குவேண்டாவோ? என்கிறுள். [ஆழும்] - அழுந்தும். அதுக்கு நம் மால் செய்யலாவதேன்? என்ன,— [ஆன்பின்போகேல்] - பசுக்களின்பின்பு போகாதே கோள்; என்வழியேபோகப்பார்ப்பது. காமிநியருகேயிருந்து ஸந்த்யாவந்தநம்பண்ணப் போக என்னக்கடவதோ? ஸ்வதர்மாநுஷ்ட்டாநம் பண்ணுவது ஸ்வஜநத்தைவிட்டோ? 'ஜாத்யுசிததர்மத்தைத் தவிரப்போமோ? வருந்தி தரிக்கவேண்டாவோ?' என்ன,—பிரியில் தரிக்கலாம்படியோ நீகலவியில் பரிமாறிற்றென்கிறுள்:—[கசிகையும்]-ஸ்நேஹமும். [வேட் கையும்]-மேன்மேல்உன்னோட்டைக் கலவியிலுண்டான அபிநிவேசமும். [கலவியும்]- ஸம்ஶ்லேஷமும். [கசிகை இத்யாதி] - நீபண்ணும் ஸ்நேஹமும், அருகேயிருக்கச்செய்தே யகல விருந்தாரைப்போலே மேன்மேலன பண்ணும் அபிநிவேசமும், தலைதடுமாருகக் கலப்பதான இவையும், நீபோநின்றவாறே ஹ்ருதயத்திலே புகுந்து நலியும். ஆனல் செய்ய வேண்டுவதேன்? என்ன,- [என்கைகழியேல்] - நான்அணைத்த கைக்குள்ளில் நின்றகலா தொழியவேணும். ஜாத்யுசிததர்மமநுஷ்டிப்பது என்னைமுடித்தோ? "போகாதொழியப்போ மோ? புறம்பேயும் நமக்குஅபிமத விஷயங்களுண்டாயிராதோ? அவர்களுடனும் பரிமாற வேண்டியிராதோ?" என்றன் மேல்இவள் சொல்லுமது கேட்கைக்காக. எங்களுக்கு அந் நிர்ப்பந்தமுண்டோ? நீகைகழியப்போகாதொழியுமத்தனையன்றே வேண்டுவது? நீ விரும் பியிருக்குமவர்களோடே என் கண்வட்டத்தே பரிமாறப்பார்என்ன,—ஆனல், அவர்களை யழைத்துத்தருவாரார்? என்ன, [வசிசெயுன்தாமரைக்கண்ணும்] - உனக்கு * தூதுசெய்கண் களுண்டாயிருக்கப்புறம்பேபரிகரம்தேடி அழைக்கவேண்டியிருந்ததோ? இனிப்போருந்தோம் என்றிருப்பார் நெஞ்சுகளில்† 'மறத்தைமாற்றி அவர்களை வஶீகரித்துத்தரும் கண்களும், அந்

எட்டாம்பாட்டு.—அசுரர்கள் இத்யாதி. பாட்டையெல்லாம் கடாக்ஷித்தவதாரிகை - நீ போனல் இத்யாதி.

"ஆழும்" என்றதுக்கு ஸாவம் - நீ வெற்றியோடே இத்யாதி. இத்தால் ஃபலிதம்- நான்உனக்கு இத்யாதி. ஆழும் - *அழுந்தும்: தறைப்படுமென்றபடி. "ஆன்பின்போகேல்" என்ற துக்கு வ்யதிரேகத்தாலே ஸாவம் - என்வழியே இத்யாதி. ஸ்வதர்மத்தைவிட்டு உன்வழியேபோகப் போமோவென்ன -* காமிநி இத்யாதி. *அதாவது - ஸ்வதர்மத்தை யநுஷ்ட்டிக்கை ப்ரணயித்வத்துக் குக் கொத்தையென்றபடி.* "ஸ்வஜநஸ்ய ச ரக்ஷிதா" *என்கிறபடியே இதுவும் ധர்மமன்றோ? என்கிருள் -* ஸ்வதர்மாநுஷ்டாநம் இத்யாதி. *இத்தால் - ப்ரணயித்வஹாநிமாத்ரமன்றிக்கே ஸ்வ ஜநவധமாகிற ധர்மஹாநியும் ஸித்திக்குமென்று கருத்து. "கசிகையும்" இத்யாதிக்கவதாரிகை.* ஜாத்யுசித *இத்யாதி. "கசிகையும்" இத்யாதிக்கு - தனக்குஅவனிடத்தில் ஸ்நேஹாதிகளாகக் கீழே யருளிச்செய்து, அவனுக்குத் தன்னிடத்தில் ஸ்நேஹாதிகளாக அர்த்தாந்தரம் -* நீ பண்ணும் இத் *யாதி.* ஹ்ருதயத்திலேபுகுந்து *என்றது - ஸ்ம்ருதிவிஷயமாயென்றபடி. ஸ்வஜாதிதர்மத்தைவிட லாமோ? என்ன-*ஜாத்யுசித *இத்யாதி. மேலுக்கெல்லாம்அவதாரிகை -* போகாதொழிய *இத்யாதி.* உங்களையொழிய *வேறு அபிமதைகளுண்டோவென்ன வேண்டியிருக்க இப்படிச் சொல்லுவா னென்னென்ன -* மேல்இவள்சொல்லுமது இத்யாதி. *"உகக்குநல்லவரொடும்உழிதராய்" என்றத் தைக் கடாக்ஷித்து அவன்சொன்ன ப்ரஶ்நத்துக்கு உத்தரம் -* எங்களுக்கு *இத்யாதி வாக்யத்ரயம்.* "வசிசெய்" *இத்யாதிக்கவதாரிகை -* ஆனல் இத்யாதி. வசி - வஶீகரணம். *பீதாம்பரதாஸ்*

† *மறம்* - கோபம்.

நோக்கில் கருத்தை ஆவிஷ்கரிக்கும் வாயும், அந்நோக்கிலும் முறுவலிலும் நேர்விழிக்கமாட்டாதே வ்ரீளையாலே கவிழ்ந்தவர்களையெடுத்துக்கோள்ளுமகைகளும், ஸ்பர்சத்துக்குத் தோற்றவர்களைக் கீழ்போகாதபடியாகத் தன்செல்லாமையாலே மேலே எறட்டுக்கோள்ளுகிற திருப்பீதாம்பரமும். "பீதாம்பரதரஸ்ரக்வீ" (பீதாம்பரதரஃஸ்ரக்வீ) என்னக்கடவதிறே. [காட்டி] - உனக்குப்புறம்பே யழைத்துத்தருவார் வேண்டியிருந்ததோ? பிடாத்தைவிழவிட்டு வடிவைக்காட்டவமையாதோ? [ஓசிசெய்இத்யாதி] - பண்டே தொட்டாரோடே தோஷமானஇடை. அதுக்குமேலே கலவியாலே துவண்ட இடையையுடையவர்கள். [இளவாய்ச்சியர்] - உன்னோடொத்த பருவத்தையுடையவர்கள். வடிவழகாலும் பருவத்தாலும் உன்னைத்துவக்கவல்லார் எத்தனைவர் கிடக்கிறது! நீ போகாநிற்க, இடையிலே தங்கள் பருவத்தாலே துவக்கவல்லார் அநேகர். [நீயுகக்கும் நல்லவர்] - வடிவழகுஉண்டானாலும் ப்ரயோஜநமில்லையே; எங்களைப்போலே யிருக்க வொண்ணாதே, நீயுகக்குமவர்களாகவும் வேணுமே. நீயுகக்கும்படி விலக்ஷணைகளான அவர்களோடே என்கண்வட்டத்திலே ஸஞ்சரிக்கவமையும். (அ)

ஒன்பதாம் பாட்டு.

உகக்குநல்லவரோடும்உழிதந்துஉன்தன்திருவுள்ளம்இடர்கெடுந்தோறும் நாங்கள், வியக்கஇன்புறுதும்எம்பெண்மையாற்றோம் எம்பெருமான்! பசுமேய்க்கப்போகேல், மிகப்பலஅசுரர்கள்வேண்டுருவங்கொண்டு நின்றுஉழிதருவர்கஞ்சனேவ, அகப்படில் அவரோடும் நின்னோடு ஆங்கே அவத்தங்கள்விளையுமஎன்சொற்கோள்அந்தோ!

ஆ.—(உகக்கும்.) - உனக்கு அபிமதைகளாய் விலக்ஷணைகளாயுள்ளவர்களோடு திரிந்து உன்னுடைய திருவுள்ளத்தில் இடர்கெடுமளவில், நாங்கள் எங்களோடு ஸம்ச்லேஷித்ததிற்காட்டிலும் மிகவும் இனியர்ஆவுதோம்; வேறு சிலரோடே ஸம்ச்லேஷிக்கப் பொறுக்கமாட்டாத பெண்மைவேண்டோம்; பலஅஸுரர் கம்ஸப்ரேரிதராய்

ஸ்ரக்வீ இத்யாதி. ஸ்ரீ பாகவதே, (கo-ங உ) "தாஸாம் ஆவிரபூச்சௌரி: ஸ்மயமாநமுகாம்புஜ:। பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷாந்மந்மதமந்மத:" (உ) இதுக்கு, "மந்மதமந்மத:" என்றதிலேநோக்கு. †உடை-புடவை. பிடாத்தை - பச்சைவடத்தை. "நுண்ணிடை" என்றதுக்கர்த்தம் - பண்டே இத்யாதி. "ஓசிசெய்" என்றதுக்கர்த்தம் - அதுக்குமேலே இத்யாதி. ஓசிசெய்நுண்ணிடை - தளர்த்தியை விளைக்கிற நுண்ணிய இடை. ஓசிவு-துவட்சி: தளர்த்தியென்றபடி. "ஓசிசெய்நுண்ணிடை, இள" என்கிறவற்றையும் கூட்டிக்கொண்டு "ஆய்ச்சியர்" என்கிற பஹுவசநத்துக்கர்த்தம். வடிவழகாலும் இத்யாதி. ரஸோக்தியாகவிவரணம் - நீபோகாநிற்க இத்யாதி. "நீயுகக்கும்" என்றதுக்கு பாவம் - வடிவழகுண்டானாலும் இத்யாதிவாக்யத்ரயம். ஸப்தார்த்தம் - நீயுகக்கும்படி இத்யாதி. என்கண்வட்டத்திலே என்றது - "என்கைகழியேல்" என்றத்தைப்பற்ற. உழிதருகை - ஸஞ்சரிக்கை. 'அசுரர்கள் தலைப்பெய்யில் - ஆங்கு - யவன்கொல் - என்று - என்னுயிர் - ஆழும், ஆன்பின்போகேல்: கசிகையும் வேட்கையும் - கலவியும் - உள்கலந்து - நலியும், என்கைகழியேல், வசிசெய்' என்றுதொடங்கி அன்வயம். (அ)

---

† உடை என்பது மூலத்தில் காணவில்லை.

வேண்டினவடிவுகளைக்கொண்டு ஸஞ்சரியாநிற்பர்; அவர்கள்கையிலே யகப்படில் அவர்களோடு உன்னோடு அவ்விடத்தில் பொல்லாங்குகள் விளையும், ஐயோ!, என்சொல்கொள்ளாய்! என்கிறாள்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், "உங்கள்ஸந்நிதியிலே நான் வேறே சிலரோடே பரிமாறுகை உங்களுக்கு ப்ரியமாகக்கூடுமோ?" என்றருளிச்செய்ய; "எங்களோடே ஸம்ஶ்லேஷிப்பதிற்காட்டிலும் நீ வேறேசிலரோடே ஸம்ஶ்லேஷித்து உன்னுடைய திருவுள்ளத்தில் இடர்கெடுகை எங்களுக்கு மிகவும் இனிது; ஆனபின்பு, ஸப்ரமாதமான தேசத்திலே பசுநிரைமேய்க்கப் போகாதொழியவேணும்" என்கிறாள்.

[உகக்கும் என்றுதொடங்கி] - உனக்கு அபிமதைகளாய் விலக்ஷணைகளாயுள்ள அவர்களோடேயிருந்து, உன்னுடைய திருவுள்ளத்தில் இடர்கெடுந்தோறும் நாங்கள் எங்களோடே ஸம்ஶ்லேஷித்ததிற்காட்டிலும் மிகவும் இனியோமாவுதோம்; நீ வேறுசிலரோடே ஸம்ஶ்லேஷிக்க ப்ரீயாதிருக்கும்பெண்மைவேண்டோம். [மிக என்று தொடங்கி] - பல அஸுரர் கம்ஸன் ஏவ வேண்டினவடிவுகளைக்கொண்டு மிகவும் ஸஞ்சரியாநிற்பர்; அவர்கள்கையிலே அகப்படில் அவர்களோடு உன்னோடு அவ்விடத்தில் பொல்லாங்குகள் விளையும்: ஐயோ! என்சொல் கொள்ளாய்.

ப.—அநந்தரம், எங்களுக்குநாதனான நீ, உன் அபிமதைகளோடே எங்கள் ஸந்நிதிகளிலே வர்த்திக்கிறது எங்களுக்கு மிகவும் உகப்பு; போவுதியாகில் கம்ஸப்ரேரிதரான அஸுரர்களுக்கும் உனக்கும் பொல்லாங்கு விளையுமென்கிறாள்.

உகக்கும் - நீயுகக்கும்படியான, நல்லவரொடும் - நன்மையுடையவர்களோடே கூட, உழிதந்து - (எங்கள் ஸந்நிதியிலே) ஸ்வைரவிஹாரம்பண்ணி, (அவர்களைப்பெறுமல்), உன்தன் திருவுள்ளம் - உன் திருவுள்ளத்திற்பட்ட, இடர் - து:க்கங்கள், கெடுந்தோறும் - தீர்ந்து நீ ப்ரீதனும்போதெல்லாம், (உன்னிலும் அவர்களிலும்), நாங்கள் - நாங்களும், வியக்க - மிகவும், இன்புறுதும் - உகப்புடையோமாவோம்; (அதுக்கடி - நீபிரிந்தால்), எம்பெண்மை - எங்கள்பெண்மையை, ஆற்றோம் - ஆற்றமாட்டோம்; (அதுக்காக), எம்பெருமான் - எங்கள் ஸ்வாமியானவனே! பசுமேய்க்க-, போகேல் - போகாதேகொள்; (அதுக்குமேலே), கஞ்சனேவ - கம்ஸன் ஏவுவிப்ப, பலவசுரர்கள் - பலஅஸுரர்களும், (காமரூபிகளாகையாலே), வேண்டு-நீ விரும்பும், உருவம்-ரூபங்களை, கொண்டு-, மிக-மிகவும், நின்றுஉழிதருவர்-ஸஞ்சரியாநிற்பர்கள்; அகப்படில் (கையிலே) யகப்படில், அவரொடு - அவர்களோடும், நின்னொடு - உன்னோடும், ஆங்கே - அவ்விடத்திலே, அவத்தங்கள் - பொல்லாங்குகளான யுத்தங்கள், விளையும்-விளையாநிற்கும்; (உன்செருக்காலே அநாதரியாதே), என்சொல் - என்வார்த்தையை, கொள்-கைக்கொள்ளவேணும், அந்தோ - ஐயோ!, பிரிவார்வார்த்தையும் கைக்கொள்ளவொண்ணாதபராக்கிருந்தபடிஎன்தான்!. வியத்தல் - ஆஶ்சர்யப்படுதல். உழிதருகை - ஸஞ்சரிக்கை. அவத்தம் - அநர்த்தம்; யுத்தமென்றுமாம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், 'உங்கள் ஸந்நிதியிலே சிலரோடேகூடப் பரிமாறுகை இஷ்டமாகக்கூடுமோ?' என்ன; எங்களோட்டை ஸம்ஶ்லேஷத்திற்காட்டிலும் உன்திருவுள்ளத்தில் ப்ரியமே எங்களுக்கு இஷ்டம்; ஆனபின்பு, ஸப்ரமாதமான தேஶத்திலே போகாதொழியவேணும் என்கிறாள்.

[உகக்கு நல்லவர் இத்யாதி] - எங்களைப்போலன்றிக்கே, நீ உகக்கும்படியான விலக்ஷணைகளோடேகூட ஸஞ்சரித்து, அவர்களோடே பரிமாறப்பெற்றிலோமென்று திருவுள்ளத்தில்உண்டான விடாயால் வந்த ஊஃவம் கெடுந்தோறும். [நாங்கள் வியக்க இன்புறுதும்] - புறம்புள்ளாரைப்போலன்றியே உன்உகப்பே ப்ரயோஜநமான நாங்கள் மிகவும் உகப்புதோம். மிகுதி எதிற்காட்டில் என்னில் ; - எங்களோடே கலக்குமதிற் காட்டிலென்னுதல், உன்னிற்காட்டில்நீ உகந்தவர்களை உகப்புதோம் என்னுதல். [எம் பெண்மையாற்றோம்] - உன் உகப்புக்குப் புறம்பாய்வரும் ஸ்த்ரீத்வம் எங்களுக்கு அஸஹ்யம்: அதுவேண்டா. [எம்பெருமான் பசுமேய்க்கப்போகேல்] — உனக்கு எழுத்து வாங்குகிறோம்: நீபசுமேய்க்கப் போகாதொழியவல்லையே! நீங்கள் இங்ஙனே நிர்வந்யிக்க நான் போகாநின்றேனோ? ஸ்வதர்மத்தைச் செய்யப்போனால்தான் வருவதென்? என்ன,—[மிகப்பல அசுரர் இத்யாதி] - பல அஸுரர்கள்வேண்டின வடிவுகொண்டு மிகவும் ஸஞ்சரியாநிற்பர்கள். [வேண்டு] - நீ உகக்கும்வடிவுகள் என்னுதல், காமரூபிகளாகையாலே நலிகைக்கீடான வடிவென்னுதல். கன்றாய்வருவாரும் விளாவாய் வருவாருமாவர்கள். ஸ்ரீப்ருந்தாவநத்திலெழும் பூண்டுகளும் அஸுராவிஷ்டமாயிறேயிருப்பது. [கஞ்சனேவ] - "தோற்றாலும் அவன்பக்கல் கொலைதப்பாது" என்றுபோகார், மேல்விழுவர்கள். மேல்விழுந்தாலும் வெற்றியோடல்லது மீளுவதோமோ என்ன? [அசப்படில்] - யுத்தத்திலே ஜயாபஜய வ்யவஸ்தையுண்டோ? அவர்கள்கையிலே அகப்படில் அவர்களும் நீயுமானவிடத்திலே பொல்லாங்கு விளையும். இப்படிச் சொல்லச் செய்தேயும் தன்வீரத்தை நினைத்து, ஆனைக்குப்புஆடுவாரைப்போலே பேசாதிருக்க. [என்சொற்கொள்] - அநாதரியாதே நான் சொல்லுகிற வார்த்தையை ஸஃத்திபண்ணாய். [அந்தோ] - எங்களை அறியாவிட்டால் உன்னையும் அறியாதொழியவேணுமோ?

ஈடு.— ஒன்பதாம்பாட்டு. "உகக்குநல்லவரோடும்உழிதராய்" என்று நான் போகாமைக்காகச் சொன்னவார்த்தை இத்தனையொழிய, உங்கள் ஸந்நிதியிலே நான் சிலரோடே பரிமாறுகை உங்களுக்கு அநிஷ்டமன்றேவென்ன ; எங்களோட்டைக் கலவியிற் காட்டில் திருவுள்ளத்தில் ப்ரியமே எங்களுக்கு மிகவும் ஸுகவம்; ஆனபின்பு, ஸப்ரமாதமான தேசத்திற் போகாதொழியவேணும் என்கிறாள்.

[உகக்கும்இத்யாதி] - எங்களைப்போலன்றிக்கே நீயுகக்கும் வைலக்ஷண்யத்தை உடையவர்களோடே எங்கள் கண்வட்டத்திலே ஸஞ்சரித்து. [உன்தன்இத்யாதி]- நாம் இன்னாளோடு கலக்கப்பெற்றிலோமென்று உன்திருவுள்ளத்தில் வரும்இடர்கெடுந்தோறும். [நாங்கள்இத்யாதி] - விஸ்மயத்திலேயாதல், மிகுதியிலேயாதல் கிடக்கிறது வியப்பு. புறம்புள்ளாரைப்போலன்றியே உன்னுகப்பே ப்ரயோஜநமான நாங்கள் மிகவும் உகப்புதோம். எதிற்காட்டிலேன்னில் ;—எங்களுடன் கலக்குமதிற்காட்டில்என்னு

ஒன்பதாம்பாட்டு.—உகக்கும் இத்யாதி. 'உன்தன்திருவுள்ள மிடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும் - என்சொற்கொள்" என்றவற்றைக்கடாக்ஷித்தவதாரிகை - உகக்கும் இத்யாதி.

திருவுள்ளத்துக்குஇடரேதென்ன - நாம்இன்னாளோடு இத்யாதி. "மிகவும்" என்றத்தை இரண்டுவகையாக அருளிச்செய்கிறார்-எதிற்காட்டில் இத்யாதி. வாக்யத்ரயத்தாலே. ஆக, மிகுதியான பக்ஷத்தில், எங்களுடன்கலக்கு மதிற்காட்டிலென்னுதல், அவர்களுடன் நீகலக்குமதிற்காட்டிலென்னுதல் என்றர்த்தத்வயம் ; விஸ்மயமென்றபக்ஷத்திலே, " ஸாபத்ந்யமில்லாதே இவர்களுகப்

தல்; அன்றிக்கே, நீயவர்களோடே கலந்தால் உனக்குப்பிறக்கும் ஆநந்தத்திற்காட்டில்என்னுதல். நான் இப்படிச்செய்தால் நீங்கள் மிகவும் இன்புறுவதாகச்சொன்ன இது கூடுமோ? என்ன, — [எம்பெண்மையாற்றேம்] - உன்னுகப்புக்குப் புறம்பாய்வரும் ஸ்த்ரீத்வம் நாங்கள் வேண்டோம். நீயுகந்தாரையொழிய உன்னை உகக்குமவர்களல்லோங்காண் நாங்கள்; உன்னைத் தனித்துஉகப்பாள் மூக்கறைச்சியன்றே? [எம்பெருமான் இத்யாதி] - உனக்கெழுத்துவாங்குகிறோம்; நீபசுமேய்க்கப் போகாதொழியவல்லையே? நான்தான் போகாநின்றேனோ? ஸ்வயர்மாநுஷ்ட்டாநத்துக்காகப் போனால்தான் வருவதேன்? என்ன,— வருவதுசொல்லுகிறாள். [மிகஇத்யாதி]- மிகவும் பலவசுரர்கள் வேண்டின வடிவுகொண்டு மிகவும் ஸஞ்சரியாநிற்பர்கள். ஸ்ரீப்ருந்தாவநத்தில் எழும்பூண்டுகளடங்க அஸுரமயமாயன்றேயிருப்பது. [வேண்டுருவங்கொண்டு] - நீயுகக்கும்வடிவைக் கொண்டேன்னுதல், (காமரூபிகளாகையாலே) உன்னை நலிகைக்கீடான வடிவைக்கொண்டேன்னுதல். [கஞ்சனேவ] - கம்ஸப்ரேரிதராய் வருகையாலே "தோற்றுப்போகிலும் அங்குக்கொலைதப்பாது" என்று மேல்விழுவர்கள் ஆர் ஏவில்என்? ஆர் மேல்விழில்என்? நாம் புக்கபோரிலே வெற்றிகொண்டன்றே மீளுவதுஎன்ன, - [அகப்படில்] - அது மற்றைப்படியாகிற் செய்வதேன்? யுத்தத்தில் ஜயாபஜயங்கள் அவ்யவஸ்த்திதமன்றே? ஆனால்தான் வருவதேன்னேன்ன, - [அவர் இத்யாதி] - அவர்களும் நீயுமானவிடத்திலே போல்லாங்குகள் விளையும். இப்படிச் சொன்னவிடத்திலும் ஆனைக்குப்பு ஆடுவாரைப்போலே அநாதரித்திருந்தான். [என்சொற்கொள்] - அநாதரியாதே, நான்சொல்லுகிற வார்த்தையை புத்திபண்ணாய். [அந்தோ] - எங்களையறியாவிட்டால் உன்னையும் அறியாதொழியவேணுமோ? (௯)

பத்தாம் பாட்டு.

அவத்தங்கள்விளையும்என்சொற்கொள்அந்தோ! அசுரர்கள்வன்கையர்கஞ்சனேவ, தவத்தவர்மறுகநின்றுஉழிதருவர் தனிமையும்பெரிது உனக்குஇராமனையும்,†உவர்த்தலையுடன்திரிகிலையும் என்றென்றுஊடுறஎன்னுடையாவிவேமால், திவத்திலும்பசுநிரைமேய்ப்புஉவத்தி செங்கனிவாய் எங்களாயர்தேவே.

பதே!" என்று எல்லாரும் விஸ்மிதராம்படியென்றபடி. கீழே-அவனுகப்பே புருஷார்த்தமென்றருளிச்செய்தது, இங்கே-அவனும் ததீயருமான சேர்த்தியே தனக்கு புருஷார்த்தமென்கிறாளென்றர்த்தாந்தரம்-நீயுகந்தாரை இத்யாதி. உகந்தாரும் நாமுமானசேர்த்தியைவிட்டு நம்மையே யுகந்தாலோவென்ன-உன்னை இத்யாதி. மூக்கறைச்சி-சூர்ப்பனகி.எழுத்துவாங்குகிறோம்-அடிமைப்படுகிறோம். மேலுக்கவதாரிகை - நான்தான் இத்யாதி. "மிகவும்பல" என்கைக்கு இங்கே அநேகம்அஸுரர்களுண்டோவென்ன - ஸ்ரீப்ருந்தாவநத்தில் இத்யாதி. கன்று, விளா, குருந்து முதலானநீயுகக்கும் வடிவைக்கொண்டென்றபடி; மருது, வகம், மலைப்பாம்பு முதலான உன்னை நலிகைக்கீடான வடிவைக்கொண்டென்றபடி. "கஞ்சனேவ" என்றதுக்கு ஹாவம் - கம்ஸப்ரேரிதராய் இத்யாதி. விவரணம் - யுத்தத்தில் இத்யாதி. ஆனால்தான் என்றது - மற்றைப்படியானால்தானென்றபடி. ஆனைக்குப்பு - சதுரங்கம். "அந்தோ!" என்றதுக்கு ஹாவம் - எங்களை இத்யாதி. உன்னைப்பிரிகையாலே ஆர்த்தைகளான எங்களையென்றபடி. உன்னையும் - ஸுகுமாரனானவுன்னையுமென்றபடி. எங்களார்த்தியறியாவிட்டால் உன்ஸௌகுமார்யமும் அறியாதொழியவேணுமோவென்றபடி. (௯)

† 'உவத்தலை' யென்றும், 'உவர்த்தலை' யென்றும் சீயர் அரும்பதப்பாடம்.

ஆ.—(அவத்தங்கள்.)-பலவான்களான அஸுரரைக் கம்ஸனேவ "உனக்கு என்வருகிறதோ!" என்று ருஷிகளுங்கூடக் கலங்குவர்கள்; அவன்ஸந்நிதியிலே தீமை செய்யவொண்ணாதென்று இராமனோடுகூடத்திரிகிறதும் செய்கிறிலையென்று மிகவும் என்னாத்மா வேவாநின்றது. "நாம் போகிலன்றோ பயப்படவேண்டுவது? இதென்ன ஸ்நேஹந்தான்" என்று முறுவல்செய்ய; "திருநாட்டிலும், பசுநிரைமேய்ப்புகந்தி; ஆயர்தேவே! ஆனபின்பு, போனாலேயல்லையோ?" என்கிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், கம்ஸப்ரேரிதரான அஸுரர் ஸஞ்சரிக்கும் காட்டிலே, நம்பிமூத்தபிரானையுமொழியத் தனியே திரியாநிற்றியென்று மிகவும்நோவுபடாநின்றேன் என்கிறாள்.

[அசுரர்கள் என்றுதொடங்கி] - பலவான்களான அஸுரரைக் கம்ஸனேவ, தபஸ்ஸு பண்ணும் ருஷிகள் கலங்கும்படி ஸஞ்சரியாநிற்பர்; "உனக்கென் வருகிறதோ?" என்று தவத்தவர் தாங்கள் மறுக என்றுமாம். [தனிமை என்றுதொடங்கி] - "அவன் ஸந்நிதியில் தீமைசெய்ய வொண்ணாது" என்று ராமனோடும் ஹ்ருதயம் சேர்கிறிலை: ஹ்ருதயம் சேராவிட்டால் கூடத்திரிவதும் செய்கிறிலை என்று மிகவும் என்னுடைய ஆத்மா வேவாநின்றது. [திவத்திலும் என்றுமேலுக்கு] - "இதொரு ஸ்நேஹப்ரக்ரியையிருக்கும்படியே! நான் போகிலன்றோ நீங்கள் பயப்படவேண்டுவது?" என்று அவர்கள் ஈடுபடும்படி முறுவல்செய்ய, "செங்கனிவாயெங்களாயர் தேவே! திருநாட்டிற் காட்டிலும் பசுநிரைமேய்ப்பு உவத்தி; ஆனபின்பு, போனாலேயல்லையோ?" என்கிறாள்.

ப.—அநந்தரம், ஆஸ்ரிதரான கோபர்க்கு நிரதிஶயபோக்யனான நீ தனியே அஸுரர்கள்வர்த்திக்கிற காட்டிலே வர்த்தியாநின்றாய்; என்னெஞ்சு வேவாநின்றதென்கிறாள்.

செம்-சிவந்த, கனி - கனிபோலேயிருக்கிற, வாய் - அதரசோபையையுடையையாய், எங்கள் - எங்கள்குலத்திலுள்ள, ஆயர் - இடையர்க்கெல்லாம், தேவே - போக்யமான ஸ்வாமியானவனே! வன்கையர் - ப்ரபலரான, அசுரர்கள் - அஸுரர்களானவர்கள், கஞ்சனேவ - கம்ஸனேவ, தவத்தவர் - தபஃபரரானருஷிகள், மறுக நின்று-("உனக்கென்வருகிறதோ!"என்று)நெஞ்சுகலங்கும்படி,உழிதருவர் - ஸஞ்சரியாநிற்பர்கள்: உனக்கு-, தனிமையும் - அஸஹாயதையும், பெரிது - குவாலாயிருக்கும்; இராமனையும் - ப்ரபலரானநம்பிமூத்தபிரானையும், உவர்த்தலை-உன் ஸ்வைரவிஹாரார்த்தமாக இனிமையற்று அவனோடுஉடன்பாடனல்லையாய், உடன்திரிகிலையும் - கூடத்திரிவதும் செய்கிறிலை;'(இவ்வளவில்). அவத்தங்கள் - பொல்லாங்கு, விளையும்-விளையும்,' என்றென்று - என்று பலகாலும்நினைத்து, என்னுடையாவி - என்நெஞ்சு, ஊடுற - உள்ளுற, வேம் - வேவாநின்றது; அந்தோ - ஐயோ! என்சொல் - என்வார்த்தையை, கொள் - கேட்கவேணுங்காண்; திவத்திலும் - பரமபதத்திலிருப்பிலுங்காட்டில், பசுநிரைமேய்ப்பு - பசுமேய்ப்பை, உவத்தி - உவப்புதியாகாதே. "மாயையினால்" என்கிற கணக்கிலே அங்கிருக்கும்போதும் இங்கே யுகப்புதியென்றுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், "கம்ஸப்ரேரிதர் ஸஞ்சரிக்கும் காட்டிலே நம்பிமூத்தபிரானையொழியத் தனியே திரியாநிற்றி என்று மிகவும் நோவுபடாநின்றேன்" என்கிறாள்.

[அவத்தங்கள் இத்யாதி]-அதிஶங்கைபோக்கி அர்த்தக்ரியாகாரியன்று என்றிருக்கவேண்டா; நான் சொல்லுகிற வார்த்தையை ப்ரதிபத்திபண்ணாய். [அந்தோ]-ஹிதமேயாகிலும் நான் சொன்னவார்த்தையாக அமையுமே நீ கேளாதொழிகைக்கு. [அசுரர்கள்வன்கையர் கஞ்சனேவ] - ஜந்மமே தண்ணியர்: அநேகர்: முன்கையுரவியர்: மூர்க்கனான கம்ஸன் ப்ரேரிக்கிறான்: இவர்கள் ஸஞ்சரிக்கிற காடன்றோ? [தவத்தவர் மறுகநின்று உழிதருவர்] - என்னையிறே விடலாவது நீ? நல்லவர்கள் கலங்குப்படி ஸஞ்சரியாநிற்பார்கள்; தபோநிஷ்டரானருஷிகள் ஸ்வரக்ஷணத்துக்கு உன்கை பார்த்திருக்குமவர்கள், தபோவிக்நத்தாலே கலங்கும்படி ஸஞ்சரிப்பார்கள்; "ஸஹஸ்ரஶோ முநிதா:" என்றும் "ஸர்வஶஸ்த்ரஶரீராணி" என்றுமிருப்பார்கள். "அவர்களால் உனக்கு என் வருகிறதோ" என்று கலங்க என்றுமாம். [தனிமையும் பெரிது உனக்கு] - "ஸஹாயாந் விநா ராமம் க்ருஷ்ணஸஞ்சாரம் தயயா" என்று நம்பிமூத்தபிரானையொழிய ஸஞ்சரிக்கும் காலம் பெரிது உனக்கு. [இராமனையும் உவர்த்தலை] - "அவன் ஸந்நிதியிலே தீம்புசெய்யவொண்ணாது" என்று அவனோடும் நெஞ்சுபொருந்தி வர்த்திக்கிறிலை. [உவர்த்தலை] - உவர்த்தலையுடையை. [உடன் திரிகிலையும்] - நெஞ்சில் பொருத்தமில்லாவிட்டால், எதிரிகள் அஞ்சும்படி கூடத்திரிந்தாலாகாதோ? [என்றென்றுஊடுற என்னுடை ஆவி வேமால்] - உன்போக்கன்றே என்னை நலிகிறது; அவனையொழியத் திரிகிற இதுவே என் நெஞ்சை மறுபாடுருவச் சுடாநின்றது. [ஊடுற] — உள்ளூற. உங்களோடிருக்கிற இருப்பைக்குலைத்து நீங்கக்கொண்டுபோவனோவென்ன— [திவத்திலும் பசு நிரைமேய்ப்புஉவத்தி] - பரமபதத்தில் இருப்பைக்குலைத்தன்றோ பசுமேய்க்கப் போந்தது? அவ்விருப்புக் குலைந்துவந்திருந்ததும் இப்போது பொல்லாதென்றிருக்கிறார்கள். அவ்விருப்பிலேயிருந்தானாகில் இப்போது வயிறெரிய வேண்டாவிறே. நம் பேறிழவுகொண்டு கார்யமில்லை. வஸ்து ஸுரக்ஷிதமாயிருக்குமென்றிறே இவர்களிருப்பது. பரமபதத்தில் இருப்பைவிட்டுப் பசுமேய்க்கப்போகக்கடவ உன்னை, "எங்களை உபேக்ஷித்தாய்" என்று இன்னாதாகப் புகுகிறோமோ? அவ்விருப்பிலும் பசுமேய்க்க என்றுவுகப்புதியென்றுமாம். [செங்கனிவாய் இத்யாதி]-"இதொரு ப்ரேமஸ்வபாவமே!" என்று ஸ்மிதம்பண்ணினான்; அதிலே ஈடுபடுகிறார்கள். "அவ்விருப்புக்குலைந்து போந்தமையுண்டு; உங்களைவிட்டுப் போவனோ?" என்று ஸ்மிதம்பண்ண; ஓரிருப்பைக்குலைந்து போரக்கடவையானபின்பு, எங்களையும் பிரிந்து போனாயல்லையோ? என்கிறாள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. முன்கைமிடுக்கரான அஸுரர்கள் கம்ஸப்ரேரிதராய் ஸஞ்சரிக்கிறகாட்டிலே, நம்பிமூத்தபிரானையுமொழியத் தனியே திரியாநிற்றியென்று மிகவும் நோவுபடாநின்றேனென்கிறாள்.

[அவத்தங்களித்யாதி] - அநுஷ்டாநபர்யந்தமாகவேணுமென்றிருக்கவேண்டா; சொன்னவார்த்தையை ப்ரதிபத்திபண்ணவமையும். [அந்தோ] - அநுஷ்டாநகௌரவத்

பத்தாம்பாட்டு.—அவத்தங்கள் இத்யாதி. "அசுரர்கள்வன்கையர் கஞ்சனேவ" என்று தொடங்கி "ஆவி வேமால்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - முன்கை இத்யாதி. "ஊடுற" என்றத்தைப்பற்ற - மிகவும் என்றது.

புநஶ்ச "அவத்தங்கள்" இத்யாத்யநுவாதத்துக்கு பாவம் - அநுஷ்டாநபர்யந்தம் இத்யாதி. அதாவது - இவ்வார்த்தையைக்கேட்டால் சொன்னபடி செய்யவேணுமென்று நீ அநாதரிக்கவேண்டா, கடலோசைக்குச் செவிபுதைத்துக் கேட்கிறவோபாதி கேட்கவமையுமென்றபடி. இத்தால் - "கேட்கவே, சேதநனாகையாலே தன்நோவை நினைத்துத்திரும்பும்" என்று இவளுக்குக் கருத்தென்றபடி. "அந்தோ" என்றதுக்குபாவம் - அநுஷ்டாநகௌரவத்தால் இத்யாதி,

தால் இழியாதொழிகையன்றிக்கே என்வார்த்தையாகஅமைவதே கொள்ளாமைக்கு ! [அசுரர்இத்யாதி] - ஜந்மத்தால் தண்ணியருமாய்,தாங்கள் பலருமாய், முன்கை மிடுக்கருமாயிருப்பர்கள் ; அதுக்குமேலே, துஷ்ப்ரக்ருதியான கம்ஸனேவவாய்த்து வருவது. [தவத்தவர் மறுகநின்றுஉழிதருவர்]-என்னையிறே யுனக்குவிடலாவது;நீ நல்லவர்கள் குடல் மறுகும்படி ஸஞ்சரியாநிற்பர்கள் ; தபோநிஷ்ட்டரான ருஷிகள்:ஸ்வரக்ஷணத்துக்கு உன்கைபார்த்திருக்குமவர்கள் ; தபோவிக்நத்தாலே கலங்கும்படி ஸஞ்சரியாநிற்பர்கள் ; "கர்ப்பபூதாஸ்தபோதநா:" (கர்ப்பபூதாஸ்தபோதநா:) என்றும் "ஏஹிபஶ்யஶரீராணி" (ஏஹிபஶ்யஶரீராணி) என்றுமிருக்குமவர்கள் ; "அவர்களால் உனக்குஎன்வருகிறதோ?" என்று கலங்கவேன்றுமாம். அன்றிக்கே, ஸ்ரீநாரதபகவான், ஸ்ரீஸுக்ரீவமஹாராஜர், பெரியாழ்வார், பிள்ளையுறங்காவில்லிதாஸர் தொடக்கமானாரைச் சொல்லிற்றுதல். ஆனால் ஸ்நேஹிகளானவர்களுடையவிரோதியைப் பின்னைப்போக்கவேண்டாவோவென்ன [தனிமையும்பெரிதுனக்கு] - உன்கால் நெடுகநெடுகத் தனிமையே மிக்குவிட்டதே யுனக்கு ! "ஏகதாதுவிநாராமம் க்ருஷ்ணேப்ருந்தாவநம்யயௌ" (ஏகதாதுவிநாராமம் க்ருஷ்ணேப்ருந்தாவநம்யயௌ) என்று நம்பிமூத்தபிரானையொழியவே ஸஞ்சரிக்கும் காலம் பெரிது உனக்கு. [இராமனையுமுவர்த்தலே] - "நம்பிமூத்தபிரான் ஸந்நிதியில் தீம்புசெய்யவொண்ணாது" என்று அவனுடனும் நெஞ்சுபொருந்தி வர்த்திக்கிறிலை. [உவர்த்தலே] -

---

'அநுஷ்ட்டாநகௌரவத்தால் இழியாதொழிகை யன்றிக்கே' என்றது - நாம் காட்டிலே போனால் அசுரர்களாலே பாதகவருகையாலே கோபாலநாத்யநுஷ்ட்டாநத்தில் ஆயாஸமுண்டென்னுமத்தாலேபோகாதொழிகையன்றிக்கேயென்றபடி. 'என்வார்த்தையாக வமைவதே கொள்ளாமைக்கு' என்றது-"ஒருஸ்த்ரீயினுடையவார்த்தையன்றோ" என்றுஎன்வார்த்தைஉனக்குஅங்கீகரியாமைக்குப் பர்யாப்தமாய் விட்டதேயென்றபடி. அஸுரஶப்தத்துக்கும், பஹுவசநத்துக்கும், "வன்கையர்" என்றதுக்கும் க்ரமேணார்த்தம் - ஜந்மத்தால் இத்யாதி. "கஞ்சனோவ" என்றதுக்கர்த்தம் - அதுக்குமேலே இத்யாதி. தவத்தவர் - தபஸ்ஸையுடையவர்களென்று ஶப்தார்த்தம். "தவத்தவர்" என்றதுக்கு - "யஸ்யஜ்ஞாநமயம் தப:" என்றும், "தபஸ்ஸ்வாத்யாயநிரத" என்றும், தபஶ்ஶப்தம் - ஜ்ஞாநவாசியாய், ஸத்திஶ்சஜ்ஞாநவிசேஷ: ஆகையாலே, ஜ்ஞாநவிசேஷமான ஸத்திமான்களென்று விவக்ஷித்துஅர்த்தம் அருளிச்செய்கிறார்-என்னையிறே இத்யாதி. நீநல்லவர்கள் என்றது - உனக்கு நல்லவர்களென்றபடி. இப்பக்ஷத்தில், மறுகுதலாவது-மங்களாஶாஸநபரதையாலே "அற்றைக்கென் வருகிறதோ?" என்று கலங்குகை. அர்த்தாந்தரம் - தபோநிஷ்ட்டரான இத்யாதி. "தபஸா த்ரிதஶா ஹதா:" என்கையாலே, தவமென்று - ப்ரபத்தியாய், ப்ரபந்நரென்று மூன்றாமர்த்தம்-ஸ்வரக்ஷணத்துக்கு இத்யாதி. த்விதீயார்த்தத்தில் "மறுக" என்றதுக்கர்த்தம் - தபோவிக்நத்தாலே இத்யாதி. த்விதீயத்ருதீயார்த்தங்களுக்காதல் மூன்றாமர்த்தத்துக்காதல் ப்ரமாணத்வயம் - கர்ப்பபூதா இத்யாதி. "ந்ருபஸ்ய வர்ணாஶ்ரமபாலநம் யஸ்ஸ தர்மோ ... யா: ரக்ஷிதவ்யா ஸதா ... கர்ப்பபூதாஸ்தபோதநா:" (உக) ஏஹிபஶ்யஶரீராணி முநீநாம் பாவிதாத்மநாம் । ஹதாநாம் ராக்ஷஸைர்கோரைர் பஹூநாம் பஹுதா வநே" (சரு) இத்யாரண்யகாண்டே தண்டகாரண்யவாஸிநோ மஹர்ஷய:. மூன்றாமர்த்தத்தில், "மறுக" என்றதுக்கர்த்தம்-அவர்களால் இத்யாதி. அவர்களால்-அஸுரர்களால். உனக்கு-ரக்ஷகனானவுனக்கு. மூந்தினவர்த்தவிவரணம் - அன்றிக்கேஸ்ரீநாரத இத்யாதி. "பெரிது" என்றதுக்கு பாவம் - உன்கால் இத்யாதி. அப்படி தனிமையுண்டோவென்ன - ஏகதா இத்யாதி. பஞ்சமேம்ஶப்தமே - "விவர்த்ய ஸோ ஹோபாவ்ருந்தாவநே ஸஹ பாஜஸ:" இத்யுத்தரார்த்தம். உவத்தலே உகக்கிறுயில்லை யென்னுதல். இராமனையும் - இராமனுடனும். உவர்த்தலே - உவர்த்தலே

உவர்த்தலையுடையை. [உடன்திரிகிலையும்] - நெஞ்சில் பொருத்தமில்லாவிட்டால், தூரத்திலேகண்ட எதிரிகளுக்கு "இவர்களிருவரும் கூடித்திரியாநின்றார்கள்" என்று அஞ்சும்படி ஒக்கத்திரிவதும் செய்கிறிலை. [என்றுஇத்யாதி] - நீபோகிறாயென்றல்ல, நம்பிமூத்தபிரானுடன் கூடத்திரிகிறிலையென்றாய்த்து என்னுடையஹ்ருதயம் மறுபாடுருவ வேகிறது. [ஊடுறு] - உள்ளூறவென்றபடி. என்னுடைய ஹ்ருதயமானது வேவாநின்றது. இப்படி நிர்ப்பந்திக்கைக்கு நான் இவ்விருப்பைக்குலைந்து போகாநின்றேனோவென்ன—[திவத்திலும் பசுநிரைமேய்ப்புவத்தி] - ஆமாம்; நீ ஓரோ விருப்புக்கள் குலைத்துக்கொண்டு போந்தறியாயிறே, பரமபதத்தி லிருப்பைக்குலைத்தன்றோ பசுநிரைமேய்க்கப்போந்தது. அங்கேயிருக்கவும் பெற்றதில்லை. அங்குநின்றும்போந்தது பொல்லாதாகச்செய்ததென்றிருக்கிறாள். அங்கேயிருந்தானாகில் இங்கு என்வயிறுஎரியவேண்டாவே. நாம் பெறுவோம் இழப்போம்; இவ்வஸ்துதானழியாதொழியலாய்த்தே. அவர்களைவிட்டும் பசுக்களை விரும்பக்கடவ நீ எங்களை யுபேக்ஷிக்கச்சொல்லவேணுமோ? அங்குநின்றும்போந்திலோம் என்னவொண்ணுதே அவனால். "இதொரு ப்ரேமஸ்வஹாவமிருந்தபடியென்!" என்று ஸ்மிதம்பண்ணினான். [செங்கனிவா யெங்களாயர்தேவே] - அதிலே யீடுபடுகிறார்கள். "அவ்விருப்புக்குலைந்து போந்தமையுண்டு, உங்களைவிட்டுப்போவேனோ!" என்று ஸ்மிதம்பண்ண; இவர்களும் வாய்க்கரையிலே யழுந்துகிறார்கள். (கo)

பதினோராம் பாட்டு.

செங்கனிவாயெங்களாயர்தேவுஅத்திருவடிதிருவடிமேல்பொருநல், சங்கணிதுறைவன்வண்தென்குருகூர்வண் சடகோபன்சொல்லாயிரத்துள், மங்கையராய்ச்சியராய்ந்தமாலைஅவனோடும் பிரிவதற்கிரங்கித்தையல், அங்கவன் பசுநிரைமேய்ப்பொழிப்பான்உரைத்தன இவையும்பத்தவற்றின் சார்வே.

ஆ.—*(செங்கனிவாய்)- செங்கனிவாயெங்களாயர் தேவு அத்திருவடி திருவடி மேல் பொருநல் சங்கணி துறைவனாயிருந்த வண்தென்குருகூர் வண்சடகோபன் சொன்ன ஆயிரத்துள், மங்கையராய்ச்சியராய்ந்த மாலை அவனோடும் பிரிவாற்றாமையாலே தையல் பசுநிரைமேய்ப்பொழிப்பான் சொன்ன இப்பத்து, அவன் திருவடிகளைச் சேர்விக்குமென்கிறார்.*

யுடையை; வெறுப்பையுடையையென்னுதல்; உவர்த்தல் - வெறுப்பு. நெஞ்சில் பொருத்தமில்லாதாருடன் கூடத்திரிந்தால் ப்ரயோஜநமேதென்ன - தூரத்திலே இத்யாதி. "என்றென்று" என்கிற வீப்ஸைக்கும் "ஊடுற" என்றவிதுக்கும் பாவம் - நீ போகிறாய் இத்யாதி. என்றென்று என்று பலகாலும் நினைத்து. இதுக்கு பாவம் - ஆமாம் இத்யாதி. விவரணம் - பரமபதத்தில் இத்யாதி. ஹார்த்த பாவம் - அங்கேயிருக்கவும் இத்யாதி. அங்குநின்றும் போந்தது நல்லதன்றோவென்ன-அங்கேயிருந்தானாகில் இத்யாதி. அங்கேயிருந்தால் உன் அபிமதம் ஸித்தியாதேயென்ன - நாம் பெறுவோம் இத்யாதி. "ஆமாம்நீ" இத்யாதி வாக்யவிவரணம் - அவ்விருப்புக்குலைந்து இத்யாதி. திவத்திலும் - திவத்திற்காட்டிலும் உவத்தி - உகப்புதி. வாய்க்கரை - அதரம். (கo)

ஒ.—நிகமத்தில், ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரம் திருவாய்மொழியிலும், எம்பெருமானை "பசுநிரை மேய்க்கவேண்டா" என்று பிராட்டி நிஷேதித்த பாசுரமான இதுவும் அல்லாதவற்றோடொக்க ஒருதிருவாய்மொழியே! என்று விஸ்மிதராகிறார்.

[செங்கனிவாய் என்றுதொடங்கி] - தான் பசுநிரைமேய்க்கப் போகாமை தோற்றும்படி முறுவல்செய்கையாலே சிவந்த கனிபோலேயிருக்கிற திருப்பவளத்தையுடையனும் ஆஸ்ரிதஸுலபனும் ஆயர்தேவான ஸ்வாமியுடைய திருவடிகளிலே, சங்குகளாலே அணியப்பட்ட திருப்பொருநலாகிற ஆற்றையுடையராய் ஸம்ருத்தமான திருநகரியையுடையரான பரமோதாரரான ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும். [மங்கையர் என்றுதொடங்கி] - இடைப்பெண்கள் அவனோடு பிரிகிறோமென்று நோவுபட்டுச் சொன்ன பாசுரத்தை அவர்களிலே ஒருத்தி பசுநிரைமேய்க்கப் போகவேண்டாவென்று சொன்ன.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக ஸஹவாஸத்தை யருளிச்செய்கிறார்.

செம் - சிவந்த, கனி - கனிபோலேயிருக்கிற, வாய், - திருவதரத்தையுடையனாய், எங்கள் - எங்களுக்கு போக்யபூதனாய், ஆயர்தேவு - அப்படியே ஆயர்க்கு போக்யபூதனாய், அத்திருவடி திருவடிமேல் (அவர்களுக்கு ஸ்வாமியுமான) அவன் திருவடிகளின்மேலே, பொருநல் - திருப்பொருநலில், சங்கணி - சங்குகள்சேரும், துறைவன் - துறையையுடையராய், வண் - ஸம்பத்தையும், தென்குருகூர் - அழகையுமுடைத்தான திருநகரிக்கு நிர்வாஹகராய், வண்சடகோபன்சொல் - உதாரரான ஆழ்வாருளிச்செய்த, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளே, மங்கையர் - யௌவநஸ்வபாவைகளான, ஆய்ச்சியர் — இடைச்சிகள், ஆய்ந்தமாலை - அநுஸந்தித்ததொடையாய், அவனொடும் - அவனோடு, பிரிவதற்கு - பிரிகிறதுக்கு, இரங்கி - க்லேஶித்து, அங்கு - அத்திரளிலே, தையல் - (ப்ரபலையாயிருப்பாளொரு) இடைப்பெண்பிள்ளை, அவன், பசுநிரைமேய்ப்பு - பசுநிரைமேய்க்கையை, ஒழிப்பான் - ஒழிக்கைக்காக, உரைத்தன - உரைக்கப்பட்டனவாயிருக்கிற, இவையும்பத்து - இவைபத்தும், அவற்றின் - அவர்களாய்ந்த மாலைகளின் பலமான அவனுடைய ஸம்ஶ்லேஷமேபலமாம்படி, சார்வு-சேறிந்தன; அல்லாத திருவாய்மொழிகளின் பலமே இவற்றுக்கும் பலமாய்த்தினவென்றுமாம்; இவையும் அல்லாத திருவாய்மொழிகளில் சார்வதே! என்று இதினுடைய வைலக்ஷண்யஜ்ஞாநமே பலமாச்சுதாகவுமாம். இது - எண்சீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், அவனை, "பசுநிரை மேய்க்கவேண்டா" என்று நிஷேதித்தபாசுரமான இத்திருவாய்மொழியும் அல்லாதவற்றோடொக்க ஒருதிருவாய்மொழியே! என்று விஸ்மிதராகிறார்.

[செங்கனிவாய் இத்யாதி] - தன்முறுவலாலே எங்களைத் தோற்பித்தாற்போலே, தன்பருவத்திற் பிள்ளைகளையும் தோற்பித்த ஸர்வஸ்வாமியுடைய திருவடிகளிலே சொல்லிற்று. "ஸம்ஸாரசக்ரஷிதிநிர்த்தவஹாரிணே" என்னக்கடவதிறே. [பொருநல் இத்யாதி] - இவர் இருந்தவிடத்தே ஸத்துக்கள் சேருமாபோலே, சங்குகளாலே அணியப்பட்ட திருப்பொருநலையுடையராய், ஸம்ருத்தமான திருநகரியையுடையராய், பரமோதாரரான ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்திலும். [மங்கையராய்ச்

சியர் இத்யாதி] - அவனோட்டைப் பிரிவு பொறுக்கமாட்டாதபடியாலே ஒருபருவத்தில் இடைப்பெண்கள் அநுஸந்தித்த தொடையாய், அவர்களிலே ஒருத்தி "பசுநிரை மேய்க்கவேண்டா" என்றுரைக்காள்: "எல்லாரும் திரளச்சொன்னால் அவன் செவிப்படாது" என்னுமத்தாலே நப்பின்னைப் பிராட்டியைப்போலே அவனுக்கு மறுக்கவொண்ணாத தரமுடையாளொருத்தியை வார்த்தை சொல்லவிட்டார்கள்; இப்படியாகிலிறே, "அடிச்சியோம்" என்றும், "தொழுத்தையோம்" என்றும் "ஆழுமென்னுருயிர்" என்றும், "என்சொற்கொள்" என்றும் சொன்ன பன்மைகளும் ஒருமைகளும் சேரக்கிடப்பது. [இவையும்பத்து அவற்றின்சார்வே] - கீழ்ச்சொன்ன திருவாய்மொழிகளுமே இதுவும் ஒருதிருவாய்மொழியே! என்றுப்பக்க நிர்வஹித்துப் போருவது. அங்ஙனன்றிக்கே, கீழில் திருவாய்மொழிகளுக்குச் சொன்ன ஃபலமே இதுக்கும் ஃபலமென்னுதல்; மங்கையராய்ச்சியர் ஆய்ந்த மாலைபாற் பலித்த பலமே இதுக்கும் பலமென்னுதல். அவர்களுக்கு அவன் போகாமல் மீண்டானாகில் இவர்களுக்கும் அதுவே பலமாய், அவனோடே நித்யஸம்ஶ்லேஷம் பண்ணப்பெறுவர் என்கிறார்.

ஈடு.—நிகமத்தில்; அவனை "பசுநிரைமேய்க்கப்போகவேண்டா" என்று நிஷேதித்த பாசுரமான இத்திருவாய்மொழியும் அல்லாதவற்றோடொக்க ஒருதிருவாய்மொழியே! என்று விஸ்மிதராகிறார்.

[செங்கனிவாய்இத்யாதி] - அவ்வயிரவுருக்கான முறுவலாலே எங்களைத் தோற்பித்தாற்போலே, தன்பருவத்திற் பிள்ளைகளையும் தோற்பித்த ஸர்வஸ்வாமி திருவடிகளிலே சொல்லிற்று. 'செங்கனிவாய்' என்கையாலே தங்களைத்தோற்பித்தபடி சொல்லிற்று; 'ஆயர்தேவு' என்கையாலே தன்பருவத்திலுள்ளாரைத் தோற்பித்தபடி சொல்லிற்று; "**பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்**" (பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்). [அத்திருவடிதிருவடிமேல்] - அந்த ஸர்வஸ்வாமியானவன் திருவடிகளிலே. அவன் ஶேஷித்வத்தைக்காட்டிக்கொடுத்தான்; திருவடிமேலென்கையாலே இவரும் ஶேஷத்வத்திலே நின்றார். [பொருநற்சங்கணிதுறைவன்] - தாமிருந்தவிடத்திலே ஸத்துக்களடங்கலும் வந்துசேருமாபோலே யாய்த்து, திருப்பொருநலில் சங்குகள் வந்துசேரும்படி. [மங்கையர்இத்யாதி] - அவனோட்டைப்பிரிவுபொறுக்கமாட்டாமையாலே ஒருபருவத்திலிடைப்பெண்கள்அநுஸந்தித்த தொடையாய். [தையல் இத்யாதி] - "ஸஹைபோலேயெல்லாரும் திரண்டுவார்த்தைசொன்னால் செவிப்படாது" என்றுபார்த்து, அவனுக்கு மறுக்கவொண்

நிகமம் - செங்கனிவாய் இத்யாதி. "அவன் பசுநிரைமேய்ப்பொழிப்பானுரைத்தன இவையும்பத்தவற்றின் சார்வே!" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - அவனை இத்யாதி 'ஒருதிருவாய்மொழியேயென்று விஸ்மிதராகிறார்' என்றது - "சார்வே!" என்கிற ஸ்வரத்தைப்பற்ற.

செங்கனிவாயாலே ஆயர்களையும் தோற்பித்தானென்றபடி. இருவரையும் தோற்பித்தபடியைக் காட்டுகிறார் - செங்கனிவாய் இத்யாதி. 'செங்கனிவாய் எங்கள் என்கையாலே' என்று கூட்டுவது; 'செங்கனிவாய் ஆயர்தேவுஎன்கையாலே' என்றுகூட்டுவது. தோற்பித்தபடி யென்றதுக்கு-"**ஸ்த்ரீபாலவிஜிகீஷு**" என்றதிலேநோக்கு. தன்பருவத்திலுள்ளாரைத்தோற்பிக்குமோவென்ன-**பும்ஸாம்** இத்யாதி. "**சந்த்ரகாந்தாநநம் ராமமதீவ ப்ரியதர்ஶநம் । ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்**" இத்யயோத்யாகாண்டே. (ரு-உ௯)

இத்தால் ஃபலிதம் - அவன் ஶேஷித்வத்தை இத்யாதிவாக்யத்வயம். "அவனோடும்பிரிவதற்கிரங்கி -

ஞுதபடி நப்பின்னைப்பிராட்டியுடைய தரமுடையாளொருத்தி பசுமேய்க்கப்போகாமே மீட்கைக்காகச்சொன்னவை யாய்த்து. "அடிச்சியோம்" என்றும் "தொழுத்தையோம்" என்றும் "ஆழுமென்னாருயிர்" என்றும் "என்சொற் கொள்" என்றும்சொன்ன பன்மைக்கும் ஒருமைக்கு மெல்லாம் சேருமிறே. [இவையும்பத்து அவற்றின்சார்வே] - 'அவை' என்கிறது கீழ்த்திருவாய்மொழிகளையாய், "அவற்றினருகே இதுவுமொரு திருவாய்மொழியே!" என்று ஆஶ்சர்யத்திலேயாக்கியாய்த்து சீயர் அருளிச்செய்ததும் வ்யாக்யாநம் பண்ணிற்றும். அன்றிக்கே, [இவையும்பத்துஅவற்றின்சார்வே] - கீழ்த்திருவாய்மொழிகளுக்குச் சொன்ன ஃபலம் இதுக்கும் ஃபலமென்றதாகவுமாம். அன்றிக்கே, அவையென்கிறது - "மங்கையராய்ச்சிய ராய்ந்தமாலை" என்கிறவற்றையாய், இவையும்அவற்றோடொக்கும். அதினுடைய ஃபலமே யிதுக்கும் ஃபலம் அது நிவர்த்தகமாகில் இதுக்கும் பேறுண்டாம். அவர்கள் "நீபோகாதேகொள்" என்ன அவன் தவிர்ந்து அவர்களுடனே கலந்தாற்போலே, இது கற்றாரும் அவனோடே நித்யஸம்ஶ்லேஷம் பண்ணப்பெறுவர். 'செங்கனிவாயெங்களாயர் தேவு - அவனோடும் பிரிவதற்கிரங்கி - மங்கையராய்ச்சிய ராய்ந்தமாலை — தையல் அங்கவன்பசுநிரைமேய்ப்பொழிப்பானுரைத்தன - அத்திருவடிதிருவடிமேல்பொருநல் சங்கணிதுறைவன்-வண்தென்குருகூர் வண்சடகோபன்-சொல்லாயிரத்துள்- இவையும் பத்துஅவற்றின்சார்வே' என்றந்வயம். (கக)

மங்கையராய்ச்சியராய்ந்தமாலை" என்றந்வயிப்பது. ஆய்ந்தமாலை - நெஞ்சிலே யாராய்ந்தமாலை. "ஆய்ச்சியராய்ந்தமாலை - தையல் - உரைத்தன" என்ற பன்மையுமொருமையும் சேரும்படி யென்னென்ன - ஸஹைபோலே இத்யாதிவாக்யத்ரயம். 'அடிச்சியோமென்றும்' இத்யாதி வாக்யாதியிலே, "இப்படியாகில்" என்று அத்யாஹார்யம். வ்யாக்யாநம்பண்ணிற்றும் என்றது - ஒன்பதினாயிரம் வ்யாக்யாநம் பண்ணிற்றுமென்றபடி. முந்தினவர்த்தத்தில், "சார்வே!" என்றது - ஸ்வரத்திலே த்விதீயார்த்தத்துக்கு- சார்வு - ஒப்பு. அவற்றோடொத்தது - அவற்றோடொத்த ஃபலத்தையுடையதென்றபடி; "சார்வே" என்கிற ஏகாரம் இப்போது அவ்யயம். விவரணம்-அதினுடைய இத்யாதி. அதினுடைய - ஆய்ந்தமாலையினுடைய வென்றபடி. கீழ்வாக்யவிவரணம் - அதுநிவர்த்தகம் இத்யாதி. "நிவர்த்தகமாகில்" என்றவாக்யவிவரணம் - அவர்கள் இத்யாதி. இப்பாட்டுக்கு அந்வயங்காட்டுகிறார் - செங்கனிவாய் இத்யாதி. உரைத்தன - உரைத்தவார்த்தைகளை. "சடகோபன்சொன்ன" என்றந்வயிப்பது. "சொல்" என்றது -சொன்னவென்றபடி. "ஆய்ந்த" என்றது - நெஞ்சாலே யாராய்ந்தவென்றாய், அநுஸந்திக்த மாலையென்றபடி. பொருநல்-திருத்தாம்ரபர்ணி. திருப்பொருநலில் சங்குகள்சேரும் துறையையுடையராய் ஸம்பத்தையுடைய அழகிய திருநகரிக்கு நிர்வாஹகராய் ஊரரான ஆழ்வாரருளிச்செய்த என்று ஸப்தார்த்தம். மங்கையராய்ச்சியர்-யௌவநஸ்வபாவைகளான இடைப்பெண்களென்றபடி. "ஆய்ந்தமாலை" என்றது - "உரைத்தன" என்றதுக்கு விசேஷணம். "அநுஸந்தித்தமாலையான - உரைத்தவார்த்தைகளை - சடகோபன்சொல்" என்றுயோஜிப்பது. மேய்ப்பொழிப்பான் - மேய்க்கையை யொழிக்கைக்காக. அவனோடும் பிரிவதற்கிரங்கி' - அவனோட்டைப்பிரிவுக்கு க்லேசித்து. அங்கு - அத்திரளிலே. இவையும்பத்து - இவைபத்தும் என்றந்வயிப்பது.

(கக)

த்ராவிடோபநிஷத்ஸங்கதி. — [illegible]

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— [illegible] ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி. { வேய்மருதோளிந்திரைகோன் மேவுகின்றதேசத்தைத்
தான்மருவாத்தன்மையினல்தன்னையின்னம் - பூமியிலே
வைக்குமெனச்சங்கித்துமால் தெளிவிக்கத்தெளிந்த
தக்கபுகழ்மாறனெங்கள்சார்வு.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானார்திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்.

நான்காந்திருவாய்மோழி—சார்வே - ப்ரவேஶங்கள்.

ஆ—(சார்வே.) - இப்படி ப்ராஸங்கிகத்தை முடித்து * பத்துடையடியவரிலே ப்ராரப்தமான ஶக்தியோக ஸௌலப்யத்வத்தை நிகமிக்கிறார்.

ஒ.—நாலாந்திருவாய்மொழியில், எம்பெருமான், "உம்மை ஒருநாளும்பிரியேன்" என்று இவரை ஆஶ்வஸிப்பிக்க அத்தாலே தரித்து மிகவும்ப்ரீதரான ஆழ்வார், வீடுமின்முற்றத்திலும் பத்துடையடியவரிலுமாக ப்ரஸ்துதமான ஶக்தியோகமாகிற உபாயம் ஸ்வஸாத்யத்தோடே சேர்ந்தபடியை ஸாக்ஷாத்கரித்து அத்திருவாய்மொழிகளில் ஶக்திவர்யகமாகச் சொன்ன குணங்களைப் பராமர்ஶியாநின்றுகொண்டு, ஶக்தியோகத்தை நிகமிக்கிறார். எம்பெருமானை, "பசுமேய்க்கப்போகாதொழியவேணும்" என்று அபேக்ஷிக்க, அவனும் அப்படியே தவிருகையாலே ப்ரீதரான ஆழ்வார், அவன் ஶக்திலஶ்யனென்னுமிடம் நிஶ்சிதமென்கிறாரென்றுமாம்.

ப.—நாலாந்திருவாய்மொழியில், கூடவிருக்கச்செய்தே ஈஶ்வரனுடைய பிரிவையதிஶங்கைபண்ணும் தமக்குப் பிறந்தப்ரேமாதிஶயத்தாலே அவனும் விஶ்லேஷப்ரஸங்கமில்லாதபடி ஸம்ஶ்லேஷப்ரகாரத்தைத் தெளிவிக்க, அத்தாலே ஸந்துஷ்டராய், "தன்பக்கல் ஶக்தியுக்தராயிருப்பார்க்கு ஸௌலப்யனாயிருக்கும்" என்றறுதியிட்டு, அந்த ஶக்திலப்யத்வோபபாதகமாக; அவனுடைய பரத்வஸௌலப்யத்வ விஶிஷ்ட ஐஶ்வர்யத்வத்தையும், அதுக்கடியான ஶ்ரிய:பதித்வத்தையும், அநுபாவகத்வபூர்த்தியையும், ஆஶ்

ரிதாரக்ஷணைஸ்வர்யத்தையும், அநந்யஶக்தி ஸௌலப்யத்வத்தையும், அதிஶயிதஸௌஶீல்யத்வத்தையும், போக்யவிக்ரஹத்வத்தையும், நித்யாநுபாவ்யமான ரக்ஷகத்வத்தையும், தத்த்வயாதாத்ம்ய ப்ரகாஶகத்வத்தையும், அஸாதாரண ஜந ப்ராப்யத்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேஶ்வரன்விஷயத்தில் தமக்குப் பிறந்த பக்தியானது போகோபகரணமாய்க்கொண்டு ப்ராப்யாந்தர்கதமானப்ரகாரத்தை யநுஸந்தித்து ப்ரீதராகிறார்.

*இ.—நாலாந் திருவாய்மொழியில், பிரியநினைவின்றிக்கேயிருக்க அதிஶங்கையாலேபிரிந்தார் படும்வ்யஸநத்தைப்பட்டு அத்தாலே அவஸந்நரான இவரை, "உம்மை ஒருநாளும் பிரியேன்" என்று ஆஶ்வஸிப்பிக்க அத்தாலே தரித்து மிகவும்ப்ரீதரானவர், வீடுமின்முற்றத்திலும் பத்துடையடியவரிலுமாக ப்ரஸ்துதமான பக்தியானது ஸ்வஸாத்யத்தோடே சேர்ந்தபடியை ஸாக்ஷாத்கரித்து, அத்திருவாய்மொழிகளில் பக்திவர்த்தகமாகச்சொன்ன குணங்களைப் பராமர்ஶியாநின்றுகொண்டு, தமக்குப் பேற்றுக்குஉடலாக முதல்திருவாய்மொழியிற் சொன்ன ப்ரபத்தியைச் சொல்லித் தலைக்கட்டுகிறார். "மயர்வறமதிநலமருளினன்" என்று முதல் திருவாய்மொழியிலே ப்ரபத்தியைச் சொல்லிற்றிறே. இவருடைய பக்திதான், **"உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்யைகாந்திகாத்யந்திகபக்தியோகலப்ய:"** என்று ஜ்ஞாநகர்மாநுக்ருஹீத வேதாந்த விஹிதபக்தியன்று. அதுவாகில் அபஶூத்ராதிகரணந்யாயம் ப்ரஸங்கிக்கும் அந்த ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்தாநத்திலே பகவத்ப்ரஸாதத்தாலே பரபக்திதொடக்கமான ப்ராப்யாந்தர்பூதமான அவஸ்தைகளிறே இவரது; அப்படி வீடுமின்முற்றத்திலும், பத்துடையடியவரிலும் பிறர்க்கு உபதேஶித்த பக்தி ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை நிரூபிக்கிறார்: ஸாயுஜ்யத்தோடே பொருந்துகையாவது-ஸாயுஜ்யத்தை லபிக்கை. அதாகிறது:—ஸாக்ஷாத்காரம். கீழ், இவர்க்கு அநுஸந்தாநமில்லையோவென்னில்; அவையெல்லாம் ஒருரஸவிஶேஷங்களைப் பற்றச்சொல்லிற்று. இதில், உபக்ரமத்திலே தாம் விதித்த பக்தியை நிரூபிக்கிறார். "பசுமேய்க்கப் போகாதொழிய வேணும்" என்று அபேக்ஷிக்க, 'அவனும் தவிர்ந்தோம்' என்று சொல்லுகையாலே ப்ரீதராய், அவன் பக்திலப்யனென்னுமிடம் நிஶ்சிதமென்கிறார்" என்று பிள்ளான் நிர்வாஹம்.*

ஈடு.—தம்மைப்பிரிய நினைவின்றிக்கேயிருக்க அதிஶங்கையாலே பிரிந்தார் படும் வ்யஸநத்தைப்பட்டு, அத்தாலே யவஸந்நரானவரை, "உம்மையொருநாளும் பிரியேன்" என்று அவன்ஆஶ்வஸிப்பிக்க அத்தாலே தரித்து மிகவும் ப்ரீதரானார்-கீழ். முதல் திருவாய்மொழியிலே, தத்த்வவிஷயமாகச் சொல்லவேண்டுவதெல்லாம் சொல்லியற்றது;

---

*சார்வேதவநெறிப்ரவேஶம்; இத்திருவாய்மொழிக்கு * வீடுமின்முற்றம் * பத்துடையடியவரோடே ஸங்கதியாதல்; * வேய்மருதோளிணையோடே ஸங்கதியாதல், இது பிள்ளான் நிர்வாஹம். வ்ருத்தாநுவாதம்-தம்மை இத்யாதி. ஆஶ்வஸிப்பிக்கவென்றது "செங்கனிவாய்" என்றத்தைப்பற்ற. * வீடுமின்முற்றத்திலும் * பத்துடையடியவரிலும்சொன்ன பக்தியையும், முதல் திருவாய்மொழியிலே ஸூசிதமான ப்ரபத்தியையும், * சார்வே தவநெறியிலே நிரூபிக்கிறாராகையாலே, தத்த்வபரமான முதல்திருவாய்மொழியிலர்த்தத்தை * கெடுமிடரிலே நிரூபிக்கிறாரென்கிறார் - முதல்திருவாய்மொழியிலே இத்யாதி. "தத்த்வபரமாகச் சொல்லவேண்டுவதெல்லாம் சொல்லி" என்றது - "அருளினன்" என்று ப்ரபத்தியைச் சொல்லுகையாலே உபாயமும் உக்*

இனி அந்த தத்த்வந்தானே ப்ராப்யமாயிருக்குமிறே. அந்த ப்ராப்யவேஷத்தையும்,ப்ராப்தி பலமான கைங்கர்யத்தையும், "படமுடையரவிற் பள்ளிபயின்றவன்" என்றும் "கடைத்தலைசீய்க்கப்பெற்றால்" என்றும் அநுஸந்தித்தார் - * கெடுமிடரிலே; அந்தப்ராப்யம் அப்போதே கைபுகுரப்பெறாமையாலும் நெடுநாள்படப் பிரிந்துபோந்த வாஸனையாலும் வெருவி இவர் அவஸந்நராக, இவர்க்கு ப்ராஸங்கிகமாகப் பிறந்த அவஸாதத்தை அநுஸந்தித்து அவனும் ஆஶ்வஸிப்பிக்க ஆஶ்வஸ்தராய் நின்றார் - * வேய்மருதோளிணையிலே. ஆக, முதல்திருவாய்மொழியிலே - தத்த்வவிஷயமாகச் சொல்லவேண்டுவதெல்லாம் சொல்லி, அவ்வஸ்துதானே ப்ராப்யமாயிருக்கையாலே அந்தப்ராப்யத்தைப் பெறுகைக்கு உபாயமான பக்தியோகத்தை * வீடுமின் முற்றத்தாலே சொல்லி, அந்த பக்திமான்களுக்கு அவன் ஸுலபனாயிருக்கும் என்று அவன் ஸௌலப்யத்தை * பத்துடையடியவராலே சொல்லி, ஆக, வீடுமின்முற்றத்திலும் பத்துடையடியவரிலும் சொன்ன பக்தியானது ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச் சொல்லி, அத்திருவாய்மொழிகளில் பக்திவர்த்தகமாகச் சொன்ன குணங்களைப் பராமர்ஶியா நின்றுகொண்டு, தாம் தம்முடைய பேற்றுக்கு உபாயமாக முதல்திருவாய்மொழியிற் சொன்ன ப்ரபத்தியோடே தலைக்கட்டுகிறார் - இதில்.

---

*தமேயாகிலும், தத்த்வ பரத்வ ப்ராதான்யத்தைப்பற்ற. * கெடுமிடரிலே ப்ரதிபாதிக்கிறது கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியையன்றோ? இது பரத்வ ப்ரதிபாதகமான முதல்திருவாய்மொழியின் நிகமனமாகிறபடி யெங்ஙனே? என்ன - இனி அந்த தத்த்வந்தானே இத்யாதி; அந்த பரவஸ்துவே கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாகையாலே நிகமனமாகலாம் என்றபடி.* அந்த ப்ராப்யவேஷத்தையும் ப்ராப்திபலமான கைங்கர்யத்தையுமென்றது - "அமரர்களதிபதி, தொழுதெழு" என்ற பதங்களைக் கடாக்ஷித்து.* வேய்மருதோளிணை எதினுடைய நிகமனமென்ன-அந்த ப்ராப்யம் அப்போதே இத்யாதி. * வேய்மருதோளிணை ப்ராஸங்கிகமென்றபடி. இனிமேல், முதல் திருவாய்மொழியோடே * வீடுமின் முற்றத்துக்கு ஸங்கதிகதன பூர்வகமாக, * வீடுமின்முற்றத்தினுடையவும் * பத்துடையடியவருடையவும் ப்ரமேயத்தை யருளிச்செய்துகொண்டு, அவற்றிற்சொன்ன பக்தியையும் முதல்திருவாய்மொழியில் ஸூசிதமான ப்ரபத்தியையும் இதிலே நிகமிக்கிறாரென்கிறார் - ஆக முதல்திருவாய்மொழியிலே என்றுதொடங்கி, தலைக்கட்டுகிறார் என்னுமளவாலே. * வீடுமின் முற்றத்திற்சொன்ன பக்தி ஸாத்யபக்தியாயிருக்க, 'ப்ராப்யத்தைப்பெறுகைக்கு உபாயமான பக்தியோகத்தை' என்றதுக்குக் கருத்து - தாம் உபய ஸாத்யபக்தி ப்ரபத்தியிலே மூட்ட ப்ரபத்தியுபாயமாய்த் தலைக்கட்டுமென்று. இங்ஙனன்றிக்கே, இந்த ஸாத்யபக்திதன்னையே ப்ரபத்தியென்றால் 'தம்முடைய பேற்றுக்கு உபாயமாக முதல்திருவாய்மொழியிற் சொன்ன ப்ரபத்தியோடே தலைக்கட்டுகிறாரிதில்' என்றதோடே சேராது. "*வீடுமின் முற்றத்திலும் *பத்துடையடியவரிலும் சொன்ன பக்தி ஸாத்யபக்தி" என்றே யருளிச்செய்வர். ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச் சொல்லியென்றது - "தவநெறிக்கு - சார்வே" என்றதைப்பற்ற. ஸ்வஸாத்யத்தோடே பொருந்துகையாவது - பக்த்யுபாயம் பலவ்யாப்தமாகை. குணங்களைப் பராமர்ஶியா நின்றுகொண்டு என்றது - "உரலினோடிணைந்திருந்து" என்றத்தை "தாமோதரன்" என்றும், "புயற்கருநிறத்தனன்" என்றத்தை "கார்மேகவண்ணன்" என்றும், "அடியவர்க்கெளியவன்" "எளிவருமியல்வினன்" என்றத்தை "சார்வே" என்றும், "அமைவுடைமுதல்கெடல்" இத்யாதியை "பெருமையனே வானத்திமையோர்க்கும்" என்றும், "பிறர்களுக்கரியவித்தகன்" என்றத்தை "காண்டற்கருமையனே" என்றும், "மலர்மகள்விரும்பும்" என்றத்தை "திருமெய்யுறைகின்ற" என்றும், இப்புடைகளிலே பராமர்ஶித்துக்கொண்டென்றபடி. முதல்திருவாய்மொழியிற் சொன்ன என்றது - "அருளினன்" என்றத்தைப்பற்ற. ப்ரபத்தியோடே தலைக்கட்டுகிறார் என்றது - "பண்டேபரமன்பணித்தபணிவகையே - கண்டேன் கமலமலர்ப்பாதம்" என்றத்தைப்பற்ற.

இவ்விரண்டுகோடியும் இவர்க்கு உண்டாயிருக்கச்செய்தேயும், தம்முடைய பேற்றுக்கு உடலாக இவர்நினைத்திருப்பது ப்ரபத்தியையிறே. முதல்திருவாய்மொழியிலே ப்ரபத்திக்கு ஸூசகமான ஶப்தமுண்டோ வென்னில்,—''அருளினன்'' என்றாரிறே. இனித்தான் இவருடைய பக்தி வேதாந்தவிஹிதையான பக்தியல்ல; அதுதன்னையே பார்க்குமன்று அபஶூத்ராதிகரணந்யாயம் ப்ரஸங்கிக்கும். அதுதான் இவ்வாழ்வாருடைய ப்ரபாவத்தாலே கூடாதோவென்னில்; அது இவருடைய உக்திகளோடு விரோதிக்கும். ''அருளினன்'' என்கிற இப்புடைகளிலேயிறே இவருடைய உக்திகள். ''உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்யைகாந்திகாத்யந்திகபக்தியோகைகலப்ய:'' (உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்யைகாந்திகாத்யந்திகபக்தியோகைகலப்ய:) என்று ஜ்ஞாநகர்மங்களாலே ஸம்ஸ்க்ருதாந்த:கரணனுக்குப் பிறக்குமதிறே பக்தியாகிறது; அந்த ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்த்தாநே பகவத்ப்ரஸாதமாய், அதுக்கு அநந்தரமான பரபக்தி தொடங்கிப் பிறந்ததாயிருக்கும் இவர்க்கு. இனித்தான், இவர்வழியேபோய் இவருடையபேறே பேறாக நினைத்திருந்த பாஷ்யகாரரும், ப்ரபத்தியைப்பண்ணி, பின்னை பக்திதொடங்கி ப்ரார்த்தித்தாரிறே. அவன்உபாயமானாலும் இவனுக்கு ருசியுண்டாய் ப்ராப்யஸித்தியுண்டாக வேணுமே; இல்லையாகில் புருஷார்த்தமாகாதே; ப்ராப்யம் இன்னதென்று நிஷ்கர்ஷித்து அந்த ப்ராப்யருசி கண்ணழிவற உடையவனுக்கிறே அவன் ப்ராபகனாவது; ஆகையாலே, இவருடைய பக்திப்ரபத்திகள் விகல்பிக்கலாம்படியிறே இருப்பது. ஆக, * வீடுமின்

இவர்க்கு பக்தியுண்டாயிருக்க ப்ரபத்தியே பேற்றுக்கு உடலாவானென்னென்ன - இவ்விரண்டு இத்யாதி. ''அருளினன்'' என்றால் ப்ரபத்தியைச் சொல்லுமோவென்னில்: ''அதுவுமவனதின்னருளே'' என்று ப்ரபத்திக்கும் அடி க்ருபையாகையாலே ப்ரபத்தியென்று ஸித்தம். இவர்க்கு ப்ரபத்தியே பேற்றுக்கு உபாயமென்பானென்? பக்திதானாலோ என்னில், அப்படியாமன்று அபஶூத்ராதிகரணத்தோடும் இவருடைய உக்திகளோடும் விரோதிக்குமென்கிறார் - இனித்தான் என்றுதொடங்கி நாலுவாக்யத்தாலே. வேதாந்த விஹிதபக்தியானாலோவென்ன - அதுதான் இத்யாதி. ந்யாயம் ப்ரஸங்கிக்கும் - ந்யாயவிரோதம் ப்ரஸங்கிக்குமென்றபடி. அதுதான் - வேதாந்த விஹிதபக்திதானென்றபடி. விவரணம் - அருளினனென்கிற இத்யாதி. ஆனால் இவர்க்கு பக்தி தான் வந்தவழியேதென்ன - உபய இத்யாதி. யாமுநாசார்ய வசநம்: உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய - கர்மஜ்ஞாநஸம்ஸ்க்ருதாந்த:கரணஸ்ய. ஐகாந்திகமாகையாவது - பலதலைத்திருக்கை யன்றிக்கே பகவானாகிற ஒருதலையேபற்றியிருக்கை. ஆத்யந்திகமாகையாவது - அந்தமற்றதாய வர்த்தமானமென்றாய், யாவதாத்மபாவியாயிருக்கை. ப்ரபந்நனுக்கும் பக்திவேணுமென்கைக்கு ஸம்வாதமாதல், பகவத்ப்ரஸாதம் பக்திஹேதுவென்னுமதுக்கு ஸம்வாதமாதல் - இனித்தான் இவர்வழியே இத்யாதி. ப்ரபந்நனுக்கும் அநுபவ கைங்கர்யங்கள் அபுருஷார்த்தமாகாமைக்காக பக்திவேணுமென்கிறார் - அவன்உபாயம் இத்யாதி. ப்ரபத்தே: பூர்வபாவித்வேநவும் பக்திவேணுமென்று உபபத்திமுகேந உர்ஸிப்பிக்கிறார் - ப்ராப்யமின்னதென்று இத்யாதி. ஆகையாலே என்றது - ப்ரபத்தியேயன்றிக்கே ஸாத்யபக்தியுமுண்டாகையாலே யென்றபடி. பக்திப்ரபத்திகள் விகல்பிக்கலாம்படியிறே யிருப்பது என்றது - ''அவனுடைய க்ருபையேயுபாயம்'' என்றறுதியிட்டிருக்கிற இவருடைய ஸித்தாந்தத்தைப்பார்த்தால் ''ப்ரபத்தியே இவர்க்குள்ளது, பக்தியில்லை'' என்றும், ஆர்த்தியின் மிகுதியாலே ப்ரபத்தியைப் பண்ணும்இவருடைய அநுஷ்டாநத்தைப்பார்த்தால் ''பக்தியே இவர்க்குள்ளது, வேறொன்றுமில்லை'' என்றும் விபஜித்துச் சொல்லலாம்படியாயிருக்குமிறே என்றபடி. இத்தால் - ''பக்தியாதல் ப்ரபத்தியாதலொழிய இரண்டுமுண்டாகக் கூடுமோ?'' என்கிற ஶங்கையும் பரிஹ்ருதம். மேலே, ''ஆகவீடுமின்முற்றத்திலும்'' இத்யாத்யுக்தத்தை நிருமிக்கிறார் - ஆகவீடுமின் முற்றத்திலும் இத்யாதி. பிறர்க்கு உபதேசித்த பக்தி தம்மு

முற்றத்திலும் * பத்துடையடியவரிலும் பிறர்க்கு உபதேசித்த ஹக்தி தம்முடையபேற்றுக்கு உடலாயிருந்தபடியைச் சொல்லி, இதுதான் ஸ்வஸாத்யத்தோடே சேர்ந்தபடியைச் சொல்லி நிகமிக்கிறார் இதில். இது ஸாத்யத்தோடே சேர்ந்திருப்பது ப்ராப்தியுண்டானாலன்றோ வென்னில்? - ஸாக்ஷாத்காரரூபமான அநுஸந்தாநமுண்டாக வமையுமிறே இப்போது; குணம் அநுஹாவ்யமானால் அந்தகுணவிசிஷ்டமாக இங்கேயிருந்து உபாஸியாநின்றானிறே. ஆக, உபாஸந வேளையிலும் அதிருக்கும்படியை அநுஸந்திக்கத் தட்டில்லையிறே. ஆனால் பின்னைக் கீழுமெல்லாம் இந்த ப்ராப்யாநுஸந்தாநமே யன்றோ பண்ணிப்போந்ததென்னில்; அவற்றைப் பற்றிப் பிறந்தன சிலரஸவிசேஷங்களைச் சொன்ன இத்தனையிறே அவ்விடங்களில்;உபக்ரமித்த அர்த்தத்தை யுபஸம்ஹரிக்கையென்னு மொன்று உண்டே; அத்தைச்சொல்லுகிறது - இங்கு. இங்ஙனன்றிக்கே, பிள்ளான் ஒருருவிலே "'நீபசுகேய்க்கப்போகவேண்டா' என்றாள்; 'ஆகில் தவிர்ந்தேன்' என்றான்; இவன் தனை ஸாபலஹனில்லைகிடீர், இவன் ஹக்திலப்யனென்னுமிடம் நிஶ்சிதமென்கிறார்"

---

*டைய பேற்றுக்கு உடலாகக்கூடுமோவென்னில்; விபீஷணாதிகள் ராவணாதிகளுக்கு உபதேசிக்க தத்வாரா தங்களுக்கு ஹவத்ப்ராவண்யாதிஶய ஹேதுவானாற்போலே, இவர்க்கும் பிறரைக் குறித்து உபதேசித்த ஹக்தி ஹவத் ப்ராவண்யத்தைப் பிறப்பிக்க அத்தாலே ப்ரபத்தியைப் பண்ண, அது தம்முடைய பேற்றுக்கு உடலாய் ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச் சொல்லி நிகமிக்கிறார்; ஆகையாலே, இவர்க்குக் கூடுமென்றபடி. "தம்முடைய பேற்றுக்கு உடலாய்" இத்யாதியின் விவரணம் - இதுதான் ஸ்வஸாத்யத்தோடே இத்யாதி. ஸாத்யத்தோடே சேருகையாவது - ஸாத்யவ்யாப்தமாகையாய், ஸாக்ஷாத்காரமாகையென்றபடி. இதுவென்றது - பிறர்க்கு உபதேசித்த ஹக்தியென்றபடி. தமக்குஇன்னம் ஹவத்ப்ராப்தி ஸித்தியாதிருக்க, தத்ஃபலம்பெற்றேனென்னும்படி எங்ஙனேயென்கிற ஶங்கையையநுவதித்துப் பரிஹரிக்கிறார் - இது ஸாத்யத்தோடே இத்யாதி. ப்ராப்தி யாவது - ப்ரத்யக்ஷாநுஹவமென்றபடி. ஸாக்ஷாத்காரரூபமான அநுஸந்தாநமாவது - ப்ரத்யக்ஷஸமாநாகாரமென்று தோற்றாதே ப்ரத்யக்ஷமென்றே தோற்றுகிற மாநஸாநுஹவவிசேஷம். இப்போது என்றது-இங்கேயிருக்கச்செய்தே யென்றபடி. ஆனால், ப்ராப்திதஶையில் அநுஹவம்போலே அப்ராப்திதஶையிலும் அநுஹவம் ஸோஹரூபமாயிருக்குமோவென்ன - குணமநுஹாவ்யம் இத்யாதி. அதாவது - "ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந்" என்கிறபடியே ப்ராப்திதஶையிலே குணம் அநுஹாவ்யமாயிருக்கச் செய்தேயும், இங்கேயும் அக்குணவிசிஷ்டமாக வுபாஸிக்கிறானிறே குணாநுஹவத்தின் ஸோஹரூபதையைப் பற்றவென்றபடி. அதிருக்கும்படியை - குணாநுஹவத்தின் ஸோஹரூபதையிருக்கும்படியை யென்றபடி. கீழுமெல்லாம் என்றது - "கண்ணனை நான்கண்டேனே," "கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்," "கண்டசதிர் கண்டொழிந்தேன்," "கண்டுகொண்டென் கண்ணிணையாரக்களித்து" இத்யாதியைக்கடாக்ஷித்து. ப்ராப்யாநுஸந்தாநம் என்றது - ப்ரத்யக்ஷஸமாநாகாரமான மாநஸாநுஸந்தாநமென்றபடி. அவற்றைப்பற்றி என்றது - ஓரோகுணங்களைப் பற்றியென்றபடி. அவ்விடங்களில் - அந்தத்திருவாய்மொழிகளில். இத்தால் - அவ்விடங்களைப்பற்ற இத்திருவாய்மொழிக்கு * முனியே நான்முகன் அணித்தாகையாலே மாநஸாநுஹவத்துக்கொரு வைஶத்யவிசேஷமுண்டென்றபடி. கீழெங்கும் ப்ராப்யாநுஸந்தாநமுண்டானாலும் விஶ்லேஷவ்யஸநம் அதிஶயித்திருக்கையாலே ப்ராப்யாநுஹவம் மட்டமாயிருக்கும்: இங்கு பலவேளையாகையாலே ப்ராப்யாநுபவம் பூர்ணமாயிருக்குமென்று கருத்து. * வீடுமின் முற்றத்திலும் * பத்துடையடியவரிலும் சொன்னவர்த்தத்தை நிகமிக்கைக்கடியேதென்ன - உபக்ரமித்த இத்யாதி. ஸங்கத்யந்தரம் - இங்ஙனன்றிக்கே இத்யாதி. கீழ் எம்பெருமானார் நிர்வாஹத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்து, மேல் ஆளவந்தார் நிர்வாஹத்தைக் கடா*

என்று பணித்தான். இன்னமும் முதல்திருவாய்மொழியில் ப்ராப்யத்தை அருளிச்செய்தார்; அந்த ப்ராப்யத்துக்கு ப்ராபகமாக, வேதாந்தங்களில் ஹக்தியென்றும் ப்ரபத்தியென்றும் இரண்டு உபாயங்களை விதித்தது; அவை யிரண்டிலும், ஹக்தி, த்ரைவர்ணிகாதிகாரம்; ப்ரபத்தி, ஸர்வாதிகாரம். அதில் ஸர்வாதிகாரமுமாய் தாம் திருவுள்ளத்தாலே தமக்கு உபாயமாக அங்கீகரித்த ப்ரபத்தியை, * வீடுமின்முற்றத்திலே அருளிச்செய்தார்; த்ரைவர்ணிகாதிகாரமான ஹக்தியை, * பத்துடையடியவரிலே அருளிச்செய்தார். ஆக, இரண்டு திருவாய்மொழியிலும் அருளிச்செய்த ஹக்திப்ரபத்திகள் ஸ்வாஸாத்யத்தோடே பொருந்தினபடியை அருளிச் செய்கிறார் * சார்வே தவநெறி, * கண்ணன்கழலிணை, இரண்டாலும். அதில், *சார்வே தவநெறியாலே-ப்ரபத்தி ஸ்வாஸாத்யத்தோடே பொருந்தினபடியை அருளிச்செய்கிறார். ''சார்வேதவநெறிக்குத் தாமோதரன்தாள்கள்'' என்று - தபஸ்ஸப்தத்தாலே ப்ரபத்தியைச் சொல்லுகிறது. ''தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:'' (தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:) என்றுதபஸ்ஸுக்களில் மிக்க தபஸ்ஸாகச் சொல்லிற்றிறே ப்ரபத்தியை. ''பண்டேபரமன்பணித்தபணிவகையே - கண்டேன் — கமலமலர்ப்பாதம், காண்டலுமே விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்'' என்றும் ''இருமைவினைகடிந்திங்கென்னையாள்கின்றான்'' என்றும், ''மாமேகம் ஶரணம் வ்ரஜ அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி'' (மாமேகம் ஶரணம்வ்ரஜ அஹம்த்வாஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்ற அர்த்தத்தை அருளிச்செய்தார். ஆளவந்தார் அருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான்பணிப்பது;-''ப்ரபத்திவிஷயமாகவாய்த்து * வீடுமின்முற்றம்:'' உடையவரும்அப்படியே ப்ரபத்திவிஷயமாக அருளிச்செய்து கோடுபோந்து, ஶ்ரீபாஷ்யம் அருளிச்செய்தபின்பு, 'ரஹஸ்யோபாயத்தை வெளியிடவொண்ணாது என்று வீடுமின்முற்றத்தையும் ஹக்திவிஷயமாக்கி அருளிச்செய்தார். ஆக, முதல் திருவாய்மொழியில் சொன்ன ப்ராப்யஸ்வரூபத்தையும் ப்ராப்திபலமான கைங்கர்யத்தையும், கெடுமிடரிலே 'படமுடையரவிற்பள்ளிபயின்றவன்' என்றும் 'கடைத்தலை சீய்க்கப்பெற்றால்' என்றும் அருளிச்செய்து, அக்கைங்கர்யத்தில் களைபறித்து, 'உன்தன்திருவுள்ளம் இடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும்' என்று உத்தரவண்டத்தில் நமஸ்ஸப்தார்த்தத்தை அருளிச்செய்து, கெடுமிடராலும் வேய்மருதோளிணையாலும் - முதல்திருவாய்மொழியை நிகமித்து, சார்வே தவநெறியாலும் கண்ணன்கழலிணையாலும் - வீடுமின்முற்றத்திலும் பத்துடையடியவரிலும் சொன்ன

---

*க்ஷித்தருளிச்செய்கிறார் இன்னமும் இத்யாதி. தபஸ்ஸப்தம் ப்ரபத்தியைச் சொல்லுமோவென்ன - தஸ்மாந்ந்யாஸம் இத்யாதி. தைத்திரீயகே. பின்னையும்ப்ரபத்திக்கு ஸூசகஸப்தமுண்டென்கிறார் - பண்டேபரமன் இத்யாதி. ''ஸாதநஹக்தி ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடி'' என்றதுக்கு ஸப்தம் - ''பாடீர வன்னமம் வீடேபெறலாமே'' என்றது. * வீடுமின்முற்றம் ஹக்திபரமென்று முன்புசொன்னதுக்கும், ப்ரபத்திபரமென்று இப்போது சொன்னதுக்கும் ஆப்தஸம்வாதம் - ஆளவந்தார் இத்யாதி. ஹக்திவிஷயமாக்கி என்றது - ஸாத்யஹக்திவிஷயமாக்கியென்றபடி. * வேய்மருதோளிணை முதல்திருவாய்மொழியின் நிகமநமென்கைக்காக மீளவும் ஆளவந்தார் நிர்வாஹத்தை யநுவதிக்கிறார் - ஆகமுதல்திருவாய்மொழியில்இத்யாதி. இத்தால் - *வேய்மருதோளிணைக்கு இரண்டுஹாவம் - ப்ராஸங்கிகமாகப் பிறந்த அவஸாதத்தை யநுஸந்தித்து அவனும் ஆஶ்வஸிப்பிக்க ஆஶ்வஸ்தராய் நின்றாரென்றும், கைங்கர்யத்தில் களையறுக்கிறதென்றும். ஆக, ''முதற்றிருவாய்மொழியின் நிகமநம் - * கெடுமிடர்: * வீடுமின்முற்றம் * பத்துடையடியவர் இரண்டும் ஸாத்யஹக்திபரம் ; ஏதந்நிகமநம்; - * சார்வேதவநெறி ; * வேய்மருதோளிணை ப்ராஸங்கிகம்''*

ஷக்தி ப்ரபத்திகள் ஸ்வஸாத்த்யத்தோடே பொருந்தினபடியை அருளிச்செய்தார்'' என்று ஆளவந்தார் அருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிப்பது.

முதற் பாட்டு.

சார்வே தவநெறிக்குத் தாமோதரன்தாள்கள்
கார்மேகவண்ணன் கமலநயனத்தன்
நீர்வானம்மண்ணெரிகாலாய் நின்றநேமியான்
பேர்வானவர்கள்பிதற்றும் பெருமையனே.

ஆ.—(சார்வே.)—ஸௌந்தர்யத்தினுலும் ஐஶ்வர்யத்தினுலும் திவ்யவிக்ரஹத்தியாலும் பரிபூர்ணனுயிருந்துவைத்து ஆஶ்ரிதஸுலபனாக தத்ஸஜாதீயதயாவதீர்ணனான எம்பெருமானுடைய திருவடிகள் பக்திப்ரயோகத்தினுலே ப்ராபிக்கலாம், இதில் ஒரு ஸம்ஶயமு மில்லையென்கிறார்.

ஓ.—முதற்பாட்டில், உபயவிபூதியுக்தனு யிருந்துவைத்து ஆஶ்ரிதஸுலபனான எம்பெருமானுடைய திருவடிகள் பக்தியோகலப்ய மென்கிறார்.

[சார்வே என்றுதொடங்கி] - ஆஶ்ரிதஸுலபனான க்ருஷ்ணனுடைய திருவடிகள் பக்தியோகத்துக்கு ப்ராப்ய மென்னுமிடம் நிஶ்சிதம். ''வணக்குடைத் தவநெறி'' என்றுசொல்லுகிற அத்தை, இங்கு 'தவநெறி' என்கிறது. ''தாமோதரன்தாள்'' என்று உரலினேடிணைந்திருந்த ஸௌலப்யத்தை ப்ரத்யபிஜ்ஞை பண்ணுகிறது. [கார்மேக வண்ணன் என்றுமேலுக்கு] - கறுத்தமேகம்போலே ஶ்ரமஹரமான திருநிறத்தையும் அழகியதிருக்கண்களையு முடையனாய் ஸர்வத்துக்கும் ஈஶ்வரனாய், ஜகத்ரக்ஷணத்துக்கு உறுப்பான திருவாழியை யுடையனாய், அயர்வறுமமரர்கள் தோற்றுப்பேசும் பெருமையை யுடையனான தாமோதரன் என்றந்வயம்.

ப.—முதற்பாட்டில், ஸர்வஸ்மாத்பரனாய் போக்யபூதனானவன் பக்திலப்யனென்கிறார்.

கார்மேகம் - காளமேகம்போலே ஶ்யாமளமான, வண்ணன் - வடிவையுடையனாய், (அதுக்குப்பரபாகமாம்படி), கமலம் - கமலம்போலேயிருக்கிற, நயனத்தன் - திருக்கண்களையுடையனாய், (அவ்வடிவழகையன்றியே), நீர்வானம் மண்ணெரிகாலாய்நின்ற - பஞ்சபூதப்ரமுவமான ஸமஸ்தஜகத்தும் ப்ரகாரமாம்படி அந்தராத்மாவாய், நேமியான் - ரக்ஷணபரிகரமான திருவாழியையுடையனாய், பேர் - இவ்வழகுக்கும் ப்ராப்திக்கும் ரக்ஷகத்வத்துக்குமான திருநாமங்களை, வானவர்கள் - பரமபதவாஸிகளானவர்கள், பிதற்றும் - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே அக்ரமமாகச் சொல்லும்படியான, பெருமையன் -

---

என்று எம்பெருமானர் நிர்வாஹம்; முதல்திருவாய்மொழியின் நிரமகம் - * கெடுமிடர் * வேய்மருதோளிணை இரண்டும்; * வீடுமின்முற்றம் ப்ரபத்திபரம்; * பத்துடையடியவர் ஸாதநபக்திபரம்: ஏதந்நிரமகம்-* சார்வேதவநெறி * கண்ணன்கழலிணை'' என்றுளவந்தார் நிர்வாஹமென்று கண்டுகொள்வது. * வேய்மருதோளிணையோடே நேரே ஸங்கதி'' என்று பிள்ளான் நிர்வாஹம்.

பெருமையை யுடையனாய், இப்படி (உபயவிபூதிநாதனாய்வைத்து), தாமோதரன்-("மத்துறுகடைவெண்ணெய் களவினிலுரவிடை யாப்புண்டெத்திறம்" என்கிறபடியே வெண்ணெய்க்களவிலே தாம்பாலேகட்டுண்டு அத்தாலே) தாமோதரனென்று பேராம்படி ஆச்ரிதஸுலபனானவனுடைய, தாள்கள் - திருவடிகளானவை, தவநெறிக்கு - "வணக்குடைத் தவநெறி" என்று ப்ரஸித்தமான ஸக்திமார்க்கத்துக்கு, சார்வே - ப்ராப்யமாயே யிருக்கும்.

இ.—முதற்பாட்டில், உபயவிபூதியுக்தனாய்வைத்து ஆச்ரிதஸுலபனானவனுடைய திருவடிகள் ஸக்தியோகலப்ய மென்கிறார்.

[தவநெறிக்குத் தாமோதரன்தாள்கள் - சார்வே] - தவநெறிக்கு - ஸக்திமார்க்கத்துக்கு. "வணக்குடைத் தவநெறி" என்றத்தைச் சொல்லுகிறது. "நமோ நம:" என்றவணக்கத்தைக் கரணசரீரமாக உடைத்தாயிருக்குமிறே ஸக்தி. அன்றிக்கே, "யஸ்ய ஜ்ஞாநமயம் தப:" என்று ஜ்ஞாநவிசேஷமான ஸக்தியைத் தபஸ்ஸென்று சொல்லுகிறது. இவன் ஒருகால் தலைவணங்க, பெருவருத்தமான காயக்லேசமாக நினைத்திருக்கும் ஈச்வராபிப்ராயத்தாலே சொல்லவுமாம். [தாமோதரன்] - "உரவினோடிணைந்திருந்து" என்றத்தைச் சொல்லுகிறது. ஸர்வாதிகனாய்வைத்து, ஓரிடைச்சி கட்டவும் அடிக்கவும் தன்னைக்கொடுத்து, அத்தால்வந்த தழும்பாலே அதுதானே தனக்குத் திருநாமமாம்படி யிருக்கிறவன். [தாள்கள்] - தன்னை உகப்பார்க்கு அவன்இப்படி எளியனானால் அவனை உகப்பார் அஸ்ஸௌலப்யத்துக்குத் தோற்று அவன்திருவடிகளைப் பெறு மித்தனையிறே. சார்வு - ப்ராப்யம். "பத்துடையடியவர்க் கெளியவன்" என்றும் "எளிவருமியல்வினன்" என்றும் 'அவன் சார்வு' என்றார்; இங்கு, சார்வேயென்று அவதரிக்கிறார். எப்படிப்பட்டவன் இங்கு ஸுலபனாகிறா னென்னில்,- விலக்ஷணவிக்ரஹத்தை யுடையனாய் உபயவிபூதியுக்தனானவன் என்கிறார் :— [கார்மேகவண்ணன்] - நீர்கொண்டெழுந்த காளமேகம்போலே ச்ரமஹரமான வடிவை யுடையவன். அடியிலே இவனுக்கு ருசியைப் பிறப்பித்து ஸக்திபர்யந்தமாக வளர்த்து அதுபக்வமானால் பின்னைத்தானே ப்ராப்யமாம்படி யிருக்கிற வடிவு. கறுத்தமேகமென்னுதல்; கார்காலத்து மேகமென்னுதல். "புயற்கருநிறத்தனன்" என்றத்தை நினைக்கிறது. [கமலநயனத்தன்] - அவ்வடிவுக்குப் பாஹ்யமாய் அகவாயில் தண்ணளிக்கு ப்ரகாசகமான திருக்கண்களை யுடையவன். [நீர்வானம் இத்யாதி] - விக்ரஹ வைலக்ஷண்யமே யன்றியிலே ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது. பஞ்சபூதங்கள், தத்கார்யமான தேவாதிபூதங்களுக்கும் உபலக்ஷணம். [நேமியான்] - ஜகத்ரக்ஷணத்துக்கு உறுப்பான திருவாழியை யுடையவன். நித்யவிபூதியிலும் கையுந் திருவாழியுமாயிறே யிருப்பது. [பேர்வானவர்கள்] - அமரரான ப்ரஹ்மாதிகளை வ்யாவர்த்திக்கிற தென்னுதல், வானவர்கள் பேர்பிதற்று மென்னுதல். [பிதற்றும் பெருமையனே] - அளவுடையாரும் அடைவுகெடப் பேசும்படியான பெருமையை யுடையவன். "யாவையும் யாவரும்தானும் அமைவுடை நாரணன்" என்றத்தை நினைக்கிறது. இப்படி உபயவிபூதிநாதனாய்வைத்து, தன் விபூதியிலே ஒரு பதார்த்தத்துக்கு சேஷமாய் வந்து அவதரித்து, கட்டவும் அடிக்கவுமாம்படி யிருக்கிற - தாமோதரன் - தவநெறிக்கு- சார்வே.

ஈடு.—முதற்பாட்டு. உபயவிபூதியுக்தனாயிருந்துவைத்து ஆஶ்ரிதஸுலபனானவனுடைய திருவடிகள் பக்தியோகலப்யமென்கிறார்.

[சார்வேதவநெறிக்குத் தாமோதரன்தாள்கள்] - 'தவநெறிக்கு - சார்வே' - "பத்துடையடியவர்க்கெளியவன்" என்றும் "எளிவரும் இயல்வினன்" என்றும் சொன்ன அவன்திருவடிகள் சார்வென்கிறார். சார்வு - ப்ராப்யம். [தவநெறிக்கு] - பக்திமார்க்கத்துக்கு (தபோமார்க்கமென்றபடி) - "வணக்குடைத்தவநெறி" என்றாரே அங்கே; அத்தைச்சொல்லுகிறார்; "தவநெறி" என்னுங்காட்டில் பக்தியைச்சொல்லிற்றாமோவென்னில்; - "நமஸ்யந்தஶ்சமாம்" (நமஸ்யந்தஶ்சமாம்) என்று நமஸ்ஸைக் கரணஶரீரமாக உடைத்தாயிருக்குமிறே பக்தி; இவன்ஒருப்ரணாமத்தைப் பண்ணினால் "இவன் நம்மை நோக்கிக் குவாலாக வருந்தினான்" என்று இதுதன்னைப் பெரிய காயக்லேஶமாக நினைத்திருக்குமவன்கருத்தால் சொல்லுகிறது. அன்றிக்கே, "யஸ்ய ஜ்ஞாநமயம் தப:" (யஸ்ய ஜ்ஞாநமயம்தப:) என்று ஜ்ஞாந விசேஷமான பக்தியைத் தபஸ்ஸென்று சொல்லிற்றாகவுமாம். [தாமோதரன்தாள்கள்] - "உரலினோடிணைந்திருந்தேங்கியவெளிவு" என்றத்தைச் சொல்லுகிறார் இங்கு. யசோதாதிகள்கையிலே கட்டுண்டு தழும்பு சுமந்ததுவே திருநாமமாயிருக்குமவனிறே; யசோதாதிகள்கையிலே கட்டுண்பானொருவனானபின்பு, அவனையுகப்பார் அவன்காலைக் கட்டிக்கொள்ளுமித்தனையிறே.எப்படிப்பட்டவன்ஸுலபனாகிறானென்னில்,

முதற்பாட்டு.—சார்வே இத்யாதி. "நீர்வானம்" என்று தொடங்கி, "பெருமையன் தாமோதரன் தாள்கள்- தவநெறிக்கு - சார்வு" என்று அந்வயமுகேநாவதாரிகை - உபயவிபூதி இத்யாதி. இந்தஅவதாரிகை, ப்ரவேஶத்தில் அருளிச்செய்த முந்தின யோஜநாநுகுணம்.

ப்ரவேஶத்திலே, தபஶ்ஶப்தத்தாலே - ப்ரபத்தியைச் சொல்லுகையாலும், இங்கே பக்தியோகலப்யமென்கையாலும், இப்பாட்டு ப்ரபத்திபரமாயும் பக்திபரமாயுமிருக்கிறது. நிகமிக்கிறப்ரகாரத்தைக்காட்டுகிறார் - பத்துடை இத்யாதி. "தவநெறி" என்று * பத்துடையடியவரிலே யிருக்கிறதோவென்ன - வணக்குடை இத்யாதி. அங்குத்தான்இது சொல்லும்படி எப்படியென்று ஶங்கித்து, த்வேதாபரிஹாரம் - தவநெறியென்னுங்காட்டில் இத்யாதி. தவநெறியென்னுங்காட்டில் தபஸ்ஸைச்சொல்லுமதொழிய பக்தியைச்சொல்லிற்றாமோவென்னி லென்றபடி. கரணஶரீரமாக - அங்கமாகவென்றபடி. 'இருக்குமிறே பக்தி' என்றவநந்தரம், "ஆகையாலே" என்று கூட்டிக்கொள்வது. கரணஶரீரமான நமஸ்காரத்தைத் தபஸ்ஸென்பானென்னென்ன - இவனொரு இத்யாதி. அதாவது - அங்கமான நமஸ்ஸை ஈஶ்வராபிப்ராயத்தாலே தபஸ்ஸென்னலாமாகையாலே, அங்கமான நமஸ்ஸையிட்டு அங்கியான பக்தியைத் தபஶ்ஶப்தத்தாலே உபசரிக்கிறதென்றபடி. ப்ரபத்திபரமானபோது, "தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:" என்னக்கடவதிறே. "தவநெறி" என்றத்தை ஸாத்யபக்தியாக ஸாதிக்கப்புக்கு, "நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா" என்றத்தையெடுத்தது-ஸாத்யபக்திமானுக்கும் ஸம்பாவிதமான ப்ரணாமாதிகளுண்டாகையாலே. குவால் - அதிகம். வருந்தினான் - ப்ரயாஸப்பட்டான். "தபஸ்ஸென்று - ஜ்ஞாநத்தைச் சொல்லும்" என்னுமதுக்கு ப்ரமாணம் - யஸ்யஜ்ஞாநமயம் இத்யாதி. "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்யஸ்ய ஜ்ஞாநமயம் தப: । தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாமரூபமந்நஞ்ச ஜாயதே" இதி முண்டோபநிஷதி. "ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்ருடவ்ரதா: । நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே" இதி கீதாஸு நவமே. * பத்துடையடியவரின் நிகமநமென்கைக்கு ஸூசகஶப்தம் - உரலினோடு இத்யாதி. ஶப்தார்த்தம் - யசோதாதிகள் இத்யாதி. "தாள்கள்" என்றதுக்குக் கீழையுங்கூட்டிபாவம் - யசோதாதிகள் இத்யாதி. மேலுக்கெல்லாமவதாரிகை - எப்படிப்பட்டவன் இத்யாதி. இவ்வடிவழகைச்சொல்லுகிறதுக்கு ப்ரயோஜநவிசேஷங்

விலக்ஷணவிக்ரஹயுக்தனுய் உபயவிபூதியுக்தனுனவன்கிடீர்! என்கிருர். [கார்மேகவண்ணன்] - நீர்கொண்டெழுந்த காளமேகம்போலே ஸ்ரமஹரமான வடிவையுடையவன். ஸக்தி தனக்கு இவன்தான் க்ருஷிபண்ணவேண்டா, ருசிக்கு உத்பாதகமுமாய் பின்பு அத்தை வளர்த்து அது பக்வமானல் தானே ப்ராப்யமாம் வடிவையுடையவன். * காதல் கடல்புரைய விளைவித்தகாரமர் மேனியிறே. கார்காலத்தில் மேகம்போலேயென்னுதல், கறுத்தமேகமென்னுதல். "புயற்கருநிறத்தனன்" என்றத்தைச்சொல்லுகிருர். [கமலநயனத்தன்]-அகவாயில் குணங்களுக்கு ப்ரகாஶகமாயிருக்குமிறே திருக்கண்கள். அநுக்ரஹமடையத் தோற்றுவது கண்வழியேயிறே. வாத்ஸல்யப்ரகாஶகமான திருக்கண்களையுடையவன். வடிவழகு கண்டு மேல்விழுகையன்றிக்கே, மேன்மையாலும் மேலேவிழவேண்டுமென்னுய்த்து. [நீர்வானம்இத்யாதி] - விக்ரஹவைலக்ஷண்யமேயன்றிக்கே ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது. "யாவையும் யாவரும்தானுமமைவுடைநாரணன்" என்றத்தை நிரூபிக்கிருர். ப்ருதிவ்யாதி பஞ்சபூதங்களையும் சொன்னவித்தால்-அவற்றின் கார்யமான தேவாதி விசேஷங்களையும் நினைக்கிறது; இத்தால் - லீலாவிபூதியைச் சொல்லுகிறது. [நேமியான்] - கையுந்திருவாழியுமாய் நித்யவிபூதியிலேயிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது. [பேர்வானவர்கள்] - இவ்வருகில்ஆக்கனுன தேவர்களன்றிக்கே அவ்வருகில் பெருமக்கள் ஏத்தும்படியான பெருமையையுடையவன். அன்றிக்கே, "வானவர்கள் - பேர் - பிதற்றும் பெருமையன்" என்றுமாம். இங்கு ருசியுடையாரும் பிதற்றுமித்தனை: ப்ராப்யம் கைபுகுந்தவ்வருகு பட்டாராயிருக்கிறவர்களும் பிதற்றுமத்தனை. கார்மேகவண்ணனுய், கமலநயனத்தனுய், நீர்வானம் மண்ணெரிகாலாய்நின்ற நேமியானுய், பேர்வானவர்கள் பிதற்றும் பெருமையனுயிருந்துவைத்து - தாமோதரனுனவன் திருவடிகள் - தவநெறிக்கு - சார்வே; இது நிஶ்சிதம். (க)

கள் அருளிச்செய்கிருர் - ஸக்திதனக்கு இத்யாதிவாக்யத்வயத்தாலே. விக்ரஹம் ஸக்திவர்த்தகமோவென்ன - காதல் இத்யாதி. காரென்று - கறுப்பாதல், கார்காலமாதல். "கார்மேகவண்ணன்" என்றது * பத்துடையடியவரிலேயுண்டோவென்ன - புயற்கரு இத்யாதி. அப்படி ப்ரகாசகமோவென்ன - அநுக்ரஹம் இத்யாதி. ஸப்தார்த்தம் - வாத்ஸல்ய இத்யாதி. கமலநயநத்வம் பரத்வஹேதுவென்று ஸாவாந்தரமாதல், "நீர்வானம்" இத்யாதிக்கவதாரிகையாதல் - வடிவழகு இத்யாதி. அவதாரிகாபக்ஷத்திலே, "வடிவழகு" இத்யாதிவாக்யவிவரணம் - விக்ரஹவைலக்ஷண்யமே இத்யாதி. "வடிவழகு" இத்யாதிவாக்யம் ஸாவாந்தரமானபோது, "நீர்வானம்" இத்யாதிக்கு ஸாவம் - விக்ரஹவைலக்ஷண்யமே இத்யாதி என்றுகண்டுகொள்வது. "நீர்வானம்" இத்யாதி * பத்துடையடியவரிலேயுண்டோவென்ன - யாவையும் இத்யாதி. பஞ்சஸூதங்களையும் சொன்னல் எல்லாம் சொன்னதாமோவென்ன - ப்ருதிவ்யாதி இத்யாதி. "தலோஃவரஶோயா..." இத்யாதியைப்பற்ற - கையுந்திருவாழியுமாய் இத்யாதி. பேர்வானவர்கள் - பெரியவானவர்கள். "பேர்வானவர்கள்" என்றதுக்கு ஸாவம் - இவ்வருகில் இத்யாதி. பேர் - பெருமை. இரண்டாமர்த்தத்துக்கு, "பேர்" என்று - திருநாமம். அஜ்ஞரான இவ்வருகுள்ளவர்களன்றோ பிதற்றுமவர்களென்ன - இங்கு ருசி இத்யாதிவாக்யத்வயம். அந்வயித்துக்காட்டுகிருர் - கார்மேகம் இத்யாதி. "சார்வே" என்ற அவதாரணர்த்தம் - நிஶ்சிதம் என்றது. (க)

இரண்டாம் பாட்டு.

பெருமையனேவானத்திமையோர்க்குங் காண்டற்
கருமையனே ஆகத்தணையாதார்க்கென்றும்
திருமெய்யுறைகின்ற செங்கண்மால்நாளும்
இருமைவினைகடிந்து இங்கென்னையாள்கின்றானே.

ஆ.—(பெருமையனே.) - ப்ரஹ்மாதிகளுக்கும் ஈஶ்வரனாய், அநாஶ்ரிதர்க்கு துர்த்தர்ஶனாய், பெரியபிராட்டியாரோடு நித்யஸம்ஶ்லிஷ்டனாயிருந்த எம்பெருமான், நாளும்இருமைவினைகடிந்திங்கென்னையாள்கின்றானென்றுகொண்டு, தம்முடையலாபத்தைப் பேசுகிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், ஶ்ரியஃபதியான ஸர்வேஶ்வரன் என்னுடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கி நாள்தோறும் என்னை இஹலோகத்திலே அடிமை கொள்ளாநின்றானென்று, தம்முடைய லாபத்தைப் பேசுகிறார்.

[பெருமையனே வானத்திமையோர்க்கும்] - ப்ரஹ்மாதிகளுக்கும் ஈஶ்வரன். [காண்டற்கருமையனே ஆகத்தணையாதார்க்கு]-"பிறர்களுக்கரிய வித்தகன்" என்கிறது. [என்றும் திருமெய்யென்று மேலுக்கு] - என்றும் பெரியபிராட்டியார் திருவுடம்பிலே உறைவதுஞ்செய்து, அத்தாலே, மதுபாநமத்தரைப்போலே சிவந்ததிருக்கண்களை யுடையனான ஸர்வேஶ்வரன். இத்தால் - "மலர்மகள் விரும்புநமரும் பெறலடிகள்" என்கிற விடத்தை ப்ரத்யபிஜ்ஞை பண்ணுகிறது.

ப.—அநந்தரம், பரத்வாதிஹேதுவான ஶ்ரியஃபதித்வத்தை யுடையவன், தன் ஶீலாதிஶயத்தாலே என்னை அடிமைகொள்ளாநின்றானென்கிறார்.

வானத்து - ஊர்த்வலோகவாஸிகளான, இமையோர்க்கும் - ப்ரஹ்மாதிகளுக்கும், பெருமையன் - (அவ்வருகான) பெருமையை யுடையனாய், ஆகத்து - நெஞ்சிலே, அணையாதார்க்கு - அநுஸந்தியாதார்க்கு, காண்டற்கு - காண்கைக்கு, அருமையன் - அரியனாயிருக்குமவனாய், என்றும் - ஸர்வகாலமும், திரு - லக்ஷ்மியானவள், ("அகலகில்லேனிறையும்" என்று), மெய் - திருமேனியிலே, உறைகின்ற - நிரந்தரவாஸம் பண்ணுகையாலே, செங்கண் - நிரதிஶய ஐஶ்வர்ய ஸூசகமான சிவந்த திருக்கண்களை யுடைய, மால் - பெரியவன், இருமைவினை கடிந்து - புண்யபாபரூபகர்மங்களைப்போக்கி, இங்கு - இந்தவிபூதிதன்னிலே, நாளும் - நாள்தோறும், என்னை -, ஆள்கின்றான் - அடிமைகொள்ளுகிறான்.

இ.—இரண்டாம்பாட்டில், ஸர்வேஶ்வரனாய் ஶ்ரியஃபதியாய்வைத்து என் விரோதியைப் போக்கி இங்கே அடிமைகொள்ளாநின்றானென்று. தாமோதரத்வம் தமக்கு ஃபலித்தபடியைப் பேசுகிறார்.

[பெருமையனே இத்யாதி] - ஊர்த்வலோகஸ்தராய் "ஸ்ருஷ்ட்யாதிகளுக்குத் தங்களுக்குமேலில்லை" என்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் ஈஶ்வரன். "அமைவுடைமுதல்கெடல் ஒடிவிடையறநிலமதுவாம் அமைவுடை அமரர்" என்றத்தை நினைக்கிறது. ஊர்மாநம் கனத்திருக்கையும் விடுமிடத்துக் காற்கட்டு குவாலாயிருக்கையுமிறே

நம்மிற்காட்டில் வ்யாவ்ருத்தி. [காண்டற்கு இத்யாதி] - தானே மேல்விழாநின்றால் இசைவின்றியே யிருப்பார்க்குக் கிட்டவொண்ணாதபடியா யிருக்கும். "பிறர்களுக்கரிய வித்தகன்" என்றத்தை நினைக்கிறது. என்றுமொக்கப் பிராட்டி திருமேனியிலே உறை கிற. [என்றும்] - "அகலகில்லேனிறையும்" என்கிற நித்யவாஸத்தைச் சொல்லுகிறது. "மலர்மகள் விரும்பும்" என்றத்தை நினைக்கிறது. [செங்கண்] - அவளோட்டை ஸஹ வாஸத்தாலே, மது முழிதரைப்போலே சிவந்த திருக்கண்களை யுடையவன். [மால்] - அவளோட்டைச்சேர்த்தியால்வந்த பெருமையையுடையவன். "ஸ்ரேயோ ஹி தஜ்ஜ:" "அரும்பெறலடிகள்" என்றத்தை நினைக்கிறது. [இருமைவினைகடிந்து - நாளும்-இங்கு என்னையாள்கின்றானே] - புண்யபாபரூபகர்மங்களைப் போக்கி, ஒரு தேசவிஶேஷத்தி லன்றிக்கே இஹலோகத்திலே நாள்தோறும் என்னை அடிமைகொள்ளாநின்றான்; அங்கு- ஞாநாநுபவம்; இங்கு-ஶ்ரவணஜ்ஞாநத்தாலே யரிக்கை.

ஈடு.—இரண்டாம்பாட்டு. ஸர்வேஶ்வரனாய் ஶ்ரிய:பதியாயிருந்துவைத்து என் விரோதியைப் போக்கி என்னை இங்கே அடிமைகொள்ளா நின்றானென்று, கீழ்ச்சொன்ன ஸௌலப்யம் தமக்குப் பலித்தபடியை யருளிச்செய்கிறார்.

[பெருமையனே வானத்திமையோர்க்கும்] - "அமைவுடை முதல்கெடலொடி விடை யறநிலமதுவா மமைவுடையமரர்" என்றத்தைச் சொல்லுகிறது. அல்லாதார் கீழேயிருக்க தாங்கள் விலக்ஷணமான தேசங்களிலே இருக்கிறார்களாய், ஸ்ருஷ்ட்யாதிக ளுக்கும் தாங்களே கடவர்களாக நினைத்துத் தங்களைக் துவாலாக நினைத்திருக்கும் ப்ரஹ்மாதிகளுக்கும் தன்னையாஶ்ரயித்து ஸ்வரூபம் பெறவேண்டும்படியான பெருமையையுடையவன். [வானத்து]-அவ்வாசியே அவர்களுக்குஉள்ளது; அவனைப்பார்த்தால் நம்மோடவர்களோடு வாசியில்லை. ஸம்ஸாரத்தில் நம்மிலும் கனவியராயிருப்பர்கள். நமக்குப் பற்றின வளவேயிறே விடவேண்டுவது, அவர்களுக்கு த்ரைலோக்யமும் விடவேணுமே. [காண்டற்குஇத்யாதி] - தானேவந்து மேல்விழா நின்றால் விலக்காமையின்றிக்கே யிருப்பார்க்குக் காண அரியனாயிருக்கும். ஸம்பந்யம்இன்று தேடவேண்டா: பெறவேணுமென்கையும் வேண்டாவென்கையுமிறே யுள்ளது. "பிறர்களுக்கரியவித்தகன்" என்றத்தைச் சொல்லு

இரண்டாம்பாட்டு.—பெருமையனே இத்யாதி. "வானத்திமையோர்க்கும் - பெருமையனே" என்றுதொடங்கி, "என்னையாள்கின்றான்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - ஸர்வேஶ்வரனாய் இத்யாதி.

"பெருமையனே" இத்யாதி * பத்துடையடியவரிலே யெங்கே சொல்லிற்றென்ன - அமைவுடை இத்யாதி. "வானத்திமையோர்க்கும் - பெருமையனே" என்றந்வயித்தர்த்தம் - அல்லாதார் இத்யாதி. "இமையோர்க்கும்" என்ற சமுச்சயார்த்தம் - தங்களைக்துவாலாக இத்யாதி. "வானத்து" என்று விசேஷித்ததுக்கு பாவம் - அவ்வாசியே இத்யாதிவாக்யத்வயம். நம்மைப் பற்ற வாசியில்லையோவென்ன - ஸம்ஸாரத்தில் இத்யாதி. ஸம்ஸாரத்தில் ஆதிக்யமுண்டென்ற படி. கனவியர் - கனத்தவர்: அதிகரென்றபடி. அதெப்படியென்ன - நமக்கு இத்யாதி. "ஆகத் தணையாதார்க்கு - காண்டற்கருமையனே" என்றதுக்கர்த்தம் - தானேவந்து இத்யாதி. ஆகத் தணையாமை - மநஸ்ஸில் வையாமையாய், விலக்காமையில்லாதார்க்கென்றபடி. விலக்காமையின் றிக்கே யிருப்பார்க்கு - விலக்குகிறவர்களுக் கென்றபடி. காண்கைக்கு விலக்காமைமாத்ரம் போருமோவென்ன - ஸம்பந்யம் இத்யாதி. 'வேண்டாவென்கையுமிறே யுள்ளது' என்றவநந்தரம், "பெறுகைக்கு மிழக்கைக்கும்" என்று அத்யாஹாரியம். இது * பத்துடையடியவரிலே யெங்கே

கிறது. [என்றும்திருமெய்யுறைகின்ற] - ரஹஸ்யத்தில் நித்யயோகத்தைச் சொல்லுகிறதிறே. * அகலகில்லேனிறே. ''மலர்மகள்விரும்புநமரும் பெறலடிகள்'' என்றத்தைச் சொல்லு கிறது. என்றுமோக்கப் பெரிய பிராட்டியார் வர்த்திக்கிற திருமேனியையுடையவன். [செங்கண்] - அவளோட்டை நித்யஸம்ஶ்லேஷத்தாலே, நீர்பாய்ந்த பயிர்போலே செவ்வி பெற்ற திருக்கண்களையுடையவன். [மால்] - ''யஸ்யஸாஜநகாத்மஜா'' (யஸ்யஸாஜநகாத்மஜா) என்றவளையுடையனுகையால் வந்த பெருமையைச் சொல்லுகிறது: ''அரும்பெற லடிகள்'' என்றத்தைச் சொல்லுகிறது. [நாளும்இத்யாதி] - (இருமைவினைகடிந்து-நாளும்-இங்கு என்னையாள்கின்றானே) - புண்யபாபரூப கர்மங்களைப் போக்கி, இத்தைவிட்டு ஒரு தேசவிசேஷத்திலே போனால் கொள்ளக்கடவ அடிமையை இஹலோகத்திலே நாள் தோறும் கொள்ளாநின்றான். அங்குப்போனால் குணாநுபவத்தாலே ஸத்தையை நிர்வஹிக்கும்; இங்கு குணஜ்ஞாநத்தாலே தரிப்பியாநிற்கும். (௨)

மூன்றாம் பாட்டு.

ஆள்கின்றான்ஆழியான்ஆரால்குறைவுடையம்
மீள்கின்றதில்லைப் பிறவித்துயர்கடிந்தோம்
வாள்கெண்டையொண்கண் மடப்பின்னைதன்கேள்வன்
தாள்கண்டுகொண்டுஎன்தலைமேற்புனைந்தேனே.

ஆ.—(ஆள்கின்றான் ஆழியான்.)-ஆள்கின்றானாழியான் ஆரால்குறைவுடையம்; இனி இஸ்ஸம்ஸாரத்தில் மீளக்கடவதன்று; எங்ஙனேயென்னில் - இந்த ஸம்ஸார து:க்கத்தைக் கடிந்தோம்: வாள்கெண்டையொண்கண்மடப்பின்னைதன்கேள்வனுடைய திருவடிகளைக் கண்டுகொண்டு என்தலைமேல் புனைந்தேன் என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், மறுவலிடாதபடி ஸம்ஸாரத்தைப்போக்கி நப்பின்னைப்பிராட்டிக்கு நாயகனானவனுடைய திருவடிகளைக் கண்டுகொண்டு என்தலைமேலே புனையப்பெற்றேனென்கிறார்.

சொல்லிற்றென்ன-பிறர்களுக்கு இத்யாதி. மெய் - விக்ரஹம். ரஹஸ்யத்தில்நித்யயோகமாவது - த்வயத்தில் மதுப்பைச்சொல்லுகிறது. ''உறைகின்ற'' என்கிற வர்த்தமாநத்தாலே - பிரியாதே வர்த்திக்கிறாளென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் - அகலகில்லேனிறே என்று; ''உறை மார்பா'' என்னுமளவும் விவக்ஷிதம். இது * பத்துடையடியவரிலே சொல்லிற்றேவென்ன - மலர்மகள் இத்யாதி. ''என்றும்திரு - உறைகின்ற - மெய்'' என்றதுக்கு பலிதார்த்தம் - என்று மோக்க இத்யாதி. ''திரு - உறைகின்ற செங்கண்மால்'' என்ற பதச்சேர்த்திக்கு பாவம் - அவ ளோட்டை இத்யாதி. ''திரு - உறைகின்ற - மால்'' என்ற பதச்சேர்த்திக்கு பாவம் - யஸ்யஸா இத்யாதி. ''அப்ரமேயம்ஹிதத்தேஜோயஸ்யஸாஜநகாத்மஜா । நத்வம்ஸமர்த்தஸ்தாம் ஹர்த்தும்ராமசாபாஶ்ரயாம்வநே'' இதி மாரீச:(ரா-ஆ-௩௭-௧௮).மால்-பெரியவன்:ஸ்வாமியென்றபடி.இது*பத்துடையடியவரிலே சொல்லிற்றேவென்ன-அரும்பெறல்இத்யாதி.தேசவிசேஷத்தில் கொள்ளும் அடிமையை இங்கே கொள்ளும்படியென்? என்ன - அங்குப்போனால் இத்யாதி. 'வானத்திமையோர்க்கும் - பெருமையனே, ஆகத்தணையாதார்க்கு - காண்டற்கருமையனே, என்றும் திரு - உறைகின்ற - மெய் - செங்கண்மால், இங்கு - இருமைவினைகடிந்து - நாளும் - என்னையாள்கின்றானே' இத்யந்வய:. (௨)

[ஆள்கின்றான் ஆழியான் ஆரால்குறைவுடையம்] - ஸர்வேச்வரன் என்னை அடிமை கொள்ளாநின்றான். இனி, ஆரைக்கொண்டு கார்யமுடையோம்? [வாள் கெண்டை யொண்கண்] - ஒளியையுடைய கெண்டைபோலேயிருக்கிற அழகிய கண்.

ப.—அநந்தரம், நப்பின்னைப்பிராட்டியோட்டைச் சேர்த்தியாலே நிரதிசயாநுபாவ்யனான க்ருஷ்ணன் திருவடிகளை யநுபவிக்கப்பெற்றேன்; அவன் ரக்ஷகனாக விரோதி மறுவலிடாது; என்ன குறையுண்டு? என்கிறார்.

("கைகழலாநேமியான் நம்மேல்வினைகடிவான்" என்கிறபடியே), ஆழியான் - கையுந்திருவாழியுமாய்க்கொண்டு, ஆள்கின்றான் - விரோதியைப்போக்கிரக்ஷித்தருளா நின்றான்; (அத்தாலே), பிறவித்துயர் - ஜந்மப்ரயுக்த ஸகலது:க்கங்களையும், கடிந்தோம் - போக்கினோம்; மீள்கின்றது இல்லை - (இனி அது)மீளுகிறதில்லை; (ஆனபின்பு), ஆரால்குறைவுடையம் - நம்மோடு பிறரோடு வாசிபற ஒருவராலும் ஒருகுறையை யுடையோமல்லோம்; வாள் - (கூர்மைகெடுமையாலே) வாளும், கெண்டை - (குளிர்த்தி மிளிர்த்தியாலே) கெண்டையும் போலியாம்படி, ஒண் - விலக்ஷணமான, கண் - கண்ணை யுடையளாய், மடம் - மடப்பம் முதலான ஆத்மகுணங்களாலே பூர்ணையான, பின்னை தன் - நப்பின்னைப்பிராட்டிக்கு, கேள்வன் - அபிமதநாயகனானவனுடைய, தாள் - திருவடிகளை, கண்டுகொண்டு - அபரோக்ஷித்து, என்தலைமேல் - என்தலைமேலே, புனைந்தேன் - தரிக்கப்பெற்றேன்.

ஈ.—மூன்றாம்பாட்டில், மறுவலிடாதபடி ஸம்ஸாரத்தைப்போக்கி நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனானவனுடைய திருவடிகளை ஶிரோபூஷணமாகப் பெற்றேன் என்கிறார்.

[ஆள்கின்றான் ஆழியான்] - வகுத்த ஸர்வேச்வரன் அடிமைகொள்ளாநின்றானென்னுதல்; ஆழிலைவைத்த கையுந்தானுமாய் விரோதியைப்போக்கி அடிமைகொள்ளாநின்றான் என்னுதல். அசக்தனானதன்னாலே ஸாத்யமான அசேதநக்ரியாகலாபங்கள் கொண்டு விரோதியைப் போக்குமவரன்றே இவர்? ஸர்வசக்தி கையில் திருவாழியின் கூர்மையாலே போக்குமவரிறே. [ஆரால் குறைவுடையம்] — என்னால் வருமதொரு குறையுமில்லை; யமாதிகளால் வருமவையுமில்லை. [மீள்கின்றதில்லை] - இனி மறுவலிடுகிறதில்லை. [பிறவித்துயர் கடிந்தோம்] - து:க்கஹேதுவான ப்ராக்ருதஸம்ஸர்க்கத்தையும் ஓட்டினோம். பரமபதத்திலே புகச்செய்தேயும் ருசிமுன்னாகப்போகாத வைதிகபுத்ரர்களுக்கு மீளவேண்டிற்றிறே. "மயர்வறமதிநலமருளினன்" என்று ருசிஜநகனும்அவனேயாய்ப் பேறும்அவனாலேயாயிருக்கிற எனக்குப் புநராவ்ருத்தி ப்ரஸங்கமில்லை யென்கை. இதுக்கு ஹேதுவென்னென்னில்? [வாள்கெண்டை இத்யாதி] - ஒளியையுடைத்தாய்க் கெண்டைபோலே முக்யமாய் தர்சநீயமான திருக்கண்களையுடையவளாய், ஆத்மகுணோபேதையான நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனானவனுடைய. அவளடியாகவந்த பின்பு, என்னுடைய கர்மவஶ்யதையாலேயாதல், அவன் ஸ்வாதந்த்ர்யத்தாலேயாதல் இழக்கவேணுமோ? அவன் என்னைக் கடாக்ஷியாவிட்டால், அவள் கடாக்ஷத்துக்கு இலக்கன்றிப்போகிறான். அவன் ஸ்வாதந்த்ர்யங்கொண்டாடினால் அவள் நோக்கு இழக்குமிறே. என்ஜீவநத்தைப் பறித்தானாகில் தன்ஜீவநத்தை யிழக்கிறான். [தாள்கண்டுகொண்டு] - தாளாலே அவனைக் கண்டுகொண்டேனென்னுதல், தாளைக்கண்டு கொண்டேனென்னுதல். "நின்செம்மா பாதபற்புத் தலைசேர்த்து" என்றும், "கோலமா

மென்சென்னிக்கு" என்றும் ஆசைப்பட்டபடியே, என்தலைமேலே சூடப்பெற்றேன் என்கிறார்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. மறுவலிடாதபடி ஸம்ஸாரத்தைப் போக்கி நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனானவனுடைய திருவடிகள் ஶிரோபூஷணமாகப் பெற்றேன் என்கிறார்.

[ஆள்கின்றான் ஆழியான்] – ஆசிலேவைத்த கையும் தானுமாய் விரோதியைப்போக்கி அடிமைகொள்ளாநின்றான் என்னுதல்; வகுத்த ஸர்வேஶ்வரன் அடிமைகொள்ளாநின்றான் என்னுதல் பின்னையும் அவன்கை பார்த்திருக்கவேண்டும் அசேதநக்ரியாகலாபங்களைப் பூண்கட்டாநிற்பர்கள் சிலர்; "கூரம்பனல்லால்" என்று அம்பின் கூர்மையையும் "சுடர்வட்டவாய்நுதி நேமியீர்" என்று திருவாழியில் கூர்மையையுங்கொண்டு பெறவிருப்பர்கள் சிலர். அஶக்தனான தன்னாலே ஸாத்யமான க்ரியாஜாதத்தைப்பற்றிப் பெறவிருப்பர்கள் சிலர்; ஸித்தஸ்வரூபனான ஸர்வஶக்தியைப்பற்றிப் பெறவிருப்பர்கள் சிலர். க்ரியாஜாதத்தை நெகிழச்சொல்லி, "கெடுவாய், என்னையன்றே பற்றுகிறது" என்றானிறே [ஆரால்குறைவுடையம்] - என்னாலே இழக்கவேண்டுதல், ஆராயக்கடவ யமாதிகளுக்கும் வந்துகிட்டலாதல், அவன்தன்னளவும் சென்றால் பின்னையும் ஒன்றைப் பார்த்திருத்தல் செய்யவேண்டும்படியாய் இருப்பதொன்றையோ நான்பற்றிற்று? 'ஆரால்' - என்கிறார்காணும்: என்றும் ஒருசேதநனாலே பேறென்றிருக்குமவராகையாலே. [மீள்கின்றதில்லை] - இனி மறுவலிடுகிறதில்லை [பிறவித்துயர்கடிந்தோம்] - ஸம்ஸாரதுரிதத்தை யோட்டினோம். † பரமபதத்தில் புகச்செய்தேயும் ருசிமுன்னாகப் பேறல்லாமையாலே கடலில்புக்க துரும்புபோலே மீளப்போந்தார்களிறே வைதிக

மூன்றாம்பாட்டு.—ஆள்கின்றான் இத்யாதி. "மீள்கின்றதில்லை" என்றுதொடங்கி "தலைமேல்புனைந்தேனே" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - மறுவலிடாதபடி இத்யாதி.

"ஆழியான் - ஆள்கின்றான்" என்றதுக்கு த்வேதா பாவம் - ஆசிலே இத்யாதி வாக்யத்வயம். ஆசு - ஆயுதப்பிடி. ஆழியைக்கொண்டாள்கின்றானென்று முந்தினவர்த்தம். திருவாழி பரத்வஸூசகமாகையாலே - 'வகுத்தஸர்வேஶ்வரன்' என்கிறது. தம்மை "ஆழியான் - ஆள்கின்றான்" என்கையாலே ப்ரதிகோடியையும் கூட்டி பாவம்-பின்னையும்அவன்கைபார்த்து இத்யாதி வாக்யத்வயம். பின்னையும் என்றது - ஸாதநாந்தரங்களை யநுஷ்டித்தபின்பு மென்றபடி. 'கூரம்பனல்லால்' - நாலாந்திருவந்தாதி எட்டாம்பாட்டு, "இலைதுணை" இத்யாதி. கீழ்வாக்யத்வயவிவரணம் - அஶக்தனான இத்யாதிவாக்யத்வயம். 'பின்னையுமவன்கைபார்த்து' இத்யாதிவாக்யத்தாலே - கார்யஸித்தியில் ஈஶ்வராபேக்ஷையும், 'அஶக்தனான' இத்யாதிவாக்யத்தாலே - ஸ்வரூபஸித்தியில் சேதநாபேக்ஷையும் சொல்லப்படுகிறது. ஶாஸ்த்ரவிஹிதமான உபாயாந்தரங்களைவிட்டு அவனைப் பற்றக் கூடுமோவென்ன - க்ரியாஜாதத்தை இத்யாதி. 'என்றானிறே' - சரமஶ்லோகத்தாலே யென்றபடி. ஆரால் குறைவுடையம் - ஒன்றாலும் குறைவுடையோமல்லோ மென்றபடி. இதுக்கு பாவம் - என்னாலே இத்யாதி. * யாதானும்பற்றி நீங்கும் விரதத்தை நல்வீடு செய்கையாலே என்னாலிழக்கவேண்டுதலென்றபடி. ஆராயக்கடவ யமாதிகளுக்கும் வந்துகிட்டலாதல் என்றது - ஸம்ஸாரியான நிலையில் நில்லாமையைப்பற்ற. பின்னையுமொன்றைப் பார்த்திருத்தல் என்றது - அவன் விஷயமான ஐக்யாதிகளைப்பற்றியும் அவன் க்ருபையைப் பார்த்திருத்தலென்றபடி. ஆனால், எத்தால் என்னாமல், "ஆரால்" என்கிறதென்னென்ன - ஆராலென்கிறார்காணும் இத்யாதி. மறுவலிடுகிறதில்லை என்றது - ஸம்ஸாரம் மறுவலிடுகிறதில்லை யென்றபடி. பிறவித்துயர்கடிந்தால் மீளாமை ஸித்தமாயிருக்க, "மீள்கின்றதில்லை" என்கைக்கு ப்ரஸக்தியேதென்ன - பரமபதத்தில் இத்யாதி. திருமேனியோடேயிருக்க "கடிந்தோம்" என்று பூதமாகச் சொல்லுவா

† பரமபதத்தே என்று பாடாந்தரம்.

புத்ரர்கள். "மயர்வறமதிநலமருளினன்" என்று ருசிமுன்னாக அவன் தரப்பெறவிருக்கிற நமக்குப் புநராவ்ருத்தி ப்ரஸங்கமுண்டோ? "கடிந்தோம்" என்கிறாரிறே: அவன் செய்வானாக ஏறட்டுக்கொண்ட கார்யத்துக்கு "ஸ்திதோஸ்மி" என்னலாம்படி யிருக்குமிறே. [வாள் இத்யாதி] - அவன் ஸ்வாதந்த்ர்யம் தலையெடுத்ததாகில் † அடுகுவளம் தடைப்படும்போலேகாணும். இனி என்னாலேதான் விடப்போமோ? அவனாலேதான் விடப்போமோ? என்னுடைய பாரதந்த்ர்யம்போலே அவனுடைய ஆச்ரிதபாரதந்த்ர்யத்துக்கும் ஏதேனும் கண்ணழிவுண்டோ? அவன் ஸ்வாதந்த்ர்யம் தலையெடுத்ததோ தன்னாணை யிழக்கிறான். * மணநோக்கமுண்டானிறே. ஒளியையுடைத்தான கெண்டைபோலே முக்த்யமாய் வைத்தகண் வாங்காதே கண்டுகொண்டு இருக்கவேண்டும்படியான அழகிய கண்களையுடையளாய் ஆத்மகுணோபேதையான நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபன். [தாள்கண்டுகொண்டு] - காட்சிக்கு ஹேதுசொல்லிற்றிறே. [என்தலைமேல்புனைந்தேனே]- "துயரறுசுடரடிதொழுதெழு" என்றும் "பாதபங்கயமே தலைக்கணியாய்" என்றும், "கோலமாமென்சென்னிக்கு" என்றும் சொல்லுகிறபடியே, மயிர்கழுவிப் பூச்சூடவிருப்பாரைப் போலேயிருக்கிற போக்யதைசொல்லுகிறது. "நின்செம்மாபாதபற்புத் தலைசேர்த்து" என்று ப்ரார்த்தித்தவத்தைத் தலையாகப்பெற்று க்ருதக்ருத்யனானேன். (ரு)

னென்? என்ன-கடிந்தோமென்கிறார் இத்யாதி. "நஷ்டோமோஹஸ்ஸ்ம்ருதிர்லப்தா த்வத்ப்ரஸாதாந்மயாச்யுத । ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ" இதிகீதாஸூ(கஅ.) "மீள்கின்றதில்லை" என்பானென்? ஸ்வதந்த்ரனை நான் தள்ளினாலோவென்ன - வாள் இத்யாதி. விசேஷணங்களுக்கு பாவம் - அவன் ஸ்வாதந்த்ர்யம் இத்யாதி. அடுகுவளம் - அடுகென்று - பெட்டிமேற் பெட்டியாய், வளமென்று - போக்யவஸ்துவாய்; பெட்டிமேற் பெட்டியாக வைத்திருக்கிற போக்யவஸ்து: போனகப்பெட்டியென்றபடி. (அடுகுவளம்-போஜநமும்.) அடுகுவளம் தடைப்படுகையாவது - நப்பின்னைப்பிராட்டி கடாக்ஷம் பெறாமை. நப்பின்னைப்பிராட்டிபுருஷகாரம் சொன்னதுக்கு பாவம் - இனியென்னாலே இத்யாதி. இனியென்றது - என்னுடைய அங்கீகாரம் நப்பின்னைப்பிராட்டி யடியாகவந்தபின்பென்றபடி. அவனாலே விடப்போகாமைக் கடியேதென்ன - என்னுடைய இத்யாதி. "அவன் ஸ்வாதந்த்ர்யம்" இத்யாதிவாக்யவிவரணம் - ஸ்வாதந்த்ர்யம் இத்யாதி. கடாக்ஷம் போஜநமென்னுமதுக்கு ப்ரமாணம் - மணநோக்கம் இத்யாதி. திருமொழி. பதார்த்தம் - ஒளியை இத்யாதி. வாள் - ஒளி. காட்சிக்கு ஹேது என்றது - நப்பின்னைப்பிராட்டி புருஷகாரத்தை. "என்" என்றதுக்கு பாவம் - துயராறு இத்யாதி. "புனைந்தேன்" என்கிற பதசக்தியாலே 'மயிர்கழுவிப் பூச்சூடவிருப்பாரைப்போலே' என்றது. "தலைமேல்புனைந்தேன்" என்றதுக்கு பாவம் - நின்செம்மா இத்யாதி. தலையாகவென்றது - சாடு. தலையிலேயாகவென்றும், ச்ரேஷ்டமாகவென்றும். 'வாள் கெண்டை' என்றுதொடங்கி, 'புனைந்தேன், பிறவித் துயர்கடிந்தோம் - மீள்கின்றதில்லை, ஆழியான் - ஆள்கின்றான், ஆரால் குறைவுடையம்' இத்யந்வய:. (ரு)

---

† அடைகுவளம் என்று வேறு அரும்பதத்திற் காண்கிறது.

நான்காம் பாட்டு.

தலைமேல்புனைந்தேன் சரணங்கள்ஆலின்
இலைமேல்துயின்றான் இமையோர்வணங்க
மலைமேல்தான்நின்றுஎன்மனத்துளிருந்தானை
நிலைபேர்க்கலாகாமைநிச்சித்திருந்தேனே.

ஆ—(தலைமேல்.) - இனி இவனை என்தலையில்நின்றும் ஒருவராலும் பேர்க்கவொண்ணாதென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், என்னுடைய ஹ்ருதயத்திலேயிருக்கிற ஸர்வேஶ்வரனை ஒருவராலும் விஶ்லேஷிக்கப்பண்ண வொண்ணாமையை நிஶ்சயித்து, அத்தாலே க்ருதார்த்தனாயிருந்தேன் என்கிறார்.

[ஆலினிலைமேல் என்றுதொடங்கி] - என்பாடு வருகைக்காக ஆலினிலைமேலே வந்து கண்வளர்ந்தருளி அயர்வறுமமரர்கள் அடிமைசெய்யத் திருமலையிலே நின்றருளி என்னையிசைவித்து என் ஹ்ருதயத்திலே புகுந்திருந்தவனை.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதரக்ஷணத்தில் ஸ்திரஸ்வபாவனானவனை நெஞ்சிலிருந்த இருப்புக் குலைக்கவொண்ணாதென்று அறுதியிட்டிருந்தேனென்கிறார்.

சரணங்கள் - அவன் திருவடிகளை, தலைமேல் - என்தலைமேலே, புனைந்தேன் - வைத்துக்கொண்டிருந்தேன்; (அகடிதகடநாஸமர்த்தனாய்க்கொண்டு,) ஆலினிலைமேல் - ஆலிலையில், துயின்றான் - கண்வளர்ந்தருளும் ஸர்வரக்ஷகனாய், இமையோர் - நித்யஸூரிகள், வணங்க - தொடர்ந்துவந்துவணங்கும்படி, மலைமேல் - திருமலையிலே, தான் - ஸ்வயம் ப்ரயோஜநமாம்படியாக, நின்று - எழுந்தருளிநின்று, என்மனத்துள் - என் நெஞ்சுக்குள்ளேபுகுந்து, இருந்தானை - ப்ரதிஷ்டிதனாயிருந்தவனை, நிலை - இவ்விருப்பில் ஸ்தைர்யம், பேர்க்கலாகாமை - குலைக்கவொண்ணாமையை, நிச்சித்து - நிஶ்சயித்து, இருந்தேன் - (அத்தாலே) க்ருதக்ருத்யனாயிருந்தேன்.

இ.—நாலாம்பாட்டில், என் மநஸ்ஸிலேயிருக்கிற ஸர்வேஶ்வரனை ஒருவராலும் விஶ்லேஷிக்கவொண்ணாதென்று நிஶ்சயித்து, அத்தாலே க்ருதார்த்தனாயிருந்தேன் என்கிறார்.

[தலைமேல் இத்யாதி] - அமரர் சென்னிப்பூவான திருவடிகளைச் சூடப்பெற்றேன். ப்ரார்த்தித்துப் போகையன்றிக்கே கிட்டப்பெற்றேன். [ஆலினிலைமேல் துயின்றான்] - இவர்க்கு ருசிபிறக்கைக்குப் பண்ணின க்ருஷியைச் சொல்லுகிறது. ப்ரளயாபத்தில் ஸகலலோகங்களையும் தன்திருவயிற்றிலேவைத்து ஒருபவனாயிருப்பதொரு ஆலின்தளிரிலே கண்வளர்ந்தான்; அதுதனக்குமேலே, நித்யஸூரிகள் அடிமைசெய்யத் திருமலையிலே வந்துநின்றான். தன்னுடைய ஆபத்ஸகத்வத்தையும், ஸர்வஶக்தித்வத்தையும், மேன்மையோடேகூடின ஸௌலப்யத்தையுங்காட்டி என்னையிசைவித்து என்மநஸ்ஸிலேபுகுந்து ஸ்தாவரப்ரதிஷ்டையா யிருந்தவனை. [நிலைபேர்க்கலாகாமை நிச்சித்து] - அவ்விருப்பை என்னால் போக்கவொண்ணாமையை நிஶ்சயித்து. அவன் போகைக்குஉறுப்பாக என்னால் செய்யலாவது ப்ராதிகூல்யமிறே; நெஞ்சைக்

கொண்டிருக்கையாலே அதுசெய்ய வொண்ணுதிறே. [இருந்தேனே] - இனி ஒருஹய மில்லையென்று நிர்ஹபனுயிருந்தேன். "ஆநந்தம்ப்ரஹ்மணோவித்வாந் நபிபேதி" என்று அவனுடைய ரக்ஷகத்வத்தையறிந்தாலும், ஹோக்யதையையறிந்தாலும், ஒன்று லும் சலியானிறே.

ஈடு.—நாலாம்பாட்டு. என்மநஸ்ஸிலேயிருக்கிற ஸர்வேஶ்வரனை ஒருவராலும் விஶ்லேஷிப்பிக்கவொண்ணுதென்று நிஶ்சயித்து, அத்தாலே க்ருதக்ருத்யனுயிருந்தேனென் கிருர்.

[தலைமேல்புனைந்தேன்சரணங்கள்] - * அமரர்சென்னிப்பூச்சூடப்பெற்றேன். ப்ரார்த்தித்துப்போகையன்றிக்கே அத்திருவடிகளை என்தலைமேலே வைத்துக்கொள்ளப் பெற்றேன். இப்பேறு இவர்பெறுகைக்கு அவன்க்ருஷிபண்ணினபடி சொல்லுகிறது மேல்: அவன் * வண்டடத்தினுட்கிடந்து தபஸ்ஸுபண்ணிற்று, இவர் இப்பேறு பெறுகைக்கு. [ஆலினிலைமேல்துயின்றான்] - தன்னைக்கொண்டு கார்யமுடையார் சிலரைக் கண்டிலன்; எல்லார்க்கும் ஆராய்ச்சிப்படும்படியான செயலைச்செய்வோமென்று பார்த்தான்; வேண்டா வென்பாரைக் கண்டதில்லை. அது ஸாத்மித்தவாறே நித்யஸூரிகளும் தானுமாகவந்து திரு மலையிலேநின்றான்; அதுவும் ஸாத்மித்தவாறே இவருடைய ஹ்ருதயத்திலேவந்துபுகுந்தான்; இங்கு விலக்குவாரில்லாமையாலே ஸ்த்தாவரப்ரதிஷ்ட்டையாக விருந்தான். * பொருப் பிடையேநின்றும் புனல்குளித்துங்காணும்இவர்நெஞ்சிலே புகுந்திருந்தது * பனிக்கடலிற் பள்ளிகோளைப் பழகவிட்டோடிவந்து இவருடைய * மனக்கடலிலே வாழப்புக்கான்: இப் படியிருந்தவனை. [நிலைபேர்க்கலாகாமை] - இவன்போகைக்கு உறுப்பாக என்னாலாவ தெல்லாம் செய்தேன், அதுக்கும் கேட்பானுயிருந்திலன். [நிச்சித்திருந்தேன்] - "நபி பேதி" (நபிபேதி) என்றிருந்தேன். அவன்படியையறிந்தால் இவனுக்கு நிர்ப்பயனுயிருக்

நாலாம்பாட்டு.—தலைமேல் இத்யாதி. "என்மனத்துளிருந்தானை நிலைபேர்க்கலாகாமை நிச்சித்திருந்தேன்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - என்மநஸ்ஸிலே இத்யாதி.

"தலைமேல் புனைந்தேன் சரணங்கள்" என்றது - அநுவாதம். "புனைந்தேன்" என்ற துக்கு ஹாவம் - அமரர்சென்னி இத்யாதி. "புனைந்தேன்" என்றதுக்கு - சூடினேனென்றர்த்தம் விவக்ஷித்து, சூடுவது புஷ்பமாகையாலே, திருவடிகளை 'அமரர்சென்னிப்பூ' என்கிருர். "புனைந் தேன்" என்ற பூதார்த்தத்துக்கு ஹாவம் - ப்ரார்த்தித்து இத்யாதி. மேலுக்கெல்லாம் அவதாரிகை- இப்பேறுஇவர் இத்யாதி. "ஆலினிலைமேல்துயின்றான்" என்றமாத்ரத்துக்கவதாரிகை - அவன் வண்டடத்தின் இத்யாதி. வண்டடம் - அழகிய தடாகம். ஏகார்ணவமென்றபடி. பெரியதிருமடல். இதெல்லாம் செய்யவேணுமோ இவரை விஷயீகரிக்கைக்கு என்கிறஶங்கையிலே, "ஆலினிலை மேல் துயின்றான்" என்றதுக்கு ஹாவம் - தன்னைக்கொண்டு இத்யாதிவாக்யத்ரயம். ஆராய்சிப் படும்படியான - ப்ரஸித்தமாம்படியான. அதாவது: "ஆபத்பந்துவும் அகடிதகடநாஸமர்த் தனும்இவனே" என்று ப்ரஸித்தமாம்படியான செயலென்றபடி. "இமையோர்" என்றுதொடங்கி "மனத்துளிருந்தானை" என்னுமளவுக்கும் ஹாவம் - அதுஸாத்மித்தவாறே இத்யாதி. "இருந்தான்" என்றதுக்கு ஹாவம் - இந்துவிலக்குவார் இத்யாதி. கீழெல்லாவற்றுக்கும் ரஸோக்தி - பொருப்பி டையே இத்யாதி. பனிக்காலத்திலே மலைகளின்நடுவே நின்றும், குளிர்காலத்திலே பொய்கை களிலேபுக்கு முழுகிக்கிடந்துமென்றபடி. மூன்றுந்திருவந்தாதி எழுபத்தாறும்பாட்டு. அப்படி கடலில்நின்றும் இவர்நெஞ்சிலே புகுந்தானுவென்ன - பனிக்கடலில் இத்யாதி. ஶீதளஸ்வஹாவ மான கடலில் கண்வளர்ந்தருளினபடியை நேராக மறந்துவிட்டோடிவந்து என்னுடைய மனக்கட லிலே வாழவல்லனென்றபடி. "பேர்க்கலாகாமை" என்றதுக்கு ஹாவம் - இவன்போகைக்கு இத்யாதி. "நபிபேதி" என்றதுக்கு ஹாவம் - அவன்படியை இத்யாதி. "அவன்படியை"

கத் தட்டில்லையிறே. "ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சந" (ஆநந்தம்ப்ரஹ்மணோவித்வாந் நபிபேதி குதஶ்சந) - தன்சோகம் மறுநனையும்படியான ஆனந்தம் இவன்பக்கலிலே உண்டென்றறிந்தால், பின்னை இவன்ஶோகம் போகைக்குக் குறையில்லையிறே. "குதஶ்சந" (குதஶ்சந) - பின்னை புத்திபூர்வகமாகப் பண்ணின ப்ராதிகூல்யத்துக்கும் அஞ்சவேண்டா. (௪)

ஐந்தாம் பாட்டு.

நிச்சித்திருந்தேனென்னெஞ்சங்கழியாமை
கைச்சக்கரத்தண்ணல் கள்வம்பெரிதுடையன்
மெய்ச்சப்படான்பிறர்க்கு மெய்போலும்பொய்வல்லன்
நச்சப்படும்நமக்குநாகத்தணையானே.

ஆ.—(நிச்சித்திருந்தேன்.) - இவ்வளவோ என்திறத்தில் அவன்செய்ய நினைத்திருக்கிறான்? இப்படி எளியனோ அவன்? என்னில், - ப்ரதிகூலருக்குக் காணவரியன், நமக்கெளியன்காண்! என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், எம்பெருமான் என்திறத்தில் செய்தருள நினைக்கிறவை ஒருவர்க்கும் அறிய நிலமல்ல என்கிறார்.

[கைச்சக்கரத்தண்ணல்] - கையிலே திருவாழியையுடைய ஸர்வேஶ்வரன். [மெய்ச்சப்படான் என்றுதொடங்கி] - அநாஶ்ரிதர்க்கு குணங்களால் கொண்டாடப்படான்; அவர்களுக்கு மெய்செய்வாரைப்போலே பொய்செய்யவல்லவன்; ஆஶ்ரிதஸம்ஶ்லேஷைக போக்யனானவன், ஆஶ்ரிதரான நமக்கு நச்சப்படும்.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதஸுலபனாய் அநாஶ்ரிததுர்லபனானவன், அநந்யகதிகளான நமக்கு ப்ராப்யனாக ஆசைப்படப்படுமென்கிறார்.

என் நெஞ்சம் - என் நெஞ்சை, கழியாமை - விட்டகலாதபடியான ஸ்வபாவத்தை, நிச்சித்திருந்தேன் - அறுதியிட்டிருந்தேன்; சக்கரம் - (ரக்ஷகமாய் போக்யமான) திருவாழியை, கை - கையிலேயுடையனாய், அண்ணல் - அஸாதாரணஸ்வாமியாய், கள்வம்பெரிதுடையன் - நெஞ்சிலேயிருக்கச்செய்தே நான் அறியாதபடி தானறிந்ததாகப்பேசி அவ்வ்யாபாரங்களிலே பாரிப்பையுடையனாய், (தன் ஸ்வபாவம் நாமறிந்து கொண்டாடுகிறாற்போலே), பிறர்க்கு மெய்ச்சப்படான் - பிறர் கொண்டாடாதவனாய்,

---

என்றதுக்கு ஶப்தமேதென்ன - ஆநந்தம் இத்யாதி. எடுத்தவாக்யத்துக்கர்த்தம் - தன்ஶோகம் இத்யாதி. 'புத்திபூர்வகமாக' என்கிறவிடத்திலே, ஸஹஸ்ரநாமபாஷ்யத்திலே "ப்ராஜிஷ்ணுர் போஜநம் போக்தா ஸஹிஷ்ணுர் ஜகதாதிஜ:" என்கிறவிடத்திலே, "ஸஹிஷ்ணு:" என்றதுக்கு - "தேஷாமேவ ஹிரண்யாக்ஷப்ரப்ருதீநாம் ஸஞ்சிதாநாம் ப்ராதிகூல்யாநுகூல்யாவஸரே க்ஷமஸ்வேதி ப்ரார்த்திதாநாம் விஷயஶாஸநாதிஜநிதாநாம் ஸாதாரணாஸாதாரணாநாம் ஸர்வஜ்ஞாநிஷ்டாநாம் ஸர்வம்ஸஹநஶீலாநாம் ஸஹஸ்ராநாம் ஸஹகவிஷயாணாம் வாநவயிகாநாம் வைராயாநாம் ஸஹிஷ்ணு:" என்றத்தை நினைப்பது. (௫)

மெய்போலும் - ஆஶ்ரிதர்க்கு மெய்யே செய்யுமாபோலே, பொய்வல்லன் - அநாஶ்ரிதர்க்குப் பொய்யே செய்யவல்லனாய், நாகத்தணையான் - ஆஶ்ரிதஸம்ஶ்லேஷ ஸ்வபாவனான அநந்தஶாயியானவன், நமக்கு - , நச்சப்படும் - ப்ராப்யபூதனாக ஆசைப்படும்.

இ.—அஞ்சாம்பாட்டில், அவன் என்திறத்திற்செய்தருள நினைத்திருக்கிறவை ஒருவர்க்கும் அறிய நிலமன்று என்கிறார்.

[நிச்சித்திருந்தேன் இத்யாதி] - தானே க்ருஷிபண்ணித் தன்பேறாகவந்து என்னெஞ்சிலே யிருக்கையிலே, இனி ஒருகாலமும் விட்டுப்போகான் என்னுமிடத்தை நிஶ்சயித்திருந்தேன். [கைச்சக்கரத்தண்ணல்] - கையிலே திருவாழியையுடைய ஸர்வஸ்வாமி. கைப்பற்றினாரை ஒரு காலமும் விடானென்கை. [கள்வம் பெரிதுடையன்] - நெஞ்சைவிட்டுப் போகாமையே யன்றிக்கே இங்கேயிருந்தே ஒருவர்க்கு அறியவொண்ணாதே தான் அறிந்ததாக அநேகத்தைப் பாரியாநின்றான். அர்ச்சிராதிமார்க்கத்தாலே கொடுபோக நினைப்பது, அமாநவகரத்தாலே ஸ்பர்ஶிப்பிக்கத் தேடுவது, அப்ஸரஸ்ஸுக்களையிட்டு எதிர்கொள்ளத் தேடுவதாகாநின்றான். [மெய்ச்சப்படான் பிறர்க்கு] - நான் தன்குணங்களைச் சொல்லி ஏத்தினாற் போலே, அநாஶ்ரிதர் கிட்டிக்கொண்டாடப் படான். இரண்டும் இவர்க்குப் பேறாயிறேயிருப்பது. [மெய்போலும் பொய்வல்லன்] - பாண்டவர்களுக்கு மெய்யனாயிருக்குமா போலே துர்யோதனாதிகளுக்குச் செவ்வை செய்வாரைப் போலே யிருந்து பொய்யாய்த்தலைக்கட்டும்படி செய்யவல்லன். [நச்சப் படும் நமக்கு] — தன்னை யொழியச்செல்லாத நமக்குக் கிட்டி ஆஶ்ரயிக்கலாம்படி யிருக்கும். [நாகத்தணையானே] - சிலர்க்கு அரியனாயிருக்க நமக்குக் கிட்டலாயிருக்கிறது எத்தாலே? என்னில், - ஆஶ்ரிதஸம்ஶ்லேஷைகஸ்வபாவனாயிருக்கையாலே. அவனுக்கு அபிமதனுமாய் நமக்குக் கிட்டுகைக்கு அடியுமாயிறே திருவனந்தாழ்வான் இருப்பது.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. அவன் என்திறத்தில் செய்ய நினைக்கிறவை ஒருவர்க்கும் அறிய நிலமன்றென்கிறார்.

[நிச்சித்து இத்யாதி] – நீரிலே கிடந்தும் பர்வதாக்ரத்திலே நின்றும் தன் பேறாகத் தபஸ்ஸுபண்ணி வந்து என்னெஞ்சிலே இருக்கையாலே, இனி ஒருகாலமும் விட்டுப்போகானென்று நிஶ்சயித்திருந்தேன். [கைச்சக்கரத்தண்ணல்] - கையிலே திருவாழியையுடைய ஸர்வேஶ்வரன். ஆஶ்ரிதரை ஒருகாலும் கைவிடாதவன்; "எப்போதும் கைகழலாநேமியான்" என்னக்கடவதிறே. [கள்வம்பெரிதுடையன்] - நெஞ்சைக் கைவிடாமையே யன்றிக்கே, இங்கேயிருந்து நாம் அறியாதிருக்கத் தான் அறிந்ததாகக்கொண்டு அவ்வருகே குவாலைப் பாரியாநின்றான். பரமபதத்தேறக் கொடுபோக ஒருப்படுவது, அமாநவனை இடுவித்து ஸ்பர்ஶிக்க நினைப்பது, * மதிமுக மடந்தையரை வரக்காட்டி எதிர்கொள்ளப் பார்ப்பதாய்க் குவாலைப் பாரியா நின்றான்.

அஞ்சாம்பாட்டு.—நிச்சித்து இத்யாதி. "கள்வம் பெரிதுடையன்" என்றதைப்பற்ற அவதாரிகை - அவன் இத்யாதி.

அநுவாதத்துக்கு பாவம் - நீரிலே இத்யாதி. கழியாமை - விட்டுப்போகாமை. இத்தால் பலிதம் - ஆஶ்ரிதரை இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - எப்போதும் இத்யாதி. பெரியதிருவந்தாதி, "இப்போது மின்னம்" இத்யாதி. குவாலை - அதிகத்தை. குவாலேதென்ன - பரமபதத்தேற இத்

"இதுதான் ஸர்வஸாயாரணமாகிற் செய்வதேன்" என்றுஅஞ்சவேண்டா:[மெய்ச்சப்படான் பிறர்க்கு] - நான் தன்குணங்களைச்சொல்லிப் புகழ்கிறுப்போலே, பிறர் தன் குணங்களைச் சொல்லிப் புகழலாம்படியிரான்; அவர்களுக்கு துஷ்ப்ராபனுயிருக்கும். [மெய்போலும் பொய் வல்லன்] - அர்ஜுநாதிகள்பக்கல் இருக்குமாபோலேயிறே துர்யோதநாதிகள் பக்கலி லும் இருப்பது; கார்யத்தில்வந்தால் மெய்செய்வாரைப்போலே பொய்செய்து தலைக்கட்டும். "இதுதான் நம்மளவிலும் ஏறிற்செய்வதேன்?" என்றஞ்சவேண்டா. [நச்சப்படும்நமக்கு] - உகவாதார்பக்கலில் செய்வுற்றை நம்பக்கல் செய்யான். அதுக்கு விஸ்வாஸமென்னென் னில், - [நாகத்தணையானே] - நம்மோடு விஸஜாதீயர் பக்கல் செய்வதுகொண்டு கார்ய மென்? நம்மோடு ஸஜாதீயர்பக்கல் பரிமாறினதன்றே நமக்குப் படிமா. நம்முடைய பேற்றுக்கு அடியுமாய் நமக்கு ஸஜாதீயருமானுரோடு பரிமாறும்படி இதுவன்றே? (ரு)

ஆறும் பாட்டு.

நாகத்தணையானை நாள்தோறுஞ்ஞானத்தால்
ஆகத்தணைப்பார்க்குஅருள்செய்யுமம்மானை
மாகத்திளமதியஞ் சேருஞ்சடையானைப்
பாகத்துவைத்தான்தன் பாதம்பணிந்தேனே.

ஆ.—(நாகத்தணையானை.) - ஆஸ்ரிதருடைய நிகர்ஷம்பாராதே திருவநந் தாழ்வானுக்கு அருள்செய்யுமாபோலே அவர்களுக்கு நாடோறும் அருள்செய்யுமம்மான் தன் பாதம் பணியப்பெற்றேனென்கிறுர்.

ஒ —ஆறும்பாட்டில், இன்றுபுகுந்து ஆஸ்ரயிப்பாரையும் குணதோஷம் பாராதே நித்யாஸ்ரிதரைப்போலே விஷயீகரிக்கும் ஸ்வபாவனுன ஸர்வேஸ்வரன் திரு வடிகளைப் பணியப்பெற்றே னென்கிறுர்.

[ஞாநம்] - பக்தி. நாள்தோறும் அருள்செய்யும் என்றந்வயம். [மாகத்திள மதியம் என்றுதொடங்கி மேலுக்கு] - ஐஸ்வர்யத்துக்கு ஸூசகமான பிறையைச் சூடி ப்ரயோஜநாந்தரபரதைக்கு உறுப்பான ஸாதநத்வம் தோற்றும்படியான ஜடையை யுடையவனைத் திருமேனியில் ஒருபார்ஸ்வத்திலே வைத்தவனுடைய திருவடிகளைப் பணியப்பெற்றேன்.

ப.—அநந்தரம், நித்யாஸ்ரிதரோடு முமுக்ஷுக்களோடு ப்ரயோஜநாந்தரபர ரோடு வாசிபற உபகரிக்கும் ஸௌஸீல்யாதிஸயத்தை யுடையவன் திருவடிகளிலே வணங்கப்பெற்றேனென்கிறுர்.

நாகம் - நித்யகைங்கர்யநிரதரான திருவநந்தாழ்வானை, அணையானை - படுக் கையாகவுடையனுய், நாள்தோறும் - ஸர்வகாலமும், ஞாநத்தால் - ஊக்திருபஜ்ஞாநத்

டாதி. "மெய்ச்சப்படான்" என்றதுக்கவதாரிகை - இதுதான் இத்யாதி. மெய்ச்சப்படான் - கொண் டாடப்படான். நச்சப்படும் - ஆசைப்படுமவன். நம்மோடு ஸஜாதீயர் - அநந்யப்ரயோஜநத்வேந ஸஜாதீயர். படிமா - த்ருஷ்டாந்தம். "நம்மோடு ஸஜாதீயர்" இத்யாதிவாக்ய விவரணம் - நம்மு டையபேற்றுக்கு இத்யாதி.

தாலே, ஆகத்து - நெஞ்சிலே, அணைப்பார்க்கு - வைத்தநுஸந்திக்கும் முமுக்ஷுக்களுக்கு, அருள்செய்யும் - நிரதிசயபோக்யனாய்க்கொண்டு உபகரிக்கும், அம்மானை - ஸ்வாமியானவனாய், மாகத்து - ஆகாசவர்த்தியான, இளமதியம் - இளம்பிறையானது, சேரும் - சேரும்படியான, சடையானை - ஜடையையுடையனாகையாலே, (ஸம்ஹர்த்ருத்வோபாஸகத்வங்கள் இரண்டையுமுடையருத்ரனை), பாகத்து - (தன் திருமேனியில்)ஒருபக்கத்திலே, வைத்தான்தன் - வைத்த நிரதிசய ஸௌசீல்யவானுடைய, பாதம்பணிந்தேன் - திருவடிகளை வணங்கப்பெற்றேன். ''அணையானை, அம்மானை'' என்கிற வேற்றுமைப்போலிஇரண்டும் ஐகாரம் அசையாய்க்கிடக்கிறது. அன்றியே, 'பாகத்துவைத்தானைப் பாதம்பணிந்தேனை' என்று பாடம்சொல்லுவாருமுளர்.

இ.—ஆறாம்பாட்டில், இன்றுபுகுந்து ஆஶ்ரயித்தாரையும் நித்யாஶ்ரிதரைப்போலே விஷயீகரிக்குமவன் திருவடிகளிலே நிர்மமனாய் விழப்பெற்றேனென்கிறார். திருவநந்தாழ்வானுக்கும் ப்ரயோஜநாந்தரபரர்க்கும் வாசிவையாதே உடம்புகொடுக்குமவனை வணங்கப்பெற்றேனென்கிறார் என்றுமாம்.

[நாகத்தணையானை] - தன்னை உகந்தாரைப் படுக்கையாகக் கொள்ளுமவனை. [ஞானத்தால் ஆகத்தணைப்பார்க்கு - நாள்தோறும் அருள்செய்யும்] - ஞானம் - பக்தி. பக்தியாலே நெஞ்சிலேயணைக்க நினைப்பார்க்கு, அவர்களுடைய ஹ்ருதயத்தை ஒருநாளும் விடான். [அம்மானை] - ஆஶ்ரயமுடையார்க்குத் தன்பேறாக விடாமைக்கு ப்ராப்தி சொல்லுகிறது. [மாகம் இத்யாதி] - ஸர்வப்ரதாநன் என்று தோற்றும்படி சந்த்ரனைச்சூடி ஸாதகத்வ ஸூசகமான ஜடையையுடையனுமான ருத்ரனுக்குத் திருமேனியில் ஒருபார்ஶ்வத்திலே இடங்கொடுத்தவனுடைய திருவடிகளை ஆஶ்ரயிக்கப்பெற்றேன்.

ஈடு.—ஆறாம்பாட்டு. இன்று ஆஶ்ரயிப்பாரையும் நித்யாஶ்ரிதரைப்போலே விஷயீகரிக்குமவன் திருவடிகளிலே நிர்மமனாய் விழப்பெற்றேன் என்கிறார். † (திருவநந்தாழ்வானுக்கும் ப்ரயோஜநாந்தரபரர்க்கும் வாசிவையாதே உடம்பு கொடுக்குமவனை வணங்கப்பெற்றேனென்கிறாரென்றுமாம்.)

[நாகத்தணையானை] - உகந்தாரைப் படுக்கையாகக் கொள்ளுமவனாய்த்து. [நாடோறும்இத்யாதி] - ஜ்ஞானத்தால்ஆகத்தணைப்பார்க்கு நாள்தோறும் அருள்செய்யுமவனாய்த்து. ‡ (இப்போது, ஞானமென்று - ஜ்ஞாநவிசேஷமான பக்தியைச் சொல்லுகிறது. பக்தியாலே ஹ்ருதயத்திலே கொடுபுகுந்து சேர்ப்பார்க்கு நாள்தோறும் அருள்செய்யுமவனாய்த்து.) இவனால் எப்போதும் நினைக்கப்போகாதே! அக்குறைதீர ஏகரூபனான தான் நாள்தோறும் அருள்செய்யுமாய்த்து. [மாகம்இத்யாதி] - ஸர்வப்ரதாநனென்று தோற்றும்

ஆறாம்பாட்டு.—நாகத்தணையானை இத்யாதி. உத்தரார்த்தத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - இன்று இத்யாதி. இன்றாஶ்ரயிப்பாரையும் என்றது - ''ஞானத்தால்ஆகத்தணைப்பார்'' என்றத்தைப் பற்ற.

அது தவிரவேண்டுவோனென்னென்னில்; - ஸ்ரீவைஷ்ணவ ஸஹவாஸத்துக்கு உடலாயிருக்கையாலும் உகந்தருளின நிலங்களிலுண்டான ஆதராதிஶயத்தாலுமாக, "அங்கேயிருக்கிலேன், இங்கேயிருக்கிலேன்" என்று அவனெல்லைக்குள்ளே கிடக்குமத்தனையன்றோ வேண்டுவதென்றிருந்தோம்; அதுவேயாகப்பெறாதே, மற்றைப்படிக்கு உடலாயிருந்தது. ப்ரக்ருதிவஶ்யனாக்கி ஶப்தாதிவிஷயங்களிலே கொடுபோய் மூட்டும் ஸம்ஸார ஸ்வபாவத்தை யநுஸந்தித்தபின்பு விடுவதாகவே துணிந்தேன். [யான்வேண்டேன்] - என் புத்தியால் விட்டேன்; அவனிருத்தில் செய்யலாவதில்லை. ஆனால் செய்யவேண்டுவதென்னென்ன - [மருளொழிநீ] - உன்னதொருநினைவுண்டு, அத்தைத்தவிரப்பார். "தீவினையுள்ளத்தின் சார்வல்லவாகித் தெளிவிசும்பேறலுற்றால் - திருவாறன்விளையதனை மேவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலென்னுமென்சிந்தனை" என்றுவிரோதிகழிந்து போம்வழியெல்லாம்போய், "இது பரமபதத்துக்குப் போம்வழி, அது திருவாறன்விளைக்குப் போம்வழி" என்றால் "ப்ராப்யவஸ்துதான்இங்கே வந்துகிட்டிற்றாகில் இனி இங்கேயடிமைசெய்ய வமையாதோ?" என்று ப்ரமித்திருப்பதொன்றுண்டு, அத்தைத் தவிரப்பார். மருளென்று - அறிவின்மைக்குப்பேர். [மடநெஞ்சே] - "உத்தேஶ்யவஸ்து ஸந்நிஹிதமாய்த்தது" என்று இத்தையே பார்க்கிறபித்தனைபோக்கி, நம்மையும் பார்க்கவேண்டாவோ? [வாட்டாற்றான்அடிவணங்கே]-நமக்கு ஹிதகாமனாய்வந்திருக்கிறவவன்வழியே போய் அவனை யநுஸரிக்கப் பாராய்; உகந்தருளினநிலங்களிலே வந்துநிற்கிறது நம்மை அவ்வருகே கொடுபோகைக்காயிருக்கும், நீயும் அவன்நினைவிலே போகப்பாராய் [அடிவணங்கே] - அடிவணங்குகையாவது - ஈரரசுதவிருகை யிறே. (௧)

இரண்டாம் பாட்டு.

வாட்டாற்றானடிவணங்கிமாஞாலப்பிறப்பறுப்பான்
கேட்டாயேமடநெஞ்சேகேசவனெம்பெருமானை
பாட்டாயபலபாடிப் பழவினைகள்பற்றறுத்து
நாட்டாரோடியல்வொழிந்து நாரணனைநண்ணினமே.

ஸாவம்-வானுயர் இத்யாதி வாக்யத்வயம். அதுதவிரவேண்டுவோனென்னென்னில்' என்றது - அப்போதப்படி நினைத்திருந்து இப்போதத்தைத் தவிரவேண்டுவானென்னென்னிலென்றபடி. அதுவே - வைஷ்ணவஸஹவாஸாதியே. மற்றைப்படிக்கு - விஷயப்ராவண்யத்துக்கு. "மற்றைப்படிக்கு" என்றத்தை விவரிக்கிறாராதல், * இனி ஶப்தத்துக்கர்த்தமாதல் - ப்ரக்ருதி இத்யாதி. "யான்" என்றதுக்கு ஸாவம் - என்புத்தியால் இத்யாதி. அதேதென்ன - தீவினை இத்யாதி. மருளொழி - உகந்தருளின நிலங்களில் ப்ராவண்யத்தைவிடு. மடப்பம் பற்றிற்றுவிடாமையாக. ஸாவம் - உத்தேஶ்யவஸ்து இத்யாதி. நம்மையும் பார்க்கவேண்டாவோ - அஜ்ஞாநாவஹமான ஸம்ஸாரத்திலிருக்கிற நம்மையும் பார்க்கவேண்டாவோ வென்றபடி. "மருளொழிநீ" என்றுவைத்து, "வாட்டாற்றானடிவணங்கு" என்றதுக்குக் கருத்தேதென்ன - நமக்கு இத்யாதி. அதாவது - நம்மைக் கொடுபோகவந்தவனைப் பின்செல்லப் பாராயென்றபடி. ஏதத்விவரணம் - உகந்தருளின இத்யாதி. "அடிவணங்கு" என்றால் அவன்நினைவிலே போகையைச் சொல்லுமோவென்ன - அடிவணங்குகை இத்யாதி,

(௧).

ஆ.—(வாட்டாற்றான்.) – வாட்டாற்றானுடைய திருவடிகளை யநுஸந்தித்துக் கொண்டு, ப்ரதிபந்தகத்தைப்போக்குகைக்காக அவனையபேக்ஷித்தும், அபேக்ஷித்த படியே ப்ரதிபந்தகத்தைப்போக்கி, அந்தபாநாதிபாரகராயிருந்த நாட்டாருடைய ப்ரஸ்தாநத்தையொழிந்து ஸமவேதகபாரணராய், அவனை வந்து ப்ராபிக்கப்பெற்றோமே! நெஞ்சே! நமக்குவிளைந்த ஸம்ருத்திகண்டாயே என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், கேட்டாயே ஹ்ருதயமானநெஞ்சே! தன்னை அநுஸ விக்கைக்கு விரோதியான மாஞாலப்பிறப்பு அறுக்கவேணும் என்று, கேசிஹந்தாவாய் என்னை அடிமைகொண்ட வாட்டாற்றானை அடிவணங்கி, அவன்ப்ரஸாதத்தாலே திருவாய் மொழி பாடவும்பெற்று, தன்னுடைய ப்ராப்திக்கு ப்ரதிபந்தகமான அவித்யாதிக ளெல்லாம்போக்கி, இதரவிஷய ப்ரவணராய் நம்மோடு ஒருபற்றின்றிக்கேயிருக்கிற நாட் டாரோட்டைச் சேர்த்தியையும் தவிர்ந்து, நாராயணனை ப்ராபிக்கப்பெற்றோமென்கிறார்.

ப.—அநந்தரம், ஸர்வப்ரகாரோபகாரகனாய் நிருபாதிகபந்துவானவனை நாம்கிட்டப்பெற்றபடிகண்டாயே! என்று பூர்வோபகார பரம்பரையை ஸ்மரிப்பிக்கிறார்.

மாஞாலம் - மஹாப்ருதிவியிலேயுண்டான, பிறப்பு - ஜந்மஸம்பந்தத்தை, அறுப்பான் - அறுக்கைக்காக, வாட்டாற்றான் - திருவாட்டாற்றிலே ஆஸ்ரிதஸுலபனா னுடைய, அடிவணங்கி - திருவடிகளை ஆஸ்ரயித்து, கேசவன் - ஜோடுப்ரதிபந்தக மான கேசியைநிரஸித்தவனாய், எம்பெருமானை - அப்படி நம்முடையவிரோதியையும் போக்கி படிமைகொண்டவனை, பல பாட்டு ஆய - பஹுவிதமான கீதங்களானவற்றை, பாடி - பாடுகையாகிற கைங்கர்யத்தைப்பண்ணி, பழவினைகள் - அநாதிகளான அவித்யா கர்மாதிகளை, பற்று அறுத்து - ஸவாஸநமாக அறுத்து, நாட்டாரோடு - அஹங்காராதிதூஷித ரான லௌகிகரோடு, இயல்வு - ஸஹவாஸத்தையும், ஒழிந்து - தவிர்ந்து, நாரணனை - (நிருபாதிகபந்துவாய்க்கொண்டு இன்று பலப்ரதாநோத்யுக்தனான) நாராயணனை, நண் ணினம் - கிட்டப்பெற்றோம்; மடம் - என்னோடுஉடன்பட்டு ஹ்ருதயமான, நெஞ்சே - ! கேட்டாயே - (இவ்வுபகாரபரம்பரைகளிருந்தபடி) கேட்டாயே!

ஈ.—இரண்டாம்பாட்டில், "விஶ்லேஷகையே" என்று நம் இசைவு பார்த்திருக் கிறான் என்கிறதென்? "இந்நின்றநீர்மை இனியாமுறாமை" என்று அடியிலே அபே க்ஷித்திலோமோ? என்ன;—"அபேக்ஷித்தவளவோ நாம் பெற்றது!" என்கிறார்.

[மாஞாலப் பிறப்பறுப்பான் - வாட்டாற்றான் அடிவணங்கி] - "தன்னை அநு ஸவிக்கைக்கு விரோதியான மஹாப்ருதிவியில் ஜந்மத்தைப் போக்கவேணும்" என் றன்றோ நாம் அர்த்தித்தது. [கேசவன் எம்பெருமானை] - கேசியை நிரஸித்தாற் போலே நம் மோக்ஷவிரோதியைப் போக்கி முறையிலே நிறுத்தினபடியைக் கண் டாயே? அவ்வளவேயோ! [பாட்டாயபலபாடி]-விரோதியைப் போக்கினபடி கிடக்கச் செய்தே, வாசிகமான அடிமையைக்கொண்டபடி கண்டாயே. பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவும்படியன்றோ கவிபாடுவித்துக் கொண்டபடி. ப்ரஸஸ்தகேஸனாயிருக்கிற அழகைக்காட்டித் தோற்பித்துக் கவிபாடுவித்துக்கொண்டான் என்றுமாம். [பாடிப்பழ வினைகள் பற்றறுத்து] - நாம் அடிமைசெய்ய, ப்ராப்தி ப்ரதிபந்தகமாய் அநாதிகாலார் ஜிதமான அவித்யாதிகளெல்லாம் போகப்பெற்றபடி கண்டாயே. நாம் அநாதிகாலங் கூட ஆர்ஜித்தவற்றை, ஒரு ஸர்வஶக்தி அல்பகாலத்திலே போக்கினபடிகண்டாயே,

[நாட்டாரோடு இயல்வொழிந்து] - அஹங்கார மமகார வஶ்யரோடு தொற்றற்றபடி கண்டாயே. "இவை என்ன உலகியற்கை" "கொடுஉலகங் காட்டேலே" என்னப்பண்ணினபடி கண்டாயே. [நாரணனை நண்ணினமே] - நிருபாதிக ஸர்வரக்ஷகனைக் கிட்டப்பெற்றோம். நிருபாதிக ஸர்வவிதபந்துவைக் கிட்டப்பெற்றோம். [கேட்டாயே மடநெஞ்சே] - ஐவ்யமானநெஞ்சே, கேட்டாயே! என்று உபகாரஸ்ம்ருதி தோற்றக் கூறுகொள்ளுகிறார்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. "விதிவகையே" என்று - கேவலஹ்ருதவத்க்ருபையாலே வந்ததாகச் சொல்லுகிறதென் ? அடியிலே "இங்கின்றநீர்மையினியாமுறாமை என்றிலோமோ நாம்?" என்ன,—நாம் அபேக்ஷித்தவளவோ பெற்றது?என்கிறார்.

[மாஞாலப்பிறப்பறுப்பான் - வாட்டாற்றானடிவணங்கி - கேசவனெம்பெருமானைப் பாட்டாயபலபாடிப் பழவினைகள் பற்றறுத்து நாட்டாரோடியல்வொழிந்து நாரணனைநண்ணினம் - கேட்டாயேமடநெஞ்சே] - இதெல்லாம் அவனருளாலே வந்ததாயிருந்ததோ ? நாம் இரந்துபெற்றதாயிருந்ததோ ? விரோதிபோகவேணுமென்னும் இவ்வளவன்றோ நாம்அபேக்ஷித்தது ; கேடுவாய், நாம் அபேக்ஷித்தவளவறிதியே. [மாஞாலப் பிறப்பறுப்பான் - வாட்டாற்றானடிவணங்கி]-"ஸம்ஸாரஸம்பந்தத்தை யறுத்துத்தரவேணும்" என்றன்றோ நாம் ஸர்வேஶ்வரன் திருவடிகளையாஶ்ரயித்தது. அதுக்குமேலே அவன் நம்மை அடிமையுங்கொண்டான் கண்டாயே. வாசிகமானவடிமையன்றோ கொண்டது. [கேசவனெம்பெருமானை] — கேசிஹந்தாவான ஸர்வேஶ்வரனை; கேசியைப்போக்கினாற்போலே நம்விரோதியைப்போக்கி நம்முடைய ஶேஷத்வத்தை நிலைநிறுத்தி நமக்கு ஸ்வாமியாயுள்ளவனை ; அன்றிக்கே, ப்ரஶஸ்தகேஶன் தன்னழகைக்காட்டி நம்மையடிமை கொண்டவனென்றுமாம். அவ்வளவேயோ, [பாட்டாயபலபாடி] - * பாலேய்தமிழரிசைகாரர் பத்தர்பரவும்படியன்றோ நம்மையிடுவித்துக் கவிபாடுவித்துக்கொண்டபடி. "விரோதியைப்போக்கி யடிமைகொள்ளவேணும்" என்று நாம் அபேக்ஷிக்க, அதுவுங்கிடக்கச் செய்தே, அடிமைகொண்டான் கண்டாயே. [பாடிப்பழவினைகள்பற்றறுத்து] - நாம் அடிமைசெய்ய, ப்ராப்தி ப்ரதிபந்தகமாய் அநாதிகாலார்ஜிதமான அவித்யாதிகளெல்லாம்

இரண்டாம்பாட்டு.—வாட்டாற்றன் இத்யாதி. "விதிவகை" என்றதின் பூர்வர்கள் நிர்வாஹத்திலே அவதாரிகை - விதிவகையேயென்று இத்யாதி. விதி - ஹ்ருதவத்க்ருபையையே சொல்லுகிறது. "அனந்தன்மேல்கிடந்த வெம்புண்ணியா" என்று இவர்க்கு ஸாத்யமாவது அவனுகையாலே என்று கருத்து.

"அபேக்ஷித்தவளவோபெற்றது" என்றதுக்கீடாக அந்வயமருளிச்செய்கிறார் - மாஞாலம் இத்யாதி. அந்வயாநுகுணமாக பாவம் - இதெல்லாம் இத்யாதி. நாமிருந்ததுதானேதென்ன - விரோதி இத்யாதி வாக்யத்வயம். இவ்வளவேயோ நாமபேக்ஷித்ததென்ன - மாஞாலம் இத்யாதி. இந்தபதத்வயத்துக்கும் அர்த்தம் - ஸம்ஸார இத்யாதி. "பாட்டாயபலபாடி" என்றதுக்கவதாரிகை - அதுக்குமேலே இத்யாதி. கொண்டவடிமைதானேதென்ன - வாசிகமான இத்யாதி. "மாஞாலப் பிறப்பறுப்பான்" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் - கேசியை இத்யாதி. நம்விரோதியை - ஶேஷத்வவிரோதியான ஸ்வாதந்த்ர்யத்தை. இத்தால் பலிதம் - தன்னழகை இத்யாதி. அவ்வளவேயோ என்றது - ஶேஷத்வத்தினெல்லையிலே நிறுத்தினவளவேயோவென்றபடி. பலபாட்டானவற்றைப் பாடியென்று ஶப்தார்த்தம். திருவாய்மொழி பாடுவித்தது அதிஶயமோவென்ன - பாலேய்தமிழர் இத்யாதி. "பாட்டாயபலபாடி" என்றவநந்தரம் "பழவினைகள் பற்றறுத்து" என்றதுக்கு பாவம் - விரோதியை இத்யாதி. அதுவும் கிடக்கச்செய்தே - விரோதியும் கிடக்கச் செய்தேயென்றபடி. பாடுகை பழவினைகள் பற்றறுக்கைக்கு ஸாதநமோவென்ன - நாமடிமை

போகப்பெற்றபடி கண்டாயே. இவர்வினையறுக்கக் குடித்த வேப்பங்குடிநீர் இதுகாணும். "கேஶவம் வைத்யம்" (கேஶவம்வைத்யம்)- இவன் நெடுநாள்கூட ஈட்டின இது ஸர்வ ஶக்திபோக்கப்புக்கால் ஒருகாலே போகலாயிருக்குமிறே. [நாட்டாரோடியல்வொழிந்து]- * உண்டியேயுடையேயுகந்தோடும் இம்மண்டலத்தாரோடு தோற்றறப் பெற்றபடி கண்டாயே. "யானேயென்தனதே" என்று அஹங்கார மமகார வஶ்யராயிருக்கிறவர்களோடே ஸம்பந்தமறப்பெற்ருேம். "ஓ ஓ வுலகினதியல்வே" "இவையென்ன வுலகியற்கை" "கோவேவுலகங்காட்டேலே" என்னப்பண்ணினபடி கண்டாயே; "உங்களோடு எங்களிடையில்லை" என்றுகழிந்தவ ரிறே. [நாரணனைநண்ணினம்] - ஸோபாதிகபந்துக்களை விட்டவளவோ? நிருபாதிகபந்துவைப்பற்றவும் பெற்ருேம். விட்டவர்கள்தன்னை ஆகாராந்தரத்தாலே பற்றுகிருர்காணும். முக்தனுக்கு ததீயத்வாகாரத்தாலே அநுபாவ்யமாகிறதிறே இதுதான். ஸ்வயம்பாகந்தவிர்ந்து பிதாவோடே யொன்ருக ஜீவிப்பாரைப்போலே காணும் படுக்கைக்கீழே மஹாநிதிகிடக்கப் புறங்கால்வீங்கிச் சாவாரைப்போலேயிறே, நாராயணனுயிருக்கச்செய்தேயும் நண்ணுதிருந்தபடி [கேட்டாயே மடநெஞ்சே] - பெற்ற பேற்றின்கனத்தை யநுஸந்தித்து, வகாதது வகுத்ததென்று திமிர்த்திருக்கிருயோ? இத்தை அநுபவியாநின்ருயோ; "ஸௌமித்ரே புங்க்ஷ்வ" (ஸௌமித்ரேபுங்க்ஷ்வ) "வைதேஹி ரமஸே கச்சித்" (வைதேஹிரமஸேகச்சித்)போலே. 'மாஞாலப்பிறப்பறுப்பான்-கேசவ

செய்ய இத்யாதி. வ்யங்க்யோக்தி - இவர்வினை இத்யாதி. வினையைப்போக்குகைக்கு அவன் வைத்யனே(?)வென்ன - கேசவம் இத்யாதி. "ஶோசநீயே [illegible] பாபஸம்க்ஷீணே: । கேஶவம் வைத்யமாஸாத்ய துர்வ்யாதிர் நஶ்யதி" "வினைகள்" என்கிற பஹுவசநத்தைக்கடாக்ஷித்து, வினைகளெல்லாம் ஶங்கையிலே "கேஶவம் வைத்யம்" என்கிறதுக்கர்த்தம் - இவன் நெடுநாள் இத்யாதி. ஈட்டின - திரட்டின. "இயல்வு" என்றும், தொற்றுஎன்றும் ஸம்பந்தம். 'உண்டியே' இத்யாதிக்கு- அஶநாச்சாதநங்களையே ப்ரயோஜநமாகத்திரியும் இம்மண்டலத்தாரென்று ஶப்தார்த்தம். பெருமாள்திருமொழி. விவரணம் - யானேயென்தனதே இத்யாதி. ஆனுல் ஸம்பந்தமறப் பெற்ருரோவென்ன - ஓஓஉலகினது இத்யாதி. "இதொரு லோகத்தினுடைய ஸ்வபாவமே!" என்று அவர்கள் இழவு பொறுக்கமாட்டாமை "ஓ!" என்று கூப்பிடுகிருரென்றபடி. திருவாசிரியம். ப்ரமாணந்தரம் - உங்களோடு இத்யாதி. ஶப்தாந்தரத்தால் சொல்லாதே, "நாராயணன்" என்று விசேஷிக்கையாலே - ததீயத்வாகாரேணுத்தேஶ்யரென்று தோற்றுகிறதென்று விவக்ஷித்தருளிச்செய்கிருர் - விட்டவர்கள் இத்யாதி. அதாவது - ஶரீரஸம்பந்தித்வேந த்யஜித்தவர்களை ததீயத்வேந பற்றுகிருரென்றபடி. அப்படி ததீயத்வாகாரேணுத்தேஶ்யமாமோவென்ன - முக்தனுக்கு இத்யாதி. * நாட்டாரோடியல்வொழிந்து நாரணனை நண்ணினதுக்கு த்ருஷ்டாந்தம் - ஸ்வயம்பாகம் இத்யாதி. அதாவது - க்ருஹக்ஷேத்ராதிகளெல்லாம் தன்னதென்று தனியே போஜித்தவன், பிதாவுக்கு அநுகூலனுய் எல்லாம் அவனதென்றறிந்து அவனோடேகூட போஜிக்குமாபோலே, தன்னதென்றிருக்குமது தவிர்ந்து ததீயத்வேநாநுபவிக்கையென்றபடி. நாராயண ஶப்தத்துக்கு - ஸர்வாந்தர்யாமித்வத்தை விவக்ஷித்து, இப்படி ஸுலபனுயிருக்கிறவனைக் கிட்டாதிருக்கிறது இவ்விஷயத்தை யறியாமையாலே என்னுமத்தை ஸநிதர்ஶநமாக அருளிச்செய்கிருர். படுக்கைக்கீழே இத்யாதி. அருகேயிருக்கிற நெஞ்சை "கேட்டாயே" என்பானென்னென்ன - பெற்றபேற்றின் இத்யாதி. வகாதது வகுத்தது என்று-அப்ராப்தமானது ப்ராப்தமாய்த்ததென்று. உக்தத்துக்கு த்ருஷ்டாந்தம் - ஸௌமித்ரே இத்யாதி. "ஸௌமித்ரே புங்க்ஷ்வ போகாம்ஸ் த்வம் இஷ்டாந் ராஜ்யஸுகாநிவ । ஜீவிதஞ்ச ஹி ராஜ்யஞ்ச த்வதர்த்தமபிகாங்க்ஷயே" இத்யயோத்யா

னெம்பெருமானை - வாட்டாற்றானடிவணங்கி - பாட்டாயபலபாடிப்பழவினைகள்பற்றறுத்து நாட்டாரோடியல்வொழிந்து நாரணனைநண்ணினம் - கேட்டாயே மடநெஞ்சே' என்றந்வயம்.

மூன்றும் பாட்டு.

நண்ணினம்நாராயணனைநாமங்கள்பலசொல்லி
மண்ணுலகில்வளம்மிக்கவாட்டாற்றான்வந்துஇன்று
விண்ணுலகந்தருவானாய்விரைகின்றான்விதிவகையே
எண்ணினவாறாகா இக்கருமங்கள்என்னெஞ்சே!

ஆ —(நண்ணினம்.) - நாமங்கள் பலசொல்லிக்கொண்டபேக்ஷித்து நாராயணனை ப்ராபிக்கப்பெற்றோம்; அதின்மேலே, அவன்தானேவந்து நிர்ஹேதுகமாக நமக்குத் திருநாட்டைத் தருகையிலே விரையாநின்றான்; நாம் "இத்தைச்செய்" என்று சொல்லுமிதுவே தாழ்வாக விருக்கிறானத்தனை; ஆனபின்பு, இனி அவனை நண்ணினோமேயல்லோமோ? நெஞ்சே! இங்ஙனேயிருப்பதொரு ஸம்ருத்தி நமக்கு விளையக்கடவதாக ஸ்வப்நத்திலேதான் நினைவுண்டோ? என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், எம்பெருமான் நம்மை விஷயீகரிக்கவல்லனே யென்று நாமிருக்க, அவ்வளவன்றிக்கே, அதபஹிநிவிஷ்டனாய் நாம்விதித்தபடி செய்வானாயிராநின்றான். நெஞ்சே! எண்ணினவளவன்றிக்கே கருமங்கள் விழுப்படிஎன்? என்கிறார்.

[நண்ணினம் என்று தொடங்கி] - பலதிருநாமங்களைச் சொல்லி எம்பெருமானை அநுபவிக்கப்பெற்றோம். வளம் - ஸம்பத்து. [என்னெஞ்சே] - இஸ்ஸம்ருத்தியெல்லாம் உன்னுடைய ஆநுகூல்யத்தாலே வந்ததென்று கருத்து.

ப.—அநந்தரம், நாம் த்வரிக்கவேண்டும் கார்யத்திலே தான் மிகவும் த்வரியாநின்றான்; இது நாம் நினைத்தவளவன்றியே யிராநின்றதி! என்று ஹ்ருஷ்டராகிறார்.

என் நெஞ்சே - எனக்கு அநுபவோபகரணமான நெஞ்சே! (மென்மைக்கும் நீர்மைக்கும் போக்யதைக்கும் ப்ரகாசகமான), பலநாமங்கள் — பலதிருநாமங்களையும், சொல்லி -, நாராயணனை - (அத்திருநாமங்களுக்கெல்லாம் பிறப்பிடமான) நாராயணனென்கிற நாமத்தையுடைய நிருபாதிகபந்துவை, நண்ணினம் - கிட்டப்பெற்றோம்; மண்ணுலகில் - இந்தலோகத்திலே, வளம் - சீலசௌலப்யாதி குணஸம்பத்தினுடைய, மிக்க - மிகுதியையுடையனாய்க்கொண்டு, வாட்டாற்றான் - திருவாட்டாற்றிலே நிற்கிறவன், வந்து - (நான் சொல்லவேண்டாதபடி தானே உத்யுக்தனாய்க்கொண்டு) வந்து, இன்று -

---

காண்டே ராமஃ. தஸ்மிந்நேவ, "வைதேஹிர ஃவேஸத்ருஷ் ஷ்த்வா ... ஸ்ரீவிவியாநுபாவாநு ஃநாவாக்ஷ்யஸம்யதாநு." "கேசவன்" என்றதுக்கு - ப்ரஸஸ்தகேசனென்ற அர்த்தத்துக்குச்சேர அந்வயங்காட்டி, விரோதிநிரஸநசீலன் என்ற அர்த்தாநுகுணமாக அந்வயம் காட்டுகிறார் - மாஞாலப்பிறப்பறுப்பான் இத்யாதி. ஏகாந்வயமேயாய், "எம்பெருமானை" என்கிற ஐகாரம் அவ்யயமாக்கி அந்வயங்காட்டுகிறதே விசேஷமென்னவுமாம். பிறப்பறுப்பான் - பிறப்பறுக்கைக்காக என்றபடி.

(உ)

(நம்பக்கல் முன்பொரு ஹேதுவின்றியேயிருக்க) இன்று, விண்ணுலகம் - பரமபதத்தை, விதிவகையே - நம்மநுமதிகொண்டு, தருவான் ஆய் - தருவானாக, விரைகின்றான் - விரையாநின்றான்; இக்கருமங்கள் - இக்கார்யங்கள், எண்ணினவாறு ஆகா - (நாம் அவன் பாடே செல்லவும் நாம் அர்த்திக்கவும் நாம் அதிலே த்வரிக்கவும் அவன் நினைவுபார்க்கவும்) எண்ணியிருந்த ப்ரகாரமன்றியே, தான் வருகையும் அபேக்ஷிக்கையும் த்வரிக்கையும் நினைவுதான் பார்க்கையுமாக ஆய்விட்டன.

இ.—மூன்றாம்பாட்டில், நெஞ்சே, நம்மை விஷயீகரிக்கவல்லனே என்று நாமிருக்க, அவ்வளவன்றிக்கே ஃபலிக்கிறபடியென்? என்கிறார்.

[நாராயணனை நாமங்கள்பலசொல்லி - நண்ணினம்] - கிட்டி அநுபவிக்கப் பெற்றோம். "விண்ணுலகம்" என்கிறபேற்றுக்குச் சொல்லில், மோக்ஷத்தில் விநியோகமான திருமந்த்ரமே அமையும்; "ஸர்வாய ஸர்வஸாயக:" என்கிறபடியே ப்ரயோஜநாந்தரங்களுக்கும் அதுவே அமையும்; ப்ரீதிப்ரேரிக்க அநுபவத்துக்காகச் சொல்லுகையாலே எல்லாத்திருநாமங்களும் வேணும். [மண்ணுலகில் இத்யாதி] - பரமபதத்திற்காட்டில் ஸம்ருத்திமிக்கிருந்துள்ள திருவாட்டாற்றை நிரூபகமாகவுடையவன். [வளம்] - ஸம்பத்து. ரக்ஷ்யம் குறைவற்ற தேஶமாகையாலே, ரக்ஷகனுக்கு ஸம்பத்துமிக்கிருக்கும் இங்கு; கைங்கர்யத்துக்கு விச்சேதமில்லாமையாலே ஶேஷபூதனுக்கு ஸம்பத்து மிக்கிருக்கும் அங்கு. [வந்து] - நாம் செல்லவேண்டும் தேசமடங்கத் தானே வந்து. [இன்று] - நம்பக்கல் இதுக்கு அடியாயிருப்பதொன்று நென்னேற்றில்லை; இன்று இங்ஙனே விடியக்கண்டதித்தனை. [விண்ணுலகம் தருவானாய்] - பரமபதத்திலே செல்லப்பெறுகையன்றிக்கே, "ஆண்மின்கள் வானகம்" என்கிற பொதுவுமன்றிக்கே, த்ரிபாத் விபூதியையும் நமக்கே தருவானாயிராநின்றான். [விரைகின்றான்] - ஸாபேக்ஷரான நாம் ஆறியிருக்க, நிரபேக்ஷனானவன் பதறாநின்றான். முன்பு இவர் விரைந்த போது ஒருகார்யார்த்தமாக வைத்தானாய், அது தலைக்கட்டினவாறே, விஶ்வரூபமான விபூதி இவர்க்குத்தரமன்று என்று பதறாநின்றான். தொடங்கின அப்போதே தலைக்கட்டவல்ல ஸர்வஶக்திக்குப் பதறவேண்டுகிறதென் என்னில்? - [விதிவகையே] - நாம் வியிக்கத்தருவானாக வேண்டியிராநின்றான். [எண்ணினவாறாகா] - நாம் "இவன் விரையவேணும்" என்று எண்ணினோமோ? [இக்கருமங்கள்] - பகவத்விஷயத்தில் ஃபலிக்கும்படி. புறப்பு ஒருவனை ஒன்று அர்த்தித்தால் பேற்றளவும் இவன்தானே அர்த்திக்கவேணும்; இவ்விஷயத்தில், இவன் ஒருகால் அர்த்தித்துவிட்டால் பின்பு தன் பேறாகத்தானே அர்த்தித்துக்கொடுக்கும். [என்னெஞ்சே] - இஸ்ஸம்ருத்தியெல்லாம் நீ என்வழியே போருகையாலேயிறே ஸித்தித்தது.

ஈடு.—மூன்றாம்பாட்டு. நெஞ்சே! நம்மை விஷயீகரிக்கவல்லனே என்று நாமிருக்க, அவ்வளவன்றிக்கே ஃபலிக்கிறபடியென்? என்கிறார்.

[நாராயணனைநாமங்கள்பலசொல்லி - நண்ணினம்] - ப்ராப்தனான ஸ்வாமியைக் கிட்டப்பெற்றோம். [நாமங்கள்பலசொல்லி] - "**நமோ நாராயணாயேதி**

மூன்றாம்பாட்டு.—நண்ணினம் இத்யாதி. "எண்ணினவாறாகா" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - நெஞ்சே இத்யாதி.

தத்புருஷஸமாஸத்தை விவக்ஷித்து, "நாராயணன்" என்றதுக்கர்த்தம் - ப்ராப்தனான் இத்யாதி. ஒன்றமையாதோ, பலவேணுமோவென்ன - நமோநாராயணாய இத்யாதி. "கிம் தத்ரு

த்ரஸ்ஸர்வார்த்தஸாதக:" (நமோநாராயணாயேதி மந்த்ரஸ்ஸர்வார்த்தஸாதக:) என்று இதுவேயமையுமிறே ஃலாபிஸந்தி பண்ணில். ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு திருநாமங்கள் பலவற்றையும் சொல்லி. [மண்ணுலகில் இத்யாதி] - பரமபதத்திற்காட்டில் ஸம்ருத்தி மிக்கிருந்துள்ள திருவாட்டாற்றைத் தனக்கு நிரூபகமாகவுடையவன். [வளம்] - ஸம்பத்து. ரக்ஷ்யவர்க்கம் குறைவற்ற தேசமாகையாலே ரக்ஷகனுக்கு ஸம்பத்து மிக்கிருக்கும் இங்கு; கைங்கர்யத்துக்கு விச்சேதமில்லாமையாலே ஶேஷபூதனுக்கு ஸம்பத்து மிக்கிருக்கும் அங்கு. [வந்து] - நாம்செல்லவேண்டும் தேசமடங்கத் தானே வந்து. [இன்று] - நம்பக்கல் இதுக்கடியாயிருப்பதொன்று * நென்னேற்றில்லை; இன்றிங்ஙனே விடியக்கண்டதித்தனை. [விண்ணுலகம் தருவானாய்] - அங்கே ஒருகுடியிருப்பு மாத்ரமே கொடுத்துவிடுவானாயிருக்கிறிலன். "வானவர்நாடு" "ஆண்மின்கள்வானகம்" என்கிற பொதுவையறுத்து நமக்கே தருவானாக த்வரியாநின்றான். ஆவதழிவதாகிற விபூதி இவர்க்குத் தரமன்றென்று காணும் அவன் நினைவு. இவர்க்கே கொடுக்கையாவது - இவர் ப்ரார்த்தித்தபடியே * வழுவிலாவடிமையைக் கொடுக்கையிறே. [விரைகின்றான்] - நம்மைப்போல் ஆறியிருக்கிறிலன். "சிறப்பில்வீடு - இறப்பிலெய்துக வெய்தற்க" என்றுஒரு ஆற்றலுண்டிறே நமக்கு. தான் முற்பாடனாய்ச் சரக்குக்கட்டிப் புறப்பட்டு நிற்பது, இவர் தாழ்த்தாரென்று மீளாப் போய்ப்புக்கு "ஆழ்வீர்! போரீரோபோரீரோ" என்று பதறாநின்றான். ஒரு கார்யப்பாட்டாலே வைத்தானாய், அக்கார்யம் முடியுமளவானவாறே த்வரியாநின்றான். ஸர்வஶக்தியான தனக்கும் க்ரமப்ராப்தி பற்றாதபடியாய்த்து த்வரையிருக்கிறபடி. ஸங்கல்பித்தகார்யம் செய்யுமளவும் பொறுக்கிறிலனாய்த்து. இப்படி செய்யநினையாநின்றானாகில் நினைக்கிறான்: தான் ஸர்வஶக்தியான ஸர்வேஶ்வரனாகில் பின்னை அங்ஙன் விரையவேண்டுகிறதென்னென்னில்,—[விதிவகையே]-நாம்சொல்லப்பரமபதம்தந்தானாகவேணுமென்றிராநின்றான். "எம்மாவீட்டுத்திறமும்செப்பம்" என்றாரே, அதுதவிர்ந்து "உண்டிட்டாயினியுண்டொழியாய்," "திருவாணைநின்னாணை" என்று தடுத்தும் வளைத்தும் செய்தால் பின்பு

ஸம்ஸாரிணாம் கிம் தத் ஸம்ஸாரிவிமோசக:। நமோநாராயணாயேதி மந்த்ரஸ்ஸர்வார்த்தஸாதக:." "மிக்க" என்றதுக்கர்த்தம் - பரமபதத்தில் இத்யாதி. மண்ணுலகிலே பரமபதத்திலுங்காட்டில் ஸம்பத்துமிக்கிருந்துள்ள வாட்டாற்றையுடையவனென்று பதார்த்தம். பரமபதத்திற்காட்டில் மண்ணுலகிலே ஸம்பத்து மிகக்கூடுமோவென்ன - ரக்ஷ்யவர்க்கம் இத்யாதி வாக்யத்வயம். "வந்து" என்றதுக்கு பாவம் - நாம்செல்ல. "இன்று" என்றதுக்குபாவம் - நம்பக்கல் இத்யாதி. நென்னேற்று - நேற்றுமுதல்நாள். "விண்ணுலகம்" என்றதுக்கு பாவம் - அங்கே இத்யாதி. ஃலிதம் - வானவர் இத்யாதி. இவ்விபூதியையும் கொடாதொழிவானென்னென்ன - ஆவதழிவது இத்யாதி. இவர்க்கே விண்ணுலகம் தருகையாவதேதென்ன - இவர்க்கே இத்யாதி. "விரைகின்றான்" என்றதுக்கு பாவம் - நம்மைப்போல் இத்யாதி. இவர் அப்படி யாறியிருந்தாரோ? என்ன - சிறப்பில் இத்யாதி. ஆற்றல் - பொறை. விரைகிறதின் சரமாவதி - தான் முற்பாடனாய் இத்யாதி. இத்தனைநாளுமின்றிக்கே இப்போது த்வரிப்பானென்னென்ன - ஒருகார்ய இத்யாதி. கார்யப்பாட்டாலே - கார்யவஶாத் என்றபடி. கார்யமாவது - திருவாய்மொழி தலைக்கட்டுகை. க்ரமேண வருகிறாரென்றிருக்க வொண்ணாதோவென்ன - ஸர்வஶக்தி இத்யாதி. "விரைகின்றான்" என்றவர்த்தயாநார்த்தம் - ஸங்கல்பித்த இத்யாதி. திருவாய்மொழி பாடுவிக்கவேணுமென்று ஸங்கல்பித்தகார்யமென்றபடி. விரையவேண்டுகிறதேன்என்னில் - செய்கிறதுக்கென்னென்னில்என்றபடி. நான் சொல்லவென்கைக்கு இவர் "வேண்டா" என்றாரோவென்ன - எம்மாவீடு இத்யாதி; இது, வேண்டா என்றமாத்ரத்துக்கு ப்ரமாணம். "விரைகின்றான்" என்ற ஈடுபாட்

* நென்னெல்என்று பாடாந்தரம்.

கோடுப்பதாக இராநின்றான். [விதிவகையே - விண்ணுலகந்தருவானாய் விரைகின்றான்] - இவர்க்கு ருசிபிறப்பதற்கு முன்பு தான் எதிர்சூழல்புக்கு விரைந்துதிரிந்தான்; ருசிபிறந்த பின்பு இவர் விரையத்தொடங்கினார்; அதுகண்டு அவனுக்கு இவரளவல்லாதபடி விரைதல் மிக்கது; அதுகண்டு இவர் விஸ்மயப்படுகிறார். இவனுக்கு ருசிபிறக்குமளவுமிறே அவன் ஆறியிருப்பது? இவனுக்கு அதுண்டானால் பின்னை பேற்றளவுஞ்செல்ல விரைவான் அவனாய்த்து. உடையவனிறே உடைமைக்கு விரைவான்? [எண்ணினவாறாகா] - ''இந்நின்ற நீர்மை இனியாமுறாமை'' என்று இவ்வளவன்றே நாம் எண்ணிற்று? அவனை ''விரைய வேணும்'' என்றெண்ணினோமோ? [இக்கருமங்கள்] - ஸம்பத்விஷயத்தில் தாந்தாம் எண்ணியிருந்தவளவல்லகாண் கார்யம் ஃபலிக்கும்படி. லௌகிகரிலே ''சிலரை என்கார்யத்துக்கு நீ கடவை'' என்று சொன்னாலும், பின்னையும் பேற்றளவுஞ்செல்லத் தனக்கே ப்ரவர்த்திக்கவேணுமே; அப்படியேயன்றித்திராதே கோள்ளாய் இவ்விஷயத்திலும். [என்னெஞ்சே] - அவன் முறையிலே விரைய நாம்பெற்றது, நீ முறையிலே நிற்கையன்றோ? பந்தஹேதுவாகை தவிர்ந்து மோக்ஷஹேதுவாகையன்றோ? உன்னாலேவந்த ஸம்ருத்தியன்றோ இதெல்லாம்? (௩)

நான்காம் பாட்டு.

என்னெஞ்சத்துள்ளிருந்து இங்கிருந்தமிழ்நூலிவைமொழிந்து
வன்னெஞ்சத்திரணியனைமார்விடந்தவாட்டாற்றான்
மன்னஞ்சப்பாரதத்துப்பாண்டவர்க்காப்படைதொட்டான்
நல்நெஞ்சே! நம்பெருமான்நமக்கருள்தான்செய்வானே.

ஆ.—(என்னெஞ்சத்துள்.) - ஸகாதி பரமயோக்யாங்கஸஅபரிச்சேத்யமான திருநாட்டை நம்முடைய சிறுமைபாராதே நமக்குத்தந்தருளுமோவென்னில்;— என்னுடைய நிகர்ஷமும் சிறுமையும்பாராதே என்னெஞ்சுள் புகுந்திருந்து என்னை யுபகரணமாகக்கொண்டு திருவாய்மொழியைச்சொல்லி ஆஸ்ரிதவிரோதிகளான ஹிரண்ய துர்யோதநாதி நிரஸநத்தையும் எனக்கு போக்யமாகச் செய்தருளின நிரவதிக ஸௌசீல்ய காருண்ய ஔதார்யாதி குணங்களையுடையனாயிருந்தவன், இனித் திருநாட்டை

டுக்கு ஸாவம் - இவர்க்குருசி இத்யாதி. அவனறியிருக்க இவரன்றோ த்வரிக்க ப்ராப்தமென்ன - இவனுக்கு இத்யாதி. அதுக்கடியேதென்ன - உடையவன் இத்யாதி. எண்ணினவாறாகா - எண்ணினப்ரகார மன்றிக்கே யிருந்தன. நாம் எண்ணியிருந்த வளவல்லவென்றபடி. எண்ணுக்கு மேலே ஃபலிக்குமென்றுகருத்து. ''எண்ணினவாறாகா'' என்றதால் ஃபலிதமான ஸார்த்த ஸாவம்- இந்நின்ற இத்யாதி. ''கருமங்கள்'' என்ற பஹுவசநத்துக்கு ஸாவம் - ஸம்பத்விஷயத்தில் இத்யாதி. இக் கருமங்கள் - இவ்விஷயத்தில் ஃபலிக்கும் கார்யங்களென்றபடி. ''இ'' என்றதுக்கு ஸாவம் - லௌகிகரிலே இத்யாதி. நெஞ்சென்னாதே ''என்னெஞ்சு'' என்றதுக்கு ஸாவம் - அவன் முறையிலே இத்யாதி. உக்தார்த்த விவரணம் - பந்தஹேதுவாகை இத்யாதி. இதுக்கு ''மந ஏவ மநுஷ்யாணாம்'' என்றதிலே நோக்கு. 'நாராயணனை நாமங்கள் பலசொல்லி - நண்ணினம், மண்ணுலகில்' என்றுதொடங்கி, 'இன்று - விதிவகையே - விண்ணுலகந்தருவானாய் விரைகின்றான், என்னெஞ்சே! இக்கருமங்கள் - எண்ணினவாறாகா' இத்யந்வய:. (௩)

நமக்குத் தந்தருளுமென்னுமிடம் சொல்லவேண்டுமோ? என்னைக்கொண்டு திருவாய்மொழியைச் சொல்லுவிக்கையாகிற இந்த ஸம்ருத்திபிற்காட்டிலும் சீரியதோ திருநாடென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், நம்விஷயத்தில் இத்தனைஹவ்யனைக ஸம்ஹவிக்குமோ என்னில்; ஆஶ்ரிதவிஷயத்தில் எல்லாம் செய்வானைபின்பு நாம் அபேக்ஷித்ததெல்லாம் செய்யுமென்கிறார்.

[என்னெஞ்சத்து என்றுதொடங்கி] - ஹ்ருதயத்திலேயிருந்து, என்னைஉபகரணமாகக்கொண்டு இஸ்ஸம்ஸாரத்தாலே இப்படி விலக்ஷணமான திருவாய்மொழியையருளிச்செய்து, ஆஶ்ரிதனை ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்காக வலியநெஞ்சை யுடையனை ஹிரண்யனுடைய மார்வைப்பிளந்த திருவாட்டாற்றில் எம்பெருமான். [மன்னஞ்ச என்றுமேலுக்கு] - பீஷ்மாதி ராஜாக்கள் அஞ்சும்படி பாரதஸமரத்திலே ஆயுயம் தொடேன் என்று ப்ரதிஜ்ஞைபண்ணி வைத்து ஆஶ்ரிதரான பாண்டவர்களுக்காக அஸத்யப்ரதிஜ்ஞனாய் ஆயுதத்தை எடுத்தான் எம்பெருமான் என்றால் உனக்கும்நெஞ்சே! நமக்கு நாதனானதான் நம்அபேக்ஷிதங்களெல்லாம் செய்யும்.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதரக்ஷணத்தில் பக்ஷபாதியானவன் நமக்கு நிரவதிகோபகாரகனாயிராநின்றானென்கிறார்.

நல்நெஞ்சே - பகவத்விஷயமென்றால் ப்ரவணமானநெஞ்சே! வன்னெஞ்சத்து-(ப்ராவண்யமில்லாதவளவன்றியே ப்ரத்வேஷதூஷிஷ்டமாம்படி)வலியநெஞ்சையுடைய, இரணியனை - ஹிரண்யனை, (நோய்நின்றவிடம் குட்டமிட்டுப் பரிஹரிப்பாரைப் போலே), மார்விடந்த - அவன் நெஞ்சிருக்கிறமார்பை இடந்து, (ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாக), வாட்டாற்றான் - திருவாட்டாற்றிலே ஸந்நிஹிதனாய், மன் - ராஜாக்களெல்லாரும், அஞ்ச - அஞ்சும்படி, பாரதத்து - பாரதஸமரத்திலே, பாண்டவர்க்கு ஆ - பாண்டவர்களுக்காக,படைதொட்டான்-(ஆயுதமெடேனென்று) ஆயுதமெடுத்தபக்ஷபாதியாய், நம்பெருமான்-(இவ்வபதாநங்களாலே) நமக்கு ஸ்வாமியானவன், என்நெஞ்சத்து-(அந்யபரமான) என் ஹ்ருதயத்தைவஶீகரித்து, உள்ளிருந்து - உள்ளே பொருந்தியிருந்து, இங்கு - இவ்விருப்பிலே, இரும் - (அத்யந்தவிலக்ஷணமாம்படி) பெரிய, தமிழ்-த்ரமிடமயமான, நூல் - ஶாஸ்த்ரரூபமாய், இவை - அபரோக்ஷஸித்தமான ஹேதக்யதையை யுடைத்தான இத்திருவாய்மொழிதன்னை, மொழிந்து - தானே ப்ரவர்த்தகனையருளிச்செய்து, (அவ்வளவில்நில்லாதே) நமக்கு, அருள் - அதிஶயிதோபகாரங்களை, தான் செய்வானே - பண்ணுவானாகத் தானேபாரியாநின்றான்.

இ.—நாலாம்பாட்டில், ஸர்வேஶ்வரன் தான் நாம் விதித்த இது செய்வதாகச்சொன்ன இது ஸம்ஹவிக்குமோவென்னில்; அவனுடைய ஆஶ்ரிதவாத்ஸல்யத்தை அநுஸந்திததால் கூடாததில்லை என்கிறார்.

[என்னெஞ்சத்து] - ஸம்ஸாரத்திலே விஷயாந்தரப்ரவணமான நெஞ்சென்று இவர் இறாயாநின்றார்; இவர் "என்னது" என்றஇதுவே ஹேதுவாக அவன்மேல்விழாநின்றான். இவர் அயோக்யமென்று அகல, அதுவே ஹேதுவாக அவன்புகுரநில்லாநின்றான். [உள்] - கார்யார்த்தமாக இருக்கையன்றிக்கே தன்விடாய்தோற்ற உள்ளே புகுந்தான். [இருந்து] - புறம்பு ஒருவிஷயதியுண்டென்று நினையாதே ஸ்யாவரப்ர

திஷ்ட்டையா யிராநின்றான். [இங்கு] - பரமபதத்தில் பரிமாற்றத்தை ஸம்ஸாரத்திலே உண்டாக்கினான். [இருந்தமிழ்] - விலக்ஷணமான தமிழ். [நூல்] - பின்பு லக்ஷணங் கட்டுவார்க்கும் இதுவே கொண்டு செய்யவேண்டும்படியிருக்கை. இவர் ஆற்றாமையாலே சொன்ன இத்தை அவன் லக்ஷணோபேதமாக்கினானாய்த்து. [இவை] - தமக்கும் கொண்டாட வேண்டியிருக்குமிவை. [மொழிந்து] - பாடினவனாய்த் தாம் கற்றுச் சொன்னாரோபாதியாக நினைத்திருக்கிறார். [வன்னெஞ்சம்] - வைவத்விஷயமென்றால் அஸஹ்யமான நெஞ்சு. [மார்விடந்த] - துர்மானங்கிடந்தவிடத்தைக் குட்டமிட்டழிக்கை. முன்பு தமப்பன் பகையாகச் சிறுக்கனுக்குஉதவினவன் நமக்குஉதவானோ என்றுகருத்து. [வாட்டாற்றான்] - பிற்பாடர்க்கு உதவுகைக்காகத் திருவாட்டாற்றிலே வர்த்திக்கிறவன். [மன்னஞ்ச இத்யாதி] - ஸிம்ஹத்தைக்கண்ட நரிபோலே பீஷ்மாதிராஜலோகங்கள் அஞ்ச, பாரதஸமரத்திலே "க்ருஷ்ணாஶ்ரயா: க்ருஷ்ணபலா:" என்கிறவர்களுக்குக் கைபாளாய். [படைதொட்டான்] - படையெடுத்தான். படைவிட்டானென்னப் பெற்றதில்லை. ஸங்கல்பத்தைக் குலைந்தவித்தனை; கார்யங்கொள்ளப் பெற்றிலன். ஸத்யஸங்கல்பன் என்கிறது ஆஶ்ரிதரை யொழிந்தவிடத்திலேயிறே. விடாவிட்டதென்னென்னில்; அர்ஜுநன்தான் "நீ ஆயுதம்விடில் எனக்கு அவத்யம்" என்கையாலே. [நல்நெஞ்சே] - ஆஶ்ரிதபக்ஷபாதத்தைக் கேட்டால் உகக்கும் நெஞ்சே! [நம்பெருமான்] - நமக்கு ஸ்வாமியானவன். [நமக்கு அருள்தான் செய்வானே] - நமக்கு அவ்வருளைப்பண்ணியேவிடும். "விண்ணுலகந்தருவானாய் விரைகின்றான்" என்கிறபேற்றைப் பண்ணியேவிடும்; இது நிஶ்சிதம். இசைவுக்கு நீயுண்டு, இசைவைக்கொண்டு கார்யஞ்செய்கைக்கு அவனோடு ஸம்பந்தமுண்டு; நம்பேற்றுக்குக் குறைவுண்டோ?

ஈடு.—நாலாம்பாட்டு. ஸர்வேஶ்வரன் நாம் விதித்தபடியே செய்வானாகச் சொன்னவிது ஸம்பவிக்குமோவென்னில்; – அவனுடைய ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தை யநுஸந்தித்தால் கூடாததில்லைகாண் என்கிறார்.

[என்னெஞ்சத்து] - அநாதிகாலம் ஸம்ஸாரத்திலே தன்னையொழிந்த ஶப்தாதி விஷயங்களை யுகந்துபோந்ததென்றாய்த்து இவர் 'என்னெஞ்சு' என்று இறாய்க்கிறது. இதில் குணதோஷங்கள் கிடந்தபடி கிடக்க, இவர் "என்னது" என்றதுவே ஹேதுவாக அவன் மேல்விழாநின்றான். இவர் என்னெஞ்சென்று புறம்பே கால்வாங்காநின்றார்; அவன் அதுவே ஹேதுவாக உள்ளேபோக அடியிடாநின்றான். [உள்] - விடாயர் மேலில் நீரை நீக்கி உள்ளே ஆழமுழுகிக்கிடக்குமாபோலே, நெஞ்சினுள்ளே புகுந்தான். [இருந்து] - தனக்குஅவ்வருகு ஒருவிஹாதியுண்டாகவும், அங்கேபோவானாகவும் நினைத்திருக்கிறிலன். ஸ்த்தாவரப்ரதிஷ்ட்டையாக விருந்து. [இங்கு] - அங்கில்லாத ஸம்பத்தையும் இங்கேயுண்

நாலாம்பாட்டு.—என்னெஞ்சத்துள் இத்யாதி. "வன்னெஞ்சத்து" என்று தொடங்கி "படைதொட்டான்" என்னுமளவும்கடாக்ஷித்தவதாரிகை - ஸர்வேஶ்வரன் இத்யாதி. ஸர்வேஶ்வரன் என்றது - நிரங்குஶ ஸ்வதந்த்ரனென்றபடி.

"என்" என்றதுக்கு பாவம் - அநாதி இத்யாதி. இப்படிப்பட்ட இதிலே யவனை மேல்விழுகைக்கு ஹேதுவேதென்ன, வ்யாமோஹமென்கிறார் - இதின் குணதோஷங்கள் இத்யாதி. "உள்ளிருந்து" என்றத்தைப்பற்ற - மேல்விழாநின்றான் என்றது. விவரணம் - இவர்என்னெஞ்சென்று இத்யாதி. நெஞ்சத்தென்னாதே, "உள்" என்றதுக்கு பாவம் - விடாயர் இத்யாதி. "இருந்து" என்றதுக்கு பாவம் - தனக்கு இத்யாதி. "இங்கு" என்று - நித்யவிபூதியை வ்யா

டாக்கினன். [இருந்தமிழ்] - அவ்விஹூதிக்கும் அடங்காதபடியாய்த்து இவற்றின்நன்மை. "கேட்டாரார்" என்னக்கடவதிறே. [நூல்] - பின்புள்ளார்க்கும் இதுகொண்டு லக்ஷணம் கட்டலாம்படியாய்த்து இவையிருப்பது. இவர் ஆற்றுமையாலே சொல்லச் செய்தேயும், அது ஸர்வலக்ஷணோபேதமாம்படி சொல்லுவித்தானாய்த்து. [இவை] - "இன்னதுசெய்தான்" என்னப்புக்கு நடுவே 'இவை' என்று அநுஸந்திக்கிறாராய்த்து. [மொழிந்து] - ஒருவன் பாடின கவியைக் கற்றுச் சொன்னவனும், தனக்கு அதிலே குவாலாக அந்வயமுண்டாக அபிமாநித்திருக்கும்; அதுவும் நினைத்திருக்கிறிலர்காணும் இவர். "என் முன் சொல்லும்" என்றவற்றையும் ஒன்றாக நினைத்திருக்கிறிலர். [வன்னெஞ்சத்து இத்யாதி] - ஹுபகவத்விஷயமென்றால் அதிர்ந்திருக்கும்படிதிண்ணிதான நெஞ்சையுடைய ஹிரண்யனுடைய முருட்டுநெஞ்சை அநாயாஸேந இடந்த திருவாட்டாற்றான். முன்பு தம்பன் பகையாகச் சிறுக்கனுக்கு உதவினவன், நமக்கு உதவானோ என்று கருத்து. துர்மாநம் கிடந்த விடத்தைக் குட்டமிட்டு இடந்தான் காணும். [வாட்டாற்றான்] - பிற்பாடர்க்கு உதவுகைக்காகத் திருவாட்டாற்றிலே வர்த்திக்கிறவன். அவன்நெஞ்சிற் குறைதீர்த்தாற்போலே நம்நெஞ்சிற் குறை தீர்க்கவந்து நிற்கிறவன். [மன்னஞ்ச] - அதிரதமஹாரதரென்று பேர்பெற்றவர்களடங்கலும், ஸிம்ஹத்தைக்கண்ட நரிபோலே குலையும்படியாக. ராஜலோகமடங்கலும் அஞ்சும்படியாக. [பாண்டவர்க்காய்] - "இன்னார்தூதன்" என்னும்படி அவர்களுக்குக் கையாளாய். [படைதொட்டான்] - படையெடுத்தான். படைவிட்டானென்னப் பெற்றதில்லை: ஸங்கல்பத்தைக் குலைத்தானித்தனையே; கார்யங்கொள்ளப் பெற்றதில்லை. ஸத்யஸங்கல்பன் என்றது,-ஆஸ்ரிதரை யொழிந்தவிடத்திலிறே; விடாவிட்டது, அர்ஜுநன் "நீ ஆயுதம்விடுகை எனக்கு அவமானம்" என்கையாலே. ஆகில் தவிரலா

வா . . ‘ரார் - அங்கில்லாத இத்யாதி. ஸம்பத்து என்றது - * இருந்தமிழ்நூலை. "—" என்றதுக்கு ஹாவம் - அவ்விபூதிக்கும் இத்யாதி. இருமை - பெருமை. அதாவது - வைலக்ஷண்யாதிக்யமென்றபடி. அப்படி யிருக்குமோவென்ன - கேட்டாரார் இத்யாதி. "நூல்" என்றதுக்கு ஹாவம் - பின்புள்ளார்க்கும் இத்யாதி. நூல் - ஶாஸ்த்ரம். ஆற்றாமைக்குப் பாசுரமிட்டுச் சொன்னவை, லக்ஷணவத்தாமோவென்ன - இவராற்றமை இத்யாதி. "தமிழ் நூல் மொழிந்து" என்னாதே, நடுவே "இவை" என்றதுக்கு ஹாவம் - இன்னது இத்யாதி. மொழிவித்து என்னாதே "மொழிந்து" என்றதுக்குஹாவம் - ஒருவன் இத்யாதி. குவாலாக - அதிகமாக. கீழே "என்முன்சொல்லும்" என்று ப்ரயோஜநகர்த்தாவாகச் சொல்லிலையோவென்ன - என்முன்சொல்லும் இத்யாதி. இதுக்கு ஹார்த்தஹாவம் - முன்பு இத்யாதி. "மார்விடந்த" என்றதுக்கு ஹாவம் - துர்மாநம் இத்யாதி. குட்டமிட்டு - பள்ளமெடுத்து. "மார்விடந்தவாட்டாற்றான்" என்று கூட்டி ஹாவம் - அவன்நெஞ்சில் இத்யாதி. அவன்நெஞ்சிற்குறை - ஹிரண்யன் நெஞ்சில் காலுஷ்யமென்னுதல், ப்ரஹ்லாதன்நெஞ்சில் குறையென்னுதல். நம்நெஞ்சில்குறை யென்றது - பாமபக்ஷத்திலே நம்மைக் கொடுபோகாமையாலே "ஏகமெண்ணும்" என்னும் குறையென்றபடி. "மன்" என்று - ஜாதிவாசி. ராஜலோகமடங்கலுமென்றபடி. "மன்னஞ்ச" என்றதுக்கு ஹாவம் - அதிரத இத்யாதி. "ஆய்" என்றதுக்கு ஹாவம் - இன்னார்தூதன் இத்யாதி. திருமொழி இரண்டாம் பத்து இரண்டாந்திருமொழி மூன்றாம்பாட்டு, "முன்னோர்தூது" இத்யாதி. இதுக்குஹாவம் - படைவிட்டான் இத்யாதி. படை - திருவாழி. விவரணம் - ஸங்கல்பத்தை இத்யாதி. ஆனால் ஸத்யஸங்கல்பத்வம் குலையாதோவென்ன - ஸத்யஸங்கல்பன் இத்யாதி. எடுத்தால் விடாதொழிவானென்னென்ன-விடாவிட்டது இத்யாதி. அப்படி ஆஸ்ரித பாதந்த்ரனோவென்ன - மன்னர்மறுக இத்யாதி. பெரியாழ்வார் திருமொழி நாலாம்பத்து இரண்டாந்திருமொழி ஏழாம்பாட்டு. இதுக்கு ஹாவம் - அர்ஜுநன் இத்யாதி. மேலுக்கவதாரிகை - அவனுடைய இத்யாதி. "நன்னெஞ்சே, நம்

காதோவென்று தவிர்ந்தான். (மன்னர்மறுகஇத்யாதி) - அர்ஜுநன்குதிரைகளினைத்தவளவிலே,கடிநஸ்த்தலத்திலே நீர் நரம்புஅறியுமவனுகையாலேவாருணாஸ்த்ரத்தைவிட்டு அங்கே நீரையுண்டாக்கிக் குதிரைகளை விட்டு நீரூட்டிப் புரட்டி எழுப்பிக்கொடுபோந்து பூட்டிக்கொண்டுவந்து முன்னேநிறுத்தின இத்தைக்கண்ட ராஜலோகமடைய, "இவனுடைய பக்ஷபாத மிருந்தபடியால் நாம் இவனைவெல்லுகையென்று ஒன்றுஉண்டோ?" என்று குடல் மறுகிற்றாய்த்து. (முன்அங்குநின்று மோழையெழுவித்த) - எல்லாருங்காணக் குமிழி நீரேழும்படி பண்ணினான். அவனுடைய ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்தை யநுஸந்தித்தவாறே நெஞ்சுஅநுகூலித்தது. [நன்னெஞ்சேஇத்யாதி] -அல்லே னென்னுமைக்கு நீயுண்டு, ஆவோமென்கைக்கு அவனுண்டு, அவனை ப்ரேரிக்கைக்கு க்ருபையுண்டு. [நம்பெருமான்]-நமக்கு ஸ்வாமியான தான், நமக்கு அருள்பண்ணியேவிடும். "விண்ணுலகந்தருவானாய்விரைகின்றான்" என்கிறபேற்றைப் பண்ணியேவிடும்; இது நிஸ்சிதம். இசைகைக்கு நீயுண்டு, இசைவிப்பிக்கைக்கு அவனுண்டு, இசைவைக் கொண்டு கார்யம் செய்கைக்கு ஸம்பந்தமுண்டு; இனி நம்பேற்றுக்குக் குறையுண்டோ? (௪)

ஐந்தாம் பாட்டு.

வானேறவழிதந்தவாட்டாற்றான்பணிவகையே
நான்ஏறப்பெறுகின்றேன்நரகத்தைநகுநெஞ்சே!
தேனேறுமலர்த்துளவம்திகழ்பாதன்செழும்பறவை
தானேறித்‡திரிவானதாளிணைஎன்தலைமேலே.

ஆ —(வானேற.) - திருநாடுபெறவேணுமென்று அபேக்ஷையுடையார் எல்லார்க்கும் வானேறுகைக்கீடான உபாயத்தைக் கொடுத்தருளினான்; அவனுடைய ப்ரஸாதத்தாலே, தேனேறுமலர்த்துளவத்தினாலே யலங்க்ருதமாயிருந்த அவனுடைய தாளிணை பெரியதிருவடிமேல் ஏறுமாபோலே என்தலைமேலே நான் ஏறப்பெறுகின்றேன்; இனி, அவனைப்பிரிந்திருக்கையாகிற நரகத்தை வென்றிருப்பேனென்கிறார்.

ஓ.—அஞ்சாம்பாட்டில், அவன் ப்ரஸாதத்தாலே ஆஸ்ரிதர்க்குத் திருநாட்டுக்குப் போகைக்குவைத்த அர்ச்சிராதிமார்க்கத்தாலே போகவும்பெறுகின்றேன்; பெரிய திருவடிமேலே யிருக்குமாபோலே அவன்திருவடிகள் என்தலைமேலேயிருக்கவும் பெற்றேனென்று ப்ரீதராகிறார். வழியென்று - உபாயமாகவுமாம்.

[நரகத்தை நகுநெஞ்சே] - நெஞ்சே! அவனைப் பிரிந்திருக்கையாகிற நரகத்தை நகு. நரகமென்று - ஸம்ஸாரமாகவுமாம். [தேனேறு மலர்த்துளவம் திகழ்பாதன்] - தேன்மிகாநின்றுள்ள திருத்துழாயாலே அலங்க்ருதமான திருவடிகளையுடையவன்.

பெருமான், நமக்கருள்தான்" என்ற பதத்ரயத்துக்கு ஸாவம் - அல்லேனென்னுமைக்கு இத்யாதி வாக்யத்ரயமும். விவரணம் - விண்ணுலகம் இத்யாதி. "செய்வானே" என்றவவதாரணார்த்தம் - இதுநிஸ்சிதம் என்று. "அல்லேனென்னுமைக்கு" இத்யாதிவாக்யவிவரணம் - இசைகைக்கு இத்யாதி. "நம்பெருமான்" என்ற இத்தைப்பற்ற - ஸம்பந்தமுண்டு என்றது. "பெருமான்" என்றத்தைப்பற்ற - இசைவிப்பிக்கைக்கு அவனுண்டு என்றது. (௪)

‡ *'திரிவானத்தாளிணை' என்பது உரையின் பாடம்,*

ப.—அநந்தரம், அவனருளிச்செய்த ப்ரகாரத்திலே நான் பரமபதத்தைப் பெறுகின்றேன்; அதுக்கடியான விஷயீகாரத்தாலே போக்யமான திருவடிகள் என்தலையிலே யாய்த்தின வென்கிறார்.

வானேற - பரமபதத்திலே போகைக்குஉறுப்பாக, வழிதந்த - ("போம்வழியைத்தரும்" என்கிறபடியே) அர்ச்சிராதிமார்க்கத்தை யுண்டாக்கித்தந்து, (அத்தாலே கொண்டு போவதாக), வாட்டாற்றான் - திருவாட்டாற்றிலே ஸந்நிஹிதனானவன், பணிவகையே - "பண்டேபரமன் பணித்த பணிவகையே" என்கிறபடியே, நான் - (அவன் நினைவே நினைவாம்படியான) நான், ஏற - மேலேசெல்ல, பெறுகின்றேன் - பெறுகின்றேன்; (அதுக்கடியாக), தேன் - மதுவானது, ஏறு - மிகாநின்றுள்ள, மலர்த்துளவம் - மலரையுடைய திருத்துழாய், திகழ்பாதன் - செவ்விபெற்று விளங்கும்படியான திருவடிகளையுடையனாய், செழும்பறவை - ஓர்ஸநீயாகாரனான பெரிய திருவடியை, தான் ஏறித்திரிவான் - தான் விரும்பியேறி ஆஸ்ரிதார்த்தமாக ஸஞ்சரிக்குமவனுடைய, அத் தாளிணை - அந்த போக்யமான திருவடிகளிரண்டும், என் தலைமேலே - என் தலைமேலாய்த்தின; நெஞ்சே! நரகத்தை - ஸம்ஸாரத்தை, நகு - (ஸாவஜ்ஞமாகச்) சிரித்துப் போம்படியார்.

இ.—அஞ்சாம்பாட்டில், அவன் பரமபதத்துக்குப்போக ஆஸ்ரிதர்க்கு வைத்த அர்ச்சிராதிகதியாலே போகப்பெறுகின்றேன். நித்யாஸ்ரிதரைப்போலே என்னை விஷயீகரிக்கவும் பெற்றேன் என்கிறார்.

[வானேற] - அபுநராவ்ருத்தி லக்ஷணமான பரமபதத்திலே ஏறுகைக்கு அர்ச்சிராதிகதியைத்தந்த. பரமபதலாபத்திலும் அவ்வருகே ஒருலாபமென்னும்படியிறே அர்ச்சிராதிகதி ஸித்தி. [வாட்டாற்றான்] - இப்பேற்றுக்கு க்ருஷிபண்ணின தேஸம். [பணிவகையே] - சொன்னபடியே. "மாமேகம் ஸரணம் வ்ரஜ" என்றபடியே; "பண்டேபரமன் பணித்தபணிவகை" என்றாரிறே; "மரணமானால்" என்று சொன்னபடியே யென்னவுமாம். [நானேற இத்யாதி] - நான் செல்லப்பெறுகின்றேன்; ஸம்ஸாரத்தைப்பார்த்து, "உன்னை வென்றேன்" என்று சிரித்துப்போகப்பார். உன்னை நெடுநாள் குடிமைகொண்டதென்று பார்த்து உன்வெற்றி தோற்றப் போ; விஸ்லேஷமாகிற நரகத்தை நகுவென்றுமாம். இச்செருக்குக்கு அடியென்? என்ன,—[தேனேறு மலர்த்துளவம் திகழ்பாதன்] - நாட்செல்ல நாட்செல்லத் தேன்மிக்கு வாராநின்றுள்ள மலரையுடைய திருத்துழாய் விளங்காநின்றுள்ள திருவடிகளையுடையவன். திருத்துழாயாலே அலங்க்ருதமான திருவடிகளென்றுமாம். [செழும்பறவை] - இவனோட்டை ஸம்ஸ்லேஷத்தாலே ஓர்ஸநீயமான வடிவையுடையவன். [தானேறித் திரிவானதாளிணை] - அவனுக்காகவுமன்றிக்கே அவனோட்டை ஸ்பர்ஸத்துக்காகத் தானே ஏறி ஸஞ்சரிக்குமவனுடைய திருவடிகள். [என் தலைமேலே] - அவன் தோளிலிருக்கை தவிர்ந்து என்தலைமேலே யிராநின்றான்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. அவன் பரமபதத்துக்குப்போக ஆஸ்ரிதர்க்கு வைத்த அர்ச்சிராதிகதியாலே போகப்பெறு நின்றேன்: நித்யாஸ்ரிதரைப்போலே என்னை விஷயீகரிக்கவும் பெற்றேனென்கிறார்.

அஞ்சாம்பாட்டு.—வானேற இத்யாதி. "வானேற" என்று தொடங்கி "என்தலைமேலே" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - அவன் இத்யாதி.

[வானேறஇத்யாதி] - பரமபதத்திலேபோய்ப் புகுகைக்கு அர்ச்சிராதிமார்க்கத்தைத் தந்த. பரமபதலாபத்திலும் அவ்வருகே யொருலாபமென்னும்படியிறே அர்ச்சிராதிகதிஸித்தி. ''போம்வழியைத்தரும்'' என்று ஈடுபடும்படியிறே அதினுடைய வைலக்ஷண்யம். [வாட்டாற்றான்] - இப்பேற்றுக்கு க்ருஷிபண்ணினவிடம். [பணிவகையே]-அவன் திருவுள்ளமானபடியே: அதாவது - ''மாமேகம்ஶரணம்வ்ரஜ'' (மாமேகம்ஶரணம் வ்ரஜ) என்றத்தைச் சொல்லுகிறான்; ''பண்டேபரமன்பணித்த பணிவகையே'' என்றாரிறே; ''மரணமானால்'' என்றத்தைச் சொல்லிற்றாகவுமாம். [நானேறப்பெறுகின்றேன்] - ''கண்ணன்வைகுந்தனோடு என்னெஞ்சினாரைக்கண்டால்''என்று தூதுவிட்டுப்பார்த்திருக்கக்கடவ நான் உனக்குச்சொல்லவேண்டும்படியாவதே ! [நான்இத்யாதி]- நான் பரமபதத்திலே ஏறப்பெறாநின்றேன். ஆனால் நான் செய்யவேண்டுவதேதென்னென்ன? - [நரகத்தை நகுநெஞ்சே] - ப்ராப்யபூமி கிட்டிற்றென்று கடுகக் கால்வாங்கிப் போகப்பாராதேகிடாய் ! நெடுநாள் நம்மைக் குடிமக்களாக்கி எளிவரவு படுத்தின ஸம்ஸாரத்தைப் புரிந்து பார்த்துச் சிரித்துப்போருகிடாய். 'உன்னைவென்றோமிறே'' என்று புரிந்து பார்த்துச் சிரித்துப்போரு. பிள்ளை யழகியமணவாளப்பெருமாளரையர் †க்ரந்தியைப்பார்த்துச் சிரித்துச் சொன்னவார்த்தையை நினைப்பது. ''தேநநாதேந மஹதா நிர்ஜகாம ஹரீஶ்வர:'' (தேநநாதேந மஹதா நிர்ஜகாமஹரீஶ்வர:)-மஹாராஜர் வந்துஅறைகூவ,''பூர்வக்ஷணத்திலே பரிபவப்பட்டுப்போனவன் இப்போதுவந்து அறைகூவும்போது, வெறுமனல்ல; போதல்லாப் போதிலே நீ புறப்படக்கடவையல்லை'' என்று தாரை காற்கட்டச் செய்தேயும், க்ஷத்ரியனுகையாலே பரிபவம் பொறுக்கமாட்டாமை புறப்பட்டு,''மிடற்றோசை யிருந்தபடியென்? பழைய கோழைத்தனமற்றுத் தெளிந்து முழங்கியிருந்தது: இதுக்கோரடியுண்டாகவேணும்: உண்டாய்த்தாகில் நமக்குஇரைபோருகிறது'' என்றானிறே. ''ஹரீஶ்வர:'' (ஹரீஶ்வர:)- இதுக்குமுன்பு பிறரைக்கூவ ஜீவித்தவனல்லன். அப்படியே அவனை யண்டைகொண்ட பலத்தாலே,ஸம்ஸாரத்தைப் பார்த்து ''உன்னைவென்றோமிறே'' என்று கையைத்தட்டிச் சிரித்துக்கிடாய் போருவது. அறிவுகேடர்க்கு, நரகமென்று-யமாதிகள் குடியிருப்பைச் சொல்லிற்றாகவுமாம். ''மற்றைநரகம்'' என்கிற ஸம்ஸாரத்தைச் சொல்லுகிறது; * வானுயரின்பத்

வானிலே யேறுகைக்குஎன்றபடி. வானைத்தந்தவென்னாதே, ''வழியைத்தந்த'' என்பானென்? என்ன-பரமபத இத்யாதி. அப்படி விலக்ஷணமாயிருக்குமோவென்ன-போம்வழியை இத்யாதி. ஸப்தார்த்தம் - அவன் இத்யாதி. பணிதல் - சொல்லுதல். ''பணிவகை'' என்றால் - சரமஶ்லோகத்தைச் சொல்லுமோவென்ன - பண்டே இத்யாதி. அர்த்தாந்தரம் - மரணமானால் இத்யாதி. ''நான்'' என்றதுக்கு பாவம் - கண்ணன் இத்யாதி. திருவிருத்தம், ''அன்னம்செல்வீரும்'' இத்யாதி. ஸ்பஷ்டோர்த்த:. ஸப்தார்த்தம் - நான்பரமபதத்திலே இத்யாதி. குடிமக்கள் - குடியாள்கள். எளிவரவுபடுத்தின - லகுதரமாக்கின. நகுதல்-சிரித்தல். சிரிக்கும்படியேதென்ன - உன்னை இத்யாதி. இதுக்கு ஸம்வாதம் - பிள்ளை இத்யாதி. அதாவது - பரமபதத்துக்குப் போகிற ஸமயத்திலே, ''உன்னைவென்றேன்'' என்று க்ரந்தியைப்பார்த்தருளிச்செய்தாரென்றபடி. ஸம்ஸாரத்தைப்பார்த்துச் சிரிக்கைக்கு ஹேது அவனை யண்டைகொண்ட பலமென்று திருவுள்ளம்பற்றி, அத்தை ஸநிதர்ஶநமாக அருளிச்செய்கிறார் - தேநநாதேந இத்யாதி ஸங்க்ஷேபே, ''ததோ ராமஜ்ஞயா ஸுக்ரீவஸ்ஸுக்ரீவோ ஹேமமாலிந: । தேநநாதேந'' இத்யாதி. அறைகூவ - ஜயத்வநிபண்ண. இத்தால் இங்கே எது சொல்லப்பட்டதென்ன - அப்படியே இத்யாதி. ''நரகம்'' என்றவிது - ஸம்ஸாரத்தைச் சொல்லுமோவென்ன - அறிவுகேடர்க்கு இத்யாதி. 'மற்றைநரகம்' என்கிறவாக்யத்தடியிலே, ''இங்கே'' என்று கூட்டிக்கொள்வது. ''மற்றைநரகம்'' என்றால்

---

† க்ரந்தி - புண்கட்டி.

துக்குவதிர்த்தட்டிறே. நாம் இப்படி ஸம்ஸாரத்தைக் கைதட்டிச் சிரிக்கைக்கு நமக்கு உத்தேஶ்யவஸ்துதான் கைபுகுந்ததோவென்ன - [தேனேறுஇத்யாதி] - கிண்ணகப்பெருக்குப்போலே நாட்செல்ல நாட்செல்லத் தேனேறிவாராநிற்பதாய் மலரையுடைத்தான திருத்துழாயானது விளங்காநின்றுள்ள திருவடிகளையுடையவன். [செழும்பறவை] - அவனோட்டை ஸம்ஶ்லேஷத்தாலே குளிர்ந்து ஔஜ்ஜ்வல்யமான வேஷத்தையுடைய திருவடியை. இத்தால் ஸர்வேஶ்வரனோட்டை ஸ்பர்ஶம் இவனுக்கிருக்கும்படி சொல்லிற்று. [தானேறித்திரிவான]- அவனுக்காகவுமன்றிக்கே அவன்தோளில்இருப்பு ஸ்வபாவஸ்பர்ஶமாயிருக்கையாலே அவனை மேற்கொண்டு ஸஞ்சரியாநிற்குமாய்த்து. [தானேறித்திரிவானதாளிணையென்தலைமேலே] - திருவடிதிருத்தோளிலும் என்தலையிலுமான இது தவிர்ந்து என்தலையிலேயாய்த்து. அவன் இழவுக்கு வெறுக்கவேண்டாவிறே ; அவன்தானே கோவேந்து கொடுக்கப்பெற்றவராகையாலே. ஆகையிறே ஒருபழுவறப்பெற்றது.

(ரு)

ஆறும் பாட்டு.

தலைமேலதாளிணைகள்தாமரைக்கண்என்னம்மான்
நிலைபேரானென்னெஞ்சத்துஎப்பொழுதும்எம்பெருமான்
மலைமாடத்தரவணைமேல்வாட்டாற்றான்மதமிக்க
கொலையானைமருப்பொசித்தான்குரைகழல்கள்குறுகினமே.

ஆ.—(தலைமேல.) - திருவடிகளை என் தலைமேலே வைத்தருளினான் ; அழகிய திருக்கண்களாலே என்னைக் குளிரப்பார்த்தருளாநின்றான்; ஒருகாலும், என் நெஞ்சில் நின்றும் நிலைபேரான்; இங்ஙனே அவன்திருவடிகளை நாம் குறுகப்பெற்றோமென்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், திருக்கண்களில் அழகைக் காட்டி என்னை அடிமைகொண்டு என்னுடைய ஹ்ருதயத்தில் நின்று ஒருகாலும் போகிறிலன்: அவன் திருவடிகளைக் குறுகப்பெற்றோமென்று ப்ரீதராகிறார்.

[கொலையானை மருப்பொசித்தான்] - தம்முடைய ப்ரதிபந்தகத்தைப் போக்கினபடி. [குரைகழல்கள்] - சிறு சதங்கைகளாலே த்வநிக்கிற திருவடிகள்.

ப.—அநந்தரம், திருவடிகளைத் தலையிலேவைத்தவளவன்றியே, என்னெஞ்சிலே ஸ்திரமாகப் புகுந்துநிற்கிறவன் திருவடிகளைக் கூடப்பெற்றோமென்கிறார்.

ஸம்ஸாரத்தைச் சொல்லுமோவென்ன - வானுயர் இத்யாதி. "ஏறு" என்ற வர்த்தமாநார்த்தம் - கிண்ணகப்பெருக்கு இத்யாதி. கிண்ணகப்பெருக்கு - ஆற்றுப்பெருக்கு. மலர் - பூ. செழுமை - அழகு. ஏறி என்னாதே "தானேறி" என்றதுக்கு பாவம் - அவனுக்காகவும் இத்யாதி. "தலைமேலே" என்றவவதாரணார்த்தம் - திருவடி இத்யாதி. ஆனால் பெரியதிருவடி உபேக்ஷிக்கப்படாரோ, பரஸம்ருத்த்யேகப்ரயோஜநரான இவர் அவனிழவுக்குவெறாதே "என்தலைமேலே" என்று உகப்பானென்னென்ன - அவனிழவுக்கு இத்யாதி. அதுக்கு நியாமகமேதென்ன - ஆகையிறே இத்யாதி. அதாவது - அவன் புருஷகாரமாகக்கொண்டு வருகையாலேயிறே, அவனைப்போலே தோளிலன்றிக்கே தலைமேலே யாகப்பெற்றதென்றபடி. பழு - படி.

(௬)

தாளிணைகள் - அவன் திருவடிகள், தலைமேல - என்தலைமேலேயிராநின்றன; (அத்தால்வந்த உகப்பு தன்னதாம்படி தோன்ற), தாமரைக்கண் - தாமரைபோலே சிவந்த திருக்கண்களையுடையனாய், என்னம்மான் - என்னைப் பெறாப்பேறாகப் பெற்றானாய்க்கொண்டு எனக்கு ஸ்வாமியானவனாய், (அவ்வளவன்றியே), என்னெஞ்சத்து - என்நெஞ்சுக்குள், எப்பொழுதும் - எப்போதும், நிலைபேரான் — நின்றநிலைபேரானாய், எம்பெருமான்-என்பக்கலிலே நிலைபெறுகையாலே ஸர்வாதிகனாய், (எனக்குஉபகரிக்கைக்காக), மலை - மலைபோலேயிருக்கிற, மாடம் - மாடங்களையுடைய, வாட்டாறு - திருவாட்டாற்றிலே, அரவணைமேலான் - திருவரவணையின்மேலே கண்வளர்ந்தருளுகிறவனாய், (ப்ராப்திப்ரதிபந்தகங்களை), மதம்மிக்க - மதத்தாலேமிக்கு, கொலை- கொலையிலே உத்யுக்தமான, யானை - குவலயாபீடத்தை, மருப்புஒசித்தான் - ஶ்ருங்கபங்கம்பண்ணினாற்போலே என் அநுபவவிரோதியையழித்தவனுடைய, குரை - (வீரக்கழலில்) த்வநியையுடைய, கழல்கள் - திருவடிகளை, குறுகினம் - கூடப்பெற்றோம்.

இ.—ஆறாம்பாட்டில், திருவாட்டாற்றிலே ஸந்நிதிபண்ணி என்னை ஸர்வதோமுவமாக விடமாட்டாதவனுடைய திருவடிகளைக் குறுகப்பெற்றோமென்கிறார்.

[தலைமேலதாளிணைகள்]- திருவடிகளாலே என்தலையை அலங்கரியாநின்றான். [தாமரைக்கண் என்னம்மான்] - என்முன்னே நின்று கண்ணழகைக்காட்டி "ஜிதம்" என்னப்பண்ணாநின்றான். [நிலைபேரான் என்னெஞ்சத்து]-ஹ்ருதயத்தினின்றும் கால்வாங்குகிறிலன். [எப்பொழுதும்] - ஸர்வகாலமும் இப்படி செய்யாநின்றான். தன்னை அநுபவிப்பார் நாநாவிதஶரீரத்தாலே அநுபவிக்குமாபோலே, என்னை அநுபவிக்கைக்கு அநேக விக்ரஹங்களைக் கொள்ளாநின்றான். [எம்பெருமான்] - உடைமையுடையவனைப் பெற்றாலிருக்குமளவன்றிறே உடைமையைப்பெற்றா லுடையவனுக் கிருப்பது. [மலைமாடத்தரவணை இத்யாதி] - மலைகளைச் சேரவைத்தாற்போலேயிருக்கிற மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றிலே திருவனந்தாழ்வான் மேலே கண்வளர்ந்தருளுகிறவன். பர்யங்க வித்யையிற் சொல்லுகிறபடியே: உத்தேஶ்ய வஸ்துவுக்குக் குறைவற்றிருக்கிறபடி. அநுபவவிரோதியை, குவலயாபீடத்தைத் தள்ளினாற்போலே தள்ளிப்பொகட்டான். இப்படி ஶ்லாக்யமான திருவடிகளைக் கிட்டப்பெற்றோம். [குரை] - ஆபரண த்வநி. "கூவிக்கொள்ளும் காலமின்னம் குறுகாதோ" என்னும் விடாய் தீரும்படி கிட்டப்பெற்றோம்.

ஈடு.—ஆறாம்பாட்டு. திருவாட்டாற்றிலே ஸந்நிதிபண்ணி என்னை ஸர்வதோமுவமாக விடமாட்டாதவனுடைய திருவடிகளைக் கிட்டப்பெற்றோமென்கிறார்.

[தலைமேலதாளிணைகள்] — "நின்செம்மாபாதபற்புத் தலைசேர்த்து" என்றும் "பாதபங்கயமே தலைக்கணியாய்" என்றும் நான் ப்ரார்த்தித்தபடியே, அழகிய திருவடிகளாலே தலை அலங்காரமாகப்பண்ணினான். [தாமரைக்கண்என்னம்மான்]-என்முன்னே நின்று குளிரநோக்கி "ஜிதம்"(ஜிதம்) என்னப் பண்ணாநின்றான். [நிலைபேரான் என்னெஞ்

ஆறாம்பாட்டு.—தலைமேல இத்யாதி. "தலைமேலதாளிணைகள்" என்று தொடங்கி "குரைகழல்கள் குறுகினம்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - திருவாட்டாற்றிலே இத்யாதி.

"ஸர்வதோமுவமாக விடமாட்டாதவன்" என்கிறஇதிலே, முந்துற "தலைமேலதாளிணைகள்" என்று விசேஷிக்கிறதுக்கு பாவம் - நின்செம்மா இத்யாதி, திருவடிகளிரண்டும் என்தலை

சத்து] - நெஞ்சுவிட்டுப்பேராதே நின்றுய்த்து இதெல்லாம்செய்கிறது. ஸௌஹரி ஐம்பது வடிவுகொண்டாற்போலே, இவன் தன்னை அநுஹவிக்க நாநாஹவநம்கொள்ளுமாபோலே, அவன்தான் இவரை அநுஹவிக்க அநேகவிக்ரஹம் கொள்ளாநின்றான். [எப்பொழுதும்] - "எப்பொழுதும்நாள்திங்களாண்டூழியூழி" என்று தன்னை அநுஹவிக்கைக்கு நான் பாரித்த துறைகளடையக் கைக்கொண்டான். ஸர்வஶக்தியோகமடையக் காட்டாநின்றான். என்னெஞ்சிலேநிற்பது, அப்படியே கண்ணுக்கிலக்காம்படி முன்னேநிற்பது, திருவடிகளைத் தலைமேலே வைப்பதாகிற இதெல்லாம் ஒருகாலே செய்யாநின்றான். [எம்பெருமான்] - உடைமை உடையவனைப் பெற்றாலிருக்குமாபோலன்றிறே, உடையவன் உடைமையைப் பெற்றாலிருக்கும்படி. [மலைஇத்யாதி] - மலைகளைப் புடைபடத் துளைத்து நெருங்கவைத் தாற்போலேயிருக்கிற மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றிலே திருவனந்தாழ்வான் மேலே கண்வளர்ந் தருளினவன். இத்தால் - ப்ராப்யவஸ்துவைச்சொல்லுகிறது, பர்யங்க விஷயையிற் சொல்லுகிறபடியே. [மதம்இத்யாதி] - அநுஹவவிரோதிகள் அடங்கலும் துவலயாபீடம்பட்டது படும்இத்தனை. அவன் இவன்விரோதியைப்போக்க இவனுக்குஅநுஹவத்திலே யந்வயம். [குரைகழல்கள் குறுகினம்] - ஆஹரணவொலி சேவிப்படாநின்றது. "தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளும்காலம் இன்னம்குறுகாதோ" என்று ப்ரார்த்தித்தது பெற்றோம். (ரு)

ஏழாம் பாட்டு.

குரைகழல்கள்குறுகினம்நம்கோவிந்தன்குடிகொண்டான்
திரைசுழுவுகடல்புடைசூழ்தென்னாட்டுத்திலதமன்ன
வரைகுழுவுமணிமாட வாட்டாற்றான்மலரடிமேல்
விரைகுழுவுநறுந்துளவம்மெய்ந்நின்றுகமழுமே.

மேலே யிராநின்றனவென்று ஸப்தார்த்தம். "என்னெஞ்சத்து - நிலைபேரான் -" என்னெஞ்சுக்குள் எப்போதும் நின்றநிலை பேரானென்று ஸப்தார்த்தம். நெஞ்சைவிட்டுப் போகாதே யிதெல்லாம் செய்யக்கூடுமோவென்ன - ஸௌஹரி இத்யாதிவாக்யத்வயம். அவன் அநேகஶரீர பரிக்ரஹம் பண்ணுகையாலே கூடுமென்றபடி. இரண்டாம்வாக்யம் முக்தவிஷயம். 'எப்பொழுதும்' இத்யாதி வாக்யத்துக்கு - நான் தன்னை நித்யாபூர்வமாகப் பாரித்ததெல்லாம் தானென்னை நித்யாபூர்வமாகப் பாரியாநின்றானென்று கருத்து. "அநேகஶரீரபரிக்ரஹம்பண்ணி யநுஹவியாநின்றான்" என்றத்தால் ஃபலிதம் - ஸர்வஶக்தியோகம் இத்யாதி. அவரோஹக்ரமத்தாலே அந்த ஶக்தியைக் காட்டுகிறார்-என்னெஞ்சிலே இத்யாதி. இவன் அவனை லஹித்தால் நாநாஹாவம்கொள்ள ப்ராப்தமாயிருக்க அவன் கொள்ளுகைக்கடியேதென்ன - உடைமை இத்யாதி. "மலைமாடம்" என்றது - * வாட்டாற்றுக்கு விசேஷணம். புடைபட - இடம்பட; அவகாஶமுண்டாம்படியாக. "அரவணைமேல்" என்றதுக்கு ஹாவம் - இத்தால் இத்யாதிவாக்யத்வயம். "கொலையானைமருப்பொசித்தான்" என்றதுக்கு ஹாவம் - அநுஹவ இத்யாதி. "குரைகழல்கள் குறுகினம்" என்றத்தையும் கூட்டி ஹாவம் - அவன்இவன் இத்யாதி. குறுகினதுக்கு நியாமகமேதென்ன - ஆஹரண இத்யாதி. குரை - ஶப்தம். "குறுகினம்" என்றதுக்கர்த்தம் - தடந்தாமரை இத்யாதி. கொலையானை - கொலையில் உத்யுக்தமான ஆனை.

(ரு)

ஆ.—(குரைகழல்கள்.) - இப்படி நெஞ்சே! நாம் குரைகழல்கள் குறுகி னம்; நம்கோவிந்தன் ஸபரிக்ரஹமாகவந்து என்னுள்ளேபுகுந்தருளினன். இதுக்கடை யாளமென்? என்னில்; வாட்டாற்றான் திருவடிகள் திருத்துழாய் என்னுடம்பெல்லாம் கமழ்கிறபடி பாராயென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், எம்பெருமான் ஸபரிகரமாக வந்து என்னுள்ளே புகுந் தருளினன்; அத்தாலே என் உடம்பு நிரந்தரமாகத் திருத்துழாய் நாறுகின்றது என் கிறார்.

[நம் கோவிந்தன்] - ஆச்ரிதவாத்ஸல்யனான க்ருஷ்ணன். [திரைகுழுவு என்று மேனுக்கு] - திரைமிக்க கடல் அருகே சூழ்வதுஞ்செய்து, தென்னாட்டுக்கு ஒரு திலதம் போலேயாய், மலைகள் திரண்டாற்போலேயிருக்கிற அழகிய மாடங்களையுடைய திரு வாட்டாற்றில் எம்பெருமானுடைய திருவடிகளில் பரிமளம்மிக்கிருந்துள்ள நல்ல செவ் வித்திருத்துழாய்.

ப.—அநந்தரம், தான் ஸம்ச்லேஷித்ததுக்கு அடையாளந்தோன்றும்படி ஆஶ்ரிதவாத்ஸல்யனான க்ருஷ்ணன் தான் என்னெஞ்சிலே பூர்ணமாக இருந்தானென்கிறார்.

குரை - விலக்ஷணமான, கழல்கள் - திருவடிகளை, குறுகினம் - குறுகப்பெற் றோம்; ("நிலைபேரான்" என்கிறபடியே), நம் - நமக்குஸுலபனான, கோவிந்தன் - க்ருஷ் ணனானவன், (பரிபூர்ணமாக நம்நெஞ்சை), குடி - குடியிருப்பாக, கொண்டான் - ஸ்வீ கரித்தான்: (அத்தாலே), திரை - திரைகள், குழுவு - திரளத்திரண்ட, கடல் - கடலாலே, புடை - பரிஸரத்திலே, சூழ் - சூழப்பட்டு, தென்னாடு - தென்னாட்டுக்கு, திலதம்அன்ன - திலகம்போலே யிருப்பதாய், வரைகுழுவு - மலைகள் திரளவிருந்தாற் போலே யிருக்கிற, மணிமாடம் - மணிமயமான மாடங்களையுடைய, வாட்டாற்றான் - திருவாட்டாற்றி லெழுந்தருளியிருக்கிறவனுடைய, மலரடிமேல் - விகஸிதபத்மம் போலே நிரதிசயபோக்யமான திருவடிகளின்மேலே, விரை - பரிமளங்கள், குழுவு - திரண்டு, நறுந்துளபம் - கமழுகிற திருத்துழாயானது, மெய் நின்று - என்சரீரத் திலே ஸ்திரமாகநின்று, கமழும் - கந்தியாநின்றது.

இ.—ஏழாம்பாட்டில், அவன் ஸபரிகரமாக வந்து என்னுள்ளே புகுந்தான். அத்தாலே என் உடம்பு திருத்துழாய் நாறுகின்றது என்கிறார்.

[குரை இத்யாதி] - ஆபரணத்வநியோடே அவன்வந்து மேல்விழக் கிட்டப்பெற்றோம். [நம் கோவிந்தன் இத்யாதி] - ஆச்ரிதவத்ஸலனான க்ருஷ்ணன், "அகம்படிவந்து புகுந்து" என்கிறபடியே வந்து புகுந்தான். [திரை இத்யாதி]- திரை மிக்கிருந்துள்ள கடல் அருகே சூழப்பட்டிருப்பதாய், தென்னாட்டுக்குத் திலதம்போலே யாய், மலைகளை நெருங்கவைத்தாற்போலே யிருக்கிற மணிமயமான மாடங்களையுடைத் தான திருவாட்டாற்றிலே நின்றருளினவனுடைய திருவடிகளின்மேற் பரிமளம் மிக்க திருத்துழாய். விரை - பரிமளம். [மெய்க்நின்று கமழுமே] - சரீரம் நிரந்தரமாக நாறுகின்றது. "குரைகழல்கள் குறுகினம்" என்று நான் சொன்னவார்த்தை மெய் யென்னுமிடம், என் உடம்பே சொல்லாநின்றதென்கை. "அன்றி மற்றோருபாயமென்?" என்று தோழிசொல்லியும், "வெறிகொள் துழாய்மலர் நாறும்" என்று தாயார் சொல்லி யும் போந்த இத்தைத் தம் வாயாலே சொல்லும்படியுமாய்த்து.

ஈடு.—ஏழாம்பாட்டு. "குறுகினம்" என்ற இது என்கொண்டு அறிவதென்னில், 'பார்க்கலாகாதோ உடம்பு கோயிற்சாந்து நாறுகிறபடி?' என்கிறார்.

[குரைகழல்கள் குறுகினம்] - அணித்தேன்னும் இத்தைப் பற்றச் சொல்லுகிறேனல்லேன், கிட்டினோம். [நம்கோவிந்தன்] - ஆஶ்ரிதர்க்கு ஸ்வம்மாக ப்ரஸித்தனான க்ருஷ்ணன். [கோவிந்தன் குடிகொண்டான்] - "அரவத்தமளியினோடுமழகிய பாற்கடலோடும் அரவிந்தப்பாவையும் தானும் அகம்படிவந்துபுகுந்து" என்கிறபடியே - திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியோடுங்கூடக் காணும் இவர்நெஞ்சிலே புகுந்தது. [திரைஇத்யாதி] - திரைமிக்கிருந்துள்ள கடலாலே சுற்றும் சூழப்பட்டிருப்பதாய், தென்னாட்டுக்கு ஒருதிலகம்போலேயாய், மலைகளைநெருங்க வைத்தாற்போலே மணிமயமான மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றைக் கலவிருக்கையாகவுடைய ஸர்வேஶ்வரனுடைய. [மலரடிமேல்] - செவ்வி, குளிர்த்தி, பரிமளங்களையுடைத்தான திருவடிகளின் மேலே, பரிமளம் மிக்கிருந்துள்ள திருத்துழாயானது. [மெய் நின்றுகமழுமே] - என்னுடம்பு நிரந்தரமாக நாறாநின்றது. "அன்றிமற்றோருபாயம்" என்று தோழிசொல்லியும் "வெறிகோள்துழாய்மலர்நாறும்" என்று தாயார்சொல்லியும் போந்தஇது, தன்வாயாலே சொல்லும்படியாய்த்து. [மெய் நின்றுகமழுமே]- என்வார்த்தை அறியவேணுமாகில் என்னுடம்பை மோந்து பார்க்கமாட்டிகோளோ? (எ)

எட்டாம் பாட்டு.

மெய்ந்நின்றுகமழ்துளவ விரையேறுதிருமுடியன்
கைந்நின்றசக்கரத்தன் கருதுமிடம்பொருதுபுனல்
மைந்நின்றவரைபோலும் திருவுருவ†வாட்டாற்றாற்கு
எந்நன்றிசெய்தேனா என்னெஞ்சில்திகழ்வதுவே?

ஆ.—(மெய்ந்நின்று.)-திருத்துழாய் தொடக்கமாக அபர்யந்தபோக்யங்களையுடையனாய், ஸ்வேச்சாநுவிதாயி ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திக திவ்யாயுதோபேதனாய், நிரவதிக ஸௌந்தர்ய விஶிஷ்டனாயிருந்த வாட்டாற்றாற்கு நான் என்ன அநுகூலவ்ருத்தி பண்ணினேனாகக்கொண்டு தான் என்னுள்ளேபுகுந்து திகழுகிறது? என்கிறார்.

ஏழாம்பாட்டு.—குரைகழல்கள் இத்யாதி. "விரைகுழுவுநறுந்துளபம் மெய்ந்நின்றுகமழுமே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - குறுகினம் இத்யாதி. "மெய்" என்றது – சாடு. மெய் - ஶரீரம், ஸத்யமும். விவரணம் - பார்க்கலாகாதோ இத்யாதி.

அநுவாதத்துக்கு பாவம் - அணித்தேன்னும் இத்யாதி. "நம்" என்றதுக்கு பாவம் - ஆஶ்ரிதர்க்கு இத்யாதி. குடிகொண்டான் - ஸபரிகரமாக இருப்பிடமாகக்கொண்டான். நெஞ்சிலே யென்றபடி. "கோவிந்தன் குடிகொண்டான்" என்றதுக்கு த்ருஷ்டாந்த பூர்வகமாக பாவம் - அரவத்தமளி இத்யாதி. பெரியாழ்வார் திருமொழி. அமளி - படுக்கை. அகம்படி - அந்தரங்கரான அடியார். "கோவிந்தன்" என்றத்தைப்பற்ற - திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியோடும் என்றது. குழுவு - கூட்டம். புடை - சுற்றும். நறு - நன்றான. மெய்ந்நின்று - மெய்யிலேநின்று. "நின்று" என்றதுக்கு பாவம் - நிரந்தரமாக என்று. "கமழும்" என்றவர்த்தமாகார்த்தம்-நாறநின்றது என்று. இதுக்கு பலிதம்-அன்றிமற்றோர் இத்யாதி. மெய்ந்நின்றுகமழுமது அறியும்படி யென்னென்ன - என்வார்த்தை இத்யாதி; இது "கமழுமே" என்கிற அவதாரணார்த்தம். (எ)

ஒ.—எட்டாம்பாட்டில், அத்யந்த விலக்ஷணனான திருவாட்டாற்றில் எம்பெருமான் என் ஹ்ருதயத்திலே புகுந்து உஜ்ஜ்வலனாகைக்கு நான் என்ன நன்மை செய்தேன்? என்கிறார்.

[மெய் என்று தொடங்கி] - திருமேனியெல்லாம் நின்று கமழுகிற திருத்துழாயினுடைய பரிமளம் பரம்பாநின்றுள்ள திருமுடியையுடையனாய், திருவுள்ளமானவிடத்திலே சென்று யுத்தம்பண்ணி மீண்டுவந்து திருக்கையிலேயிருக்கும் திருவாழியையுடையனாய், புனல்போலேயும் மைந்நின்ற வரைபோலேயுமிருக்கிற திருவுருவையுடைய திருவாட்டாற்றில் எம்பெருமானுக்கு.

ப.—அநந்தரம், நிரதிஶயபோக்யமான வடிவோடே என்னெஞ்சிலேபுகுந்து உஜ்ஜ்வலனாகைக்கு அவனுக்கென்ன நன்மைசெய்தேன்? என்கிறார்.

மெய் நின்று - திருமேனிமுழுக்கநின்று, கமழ்துளபம் - பரிமளத்தைப் பண்ணுகிற திருத்துழாயினுடைய, விரை - ஸௌரப்யம், ஏறு - அதிஶயித்துவருகிற, திருமுடியன் - திருமுடியையுடையனாய், கருதுமிடம் - திருவுள்ளத்தில் நினைத்தவிடத்திலேபோய், பொருது-, கை நின்ற - ("[illegible]" என்னுமாபோலே மீண்டு) திருக்கையிலேநின்ற, சக்கரத்தன் - திருவாழியையுடையனாய், புனல் - ஸமுத்ரஜலம் போலே, நின்ற - ஸ்திரமான, மை - கருமையையுடைத்தான, வரைபோலும் - மலைபோலே, திருவுருவ - உருமிக்கவழகியவடிவையுடையனாய்க்கொண்டு, வாட்டாற்றாற்கு - திருவாட்டாற்றிலே ஸந்நிஹிதனானவனுக்கு, ("[illegible]" என்று ப்ராணனொருதலையாக அடிமைசெய்த பெரியவுடையாரைப்போலவும், "த்ருஷ்டா ஸீதா" என்ற திருவடியைப்போலவும்), என் நன்றி - என்ன நன்மை, செய்தேனு - தனக்குச் செய்தேனாக, என் நெஞ்சில் திகழ்வது - என்னெஞ்சிலே புகுந்து உஜ்ஜ்வலனாகிறது?

இ.—எட்டாம்பாட்டில், அத்யந்த விலக்ஷணனானவன் திருவாட்டாற்றிலே வந்து ஸந்நிஹிதனாய், என் ஹ்ருதயத்திலே புகுந்து உஜ்ஜ்வலனாகைக்கு நான் என்ன நன்மை செய்தேன்? என்கிறார்.

[மெய்ந்நின்று கமழ்துளவ விரை] - திருமேனியிலே கமழாநின்றுள்ள திருத்துழாயின் பரிமளம். [ஏறுதிருமுடியன்] - அப்பரிமளம் மிகாநின்றுள்ள திருமுடியையுடையனாய்; கடலில் நீர் ஸஹ்யத்திலே ஏறுமாபோலே திருமுடியிலே வெள்ளமிடாநின்றது. [கைந்நின்ற சக்கரத்தன்] - நினைத்தவிடத்தே சென்று யுத்தம்பண்ணி எதிரிகளையழித்து மீண்டு திருக்கையிலே வர்த்திக்கும் திருவாழியையுடையனாய், ஸர்வஜ்ஞனாய் அடிமைசெய்து; "[illegible]" என்றும், "[illegible]" என்றும் சொல்லுகிறபடியே திருக்கையிலே வர்த்திக்குமாய்த்து. "[illegible]" [புனல்மைந்நின்றவரை இத்யாதி] - புனல்போலேயும் மைபோலேயும் நின்றவரைபோலேயுமென்னுதல். [மைந்நின்றவரை] - மைமாறாத வரை; அஞ்ஜநகிரி என்னுதல். [வாட்டாற்றாற்கு] - 'வாட்டாற்றார்க்கு' என்று பூஜாவாசியல்ல: வாட்டாற்றானுக்கு என்றபடி. [எந்நன்றிசெய்தேனு] - என்ன நன்மை செய்தேனாக. பெரிய உடையாரைப்போலே என்னை அழியமாறினேனோ? திருவடியைப்போலே தனியிடத்திலே உதவினேனோ? தன்னுடைய ஆஜ்ஞாரூபமான விஹிதங்களை அநுஷ்டித்தேனோ? என்னெஞ்சில் புகுந்தபின்பு விளங்கினனென்னுமப்படி விருப்பிற்று.

ஈடு.—எட்டாம்பாட்டு. அத்யந்தவிலக்ஷணனானவன் திருவாட்டாற்றிலே வந்து ஸுலபனாய் என் ஹ்ருதயத்திலேவந்து புகுந்து உஜ்ஜ்வலனாகைக்கு நான் என்ன நன்மைசெய்தேனென்கிறார்.

[மேய் இத்யாதி] - திருமேனியிலேநின்று கமழாநின்றுள்ள திருத்துழாயிற் பரிமளமானது கொழித்துஏறடாநின்றுள்ள திருமுடியையுடையவன். கடலில் நீர் ஸஹ்யத்திலேறக் கொழித்தாற்போலே காணும் மலரடிமேல் திருத்துழாயின் பரிமளமானது மெய்யெல்லாங்கொண்டு தலைக்குமேலே போனபடி. [கை இத்யாதி] - லாவஜ்ஞனாகையாலே ஸர்வேஶ்வரன் திருவுள்ளத்திற் கருத்தறிந்து யுத்தத்திலேபுக்கு எதிரிகளை அழியச்செய்து வெற்றி கொண்டு, "ஸ்வதூணீம் புநராவிஶத்" (ஸ்வதூணீம் புநராவிஶத்) என்கிறபடியே கையிலேவந்திருக்குமாய்த்து; * "ராமபார்ஶ்வம் ஜகாம" (ராமபார்ஶ்வம்ஜகாம) போலே. "அதஹரிவரநாத:" (அதஹரிவரநாத:) - ஒரு முத்தின் குடை நிழலிலே பையல் பெருமாளுக்கெதிராகவந்து தோன்றினவாறே பொறுக்கமாட்டாமை மேல்விழுந்து, நெடும்போது பொருது இளைப்பித்து, அவன் மாயாப்ரயோகத்திலே கைவைக்குமளவானவாறே, "இனிநமக்கும் அதுவேண்டிவரும்; அது நமக்கீடல்ல; பெருமாள் பண்ணின ப்ரதிஜ்ஞையை நாம் அழிக்கவொண்ணாது" என்று மீண்டார். "ராமேண ஹி ப்ரதிஜ்ஞாதம்" (ராமேணஹிப்ரதிஜ்ஞாதம்)-ஸத்யஸங்கல்பரான பெருமாள் ப்ரதிஜ்ஞைபண்ணுகிறார். "ஹர்ய்ருக்ஷகணஸந்நிதௌ" (ஹர்ய்ருக்ஷகணஸந்நிதௌ)-வீரர்கள்திரள்நடுவே ப்ரதிஜ்ஞைபண்ணுகிறது.ஆனபின்பு, இவர்க்குநிர்விஷயமாக்கவொண்ணாதென்று பார்த்தார். "ஹரிவரநாத:" (ஹரிவரநாத:) - தாம்செய்த இக்கார்யம் தம்பரிகரத்தில் செய்வாரில்லாமற் செய்தாரல்லர்; பொறுமையாலே செய்தா

எட்டாம்பாட்டு.—மெய்ந்நின்று இத்யாதி, "மைந்நின்றவரைபோலும்" என்றுதொடங்கி "என்னெஞ்சில்திகழ்வது" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை அத்யந்த இத்யாதி.

மெய் நின்று - ஈஶ்வரன் மெய்யிலே நின்றென்றபடி. துளவவிரை - துளபத்தினுடைய விரை; துளவ்பரிமளம். "மலரடிமேல்" என்றத்தையும் கூட்டிக்கொண்டு "திருமுடியன்" என்னுமளவும் கடாக்ஷித்து ரஸோக்தி - கடலில்நீர் இத்யாதி. "கருதுமிடம்பொருது - கைந்நின்றசக்கரத்தன்" என்றந்வயித்து, இதுக்கு பாவம் - பாவஜ்ஞனாகையாலே இத்யாதி. "ஸஶரோ ராவணம் ஹத்வா ருதிரார்த்ரக்ருதச்சவி: । க்ருதகர்மா நிப்ருதவத் ஸ்வதூணீம் புநராவிஶத்" இதியுத்தகாண்டே. இதுக்கு த்ருஷ்டாந்தம் - ராமபார்ஶ்வம் இத்யாதி. ஶ்லோகார்த்தம் அருளிச்செய்வதாக ப்ரதீகோபாதானம் - அதஹரி இத்யாதி. ஶ்லோகத்துக்கவதாரிகை - ஒருமுத்தின் இத்யாதி. நமக்குமதுவேண்டிவரும் இத்யாதிக்கு - நமக்கும் மாயாப்ரயோகம் வேண்டிவரும்: அப்போது அவனுக்குக் கொலைதப்பாது; கொன்றால் பெருமாள் ப்ரதிஜ்ஞாபங்கம் வருமென்று மீண்டாரென்றபடி. அப்படி பெருமாள் ப்ரதிஜ்ஞைபண்ணினரோவென்ன - ராமேண இத்யாதி. "ராமேண ஹி ப்ரதிஜ்ஞாதம் ஹர்ய்ருக்ஷகணஸந்நிதௌ । உத்ஸாதநம் அமித்ராணாம் ஸீதா ‡ யை:வரிவஸ்யதா" இதி ராவணம் ப்ரதிமாருதி:. ப்ரதிஜ்ஞையை யழிக்கவொண்ணாதென்னுமத்தை ஹேதுபூர்வகமாக அருளிச்செய்கிறார் - ஸத்யஸங்கல்பரான இத்யாதிவாக்யத்ரயத்தாலே. "ஹரிநாத:" என்னாதே, "ஹரிவரநாத:" என்றதுக்கு பாவம் - தாம்செய்த இத்யாதி. பூசல்

---

‡ யௌஸௌம்ய வஷிதா என்று பாடம் காண்கிறது ஸ்ரீ ராமாயணத்தில்.

ரித்தனே. "ப்ராப்யஸங்க்ராமகீர்த்திம்" (ப்ராப்யஸங்க்ராமகீர்த்திம்)-பூசல்ஹாக்யமென்று தனியேயோன்றுண்டிறே; அத்தால்வந்த புகழைத் தாம் படைத்தார். "நிஶிசரபதிம்" (நிஶிசரபதிம்)-களவுபூசல் செய்வார்க்குஒதுங்க நிழலான பையலை; ராஜபுத்ரர்களை யகற்றித் தனியிடத்திலே பிராட்டியைப் பிரித்த பையலிறே. "ஆஜௌ" (ஆஜௌ)-அவர்களுக்கு அஸாமியானசேவ்வைப்பூசலிலே. 'யோஜயித்வாஶ்ரமேண' (யோஜயித்வாஶ்ரமேண)-அவனையிளைப்போடே கூட்டினர்; தாம் புகழோடே கூடினர். "ககநமதிவிஶாலம்லங்கயித்வா" (ககநமதிவிசாலம்லங்கயித்வா) - நடுவிடை வெளி பெருத்திருக்கிற ஆகாசத்தை வருத்தமறக்கடந்தார். "அர்க்கஸூநு:" (அர்க்கஸூநு:)-அதுசெய்தபடி ஆதித்யபுத்ரனேன்று, தோற்றும்படியாயிருந்தது. உதயகிரியிலே தோற்றினல் பின்பு அஸ்தமித்து நிற்கக்காணு மித்தனையிறே. "ராமபார்ஶ்வம்ஜகாம" (ராமபார்ஶ்வம்ஜகாம)-பெருமாளைப்பிரிந்தபடியாலே வந்து கிட்டுவதும் செய்தோமென்று தோற்றும்படி மதிக்கவொன்று செய்து வாராமையாலே, நேர்கோடு நேர் முன்னிற்கமாட்டாதே பெருமாளருகே போய் நின்றார். பையல் தலையைப் பிடுங்கிக்கோடுவந்து திருவடிகளிலே இடப்பெறாத நாம் என் சோல்லி முன்பே நிற்பதேன்று பெருமாளருகே வந்துநின்றார். [புனல்இத்யாதி] - புனல் போலவும் மைபோலவும் நின்றவரைபோலவும் இருக்கிறவேன்னுதல், மைமாறுதவரை போலேயேன்னுதல். வாட்டாற்றார்க்கென்று - பூஜாவாசியன்று. வாட்டாற்றானுக்கென்ற படி. [என்னன்றிசெய்தேனு] - என்ன நன்மை செய்தேனுக. பேரியவுடையாரைப் போலே தடையோடே முடிந்தேனே? திருவடியைப்போலே "த்ருஷ்டாஸீதா" (த்ருஷ்டாஸீதா) என்றுவந்தேனே? அன்றியே, தன்னுடைய ஆஜ்ஞாநுவர்த்தநம்பண்ணினேனும்படி விஹிதகர்மங்களை அநுஷ்டித்தேனே? என்னநன்மைசெய்தேனுக என்னேஞ்சிலே புகுந்தபின்பு பேறுப்பேறுபெற்றாற்போலே விளங்காநின்றான்? ஐஶ்வர்யஸூசகமான தாரது, நினைத்ததுசெய்து தலைக்கட்டவல்ல பரிகரமது, வடிவழகது, இப்படிதுறை தோறும் தலைமைபெறும்படி யிருக்கிறவன் என்னேஞ்சிலேபுகுந்து பேறுப்பேறுபெற்றானுயிராநின்றான். (ஞ)

பாக்யம் - வீரஸ்ரீ. ராக்ஷஸமென்னுதே "நிஶிசரபதிம்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - களவுபூசல் இத்யாதி. அவன் களவுபூசல்செய்தானேயென்ன - ராஜபுத்ரர்களை இத்யாதி. "கீர்த்திம் - ப்ராப்ய" என்றத்தைப்பற்ற - தாம் புகழோடே கூடினர்என்றது. ஆதித்யன் அப்படி வருத்தமறக் கடப்பனேயென்ன - உதயகிரியிலே இத்யாதி. வந்து கிட்டுவதும் செய்தோமென்று தோற்றும்படி - வந்துகிட்டுமிடத்தில் இன்னதுசெய்தோமென்று தோற்றும்படியென்று கூட்டுவது. "மதிக்கவொன்றுசெய்து வாராமையாலே" என்றத்தை விவரிக்கிறார் - பையல் இத்யாதி. புனல் - ஸமுத்ரம். "திருமுடியன்" இத்யாதிகளிற்சொன்ன ஏகவசநாநுகுணமாக "வாட்டாற்றாற்கு" என்றதுக்கர்த்தம் - வாட்டாற்றார்க்கு இத்யாதி. கீழெல்லாவற்றையும் கடாக்ஷித்து பாவம் - ஐஶ்வர்ய இத்யாதி. "தத்ருஷ்டாஸீதா ராவணஸ்ய பவநே ஸீதா। ஸம்ஸ்ப்ருஶ்ய ஜீவந்தீ ராமராமேதி நாராயணம்" இதிஸுந்தரகாண்டே ராமம்ப்ரதி மாருதி:. "நிவேத்ய த்ருஷ்டா ஸீதேதி தத்த்வத:" இதி ஸங்க்ஷேபே. (அ)

ஒன்பதாம் பாட்டு.

திகழ்கின்றதிருமார்பில் திருமங்கைதன்னோடும்
திகழ்கின்றதிருமாலார் சேர்விடம்தண்வாட்டாறு
†புகழ்நின்றபுள்ளூர்தி போரரக்கர்குலம்கெடுத்தான்
இகழ்வின்றிஎன்னெஞ்சத்து எப்போழுதும்பிரியானே.

ஆ.—(திகழ்கின்ற.) - தனக்கு திவ்யமஹிஷி, ஸர்வலோகேச்வரியான பெரியபிராட்டி; சேர்விடம், திருவாட்டாறு; தன் திருவடிகளில் கைங்கர்யைக ரஸிகத்வமே புகழாகவுடையனாயிருந்த பெரியதிருவடி, தனக்கு திவ்யவாஹநமும் ஆச்ரிதவிரோதி நிரஸநோபகரணமும்; இங்ஙனே யிருந்துவைத்து, என்னுடைய நிகர்ஷத்தைப்பார்த்து என்னையிகழாதே ஒருக்ஷணமென்னைப்பிரியில் தரிக்கமாட்டாத ஸ்வபாவத்தை யுடையனாய்க்கொண்டு என்னெஞ்சினுள்ளே புகுந்திருந்தருளினான்; ஒருவனுடைய குணவத்தை யிருக்கும்படியே இது! என்கிறார்.

ஒ—ஒன்பதாம்பாட்டில், அத்யந்த பரிபூர்ணனான தான் இகழ்வின்றிக்கே என்னெஞ்சத்து எப்பொழுதும் பிரியாதிராநின்றான்; ஒருவனுடைய வ்யாமோஹமே! என்று ப்ரீதராகிறார். [திகழ்கின்ற என்று தொடங்கி] - விளங்காநின்ற திருமார்விலே யிருக்கிற பெரியபிராட்டியாரோடுங்கூட விளங்காநின்றுள்ள திருமாலார் சேரும் ஸ்தாநம், ப்ரமஹரமான திருவாட்டாறு. [புகழ் என்று தொடங்கி] - புகழுக்கெல்லாம் ஸ்தாநமான பெரிய திருவடியைத் தனக்கு வாஹநமாகவுடையனுமாய், பெருமிடுக்கரான ராக்ஷஸகுலத்தைக் கெடுத்தான்.

ப.—அநந்தரம், ஸ்ரீய:பதியாய்க்கொண்டு திருவாட்டாற்றிலே நின்றவன், என்நெஞ்சை ஒருகாலும் பிரிகிறிலனென்கிறார்.

திகழ்கின்றதிருமார்பில் - ஸ்வாபாவிகமாக விளங்குகிற திருமார்பில், திருமங்கைதன்னோடும் - நித்யயௌவந ஸ்வபாவையான லக்ஷ்மியோடேகூட, திகழ்கின்ற திருமாலார் - விளங்குகிற ஸ்ரிய:பதியானவன், சேர்விடம் - (தான்) நித்யவாஸம்பண்ணுகிறவிடம், தண் - ப்ரமஹரமான, வாட்டாறு - திருவாட்டாறு; ("தாபஹஸவா" என்கிறபடியே), புகழ்நின்ற - ஸௌஷ்ட்வகீர்த்திக்கு வாஸஸ்தாநமான, புள் - பெரியதிருவடியை, ஊர்தி - நடத்துவானாய், (இவ்வாஹநபலத்தாலே), போர்-யுத்தோத்வலரான, அரக்கர் - ராக்ஷஸருடைய, குலம் - திரளை, கெடுத்தான் - நசிப்பித்தவன், என்னெஞ்சத்து - ஹேயமான என்னெஞ்சிலே, இகழ்வின்றி - ஒரு அநாதரமின்றியே, எப்பொழுதும் - ஸர்வகாலமும், பிரியான் - பிரிகிறிலன்.

இ.—ஒன்பதாம்பாட்டில், அத்யந்தம் பூர்ணனான தான் இகழாதே என் மநஸ்ஸை ஸர்வகாலமும் விடுகிறிலன்; ஒருவனுடைய வ்யாமோஹமே! என்று ப்ரீதராகிறார்.

[திகழ்கின்ற இத்யாதி] - வெறும்புறத்திலே விளங்காநிற்கிற திருமார்விலே யிருக்கிற பிராட்டியோட்டைச் சேர்த்தியழகாலும் விளங்காநின்றுள்ள ஸ்ரீய:பதியான

† 'புகழ்கின்ற' என்று வழங்குகின்றனர் சிலர்.

வன் சேரும்ஸ்தாநம் ப்ரமஹாமான வாட்டாறு. ஸ்ரீய:பதியான வத்தத்தோபாதி போருமாய்த்து திருவாட்டாற்றைக் கலவிருக்கையாக வுடையனுகையும். [புகழ்நின்ற இத்யாதி] - புகழுக்கெல்லாம் ஸ்தாநமான பெரிய திருவடியை வாஹநமாகவுடையவன். புகழடங்கலும் பெரிய திருவடி பக்கலிலேயாய், அவனையுடையவ னென்னும் புகழே யாய்த்து இவனுக்கு உள்ளது. [போரரக்கர் குலம் கெடுத்தான்] - செவ்வைப்பூசலிலே ராக்ஷஸவர்கத்தைக் குலமாக முடித்தான். "ஸம்ஸாரி" என்று இகழாதே ஸர்வகால மும் விடுகிறிலன்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு அத்யந்தம் பூர்ணனானதான் இகழாதேஎன்மநஸ்ஸை ஸர்வகாலமும் விடுகிறிலன்: ஒருவனுடைய வ்யாமோஹமே! என்று ப்ரீதராகிறார்.

[திகழ்கின்றவித்யாதி] - வெறும்புறத்திலே விளங்காநின்றுள்ள திருமார்விலே எழுந்தருளியிருக்கிற பெரிய பிராட்டியாரோட்டைச் சேர்த்தியழகாலும் விளங்கா நின் றுள்ள ஸ்ரிய:பதியானவன். அல்லாதாரையும் ஸ்ரீமான்களென்று சோல்லுமிறே ஔப சாரிகமாக; அப்படியல்ல இங்கு; * திருமங்கை தன்னோடும் திகழ்கையாலே ஸ்ரிய:பதி யென்று பேரையுடையவன். இந்த ரேஃமும் ஒரு ப்ரயோஜநமில்லை; திருமாலானவ னென்றபடி; "புள்ளூர்தி" என்றவோபாதி. [சேர்விடம் தண்வாட்டாறு] - ஸ்ரிய:பதித் வத்தோபாதியும் போருமாய்த்து அவ்வூரை இருப்பிடமாகவுடையனாயிருக்கிறவதுவும். [புகழ் இத்யாதி] - புகழெல்லாம் தன்பக்கலிலே கிடக்கும்படியிருக்கிற பெரியதிருவடி - வாஹநம். புகழடங்கலும் கிடப்பதுஅவன்பக்கலிலே; அத்தையுடையனேன்கிற இதுவே இவனுக்குளற்றம். [போர் இத்யாதி] - செவ்வைப்பூசலிலே ராக்ஷஸஜாதியைக் குலமாக முடித்தான். [இகழ்வுஇத்யாதி] - "ஸம்ஸாரி" என்று பிற்காலியாதே, ஒரு கார்யப்பாட் டாலே செய்தானாய், பின்பு விட்டுக் கைப்பிடிக்கையன்றிக்கே ஸர்வகாலமும் விடுகிறி லன். பித்தோபஹதர் சந்தநபங்கத்தினின்றும் கைவாங்கமாட்டாதாற்போலே, க்ஷண காலமும் பிரியமாட்டுகிறிலன். (௯)

ஒன்பதாம்பாட்டு.—திகழ்கின்ற இத்யாதி. "திருமாலார்" என்று தொடங்கி "எப்பொழு தும் பிரியானே" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - அத்யந்தம் இத்யாதி. "பிரியானே" என்றத்தைப்பற்ற - ப்ரீதராகிறார் என்றது.

"திருமாலார்" என்னுநிற்க "திருமங்கை தன்னோடும்" என்றதுக்குக் கருத்தேதென்ன - அல்லாதாரையும் இத்யாதி வாக்யத்ரயம். இந்த ரேஃம் - "திருமாலார்" என்றவிடத்தில் ரேஃம்: சப்தத்தாலே - †"வாட்டாற்றூர்க்கு" என்று கீழ்ச்சொன்ன ரேஃத்தை ஸமுச்சயிக்கிறது. புள்ளூர்தியென்றவோபாதி என்றது - "புள்ளூர்தி" என்கிற திருநாமம்போலே "திருமால்" என் கிற திருநாமமும் முக்யமென்றபடி. "திருமாலார்" என்றத்தோடே "சேர்விடம் தண்வாட்டாறு" என்றத்தையும் கூட்டிஹாவம் - ஸ்ரிய:பதித்வத்தோபாதியும் இத்யாதி. "புகழ்நின்றபுள்" என்ற துக்கர்த்தம் - புகழெல்லாம் இத்யாதி. புகழ்நிற்பது அவன்பக்கலிலேயானல் ஈஶ்வரனுக்கு வாசியே தென்ன - புகழடங்கலும் இத்யாதி. போர் - போரிலே, யுத்தத்திலே. "இகழ்வின்றி" என்ற துக்கும் "எப்பொழுதும்" என்றதுக்கும் ஹாவம் - ஸம்ஸாரி இத்யாதி. இகழ்தல் - விடுதல். ஸத் ருஷ்டாந்தமாக விவரணம் - பித்தோபஹதர் இத்யாதி. சேர்விடமான தண்வாட்டாற்றிலேயிருக் கிற - புகழ்நின்ற புள்ளூர்தி என்றந்வயிப்பது. (௯)

---

† இதைப் பார்க்கும்போது எட்டாம் பாசுரத்தில் வாட்டார்க்கு என்றுபாடமிருக்குமோ என்று ஒரெண்ணம் தோன்றுகின்றது.

பத்தாம் பாட்டு.

பிரியாதாட்செய்யென்று பிறப்பறுத்துஆளறக்கொண்டான்
அரியாகிஇரணியனை ஆகங்கீண்டான்அன்று
பெரியார்க்குஆட்பட்டக்கால் பெறாதபயன்பெறுமாறு
வரிவாள்வாயரவணைமேல் வாட்டாற்றான்காட்டினனே.

ஆ.—(பிரியாது.) - இனியொருகாலமும் தன்னைப்பிரியாதே ஸர்வசேஷ வ்ருத்தியையும் பண்ணென்றுகொண்டு என்னை அநந்யார்ஹசேஷமாகக் கொண்டான் இன்று; அரியாகிஇரணியனை ஆகங்கீண்டான்அன்று; பெரியார், தங்களை ஆஶ்ரயித்தவர்களுடைய சிறுமையும் கொடுக்கப்படுகிற பொருளின் சீர்மையும் பாராதே, அவர்களுக்கு "இனியில்லை" என்னும் சீரியபொருளைக் கொடுப்பாரென்னுமிடம், வரிவாள் வாயரவணைமேல் வாட்டாற்றான் என்பக்கலிலே காட்டியருளினனென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், மஹாத்மாக்கள் சிலரை விஷயீகரிக்கப்புக்கால் ஒருவர்க்கும் கிடையாத சீரியபொருளை அவர்களளவும்பாராதே கொடுப்பர் என்னும் இவ்வர்யஸ்யிதியை, வரிவாள் வாயரவணைமேல் வாட்டாற்றான் என்பக்கலிலே காட்டியருளினன் என்கிறார்.

[பிரியாது என்றுதொடங்கி] - எனக்காக ஹிரண்யனுடைய ஹ்ருதயத்தைப் பிளந்தான் அன்று; இன்று "எனக்கேயாட்செய்" என்று எம்மாவீட்டிலே நான் ப்ரார்த்தித்தபடியே என்னை அடிமைகொண்டான். வாள் - ஒளி. உஹயவிபூதியிலும் தம்மையொழியத் திருவாய்மொழி பாடப்பெற்றாரில்லை என்று இவர்க்குக் கருத்து.

ப.—அநந்தரம், பெரியவர்கள் எதிர்த்தலையில் சிறுமைபாராதே தம்தரத்திலே உபகரிப்பாரென்னும் இத்தை எனக்கு ப்ரகாசிப்பித்தானென்கிறார்.

பிரியாது - யாவதாத்மஹாவி பிரியாதே, ஆட்செய் - அடிமைசெய், என்று - என்றுசொல்லி, பிறப்பு - அதுக்கு விரோதியான ஜந்மஸம்பந்தத்தை, அறுத்து -, அற - மிகவும், ஆட்கொண்டான் - அடிமைகொண்டவனாய், அன்று - (பெற்றதமப்பனாலே ப்ரஹ்லாதன் ஈடுபட்ட) அன்று, அரியாகி - நாஸிம்ஹமாய், இரணியனை - ஹிரண்யனுடைய, ஆகம் - ஶரீரத்தை, கீண்டான் - பிளந்தவனாய், வரி - வரியையும், வாள் - ஒளியையுமுடைத்தாய், வாய் - வைஹுமுவமான, அரவணைமேல் - திருவரவணையின் மேலே, வாட்டாற்றான் - திருவாட்டாற்றிலே கண்வளர்ந்தருளுகிறவன், பெரியார்க்கு- பெரியவர்களுக்கு, ஆட்பட்டக்கால் - அடிமைப்பட்டால், பெறாத - பெறுதற்கரிதான, பயன் - ப்ரயோஜநங்களையும், பெறும்ஆறு - பெறும் ப்ரகாரத்தை, காட்டினன் - காட்டினான்.

இ.—பத்தாம்பாட்டில், மஹாபுருஷர்களை யடைந்தால் எதிர்த்தலைபாராதே தங்கள்தரத்தைக் கொடுப்பர்கள் என்னும் அர்த்தத்தை, திருவாட்டாற்றில் நாயனார் என்பக்கலிலே காட்டினார் என்கிறார்.

[பிரியாது இத்யாதி] - 'நமக்குப்பிரியாதே அடிமைசெய்' என்று அருளிச்செய்து, விரோதியையும்போக்கி, நித்யகைங்கர்யத்தையும் கொண்டான். "எனக்கே

யாட்செய்'' என்னவேண்டுமென்று எம்மாவீட்டிலே நாம் ப்ரார்த்தித்தத்தையும் செய்தான்: பொய்ந்நின்ற ஞாநத்திலே அபேக்ஷித்தத்தையும் செய்தான்: ''தனக்கேயாக'' என்றத்தையும் நமக்குச்செய்தான். [அரியாகி இத்யாதி] - தன்னையழியமாறி ஹிரண்யனுடைய முருட்டுடலை அநாயாஸேந கிழித்தான். [அன்று] - அச்செயலும் ப்ரஹ்லாதனுக்கு அன்று; எனக்காகச் செய்தான் என்கிறார்: இன்று ''க்ரியதாமிதி'' என்கிறபடியேஎன்விரோதியைப்போக்கி நித்யகைங்கர்யத்தைக்கொண்டான். [பெரியார்இத்யாதி] - மஹாபுருஷர்களை ஆஶ்ரயித்தால் ஸுதுர்லபமான ப்ரயோஜநத்தைப்பெறுவர்களென்னும் அர்த்தத்தை, வரியையும் ஒளியையும் வாயையுமுடைய திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிற திருவாட்டாற்றில் நாயனார் என்பக்கலிலே காட்டினார். என்சிறுமை பாராதே தன்தரத்திலே செய்தருளினார். உபயவிபூதியிலும் தம்மைப்போலே திருவாய்மொழி பாடப்பெற்றாரில்லை என்றிருக்கிறார்.

ஈடு.—பத்தாம்பாட்டு. மஹாபுருஷர்களையடைந்தால் எதிர்த்தலை பாராதே தங்கள் தரத்தைக் கொடுப்பர்களென்னும் இவ்வர்த்தத்தை, திருவாட்டாற்றில் நாயனார் என்பக்கலிலே காட்டினாரென்கிறார்.

[பிரியாதுஇத்யாதி] - 'நமக்குப்பிரியாதே அடிமைசெய்' என்றருளிச்செய்து, விரோதியையும்போக்கி, நித்யகைங்கர்யத்தையும் கொண்டான்; ''எனக்கேயாட்செய்'' என்னவேணுமென்று நாம் * எம்மாவீட்டிலே ப்ரார்த்தித்தபடியே செய்தான். ''இங்நின்ற நீர்மை இனியாமுறாமை'' என்று*பொய்ந்நின்றஞானத்தில் அபேக்ஷித்தபடியே பிறப்பறுத்தான். ''தனக்கேயாக'' என்று*எம்மாவீட்டிலே ப்ரார்த்தித்தபடியே ஆளறக்கொண்டான். [அரியாகிஇத்யாதி] - இதுக்கு முன்பே தமக்குப் பண்ணிற்றொரு உபகாரத்தைச் சொல்லுகிறார். [அரியாகி] - ஸ்ரீநரஸிம்ஹமாய் ஹிரண்யனுடைய முருட்டுடலை அநாயாஸேந கிழித்தான். [அன்று] - அன்றுஅப்படி செய்தான்; இன்று இப்படிசெய்தான். **''க்ரியதாமிதிமாம்வத''** (க்ரியதாமிதிமாம்வத) என்கிறபடியே என்விரோதியைப்போக்கி நித்ய கைங்கர்யத்தைக் கொண்டான். ''முகப்பே கூவிப்பணிகொள்ளாய்'' என்றிறே இவர் ப்ரார்த்தித்தது. [பெரியார்இத்யாதி] - மஹாபுருஷ ஸமாஶ்ரயணத்தாலே துர்லபமான ப்ரயோஜநத்தைப் பெறுவர்களென்னும் அர்த்தத்தை, வரிவாள்வா யரவணைமேல் வாட்டாற்றான் என்பக்கலிலே காட்டினான். **''மஹாத்மநாம் ஸம்ஶ்ரயஸ்ஸ்யோபதேசா...**

பத்தாம்பாட்டு.—பிரியாது இத்யாதி. ''பெரியார்க்கு ஆட்பட்டக்கால்'' இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - மஹாபுருஷர்களை இத்யாதி. தரத்தை - அதிஶயத்தை.

*கீழ்வாக்ய விவரணமாதல், இதுதான் கீழ் இவர் அர்த்தித்தபடியே செய்தானென்கிறாராதல் - எனக்கேயாட்செய் இத்யாதி. ''அற'' என்றது-காலாவதியறுகையாய், நித்யகைங்கர்யம் கொண்டானென்னுதல்; ''அற'' என்று தனக்கேயற்றுத் தீரும்படி கைங்கர்யம் கொண்டானென்னுதல். இதுக்கு ஸூசகஶப்தம் - தனக்கேயாக என்று எம்மாவீட்டில் இத்யாதிவாக்யம். ப்ரஹ்லாதனுக்குச் செய்தது தமக்குச்செய்ததாக நினைத்திருக்கும் இவர் திருவுள்ளத்தை யடியொற்றி யருளிச்செய்கிறார் - இதுக்குமுன்பே இத்யாதி. ''அன்று'' என்றதுக்கு ஹாவம் - அன்று அப்படி இத்யாதி. இன்று செய்ததேதென்ன - க்ரியதாம் இத்யாதி. ''க்ரியதாமிதிமாம்வத'' என்கிறஇது * எம்மாவீட்டிலில்லையேயென்ன - முகப்பே இத்யாதி. ''மஹாபுருஷர்கள் தங்களையாஶ்ரயித்தவர்களுக்கு துர்லபமான ப்ரயோஜநத்தைக் கொடுப்பர்கள்'' என்னுமதுக்கு ப்ரமாணம்- மஹாத்மநாம் இத்யாதி. ''ஸோऽஹம் ஸம்ப்ராப்ய துஷ்ப்ராபம்...*

வரவலீக த்ரு திஷ ம தொவி'' (மஹாத்மநாம்ஸம்ஶ்ரயமப்யுபேதோ நைவாவஸீத்த்யதிதுர்க்கதோபி)- மஹாபுருஷஸமாஶ்ரயணம்பண்ணிஞல், பின்னை அவர்கள், கொள்ளுகிறவன்சிறுமைபார்த்தல் கொடுக்கிறதின்பெருமைபார்த்தல் செய்யாதே கொடுப்பர்களென்று இங்ஙனே நாட்டிலே ஒன்றுண்டு; அத்தை என்பக்கலிலே காட்டிஞன். ப்ரஹ்லாதாதிகளைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்டானே ? (க0)

பதிஞேராம் பாட்டு.

காட்டித்தன்கனைகழல்கள் கடுநரகம்புகலொழித்த
வாட்டாற்றெம்பெருமானை வளங்குருகூர்ச்சடகோபன்
பாட்டாயதமிழ்மாலை ஆயிரத்துளிப்பத்தும்
கேட்டாரார்வானவர்கள் செவிக்கினியசெஞ்சொல்லே.

ஆ.—(காட்டி.) - * அயர்வறுமமரர்கள் இத்திருவாய்மொழியைக் கேட்டால் என்படுவரோ? என்கிருர்.

ஓ.—நிஷமத்தில், அயர்வறுமமரர்கள் இத்திருவாய்மொழியைக் கேட்டால் வித்ருஷ்ணராவர் என்கிருர்.

[காட்டி என்றுதொடங்கி] - தன்திருவடிகளைக்காட்டித் தன்னைக் காணப்பெருதே நான்பட்ட மஹாது:க்வத்தைப் போக்கின திருவாட்டாற்று எம்பெருமானை. [வளங்குருகூர் என்றுமேலுக்கு] - ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வாருடைய இசையோடுகூடின தமிழ்த்தொடையான ஆயிரந்திருவாய்மொழியிலும், செவிக்கு இனிதாய்ச்செவ்வியசொல்லான இத்திருவாய்மொழியை.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக இதினுடைய நித்யஸூரிபோக்யதையை யருளிச்செய்கிருர்.

தன் கனைகழல்கள் - (நிரதிஶயபோக்யமாம்படி ஶப்தோத்தரமான வீரக்கழலையுடைய) தன்திருவடிகளை, காட்டி-, கடு - துஸ்ஸஹமான, நரகம் புகல் - ஸம்ஸாரநிரயப்ரவேஶத்தை,ஒழித்த-,வாட்டாறு - திருவாட்டாற்றில், எம்பெருமானை - ஸ்வாமியானவனைப்பற்றி, வளம் - அழகி , குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடைய, பாட்டாய் - பாட்டாயிருக்கிற, தமிழ்மாலை - தமிழ்த்தொடையான, ஆயிரத்துள் -,செவிக்குஇனிய-செவிக்கு மதுரமாய், செஞ்சொல்- (காணத்ரயமும் ஏகரூபமாகையாலே)செவ்வியசொல்லாயிருக்கிற, இப்பத்தும் - இவைபத்தையும், வான

வதிதஸ்யவிஷ்ணோ+ மஹாத்மநாம்ஸம்ஶ்ரயம் ... நைவாவஸீதத்யதிதுர்க்கதோவி'' இதி விஷ்ணுதர்மே க்ஷத்ரபந்தூபாக்யானே. விவரணம்-மஹாபுருஷ இத்யாதி. பெறுதபயன் பெறுமாறு - பெறப்போகாத புருஷார்த்தத்தையும் பெறுவர்களென்னு மர்த்தத்தையென்று ஸப்தார்த்தம். இது ப்ரஹ்லாதாதிகளுக்கு மில்லையோ? அவர்களைப்பற்ற இவர்பெற்ற அதிஶயமேதென்ன - ப்ரஹ்லாதாதிகளை இத்யாதி; இது "ஆகங்கீண்டான்" என்றத்தைக் கடாக்ஷித்து. அன்று - அரியாகி இரணியனை யாகங்கீண்டான்; இன்று - பிரியாதாட்செய்யென்று பிறப்பறுத்தாளறக்கொண்டான்; பெரியார்க்காட்பட்டக்கால் இத்யாரப்யாந்வய:. (க0)

† மஹாத்மநாமாஶ்ரயம் என்றும்பாடம் காண்கிறது.

வர்கள் - நித்யஸூரிகள், கேட்டுஆரார் - கேட்டு (ஒருகாலும்) த்ருப்தராகார். இது கலிவிருத்தம். தாழிசையுமாம்,

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அநுபவிக்க உரியார் நித்யஸூரிகள் என்கிறார்.

[தன்கனைகழல்கள்காட்டி] - ஸ்வரூபகுணங்களை ப்ரகாசிப்பிக்கிற வடிவைக் காட்டி ஸம்ஸாரஸம்பந்தத்தைத் தவிர்த்தஎன்னுதல். தன்னைக்காணப்பெறாத து:க்கத்தைப்போக்கினவன் என்னுதல். திருவாட்டாற்றில் என் நாயனை. [வளம்] - ஸம்ருத்தி. [பாட்டாய தமிழ்மாலை] - 'பாட்யே கேயே ச மதுரம்'' என்கிறபடியே இசையோடே புணர்ப்புண்ட தமிழ்த்தொடை. நித்யஸூரிகள் இத்தைக்கேட்டால் பர்யாப்தராகார். இப்படிபடுகிறது உள்ளீடானவன் சீலத்தாலேயோவென்னில்;— பாசுரத்துக்காகவென்கிறது. ''ஸம்ப்ரவேமதுரம்'' என்கிறபடியே செவியே தொடங்கி ரஸிக்கும். [செஞ்சொல்லே] - நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்ட சொல்லு. ''சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்'' என்று,''செந்தமிழ்ப்பத்தும்'' என்றாரிறே.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை யநுபவிக்கவுரியார் நித்யஸூரிகளென்கிறார்.

[காட்டித்தன்கனைகழல்கள்] - நிர்ஹேதுகமாகத் தன்ஸ்வரூபரூபகுண விபூதிகளை ப்ரகாசிப்பிக்கிற வடிவைக்காட்டி. [கடுநரகம்புகலொழித்த] - ''இங்கின்றநீர்மை இனியாமுறாமை'' என்று அபேக்ஷித்தபடியே செய்தானாய்த்து. அறிவுடையார்க்குப் பொறுக்கவோண்ணாத நரகம் ஸம்ஸாரமிறே. [வளம்]-அழகியதான திருநகரியைத் தம்மதாக வுடையரான ஆழ்வார். [பாட்டாய இத்யாதி] - ''பாட்யே கேயே ச மதுரம்'' (பாட்யேகேயேசமதுரம்) என்கிறபடியே இசையிலே புணர்ப்புண்ட திருவாய்மொழி ஆயிரத்திலும் இப்பத்தையும் கேட்டு. [ஆரார்வானவர்கள்] - இத்தைச் சொல்லக்கேளாநின்றால் ''இன்னம்சொல், இன்னம்சொல்'' என்னுமித்தனைபோக்கி, கேட்ட அம்சத்தாலே த்ருப்திபிறவார்க ளாய்த்து. ஸௌலப்யத்துணங்களை யநுபவித்து, அதுக்குப் போக்குவிடுகைக்குப் பாசுரமின்றிக்கே விம்மல் பொருமலாய்ப் படுகிறவர்கள், இப்பாசுரம் கேட்டால் விடார்களிறே. அதுக்கு ஹேதுவேன்? அவனுடைய சீலகுணநுபவம்பண்ணியோவென்னில் ; இப்பாசுரத்துக்குத் தோற்றேன்கிறார். [செவிக்கினிய] - ''ஸம்ப்ரவேமதுரம்'' (ஸம்ப்ரவேமதுரம்) என்கிறபடியே செவிவழியேபுக்கு நெஞ்சுக்கு இனிதாகையன்றிக்கே, செவிப்பட்டபோதேபிடித்து ரஸிக்கையாலே. அதுக்கடி யென்னேன்னில்,— [செஞ்சொல்லே] - நினைவும் சோலவும் செயலும் ஒருபடிப்பட்டிருக்கையாலே. ''சிந்தை

நிகமம் - காட்டி இத்யாதி. ''கேட்டாரார் வானவர்கள்'' இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழியை இத்யாதி.

கனை - ஆபரணத்வநி. ''கழல்'' என்றது - திருமேனிக்கும் உபலக்ஷணம். ''காட்டித் தன்கனைகழல்கள்'' என்றதுக்கு பாவம் - நிர்ஹேதுக இத்யாதி. * கடுமைக்கு பாவம் - அறிவுடையார்க்கு இத்யாதி. பாட்டாய - கானரூபமான. ''பாட்டாய'' என்றதுக்கு வாஸனை - பாட்யே இத்யாதி. புணர்ப்புண்ட - கட்டுண்ட. ''ஆரார்'' என்றதுக்கு பாவம் - இத்தைச்சொல்ல இத்யாதி. அவர்களப்படி அத்ருப்தராயிருப்பர்களோவென்ன - ஸௌலப்யத்துணங்களை இத்யாதி. விம்மல் பொருமல் - அத்யுந்மஸ்தக ப்ரீதியால்வந்த சரீரவிகாரம். மேலுக்கவதாரிகை - அதுக்கு ஹேது இத்யாதி. ''செஞ்சொல்'' என்றால் கரணத்ரயைகரூப்ய வாசகமாமோவென்ன - சிந்தையாலும்

யாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே" என்று "செந்தமிழ்ப்பத்தும்" என்றாரிறே இவர்தாமே. (கக)

இத்யாதி. 'காட்டித்தன்' இத்யாரப்ய, 'ஆயிரத்திலும்' வைத்துக்கொண்டு, 'செவிக்கினிய செஞ்சொல்லான - இப்பத்தும் கேட்டு - வானவர்கள் - ஆரார்' இத்யந்வய:. "ஏவம் பஹுவிதாம் சிந்தாம் சிந்தயித்வா மஹாகபி: । ஸம்ஶ்ரவே மதுரம் வாக்யம் வைதேஹ்யா வ்யாஜஹார ஹ" இதி ஸுந்தரகாண்டே. (௩க - க) (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.—வைகுண்டயாநவிஷயம் ஸ்வீயம் தத்ஸங்கல்பவிதயேநவியாதாகாரே । யஸ்ம்ருந்தாநி:ஸ்ப்ருஹோதிதோநா பஹுவைஷ்டவாத்ஸ்யாயிகாஸ்வவிஷயோபவக்த்ருதீஸ்வீயா: ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—பக்த்யாஸ்வாங்க, கௌஶவஸ்வாத்ரஸ்ரவிவ, ததாஶ்ரீஶநாராயணஸ்வாங்க, ஸந்நிஸ்வாஸ்தாணுவாந, ஸ்மிதததாஜஸ்வீவாம்ஜநீயஸ்வஹாவாங்க । ஸஹோஜாக்ஷஸ்வ, ஸோவிந்த, உத்ஸாயஶ: ஶ்ரீவதிஸ்வாதிஹாவை: ஶ்ரீஶாந்தீவேராக்ஷ்யஶோயம்ஸ்வதவிதாரணைவதிதாநாஸ்யஹாஷி ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி

அருளாலடியிலெடுத்தமாலன்பால்
இருளார்ந்ததம்முடம்பையிச்சித்து — இருவிசும்பில்
இதனுடன்கொண்டேக இவரிசைவுபார்த்திருந்த
சுத்திசொல்லும்மாறன்செஞ்சொல்.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானார்திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்.

ஏழாந்திருவாய்மொழி - செஞ்சொல் - ப்ரவேஶங்கள்.

ஆ.—(செஞ்சொற்கவிகாள்.) - தான் சொன்னபடியே செய்யக்கடவனாகச் சமைந்துகொண்டு தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்தருளின எம்பெருமான் தம்மோடுகலந்த கலவியாலே தமக்குப்பிறந்த நிரவதிகப்ரீத்யதிஶயத்தாலே;

ஒ.—ஏழாந்திருவாய்மொழியில், இப்படி எம்பெருமான், ஆழ்வார் தம்பக்கலிலே அத்யபிநிவிஷ்டனாய், அவர் விதித்தபடியே செய்யக்கடவனாயிருந்துவைத்து, தன்னுடைய சாபலாதிஶயத்தாலே இவரை இத்தேஹத்தோடேகூடத் திருநாட்டிலே கொடுபோகையிலே மிகவும் அபிநிவிஷ்டனாய், இத்தையறியில் இவர் இசையார் என்று பார்த்து, இவரைக்கொண்டு திருவாய்மொழி பாடுவிடபாரைப்போலே புகுந்து, இவருடைய திருமேனியிலும் இவர்தம்மோடுகலந்து அத்யபிநிவேஶத்தைப்பண்ணி, இவ்வுடம்போடேகூடத் திருநாடேறக் கொடுபோகையிலே அவன் அபிநிவேஶிக்கிறபடியையறிந்து, "இவன் இப்படி அபிநிவேஶிக்கில் ஒருநாளும் ப்ரக்ருதிவிஶ்லேஷத்துக்கு உபாயமில்லை. ஆனபின்பு, அவனுடைய அநுஸவத்துக்கு விரோதியான ப்ரக்ருதிஸம்பந்தத்தை அவனையிட்டு இங்கே அறுப்பித்துக் கொள்ளவேணும்" என்று பார்த்தருளி, "சதுர்விம்ஶதிதத்த்வாத்மக ப்ரக்ருதி தத்த்வத்தோடுள்ள ஸம்பந்தத்தை யறுத்து என்னைக் கொடுபோகவேணும்" என்று ப்ரார்த்திக்க, உம்முடைய உடம்

பொழிய வேறு எனக்கு ப்ராப்யமுண்டோ?" என்று அவன் நிர்பந்திக்க, "என்பக்கலுண்டான விஷயீகாரத்தாலேயன்றோ இவ்வுடம்பில் அபிநிவேஶம் பண்ணுகிறது? ஆனபின்பு, எனக்காக இதில் நசையைவிட்டு அருளவேணும்" என்று இவர் ஶரணம் புக்கிரக்க, அவனும் "அப்படியேசெய்கிறோம்" என்றுஇசைய, அத்யந்தஹ்ருஷ்டராய், அவனுடைய ஸௌஶீல்யாதிகுணங்களிலே அழுந்தி, "அவனுக்கு அடிமைசெய்யப் புகில் அவனுடைய ஸௌஶீல்யாதிஶயத்தாலே பிழைக்கவொண்ணாது: ஆனபின்பு, தந்தாமை வேண்டியிருப்பார் அவனுடைய குணத்திலே அகப்படாதே பரிஹரித்து அடிமைசெய்யுங்கோள்" என்று ப்ரீத்யதிஶயத்தாலே அருளிச்செய்கிறார்.

ப.—ஏழாந்திருவாய்மொழியில், கீழ் இவர்க்குப் பரமபதத்தைக் கொடுக்கையிலே உத்யோகித்த ஸர்வேஶ்வரன் இவர் முடியிலே திருவடிகளை வைத்துத் திருவுள்ளத்திலே பூர்ணமாகப் புகுந்திருந்து, "விரைகுழுவுநறுந்துளவம் மெய்ந்நின்றுகமழும்" என்னும்படி திருமேனி முழுக்கத் திருத்துழாய் பரிமளமாம்படியாக இவருடைய ஶரீரத்தோடு அந்தஃகரணத்தோடு மற்றுமுள்ள அவயவங்களோடுவாசியற அத்யபிநிவிஷ்டனாய் ஆதரிக்கிறபடியைக்கண்டு, இவ்வாதராதிஶயத்துக்கு ஹேதுவான அவனுடைய ஆஶ்ரிதவிஷயமான அபிநிவேஶத்தையும், அதிஶயிதஸௌக்யத்வத்தையும், ஆஶ்ரிததேஹத்திலாதரத்தையும், அதில்அத்யந்தாபிநிவேஶத்தையும், ரஸிகத்வத்தையும், ஸர்வாதிகத்வத்தையும், ஆஶ்ரிதார்த்த தேஶவாஸத்தையும், ஸர்வப்ரகாரஸம்ஶ்லேஷத்தையும், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஹேதுத்வத்தையும், அபேக்ஷாபராதீநத்வத்தையும் அநுஸந்தித்து, "ஏவம்விதனான ஸர்வேஶ்வரனுடைய ஆதராதிஶயமிருந்தபடியால், நாம் "இனியாமுறாமை" என்று உபேக்ஷித்த தேஹாதிகளையும் விளம்பமறக் கொண்டுபோவாரைப் போலேயிராநின்றது; அஸ்திரமாய், தோஷதுஷ்டமாகையாலே அபுருஷார்த்தமாய், அநுபவவிரோதியாகையாலே அநபிமதமாயிருக்கிற இத்தை நம்பக்கல்ஆதரத்தாலே விரும்பாநின்றான்: இத்தையறிவித்தும் நாம் அவனை அர்த்தித்தும் விடுவித்துக் கொள்ளுவோம்" என்று தெற்கில் திருமலையிலே அவனையபேக்ஷிக்க, அதுக்காக அவன் நிவர்த்திப்பிக்கையிலே உத்யுக்தனாம்படியைக் கண்டு ஹ்ருஷ்டராகிறார்.

இ.—ஏழாந் திருவாய்மொழியில், "விதிவகையே" என்கிறபடியே ஆழ்வார் விதித்தபடியே செய்வானும்படி இவர்க்குப் பரதந்த்ரனாய்வைத்து, தன்னுடைய சாபலாதிஶயத்தாலே "தலைமேலதாளிணைகள்" என்றும், "நறுந்துளவம் மெய்ந்நின்றுகமழும்" என்றும் சொல்லுகிறபடியே இவருடைய திருமேனியை மிகவும்விரும்பி, இத்தேஹத்தோடேகூடப் பரமபதத்தில் கூடக்கொண்டு போகையிலே அபிநிவேஶிக்கிற படியைக்கண்டு, "நாம் பொய்ந்நின்ற ஞானத்திலே 'கழித்துத் தரவேணும்' என்று அபேக்ஷித்தபோதே செய்யாதொழிந்தது நம்மைக்கொண்டு ப்ரபந்தம் தலைக்கட்டுகைக்காக என்றிருந்தோம்: அது ஒருவ்யாஜமாய் ஶரீரத்தையே விரும்புகிறானாயிருந்தது. இதுக்குஅடி நம்முடைய ஶரீரமென்று நம்பக்கல் விருப்பத்தாலே விரும்புகிறானித்தனை; இது தோஷப்ரசுரமென்றும் அறிகிறிலன்: இது நமக்கு அநபிமதமென்றும் அறிகிறிலன்:†உபசயாத்மகமாகையாலே அஸ்திரத்வாதி தோஷப்ரசுரமென்றும் த்வதநுபவ விரோதியாகையாலே அநபிமதமென்றும் அறிவித்து, இத்தைக்கழித்துத்தரவேணும்

† "என்றுபார்த்து" என்றாற்போலச் சிலபதங்களைக்கூட்டினாலொழிய அந்வயிக்காதென்று தோன்றுகின்றது.

என்று ப்ரார்த்திக்க, "உம்முடைய உடம்பொழிய நமக்கு ப்ராப்யமுண்டோ? உம்முடைய உத்தேஶ்யத்தை நீர் விடாநின்றீரோ?" என்று அவன் நிர்பந்தியிக்க, "நீ என் பக்கலுண்டான விருப்பமிறே என்ஶரீரத்தை விரும்புகிறது: இது எனக்கு அத்யந்தம் அநபிமதம்: எனக்காக இதில் நசையைவிட்டு அருளவேணும்" என்று ஶரணம்புக்கிரக்க, தனக்கு இத்தைவிடுகை ப்ரியமன்றிக்கே யிருக்கச்செய்தேயும், இவரைக் குறித்துப் பரதந்த்ரனாகையாலே "அப்படிசெய்கிறோம்" என்று இசைய, "தனக்கு அபிமதமாயிருக்க நாம் சொன்னபடி செய்வதே!" என்று அத்யந்தம் ஹ்ருஷ்டராய், "இவனுடைய ஶீலாதிகுணங்களிலே அழுந்தி இவ்விஷயத்திலே அநுபவிக்க இழிவார் ஐஶ்வர்யத்திலே இழியப்பாருங்கோள்: தந்தாமை வேண்டியிருப்பார் அவனுடைய ஶீலாதிகுணங்களிலே அகப்படாதே கொள்ளுங்கோள்" என்று ப்ரீத்யதிஶயத்தாலே உபதேஶித்துத் தலைக்கட்டுகிறார்.

ஈடு.—"விதிவகையே" என்கிறபடியே அவன் தம்மைக்குறித்துப் பரதந்த்ரனாய் நிற்கிறபடியை யநுஸந்தித்தார். அவ்வழியாலே "விரைகுழுவுநறுந்துளவம்மெய்ந்நின்று கமழுமே" என்றும் "தலைமேலதாளிணைகள்" என்றும் அவன்தன் திருமேனியோடேபுகுந்து கலந்தபடியைப் பேசினார்.

தம்மோடேவந்து கலந்து தம்மைக்குறித்துப்பரதந்த்ரனாய் திருமேனியை விடமாட்டாதே அவன் பண்ணுகிற அபிநிவேஶத்தைக்கண்டு; "இங்கின்ற நீர்மைஇனியாமுறுமை" என்று நாம்அடியிலேயர்த்திக்கச்செய்தேயும் இங்கு நம்மைவைத்தது ஒருகார்யபுத்த்யாவாகாதே என்றிருந்தோம்; அதாவது - இப்ப்ரபந்தம் தலைக்கட்டுவித்துக் கொள்ளுகையிறே; அது அவ்வளவிலன்றிக்கே நம்முடம்பு விரும்பி விடமாட்டாமையாலேயாயிருந்தது; இவன் வெறுமுடம்பனாயிருந்தான். "கவிபாடுவித்துக்கொள்ளுகையென்று வ்யாஜமாத்ரம்: ஆநுஷங்கிகஃபலமாய்வந்ததத்தனை; இதுவேஇவனுக்குநினைவு" என்றுபார்த்தார்; "இவன் இவ்வுடம்பை விரும்புகிறது நம்பக்கல் ஆதரத்தாலேயிறே; இப்படி நம்மை விரும்பின இவ்வளவிலே நம் அபேக்ஷிதம் செய்வித்துக்கொள்ளுவோம்" என்று பார்த்து, "தேவர் திருவுள்ளத்திலோடுகிறதேன்?" என்றார்; 'நான்உடம்பனுயே வேறேன்றறியாமல் படுகிறபாடன்றோ, மற்றுண்டோ?" என்றான்; "அங்ஙனேயாகில்: தேவர் இதில் பண்ணியருளுகிற விருப்பத்தைத் தவிரவேணும்" என்று விண்ணப்பஞ் செய்ய; இவர் விலக்கினது மிகவும் அவனுக்கு அபிநிவேஶத்துக்கு உடலாய்த்து; தந்தாமைக் கொண்டு அருமைப்படுத்துவர்களிறே மேல்விழுகைக்காக; அதுபோலேயாய்த்து. இப்படி

செஞ்சொல் ப்ரவேஶ, ஸங்கதிகதநார்த்தம் வ்ருத்தாநுவாதம் - விதிவகை இத்யாதி-ஸங்கதி-தம்மோடே இத்யாதி. *என்றைக்குமென்னையிலே-அவன் தம்மைவைத்ததுக்கு ஹேது கவிபாடுகைக்கென்றருளிச்செய்யாநிற்க, தம் உடம்பில் வ்யாமோஹத்தாலே யென்கிறதென்னென்ன அருளிச்செய்கிறார் - இந்நின்ற இத்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே. வெறுமுடம்பனாயிருந்தான்-கேவலம் தேஹசபலனாயிருந்தானென்றபடி. ஆனால் ப்ரபந்தம் பாடுவிக்கவில்லையோவென்ன - கவிபாடுவித்து இத்யாதி வாக்யத்ரயம். ஆநுஷங்கிகஃபலம்- அப்ரதாநமாக வந்ததென்றபடி. இதுவே - உடம்பை விரும்பிவிடமாட்டாததுவே. விரும்பிவிடமாட்டாமையாலே என்றது-"மாயவாக்கை யிதனுள்புக்கு" இத்யாதியைப்பற்ற. இப்படி விரும்புகிறவனைத் தவிரவேணுமென்றால் கேட்குமோவென்ன அருளிச்செய்கிறார் - இவன் இவ்வுடம்பை இத்யாதி. "மங்கவொட்டு" என்றத்தைப்பற்றி - இதில் பண்ணியருளுகிற விருப்பத்தைத்தவிரவேணும் என்றது. "நன்கென்னுடலம் கைவிடான்" என்றத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் - இவர் விலக்கினது இத்யாதி.

இவன் இதிலே பண்ணுகிற ஆதரத்தைக்கண்டு, "இவனுடைய அபிநிவேஶமிருந்தபடியால் இவ்வுடம்போடே நம்மைக்கொடுபோக நினைத்திருக்கிறான்போலேயிருந்தது ; அப்படிச்செய்தபோது இஸ்ஸம்ஸாரம் நமக்கு நித்யமாய்விடும் ; இங்கேயிருந்து இதுக்கொரு முடிவுகண்டதாமத்தை யிழந்தோமாவோமித்தனை; இத்தைக் கழித்துக்கொள்ளவேணும்" என்றுபார்த்தார்; "என்பக்கற்பண்ணின அபிநிவேஶமாகில் இத்தை விரும்புகைக்கு அடி, எனக்கு இது அநபிமதம் ; தேவரும் இதில்பண்ணுகிற விருப்பத்தைத் தவிரவேணும்" என்ன ; "நீர் உம்முடைய உத்தேஶ்யத்தை விடாதவோபாதி நாமும் நம்உத்தேஶ்யத்தை விடுவுதோமோ ?" என்ன ; "இவன் இப்படிவிரும்புகிறது இதினுடைய தோஷதர்ஶநம்பண்ணாமையிறே. இவனை இதில் தோஷதர்ஶநத்தைப் பண்ணுவிப்போம்" என்று பார்த்து, "இதாகிறது உபசயாத்மகமாய் ஹேயமாயிருப்பதொன்று; விரும்பப்படும் ஆத்மாவைப்போலே ஏகரூபமாய் விலக்ஷணமாயிருப்பதொன்றல்ல ; இத்தையுபேக்ஷித்தருளவேணும்" என்றார் ; அதுதானே இவனுக்கு விருப்பத்துக்கு உடலாய்த்து ; அபிமதவிஷயத்திலழுக்கு உகப்பாரைப்போலே "ஸர்வதா இவன் விடமாட்டானாயிருந்தான்; இவன்றன்னைக் காற்கட்டியாகிலும் இக்காற்கட்டை அவிழ்த்துக் கொள்ளுவோம்" என்று பார்த்து, "இதில்பண்ணுகிறவிருப்பத்தை தேவர் தவிரவேணும்" என்று ஶரணம்புக்கார் ; இவர் †சொன்னபடியே செய்யஇழிந்தவனாகையாலே தனக்கு இதிலே மேன்மேல் அபேக்ஷை செல்லச்செய்தேயும் இவர்க்கு இது இப்படி உபேக்ஷாவிஷயமான பின்பு நாமும் இனி இத்தை வருந்தி உபேக்ஷிப்போம்" என்று பார்த்தான். இவர்பக்கல் பாரதந்த்ர்யத்தாலே இத்தையொழிய அவன் கொடுபோவானாயிருந்தான். ஆக, இப்படியாலே தொடங்கின பாரதந்த்ர்யத்தை நிகமித்து, "ஸர்வநியந்தாவாய் ஸர்

*அதெப்படியென்ன - தந்தாமை இத்யாதி. அபிநிவேஶமிருந்தபடியால் என்றது - "ஒருமாநொடியும் பிரியான்" இத்யாதியைப்பற்ற. பலபாட்டுக்களிலும் இவர் தேஹத்தில் அவன் வ்யாமோஹம் பண்ணும் ப்ரகாரம் சொல்லுகையைப்பற்ற பஹுமுகமான உக்திப்ரத்யுக்திகளை யருளிச்செய்கிறார் - என்பக்கல் இத்யாதி. "திருமாலிருஞ்சோலை - கைவிடேல்" என்றத்தைப்பற்ற - நீர் உம்முடைய உத்தேஶ்யத்தை இத்யாதி. இப்ப்ரவேஶத்திலே மூன்றிடத்திலே ஈஶ்வரன் விரும்புகிறதாகவும் இவர் தவிரச்சொன்னதாகவும் சொல்லுகிறது - பலபாட்டுக்களிலும் இவர் திருமேனியில் ஈஶ்வரனுக்கு உண்டான வ்யாமோஹத்தைச் சொல்லுகையாலே. அங்ஙனமன்றிக்கே, 'மங்கவொட்டே" என்றும், பின்னும் "மங்கவொட்டுஉன்மாமாயை" என்றும் சொல்ல, பின்னும் அவன் இதின்தோஷம் அறியமாட்டாமையாலே ஆனைக்குப்பு ஆடுவாரைப்போலே யிருக்க, "பொங்கைம்புலனும்" இத்யாதியாலே தோஷதர்ஶநம் பண்ணுவிக்கையாலே முக்காலருளிச்செய்கிறாரென்றால் நல்லது ; இது பாட்டுவ்யாக்யாநங்களிலே ஸ்புடம். 'இதினுடைய தோஷதர்ஶநமென்று தொடங்கி ஹேயமாயிருப்பதொன்றென்னுமளவும் - "பொங்கைம்புலனும்" இத்யாதியைப்பற்ற. உபசயம் என்றது - அபசயத்துக்கும் உபலக்ஷணம். வ்ருத்திக்ஷயங்களை யுடைத்தாயென்றபடி. காற்கட்டை- விரோதியானவுடம்பை. "மங்கவொட்டு" என்றத்தைப்பற்ற - தவிரவேணும் என்றது. "நங்கள் கோனே" என்று ஶேஷித்வத்தை யநுஸந்திக்கையாலும், "மங்கவொட்டு" என்று ப்ரார்த்திக்கையாலும், "[illegible]"என்றிருக்கையாலே ஶரணம் புக்கார் என்றது. இவர் ப்ரார்த்தித்தால் அத்யபிநிவிஷ்டனானவன் தவிருமோவென்ன - இவர் சொன்னபடியே இத்யாதி. வருந்தி என்றது - "தானுங்காரமாய்ப்புக்கு" என்றதிலே ஸித்தம். "மானுங்காரமனங்கெட" இத்யாதியைப்பற்ற - இத்தையொழிய அவன் கொடுபோவானாயிருந்தான் என்றது. தொடங்கின பாரதந்த்ர்யத்தை நிகமித்து - * அருள்பெறுவாரில் தொடங்கின

† சொன்னபடிஎன்று அடையவளைந்தான்பாடம்.

வாதிகனான ஸர்வேஸ்வரன், தனக்கு இதிலே அபேக்ஷையும் செல்லாநிற்கச்செய்தே, நாம் 'இத்தைத் தவிரவேணும்' என்னத் தவிருவதே! இதொரு ஶீலமிருக்கும்படியே !! இவ்விஷயத்தில் ஒருவரும் இழியாதேகொள்ளுங்கோள் ; இழிந்து நான் பட்டதுவே யமையும்''என்று ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பிறர்க்குச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

முதற் பாட்டு.

செஞ்சொற்கவிகாள்!உயிர்காத்தாட்செய்ம்மின்திருமாலிருஞ்சோலை
வஞ்சக்கள்வன்மாமாயன் மாயக்கவியாய்வந்துஎன்
நெஞ்சுமுயிரும்உள்கலந்து நின்றார்அறியாவண்ணம்என்
நெஞ்சுமுயிருமவையுண்டு தானேயாகிநிறைந்தானே.

ஆ.—எம்பெருமானைக் கவிபாடுகிறவரைக் குறித்து, "நீங்கள் அவனுக்கு அடிமைசெய்யுமிடத்தில் உங்களுயிரைக் காத்துக்கொண்டு அடிமைசெய்யுங்கோள். அவன் தனக்குஅடிமைசெய்வாரை அஸாத்ம்யமாம்படி அதிமாத்ரஸம்ஶ்லேஷத்தைப் பண்ணிபாதிக்குமே:அவர்களுடையஇச்சாநுகுணமாக அடிமைசெய்வித்துக்கொள்ளும் ஸ்வபாவனல்லனே யென்னில் ;—அவன் பாதிக்கும் ஸ்வபாவனாயிருந்துவைத்தே பாதியாதானைப்போலே யிருக்கும் ஒருமஹாவஞ்சகன் கிடீர்கோள்;எங்ஙனேயென்னில்;- என்னை உபகரணமாகக்கொண்டு கவிசொல்லுகையென்னும் வ்யாஜத்தினாலே என்னுள்ளேபுகுந்து கலந்து, "இன்னபடிசெய்தருளினான்" என்று * அயர்வறுமமரர்க்கும் அறிய நிலமல்லாததொருபடி என்னெஞ்சையும் உயிரையும் தன்னுள்ளேயடக்கி, தானேயாம்படி மாள பூஜித்து பரிபூர்ணனானான்''என்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், "திருவாய்மொழி பாடுவித்துக்கொள்ள" என்று ஒரு பேரையிட்டுக்கொடு வந்துபுகுந்து தம்பக்கல் எம்பெருமான் பண்ணின வ்யாமோஹத்தைச்சொல்லி, இவனுக்கு அடிமைசெய்வார் இவன் குணவெள்ளத்திலே அகப்படாதே கொள்ளுங்கோள் என்கிறார்.

[செஞ்சொற்கவிகாள் உயிர்காத்தாட் செய்ம்மின்] -செவ்விய சொல்லையுடைய கவிகாள்! கவிபாடி அடிமைசெய்யுமிடத்தில், உங்களைப் பரிஹரித்துக்கொண்டு அடிமை செய்யுங்கோள். [திருமாலிருஞ்சோலை வஞ்சக்கள்வன்] - "என்கண்ணன் கள்வம் எனக்குச் செம்மாய்நிற்கும்" என்னுமாபோலே மெய்செய்கிறானென்று தோற்றும்படி தெரியாமே வஞ்சிக்கவல்லனாய், அதுக்கடியான மஹாஶ்சர்ய குணசேஷ்டிதங்களையுடையான். [மாயக்கவியாய் என்றுமேலுக்கு] - "அத்யாஶ்சர்யாவஹமான திருவாய்மொழி பாடுவித்துக்கொள்ள" என்று ஒருபேரையிட்டுக்கொண்டு இப்பரிமாற்றத்துக்கு நிலவரானார்க்கும் தெரியாதபடி என்நெஞ்சையும் உயிரையும் உள்ளேபுக்குக் கலந்து அவற்றை பூஜித்து என்அபிமாநத்தைப்போக்கித் தானே எனக்கு அபிமாநியாய் அத்தாலே பூர்ணனானான்.

ஈஶ்வரனுடைய பாரதந்த்ர்யத்தை இத்திருவாய்மொழியிலே நிரூபித்தென்றபடி. "உயிர்காத்தாட் செய்ம்மின்"என்றத்தைப்பற்ற - ஒருவரும் இழியாதே கொள்ளுங்கோள் என்றது.

ப.—முதற்பாட்டில், "கவிபாடுவித்துக்கொள்ள" என்றொரு வ்யாஜத்தாலே ஈஸ்வரன் தம்பக்கல் பண்ணின அபிநிவேசத்தைக் கண்ட ஹர்ஷத்தாலே, தந்தாமை வேண்டியிருப்பார் இவ்விஷயத்திலகப்படாமல் ஆத்மாவை நோக்கிக்கொண்டு அடிமைசெய்யுங்கோளென்று, தாம் பட்ட படியை யருளிச்செய்கிறார்.

திருமாலிருஞ்சோலை - (ஆஸ்ரிதாநுக்ரஹார்த்தமாகத்) திருமலையிலே ஸந்நிஹிதனாய், (அகப்பட்டாருடைய ஸர்வஸ்வத்தையும் அபஹரிக்குமிடத்தில்); வஞ்சக்கள்வன் - அபஹாரகனென்றறியவொண்ணாதபடி வஞ்சித்துஅபஹரிப்பானாய், மா மாயன் -(அதுக்கடியாய் எதிர்த்தலையை மதிமயக்கும்) அத்யாஸ்சர்யமான ரூபகுணாதிகளையுடையனானவன், மாயக்கவியாய் - கவிபாடுவித்துக் கொள்ளுகையாகிற க்ருத்ரிம வ்யாபாரத்தாலேயுளனாய், வந்து - (நாமிருந்தவிடத்திலே தான் அபிநிவிஷ்டனாய்) வந்து, (உள்ளுறை காட்டுவாரைப்போலே), என்னெஞ்சுள்ளும் - என்நெஞ்சுக்குள்ளேயும், உயிருள்ளும் - ஆத்மாவுக்குள்ளேயும், கலந்து - ஒருநீராகக்கலந்து, நின்றார் - பரிஸரவர்த்திகளான லக்ஷ்மீப்ரப்ருதிகளும், அறியாவண்ணம் - அறியாதபடி, அவை - அந்த, (என்), நெஞ்சும் - நெஞ்சையும், உயிரும் - உயிரையும், (பிரித்துக்காணவொண்ணாதபடி), உண்டு - க்ரஸித்து, (அசேதநமான நெஞ்சோபாதி சேதநனுடைய போக்த்ருத்வமும் அஸத்ஸமமாம்படி), தானேயாகி - தானே போக்தாவாய்(ப்பெறும்பேறு பெற்று), நிறைந்தான் - அவாப்த ஸமஸ்தகாமனானான்; செம் - (ப்ரயோஜநமில்லாத) செவ்வையையுடைத்தாய், (ஸ்வயம்ப்ரயோஜநரூபமான), சொல் - சொற்களாலே, கவிகாள் - கவிபாடவல்லவர்களே! உயிர்காத்து - (அவன்கையில் உங்களுடைய) ஆத்மாத்மீயங்கள் அகப்படாதபடி காத்துக்கொண்டு, ஆட்செய்மின் - வாசிகமான அடிமைசெய்யப் பாருங்கோள். அநந்யப்ரயோஜநராய் இழிவார்க்கு ஆத்மாத்மீயங்கள் அவனாலே அபஹ்ருதமாகை அவர்ஜநீய மென்று கருத்து.

இ.—முதற்பாட்டில், "திருவாய்மொழி பாடுவிக்க" என்று ஒரு வ்யாஜத்தாலே புகுந்து தம்பக்கலிலே அவன் பண்ணின வ்யாமோஹத்தைக்கண்டு, இவனுக்கு அடிமைசெய்வார் ஸீலாதி குணங்களிலே அகப்படாதே கொள்ளுங்கோள் என்கிறார்.

[செஞ்சொற் கவிகாள்] — செவ்விய சொல்லையுடைய கவிகாள். கவிக்குச் செவ்வையாகிறது - அநந்யப்ரயோஜநமாயிருக்கை. ப்ரயோஜநத்தைக் கணிசிக்கை கவிக்குக் குடிலமாகையாவது. "இன்கவிபாடும்பரமகவிகள்" என்றும் "செந்தமிழ்பாடுவார்" என்றும் சொல்லுகிற முதலாழ்வார்களையாய்த்து நினைக்கிறது. "பெருந்தமிழனல்லேன்" என்ன, "வாய் அவனையல்லது வாழ்த்தாது" என்கிறவர்களிறே அநந்யப்ரயோஜனர். [உயிர் காத்தாட்செய்ம்மின்] - உங்களை நோக்கிக்கொண்டு நின்று கவிபாடப் பாருங்கோள். கவிபாட்டு வாசிகமான அடிமையாகையாலே, 'ஆட்செய்ம்மின்' - என்கிறார். "ஆட்கொள்வானொத்து என்னுயிருண்ட மாயன்" என்கிறபடியே அடிமைகொள்வாரைப்போலே புகுந்து இத்தலையை யழிக்குமவனாய்த்து; பரிஹரித்துக்கொள்ளுங்கோள்; ஆழங்காலிலே இழிந்து அமிழுமவர்கள் அவ்விடத்திலே கொண்டைக்கோல் நாட்டுமாபோலே, "வம்மின்புலவீர்" என்று முதலிலே ருசியில்லாதாரையும் அழைக்கிற இவர் ஸீலாதிகுணங்களிலே அழுந்தி, இழிகிறவர்களையும் வேண்டாவென்கிறாரிறே ப்ரீதிப்ரகர்ஷத்தாலே. [திருமாலிருஞ்சோலை] - இவ்விஷயத்திலே தாம்

இழிந்து அகப்பட்டபடியை அருளிச்செய்கிறார் மேல். திருமலையில் நிலையும் ஶீலத்துக்கு உடலிறே. [வஞ்சக்கள்வன்] - களவுகாணாநிற்கச் செய்தே மெய்யென்னலாம்படியிருக்கை. "என்கண்ணன்கள்வம் எனக்குச் செம்மாய்நிற்கும்" என்றாரிறே. களவைக் களவுகாணாநிற்கும். [மாமாயன்] - இப்படியறிந்து ஒருவர்க்கும் தப்பவொண்ணாதபடியான ஆஶ்சர்ய குணசேஷ்டிதங்களை யுடையவன். நீரகப்பட்ட துறையேதென்ன;—[மாயக்கவியாய்] - "ஆஶ்சர்யாவஹமான கவி பாடுவித்துக்கொள்ள" என்று ஒருபேரையிட்டுக்கொண்டாய்த்து வந்து கிட்டிற்று; "தண்ணீர்" என்றொருபேரையிட்டு, அபிமத விஷயத்தைக் கிட்டுவாரைப்போலே; கவிபாடுவித்துக் கொள்ளுகையென்றொரு வ்யாஜம், கிட்டுகையே ப்ரயோஜனம். தான் இருந்தவிடத்திலே சென்று நாம் இருக்கையன்றியே, நாம் இருந்தவிடத்திலே தான் வந்து கவிபாடுவித்துக் கொள்ளுகையிறே ஶீலமாவது. வந்து செய்ததென்னென்ன, - [என்னெஞ்சும் உயிருமுள்கலந்து] - நெஞ்சென்று - ஶரீரத்துக்கு உபலக்ஷணம்: உயிர் என்கிறது - ஆத்மாவை; ஶரீரத்தோடு ஆத்மாவோடு வாசியறப்புக்குத் தன்பேறாக அவகாஹியாநின்றான். முறை அத்தலையித்தலையாய் என்னை ஶிரஸா வஹியாநின்றான். [நின்றார் அறியாவண்ணம்] - கலவிக்கு ஏகாந்தரான பிராட்டி, திருவனந்தாழ்வான் முதலானார்க்கும் அஸம்பாவிதமாம்படியாய்த்து என்னோடு கலந்தது. "ஆருயிர்பட்டது எனதுயிர்பட்டது" என்றாரிறே. [என்னெஞ்சுமுயிருமவையுண்டு] - தேஹாத்மவிவேகம்பண்ண அறியாதேயாய்த்து புஜித்தது. சேதநனையும் அசித்தேபோலே பரதந்த்ரனாக்கி புஜித்தான்; "உருவமும் ஆருயிரும் உடனேயுண்டான்" என்கிறபடியே. எனக்கென்ன மாட்டாமைக்கு அசித்தோபாதியாய்த்து சேதநனும். [தானேயாகி] - போகத்தில் இழிகிறபோது இருவராயிழிந்து, எதிர்த்தலையைத் தோற்பித்து, போக்தாவும் அபிமானியும் தானேயானான். [நிறைந்தானே] - அவாப்தஸமஸ்த காமன் ஆழ்வாரைப் பெறுவதற்கு முன்பு குறைவாளனாய், இவரைப் பெற்றபின்பு பூர்ணனானான்; "க்ருதக்ருத்யஸ் ஸுகோத்ஸவ"; இதுவிறே புரையற்ற ஶீலமாவது.

ஈடு.—முதற்பாட்டு. "திருவாய்மொழிபாடுவிக்க" என்றுஒருவ்யாஜத்தாலே புகுந்து தம்பக்கல் அவன்பண்ணின வ்யாமோஹத்தைக்கண்டு, அவனுக்கு அடிமைசெய்வார் ஶீலாதிகளிலே அகப்படாதே கொள்ளுங்கோ ளென்கிறார்.

[செஞ்சொல் இத்யாதி] - செவ்விய சொல்லையுடைய கவிகாள்! கவிக்குச்செவ்வையாவது - அநந்ய ப்ரயோஜநமாயிருக்கை; ப்ரயோஜநத்தைக் கணிசிக்கை கவிக்குக் குடிலமாகையாவது 'இன்கவிபாடும்பரமகவிகள்' என்றும் 'செந்தமிழ்பாடுவார்' என்றும் சொல்லுகிற

முதற்பாட்டு.—செஞ்சொல் இத்யாதி. "திருமாலிருஞ்சோலை வஞ்சக்கள்வன்" என்று தொடங்கி "தானேயாகிநிறைந்தான் - செஞ்சொற்கவிகாள்உயிர்காத்தாட்செய்ம்மின்" என்றவற்றைக் கடாக்ஷித் தவதாரிகை - திருவாய்மொழி இத்யாதி. "ஆய்" என்றத்தைப்பற்ற - ஒருவ்யாஜத்தாலே என்றது.

செவ்வைக்கேடேதென்ன-ப்ரயோஜநத்தை இத்யாதி. "செஞ்சொற்கவிகள்" என்கிறது ஆரையென்ன - இன்கவி இத்யாதி. அவர்கள் அநந்யப்ரயோஜநரோவென்ன - பெருந்தமிழன் இத்யாதி. பெருந்தமிழன் - பெரியதமிழன்; மஹாகவியென்றபடி. நல்லேன் பெரிது - பெரிது நல்லேன். இங்கேயிருந்து கவிபாடுகையாலே நித்யஸூரிகளிலும் மிகவும் நல்லனாயிருப்பேனென்று பாவார்த்தம்; இரண்டாந்திருவந்தாதி எழுபத்துநாலாம்பாட்டு, "யானே தவஞ்செய்தேன்" இத்

முதலாழ்வார்களையாய்த்துநினைக்கிறது. "பெருந்தமிழனல்லேன்" என்று "வாயவனையல்லது வாழ்த்தாது" என்கிறவர்களிறே அநந்யப்ரயோஜநர். [உயிர்காத்தாட்செய்ம்மின்]-உங்களை நோக்கிக்கொண்டு நின்று கவிபாடப் பாருங்கோள். நீங்களுண்டாய்க் கவிபாடவேணுமே. இத்தலையுண்டானாலிறே அத்தலைக்கு மங்களாஶாஸநம்பண்ணலாவது. [ஆட்செய்ம்மின்]-என்கிறார், கவிபாடுகை வாசிகமான அடிமையாகையாலே. *ஆட்கொள்வானொத்தென்னுயிருண்ட மாயனிறே அடிமைகொள்வாரைப்போலே புகுந்து மற்றைப்படியேயாயிருக்கும் பலிப்பது, பரிஹரித்துச்கொள்ளுங்கோள். "ஆழங்காலிலேயிழிந்து† அமிழ்வார் அவ்விடத்தே கொண்டைக்கோல் நாட்டுமாபோலே, கொண்டைக்கோல் நாட்டுகிறார்" என்று சிற்றாள் கொண்டான். உடையவர், "இன்னுருயிரேன்னுமையாலே அவனுயிரைக்காத்தாட்செய் யுங்கோள்" என்றருளிச்செய்வர். அதாவது - அவன் மேல்விழத் தாங்கள் இருய்க்கை யாவது அவனை இழக்கையிறே; ஆனபின்பு அவனுயிரைக் காவுங்கோள். "இவ்விடம் பரப்புத்துறை, இவ்விடம் மடு" என்று நிலவர் எல்லை குறிக்குமாபோலே. "வம்மின்புலவீர்" என்று முதலிலே ருசியில்லாதாரையும் இரந்தழைக்கிற இவர் ஶீலாதிகளிலே இழிகிறவர்களையும் விலக்குகிறாரிறே, ப்ரீதிப்ரகர்ஷத்தாலே. "நினைதோறும் சொல்லுந்தோறும் நெஞ்சிடிந்துகும்", "வல்வினையேனையீர்கின்ற குணங்களையுடையாய்" என்று ஶீலாதி குணங்களிலே புண்பட்டிறே இவரிருப்பது. உங்களை இழக்கக் கார்யம்பாராதே, அவனுடைய ஐஶ்வர்யத்திலே இழிந்து கவிபாடப்பாருங்கோள். ஶீலகுணத்தில் இழியநினையாதே கொள்ளுங்கோள். [கவிகாள்உயிர்காத்தாட்செய்ம்மின்] - "கவிகாள்" என்றால் "உயிர்காத்துக்கவிபாடுங்கோள்"என்னவிறே யடுப்பது: அங்ஙன் சொல்லாதே 'ஆட்செய்ம்மின்' என்கிறாராய்த்து; "ஆட்செய்கையாவது-கவிபாடுகைஎன்றிருக்கும் * புகழுநல்லொரு

யாதி. முதற்றிருவந்தாதி பதிமூன்றாம்பாட்டு, "வாயவனை" இத்யாதி. இத்தால்-"ஜலஸ்தீர்த்தக்ருத" இத்யாதியாலே எச்சில்வாய் சுத்திபண்ணினவர்களை வ்யாவர்த்திக்கிறது. எங்களை நோக்குகிறதென்னென்ன - நீங்களுண்டாய் இத்யாதி, எம்பெருமானார் நிர்வாஹத்திலே, காத்து - இருயாதே, ஆட்செய்ம்மின் - மங்களாஶாஸநம் பண்ணுங்கோளென்று விவக்ஷித்து. இருய்ப்பதோவென்ன-இத்தலையுண்டானால் இத்யாதி. உண்டானாலிறே என்றது - அயோக்யதாநுஸந்தாநத்தாலே யகன்று ஸ்வரூபம் நசியாதே யுண்டானாலிறேயென்றபடி. அகலில் அவனுளனுகாமையாலே தான்உளனாக விரகில்லையிறே. மேலும் ஶீலகுணபரமன்றிக்கே ஸ்வரூபாநுகுணமாக அருளிச்செய்த வாக்யங்களெல்லாம் எம்பெருமானார் நிர்வாஹத்துக்குச் சேரவென்று கண்டுகொள்வது. பாடுமினென்னாதே, "ஆட்செய்ம்மின்" என்கிறதெனனென்ன - ஆட்செய்ம்மினென்கிறார் இத்யாதி. உயிர்காக்கைக்கு ப்ரஸக்தியேதென்ன - ஆட்கொள்வானொத்து இத்யாதி. இதுக்கர்த்தம் - அடிமை இத்யாதி. இத்தால்- ஶீலகுணத்திலே யிழிந்து கவிபாடாதே கொள்ளுங்கோளென்றபடி. 'உயிர்காத்தாட்செய்ம்மின்" என்றீடுபட்டுச் சொன்னதுக்கு ஸம்வாதம் - ஆழங்காலிலே இத்யாதி. கொண்டைக்கோலாவது-நிலவராயிருப்பார் ஆறுகள் மடுக்களிலே மேடுபள்ளங்களுக்கு அடையாளமாக நடுகிற கோல். "உயிர்காத்தாட்செய்ம்மின்" எனறதுக்கர்த்தாந்தரம் - உடையவர் இத்யாதி. அவனுயிரைக் காக்கும் ப்ரகாரத்தை உபபாதிக்கிறார் - அதாவது இத்யாதி. சிற்றாள்கொண்டான் நிர்வாஹவிவரணம் : இவ்விடம் இத்யாதி; இந்த நிர்வாஹமே ப்ரகரணோசிதம். விமுவரையும் அழைக்கிறவர் அழிமுவரை விலக்குவானெனனென்ன - வம்மின் இத்யாதி. இவர்தாம்அப்படி ஶீலகுணத்திலே ஈடுபட்டிருப்பரோவென்ன - நினைதோறும் இத்யாதி. ஆனால் செய்வதேதென்ன - உங்களை இத்யாதி. ஐஶ்வர்யம் - நியந்த்ருத்வம. ப்ரதிஷேதபாதாந பூர்வகமாக "ஆட்செய்ம்மினென்கிறார்" இத்யாதி வாக்யத்வயவிவரணம்-கவிகாளென்றல் இத்யாதி. ஶீலகுணத்தைச் சொல்லுகிற ப்ரகரணத்

† 'அமிழ்ந்துவார்' என்னும் பாடம் காண்கிறது.

வனில் தம் வாஸநையாலே. "இஶ்ஶீலகுணத்திலிழியாதே கொள்ளுங்கோள்" என்று நிர்ப்பந்திக்கைக்கு ஹேதுவென்னென்னில்,—ஹேது சொல்லுகிறுர்மேலெல்லாம். "தானேயாகி நிறைந்தானே" என்று தம்மைக்காண்கிறிலர் காணும். [திருமாலிருஞ்சோலை] - திருமலையில் நிலையும் ஶீலத்துக்கு உடலிறே. [வஞ்சக்கள்வன்] - களவுதானும் மெய்யென்னக் களவுகாணுமாய்த்து. "என்கண்ணன்கள்வமெனக்குச் செம்மாய்நிற்கும்" என்னுமாபோலே - களவுகாணுநிற்கச்செய்தே செவ்விதென்று தோற்றும்படியிருக்கும். களவுதன்னைக் களவுகாணுமாய்த்து. இத்தலையில் ஶேஷத்வத்தை நிலைநிறுத்துவாரைப்போலே புகுந்து, தான் அத்தை எறட்டுக்கொண்டு, ஶேஷித்வத்தை இத்தலையிலேவைத்து ஶிரஸாவஹியாநிற்குமாய்த்து. இப்படி நீர் அவன் களவை அறிந்தீராகில் தப்பாதொழிவானென்னென்னில், - [மா மாயன்] - இப்படி அறியச்செய்தேயும் தப்பவொண்ணாதபடியான ஆஶ்சர்ய குணசேஷ்டிதங்களை யுடையவன்; "மையலேற்றிமயக்க" இத்யாதி. 'குணசேஷ்டிதங்களாலே உம்மை அவன் அகப்படுத்தின வழிதான் எது?' என்ன, - [மாயக்கவியாய்] - ஆழ்வீர்! உம்மைக்கொண்டு லோகத்தில் நடையாடாதன சிலகவிபாடுவித்துக் கொள்ளப் பாராநின்றோம். "அப்படிசெய்வோம்" என்றுய்த்துப் புகுந்தது. கவியென்றுஒரு வ்யபதேசத்தையிட்டுக் கொண்டுவந்தான்; அபிமதவிஷயம் இருந்தவிடத்தே தண்ணீரென்று புகுருமாபோலே. [வந்து] - அபிஸரித்தானும் தானேயாய்த்து. நான் தானிருந்தவிடத்தேசென்று "என்னையிட்டுச் சிலகவிபாடுவித்துக் கொள்ளவேணும்" என்றுசொல்லச் செய்கையன்றிக்கே, தானேவந்தான். அபிமதனுன தானேயாய்த்து அபிஸரித்தான். இதிறே ஶீலமாவது! வந்தவிடத்தில் அவன் உமக்கு நலிவாகச்செய்ததென்னென்னில், - [என்னெஞ்சும்உயிரும்] - நெஞ்சென்று தேஹத்துக்கு உபலக்ஷணம்; உயிரென்று - ஆத்மா. [உள்கலந்து] - ஒருநீராகக்கலந்து: ஶரீரத்தோடு ஆத்மாவோடு வாசியற அவகாஹியாநின்றுன். [நின்றுரறியாவண்ணம்] - இப்பரிமாற்றத்துக்கு தேஶிகரானபிராட்டி, திருவனந்தாழ்வான், திருவடி முதலானுர்க்கும் அஸஹ்யமியாம்படியாய்த்து என்னோடுகலந்

திலே "திருமாலிருஞ்சோலை" என்று திருமலையில் நிலையைச் சொல்லுவானென்னென்ன - திருமலையில் இத்யாதி. களவிலே வஞ்சமேதென்ன - களவுதானும் இத்யாதி. அப்படி அவன்களவு மெய்யாயிருக்குமோவென்ன - என்கண்ணன் இத்யாதி. செம்மாய்நிற்கும் - செவ்வையாயிருக்கும். இதுக்கர்த்தம் - களவுகாணுநிற்க இத்யாதி. இத்தால் ஃபலிதம் - களவுதன்னை இத்யாதி. களவுதன்னைக் களவுகாணும் ப்ரகாரமேதென்ன - இத்தலையில் இத்யாதி. தப்பவொண்ணாத ஆஶ்சர்ய குணசேஷ்டிதங்களை யுடையனு யிருக்குமோவென்ன - மையலேற்றி இத்யாதி. நாய்ச்சியார் திருமொழி, "பெய்யுமாமுகில்" இத்யாதி. மையலேற்றிமயக்க - பிச்சேற்றி ப்ரமிப்பிக்க. மாயமந்திரம் - அம்மான்பொடி. வஞ்சக்கள்வன் - வஞ்சித்தபஹரிக்குமவன் இதிஶப்தார்த்தஃ. மாமாயன் - அத்யாஶ்சர்ய குணசேஷ்டிதங்களையுடையவன். "ஆய்" என்றதுக்கு பாவம் - ஆழ்வீர் இத்யாதி. விவரணம் - கவியென்றொரு இத்யாதி. 'ஆழ்வீர்' இத்யாதிவாக்யம் - "மாயக்கவி" என்றதுக்கு பாவம், "ஆய்" என்றதுக்கு பாவம் - கவியென்றொரு இத்யாதி என்னவுமாம். இதுக்கு த்ருஷ்டாந்தம் - அபிமத இத்யாதி. மாயக்கவியாய் - க்ருத்ரிமக்கவியாய்இதிஶப்தார்த்தஃ - கவிபாடுவித்துக் கொள்ளுகையாகிற க்ருத்ரிம வ்யாபாரத்தை யுடையனுயென்றபடி. "வந்து", என்றதுக்கர்த்தம் - அபிஸரித்தானும் இத்யாதி. உபபாதநம் - நான் தான் இத்யாதி. ஏதத்விவரணம் - அபிமதனுன இத்யாதி. தேஹத்துக்கு உபலக்ஷணம் என்றது - ப்ரகரணத்துக்குச்சேரப் பதங்களைக்கூட்டி யர்த்தம் - ஶரீரத்தோடு இத்யாதி. தேசிகரான - விஷயஜ்ஞரான. "நின்றார்"

தது. இப்படிப்பட்ட பரிமாற்றத்தில் நிற்பார்அவர்களிறே ; அவர்களுக்கும் தெரியாதபடி ; " ஆருயிர்பட்டதெனதுயிர்பட்டது " என்னுமாபோலே. [என்னெஞ்சும் உயிருமவை யுண்டு] - தேஹாத்மவிவேகம் பண்ணமாட்டுகிறிலன் ; "உருவமும் ஆருயிரும் உடனே யுண்டான்" என்னுமாபோலே - தேஹத்தையும் ஆத்மாவையுமொக்க ஸம்ஜித்தான். [தானேயாகி] - தம்மைக்காண்கிறிலர் காணும். இரண்டுதலையுமாய் ஸம்ஜிப்பாரைப் போலே புகுந்து போக்தா தானேயானுன். "என்னை முற்றப்பருகினுன்" என்னுமா போலே, இத்தலை போக்யமாயற்றதாய்த்து. இத்தலை ஒருசேதநவஸ்துவென்று தோற்றுத படியாகவாய்த்துப் பரிமாற்று;பிறர்க்கு உறுப்பாயிருக்குமதொழியத் தனக்கென்ன ப்ராப்தி யில்லாத அசித்வஸ்துவோபாதியாகப் பண்ணினுன். "தனக்கேயாக" என்றபடியே கொண்டான். போக்யவஸ்துதன்னிலேயும் ஸ்வரூபபேதங்கள் உண்டாகா நின்றதிறே, அவ்வோபாதியாய்விட்டது சேதந வஸ்துவும். [தானேயாகி] - ஈரரசு தவிர்த்தான். இத் தலையைப் புற்கவ்வப்பண்ணித்தானே அபிமாநியாய் நின்றுன். [நிறைந்தானே] - அவாப்த ஸமஸ்தகாமனேன்கிற பேரேயாய், இவரைப்பெற்றபின்பாய்த்து பரிபூர்ணனுய்த்து. இங் ஙனேயிருக்கையிறே ஶீலமாவது. அதாவது - பெரியவன் சிறியவனுேடேவந்து கலக்கு மிடத்தில் தன்பெருமையும் இவன்சிறுமையும் தோற்றுதபடி புரையறக் கலக்கையிறே ; "க்ருதக்ருத்யஸ்ததாராமஃ" (க்ருதக்ருத்யஸ்ததாராமஃ) என்னுமாபோலே. (க)

என்ருல் - பிராட்டி முதலானுரைக்காட்டுமோவென்ன - இப்படிப்பட்ட இத்யாதி. "நின்ருர்" என்றது - ஈச்வருடைய வ்யாமோஹவிஷயமாய் நின்றவர்களென்றபடி. "அஹமஹமிகயாம்படியாய்" என்றத்தை விவரிக்கிருர் - அவர்களுக்கும் இத்யாதி. அப்படி அவர்களுக்கும் அஹமஹமிகயோவென்ன - ஆருயிர் இத்யாதி. "என்னெஞ்சுமுயிருமவையுண்டு" என்றத்தால் பலிதம் - தேஹாத்மவிவேகம் இத்யாதி. உக்தார்த்தத்துக்கு ப்ராமாணம் - உருவமும் இத்யாதி. பலிதார்த்தம் - தேஹத்தையும் இத் யாதி. நெஞ்சு - தேஹம். "தானே" என்கிற அவதாரணுர்த்தம் - தம்மை இத்யாதி. விவரணம் - இரண்டுதலையும் இத்யாதி. அவனே போக்தாவானுல் நீரோவென்ன - என்னை முற்ற இத்யாதி. "தானே" என்றத்தால் பலிதம் - இத்தலை இத்யாதி. விவரணம் - பிறர்க்கு இத்யாதி. இதுதான் ப்ரணயித்வத்தாலன்றிக்கே இவரர்த்திக்கச் செய்ததுவுமென்கிருர் - தனக்கேயாக இத்யாதி. எத் தனையென்ருலும் சேதநனுக்கு வாசியில்லையோ, அசித்வஸ்துவோபாதி யென்னலாமோ வென்ன- போக்யவஸ்து இத்யாதி. ஸ்வரூபபேதங்கள் என்றது-லிங்க முங்ய ரஸாதியுக்த சந்தந குஸுமாதி பேதங்களென்றபடி. இத்தால் - சைதந்யாதிகளும், வஸ்துகதமான ரஸாதிகளோபாதியாய், போக் தாவுக்கே யுறுப்பாய்விட்டதென்றபடி. "ஸூக்ஷ்மவொட்டும் நீரிலே கழுவிப் பைந்தொடிமடந்தை யரைக்கொண்டு ஷட்குண ரஸாங்கமாக்கி" என்றது அநுஸந்தேயம் இங்கு. கீழே "தம்மைக் காண் கிறிலர்" என்றத்தை விவரிக்கிருர் - ஈரரசு இத்யாதி. விவரணம் - இத்தலையை இத்யாதி. புற்கவ் வப் பண்ணுகை-அபிமாநசூந்யனும்படி பண்ணுகை. அவாப்தஸமஸ்தகாமனை இப்போது "நிறைந் தான்" என்கிறதென்னென்ன - முன்பு இத்யாதி. இவ்வர்த்தத்துக்கு ப்ரமாணம் - க்ருதக்ருத்யஃ இத்யாதி. " ஜஹிஷ்வயஜ்ஞாயாம ராக்ஷஸேந்த்ரம்விபீஷணஃ । க்ருதக்ருத்யஸ்ததாராமோ விஜ்வரஃ ப்ரமுமோதஹ " இதி ஸங்க்ஷேபே. 'திருமாலிருஞ்சோலை' என்று தொடங்கி, 'நிறைந்தான்';ஆகையாலே, 'செஞ்சொற்கவிகாள்!உயிர் காத்தாட்செய்ம்மின்' இத்யந்வயஃ. (க)

இரண்டாம் பாட்டு.

தானேயாகிநிறைந்துஎல்லாவுலகும்உயிருந்தானேயாய்
தானேயானென்பானாகித் தன்னைத்தானேதுதித்துஎனக்குத்
தேனேபாலேகன்னலேயமுதே திருமாலிருஞ்சோலைக்
கோனேயாகிநின்றொழிந்தான்என்னைமுற்றும்உயிருண்டே.

ஆ.—(தானேயாகி) - இப்படி என்னுயிரை முற்றுமுண்டு தானேயாகி பரிபூர்ணனாய், இதினாலே ஸர்வேஶ்வரனுமாய், என்னுயிரை மாளபுஜித்தும் த்ருப்தனாகாதே நான்சொல்லும் சொற்களைக்கொண்டு அநுபவிக்கைக்காக என்னைக்கொண்டு திருவாய்மொழியைச் சொல்லுவித்து, இப்படியேஎன்னோடுள்ள ஸம்ஶ்லேஷம் தனக்கு இனிதாகைக்காக எனக்குத்தன்னையே நிரவதிகபோக்யமாக்கியருளினான்; திருமாலிருஞ்சோலைமலை நாயனாய்நின்றநிலை அவனுக்கு ஸபலமாய்த்தென்றுகொண்டு ததபிப்ராயத்தாலே சொல்லுகிறார்.

ஒ.— இரண்டாம்பாட்டில், தம்மோடு கலந்தபின் எம்பெருமானுக்குப்பிறந்த ஸம்ருத்தியைக்கண்டு இனியராய் அநுபவிக்கிறார்.

[எல்லா என்றுதொடங்கி] - என்னைப் பெறுகையாலே ஸர்வேஶ்வரனாய், என்னை உபகரணமாகக்கொண்டு தன்னைத்தானே ஸ்துதித்து எனக்கு நிரதிஶயபோக்யனாய், என்னைப் பெற்றபின்பு திருமலைக்கு நாயனுமானான். [என்னைமுற்றும் உயிருண்டே] - என்னுயிரை ஒன்றொழியாமே அநுபவித்து.

ப.—அநந்தரம், என்னோடு ஸம்ஶ்லேஷித்த அதிஶயத்தாலே எனக்கு நிரதிஶய போக்யபூதனாய்க்கொண்டு க்ருதக்ருத்யனாயிராநின்றானென்கிறார்.

என்னை - என்னை, முற்றும் - ஸர்வப்ரகாரத்தாலும், உயிருண்டு - ஆத்மபோகத்தைப்பண்ணி, (அத்தாலே), தானேயாகி - ப்ரதானனாய்க்கொண்டு, நிறைந்து - பரிபூர்ணனாய், எல்லாவுலகும் - ஸமஸ்தலோகங்களும், உயிரும் - தத்கதமானப்ராணிஜாதங்களும், தானேயாய் - தானேயாம்படி (அந்தராத்மதயா நிர்வாஹகனாய், அப்படி பொதுவன்றியே), யானென்பான் - அஹம்புத்தி வ்யவஹாரவிஷயமான நானென்கிற வஸ்துவும், தானேயாகி - தானேயாம்படியாய், (அந்த அப்ருதக்பாவத்தாலே), தன்னை - ஸ்துத்யனான தன்னைப்பற்ற, தானேதுதித்து - ஸ்தோதாவும் தானேயாய்க்கொண்டு ஸ்துதித்து, (அத்தால் தனக்குப்பிறந்தவுகப்பை), எனக்கு - எனக்குப்ரகாசிப்பிக்கையாலே, தேனேபாலேகன்னலேயமுதே - தேனும்பாலும்கன்னலும் அமுதுமாய் அதில் ஸர்வவிதபோக்யமும், திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கிற, கோனேயாகி - ஸ்வாமியானதானேயாய், நின்றொழிந்தான் - நின்றுவிட்டான்; போக்தாவும் தானேயாய் போக்யமும் தானேயாயென்று கருத்து.

இ.—இரண்டாம்பாட்டில், தம்மோடு கலந்தபின்பு அவனுக்கு உண்டான ஸம்ருத்தியைக் கண்டு இனியராகிறார்.

[தானேயாகி நிறைந்து] - இருவர்கூடப் பரிமாறப்புகுந்து, பெற்றான் தானேயாயிராநின்றான். [எல்லாவுலகும் - உயிரும் தானேயாய்] - ஆழ்வாரைப் பெற்றபின்

பாய்த்து ஸர்வலோகங்களுக்கும் அவற்றிலுண்டான மநுஷ்யாதிகளுக்கும் நிர்வாஹகனாய்த்து. ஸாமாநாதிகரண்யத்தால் அபிமாநியும் தானேயென்கை. [தானே யானென்பானாகி] - பொதுவான ரக்ஷகத்வமொழியத் தம்பக்கல் அவன் இருக்கும்படி சொல்லுகிறார்: [யானென்பான் - தானேயாகி] - விஶிஷ்ட வஸ்துவாகையாலே விஶேஷ்ய ப்ராதாந்யத்தைப் பற்றச் சொல்லுகிறதென்னுதல், தன் ஶேஷித்வத்தை எனக்குத் தந்து தான் அப்ரதாநனாய் என்னை ஶிரஸாவஹியாநின்றான் என்னுதல். [தன்னைத் தானே துதித்து] - ஸ்துத்யனுமவோபாதி ஸ்தோதாவும் தானேயாய். [எனக்குத் தேனேபாலே இத்யாதி] - "ஸர்வரஸ:" என்கிறபடியே எனக்கு நிரதிஶய போக்யனாய். அவனைப் புகழுமிடத்தில் தம்பக்கல் கர்த்ருத்வம் கண்டிலர். போகத்தில் வந்தால் போக்தாவாகத் தம்மைச் சொல்லுகிறாரிறே. தன்னைத்தானே புகழ்ந்து அத்தை என்கவியாக்கிக்கேட்டு அவன்ப்ரீதனாக அவன்ப்ரியத்தைக்கண்டுப்ரியப்படுகிறார். [திருமாலிருஞ்சோலைக்கோனே] - கீழ்ச்சொன்ன ரஸத்தோபாதியாய்த்துத் திருமலையில் நிற்கிற நிலையும். உபயவிபூதி யோகத்திற் காட்டிலும் ஓர் ஏற்றமாய்த்துத் திருமலையையுடையன் என்கிற இதுவும். திருமலையிலே வந்து ஆழ்வாரைப் பெற்றபின்பாய்த்து ஶேஷித்வம் பூர்ணமாய்த்து. [நின்றொழிந்தான்] - "க்ருதக்ருத்யஸ்ஸஹாராம:" என்கிறபடியே பரகுபரகற்று நின்றான். [என்னைமுற்றும் உயிருண்டே] - விஹ்வலனான தன்னையும் விளாக்கொலை கொள்ளவொண்ணாதபடியாய்த்து இத்தலையானபடி.

ஈடு.—இரண்டாம்பாட்டு. தம்மோடு கலந்தபின்பு அவனுக்குப்பிறந்த ஸம்ருத்தியைக்கண்டு இனியராகிறார்.

[தானேயாகிநிறைந்து] - இருவருங்கூடப்பரிமாறப்புகுந்து தானே பேற்றனாயிராநின்றான். [எல்லாமித்யாதி] - ஸகலலோகங்களும் அந்தலோகங்களுக்கு உண்டான மநுஷ்யாதிகளும் தானேயாய் நின்றான். ஸர்வேஶ்வரனானானென்றபடி. ஸர்வேஶ்வரனுச்சுதும் இப்போதோவென்னில்;—ஓம்; அப்படியே. ரக்ஷகனாய்க்கொண்டேயிறே அவனுக்கு ஸ்வரூபம். ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்தைப்பண்ணியல்லது நியந்தாவாகவொண்ணாதே. இவரைப்பெறுவதற்குமுன்பு தன்னுடைய ஈஶ்வரத்வமடையக் கண்ணோந்தாரகம்போலேகாணும் கிடந்தது. ஆத்மாதான் நித்யனாயிருக்கச்செய்தே,

---

இரண்டாம்பாட்டு.—தானே இத்யாதி. "என்னை முற்றும்உயிருண்டு - தானேயாகி நிறைந்தெல்லாவுலகும்உயிரும் தானேயாய்" என்றுதொடங்கி "கோனேயாகி நின்றொழிந்தான்" என்றந்வயமுகேநாவதாரிகை - தம்மோடு இத்யாதி.

அவதாரணார்த்தம் - இருவர் இத்யாதி. கீழ்வாக்யத்தால் ஃபலிதம் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. ஆழ்வாரைப்பெற்ற பின்பு ஸர்வேஶ்வரனானானென்றபடி. "எல்லாவுலகும்உயிரும்" என்றதிலே இவரும் அந்தர்பூதரிறே. அந்வயமுகேந ஶங்கையைப் பரிஹரிக்கிறார் - ஓம் அப்படியே, இத்யாதி. "அப்படியே" என்றத்தையுபபாதிக்கிறார் - ரக்ஷகனாய் இத்யாதி. இதுக்கு * அகாரவாச்யத்வத்திலே நோக்கு. வ்யதிரேகமுகேந பரிஹாரம் - ரக்ஷ்யவர்க்க இத்யாதி. ஏதத்விவரணம்- இவரை இத்யாதி என்னுதல், ப்ரணயித்வதைப்பற்ற பரிஹாராந்தரமாதல். கண்ணோந்தாரகம் போலே என்றது - கண்நொந்தார்க்கு விளக்குஅஸஹ்யமாகையாலே, விளக்கில்லாமல் அந்தகாராவ்ருதமாய் ஒருத்தருக்கும் ஒரு பதார்த்தமும் தெரியாதாப்போலே, ஈஶ்வரத்வமும் அநிதரவேத்யமாய் அஸஹ்யமாயிருக்குமென்றபடி. இவரைப்பெறுவதற்கு முன்பு ஈஶ்வரத்வம்அஸத்கல்பமாய், இவரைப்பெற்றபின்பு ஸர்வேஶ்வரனானானென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாகக் காட்டுகிறார்-ஆத்மா

ஸத்வத்தில் ஜ்ஞாநம் பிறவாதபோது "அஸந்நேவஸபவதி" (அஸந்நேவஸபவதி)என்னலாய், அதுபிறந்தபோது "ஸந்தமேநம்ததோவிது:" (ஸந்தமேநம்ததோவிது:) என்னலாம்படியிருக்கிறப்போலேகாணும் அவனுமிருப்பது. ப்ரதிஸம்பந்தியை அபேக்ஷித்துக்கொண்டிருக்கை இரண்டு தலைக்கும் ஒக்கும். "நானுன்னையன்றியிலேன் - நீயென்னையன்றியிலை" என்கிறபடியே - இவன்சேஷத்வத்தையுடையனாய்க்கொண்டுளனும், அவன்சேஷியாய்க்கொண்டுளனும். [தானேயானேன்பானாகி] - யானேனென்பான் தானேயாகி. ஸர்வவிஷயமாக நிற்குநிலையொழிய இந்தவ்யக்திவிசேஷத்தில் நிற்குநிலையைச் சொல்லுகிறது. [யானேன்பான் - தானேயாகி] - நானேன்று நாமமாத்ரமான நான் தான்என்னலாம்படியானேன். தம்மைத்தடவிப்பார்த்தவிடத்தில் காண்கிறிலர், அவன்தலையாலே சுமக்கக்காண்கிறவித்தனை. அவனும் தன்தலையிலே பாரதந்த்ர்யத்தை எறட்டுக்கொண்டு இவர்தலையிலே ப்ராதாந்யாஹங்காரத்தை வைக்கையாலே இவரையே காண்கிறவித்தனை.விஶிஷ்டவஸ்துவில் விஶேஷ்ய ப்ராதாந்யத்தாலே விஶேஷணமாத்ரமான தம்மைக் காண்கிறிலராய்த்து.கார்யாவஸ்த்தையோடு காரணாவஸ்த்தையோடுவாசியற வஸ்து விஶிஷ்டமாயிருக்கச்செய்தேயும், ப்ரஹ்மமே உபாதாநமென்னக்கடவோமிறே. தத்கதமான விகாராதிகள் வருமென்று ஶங்கித்து,அவற்றை விஶேஷணம்ஶத்தே ஒதுக்குகிறதும் அவனுக்கு தோஷாஸ்பர்ஶத்துக்காக. ஆனாலும், வஸ்துதான் ஒன்றென்னலாயிருக்கு

தான் இத்யாதி. ஆனாலும் "அஸந்நேவ" என்றும் "ஸந்தமேநம்" என்றும் சேதநனைச் சொன்னாற்போலே அவனைச் சொல்லலாமேவென்ன - ப்ரதிஸம்பந்தியை இத்யாதி. ப்ரதிஸம்பந்தி ஸாபேக்ஷத்வத்துக்குப்ரமாணம் - நானுன்னை இத்யாதி. "நன்றாக நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே! நீயென்னையன்றியிலை-" வெறுவியனாய் ப்ரகாரதயா ஶேஷத்வத்தையுடையனான நான், பரிபூர்ணனாய் ப்ரகாரியாய் ஶேஷியாயிருக்கிற உன்னையொழிய ஸத்தையுடையேனல்லேன், இப்படியிருக்கிறநீயும், என்னையொழிய ப்ரகாரியாய் ஶேஷியாய் பரிபூர்ணனுமாய்க்கொண்டுளனாமவனல்லையென்று ஶப்தார்த்தம். நாலாந்திருவந்தாதி, "இன்றாகநாளையேயாக" இத்யாதி. இதுக்கர்த்தம் - இவன் ஶேஷத்வத்தையுடையனாய் இத்யாதி. வக்ஷ்யமாணார்த்தாநுகுணமாக அந்வயம் - யானேனென்பான் தானேயாகி என்று. "எல்லாவுலகுமுயிரும் தானேயாய்" என்றதிலே தாமுமந்தர்பூதரன்றோ? "தானேயானென்பானாகி" என்றதுக்குக் கருத்தேதென்ன - ஸர்வவிஷயமாக இத்யாதி. "யானென்பான்தானேயாகி" என்றதுக்கு ஶப்தார்த்தம் - நானேன்று இத்யாதி. ஶேஷத்வத்தையுடையனென்று நாமமாத்ரமுடையநான் ஶேஷியென்னலாம்படியானேனென்றபடி. ஹேதும் - தம்மை இத்யாதி வாக்யத்வயம். காண்கிறிலர் - தம்மை ஶேஷமாகக் காண்கிறிலரென்றபடி- "தம்மை" இத்யாதிவாக்யத்வயவிவரணம் - அவனும் இத்யாதி. இவரையே காண்கிறவித்தனை - இவரை ஶேஷியாகக் காண்கிறவித்தனையென்றபடி. "தானேயானென்பானாகி" என்றதுக்கு - ப்ரணயித்வத்தைப்பற்ற பாவமருளிச்செய்து, வாஸ்தவமான ஶரீரஶரீரிபாவத்தையிட்டு தாத்பர்யாந்தரம்- விஶிஷ்ட இத்யாதி. விஶிஷ்டவஸ்துவில் விசேஷ்யப்ராதாந்யத்துக்கு நியாமகம் - கார்யாவஸ்த்தையோடு இத்யாதி. விசிஷ்டமாயிருக்கச்செய்தேயும் என்றது - சிதசித்விஶிஷ்டமாயிருக்கச்செய்தேயுமென்றபடி. ப்ரஹ்மமே - விஶேஷ்யமான ப்ரஹ்மமேயென்றபடி. விஶேஷ்யப்ராதாந்யத்தாலே ப்ரஹ்மமே உபாதாநமாகில் விஶிஷ்டம் காரணமென்றும் விகாராதிகள் விஶேஷணகதங்களென்றும் கொள்ளுகிறதென்னென்ன தத்கதமான இத்யாதி. தத்கதமான - சிதசித்கதமான. 'ஒதுக்குகிறதும்' என்ற சஶப்தம் - "விஶிஷ்டம் காரணமென்கிறதுவும்" என்றதுக்த ஸமுச்சயபரம். எல்லாமென்றாலும் சேதநேஶ்வரபேதம் ஸித்தமாயிருக்க,"தானே" என்னலாமோவென்ன- ஆனாலும் இத்யாதி. ஆனாலும்-பேதமுண்டானாலுமென்றபடி."ஸ்வாபாவிக ஸம்பந்தம் கண்ணழி

மிறே; ஸ்வாபாவிக ஸம்பந்தம் கண்ணழிவற்றிருக்கையாலே. வடபடாதிகளைப்போலே ப்ருதக்ஸ்திதி உண்டாயிருக்கிறதன்றே; ப்ரகாரப்ரகாரி பாவத்தாலே சொல்லுகிறதிறே; ஜாதிகுணங்கள் த்ரவ்யத்தைப்பற்றிக் கிடக்குமோபாதியாய்த்து. இப்படி வஸ்துவிருக்கையாலே [தன்னைத்தானேதுதித்து] - "வசஸாம் வாச்யமுத்தமம்" (வசஸாம் வாச்யமுத்தமம்) என்கிறபடியே - அஹமர்த்தம் அவனளவும்சென்று காட்டக்கடவதாய், அஹம்சப்தமும் அவனளவும்சென்று காட்டக்கடவதாயிறேயிருப்பது. இவர்பக்கலிலே பிறக்கச் செய்தேயும் அவன்செய்தானென்று அவன் தலையிலே ஏறிடலாயிருக்குமிறே. நான் ஸ்துத்யனுகில்கிடீர் ஸ்தோதா நானுவது? [எனக்கு இத்யாதி] - "ஸர்வரஸ:" (ஸர்வரஸ:) என்கிற போதுவான நிலையன்றிக்கே எனக்கு நிரதிசயபோக்யனானவனே! "கோடியேன்பருகின்னமுதே" என்கிறபடியே. "தன்னைத் தானே துதித்து" என்கிறவிடத்தில் தம்மைக்கண்டிலர்; இங்குத் தாமுளராகவும் தமக்குஇனிதாகவும் தோடங்கிற்று. தாம் பாடின கவி கேட்டு அவன் இனியனாயிருக்கிறவிருப்பு தமக்குஇனிதாயிருக்கிறபடி. [திருமாலிருஞ்சோலைக்கோனே] - கீழ்ச்சொன்ன ரஸவத்பதார்த்தங்களோபாதியாய்த்துத் திருமலையில்நிற்கிற நிலையும். "திருமாலிருஞ்சோலையங்கட்டியைக் கரும்பீன்ற இன் சாற்றை" என்னக்கடவதிறே. [திருமாலிருஞ்சோலைக்கோனேயாகி] - உபயவிபூதி யோகத்தால் வந்த ஏற்றத்துக்கும் அவ்வருகே ஓரேற்றம்போலே திருமலையையுடையனாகையால்வந்த ஏற்றம். [கோனேயாகி] - இவரைப்பெற்றபின்பாய்த்து ரக்ஷகத்வம் பூர்ணமாய்த்து. இல்லையாகில், ஸ்ரீவைகுண்டத்திலிருப்போடு திருமலையில்நிலையோடு வாசியற்றுப்போமிறே. [நின்றொழிந்தான்] - இங்கே நின்றபின்பாய்த்துப் பரகுபரகற்றது. க்ருதக்

வற்றிருக்கையாலே" என்றத்தை ஸத்ருஷ்டாந்தமாக விவரிக்கிறார் - வடபடாதிகளை இத்யாதி. ப்ருதக்ஸ்தித்யபாவத்துக்கு த்ருஷ்டாந்தம் - ஜாதிகுணங்கள் இத்யாதி. மேலுக்கவதாரிகை - இப்படி இத்யாதி. தாம் கவிபாடியிருக்க, "தானே துதித்து" என்பானென்னென்ன - வசஸாம் இத்யாதி. "அஹமர்த்தமவனளவும்காட்டும்" என்றதுக்குப்ரமாணம் - வசஸாம்வாச்யமுத்தமம் என்றது. அஹமர்த்தமவனளவும் சென்றுகாட்டுகையாவது - தத்பாரதந்த்ரமாயிருக்கை. "காருண்யாம் காரணம் வந்தே வசஸாம் வாச்யமுத்தமம் । யோமாநாம் ... தேவதேவம் விசக்ஷண:" இதி ஜிதந்தாயாம். அஹம்சப்தமும்அவனளவும்காட்டக்கடவதாயென்றது- அர்த்தாத்வந்தது. இத்தால் பாவம்-இவர்பக்கலிலே இத்யாதி. தானே துதித்தென்னாதே, "தன்னை" என்று விசேஷித்ததுக்கு பாவம் - நான் ஸ்துத்யனுகில் இத்யாதி. இத்தால் - ஸ்துத்யன் தானானவோபாதி ஸ்தோதாவும் தானேயென்று கருத்து. "எனக்கு" என்று விசேஷித்ததுக்கு பாவம் - ஸர்வரஸ: இத்யாதி. தமக்கு போக்யனாயிருக்குமோவென்ன - கோடியேன் இத்யாதி. "தன்னைத் தானே துதித்து" என்று வைத்து, "எனக்கு" என்று ஸ்வார்த்தத்தை தோற்றச்சொல்லுகிறதென்னென்ன-தன்னைத்தானே இத்யாதி. அதாவது-ப்ரபந்தகர்த்ருத்வத்தில்தமக்கு அந்வயமில்லை, அந்த ப்ரபந்தம் அத்தலைக்கு போக்யமானது கண்டு தாம்உகக்கிறாரென்றுகருத்து, பலிதம்-தாம்பாடின இத்யாதி. பூர்வபதத்தோடே ஸஹபடித்ததுக்கு பாவம் - கீழ்ச்சொன்ன இத்யாதி. திருமலையில் நிலை போக்யமாயிருக்குமோவென்ன - திருமாலிருஞ்சோலையங்கட்டியை இத்யாதி. "எல்லாவுலகுமுயிரும்தானே" என்றத்தோடேகூட்டி பாவாந்தரம் - உபயவிபூதி இத்யாதி. "கோனேயாகி" என்றத்தை "என்னைமுற்றுமுயிருண்டு" என்றத்தோடே கூட்டி பாவமாதல், அவதாரணார்த்தமாதல் - இவரைப்பெற்ற இத்யாதி. இதுக்கு நியாமகம் - இல்லையாகில் இத்யாதி. "நின்றொழிந்தான்" என்றதுக்கு பாவம் - இங்கேநின்றபின்பு இத்யாதி. பரகுபரகு - வ்யாகுலதை. "பரகு

ருத்யனுயிராநின்றான். [என்னை முற்றும்உயிருண்டே]- என்னுயிரைமுற்றுமுண்டே. விபுவானவன் அணுத்ரவ்யத்தை ஸ்ருஜிக்கை தனக்கேற்றமாம்படியாகவாய்த்து இத்தலையானபடி. (உ)

மூன்றாம் பாட்டு.

என்னைமுற்றுமுயிருண்டு என்மாயவாக்கையிதனுள்புக்கு
என்னைமுற்றுந்தானேயாய் நின்றமாயவம்மான்சேர்
தென்னன்திருமாலிருஞ்சோலைத் திசைகைகூப்பிச்சேர்ந்தயான்
இன்னும்போவேனேகொலோ? என்கொல் அம்மான்திருவருளே.

ஆ.—(என்னை.) - என்னை ஸ்ருஜித்தருளுகிறான். இந்தஹேயமான ப்ரக்ருதியினுள்ளேபுகுந்து என்னை ஸ்ருஜித்து என்னை முற்றும் தானேயானான். இப்பேறு பெறுகைக்கு ஹேதுவென்னென்னில்; அவன் சேர் தென்னன் திருமாலிருஞ்சோலைத் திசை கைகூப்பப்பெற்றேன்; என்னுடன் இப்படியே கலந்து பரிமாறியும் பின்னையும் கலந்து பரிமாறாதானாய், அடிதொட்டுக்கலந்து பரிமாறுகையிலே பாரித்தருளாநின்றான்; இன்னம் இதுக்குமேலும் ஒருஸம்ஶ்லேஷமுண்டோ? திருவுள்ளம்என்தான்? என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், எம்பெருமானுக்கு மேன்மேலெனத் தன்பக்கலுண்டான அபிநிவேஶ பர்யவஸாநத்தை அருளிச்செய்கிறார்.

[என்னை என்று தொடங்கி] - என் ஆத்மாவை ஸ்ருஜித்து, அதிக்ஷுத்ரமான என் ஶரீரத்திலே வந்துபுகுந்து, என்னையடைய வ்யாபித்து நிற்கிற ஆஶ்சர்ய ஸ்வபாவனான ஸர்வேஶ்வரன் சேர்வதும்செய்து தெற்கேயான திருமலைத்திக்கை பரம ப்ராப்யமென்று சேர்ந்த நான். [இன்னம்போவேனே என்றுமேலுக்கு] — இவ்வளவில் பர்யவஸியேன் போலேயிருந்தது, ஸர்வேஶ்வரனுடைய பாரிப்புக்கு அவதி என்னோ?

ப.—அநந்தரம், என்னளவன்றியே என் தேஹத்தையும் ஆதரம்பண்ணி, அத்தாலே ஸந்துஷ்டனாய் ப்ரதிஷ்டிதனாகாநின்றானென்கிறார்.

என்னை -, முற்றும் - ஸர்வப்ரகாரத்தாலும், உயிருண்டு - ஆத்மாநுபவம் பண்ணி, (அவ்வளவில்நில்லாதே), என் - என்னுடைய, மாயம் - அஜ்ஞாநாதிகளுக்கு ஹேதுவாய்க்கொண்டு, ஆக்கையிதனுள் - (ப்ரக்ருதிகார்யமாய் ப்ரத்யக்ஷஸித்ததோஷத்தையுடைத்தான ஹேயமான) ஶரீரத்துக்குள்ளே, புக்கு -, என்னை — (அஸியாதிஜீவனை) என்னையும், முற்றும்-அநுபந்தியான ஶரீராதிஸமஸ்த வஸ்துவையும்பற்ற, தானேயாய் - (அஹந்தாமமதாதிகள் இத்தலையில் நடையாடாதபடி) தானே அபிமாநியாய், நின்ற - (அத்தாலே க்ருதக்ருத்யனாய்)நின்ற, மாயம் - ஆஶ்சர்ய குணசேஷ்டிதங்களையுடைய, அம்மான் - நிருபாதிகஸ்வாமியானவன், சேர் - பொருந்திவர்த்திக்கிற தேச

பாகற்றது'' என்றதின் விவரணம் - க்ருதக்ருத்ய இத்யாதி. அணுவானவாத்மாவை ''முற்றும்'' என்கிறதென்னென்ன - விபுவான இத்யாதி. இத்தலையானபடி என்றது - அவன் ஸ்வாபிப்ராயத்தாலே மதித்திருந்தபடியென்றபடி. 'என்னைமுற்று முயிருண்டு - தானேயாகிநிறைந்து' என்று தொடங்கி, 'நின்றொழிந்தான்' இத்யந்வயః. (உ)

மாய், தென் - தெற்குத்திக்குக்கு, நன் - ஶ்லாக்யமாயிருக்கிற, திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலையாகிற திருமலையிலே நிற்கிற, திசை - திக்கை நோக்கி, கைகூப்பி - ஶேஷத்வாநுரூபவ்ருத்தியைப்பண்ணி, சேர்ந்தயான் - கிட்டின நான், (அவ்வளவன்றியே, அவன் தேசத்தளவன்றியே), இன்னம் - (அத்திக்கையும்) ஆதரிக்கும்படியானவளவு பிறந்தபின்பு, போவேனேகொலோ - ஒருமந்தவ்யபூமி யுண்டாய்ப்போகிறேனோ? அம்மான் - நிருபாதிகஶேஷியா யிருக்கிறவனுடைய, திருவருள் - அபிநிவேஶங்கள், என்கொல் - என்னாயிருக்கிறது? இதிற்காட்டில் வேறு சில ப்ராப்யங்களுண்டாய் அவற்றை உபகரிக்கப்பாரிப்பாரைப்போலே இராநின்றதென்று கருத்து. ‘தென்னன்’ என்று - அத்தேசத்தில் ராஜாவைச் சொல்லவுமாம்.

இ. — மூன்றாம்பாட்டில், அவனுக்குத் தம்பக்கலுண்டான அபிநிவேஶத்தினுடைய எல்லையில்லாமையை அருளிச்செய்கிறார்.

[என்னை முற்றும்உயிருண்டு] - இத்தலையை எங்கும் புக்கு அநுபவித்தானாய் விடுகை அவனுக்கு ஏற்றமாம்படியாயிருக்கிறது; “யஸ்யாஸ ஜநகாத்மஜா - அப்ரமேயம் ஹி தத்தேஜ:”. [என்மாயவாக்கை யிதனுள்புக்கு] - அதிக்ஷுத்ரமான என் ஶரீரத்திலே புக்குத் தனக்கு உத்தேஶ்யமான ஆத்மாவளவன்றியே, “அழுக்குடம்பு” என்று தன்னைக் காற்கட்டித் தவிர்ப்பித்துக்கொள்ள வேண்டும்படி த்யாஜ்யமான ஶரீரத்தையே விரும்பாநின்றான். [இதனுள்புக்கு] - “இது, இது” என்று இவரிருக்க, அவன் மேல் விழாநின்றான் என்கை. புகுந்து என்னாதே, ‘புக்கு’ - என்கிறது அத்தோடு தமக்குத் தொற்றற்றிருக்கிறபடி தோற்றுகைக்காக. “மங்கவொட்டு” என்று அவன் அநுமதி பார்த்திருக்கிறாரிறே. என்றும் அசித்தோடு முகம்பழகினவரிருக்க, ஹேயப்ரதிபடனானவனிறே மேல்விழாநின்றான். [என்னைமுற்றும் தானேயாய்நின்ற] - ஆத்மாவோடு ஶரீரத்தோடு வாசியறப் புக்கு வ்யாபித்து, தானே அபிமாநியாய் நின்றான். என்னுடைய அஹங்காரமமகாரங்களுக்கும் விஷயமில்லாதபடி நின்றான். [மாயஅம்மான் இத்யாதி] - ஆஶ்சர்ய பூதசேஷ்டிதனான ஸர்வேஶ்வரன் தானே விரும்பிவந்து சேருகிற தேசம். தென்னன்என்று - அத்தேசத்தில் ப்ரயாணனைச் சொல்லுதல், தெற்கில்திக்கிலேயுள்ளதாய் நன்றான திருமலை என்னுதல். [திசை கைகூப்பிச் சேர்ந்த யான்] - அத்திக்கைப் பரமப்ராப்யமென்று சேர்ந்தயான். இவர், அவனளவிலன்றிக்கே அவன் உகந்த தேசத்தோடு சேர்ந்த திக்கை விரும்பாநின்றார்; அவன் இவரளவன்றியே இவருடைய ஶரீரத்தை விரும்பாநின்றான். இவ்வளவில் பர்யவஸியாதாற்போலேயிருந்தது. [இன்னம் போவேனேகொலோ] - இனி எனக்கு ஒரு மந்தவ்யபூமியுண்டோ? ஸர்வேஶ்வரனுடைய பாரிப்புக்கு அவதி என்னே? அவனை விரும்பி, அவன் உகந்த தேஶத்தை விரும்பி, அத்தோடு சேர்ந்த திக்கை விரும்பும்படி ஶேஷத்வத்தின் எல்லையிலே நிறுத்தினவன், எனக்கு ஒன்றுசெய்திலனாய்ப்பாருபாகென்கிற இதுக்கு அவதி என்னோ? விஷயமின்றியேயிருக்க ஶ்ரமிக்கவுமாமாகாதே.

ஈடு. — மூன்றாம்பாட்டு. அவனுக்குத் தம்பக்கலுண்டான அபிநிவேஶத்தினுடைய எல்லையில்லாமையை யருளிச்செய்கிறார்.

மூன்றாம்பாட்டு. — என்னை முற்றும் இத்யாதி. “இன்னம்போவேனேகொலோ வென்கொலம்மான் திருவருள்” என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - அவனுக்கு இத்யாதி.

[என்னைமுற்றுமுயிருண்டு] - **"யஸ்யஸா ஜநகாத்மஜா அப்ரமேயம் ஹி தத் தேஜ:"** (யஸ்யஸாஜநகாத்மஜா - அப்ரமேயம்ஹிதத்தேஜ:) என்கிற ஏற்றத்தோபாதியும் போருமாய்த்து, இவருயிரை எங்கும்புக்கு அநுபவிக்கப்பெறுகையால்வந்த ஏற்றம். [என்மாயவாக்கை] — என்னுடைய ஆத்மவஸ்துவை யநுபவித்து அவ்வளவிலே தான் தவிருவானு யிருந்தானோ? "அழுக்குடம்பு" என்றும் "பொல்லாவாக்கை" என்றும் "புண்ணைமறையவரிந்து" என்றும் சொல்லுகிறபடியே - "இதுஹேயம்" என்று இவர் தாம் அருவருத்துப் புறப்பட்டு நில்லாநின்றார்; இவர் இகழாநிற்கச்செய்தே அவன் இது உத்தேஶ்யமென்று மேல்விழாநின்றான். [உள்புக்கு] - தம்நெஞ்சாலே இத்தை இவர் அருவருத்துப் புறப்பட்டுநின்றார். (புகுந்தென்னாதே 'புக்கு' என்கிறது - அத்தோடு தமக்குத் தோற்றற்றிருக்கிறபடி தோற்றுகைக்காக.) அதாவது - அவன்தலைதுலுக்குப் பெறுமளவும் பார்த்தாய்த்து இவரிருக்கிறது - "மங்கவொட்டு" என்னுமளவும் அவன் இத்தை விடமாட்டாமையாலே உள்ளே புதராநின்றான். [இதனுள் புக்கு] - அநாதிகாலம் அசித்தோடே முகம்பழகிப்போந்தவனிறே யிவன்; சேதநத்வாரா குந்தியடியிட்டுநிற்குமவனிறே யவன்; அவன் மேல்விழாநின்றான். தனக்கு ப்ரகாரமான ஆத்மவஸ்துவுக்கு ப்ரகாரமாய்க்கொண்டு தனக்கு ப்ரகாரமாமதிறே இது. **"அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய"** (அநேநஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய) என்னக்கடவதிறே. [என்னை முற்றும் தானேயாய்] - இப்படி ஆத்மவஸ்துவோடு அசித்தோடு வாசியற எங்கும்புக்கு வ்யாபிக்கையாலே 'தானே' என்னத் தட்டில்லையிறே. இவர் 'நான்' என்னுமத்தையும் கொண்டான்; இவர் மமகாரவிஷயத்தையும் கொண்டான். ஈஶ்வரனுக்குங்கூட விளாக்

ஆத்மா அணுவாயிருக்க, "முற்றும்" என்றதுக்கு பாவம் - யஸ்யஸா இத்யாதி. "என் உயிரை - முற்றும் - உண்டு" என்றந்வயிப்பது. என்னாத்மாவை யாவத்தும்அநுபவித்தென்றபடி. உண்டு - அநுபவித்து. எங்கும்புக்கு என்றது - ஸ்வரூபஸ்வபாவங்களைப்பற்ற. "மாயவாக்கை" என்றதுக்கு பாவம் - என்னுடைய இத்யாதி. "இதனுள்" என்றதுக்கு பாவம் - அழுக்குடம்பு இத்யாதி. மாயவாக்கை - நஶ்வரமான ஶரீரம். மாயம் - நஶ்வரமான. "உள்புக்கு" என்றதுக்கு பாவம்-இவரிகழாநிற்க இத்யாதி. ஆனால்இவர் புறப்பட்டாரோவென்ன-தம்நெஞ்சாலே இத்யாதி. ஜுகுப்ஸையாலே நெஞ்சாலே புறப்படுகிறதென், தாமே புறப்படுகிறதுக்கென்னென்ன - அதாவது இத்யாதி. அதாவதென்றது-வார்த்தைப்பாடு. ஆனால்இவர்க்குப் பாரதந்த்ர்யனவன் தலை துலுக்காதிருக்கிறதென்னென்ன - மங்கவொட்டு இத்யாதி. "இதனுள்புக்கு" என்றதிலே வ்யாக்யாதாவின் ஈடுபாடு - அநாதிகாலம் இத்யாதிவாக்யத்ரயம். அப்படி சேதநத்வாரா குந்தி யடியிட்டிருக்குமோவென்ன - தனக்குப்ரகாரமான இத்யாதி. இப்படி சேதநத்வாரா அசித்திலே அநுப்ரவேஶித்திருக்கைக்கு ப்ரமாணம் - அநேந இத்யாதி. 'என்னை முற்றுமுயிருண்டு என் மாயவாக்கையிதனுள்புக்கு" என்று வைத்து, மீளவும் "என்னை முற்றும் தானேயாய்" என்னலாமோவென்ன - இப்படி ஆத்ம இத்யாதி; ஹேதுஹேதுமத்பாவமாகையாலே விரோதமில்லையென்றபடி. விவரணம் - இவர்நான் என்னும் இத்யாதி. "உயிருண்டு" என்றத்தைப்பற்ற - இவர்நானென்னுமத்தையும் இத்யாதி. "மாயவாக்கை" என்றத்தைப்பற்ற - இவர் மமகார இத்யாதி. "என்னை முற்றும் தானேயாய் -" என்னைப்பற்றவும் மதநுபந்தியான ஶரீராதி ஸமஸ்தவஸ்துவைப் பற்றவும் தானே யபிமாநியாயென்னுதல்; என்னாத்மா முற்றும் தானேயாயென்னுதலென்று அர்த்தத்வயம். "என்னைமுற்றும்" என்றதுக்கு, "என்னை" என்று - ஆத்மாவாகவும், "முற்றும்" என்று - தேஹமாகவும் அருளிச்செய்து, என்னாத்மாவை முற்றும் என்று அர்த்தாந்தரவிவக்ஷயா பாவம் - ஈஶ்வரனுக்கும் இத்யாதி; இப்பக்ஷத்தில், இப்பதங்கள் "என்னை முற்றுமுயிருண்டு" என்றதின் அநுஷங்கமாகக்கடவது. விளாக்குலை கொள்ளுகை - கபளீகரிக்கை. "நின்ற" என்றதுக்கு

துலைகொண்டு அநுபவிக்கவொண்ணாதபடி யானாராய்த்து. [நின்ற] - "அந்தர்ப்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்த்திதஃ" (அந்தர்ப்பஹிஸ்சதத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்த்திதஃ) - என்கிற பொதுவானநிலையன்றிக்கே. [மாயம் இத்யாதி] - ஆஸ்சர்யமான குணசேஷ்டிதங்களையுடைய ஸர்வேஸ்வரனும்கூட "தண்ணீர், தண்ணீர்" என்று கிட்டும்படியான தேசமாய்த்து. [தென்னன்திருமாலிருஞ்சோலை] - தென்னனென்று - அங்குத்தைக்கு ப்ரயாநனைச் சொல்லி, அவனதான திருமலையென்னுதல்; அன்றிக்கே, தெற்கில்திக்கிலேயாய் நன்றானவென்னுதல். [திசைகைகூப்பிச் சேர்ந்தயான்] - அவன்விரும்பின திக்கை விரும்பினாராய்த்து இவரும். ஒருதிக்குப் படவிறே இவர் விரும்புவது. அதாவது - அவனையுகந்து, அவ்வழியாலே அவன் விரும்பின தேசத்தையுகந்து, அத்தோடு ஸம்பந்தமுடைய திக்கை யுகந்து, இப்படி அவனோடு ஸம்பந்த ஸம்பந்திகளளவும்வர உகக்கும்படி கைகழியப்போந்த நான். அவன் தான் இவரை யுகந்து இவரோடு ஸம்பந்தமுடையதேஹத்தை விரும்புகிறாப்போலேயாய்த்து; "என்னனெண்டானான்" என்றாரிறே அடியிலே. [இன்னம்போவேனேகொலோ] - எனக்கு இத்திக்குக்குஅவ்வருகு மந்தவ்யபூமியுண்டோ? ஒருதிக்குப்பட்ட நான் இனி அவ்வருகு போவேனோ, இவன் இப்படி கிடந்து படுகைக்கு? இனி யவ்வருகுபோகையாவது - திருமலையில் ஸம்பந்தத்தை யறுத்துக்கொள்ளுகையிறே. [என்கொல் அம்மான் திருவருளே] - ஸர்வேஸ்வரனைபபற்றிவரும்போது நிர்விஷயப்ரமமுண்டாமாகாதே? என் செய்யாதானாய்த்தான் இவன் இங்ஙன்கிடந்து படுகிறது? என்றபடி. இவர்திறத்தில்எல்லாம் செய்தும், ஒன்றுஞ் செய்யாதாரைப்போலே "எத்தைச் செய்வோம்?" என்றிராநின்றானாய்த்து. (ரு)

பாவம் - அந்தஃ இத்யாதி. அதாவது-"நின்ற" என்றதால் ஈஸ்வரனுக்கு ஆஸ்ரிதர்பக்கல் விசேஷ பக்ஷபாதம் தோற்றுகிறதென்றபடி. "மாயவம்மான்" இத்யாதிக்கர்த்தம் - ஆஸ்சர்யமான இத்யாதி. "சேர்" என்றதினர்த்தம் - தண்ணீர்தண்ணீர் இத்யாதி. தண்ணீர்தண்ணீர் என்றது - தாஹித்தவன் "தண்ணீர், தண்ணீர்" என்று நீரைத் தேடிக்கொண்டு வருமாபோலே, போக்யதாதிஸயத்தாலே அபிநிவேஸத்தோடே கிடக்கும்படியானவென்றபடி. திக்கை அஞ்சலிபண்ணுகைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் - அவன்விரும்பின இத்யாதி. ரஸோக்தி - ஒருதிக்குப்பட இத்யாதி. திக்குப்பட - அடைவுபட. திக்குப்பட விரும்புகையாவது இன்னதென்கிறார் - அதாவது இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - அவன்தான் இத்யாதி. அவரையும் அவரோடு ஸம்பந்தமுடைய தேசத்தையும் விரும்புமென்றதுக்கு ப்ரமாணம் - என்னனெண்டான் இத்யாதி; நான், தன்னையும் தன்னோடு ஸம்பந்தமுடைய தேசத்தையும் விரும்புவேனாகில், அவனும், என்னையும் என்னோடு ஸம்பந்தமுடைய வூரையும் விரும்பாநின்றானென்றிறே இதுக்குப்பொருள். "இன்னம்" என்றதுக்கு பாவம்- எனக்கு இத்யாதி. விவரணம் - ஒருதிக்கு இத்யாதி. போனால் விரோதமேதென்ன - இனியவ்வருகு இத்யாதி. "இன்னம் போவேனேகொலோ." இன்னம் விட்டுப்போவேனோ என்று ஸப்தார்த்தம். "அம்மான் திருவருள் - என்கொல்" என்றந்வயிப்பது. அம்மான் திருவருள் என்னம்பாயிருந்ததென்று ஸப்தார்த்தம். "அருள்" என்று - வ்யாமோஹமாக பாவம் - ஸர்வேஸ்வரனை இத்யாதி. அதாவது - நான் சரமாவதிஸேஷமாகையாலே தன்னை விட ப்ரஸங்கமற்றிருக்க, விடில்செய்வதென்? என்று அதிஸங்கை பண்ணும்படியான வ்யாமோஹமிருந்தபடியென்? என்றபடி. "அருள்" என்று - கொடையாக பாவாந்தரம் - என்செய்யாதானாய் இத்யாதி. அதாவது- ஸேஷத்வஸீமாபூமியிலே நிலைநிற்கும்படி யுபகரித்தும் ஒன்றும் செய்யாதவனைப்போலே பரகுபாகென்கிறதுக்கு அவதியென்னோ? என்றபடி. ஏதத்விவரணம் - இவர்திறத்தில் இத்யாதி. நிர்விஷயப்ரமம் - நிராலம்பந ப்ராந்தி. (ரு)

நான்காம் பாட்டு.

என்கோல்அம்மான்திருவருள்கள்?உலகும்உயிருந்தானேயாய்
நன்கேன்னுடலங்கைவிடான் ஞாலத்தூடேநடந்துழக்கித்
தென்கோள்திசைக்குத்திலதமாய்நின்றதிருமாலிருஞ்சோலை
நங்கள்குன்றங்கைவிடான்நண்ணாவசுரர்†நலியவே.

ஆ.—(என்கோலம்மான்.) - என்னுடைய ப்ரக்ருதியினுள்ளேபுகுந்து இவ்வாத்மாவை ஸ்ருஜித்தருளுகையுமன்றியே ஸர்வஜகதீஸ்வரனுயிருந்தான்; என்னுடைய ப்ரக்ருதிதன்னையுங்கூடத் தனக்கு போக்யமாகக்கொண்டு ஒருக்ஷணமும் கைவிடுகிறிலன்; இப்படி "என்னோடுள்ள ஸம்ஸ்லேஷம் பெறுகைக்கீடானதேசமேதோ?" என்று தேடிக்கொண்டு, திருமலையிலே வந்துபுகுந்து, தான் கருதினபடியே அங்கே ஸம்ஸ்லேஷித்து ப்ரீதனாய், "இந்த ஸம்ருத்தியெல்லாம் விளைவித்தது திருமலையிறே" என்றுகொண்டு, திருமலையையும் என்னுயிரும் உடலும்போலே தனக்கு போக்யமாகக்கொண்டு கைவிடுகிறிலன்; என்னுயிரையும் உடலையும் திருமலையையும் அநுபவித்து ப்ரீதனானன்; ப்ரதிகூலர் இந்தஸம்ருத்தி கண்டு பொறுக்கமாட்டாதே தறைப்படும்படி ப்ரீதனானனென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், தம்முடைய திருமேனியிலும் தம்மோடே பரிமாறலாம் நிலமென்று திருமலையிலும் எம்பெருமானுக்குஉண்டான வ்யாமோஹத்தை அருளிச்செய்கிறார்.

[உலகும் என்று தொடங்கி] - ஸர்வேஸ்வரனுயிருந்து வைத்து என் ஆத்மாவை விடாத மாத்ரமன்றிக்கே மிகவும் என் உடம்பைவிடுகிறிலன். [ஞாலத்தூடே நடந்து என்று மேலுக்கு] - பூமியெங்கும் உலாவித்திரிந்து என்னை விஷயீகரிக்கைக்கு ஈடான நிலமாகத் திருமலையைப்பார்த்து ப்ரதிகூலர் மண் உண்ணும்படி அதிலே அத்யபிநிவேஸத்தைப் பண்ணி அத்தை ஒருகாலும் கைவிடுகிறிலன்.

ப.—அநந்தரம், என்ஸரீரத்தை விரும்புகைக்கு ஹேதுவாகையாலே திருமலையையும் ஆதரித்து, இரண்டுஸ்த்தலத்தையும் கைவிடுகிறிலனென்கிறார்.

(ஒருவனைப்பிடிக்கைக்கு ஊரைவளைப்பாரைப்போலே என்னைப் பெறுகைக்காக), உலகும் - ஸர்வலோகங்களும், உயிரும் - ஸர்வப்ராணிகளும், தானேயாய் - தானேயாம்படி (அந்தராத்மாவாய்க்கொண்டு வ்யாப்தனாய்), (அவ்வளவில் நில்லாதே), நண்ணா - (தன்னையாஸ்ரயிக்கையில்) விமுகரான, அசுரர் - அஸுரப்ரக்ருதிகள், நலிய - நசிக்கும்படியாக, (த்ரைவிக்ரமாபதாந முகத்தாலே என்னைலபிக்கைக்கு ஸ்த்தலம்தேடுவாரோபாதி), ஞாலத்தூடே - பூமிக்குள்ளே, நடந்துழக்கி — நடந்துமிகுத்து, தென் - தெற்கென்கிறபேரை, கொள் - கொண்ட, திசைக்கு - திக்குக்கு, திலதமாய்நின்ற - ஸிரஸாவாஹ்யமாயிருக்கிற, திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலையென்று பேராயிருக்கிற, நங்கள் - நம்போல்வார்க்கு அநுபாவ்யமான, குன்றம் - திருமலையை, கைவிடான் - (என்னைலபிக்கைக்கு அநுரூபஸ்த்தலமென்று விரும்பிக்)கைவிடுகிறிலன்: (அதுவழியாக), என்னுடலம் - என்ஸரீரத்தையும், நன்கு - மிகவும், கைவிடான் - கைவிடுகிறிலன்; அம்

† 'நவியவே' என்று சிலர்.

மான் - ஸ்வாமியானவனுடைய, திருவருள்கள் - உபகாரங்களான ஶ்ரீலப்ரகாரங்கள், என்கொல் - என்னுயிருக்கிறன ?

இ.—நாலாம்பாட்டில், தம்முடைய திருமேனியிற்காட்டிலும் தம்மோடே பரிமாறலாம் நிலமென்று அவனுக்குத் திருமலையிலுண்டான வ்யாமோஹத்தை அருளிச் செய்கிருர்.

[என்கொல் அம்மான் திருவருள்கள்] - ஸர்வேஶ்வரனுக்கு என் பக்கலுண்டாயிருந்துள்ள ப்ரஸாதாதிஶயத்துக்கு அவயி என்னே ? [உலகும் உயிரும் இத்யாதி]- ஸகல லோகங்களும் ஸகல ஆத்மாக்களும் தானிட்ட வழக்காயிருக்கிறவன் தனக்கு ஒரு குறையுண்டாய் இப்படி படுகிறானே ? [நன்குஎன்னுடலம் கைவிடான்] - செருக்கர் நீசஸ்த்ரீகள் காற்கடையிலே துவளுமாபோலே என்னுடம்பை விரும்பி விடுகிறிலன். எனக்கு மமதாவிஷயம் என்னுமதுவே ஹேதுவாக விடுகிறிலன். பூமியெங்கும் உலாவி எல்லார் தலைகளிலும் திருவடிகளை வைத்துத் திருவுலகளந்தருளிற்று, தம்மைப் பெறுகைக்கு க்ருஷிபண்ணி யென்றிருக்கிறர். ஸர்வஸாதாரணன் வ்யாபாரமாகையாலே ஸம்பந்தமும் அறிந்தால் எனக்கென்னலாமிறே. இந்த்ரன்ராஜ்யம்பெற்றானய்ப்போனான், மஹாபலி கொடுத்தானய்ப் போனான். இவர் அத்தைத் தமக்கு என்றிருக்கிறர் [தென்கொள் இத்யாதி] - திருவுலகளந்தருளுகை ஒரு வ்யாஜமாய், "ஆழ்வாரை அநுபவிக்கைக்கு ஏகாந்தஸ்தலமேதோ?" என்று ஆராய்ந்து திருமலையிலே நின்றருளினன். ஆரியர்கள் இகழ்ந்த தெற்கில்திக்குக்கு ஓர்ஆபரணம்போலே யிருந்துள்ள திருமலையிலே வந்துநின்றான். [நங்கள் குன்றம்] - ஆஶ்ரிதருடைய ஸங்கேத ஸ்தலம். [நங்கள்குன்றம் கைவிடான் - நன்கு என்னுடலம் கைவிடான்] - திருமலையில்நிலை ஸாதநமாக ஆழ்வார் திருமேனியை ப்ராப்யமாக நினைத்திருக்கிறானய்த்து. [நண்ணாஅசுரர் நலியவே] - திருமலையில் நிலையாலே அஸுரவர்கம் தானே முடிந்துபோய்த்து. உலகும் உயிரும் தானேயாய் - ஞாலத்தூடே நடந்துழக்கி, தென்கொள் திசைக்குத் திலதமாய்நின்ற திருமாலிருஞ்சோலை - நங்கள்குன்றம் - நண்ணா அசுரர் நலிய - கைவிடான். நன்கு என்னுடலம் கைவிடான் - என்கொல் அம்மான் திருவருள்கள் ?

ஈடு.—நாலாம்பாட்டு. தம்முடைய திருமேனியிற்காட்டிலும் தம்மோடே பரிமாறலாம் நிலமென்று அவனுக்குத்திருமலையில் உண்டான வ்யாமோஹத்தை யருளிச் செய்கிறார்.

[என்கோல்அம்மான் திருவருள்கள்] - ஸர்வேஶ்வரனுக்கு நிரவிஷ்டாநப்ரமமுண்டாமாகாதே ! [உலகுஇத்யாதி] - என்னகுறையுண்டாய்த்தான் இப்படி கிடந்து படுகிறான் ? [நன்கென்னுடலம்கைவிடான்] - செருக்கனாயிருக்கும் ராஜபுத்ரன் நீசஸ்த்ரீ காற்கடையிலே துவளுமாபோலே. [நன்கென்னுடலம்] - ஸர்வேஶ்வரன் தன்னைக்

நாலாம்பாட்டு.—என்கோல் இத்யாதி. "நன்கென்னுடலம்கைவிடான் - திருமாலிருஞ்சோலை நங்கள் குன்றம்கைவிடான்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - தம்முடைய இத்யாதி. பரிமாறலாம்நிலம் - ஸம்ஶ்லேஷிக்கைக்கு யோக்யமானதேஶம்.

உக்தாநுபாஷணமென்கிறர் - ஸர்வேஶ்வரனுக்கு இத்யாதி. தம்முடம்பில் அவன் வ்யாமோஹம் சொல்லுகிறவிடத்திலே, ஸர்வேஶ்வரத்வம் சொல்லுகிறதுக்கு பாவம் - என்னகுறை இத்யாதி. இப்படிகிடந்துபடுகிறன் - வ்யாமோஹம்பண்ணுகிறானென்றபடி. "என்னுடலம்" என்றதுக்கு பாவம் - செருக்கன் இத்யாதி. துவளுகை - உலருகை. "நன்கு" என்றதுக்கு பாவம்-

கேட்டார்க்குச் சொல்லுகிற வார்த்தையிருக்கிறபடி. ஆழ்வாரை "நமக்குத்தந்ததிருமேனியன்றோ" என்றுநின்றானாய்த்து. [நன்கு] - நன்றாக. மிகவுமென்றபடி. [என்னுடலம்]- "இவருடைய மமகாரவிஷயமானதன்றோ நமக்கு உத்தேஶ்யம்" என்றிராநின்றான். என்னுடைய * அடங்கெழிற்சம்பத்திலேதேனும் பாம்புசேத்ததோ என்றுநின்றான். [ஞாலத்துஇத்யாதி]- எத்தனைகாலமுண்டு அவன் இப்பேறுபெறுகைக்கு உழன்றுதிரிகிறது. ஸர்வஸாதாரணனான ஸ்வாமியுடைய வ்யாபாரமெல்லாம் எனக்கெனக்கென்னலாமிறே ஶேஷபூதர்க்கு. இந்த்ரனுக்கு "ராஜ்யம்பெற்றேன்" என்னவுமாய், மஹாபலிக்கு "ஔதார்யம்பெற்றேன்" என்னவுமாய், சிலர்க்கு "பொன்பயந்தேன்" என்னவுமாய், அவர்க்கு "எனக்காகச்செய்தான்" என்னவுமாயிருக்கிறது காணும். [தென்கொள்இத்யாதி] - தெற்கில்திக்குக்கு ஓர் ஆபரணமான திருமாலிருஞ்சோலை. [நங்கள்குன்றம்] - ஆஶ்ரிதருடைய ஸங்கேத ஸ்தலம். [நங்கள்குன்றம்கைவிடான் - நன்கென்னுடலம்கைவிடான்]-திருமலையை ப்ராபகமாவும் ஆழ்வார்திருமேனியை ப்ராப்யமாகவும் நினைத்திராநின்றான். ஆழ்வார் திருமேனியாயுத்தேஶ்யம், அதுபெறுகைக்காய்த்துத் திருமலையில் நிலை. [நண்ணாவசுரர் நலியவே] - "நெடும்பகை தற்செய்யத்தானேகெடும்" என்னுமா போலே, இவன் இவ்விடத்தைவிடாதே வர்த்திக்க ஆஸுரவர்க்கம் முடிந்து போய்த்து. 'உலகுமுயிரும் தானேயாய் - ஞாலத்தூடே நடந்துழக்கி, தென்கொள்திசைக்குத் திலதமாய்நின்ற திருமாலிருஞ்சோலை நங்கள் குன்றம் - நண்ணாவசுரர்நலிய - கைவிடான் - நன்கென்னுடலம் கைவிடான் - என்கொலம்மான் திருவருள்கள்.' (௪)

ஸர்வேஶ்வரன் இத்யாதி. ஈஶ்வராபிப்ராயத்தாலே நன்கென்கிறதென்றபடி. நன்றானவுடலமென்று ஶப்தார்த்தம். வார்த்தைதன்னைக் காட்டுகிறார் - ஆழ்வாரை இத்யாதி. "நன்கு" என்றதுக்கர்த்தாந்தரம் - நன்றாக இத்யாதி. நன்றானவென்றர்த்தமானபோது, * உடலுக்கு விசேஷணம்; மிகுதியானபோது, "கைவிடான்" என்றதுக்கு விசேஷணம். "என்" என்று மமகாராஶ்ரிதமானத்தை "நன்கு" என்னும்படியென்னென்ன - இவருடைய இத்யாதி. ஸூசிதம் - என்னுடைய இத்யாதி. அதாவது - த்யாஜ்யமான லீலாவிபூதி ததீயத்வாகாரத்தாலே இவர்க்கு உத்தேஶ்யமானாற்போலே, த்யாஜ்யமானஇவர் திருமேனியும் இவர் ஸம்பந்தத்தாலே உத்தேஶ்யமென்று நின்றானென்றபடி. அடங்கெழில்சம்பத்தில் - கட்டடங்க நன்றான ஸம்பத்தில்; உபயவிபூதியிலுமென்றபடி. பாம்புசேத்ததோ - த்யாஜ்யாம்ஶம்உண்டோவென்றபடி. இப்போது திருவுலகளந்தருளின அபதாநத்தைச் சொல்லுகிறதுக்கு பாவம் - எத்தனைகாலம் இத்யாதி. ஞாலத்தூடே நடந்துழக்குகிறதுஇவர்க்காகவோவென்ன - ஸர்வஸாதாரணன் இத்யாதி. "எனக்கெனக்கென்னலாம்" என்றத்தைக் காட்டுகிறார் - இந்த்ரனுக்கு இத்யாதி. சிலர்க்கு - திருமங்கையாழ்வார்க்கு. ஸங்கேதஸ்தலம் - அநுபவஸ்தலம். இவரிடத்தில் வ்யாமோஹப்ரகரணத்திலே, "நங்கள் குன்றம் கைவிடான்" என்கிறதென்னென்ன - திருமலையை இத்யாதி. விவரணம் - ஆழ்வார் இத்யாதி. திருமலையில் நிலைஇவர்க்காகவாகில், நண்ணாவசுரர் நலியும்படியென்னென்ன - நெடும்பகை இத்யாதி. நெடும்பகை - போக்கப்போகாத சத்ரு. தற்செய்ய - தான் செய்கிறத்தைச் செய்யவென்றபடி. "திருமலை ப்ராபகமும் ஆழ்வார் திருமேனி ப்ராப்யமும்" என்னுமிடம் தோன்றப் பாட்டுக்கந்வயம் அருளிச்செய்யா நின்றுகொண்டு, "என்கொலம்மான்திருவருள்கள்" என்றதுக்கர்த்தாந்தரம் - உலகுமுயிரும் இத்யாதி. "என்கொலம்மான்திருவருள்கள்" என்றது - அநுவாதமென்று முந்தினவர்த்தம்; அநுவாதமானபோது, "நன்கென்னுடலம் கைவிடான்" என்று க்ரியை. இப்பாட்டுக்கு ஶேஷமென்றிரண்டாமர்த்தம்; இப்போது, வ்யாக்யாநத்திற்படியே யந்வயம்; "திருவருள்" என்று க்ரியை.

(௪)

ஐந்தாம் பாட்டு.

நண்ணா அசுரர் †நலிவெய்த நல்ல அமரர் பொலிவெய்த
எண்ணாதனகளெண்ணும் நன்முனிவர் இன்பந்தலைசிறப்பப்
பண்ணார்பாடலின்கவிகள் யானாய்த்தன்னைத்தான்பாடித்
தென்னாவென்னுமென்னம்மான் திருமாலிருஞ்சோலையானே.

ஆ.—(நண்ணா.) - ப்ரதிகூலர் தறைப்படும்படியாகவும் தனக்கு நல்லரான அமரர் ஸம்ருத்தராம்படியாகவும், லீலோபகரணமாயும் போகோபகரணமாயுமிருந்த நிரவதிகஸம்ருத்திகள் எம்பெருமானுக்கு உளவாயிருக்கச்செய்தே, இவையொழியவே அதின்மேலே ஸத்ய ஸங்கல்பனாயிருந்த எம்பெருமான்தன்னாலும் ஸம்பாதிக்கவொண்ணாதே வாங்மநஸாகோசரமான அபர்யந்தஸம்ருத்திகள் எம்பெருமானுக்கு உளவாக வேணுமென்று மநோரதியாநிற்கும் நன்முனிவர், "நம்முடைய மநோரதாநுவர்த்தியான நிரவதிகஸம்ருத்திகள் எம்பெருமானுக்கு விளையப்பெற்றோம்; இனி நமக்கொரு குறையில்லை" என்றுகொண்டு நிரவதிகநிர்வ்ருதியை யுடையராம்படியாகவும், பண்ணார் பாடலான இன்கவிகளை என்னையிட்டுப் பாடுவித்து இக்கவிகளாகிற அம்ருதத்தைப் பருகிக் களித்து, அம்ருதபாநம்பண்ணின வண்டுகள்போலே தென்னாதெனாவென்று திருமலையிலேநின்று பாடியருளாநின்றானென்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், எம்பெருமான் தம்மோடேகலந்து தம்வாயிலே திருவாய்மொழி கேட்ட ப்ரீதியுள்ளடங்காமை, தென்னா தென்னாவென்று நித்யமுக்தரைப்போலே பாடாநின்றான் என்கிறார்.

[நண்ணா என்றுதொடங்கி] - உகவாத அஸுரர் இஸ்ஸம்ருத்தி பொறுக்க மாட்டாதே முடியும்படியாகவும், அநுகூலர் இத்தைக்கண்டு ஸம்ருத்தராம்படியாகவும், உபயவிபூதியும் கூடினாலும் எம்பெருமானுக்கு ஸம்பத்துபோராது, இன்னம் மேன்மேல் நன்மைகளை வேணுமென்று எண்ணாநிற்கும் நன்முனிவர், "இதுவே அமையும், மற்றொரு ஸம்பத்து வேண்டா" என்று மிகவும் ஹ்ருஷ்டராம்படியாகவும். [பண்ணார் பாடல் என்றுதொடங்கி] - பண்சேர்ந்திருந்துள்ள பாடலையுடைய இனியகவிகளை என்னைப் பேரையிட்டுக்கொண்டு தான் தன்னைப் பாடி. [என்னம்மான்] - திருமாலிருஞ்சோலையானே] - என் நாயனானவன் திருமாலிருஞ்சோலையான்.

ப.—அநந்தரம், தம்மோடு ஸம்ஶ்லேஷித்து திருவாய்மொழி பாடக்கேட்ட ப்ரீதியாலே ரஸிகனாய் ஆளத்திவையாநின்றானென்கிறார்.

நண்ணா - (ஹ்ருதவத்விஷயத்தைக்) கிட்டக்கடவோமல்லோமென்று ப்ரத்யூஹராயிருக்கும், அசுரர் - ஆஸுரப்ரக்ருதிகள், நலிவெய்த - (இவ்வதிஶயம் பொறுக்கமாட்டாமல்) விநாஶத்தையடையவும், நல்லவமரர் - பக்திபரராய்க்கொண்டு அநுகூலரான தேவவர்க்கம், (மிகவுமுகப்பாலே), பொலிவெய்த - ஸம்ருத்தியை லபிக்கவும், எண்ணாதனகள் - அவாப்தஸமஸ்தகாமனுடைய குணவிபூதிக்குமேலே இதுக்குமுன்பு எண்ணவறியாத அதிஶயங்களை, எண்ணும் - ப்ரேமத்தாலே ஆஶாஸியாநிற்கும், நல் - ஸ்நேஹயுக்தராய், முனிவர் - (அநுஸந்தாநஶீலரான) முனிவர்கள், (கேட்டநுபவித்து), இன்பம் தலைசிறப்ப - ஆநந்தநிர்ப்பரராகவும், பண் ஆர் - பண்நிறைந்த, பாடல் - இசையை

† 'நலிவெய்த' என்று சிலர் ஓதுவர்.

யுடைய, இன்கவிகள் - இனியகவிகளை, யானைய் - (தனக்கு ப்ரகாரபூதனான) நானைய்க்கொண்டு, தன்னை - (ஸ்தவ்யனாய்ஸ்தவப்ரியனான)தன்னை, தான்பாடி - ஸ்தோதாவாய்க்கொண்டு தானேபாடி, திருமாலிருஞ்சோலையான் - திருமாலிருஞ்சோலையானாய்நிற்கிற, என்னம்மான் - என் ஸ்வாமியானவன், (தன்மேன்மைபாராதே பாட்டில் ரஸாதிஶயத்தாலே),தென்னாவென்னும்-தென்னாஎன்று ஆளத்திவையாநிற்கும்.நலிவு- நாசம்.

இ.—அஞ்சாம்பாட்டில், அவன் தம்மோடேகலந்து தம்வாயாலே திருவாய்மொழிகேட்ட ப்ரீதியுள்ளடங்காமை ஆளத்திவையாநின்றான் என்கிறார். "நன்கு என்னுடலம் கைவிடான்" என்கிறவளவன்றியே என் உக்திமாத்ரத்திலே களியாநின்றான் என்றுமாம்.

[நண்ணா இத்யாதி] - "விபரீதஸ்ஸ்யாஸுர:" என்கிறபடியே - விபரீதரான அஸுரர்கள் இஸ்ஸம்ருத்தி பொறுக்கமாட்டாமையாலே முடியவும், "கிட்டக்கடவோமல்லோம்" என்றிருக்கும் அஸுரவர்கம். "விஷ்ணுபக்திபரோதேவ:" என்கிறபடியே - அநந்யப்ரயோஜநரான வைஷ்ணவர்கள் இதுவே ஜீவனமாக ஸம்ருத்தமாகவும். "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றாரிறே [எண்ணா தனகளெண்ணும்] - உபயவிபூதியுக்தனுக்கு இன்னம் விபூதி வேணுமென்றும், அஸங்க்யாதகுணகனுக்கு இன்னம் குணம் வேணுமென்றும் மேன்மேலன எண்ணா நிற்குமவர்கள். [நன்முனிவர்] - ஈஶ்வரன் அடியாகத் தங்கள் ஸம்ருத்தியை எண்ணுமவர்கள் முனிவர்; அத்தலைக்கு ஸம்ருத்தியை எண்ணுமவர்கள் நன்முனிவர். [இன்பம் தலைசிறப்ப] - "திருவாய்மொழியொழிய வேறொரு ஸம்பத்துவேண்டா" என்று மிகவும் ஹ்ருஷ்டராம்படியாகவும். [பண்ணார் பாடல்] — பண்மிக்கிருந்துள்ள பாடல். புஷ்பம் பரிமளத்தோடே அலருமாபோலே, திருவாய்மொழி அவதரிக்கிறபோதே பண் மிகுங்கியாய்த்திருப்பது. [இன்கவிகள்] - பண்ணுக்கு ஆஶ்ரயமான கவிதானே இனிதாயிருக்கை. [யானாய்த்தன்னைத் தான்பாடி] - என்னைப்பேரையிட்டுத் தன்னைத் தான்பாடி; புத்ரனை வார்த்தையைக் கற்பித்து அவன்வாயாலே கேட்டு இனியனும் பிதாவைப்போலே. [தென்னாவென்னும்] - ப்ரீதிக்குப் போக்குவீடாக ஆளத்திவையாநின்றான். "ஹாவுஹாவுஹாவு" என்று ஸாமவல்லாஸத்திலே ப்ரீதிக்குப் போக்குவிட்டு மோக்ஷப்ராப்தன் செல்லக்கடவத்தை, "அஹமந்நாத:" என்கிறதான் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே அந்த பூர்த்திகுலைந்து சொல்லுகிறானிறே. [என்னம்மான்] - ஸுதவசநம் ரஸிக்குமாபோலே, ஸம்பந்தமிறே ரஸிக்கைக்கு அடி. [திருமாலிருஞ்சோலையானே] - இவரைக் கவிபாடுவித்த தேஶம் திருமலையாய்த்து.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. அவன் தம்மோடே கலந்து தம் வாயாலே திருவாய்மொழிகேட்ட ப்ரீதியுள்ளடங்காமல் ஆநந்தித்து ஆளத்திவையா நின்றானென்கிறார். 'நன்கேன்னுடலம் கைவிடான்" என்னுமளவன்றிக்கே என்னுக்திமாத்ரத்திலே களியாநின்றானென்கிறாரென்றுமாம்.

அஞ்சாம்பாட்டு.—நண்ணா இத்யாதி. இவர்திருமேனியை விரும்புகிற ப்ரகரணத்திலே திருவாய்மொழியைக்கேட்டு இனியனாகையைச் சொல்லுகிறதென்னென்ன; த்வேதா அருளிச்செய்கிறார் - அவன்தம்மோடே இத்யாதி வாக்யத்வயத்தாலே; "மாயக்கவியாய்," "தன்னைத் தானே துதித்து" இத்யாதியாலே ப்ரஸ்துதமாகையாலே யருளிச்செய்கிறாரென்றபடி. "நன்கென்னுடலம் கைவிடான்" என்றத்தைப்பற்ற - தம்மோடேகலந்து என்றது. பரிஹாராந்தரம் - நன்கேன்னுடலம் இத்யாதி. அதாவது - திருமேனியெல்லாம் வேண்டாதே உக்திமாத்ரத்திலே களியாநின்றானென்றபடி. ஆளத்தியாவது- காநத்துக்குப் பூர்வாங்கமான ஆலாபம்.

* நண்ணுவசுரர்நலிவெய்த நல்லவமரர்பொலிவெய்த எண்ணுதனகளெண்ணும் நன்முனிவரின்பம் தலைசிறப்பவாய்த்து திருவாய்மொழிதான் அவதரித்தது. ஸ்துத்யனுடைய அவதாரம்போலேயாய்த்து ஸ்துதியினுடைய அவதாரமும்; "**பரித்ராணாய**" (பரித்ராணாய), "**அகிலஜகத்பத்மபோதாய**" (அகிலஜகத்பத்மபோதாய)என்னுமாபோலே. [நண்ணுஇத்யாதி] - ப்ரதிகூலநிரஸநத்துக்கு வேறொரு கருவி யெடுக்கவும்வேண்டாதே, அநுகூலரக்ஷணத்துக்கும் வேறொன்று தேடவும் வேண்டாதே, அநந்யப்ரயோஜநராயிருப்பார்க்கு ஸ்வயம்ப்ரயோஜநமுமாயிருக்குமாய்த்து. [நண்ணுவசுரர்நலிவெய்த] - அவ்யபதேஶ்யனுக்கு அநந்தரத்திலவன், தமப்பன் செய்ததைக் கேட்டு "இவன்என்செய்தானானென்" என்றுகர்ஹித்தான் - "ஒரு மதிளை வாங்குங்காட்டில் அத்தர்ஶநம் குலைந்ததோ, திருவாய்மொழியென்றும் ஸ்ரீராமாயணமென்றும் வலியன இரண்டு மஹாப்ரபந்தங்களுண்டாயிருக்க" என்றானாய்த்து; இப்படி உகவாதார் நெஞ்சுளுக்கும்படியான ப்ரபந்தமாய்த்து. "**விபரீதஸ்ததாஸுர:**" (விபரீதஸ்ததாऽஸுர:) என்னக்கடவதிறே. பொருந்தாமையையுடைய அஸுரவர்க்கமானது மண்ணுண்ணும்படியாக. ஸம்பந்தமில்லையென்னவொண்ணாதே, "பொருந்தோம்" என்கையிறே யுள்ளது. [நல்லவமரர்பொலிவெய்த] - "**விஷ்ணுபக்திபரோ தேவ:**"(விஷ்ணுபக்திபரோதேவ:)என்னக்கடவதிறே. †அநுகூலராயிருக்குமவர்கள் உண்ணாதே தடிக்க. இவர்களுக்கு நன்மையாவது - பகவத்பக்தராயிருக்கை. "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்னக்கடவதிறே. [எண்ணுதன இத்

நலிவெய்த - விநாசத்தை யடையும்படியாக. நலிவு - விநாசம். எய்துகை - ப்ராபிக்கை, பொலிவு - வ்ருத்தி. தலைசிறப்ப - மிகவும்அதிசயிக்கும்படியாக. ஃலிதம் - ஸ்துத்யனுடைய இத்யாதி. ஸ்துத்யனுடைய அவதாரம் அநுகூலரக்ஷண ப்ரதிகூலநிரஸநங்களுக்கு ஹேதுவாயிருக்குமோவென்ன - பரித்ராணாய இத்யாதி. ஸாதுபரித்ராணாதிகளுண்டாகிலிறே ஜகத்பத்மபோதம் வருவதென்னும் கருத்தாலே யருளிச்செய்கிறார்-அகில இத்யாதி. "இன்பம்தலைசிறப்ப" என்னுமளவுக்கு பாவம் - ப்ரதிகூல இத்யாதி. கருவி - ஸாதநம். அதாவது - ஆயுதம். திருவாய்மொழி ப்ரதிகூலநிரஸநத்துக்கு ஹேதுவென்னுமதுக்கு ஸம்வாதம்-அவ்யபதேஶ்யனுக்கு இத்யாதி. எப்படி கர்ஹித்தானென்ன - ஒருமதிளை இத்யாதி வாக்யத்வயம். நெஞ்சுளுக்கும்படி - நெஞ்சிடிபடும்படி. அவ்யபதேஶ்யன் - க்ரிமிகண்டன். அநந்தரத்திலவன்- அவன்மகன். அநந்தரத்திலவன் அஸுரனோ? என்ன - விபரீத: இத்யாதி. "**த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச । விஷ்ணுபக்திபரோ தேவோ விபரீதஸ்ததாஸுர:.**" "**பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் । தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே**" இதி கீதாயாம். "**அகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநவே । தேவகீவஸுதேவஸந்த்யாயாமாவிர்பூதம் ஸநாதநம்**" இதி பஞ்சமேம்ஶே. ஶப்தார்த்தம் - பொருந்தாமையை இத்யாதி. "அசுரர்" என்னாதே, "நண்ணுவசுரர்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - ஸம்பந்தம் இத்யாதி. 'உள்ளது' இழக்கைக்கென்றபடி. "நல்லவமரர்" என்கிறதுஆரையென்ன - விஷ்ணுபக்தி இத்யாதி. ஶப்தார்த்தம் - அநுகூலராய் இத்யாதி. விவரணம் - இவர்களுக்கு இத்யாதி. அமரர் - அநுபவபரர். "அமரர்" என்றபோதே பகவத்பக்தரென்று ஸித்தமானாலும், நல்லாரகையாலே "அமரர்" என்று ஹேதுகர்ப்பவிசேஷணமாகையாலே புநருக்திதோஷமில்லை கருத்து. உண்ணாதே தடிக்கைக்கு இது யாதகமோவென்ன. தொண்டர்க்கு இத்யாதி. அவையேதென்ன - ஸர்வேஶ்வரன் இத்யாதி. முனிவர் - மநநசீலர்;

† அநுகூலரானவர்கள் என்று அடையவளைந்தான் பாடம்.

யாதி] - புறம்போருவர் எண்ணுதன சிலவற்றையெண்ணுவார் சிலருண்டாய்த்து. ஸர்வேஶ்வரன் ரக்ஷகன், அவனையொழிந்ததடங்கலும் ரக்ஷ்யம்'' என்றிருக்கையன்றிக்கே, உபயவிபூதியுக்தனுக்கு இன்னம் சிலவிபூதிவேணுமென்றும், ஸர்வகுணஸம்பந்நனுக்கு இன்னம் சிலகுணங்கள் வேணுமென்றும் என்று இப்புடைகளிலே எண்ணுவார் சிலருண்டாய்த்து; அவர்கள் [இன்பம் தலைசிறப்ப] - திருவாய்மொழியவதரித்தபின்பு ''அவனுக்கு குணவிபூதிகள்போராது''என்றிருந்தஇழவுதீர்ந்து, அத்தால்நிரதிஶயாநந்திகளாக. [நன்முனிவர்]-அவனுடைய ஸம்ருத்தியை மநநம்பண்ணும் ஸ்வபாவராயிருக்கை. அன்றிக்கே, ''திருவாய்மொழியை யொழிய வேறொரு ஸம்பத்துவேண்டா'' என்று இதுவே மநநம்பண்ணி ஹ்ருஷ்டராம்படியாகவும். [பண்ணார்பாடல்] - பண்ணோடே சேர்ந்த பாடல். புஷ்பமானது பரிமளத்தோடே அலருமாபோலே, பண்ணும்இசையும் மிகுந்திருக்குமாய்த்து. [இன்கவிகள்] - இசையும்பண்ணுமொழியவே †தோக்குக்கழிந்த சுளைபோலே கவிதானே இனிதாயிருக்குமாய்த்து. [யானாய்த்தன்னைத் தான்பாடி] - பிதாவானவன் புத்ரனுக்குப் பசுவை நீர்வார்த்துக் கொடுத்து அவன்பக்கலிலே தான் மீளநீரேற்றுப் பசுவைப் பெறுமாபோலே;ஸூதனை வார்த்தையைக் கற்பித்து அவன்சொல்லக்கேட்டு இவன் இனியனுமாபோலே. தான் பாடிற்றாகில் ஸ்ரீகீதையோடொத்துப்போம் நம்பிதிருவழுதிநாடுதாஸர், ''அருள்கொண்டாடும்'' என்கிறபாட்டிலே, ''ஸ்ரீகீதையையப்யஸித்தானொருவன் ஸந்ந்யாஸதஸ்ஸிலேசென்றால்பலருமாக நாழியரிசியைக்கொடுத்துவிஶ்வஸிக்கமாட்டாமையாலே 'புறந்திண்ணையிலேகிட' என்பர்கள்: திருவாய்மொழிகற்றான் ஒருவிண்ணப்பம்செய்வான் சென்றால், ஸர்வேஶ்வரனகப்படப் புறப்பட்டேதிர்கொண்டு அகமொழித்துக்கொடுத்து அமுதுபடியுமெடுத்துவிட்டு ஸத்கரிப்பர்கள்'' என்றாராம். ''பண்டேபரமன்பணித்த'' என்று இவரங்கீகரிக்கையாலே அந்த ஸ்ரீகீதைதானும் வீறுபெற்றதிறே. [தென்னாவென்னும்] - செருக்காலே ''தென்னா, தென்னா'' என்று ஆளத்திவையாநிற்குமாய்த்து; ஸம்ஸாரிசேதநனுக்கு பரமவல்லாபமுண்டானால் ''ஹா வு ஹா வு ஹா வு

''முநிர் மநநஶீலஃ'' * நன்மைக்கு - * எண்ணுதனகளெண்ணுகையே நன்மையென்றும், திருவாய்மொழி வ்யதிரிக்தஸம்பத்து வேண்டாவென்கை நன்மையாவதென்றும்அர்த்தத்வயம். முந்தினவர்த்தத்தில், இன்பமாவது - ஈஶ்வரனுடைய குணவிபூதி ப்ரதிபாதகமான திருவாய்மொழியுண்டாகையால் வந்த ஆநந்தம்; இரண்டாமர்த்தத்தில், திருவாய்மொழியாகிற நிரதிஶயஸம்பத்தால்வந்த ஆநந்தம். இவர்கள் திருவாய்மொழியாலே நிரதிஶயாநந்திகளாம் ப்ரகாரத்தை விசதமாக அருளிச்செய்கிறார் - திருவாய்மொழி இத்யாதி. மநநஶீலதையிலே நன்மையேதென்ன - அவனுடைய இத்யாதி. ஆர்தல் - சேர்தலும், மிகுதியும். இவ்வர்த்தத்வயத்தையு மடைவே யருளிச்செய்கிறார் - பண்ணோடேசேர்ந்தபாடலென்றும்,புஷ்பமானதுஇத்யாதியாலும் ''பண்ணும்-பாடலும்-ஆர்'' என்றந்வயிப்பது. பண்-ஸ்வரம். இசை-ராகம். ''இன்'' என்றதுக்குபாவம் - இசையும் இத்யாதி. தோக்கு - த்வக்; மேல்தோல்; சக்கையென்றபடி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - பிதாவானவன் இத்யாதி. யானாய்த்தன்னைத்தான்பாடினதுக்கும்படியென்னென்ன - ஸூதனை இத்யாதி என்னுதல், த்ருஷ்டாந்தாந்தரமாதல். இவ்விடத்திலே,''[Grantha text] '' என்கிறதநுஸந்தேயம். தான்பாடாதே இவரையிட்டுப்பாடுகிற தென்னென்ன - தான்பாடினறாகில் இத்யாதி. ஸ்ரீகீதையைப்பற்ற இது ஶ்லாக்யமென்னுமதுக்குஐதிஹ்யம் - நம்பி இத்யாதி. ஆனாலும் சரமஶ்லோகத்தாலே ஸ்ரீகீதைக்கு அதிசயமில்லையோவென்ன - பண்டே இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - ஸம்ஸாரிசேதநன் இத்யாதி.

† கொர்க்குஎன்றும் பாடங் காண்கிறதென்பர்,

வை" (ஏதத்ஸாமகாயந்நாஸ்தே)என்று ஸாமகாநம்பண்ணுமாபோலே ; "அவாக்யநாதர:" (அவாக்யநாதர:) என்கிறவன் தைர்யபங்கம்பிறந்து பாடாநிற்குமாய்த்து. [என்னம்மான்] - ஸம்போதவசநம் இனிதாம்போது ப்ராப்தியுண்டாகவேணுமிறே ; அதுக்கு அடியான ப்ராப்தியைச் சொல்லுகிறதாய்த்து. [திருமாலிருஞ்சோலையானே] - இவரைப்பாடுவித்த முக்கோட்டை. "பாட்டினுலுன்னையென்னெஞ்சத்திருந்தமை - காட்டினாய்கண்ணபுரத்துறையம்மானே" என்று அவரைப்பாடுவித்தமுக்கோட்டையிறே அது. தாம்பாடினகவிகளினினிமையை யநுஸந்தித்தார், இவை தாமடியாகப் பிறந்தனவென்று சொல்லலாயிருந்ததில்லை, இதுக்கடியேன் ? என்றுபார்த்தார் ; அவன்தன்னெஞ்சிலே புகுந்திருந்து பாடுவித்தானாயிருந்தது. "கண்ணபுரத்துறையம்மான்" என்று கவிபாடுவித்த முக்கோட்டையைச் சொல்லுகிறார். (ரு)

ஆறாம் பாட்டு.

திருமாலிருஞ்சோலையானேயாகிச் செழுமூவுலகுந் தன
ஒருமாவயிற்றினுள்ளேவைத்து ஊழியூழிதலையளிக்கும்
திருமால்என்னையாளுமால் சிவனும்பிரமனும்காணாது
அருமாலெய்தியடிபரவ அருளையீந்தஅம்மானே.

ஆ.—(திருமாலிருஞ்சோலையானே) - த்ரைலோக்யமெல்லாம் தன்சிறுவயிற்றிலே வைத்து யுகந்தோறும் ரக்ஷித்தருளும் ஸ்வபாவனாய், ஸ்ரியஃபதியாய், ப்ரஹ்மருத்ராதிகளால் அநவரதாஸேவிதசரணயுகளனாய், தத்ஸமீஹிதபலப்ரதனாய் ஸர்வேஸ்வரனாயிருந்த திருமாலிருஞ்சோலையான், எனக்குப்பித்தனாய்என்னைப்பிரிகிறிலனென்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், ஸ்ரியஃபதியானவன் திருமலையிலே நின்றருளி என்னையாளுகையிலே மிகவும் வ்யாமுக்தனானான் என்கிறார்.

[செழுமூவுலகு என்றுதொடங்கி] - கல்பந்தோறும் அழகிய மூன்றுலோகத்தையும் தன்திருவயிற்றிலே வைத்து உத்க்ருஷ்டமாக ரக்ஷிக்கும ஸ்ரியஃபதி. [சிவனும்பிரமனும் என்றுமேலுக்கு] - சிவனும் பிரமனும் காணாதே நிரதிஸயஜக்தியுக்தராய்த் தன்திருவடிகளை ஆஸ்ரயிக்க, அவர்களுடைய அபேக்ஷிதங்களைக் கொடுத்த ஸர்வேஸ்வரன்.

ப.—அநந்தரம், ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் உபகாரகனாய் ஸ்ரியஃபதியானவன், திருமலையில்நின்று என்னை யடிமைகொள்ளுகைக்கு வ்யாமுக்தனாயிராநின்றானென்கிறார்.

"தென்னா" என்கைக்கடி - "அம்மான்" என்றது. "யானாய்த்தன்னைத்தான்பாடித் திருமாலிருஞ்சோலையான்" என்றதுக்குபாவம் - இவரை இத்யாதி. முக்கோட்டை - மூகாம்பிகை. அது கவித்வாபாதகம். இதுக்கு த்ருஷ்டாந்தம் - பாட்டினால் இத்யாதி. அவரை - திருமங்கையாழ்வாரை. அது - திருக்கண்ணபுரம். அதுபோலே யிதுவுமென்றபடி. திருமொழி எட்டாம்பத்து பத்தாந்திருமொழி ஒன்பதாம்பாட்டு, "நாட்டினாய்" இத்யாதி. எடுத்தபாசுரத்துக்கர்த்தம் - தாம்பாடின இத்யாதி. 'நலிவெய்தும்படியாகவும், பொலிவெய்தும்படியாகவும், இன்பம் தலைசிறக்கும்படியாகவும், பண்ணார்பாடல்' என்றுதொடங்கி, 'தென்னாவென்னும்' இத்யந்வய:. (ஙு)

சிவனும் - (ஜ்ஞாநாயிகனான) ருத்ரனும், பிரமனும் - ப்ரஹ்மாவும், காணாது - காணப்பெறாதே, அரு - பெறுதற்கரிதான, மால் - அதிஶயிதஶக்தியை, எய்தி-உடையராய்க்கொண்டு, அடி - திருவடிகளை, பரவ - ஸ்தோத்ரம்பண்ண, அருளைஈந்த - (தன் நிரவயிக)க்ருபையாலே அபேக்ஷிதப்ரதாநம்பண்ணின, அம்மான் - ஸர்வாதிகனாய், செழு - விலக்ஷணமான, மூவுலகும் - ஜகத்த்ரயத்தையும், தன் - அகடிதகடநாஸமர்த்தனான தன்னுடைய, ஒரு - அத்விதீயமாய், மா - (அடக்கினவிடந் தெரியாமல் அடக்கவல்ல) ஶக்திமாஹாத்ம்யத்தையுடைய, வயிற்றினுள்ளே - திருவயிற்றினுள்ளே ஒருபுடையிலே, வைத்து - , ஊழியூழி - கல்பந்தோறும், தலை - தலையாக, அளிக்கும் - ரக்ஷிக்குமவனாய், திருமால் - (இந்தஶேஷித்வரக்ஷகத்வங்களுக்கு உபபாதகமான) ஶ்ரியஃபதித்வத்தையுடையவன், திருமாலிருஞ்சோலையானேயாகி - திருமாலிருஞ்சோலையிலே நிலையுடையனாய்க்கொண்டே, என்னை - , ஆளும் - அடிமைகொள்ளுகையிலே, மால் - பெரும் பித்தனாயிரா நின்றான். ஒருமாவென்று - ஏகதேசமான அத்யல்ப ஸங்க்யையைச் சொல்லிற்றாகவுமாம்.

இ.—ஆறாம்பாட்டில், ஶ்ரியஃபதியானவன் வந்து திருமலையிலே நின்றருளி என்னையாளுகையிலே வ்யாமுக்தனானான் என்கிறார்.

[திருமாலிருஞ் சோலையானேயாகி - என்னையாளும் மால்] - திருமலையைத் தனக்கு வஸ்தவ்யபூமியாகக்கொண்டு என்னை அடிமைகொள்ளுகைக்காக என்பக்கல் வ்யாமோஹம் ஒருவடிவுகொண்டாற்போலே யிருக்கிறவன். [செழுமூவுலகும்] - கட்டளைப்பட்ட த்ரைலோக்யத்தையும் அத்விதீயமாய்ச் சிறிதானவயிற்றிலே வைத்து, கல்பந்தோறும் கல்பந்தோறும் தலையாகரக்ஷிக்கும். ப்ரளயாபத்தில் ஜகத்துக்குத் தன்னையொழியச்செல்லாதாப்போலே, என்னையொழியத் தனக்குச் செல்லாதபடியாயிருக்கை. [திருமால்] - ஶ்ரியஃபதி - [என்னையாளும் மால்] - என்பக்கல் பிச்சு ஒருவடிவு கொண்டாற்போலேயிருக்குமவன். ப்ரளயாபத்ஸகனாய் ஶ்ரியஃபதியாயிருக்கிறவன் என்பக்கலிலே ஸாபேக்ஷனாய் நின்றான். [சிவனும் இத்யாதி] - ப்ரஹ்மருத்ரர்கள் காணப்பெறாமையாலே நிரதிஶயஶக்தியுக்தராய்த் திருவடிகளை அக்ரமமாகப் புகழ, அவர்களுடைய அபேக்ஷிதங்களைக் கொடுத்த ஸர்வேஶ்வரன்.

ஈடு.—ஆறாம்பாட்டு. ஶ்ரியஃபதியானவன் திருமலையிலே நின்றருளி என்னையாளுகையிலே வ்யாமுக்தனானா னென்கிறார்.

[திருமாலிருஞ்சோலையானேயாகி - என்னையாளுமால்] - திருமலைதனக்கு வஸ்தவ்ய பூமியாகக்கொண்டு நிற்கிறவன், என்னை யடிமைகொள்ளுகைக்காக என்பக்கல் வ்யாமோஹம் ஒருவடிவுகொண்டாற்போலே யிருக்கிறவன். [செழுமூவுலகும்] - கட்டளைப்பட்ட த்ரைலோக்யத்தையும். [ஒரு இத்யாதி] - அத்விதீயமாய்ச் சிறிதான வயிற்றிலே

ஆறாம்பாட்டு.—திருமாலிருஞ்சோலை இத்யாதி. "திருமால் - திருமாலிருஞ்சோலையானேயாகி - என்னையாளுமால்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை-ஶ்ரியஃபதி இத்யாதி.

"செழுமூவுலகும்" என்றுதொடங்கி "திருமால் - சிவனும் பிரமனும் காணாதருமாலெய்தி யடிபரவவருளையீந்தவம்மான் - திருமாலிருஞ்சோலையானேயாகி - என்னையாளும்மால்". என்றந்வயித்தர்த்தம் - திருமலைதனக்கு இத்யாதி. "சோலையானேயாகி" - சோலையையுடையனாய்க்கொண்டு நிற்கிறவென்றபடி. "ஆளும்" என்றது - ஆமுந் ப்ரத்யயம். ஆளுகைக்காகவென்றபடி. மாலையுடையவனென்னாதே "மால்" என்றதுக்குபாவம் - வ்யாமோஹம் இத்யாதி. "மா" என்று - விபரீதலக்ஷணையாய், அல்பமானவென்றபடி. தலையாக - ஶ்லாக்யமாக. பதப்ரயோகத்

வைத்து, கல்பந்தோறும் கல்பந்தோறும் தலையாக ரக்ஷிக்கும். ப்ரளயாபத்தில் ஜகத்துக்குத் தன்னையொழியச் செல்லாதாப்போலே என்னையொழியத்தனக்குச்செல்லாதானுயிருக்கை. [திருமால்] - ஸ்ரியஃபதி. [என்னையாளுமால்] - என்னையடிமை கொள்ளுகைக்காகப் பிச்சுத்தான் ஒருவடிவு கொண்டாற்போலே யிருக்குமவன். [சிவனும்பிரமனும்இத்யாதி]- ப்ரஹ்மருத்ராதிகள், காணப்பெறுமையாலே நிரதிசயஹர்ஷயுக்தராய்த் திருவடிகளை அடைவுகெட ஏத்த, அவர்களுக்கு முகந்தோற்றுமே சடக்கநின்று அருளைப் பண்ணிக்கொடுக்கும் ஸர்வேச்வரன், எனக்குக் கண்ணுக்கிலக்காம்படி திருமலையிலே வந்துநின்று என்னையடிமை கொள்ளுகையிலே பெரும் பித்தனுனன். (௬)

ஏழாம் பாட்டு.

அருளாயீஎன்னம்மானே! என்னும் முக்கணம்மானும்
தெருள்கொள்பிரமனம்மானும் தேவர்கோனுந்தேவரும்
இருள்கள்கடியும்முனிவரும் ஏத்துமம்மான்திருமலை
மருள்கள்கடியும்மணிமலை திருமாலிருஞ்சோலைமலையே.

ஆ.—(அருளாயீ.) - இஸ்ஸம்ருத்தியெல்லாம் திருமலையை ஆச்ரயித்தன்றோ வந்ததென்றுகொண்டு, திருமலையை நின்றேத்துகிறார்.

ஓ.—ஏழாம்பாட்டில், தம்முடைய ஸம்ருத்திக்கு அடியான திருமலையை ஏத்துகிறார். என்பக்கலிலே க்ருபை பண்ணியருளவேணும் என்ஸ்வாமியே என்னும் ருத்ரனும், அவனிற் காட்டில் அறிவுடைய ப்ரஹ்மாவும், இந்த்ரனும், தேவர்களும், ஜகத்தில் அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கக்கடவ ருஷிகளும்.

[ஏத்தும் அம்மான் என்று மேலுக்கு] - ஏத்தும்படியையுடைய ஸர்வேச்வரனுடைய திருமலை, ஆத்மாவுக்கு ஸஹஜ கைங்கர்ய விரோதிகளான அவித்யாதிகளெல்லாம் போக்கும் நிரதிசய புருஷார்த்தமான மலை - திருமாலிருஞ்சோலையே.

ப.—அநந்தரம், தம்மை யங்கீகரிக்கைக்காக அவன் வந்துநின்ற திருமலையினுடைய வைலக்ஷண்யத்தைப் புகழ்ந்தருளுகிறார்.

என்னம்மானே - என்னுடைய ஸ்வாமியானவனே! அருளாய் - (உன்னுடைய) க்ருபையைத் தந்தருளவேணும், என்னும் - என்றுகொண்டு, முக்கணம்மானும் - த்ரிணேத்ரனும்(ஈச்வராபிமாநியான) ருத்ரனும்,தெருள்கொள்-(ஸ்ரஷ்ட்ருத்வாதியுபயுக்தமான) ஜ்ஞாநாதிகுணத்தையுடைய, பிரமனம்மானும் - ப்ரஹ்மாவாகிற ஸ்ருஜ்யஜகத்பதியும், தேவர்கோனும் - தேவர்களுக்கு நிர்வாஹகனான இந்த்ரனும்,தேவரும் - (த்ரயஸ்த்ரிம்சத்கோடி) தேவர்களும், இருள்கள் - (ஸ்வரூபபுருஷார்த்த விஷயமான ஜ்ஞாநாபாவம், அந்யதாஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம் முதலான) தமஸ்ஸுக்களை, கடியும் - புராணாதியுபதேசமுகத்தாலே போக்கக்கடவரான,முனிவரும்-பரமருஷிகளும், ஏத்தும்-

---

துக்கு ஹாவம் - ப்ரளயாபத்தில் இத்யாதி. இவர்பக்கல் வ்யாமோஹ ப்ரகரணத்துக்குச் சேர - அவர்களுக்கு முகந்தோற்றமே கடக்கநின்று என்கிறார். அடியில் அந்வயித்தத்தைப் பின்னையும் காட்டுகிறார் - எனக்கு இத்யாதி. (௬)

ஸ்தோத்ரம்பண்ணும்படியான, அம்மான் - ஸ்வாமியானவனுடைய வாஸஸ்தாநமான, திருமலை - திருமலையாய், மருள்கள் - ப்ராப்திப்ரதிபந்தகமான அவித்யாதி ஸகலப்ரமங்களையும், கடியும் — போக்கக்கடவதாய், மணி - நிரதிசய போக்யமாம்படி விலக்ஷணமான, மலை - மலை, திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலையென்று திருநாமமான, மலையே - திருமலையிறே.

இ—ஏழாம்பாட்டில், தம்முடைய ஸம்ருத்திக்கு அடியான திருமலையை வத்துகிறார்.

[அருளாயீ இத்யாதி]-"என்ஸ்வாமீ, என்பக்கலிலே க்ருபை பண்ணியருளவேணும்: உடையவனான நீபொகட்டால் வேறு புகலுண்டோ?" என்னுமாய்த்து. இப்படி சொல்லுகிறவன் ஆர்? என்னில், - லலாடநேத்ரனாய், ஈஶ்வராபிமாநியான ருத்ரனும், அவனுக்கும் ஜ்ஞாநப்ரதனாய் ஜநகனான ப்ரஹ்மாவும். [தேவர்கோனும்] - தேவர்களுக்கு அத்யக்ஷனான இந்த்ரனும், தேவேந்த்ரன் என்று அவனுக்கு ஏற்றமான உத்கர்ஷத்தையுடைய தேவர்களும், அஜ்ஞாநாந்தகாரத்தை வாஸனையோடே போக்கும் ஸ்மர்த்தாக்களும், இவர்களெல்லாரும்கூட ஏத்தும் ஸர்வேஶ்வரனுடைய திருமலை. [மருள்கள் இத்யாதி] - கைங்கர்ய விரோதிகளான அவித்யாதிகளைப் போக்குமதுவாய், ஸ்வயம் புருஷார்த்தமான திருமலை. திருமலையையொழியவே ப்ராப்யமுண்டு என்றிருக்கும் நினைவைப் போக்குமிடம் என்றுமாம். அதுதான் ஏதென்னில்?—திருமாலிருஞ்சோலை மலையே.

ஈடு.—ஏழாம்பாட்டு. தம்முடைய இஸ்ஸம்ருத்திக்கெல்லாம் அடி திருமலையானபின்பு, இத்தேசந்தானே நமக்கு ப்ராப்யமென்று திருமலையைக் கொண்டாடுகிறார்.

அருளாயீயென்பர்கள் - ப்ரஸாதத்தைப் பண்ணியருளென்பர்கள். [என்னம்மானே] - நீயருளாதொழிந்தால் புறம்பு எங்களுக்குப் புகலுண்டோ? ப்ராப்தனான நீ யருளவேண்டாவோ வென்பர்கள். இப்படி சொல்லுகிறவர்கள்தான்ஆரென்னில்,- [முக்கண் இத்யாதி] - லலாடநேத்ரனாய் ஈஶ்வராபிமாநியான ருத்ரன், அவனுக்குங்கூட ஜ்ஞாநப்ரதனாய் ஜநகனாகையால் வந்த ஏற்றத்தையுடைய சதுர்முகன், தேவஜாதியை சனியும் புதனும் மெய்க்காட்டுக்கொள்ளுகிற இந்த்ரன், தங்களை யுடையனாகை அவனுக்கேற்றமாம்படி யிருக்கிற தேவர்கள், அஜ்ஞாநாந்தகாரத்தை வாஸனையோடே போக்கியிருக்கும் ஸ்மர்த்தாக்களான ருஷிகள், இவர்களடங்கலும் ஒருமிடறுசெய்து ஏத்தும்படியாக ஸர்வேஶ்வரன் தான்விரும்பிவந்து மேல்விழுந்து படுகாடுகிடக்கும் தேசமாய்த்து. [மருள்கள் கடியும் மணிமலை] - ப்ராப்யவிரோதியானவற்றை அடையப்போக்கும் தேசமாய்த்து. அதாகிறது—திருமலையையொழிந்ததொன்றே ப்ராப்யமென்றுபிறக்கும் புத்தியைத் தவிர்த்

ஏழாம்பாட்டு.—அருளாயீ இத்யாதி. "மணிமலை திருமாலிருஞ்சோலை மலையே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - தம்முடைய இத்யாதி.

"என்னம்மானே - அருளாயீ - என்னும் முக்கணம்மானும்" என்று கூட்டுவது. ஸ்வாமித்வத்தைச்சொல்லி ஸம்போதிக்கிறவர்களுடைய ஹார்த்தபாவம் - நீயருளாதொழிந்தால் இத்யாதிவாக்யத்வயத்தாலே. தெருள்கொள் - தெருளையுடையவென்றபடி. ஸ்மர்த்தாக்களான - ஸ்ம்ருதி கர்த்தாக்களான. படுகாடுகிடக்கும் - வெட்டிவிழுந்த காடுபோலே கிடக்கும். "மருள்கள்" என்று - அவித்யாதிகளாக அருளிச்செய்து, அர்த்தாந்தரம் - அதாகிறது இத்யாதி. அதாகிறதென்

துத் தருமாய்த்து. இதெல்லாம் எதுதானென்னில்; மற்றுமுண்டோ? திருமாலிருஞ் சோலைமலையே. (எ)

எட்டாம் பாட்டு.

திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலேஎன்றலையே
திருமால்வைகுந்தமே தண்திருவேங்கடமேயெனதுடலே
அருமாமாயத்தெனதுயிரே மனமேவாக்கேகருமமே
ஒருமாநொடியும்பிரியான்என்னூழிமுதல்வனொருவனே.

ஆ.—(திருமாலிருஞ்சோலை.)-விளைந்தஸம்ருத்தி தானேதென்னில்; இதென்கிறார். திருமாலிருஞ்சோலை, திருப்பாற்கடல், திருநாடு, திருமலை தொடக்கமாகத் தானெழுந்தருளியிருக்கும் திருநகரிகளெல்லாவற்றிலுமுள்ள ஸம்ஶ்லேஷத்தினால் ப்ரீதனுமாபோலே, என்னுடைய அவயவங்களிலே ஓரோர் அவயவத்தோடுள்ள ஸம்ஶ்லேஷத்தினாலே ப்ரீதனாய், என்னை ஒருக்ஷணமும் பிரியில் தரிக்கமாட்டுகிறிலன்; ஒருவனுடைய அபிநிவேஶமிருக்கும்படியே யிது! என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், திருமலை தொடக்கமான கோயில்களெல்லாவற்றிலும் பண்ணும் அபிநிவேஶத்தைத் தம்முடைய திருவுடம்பிலும் பண்ணுகின்றான் என்று அநுஸந்தித்து, அவனுடைய அபிநிவேஶம் அவ்வளவுமன்றிக்கே யிருக்கையாலே அவை தன்னையே பரிஹரித்து-'இவற்றை ஒருக்ஷணமும் பிரிகிறிலன், என்பக்கலிலே அபிநிவிஷ்டனான ஸர்வேஶ்வரனுடையபடி யிருந்தபடியென்?' என்கிறார். அருமாமாயத்து எனதுயிரே என்றது - "சீசீ ரோயாக்ஷாத்யயா" என்னும்படியாலே கடக்க அரிதான ப்ரக்ருதியோடே மயங்கின என் ஆத்மா என்றவாறு.

ப.—அநந்தரம், 'திருமலைதொடக்கமான திவ்யதேசங்களோடொக்க என்னுடைய ஸர்வாவயவங்களையும் விரும்பி ஒருக்ஷணகாலமும் பிரிகிறிலன்: இவனொருவனுயிருக்கிறானே!' என்று விஸ்மிதராகிறார்.

திருமாலிருஞ்சோலைமலையே - திருமாலிருஞ்சோலைமலையையும், திருப்பாற்கடலே - திருப்பாற்கடலையும், (அவற்றோடொக்க), என்றலையே - என்தலையையும், திருமால் - "ஸ்ரியாவஸாய" என்கிறபடியே ஸ்ரிய:பதியாய்க் கொண்டிருக்கிற, வைகுந்தமே - பரமபதத்தையும், தண் — ஶ்ரமஹரமான, திருவேங்கடமே - பெரிய திருமலையையும், (அப்படியே), எனதுடலே - என்ஶரீரத்தையும், அரு - துஸ்தரமாய், மா - அதிஶயிதையாய், மாயத்து - ஆஶ்சர்யமான ப்ரக்ருதியோடே ஸம்ஸ்ருஷ்டமான, எனதுயிரே - என்னாத்மாவையும், மனமே - மநஸ்ஸையும், வாக்கே - வாக்கையும், கருமமே - க்ரியையும், ஒருமாநொடியும் - ஒருக்ஷணத்தில் ஒருமாப்பொழுதும், பிரியான்-பிரிகிறிலன், என்னூழிமுதல்வன் - என்னைலபிக்கைக்காகக் காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனானவன், ஒருவனே - ஒருவனுயிருக்கிறானே! கீழிலே

றது - மருள்கள் கடிகையாவதென்றபடி. மருள் - தெருள். ப்ராப்யாந்தர ஜ்ஞாநம். மணிமலை - அழகிய மலை. ஸ்வயம்புருஷார்த்தமான மலையென்றபடி. (எ)

காரங்கள் - எண்ணுதல், அவையே அஸாதாரணமாம்படி விரும்பினபடியாதலாயிருக்கிறது. நொடி - க்ஷணம்.

இ.—எட்டாம்பாட்டில், 'திருமலை தொடக்கமான கோயில்கள் எல்லாவற்றிலும் பண்ணும் அபிநிவேஶத்தை என் அவயவங்களிலே பண்ணி ஒருக்ஷணமும் பிரிகிறிலன்; இவன்படியிருந்தபடியென்?' என்கிறார்.

[திருமாலிருஞ்சோலை மலையே] - தெற்கில் திருமலையையும், திருப்பாற்கடலையும், என் உத்தமாங்கத்தையுமொக்க விரும்பாநின்றான்; பரமபதத்தையும், வடக்கில் திருமலையையும், என் ஶரீரத்தையுமொக்க விரும்பாநின்றான். [திருமால் வைகுந்தம்] - "ஶ்ரியாஸார்த்தம் ஜகத்பதி:" என்கிறபடியே அம்மிதுநத்துக்குத் தகுதியான தேஶம். இத்தேசங்களில் பண்ணுகிற விருப்பம் தன்திருமேனியில் பண்ணுகிற விருப்பத்துக்கு ஸத்ருஶமல்லாமையாலே தம்முடைய அவயவங்கள்தோறும் புக்கு அநுபவியாநின்றான். [அருமாமாயத்து எனதுயிரே] - கடக்கவரிதான ப்ரக்ருதியோடே மயங்கி அசித்கல்பமான என் ஆத்மாவிலே. அவதாரணங்களால் - "இதுவேயோ இவன் அபிநிவேஶத்திருப்பது" என்று தோற்றும்படியிருக்கை. [ஒருமாநொடியும் பிரியான்] - ஒருக்ஷணத்தில் ஏகதேசமும் பிரிகிறிலன். [என்னூழி முதல்வன் ஒருவனே] - என்பக்கல் அபிநிவிஷ்டனுகைக்காகக் காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனான அத்விதீயன், ஸம்ஹார காலத்தில் ஸகல சேதநா சேதநங்களுக்கும் தன்னையொழியச் செல்லாதாப் போலேபாய்த்து, இவர் திருமேனியை ஒழியத் தனக்குச் செல்லாதே யிருக்கிறபடி. கார்ய காரணோபயாவஸ்த்த சிதசித்துக்களுடைய ஸத்தை தன்னதீநமாம்படியிருக்கிறவன் தன்னுடைய ஸத்தை என்ஶரீராதீநமாம்படியிராநின்றான்: இவனும் ஒருவனுயிருக்கிறானே!

ஈடு.—எட்டாம்பாட்டு. 'திருமலைதொடக்கமான கோயில்கள்எல்லாவற்றிலும் பண்ணும் அபிநிவேஶத்தை என் அவயவங்களிலேபண்ணி ஒருக்ஷணமும் பிரிகிறிலன்; இவன்படியிருந்தபடியென்!' என்கிறார்.

[திருமாலிருஞ்சோலைமலை இத்யாதி] - தெற்கில் திருமலையையும், திருப்பாற்கடலையும், இவருடைய உத்தமாங்கத்தையும் ஒக்கவிரும்பினான்; ஸ்ரீவைகுண்டத்தையும், வடக்கில்திருமலையையும், இவர்திருமேனியையும் ஒக்கவிரும்பாநின்றான். [திருமால்வைகுந்தம்] - "ஶ்ரியாஸார்த்தம்ஜகத்பதி:" (ஸ்ரீயாஸார்த்தம்ஜகத்பதி:) என்கிறபடியே †(அம்மிதுநத்துக்குத் தகுதியான தேசம்). ஆக. இரண்டு திருமலைகளிலும் பரவ்யூஹங்களிலும் பண்ணும்விருப்பத்தையடைய இவர்திருமேனியொன்றிலும் பண்ணாநின்றானென்றபடி. [அரு இத்யாதி] - இவருடைய ஆத்மவஸ்துவிலும் மநோவாக்காயங்களிலும் ஒக்கவிரும்பாநின்றான். அவதாரணத்தால் - அதுதன்னிலும் க்ரமத்தாலன்றிக்கே க்ஷணகாலமும் இடைவிடாதே ஸௌபரியைப் போலே அநேகம் வடிவுகொண்டு நில்லாநின்று

எட்டாம்பாட்டு.—திருமால் இத்யாதி. "அரு மாமாயம்" என்றுதொடங்கி "பிரியானூழி முதல்வனொருவனே!" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - திருமலை இத்யாதி.

பூர்வார்த்தத்துக்குத் திரண்ட பொருள் - ஆக இத்யாதி. "நொடியும்பிரியான்" என்னுமளவுக்கும் பாவம்-இவருடைய இத்யாதி. அவதாரணத்தால் என்றது-"உயிரே,மனமே, வாக்கே,கருமமே" என்றவவதாரணத்தாலென்றபடி. உயிரொன்றுதே, "அருமாமாயத்து" என்று விசேஷித்ததுக்கு

† குண்டலிதம் ப்ரக்ஷிப்தம்.

ஞய்த்து. [அரு இத்யாதி] - ஆத்மவஸ்து என்று ஒருவ்யபதேசமாத்ரமாய், அநாதிகாலம் அசித்திலேகலசி அத்தாலே அசித்ஸமனுயிறேயிருக்கிறது. ‘அரு’ என்கையாலே - “மமமாயாதுரத்யயா” (மமமாயாதுரத்யயா) என்கிறபடியே ஒருவரால் கடக்கவரிதாயிருந்துள்ள அசித்தோடே கலசிக்கிடக்கிற ஆத்மவஸ்துவிலும். [மனமேவாக்கேகருமமே]- கீழ், இதுதன்னை ஒன்றாக விரும்பினபடி சொன்னூர்; இங்குத் தனித்தனியே எல்லாவற்றிலுமொக்க ஏககாலத்திலே விருப்பத்தைப்பண்ணினபடியைச் சொல்லுகிறூர். [ஒருமாநொடியும்பிரியான்] — ஒருக்ஷணத்தில் ஏகதேசமும் பிரிகிறிலன். ஒன்றில்நின்றும்ஒன்றில் கால்வாங்கிப்போய் அநுபவிக்கிறிலன். [என்னூழிமுதல்வனொருவனே] - என்னிடத்தில் அபிநிவிஷ்டனுகைக்காக காலோபலக்ஷித ஸகலபதார்த்தங்களுக்கும் காரணபூதனுன அத்விதீயனுனவன். ஸம்ஹாரகாலத்தில் ஸகல சேதநாசேதநங்களுக்கும் தன்னையொழியச் செல்லாதாப்போலேயாய்த்து, இவர்திருமேனியை யொழியத் தனக்குச் செல்லாதே யிருக்கிறபடி.கார்யகாரணுவஸ்தயாவஸ்ய சிதசித்துக்களுடைய ஸத்தை தன் அதீநமாம்படியிருக்கிறவன் தன்னுடையஸத்தை என் ஶரீராதீநமாம்படி யிராநின்றுன். [என்னூழிமுதல்வனொருவனே!] - † (என்பக்கலிலே யபிநிவிஷ்டனுன ஸர்வேஶ்வரனுடையபடியிருந்தபடி என்!) இச்சபலனையே பெரிய ஈஶ்வரனேன்கிறது; இவனும் ஒருவனே! என்கிறூர். (அ)

ஸாவம்-ஆத்மவஸ்து இத்யாதி. “கருமம்” என்று - காயத்தை லக்ஷிக்கிறது. “மாமாயம்” என்றது - எல்லைகாணவொண்ணுத ப்ரக்ருதியென்றபடி. “அரு” என்றதுக்கர்த்தம் - அருவேன்கையாலே இத்யாதி. கீழே “எனதுடலே” என்றுவைத்து, திரியவும் “கருமம்” என்பானென்? என்ன - கீழ்இதுதன்னை இத்யாதி, அதாவது - கீழே, கரணஸஹிதமான அவயவியைவிரும்பினபடி சொல்லிற்று; இங்கு, கரணங்களையும் அவயவியையும் தனித்தனியே விரும்பினபடி சொல்லுகிறதென்றபடி. ஒன்றாக - ஸமமாக. நொடி - க்ஷணம். மா - அதில்ஏகதேசம். தமிழர், “மாநொடி” என்று - நொடியில்அஷ்டமாம்ஶமென்பர்கள். பாவிதம் - ஒன்றில்நின்றும் இத்யாதி. “என்னூழி முதல்வன்” என்றதுக்கர்த்தம் - இச்சபலனையே இத்யாதி. “ஒருவனே!” என்றதுக்கர்த்தம் - இவனும் இத்யாதி. “உயிரே” இத்யாதி சதுஷ்டயத்திலும் “ஒருமாநொடியும்பிரியான்” என்றத்தை யந்வயிப்பது. இரண்டுதிருமலையைச்சொன்னது - உகந்தருளின நிலங்களெல்லாவற்றுக்கும் உபலக்ஷணம். “திருமாலிருஞ்சோலைமலையே” என்றுதொடங்கி “எனதுடலே, அருமாமாயத்தெனதுயிரே - ஒருமாநொடியும்பிரியான்; மனமே - ஒருமாநொடியும்பிரியான்” என்று, “உயிரே” இத்யாதிசதுஷ்டயத்திலும் “ஒருமாநொடியும்பிரியான்” என்றத்தை யந்வயித்து, “என்னூழி முதல்வனொருவனே” என்று அந்வயமாதல்; அன்றிக்கே, “திருமாலிருஞ்சோலைமலையே” என்றுதொடங்கி “என்தலையே - ஒருமாநொடியும்பிரியான், திருமால் - எனதுடலே - ஒருமாநொடியும் பிரியான்” என்றுதொடங்கி, “ஒருமாநொடியும்பிரியான்” என்றத்தை எல்லாவற்றிலும் அந்வயித்துக்கொண்டு, ‘என்னூழிமுதல்வனொருவனே’ என்றந்வயமாதல். “மலையே, திருப்பாற்கடலே” இத்யாதி ப்ரதம விபக்தியையெல்லாம் த்விதீயையாக்கி, மலையையும் திருப்பாற்கடலையும் என்று இப்படி முடியச்சொல்லிக்கொள்வது. அருமாமாயத்தெனதுயிர் - கடக்கவரிதாய் மஹத்தாய் அபரிச்சிந்நமாய் ஆஶ்சர்யரூபமான ப்ரக்ருதியோடே ஸம்ஸ்ருஷ்டமான என்னுத்மாவையு மென்றபடி. “ஒரு - நொடி - மாவும்பிரியான்” என்றந்வயிப்பது. ஒருக்ஷணத்தில் ஒருமாப்பொழுதும் பிரிகிறிலன். நொடி - க்ஷணம். (அ

† குண்டலிதம் ப்ரக்ஷிப்தம்.

ஒன்பதாம் பாட்டு.

ஊழிமுதல்வனொருவனேயென்னும் ஒருவனுலகெல்லாம்
ஊழிதோறுந்தன்னுள்ளேபடைத்துக் காத்துக்கெடுத்துழலும்
ஆழிவண்ணனென்னம்மான்அந்தண்திருமாலிருஞ்சோலை
வாழ்மனமே! கைவிடேல்உடலுமுயிரும்மங்கவொட்டே.

ஆ.—(ஊழிமுதல்வன்.) - 'நமக்குஇந்த ஸம்ருத்தியெல்லாம் திருமலையாலே வந்த ஸம்ருத்திகிடாய், நெஞ்சே! இனி, திருமலையைக் கைவிடாதேகிடாய்' என்று நெஞ்சைக்குறித்துச் சொல்லி, "இவ்வாத்மாவினுடைய நிகர்ஷம்பாராதே இத்தோடே கலந்தருளினையேயாகிலும், என்னுடைய ஹேயமான இந்த ப்ரக்ருதியில் அபிநிவேஶத்தை விட்டருளவேணும்" என்று எம்பெருமானை ப்ரார்த்திக்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், நமக்கு இந்த ஸம்பத்தெல்லாம் திருமலையாலே வந்தது; ஆனபின்பு திருமலையைக் கைவிடாதே என்று தன் திருவுள்ளத்தைக் குறித்துக் சொல்லி, தம்மை ஸஶரீரமாகத் திருநாட்டிலே கொடுபோகவேணு மென்றிருக்கிற எம்பெருமானுடைய அபிநிவேஶத்தைக் கண்டு, இந்த ஹேயமான ப்ரக்ருதியை நீக்கி என்னைக் கொடுபோகவேணும் என்கிறார்.

[ஊழி என்றுதொடங்கி] - காலோபலக்ஷித ஸகல பதார்த்தத்துக்கும் காரணம் ஒருவனே என்று சொல்லப்படுகிற அத்விதீயனாய், கல்பந்தோறும் தன்னுடைய ஸங்கல்பத்தாலே ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணி அதுவே போதுபோக்காவதும் செய்து கடல்போலே கம்பீரஸ்வபாவனான என் ஸ்வாமியுடைய அழகிய ஶ்ரமஹரமான திருமாலிருஞ்சோலையை, மநஸ்ஸே! கைவிடாதே கொள். 'வாழி' என்று - மநஸ்ஸை ஶ்லாகிக்கிறார். [உடலும் உயிரும் மங்கவொட்டே] - ஶரீரப்ராணாதிரூபமான ப்ரக்ருதி ஸம்பந்த விநாஶத்தை ஸம்வதித்தருள வேணும்.

ப.—அநந்தரம், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஹேதுபூதனான ஸர்வேஶ்வரன், தம்முடைய ஶரீராதிகளை விரும்பினபடியைக்கண்டு அத்தை விடும்படிக்கீடாக, "அவனெழுந்தருளிநிற்கிற திருமலையை ஆஶ்ரயி: ஒருகாலும் கைவிடாதே கொள்" என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

ஊழி - காலோபலக்ஷித ஸமஸ்தவஸ்துக்களுக்கும், முதல்வனொருவனே - ஒருவனே காரணபூதனாக, என்னும் - "ஏகஏவ" என்று காரணவாக்யங்களிலே சொல்லப்பட்ட, ஒருவன் - அத்விதீயனாய், உலகெல்லாம் - ஸமஸ்தலோகங்களையும், ஊழிதோறும் - ஸ்ருஷ்ட்யாத்யநுகூல காலந்தோறும், தன்னுள்ளே — தன் ஸங்கல்பைகதேசத்துக்குள்ளே, படைத்து - ஸ்ருஷ்டித்து, காத்து - ரக்ஷித்து, கெடுத்து - ஸம்ஹரித்து, உழலும் - இதுதானே யாத்ரையாக நடத்தும், ஆழிவண்ணன் - அபரிச்சிந்ந ஸ்வபாவனாய், என்னம்மான் - இந்த ப்ராப்திமுகத்தாலே எனக்கு ஸ்வாமியானவனுடைய, அம் - தர்ஶநீயமாய், தண் - ஶ்ரமஹரமான, திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலையை, மனமே - நெஞ்சே! உடலும்உயிரும் - நமக்கு த்யாஜ்யமான தேஹப்ராணாதிகள், மங்க - மங்கும்படியாக, ஒட்டு - செறிந்து ஆஶ்ரயிக்கப்பாராய்; கை

விடேல் - நம்கார்யம்செய்து முடிக்குந்தனையும் கைவிடாதே கொள்; வாழி - இத்தாலே நீ வாழ்வாயாகவேணும். ஆழிவண்ணனென்று - அபரிச்சிந்நஸௌந்தர்யமான விக்ரஹத்தையுடையவனென்றுமாம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், 'நமக்கு இந்த ஸம்பத்தெல்லாம் திருமலையாலே வந்ததாய்த்து: திருமலையைக் கைவிடாதே கொள்' என்று திருவுள்ளத்தை நோக்கிச் சொல்லி, தம்மை ஸஶரீரமாகப் பரமபதத்திலே கொண்டுபோகவேணுமென்றிருக்கிறவனுடைய அபிநிவேஶத்தைக் கண்டு, இந்த ஹேயமான ப்ரக்ருதியை நீக்கிக் கொண்டு போகவேணுமென்கிறார்.

[ஊழி இத்யாதி] - காலோபலக்ஷித ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனானவன் ஒருவனே என்று ப்ரமாணங்கள் சொல்லப்படுகிற அத்விதீயன்; "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்". ஸகல லோகங்களையும் கல்பந்தோறும் தன் ஸங்கல்பைகதேஶத்திலே உண்டாக்கி, நாமரூபங்களைக் கொடுத்தபின்பு தன்கார்யம் தானே செய்து கொள்ளலாம் என்று அவ்வளவில்விடாதே அவற்றினுடைய ரக்ஷணத்தைப்பண்ணி, இவை அதிப்ரவ்ருத்தமானவாறே ஸம்ஹரித்து, இதுவே யாத்ரையாயிருக்கிற ஸர்வேஶ்வரனானவன் என்ஸ்வாமி. கடல்போலே ஶ்ரமஹரமான வடிவைக்காட்டி என்னை ஸம்ஸாரார்ணவத்தில் நின்றும் எடுத்தவன் என்றுமாம். சீர்மையாய் ஶ்ரமஹரமான திருமலையை. [வாழி] - நான்சொல்லுகிற கார்யம் உனக்கு நித்யமாய்ச் சென்றிடுக. நமக்குஇஸ்ஸம்பத்துக்கெல்லாம் அடி திருமலையானபின்பு அத்தைக் கைவிடாதேகொள் என்றுதிருவுள்ளத்தைக் குறித்துஅருளிச்செய்ய; அவனும்தன் திருவுள்ளத்தைக்குறித்து "ஆழ்வார் திருமேனியைக் கைவிடாதேகொள்" என்று அருளிச்செய்ய,-'இந்நிர்ப்பந்தத்தைத் தவிர்ந்தருளவேணும்' என்கிறார். [உடலும் உயிரும் மங்கவொட்டே] - ஶரீரப்ராணரூபமான ப்ரக்ருதி ஸம்பந்தவிநாஶத்தை ஸம்பவித்தருளவேணும்; திருமலை போலே உத்தேஶ்யமாயிருப்ப தொன்றன்று, ஹேயமான ஶரீரமும் ப்ராணனும். 'மங்க வொட்டு' என்கையாலே, ஆழ்வார் இங்கே எழுந்தருளியிருந்த இருப்பு ப்ராரப்த கர்மத்தாலன்று, பகவதிச்சையாலே என்கிறது. "நன்கு என்னுடலம் கைவிடான்" என்றாரிறே.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. 'நமக்கு இந்த ஸம்பத்தெல்லாம் திருமலையாலே வந்ததாய்த்து; திருமலையைக் கைவிடாதே கொள்' என்று திருவுள்ளத்தைக்குறித்தருளிச் செய்கிறார்.

[ஊழிமுதல்வனொருவனே யென்னுமோருவன்]-காலோபலக்ஷிதஸகலபதார்த்தங்களுக்கும் காரணபூதனானவனொருவனுமே என்று "ஸதேவ" (ஸதேவ) இத்யாதி ப்ரமாணங்களாலே சொல்லப்படுகிற ஒருவன். கார்யாகாரமான இதடைய அழிந்தவன்று இவற்றைத் தன்மேலே ஏறட்டுக்கொண்டு நிற்கிறவன்கிடீர், இப்போது என்னுடம்பிலே வந்து தங்குகிறான். காரணாவஸ்த்தையில் சிதசித்துக்களுடைய ஸத்தை தன்னதீநமாம்

ஒன்பதாம்பாட்டு.—ஊழி இத்யாதி. "அந்தண் திருமாலிருஞ்சோலைவாழிமனமே" இத்யாதிகளைக் கடாக்ஷித்தவதாரிகை-நமக்கு இத்யாதி. இந்த ஸம்பத்தெல்லாம்என்றது-நாம்அவனைப் பெறுகிற அதிஶயமெல்லா மென்றபடி.

"என்னும்" என்றது - ப்ரமாணப்ரஸித்தி. பதப்ரயோகத்துக்கு பாவம் - கார்யாகாரமான் இத்யாதி. இவ்வாக்யத்தால் ஸூசிதம் - காரணாவஸ்த்தையில் இத்யாதி. "தன்னுள்ளே

படியிருக்குமவன் ஸ்வஸத்தை என்னயீநமாம்படி யிராநின்றான். காரணாவஸ்த்தையில் ஸத்தையைநோக்கிவிட்டால் பின்னையோதான்இவை தன்னைத்தான் நோக்கிக்கொள்ளுகிறது. [உலகெல்லாமித்யாதி] - நாமரூபங்களைக் கொடுத்துவிட்டால், பின்னைத்தான் தங்கள் கார்யம் தாங்கள் செய்கிறார்களோ? இத்தால் சொல்லிற்றாய்த்து என்னென்னில்;-எல்லா அவஸ்த்தையிலும் இவரையொழியத் தரிப்பானாயிருக்கிறிலன். ப்ரளயாத்யாபத்துக்களில் இவற்றுக்குத் தன்னையொழிய ஸ்த்திதியில்லாதாப்போலே, தான் இவரையொழியில் தரிக்க மாட்டானாயிராநின்றான். [ஆழிவண்ணன்] - ஶம்ஶீரஸ்வபாவனென்னுதல்; கடல்போலே ஶ்ரமஹரமான வடிவைக்காட்டி என்னை †ஸம்ஸாரப்ரளயத்தில் நின்றும் எடுத்தவனென்னுதல். [அந்தண் திருமாலிருஞ்சோலை] - அவனுக்குங்கூட ஈர்ஶநீயமாய் ஶ்ரமஹரமான தேசம். [வாழி மனமே கைவிடேல்] - நெஞ்சே! நாம் சொல்லுகிற ஸம்ருத்தியுனக்கு மாறாதிடுகே. அவன் இப்படி நம்பக்கலிலே மேல்விழுந்து விரும்புகையாகிற ஸம்ருத்திக்கெல்லாம் ஹேது திருமலையாய்த்து; இத்தை ஒருகாலும் கைவிடநினையாதேகிடாயென்கிறார், தந்திருவுள்ளத்தைப் பார்த்து. அவனும் தன் திருவுள்ளத்தைக் குறித்து "ஆழ்வாரைத்தந்தது அவருடைய திருமேனியாயிருக்கும், நீயும் அத்தை ஒருகாலும்விடாதே கிடாய்" என்றான்; "பிரானே, அங்ஙனேயாவது, இத்தைத்தவிரவேணும்" என்று நிர்ப்பந்திக்கிறார். [உடலுமுயிரும் மங்கவொட்டு] - ஶரீரமும் ப்ராணனும் மங்கும்படி இசைய வேணும். இது அத்திருமலைபோலே உபாதேயமாயிருப்பதொன்றன்று, சால ஹேயமாயிருப்பதொன்று; இத்தை மங்க இசையவேணும். 'மங்கவொட்டு' என்கையாலே இதுக்கு முன்புத்தை ஆழ்வாருடைய இருப்பு ப்ராரப்த ஶேஷத்தாலல்ல, ஹஶவ ஊஹிப்ராயத்தாலே" என்னுமிடம் தோற்றுகிறது. ஈஶ்வரன்பற்றிவிடேனென்றிருக்கையாலே யிருந்தாரென்கிறது; "உடலம்கைவிடான்" என்றாரிறே. (கூ)

பத்தாம் பாட்டு.

மங்கவொட்டுஉன்மாமாயை திருமாலிருஞ்சோலைமேய
நங்கள்கோனே!யானேநீயாகிஎன்னையளித்தானே!
பொங்கைம்புலனும்பொறியைந்தும் கருமேந்திரியம்ஐம்பூதம்
இங்குஇவ்வுயிரேய்பிரகிருதி மானாங்காரமனங்களே.

படைத்து" என்றதுக்கர்த்தம் - காரணாவஸ்த்தையில் ஸத்தையை இத்யாதி. "காத்துக்கெடுத்துழலும்" என்றதுக்கர்த்தம் - நாமரூபங்களை இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - ப்ரளயாத்யாபத்துக்களில் இத்யாதி. வண்ணம் - ஸ்வபாவமும், நிறமும். "என்னம்மான்" என்றதுக்கு பாவம் - என்னைஸம்ஸாரத்தில் இத்யாதி. "வாழி" என்றதுக்கர்த்தம் - நெஞ்சே நாம் இத்யாதி. "கைவிடேல்" என்றதுக்கர்த்தம் - அவன்இப்படி இத்யாதி. மேலுக்கவதாரிகை - அவனும் இத்யாதி. பத்தாம்பாட்டில் "நங்கள்கோனே" என்கிற ஸம்போதநத்தை "உடலும்உயிரும்மங்கவொட்டு" என்கிறவிடத்திலும் கூட்டிக்கொள்வது. இத்தால் பலிதம் - இதுஅத்திருமலை இத்யாதி. இப்போது "மங்கவொட்டு" என்றதுக்கு பாவம் - மங்கவொட்டென்கையாலே இத்யாதி. "ஹஶவஊஹிப்ராயத்தாலே" என்றத்தை விவரிக்கிறார் - ஈஶ்வரன் இத்யாதி. இப்படி யவன்விடானேயென்ன - உடலம் இத்யாதி. என்னம்மானுடைய அந்தண்திருமாலிருஞ்சோலை யென்றபடி. (கூ)

† 'ஸம்ஸாரத்தில் நின்றும்' என்று அரும்பதத்வயத்திலும் பாடமாகக் காண்கிறது,

ஆ.—(மங்கவொட்டு.)-தாம்இப்படி ப்ரார்த்திக்கச்செய்தேயும் தம்முடைய ப்ரக்ருதியிலுள்ள லோபத்தினாலே எம்பெருமான் தம்முடைய சொல்லை யாதரியாதிருக்க; அவனுக்கு இதினுடைய ஹேயதையை ப்ரகாசிப்பித்து, இந்தஹேயமான ப்ரக்ருதியில் அபிநிவேசத்தை அவஶ்யம் விட்டருளவேணுமென்று பின்னையும் அபேக்ஷிக்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், தாம் அர்த்திக்கச் செய்தேயும் தம்முடைய ப்ரக்ருதியிலுண்டானஸம்பந்தத்தாலே எம்பெருமான் தம்வார்த்தையைஆதரியாவிட்டவாறே, சதுர்விம்சதி தத்த்வாத்மிகையான ப்ரக்ருதியினுடைய ஹேயதையை அவனுக்கு உணர்த்தி, இத்தை விரும்பாதே போக்கி யருளவேணும் என்கிறார்.

[மங்கவொட்டு உன்மாமாயை]-ஒருவராலும் தப்பவொண்ணாதபடி நீ வைத்த ப்ரக்ருதியை மங்க இசை. [திருமாலிருஞ்சோலை என்றுதொடங்கி] - திருமலையிலே வந்துநின்று எங்களை அடிமைகொண்டு ஒருவன்தனக்குப் பரியுமாபோலே என்திறத்தில் அநுக்ரஹம் பண்ணினவனே! [பொங்கைம்புலன் என்றுமேலுக்கு] - அநுபவித்தவர்கள் தங்களுக்கு உரியரன்றிக்கே விக்ருதராம்படியான ஐந்துவிஷயங்களும், ஆத்மாவுக்கு நாசகமான ஜ்ஞாநேந்த்ரியங்களும், கர்மேந்த்ரியங்களும், ப்ருதிவ்யாதிபூதங்களும், இஸ்ஸம்ஸாரத்திலேயிருக்கிற இவ்வாத்மாவைத் தொற்றியிருக்கிற மூலப்ரக்ருதி, இதினுடைய விகாரமான மஹாந், அஹங்காரம், மநஸ்ஸு, இவையாகிற உன்னுடைய மாமாயையை மங்கவொட்டு என்று அந்வயம்.

ப.—அநந்தரம், இப்படி திருவுள்ளத்தாலே திருமலையை ஆஶ்ரயித்திருக்கச்செய்தேயும் அவனுடைய அத்யபிநிவேசத்தை நிவர்த்திப்பிக்கைக்காக ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய ஹேயதையைப்பரிகணித்து, ஏவம்பூதையான உன்னுடைய மாயை நசிக்கும்படி யநுமதிபண்ணி யருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலைமலையிலே, மேய - நித்யவாஸம் பண்ணி, நங்கள்கோனே - என்போல்வார்க்கு ஸ்வாமியானவனாய், யானேநீயாகி-நானே எனக்கு பரிஹரித்துக்கொள்ளுமாபோலே வேறுபாடற நீதானேயாய், என்னை -, அளித்தானே - ரக்ஷித்தவனே! பொங்கு - (போக்யதையாலே) கிளர்ந்துபுலப்படுகிற, ஐம்புலனும் - ஶப்தாதிவிஷயங்களைந்தும், பொறியைந்தும் - (அதிலேயகப்படுத்துகைக்குக் காரணமான) நேத்ராதிஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும், கருமேந்திரியம் - அவ்விஷயங்களில் ப்ரவர்த்திக்கைக்கு ஹேதுவான கர்மேந்த்ரியங்களைந்தும், ஐம்பூதம் - ஶப்தாத்யாஶ்ரயமாயும் இந்த்ரியாஶ்ரய ஶரீராரம்பகமாயுமுள்ள ப்ருதிவ்யாதிபூதங்களைந்தும், இங்கு-ஸம்ஸாரதசையில், இ உயிரேய் - ஜீவனோடே அத்யந்தஸம்ஸ்ருஷ்டமான, பிரகிருதி-மூலப்ரக்ருதி, மான் - வ்யவஸாயஹேதுவானமஹான், ஆங்காரம்-அபிமாநஹேதுவான அஹங்காரம், மனங்கள் - ஸங்கல்பரூபமான மநஸ்ஸு,(ஆகிற) ,உன் மாமாயை - உன்னுடைய அத்யாஶ்சர்யமான ப்ரக்ருதிப்ராக்ருதங்களானவைகள்,மங்கவொட்டு-மங்கும்படி இசைந்தருளவேணும்.

இ.—பத்தாம்பாட்டில், இப்படி அர்த்திக்கச் செய்தேயும், தேஹத்தில் ஸம்பந்தத்தாலே தம் வார்த்தையை ஆதரியாவிட்டவாறே, இதினுடைய ஹேயதையை அவனுக்கு உணர்த்தி, இத்தைப் போக்கி யருளவேணும் என்கிறார்.

[உன்மாமாயை மங்கவொட்டு] - ஒருவராலும் தப்பவொண்ணாதபடி நீ வஞ்சித்த ப்ரக்ருதியை மங்க இசை. "த்யாஜ்யம் என்று அறிந்தபின்பு உம்முடைய ஶரீரத்தை நீரே உபேக்ஷிக்குமத்தனையன்றோ, நம் இசைவென்?" என்ன, - ஸர்வஶக்தியான நீ பிணைத்தபிணையை அஶக்தனானநான் அவிழ்க்கவோ? "மம மாயா துரத்யயா" என்றிலையோ? [திருமாலிருஞ்சோலை இத்யாதி] - பரமபதம் கலவிருக்கையாயிருக்க அவ்விடத்தைவிட்டுத் திருமலையிலேவந்து முற்பாடனாய் நிற்கிறது நான்சொன்னபடி கார்யம் செய்வதாகவன்றோ? திருமலையிலே வந்துநின்று எனக்கு முறையை உணர்த்தினவன் என்றுமாம். [யானேநீயாகி என்னை யளித்தானே] - என் அபிஸந்தியை நீ யுடையையாய் என்னை ரக்ஷித்தவனே! நான் எனக்குப் பரியுமாபோலே என்திறத்தில் பரிவனாய் ரக்ஷித்தவனே! இப்படி நிர்ப்பந்தித்தவிடத்திலும் அவன் அநாதரித்திருக்க, இது த்யாஜ்யமென்னு மிடத்தை அறிவிக்கிறார். சேதநன் கர்மத்தாலே ப்ரக்ருத்யாத்ம விவேகம் பண்ணமாட்டாதாற்போலே, இவர்பக்கல் வ்யாமோஹம் அவன் ப்ரக்ருத்யாத்ம விவேகம் பண்ணவொட்டுகிறதில்லை. [பொங்கைம்புலனும்] - சேதநனை விக்ருதனாம்படி பண்ணுகிற ஶப்தாதிகள் ஐந்தும். [பொறியைந்தும்] - வறைநாற்றத்தைக் காட்டி அகப்படுத்துமா போலே ஶப்தாதிகளிலே மூட்டுகிற ஶ்ரோத்ராதிகள் ஐந்தும், கர்மேந்த்ரியங்கள் ஐந்தும், ப்ருதிவ்யாதிபூதங்கள் ஐந்தும், இஸ்ஸம்ஸாரத்திலே யிருக்கிற இவ்வாத்மாவைத் தொற்றியிருக்கிற மூலப்ரக்ருதியென்ன, மஹாந் அஹங்கார மநஸ்ஸுக்களென்ன, இவையாகிற உன்னுடைய மஹா மாயையை மங்கவொட்டு என்று அந்வயம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. இப்படி இவர் நிர்ப்பந்திக்கச் செய்தேயும் ஆனைக்குப்பு ஆடுவோரைப்போலே கேளாதிருந்தான்; அதுக்கடி - "சாந்துபூசுவார் பரணியையுடைத்தோபூசுவது? இதேன்சொன்னீரானீர்!" என்ன; திரியவும், மங்கவொட்டென்கிறார்.

[உன்மாமாயை - மங்கவொட்டு] – ஒருவராலும் தப்பவொண்ணாதபடி நீ வஞ்சித்த ப்ரக்ருதியை மங்கவிசை. "த்யாஜ்யமென்றறிந்தபின்பு உம்முடைய ஶரீரத்தை நீரே யுபேக்ஷிக்குமத்தனையன்றோ?நாம் இசையவேண்டுகிறதேன்?" என்ன; ஸர்வஶக்தியான நீ பிணைத்தபிணையை அஶக்தனான நான் விடவோ? - "மம மாயா துரத்யயா" (மமமாயாதுரத்யயா) என்றிலையோ? [திருமாலிருஞ்சோலைமேயநங்கள்கோனே] - பரமபதம் கலவிருக்கையாயிருக்க அவ்விடத்தைவிட்டு நீ, திருமலையிலேவந்து முற்பாடனாய்நிற்கிறது நான்சொன்னபடி கார்யம்செய்வதாகவன்றோ? நீ நினைத்தபடி கார்யஞ்செய்யப்பார்த்தாயாகில் பின்னையவ்விருப்பிலே என்னையழைத்துக்கொள்ளாயோ? திருமலையிலேவந்துநின்று என்னுடைய ஶேஷத்வத்தையும் உன்னுடைய ஶேஷித்வத்தையும் எனக்கறிவித்தவனே! [யானேநீயாகியென்னையளித்தானே] - என் அபிஸந்தியை நீயுடையையாய் என்காரி

பத்தாம்பாட்டு.—மங்கவொட்டு இத்யாதி. திரியவும் "மங்கவொட்டு" என்றதுக்கவதாரிகை-இப்படிஇத்யாதிவாக்யத்ரயம்.ஆனைக்குப்பு-சதுரங்கம். அதுக்கடி-கேளாதிருக்கைக்கடி.

"மா" என்றதுக்கர்த்தம் - ஒருவராலும் இத்யாதி. "உன்" என்றதுக்கு பாவம் - த்யாஜ்யம் என்று இத்யாதி. அப்படிவிடப்போகாதோ வென்ன-மமமாயா இத்யாதி. தேஹநிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிறவிடத்திலே "திருமாலிருஞ்சோலைமேயநங்கள்கோனே" என்றதுக்கு பாவம்-பரமபதம் இத்யாதி வாக்யத்வயம். "திருமாலிருஞ்சோலை" இத்யாதிக்கு அவாந்தரம் - திருமலையிலே இத்யாதி. அதாவது - திருமலையிலேவந்துநின்று உன்ஶேஷித்வத்தை யறிவித்து நீ ப்ராப்தியையும் பண்ணித்தரவேணுமென்றபடி, என்னபிஸந்தியைநீயுடையையாய் என்றது - நான்

யம் செய்யக்கடவ நீ, இப்போது நான்இரக்கவிருக்கிறதென்? நான் அபேக்ஷியாதிருக்க இதுக்குமுன்பெல்லாம் நீயேயன்றே என்னுடைய ரக்ஷணங்கள் பண்ணிப்போந்தாய். இப்படி சொல்லச் செய்தேயும், இத்தைத்தவிர்த்துக்கொடுக்க நினையாமையாலே பேசாதிருந்தான்; நான் நிர்ப்பந்திக்கச்செய்தேயும் கேளாதாரைப்போலே பேசாதேயிருக்கிறதென்? என்ன ;— "நான்பேசாதிருக்கிறேனல்லேன்: நீர் ஹேயமென்றுசொல்லுகிறஇதுதான் நமக்கு உபாதேயமாயிராநின்றது; ஆகையாலே ஹேயோபாதேயவிபாகம் பண்ணமாட்டுகிறிலோம்; அறிந்த நீர் ஹேயமென்கிறதுதன்னை எனக்கு இன்னதென்றுசொல்லீர் நான் கழித்துத்தர" என்றான்; ஆகில்கேட்கலாகாதோவென்று சொல்லுகிறார்:—[பொங்கைம்புலன் இத்யாதி] - "உணர்வுமுயிருமுடம்பும் மற்றுலப்பிலனவும் பழுதேயா - முணர்வைப்பெறவூர்ந்து" என்று அவன்தான் இவர்பக்கல் செய்தத்தை இப்போது அவனுக்கு இவர்தாம் தெரிவிக்கிறார். ஒருகர்மம்செய்தது செய்யமாட்டாமையில்லையிறே வ்யாமோஹம்; அதுபோலுமன்றிக்கே இதுநிலைநிற்குமதிறே. சேதநரைத் தந்தாமுக்குஉரியரல்லாதபடி விக்ருதராம்படிபண்ணவல்ல ஶப்தாதிகள்ஐந்தும், † வறுநாற்றத்தைக்காட்டிச் சிலபதார்த்தங்களைத் தப்பாதபடி யகப்படுத்துமாபோலே இச்சேதநனை அவ்விஷயங்களிலேகொடுபோய் மூட்டிமுடிக்கவற்றான ஜ்ஞாநேந்த்ரியங்கள், கர்மேந்த்ரியங்கள், ப்ருதிவ்யாதிகள், கார்யாவஸ்த்தமான சிதசித்வஸ்துவைப்பற்றிக்கிடக்கிற ப்ரக்ருதி, மஹான், அஹங்காரம், மநஸ்ஸு ஆக இவையாகிற உன்னுடைய மாமாயையை மங்கவொட்டு. காரணாவஸ்த்தமானதுதானே அவஸ்த்தாந்தராபந்நமாகையிறே கார்யமாகையாகிறது. (௧0)

எனக்கு நன்மைபார்க்கும் நினைவை நீயுடையையா யென்றபடி. "என்னையளித்தானே" என்றது அக்கர்த்தமாதல், விவரணமாதல் - நான் அபேக்ஷியாதிருக்க இத்யாதி. மேலுக்கவதாரிகை - இப்படி சொல்லச்செய்தேயும் இத்யாதி. இப்படி சொல்லச்செய்தேயும் என்றது - "மங்கவொட்டு" என்றர்த்திக்கச்செய்தேயு மென்றபடி. இவருடைய ஜ்ஞாநவைஶத்யத்திலே ஈடுபடுகிறார்-உணர்வும் இத்யாதி. கர்மவஶ்யராகையாலே இவர்க்கு அவன் அறிவிக்கலாம்; ஸர்வஜ்ஞனுக்கு இவர் அறிவிக்கவேண்டுவானென்னென்ன - ஒருகர்மம் இத்யாதி. கர்மத்துக்கு மீட்சியுண்டு; வ்யாமோஹத்துக்கு மீட்சியில்லையென்று கர்மத்திற்காட்டில் வ்யாமோஹத்துக்குஏற்றம் அருளிச்செய்கிறார் - அதுபோலும் இத்யாதி. ஆக, வ்யாமோஹத்தாலே அவன் அறியாதிருக்க இவர் தெரிவிக்கவேண்டிற்று என்றுகருத்து. பொங்குதல் - கிளம்புதலாய், விக்ருதராம்படி பண்ணவல்ல என்றபடி. வறுநாற்றம் - வறுத்த த்ரவ்யநாற்றம். சில பதார்த்தங்களை - பெருச்சாளி முதலானவற்றை. இங்கு - ஸம்ஸாரத்திலே. இவ்வுயிர் - கார்யாவஸ்த்தமான சிதசித்வஸ்து. ஏய்கை - பொருந்துகை. "மாமாயை" என்று - மூலப்ரக்ருதியைச் சொல்லுமதொழிய, ஶரீரத்தைச் சொல்லுமோவென்ன - காரணாவஸ்த்தமானது இத்யாதி; ஆகையாலே சொல்லலாமென்றபடி. "இங்கிவ்வுயிரேய் பிரகிருதி" என்று - மூலப்ரக்ருத்யம்ஶத்தைச் சொல்லுகிறது. "மாமாயை" என்று - ஶரீரத்தைச்சொல்லுகிறது. 'திருமாலிருஞ்சோலைமேயநங்கள்கோனே, யானேநீயாகி என்னையளித்தானே, பொங்கைம்புலனும்' என்று தொடங்கி, 'மாஹங்கார மனங்களான - உன்மாமாயையை - மங்கவொட்டு' இத்யந்வயः. (௧0)

† 'வறைநாற்றத்தை' என்றும் பாடமுண்டு.

பதினோராம் பாட்டு.

மானாங்காரமனங்கெடஐவர்வன்கையர்மங்கத்
தானாங்காரமாய்ப்புக்குத் தானேதானேயானானைத்
தேனாங்காரப்பொழில்குருகூர்ச் சடகோபன்சொல்லாயிரத்துள்
மானாங்காரத்திவைபத்தும் திருமாலிருஞ்சோலைமலைக்கே.

ஆ.—(மானாங்காரம்) - நான்சொன்னபடியே செய்தருளும் ஸ்வபாவனான வாறே, தனக்கத்யந்தம் அபிமதமாயிருந்த இப்ப்ரக்ருதியில் அபிநிவேசத்தை விட்டருளி பெரியசெருக்கோடேகூட என்னுள்ளேபுகுந்து கலந்தருளின எம்பெருமான் என்னோடுகலந்து பரிமாறுகையால் அவனுக்குள்ள கர்வத்தைச்சொல்லுகிறதாய், எம்பெருமானை ப்ரதிபாதித்த ஆயிரம் திருவாய்மொழியிலும், பெரியகிளர்த்தியோடே யெழுந்த இத்திருவாய்மொழி திருமாலிருஞ்சோலையை ப்ரதிபாதிக்கிறதென்கிறார்.

ஒ.—நிகமத்தில், மஹதஹங்கார விஷயமான இத்திருவாய்மொழி திருமலையிலே சொல்லிற்று என்கிறார்.

[மானாங்காரம் என்று தொடங்கி] - மஹாந் அஹங்கார மநஸ்ஸுக்கள் கெடும் படியும், பெருமிடுக்கையுடைய ஐந்திந்த்ரியங்களும் மங்கும்படியாகவும், எனக்குத் தான் அபிமாநியாய்ப்புகுந்து ஆத்மாத்மீயங்களில் எனக்கு உண்டான அபிமாநத்தைத் தவிர்த்தவனை. [தேனாங்காரப்பொழில் என்று மேலுக்கு] - வண்டுகளினுடைய களிப்பையுடைய பொழிலோடு கூடின திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரம் திருவாய்மொழியிலும், மஹதஹங்காராதி ரூபமான ப்ரக்ருதி நிரஸநார்த்தமாகச் சொன்ன இத்திருவாய்மொழி; மிக்கிருந்துள்ள ஹர்ஷத்திலே பிறந்த இத்திருவாய்மொழி என்றுமாம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக இவரர்த்தித்தபடியே ஈஶ்வரனுடைய விரோதிநிரஸநோத்யோகத்தைச்சொல்லிக்கொண்டு, அதுவே இத்திருவாய்மொழிக்குப் பலமாக அருளிச்செய்கிறார்.

மானாங்கார மனம் - மஹதஹங்கார மநஃப்ரமுகமான ஶரீரஸம்பந்தம், கெட - நசிக்கும்படியாகவும், வன்கையர் - ப்ரபலமான, ஐவர் - இந்த்ரியங்களைந்தும், மங்க - (ஸ்வவிஷயங்களோடே) மங்கிப்போம்படியாகவும், தான் ஆங்காரமாய் - தானே பெரிய அபிமாநத்தையுடையனாய்க்கொண்டு, புக்கு - புகுந்து, தானே தானேயானானை - என்னாத்மாவும் தானேயாய் ஆத்மீயமும் தானேயானவனை, தேன் ஆங்காரம் - வண்டுகளுடைய செருக்கையுடைத்தான, பொழில்-பொழிலையுடைய, குருகூர்ச்சடகோபன் - திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார், சொல்லாயிரத்துள்-அருளிச்செய்த ஆயிரத்துள், திருமாலிருஞ்சோலைமலைக்கே - திருமாலிருஞ்சோலை மலைக்கேயான, இவைபத்தும்-, மானாங்காரத்து - மஹதஹங்காரோபலக்ஷித ஸமஸ்தவிரோதி நிவ்ருத்தியிலே தாத்பர்யம். இப்பத்தும் அப்யஸித்தார்க்கு மஹதஹங்காராதிகள் தானேகழியுமென்று கருத்து. இது, அறுசீராசிரியவிருத்தம்.

இ.—நிமமத்தில், மஹதஹங்கார விஷயமான இத்திருவாய்மொழி திருமலையிலே சொல்லிற்று என்கிருர்.

[மாஞுங்கார மனம்கெட] - மஹான், அஹங்காரம், மநஸ்ஸு என்கிற இவை கெடும்படியாக; இது ஶரீரத்துக்கும் உபலக்ஷணம். 'ஐவர்வன்கையர்மங்க' என்கிறது - கர்மேந்த்ரியங்களுக்கும் ஶப்தாதிகளுக்கும் உபலக்ஷணம். [வன்கையர்] - பெருமிடுக்கர். விரோயிபோகைக்கு அவன் செய்ததுஎன்? என்ன,—தன், நிர்பந்யத்தைத் தவிர்ந்தான் என்கை. [தாஞுங்காரமாய்ப் புக்கு] - எனக்கு அபிமாநியாய்ப் புகுந்து என்னுதல், பெரிய செருக்கையுடையனாய்க் கொண்டு புகுந்து என்னுதல். [தானே தானேயானுனே] - ஆத்மாத்மீயங்களில் எனக்கு உண்டான அபிமாநத்தைத் தவிர்த்துத் தானே அபிமாநியானவனே. [தேஞுங்காரப்பொழில் இத்யாதி] - வண்டுகளுடைய அபிமாநமேயான பொழிலையுடைய திருநகரியில் ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந் திருவாய்மொழியிலும் வைத்துக்கொண்டு. [மாஞுங்காரத்து இவைபத்தும்] - மஹதஹங்காராதி ரூபமான ப்ரக்ருதி நிரஸநார்த்தமாகச் சொல்லப்பட்ட இத்திருவாய்மொழி என்னுதல், பெரிய செருக்கோடே சொன்ன இப்பத்து என்னுதல். [திருமாலிருஞ்சோலைமலைக்கே] - திருமலையே உத்தேஶ்யமாகச் சொல்லிற்று; அழகரைச் சொன்னவிடம் ஆநுஷங்கிகம்.

ஈடு.—நிமமத்தில், மஹதஹங்கார விஷயமான இத்திருவாய்மொழி திருமலையிலே சொல்லிற்றென்கிருர்.

[மாஞுங்காரமனங்கெட] - மஹான், அஹங்காரம், மநஸ்ஸு என்று சொல்லுகிற இவை கெடும்படியாக; இவைப்ரக்ருதிக்கும் உபலக்ஷணம். [ஐவர்வன்கையர் மங்க]- †கர்மேந்த்ரியங்களுக்கும் ஶப்தாதிகளுக்கும் உபலக்ஷணம். (வன்கையர் - பெருமிடுக்கர்.) பின்னை அவன் இதுக்குச் சொல்லிற்றென்னென்னில் ; - இதில் பண்ணுகிற நிர்ப்பந்தத்தைத் தவிருகிறேமென்னத் தீருமிறே. அவன் "செய்கிறேம்" என்று தலைதுலுக்கிஞல் பின்னைப் பெற்றதாயிருக்கத் தட்டில்லையே. [தான்இத்யாதி] - தான் எனக்கபிமாநியாய்ப் புக்கேன்னுதல், பெரியசெருக்கோடே புக்கேன்னுதல். [தானேதானேயானுனே] - ஆத்மாத்மீயங்களில் எனக்குண்டான அபிமாநத்தைத்தவிர்த்துத் தானே யபிமாநியானவனே. அன்றிக்கே, இத்தலையில் அர்த்தித்வத்தை யொழியத் தானே யர்த்தியுமாய், இதுக்குஅபிமாநி

நிமமம்.—மாஞுங்காரம் இத்யாதி. "மாஞுங்காரத்துஇவைபத்தும் திருமாலிருஞ்சோலைமலைக்கே" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - மஹத் இத்யாதி. மஹதஹங்காரவிஷயமான என்றது - மஹதாதிதோஷ ப்ரதிபாதகமான வென்றபடி.

'ஶப்தாதிகளுக்கும்' என்கிறவிடத்தில், ஆதிஶப்தத்தாலே - தததாஶ்ரயங்களான பூதங்களும் தத்க்ராஹகங்களான ஜ்ஞாநேந்த்ரியங்களும் சொல்லப்படுகிறது. 'கர்மேந்த்ரியங்களுக்கும்' என்கிறபாடமுண்டானபோது, "ஐவர்" என்று ஜ்ஞாநேந்த்ரியங்களைச் சொல்லுகிறது. மேலுக்கவதாரிகை - பின்னையவன் இத்யாதி. பின்னையென்றது - இவர் "மங்கவொட்டு" என்று ப்ரார்த்தித்தபின்புஎன்றபடி. இதுக்குச் சொல்லிற்றென்னென்னில் என்றது - "மங்கவொட்டு" என்றர்த்தித்ததுக்கு அவன்சொன்னதென்னென்னி லென்றபடி. இதில் - இந்தத்திருமேனியில். தவிருகிறேமென்ற மாத்ரத்திலே தீருமோவென்ன - அவன் செய்கிறேமென்று இத்யாதி. தானெனக்கபிமாநியாய் - தானென் காரியத்துக்கெல்லாம் நிர்வாஹகனுயென்றபடி. "தானே தானே" என்றவீப்ஸைக்கர்த்தம் - ஆத்மாத்மீயங்களில் இத்யாதி. அதாவது - ஆத்மாவுக்கும் ஆத்மீயத்துக்கும் தானேயபிமாநியென்றபடி. இதுக்கு - ப்ரக்ருதிஸம்பந்ய நிவ்ருத்திக்கு. "தாஞுங்காரமாய்ப்

---

† கர்மேந்த்ரியங்களுக்கும் என்பது இல்லாமலும் பாடமுண்டு என்பது அரும்பதத்தாலேற்படுகிறது.

யும் தானேயானவனென்னுதல். [தேனுங்காரமித்யாதி] - வண்டுகளினுடைய அபிமாநமேயான பொழிலையுடைய திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்திலும், மஹாஜாதிரூபமான ப்ரக்ருதி நிரஸநார்த்தமாகச்சொன்ன இப்பத்துமென்னுதல்; பெரிய செருக்கோடேசொன்ன இப்பத்துமென்னுதல். [திருமாலிருஞ்சோலைமலைக்கே] - திருமலைவிஷயமாகவாய்த்துச் சொல்லிற்று; அழகரைச்சொன்னவிடமுண்டாகில் அதில் கல்பகதருவைச் சொன்னவோபாதி. திருமலையிலுள்ளதடைய உத்தேஶ்யமாகக் கடவதிறே; ''எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே'' என்றும் சொன்னார்களிறே.

புக்கு'' என்றதினிரண்டாமர்த்தம் - இவர்விரோதிநிவ்ருத்தியைப் பண்ணுகிறோமென்கிற கர்வத்தோடே புக்கென்றபடி. ''புக்கு'' என்றது - இசைந்தென்றபடி. ''மானுங்காரத்திவைபத்தும்'' என்றதினிரண்டாமர்த்தத்தில், மஹத்த்வம் - அஹங்காரவிசேஷணம். செருக்கோடே சொன்ன என்றது - விரோதிநிவ்ருத்திக்காகச் செருக்கோடே சொன்னவென்றபடி. அவதாரணார்த்தம் - திருமலைவிஷயமாக இத்யாதி. ''தானேதானேயானானைச்சொன்ன'' என்றிருக்க, ''திருமலைவிஷயமாக'' என்பானென்னென்ன - அழகரை இத்யாதி. இப்படியாகிலும் சொல்லுகிறதென்னென்ன - திருமலையில் இத்யாதி. திருமலையிலுள்ளதெல்லாம் உத்தேஶ்யமோவென்ன - எம்பெருமான் இத்யாதி. பெருமாள்திருமொழி, ''உம்பருலகு'' இத்யாதி. என்னுயனுனவனுடைய ஸ்வாவயமான திருமலைமேலையுள்ளது ஏதேனுமொரு பதார்த்தமாகவும் அமையுமென்றபடி. ஆக, இவர் ''மங்கவொட்டு'' என்றதுக்கு அவன்செய்ததென்னென்ன; ''மானுங்காரமனங்கெட ஐவர் வன்கையர்மங்கும்படியாகத் தானுங்காரமாய்ப் புக்கு'' என்கையாலே - ப்ரக்ருதிஸம்பந்த நிவ்ருத்தியைப்பண்ணித் தருகிறோமென்று தலைதுலுக்கினனென்றபடி. ''வன்கையரான - ஐவர்'' என்றந்வயிப்பது. ப்ரபலரான இந்த்ரியங்கள் ஐந்தையுமென்றபடி. தேன் - வண்டு. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— [illegible] ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—(செஞ்சொற்கவிகாள்) — [illegible] ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

செஞ்சொற்பரன்தனதுசீராருமேனிதனில்
வஞ்சித்துச்செய்கின்ற வாஞ்சைதனின் - விஞ்சுதலைக்
கண்டவனைக்காற்கட்டிக் கைவிடுவித்துக்கொண்ட
திண்திறல்மாறன்நம்திரு.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானார்திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்.

எட்டாந் திருவாய்மொழி—திருமாலிருஞ்சோலை - ப்ரவேஶங்கள்.

ஆ.—(திருமாலிருஞ்சோலை.) - "இப்படி ஸந்நிவிஷ்டனாய்க்கொண்டு என்னோடுகலந்து பரிமாறுகைக்கு ஹேதுவென்?" என்று எம்பெருமானைக் கேட்டால்; அங்ஙனே அஸந்நிவிஷ்டனாயிருந்தஅவனாலும் பரிக்லுப்தமான ஹேதுக்களிலொரு ஹேதுவும் என்பக்கலுண்டாகச் சொல்லவொண்ணாது; இனி என்பக்கலில்லாத ஹேதுவை என்பக்கலிலே அத்யாரோபித்துச்சொல்லப்பார்க்கிலும்.

ஓ.—எட்டாந் திருவாய்மொழியில், "தன்னைப் பெறவேணுமென்னும் இச்சாலேஶமுமின்றிக்கே தன்னைப் பெறுகைக்கு ஈடான உபாயமுமின்றிக்கே அதுக்கு மேலே அஸஹ்யாபசாரஸஹஸ்ரனாய் மிகவும் விஷயங்களையே உகந்திருக்கிற எனக்கு, பொய்ந்நின்றஞானம் தொடங்கி இவ்வளவும்வர மஹாஸம்ருத்தியைத்தந்து என்பக்கலிலே மிகவும் வ்யாமோஹத்தைப்பண்ணி இப்போது என்னை விஷயீகரிக்கைக்கும் பண்டு என்னைப்போகடுகைக்கும் காரணமென்?" என்று, தம்மைத் திருநாட்டிலே கொடுபோகையிலேவிரைகிற எம்பெருமானை ஆழ்வார் கேட்க, அவனும் நிருத்தரனாயிருந்தவாறே, "நிர்ஹேதுகமாக விஷயீகரித்தருளினான்" என்று அத்யவஸித்து, அதுக்கடியான நிஸ்ஸீமமான அவனுடைய க்ருபாதிகுணங்களை மிகவும் அநுஸந்தித்து அதிலே ஈடுபட்டு விஸ்மிதராய்க் களிக்கிறார்.

ப.—எட்டாந்திருவாய்மொழியில்,கீழே தாம் அபேக்ஷித்தபடியிலே ஈஶ்வரன் கார்யம்செய்வதாக அறுதியிட்டபடியைக்கண்டு, "இப்படிநம்பக்கல் வ்யாமோஹம்பண்ணுகைக்கும் நாம்அபேக்ஷித்தகாரியம் செய்யும்படி பரதந்த்ரனாகைக்கும் நம்பக்கலொரு ஹேதுவில்லை; நிர்ஹேதுகமாக நம்மைவிஷயீகரித்தருளினானித்தனை" என்றுஅறுதியிட்டு, அதுக்கடியான அவனுடைய யாத்ருச்சிகாநுகூல்ய நிபந்தநமான பூர்ணாங்கீகாரத்தையும், அங்கீகார ஸ்தைர்யத்தையும், ஸௌமமத்வாதிஶயத்தையும், புருஷார்த்த ப்ரதத்வத்தையும், ப்ராப்திப்ரதிபந்தக நிவர்த்தகத்வத்தையும், போகரஸப்ரதத்வத்தையும், நித்யாநுபாவ்யத்வத்தையும், நிரவதிகஸர்வப்ரகாரபோக்யத்வத்தையும், நிர்ஹேதுகோபகாரகத்வத்தையும், நித்யகைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேஶ்வரன் நிருபாதிகபூர்ணவிஷயீகாரத்தைப் பண்ணி ஸமஸ்தவிரோதியும் நிரஸ்தமாம்படி திருப்பேரிலே ஸந்நிஹிதனாய் நிரதிஶயாஹ்லாதகரமான அநுபவத்தைப்பிறப்பித்தான்: இதொரு ஶீலாதிஶயமே! என்று மிகவும் ஹ்ருஷ்டராகிறார்.

இ.—எட்டாந் திருவாய்மொழியில், தம்மைக்குறித்து ஈஶ்வரனுக்குண்டான பாரதந்த்ர்யத்தைச் சொன்னார், அருள்பெறுவாரடியாரில்; அவன்தானே மேல்விழுந்து தம்முடைய திருமேனியை விரும்பாநிற்க இத்தைத் தவிரவேணுமென்று அர்த்தித்தஇதுக்கு இசைகையாலே அந்தபாரதந்த்ர்யத்தைமுடிய நடத்தினபடியைச் சொன்னார், செஞ்சொற்கவியில்; இதில், அஸஹ்யாபசார ஸஹஸ்ரராயிருக்கிற நம்மை அவற்றைப்பொறுத்து அத்வேஷத்தைப் பிறப்பித்து, அதடியாக விஶேஷகடா

க்ஷத்தை நம்பக்கலிலேபண்ணி, ‘‘தன்னைப் பெறவேணும்’’ என்னும் இச்சையைப் பிறப்பித்து, ‘‘தன்னைப்பெறுகைக்கு உபாயமும்தானே’’ என்னும் ஊத்தியை நமக்குப் பிறப்பித்து, ஶப்தாதிவிஷயங்களில் ப்ரவணராய்த்திரிந்த நம்மை, ‘‘பலநீகாட்டிப் படுப்பர்யோ ?’’ என்னும்படிபண்ணி, பொய்ந்நின்ற ஞானந்தொடங்கி இவ்வளவும் உண்டான மஹாஸம்ருத்தியைத்தந்து, இவ்வளவு புகுரநிறுத்தி, தம்பக்கலிலே மிகவும் வ்யாமோஹத்தைப்பண்ணி அவ்வருகும் கொண்டுபோவானாய்த் த்வரியாநிற்கிறபடியை அநுஸந்தித்து, ‘‘இதுக்கடியாயிருப்பதொன்று நம்பக்கலுண்டோ ?’’ என்று ஆராய்ந்தவிடத்துத் தம்பக்கல் ஒன்றும் கண்டிலர்: தம்பக்கலிலேயுள்ளதொன்றைப் பேற்றுக்கு உறுப்பாக நினைக்குமவரல்லாமையாலே. ‘‘ இனி இதுக்கடி ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனானவன் தன்னையே கேட்போம்’’ என்றுபார்த்து, ‘‘இன்று தேவர் இப்படி ஸ்வீகரிக்கைக்கும் அநாதிகாலம் இத்தைவிடுகைக்கும் அடியென் ?’’ என்றுகேட்க, அவனும் நிருத்தரனாய்க் கவிழ்தலையிட்டுக் காலாலே தரையைக்கீறிநிற்க, ‘‘நிர்ஹேதுகமாக விஷயீகரித்தருளினான்’’ என்று அத்யவஸித்து, அவ்விஷயீகாரத்துக்கடியாக, நிஸ்ஸீமமாய் நிஸ்ஸங்க்யமான க்ருபாதி குணங்களை அநுஸந்தித்து, ‘‘இதொரு குணவத்தையே !’’ என்று அதிலே ஈடுபட்டு விஸ்மிதராய்க் களிக்கிறார்.

ஈடு.—தம்மைக்குறித்து ஸர்வேஶ்வரனுக்கு உண்டான பாரதந்த்ர்யத்தைப் பேசினார், * அருள்பெறுவாரடியாரிலே ; அந்தப்பாரதந்த்ர்யந்தன்னை முடியநடத்தினபடியைச்சொன்னார், * செஞ்சொற்கவியில் ; ‘‘நீர்சொன்னபடியே செய்யக்கடவோம்’’ என்று தலைதுலுக்கினானிறே.

இவர்தம்மைத் திருமேனியோடே கொடுபோவதாக்த் தேங்கின தேக்கமிறே நடுவுள்ளது; அதொழியக் கொடுபோவதாக அற்றவன்றே பதறத்தொடங்கினான்; ‘‘செழும் பறவைதானேறித்திரிவான்’’ என்று - திருவடிதிருத்தோளிலே ஏறிவந்திறே இவரைவிஷயீகரித்தது ; அத்திருவடிதிருத்தோளிலேவந்து இவரைக்கொடுபோவதாகப் பார்த்தான். சிலரை ஆதிவாஹிககர்த்தாக்களை வரவிட்டுக்கொடுபோம்; சிலரைப் பெரியதிருவடியை வரக் காட்டிக் கொடுபோம்; திருவடிதிருத்தோளிலேவந்துதானே கொடுபோமவரிறே இவர்; ‘‘அஹம்ஸ்மராமி மத்பக்தம் நயாமி’’ (அஹம்ஸ்மராமிமத்பக்தம்நயாமி) என்கிறபடியே.* கள்வன்கோல்பிராட்டியை யாளிட்டுக் கொடுபோமன்றிறே இவரையும் ஆளிட்டுக்கொடுபோமது ! [நானிலம் இத்யாதி] - ‘‘ஸம்ஸாரமாகிற பாலைநிலத்தைக்கழித்துப்போந்தோம்:

திருமாலிருஞ்சோலை ப்ரவேஶ, வர்த்திஷ்யமாண ஸங்கதிக்காக வ்ருத்தாநுவாதம் - தம்மைக்குறித்து இத்யாதி. திருமேனியோடே யிராநிற்க முடியநடத்தினபடி யென்னென்ன - நீர்சொன்னபடி இத்யாதி.

‘‘ மானாங்காரமனங்கெட ’’ என்று சாற்றுப்பாட்டிலேயன்றோ தலைதுலுக்கினது, நடுவொன்பதுபாட்டிலும் செய்ததென்னென்ன - இவர்தம்மை இத்யாதி. நடுவு - ஒன்பதுபாட்டிலும். அதொழிய - திருமேனியொழிய. அற்றவன்றே - அறுதியிட்டவன்றே. பதறுகிற ப்ரகாரத்தைக் காட்டுகிறார் - செழும்பறவை இத்யாதி. ஆதிவாஹிகரை வரவிட்டன்றோ கொடுபோவதென்ன-சிலரை இத்யாதி. ஆதிவாஹிககர்த்தாக்கள் - அதிவஹநகர்மத்துக்குக் கர்த்தாக்களென்றபடி. திருவடி திருத்தோளிலேவந்து தானேகொண்டுபோம் என்னுமதுக்கு ப்ரமாணம் - அஹம் ஸ்மராமி இத்யாதி வாக்யம். ‘‘நயாமி’’ என்றதிலேநோக்கு. இவரையும் ஆளிட்டுக்கொடுபோகவொண்ணாதோவென்ன - கள்வன்கோல் இத்யாதி. அப்படிதானே கூட்டிக்கொண்டு போனாளோவென்ன - நானிலம் இத்யாதி. இதுக்குபாவம் - ஸம்ஸாரம் இத்யாதி. திருவிருத்தம். இதுக்கு,

“நசபுநராவர்த்ததே” (நசபுநராவர்த்ததே) என்கிறதேஶத்திலே புகுந்தோம்” **என்று** தானேசொல்லித் தேற்றிக்கொண்டிறே போவது. ஆக, இப்படி தம்மை அவ்வருகேகோடு போகையிலே பதறுகிறபடியை யநுஸந்யித்தார்; “இவன்இப்படி நம்பக்கல் பதறுகைக் கடியேன்?” என்றுபார்த்தார்; தம்பக்கல் ஒன்றும்கண்டிலர். முதலிலே தம்பக்கலிலே அத்வேஷத்தையும் பிறப்பித்து, அதடியாக விஶேஷகடாக்ஷத்தைப்பண்ணி, தம்பக்க லிலே இச்சையையும்பிறப்பித்து, “தானேயுபாயம்” என்னும் புத்தியைப் பிறப்பித்து, அஸஹ்யாபசாரஸஹஸ்ரராயிருக்கிற தம்முடைய அபசாரங்களை யடையப்பொறுத்து, விஷயங்களிலே ப்ரவணராய்ப்போந்ததம்மை “பலநீகாட்டிப்படுப்பாயோ” என்று தாமே சொல்லும்படிபண்ணி, தன்னாலல்லது செல்லாமையைப்பிறப்பித்து, தானேவந்து அவ்வருகே கோடுபோவானாக த்வரிக்கிறபடியை யநுஸந்யித்து, “இன்று இப்படி நம்மையாதரிக்கிற இவன் அநாதிகாலம் நம்மைவிட்டு ஆறியிருந்தபடியெங்ஙனே? இன்று இப்படி யாதரிக்கைக்குத் தான் ஹேதுவேன்?” என்றுபார்த்தார்; தம்பக்கல் ஒருஹேது கண்டிலர். இப்பேறு தாமடியாகவந்ததோன்றல்லாமையாலே தம்பக்கல் ஒருவாசிகண்டிலர்; முன்புத்தையிற் காட்டில் இப்போது தமக்கு ஓர் ஏற்றமுண்டாக நினைத்திருக்குமவரன்றே. முன்பேதொடங்கி நெடுங்காலம் இவரைப்பெறவேணுமென்றிருக்கிறவன் இவர்க்கு இப்போது ஒன்றைச்செய்தானாக நினைத்திரானே. “இனி ஸர்வஜ்ஞனவனாகிலும் இதுக்கோரு போக்குச்சொல்லுமாகில் அவனைக்கேட்போம்” என்றுபார்த்து, “இன்று இப்படி இத்தை ஶிரஸாவஹிக்கிறதேவர் முன்பு அநாதிகாலம் இத்தைக்கைவிட்டிருப்பானேன்? இப்போதுஇத்தை யாதரிப்பானேன்?” என்றுகேட்டார்; “உம்முடைய பக்கல் அத்வேஷமடியாகச்செய்தோம்” என்னமாட்டானே; தான்அறிய அதுவும் தன்னாலே

புணர்ந்துடன்போக்கென்று துறை. இப்பாட்டில் நாயகன் வைஷ்ணவனேயாகிலும் ஈஶ்வரனுக்கும் உபலக்ஷணம். **நானிலம் வாய்க்கொண்டு** - *நாலுவகைப்பட்ட பூமியை வாயிலேவைத்துக்கொண்டு.* **நன்னீரறமென்று** - *நிஸ்ஸாரமாம்படியென்று.* **கோதுகொண்ட** - *கோதாக்கின.* **வேனலஞ்செல்வன்** - *உஷ்ணகிரணனான ஆதித்யன்.* **சுவைத்துமிழ்பாலை** - *சுவைத்துமிழ்ந்தபாலைதேசத்தை. கடந்த - ,பொன்னேயென்று - நாயகியை ஸம்போதிக்கிறபடி. ‘கானிலம்தோய்ந்து விண்ணோர் தொழும்கண்ணன் வெஃகாவுது’ என்று - ப்ராப்யதேசத்தைக் காட்டுகிறபடி.* **இதுக்கு** *ஸ்வாபதேசத்திலேஹாவம்* - **ஸம்ஸாரமாகிற** *இத்யாதிவாக்யம்.* **கானிலம்தோய்ந்து** - *பூமியிலே கால் பாவிநின்று.* **உது** - *அதூரவிப்ரக்ருஷ்டம்.* **அம்பூஇத்யாதி** - *அழகியபூவையும் தேனையுமுடைய அழகியசோலையவ்வருகே யிருக்குமது.* **எப்பாலைக்கும் சேமத்ததே** - *எல்லாவவஸ்த்தைக்கும் க்ஷேமமுடைத் தென்றபடி. கீழ்ச்சொன்னபடியை யநுவதிக்கிறார்* - **ஆகஇப்படி** *இத்யாதி. அத்வேஷாதிகள் தம்பக்கலுண்டாயிருக்க “கண்டிலர்” என்பானென்னென்ன* - **முதலிலே** *இத்யாதி. “என்னைத் தீமனங்கொடுத்தாய்” “அமலங்களாகவிழிக்கும்” “மருவித்தொழும் மனமேதந்தாய்” “நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்” “விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்” “நின்னலாலிலேன்காண்” “விண்ணுலகம்தருவானாய் விரைகின்றான்” என்றவற்றைப்பற்ற* - **அத்வேஷத்தை** *இத்யாதி ஸபதக்ரமமும். “அறுக்கும்வினையாயின” என்றத்தைப்பற்ற* - **அஸஹ்யாபசார** *இத்யாதி என்னுதல். “இன்றென்னைப்பொருளாக்கி” இத்யாதியைப்பற்ற* - **இன்றுஇப்படி** *இத்யாதி. காணுமைக்கடியேதென்ன* - **இப்பேறு** *இத்யாதி. “வாசிகண்டிலர்” என்கிறதென்? ப்ராவண்யமுண்டேயென்ன* - **முன்புத்தை** *இத்யாதி. இவர் நினைவாலில்லாவிட்டாலும் அவன் நினைவாலே ஒரு ஸுக்ருதமில்லையோவென்ன* - **முன்பேதொடங்கி** *இத்யாதி.* **ஒன்றைச்செய்தானாக** *இவர்பண்ணின ஸுக்ருதமடியாக ஒன்றைச்செய்தானாக என்றபடி. “ஒன்றெனக்கருள்செய்யவுணர்த்தலுற்றேனே” என்றத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார்* - **இனி ஸர்வஜ்ஞனன் இத்யாதி**

வந்ததாகையாலும், அதுதான் பேற்றுக்கு ஈடான ஸாதநமாகப்போராமையாலும். இனி, ரக்ஷகனுனவனுக்கு நெடுநாள் ரக்ஷ்யவர்க்கத்தைவிட்டிருந்த இதுக்குச் சொல்லலாவ தொன்றில்லையே,பிற்பாடனுனதுக்கு லஜ்ஜிக்குமதுக்குமேற்பட;ஆகையாலே சொல்லலாவ தொரு மறுமாற்றம் காணுமையாலே கவிழ்ந்துநின்று காலாலேதரையைக் † கீறினுன். முதலிலே ஜந்த்ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணித் தன்பக்கலிலே இச்சையைப் பிறப்பிக்கைக்கு வழியிட்டுவைத்தான்; அவ்வழியாலே இச்சையைப் பிறப்பித்தான்; தன்பக்கலிலே உபாயஸாவத்தை எறட்டுக்கொண்டு * பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவாகத் தன்பக்கலிலே வரநிறுத்தினுன்; பரஸக்திதொடங்கி பரமஸக்திபர்யந்தமான உஸாவிஶேஷங்களைப் பிறப்பித்தான். "இதுதன்னை முன்பே செய்யாவிட்டதென்?" என்ன; "இதுக்குச்சொல்லலாவ தொன்றில்லாமையாலே நிருத்தரனுய் நிற்கிறுனித்தனை" என்றுபார்த்து, இப்படி அவன் தம்பக்கல்பண்ணின விஷயீகாரத்தையும் அதுக்கடியான அவனுடைய க்ருபாதிகுணங்களையும்அநுஸந்தித்து, "இதொரு நிர்ஹேதுகவிஷயீகார மிருக்கும்படியே!" என்று அதிலே ஆழங்காற்பட்டு விஸ்மிதராய் ஹ்ருஷ்டராய்க் களிக்கிறுர்.

—— ——

முதற் பாட்டு.

திருமாலிருஞ்சோலைமலையென்றேன், என்னத்
திருமால்வந்துஎன்னெஞ்சுநிறையப்புகுந்தான்
குருமாமணியுந்துபுனல்பொன்னித்தென்பால்
திருமால்சென்றுசேர்விடம் தென்திருப்பேரே.

ஆ.—திருமாலிருஞ்சோலைமலை என்னும் இச்சொல்லைச் சொன்னேனென்னுமிதுக்கு மேற்படச் சொல்லலாவதொரு ஹேது என்பக்கலில்லை; இச்சொல் இத்தனையும் மெய்யே சொன்னேன் ஹேதுவாக, குருமாமணியுந்துபுனல் பொன்னித் தென்பாலான திருப்பேரைத்திருநகரியாக வுடையனுயிருந்த எம்பெருமான் பெரியபிராட்டியாரோடேகூட என்நெஞ்சு நிறையப்புகுந்து இப்படி என்னோடேகலந்து பரிமாறுவதே! ஒருவனுடைய அஹிநிவேஶ மிருக்கும்படியே! என்கிறுர்.

ஒ.—முதற்பாட்டில், யாத்ருச்சிகமாகத் திருமாலிருஞ்சோலைமலை என்றேன்: என்னுங்காட்டில், அத்யந்தநிரபேக்ஷனுயிருக்கிற தான் பிராட்டியோடே கூட வந்து என்னுள்ளே புகுந்தருளினுன் என்கிறுர்.

இவன் நிருத்தரனுனமைக்கு ஹேத்வந்தரம் - இனி ரக்ஷகனுன்வனுக்கு இத்யாதி. மறுமாற்றம் - ப்ரத்யுத்தரம். கவிழ்ந்துநின்று காலாலே தரையைக்கீறினுன் என்றது - "உணர்த்தலுற்றேன்" என்றவநந்தரம், அவன்வார்த்தையின்றிக்கே "உற்றேனுகந்துபணிசெய்து" என்று தாமே ஸமாஹிதராகையாலே ஸித்தம். அவன் நிருத்தரனுனபின்பு தாமே ஸமாஹிதரானபடியைக் காட்டுகிறுர் - முதலிலே இத்யாதி. "என்னெஞ்சுநிறையப்புகுந்தான்" என்றத்தைப்பற்ற - அவன்தம் பக்கல் இத்யாதி. "காரேழ்" இத்யாதியாலே ரக்ஷணம்சொன்னபோதே க்ருபாதிகுணங்களும் ஸித்தம். "இன்றென்னைப்பொருளாக்கி" என்றத்தைப்பற்ற - நிர்ஹேதுகவிஷயீகாரம் என்றது. "அமுதமுண்டுகளித்தேன்" என்றத்தைப்பற்ற - ஹ்ருஷ்டராய்க்களிக்கிறர் என்றது.

---

† 'கீறிநின்றுன்' என்று சில ப்ரதிகள்,

[குருமாமணி என்றுமேலுக்கு] - பெருவிலையனாய் அழகியவான ரத்னங்களைக் கொடுவந்து தள்ளாநின்றுள்ள புனலையுடைய பொன்னியினுடைய தென்கரையிலே ஸ்ரீயஃபதியான தான் சென்று சேரும் ஸ்லாக்யமான தேசம் தென்திருப்பேர்.

ப.—முதற்பாட்டில், யாத்ருச்சிகமாகத் திருமலையைப்போய்க் கிட்டுங்காட்டில் லக்ஷ்மீஸஹாயனாய்க்கொண்டு என்னெஞ்சிலேவந்து புகுந்தானென்கிறார்.

(நாட்டுவார்த்தை மர்யாதையாலே), திருமாலிருஞ்சோலை மலையென்றேன் என்ன - திருமாலிருஞ்சோலையென்று சொன்னவளவிலே, திருமால் - ஸ்ரீயஃபதியாய் பரிபூர்ணனான தான், வந்து - (ஸாபேக்ஷரைப்போலே) வந்து, என்னெஞ்சம் - (உக்திக்குக் கூட்டுப்படாதேயிருக்கிற) என் நெஞ்சுக்குள்ளே, ("வாக்குக்கு பூர்வஹாவியல்லவோ மநஸ்ஸு" என்கிற ஸ்வாபிப்ராயத்தாலே அவளும் தானுமாக) நிறைய-பரிபூர்ணமாக, புகுந்தான்-; திருமால் - (என் நெஞ்சிலே வருகைக்காக) "ஸ்ரீயாஸார்த்தம் ஜகத்பதிঃ" என்றவளோடேஒருதேசவிசேஷத்திலே யிருக்கிறவன், சென்றுசேர்விடம் - சென்று கண்வளர்ந்தருளினவிடம், குருமாமணி - அதிஸ்லாக்யமான மாணிக்கங்களை, உந்து - உந்துகிற, புனல் - புனலையுடைய, பொன்னி - பொன்னியின், தென்பால் - தென்பக்கத்தில், தென் திருப்பேர் - ஊர்ஜநீயமான திருப்பேர்.

இ.—முதற்பாட்டில், யாத்ருச்சிகமாகத் திருமலையைச் சொல்லுங்காட்டில் நிரபேக்ஷனான தான்பிராட்டியோடே கூடவந்து என்னுள்ளேபுகுந்தருளினான்என்கிறார்.

[திருமாலிருஞ் சோலைமலை என்றேன்] - சிலர் ஒருமலையைச் சொல்லுமிடத்தில் ஒருவிசேஷணத்தையிட்டுச் சொல்லவேணும், அம்மாத்ரம் சொன்னேனத்தனை என்கிறாரின்றார் இவர்; இவ்விசேஷணத்தையிட்டுச் சொல்லிற்றுத் தன்பக்கல் ஆதரத்தாலே என்கிறாநின்றான் அவன். [என்ன] - மநஸ்ஸஹகாரமில்லை, உக்திமாத்ரமே யென்றிருக்கிறார். ராவணன் தம்பிக்கு மித்ரபாவமே அமையும் என்றிருக்குமவன், இவர்க்கு உக்திக்கு அவ்வருகு ஒன்றுவேணு மென்றிருக்குமோ? "மோக்ஷத்வம் ஸ்வரூபமாகில், உபாயபாவம் நம்தலையிலே கிடந்ததாகில், அத்வேஷமுண்டாகில், நம்பேறாக விஷயீகரிக்கைக்கு உக்திக்கு அவ்வருகுவேண்டா" என்கிறாநின்றான் அவன். [திருமால்] - அஹ்ருதயமாகச் சொன்னதுதன்னையும் ஸஹ்ருதயமாக்குவாரும் அருகே யுண்டு. [வந்து] - நம்மை அங்கே அழைத்துக்கார்யம் கொள்ளுகையன்றிக்கே நாம் இருந்தவிடத்தே வருவதே! ஸாபேக்ஷன் இருந்தவிடத்திலே பூர்ணன் வருவதே! ஸர்வர்க்கும் அபிகம்யனானவனுக்கு நான் அபிகம்யனாவதே! "ஸோऽஹம் ஸமுத்ரஹா தேஜஸாம் பரீ". [என்னெஞ்சம்] - உக்திக்கு அஸஹகாரியான என்னெஞ்சம். [நிறையப் புகுந்தான்] - விஷயாந்தரங்களுக்கு அவகாசமில்லாதபடி பாத்திரப் புகுந்தான். [குருமாமணி இத்யாதி] - பெருவிலையனாய் ஊர்ஜநீயமான ரத்நங்களைக் கொண்டுவந்து தள்ளாநின்றுள்ள புனலையுடைய பொன்னித்தென்கரையிலே ஸ்லாக்யமான தேசம் என்றபடி. ஸ்ரீயஃபதிசேரும்படி ஸ்லாக்யமான தென்திருப்பேர்; இத்தேசத்தை வாஸஸ்தாநமாகவுடையவன், அஹ்ருதயமான என்உக்திமாத்ரத்தைக்கொண்டு என்னெஞ்சிலே விரும்பிப் புகுந்தான். கீழ் "திருமால்" என்றவிடம் புருஷகாரபாவத்தைச் சொல்லிற்று; மேலில் "திருமால்" என்றவிடம், உத்தரார்யத்தில் லக்ஷ்மீஸம்பந்தத்தைச் சொல்லுகிறது.

ஈடு:—முதற்பாட்டு. யாத்ருச்சிகமாகத் திருமலையைச் சொல்லுங்காட்டில் நிரபேக்ஷனான தான் பிராட்டியோடே கூடவந்து என்னுள்ளே புகுந்தருளினான் என்கிறார். [திருமாலிருஞ்சோலை இத்யாதி]-முன்பு அநாதிகாலம் ஈஸ்வரனுக்குத்தம்பக்கல் பேரிட்டுக் கொள்ளலாவதின்றிக்கே யிருக்க இப்போது அவனுக்குப் பேரிட்டுக்†கைக் கொள்ளுகைக்கு அடியானது இன்னதென்கிறார். ஓரோதேசங்களில் மலைகளைச் சொல்லாநின்றால் ஓரோ விசேஷணங்களையிட்டுச் சொல்லக்கடவதாயிருக்குமிறே; அப்படியே, திருமாலிருஞ்சோலைமலையென்றேன். [என்ன] - மநஸ்ஸஹகாரமுமில்லைகிடீர், உக்திமாத்ரமே என்பக்கலுள்ளது. "இவன் ஸாபேக்ஷனாயிருந்தானாகில், உபாயபாவம் நம்பக்கலிலேயா யிருந்ததாகில், இவருடையபேறு நம்பேறாயிருந்ததாகில், சேதநனைவாசிக்கு உக்திமாத்ரமுண்டாய்த்தாகில், இதுக்கவ்வருகு கொண்டு கார்யமென்?" என்றிருக்குமவனிறே. இதுதான் ஒருமலையிறே அவனுக்கு. உக்தியை இல்லையென்னவொண்ணாதே; இதுக்கடி யாராயுமவனல்லனே. ராவணன்தம்பிக்கு மித்ரபாவமே யமையுமென்னுமவன், இதுக்கவ்வருகொன்று வேணுமென்றிரானிறே. மலைகளினுடைய ஸாமாந்யம் கிடக்க, இவ்விசேஷத்தைச் சொல்லிற்று - இதிலுண்டான ஆதராதிசயமன்றோ என்றிராநின்றானாய்த்து அவன். ஆக, இவர்க்கு ஒன்றில்லையென்னவுமாய், அவனுக்கு இதொன்றுண்டென்னவுமாம்படி யிருக்கிறதிறே இதுதானே. [திருமால்] - அஹ்ருதயமாகச் சொன்னதுதன்னை ஸஹ்ருதயமாக்கிக்கொடுப்பாரும் அருகேயுண்டென்கிறார். [வந்து] - "அவன் வருவதே!" என்று இவர் விஸ்மயப்படாநிற்க, 'பிபாஸைவர்த்தித்தவன் தண்ணீரிருந்தவிடத்தே வருமத்தனையன்றோ?' என்றாய்த்து அவன்வார்த்தை. க்ருபணராயிருப்பார் ஶ்லாக்யரிருந்தவிடத்தே வருமித்தனையன்றோ என்றிராநின்றான். எல்லார்க்கும் அபிகம்யனானவனுக்கு நான் அபிகம்யனானேன்! "ஸௌஹ்ருத்ய ஸௌலப்யவான்" (ஸோப்யகச்

முதற்பாட்டு.—திருமாலிருஞ்சோலை இத்யாதி. பூர்வார்த்தத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - யாத்ருச்சிகமாக இத்யாதி. நிரபேக்ஷன் என்றது - "திருமால்" என்றதிலே விவக்ஷிதம்.

"திருமாலிருஞ்சோலைமலையென்றேன்" என்றதுக்கு பாவம் - முன்பு அநாதி இத்யாதி. பேரிட்டுக் கைக்கொள்ளுகைக்கு" என்பானென்? "திருமாலிருஞ்சோலை" என்று விசேஷிக்கையாலே வ்யுத்பத்திபூர்வகமாயன்றோ இருக்கிறதென்ன-ஓரோதேசங்களில் இத்யாதி. இத்தால்- வாசியறிந்துசொன்னேனல்லேனென்றபடி. "என்ன" என்றதுக்கு பாவம் - மநஸ்ஸஹகாரமும் இத்யாதி. அஹ்ருதயோக்திமாத்ரத்தாலே புகுரக்கூடுமோவென்ன - இவன் ஸாபேக்ஷனாகில் இத்யாதி. குணக்ராஹகனாகையாலே இவன்பக்கலுள்ளத்தைப் போரப்பொலியக்கொள்ளுமென்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - இதுதான் இத்யாதி. "ஆகையாலே இதுதானொருமலையிறே யவனுக்கு" என்றுகூட்டுவது. அஹ்ருதயமான வுக்தியும் அவனுக்கு பாரமென்று கருத்து. விவரணம்- உக்தியை இத்யாதி. ஆனாலும் அஹ்ருதயம் ஸஹ்ருதயமாக நிரூபித்துக் கொள்ள வேண்டாவோவென்ன - இதுக்கடி இத்யாதி. அடியாவது - மநஸ்ஸஹகாரம். இதுக்கு நியாமகமேதென்ன - ராவணன்தம்பிக்கு இத்யாதி. "இதுதானொருமலையிறே" இத்யாதிவாக்யவிவரணம் - மலைகளினுடைய இத்யாதி. "திருமாலிருஞ்சோலை" என்கிற விசேஷணத்திலே நோக்கு. இவ்வாக்யங்களாற்சொன்ன அர்த்தத்தைத் தொகுத்து அருளிச்செய்கிறார் - ஆக இத்யாதி. "திருமாலிருஞ்சோலைமலையென்றேன்" என்றவநந்தரம் "திருமால்" என்றதுக்கு பாவம் - அஹ்ருதயமாக இத்யாதி. "வந்து" என்றதுக்கு பாவம் - அவன்வருவதே இத்யாதி. விவரணம் - க்ருபணராய் இத்யாதி. இத்தால்பாவம் - எல்லார்க்கும் இத்யாதி. அப்படி அவன் அபிஸரித்தவிடமுண்டோவென்ன - ஸோப்யகச்சத் இத்யாதி. "ஸௌஹ்ருத்ய ஸௌலப்ய ஸமாநஜாதீய ஸர்வஸௌந்தர்யவான்

† 'கொள்ளுகைக்கு' என்று பாடாந்தரம்.

சத் - ஸ்பரீம்) என்னுமாபோலே. [என்னேஞ்சம்] - அந்தவுக்திஸஹக்ருதமான என் நேஞ்சிலே. [நிறையப்புகுந்தான்] - விஷயாந்தரங்களுக்கு அவகாசமில்லாதபடி புகுந்தான்; அத்ரிஹஹவாஹுஸ்ரமத்திலே, 'நான் ராமன்: இவள் மைதிலி: இவன் லக்ஷ்மணன்' என்று நமஸ்சரித்து நின்றாற்போலே; அக்காட்டில் பாழடையத் தீரும்படி புக்காற்போலே என்னேஞ்சில் பாழ்தீரப் புகுந்தான். [குருவித்யாதி] - தான்விரும்பிச் சென்று சேரும் தேசம் அதுவாயிருக்கக்கிடீர் என்னேஞ்சிலேவந்து புகுந்ததேன்கிறார். எல்லார்க்கும் ப்ராப்ய ஞனவன்கிடீர் என்னை ப்ராப்யனுகக் கோள்ளுகிறுன். பெருவிலையனுய் ஊர்ஸநீயமான ரத்நங்களைக்கோண்டுவந்து தள்ளாநின்றுள்ள புனலையுடைய போன்னித் தேன்கரையிலே. ஸ்லாக்யமான தேசமேன்றபடி. "துக்தாப்திர்ஜநக:" (துக்தாப்திர்ஜநக:)இத்யாதிவத். [புனல்] - ஸ்ரமஹரமான தேசத்தை யுடையவன்கிடீர் இங்கேவந்து புகுருகிறுன். [திருமால்சேன்று சேர்விடம்] - பரமரஸிகனுனவன், தானும் பிராட்டியுமாய் விரும்பிச் சேன்று சேரும் தேசம்அதுவா யிருக்கச்செய்தே,அதுகிடக்க, திருமாலிருஞ்சோலைமலையேன்றேன்; இந்த அஹ்ருதயமான உக்திமாத்ரத்தைக்கோண்டு என்னுடைய ஹ்ருதயத்திலே வந்து புகுந்தான். கீழில் "திருமால்" என்றவிடம், புருஷகாரஸாவத்தைச் சோல்லிற்று; மேலில் "திருமால்" என்றவிடம், உத்தரார்த்தத்தில் லக்ஷ்மீஸம்பந்தத்தைச்சோல்லுகிறது. (க)

இரண்டாம் பாட்டு.

பேரேயுறைகின்றபிரான் இன்றுவந்து
பேரேனேன்றுஎன்னேஞ்சுநிறையப்புகுந்தான்
காரேழ்கடலேழ்மலையேழுலகுண்டும்
ஆராவயிற்றுனை அடங்கப்பிடித்தேனே.

ஊ.நஃ। ஸபாஹ்யாப்யந்தரஸ்ஸுசிஃ" இத்யாதி. "நிறைய" என்றதுக்குபாவம் - விஷயாந்தரங்களுக்கு இத்யாதி. "புகுந்தான்" என்றதுக்குபாவம் - அத்ரிஹஹவான் இத்யாதி. ஸவிநயமாகப் புகுந்தானென்றபடி. "விஷயாந்தரங்களுக்கு" இத்யாதிவாக்யவிவரணம் - அக்காட்டில் இத்யாதி. உத்தரார்த்தத்துக்குபாவம் - தான்விரும்பி இத்யாதி. "திருமால்" என்றதுக்குபாவம் - எல்லார்க்கும் இத்யாதி. ஸப்தார்த்தம் - பெருவிலையனுய் இத்யாதி. "குருமாமணியுந்துபுனல்" என்றத்தால்பலிதம் - ஸ்லாக்யமான இத்யாதி. "உந்துபுனல்" என்றதுக்கு ஸம்வாதம் - துக்தாப்திஃ இத்யாதி. "துக்தாப்திர்ஜநகோ ஜநந்யஹமியம் ஸ்ரீரேவ புத்ரீ வர: ஸ்ரீரங்கேஸ்வர ஏதத் அர்ஹணகர்மணே கமலஜஸ்தாத ஸ்ஸ்ரிதாஸ்ஸ்ரேவ ரத்நாபரணா நாதிகமபி தாராஸ்ததோ வஸ்துஷு ஸர்வாஸ்வப் அர்ஹணஹர்ஷரவிதய தீவரோகிஸா ஸேவதாம்" இதி ஸ்ரீரங்கராஜஸ்தவே, இதில்உத்தரார்த்தம் இங்கு விவக்ஷிதம் - "புனல்பொன்னி" என்று விசேஷித்ததுக்குபாவம் - ஸ்ரமஹரமான இத்யாதி. அந்வயித்தர்த்தம் - பரமரஸிகனுனவன் இத்யாதி. இருகால் "திருமால்" என்றதுக்குபாவம் - கீழில்திருமால் இத்யாதி. 'திருமால்சென்றுசேர் விடம் - குருமாமணியுந்துபுனல் பொன்னித்தென்பால் - தென்திருப்பேராயிருக்கச்செய்தேயும் - திருமாலிருஞ்சோலைமலையென்றேன்: என்னத் திருமால்வந்து என்னெஞ்சு நிறையப்புகுந்தான்' இத்யந்வயஃ. (க)

ஆ.—(பேரேயுறைகின்றபிரான்.) - அகாரணமாக இன்றுவந்து இனிப் பேரேனென்று நெஞ்சுநிறையப்புகுந்தான்; இதற்குமுன்பு இப்படி என்னெஞ்சில் புகுந்தருளப்பெறாமையாலே ஸர்வஜ்ஞதீச்வரனாயிருந்து வைத்தும் ஸாபேக்ஷனாயிருந்தவன், இன்று என்னுள்ளே புகுரப்பெற்று நிரபேக்ஷனானானென்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், இதுக்குமுன்பு தான் ஸர்வேச்வரனாயிருந்து வைத்தே என்னோடே கலக்கப் பெறாமையாலே குறைவாளனாயிருந்தவன் நிர்ஹேதுகமாக என்னுடைய ஹ்ருதயத்திலேவந்து புகுந்து பூர்ணனானான் என்கிறார்.

[பேரே என்றுதொடங்கி] - திருப்பேரைத் தனக்குக் கோயிலாகப்பெற்று அங்கே நிரந்தரவாஸம் பண்ணுகிற ஸர்வேச்வரன், இனி ஒருநாளும்போகேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய ஹ்ருதயம் பூர்ணமாம்படி இன்று வந்து புகுந்தான். [காரேழ்கடலேழ் என்றுதொடங்கி] - புஷ்கலாவர்த்தமேகம் ஏழையும் ஸப்தஸமுத்ரங்களையும் ஸப்தகுல பர்வதங்களையும் திருவயிற்றிலேவைத்து, பின்னையும் குறைவாளனாயிருந்தவனுக்கு இனி ஒன்றும் தேடவேண்டாதபடி பரிபூர்ண பாத்ரமானேன்.

ப.—அநந்தரம், முன்பு குறைவாளரைப்போலே இன்று 'ஒருகாலும்போகே'னென்று என்னெஞ்சிலே பூர்ணனாய்ப்புகுந்தானென்கிறார்.

பேரே - திருப்பேரிலே, உறைகின்ற - நித்யவாஸம்பண்ணுகிற, பிரான் - ஸர்வேச்வரன், இன்றுவந்து - (முன்பு குறைவாளனாயிருந்தாற்போலே) இன்று (நிர்ஹேதுகமாகத்தானே ஸாபேக்ஷனாய்) வந்து, பேரேனென்று - (இனிப்போவென்றால் ஒருகாலும்) போகேனென்று, என்னெஞ்சு - என்னெஞ்சிலே, நிறைய - பரிபூர்ணமாம்படி, புகுந்தான் - ; (ஆகையாலே), காரேழ் - (புஷ்கலாவர்த்தகாதிகளான) மேகங்கள் ஏழையும், கடலேழ் - ஸமுத்ரங்கள்ஏழையும், மலையேழ் - குலபர்வதங்கள் ஏழையுமுடைத்தான, உலகுஉண்டும் - லோகத்தையெல்லாம் அமுதுசெய்தும், (ரக்ஷணத்தில் பாரிப்பாலே), ஆராவயிற்றானை - நிறையாதவயிற்றையுடையானை, அடங்க - என்னுள்ளே புகுந்து ஸர்வப்ரகார பரிபூர்ணனாம்படியாகக்கொண்டு, பிடித்தேன் - அநுபவிக்கப் பெற்றேன்.

இ.—இரண்டாம்பாட்டில், தான் ஸர்வேச்வரனாய் வைத்து என்னோடு கலக்கப்பெறாமையாலே குறைவாளனானவன், இன்று நிர்ஹேதுகமாக என் ஹ்ருதயத்திலே புகுந்து பூர்ணனானான் என்கிறார்.

யன்றோ '' என்றார் ; '' இவையொன்றுமில்லையாகிலும் நாம்தந்த * மதிநலத்தை வளர்த்துக் கொடுபோந்தீரே'' என்றான்: ''காதல்கடல்புரைய விளைவித்தகாரமர்மேனி' என்று அதுவும் தேவரீரேயன்றோ'' என்றார் ; இப்படி இவர் முடியத்தொடர்ந்தவாறே பெருங்கடல் மண்டினாரைப்போலே போக்கற்றான். ''இதுக்கு ஈஶ்வரன்சொன்னஉத்தரமேன்? '' என்று சீயர் பட்டரைக்கேட்க, ''இவர்தலையிலே ஒருபழியை எறட்டு நெடுநாளிழந்த நாம் சொல்லுவதேன்?'' என்று லஜ்ஜாவிஷ்டனாய்க் காலாலே தரையைக்கீறிநிற்கு மித்தனைபோக்கி வேறு உத்தரமுண்டோ?'' என்றருளிச்செய்தார். அதாவது - ''முன்பு ருசியில்லாமையாலே'' என்னமாட்டான்: ''இப்போது ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகையாலே'' என்ன மாட்டான்: ஆனால், பின்னை ஈஶ்வரனுக்கு வைஷம்ய நைர்க்ருண்யாதிகள்வருதல் ஸர்வமுக்திப்ரஸங்கம்வருதல் செய்யாதோ வென்னில் ;- அதுசெய்யாது, அடியிலே அத்வேஷமும் இச்சையும் பிறக்கைக்குத்தான் க்ருஷிபண்ணி அது பக்வமாமளவும் பார்த்திருக்கிறவனாகையாலே. அவன்கேட்டதுக்கு ஒரு மறுமாற்றம் சொல்லக்காணாமையாலே ''அறிந்தோம்: இதுக்கு ஹேது இங்ஙனேயாகவேணும்'' என்று பார்த்தார்: ''தன்னுடையஸ்பர்ஶம் ப்ரதிகூலமாகைதவிர்ந்து விலக்காதஸமயம் பார்த்திருந்தானாதல், தன்னையொழிந்தவற்றில் ஸாதநபுத்தி தவிருமளவும் பார்த்திருந்தானாதலாக வடுக்கும்'' என்று பார்த்தார். ஆனால், இதுதன்னை அவனுத்தரமாக அருளிச் செய்யாதொழிவானேன்? என்னில் ; ''சைதந்யப்ரயுக்தமாய் வருகிற அத்வேஷத்தை ஸாதநமென்னமாட்டானே: உபாயபாவம் தன்தலையிலேயாய்த்தே: நெடுநாள் இவர்தலையிலே பழியிட்டிழந்திருந்த நாம் எத்தைச் சொல்லுவது?'' என்று பேசாதேயிருந்தான். ''ஹ்ரீரேஷாஹிமமாதுலா'' (ஹ்ரீரேஷாஹிமமாதுலா) என்று பிற்பாட்டுக்கு லஜ்ஜித்துநிற்குமவனிறே ; இவர்தாம் எடுத்துவைத்து வார்த்தைசொல்லும்படியாய்த்து அவன் நிலை. சைதந்யப்ரயுக்தமான ருசிதான் ஸ்வரூபாதிரேகி யன்றிறே. ''உம்

சொல்ல, இவர் அதுக்கெல்லாம் அந்யதாஸித்திசொல்ல, நிருத்தரனும் ப்ரகாரத்தைக்கீழேசொல்லி, இங்ஙனன்றிக்கே அநாதிகாலம் இவரைக் கைவிட்டிருந்த குற்றம் தன்மேலேயாய் அவ்வழியாலும் அவன் நிருத்தரனானப்ரகாரத்தை ஆப்தஸம்வாதத்தாலே உபபாதிக்கிறார் - இதுக்கு ஈஶ்வரன் இத்யாதி. அதுவென் ? ருச்யாதிகளில்லாமையாலே யென்னவொண்ணாதோவென்ன - அதாவது இத்யாதி. அதாவது - உத்தரமில்லாமையாவதென்றபடி. '''மாட்டான்' ஆகையாலே நிர்ஹேதுகம்'' என்றபடி. ஆனால் - நிர்ஹேதுகமானாலென்றபடி. இப்படி இவன்நிருத்தரனானால் இவர் கேட்டஶங்கைக்கு ஸமாதாநம்பண்ணினாரோவென்ன ; தாமே ஸமாதாநம்பண்ணிக்கொண்டு போகிறாரென்கிறார் - அவன்கேட்டதுக்கு இத்யாதி. ஸ்பர்ஶமென்றது - ரக்ஷணமென்றபடி. இதுதன்னை என்றது - அத்வேஷத்தையும் ஸாதநபுத்தி தவிருகையையுமென்றபடி. ''இவர்தலையிலே'' இத்யாதிவாக்யவிவரணம் - நெடுநாள் இத்யாதி. ''ஆகையாலே 'நெடுநாள்' '' என்றுகூட்டுவது. ''பழியிட்டு இழந்திருந்த நாம்'' என்கைக்கு தன்மேலே குறையாக நினைத்திருக்குமோவென்ன - ஹ்ரீரேஷாஹி இத்யாதி. '' ஸுஸீதஸாமவ்ருணோஷஹ்ரீரேஷாஹிமமாதுலா । யத்த்வாம் ஸாமம்விஷேகௌஸமாவஸூக்திதக:'' இத்யாரண்யகாண்டே (கo-க). அவன் லஜ்ஜாவிஷ்டனான ப்ரகாரத்தினெல்லையை யருளிச்செய்கிறார்-இவர்தாம் இத்யாதி. ''ஆகையாலே 'இவர்தாமெடுத்துவைத்து' '' என்றுகூட்டுவது. எடுத்துவைத்து - லஜ்ஜையினாலே கவிழ்ந்திருந்தவனை யெடுத்துப்பிடித்தென்றபடி. இவர்க்கு அத்வேஷமேயன்றிக்கே ருசியுமுண்டே ; அது ஸாதநமாகாதோ ? என்ன - சைதந்ய இத்யாதி. ஸாக்ஷாத்ப்ரஶ்நத்துக்கு உத்தரம் - உம்முடைய

முடையப்ராப்யம் பெற்றீராகில் அதுவேயமையாதோ? '' என்ன, அதுவே யமையுமென்கிறார்; தேங்காய்க்கு இளநீர்புக்கவழி ஆராய்ந்தன்றிறே விடாய்த்தவன் இளநீர்குடிப்பது?

பத்தாம் பாட்டு.

உற்றேன்உகந்துபணிசெய்துஉனபாதம்
பெற்றேன்ஈதேஇன்னம்வேண்டுவதுஎந்தாய்!
கற்றார்மறைவாணர்கள்வாழ்திருப்பேராற்கு
அற்றாரடியார்தமக்கு அல்லல்நில்லாவே.

ஆ.—(உற்றேன்.) - எம்பெருமான், ஓர் உத்தரம்காணாமை "உம்முடைய திறத்தில் நான் செய்த செயலெல்லாம் நீர் சொன்னபடியே நிர்ஹேதுகமாகவேசெய்தேன்; அது நிற்க: இனி நான் செய்யவேண்டுவதென்?" என்ன;—

"உன்திருவடிகளைப் பெற்றேன்; பெறுகிறேன்; உகந்து பணிசெய்து கொண்டு உன்திருவடிகளைப்பெற்றேன்; இன்னம் உன் திருவடிகளில் அடிமைசெய்யும் இதுவே எனக்கு வேண்டுவது எந்தாய்!" என்று ஆழ்வார்சொல்ல, எம்பெருமானும், "அப்படியேசெய்கிறோம்" என்றருளிச்செய்ய, ஆழ்வாரும், "திருப்பேர்நகரான் திருவடிகளைப்பற்றினார்க்கு ஒரு துக்கமில்லையாகாதே!" என்கிறார்.

ஒ. - பத்தாம்பாட்டில், இவர் கேட்ட அதுக்கு ஒரு ஹேது காணாமையாலே நிருத்தரனாய் "உமக்கு மேல் செய்யவேண்டுவது சொல்லீர்?" என்று எம்பெருமான் அருளிச்செய்ய; உன்னைக்கிட்டி ப்ரீதிபூர்வகமாக அடிமை செய்துகொண்டு உன் திருவடிகளை அநுபவிக்கப்பெற்றேன். இதுவே இன்னம் வேண்டுவது என்று ஆழ்வார் விண்ணப்பஞ்செய்ய; அவனும் "அப்படியே செய்கிறோம்" என்ன, ப்ரீதராய், திருப்பேர்நகரான் திருவடிகளை ஆஶ்ரயித்தார்க்கு ஒருதுக்கம் இல்லையாகாதே என்கிறார். அற்றாரான அடியார்.

ப.—அநந்தரம், கைங்கர்யப்ரதிஸம்பந்தியான அவன் திருவடிகளை யடிமை செய்துபெற்றேன்; யாவதாத்மபாவி எனக்கு இதுவேயமையுமென்கிறார்.

உற்றேன் - நிர்ஹேதுகமாக உன் திருவடிகளைக் கிட்டினேன்; (அத்தாலே), உகந்து - ப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு, பணிசெய்து - வாசிகமானவடிமைசெய்து, உனபாதம்பெற்றேன் - பரமப்ராப்யபூதனான உன் திருவடிகளைப்பெற்றேன்; எந்தாய் - நிருபாதிகஸம்பந்தவானவனே! ஈதே - இவ்வடிமையே, (இவ்வாத்மாவுக்கு), இன்னம் - உள்ளதனையும், வேண்டுவது - அபேக்ஷிதம்; (இதுண்டாகவே), கற்றார் - (ஆசார்யமுகத்தாலே ஜ்ஞாதவ்யங்களை) அப்யஸித்தவர்களாய், மறை - ஶ்ருதமான வேதார்த்தங்களை, வாணர்கள் - நிர்வஹிக்க ஸமர்த்தரானவர்கள், வாழ் - பகவதநுபவத்தோடே வாழுகிற, திருப்பேராற்கு - திருப்பேரிலேவர்த்திக்கிற உனக்கு, அற்றார் - அநந்யார்ஹமான,

---

இத்யாதி. ப்ராப்யம்பெற்றால் வந்தவழியாராயவேண்டா என்னுமதுக்கு த்ருஷ்டாந்தம் - தேங்காய்க்கு இத்யாதி. "குன்றென்னத்திகழ்மாடங்கள் சூழ்திருப்பேரான் - இன்றென்னைப்பொருளாக்கி' என்றுதொடங்கி, 'உணர்த்தலுற்றேனே' இத்யந்வயம். (கூ)

அடியார்தமக்கு - அடியார்தமக்கு; அல்லல் - அநுபவப்ரதிபந்தக து:க்கங்கள், நில்லாவே - தன்னடையே நில்லாதிறே: அற்றார்க்கடியாரென்றுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், இவர் கேட்ட இதுக்கு ஒரு ஹேது காணாமையாலே நிருத்தரனாய், “உமக்கு மேல் செய்யவேண்டுவது என்?” என்ன; ப்ரீதிபூர்வகமாக அடிமைசெய்யப்பெற்றேன், இதுவே இன்னம் வேண்டுவதென்கிறார்.

‘அவன்தானே செய்தான் என்னுமன்று அவனுக்கு வைஷம்யநைர்க்ருண்யமும் ஸர்வ முக்தியும் ப்ரஸங்கியாதோ?’ என்னில்;—இத்தலையில் ருசியை அபேக்ஷித்துச் செய்கையாலே அவனுக்கு அவை தட்டாது. அது ஹேதுவென்று ஈஶ்வரனுக்கு உத்தரமானாலோ? என்னில்,—அது உபாயமாகமாட்டாது. ஸலவ்யாப்தமானதிறே உபாயமாவது. இந்த ருசி அதிகாரிஸ்வரூபமாகையாலே தத்விஶேஷணமாமித்தனை. உபாயம் ஸஹகாரி நிரபேக்ஷமாகையாலும் இந்தருசி உபாயமாகமாட்டாது. இது உபாயமல்லாமையாலே இவர்க்கு இல்லை என்னலாம்; ஸர்வமுக்தி ப்ரஸங்க பரிஹாரார்த்தமாக அவனுக்கு உண்டென்னவுமாம். [உற்றேன்] - கெடுமரக்கலம் கரைசேர்ந்தாற்போலே கிட்டிக்கொடுநின்றேன். ப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு திருவாய்மொழிபாடி உன் திருவடிகளை அநுபவிக்கப் பெற்றேன். உகந்து பணிசெய்கை - ஸாதநமாய், மேல் ஸாத்யமாகச் சொல்லுகிறதன்று; இரண்டும் ஏககாலத்திலேயுள்ளதாகையாலே. [ஈதே இன்னம் வேண்டுவது] - இதுதானே மாறிமாறி யாவதாத்மபாவியாய்ச் செல்லுகையிறே. புநராவ்ருத்தியின்றிக்கே யொழிகையாவது - மீளாதொழிகை. விபிபோலிநக்கிற தன்றே. [எந்தாய்] - இவ்வநுபவம் ஸ்வரூபாநுரூபமென்கிறது. இத்தலைக்கு ஶேஷத்வமும் தேவர்க்கு ஶேஷித்வமுமிறே ஸ்வரூபம். இவர் அபேக்ஷித்தபடியே “செய்கிறோம்” என்ன, ப்ரீதராய் அருளிச்செய்கிறார்: [கற்றார்] - ஓர் ஆஸநத்திலேயிருந்து ஓதக்கினவர்கள். [மறைவாணர்கள்வாழ்] - வ்யாஸபதம் செலுத்த க்ஷமரானவர்கள் அநுஷ்டித்து வர்த்திக்கிற தேஶம். [திருப்பேராற்கு] - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ப்ரகாரத்தை மாறி ஸ்வகதமாகச் சொல்லுகிறார் என்னுதல், திருப்பேரானை உனக்கு என்னுதல். [அற்றாரடியார்] - திருப்பேர் நகரானுக்கு அற்றாரான அடியார் என்னுதல், அவனுக்கு அற்றவர்களுக்கு அடியார் என்னுதல். [அல்லல் நில்லாவே] - ஒருது:க்கமுமில்லையாகாதென்கிறார்.

ஈடு.—பத்தாம்பாட்டு. இவர் கேட்ட இதுக்கு ஒருஹேது காணாமையாலே நிருத்தரனாய், “உமக்கு மேல் செய்யவேண்டுவதேன்?” என்ன, “ப்ரீதிபூர்வகமாக அடிமை செய்யப்பெற்றேன்: இதுவே யின்னம்வேண்டுவது” என்கிறார். “அவன்தானே செய்தான்” என்னுமன்று, அவனுக்கு வைஷம்யமும் நைர்க்ருண்யமும் ஸர்வ முக்தியும் ப்ரஸங்கியாதோ வென்னில்; இத்தலையில் ருசியை யபேக்ஷித்துச்செய் கையாலே அவனுக்கு அவை தட்டாது. அதுஹேதுவென்று ஈஶ்வரனுக்கு உத்தர

பத்தாம்பாட்டு - உற்றேன் இத்யாதி. “உற்றேன்” என்றுதொடங்கி “இன்னம்வேண்டுவது” என்னுமளவும் கடாக்ஷித்து, அதுக்கு அநுகுணமாக ப்ரஶ்நோத்தரமுகத்தாலே ஸங்க்ரஹிக்கிறார் - இவர்கேட்ட இத்யாதி. கீழிற்பாட்டில் உக்தமான சங்காபரிஹாரங்களை ஸ்தாநநிகநயாயத்தாலே த்ருடீகரித்தருளுகிறார் - அவன்தானே இத்யாதி. அது - அந்தருசி. மாட்டாதபடியெப்படி? என்ன - ஸல

மாறுலோ வென்னில்; அது உபாயமாகமாட்டாது. ஃலவ்யாப்தமானதிறே உபாயமாவது; இந்தருசி அதிகாரிஸ்வரூப மாகையாலே தத்விஶேஷணமாமித்தனை. உபாயம் ஸஹகாரிநிரபேக்ஷமாகையாலும், இந்தருசி யுபாயமாகமாட்டாது. இது உபாயமாகாமையாலே இவர்க்கில்லை என்னலாம், ஸர்வமுக்திப்ரஸங்கபரிஹாரார்த்தமாக அவனுக்கு உண்டென்னவுமாம்.

[உற்றேன்] - கெடுமரக்கலம் கரைசேர்ந்தாற்போலே கிட்டிக்கொடு நின்றேன். [உகந்துஇத்யாதி] - ப்ரீதிப்ரேரிதனுய்க்கொண்டு திருவாய்மொழிபாடி உன்திருவடிகளை யநுபவிக்கப்பெற்றேன். உகந்துபணிசெய்கை - ஸாதநமாய், மேல் ஸாத்யமாகச்சொல்லுகிறதன்று; இரண்டும் ஏககாலத்திலேயுள்ளதாகையாலே. [ஈதேயின்னம் வேண்டுவது] - இதுதானே மாறிமாறி யாவதாத்மபாவியாய்ச் செல்லுகையிறே.புநராவ்ருத்தியின்றிக்கே யொழிகையாவது- மீளாதொழிகை. அப்ராப்தமாயிருக்கிறதோவென்னில், [எந்தாய்] - இவ்வநுபவம் ஸ்வரூபப்ராப்தமென்கிறது. இத்தலைக்கு ஶேஷத்வமும் தேவர்க்குஶேஷித்வமுமிறே ஸ்வரூபம். இவர் அபேக்ஷித்தபோதே அவனும் "செய்கிறோம்" என்ன, ப்ரீதராய் அருளிச்செய்கிறார்: [கற்றார்] - ஓராஸநத்திலிருந்து போக்கினவர்கள். [மறைவாணர்கள்வாழ்] - வேதத்துக்கு வ்யாஸபதம் செலுத்தவல்லவர்கள் அநுபவித்து வர்த்திக்கிற தேசம். [திருப்பேராற்கு] - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே முகத்தைமாறி ஸ்வகதமாகச் சொல்லுகிறேனென்னுதல், திருப்பேரானுன உனக்கென்னுதல். [அற்றாரடியார்] - திருப்பேர்நகரானுக்கு அற்றாரான அடியாரென்னுதல், அவனுக்கு அற்றவர்களுக்கடியா ரென்னுதல். [அல்லல்நில்லாவே] - ஒருவகை துக்கங்களும் இவர்கள் பக்கல் நில்லாது.

(௧0)

வியாப்தம் இத்யாதி. இந்தருசிக்கு உபாயமென்று சொல்லலாமல்லவியாகில் பின்னை யெதிலே யந்தர்ப்பூதமென்ன - இந்தருசி இத்யாதி. பரிஹாரார்த்தம் - உபாயம் ஸஹகாரி இத்யாதி. "ஆக 'இது உபாயமாகாமையாலே'" என்று கூட்டிவது.

பணிசெய்கையாவது - வாசிகமான அடிமைசெய்கை; அதாவது - திருவாய்மொழி பாடுகை; இத்தையருளிச்செய்கிறார் - ப்ரீதி இத்யாதி. உகந்துபணிசெய்கை பாதம்பெறுகைக்கு ஸாதநமோவென்ன - உகந்து பணிசெய்கை இத்யாதி. இரண்டும் பலமென்றபடி. இரண்டும் ஏககாலத்திலேயுள்ளதாகையாலே என்றது - திருவாய்மொழிபாடுகையும் அவன் திருவடிகளைப் பெறுகையும் இரண்டும் ஒருகாலத்திலுள்ளதாகையாலேயென்றபடி. "நவமோ நாராயண:" என்கிற தேசத்திலே எல்லாரும் போக ஆசைப்படாநிற்க, நீர் "ஈதேயின்னம் வேண்டுவது" என்பானென் ? என்ன - இதுதானே இத்யாதி. "செல்லுகையிறே" "வேண்டுவது" என்று கூட்டிக்கொள்வது. இது மாறிமாறிச்செல்லுகை யாவதாத்மபாவியாகச்செல்ல, புநராவ்ருத்தியன்றோ வேண்டுவது? என்ன - புநராவ்ருத்தி இத்யாதி. மீளாதொழிகை - அவிச்சேதமாக மாறிமாறிவருகையென்றபடி. மீளாதொழிகையிறே, அத்தை "ஈதேயின்னம்வேண்டுவது" என்கிறதென்றபடி. ஸ்வரூபம் - இத்தலைக்கு இத்யாதி. செய்கிறேனென்று அவனருளுகை இவர் அபேக்ஷித்த இத்யாதி. போக்கினவர்கள் - அப்யஸித்தவர்கள். ஆசார்யமுகத்தாலே அப்யஸித்தவர்களாய், வேதத்துக்கு நிர்வாஹகரானவர்கள் வாழ்கிற திருப்பேரென்று அர்த்தம். வாணர்கள - நிர்வாஹகர்கள். "எந்தாய்" என்ற ஸம்போதநத்துக்குச்சேர - உனக்கென்னுதல் என்றது. அற்றாரான அடியாரென்னுதல், அற்றார்க்கடியாரென்னுதல். அல்லல் - து:கம்.

(௧0)

பதினோராம் பாட்டு.

நில்லாஅல்லல்நீள்வயல்சூழ் திருப்பேர்மேல்
நல்லார்பலர்வாழ் குருகூர்ச்சடகோபன்
சொல்லார்தமிழ்ஆயிரத்துள்இவைபத்தும்
வல்லார்தொண்டராள்வதுசூழ்பொன்விசும்பே.

ஆ.—(நில்லாவல்லல்) - "அவன்திருவடிகளை யாஶ்ரயித்தார்க்கு அல்லல் நில்லாவே: இதுநிஶ்சிதம்" என்றுகொண்டு இத்தையே பின்னையும் அநுபாஷித்து, திருப்பேரை ப்ரதிபாதித்தஇத்திருவாய்மொழி வல்லார்இட்டவழக்காம்திருநாடென்கிறார்.

ஒ —நிழமத்தில், இத்திருவாய்மொழி வல்லார் இட்ட வழக்காம், விலக்ஷண தேஜோரூபமான திருநாடு என்கிறார்.

[நீள்வயல் என்று தொடங்கி] - பெருத்த வயல்சூழ்ந்திருந்துள்ள திருப்பேர்மேலே விலக்ஷணர் பலரும் தம்மை அநுபவித்து க்ருதார்த்தரான திருநகரியையுடைய ஆழ்வாருடைய சொல் சேர்ந்த தமிழான ஆயிரம் திருவாய்மொழியிலும்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக ஸ்வாராஜ்ய ப்ராப்தியையருளிச்செய்கிறார்.

அல்லல் - துக்கத்துக்கு, நில்லா - வாஸஸ்தாநமல்லாத தேஶமாய், நீள் வயல்சூழ் - பெரிய பரப்பையுடைத்தான வயல்களாலேசூழப்பட்ட, திருப்பேர்மேல் - திருப்பேர்விஷயமாக, நல்லார் - விலக்ஷணபுருஷரானார், பலர் - பலரும், வாழ் - திருவாய்மொழிகேட்டுவாழுகிற, குருகூர்ச்சடகோபன் - திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வாருடைய, சொல்ஆர் - சொல்லாய்ச்சேர்ந்திருக்கிற, தமிழ்-தமிழான, ஆயிரத்துள்-, இவைபத்தும்வல்லார்- இவைபத்தையும் அப்யஸிக்க வல்லரான, தொண்டர் - ஶேஷபூதரானவர்கள், ஆள்வது - தாங்கள்நிர்வாஹகராய் நடத்துமது,—சூழ் - அபரிச்சிந்நமாய்க்கொண்டு வ்யாப்தமாய், பொன் - தேஜோமயமாய், விசும்பு - பரமவ்யோம ஶப்தவாச்யமான பரமபதம். இது கலித்துறை.

இ—நிழமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸிக்க வல்லார் இட்டவழக்கு பரமபதம் என்கிறார்.

[நில்லா அல்லல்] - து:கங்களானவை, "இது நமக்கு தேஶமன்று" என்று தானே விட்டுப்போம். பெருத்த வயல் சூழ்ந்திருந்துள்ள திருப்பேர் மேலேயாய்த்துச் சொல்லிற்று. விலக்ஷணர் பலரும் தம்மை அநுபவித்து இனியராயிருக்கும் திருநகரியையுடையராயிருக்கும் ஆழ்வார் அருளிச்செய்தது. "நல்லார் நவில் குருகூர்"- "ஸவபூதாஹிமதஸ்ஹ்". [சொல்லார் இத்யாதி] - சொல்சேர்ந்த தமிழான ஆயிரம் என்னுதல்; "வாக்யமேயவநேயமாபு" என்கிறபடியே, இனிமைக்குச் சொல்லை அமைந்த தமிழான ஆயிரம் என்னுதல். [வல்லார் தொண்டர்] - இப்பத்தை அப்யஸிக்க வல்லார், "செஞ்சொற்கவிகள்" என்கிறபடியே வாசிகமான அடிமைசெய்யும் வைஷ்ணவர்கள். [ஆள்வது சூழ்பொன் விசும்பே] - நிரதிஶய தேஜோரூபமான பரமபதத்தை யாய்த்து ஆளுவது; இத்திருவாய்மொழி அப்யஸித்தவர்கள் சென்றால் "ஆண்மின்கள் வானகம்" என்றாய்த்து, அங்குள்ளார் சொல்லுவது.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார் இட்டவழக்கு பரமபதமென்கிறார்.

[நில்லாவல்லல்]-துக்கங்களானவை, "இது நமக்குதேசமன்று"என்று தானே விட்டுப்போம். [நீள்வயல் இத்யாதி]-பெருத்தவயல்சூழ்ந்திருந்துள்ள திருப்பேர்மேலேயாய்த்துச் சொல்லிற்று. [நல்லார் இத்யாதி] - விலக்ஷணர்பலரும் தம்மையநுபவித்து இனியராயிருக்கும் திருநகரியை யுடையராயிருக்கும் ஆழ்வார் அருளிச்செய்தது. "நல்லார்நவில் குருகூர்"-"ஸர்வதாபி கதஸ்ஸத்பி:" (ஸர்வதாபி கதஸ்ஸத்பி:). [சொல்லார்இத்யாதி]-சொல்சேர்ந்த தமிழான ஆயிரமென்னுதல்; "பாட்யே கேயே ச மதுரம்" (பாட்யே கேயேசமதுரம்) என்கிறபடியே, இனிமைக்குச் சொல்லேயமைந்த தமிழான ஆயிரமென்னுதல். [இப்பத்தும்வல்லார்தொண்டர்] - இத்தையப்ஸிக்கவல்லார், "செஞ்சொற்கவிகள்" என்கிறபடியே வாசிகமான அடிமைசெய்யும் ஸ்ரீவைஷ்ணவர்கள். [ஆள்வது சூழ்பொன்விசும்பே] - நிரதிசயதேஜோரூபமான பரமபதத்தையாய்த்து ஆளுவது? இதத்ருவாய்மொழி யப்யஸித்தவர்கள் சென்றால், "ஆண்மின்கள்வானகம்"என்றாய்த்து, அங்குள்ளார் சொல்லுவது. (கக)

நிகமம் - நில்லாவல்லல் இத்யாதி. "வல்லார்தொண்டர், ஆள்வதுசூழ்பொன்விசும்பே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழியை இத்யாதி.

"நில்லாவல்லல்" என்றது - அநுவாதமாதல்; "இப்பத்தும் வல்லாரான தொண்டர்பக்கல் அல்லல்நில்லாது - ஆள்வதுசூழ்பொன்விசும்பு" என்று இப்பாட்டுக்கு யோஜநையாதல். திருநகரியிலே விலக்ஷணர் பலருண்டென்னுமதுக்கு ப்ரமாணம் - நல்லார் இத்யாதி. நவிலுகை - வர்த்திக்கையும், சொல்லுகையும். திருவிருத்தம். உக்தார்த்தத்துக்கு ஸம்வாதம் - ஸர்வதா இத்யாதி. ஸர்வதாபி கதஸ்ஸத்பிஸ் ஸமுத்ர இவ ஸிந்துபி:" இத்யாதி. ஸங்க்ஷேபே. "சொல்லார்" என்றதுக்கு - சொல்செறிந்தவென்னுதல்; ஆர்தல் - அமைதலாய், சொல் தானேயமைந்த வென்னுதலென்றர்த்தத்வயம். "பாட்யே கேயே ச மதுரம் ப்ரமாணைஸ் த்ரிபிரந்விதம் । ஜாதிபிஸ் ஸப்தபிர்யுக்தம் தந்த்ரீலயஸமந்விதம்" இதி பாலகாண்டே (சு). "பொன் - சூழ்-விசும்பு" என்றங்வயிப்பது. தேஜஸ்ஸாலேசூழ்ந்த பரமபதமென்றபடி. பொன் - தேஜஸ்ஸு. ஹ்ருதயம் - இத்திருவாய்மொழி இத்யாதி. 'நீள்வயல்சூழ்' என்று தொடங்கி, 'இப்பத்தும்வல்லார் தொண்டர்பக்கல் - அல்லல்நில்லா; அவர்களாள்வது - 'பொன் - சூழ் - விசும்பே' இத்யந்வய:. இத்தால் - இப்பத்தை யப்யஸித்தவர்களுக்கு அநிஷ்டநிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் பலமாகச் சொல்லுகிறதென்றபடி. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.—[illegible]

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—[illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி

திருமால்தன்பால்விருப்பஞ்செய்கின்றதோர்கண்டு
அருமாயத்தன்றகல்விப்பானென்? - பெருமால்நீ
இன்றென்பாற்செய்வாயெனென்னஇடருற்றுநின்றான்
தன் புகழ்மாறனைத்தான்சூழ்ந்து.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார்திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

ஒன்பதாந் திருவாய்மொழி—சூழ்விசும்பு - ப்ரவேசங்கள்.

ஆ.—(சூழ்விசும்பு.) - இப்படி நிர்ஹேதுகமாக எம்பெருமானாலே ஸம்ச்லிஷ்டரான ஆழ்வார், தாம் திருநாடேற எழுந்தருளும்படியையும், தாம் எழுந்தருளும் போது ஸர்வலோகங்களும் தம்மைக் கொண்டாடும்படியையும் திருவுள்ளத்தாலே ப்ரத்யக்ஷீகரித்து, அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

ஒ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், பரமயோகிகளுக்கு ஸம்பவிப்பதான பகவஜ்ஜ்ஞாநவைராக்ய பக்திப்ரகாரங்களை இத்திருவாய்மொழியளவும் அநுபவித்து இனி இங்கிருந்தநுபவிப்பதொன்றுமில்லாமையாலே, 'திருநாடேறப் போகவேணும்'' என்று மநோரதிக்கிற ஆழ்வாரை சடக்கெனக் கொடுபோகவேணுமென்று விரைகிற எம்பெருமான் இவர்க்கு அங்குத்தைக்கீடாம்படி மிகவும் விடாய்பிறக்கைக்காகத் திருநாட்டுக்குப் போகைக்கீடாக வேதாந்தங்களில் ப்ரஸித்தமான அர்ச்சிராதிமார்க்கத்தையும், அங்குள்ளார்பண்ணும் ஸத்காரங்களையும் அவ்வழியேபோய்ப் புகக்கடவ திருநாட்டையும், அங்கே எம்பெருமான் அயர்வறுமமரர்கள் ஸேவிக்கப் பிராட்டிமாரோடே வீற்றிருந்தருளும்படியையும் பரமப்ராப்யரான அயர்வறுமமரர்கள்நடுவே தாம் ஆநந்தநிர்பரராய் இருக்கும்படியையும் காட்டியருளக்கண்டு ப்ரீதராய் அத்தை அந்யாபதேசத்தாலே பேசியநுபவிக்கிறார்.

ப.—ஒன்பதாந்திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியிலுதிதமாக பகவத்விஷயமாகத் தமக்கு அநுபவப்ராவண்யரூபமான பரபக்தி நடந்தபடியையருளிச்செய்து, அநுபவத்தில் அந்விதரான இவர்க்குப் பரிபூர்ணாநுபவத்தில் ப்ராவண்யாதிசயம்பிறக்கைக்கு உறுப்பாக இவரைக்கொண்டுபோய் அநுபவிப்பதாக நினைத்து, அர்ச்சிராதிமார்க்கம்முதலாக ப்ராப்திபர்யந்தமானப்ரயோஜநாம்சத்தைப் பரஜ்ஞாநவிஷயமாம்படி ப்ரகாசிப்பிக்க நினைத்த ஸர்வேச்வரனுடைய போக்ய குணபூர்த்தியையும், நிருபாதிக சேஷித்வத்தையும், அநந்யார்ஹதாபாதகத்வத்தையும், போக்யத்வபூர்த்தியையும், அதுக்கடியான ஸ்ரீய:பதித்வத்தையும், சேஷித்வசிஹ்நத்தையும், ஸமுத்ரசாயித்வாதிகளால்வந்த ஸாவாஸிகத்வத்தையும், ஆச்ரிதஸௌலப்யத்தையும், பரமபதநிலயத்வத்தையும், ஸத்காரத்தையும் அநுபவித்து, ஏவம்பூதனான ஸர்வேச்வரன், முக்தராய்ப்போகிற பாகவதர்க்கு கந்தவ்யமான அர்ச்சிராதிமார்க்கத்தையும், அங்கு உண்டான ஆதிவாஹிக ஸத்காரப்ரகாரங்களையும், தேசவிசேஷப்ராப்தியையும், நித்யஸூரி பரிஷதந்தர்பாவத்தையும் அபரோக்ஷிப்பிக்க, அதாலே அத்யந்தஹ்ருஷ்டராய், தாம் அபரோக்ஷித்த க்ரமத்திலே முக்தராய்ப்போகிற பாகவதருடைய ஸத்கார ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார்.

இ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், பரமயோகிகளுக்குப் பிறக்கக்கடவதான பரபக்தி இவர்க்குப்பிறந்து தத்ப்ரகாரங்களை இத்திருவாய்மொழியளவும் வர அநுபவித்து இனியிங்கிருந்து அநுபவிப்பதொன்றுமில்லாமையாலே, ''பரமபதத்திலே போகவேணும்'' என்று மநோரதிக்கிற இவரைத் தப்பிற்காட்டில் சடக்கெனக் கொடுபோகவேணுமென்று விரைகிற ஈச்வரன், அங்குத்தை அநுபவத்துக்கீடாம்படி

மிகவும் விடாய்பிறக்கைக்காக, தன்னுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளைக் கண்ணாலே கண்டாற்போலே விஶதமாக ப்ரகாஶிக்கும்படி பண்ணியருளினான். அதாகிறது-வேதாந்தங்களில் ப்ரஸித்தமான அர்ச்சிராதிமார்க்கத்தையும் ஶரீரவிஶ்லேஷ ஸமயத்தில்வரும் க்லேஶமெல்லாம் ஆறும்படி தான்வந்து முகங்காட்டும்படியையும் மார்க்கஸ்த்தரான புருஷர்களுடைய ஸத்காரங்களையும் அம்மார்க்கத்தாலே போய்ப் புகக்கடவ பரமபதத்தையும், நித்யஸூரிகள் வந்து ஆதரிக்கும்படியையும், பிராட்டிமாரும் ஸ்ரீவைகுண்டநாயகனும் எதிரேவந்து ஆதரிக்கும்படியையும், நித்யஸூரிகள் ஸேவிக்கப் பிராட்டிமாரோடே வீற்றிருந்தருளுகிறபடியையும், பரமப்ராப்யரான நித்யஸூரிகள் நடுவே தாம் ஆநந்தநிர்பரராயிருக்கும்படியையும் காட்டியருளக்கண்டு ப்ரீதராய், அத்தை அந்யாபதேஶத்தாலே பேசியநுபவிக்கிறார். தமக்குஅவன் பண்ணிக்கொடுத்த பேற்றை வைஷ்ணவர்களெல்லாரும் பெற்றார்களாகப் பேசுகிற இது, அந்யாபதேஶமாவது ; அதுதனக்கு ப்ரயோஜநம் -இங்குள்ளார் "நமக்கு ஆழ்வார்பேறு தப்பாது" என்றிருக்கைக்காக.

ஈடு —பரமயோகிகளுக்குப் பிறக்கக்கடவதான பரபக்தி இவர்க்குப்பிறந்து, தத்ப்ரகாரங்களை இத்திருவாய்மொழியளவும்வர அநுபவித்து, இனி இங்கிருந்தநுபவிக்குமதொன்றில்லாமையாலே "பரமபதத்தேறப் போகவேணும்" என்று மநோரதிக்கிற இவரைத் தம்மிற்காட்டில் சடக்கெனக்கொடுபோகவேணும் என்று விரைகிற ஈஶ்வரன், அங்குத்தை யநுபவத்துக்கீடாம்படி மிகவும் விடாய்பிறக்கைக்காக, தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளைக் கண்ணாலேகண்டாற்போலே விஶதமாக ப்ரகாஶிக்கும்படி பண்ணியருளினான். அதாவது - வேதாந்தங்களில் ப்ரஸித்தமான அர்ச்சிராதிமார்க்கத்தையும், ஶரீரவிஶ்லேஷ ஸமயத்தில்வரும் க்லேஶமெல்லாம் ஆறும்படி தான்வந்து முகங்காட்டும்படியையும், மார்க்கஸ்த்தரான புருஷர்களுடைய ஸத்காரங்களையும், அம்மார்க்கத்தாலேபோய்ப் புகக்கடவ பரமபதத்தையும் நித்யஸூரிகள் வந்து ஆதரிக்கும்படியையும், பிராட்டிமாரும் ஸ்ரீவைகுண்டநாயகனும் எதிரேவந்து ஆதரிக்கும்படியையும் நித்யஸூரிகள் ஸேவிக்கப் பிராட்டிமாரோடே வீற்றிருந்தருளுகிறபடியையும், பரமப்ராப்

சூழ்விசும்பு ப்ரவேஶே ; அடியே தொடங்கி இத்திருவாய்மொழியளவும் இவர்க்கு உண்டான ஆகாரங்கள் பரபக்த்யவஸ்த்தையில் விகாரமானவை என்றருளிச்செய்யாநின்றுகொண்டு, இத்திருவாய்மொழியில் இவர்க்கு உண்டான ஆகாரம் பரஜ்ஞாநாவஸ்த்தையில் விகாரமென்று அருளிச்செய்கிறார் - பரமயோகிகளுக்கு இத்யாதி. உக்தத்தை விவரிக்கிறார் - அதாவது இத்யாதி. அதாவதென்றது - விஶதமாக ப்ரகாஶிக்கும்படி பண்ணியருளினவாறென்னென்னபடி. வேதாந்தங்களில் ப்ரஸித்தமான என்றது - "தேர்ச்சிஷமேவாபிஸம்பவந்தி" இத்யாதியைப்பற்ற. "தேவயாநவ்யாஸவெந்த்த ஶ்ரமமாரஸ்ரிதாஶிந:" "ஸாக்ஷாத்ஷ்டமர்ஹஸ்தே" "அதிஷ்ட்ராதிநாதஸக்ஷயிதே:" "ஶ்ரமக்ராதிஷ்டித" இத்யாதிகளும் இங்கே யநுஸந்தேயம். "ஸமாதிஷ்ட்டாநம்ஹஸீத:" என்றத்தைப்பற்ற - தான்வந்துமுகங்காட்டும்படியையும் என்றது. "தொழுதனருலகர்கள்" என்று தொடங்கி "வாசலில் வானவர் - என்னதிடம்புகுதுக" என்னுமளவும் கடாக்ஷித்து-மார்க்கஸ்த்தரான இத்யாதி. "மாதவன் வைகுந்தம்புகவே" என்றத்தைப்பற்ற - அம்மார்க்கத்தாலே இத்யாதி. "முடியுடைவானவர் முறைமுறையெதிர்கொள்ள" என்றத்தைக் கடாக்ஷித்து - நித்யஸூரிகள் இத்யாதி. "வந்தவரெதிர்கொள்ள" என்றத்தைப்பற்ற - பிராட்டிமாரும் இத்யாதி. "மாமணிமண்டபத் தந்தமில்பேரின்பத்தடியரோடிருந்தமை" என்றத்தைக்

யரான நித்யஸூரிகள்நடுவே தாம் ஆநந்தநிர்ப்பரராயிருக்கும்படியையும் காட்டியருளக் கண்டு ப்ரீதராய், அத்தை அந்யாபதேசத்தாலே பேசி யநுபவிக்கிறார். தம்க்கு அவன் பண்ணிக்கொடுத்தபேற்றை வைஷ்ணவர்களெல்லாரும் பெற்றார்களாகப்பேசின இது - அந்யாபதேசமாவது ; அதுதனக்கு ப்ரயோஜநம் - இங்குள்ளார் "நமக்கும் ஆழ்வார்பேறு தப்பாது" என்றிருக்கைக்காக.

முதற் பாட்டு.

சூழ்விசும்பணிமுகில் தூரியமுழக்கின
ஆழ்கடலலைதிரை கையெடுத்தாடின
ஏழ்பொழிலும்வளமேந்தியஎன்னப்பன்
வாழ்புகழ்நாரணன்தமரைக் கண்டுகந்தே.

ஆ.— திருநாட்டேறப்போகையிலே ப்ரவ்ருத்தரான ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டுகந்து, அசேதநமான மேகங்களுங்கூட, இவர்கள் போகக்கடவிய ஆகாசத்தை யெல்லாம் பூஷித்துக்கொண்டுநின்று தூர்யகோஷத்தைப்பண்ணின; கடல்களாகிறவை திரைகளாகிற கையெடுத்து ஆடின; இப்படி ஸர்வலோகங்களுமங்களமான செயல்களைச் செய்தன என்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், திருநாட்டுக்குப்போக உபக்ரமிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்ட ப்ரீத்யதிசயத்தாலே ஸ்தாவரஜங்கமங்களுக்குப் பிறந்த விக்ருதியை அருளிச்செய்கிறார்.

[சூழ்விசும்பென்று தொடங்கி] - இடமுடைத்தானஆகாசத்தில் அழகிய மேகங்கள் தூர்யகோஷத்தைப் பண்ணிற்றின; ஆழ்கடல் அலையாநின்றிருந்துள்ள திரையாகிற கையையெடுத்துக்கொண்டு ஆடிற்றின. [ஏழ்பொழிலும் வளமேந்திய]-ஸப்தத்வீபங்களும் புதுக்கணித்தின; உபஹாரங்களை யரித்தாரென்றுமாம். [என்னப்பனென்று மேலுக்கு] — எனக்குப் பரமபந்துவாய் ஆஶ்ரிதரெல்லாம் உஜ்ஜீவிக்கும் புகழை யுடைய நாராயணன் தமரைக்கண்டு உகந்து.

ப —முதற்பாட்டில், அர்ச்சிராதிமார்க்க கமநத்தில் ஒருப்பட்டவர்களாய் போக்யகுணபூர்ணனை ஸர்வேஶ்வரனுடைய ஶேஷபூதரான பாகவதரைக்கண்டு சராசராத்மகமான ஜகத்துக்கு உண்டான ப்ரீதிவிகாரத்தை யருளிச்செய்கிறார்.

என்னப்பன்-எனக்கு அஸாதாரணபந்துவாய், வாழ்புகழ்- ஆநந்தாவஹமான குணப்ரதையையுடைய, நாரணன்தமரை - நாராயணனுக்கு அஸாதாரணபந்துக்களான ஶேஷபூதரை, கண்டுஉகந்து-கண்டு ப்ரியப்பட்டு, சூழ்விசும்பு - ஸர்வப்ரதேசத்திலும்சூழ்ந்த ஆகாசத்திலே, அணிமுகில் - திரண்டுதோன்றினமேகங்களானவை,

---

கடாக்ஷித்து - நித்யஸூரிகள் ஸேவிக்க இத்யாதியும், பரமப்ராப்யரான இத்யாதியும். அந்யாபதேசமாவதேதென்ன - தமக்கு அவன் இத்யாதி. "ஆழியான்தமர்" "மாதவன்தமர்" இத்யாதியாலே - ஸ்ரீ வைஷ்ணவர்களைச் சொல்லுகையாலே, அந்யாபதேசமென்றபடி. அந்யாபதேசத்தாலே சொல்லுகிறதுக்கு ப்ரயோஜநமேதென்ன - அதுதனக்கு இத்யாதி.

தூரியம் முழக்கின - தூர்யகோஷத்தைப்பண்ணிற்றின; ஆழ்கடல் - அகாதமான கடல்களானவை, அலை திரை - அலைந்துவருகிற திரையை, கையெடுத்தாடின - கையாகவெடுத்து ஆடிற்றின; ஏழ்பொழிலும் - ஸப்தத்வீபங்களும், வளம் - உபஹாரரூபமான நல்லவஸ்துக்களை, ஏந்திய - ஏந்திற்றின. வளமென்று - புதுக்கணிப்பாகவுமாம்.

இ.—முதற்பாட்டில், பரமபதத்துக்குப் போகஉபக்ரமிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்ட ப்ரீத்யதிசயத்தாலே ஸ்தாவரஜங்கமங்களுக்குண்டான விக்ருதியை அருளிச்செய்கிறார்.

[சூழ்விசும்பு] - பூமியைச் சூழும்படி இடமுடைத்தான ஆகாசத்திலே. [அணிமுகில்] - ஆபரணமான முகிலென்னுதல், ஆகாசப்பரப்படங்கலும் அணியப்பட்ட முகில் என்னுதல்; அழகிய முகிலென்னுதல். [தூரியம்முழக்கின] - தூர்யகோஷத்தைப் பண்ணிற்றின. [அணிமுகில் தூரியம் முழக்கின] - ஒப்பித்துநின்று கொட்டுவாரைப் போலே; "ஜீமூதா: ...". இவன் போக்குக்கடியான அவன் வரவிலே பிறந்தவிக்ருதியிறே இது; இவன்தானே போகப்புக்கால் சொல்லவேண்டாவிறே. அவற்றுக்கு அபிமாநிகளான இந்த்ர வருண பர்ஜந்யரைச் சொல்லிற்றாகவுமாம். [ஆழ்கடல்]- எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கவற்றான அளவுடைய கடல், ஹர்ஷம் பிறந்து அலையாநின்றிருந்துள்ள திரையாகிற கையையெடுத்துக்கொண்டு கூத்தாடிற்றின. [ஏழ்பொழிலும் வளமேந்திய] - ஸப்தத்வீபங்களும் புதுக்கணித்தன: உபஹாரங்களை யரித்தனவென்றுமாம். இதெல்லாம் ஆரைக் கண்டென்னில், - [என்னப்பன்] - எனக்கு பரமபந்துவானவன். இவர்களோடு நிருபாதிக ஸம்பந்தமவனுக்குண்டானால் அவனோடு ஸம்பந்தமுள்ளவை யெல்லாவற்றுக்கும் ஆதரிக்கவேண்டியிருக்குமிறே; ராஜபுத்ரன் போகாநின்றால் ராஜஸம்பந்தமுடையார்க் கெல்லாம் அங்கீகரிக்கவேண்டுமாபோலே. [வாழ்புகழ் நாரணன்] - ஆச்ரிதரை வாழும்படி பண்ணவற்றான கல்யாணகுணங்களையுடைய ஸர்வேச்வரன். அவன் தன்னைக் கண்டோவென்னில்; - [அவன் தமரைக்கண்டு] - அவன் கேட்குமென்னும் பீதியாலேயோ வென்னில், - [உகந்தே] - ப்ரீதிப்ரேரிதராய்.

ஈடு.—முதற்பாட்டு. பரமபதத்துக்குப்போக உபக்ரமிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்ட ப்ரீத்யதிசயத்தாலே ஸ்த்தாவரஜங்கமங்களுக்கு உண்டான விக்ருதியை யருளிச்செய்கிறார்.

[சூழ்விசும்பு] - பூமியைச்சூழும்படி இடமுடைத்தான ஆகாசத்திலே. [அணிமுகில்] - ஆபரணமான முகிலேன்னுதல், ஆகாசப்பரப்படங்கலும் அணியப்பட்ட முகிலென்னுதல். [தூரியம்முழக்கின] - தூர்யகோஷத்தைப் பண்ணிற்றின. [சூழ்விசும்பு இத்யாதி-] காந்தப்ப ரோப்பித்துநின்று பெரிய மண்டபங்களிலேநின்று கோட்டுமோபோலே

முதற்பாட்டு.—சூழ்விசும்பு இத்யாதி. "வளமேந்திய" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - பரமபதத்துக்கு இத்யாதி. ஸ்த்தாவரம் - கடல். ஜங்கமம் - முகில்.

விசும்பு - விசும்பிலே. ஆபரணமான - விசும்புக்கு ஆபரணமானவென்றபடி. அணியப்பட்ட - வ்யாபிக்கப்பட்ட. "அணி" என்று - ஒப்பனையாக மூன்றாமர்த்தம். ஆகாசத்திலே அலங்க்ருதமான மேகங்கள் கர்ஜிக்கிறபோதெப்படி யிருக்கிறதென்ன-காந்தப்பர் இத்யாதி. காந்

காணும், இவையிருக்கிறது; "மந்தம்ஜகர்ஜுர்ஜலதா:" (மந்தம்ஜகர்ஜுர்ஜலதா:). இவன் போக்குக்கடியான அவன்வரவிலேபிறந்த விக்ருதியிறேயிது; இவன் தான் போகப்புக்கால் சொல்லவேண்டாவிறே. அவற்றுக்கு அபிமாநிகளான இந்த்ரவருணபர்ஜந்யங்களைச் சொல்லிற்றாகவுமாம். [ஆழ்கடல்இத்யாதி]-எல்லாவற்றையும் தன்னுள்ளே யடக்கவற்றான அளவுடையகடல், தைர்யபங்கம்பிறந்து அலையாநின்றுள்ள திரையாகிற கையையெடுத்துக் கூத்தாடிற்றின. [எழ்பொழிலும்வளமேந்திய] - ஸப்தத்வீபங்களும் புதுக்கணித்தன: உபஹாரங்களை யரித்தன வென்றுமாம். இதெல்லாம் ஆரைக்கண்டென்னில் - [என்னப்பன்] - எனக்குப் பரமபந்துவானவன். இவர்களோடு நிருபாதிக ஸம்பந்தம் அவனுக்கு உண்டானால், அவனோடேஸம்பந்தமுள்ளவையெல்லாவற்றுக்கும் ஆதரிக்கவேண்டியிருக்குமிறே ; ராஜபுத்ரன் போகாநின்றால் ராஜஸம்பந்தமுடையார்க்கெல்லாம் அங்கீகரிக்கவேண்டுமோபோலே. [வாழ் புகழ்நாரணன்] - ஆச்ரிதர்வாழும்படி பண்ணவற்றான கல்யாணகுணங்களையுடைய ஸர்வேச்வரன். அவன் தன்னைக் கண்டோர்வேன்னில்,— [அவன்தமரைக்கண்டு] - அவன்கேட்டு மேன்னும் ப்ரீதியாலேயோ வென்னில், [உகந்தே] - ப்ரீதிப்ரேரிதராய். (க)

இரண்டாம் பாட்டு.

நாரணன்தமரைக்கண்டுகந்து நல்நீர்முகில்
பூரணபொற்குடம் பூரித்ததுஉயர்விண்ணில்
நீரணிகடல்கள்நின்றார்த்தனநெடுவரைத்
தோரணம்நிரைத்துஎங்குந்தொழுதனருலகே

அ.—(நாரணன்.) - நாரணன்தமரைக்கண்டு மேகங்கள்உகந்தன ; ஆகாசசரரான தேவாதிகள் ஆகாசத்திலே பூர்ணகும்பங்களைப் பூரித்தார்கள் ; நீரணிகடல்கள் நின்றார்த்தன ; நெடுவரை போலேயிருந்த தோரணம்நிரைத்தெங்கும் தொழுதனர் உலகர்கள் என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், மேலுண்டான லோகங்கள் பண்ணின ஸத்காரங்களை அருளிச்செய்கிறார்.

தப்பர் - கந்தர்வர்கள். ஒரு சேதநன் போம்போதுஇதெல்லாம் கூடுமோவென்ன-மந்தம் இத்யாதி. "ஸ்யராகைஷ்சவிராஜயராஜ்ஞாதேஜநாரதஜே. மந்தம்ஜகர்ஜுர்ஜலதா:ஸுஷ்வ்ருஷுஸ்ஸுவ்ருஷ்டிஜ" இதி பஞ்சமேஸ்மோ த்ருதீயே. சேதநன்போம்போது இதெல்லாம் கூடுமென்னுமத்தை இசைவிக்கிறார் - இவன்போக்குக்கு இத்யாதி. பாட்டுக்கு அவதாரிகாந்தரம் அவற்றுக்கு இத்யாதி. 'விக்ருதியை யருளிச்செய்கிறார்' என்றவாக்யாநந்தரம், இவ்வாக்யத்தை யநுஸந்திப்பது. அவற்றுக்கு என்றது - கடலுக்கும் முகிலுக்கும்என்றபடி. கடலுக்கபிமாநி - வருணன். "முகில்" என்றத்தாலே - இந்த்ரபர்ஜந்யர்களைச் சொல்லுகிறது. "வளம்" என்றது - உபஹாரமும் ஸம்பத்தையும் சொல்லும். த்விதீயார்த்தத்துக்கு, தத்ரஸ்த்தரைச் சொல்லுகிறது. இத்தால் ஹாவம்-இவர்களோடு இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - ராஜபுத்ரன் இத்யாதி. 'என்னப்பன்' என்று தொடங்கி, 'உகந்து - சூழ்விசும்பணிமுகில்' இத்யாரப்ய, 'வளமேந்திய' இத்யந்வய:. (க)

[நாரணனென்று தொடங்கி] - அழகியநீர்முகில்கள் நாரணன் தமரைக்கண்டு உகந்தன; அவைதானே பூர்ணகும்பங்களாயின. ஆகாசசரரான தேவர்களாலே ஆகாசமெல்லாம் பூர்ணகும்பம் வைக்கப்பட்டதென்றுமாம். [நீரென்று தொடங்கி] - நீராலே அணியப்பட்ட கடல்கள் ஹர்ஷத்தாலே நிரந்தரமாக ஆர்த்தன; லோகங்களிலுள்ளார் எங்கும் நெடுவரைபோலேயிருக்கும் தோரணங்களை நிரைத்துத் தொழுதார்கள்.

ப — அநந்தரம், நிருபாதிகசேஷியான நாராயணனுக்கு சேஷபூதரானவர்களைக் கண்டு லோகத்தார் ஸத்கரித்த ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

நாரணன் தமரைக்கண்டு — நிருபாதிக சேஷியான நாராயணனுக்கு சேஷபூதரானவர்களைக்கண்டு, உகந்து - உகப்பையுடைத்தாய், நல்நீர்முகில் - சுத்தமான ஜலத்தாலே பூர்ணமான மேகமானது, உயர் - (த்வாரவேதிகைகளிற்போலே) உயர்ந்த, விண்ணில் - ஆகாசத்திலே, பூரணம் - பூர்ணமான, பொற்குடம் - பொற்குடங்களாக, பூரித்தது - நிறைத்தது; நீரணி-நீரை வஹிக்கிற, கடல்கள் - கடல்களானவை, நின்று - (ஒருபடிப்பட்டு) நின்று, ஆர்த்தன - கோஷித்தன; நெடுவரை - நெடுவரைகளாகிற, தோரணம்நிரைத்து - தோரணங்களை நிரைத்து, உலகு - உலகிலுள்ளார், எங்கும் -, தொழுதனர் - ; முகிலென்கிற ஒருமை - ஜாதிபரம். இவ்விரண்டுபாட்டாலும் - அந்தரிக்ஷபர்யந்தமான ஸர்வலோகமானது உகந்துஆதரித்தபடியை ப்ரதர்ஶிப்பித்தாராய்த்து. உலகமென்று - லோகப்ரதாநரை லக்ஷிக்கிறது.

இ.—இரண்டாம்பாட்டில், மேலுண்டான லோகங்கள் பண்ணின ஸத்காரங்களை அருளிச்செய்கிறார்.

[நாரணன் தமர்இத்யாதி] - நிருபாதிக சேஷியானவனுடைய அடியாரைக் கண்டு நல்ல நீரையுடைத்தான மேகங்களானவை உகப்பாலே, உயர்ந்த ஆகாசத்திலே பூர்ண கும்பங்களாகச் சமைக்கப்பட்டன: முற்படக் கண்டுகந்தன; பின்பு அவைதானே பூர்ணகலசங்களாய்த்தின என்கை. "ஒருகால் தூர்யகோஷத்தைப் பண்ணினோம்" என்றிருக்கிறனவில்லை. ஆகாச சரரான தேவர்களாலே ஆகாசமெங்கும் பூர்ணகும்பம் வைக்கப்பட்டதென்றுமாம். [நீரணிகடல் இத்யாதி] - நீராலே அணியப்பட்ட கடல்கள் "ஒருகாலாடினோம்" என்றிராதே, ஹர்ஷத்தாலே நிரந்தரமாக ஆர்த்தன. [நெடுவரை இத்யாதி] - அவ்வோலோகங்களிலுள்ளார் நெடியவரைபோலேயிருந்துள்ள தோரணங்களைநட்டுத் தாங்களும் தொழுதார்கள். 'உலகென்று' லோகத்திலுள்ளாரைச் சொல்லுகிறது; "[illegible]" என்கிறபடியே ஹர்ஷத்தாலே எல்லா அடிமைகளும் செய்யாநின்றார்கள்.

ஈடு:—இரண்டாம்பாட்டு. மேலுண்டான லோகங்கள் பண்ணின ஸத்காரங்களை அருளிச்செய்கிறார்.

[நாரணன் இத்யாதி] - நிருபாதிகசேஷியானவனுடையாரைக்கண்டு, நல்ல நீரையுடைத்தான மேகங்களானவை, உகப்பாலே, உயர்ந்த ஆகாசத்திலே பூர்ணகும்

இரண்டாம்பாட்டு.—நாரணன் இத்யாதி. "நெடுவரைத்தோரணம் நிரைத்தெங்கும் தொழுதனருலகே" என்றதைக் கடாக்ஷித்தவதாரிகை - மேலுண்டான இத்யாதி.

"நன்னீர்முகில் - உகந்து - உயர்விண்ணில் - பூரணபொற்குடம் பூரித்தது" என்றது

பங்களாகச் சமைக்கப்பட்டன. முற்படக் கண்டு உகந்தன, பின்பு அவைதானே பூர்ண கும்பங்களாய்த்தின என்கை. ''ஒருகால் தூர்யகோஷம் பண்ணிறேமிறே'' என்றிருக்கிறனவில்லை. ஆகாஶசரரான தேவர்களாலே ஆகாசமெல்லாம் பூர்ணகும்பம் வைக்கப்பட்டதென்றுமாம். [நீரித்யாதி] - நீராலே யணியப்பட்ட கடல்கள், '' ஒருகாலாடிறேம்'' என்றிராதே, ஹர்ஷத்தாலே நிரந்தரமாக ஆர்த்துக்கொண்டன. [நெடுவரை இத்யாதி] - அவ்வோலோகங்களிலுள்ளார், நெடியவரைபோலேயிருந்துள்ள தோரணங்களை நட்டுத் தாங்களும் தொழுதார்கள். *உலகமென்பது உயர்ந்தோரையிறே. அங்குள்ளாரைச்சொன்னபடி. ''ஸத்ரசாமரபாணிஸ்து'' (சத்ரசாமரபாணிஸ்து) என்கிறபடியே ஹர்ஷத்தாலே எல்லாவடிமைகளும் செய்யாநின்றார்கள். (உ)

மூன்றாம் பாட்டு.

தொழுதனர்உலகர்கள் தூபநல்மலர்மழை
பொழிவனர் பூமியன்றளந்தவன்தமர்முன்னே
எழுமினென்று இருமருங்கிசைத்தனர்முனிவர்கள்
வழியிதுவைகுந்தற்கென்று வந்தெதிரே.

ஆ—(தொழுதனர்உலகர்கள்.) - பூமியன்றளந்தவன்தமர்முன்னே தூபநன்மலர்மழைபொழிவனர், ஸ்ரீவைகுண்டத்தேறப் போவார்க்கு வழியிதுவென்று எதிரே வந்து ''இங்ஙனே எழுந்தருளவொண்ணாதோ'' என்று இருமருங்கும் முனிவர்கள் நின்று இசைத்தனரென்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், ஆதிவாஹிக லோகங்களிலுள்ளார் திருநாட்டுக்கு நடக்கிற ஸ்ரீவைஷ்ணவர்கள் எதிரேவந்து புஷ்பவர்ஷாதிகளைப் பண்ணிக்கொண்டாடுகிறபடியை அருளிச்செய்கிறார்.

[பூமியன்றளந்தவன் தமர்] - திருவுலகளந்தருளினவன் குணத்திலேயகப்பட்டு அடிமைபுக்குத் திருநாட்டுக்குப் போகிற ஸ்ரீவைஷ்ணவர்கள். [எழுமினென்று மேலுக்கு] - ஸ்ரீவைகுண்டத்துக்குப் போவார்க்கு வழி இதுவென்று எதிரேவந்து

வயித்தர்த்தம் - நல்லநீரை இத்யாதி. சமைக்கப்பட்டன - சமைந்தனவென்றபடி. ''உகந்து'' என்றதுக்கர்த்தாந்தரம் - முற்பட இத்யாதி. முன்பு தூர்யகோஷம்பண்ணின அபோராதோவென்ன - ஒருகால் இத்யாதி. '' பூரணபொற்குடம்பூரித்தது'' என்றதுக்கர்த்தாந்தரம் - ஆகாஶசரரான இத்யாதி. ஆகாஶசாரிகள்உகந்து பூர்ணகும்பங்களாகப் பண்ணினார்களென்றபடி. பூரித்தது-நிறைத்தது. பூரணபொற்குடம் - பூர்ணகும்பங்களாகவென்றபடி. அணியப்பட்ட - செறியப்பட்ட. ''நின்று'' என்றதுக்கர்த்தம் - நிரந்தரமாக என்று. ''தொழுதனர்'' என்றதுக்குச்சேர, உலகர்கள் என்ன வேண்டாவோவென்ன - உலகமென்பது இத்யாதி. உயர்ந்தோரை - உத்க்ருஷ்டரை. உயர்ந்தோரன்றிக்கே தத்ரஸ்தரெல்லாரையும் சொல்லவுமாமென்கிறார் - அங்குள்ளாரைச் சொன்னபடி என்று. கீழ்வாக்யவிவரணமாய், ஏகார்த்தமாதல். ''தோரணம் நிரைத்து, தொழுதனர்'' என்ற பதத்வயத்துக்கும் ஸாவம் - ஸத்ர இத்யாதி. ''ஸத்ரசாமரபாணிஸ்து லக்ஷ்மணோ ராமஸோதர: । ஜாஜ்வல்யமாநவபுஷா கிரிரங்கோ யதா ஸ்தித:'' இத்யயோத்யாகாண்டே.(உ)

இரண்டருகும் நின்று "எழுந்தருளலாகாதோ?" என்றார்கள். [முனிவர்கள்] - முனிவர்களென்றது வாங்நியமம் தவிர்ந்தமைக்கு ஸூசகம்.

ப.—அநந்தரம், அநர்ஹதாபாதகனை த்ரிவிக்ரமனுக்கு சேஷபூதரானவர்கள் ஸந்நிதியிலே ஆதிவாஹிகலோகத்திலுள்ளார் ஸத்கரித்த ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

அன்று - மஹாபலி "என்னது" என்றபிமானித்த அன்று, பூமி அளந்தவன் - பூமியை யநர்ஹமாம்படி யளந்தவனுடைய, தமர் - சேஷபூதருடைய, முன்னே - ஸந்நிதியிலே, தூபம் - தூபபூர்வகமாக, நல்மலர்மழை — நன்றான புஷ்பவர்ஷத்தை, பொழிவனர் - பொழிவாராய்க்கொண்டு, உலகர்கள் — அவ்வோலோகங்களிலுள்ளார், தொழுதனர் - தங்கள்சேஷத்வாநுரூபமாக அஞ்ஜலிபந்தம்பண்ணினார்கள், முனிவர்கள் - அந்தலோகங்களில் வாங்நியதியுடையரான முனிவரானவர்கள், (அந்நியதியைத் தவிர்ந்து), வைகுந்தர்க்கு - ஸ்ரீவைகுண்டத்துக்குப் போமவர்களுக்கு, வழி இதுவென்று - வழி இதுவென்றுசொல்லி, எதிரே வந்து -, எழுமின் என்று - "எழுந்தருளலாகாதோ" என்று, இருமருங்கு - இரண்டுபக்கத்திலும் நின்று, இசைத்தனர் - ஸாதரமாகச் சொன்னார்கள்.

இ.—மூன்றாம்பாட்டில், ஆதிவாஹிக லோகங்களிலுள்ளார் எதிரேவந்து புஷ்பவர்ஷாதிகளைப் பண்ணிக் கொண்டாடுகிறபடியை அருளிச்செய்கிறார்.

[தொழுதனருலகர்கள்] - ஆதிவாஹிக லோகங்களிலுள்ளார் "கைபடைத்த ப்ரயோஜநம் பெற்றோம்" என்று தொழுதார்கள். [தூபம் இத்யாதி] - தூபத்தையும் நல்ல மலர்மழையையும் ப்ரயோகித்துத் தொழாநின்றார்கள். [பூமியன்றளந்தவன்தமர் முன்னே] - திருவுலகளந்தருளின ஸ்ரீவாமனன் செயலுக்குத் தோற்று அடிமைபுக்கவர்களென்றாய்த்து அவர்கள் ஆதரிக்கிறது. அவன் திருவுலகளந்தருளின நினைவை ஸப்ரயோஜநமாக்கின ரென்றாய்த்து அவர்கள் ஆதரிக்கிறது. [எழுமினென்றிருமருங்கிசைத்தனர் முனிவர்கள்] - "இங்கே யெழுந்தருளவேணும்" என்று இரண்டருகும் நின்று சொன்னார்கள் முனிவர்கள். முனிவர்களென்கிறது - வாங்நியமம் தவிர்ந்தமைக்கு ஸூசகம். மௌநத்துக்கு விஷயம் புறம்பேயிறே என்றிருந்தார்கள். [வழியிது வைகுந்தர்க்கென்று வந்தெதிரே] - பரமபதத்துக்குப் போவார்க்கு வழியிதுவென்று எதிரே வந்து தந்தாமுடைய எல்லையிலே வந்தால் ஆதரிக்கிறோமென்றிருக்கையன்றியே எதிரே வந்தாதரித்தார்கள். [பூமியன்றளந்தவன்தமர் முன்னே] - தூபநன்மலர்மழை பொழிவனராய்க்கொண்டு - முனிவரான உலகர்கள் - தொழுதனர்; வைகுந்தர்க்கு வழியிது என்று எதிரேவந்து எழுமினென்று இருமருங்கிசைத்தனர்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. ஆதிவாஹிகலோகங்களிலுள்ளார் எதிரேவந்து புஷ்பவ்ருஷ்டியைப்பண்ணிக்கொண்டாடுகிறபடியை யருளிச்செய்கிறார்.

[தொழுதனருலகர்கள்] - ஆதிவாஹிகலோகங்களிலுள்ளார், கைபடைத்தப்ரயோஜநம் பெற்றோம்" என்றுதொழுதார்கள். தூபத்தையும் நல்லமலர்மழையையும் ப்ர

மூன்றாம்பாட்டு.—தொழுதனர் இத்யாதி. "உலகர்கள்" என்று தொடங்கி "இசைத்தனர்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - ஆதிவாஹிக இத்யாதி.

புநராலோசனத்துக்கு பாவம்-ஆதிவாஹிக இத்யாதி. தூபத்தையும் நன்மலர் மழையையும் பொழிவனராய்க்கொண்டு தொழுதனரென்றபடி. கீழையும் கடாக்ஷித்து "பூமியன்றளந்த

யோகித்துத் தொழாநின்றார்கள். [பூமியன்றளந்தவன்தமர்முன்னே] - ஸ்ரீவாமநனுய்த் திருவுலகளந்தருளின செயலுக்குத் தோற்று அடிமைபுக்கவர்களென்றுய்த்து, அவர்கள் ஆதரிக்கிறது. "மூவடிமண்கொண்டளந்தமன்னன் சரிதைக்கேமாலாகிப்பொன்பயந்தேன்" என்னுமவர்போல்வாருண்டே. அவன் திருவுலகளந்தருளினநினைவை ஸப்ரயோஜநமாக்கினவர்களென்றுய்த்து அவர்கள் ஆதரிக்கிறது. [எழுமினென்றுஇருமருங்கிசைத்தனர் முனிவர்கள்] - "இங்கேயெழுந்தருளவேணும்" என்று இரண்டருகும்நின்று சொன்னார்கள். முனிவர்களென்றது - வாங்நியமம் தவிர்ந்தமைக்குஸூசகம்; மௌநத்துக்குவிஷயம் புறம்பேயிறே என்றிருந்தார்கள். [வழியிதுவைகுந்தர்க்கென்று வந்தெதிரே] - பரமபதத்துக்குப்போவார்க்கு வழியிதுவென்று எதிரேவந்துசொன்னார்கள். "ஜமதஸ்ஸாஸ்வதே" (ஜகதஸ்ஸாஸ்வதே) என்று விவக்ஷிதரடையப் போகக்கடவதாய்க்கிடக்கிற வழி, இன்று இதுண்டாகிறதன்றே. "ஸாமவத விஷயத்தில் கிஞ்சித்கரித்து நம் ஸத்தையுண்டாகவேணும்" என்று எதிரேதந்தாமுடைய எல்லைகளைக்கடந்து வந்தாதரித்தார்கள். [வைகுந்தர்க்கு] – தேசாந்தரமதனை ராஜா ஸ்வதேசத்திலே பகுமாபோலே, அங்கு நின்றும் பிறிகதிர்ப்பட்டுப் போந்தாராயிருக்கிறபடி. பூமியன்றளந்தவன்தமர்முன்னே - தூபநன்மலர்மழைபொழிவனராய்க் கொண்டு - முனிவரான - உலகர்கள் - தொழுதனர்; வைகுந்தர்க்கு-வழியிது - என்று-எதிரே-வந்து-எழுமின் என்றுஇருமருங்கு இசைத்தனர்.

வன்றமர்" என்றதுக்கு ஸாவம் - ஸ்ரீவாமநன் இத்யாதி. இச்செயலுக்குஅப்படி தோற்றிருப்பாருண்டோவென்ன - மூவடி இத்யாதி. மாலாகி - வ்யாமுக்தையாய். பொன்பயந்தேன் - விவர்ணையானேன். திருமொழி, "முன்னம் குறளுருவாய்" இத்யாதி. ஷலிதம் - அவன் திருவுலகு இத்யாதி. இச்செயலுக்குத் தோற்று ஆரேனும் அடிமைபுக்கு உஜ்ஜீவிப்பர்களோவென்னும் நினைவாலேயாய்த்து, அவன் திருவுலகளந்தருளிற்று; இவர்கள் அப்படிசெய்தால் அவன்நினைவுஸப்ரயோஜநமாமென்றபடி. இசைக்கை - சொல்லுகை. "முனிவர்கள்" என்று விசேஷித்து, "இசைத்தனர்" என்றதுக்கு ஸாவம் - முனிவர்களென்றது இத்யாதி. முனிவரானால் வாங்நியமம் தவிராதோவென்ன - மௌநத்துக்கு இத்யாதி. "ஜனஸ்யேஹ ஸாஸ்த்ரவிதோவிஷயேவ பஸூமத: । ஸம்பாஷணாதிவர்ஜநம் தஸ்ய க்ருத்ஸ்நாநுஸ்ரவு" என்னக்கடவதிறே. வைகுந்தர்க்கு - வைகுந்தம்புகுவார்க்கு. ப்ரஸித்தமான மார்க்கத்தை இவர்கள் சொல்லுகிறதென்னென்ன - ஜமத: இத்யாதி. 'ஸாக்ஷுக்ருஷ்ண கதீஹ்யேதே ஜகதஸ்ஸாஸ்வதே மதே । ஏகயா யாத்யநாவ்ருத்திமந்யயாவர்த்ததே புந:" இதி ஸ்ரீபகவத்கீதாயாம் அஷ்டமே. கீழே "வைகுந்தர்க்கு" என்றதுக்கு - வைகுந்தம் போவார்க்கு என்றருளிச்செய்து, இங்கே வைகுந்தத்திலுள்ளவர்களென்று விவக்ஷித்து, இங்கு நின்றும் போகிறவர்களை இங்ஙன்சொல்லுகிறதென்னென்ன - தேசாந்தர இத்யாதி. 'பூமியன்றளந்தவன்றமர்முன்னே - தூபநன்மலர்மழைபொழிவனராய்க்கொண்டு - முனிவரான - உலகர்கள் தொழுதனர், வைகுந்தர்க்கு - வழியிது - என்று எதிரே - வந்து-எழுமினென்றுஇருமருங்கிசைத்தனர்' இத்யந்வய:. (ரு)

நான்காம் பாட்டு.

எதிரேதிர் இமையவர் இருப்பிடம்வகுத்தனர்
கதிரவரவரவர் கைந்நிரைகாட்டினர்
அதிர்குரல்முரசங்கள் அலைகடல்முழக்கொத்த
மதுவிரிதுழாய்முடி மாதவன்தமர்க்கே.

ஆ—(எதிரெதிர்.) - மதுவிரிதுழாய்முடிமாதவன்தமர்க்கு, இவர்கள் ஒரு கால் இங்கே பர்யவஸிக்கப்பெறுவதுகாண்'' என்னும் ஆசையாலே, இமையவர் எதிரெதிர் இருப்பிடம்வகுத்தனர் அர்ச்சிராத்யாதிவாஹிக கணங்கள், ''பார்த்தருளீர், பார்த்தருளீர்'' என்றென்று கைந்நிரைகாட்டினர்; கடலிரைத்தாற்போலே முரவபண வாதிவாத்யங்கள் ஸர்வலோகங்களும் அவிபூரிதமாம்படி முழக்கப்பட்டன என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், மேலில் லோகங்களில் தேவாதிகள் ஸ்ரீவைஷ்ணவர்கள் போகிறவழிகளிலே தங்குகைக்குப் பார்த்தபார்த்த இடமெல்லாம் தோப்புக்கள் பண்ணியும், வாத்யாதிகோஷங்களைப்பண்ணியும் கொண்டாடுகிறபடியை யருளிச்செய்கிறார்.

[கதிரவரென்று தொடங்கி] - அர்ச்சிராதிகளான அவ்வவ ஆதிவாஹிக கணங்கள் 'பார்த்தருளீர், பார்க்கருளீர்' என்று கைகளை நிரையே காட்டினார்கள். [மதுவென்று தொடங்கி] - ஸ்ரீயப்பதியினுடைய அழகிலே அகப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இவர்களை எதிர்கொள்ளுகைக்குப் பெரிய பிராட்டியாரோடே ஒப்பித்தருளுகிறபடி யென்றுமாம்.

ப.—அநந்தரம், போக்யதாபூர்ணனை ஸ்ரீயபதியினுடைய சேஷபூதரைக்கண்டு தேவலோகத்திலுள்ளார் ஸத்கரித்தபடியை யருளிச்செய்கிறார்.

மது விரி - மதுவைவிகஸிக்கிற, துழாய் முடி - திருத்துழாயைத் திருமுடியிலேயுடைய, மாதவன்தமர்க்கு-ஸ்ரீயப்பதிக்கு சேஷபூதரானவர்களுக்கு, இமையவர் - அநிமிஷராய்க்கொண்டு, (தேவர்கள்), எதிரெதிர் - இவர்கள் போகிறவழிக்குமுன்னே, இருப்பிடம் - வாஸஸ்தாநமான உபகார்யைகளை, வகுத்தனர் - சமைத்தார்கள்; கதிரவர் - த்வாதசாதித்யர்களும், அவரவர் - தந்தாமடைவிலே, (''ரஸ்மிபிரேஷ்யு ரூசு கதே'' என்கிறபடியே), கை நிரைகாட்டினர் - கிரணங்களாகிற கைகளை நிரையாகக் கொடுத்தார்கள்; முரசங்கள் - அவர்கள் ப்ரவர்த்திப்பித்த முரசங்கள், அதிர்குரல் - அதிருகிற குரலானவை, அலைகடல் - அலைகிறகடலில், முழக்கொத்த-முழக்கொத்தன.

இ—நாலாம்பாட்டில், மேலில் லோகங்களில் தேவாதிகள் இவர்கள்போகிற வழிகளிலே தங்குகைக்குப் பார்த்த பார்த்தவிடமெல்லாம் தோப்புக்கள் பண்ணியும் வாத்யாதி கோஷங்களைப் பண்ணியும் கொண்டாடும்படியை அருளிச்செய்கிறார்.

[எதிரெதிர் இமையவர் இத்யாதி] - பார்த்த பார்த்தவிடமெங்கும், ''இவர்கள் இங்கே தங்கிப்போவார்களோ, இங்கே தங்கிப்போவார்களோ'' என்னும் நசையாலே தேவர்கள் தோப்புக்கள் சமைத்தார்கள். இமையவரென்று ஸ்வபாவகதநமன்று; தோப்புக்கள் சமைக்கையிலுள்ள த்வரையாலே கண்விழித்திருக்கிறபடி. ப்ரவாஹரா

யிருக்கிறபடியென்கை. [கதிரவரவரவர் இத்யாதி] - அர்ச்சிராதிகளாயுள்ள அவ்வோ ஆதிவாஹிக கணங்கள், "பார்த்தருளீர் பார்த்தருளீர்" என்று கைகளை நிரையேகாட்டினார்கள். [அதிர்குரல் இத்யாதி] - அதிரா நின்றுள்ள குரலையுடைய முரசங்கள். கடல்களார்ந்து முழங்கினாற்போலே முழங்காநின்றன. அங்குத் தங்குகையிலுண்டான ஆதராதிசயந் தோற்ற வாத்யகோஷங்களைப் பண்ணினார்கள். [மதுவிரிதுழாய்முடி]- ஸ்ரிய: பதியுடைய ஒப்பனை அழகிலேயகப்பட்டு அடிமைபுக்கவர்களுக் கென்னுதல்: இவர்களை எதிர்கொள்ளுகைக்குப் பிராட்டியோடே ஒப்பித்தருளுகிறபடியைச் சொல்லுதல்.

ஈடு.—நாலாம்பாட்டு. †மேலுள்ளலோகங்களில்தேவர்கள், இவர்கள், போகிற வழிகளிலே தங்குகைக்குத் தோப்புக்கள் சமைத்தும் வாத்யாதிகோஷங்களைப்பண்ணியும் கொண்டாடுகிறபடியை அருளிச் செய்கிறார்.

[எதிரெதிரித்யாதி] - பார்த்தபார்த்தவிடமெங்கும், "இவர்கள் இங்கே தங்கிப் போவர்களோ? இங்கே தங்கிப்போவர்களோ?" என்னும் நசையாலே, தேவர்கள் தோப்புச்சமைத்தார்கள். இமையவரென்று - ஸ்வபாவகதனமன்று; தோப்புச்சமைக்கையிலுண்டான த்வரையாலே கண்விழித்திருக்கிறபடி ; இளையபெருமாள் அடிமைசெய்கைக்கு உறுப்பாக உறங்காதிருந்தாற்போலே. இவர்கள் அங்கே புக்குத்தங்குகிறார்களன்றிறே, தந்தாம் ஸ்வரூபலாபத்துக்குக் கிஞ்சித்கரிக்கிறபடியிறே ; ராஜாக்களொருகால் கண்டுசிரித்து "அழகிது" என்று போகைக்காக மாநாவிசமைப்பாரைப் போலே. [கதிர் இத்யாதி] - ஆதித்யர்கள், நிலைவிளக்குப்போலே "இங்ஙனே யெழுந்தருள, இங்ஙனே யெழுந்தருள: பார்த்தருள, பார்த்தருள" என்று கைகளை நிரையே காட்டினார்கள். அர்ச்சிராதிகளான ஆதிவாஹிக கணங்களாகவுமாம் (கதிரவர் - தேஜோவிசிஷ்டர்.) [அதிர் இத்யாதி] - அங்கே கால்தாழ்வர்களென்று, அதுகேளாதபடி, அதிராநின்றுள்ள த்வனியையுடைய முரசங்கள், அலையையுடைத்தான கடல்போலே முழங்கிற்றின; அன்றியே, இங்கே தங்குகையிலுண்டான ஆதராதிசயந்தோற்ற வாத்யகோஷங்களைப் பண்ணினார்க

நாலாம்பாட்டு.—எதிரெதிர் இத்யாதி. "எதிரெதிரிமையவர்" என்று தொடங்கி "முழக்கொத்த" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - மேலுள்ளலோகங்களில் இத்யாதி. இருப்பிடம் - தோப்பு; வாத்யாதிகோஷங்கள் - வாத்யகோஷாதிகளென்றபடி. ஆதிஶப்தத்தாலே- "கைந்நிரைகாட்டினர்" என்றத்தைச் சொல்லுகிறது.

"எதிரெதிர்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - பார்த்தபார்த்தவிடம் இத்யாதி. இருப்பிடம் வகுக்கிறதுக்கு ப்ரயோஜநமருளிச்செய்கிறார் - இவர்கள்இங்கே இத்யாதி. தேவர்களென்னாதே "இமையவர்" என்றதுக்கு பாவம்- இமையவரென்று இத்யாதி. கார்யபரதையாலே கண்விழித்திருந்த பேருண்டோவென்ன - இளையபெருமாள் இத்யாதி. அவர்கள் இப்படிசெய்கைக்கு அதித்வரையோடே போகிறவர்கள் தங்குவர்களோவென்ன-இவர்களங்கே இத்யாதி. உக்தத்துக்கு த்ருஷ்டாந்தம் - ராஜாக்கள் இத்யாதி. மாநாவிசமைக்கை - மஹாநவமிக்கு ராஜத்வாரங்களிலே அலங்கரிக்கை "கதிரவர்" என்று தேஜஸ்ஸையிட்டு விசேஷிக்கிறதுக்கு பாவம் - ஆதித்யர்கள் இத்யாதி. நிலைவிளக்குப்போலே என்றது - "கதிரவர்" என்ற பதசக்தியைப்பற்ற. நிரையே - வரிசையாக. இமையவர்கள் வகுத்த விருப்பிடத்தே கால்தாழ்வர்களென்று அதுகேளாதபடி அவ்வருகுள்ளாராலே முரசங்கள் முழக்கப்பட்டனவென்னுதல், இருப்பிடம் வகுத்தவர்களே வாத்யங்களையும் கோஷிப்பித்தார்களென்னுதல்; இந்த அர்த்தத்வயத்தையும் அருளிச்செய்கிறார் - அங்கே கால்தாழ்வர்களென்று இத்யாதி வாச்யத்வயத்தாலே. "மதுவிரிதுழாய்முடி" என்ற விசேஷணத்

† மேலில் லோகங்களில் என்றுபாடம் காண்கிறது.

ளென்றுமாம். [மதுவிரி இத்யாதி] - கோட்டோசையாலும், ஆள்களெதிரேசென்று சொல்லுகையாலும், சென்ற இவர்களுக்கு ஒப்பித்தபடியே கொடுக்கைக்காகப் பிராட்டியோடேகூட அழித்தழித்தோப்பிக்கிறபடி. [மாதவன்தமர்க்கே] - "பிராட்டிபுருஷகாரமாகப் பற்றினவர்கள் பிராட்டிமுன்னாக அடிமைசெய்கைக்கு வாராநின்றார்கள்" என்று ஒப்பிக்கிறபடி. ஸ்ரீயஃபதியினுடைய ஒப்பனையழகிலே யகப்பட்டு அடிமைபுக்கவர்களுக்கென்னுதல் [எதிரேதிரித்யாதி] - இங்கு "வைஷ்ணவர்கள்" என்றதுவே ஹேதுவாகப் பங்குபெறாதே திரியுண்ட வைஷ்ணவர்களை அங்குள்ளார் எதிர்கொண்டு இருப்பிடங்கள் கொடுக்கப்படுகிறபடி! மிளகாழ்வான் படைவீட்டிலே அகரத்துக்குச்சேல்ல, "நீ ஆந்தராளிகன்; உனக்குப்பங்கில்லை" என்ன, "நன்மையில் குறையுண்டாய்ச் சொல்லுகிறிகோளோ, அன்றோ" என்ன, "நன்மையில் குறையில்லை இதிறேஹேது" என்ன, "நம்நெஞ்சில் இல்லையாகிலும் இவர்கள் வைஷ்ணவர்களென்று கைவிடப்பெற்றோமிறே" என்று புடைவையைமுடிந்து எறட்டுக் கூத்தாடினான். (௪)

ஐந்தாம் பாட்டு.

மாதவன்தமரென்று வாசலில்வானவர்
போதுமினெமதிடம் புகுதுகவென்றலும்
கீதங்கள்பாடினர் கின்னரர்கெருடர்கள்
வேதநல்வாயவர் வேள்வியுள்மடுத்தே.

ஆ,—(மாதவன்தமர்.) - இவர்கள் போகிறவழியில் வர்த்திக்கும் தேவர்கள், இவர்கள் மாதவன்தமரென்று உகந்து, தந்தாமுடைய ஸ்தாநங்களையும் ஐஶ்வர்யங்களையும், இவர்களுக்கு "இவற்றைக்கொள்ளவேணும்" என்று ஸமர்ப்பித்தார்கள்; கீதங்கள் பாடினர் கின்னரர்கருடர்கள்; வேதநல்வாயவர், ஜ்யோதிஷ்டோமாதி யாகஸித்தமான தங்கள் ஸம்ருத்தியைக் கொடுத்தார்களென்கிறார்.

ஓ.—அஞ்சாம்பாட்டில், ஆதிவாஹிக கர்த்தாக்களான வருணேந்த்ராதிகளும் மற்றுமுள்ளாரும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப்பண்ணும் ஸத்காரத்தை யருளிச்செய்கிறார்.

த்துக்கு ஹாவம் - கோட்டோசையாலும் இத்யாதி. "மாதவன்" என்றத்தைப்பற்ற-பிராட்டியோடேகூட என்றது. "மதுவிரி" என்று - புதுமையைச்சொல்லுகையாலே 'அழித்தழித்தென்றது'. விரிப்ரவஹியாநின்றுள்ள. கீழே பிராட்டியும் தானுமாய் ஒப்பித்தபடியைச்சொல்லி, தானேயொப்பிக்கிறானென்று தாத்பர்யார்த்தம் - பிராட்டிபுருஷகாரமாக இத்யாதி. மநுஷ்யர்களுக்கு மேலான தேவர்கள் வைஷ்ணவர்கள் வாசியறிந்து ஸத்கரிக்கிறபடியையும், இங்கே எத்தனையேனும் தண்ணியரும் வைஷ்ணவர்களை அவமாநம்பண்ணுகிறபடியையும் அநுஸந்தித்து வ்யாக்யாதாவின் ஈடுபாடு- இங்குவைஷ்ணவர்கள் இத்யாதி. வைஷ்ணவத்வமே ஹேதுவாகப் பங்குபெறுதாருண்டோவென்ன,ஐதிஹ்யம்அருளிச்செய்கிறார் - மிளகாழ்வான் இத்யாதி. ஆந்தராளிகன்-நடுவேயிருக்கிறவன். அதாவது - ஸம்ஸாரிகளுக்கும் முக்தர்க்கும் கூட்டல்லாத மத்யஸ்தனென முமுக்ஷு என்றபடி. 'மதுவிரி' என்று தொடங்கி, 'முழக்கொத்த' இத்யந்வயஃ. முரசங்கள்அதிருகிற குரலானவை அலைகிற கடலின் முழக்கொத்தன என்று உரையில் ஸப்தார்த்தம். (௪)

[வாசலில் வானவர்] - வழியில் தேவர்கள். [போதுமினென்று தொடங்கி]- வந்து எங்களதிகாரங்களைக் கொள்ளவேணுமென்று ப்ரார்த்திக்கிறவளவிலே கின்னரர்களும் கருடர்களும் பாட்டுக்களைப்பாடினார்கள்; மேலில் லோகங்களில் வைதிகராய்க்கொண்டு ஸமாராதநம்பண்ணுமவர்கள் தங்களுடைய ஸமாராதனபலங்களை ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவடிகளிலே ஸமர்ப்பித்தார்கள்.

ப.—அநந்தரம், வழியில் வருணேந்த்ரப்ரஜாபதிகளானவர்கள், "ஸ்ரிய:பதியானவனுக்கு சேஷபூதர்" என்று ஆதரித்த ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

வானவர் - வருணேந்த்ரப்ரஜாபதிகளாகிற ஆதிவாஹிகதேவர்களானவர்கள், வாசலில் - தந்தாம்பதங்களில் தலைவாசலிலேவந்துநின்று, மாதவன்தமர் - ஸ்ரிய:பதிக்கு சேஷபூதர்களிவர், என்று - என்றாதரித்து, போதுமின் - "இங்ஙனேயெழுந்தருளுங்கோள்", எமதிடம்புகுதுக - எங்களதிகாரமான ஸ்தலங்களிலே ப்ரவேசியுங்கோள், என்றலும் - என்று ஸபஹுமாநமாக ஸத்கரித்தவளவிலே, (அவ்விடங்களில் கர்மஜரேதவராய்), வேதநல்வாயவர் - வேதோச்சாரணத்தாலே விலக்ஷண முவரானவர்கள், வேள்வி — (தங்கள்)யாகாதிகர்மங்களை, உள் - "ஸபலமாகப்பெற்றதே" என்று ஸாதரமாய்க்கொண்டு, மடுத்து - (இவர்கள் திருவடிகளிலே) ஸமர்ப்பித்து, கின்னரர் - கிந்நரர்களும், கெருடர்கள் - கருடர்களும், கீதங்கள்பாடினர் - கீதங்களைப்பாடினார்கள்.

இ.—அஞ்சாம்பாட்டில், ஆதிவாஹிக கர்த்தாக்களான வருணேந்த்ராதிகளும் மற்றுமுள்ளாரும் இவர்களுக்குப்பண்ணும் ஸத்காரத்தை அருளிச்செய்கிறார்.

[மாதவன் தமரென்று] - "பிராட்டி புருஷகாரமாக ஆஸ்ரயித்த அந்த:புரபரிகரமன்றோ இவர்கள்" என்றுயுக்தது அவர்கள் சொல்லுவது. [வாசலில் வானவர்] - வழியில் தேவர்கள். அவர்களாகிறார் - வருணேந்த்ரப்ரஜாபதிகள். [போதுமினெமதிடம் புகுதுகவென்றலும்] - இங்ஙனே யெழுந்தருளவேணும் எங்கள் அதிகாரங்களைக் கைக்கொள்ளவேணும்" என்று ப்ரார்த்திக்கிறவளவிலே, கின்னரர்களும் கெருடர்களும் பாட்டுக்களைப் பாடினார்கள். மேலில் லோகங்களிலே வைதிகராய்க்கொண்டு ஸமாராதநம் பண்ணுமவர்கள், ஸமாராதநங்களை இவர்கள் திருவடிகளிலே ஸமர்ப்பித்தார்கள். நிரபேக்ஷராய்ப் போகிற இவர்களுக்குத் தந்தாமதிகாரங்களைக் கொடுப்பார் பாடுவார் யாகபலங்களைக் கொடுப்பார்களாகிறார்களிறே, தந்தாம் ஆதரத்தாலே. "வீதக்லேஶா நிதர்ஶநஸாத்ருஶ்யம் ஸம்ஸ்பர்ஶ..." என்று தந்தாமுக்குள்ளவற்றைக் கொடுக்குமத்தனையிறே.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ஆதிவாஹிக கர்த்தாக்களான வருணேந்த்ராதிகளும் மற்றுமுள்ளாரும் இவர்களுக்குப்பண்ணும் ஸத்காரங்களை யருளிச்செய்கிறார்.

[மாதவன்தமரேன்று] - பிராட்டிபுருஷகாரமாக ஆஸ்ரயித்த அந்த:புரபரிகரமன்றோவென்றுயுக்தது அவர்கள் சொல்லுவது; ப்ரஹ்மசாரி எம்பெருமானைப் பற்றினவர்

அஞ்சாம்பாட்டு.—மாதவன் இத்யாதி. "வாசலில்வானவர்" என்று தொடங்கி "வேள்வியுள்மடுத்தே" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - ஆதிவாஹிக இத்யாதி. மற்றுமுள்ளார் என்கிறது - "கின்னரர்" இத்யாதியைப்பற்ற.

"வாசலில் வானவர்" என்றதுக்கு - வழியில்தேவர்களென்றர்த்தமாயிருக்க, 'வருணேந்த்ரப்ராஜாபதிகள்' என்கிறது - மேலே "எமதிடம்புகுதுக" என்று - எங்களதிகாரங்களைக்

களன்றிறே. [வாசலில்வானவர்] - வழியில் தேவர்கள், [வாசல்] - வழி. அவர்களாகிறார்:—வருணேந்த்ரப்ரஜாபதிகள். [போதுமினெமதிடம்புகுதுகவென்றலும்] - "இங்ஙனே யெழுந்தருளவேணும்; எங்களதிகாரங்களைக் கைக்கொள்ளவேணும்" என்று ப்ரார்த்திக்கிறவளவிலே. [கீதங்கள்பாடினர் கின்னரர் கெருடர்கள்] - கிந்நரர்களும் கருடர்களும் பாட்டுக்களைப்பாடினார்கள். கிந்நரதேசத்திலுள்ளாரும், கருடதேசத்திலுள்ளாரும் பாடினார்கள். [வேதநல் வாயவர்] - மேலில் லோகங்களில் வைதிகராய்க்கொண்டு ஸமாராதநம்பண்ணுமவர்கள், தங்கள் ஸமாராதநபலங்களை இவர்கள் திருவடிகளிலே ஸமர்ப்பித்தார்கள். நிரபேக்ஷராய்ப்போகிறவர்களுக்கு, தந்தாம் அதிகாரங்களைக்கொடுப்பார், பாடுவார், யாகபலங்களைஸமர்ப்பிப்பாராகிறார்களிறே தந்தாம்ஆதரத்தாலே. "ஸ்ரீ தஃகஸ்ஸிந்து நிஷாஹ்ராம் ஸம்ஸ்ருதஃகஸம்பதேள" (ப்ரீதஃகஸ்ஸிந்முநிஸ்தாப்யாம் ஸம்ஸ்த்திதஃகலஶம்பதேள) என்று தந்தாமுக்குள்ளவற்றைக் கொடுக்குமத்தனையிறே. (ரு)

ஆறும் பாட்டு.

வேள்வியுள்மடுத்தலும் விரைகமழ்நறும்புகை
காளங்கள்வலம்புரி கலந்தெங்குமிசைத்தனர்
ஆண்மின்கள்வானகம் ஆழியான்தமர்என்று
வாளொண்கண்மடந்தையர் வாழ்த்தினர்மகிழ்ந்தே.

ஆ. -(வேள்வியுள்.) - இவர்சிலர் ஸ்வக்ருதமான யாகபலத்தைக்கொடுக்குமளவில், வேறேசிலர் தூபதீபாதிகளால் அப்யர்ச்சநம்பண்ணினார்கள்; சிலர், காளங்கள் வலம்புரிகலந்தெங்கு மிசைத்தனர்; வாளொண்கண்மடந்தையர், இவர்களைக்கண்ட ப்ரீத்யதிஶயத்தாலே, இவர்கள் தாங்கள் வரப்புகுகிற மங்களத்திற்காட்டில் மேற்பட்டதொரு மங்களமில்லாமையாலே, ஆழியான்தமரான நீங்கள் ஆண்மின்கள் வானகமென்று இதுதன்னையே மங்களமாக ஆஶாஸித்தார்களென்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், ஸத்காரபூர்வகமாக தேவஸ்த்ரீகள் உகந்து ஸ்ரீவைஷ்ணவர்களை ஆஶீர்வசநங்களைப் பண்ணினார்கள் என்கிறார்.

[வேள்வியுள்என்று தொடங்கி] - சிலர் தாங்கள்பண்ணின யாகபலங்களை ஸமர்ப்பிக்குமளவிலே வேறே சிலர் அகில்தொடக்கமான த்ரவ்யங்களைக்கொண்டு நல்ல புகைகளை ப்ரவர்த்திப்பித்தார்கள். [கலந்தெங்குமிசைத்தனர்]-கலந்தெங்கும் த்வநித்தன.

கைக்கொள்ளவேணுமென்கையாலே, அதிகாரிபுருஷர்களாவாரவர்களே என்று நினைத்து. எமதிடம் - எங்கள்அதிகாரமானஸ்தலங்களிலே, புகுதுக- ப்ரவேஶியுங்கோள், என்றலும் என்றவளவிலே யென்று ஶப்தார்த்தம். விவரணம் - கிந்நரதேசத்தில் இத்யாதி. வேதநல்வாயவர்-வேதோச்சாரணத்தாலே விலக்ஷணமான வாயையுடையவர்கள். வேள்வி - யாகபலத்தை. "உள்-" உள்ளென்று - ஸப்தமியாய், அவர்களிடத்திலே யென்றபடி. மடுத்து - ஸமர்ப்பித்து என்று ஶப்தார்த்தம், வேள்வி யென்று - தத்பலத்தை லக்ஷிக்கிறது. வேள்வி - யாகம். மோக்ஷபலத்தைப்பற்றப் போகிறவர்களுக்கு க்ஷுத்ரபலத்தைக்கொடுத்தா லங்கீகரிப்பர்களோவென்ன - நிரபேக்ஷராய் இத்யாதி. அப்ராக்ருதமான தேசத்தை யபேக்ஷித்துப்போகிறவர்களுக்கு ஆஶாஸமான இவை ஸத்ருஶமன்றேயென்ன - ப்ரீதஃ இத்யதி. " ஸ்ரீ தஃகஸ்ஸிந்து நிஷாஹ்ராம் ஸம்ஸ்ருதஃகஶம்பதேள । ஸ்ரீ ஸ்வஸ்ந்ராஷ்ஸ்ராம்கஸ்ஸிதேள தாஹ்ராம் ஸேஹாயஶா:" இதிபாலகாண்டேகுஶலவஶ்லாகாயாம்,

ப.—அநந்தரம், "மோக்ஷித்வஸிஹ்நமான திருவாழியையுடையவனுக்கு சேஷபூதரான நீங்கள் இந்த ஊர்த்வலோகத்தை நிர்வஹியுங்கோள்" என்று ஆதிவாஹிக மஹிஷிகள் வாழ்த்தினபடியை யருளிச்செய்கிறார்.

வேள்வியுள்மடுத்தலும் - வைதிகர் ஸகலயாகங்களை ஸமர்ப்பித்தவளவிலே, விரைகமழ் - பரிமளத்தைப்ரவஹிக்கிற, நறும் - ஸுகந்தமான, புகை - தூபங்களானவை, எங்கும் கலந்து - , காளங்கள் - காளங்களையும், வலம்புரி - வலம்புரிகளையும், இசைத்தனர் - த்வநிப்பித்தார்கள்; (இவர்களைக்கண்டப்ரீதியாலே), வாள் - ஒளியையுடைத்தாய், ஒண் - தர்ஸநீயமான, கண் - கண்களையுடைய, மடந்தையர் - தேவஸ்த்ரீகளானவர்கள், ஆழியான் - திருவாழியையுடைய ஸர்வேஸ்வரனுக்கு, தமர் - சேஷபூதரானநீங்கள், வானகம் - இந்தஸ்வர்க்காதிபதங்களை, ஆண்மின்கள் - ஆளுவதிகோளாகவேணும், என்று மகிழ்ந்து - என்று ப்ரீதியையுடையாராய்க்கொண்டு, வாழ்த்தினர் - வாழ்த்தினார்கள்.

இ.—ஆறும்பாட்டில், ஸத்காரபூர்வகமாக தேவஸ்த்ரீகள் உகந்து இவர்களை ஆஸீர்வசநங்களைப் பண்ணினார்களென்கிறார்.

[வேள்வியுள் மடுத்தலும்] - அவர்கள் தங்கள் யாகபலங்களை ஸமர்ப்பித்தவளவிலே வேறே சிலர் அகில்தொடக்கமான த்ரவ்யங்களைக்கொண்டு நல்லபுகைகளை ப்ரவர்த்திப்பித்தார்கள். [விரைகமழ் நறும்புகை] - பரிமளப்ரசுரமாகையாலே ஸ்ப்ருஹணியமான புகை. [காளங்கள் இத்யாதி] - அவர்கள் கொடுக்கிறவற்றை இவர்கள் கைக்கொள்ளுகிறவளவிலே, வேறே சிலர் காளங்களையும் வலம்புரிகளையும் கலந்து த்வநிப்பித்தார்கள். [கலந்தெங்குமிசைத்தனர்] - மாறிமாறி எங்குமொக்க த்வநித்தன. [ஆழியாந்தமர் - ஆண்மின்கள்வானகம] - ஸர்வேஸ்வரனுக்கு சேஷபூதரான நீங்கள் இவ்விடத்தை யாளீர்கோளோ? என்றாய்த்து ஸ்தோத்ரப்ரகாரம். அவன்தானும் தன் விபூதியை "ஸகுடநாடு" என்றன்றோவிருப்பது? "ஆளக்குறையென்" என்பர்கள். [வாளொண்கண் இத்யாதி] - ஆதிவாஹிக கர்த்தாக்களுடைய மஹிஷிகள் வாழ்த்தினார்கள். ஒளியையுடைத்தாய் ஆகர்ஷகமான கண்களையுடையவர்கள். இது ஸ்வரூபகயநம் பண்ணுகிறதன்று; இவர்களைக் கண்டத்தாலே கண்களுக்கு உண்டான ஒளியையும் அழகையும் சொல்லுகிறது. [மகிழ்ந்தே] - ஸர்த்தாக்கள் அநுவர்த்திக்கையாலே விஹிதமென்று செய்கிறார்களன்று; ப்ரீதியாலே செய்கிறார்கள். இங்கு பகவத்ஸம்பந்தம் ஹேதுவாக நீசராலே பரிபூதனாய்ப்போந்தவன், ஸரீரவியோக ஸமநந்தரத்திலே தங்களுக்கு அவ்வருகில்லாதார் கொண்டாடும்படியிறே இவர் பேறு.

ஈடு.—ஆறும்பாட்டு. ஸத்காரபூர்வகமாக தேவஸ்த்ரீகளுகந்து இவர்களை ஆசீர்வசநங்களைப்பண்ணினார்களென்கிறார்.

[வேள்வியுள்மடுத்தலும்]-அவர்கள் தங்களுடைய யாகபலங்களை ஸமர்ப்பித்தவளவிலே, வேறேசிலர், அகில்தொடக்கமான த்ரவ்யங்களைக் கொண்டு நல்லபுகைகளை ப்ரவர்த்திப்பித்தார்கள். [விரைகமழ் நறும்புகை] - பரிமளப்ரசுரமாகையாலே ஸ்ப்ருஹ

ஆறும்பாட்டு.—வேள்வியுள் இத்யாதி. "வாளொண்கண்மடந்தையர் வாழ்த்தினர் மகிழ்ந்து" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - ஸத்காரபூர்வகமாக இத்யாதி.

"வேள்வியுள்மடுத்தலும்" என்கிறவிது - அநுவாதம். மடுத்தலும் - மடுத்தவளவிலே; ஸமர்ப்பித்தவளவிலேயென்றபடி. "விரைகமழ்" என்றதுக்கும் * நறுமைக்கும்பேதமேதென்ன .

ணீயமான புகை. [காளங்கள் இத்யாதி] - அவர்கள்கொடுக்கிறவற்றை இவர்கள் கைக்கொள்ளுகிறவளவிலே, வேறேசிலர்கள், காளங்களையும் வலம்புரிகளையும் கலந்து த்வநிப்பித்தார்கள். [கலந்தெங்குமிசைத்தனர்] - மாறிமாறி எங்குமொக்க த்வநித்தன. (த்வநிக்கும்போது த்வநிப்பிப்பாரும் வேணுமிறே.) [ஆழியான்தமர் - ஆண்மின்கள்வானகம்] - "ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷபூதரான நீங்கள் இவ்விடத்தை யாளிகோள்"என்றுய்த்து ஸ்தோத்ரம்பண்ணுவது. அவன் தானும் தன்விபூதியை "ஹக்ராநாடு" (பக்தாநாம்) என்றன்றேவிருப்பது. "ஆளுகைக்குக்குறையென்?" என்பர்கள். [வாளொண்கண் இத்யாதி] - ஆதிவாஹிக கர்த்தாக்களுடைய மஹிஷிகள் வாழ்த்தினார்கள். தேசாந்தரம் போன ப்ரஜையைத் தாய்மார் குளிரப்பார்க்குமாபோலே, ஒளியையுடைத்தாய் அழகிய கண்களாலே குளிர நோக்கினபடி. [மகிழ்ந்தே] - பர்த்தாக்கள் அநுவர்த்திக்கையாலே விஹிதமென்று செய்கிறார்களன்று. ப்ரீதியாலே செய்கிறார்கள். இங்கு பகவத்ஸம்பந்தமேஹேதுவாக நீசராலே பரிபூதனுய்ப்போந்தவன், ஶரீரவியோகஸமநந்தரத்தில் தங்களுக்கு அவ்வருகில்லாதார் கொண்டாடும்படியிறே இவன்பேறு!. (சு)

ஏழாம் பாட்டு.

மடந்தையர்வாழ்த்தலும் மருதரும்வசுக்களும்
தொடர்ந்துஎங்கும்தோத்திரஞ்சொல்லினர்தொடுகடல்
கிடந்தஎங்கேசவன் கிளரொளிமணிமுடி
†குடந்தைஎங்கோவலன் குடியடியார்க்கே.

ஆ.—(மடந்தையர்.) *ஆஶ்ரிதபரித்ராணார்த்தமாகத் திருப்பாற்கடல் திருக்குடந்தை தொடக்கமாகவுள்ள தேசங்களிலேவந்து திருவவதாரம்பண்ணியருளின எம்பெருமானுக்குக் குடியடியாரான இவர்களை இப்படி மடந்தையர் வாழ்த்துமளவிலே, மருத்துக்களும், வஸுக்களும் தந்தாமுடைய லோகங்களன்றியே லோகாந்தரங்களிலும் தொடர்ந்து தொடர்ந்து ஸ்துதித்தார்களென்கிறார்.*

ஒ—ஏழாம்பாட்டில், *மருத்கணமும் வஸுகணமும் தங்களெல்லைகளுக்கப்பாலும் செல்லலாமிடமெல்லாம் சென்று ஸ்ரீவைஷ்ணவர்களை ஸ்தோத்ரம்பண்ணினார்களென்கிறார்.*

பரிமள இத்யாதி. *பரிமளத்தை ப்ரவஹிக்கிற ஸ்ப்ருஹணீயமான தூபமங்களையென்று பதார்த்தம்.* 'ப்ரவர்த்திப்பித்தார்கள்' *இத்யத்யாஹார்யம்.* விரை - *பரிமளம்.* கமழ்புகை - *நறும்புகை.* காளங்கள் - *சின்னங்கள்.* இசைத்தனர் - *த்வநிப்பித்தார்கள்.* கலந்து - *மாறிமாறியென்றபடி.* த்வநித்தன - *த்வநிப்பித்தார்கள்.* ஈஶ்வர விபூதியை *இவர்கள் கொடுக்கலாமோ? என்ன*-அவன்தானும் இத்யாதி. "வாளொண்கண்மடந்தையர்" *என்று அவர்கள்கண்களை வர்ணிக்கிறதுக்கு* பாவம் - தேசாந்தர இத்யாதி. *வ்யாக்யாதாவினீடுபாடு* - இங்குபகவத்ஸம்பந்தமே இத்யாதி. '*வேள்வியுள் மடுத்தலும் விரைகமழ் நறும்புகையை ப்ரவர்த்திப்பித்தார்கள்; காளங்கள் வலம்புரி கலந்து எங்கும் இசைத்தனர்; ஆழியான் தமரான நீங்கள் வானகம் ஆண்மின்கள் என்று வாளொண்கண் மடந்தையர் - மகிழ்ந்து வாழ்த்தினர்*' இத்யந்வயஃ. (சு)

† 'குடந்தையெங் கோவலன்' *என்று உரைக்குப்பாடமாகலாம்.*

[தொடுகடல்கிடந்தவென்று மேலுக்கு] - ஆஸ்ரிதார்த்தமாக நிரதிஸயஸௌந்தர்யயுக்தனைக்கொண்டு திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளி அங்குச் செல்லமாட்டாதவர்களுக்காகத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளின கோபாலனுடைய க்ரமாகதமான அடியார்க்கு.

ப.—அநந்தரம், க்ஷீரார்ணவஸாயியாய் ஸர்வாதிகனாய் அர்ச்சாவதார ஸுலபனானவனுடைய பேஷஹோதர்க்கு மருத்கணங்களும் வஸுகணங்களும் பின்தொடர்ந்து ஸ்தோத்ரம் பண்ணினபடியை யருளிச்செய்கிறார்.

தொடுகடல்கிடந்த - அகாதமானகடலிலே கண்வளர்ந்தருளி, எம்கேசவன் - என்போல்வாரோடு ப்ரஹ்மாதிகளோடு நித்யஸூரிகளோடு வாசியற எல்லார்க்கும் உத்பாதகனை கேசவனாய், (எங்களையநுபவிப்பிக்கிற அந்தப்ரஸித்தஸௌசகமாய்), கிளர் ஒளி - கிளர்ந்த ஒளியையுடைத்தாய், மணிமுடி - மணிமயமான திருவபிஷேகத்தை யுடையனைக்கொண்டு, குடந்தையன் - திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற, கோவலன் - க்ருஷ்ணனுக்கு, குடியடியார்க்கு - ஸந்தாநமாக அடிமையானவர்களைப்பற்ற, மடந்தையர் - (தந்தாமுடைய) ஸ்த்ரீகள், வாழ்த்தலும் - வாழ்த்தினவளவிலே, மருதரும் - மருத்துக்களும், வஸுக்களும் - அஷ்டவஸுக்களும், (கமநாகமனத்வரையாலே அவர்கள் சீக்ரகாமிகளாகையாலே), எங்கும் தொடர்ந்து - எங்கும் தொடர்ந்துசென்று, தோத்திரம் சொல்லினர் - ஸ்தோத்ரங்களைப் பண்ணினார்கள். தொடுதல் - தோண்டுதலாய், ஆழத்தைக்காட்டுகிறது.

௭.—ஏழாம்பாட்டில், மருத்கணமும் வஸுகணமும் தங்களெல்லைகளுக்கு அப்பாலும் தொடர்ந்துசென்று இவர்களை ஸ்தோத்ரம்பண்ணினார்களென்கிறார்.

[மடந்தையர் வாழ்த்தலும்] - அந்த தேவஸ்த்ரீகள் புகழ்ந்தவளவிலே. [மருதரும் இத்யாதி] - மருத்கணங்களும் வஸுகணங்களும். [தொடர்ந்தெங்கும்] - தங்கள் எல்லைக்கப்பால் செல்லலாமிடமெல்லாம் சென்று புகழ்ந்தார்கள். ஒரு நிமேஷமாத்ரத்திலே ஒருலோகத்தில்நின்றும் லோகாந்தரத்தேறப் போமவர்களாகையாலே தங்களெல்லைக்கு உள்ளேப்புகழ்ந்தவளவால் பர்யாப்தி பிறவாமையாலே தொடர்ந்து புகழ்ந்தார்கள். அவர்கள் தாங்கள் சடக்கெனப் போகிறதுக்கடியென்னென்னில்;—"தாங்கள் காண்பதென்றுகொலோ?" என்றிருக்குமவர்களாகையாலும், "நஜீவேயம்க்ஷணமபி" என்றிருக்குமவன் கருத்தறியுமவர்களாகையாலும். [தொடு கடல்கிடந்த] - பரமபதத்தைக்கலவிருக்கையாக உடையவன், அத்தைவிட்டு, ப்ரஹ்மாதிகளுக்கு முகங்கொடுக்கைக்காகத்திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடி. [தொடு கடல்] - தோண்டப்பட்ட கடல். ஆழ்ந்தகடல். [எங்கேசவன் இத்யாதி] - ஆஸ்ரிதார்த்தமாக க்ருஷ்ணனாய்வந்து அவதரித்து ரக்ஷித்தவன், அவதாரத்துக்குப் பிற்பாடர் இழவாதபடி திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறவன். [எங்கோவலன்] - க்ருஷ்ணன் தானேவந்து திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளினானென்கிறது. அவன்போய்ப் பண்ணின க்ருஷியின்பலமன்றோ என்று கொண்டாடாநிற்பர்கள். [கிளரொளிமணி முடி] - மிக்கவொளியையுடைத்தாய் ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகம். பரவ்யூஹவிபவங்களினளவன்றிக்கே திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற நீர்மையிலே தோற்று ஸந்தாநமாக எழுதிக்கொடுத்தவர்களன்றோ இவர்கள் என்றாய்த்து அவர்கள் ஆதரிப்பது.

ஈடு.—ஏழாம்பாட்டு. மருத் கணங்களும் வஸு கணங்களும் தங்கள் எல்லைக்கு இப்பாலும் தொடர்ந்து சென்று இவர்களை ஸ்தோத்ரம்பண்ணினார்களென்கிறார்.

[மடந்தையர்வாழ்த்தலும் இத்யாதி]- அத்தேவஸ்த்ரீகள் புகழ்ந்தவளவிலே, மருத் கணங்களும் வசுகணங்களும். [தொடர்ந்தெங்கும்] - தங்கள் எல்லைக்கப்பால் செல்லலாமிடமெங்கும், சென்று. [தோத்திரஞ்சொல்லினர்] - புகழ்ந்தார்கள். ஒரு நிமேஷ மாத்ரத்திலே ஒருலோகத்தில்நின்றும் லோகாந்தரத்தேறப்போமவர்களாகையாலே, தங்கள் எல்லைக்குள்ளில் புகழ்ந்த வளவால் பர்யாப்தி பிறவாமையாலே தொடர்ந்துபுகழ்ந்தார்கள். அவர்கள் தாங்கள் சடக்கெனப்போகிறஇதுக்குஅடியென்? என்னில்—தாங்கள், "கண்ணன் விண்ணூர்தொழவே சரிகின்றனசங்கம்" என்றும் "காண்பதெஞ்ஞான்றுகொலோ?" என்றும் "மாகவைகுந்தம்காண்பதற்கென்மனமேக மெண்ணும்" என்றும் "உடன்கூடுவ தென்றுகொலோ" என்றும் இருக்கையாலும், "**நஜீவேயம்க்ஷணமபி**" (நஜீவேயம்க்ஷணமபி) என்றுஇருக்குமவன் கருத்தறியு மவர்களாகையாலும். [தொடுகடல்கிடந்த] - பரமபதத்தைக் கலவிருக்கையாகவுடையவன், அத்தைவிட்டு, ப்ரஹ்மாதிகளுக்கு முகங்கொடுக்கைக்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடி. [தொடுகடல்] - தோண்டப்பட்ட கடல்; ஆழ்ந்த கடல். [எங்கேசவன் இத்யாதி]—ஆஸ்ரிதார்த்தமாக க்ருஷ்ணனாய் வந்தவதரித்து ரக்ஷித்தவன், அவதாரத்துக்குப் பிற்பாடர் இழவாதபடி (திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறவன்.) [எங்கோவலன்] - க்ருஷ்ணன் தானே வந்து திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறானென்கிறது. மருதரும் வசுக்களும், அவன் போய்ப் பண்ணின க்ருஷியின் ஃபலமன்றோ வென்று கொண்டாடாநிற்பர்கள். [கிளரொளிமணிமுடி] - மிக்கவொளியையுடைத்தாய் ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகம். வ்யூஹ விபவங்களினளவன்றிக்கே) திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற நீர்மையிலே தோற்று ஸந்தாநமாக எழுதிக்கொடுத்தவர்களன்றோ இவர்களென்றாய்த்து அவர்கள் ஆதரிப்பது. (எ)

எட்டாம் பாட்டு.

குடியடியார்இவர்கோவிந்தன்தனக்கென்று
முடியுடைவானவர் முறைமுறையெதிர்கொள்ளக்
கோடியணிநெடுமதிள் கோபுரங்குறுகினர்
வடிவுடைமாதவன் வைகுந்தம்புகவே.

ஏழாம்பாட்டு.—மடந்தையர் இத்யாதி. "மருதரும் வசுக்களும் தொடர்ந்தெங்கும் தோத்திரஞ் சொல்லினர்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - மருத் கணங்களும் இத்யாதி.

"எங்கும் - தொடர்ந்து" என்றதுக்கு பாவம் - தங்களெல்லை இத்யாதி. தொடர்ந்து ஸ்தோத்ரம் பண்ணுவானென்னென்ன - ஒருநிமேஷ இத்யாதி. தாங்கள் †காண்பது இத்யாதி. அவனையும் பரமபதத்தையும் நித்யஸூரிகளையும் காணவேணுமென்கிற த்வரையாலும், அவன் கருத்தறியுமவர்களாகையாலும் த்வரித்துப்போகிறார்களென்றபடி. ஃபலிதம்-ஆழ்ந்தகடல் என்று. "கோவலன்" என்கிறவிதுக்கு நீர்மையிலே நோக்கு. "குடியடியார்க்கு" என்றது - கர்மணிஷஷ்டியாய், குடியடியார்களை என்றபடி. தொடுகடலென்றுதொடங்கி, தோத்திரம்சொல்லினர் இத்யந்வய:. (எ)

---

† இது 'காண்பது' என்பது லேககப்ரமாதத்தாலே வந்ததாயிருக்கவேணும்.

ஆ—(குடியடியார்இவர்)-குடியடியாரிவர் கோவிந்தன் தனக்கென்று, இவரை, மோக்ஷத்வ ஸாம்ராஜ்யத்திலே அபிஷிக்தராய் அதுக்கு முடிசூடியிருந்த * அயர்வறுமமரர்கள் முறைமுறையெதிர்கொள்ள, வடிவுடைமாதவன் வைகுந்தம் புகுகைக்காக, இவர்கள் முன்னமே த்வஜபதாகாதிகளாலே யலங்க்ருதமான பெரிய திருக்கோபுரத்தைச் சென்று குறுகினார்களென்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், ப்ரக்ருதிமண்டலத்துக்கு அவ்வருகாகத் திருநாட்டில் எல்லைக்குப் புறம்பாக நித்யஸூரிகள் ஸ்ரீவைஷ்ணவர்களை எதிர்கொள்ளுகிறபடியையருளிச்செய்கிறார்.

[குடிபடியாரென்று தொடங்கி] - கோவிந்தன் தனக்குத் தகும் ஸந்தாநப்ரயுக்தமான அடியார் என்று மோக்ஷத்வத்துக்குச்சூடின முடியையுடைய அயர்வறுமமரர்கள் பர்யாயமாக எதிர்கொள்ள. [கொடியணி நெடுமதிள் கோபுரங்குறுகினர்] - இவர்கள் வருகிறார்களென்று கொடிகளாலே அலங்கரிக்கப்படுவதுஞ்செய்து திருநாட்டுக்கெல்லையான மதிளையுடைய திருக்கோபுரத்தைக் குறுகினார்கள். தங்கள் வரவாலுண்டான ஹர்ஷத்தாலே புதுக்கணித்த திருமேனியையுடைய ஸ்ரிய:பதியதான ஸ்ரீவைகுண்டத்திலே புக்கிருக்கைக்காக.

ப.—அநந்தரம், ஆஸ்ரிதஸுலபனான க்ருஷ்ணனுடைய அடியாரென்கிற ஆதரத்தாலே பரமபதவாஸிகள் நாட்டெல்லையிலே வந்தெதிர்கொள்ளப் பரமபதத்தைக் கிட்டினபடியை யருளிச்செய்கிறார்.

(இவர்), கோவிந்தன்தனக்கு - ஆஸ்ரிதார்த்தமாக அவதீர்ணனான க்ருஷ்ணனுக்கு, குடியடியார் - அநந்யார்ஹமான குலத்தையுடைய அடியார், என்று - , முடி உடை - ஈஸ்வரனோபாதி அபிஷேகாதி ஸாரூப்யத்தையுடையரான, வானவர் - நித்யஸூரிகள், முறைமுறை - தந்தாம்தரங்கள் தப்பாமல், எதிர்கொள்ள - , (இவர்கள்வருகிறார்களென்று), வடிவுஉடை - அலங்க்ருதமான வடிவையுடையவனாய், மாதவன் - ("ஸ்ரியாஸார்த்தம்" என்ற லக்ஷ்மியோடே கூடவெழுந்தருளியிருக்கிற) ஸர்வேஸ்வரனுடைய, வைகுந்தம் - ஸ்ரீவைகுண்டத்திலே, புக - ப்ரவேசிக்கைக்கு உறுப்பாக, கொடி அணி-(தங்கள்வரவுக்கு அலங்காரமாக எடுத்துக்கட்டின) கொடியாலே அலங்க்ருதமாய், நெடுமதிள் - உயர்ந்தமதிளையுடைத்தான, கோபுரம்குறுகினர் - தலைவாசலிலே புக்கார்கள்.

இ—எட்டாம்பாட்டில், ப்ரக்ருதிமண்டலத்துக்கு அவ்வருகே பரமபதத்துக்குப்புறம்பாக நித்யஸூரிகள் இவர்களை எதிர்கொள்ளுகிறபடியை அருளிச்செய்கிறார்.

[குடியடியார் இத்யாதி]- அவனுடைய ஸௌலப்யத்திலே தோற்று ஸபரிகரமாக எழுதிக்கொடுத்தவர்களென்றுப்த்து நித்யஸூரிகளாதரிப்பது. "குடந்தையெங்கோவலன் குடியடியார்" என்றதுகீழ்; "குடியடியார்இவர் கோவிந்தன்தனக்கு" என்றது இங்கே. 'இவர்கள் விபவங்களிலே ஆஸ்ரயித்தவர்கள். இவர்கள் உகந்தருளின நிலங்களிலே ஆஸ்ரயித்தவர்கள்' என்றுய்த்து அங்குள்ளார் ஸ்லாகிப்பது. [முடியுடைவானவர்] - அவனோபாதியும் மதிப்பில் குறைவற்றவர்களாய்த்து இவர்களை ஆதரிப்பார். அபிஷேகம் அவனுக்கும் நித்யஸூரிகளுக்கும் ஒத்திருக்குமாகில் வாசி என்னென்னில்,—அவன் ரக்ஷணத்துக்கு முடிசூடியிருக்கும். இவர்கள் அடிமைக்கு முடிசூடியிருப்பார்கள். [முறைமுறை யெதிர்கொள்ள] - பர்யாயமாக எதிர்கொள்ள. "யத்ர

[illegible] பூர்வே ஸாத்யா:" என்றும், "அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்று கொலோ" என்றும் சொல்லுகிறபடியே தங்களுக்கு உத்தேஶ்யரானவர்களுக்கு உத்தேஶ்யராகிறார்களிறே இவர்கள். [கொடியணி இத்யாதி] - இவர்கள் வருகிறார்களென்று கொடிகளாலே அலங்க்ருதமாய், ஓக்கத்தையுடைத்தாய், பரமபதத்துக்கெல்லையான திருமதிளில் திருக்கோபுரத்தைச் சென்று கிட்டினார்கள். [வடிவுடைமாதவன் வைகுந்தம் புகவே] - தங்கள் வரவாலுண்டான ஹர்ஷத்தாலே புதுக்கணித்த வடிவையுடைய ஶ்ரிய:பதியதான பரமபதத்தே புகுகைக்காக. வந்துகிட்டினா ரென்றவாறே தனக்கும் பிராட்டிக்கும் வடிவு இட்டு மாறினாற்போலேயாமென்கை.

ஈடு —எட்டாம்பாட்டு. ப்ரக்ருதிமண்டலத்துக்கு அவ்வருகே பரமபதத்துக்குப் புறம்பாக நித்யஸூரிகள் இவர்களை எதிர்கொள்ளுகிறபடியை யருளிச்செய்கிறார்.

[குடியடியாரித்யாதி] - அவனுடைய ஸௌலப்யத்திலேதோற்று ஸபரிகரமாக எழுதிக்கொடுத்தவர்களேன்றுய்த்து, நித்யஸூரிகள் ஆதரிப்பது. "குடந்தையெங்கோவலன் குடியடியார்" என்றது – கீழே. "குடியடியார் இவர் கோவிந்தன் தனக்கு" என்றது - இங்கே. "இவர்கள் விஹவங்களிலே ஆஶ்ரயித்தவர்கள், இவர்கள் உகந்தருளின நிலங்களிலே ஆஶ்ரயித்தவர்கள்" என்றுய்த்து, அவர்கள் ஶ்லாகிப்பது. [முடியுடை வானவர்]-அவன் தன்னோபாதியும் மதிப்பிற் குறைவற்றவர்களாய்த்து, இவர்களை யாதரிப்பார். 'அபிஷேகம் அவனுக்கும் நித்யஸூரிகளுக்கும் ஒக்குமாகில் வாசியேன்?' என்னில், — அவன் ரக்ஷகத்வத்துக்கு முடிசூடியிருக்கும்: இவர்கள் அடிமை செய்கைக்கு முடிசூடியிருப்பர்கள். [முறைமுறை யெதிர்கொள்ள] - பர்யாயமாக எதிர்கொள்ள. " [illegible] " (யத்ரபூர்வேஸாத்யா:) என்றும் "அடியார்கள் குழாங்களை" என்றும் சொல்லுகிறபடியே - தங்களுக்கு உத்தேஶ்யரானவர்களுக்கு உத்தேஶ்யராகிறார்களிறே இவர்கள். [கோடியித்யாதி] - இவர்கள் வருகிறார்களேன்று, கோடிகளாலே யலங்க்ருதமாய் ஓக்கத்தையுடைத்தாய்ப் பரமபதத்துக்கெல்லையான திருமதிளில் திருக்கோபுரத்தைச் சேன்று கிட்டினார்கள். [வடிவுடைமாதவன்]-" [illegible] " (யுவேவவஸுதேவோபூத்) என்று - கம்ஸவதத்துக்குப் பின்பு பிள்ளையைக்கண்ட ஸ்ரீவஸுதேவரையும் தேவகியாரையும் போலவும், பேரு

எட்டாம்பாட்டு.—குடியடியார் இத்யாதி. "முடியுடைவானவர் முறைமுறை யெதிர் கொள்ள" என்றதைக் கடாக்ஷித்தவதாரிகை - ப்ரக்ருதிமண்டலத்துக்கு இத்யாதி. "கோபுரம் குறுகினர்" என்றதுக்குமுன்னே "எதிர்கொள்ள" என்கையாலே - பரமபதத்துக்குப் புறம்பாக என்கிறார்

'இங்கே' என்றவநந்தரம், "இதுக்குக் கருத்தென்னென்னில்" என்று கூட்டுவது. எடுத்த சந்தைக்கு வ்யுத்க்ரமேண ஸாவம் - இவர்கள் இத்யாதி. "முடியுடை" என்ற விசேஷணத்துக்கு ஸாவம் - அவன்தன்னோபாதியும் இத்யாதி. வ்யாக்யாதாவின் ஈடுபாடு - [illegible] இத்யாதி. " [illegible] " என்கையாலே - உத்தேஶ்யர் என்கிறது. "கொடியணி" என்றது - ஸ்வபாவமன்று; ஸாபிப்ராயம். வடிவு-ஸௌந்தர்யம். "வடிவுடை" என்றதும் ஸாபிப்ராயமென்கிறார்.யுவேவ இத்யாதி. " [illegible] " இதி பஞ்சமேம்ஶே (அத்-௨௦). " [illegible]

மாளிக்கண்ட சக்ரவர்த்தி "புநர்யுவேவ" (புநர்யுவேவ) என்று சொல்லப்பட்டாற் போலவும். [வடிவுடைமாதவன் வைகுந்தம்புகவே] - தங்கள் வரவால் உண்டான ஹர்ஷத்தாலே புதுக்கணித்தவடிவையுடைய ஸ்ரீயःபதியதான பரமபதத்திலே புகுகைக்காக. வந்துகிட்டினாரென்றவாறே, தனக்கும் பிராட்டிக்கும் வடிவு இட்டு மாறினாற்போலேயாமென்கை. (அ)

ஒன்பதாம் பாட்டு.

வைகுந்தம்புகுதலும் வாசலில்வானவர்
வைகுந்தன்தமர்எமர் எமதிடம்புகுதேன்று
வைகுந்தத்துஅமரரும் முனிவரும்வியந்தனர்
வைகுந்தம்புகுவது மண்ணவர் விதியே.

ஆ.—(வைகுந்தம்.) - வைகுந்தம்புகுமளவில், வாசலில்வானவர், "வைகுந்தன்தமராகையாலே எங்களுக்கு ஸ்வாமிகளான நீங்கள் எங்களுடைய ஸதநத்தைக் கைங்கர்யரூபமான ஸம்ருத்திகளைக் கொள்ளவேணும்" என்று ஸமர்ப்பித்து, ஸத்வத்குணோத்பவஜநித நிரதிசயப்ரீதிகாரித ஸர்வபரிசர்யைகஹேதுவான அமரரும், ஸத்வத்குணோத்பவஜநித நிரதிசயப்ரீதியாலே அப்ராக்ருதிகஹேதுவாய் ஒருப்ரவ்ருத்தி பண்ணுகைக்கு க்ஷமரன்றியேயிருக்கும் முனிவரும், "பூமியுள்ளேயுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் திருநாட்டிலே வருகைக்கு நாம் என்ன ஸுக்ருதம் பண்ணினோமோ!" என்று விஸ்மயப்பட்டார்களென்கிறார்.

ஒ —ஒன்பதாம்பாட்டில், ஸ்ரீவைகுண்டத்திலே சென்று திருவாசலில் முதலிகளாலே ஸம்மதரானவாறே அங்குத்தை நித்யஸூரிகள் ஸம்ஸாரிகளானவர்கள் ஸ்ரீவைகுண்டத்திலே வருவதே! இதென்ன புண்யபலம்! என்று விஸ்மயப்பட்டார்களென்கிறார்.

[வைகுந்தமென்று தொடங்கி] - ஸ்ரீவைகுண்டத்திலே புகுங்காட்டில் திருவாசலில் முதலிகள் வைகுந்தனுடையார் எங்களுடையஸ்வாமிகள் எங்கள்பதத்தைக் கைக்கொள்ளவேணுமென்று. [அமரரும் முனிவரும்] - கைங்கர்யபராகரான அமரரும் அதுக்கும் க்ஷமரன்றிக்கே ஸதவத்குணங்களிலே ஈடுபட்டிருக்கும் ஸ்வபாவரான முனிவரும்.

ப.—அநந்தரம், "ஸ்ரீ வைகுண்டநாதனுடைய சேஷபூதரானவர்கள் நமக்கு உத்தேஸ்யர்" என்று, திருவாசல்காக்கும் முதலிகளானார் ஆதரித்தபடியை யருளிச்செய்கிறார்.

வைகுந்தம்புகுதலும் - ஸ்ரீவைகுண்டத்திலேசென்று புக்கவளவிலே, வாசலில் வானவர் - திருவாசல்காக்கும் முதலிகளானவர்கள், வைகுந்தன்தமர் - ஸ்ரீவை

உ. "ஷஷ்டிவர்ஷஸஹஸ்ராணி ஜாதஸ்ய மம கௌஸிக । துகேநோத்பாதிதஸ்சாயம் ந த்வயா முநிபுங்கவ ॥" ... "ப்ருஷ்டாவபுநர்யுவேவ" இத்யயோத்யாகாண்டே த்வாதசே. "வடிவுடை" என்றதுக்கு பாவாந்தரம் - தங்கள் இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - வந்து கிட்டினார் இத்யாதி. 'குடியடியார்' என்று தொடங்கி, 'வைகுந்தம் புகுகைக்காக - கோபுரம் குறுகினர்' இத்யந்வய:. (அ)

குண்டநாதனுக்கு ஆதரணீயரானவர்கள், எமர் - நமக்கு உத்தேஶ்யர்; எமதிடம்புகுத - எங்களதிகாரத்திலே புகுரவேணும், என்று - , வியந்தனர் - உகந்தார்கள்; வைகுந்தத்து - அத்தேசத்திலே, அமரரும்முனிவரும் - (கைங்கர்யபரராயும் குணாநுபவபரராயுமிருக்கிற) அமரரும்முனிவரும், மண்ணவர் - பூமியிலே ஶப்தாதிவிஷய ப்ரவணராயிருந்தவர்கள், வைகுந்தம்புகுவது - பரமபதத்தே புகுவது, விதியே! - ஒரு பாக்யமே!, என்று வியந்தனர் - உகந்தார்கள். வியந்தனரென்கிறவிடம், "எமதிடம்புகுதென்று - வியந்தனர்" என்றும், "அமரரும்முனிவரும் வியந்தனர்" என்றும் இரண்டிடத்திலும் அந்வயிக்கிறது.

இ.—ஒன்பதாம்பாட்டில், பரமபதத்திலேசென்று திருவாசலில் முதலிகளாலே ஸம்மதரானவளவிலே, அங்குள்ள நித்யஸூரிகள் "பரமபதத்திலேவந்த இது என்ன பாக்யபலம்!" என்று விஸ்மயப்பட்டார்களென்கிறார்.

[வைகுந்தப்புகுதலும்] - பரமபதத்தைச்சென்று கிட்டினவளவிலே திருவாசல் காக்கிற முதலிகள், "ஸ்ரீவைகுண்டநாதனுடையார் எங்களுக்கு ஸ்வாமிகள், எங்கள் பதத்தைக்கொள்ளவேணும்" என்றாய்த்து, அவர்கள் பாசுரம். "பயிலுந்திருவுடையார் யவரேலும் - எம்மையாளும் பரமர்" என்ற இவரைப்போலேயாய்த்து அங்குள்ளாருமிருப்பது. திருவாசல் முதலிகள், எதிரேவந்து ஸத்கரித்துக்கையைக்கொடுத்து, கொண்டுபுக்குத்தங்கள் கைப்புடைகளிலேயிருத்திப் பிரம்பையும் கொடுப்பர்களாய்த்து. சென்று புகுகிறவர்களுக்கும் கைங்கர்யமே உத்தேஶ்யம்: அங்கிருக்கிறவர்களுக்கும் கைங்கர்யமே யாத்ரை: ஆகையாலே இவர்கள் கொள்வதும் அவர்கள் கொடுப்பதும் அது. 'புகுக' என்றது - புகுதுக என்றபடி. [வைகுந்தத்தமரரும் முனிவரும்] - இவர்களாலே ஸத்க்ருதரானவளவிலே நித்யஸூரிகள் விஸ்மயப்படுவர்கள். [அமரரும் முனிவரும்] - கைங்கர்யபரரானவர்கள் அமரர், அதுக்கு க்ஷமரன்றிக்கே ஸௌந்தர்ய ஶீலாதிகளிலே ஈடுபடும் ஸ்வபாவரானவர்கள் - முனிவர்கள். "[illegible]" என்கிறபடியே அடிமையிலொன்றும் குறையநிற்கமாட்டாதாரும் குணாநுபவத்துக்கு அவ்வருகு கால்வாங்கமாட்டாதபடியாயிருப்பாருமாய்த்திருப்பது. [வியந்தனர்] - விஸ்மயப்பட்டார்கள். [வைகுந்தம் புகுவது மண்ணவர்விதியே] - ஸம்ஸாரத்திலே ஶப்தாதிவிஷயங்களிலே பழகிப்போந்தவர்கள் பரமபதத்திலேவந்து புகுந்து கைங்கர்யமே யாத்ரையாவதே! இதொரு பாக்யபலமிருந்தபடியே! என்றாய்த்து அவர்கள் கொண்டாடுவது.

ஈடு — ஒன்பதாம்பாட்டு. பரமபதத்திலேசென்று திருவாசலில் முதலிகளாலே ஸத்க்ருதராய், அங்குள்ளநித்யஸூரிகள் "பரமபதத்திலேவருவதே! இதென்ன பாக்யபலம்!" என்று விஸ்மயப்பட்டார்களென்கிறார்.

[வைகுந்தம்புகுதலும் இத்யாதி] - பரமபதத்தைச்சென்று கிட்டினவளவிலே திருவாசல் காக்கும் முதலிகள், "ஸ்ரீவைகுண்டநாதனுடையார் எங்களுடையஸ்வாமிகள், எங்கள் பதத்தைக் கைக்கொள்ளவேணும்" என்றாய்த்து, அவர்கள் பாசுரம். "பயிலுந்திருவுடை

ஒன்பதாம்பாட்டு.—வைகுந்தம் இத்யாதி. "வாசலில்வானவர்" என்றுதொடங்கி "விதியே!" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - பரமபதத்திலே இத்யாதி. பரமபதத்திலேவருவதே யென்றது - மண்ணவராய்வைத்து விண்ணவராவதேயென்றபடி.

இங்குநின்றும் போகிறவர்களை, நித்யஸூரிகள் "எமர்" என்னக்கூடுமோவென்ன - பயிலுந்திரு இத்யாதி. புகுத என்று - கைக்கொள்ளவேணுமென்று. கைக்கொண்டால் தாங்கள்

யார் யவரேலும் - எம்மையாளும்பரமர்''என்ற இவரைப்போலேயாய்த்து, அங்குள்ளாரும் இருப்பது. திருவாசலில் முதலிகள், எதிரேவந்து ஸத்கரித்து, கையைக்கொடுத்து, கொண்டுபுக்குத்தங்கள்கைப்புடைகளிலேயிருத்தி, திருக்கையிலே பிரம்பையும் கொடுப்பர்களாய்த்து. சென்றுபுகுகிறவர்களுக்கும் கைங்கர்யமே உத்தேஶ்யம், அங்கிருக்கிறவர்களுக்கும் கைங்கர்யமே யாத்ரை யாகையாலே, இவர்கள் கொள்ளுவதும்அது; அவர்கள் கொடுப்பதும்அது. 'புகுத' என்றது - புகுதுகவென்றபடி. [வைகுந்தத்தமரரும்முனிவரும்] - ஸ்ரீஹரதாழ்வானையும் இளையபெருமாளையும் போலே, குணநிஷ்ட்டரும் கைங்கர்யநிஷ்ட்டரும். [வியந்தனர்] - விஸ்மயப்பட்டார்கள். [வைகுந்தம்புகுவது மண்ணவர்விதியே] - கடலில் நீர் ஸஹ்யத்திலேயேறக் கோத்தாற்போலே, ஸம்ஸாரிகள் பரமபதத்திலே புகுரும்படிக்கீடாகஸாதஶ்யத்தைப்பண்ணுவதே!என்று விஸ்மயப்பட்டார்கள்.

பத்தாம் பாட்டு.

விதிவகைபுகுந்தனரென்றுநல்வேதியர்
பதியினில்பாங்கினில்பாதங்கள்கழுவினர்
நிதியும்நற்சுண்ணமும்நிறைகுடவிளக்கமும்
மதிமுகமடந்தையரேந்தினர்வந்தே.

ஆ.—(விதிவகை) - நம்முடையஸாதஶ்யத்தினாலே இங்கேபுகுந்தனரென்று, அஸ்கலிதஜ்ஞாநரான * அயர்வறுமமரர்கள், தங்கள் திருமாளிகைகளிலே யதோசிதமாக இவர்களுடைய திருவடிகளை விளக்கினார்கள்; சிரகாலவிரஹிதபுத்ரஸந்தர்ஶநத்தினாலே ஜநநி ப்ரீதையாமாபோலே, இவர்களைக்கண்டு ப்ரீதைகளாய், அந்தப்ரீத்யதிஶயத்தினாலே, ஶரத்காலத்தில் பரிபூர்ணசந்த்ரமண்டலஸத்ருஶமான திருமுகமண்டலங்களையுடையரான பெரியபிராட்டியும் ஸ்ரீபூமிப்பிராட்டியும் நப்பின்னைப்பிராட்டியும், தங்களுடைய திவ்யபரிசாரிகைகளோடேகூட, தங்களுக்குப் பரமதநமான ஸ்ரீசடகோபனும் நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும் மற்றும் மங்களமான ஸத்காரோபகரணங்களையெல்லாம் ஏந்திக்கொண்டு வந்தெதிர்கொண்டார்களென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில்,ஸம்ஸாரத்தில்நின்றும் ஸ்ரீவைகுண்டத்திலேசென்ற ஸ்ரீவைஷ்ணவர்களை அங்குள்ள அயர்வறுமமரர்கள் கொண்டாடும்படியை அருளிச்செய்கிறார்.

[விதிவகையென்று தொடங்கி] - தங்கள் ஸாக்யத்தாலன்றிக்கே நம்முடைய ஸாக்யத்தாலே ஸம்ஸாரிகளானவர்கள் இங்கே வந்து புகுரப்பெற்றோமென்று வேதத்தில் உபநிஷத்ஸாமங்களாலே ப்ரதிபாத்யரானநித்யஸூரிகள் தங்கள் கோயில்களிலே

கொடுக்கும் வரிசையேதென்ன - திருவாசலில் இத்யாதி. கைப்புடை - வாசல்காப்பாரிருக்குமிடம். பிரம்பைக்கொடுக்குமது அதிஶயமாகக் கூடுமோவென்ன - சென்று இத்யாதி. 'புகுத' என்று சொன்னவளவிலே, வைகுந்தத்தமரரும் முனிவரும் "வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே!" என்று வியந்தனரென்றபடி. அமரர் - கைங்கர்ய நிஷ்ட்டர். முனிவர் - குணநிஷ்ட்டர். 'வைகுந்தம் புகுதலும்' என்று தொடங்கி, 'முனிவரும் - வைகுந்தம் புகுவது மண்ணவர்விதியே என்று வியந்தனர்' இத்யந்வய:.

(கூ)

தங்கள் தாழ்ச்சிதோன்றும்படியிருந்து அவர்களுடைய ஸ்ரீபாதங்களை விளக்கினார்கள். [நிதியுநற்சுண்ணமுமென்று மேலுக்கு] - ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நியதியான திருவடிநிலைகளையும் நற்சுண்ணத்தையும் நிறைகுடங்களையும் மங்களதீபங்களையும் ஏந்தி, நெடுங்காலம் ப்ரஜைகளைப்பிரிந்து கண்ட தாய்மாரைப்போலே ஹ்ருஷ்டமாய்ப் பூர்ண சந்த்ரனைப்போலேயிருக்கிற முகங்களையுடைய பகவத்பரிசாரிகைகள் வந்து எதிர்கொண்டார்கள்.

ப.—அநந்தரம், ஸ்ரீவைகுண்டநாதன் நியோகத்தாலே ஸூரிகளும் திவ்யாப்ஸரஸ்ஸுக்களும் ஆதரித்தபடியை யருளிச்செய்கிறார்.

விதிவகை - நம்முடைய பாக்யரூபமான ஈஶ்வரநியோக ப்ரகாரத்திலே, புகுந்தனர் - வந்துபுகுந்தார்கள், என்று-என்று(ப்ரீதராய்), நல்வேதியர் - விலக்ஷணஸ்வபாவராய் ("ஸாத்யாஸ்ஸந்தி தேவா:" என்று வேதாந்த)வேத்யரானஸூரிகள், பதியினில் - (தந்தாமுடைய) திவ்யஸ்தாநங்களிலே, பாங்கினில் - ஸோபசாரமாக, பாதங்கள்கழுவினர்-(அவர்) திருவடிகளை விளக்கினார்கள்; நிதியும் - "பநம்ஸீயம்" என்கிறபடியே ஆஸ்ரிதர்க்கு நியதியான திருவடிநிலைகளையும், நற்சுண்ணமும்- (திருமேனியோட்டை ஸ்பர்ஶத்தாலே) விலக்ஷணமான திருச்சூர்ணத்தையும், நிறைகுடம் - பூர்ணகும்பங்களையும், விளக்கமும் - மங்களதீபங்களையும், (இவர்கள் தர்ஶநத்தாலே), மதி - பூர்ணசந்த்ரனைப் போலேவிளங்குகிற, முகம் - முகத்தையுடையராய், மடந்தையர் - தங்கள் பாரதந்த்ர்ய ஸூசகமான மடப்பத்தையுடைய திவ்யாப்ஸரஸ்ஸுக்கள், வந்து - எதிரேவந்து, ஏந்தினர் - ஏந்தினார்கள்.

இ.—பத்தாம்பாட்டில், நித்யஸூரிகள் இவர்களைக் கொண்டாடும்படியை அருளிச்செய்கிறார்.

[விதிவகை புகுந்தனரென்று] -வைகுந்தம்புகுவது மண்ணவர்விதியே என்று இவர்கள் சொல்லுகிறவிது வார்த்தையன்றென்று வேறே சிலர் 'இவர்கள் இங்கேவந்து புகுரப்பெற்றஇது நாம் பண்ணின பாக்யபலமன்றோ!' என்பர்கள். விஷயங்கள்நடையாடுகிற ஸம்ஸாரத்திலேயிருந்துவைத்து அநந்யப்ரயோஜநராய்பகவத்குணாநுபவம் பண்ணப்பெற்ற மஹாபுருஷர்களாய் "விண்ணுளாரிலும் சீரியர்" என்கிறவர்கள் இங்கே வந்து புகுரப்பெற்றஇது நாம் பண்ணின பாக்யமன்றோ என்பர்கள். "வைகுந்தம் புகுவது"என்றது அங்கு;இங்கு- 'புகுந்தனர்'என்கையாலேதங்கள் பாக்யத்தைக்காட்டுகிறது. [நல்வேதியர்]-உபநிஷத் பாகத்தில் ப்ரதிபாத்யரானவர்கள். "யத்ர ருஷய:, யத்ர பூர்வே"என்றுஓதப்படுகிறவர்கள். [பதியினில்]- எதிரேபுறப்பட்டுஆதரித்துத் தங்கள் கோயில்களிலே கொண்டுபுக்கு.[பாங்கினில் பாதங்கள் கழுவினர்] - தங்கள் ஆஸநங்களிலே இவர்களைவைத்துத் தங்கள் தாழ்ச்சிதோற்றத் தரையிலேயிருந்து தங்கள் மஹிஷிகள் நீர்வார்க்க இவர்கள் ஸ்ரீபாதத்தை விளக்கினார்கள். [நிதியும்நற்சுண்ணமும் இத்யாதி] - அவ்வளவிலே பகவத்பரிசாரிகைகள் வந்து எதிரேற்பர்கள். வைஷ்ணவர்களுக்குநியதியான திருவடிநிலைகளையும் திருச்சுண்ணப்ரஸாதத்தையும் நிறைகுடங்களையும் மங்களதீபங்களையும் ஏந்தி. [மதிமுகமடந்தையர்] - தேஶாந்தரம்போன ப்ரஜைவந்து கிட்டினால் தாய்முகம் குளிர்ந்திருக்குமாபோலே ஹர்ஷத்தாலே பூர்ணசந்த்ரனைப்போலேயிருக்கிற முகங்களையுடையவர்கள் வந்து எதிர்கொண்டார்கள்,

ஈடு.—பத்தாம்பாட்டு. நித்யஸூரிகள் இவர்களைக் கொண்டாடும்படியை யருளிச்செய்கிறார்.

[விதிவகைபுகுந்தனரென்று] - "வைகுந்தம்புகுவது மண்ணவர்விதியே!" என்று இவர்கள் சொல்லுகிறது வார்த்தையன்றென்று, வேறே சிலர் "இவர்கள் இங்கே வந்து புகுரப்பெற்றது நாம் பண்ணின [illegible] பலமன்றோ?" என்பர்கள். விஷயங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே யிருந்துவைத்து அநந்யப்ரயோஜநராய், [illegible]வத்குணாநுபவம் பண்ணப்பெற்ற மஹாபுருஷர்களாய், "விண்ணுளாரிலும்சீரியர்" என்கிற இவர்கள் இங்கேவந்து புகுரப்பெற்றது,நாம்பண்ணினஸாக்யபலமன்றோ என்பர்கள். "வைகுந்தம் புகுவது" என்றதுஅங்கு; இங்கு 'புகுந்தனர்'என்கையாலே - தங்கள்ஸாக்யத்தைக் காட்டுகிறது. [நல்வேதியர்] - "[illegible]" (யத்ரர்ஷயஃப்ரதமஜாயேபுராணாஃ) "[illegible]" (யத்ரபூர்வேஸாத்யாஸ்ஸந்திதேவாஃ) "[illegible]" (தத்விப்ராஸோவிபந்யவோஜாக்ருவாம்ஸஸ்ஸமிந்ததே) என்று வேதங்களாலே ப்ரதிபாத்யரானவர்கள். [பதியினில்] - அநந்த வைநதேயாதிகள் தங்கள்திருமாளிகைகளிலே கோபுக்கு.[பாங்குஇத்யாதி] - "இவன்ஒருஸம்ஸாரிசேதநன்: நாம் அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தர்" என்றுவாசிவையாதே, இவனை ஸிம்ஹாஸநத்திலே யுயரவைத்து, அவர்களுக்குப் பாங்காகத் தாங்களிருந்து திருவடிகளை விளக்குவர்கள். [நிதியித்யாதி] - அவ்வளவிலே [illegible]வத்பரிசாரிகைகள் வந்துஎதிரேற்பர்கள். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நிதியான திருவடிநிலைகளையும், திருச்சுண்ணப்ரஸாதத்தையும், நிறைகுடங்களையும், மங்களதீபங்களையுமேந்தி. [மதிமுகமடந்தையர்] - தேசாந்தரம்போன ப்ரஜை வந்தால் தாய்முகங்குளிர்ந்திருக்குமாபோலே, ஹர்ஷத்தாலே, பூர்ணசந்த்ரனைப்போலேயிருக்கிற முகங்களையுடையவர்கள் வந்தேதிர்கொண்டார்கள். (௧௦)

பத்தாம்பாட்டு.—விதிவகை இத்யாதி. "நல்வேதியர் - விதிவகைபுகுந்தனரென்று - பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - நித்யஸூரிகள் இத்யாதி.

"மண்ணவர்விதி" என்னாதே, ஸாமாந்யமாக "விதிவகை" என்றதுக்குபாவம் - வைகுந்தம் இத்யாதி. விவரணம் - விஷயங்கள் இத்யாதி. கீழே - அவர்கள் ஸாக்யத்தாலேயென்று சொல்லி, இங்கே - நம்முடையஸாக்ய மென்கைக்கு நியாமகமேதென்ன - வைகுந்தம் இத்யாதி. அதாவது - கீழைப்போலன்றிக்கே, "புகுந்தனர்" என்று ப்ரவேஸத்தை ப்ரத்யக்ஷமாகக்காட்டுகையாலே, தத்ஹேதுவான ஸ்வஸாக்யத்தைக் காட்டுகிறதென்றபடி.நல்வேதியர்-ஸ்ரீ புருஷஸூக்தாதிகளில் ப்ரதிபாத்யரானவர்களென்றபடி. வைதிகத்வத்தில் நன்மையாவது - ஸ்ரீ புருஷஸூக்தாதிப்ரதிபாத்யத்வம். "[illegible]ஜாஃ-ருஷயஃ" என்கையாலே-நித்யாஸங்குசிதஜ்ஞாநரென்கிறது. "[illegible]ராணாஃ" - [illegible]வதநுபவத்தாலே யிளகிப்பதித்தவர்கள். புராபிநவாஃ புராணாஃ என்றபடி. விப்ராஸஃ - மேதாவிநஃ. தத்விபந்யவ: - ஸகவத்விஷயஸ்துதிபராஃ. ஜாக்ருவாம்ஸஃ - ஸகவதநுபவைகாக்ராஃ ஸமிந்ததே- விளங்காநின்றார்களென்றபடி.மேலுக்கு பாவம் - அவ்வளவிலே இத்யாதி. தாத்பர்யம் - தேசாந்தரம் இத்யாதி. 'நல்வேதியர் - விதிவகைபுகுந்தனரென்று - பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்: நிதியும்' என்றுதொடங்கி, 'வந்து - எந்தினர்' இத்யந்வயஃ. (௧௦)

பதினோராம் பாட்டு.

வந்தவரெதிர்கொள்ள மாமணிமண்டபத்து
அந்தமில்பேரின்பத்துஅடியரோடிருந்தமை
கொந்தலர்பொழில்குருகூர்ச்சடகோபன்சொல்
சந்தங்களாயிரத்துஇவைவல்லார்முனிவரே.

ஆ.—(வந்தவர்.) - ஸர்வேஶ்வரனும் ஸ்ரீய:பதியாயிருந்த எம்பெருமான் தானும் வந்தெதிர்கொள்ளத் திருமாமணிமண்டபத்திலேசென்று அந்தமில்பேரின்பம் விளையும்படியாக * அயர்வறுமமரர்களோடேகூடத் தாம் இருந்தமையைச் சொன்ன இத்திருவாய்மொழியை வல்லார், அந்தமில்பேரின்பத் தடியரோடு இருக்கப் பெறுவ ரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லார் வைகுந்தத்துமுனிவரோ டொப்பர் என்கிறார்.

[வந்தவரெதிர்கொள்ள] - பிராட்டியோடேகூட எம்பெருமான் தானும்வந்து எதிர்கொள்ள. அயர்வறுமமரர்கள் என்றுமாம். [மாமணி மண்டபத்தென்று தொடங்கி] - திருமாமணி மண்டபத்திலே பரமப்ராப்யரான அயர்வறுமமரர்கள் நடுவே ஆநந்த நிர்஭ரராய்க்கொண்டு இருந்தமையை. [கொந்தலர் பொழிலென்று தொடங்கி] - மிகவும் பூத்தபொழிலோடு கூடின திருநகரியையுடைய ஆழ்வாருடைய உக்தியாய் ஛ந்தோரூப மான ஆயிரந் திருவாய்மொழியிலும்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக ஸம்வதநுஸவத்தை யருளிச்செய்கிறார்.

அவர் - (லக்ஷ்மீஸஹாயரான)அவர்தாமே, வந்து எதிர்கொள்ள-, மாமணி மண்டபத்து - திருமாமணிமண்டபத்திலே, அந்தம்இல் - முடிவின்றியே, பேர் - அபரிச்சிந்நமான, இன்பத்து - ஆநந்தத்தையுடைய, அடியரோடு - ஸூரிகளோடேகூடி, இருந்தமை - இருந்தப்ரகாரத்தை, கொந்துஅலர் - பூங்கொத்துஅலருகிற, பொழில் - பொழிலையுடைய, குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொல் - அருளிச்செய்ததாய், சந்தங்கள் - சந்தஸ்ஸுக்களான வ்ருத்தஹேதங்களை யுடைய, ஆயிரத்து-, இவை - இப்பத்தையும், வல்லார் - அநுஸந்திக்கவல்லவர்கள், முனிவர் - (பரமபதத்திலே) ஸமவத்குணமநநஶீலராவர்கள். சந்தஸ்ஸுக்கள்என்று வேதமாகவுமாம். வந்தவரெதிர்கொள்ளஎன்று - ப்ரதாநரான விஷ்வக்ஸேநாதிகளாகவு மாம். இது கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார் பரமபதத்தில் முனிவர்களோ டொப்பர் என்கிறார்.

[வந்தவரெதிர்கொள்ள] - பிராட்டியோடே எம்பெருமான் தான் வந்து எதிர் கொள்ள. அப்ராக்ருதரான அயர்வறுமமரர்க ளென்றுமாம். [மாமணி மண்டபத்து] - ஆநந்தமயமான திருமாமணிமண்டபத்திலே. [அந்தமில் பேரின்பத்து] - யாவதாத்மபாவி யாய் நிரதிஶயமான ஆநந்தத்தை யுடையராய்க்கொண்டு. ஆநந்த நிர்஭ரராய்க்கொண்டு

ஸம்ஸாரத்தில் து:கத்துக்குஎல்லையுண்டாகிலாய்த்து, அஸ்ஸுகத்துக்கு அவதிசொல்ல லாவது? [அடியரோடிருந்தமை] - "அடியார்கள்குழாங்களை உடன்கூடுவதென்று கொலோ" என்று ஆசைப்பட்டபடியே யிருந்தமையை. அவர்களும் தங்களுக்கு 'ஸஹவாஸம்' பண்ணுகைக்குத் துணைதேடியிறேயிருப்பது? நித்யவஸந்தமான சோலையையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த. போக்கிலே ஒருப் பட்டவாறே திருநகரி தொடங்கிச் சோலைசெய்தாற்போலேயிருக்கை. [சந்தங்களாயி ரத்து] - சந்தஸ்ஸுக்களை யுடைத்தான ஆயிரம் என்னுதல், சந்தோரூபமான ஆயிர மென்னுதல். [இவைவல்லார் முனிவரே] - இப்பத்தையும் அப்யஸிக்கவல்லார் அத் தேசத்திலே ஸ்ரவண ஸுஜநஸம்பண்ணி அதிலே வித்தராய் அதுக்கு அவ்வருகு கால்வாங்கமாட்டாதே யிருக்குமவர்களைப்போலேயாவர்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸித்தவர்கள் நித்யஸூரிகளோடு ஒப்பர் என்கிறார்.

[வந்தவரெதிர்கொள்ள] - பிராட்டியோடேகூட எம்பெருமான் தான் வந்தெதிர் கொள்ள. அப்ராக்ருதரான * அயர்வறுமமரர்கள் என்னவுமாம். [மாமணிமண்டபத்து] - ஆநந்தமயமான திருமாமணிமண்டபத்திலே. [அந்தமில்பேரின்பத்து] - * அநந்தக்லேஶ பாஜநத்துக்கு எதிர்த்தட்டிறே; ஸம்ஸாரத்தில் ஸுகமென்று ப்ரமிக்குமித்தனை, து:கமே யுள்ளது. பாண்டு ஒருவன்மேலே அம்பைவிட, "ஸம்ஸாரத்தில் ஆயிரம்கூற்றில்ஒரு க்ஷணமாய்த்து ஸுகமுள்ளது; அத்தனையும் பூஜிக்கவொட்டிற்றிலையே" என்றானிறே. [அடியரோடிருந்தமை] - "அடியார்கள்குழாங்களை உடன்கூடுவதென்றுகொலோ?" என்று ஆசைப்பட்டபடியே யிருந்தமை. [கொந்தலர் இத்யாதி] - நித்யவஸந்தமான சோலையையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வார்அருளிச்செய்த. போக்கிலே ஒருப் பட்டவாறே திருநகரியேதொடங்கிப்போலேகாணும் சோலைசெய்வது. [சந்தங்களாயி ரத்து] - சந்தஸ்ஸுக்களையுடைத்தான ஆயிரமென்னுதல், சந்தோரூபமான ஆயிரமென்னு தல். [இவைவல்லார்முனிவரே] - இப்பத்தை யப்யஸிக்கவல்லார் அத்தேசத்திலே

நிகமம்.—வந்தவர் இத்யாதி. "இவைவல்லார்முனிவர்" என்றத்தைக் கடாக்ஷித்தவ தாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

"அவர் - வந்து - எதிர்கொள்ள" என்றந்வயித்து, "அவர்" என்றதசப்தம் ப்ரக்ருதபரா மர்ஶியாகையாலே, "வடிவுடைமாதவன்" என்று - கீழே ஶ்ரிய:பதி ப்ரஸ்துதனாகையாலே, அத்தை யுட்கொண்டருளிச்செய்கிறார் - பிராட்டியோடு இத்யாதி. "நல்வேதியர்" என்று - ஸூரிகளும் ப்ரஸ்துதரென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - அப்ராக்ருதரான இத்யாதி. ஆக, "அவர்" என்று - பிராட்டியும் ஈஶ்வரனுமாதல், நித்ய ஸூரிகளுமாதலென்றர்த்தத்வயம். இத்தால் பாவம் - அநந்த இத்யாதி. ஸம்ஸாரத்தில் ஸுகமில்லையோவென்ன - ஸம்ஸாரத்தில் இத்யாதி. ஸம்ஸாரத்திலே து:கமேயுள்ளதென்றதுக்கு ஸம்வாதம் - பாண்டு இத்யாதி. ஒருவன்மேலே-ம்ருகமாயிருந்த ருஷி மேலே. 'என்றானிறே' - அம்புபட்டவனென்றபடி. ஒருருஷி, மானாய், தானும் தன்னுடைய ஸ்த்ரீயுமாய்க்கொண்டு ஸம்ஶ்லேஷித்துக்கொண் டிருக்கிறவளவிலே, பாண்டு அவன்மேலே அம்பைவிட, அந்த பாண்டுவைப்பார்த்து, "பாவி! ஸம்ஸாரத்தில் ஸுகமேயில்லை; உண்டானாலும் ஆயிரம்கூற்றிலொரு க்ஷணமாய்த்து ஸுகமுள்ளது; அம்மாத்ரத்தையும் பூஜிக்கவொட்டிற்றிலை" என்றானிறே யென்றபடி. இருந்தமை - இருந்தப்ரகாரத்தை. பரமாத்மாவோடே கூடுகையன்றோ உத்தேஶ்யம், அடியரோடிருக்கை யுத்தேஶ்யமோவென்ன - அடியார்கள் இத்யாதி. இப்போது "கொந்தலர்" என்கிறதென்னென்ன - போக்கிலே இத்யாதி. சந்தஸ்ஸுக்களை - லக்ஷணங்களை, சந்தோரூபமான - வேதரூபமான. "முனிவர்" என்றதுக்கர்த்தம் - இப்பத்தை இத்யாதி. கொந்த

ஸ்ரவத்குணாநுபவம்பண்ணி அதிலேவிஜராய் அதுக்கு அவ்வருத்து கால்வாங்கமாட்டாதே யிருக்குமவர்களைப்போலே யாவர்கள்.

லர் - கொத்துக்கொத்தாகவலருகிற. முனிவர் - மநநசீலரானவர்கள். "சொல்" என்றது - சொன்னவென்றபடி. "அந்தமில் பேரின்பத்து" என்றது - ஆழ்வார்க்குவிசேஷணமாதல், * அடியார்க்கு விசேஷணமாதல். (கக)

த்ராவிடோபநிஷத்ஸங்கதி.— [illegible]

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— [illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி.

சூழ்ந்துநின்றமால்விசும்பில்தொல்லைவழிகாட்ட
ஆழ்ந்ததனைமுற்றுமநுபவித்து - வாழ்ந்தங்கு
அடியருடனேயிருந்தவாற்றையுரைசெய்தான்
முடிமகிழ்சேர்ஞானமுனி.

பத்தாந் திருவாய்மொழி—முனியே - ப்ரவேஶங்கள்.

ஆ—(முனியேநான்முகனே.) - இப்படி *அந்தமில்பேரின்பத் தடியரோ டிருந்த ஆழ்வார், தாம் 'இந்தப்ரக்ருதியிலேயிருந்தஇருப்பைக் காணாய்' என்று ஏங்கிக் கூப்பிடுகிறார்.

ஒ.—பத்தாந் திருவாய்மொழியில், திருநாட்டிலேபுக்கு அந்தமில்பேரின்பத் தடியரோடிருந்த ஆழ்வார் அவ்விருப்பு ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமாய் பாஹ்யஸம்ஶ்லேஷ யோக்யமன்றிக்கே ப்ரக்ருதிவஶ்யரானமையை அறிந்து, மேருஶிகரத்திலேயிருந்து நிர்துஃகனைப் மிகவும் ஸுகியாநின்றுவைத்துதுஃகபஹுளமாய் துஸ்தரமாய் மிகவும் ஓரிடத்திலும் ஸ்த்ருதியில்லாதபடி பேராழமான கடலின்நடுவே தள்ளுண்டவனைப்போலே அவஸந்நராய், அதுக்குமேலே தமக்கு அவன்பண்டுகைவந்தபடியையும் தன்னைப்பெறுகைக்கு உபாயம் தானே அல்லதின்றிக்கே யிருந்தபடியையும் அவ்வளவன்றிக்கே எல்லார்க்கும் அவனல்லது வேறுரக்ஷகரின்றிக்கே யிருக்கிறஇருப்பையும் அநுஸந்தித்து, இப்படியே யிருக்கிறவனை அக்ஷணத்திலே பெறாமையாலே பசியாலும் தாஹத்தாலும் தளர்ந்து, தாயையும் காணப்பெறாத ஸ்தநந்தயப்ரஜை ஆர்த்தியின் மிகுதியாலே கூப்பிடுமாபோலே நிர்க்ருணாருடைய ஹ்ருதயங்களுங்கூட இரங்கும்படி வளவேழுலகிற்படியையுடைய தாம் தம்முடைய ஆர்த்தியின்மிகுதியாலே தம்

முடைய ஸ்வரூபம் அநுஸந்திக்கவும் க்ஷமரன்றிக்கே கலங்கி அவனுக்கு இட்ட அடி பேரவொண்ணாதபடி பெரியபிராட்டியார் திருவாணையிட்டு, காட்டுத்தீயிலே அகப்பட்டாரைப்போலே போக்கடியற்று மஹாக்லேஶத்தோடே தூதப்ரேஷணத்தால் பிறவாயி விட்டு நீட்டத் தவிர்ந்து, தம்மை ரக்ஷித்தல்லது எம்பெருமானுக்குத் திருநாட்டிலுங்கூட இருப்பரிதாம்படி பெருமிடறுசெய்து ஆர்த்தத்வநியோடே மிகவும் கூப்பிட்டு தரிக்கமாட்டாமை ஶரணம்புக, பரமதயாளுவான ஸர்வேஶ்வரன் பெரியபிராட்டியாரோடே கூடப் பெரியதிருவடிமேலே இவர் அபேக்ஷித்தாற்போலே தானானபடியே பரிபூர்ணமாக வந்து தோற்றியருளி இவருடைய ப்ரக்ருதிஸம்பந்தத்தையறுத்து இவருடையவிடாயும் தன்னுடையவிடாயும் தீரும்படி ஸம்ஶ்லேஷித்துத் தம்முடைய அபேக்ஷிதங்களெல்லாம் செய்தருளினான் என்கிறார்.

ப.— பத்தாந்திருவாய்மொழியில், கீழ் அர்ச்சிராதிமார்க்கத்தாலேபோய் தேஶவிஶேஷத்திலேபுக்குத் திருமாமணிமண்டபத்திலே யேறி ஸூரிபரிஷத்திலே அந்தர்ப்பவித்து நிரதிஶயாநந்தயுக்தனாய்க்கொண்டு முக்தனிருக்குமிருப்பை அபரோக்ஷிப்பிக்க, பரஜ்ஞாநத்தாலே இது தம்முடையபேறாக ஸாக்ஷாத்கரித்து அநுபவித்தவர், அந்த ஸமாதி குலைந்தவாறே †(முன்பிருந்த ஸம்ஸாரத்தை தர்ஶித்து) "கொடுவுலகங் காட்டேலே" என்று தாம் அஞ்சியிருந்த ஸம்ஸாரத்தை தர்ஶித்து மிகவும் ஆர்த்தராய், அபரோக்ஷிதமான இப்பேற்றைப்பெற்றல்லது தரிக்கமாட்டாதபடி பரமபக்திரூபமான நிரவதிகாபிநிவேஶம்பிறந்து இவ்வளவும் நம்மைப்புகுர நிறுத்தினவன் தானே முழுக்க நிர்வஹிப்பானாக ஏறிட்டுக்கொண்டு பெரியதிருவடி திருத்தோளிலே ஸந்நிஹிதனாய்த் தந்தலையிலே திருவடிகளைவைத்து பலப்ரதாநத்திலே அதித்வரிதனாம்படியை யநுஸந்தித்து, அவ்வநுஸந்தாநபாவநத்வத்தாலே அபரோக்ஷிதனான ஸர்வேஶ்வரனுடைய உபகாரமான போக்யவிக்ரஹத்தையும், லக்ஷ்மீவல்லபத்வத்தையும், ஸர்வகாரணத்வத்தையும், ஸமஸ்தவஸ்து ப்ரகாரபோகத்தையும், அதிஶயிதபோக்யத்வத்தையும், அத்யந்தப்ரணயித்வத்தையும், ஆஶ்ரிதரக்ஷகத்வத்தையும், ஸர்வாந்தராத்மத்வத்தையும், ஸமஸ்தப்ரயோஜநத்வத்தையும், பரிபூர்ணபோகப்ரதத்வத்தையும் அநுபவித்து, ஏவம்விஶிஷ்டனான ஸர்வேஶ்வரனுடைய ஸந்நிதியிலே தம்முடைய ஆர்த்தியும் அபிநிவேஶாதிஶயமும் தோற்றும்படி அவனுடைய உபகாரகத்வாதிகளைச்சொல்லி மறுக்கவொண்ணாதபடி பிராட்டி திருவாணையிட்டு "ஸர்வப்ரகார ரக்ஷகனான நீ எனக்குப் பூர்ணாநுபவத்தைத் தரவேணும்" என்று மிகவும்கூப்பிட, அவனும் இவருடையவாவுக்கீடாக குணவிக்ரஹவிபூதிபரிபூர்ணனாய்க்கொண்டு பிராட்டியோடுங்கூட ஏகரஸமாம்படி ஸம்ஶ்லேஷித்த ப்ரகாரத்தையநுபவித்து, இனிஇந்தப்பேற்றுக்குத் தட்டில்லையென்று நிஷ்கர்ஷித்து, தாம் அவாப்தஸமஸ்தபலரானபடியைப் பேசி முடித்தருளுகிறார்.

இ.—பத்தாந் திருவாய்மொழியில், பரமபதத்திலேபுக்கு "அந்தமில்பேரின்பத்தடியரோடிருந்தமை" என்று நிரதிஶயாநந்தயுக்தராய் அத்திரளிலேயிருந்த இருப்பு ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமாய் பாஹ்யஸம்ஶ்லேஷத்துக்கு யோக்யமன்றிக்கேயிருக்கிறவதுக்குமேலே, "இல்லைகண்டீர் இன்பம்" என்றும், "பிறப்பாம் பொல்லா அருவினைமாயவன் சேற்றள்ளல்பொய்நிலம்" என்றும், தாம் பிறர்க்கு உபதேஶிக்கிற ஸம்ஸாரத்திலே ப்ரக்ருதி வஶராயிருக்கிறபடியைக்கண்டு மேருஶிகரத்திலே நிர்துஃகனாய் ஸுகோத்தரனாயிருக்கிறான் ஒருவன் துஃகபஹுளமாய் துஃஸ்தரமாய்ப் போராழமாய் ஓரிடத்

† குண்டலிதம் ப்ரக்ஷிப்தமா யிருக்கலாம்,

திலும் ஸ்திதியின்றிக்கேயிருக்கும்படியான பாதாளத்திலே விழுந்துநோவுபடுமாபோலே அவஸந்நராய், அதுக்குமேலே தமக்கு அவன் பண்டு கைவந்தபடியையும் தன்னைப்பெறுகைக்கு உபாயம் தானேயல்லதின்றிக்கே யிருக்கிறபடியையும், தன் தலையிலே ஸாதநத்தை ஏறட்டுக்கொண்டு அநுஷ்டிக்குமவனுக்கும் தன் கைபார்த்திருக்கவேண்டும்படி ஸர்வரக்ஷகனாயிருக்கிற இருப்பையும் அநுஸந்தித்து அக்ஷணத்திலே பெருமையாலே 'அப்படியேயிருக்கிறவன் நம்மை இங்ஙனே நோவுபடவிட்டுவைப்பதே!' என்று மிகவும் அவஸந்நராய், மாதாபிதாக்கள் ஸந்நிதியுண்டாயிருக்கப் பசியாலும் தாஹத்தாலும் நோவுபடுகிற ஸ்தநந்தய ப்ரஜை ஆர்த்தியின்மிகுதியாலே கூப்பிடுமாபோலே வளவேழுலகிற்படியையுடைய தாம் தம்ஸ்வரூபத்தை அநுஸந்திக்கவும் க்ஷமரன்றிக்கே ஈஶ்வரன்தர்வாயிலேயிட்டு நீட்டுகையுமன்றிக்கே அவன் தன்னெதிரேநின்று பிராட்டியாணையிட்டுத் தலக்கற்றுச்சொல்லும்படியான ஆற்றாமையோடே நிர்வேதருணருடைய ஹ்ருதயங்களுங்கூட இரங்கும்படியாகவும் அவனுக்குத் தம்மைரக்ஷித்தல்லது பரமபதத்திலுங்கூட இருப்பரிதாம்படியாகவும் காட்டுத்தீயிலே யகப்பட்டாரைப்போலே ஆர்த்தத்வநியோடே பெருமிடறுசெய்து கூப்பிட்டு, "ஶாவாத்ரோமாராவணஸாயகார்த்தா ஜக்மு: ஶரண்யம்ஶரணம்ஸுராத்மா:" என்கிறபடியே தரிக்கமாட்டாமையாலே அவன் திருவடிகளிலே ஶரணம்புக; பரமஶயாளுவாகையாலே, "இவரை யிப்படி நோவுபடவிட்டு வைத்தோமாகாதே!" என்று இவரிலும்காட்டில் தான் நொந்து பிராட்டியோடேகூடப் பெரியதிருவடிமேலே இவர் அபேக்ஷித்தபடியே பரிபூர்ணமாகவந்து தோன்றியருளி, இவருடைய ப்ரக்ருதி ஸம்பந்தத்தையு மறுத்து, "அடியார்கள்குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ?" என்று இவர்ஆசைப்பட்டபடியே அத்திரளிலே புகப்பெற்று "என்னவாவறச்சூழ்ந்தாயே" என்றும் "அவாவற்று வீடுபெற்ற" என்றும், இவர்தம் வாயாலே சொல்லும்படி இவர் விடாயும்தீர்ந்து இவர்க்கும் அவ்வருசான தன்விடாயும் தீரும்படி ஸம்ஶ்லேஷித்தருளினனென்கிறார்.

ஈடு.—பரமபதத்திலேபுக்கு "அந்தமில்பேரின்பத் தடியரோடிருந்தமை" என்று நிரதிஶயாநந்தயுக்தராய் அத்திரளிலேயிருந்தவிருப்பு ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமாய் பாஹ்யஸம்ஶ்லேஷத்துக்கு யோக்யமன்றிக்கேயிருக்கிற இதுக்குமேலே, "இல்லைகண்டீ ரின்பம்" என்றும் "பிறப்பாம்போல்லாஅருவினை மாயவன் சேற்றள்ளல் பொய்ந்நிலம்" என்றும் தாம் பிறர்க்கு உபதேசிக்கிற ஸம்ஸாரத்திலே ப்ரக்ருதிவஶராயிருக்கிறபடியைக் கண்டு, மேருசிகரத்திலே நிர்த்து:கனாய் ஸுகோத்தரனாயிருக்கிறானொருவன், உபாஶ்வ பஹுளமாய் துஸ்தரமாய்ப் பேராழமாய் ஓரிடத்திலும் ஸ்த்திதியின்றிக்கே யிருக்கும்படியான பாதாளத்திலேவிழுந்து நோவுபடுமாபோலே அவஸந்நராய், அதுக்குமேலே, தமக்கு அவன் பண்டு கைவந்தபடியையும், தன்னைப் பெறுகைக்கு உபாயம் தானேயல்லதின்றிக்கே யிருக்கிறபடியையும், தன் தலையிலே ஒரு ஸாதநத்தை ஏறட்டுக்கொண்டு அநுஷ்ட

முனியே நான்முகன் ப்ரவேஶம், கீழோடே ஸங்கதி - **பரமபதத்திலே** இத்யாதி. **ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமாய்** - அநுஸந்தாநரூப ஜ்ஞாநமாத்ரமாய். பரமபதத்திலே பரமாநந்த யுக்தரானவர் ப்ரக்ருதிவஶராய் நோவுபடுகைக்கு த்ருஷ்டாந்தம் - **மேரு** இத்யாதி. **பேராழம்** - அத்யகாதம். "என்னையுயிர்வேறின்றி யொன்றாகவே" இத்யாதியைப்பற்ற - **தமக்குஅவன்பண்டு** இத்யாதி. "ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்" என்றத்தைப்பற்ற - **தன்னைப் பெறுகைக்கு** இத்யாதி. "மேவித்தொழும் பிரமன்சிவன்" இத்யாதியைப்பற்ற - **தன்தலையிலே**

டிக்குமவனுக்கும் தன் கைபார்த்திருக்க வேண்டும்படி ஸர்வரக்ஷகனாயிருக்கிற இருப்பையும் அநுஸந்தித்து, அக்ஷணத்திலே பேறுமையாலே "இப்படியிருக்கிறவன் நம்மை இங்ஙனே நோவுபடவிட்டுவைப்பதே!" என்று மிகவும் அவஸந்நராய், மாதாபிதாக்கள் ஸந்நிதியுண்டாயிருக்கப்பசியாலும் தாஹத்தாலும் நோவுபடுகிற ஸ்தநந்தயப்ரஜை ஆர்த்தியின் மிகுதியாலே தாய்பேரைச் சொல்லிக் கூப்பிடுமோபோலே, *வளவேழுலகிற்படியையுடைய தாம், தம் ஸ்வரூபத்தை யநுஸந்திக்க க்ஷமரன்றிக்கே தூதர்வாயிலிட்டு நீட்டுகையுமன்றிக்கே, அவன்தன் எதிரேநின்று பிராட்டியாணையிட்டுத் தலக்கற்றுச் சொல்லும்படியான ஆற்றாமையோடே, நிர்ஹேதுகருணருடைய ஹ்ருதயங்களுங்கூட இரங்கும்படியாகவும், அவனுக்குத் தம்மை ரக்ஷித்தல்லது பரமபதத்திலும் இருப்பரிதாம்படியாகவும், காட்டுத்தீயிலே யகப்பட்டாரைப்போலே ஆர்த்தத்வநியோடே பெருமிடறுசெய்து கூப்பிட்டு, "ஶாகாம்ருகா ராவணஸாயகார்த்தா ஜக்முஶ்ஶரண்யம் ஶரணம் ஸ்ம ராமம்" (ஶாகாம்ருகாராவணஸாயகார்த்தா ஜக்முஶ்ஶரண்யம்ஶரணம்ஸ்மராமம்) என்கிறபடியே தரிக்கமாட்டாமையாலே அவன் திருவடிகளிலே ஶரணம்புக; பரமதயாளுவாகையாலே "இவரை யிப்படியே நோவுபடவிட்டுவைத்தோமாகாதே!" என்று இவரிலுங்காட்டில் தான் நொந்து; பிராட்டியோடே கூடப் பெரிய திருவடிமேலே இவர் அபேக்ஷித்தபடியே பூர்ணமாக வந்துதோற்றி, இவருடைய ப்ரக்ருதிஸம்பந்தத்தையும் அறுத்து, "அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ" என்று இவர் ஆசைப்பட்டபடியே அத்திரளிலே புகப்பெற்று, "என்னவாவறச்சூழ்ந்தாயே" என்றும் "அவாவற்றுவீடுபெற்ற" என்றும் இவர் தாமே சொல்லும்படி இவர்விடாயும்தீர்ந்து இவருக்கும் அவ்வருகான தன்விடாயும்தீரும்படி ஸம்ஶ்லேஷித்தருளினானென்கிறார். இப்ரபந்தத்துக்கு ப்ரமேயமானவஸ்து - ஸர்வேஶ்வரன்; இப்ப்ரபந்தம் - * அவாவிலந்தாதி; * மயர்வறமதிநலமருளப்பெற்றவர் - கவிபாடினார். இனி இவருடைய அவதாரந்தான் ஸர்வேஶ்வரனுடைய அவதாரத்தோபாதி ஸாதுக்களுடைய ஸுக்ருதபலம்.

இத்யாதி. "என் பொல்லாக்கனிவாய்" இத்யாதிகளாலே அவன்பேரைச்சொல்லிக் கூப்பிடுகிறதுக்கு த்ருஷ்டாந்தம் - மாதாபிதாக்கள் இத்யாதி. தூதர்வாயிலிட்டு நீட்டுகை - தூதர்முகேந அறிவிப்பிக்கை. தலக்கற்று - லஜ்ஜையற்று. தலக்கு - லஜ்ஜை. ஆற்றல்மிக்கால் அவனைச் சரணம்புகாருண்டோவென்ன - ஶாகாம்ருகா: இத்யாதி. யுத்தகாண்டே ஷஷ்டிதமே, "தேவயோநா: வசிதாஶ்சூரா: நாநாரூபா நாநாவயஸவிதா:" இதி பூர்வார்த்தம். "அந்தோ!" என்றதைப்பற்ற - இவரிலுங்காட்டில் தான் நொந்து என்றது. "என்னவா" என்கிற இவருடைய அவாத்தான், "கோலத்திருமாமகளோடுன்னைக் கூடாதே" என்றும் "பண்கொண்டபுள்ளின் சிறகொலிபாவித்து" என்றும் - பிராட்டியோட்டைச் சேர்த்தியிலே யுன்னைக் காணவேணுமென்றும் பெரியதிருவடியை மேற்கொண்டுவந்து தோற்றவேணுமென்று மிருக்குமதுவாகையாலே, அது தீருகைக்காகப் பிராட்டியோடும் பெரியதிருவடியோடும் வந்து தோற்றினானென்கிறார் - பிராட்டியோடு இத்யாதி. "வீடுபெற்ற" என்றத்தைப்பற்ற - ப்ரக்ருதிஸம்பந்தத்தையுமறுத்து என்றது. ப்ரபந்தபரிஸமாப்தியாகையாலே இப்ப்ரபந்தத்திலேஎல்லார்க்கும் ருசிபிறக்கைக்காக ப்ரமேய ப்ரமாண ப்ரமாத்ருவைலக்ஷண்யங்களையும், இவர் அவதாரவைலக்ஷண்யத்தையும் அருளிச்செய்கிறார் - இப்ப்ரபந்தத்துக்கு இத்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே.

முதற் பாட்டு.

முனியே!நான்முகனே!முக்கண்ணப்பா!என்பொல்லாக்
கனிவாய்த்தாமரைக்கண்கருமாணிக்கமே!என்கள்வா!
தனியேனாருயிரே!என்தலைமிசையாய்வந்திட்டு
இனிநான்போகலொட்டேன் ஒன்றும்மாயஞ்செய்யேல்என்னையே.

ஆ.—"நிகில பு⁴வந நிர்மாண த்ராண ஸம்ஹாரணாதி³ லீலனாய், நிரவதி⁴க ஸௌந்த³ர்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்³யபரிமித போ⁴க்³ய குணஸாக³ரனாயிருந்த உன்னுடைய ஸௌந்த³ர்யாதி³ குணங்களைக் காட்டி என்னைத் தோற்பித்தடிமையாக்கி, எனக்கொருவனுக்கும் உன்னுடைய குணங்களையே தா⁴ரகமாக்கி, என்னெஞ்சம் நிறையப் புகுந்திருந்த உன்னை இனி நான் போகவொட்டேன்; இனிப் பண்டுபோலே உன்னுடைய குணசேஷ்டிதாதிகளை என்னெஞ்சிலே காட்டி வஞ்சித்து, என்னைப்பொன்றும் மறப்பிக்கவொண்ணாது; இனி மெய்யேவந்து கலந்தருளவேணும்"என்று கொண்டு, தம்முடைய அபேக்ஷிதம் செய்தல்லது எம்பெருமானுக்குத் திருநாட்டிலுங்கூட இருக்கவொண்ணாததொருபடி பெரிய ஆர்த்தியோடே பெருங்கூப்பீடாகக் கூப்பிடுகிறார்.

ஒ.—முதற்பாட்டில், நிர்ஹேதுகமாக உன்னுடைய ஸௌந்த³ர்யாதி³களைக் காட்டி எனக்குத் தன்னையொழியச் செல்லாதபடிபண்ணி என்னை து³:ஸ்ஸஹமான ஸம்ஸாரத்திலேவைத்து நீ போய்ப் பண்டுபோலே ஒரு கு³ணாவிஷ்காரத்தைப் பண்ணி விடவொண்ணாதென்கிறார்.

[முனியே] - "வைஹஸ்யாநீ" என்றுதொடங்கி சொல்லப்படுகிற மஹதா³ஹங்காராதி³ பஞ்சபூ⁴தபர்யந்தமான ஜக³த்ஸ்ருஷ்டியைப் பண்ணுவதாயுள்ள தி³வ்ய ஸங்கல்பத்தையுடையனாய் முனிவச்சப்³த³வாச்யனாய் பரப்³ரஹ்ம பரமாத்ம ஶப்³த³ங்களினாலே வேதாந்தங்களிற் சொல்லப்பட்ட ஸ்வரூபேணாவஸ்தி²தனாயிருந்துள்ள பரமபுருஷனே! என்றவாறு. [நான்முகனே] - சதுர்முக²ஸ்வரூபனாய் அவனுக்கு அந்தராத்மாவாய்க்கொண்டு திசைமுகன்கருவுள் வீற்றிருந்து சேதநரான புருஷர்கள் அசேதநமான ஸ்வஶரீரத்தைக் கொண்டு தம் நினைவுக்குத் தக்கபடி க³மநாக³மநாதி³ சேஷ்டைகளைப் பண்ணுமாபோலே ஸ்வஶரீரபூ⁴தனான சதுர்முக²னைக் கொண்டு ஸ்வஸங்கல்பாநுகு³ணமான தே³வதிர்யங்மநுஷ்ய ஸ்தா²வரரூபமான சதுர்வித⁴பூ⁴த ஸ்ருஷ்டியையும் பண்ணியருளுதலால் சேதநரானவர்கள் தேவர்களென்றும் மனுஷ்யர் என்றும் ப்³ராஹ்மணரென்றும் க்ஷத்ரியரென்றும் ஶூத்³ரரென்றும் ஸ்வஶரீரங்களைக் காட்டுகிற ஶப்³த³ங்களாலே அவற்றில் வேறாயிருந்த தாங்களும் சொல்லப்பட்டாற்போலே ஸ்வஶரீரபூ⁴தனான சதுர்முக²னைக் காட்டக்கடவ சதுர்முக² ஶப்³த³த்தாலே அவனில் வேறாய் அவனுக்கு அந்தராத்மாவாயிருந்த எம்பெருமானும் சொல்லப்படுகையாலே 'நான்முகனே' என்னும் சொல்லாலே எம்பெருமானை ஸம்போ³தி⁴க்கிறது. [முக்கண்ணப்பா] - இப்படி ஜக³த்ஸம்ஹாரம் பண்ணுகிற எம்பெருமானுக்கு ஶரீரபூ⁴தனான த்ரிநேத்ரனுடைய பேரான ஶப்³த³த்தினாலே அவனுக்கு அந்தராத்மாவான எம்பெருமானை ஸம்போ³தி⁴க்கிறது. [என்பொல்லாக் கனிவாய்த்தாமரைக்கண் கருமாணிக்கமே] - ஸ்ருஷ்டி

ஸம்ஹார கர்த்தாக்களாய் ஆதிதேவர்களாயுள்ள ப்ரஹ்மருத்ரர்களுக்குநடுவே தான் அடியவர்க்கெளியனாதலால் தான் அவர்களோடொத்த தரத்தனாய், இக்ஷ்வாகு வம்ஶ்யரோடும் யதுவம்ஶ்யரோடுமொத்த தரத்தனாய்க்கொண்டு திருவவதாரம் பண்ணினாற்போலே ஆஶ்ரிதஸௌலப்யத்வார்யமாக ஆதிதேவனாய்விஷ்ணுநாமாவாய் ஸ்வஸ்வரூபத்தினாலே திருவவதாரம் பண்ணினபடியாலே ஸம்போயிக்கிறது. த்ருஷ்டிதோஷ ஶாந்த்யர்யமாகவாதல் அவனுடைய அழகில் விஸஜாதீயதையாலேயாதல்'பொல்லா' என்கிறது. [என்கள்வா] - நான் அறியாமே இவ்வழகைக்காட்டி என்னைவஞ்சித்து என்னை அடிமை கொண்ட பிரானே ! [தனியேனாருயிரே] - தன்னைக்காணப்பெறாத வ்யஸநத்தில் ஒரு துணையின்றியேயிருந்த எனக்கு ப்ராணஹேதுவா யிருந்துள்ள ப்ராணனாயுள்ளாயே! [என் தலைமிசையாய் என்றுமேலுக்கு] - இப்படி ஸ்வரூபத்தினாலும் ஸமஸ்த ஜகத்தினுடைய ஸ்ருஷ்ட்யாதி சேஷ்டைகளும் உன்னாலன்றி யொருத்தரும் தம்மால் செயவில்லை; என்பக்கலிலும் ஸ்வீகாரப்ரப்ருதி இவ்வளவும்வர உன்னாலல்லது என்னால்செய்யப்பட்டதொன்றுமில்லை. மேலுமென்னாற் செயலில்லை. இப்படி ஸமஸ்தவ்யாபாரமும் செய்கிற உனக்கு இனிமேல் பரிஹரிக்கை ஒருபாரமன்று; ஆதலால் இப்படி என் தலைமிசையாய் வந்திட்டு. இனிநான் போகலொட்டேன், ஒன்றும் மாயம செய்யேலென்னையே. இப்பாட்டில் பதயோஜனை ஆழ்வான்படி. 'என் தலைமிசையாய் வந்திட்டு' என்கிறது-எனக்குப் பூர்ணமாகவந்து தோற்றி. நிர்ஹேதுகமாகவந்து வைத்து என்றுமாம். [இனிநான்போகலொட்டேன்] - உன்னைக்காட்டின மாத்ரமன்றிக்கே, முக்தப்ராப்ய தேஶத்தையுங்காட்டிலும் இனி விஶ்லேஷிக்கவொட்டேன். [ஒன்றும்மாயம் செய்யேலென்னையே] - பண்டுபோலே குணாவிஷ்காரங்களைப்பண்ணிப் பெற்றேனாகப்பண்ணி என்னை வஞ்சியாதொழியவேணும்.

ப.—முதற்பாட்டில், ஸ்ருஷ்ட்யாதிமுகத்தாலே அடியேபிடித்து உபகாரகனாய்ப்போந்து வடிவழகைக்காட்டி ருசியைப்பிறப்பித்து உன்னையொழியச் செல்லாதபடியாக்கி என்னையநுபவிப்பிப்பதாக த்வரித்துவந்து ஸந்நிஹிதனான நீ இனி குணாவிஷ்காரத்தாலே வஞ்சித்து அகலப்போக இசையேனென்கிறார்.

முனியே - (நாமரூபவிபாகாநர்ஹமாய், சிதசித்விஶிஷ்டமாய்க்கொண்டு ஸம்ஹ்ருதமாய், ''ஸதேவ'' ''ஏகமேவ'' என்னும்படி ஏகீபவித்துக்கிடக்கிற தஶையிலே, ''ஸம்ஸாராய நிவேஷிதாஸ்து'' என்கிறபடியே ஆஶ்ரயணார்யமாகக்கொண்டு சேதநர்க்குக் கரணகளேபரங்களைக் கொடுப்பதாக * ஸங்கல்பமநநாவாய்க்கொண்டு) ஸ்ருஷ்டிப்ரகாரத்தை மநநம்பண்ணுமவனாய், நான்முகனே - (மஹதாதிரூப ஸமஷ்டியை ஸ்வயமேவ ஸ்ருஷ்டித்து அண்டாந்தர்வர்த்தியான வ்யஷ்டி ஸ்ருஷ்டியைப் பண்ணுகைக்காக ''ஸ்ருஷ்டிஸ்தத: கரிஷ்யாமி த்வாமாவிஶ்ய ப்ரஜாபதே'' என்கிறபடியே) சதுர்முகனை ஶரீரமாகவுடையையாய், முக்கண்ணப்பா - (ஸம்ஹ்ருதிஸமயத்தில் ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய உபஸம்ஹாரார்த்தமாக ஶக்தி ஸூசகமான) த்ரிணேத்ரத்தையுடையனாய் (அதிப்ரவ்ருத்த கரணருடைய உபஸம்ஹாரத்தாலே) உபகாரகனான ருத்ரனை ஶரீரமாகவுடையையாய், (அவர்களிருவர்க்கும் நடுவே ரக்ஷகனான தஶையிலே), என் - எனக்கு, கனி - (உன்பக்கலிலே ருசிபிறக்கைக்கடியான) பக்வபலம்போலே போக்யமான, வாய் - அதரத்தையும், தாமரை - தாமரைப்பூப்போலே தர்ஶநீயமான, கண் - கண்ணையுமுடைத்தாயிருப்பதொரு, பொல்லா - துளையாத, கருமாணிக்கமே - கருமாணிக்கம்

போலேயிருக்கிற வடிவையுடையாய், என் - (அநாதியாக ஆத்மாபஹாரம்பண்ணிப் போந்த சோரனான) என்னையும், கள்வா - (அவ்வழகாலே யறியாதபடி) வஞ்சித்து அபஹரித்துக்கொண்டவனும், தனியேன் ஆருயிரே - (அப்ராப்தபலனாகையாலே) தனிமைப்பட்ட எனக்கு (குணாவிஷ்காரத்தைப் பண்ணித் தன்னையொழியச் செல்லாதபடி எனக்குப்) பரிபூர்ண ப்ராணனானவனே! ("செழும்பறவை தானேறித்திரிவான தாளிணை யென்தலைமேலே" என்னும்படி), என் தலை - என் தலைக்கு, மிசை ஆய் - மேலாய்க் கொண்டு, வந்திட்டு - வந்துசமைந்து, இனி - (ஸம்ஸாரதோஷத்தோடே புருஷார்த்தத்தையும் ஆவிஷ்கரித்து ஆர்த்தியையும் அபிநிவேசத்தையும் ஜநிப்பித்த) பின்பு, நான் - (உன்னாலே லப்தஜ்ஞாநப்ரேமனாய்க்கொண்டு அதித்வரிதனாய் உன் த்வரையையும் அறிந்திருக்கிற) நான், போகலொட்டேன் - முன்புபோலே நீயகன்றுபோக இசையேன்; என்னை-(உன்னைப்பெறுவிடில் முடியும்படியான) என்னை, ஒன்றும் - (ஸம்ஸாரதசையில் விஷயாந்தரங்களைக்காட்டி அகப்படுத்தினவோபாதியாதல், ருசிபிறந்தபின்பு குணாவிஷ்காராதிகளைப்பண்ணி ஆஶ்வஸிப்பித்தவோபாதியாதல்) சிறிதும், மாயஞ்செய்யேல் - வஞ்சியாதொழியவேணும்.

இ.—முதற்பாட்டில், உன் ஸௌந்தர்யாதிகளைக் காட்டி உன்னையொழியச் செல்லாதபடி பண்ணிவைத்து, என்னை யினி துஸ்ஸஹமான ஸம்ஸாரத்திலேவைக்கப் பெற்றேனாகப் பண்டுபோலே ஒரு குணாவிஷ்காரத்தைப் பண்ணிவிடவொண்ணாதென்கிறார்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. பெருமிடுக்கரான ப்ரஹ்மாதிகளுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகளுக்குமெல்லாம் நிர்வாஹகனான நீ, உன்னாலல்லது ஜீவிக்கவிரகின்றியேயிருக்கிற என்னை, ஐயோ! வந்து விஷயீகரித்தருளாயென்கிறார்.

[கூவிக்கோள்ளாய்] - கீழே “கூவிக்கோள்ளாய்” என்றவர், இங்கேயும் ‘கூவிக்கோள்ளாய்’ என்கிறார்காணும்; தாஹித்தவன் “தண்ணீர், தண்ணீர்” என்னுமாபோலே. ஆற்றாமைமிக்குச் செல்லாநின்றாலும் பாசுரம் இதுவல்லதின்றிக்கேயிருக்கிறபடி. கூவிக்கோள்ளுமளவும் போராது, வந்துகூவிக்கோள்ளவேணும். ஆற்றாமைமிக்காலும் நான் வந்து கிட்டுகை முறைமையன்று; உனக்கு அவத்யமுங்காணென்கிறார்; “ஶரைஸ்துஸங்குலாம்க்ருத்வா” (ஶரைஸ்துஸங்குலாம்க்ருத்வா) * எழுதுமென்னுமிதுமிகையானவனுக்கு வருகை அஸஹ்யமென்னுமிடம் சொல்லவேண்டாவிறே. வருகை அவனுக்கே வ்யவஸ்த்திதமாயிருக்கிறபடி. [அந்தோ!] - உனக்கு நிறமன்றென்று நான் சொல்லவேண்டுவதே! [என்பொல்லாக்கருமாணிக்கமே]- †(அதிலோகமான வடிவழகைக்காட்டி என்னை ஈடுபடுத்தினவனே!) நீயழைத்தபோது கண்டிருக்கலாய்த்திறே, நீ நீயன்றிக்கேயிருந்தாயாகில். க்ரமத்திலேயழைக்க நினைத்தாயாகில், அழ

மூன்றாம்பாட்டு.—கூவிக்கோள்ளாய் இத்யாதி. “என்பொல்லாக் கருமாணிக்கமே - மேவித்தொழும்” என்றுதொடங்கி, “உம்பரந்ததுவே, நான் - ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்; அந்தோ - வந்து - கூவிக்கொள்ளாய்” என்று அந்வயவிவக்ஷயா அவதாரிகை-பெருமிடுக்கரான இத்யாதி.

“கூவிக்கொள்ளாய்வந்தந்தோ” என்று மீளவும் அநுவதித்ததுக்கு பாவம் - கீழே இத்யாதி. விவரணம் - ஆற்றாமை இத்யாதி. “வந்து” என்று விசேஷித்ததுக்கு பாவம் - கூவிக்கோள்ளுமளவும் இத்யாதி. ஆற்றாமையுண்டானால் நீரேவந்து கிட்டவொண்ணாதோ? என்ன - ஆற்றாமைமிக்காலும் இத்யாதி. அப்படி தானேகிட்டுகை முறையன்றோ? என்ன; அன்றென்கிறதுக்கு ப்ரமாணம் - ஶரைஸ்து இத்யாதி, “ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந: | மாம் நயேத்யதி காகுத்ஸ்த: தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்” இதிஸுந்தரகாண்டே மாருதிம்ப்ரதி ஸீதா (௩௯-௩௰). இவர்சென்று கிட்டுகை இவர்ஸ்வரூபத்துக்கு விருத்தமான மாத்ரமேயன்று; அவனுக்கும் அஸஹ்யமென்கிறார் - எழுதுமென்னும் இத்யாதி. இத்தால்பலிதம் - வருகை இத்யாதி. “அந்தோ!” என்று விஷண்ணராகிறவருடைய ஹார்த்தபாவம்-உனக்கு இத்யாதி. “பொல்லாக் கருமாணிக்கம்” என்றதுக்கு பாவம்-நீயழைத்தபோது இத்யாதி. நீநீயன்றிக்கேயிருந்தாயாகில்

† குண்டலிதம் இருபத்துநாலாயிரமென்று மூன்கோசங்களில் காண்கிறது.

கைக்காட்டி அநந்யார்ஹமாக்கிற்றேன்? [என்பொல்லாக்கருமாணிக்கம்] - துளையாத மாணிக்கம். அநுபஹதமான ரத்நமென்னுதல்; நாட்டேறப்பான அழகன்றிக்கே விஜாதீயமாயிருக்கையாலே பொல்லாதென்கிற தென்னுதல்; த்ருஷ்டிதோஷபரிஹார மென்னுதல். விலக்ஷணவிஷயமானாலும் ஸ்வரூபத்தைப்பார்த்து ஆறியிருக்க வேண்டாவோவென்னில்,-அதுசெய்யுமிடத்தில் நான் உன்னையொழியவுள்ளனாகவேணுமே? [ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன் நான்] - உபக்நம் நியதமாயிருக்கிறபடி. கொடி, கொள்கொம்பையொழிய நிற்கவற்றோ! வேரையறுத்துப்பட்டரென்றால் படருமோ? என்னாத்மாவுக்கு உஜ்ஜீவநஹேதுவாயிருப்பதொன்று உன்னையொழிய வேறு காண்கிறிலேன்; "நசஸீதாத்வயாஹீநா" (நசஸீதாத்வயாஹீநா) என்கிறபடியே. ஆனால் பேற்றுக்கு உடலாக நீரும் சிலசெய்தாலோவென்ன,- [மேவி இத்யாதி] - அல்லாதப்ரஹ்மாதிகளோ தங்கள்கார்யம் தாங்கள் செய்து கொள்ளுகிறார்கள்! "ஆவிக்கோர்பற்றுக்கொம்பு" என்று சொல்லாதவர்களுக்கும் உதவுமவனே! ப்ரஹ்மாதிகள், "ஆவிக்கோர்பற்றுக்கொம்பு" என்று சொல்லவறியாமையாலே சொல்லார்கள்; நித்யஸூரிகள், அபிமாநம் புகுந்துபோகாமையாலும் இன்று சொல்லவேண்டாமையாலும் சொல்லார்கள். [மேவித்தொழும்] - அல்லாதபோது அந்யோந்யம் விருத்தராயிருப்பர்கள்; தங்களுக்குஒரு கார்யம் வந்தவாறே எல்லாரும் கூடித்தொழுவர்கள். அபிமாநரஹிதராய்த்தொழும் ப்ரஹ்மாதிகளுக்கெல்லாம் காரணமான திருநாபீகமலத்துக்குக் கிழங்கானவனே! †(முதலானநாபிக்கமலக்கிழங்கே.) [உம்பரந்ததுவே] - அவர்களுக்குமேலான நித்யஸூரிகளுக்கும் அப்படிப்பட்ட ப்ராப்யவஸ்துவானவனே! 'அது' என்று - ப்ரமாணப்ரஸித்தியைச்

என்றது-நீ அஹோராத்ரியனாயிருந்தாயாகிலென்றபடி. "என்" என்றதுக்கு ஹாவம்-க்ரமத்திலே இத்யாதி. ஸப்தார்த்தமாக ப்ரதீகோபாதாநம் - என்பொல்லா இத்யாதி. விவரணம் - அநுபஹதமான இத்யாதி. அநுபஹதத்தையும், வைஜாத்யமும், த்ருஷ்டிதோஷபரிஹாரத்யர்த்தமாரோபிதமான பொல்லாங்கும், ஆக மூன்றர்த்தம். "ஆவிக்கோர்பற்றுக்கொம்பு" இத்யாதிக்கவதாரிகை - விலக்ஷண இத்யாதி. "உன்னையொழிய ஆவிக்கோர்பற்றுக்கொம்பறிகின்றிலேன்" என்றதுக்கு ஹாவம் - உபக்நம் இத்யாதி. உபக்நம் நியதமாயிருக்கிறபடி என்றது-"நின்னலாலறிகின்றிலேன்" என்கையாலே. பற்றுக்கொம்பு - உபக்நம் - அந்திகாஸ்ரயம் கொள்கொம்பு - சுள்ளிக்காலென்றபடி. ஹலிதம் - கொடி இத்யாதி. விவரணம் - வேரை இத்யாதி. வேரையறுத்து - ஆதாரத்தை வாங்கியென்றபடி. ஸப்தார்த்தம் - என்னாத்மாவுக்கு இத்யாதி. அவனையொழிய தரிக்கமாட்டாததென்னுமதுக்கு ப்ரமாணம் - நசஸீதா இத்யாதி. "நசஸீதாத்வயாஹீநா நசாஹமபி ராகவ ! முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்ருதௌ" இத்யயோத்யாகாண்டே லக்ஷ்மண: (௫௩-௩௧). "மேவித்தொழும்" இத்யாதிக்குஹாவம்-அல்லாத இத்யாதி. "பிரமன்சிவன்" இத்யாதிக்கும் "உம்பரந்ததுவே" என்றதுக்கும் ஹாவம்-ஆவிக்கோர் இத்யாதி. சொல்லாதபடியெப்படியென்ன ப்ரஹ்மாதிகள் இத்யாதி. அபிமாநம்-ஸ்வாதந்த்ர்யம். எப்போதும் அவனேயென்றிருக்கையாலே இன்று சொல்லவேண்டாமையாலுமென்றபடி. "மேவி" என்றதுக்கு ஹாவம் - அல்லாதபோது இத்யாதி. அல்லாதபோது - கார்யமில்லாதபோது. "மேவி" என்றதுக்கு - அந்யோந்யம்கூடி என்றர்த்தம் அருளிச்செய்தது, அபிமாநரஹிதராயென்று அர்த்தாந்தரம் - அபிமாநரஹித இத்யாதி. "பிரமன் சிவனிந்திரனாதிக்கெல்லாம் முதலான நாபிக்கமல கிழங்கே" என்றந்வயிப்பது. இந்திரனாதிக்கெல்லாம் - இந்திரன்முதலானவரெல்லார்க்கும், முதல் - காரணபூதமான, நாபிக்கமலக்கிழங்கே- திருநாபீகமலத்துக்குக் கந்தபூதனானவனே. உம்பர் - ப்ரஹ்மாதிகளுக்கும் மேலான அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளுக்கும், அந்ததுவே - 'அப்படிப்பட்ட ப்ராப்யவஸ்துவானவனே' என்றபடி. அப்படிப்பட்ட - உபயலிங்கவிஶிஷ்டமாய்

---

† குண்டலிதம் இருபத்துநாலாயிரமென்கிறார்கள்.

சொல்லுகிறது. நித்யஸூரிகளோடு ப்ரஹ்மாதிகளோடு வாசியற நிர்வாஹகனாயிருக்கிற நீ என்னை வந்து கூவிக்கொள்ளாய். இப்பாட்டால் - கீழும்மேலும் சொல்லுகிற ஸாமாநாதிகரண்யத்துக்கு நிபந்தநம், கார்யகாரணபாவமென்னுமத்தை அருளிச்செய்தாராய்த்து; “ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம” (ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம). (௫)

நான்காம் பாட்டு.

உம்பரந்தண்பாழேயோ! அதனுள்மிசைநீயேயோ!
அம்பரநற்சோதி! அதனுள்பிரமன்அரன்நீ
உம்பரும்யாதவரும்படைத்தமுனிவன்அவன்நீ
எம்பரஞ்சாதிக்கலுற்றுஎன்னைப்போரவிட்டிட்டாயே.

ஆ.—(உம்பரந்தண்.) - ப்ரக்ருதி புருஷ மஹதஹங்கார ப்ருதிவ்யாதிபூத சதுர்முக ருத்ரதேவாதி ஸ்தாவராந்த சேதநாசேதநாத்மக ஸமஸ்தவஸ்துக்களினுடைய ஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்த்யாதிகளுக்கும் நீயே நிர்வாஹகனாயிருந்துவைத்து, என்னுடைய பரமத்தையும் நானே நிர்வஹிக்கக்கடவேனாகப் பார்த்தருளினாயாகில் என்னைக் கைவிட்டாயென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், ஸகல நிர்வாஹகனான நீ, என்னுடைய நிர்வாஹம் நானே பண்ணிக்கொள்வேனாகப் பார்த்தருளினாயாகில், என்னைக்கைவிட்டாயேயல்லையோ? என்கிறார்.

[உம்பரந்தண்பாழேயோ] - மஹதாதி விகாரங்களுக்கும் காரணமாகையாலே ஸ்வகார்யங்களுக்கெல்லாம் மேலாய் ஸ்வகார்யங்களைப் பிறப்பிக்கைக்கீடான சக்தியோகத்தையுமுடைத்தாய் சேதநர்க்கு தர்மமோக்ஷாதி புருஷார்த்தங்களை விளைத்துக் கொள்ளலாம் நிலமான மூலப்ரக்ருதிக்கு நிர்வாஹகனானவனே! [அதனுள் என்று தொடங்கி] - அதின்மேலே பஸ்யாய் நிற்கிற விலக்ஷணமான ஆத்மதத்வத்துக்கு நிர்வாஹகனாய் ஆகாசாதிபூத பஞ்சகத்துக்கும் பாஞ்சபௌதிகமான அண்டத்துக்குள்ளே வர்த்தமானரான ப்ரஹ்ம ருத்ரர்களுக்கும் நிர்வாஹகனானவனே நீ. [உம்பரும் யாதவருக்கு] - தேவர்களையும் மற்றுள்ளாரையும் படைத்த முனியாக ப்ரஸித்தனானவன் நீ என்னையொருவனையும் நானே என்காரியம் செய்வேனாகப்பார்த்து உன்பக்கல் நின்றும் போரவிட்டு உபேக்ஷித்தாயே.

ப.—அநந்தரம், ஸர்வப்ரகார விசிஷ்டனான நீ, ப்ரகாரபூதனான என்னுடைய கார்யம் நிர்வஹிப்பதாக ஏறிட்டுக் கொண்டுவைத்து, என்னை இந்த்வஸ்திதியிலே போரவிட்டாயித்தனையன்றோவென்று ஆர்த்தராய்க் கூப்பிடுகிறார்.

உம்பர் - (பூதமான மஹதாதிகளுக்கெல்லாம் பரப்ரக்ருதி காரணமாகையாலே) மேலாய், அம்-உனக்கு லீலோபகரணமாகையாலே விலக்ஷணமாய், தண் - (குணத்ரய

ஸாம்யாஸ்ரயமான ப்ரமாணப்ரஸித்தியையென்று - ‘ஸதாஸதோ’ இத்யாதி ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. அந்வயமுகேநாஹ - நித்யஸூரிகளோடு இத்யாதி. ‘மேவிதொழும்’ என்று தொடங்கி, ‘அந்தமே - எனைபொல்லாக்கருமாணிக்கமே, ஆவிக்கோர்பற்றுக்கொம்பு - நான் - நின்னலாலறிகின்றிலேன் - வந்து - கூவிக்கொள்ளாய் - அந்தோ!’ இத்யந்வய:. (௫)

ஸாம்யாவஸ்த்தமாகையாலே) குளிர்ந்திருப்பதாய், பாழேயோ - போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளுகைக்கு † அதனுள் மிசை நீயேயோ (இப்படி ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டனாய்க்கொண்டு), அம்பரம்-(அண்டகாரணமான) ஆகாசம், நல் - விலக்ஷணமான, சோதி - தேஜஸ்ஸு முதலான பூதங்களை ஸ்ருஷ்டித்து தத்ப்ரகாரியாய், அதனுள் - பூதாரப்தமான அண்டத்துக்குள்ளே, பிரமன் அரன் - ப்ரஹ்மருத்ராதிகளை உத்பாதித்து தத்தத்ப்ரகாரவிசிஷ்டனானவன், நீ - நீ; உம்பரும் - (ப்ராணிஜாதங்களுக்குமேலான) தேவர்களையும், யாதவரும் - மநுஷ்யாதி ஸகலசேதநரையும், படைத்த முனிவனவன் - தத்தத்கர்ம விசாரமநம்பண்ணி ஸ்ருஷ்டித்தவன், நீ - ; (இப்படியாயிருக்க), எம் பரம் - (ப்ரகாரபூதனான) என்னுடைய தேஹத்தை, சாதிக்கல்உற்று - நிர்வஹிப்பதாக ஏறிட்டுக்கொண்டு, (ப்ராப்திபர்யந்தமாக அபரோக்ஷிப்பித்து), என்னை - (உன்னையொழியச்சொல்லாத) என்னை, (பின்னையும்), போரவிட்டிட்டாய் - இங்கேபோரவிட்டிட்டுவைத்தாய். 'ஓ' என்கிற அசை - "நீ" என்னுமிடந்தோறும்கூட்டி, ஓரொன்றே ரக்ஷிக்க ஹேதுபோந்திருக்க அநாதரித்தாயென்று கூப்பிடுகிற ஆர்த்தியை ஸூசிப்பிக்கிறது.

இ.—நாலாம்பாட்டில், ஸர்வநிர்வாஹகனான நீ, என்னுடைய நிர்வாஹம் நான் பண்ணிக்கொள்ளப் பார்த்தாயாகில், என்னைக் கைவிட்டாயல்லையோ? என்கிறார்.

[உம்பரந்தண்பாழேயோ] - மஹதாதி கார்யங்களுக்கெல்லாம் காரணமாகையாலே மேலாய்த் தன்னுடைய ஏகதேசத்தாலே கார்யவர்க்கத்தைப் பிறப்பிக்கவற்றான சக்தியையுடைத்தாய் விசித்ர பரிணாமினியாய் சேதநர்க்கு போகமோக்ஷத்தை இசைத்துக்கொள்ளலாம் நிலமாயிருந்துள்ள மூலப்ரக்ருதிக்கு நிர்வாஹகனாயிருந்துள்ளவனே! [உம்பர்]-மேல். [அந்தண்]-அழகியதுமாய் அநுகூலமுமாயிருக்கை. [பாழ்]-க்ருஷிக்குயோக்யமாயிருக்கை. [அதனுள்மிசை நீயேயோ] - அதிலேவ்யாப்தமாயிருக்கிற விலக்ஷணமான ஆத்மதத்த்வத்துக்கு நிர்வாஹகனானவனே! "ஜாதஸ்ஸூக்ஷ்மசிதசித்ஸம்வ்ருதஸ்ஸர்வதோ வ்யாப்ய ஸர்வமேவ ஸாக்ஷிபஸ்யந்தஸ்ஸ்திதம்". ஸூக்ஷ்மசிதசித் வஸ்து சரீரிகாரணமாகையாலே காரணாவஸ்தையைச்சொல்லிற்று. இத்தால்விசேஷண ப்ராதாந்யம் சொல்லும் ந்யாயவைசேஷிகபக்ஷமும், விசேஷணத்துக்கு அபாரமார்த்யம் சொல்லும் மாயாவாதிபக்ஷமும் ஆழ்வார்க்குபபக்ஷமல்ல என்றதாய்த்து. [அம்பரம்]-ஆகாசம். [நற்சோதி] - தேஜஸ் பதார்த்தம். இவையிரண்டும் பஞ்சபூதங்களுக்கும் உபலக்ஷணம். [அதனுள்பிரமனரன்நீ]-அந்த பஞ்சபூதங்களாலே ஸ்ருஷ்டமான அண்டத்துக்குள்ளே வர்த்தமானரான ப்ரஹ்மருத்ரர்களுக்கும் நிர்வாஹகனானவன் நீ. [உம்பரும் யாதவரும்இத்யாதி] - மேலான தேவர்களையும் மநுஷ்யாதி ஸ்தாவராந்தமான ஸகல பதார்த்தங்களையும் ஸ்ருஷ்டித்த முனியாக ப்ரஸித்தனானவன் நீ. ஸகலபதார்த்தங்களையும் கர்மாநுகூலமாக ஸ்ருஷ்டிக்கைக்காக பூர்வகர்மங்களை அநுஸந்திக்குமவனிறே - முனியாகிறான். "தபஸ்தேபாநஸ்ஸர்வதோ விஸ்ருஜதி". இத்தால் ஸ்தூலசிதசித் வஸ்துசரீரத்வத்தாலே கார்யஞ்சொல்லிற்றாய்த்து. கஸ்யபப்ரஜாபதியைச் சொல்லிற்றாகவுமாம். [எம்பரஞ்சாதிக்கலுற்றென்னைப் போரவிட்டிட்டாயே] - என் கார்யம் நீயேசெய்யக்கடவதாக ஏறிட்டுக்கொண்டு அத்தையுபேக்ஷித்தது, அசேதநத்தைப் போகடுமாபோலே போகட்டாயென்னுதல்; ஸகலத்தையும் நிர்வஹிக்கிறநீ, என்னை ஒருவனையும் நானே என்கார்யம்

† இங்கு மூன்று புஸ்தகங்களிலும் க்ரந்தபாதமாயே காண்கிறதென்கிறார்கள்.

செய்யவேணுகப்பார்த்து உன்பக்கலினின்றும் போரவிட்டு உபேக்ஷித்தாயென்னுதல். [என்னை] - உன்னை யொழியச்செல்லாத என்னை.

ஈடு.—நாலாம்பாட்டு. ஸர்வநிர்வாஹகனான நீ, என்கார்யம் நானே பண்ணிக்கோள்வேணுகப் பார்த்தருளினுயாகில், என்னைக் கைவிட்டாயல்லையோ? என்கிறார்.

[உம்பரந்தண்பாழேயோ] - மஹதாதிகார்யங்களுக்கெல்லாம் காரணமாகையாலே மேலாய், தன்னுடைய ஏகதேசத்தாலே கார்யவர்க்கத்தைப் பிறப்பிக்கவற்றான ஶக்தியையுடைத்தாய், விசித்ரபரிணாமிநியாய், சேதநர்க்கு போகமோக்ஷங்களை விளைத்துக்கோள்ளலாம் நிலமாயிருந்துள்ள மூலப்ரக்ருதிக்கு நிர்வாஹகனானவனே! [உம்பர்] - மேல். [அந்தண்] - அழகிதுமாய்க் குளிர்ந்திருக்கை. (ஸ்ருஷ்டிஶக்தியாகிறவழகும் விசித்ர பரிணாமித்வமாகிற நன்மையுமுடைத்தா யிருக்கை.) [பாழ்] - க்ருஷிக்குயோக்யமா யிருக்கை. காரணாவஸ்த்தமாய்நின்று ஸ்வகார்யத்தாலே சேதநர்க்கு போகமோக்ஷங்களை விளைக்கவற்றென்னுமிடத்தைச் சொல்லுகிறது. [உம்பரந்தண்பாழேயோ] - ஶௌக்ல்யமென்று கொண்டு நிஷ்கர்ஷகஶப்தத்தாலே தர்மத்தைப் பிரியச் சொல்லுமாபோலே பிரியச் சொல்லப் போகாது, பகவானுக்கு ப்ரகாரமானவற்றை யென்கிறது. ‘உம்பரந்தண்பாழேயோ’ என்கிற வித்தால் - சேதநர்க்கு ப்ரகாரமாய் அவ்வழியாலே ஈஶ்வரனுக்கு ப்ரகாரமாகையன்றிக்கே, “யஸ்யாத்மா ஶரீரம் - யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்” (யஸ்யாத்மா ஶரீரம் - யஸ்யப்ருதிவீஶரீரம்) என்கிறபடியே சேதந வ்யதிரிக்தமான அசித்துக்கும் அவனையொழிய நிர்வாஹகரில்லையென்கை. “பாழேயோ” - என்கிறவித்

நாலாம்பாட்டு.—உம்பர் இத்யாதி. பாட்டையெல்லாம் கடாக்ஷித்தவதாரிகை - ஸர்வ நிர்வாஹகனான இத்யாதி.

ப்ரக்ருதி மேலாயிருக்கும் ப்ரகாரத்தையும், இதுக்கு அழகும் குளிர்த்தியுமின்னதென்னுமத்தையும், “பாழே” என்றதுக்கர்த்தத்தையும் அருளிச்செய்கிறார் - மஹதாதி இத்யாதி. ப்ரக்ருதி, போகமோக்ஷங்களை விளைக்கும்படியென்னென்ன - காரணாவஸ்த்தமாய் இத்யாதி. காரணாவஸ்த்தமாய் நின்று-கார்யோந்முகமாய் நின்றென்றபடி. “படஸ்ய ஶௌக்ல்யம்” என்னுமாபோலே பிரித்துச் சொல்லாதே, “பாழேயோ” என்று ஸமாநாதிகரிக்கிறதெதுக்கென்ன - ஶௌக்ல்யமென்று இத்யாதி. இத்தால்பலிதம் - உம்பரந்தண் இத்யாதி. இத்தால் பகவத் வ்யதிரிக்த விஷயங்களில் நிஷ்கர்ஷகஶப்தம் தர்மிபோதகமாகமாட்டாது, பகவத்விஷயத்தில் நிஷ்கர்ஷகஶப்தமும் பகவத்பர்யந்தமா யிருக்குமென்று கருத்து. ஶப்தம், நிஷ்கர்ஷகமென்றும் அநிஷ்கர்ஷகமென்றும் த்விவிதம். நிஷ்கர்ஷகமாவது - “படஸ்ய ஶௌக்ல்யம்” என்னுமது; அநிஷ்கர்ஷகமாவது - “ஶுக்ல: பட:” என்னுமது. நிஷ்கர்ஷகஶப்தமும், வைவக்ஷிகநிஷ்கர்ஷகமென்றும், நியதநிஷ்கர்ஷகமென்றும் த்விவிதம். வைவக்ஷிக நிஷ்கர்ஷகமாவது - “ஶுக்ல: பட:” என்று அநிஷ்கர்ஷகமாகச் சொல்லாமல் அத்தை “படஸ்ய ஶுக்ல:” என்று நிஷ்கர்ஷகமாகச் சொல்லுகை; நியத நிஷ்கர்ஷகமாவது - “கந்த: ப்ருதிவீ” என்று அநிஷ்கர்ஷகமாகச் சொல்லப்போகாதே “ப்ருதிவ்யாம் கந்த:” என்று நிஷ்கர்ஷகமாகச் சொல்லலாம்படியிருக்கை. ஆக, த்விவிதநிஷ்கர்ஷகஶப்தங்களும் லோகத்தில் தர்மமாத்ரபோதகமொழிய தர்மிபோதகமாகமாட்டாது. ஈஶ்வரனிடத்தில் வந்தால் “புண்யோ கந்த: ப்ருதிவ்யாம் - ரஸோஹமப்ஸு கௌந்தேய” என்று ப்ருதிவியினுடைய புண்யகந்தமும் ஜலத்தில்ரஸமும் நானேயென்றிருக்கையாலே, உபயவிதநிஷ்கர்ஷகஶப்தங்களும் பகவத்பர்யந்தமாயிருக்குமென்றபடி. இஸ்ஸாமாநாதிகரண்யத்தால் பலித்த அம்ஶத்தை யருளிச்செய்கிறார் - பாழேயோ என்கிற இத்யாதி. “பாழேயோ” என்று ஶரீரஶரீரி

தால் - ஶப்தஹேதும் கொள்ளுகிற மீமாம்ஸகரையும், ஸ்வரூபேண தாதாத்ம்யம் கொள்ளுகிற மாயாவாதிகளையும் அழிக்கிறது. [அதனுள்மிசைநீயேயோ]-அதிலே வஜமாய் நிற்கிற விலக்ஷணமான ஆத்மதத்த்வத்துக்கு நிர்வாஹகனானவனே! ஸூக்ஷ்மசிதசித் வஸ்துஶரீரி காரணமாகையாலே காரணாவஸ்தையை சொல்லிற்று. இத்தால் - விஶேஷண ப்ராதாந்யம்சொல்லும் ந்யாய வைஶேஷிகபக்ஷமும்,விஶேஷணத்துக்கு அபாரமார்த்யஞ் சொல்லும் மாயாவாதிபக்ஷமும் ஆழ்வார்க்குப் பக்ஷமல்லவென்றதாய்த்து. "நீயேயோ" என்கிறவித்தால் - சேதநனை யொழிய அசேதநத்துக்கு ஸ்த்திதியில்லாதாப்போலே, ஈஶ்வரனையொழிய ஆத்மாவுக்கு ஸ்திதியில்லையென்கிறது. [அம்பரநற்சோதி]-அம்பரம் - ஆகாஶம். நற்சோதி - விலக்ஷணதேஜஸ்ஸு. அல்லாதபூதங்களுக்கு உபலக்ஷணமிரண்டும்; "யதம்புவைஷ்ணவ꞉காய꞉" (யதம்புவைஷ்ணவ꞉காய꞉) என்று ஜலத்தைச் சொல்ல, அல்லாதபூதங்களுக்கும் உபலக்ஷணமானாற்போலே.[அதனுள் பிரமன்அரன் நீ] - பஞ்சீக்ருதபூதங்களாலே ஸ்ருஷ்டமான அண்டாந்தர்வர்த்திகளான ப்ரஹ்மருத்ராதிகளும் நீயிட்டவழக்கென்கிறது. [உம்பருமியாதவரும் படைத்தமுனிவனவன்நீ] - தேவர்களையும் மற்றுள்ளாரையும் படைத்த முனியாக ப்ரஸித்தனானவன் நீ. "பிரமனரன்நீ" என்ற ஸாமாநாதிகரண்யம் கார்யகாரணபாவஸம்பந்தம்; "ஸர்வம்கல்விதம்ப்ரஹ்மதஜ்ஜலாநிதி" (ஸர்வம்கல்விதம்ப்ரஹ்மதஜ்ஜலாநிதி) என்னுமாபோலே. ஸகலபதார்த்தங்களையும் கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டிக்கைக்காக பூர்வகர்மங்களை யநுஸந்திக்குமவனிறே முனியாகிறான்; "ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி" (ததஸதேவ ஸந்மநோ

பாவ ஸம்பந்தம் சொல்லுகிற இத்தாலென்றபடி. ஸ்வரூபேண தாதாத்ம்யம்கொள்ளுகிற மாயாவாதி,ஜீவனோடே ப்ரஹ்மத்துக்குஐக்யம்சொல்லுகையொழிய ப்ராக்ருதியோடே ஐக்யம்கொள்ளான். அதனுள்-ப்ராக்ருதியிலே. அதிலே வர்த்திக்கிற என்றபடி. "மிசை" என்று - விலக்ஷணமான ஆத்மாவைச் சொல்லுகிறது. "உம்பரும்" இத்யாதிபதத்வயத்துக்கும் பாவம்-ஸூக்ஷ்மசிதசித் இத்யாதி. "அதனுள்மிசைநீயே" என்றத்தால பலிதத்தை யருளிச்செய்கிறார் இத்தால்இத்யாதியாலே. இத்தால் என்றது-"அதனுள்மிசைநீயேயோ" என்கிறவித்தாலென்றபடி. விசேஷணப்ராதாந்யம் சொல்லும் என்றது-விசேஷணபூத ஜீவனுக்குஸ்வாதந்த்ர்யம் சொல்லுமென்றபடி.விசேஷணத்துக்குஅபாரமார்த்யம் சொல்லும் என்றது-விசேஷணபூதஜீவனோடே ப்ரஹ்மத்துக்கு உண்டான பேதாபாரமார்த்யம் சொல்லுமென்றபடி. "நீயேயோ" என்று - ஆத்மாவை ஈஶ்வரனோடு ஸமாநாதிகரிக்கிறதுக்கு பாவம் - நீயேயோ இத்யாதி. அம்பரநற்சோதி - ஆகாஶமும் விலக்ஷணமானதேஜஸ்ஸும் நீயென்றபடி. ஒன்றிரண்டைச் சொன்னது மற்றவற்றுக்கும் உபலக்ஷணமாமோவென்ன, த்ருஷ்டாந்தம் - யதம்பு இத்யாதி. "யதம்புவைஷ்ணவ꞉காயஸ்ததோவிப்ர வஸுந்தரா । பத்மாகாரா ஸமுத்பூதா பர்வதாப்த்யாதிஸம்யுதா" இதித்விதீயாம்ஶே த்வாதஶே. அதனுள் பிரமனரன்நீ - ஆகாஶம் தேஜஸ்ஸுமுதலான பஞ்சபூதாரப்த அண்டாந்தர்வர்த்திகளான ப்ரஹ்மருத்ராதிகளும் நியிட்டவழக்கென்றபடி. "படைத்த" என்கையாலே பலிதமானதோர் அர்த்தவிசேஷத்தை யருளிச்செய்கிறார் - பிரமனரன்நீ இத்யாதி. கார்யகாரணபாவ நிபந்தநமென்னுமதுக்கு ப்ரமாணம் - ஸர்வம் இத்யாதி. சாந்தோக்யே. "முனி" என்றதுக்கர்த்தம் - ஸகல இத்யாதி. "முனி" என்றதுக்கு ப்ரமாணம் - ததஸத் இத்யாதி. இதுக்கர்த்தம் - "ஸதேவ ஸோம்யேதம்" - நாமரூபவிபாகாநர்ஹ ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டதயா அஸச்சப்தவாச்யமான அந்தப்ரஹ்மமே, "ஸத்-ஸ்யாமிதி" -நாமரூபவிபாகார்ஹ ஸ்த்தூலசிதசித்விசிஷ்டதயா ஸச்சப்தவாச்யமாகக்கடவனென்று, "மநோகுருத" - மநஸ்ஸைப்பண்ணிற்று;ஸங்கல்பித்ததென்றபடி. இயம் ஶ்ருதி꞉யஜுஷி. "அம்பரநற்சோதி" என்றுதொடங்கி "முனிவனவன்நீ" என்னுமளவுக்கும்

குருதஸ்யாமிதி). இத்தால் - ஸ்த்தூலசிதசித்வஸ்து ஶரீரத்வத்தாலே கார்யத்வம் சொல்லிற்றாய்த்து. [எம்பரம்சாதிக்கலுற்றென்னைப்போரவிட்டிட்டாயே] - என்கார்யம் நீயே செய்வதாக ஏறிட்டுக்கொண்டு, அத்தையுபேக்ஷித்து, அசேதநத்தைப்போகடுமோபோலே போகட்டாயென்னுதல்; ஸகலத்தையும் நிர்வஹிக்கிற நீ, என்னையொருவனையும் நான்என்கார்யம் செய்வேனாகப்பார்த்து, உன்பக்கலினின்றும் போரவிட்டு உபேக்ஷித்தா யென்னுதல். [என்னை] - உன்னாலல்லது செல்லாதஎன்னை [போரவிட்டிட்டாயே] - அவன் பக்கலினின்றும் பிறிகதிர்ப்பட்டுப் போந்தாராயிருக்கிறபடி. குணமங்டையாடாத தேஶத்திலே தள்ளினையென்கிறார். ஜ்ஞாநவைஶத்யத்தைப்பண்ணி ப்ராப்தியளவும் ப்ரவர்த்தியாதிருக்கிறவிது, நளன் தமயந்திக்கு வழிகாட்டிவிட்டாற்போலே யிருக்கிறதுகாணும்! (௪)

ஐந்தாம் பாட்டு.

போரவிட்டிட்டென்னை நீபுறம்போக்கலுற்றால் பின்னையான்
ஆரைக்கொண்டெத்தையந்தோ எனதென்பதென்?யானென்பதென்?
தீரஇரும்புண்டநீரதுபோல என்னாருயிரை
ஆரப்பருகஎனக்குஆராவமுதானாயே.

ஆ.—(போரவிட்டிட்டு) - உம்முடையபூரத்தை நான் நிர்வஹிக்கத்தவிர்ந்தால் அந்தபூரத்தை நீரே நிர்வஹித்துக்கொள்ளலாகாதோ வென்னில்; - நீ என்னைக் கைவிட்டு உபேக்ஷித்தால் பின்னை யாரைக்கொண்டு எத்தைச் செய்வது? நானென்று ஒன்றுண்டோ, என்னுடையதென்று ஒன்றுண்டோ, அடைய முடிந்ததிறே; ஆன பின்பு, அக்நிஸந்தப்தமான இரும்பு தாபம்தீரும்படி நீரைப்பருகினாற்போலே, உன்னைப்பிரிந்த என்னுடைய ஸந்தாபமெல்லாம் தீரும்படி யுன்னைப்பருக எனக்குஆராவமுதானாய்; இனிக்குறையும் நீயே செய்தருளாய் என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், நான் என்னுடைய யத்நத்தாலே உன்னைப் பெறுகிறேனாக நீ என்னைக்கைவிட்டிருக்கில், நானென்றும் என்னதென்றும் சிலவுளவோ? முடிந்தேனத்தனையிறே என்கிறார்.

[போரவிட்டிட்டென்னை நீ புறம்போக்கலுற்றால்] - ரக்ஷகனான நீ அநந்யகதியான என்னை உன்பக்கலினின்றும்போர நோக்கிப்போகட்டால் பின்னை நான் ஆரைக்

ஸாவம் - இத்தால், ஸ்த்தூல இத்யாதி. முனிவனவன்நீ- ஸ்ருஷ்டிக்கு உறுப்பாகப்பூர்வகர்மவிஶாஷங்களை மநநம்பண்ணுமவன் நீ என்று ஸப்தார்த்தம். எம்பரம் - என்கார்யம். "சாதிக்கலுற்று" என்றது - நீ சாதிக்கலுற்றென்னுதல், நான் சாதிக்கலுற்றென்னுதல். நீ செய்வதாக ஏறிட்டுக்கொண்டென்றும்முந்தினவர்த்தம்; நான் செய்வேனாகப்பார்த்தென்றுஇரண்டாமர்த்தம். "போரவிட்டிட்டாயே" - உன்பக்கல் நின்றும் அகன்றுபோம்படி உபேக்ஷித்துப் போகட்டுவிட்டாயென்று ஸப்தார்த்தம். அவனுக்கு ஶரீரஸ்ஶேஷதராய் அவனோடே கூடியிருக்கச்செய்தே, "போரவிட்டிட்டாய்" என்கிறதென்னென்ன - குணம் இத்யாதி. அவன்போரவிட்டானோவென்ன, அருளிச்செய்கிறார் - ஜ்ஞாநவைஶத்யத்தை இத்யாதி. "**ஸஷ்வநாவிஷஸூராணாஷேஷபாதஸ்வ கொஸலாது**" என்றத்தைப்பற்ற - நளன் இத்யாதி. (௪)

கொண்டு என்ன புருஷார்த்தத்தை ஸாதிப்பது? என்ன ஸாதநத்திலே என்றதே ஆரைக்கொண்டு என்கிறதென்னென்னில்-என்றும் புருஷார்த்தம் பெறுவது பரமசேதநனாயிருப்பானொருவனாலே என்றிருக்கையால். [தீரவிரும்புண்ட நீரென்றுமேலுக்கு] - அக்நிஸந்தப்தமான இரும்பு நீரை நிஶ்ஶேஷமாக ஶோஷிக்குமாபோலே. [என்னுருயிரை] - சமையஶோஷிக்கைக்காக எனக்கு உன்னுடைய நிரதிஶயபோக்யதையைக் காட்டி என்னை அகப்படுத்தினாய். காய்ந்த இரும்பு அக்காய்ச்சல்தீர நீரைப் பருகுமா போலே என்னுடைய ஸந்தாபமெல்லாம் தீரும்படி எனக்குப் பண்டுநிரதிஶய போக்யமானவனே! என்றுமாம்.

ப.—அநந்தரம், எனக்கு நிரவதிகஸௌந்தர்யஸூசகனாய்வைத்து நீ என்னை உபேக்ஷிக்கப்பார்த்தால் எனக்கு ஒரு உஜ்ஜீவநமுண்டோ? என்கிறார்.

தீர - (தன்காய்ச்சல்)தீரும்படி, இரும்பு - இரும்பானது, உண்ட -, நீரது போல - நீர்போலே, என்னுருயிரை - என்னாத்மாவின், ஆர - (விடாயெல்லாம்தீரப்) பரிபூர்ணமாக, பருக - பருகுகைக்கு, எனக்கு -, ஆரா - த்ருஷ்ணை தொடாத, அமுதானாயே - அம்ருதமானாயே; (இப்படியிருக்க), நீ - (உன்வாசியறிந்து ஶோஷிக்கும்படி பண்ணி ப்ராப்திபர்யந்தமாக ப்ரகாசிப்பித்த) நீ, போரவிட்டு - (அத்தைக்குலைத்துப்) போரவிட்டு, இட்டு-(அசேதநவத்) அநாதரித்து, என்னை-(அநந்யகதியான)என்னை, புறம்-(உனக்குப்)புறம்பான விஷயாந்தரத்திலே, போக்கல்உற்றால்-போக்கநினைத்தால், பின்னை-(ஸர்வஶக்தியான நீ அநாதரித்த) பின்பு, யான் - (அஶக்தனான) நான், ஆரைக்கொண்டு-(புருஷார்த்தஸாதகராயிருப்பார்)மற்றாரைக்கொண்டு, எத்தை-எந்தப்புருஷார்த்தத்தை, அந்தோ - ஐயோ! (சாதிப்பேன்—); எனதுஎன்பதுஎன் - என்னதென்கைக்கொரு கரணாதிகளில்லை; யான்என்பதுஎன் - நானென்கைக்குஒரு ஸ்வதந்த்ரனானகர்த்தாவில்லை. இனிவேறுண்டோவென்று கருத்து. ‘ஆரைக்கொண்டெத்தை’ என்கிற விருத்தோக்தியிலே விஷண்ணராகிறார். “இரும்புண்டநீர்போல் என்னாத்மாவை முற்றப்பருகினான்” என்கிறபடியே நீ பூர்ணமாகப் பானம்பண்ணுகைக்கு உறுப்பாக உன்ஸௌந்தர்யத்தை எனக்கு ப்ரகாசிப்பித்தாயென்னவுமாம்.

இ.—அஞ்சாம்பாட்டில், ஸர்வரக்ஷகனான நீ உபேக்ஷித்தால் என்கார்யம் நான் செய்யவோ? பிறர்செய்யவோ? முடிந்ததனிறே என்கிறார்.

[போரவிட்டிட்டு] - உன்பக்கலினின்றும் அகற்றி உபேக்ஷித்து. [என்னை] - அநந்யகதியான என்னை. [நீ] - ஸ்ருஷ்டியேதொடங்கி இவ்வளவும்வர என்னைப் புகுர நிறுத்தின நீஎன்னுதல்; ஸர்வரக்ஷகனான நீயென்னுதல். [புறம்போக்கலுற்றால்] - புறம் போக்குகையிலே அத்யவஸித்தால்; என்கார்யம் நான் செய்வேனாகப்பார்த்து என்னையுபேக்ஷித்தால். [பின்னை யானாரைக்கொண்டெத்தை] - ஸர்வஶக்தியானநீஅநாதரித்தபின்பு அஶக்தனான நான் எந்த உபாயத்தைக்கொண்டு என்ன புருஷார்த்தத்தை ஸாதிப்பது? ஆரைக்கொண்டென்கிறது - புருஷார்த்தம்பெறுவது ஒரு பரமசேதநனாலே, அசேதந க்ரியாகலாபாதிகளால் அன்றென்னுமிடம் தோற்றுகைக்காக. “[illegible]”. [அந்தோ] - “மாமேகம் சரணம் வ்ரஜ” என்றஉனக்கு நான் உபதேசிக்க வேண்டுவதே! [எனதுஎன்பதென் யான்என்பதென்] - பேறு உம்மதானால் ஸாதநம் உம்முடைய தலையிலே ஆகவேண்டாவோ என்ன;—எனக்குப் பரிகரமாயிருப்பதொன்று

உண்டென்பதோர் அர்த்தமுண்டோ? ப்ருஷுக்ஸ்த்திதி யோக்யமாயிருப்பதோர் அர்த்தமுண்டோ? ஶரீரரக்ஷணம் ஶரீரியையொழியச் செய்வாருண்டோ? [தீரவிரும்பு இத்யாதி] - அக்நிஸந்தப்தமான இரும்புண்ட நீரானது காற்றவொண்ணாதாப்போலே என் ஆத்மாவைச் சமையபூஜிக்கைக்காக எனக்கு உன்னுடைய நிரதிஶய போக்யதையைக் காட்டி என்னை அகப்படுத்தினாய். முன்பு நீ உன் போக்யதையைக் காட்டிற்றும் உன்னை நான் பெறுகைக்கன்றி என்னை அகப்படுத்தி உன்கார்யம் செய்தாயாய்த்தத்தனை பிறேயென்னுதல்; காய்ந்த இரும்பு அக்காய்ச்சல் தீரும்படி நீரைப்பருகுமாபோலே என்னுடைய விடாய்தீரும்படி உன்னை பூஜிக்க எனக்குப்புண்டு நிரதிஶய போக்யனானவனே! என்னுதல்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ஸர்வரக்ஷகனான நீ உபேக்ஷித்தால், என்கார்யம் நான்செய்யவோ, பிறர்செய்யவோ? முடிந்தேனிறே என்கிறார்.

[போரவிட்டிட்டு] - உன்பக்கலினின்றும் பிறித்து உபேக்ஷித்து. [என்னை] - அநந்யகதியான என்னை. [நீ] - ஸ்ருஷ்டிபேதொடங்கி இவ்வளவும்வரப் புகுரநிறுத்தின நீயேன்னுதல்; ஸர்வரக்ஷகனான நீ என்னுதல். [என்னை] - அஜ்ஞாநஅஶக்திகளுக்கெல்லையான என்னை. [நீ] - ஜ்ஞாநஶக்திகளால் பரிபூர்ணனான நீ. அக்கரையேறமாட்டாதானொருவனை யமுக்கினாற்போலேயிருக்கிறது காணும். [என்னை நீ] - கண்ணும்காலுமின்றிக்கேயிருப்ப தோருத்தன், கண்ணும் காலுமுடையனாயிருப்பதோருத்தன்: ஆருக்குஆர் வழிகாட்டுவோரேன்கிறது ; "**நைவகிஞ்சித்பரோக்ஷம் தே ப்ரத்யக்ஷோஸி ந கஸ்யசித்**" (நைவகிஞ்சித்பரோக்ஷந்தேப்ரத்யக்ஷோஸிநகஸ்யசித்) என்னும்படியே. [நீ]- * ஆள்பார்த்துழிதரும் நீ. * எதிர்சூழல்புக்குத்திரியும் நீ. [புறம்போக்கலுற்றால்] - புறம்பே போக்குகையிலே அத்யவஸித்தால். என்கார்யம் நான் செய்வேனாகப்பார்த்து என்னை உபேக்ஷித்தால். [பின்னையான்ஆரைக்கோண்டேத்தை]-ஸர்வஶக்தியான நீ அநாதரித்த பின்பு, அஶக்தனான நான் எந்தவுபாயத்தைக்கோண்டு என்ன புருஷார்த்தத்தை ஸாயிப்

அஞ்சாம்பாட்டு.—போரவிட்டிட்டு இத்யாதி. "போரவிட்டிட்டு என்னைநீ" என்று தொடங்கி "யானெனன்பதென்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - ஸர்வரக்ஷக இத்யாதி.

*"போரவிட்டிட்டு" என்று-முழுச்சொல்லு ; 'உன்பக்கலினின்றும் பிரித்து உபேக்ஷித்து. "என்னை" என்றதுக்கர்த்தாந்தரமாதல், அநந்யகதியான என்னை என்றத்தால் பலிதமாதல் - அஜ்ஞாந இத்யாதி. "ஸ்ருஷ்டியேதொடங்கி" என்றவாக்யவிவரணம் - ஜ்ஞாநஶக்திகளால் இத்யாதி. "புறம்போக்கலுற்றால்" என்றத்தைக் கடாக்ஷித்துக் கீழுக்கெல்லாம் ஹாவம் - அக்கரையேற இத்யாதி. ஜ்ஞாநஶக்திகளுண்டானல் உமக்குச்செய்யவேணுமென்கிற நிர்ப்பந்தமென்னென்ன - கண்ணும்காலும் இத்யாதி. அவன் அப்படி ஜ்ஞாநாதிபூர்ணனாயிருக்குமோவென்ன-நைவகிஞ்சித் இத்யாதி. ஜிதந்தாயாம், "**நைவகிஞ்சித்பரோக்ஷம் தே ப்ரத்யக்ஷோஸி ந கஸ்யசித் । நைவ கிஞ்சிதஸித்தம் தே ந ச ஸித்தோஸி கஸ்யசித்**"- "**தே - கிஞ்சித்பரோக்ஷம் - ந**" உனக்குச் சற்றும் மறைந்திருப்பதில்லை ; எல்லாவற்றையும் ஒருகாலே அபரோக்ஷிக்கவல்ல வடிவையுடையவனென்கை ; "**கஸ்யசித் - ப்ரத்யக்ஷோ ந அஸி**" - நீயொருவர்க்கும் ஸாக்ஷாத்கரிக்க நிற்கிறாயல்லை; உபயத்தாலும் பலித்தது, நீயறியாததொன்றுமில்லை; நான் அறிவதொன்றுமில்லையென்றபடி. "ஸர்வரக்ஷகனான நீ" என்றதின் விவரணம் - ஆள்பார்த்து இத்யாதி வாக்யத்வயம். விவரணம் - என்கார்யம் இத்யாதி. எத்தைக்கொண்டென்றதே, "ஆரைக்கொண்டு"*

பது? ஆரைக்கொண்டேன்கிறது - புருஷார்த்தம் பெறுவதுஒருசேதநனாலே, அசேதநக்ரியா கலாபாதிகளாலன்றேன்னுமிடம் தோற்றுகைக்காக. [அந்தோ!] — "மாமேகம் ஶரணம் வ்ரஜ" (மாமேகம்ஶரணம்வ்ரஜ) என்றவுனக்கு நான் உபதேசிக்கவேண்டுவதே! [எனது என்பதேன் யான்என்பதேன்] - முடிந்தேனிறே என்கிறார். †(நானேமுடிந்தேன், இனிக் கரணங்களும்போய்த்திறேயென்கிறார்). [தீர இத்யாதி] - அக்நிஸந்தப்தமான இரும்பு காய்ச்சல் தீர நீரை நிஶ்ஶேஷமாக புஜிக்குமாபோலே, என்னாத்மவஸ்துவைச் ஸமைய புஜிக்கைக்காக, எனக்கு உன்னுடைய நிரதிஶயபோக்யதையைக்காட்டி என்னையகப் படுத்தினாய். [என்னாருயிரையாரப்பருக] - என்விடாய்தீரக் கலந்தாய் என்றிருந்தேன்; உன்விடாய்தீரவாயிருந்ததிறே. உனக்காகவாகாதே யுன்னைக்காட்டிற்று. அன்றிக்கே, விபக்தி வ்யத்யயம்; என்னாருயிரானது உன்னையாரப்பருகவென்னவுமாம்; அப்போது, காய்ந்தவிரும்பு அக்காய்ச்சல்தீரும்படி நீரைப்பருகுமாபோலே, என்னாருயிரானது என் ஸந்தாபமெல்லாம் தீரும்படி யுன்னை புஜிக்க எனக்குப்பண்டு நிரதிஶயபோக்யனான வனே யென்றுமாம். வ்யாக்யாநாந்தரம்:—[எனதேன்பதேன்யானென்பதேன்]-பேறுஉம் மதானால்ஸாதநமும்உம்முடையதலையிலே யாகவேண்டாவோவென்ன,—எனக்குப்பரிகர மாயிருப்பதோன்றுண்டு என்பதோர் அர்த்தமுண்டோ? ப்ருதக்ஸ்த்திதியோக்யமாயிருப்ப தொரு நானுண்டோ? ஶரீரரக்ஷணம் ஶரீரியை யொழியச் செய்வாருண்டோ? (௫)

ஆறும் பாட்டு.

எனக்குஆராவமுதாய் எனதாவியை இன்னுயிரை
மனக்காராமைமன்னிஉண்டிட்டாய் இனியுண்டொழியாய்
புனக்காயாநிறத்தபுண்டரீகக்கண்செங்கனிவாய்
உனக்கேற்குங்கோலமலர்ப்பாவைக்கன்பா! என்அன்பேயோ.

என்கிறதென்? என்ன - ஆரைக்கொண்டேன்கிறது இத்யாதி. "அந்தோ!" என்றதுக்கு பாவம்-மாமேகம் இத்யாதி. "பேறுஉம்மதானால் ஸாதநமும் உம்முடைய தலையிலேயாக வேண்டாவோ? என்ன - 'எனதென்பதென் - யானென்பதென்' - எனக்குப்பரிகாமாயிருப்பதொன்று உன் டென்பதோரர்த்தமுண்டோ? ப்ருதக்ஸ்திதியோக்யனா யிருப்பானொருநானுண்டோ? ஶரீரரக்ஷணம் ஶரீரியை யொழியச்செய்வாருண்டோ?" என்று இவ்வளவும்-"எனதென்பதென் யானென்ப தென்" என்றதுக்கர்த்தமாக விவக்ஷித்து, அத்தால் பலிதம்-முடிந்தேனிறே என்று. "என்னதென் கிறதெது, நானென்கிறதெது, என்னதென்கைக்கொரு பரிகாமில்லை, யானென்கைக்கொரு ஸ்வதந்த்ரனான கர்த்தா இல்லை என்று உரையில் ஶப்தார்த்தம். "இரும்பு - தீர - நீர் - உண்டதுபோல" என்றந்வயிப்பது. தீர - காய்ச்சல்தீர. "எனக்காராவமுதானாய்" என்னுமளவுக்கும் பாவம் - என்விடாய் இத்யாதி. இத்தால் பலிதம் - உனக்காக இத்யாதி. விபக்திவ்யத்யய மென்றது - "ஆருயிரை" என்றத்விதீயையை "ஆருயிர்" என்று ப்ரதமையாக்கியென்றபடி. அப் போது என்றது - இந்தபக்ஷத்தில் ஶப்தநிர்வாஹமென்றபடி. முந்தினபக்ஷத்தில், இரும்பு எம்பெருமானுக்கு த்ருஷ்டாந்தம்; இரண்டாம்பக்ஷத்தில், ஆழ்வார்க்கு த்ருஷ்டாந்தம், 'தீர இரும்புண்ட' என்றுதொடங்கி, 'எனக்காராவமுதானவனே - போரவிட்டிட்டு' என்று தொடங்கி, 'எனதென்பதென் யானென்பதென் - அந்தோ' இத்யந்வய:. 'எத்தை" என்றவநந்தரம், "சாதிப் பது" என்றத்யாஹார்யம். (௫)

---

† குண்டலிதம் ப்ரக்ஷிப்தமென்கிறார்கள்.

ஆ.— (எனக்காராவமுதாய்,) - ஸௌந்தர்யாதி ஸர்வகுணங்களாலும் உனக்கேற்கும் கோலமலர்ப்பாவைக்கு போக்யமானாற்போலே எனக்கு போக்யமாயிருந்துவைத்த, அத்தனையேயன்றியே என்னுடைய ப்ரக்ருதியையும் என்னுடைய ஆத்மாவையும் நிரவதிகமான அபிநிவேஶத்தோடே புஜித்தருளினநீ, பிரானே! என்னைப் போகடாதே கொள்ளாயென்கிறார்.

ஒ.—ஆரும்பாட்டில், பெரியபிராட்டியார் பக்கல்போலே என்பக்கல் அத்யபிநிவிஷ்டனாய் என்ப்ரக்ருதியிலுங்கூட அத்யாதரத்தைப்பண்ணி என்னை புஜித்தநீ, என்னை உபேக்ஷியாதே சடக்கென விஷயீகரித்தருளாய் என்கிறார்.

[எனக்கென்று தொடங்கி] - நிரதிஶயபோக்யனாய் ஹேயமான என்னுடைய ப்ரக்ருதியையும் விலக்ஷணமான ஆத்மாவையும்ஒக்க ஹ்ருதயத்துக்கு அமையாமை நிரந்தரமாக புஜித்தாய். இனி இத்தைவிடாதே விஷயீகரியாய். எம்பெருமான் கருத்தாலே 'இன்னுயிர்' என்றதாகவுமாம். [புனக்காயா நிறத்தவென்று மேலுக்கு] - தன்னிலத்திலேநின்ற காயாம்பூப்போலேயிருக்கிற திருநிறத்தை யுடையையாய்ப் புண்டரீகம்போலேயிருக்கிற திருக்கண்களையும் சிவந்த திருப்பவளத்தையுமுடையையான உனக்கு ஸத்ருஶமான அழகையுடைய பெரியபிராட்டியாருக்கு ஸ்நேஹியாய்வைத்து என்பக்கலிலே அபிநிவிஷ்டனானவனே!

ப.—அநந்தரம், பிராட்டிபக்கல் ப்ரணயியானாற்போலே என்பக்கலிலும் நிரதிஶய ப்ரணயத்தையுடைய நீ, உன்போக்யதையை ப்ரகாஶிப்பித்து † புஜிப்பித்தாய்: இனி முழுக்க நிர்வஹித்துவிடவேணுமென்கிறார்.

புனக்காயா - தன்னிலத்திலலர்ந்த காயாம்பூப்போன்ற, நிறத்த - நிறத்தையுடையையாய், புண்டரீகம் - புண்டரீகம் போலேயிருக்கிற, கண் - திருக்கண்ணையும், செங்கனிவாய் - சிவந்ததிருப்பவளத்தையுமுடைய, உனக்குஏற்கும் — உனக்கு அநுரூபமான, கோலம் - வடிவையுடையளாய், மலர் - பூவிற்பிறப்பாலே நிரதிஶயபோக்யதையாய், பாவைக்கு - ஸ்த்ரீத்வாநுரூபமான ஆத்மகுணத்தையுடைய லக்ஷ்மிக்கு, அன்பா - அன்பையுடையையாய், என்னன்பேயோ - என்னன்புதானொருவடியாயிருக்கிறவனே! எனக்கு-, ஆராவமுதாய்-நிரதிஶயபோக்யனாய், எனது ஆவியை-(ஹேயமான) என்னுடைய ப்ரக்ருதியையும், இன்னுயிரை - விலக்ஷணமான ஆத்மாவையும், மனக்கு- ஹ்ருதயத்துக்கு, ஆராமை - த்ருப்திபிறவாதபடிவிரும்பி, மன்னி - நிரந்தரமாக, உண்டிட்டாய் - புஜித்தாய்; இனி - இனிதொடங்கி, உண்டொழியாய் - நீகுறையும் † புஜிப்பித்தே விடவேணும் ஈஶ்வரனுக்கு நிருபாதிகபோக்த்ருத்வமும் சேதநனுக்கு போக்யத்வமுமிறே ஸ்வாபாவிகம்; அதினுடைய அநுபவஜநித ப்ரீதியாலே வருகிற பர்யவஸாநமிறே சேதநபோக்த்ருத்வமும், ஈஶ்வரபோக்யத்வமும். ஆகையிறே, "அஹமந்நம்" என்று - ஸ்வரூபத்தை நிர்த்தேசித்து, "அஹமந்நாத:" என்று - இவனுடைய போக்யத்வத்தையும் ஈஶ்வரனுடைய போக்த்ருத்வத்தையும்சொல்லி, "அஹம்" என்று - சைதந்ய ப்ரயுக்தமான பர்யவஸாநத்தாலே சேதநபோக்த்ருத்வத்தையும் சொல்லி முடித்தது.

இ.—ஆறாம்பாட்டில், பிராட்டிபக்கல் பண்ணும் அபிநிவேஶத்தை என் பக்கலிலே பண்ணி என்னை புஜித்த நீ, என்னை உபேக்ஷியாதே சடக்கென விஷயீகரித்தருளாய் என்கிறார்.

---

† புஜித்தாய், புஜித்தே என்றிருக்கலாமோ என்று தோன்றுகிறது.

[எனக்குஆராவமுதாய்] - தேவஜாதியினுடைய உப்புச்சாறன்றிக்கே ஸதா ஸேவ்யமுமாய் நித்யஸூரிகளெல்லாரும் கூட அநுபவிக்கும் உன்னை, ஸம்ஸாரியான எனக்குத்தந்தாய். [எனதாவியை]-என்னதென்னுமதுவே ஹேதுவாக,காமுகர் அபிமத விஷயத்தில் அழுக்கைவிரும்புமாபோலே என்னுடம்பை விரும்பினாய். [இன்னுயிரை] - அதுதன்னை நன்றென்று விரும்புகையாலே, அதிலும் தண்ணிதான ஆத்மாவைவிரும் பினாய். 'இன்னுயிர்' என்று - செவ்வாய்க்கிழமையை மங்களவாரம் என்னுமாபோலே யென்னுதல்; அவன்தலைபாலே சுமக்கிறபடியாலே சொல்லுதல். [மனக்காராமை] - மனஸ்ஸுக்குஆராமை. மனக்கு-மனஸ்ஸுக்கு. [மன்னிஉண்டிட்டாய்]-விரும்பி நிரந்தர மாக பூஜித்தாய். [இனியுண்டொழியாய்] - நீ தொடங்கின கார்யத்தை நடுவே குறை கிடக்கவிடாதேவிஷயீகரித்தேவிடாய். நீஆரம்பித்தகார்யத்திலேகுறைகிடப்பதுண்டோ? நீ இவ்வளவு புகுர நிறுத்துகைக்கு நான் ஸஹகரித்ததுண்டோ மேல் நானொன்று செய்கைக்கு? [புனக்காயா நிறமுடைய?] - முன்பு நீமேல்விழுந்தது உனக்கு ஒருகுறை யுண்டாயோ? ஸ்ரீயானவள் தான் மேல்விழும் வடிவையுடையையாய்வைத்தன்றோ என்பக்கலிலே அபிநிவேஶித்தது. தன்னிலத்தில் காயாப்போலேயாய்த்து வடிவிருப் பது. வாத்ஸல்யாம்ருதவர்ஷியாய்த்து கண்களிருப்பது. [செங்கனிவாய்] - சிவந்து கனிந்ததாய்த்து முறுவலிருப்பது. பிராட்டி விரும்பும் துறைகளிறேயிவை. இப்படிப் பட்ட உனக்கு ஸத்ருஶமான அழகை உடையவளாய்ப் புஷ்பத்தில் பரிமளத்தை வகுத் தாற் போலேயிருக்கிற ஸௌகுமார்யத்தை யுடையவளாயிருக்கிற பிராட்டிக்கு ஸ்நிக்தனா னவனே! பிராட்டியழகு நாவால் துகைக்கவொண்ணாமையாலே'உனக்கேற்குங்கோலம்' என்கிறார். [என் அன்பேயோ] - அவளுக்கு அன்பையுடையவன் என்கிறார். இங்கு இரண் டாகப் பிரிக்கவொண்ணாதபடி இருந்தானென்கிறார். [உண்டிட்டாயினியுண்டொழியாய்] - முன்பு இப்படி தலையாலேசுமந்துவைத்து உபேக்ஷித்தால் பொறுக்கப்போமோ!

ஈடு.—ஆறும்பாட்டு. பெரியபிராட்டியார்பக்கல்போலே என்பக்கல் அத் யந்தாபிநிவிஷ்டனாய், என்ப்ரக்ருதியிலும் ஆத்மாவிலும் அத்யாதரத்தைப் பண்ணி பூஜித்த நீ, என்னை உபேக்ஷியாதே ஈண்டென விஷயீகரித்தருளா யென்கிறார்.

[எனக்காராவமுதாய்] - தேவஜாதியினுடைய உப்புச்சாறுபோலன்றியே, †(ஸதாஸேவ்யமாய்) நித்யஸூரிகளெல்லாருங்கூட அநுபவிக்கும் உன்னை ஸம்ஸாரியான எனக்குத்தந்தாய். [எனதாவியை] – என்னதென்னுமதுவே ஹேதுவாக, அபிமதவிஷ யத்தில் அழுக்குகக்கும் காமுகனைப்போலே என்னுடம்பை விரும்பினாய். [இன்னுயிரை] - ஸபவதபிப்ராயத்தாலே தவதவநாறுகிறபடி. அன்றிக்கே, செவ்வாய்க்கிழமையை மங்கள வாரமென்னுமாபோலே, ப்ரக்ருதியோடே ஸம்பந்திக்கையாலே தண்ணிதென்று சொல்லு

ஆறும்பாட்டு.—எனக்காராவமுதுஇத்யாதி. 'கோலமலர்ப்பாவைக்கு அன்பா என் னன்பே - எனதாவியையின்னுயிரை மனக்காராமைமன்னி யுண்டிட்டாயினியுண்டொழியாய்', என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - பெரியபிராட்டியார் இத்யாதி.

"எனக்கு" என்றதுக்கு பாவம் - தேவஜாதி. இத்யாதி. "ஆவியை" என்றதே "எனது" என்றதுக்கு பாவம் - என்னதேன்னும் இத்யாதி. "இன்னுயிர்" என்று தம்மை ஶ்லா கிக்கலாமோ? என்ன, த்வேதாபாவம் - ஸபவதபிப்ராயத்தாலே இத்யாதிவாக்யத்வயமும். தவதவ நாறுகையாவது - மிகவும் தபோதக்தியாயிருக்கை. அதாவது - பாரதந்த்ர்யஶக்தியாய் ஶ்லாக்யமா

† குண்டலிதம் இருபத்துநாலாயிர மென்கிறார்கள்.

கிருராகவுமாம். [மனக்காராமைஇத்யாதி] - (மனக்கு) மநஸ்ஸுக்கு. [ஆராமை] - அமையாமை. [மன்னியுண்டிட்டாய்] - நிரந்தரமாக ஸூஜித்தாய் - [இனியுண்டொழியாய்]-நீ தொடங்கினகார்யத்தையும், நடுவேகுறைகிடக்கவிடாதே, விஷயீகரித்து விடாய். †(நீ ஆரம்பித்தகார்யத்தில் குறைகிடப்பதுண்டோ ?) நீ இவ்வளவுபுகுரநிறுத்துகைக்கு நான் ஸஹகரித்ததுண்டோ? உன்காரியத்துக்கு உன்னைவேண்டிக்கொள்ளவேணுமோ? இவருடைய அம்ருதத்துக்கு ஹோக்த்ருத்வம் உண்டு காணும்!. [புனக்காயாஇத்யாதி] - இவ்வாத்மாவையும் இதினுடைய ஶரீரத்தையும் விரும்புகை உனக்குச் சேருமோ? நீயுகந்தார்க்குச்சேருமோ? [புனக்காயாநிறத்த] - தன்னிலத்தில் அலர்ந்த காயாப்போலேயாய்த்து வடிவிருப்பது. [புண்டரீகக்கண்] - வாத்ஸல்யாம்ருதவர்ஷியாயாய்த்துக் கண்களிருப்பது. [செங்கனிவாய்] - சிவந்து கனிந்தாய்த்து முறுவலிருப்பது. பிராட்டிவிரும்பும் துறைகளிறே இவை. [புனக்காயாவித்யாதி] - அக்காயா தாமரை பூத்துக் கனியப்பழுத்தாற்போலேயாய்த்து, திருமேனியும் திருக்கண்ணும் திருப்பவளமுமிருப்பது. [உனக்கேற்கும்]-இவனோபாதி வாசா விமர்த்திக்கைக்கும் பொறாத ஸௌகுமார்யத்தையுடையவள். இப்படிப்பட்ட உனக்கு ஸத்ருஶமான அழகையுடையளாய், புஷ்பத்தில் பரிமளத்தைவடித்து வகுத்தாற்போலேயிருக்கிற பிராட்டிக்கு ஸ்நிக்தனானவனே!உனக்கேற்கும் கோலமென்று - அவ்வழகையிங்கே யதிதேசிக்கிறார். ந்யாயாதிதேசம் பண்ணுகிறார். [கோலமலர்ப்பாவைக்கு அன்பா! என்னன்பேயோ!] - அவள்பக்க லன்பனென்று தோற்றியிராநின்றது; தம்முடைய பக்கல் அன்பென்றும் அதுஉடையனென்றும், தெரிக்கப் போகிறதில்லை;

யிருக்கை. "ஸுஸெநு ஶாத்ராஶோஷ்கவஸஶாநாவாஜூநாஷ" என்றவிடத்திலே பாரதந்த்ர்யமிறே தபஸ்ஸென்றது. அமையாமை - த்ருப்திபிறவாமல். உண்டிட்டாய் - உண்டாய். இனி உண்டொழியாய் - இனி விஷயீகரித்துவிடாய். இத்தால் ஶாவம் - நீயிவ்வளவு இத்யாதி. "உண்டிட்டாய்" என்றத்தைப்பற்ற - உன்காரியத்துக்கு இத்யாதி. ஆராவமுதானவனை - "உண்டிட்டாய்" என்கையாலே ஶாவம் - இவருடைய இத்யாதி. கீழையும் கூட்டிக்கொண்டு "கோலமலர்ப்பாவைக்கன்பா" என்னுமளவுக்கும் ஶாவம் - இவ்வாத்மாவையும் இத்யாதி. நீயுகந்தார்க்குச் சேருமோ-ஹேயனான என்னை விரும்புகை நீயுகந்தவிஷயமான பிராட்டிச்குச் சேருமோவென்றபடி. "புனக்காயா" இத்யாதியை "உனக்கேற்கும்" இத்யாதியோடேகூட்டி ஶாவம் - பிராட்டி விரும்பும் இத்யாதி. உத்ப்ரேக்ஷிக்கிறார்-புனக்காயா இத்யாதி. அவனவயவங்களைப்போலே இவளுடைய விக்ரஹாதிகளை வர்ணியாமல், "உனக்கேற்கும்" என்றத்தால் பலித்தஶாவம்-இவனோபாதி இத்யாதி. வாசாவிமர்த்திக்கைக்கும் பொறாதவென்றது - "வாஷாராஷுஷு" இத்யாதியைப்பற்ற. ஶப்தார்த்தம் - இப்படிப்பட்ட இத்யாதி. வடித்து - வடிக்கட்டி. வகுத்தாற்போலே - ஆக்ருதியாக்கினாற்போலே. 'இவனோபாதி' இத்யாதிவாக்யத்தோடே உனக்கேற்கும் இத்யாதிவாக்யத்துக்குச் சேர்த்தி. அவ்வழகு என்றது - "புனக்காயா" இத்யாதியைக்கடாக்ஷித்து. அதிதேசிக்கிறார் - ஏறிடுகிறார். அதிதேசிப்பது ஸர்வதா ஸாம்யமுண்டானவிடத்திலேயன்றோ, காளமேகநிபஶ்யாமமான நிறம் முதலானவற்றை * ஹிரண்யவர்ணையான இவளிடத்திலே யதிதேசிக்கக்கூடுமோவென்ன - ந்யாயாதிதேசம் இத்யாதி. அதாவது - ஸ்வரூபாதிதேசம் பண்ணுகிறதன்று, அவனைப்போலே இவளும் அழகுடையவளென்கிறதென்றபடி. ஸ்வரூபாதிதேசமென்றும், ந்யாயாதிதேசமென்றும் இரண்டு. ஸ்வரூபாதிதேசமாவது - ஸர்வதாஸாம்யம் கொள்ளுகை; ந்யாயாதிதேசமாவது - அதுபோலே இதுவும் ஶ்லாக்யமாயிருக்குமென்கை. "அன்பா" என்னாதே "என்னன்பே" என்றதுக்கு ஶாவம் - அவள்பக்கல் இத்யாதி. அன்பனென்று - அன்பையுடையவனென்று. அன்புதானாகச்சொல்லுவானென்னென்ன-ஜ்ஞாதாவை இத்யாதி. இதுக்குப்ரமாணம் -

---

† குண்டலிதம் இருபத்துநாலாயிர மென்கிறார்கள்.

ஜ்ஞாதாவை ஜ்ஞாநமென்னுமாபோலே. "தத்குணஸாரத்வாத்து தத்வ்யபதேஶ:" (தத்குணஸாரத்வாத்துதத்வ்யபதேஶ:). (௬)

ஏழாம் பாட்டு.

கோலமலர்ப்பாவைக்குஅன்பாகிய என்அன்பேயோ
நீலவரைஇரண்டுபிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப
கோலவராகமொன்றாய் நிலம்கோட்டிடைக்கொண்டஎந்தாய்!
நீலக்கடல்கடைந்தாய்! உன்னைப்பெற்று இனிப்போக்குவனே.

ஆ.—(கோலமலர்ப்பாவைக்கு.) - பெரியபிராட்டி பக்கலிலும் ஸ்ரீபூமிப்பிராட்டிபக்கலிலும் பண்ணும் வ்யாமோஹத்தை என்பக்கலிலே பண்ணிக்கொண்டு என்னை ஸ்ருஜித்தருளின உன்னைப் பெற்று இனிவிடுவேனோ? என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், நான் பெரியபிராட்டியார்பரிக்ரஹமாகையாலே ப்ரளயார்ணவமக்நையான ஸ்ரீபூமிப்பிராட்டியை யெடுத்து அவளோடே ஸம்ஶ்லேஷித்தருளினாற்போலேயும், கடலைக்கடைந்து பெரியபிராட்டியாரோடே ஸம்ஶ்லேஷித்தருளினாற்போலேயும் ஸம்ஸாரார்ணவமக்நனான என்னையெடுத்து என்னோடே ஸம்ஶ்லேஷித்தருளினாய்; என்பக்கலிலே அதிவ்யாமோஹத்தைப்பண்ணின உன்னைப்பெற்று வைத்து இனித்தப்பவிடுவேனோ? என்கிறார்.

[கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய என்னன்பேயோ] - பெரிய பிராட்டியாருக்கு ஸ்நேஹியாகையாலே அவள் பரிக்ரஹமான என்பக்கலிலே ஸ்நேஹத்தைப்பண்ணினவனே! [நீலவரை யிரண்டுபிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப] - ஓர் அஞ்சனகிரி இரண்டு பிறையைக் கவ்விக்கொண்டு நிமிர்ந்தாற்போலே. நீலக்கடலென்று - கடைந்தருளுகிற எம்பெருமானுடைய திருநிறம் நிழலிட்டபடியைச் சொல்லுகிறது.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதாக்ஷகனாக உன்னைப் பெற்றுவைத்து, இனி விடுவேனோ என்கிறார்.

கோலம்-வடிவழகையும், மலர் - போக்யதையையுமுடையளான, பாவைக்கு-பிராட்டிக்கு, அன்பாகிய - உகப்பானவத்தாலே, என் - என்பக்கலிலும், அன்பேயோ-அதிப்ராவண்யத்தையுடையையாய், ("ஸம்ஶ்லிஷ்டோ நீலஜீவாத்மநோ ...") என்கிறபடியே), நீலவரை - நீலரத்நகிரியானது, இரண்டுபிறை - இரண்டுபிறையை, கவ்வி - நிமிர்ந்ததுஒப்ப - எழுந்திருந்தாற்போலே, கோலம் - விலக்ஷணமான வடிவழகையுடைத்தாய், ஒன்று - அத்விதீயமாயிருப்பதொரு, வராகமாய் - மஹாவராஹமாய், நிலம் - பூமியை, (ப்ரளயத்திலேபுக்கு முழுகியெடுத்து), கோட்டிடைக்கொண்ட - திருவெயிற்

தத்குண இதி. "தத்குணஸாரத்வாத்து தத்வ்யபதேஶ: ப்ராஜ்ஞவத்" இதிஶாரீரகமீமாம்ஸாயாம். துஶப்தஶ்சோத்யம் வ்யாவர்த்தயதி. தத்குணஸாரத்வாத் - விஜ்ஞாநகுணஸாரத்வாத், ஆத்மநஸ்தத்வ்யபதேஶ:, † விஜ்ஞாநமிதிவ்யபதேஶ: ப்ராஜ்ஞவத்-யதா "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" இதி விபஶ்சித: ப்ராஜ்ஞஸ்ய ஜ்ஞாநஶப்தேந வ்யபதேஶ:, தத்வதித்யர்த்த:. உத்தரார்த்தத்தை யநுஸந்தித்துப் பூர்வார்த்தத்தை யநுஸந்திப்பது அந்வயம். 'இனி யுண்டொழியாய்' என்று க்ரியை. (௬)

† ஶாரீரக மீமாம்ஸாயாம் - (உ - ௩ - உ௦).

றிலேவைத்த அபதாநத்தாலே, எந்தாய் - (என்னை, ஸம்ஸாரத்தில்நின்றும் எடுக்கு மாகாரத்தை ப்ரகாசிப்பிக்கும்) ஸ்வாமியாய், நீலம் - (உன்வடிவின் நிழலீட்டாலே) நீல மான, கடல் - கடலை, கடைந்தாய் - கடைந்து அருந்தொழில்செய்து ஆஶ்ரிதரைரக்ஷித் தவனே! உன்னை - (இப்படிபுருஷகாரபூர்வகமாக எனக்குநல்லையாய் என்னைரக்ஷிக்குமவ னை) உன்னை, பெற்று - லபித்துவைத்து, இனி - கைபுகுந்தபின்பு, போக்குவனோ - நழுவவிடுவேனோ? நீலக்கடலென்று - நீலரத்நத்தையுடைய கடலென்றுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், ப்ரளயார்ணவமக்நையான ஸ்ரீபூமிப்பிராட்டியை யெடுத்து அவளோடே கலந்தாற்போலேயும் கடலைக்கடைந்து பிராட்டியோடே ஸம்ஶ்லேஷித்தாற்போலேயும் பிராட்டி பரிக்ரஹமான என்னை ஸம்ஸாரார்ணவத்தினின்று மெடுத்து என்பக்கலிலே அதிவ்யாமோஹத்தைப்பண்ணின உன்னைப் பெற்றுவைத்து, இனித்தப்பவிடுவேனோ என்கிறார்.

[கோலமலர் இத்யாதி] - பிராட்டிபக்கல் ஸ்நேஹாதிஶயத்தாலே அந்தஸ்நேஹமே ஹேதுவாக அவள்பரிக்ரஹமான என்பக்கலிலே அதிப்ரவணனானவனே! "சரமஶ்லோகமையிலே இவர் அருளிச்செய்த வார்த்தை ரஹஸ்யத்தின்படியாயிருந்தபடி கண்டீர்!" என்று சீயரைக்குறித்து பட்டர் அருளிச்செய்தார். ப்ராதிகூல்யத்தைக் கனக்கப்பண்ணினார்பக்கலிலும் நாலடிவரநின்றதுவே ஹேதுவாக ரக்ஷகனும் ஈஶ்வரன் என்னுமிடம், காகவிபீஷணாதிகள்பக்கலிலே கண்டதிறே; "ஸ்ரீ௯வயாவயஃவா௯௱வுஃ" என்றும், "ந௯்௸ஜெயஃ" என்றும் அவ்வளவன்றிக்கே தனியிருப்பிலே தர்ஜநபர்த்ஸநாதிகளாலே நலிந்த ராக்ஷஸிகள்பக்கலிலே திருவடிஎதிர்க்க, "௯ஃ௯ா௯ெவு௱" "௯ாயஃ௦ ௯ா௯ஃ௯ெஃ௯௧௱ாவாயாயஃ" என்றும் நீர்மையிறே பிராட்டி நீர்மை. [நீலவரையித்யாதி] - "த௯ஃ௯௯ஃவு. நீ௯ஃவா௯ெ௯ஃ௯ா௯" : ஓர்அஞ்ஜநகிரி இரண்டு பிறையைக்கவ்விக்கொண்டு நிமிர்ந்தாற்போலே. பிறையில் மறுவோபாதியாய்த் தத் திருவெயிற்றிற்கிடந்த பூமி. [கோலவராகம்] - *மாசுடம்பில் நீர்வாராநின்ற நிலையிறே இவர்க்குஆலத்திவழிக்க விஷயமாய்த்து: "பாசிதூர்த்துக்கிடந்தபார்மகட்கு" என்கிறபடியே ப்ரணயினி அழுக்கோடேயிருக்கத் தாமானபடியே வருவராகில் ப்ரணயித்வத்துக்கு நமஸ்காரமாமித்தனையிறே. அவன் அழிவுக்கிட்ட வடிவைப்பற்றியிறே இவர் ஆலத்திவழிக்கிறது. [ஒன்றாய்] - வராஹஸஜாதீப மாத்ரமென்னுதல், த்ரைலோக்யத்தையும் கண்செறியிட்டாற்போலே விம்மவளர்ந்தபடியாலே அத்விதீயமென்னுதல். [நிலங்கோட்டிடைக் கொண்ட எந்தாய்] - ப்ரளயங்கொண்ட பூமியை அண்டபித்தியிலேபுக்குத் திருவெயிற்றிலே கொண்டு உத்தரித்தாற்போலே, ஸம்ஸாரார்ணவங்கொண்ட என்னை எடுத்தவனே! [நீலக்கடல் கடைந்தாய்] - பிராட்டியை லபிக்கைக் காகக் கடலைக்கடைந்தவனே! [நீலக்கடல்] - கடைகிறவனுடைய நிழலீட்டாலேயாதல்; ஸகலௌஷதிகளையும் பொகடுகையால்வந்த நிறவேறுபாடாதல்: நிறத்தாலே - நீலரத்நத் தைச்சொல்லிற்றாய் தத்ப்ரசுரமான ரத்நாகரமென்னுதல். உன்னைப்பெற்று இனிப் போக்குவனோ? ஸ்ரீபூமிப்பிராட்டியை லபிக்கைக்குப்பண்ணின வ்யாபாரத்தையும் பிராட்டியை லபிக்கைக்குப்பண்ணின வ்யாபாரத்தையும் என்னைப் பெறுகைக்காகப் பண்ணி என்னைக் கிட்டினபின்பு உன்னைப்போகவிடுவேனோ? நீ க்ருஷிபண்ண, பலத்திலே அந்வயித்த நான் கைப்பட்ட ஸம்பத்தை விடக்ஷமனோ?

ஈடு.—ஏழாம்பாட்டு. நான் பெரியபிராட்டியார் பரிக்ரஹமாகையாலே ப்ரளயார்ணவமக்நையான ஸ்ரீபூமிப்பிராட்டியையெடுத்து அவளோடே ஸம்ஶ்லேஷித்தருளினாற்போலவும், கடலைக்கடைந்து பெரிய பிராட்டியாரோடே ஸம்ஶ்லேஷித்தருளினாற்போலவும், ஸம்ஸாரார்ணவமக்நனான என்னை யெடுத்து என்னோடே ஸம்ஶ்லேஷித்தருளி என்பக்கலிலே அதிவ்யாமோஹத்தைப்பண்ணின உன்னைப் பெற்றுவைத்து இனித் தப்பவிடுவேனோ? என்கிறார்.

[சோலமலர்ப்பாவைக்கன்பாகிய என் அன்பேயோ] - † (பிராட்டிபக்கல் ஸ்நேஹாதிஶயத்தாலே அந்த ஸ்நேஹமே ஹேதுவாக அவள் பரிக்ரஹமான என்பக்கலிலே அதிப்ரவணனானவனே!) பட்டர் சரமதஶையிலே யருளிச்செய்தவார்த்தை - † "(ரஹஸ்யத்தின்படியாயிருந்தபடி கண்டதே.) இப்பாட்டை நம்முடையார் த்வயத்தோடே யநுஸந்திப்பது - பெரியபிராட்டியார்க்குஸ்நேஹி யாகையாலே அவள் பரிக்ரஹமான நமக்கு அன்பனும் என்றுஅநுஸந்திப்பது"என்று‡(சீயரைக்குறித்தருளிச் செய்தார்) "திருமாலென்னையாளுமால்" என்னும்படியே தம்முடையஅன்புக்கடி சொல்லுகிறார். அந்தஃபுர பரிகரமன்றோ, என்னன்புக்கு அடியில்லையோ? [நீலவரையித்யாதி] - ஓர் அஞ்சநகிரி இரண்டுபிறையைக் கவ்வி நிமிர்ந்தாற்போலே. பிறையில் மறுவோபாதியாய்த்து திருவெயிற்றிற்கிடந்த பூமி. [கோலவராகம்] - * மாசுடம்பில் நீர்வாராநின்றநிலையிறே இவர்க்கு ஆலத்திவழிக்க விஷயமாய்த்து; "பாசிதூர்த்துக்கிடந்தபார்மகள்" என்கிறபடியே ப்ரணயிநி அழுக்கோடேயிருக்கத் தாமானபடியே வருவராகில் ப்ரணயித்வத்துக்கு நமஸ்காரமாமித்தனையிறே. அவனழிவுக்கிட்ட வடிவுக்கிறே இவர் ஆலத்திவழிக்கிறது. [ஒன்

ஏழாம்பாட்டு.—கோலமலர் இத்யாதி. பூம்யுத்தாரணத்தையும் ஸமுத்ரமதநத்தையும் அருளிச்செய்கிறவருடைய ஹாவத்தை விசதீகரியாநின்றுகொண்டு, "உன்னைப்பெற்றினிப் போக்குவனோ" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - நான் பெரியபிராட்டியார் இத்யாதி.

வடிவழகையும் போக்யதையையுமுடையளான பிராட்டிக்கு அன்பனானவத்தாலே என்பக்கலிலும் அதிப்ராவண்யத்தை யுடையவனேயென்று பதார்த்தம். பிராட்டிபக்கல் ஸ்நேஹாதிஶயத்தாலே அவள் பரிக்ரஹமான என்பக்கலிலே அதிப்ரவணனாயிருக்குமென்னுமதுக்கு ஸம்வாதம் - பட்டர் இத்யாதி. த்வயத்தோடே என்றது - த்வயார்த்தத்தோடேயென்றபடி. அநுஸந்திக்கும் ப்ரகாரமேதென்ன-பெரியபிராட்டியார்க்கு இத்யாதி. பெரியபிராட்டியார்க்கு ஸ்நேஹியானது தம்முடைய அன்புக்கடியோ? என்ன - திருமால் என்னை இத்யாதி. என்னையடிமைகொள்ளுகையிலே வ்யாமோஹத்தையுடையவனென்று வ்யாமோஹத்துக்கு அவள் பரிக்ரஹத்தை அடியாகச் சொன்னாற்போலே, இங்கும் அன்புக்கடியாக அத்தையே சொல்லுகிறாரென்றபடி. விவரணம் - அந்தஃபுர இத்யாதி. "மால்" என்று - வ்யாமோஹம். தார்ஷ்டாந்திகத்தில் சொன்ன பூமிக்கு உபமாநமாம் த்ருஷ்டாந்தத்தில் பதமேதென்ன - பிறையில் இத்யாதி. ஈஶ்வரன் பரிக்ரஹித்ததாகையாலே வந்தகோலமென்னுதல், ப்ரணயித்வகுணத்தால்வந்த கோலமென்னுதல்; மூன்றினத்தை யருளிச்செய்கிறார் - மாசுடம்பில் இத்யாதி. இரண்டாவது - பாசிதூர்த்து இத்யாதி. நாய்ச்சியார் திருமொழி. மாசுடம்பில் - அழுக்குடம்பில். பாசிதூர்த்து - பாசியடைத்து. மூன்றின அர்த்தவிவரணம் - அவனழிவுக்கு இத்யாதி. அழிவுக்கிட்டவடிவுக்கு - தன்மேன்மையைவிட்டு நீர்மையைக்கொள்ளுகைக்காகக்கொண்ட வராஹவேஷத்துக்கென்றபடி. ஆலத்திவழிக்கை- ஆலத்தியெடுக்கை: த்ருஷ்டிதோஷபரிஹாரம் பண்ணுகையென்றபடி. "ஒன்றாய்" என்றதுக்கு,

† குண்டலிதமிரண்டும் இருபத்துநாலாயிரமென்கிறார்கள்.
‡ குண்டலிதம் ப்ரக்ஷிப்தமென்கிறார்கள்.

றாய்] - வராஹஸஜாதீயமாத்ர மென்னுதல்; த்ரைலோக்யத்தையும் கண்செறியிட்டாற்போலே விம்மவளர்ந்தபடியாலே அத்விதீயமென்னுதல் [நிலங்கோட்டிடைக்கொண்ட வெந்தாய்] - ப்ரளயங்கொண்டபூமியை அண்டபித்தியிலேபுக்குத் திருவெயிற்றிலே கொண்டு உத்தரித்தாற்போலே, ஸம்ஸாரார்ணவங்கொண்ட என்னை யெடுத்தவனே! [நீலக்கடல்கடைந்தாய்]-பிராட்டியை லபிக்கைக்காகக் கடலைக்கடைந்தவனே! [நீலக்கடல்] - கடைகிறவனுடைய நிழலீட்டாலேயாதல்; ஸகலௌஷதிகளையும் பொகடுகையால் வந்த நிறவேறுபாடாதல்; நிறத்தாலே - நீலரத்நத்தைச்சொல்லிற்றாய், தத்ப்ரசுரமான ரத்நாகரமென்னுதல். [உன்னைப்பெற்று இனிப்போக்குவனோ] - ஸ்ரீபூமிப்பிராட்டியை லபிக்கைக்குப் பண்ணினவ்யாபாரத்தையும், பிராட்டியை லபிக்கைக்குப்பண்ணின வ்யாபாரத்தையும், என்னைப்பெறுகைக்காகப்பண்ணி, என்னைக் கிட்டப்பெற்றபின்பு உன்னைப்போகவிடுவனோ? நீ க்ருஷிபண்ணின பலத்திலே யநுபவித்த நான் கைப்பட்ட ஸம்பத்தை விட க்ஷமனோ? (எ)

எட்டாம் பாட்டு.

பெற்றினிப்போக்குவனோ? உன்னை என்தனிப்பேருயிரை
உற்ற இருவினையாய் உயிராய்ப்பயனாயவையாய்
முற்ற இம்மூவுலகும் பெருந்தூறாய்த்தூற்றில்புக்கு
முற்றக்கரந்தொளித்தாய் என்முதல்தனிவித்தேயோ!

ஆ,—(பெற்றுஇனி.) - புண்யபாபரூபகர்ம தத்பலபோக்த்ருசேதந கர்மபலபோகோபகரண ப்ரக்ருதி ஸர்வஜகதந்தராத்மபூதனாய், ஸர்வஜகத்காரணமாய், ஸர்வைச்வர்யனாயிருக்கிற இருப்பையுங்கூட எனக்குக்காட்டித் தந்தருளி, எனக்கு தாரகனாயிருந்த உன்னைப் பெற்று இனிவிடுவேனோ? என்கிறார்.

ஓ.—எட்டாம்பாட்டில், அத்யந்த துர்ஜ்ஞேயனான உன்னைப் பெற்றுவைத்து இனித்தப்பவிட உபாயமில்லை என்கிறார்.

[பெற்று இனி என்று தொடங்கி] — அத்யந்தவிஸஜாதீயனாயிருந்து எனக்கு மிகவும் ஸத்தாதாரகனான உன்னைப் பெற்றுவைத்து இனித் தப்பவிடுவேனோ? [உற்ற என்று தொடங்கி] - ஆத்மாவைப்பற்றி விடாதேயிருக்கிற புண்யபாபரூப கர்மங்களையும் ஆத்மாத் தன்னையும் கர்மபலமானவற்றையும் இவையெல்லாமாகிற துர்ஜ்ஞேய

மூந்தினது - அல்பத்திலே; இரண்டாவது - மஹத்த்வத்திலே. கண்செறியிட்டாற்போலே - மறைத்தாற்போலே. விம்மவளர்ந்த - அதிகமாக வளர்ந்த. 'ப்ரளயார்ணவமக்நையான' - இத்யாத்யவதாரிகாவாக்யத்திற் சொன்ன பாவத்தை இங்கே விசதீகரிக்கிறார் - ப்ரளயங்கொண்ட இத்யாதி. 'திருப்பாற்கடலையன்றோ கடைந்தது? "நீலக்கடல்" என்கிறதென்?' என்ன,—த்ரோதா பரிஹரிக்கிறார் - கடைகிறவனுடைய இத்யாதி. "எந்தாய்" என்றத்தை - "நீலக்கடல்கடைந்த - எந்தாய்" என்று மேலிற்பதத்திலும் கூட்டி பாவம் - ஸ்ரீபூமி இத்யாதி. "பெற்றினிப்போக்குவனோ" என்றதுக்கு பாவம் - நீ க்ருஷி இத்யாதி. (எ)

ஸ்வபாவமான த்ரைலோக்யமாகிற தூற்றையுண்டாக்கி அந்த துர்ஜ்ஞேய ஸ்வபாவமான ஜகத்தினுள்ளேபுக்கு எங்கும் வ்யாபித்துத் தெரியாதபடி நின்றாய். [என்முதல் தனிவித்தேயோ] - எனக்கு முதலிலே இச்சையுமின்றிக்கேயிருக்க உன்பக்கலிலே ஔந்முக்யத்தைப் பிறப்பித்தவனே!

ப — அநந்தரம், ஊராவஹமனும்படி ஸர்வாந்தராத்மாவாய் எனக்கு தாரகனான உன்னைப் பெற்றுவைத்துக் கைவிடுவேனோவென்கிறார்.

உற்ற, † இருவினை ஆய் - இரண்டுவகைப்பட்ட புண்யபாபரூபகர்மங்களுக்கு நிர்வாஹகனாய், உயிர் ஆய் - (கர்மவஶ்யனான ஆத்மாவுக்கு) நியந்தாவாய், அவையாய்ப் பயன் ஆயவை ஆ - அந்தக் கர்மங்களாலுண்டானஸுகதுக்கங்களுக்கு ப்ரதாதாவாய்க் கொண்டு, இம்மூவுலகும்-இந்தஜகத்த்ரயம், முற்ற-எல்லாமாகிற, பெருந்தூறு ஆய்-பெரிய தூற்றை ப்ரகாரமாகவுடையையாய், தூற்றிற்புக்கு - (கர்மநிபந்தநமாக ப்ரவேஶித்தார்க்கு புறப்படவழியில்லாத)பெருந்தூற்றிலே (ஸ்வஸங்கல்பத்தாலே ஸ்வதந்த்ரனாய்)ப்ரவேசித்து, முற்றக்கரந்து-ஒருப்ரகாரத்தாலும் அறியவொண்ணாதபடி, ஒளித்தாய்-(ஸூக்ஷ்மதையைக்கொண்டு)மறைந்து நிற்குமவனாய், என்-எனக்கு(உன்னைக்கிட்டுகைக்கு) முதல் தனிவித்தேயோ-ப்ரதமஸுக்ருதமான அத்விதீயகாரணமானவனே!உன்னை-(எனக்குநிருபமாய் அபரிச்சின்னமான ப்ராப்யனாயிருக்கிற) உன்னை, பெற்று - கைபுகரப்பெற்று வைத்து, இனி - உன்னைவிடில் முடியும்படியான அவஸ்தை பிறந்தபின்பு, போக்குவனோ - விடவிரகுண்டோ? 'ஓ' என்கிற அசை - 'விடில்செய்வதென்?' என்கிற விஷாதத்தைக் காட்டுகிறது.

இ.—எட்டாம்பாட்டில், மிக்வும் துர்ஜ்ஞேயனான உன்னைப் பெற்றுவைத்து இனிவிட உபாயமில்லை என்கிறார்.

[பெற்றுஇனிப் போக்குவனோ இத்யாதி] - ஓர்அச்சில்லாக்காசாய்ப் போய்த்தாகில் போகிறதென்றிருக்கிறேனோ? ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய் எனக்கு ஸத்தாஹேதுவான உன்னைப் பெற்றுவைத்து நான் விடுவேனோ? ஸர்வஜ்ஞனாய் ஸ்வதந்த்ரனாயிருக்கிறவனை விடுவேனோ என்கிறதுக்கு ஹேது—தன்னையொழிய ஜீவிக்கமாட்டாமை தோற்றவிருந்தால் அவன் கால்வாங்கமாட்டானென்னுமத்தாலே. இத்தலையில் *நத்யஜேயமிருக்கிறபடி. [என்தனிப்பேருயிரை] - "உன்னை" என்றதின் வ்யாக்யாநம்: உபமானரஹிதனாய், விபுவாய், எனக்கு தாரகனாயிருக்கிறவனை. சேதநனிற்காட்டில் வ்யாவ்ருத்தி சொல்லுகிறது. [உற்றவிருவினையாய்] - இவ்வாத்மாவோடு பிரிக்கவொண்ணாதபடி கலந்து, இருவகைப்பட்ட புண்யபாபங்களுக்கு நியாமகனாய். [உயிராய்] - அவற்றிலே சிறைப்பட்டுக்கிடக்கிற ஆத்மாவுக்கு நியாமகனாய். [பயனாயவையாய்] - அந்தப் புண்யபாபங்களுடைய ஃபலங்களுக்கு நிர்வாஹகனாய். [முற்ற இம்மூவுலகும் இத்யாதி] - இவையெல்லாமாகிற த்ரைலோக்யமென்கிற தூற்றை உண்டாக்கி. பெருந்தூறென்கிறது - துர்ஜ்ஞேய ஸ்வபாவமுண்டாகையாலே, இந்தலோகத்தின்உள்ளேபுக்கு எங்கும் வ்யாபித்து துர்ஜ்ஞேய ஸ்வபாவனாயிருந்தாய்! [என்முதல் தனி வித்தேயோ] - இப்படியிருந்துவைத்து உன்னை எனக்குப் பெறுகைக்கடியான அத்விதீயமான மூலஸுக்ருதத்துக்கு உத்பாதகனாய் உன்பக்கலிலே ஔந்முக்யத்தைப் பிறப்பித்தவனே! இப்படிப்பட்டிருக்கிற உன்னை ப்ரதமஸுக்ருதத்துக்கும் உத்பாதகனாய்க்கொண்டு வந்து தரப்பெற்ற நான் உன்னைப் போக்குவனோ?

†. இங்கு க்ரந்தபாதமேற் பட்டிருக்கின்றது.

௩ஈ.—எட்டாம்பாட்டு. அத்யந்த துர்ஜ்ஞேயனுன உன்னைப் பெற்றுவைத்து இனிவிட உபாயமில்லை யென்கிருர்.

